நூற்றெட்டுத்திருப்பதியந்தாதி.
திருவேங்கடமாலை.
திருவேங்கடத்தந்தாதி.
அழகரந்தாதி.
திருவரங்கக்கலம்பகம்.
திருவரங்கத்தந்தாதி.
திருவரங்கத்துமாலை.
திருவரங்கத்தூசல்.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

அழகிய மணவாள தாசர் என்கிற

திவ்யகவி பிள்ளைப்பெருமாளையங்கார்

அருளிச்செய்த

நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி, திருவேங்கடமாலை, திருவேங்கடத்தந்தாதி, அழகரந்தாதி, திருவரங்கக்கலம்பகம், திருவரங்கத்தந்தாதி, திருவரங்கத்துமாலை, சீரங்கநாயகர் ஊசல்.

ஷை திவ்யகவி பிள்ளைப்பெருமாளையங்கார்

திருப்பேரனார் அருளிச்செய்த

சீரங்கநாயகியார் ஊசல்

ஆகிய இவைகளுக்கு

வித்வான்

காஞ்சீபுரம் - இராமசாமிநாயுடு அவர்களாலும்,

தமிழ்ப்பண்டிதர்

ப. வாசுதேவமுதலியாராலும்,

செய்யப்பட்ட பதவுரையுடன்

நூற்றெட்டுத் திருப்பதி பிரபாவமும் சேர்த்துச்

சென்னைத்

தாம்ஸன் கம்பெனி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

1894.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம :

திவ்யகவி பிள்ளைப்பெருமாளையங்கார் சரித்திரம்.

கருவிலே திருவுடையவராய்த் தேறுநான்மறை வேதியர்குல திலகராய் அவதரித்துப் பிள்ளைப்பெருமாளென்னும் திருநாமங்கொண்டு வேதவேதாங்கங்களில் நிபுணரானதேயன்றிப் பகவத் ஸ்வரூப ரூபகுண விபூதிகளிலாழ்வார்க ளருளிச்செயல்களும் நாதயாமுந யதி வராதிகளாகிற ஆசாரியர்களருளின ரஹஸ்யார்த்தங்களும்வல்லராய்ப் போகிற இவர், "வாழ்விப்பா னெண்ணமோ வல்வினையி லின்ன மென்னை, ஆழ்விப்பா னெண்ணமோ வஃதறியேன்—தாழ்விலாப், பாடலழ கார்புதுவைப் பட்டர்பிரான் கொண்டாடும், கூடலழகாநின் குறிப்பு" என்று அத்தியவசித்துத் திருமலைநாயகர் மதுரையிலரசாட்சிசெய்கிறகாலத்தில் அவரது ராஜாங்கசேவைகளில் ஒரு ராயசமென்னும் உத்தியோகம்பெற்றுத் தமக் குசிதமான வருணாசிரம தருமங்களில் வழுவாது காலக்ஷேபபரராய்க் "குழலிசை யளிமேவு கூரம் வந்தருள் குருபரனிருபாத போதடைந்த" திடசித்தராகையாலே "வானிட்டகீர்த்தி வளர்கூரத்தாழ்வான் மகிழவந்த, தேனிட்ட தார்நம் பெருமாள்குமாரர் சிவனையயன், ஞானிட்டசாபந் துடைத் தாளரங்கர் சங்காழிபுயம், நானிட்டனென்றருள் பட்டர் பொற்றாள் கதிநந்தமக்கே." பெறுப்பேறென் றுசாரியருசி கனக்கவுடையவராய் வருகிறநாளில் ஒருநாள், ராஜசபையி லுத்தியோக நடத்துகிறவர்கள் நடுவே தாமுங் கூடவிருந்து காரியஞ்செய்து வருகிறபோது, தமது உத்தரீயத்தை இரண்டு கையிலுங்கொண்டு கிருஷ்ண கிருஷ்ணவென் றுதேய்த்தனர்.

அங்குள்ளார் அதைக்கண்டு மயங்கி ஐயங்காரை நோக்கிச் சுவாமி நீர் இவ்வாறு செய்யக்காரணம் என்னையோவென, "அவர் திருவரங்கம் பெரியகோயிலில் நம்பெருமாள் திருத்தேரில் எழுந்தருளித் திருவீதி உற்சவம் கண்டருளுகையில், அருகு பிடித்திருந்த கைத்தீவட்டியின் சுவாலைபற்றி, எரிகிற தேர்ச்சீலையின் நெருப்பை அவித்தேன்" என்றனர். அதைக்கேட்ட அவர்கள் நகைத்து ஐயங்கார் சித்தப்பிரமையால் இவ்வாறு செய்தனர் என்று நினைத்து, இவர் நிலைமையை திருமலைநாயகருக்கு அறிவித்தனர். அவர் இதன் உண்மையை அறியும்பொருட்டு, திருவரங்கம் பெரியகோயிலுக்கு ஆளனுப்பித் தீரவிசாரித்தபொழுது, அங்குள்ள அர்ச்சகர் முதலியோர் திரைச்சீலையில் தீப்பற்றியது உண்டென்றும், அருகில் பெருமாளைச் சேவித்து நின்ற பிள்ளைப்பெருமாளையங்கார் அதனை அவித்தனர் என்றும் நிகழ்ந்ததைத் தெரிவித்தனர்கள்.

இவ்வற்புதத்தைச் செவியுற்ற திருமலைநாயகர் ஆனந்த பரவசராய் ஐயங்காரை அணுகி, திருவரங்கத்தில் நம்பெருமாள் ரதோற்சவம் கண்டருள்கையில் தேவரீர் அங்கிருந்ததாகச் சொல்கின்றனரே நீர் அங்குப் போனதுண்டோவென்று கேட்க, ஐயங்கார் நான் இங்கிருந்தபடி நம்பெருமாள் இரதோற்சவ சேவையை மனோபாவத்தால்

சேவித்தே னென்று கூற, அருகிலுள்ளவர்கள் திருமலைநாயகனை நோக்கி இரதோற்சவ தினத்தில் இங்கிருந்து தமது உத்தரீயத்தைக் கிருஷ்ண கிருஷ்ண வென்று தேய்த்தனர் என்றார்கள். அதைக் கேட்ட திருமலைராயன் இவருடைய பக்தி விசேடத்தை நினைத்து மெய் மறந்தவராய், பின்தெளிந்து சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, பூசித்துச்சென்றனன். அன்றிரவு திருமலைநாயகன் தான் திருவரங்கத்திற்குப் போனதாகவும், அங்குத் திருக்காவிரியில் நீராடிக்கொண்டிருந்த ஐயங்காரைக்கண்டு சேவித்து, அவருடன் கூடிக்கொண்டு சந்நிதிக்குட் பெருமாளைச்சேவித்துக்கொண்டு திரும்புகையில்,ஐயங்கார் காணாமற்போனதாகவும் கனவுகண்டு, விழித்துச் சஞ்சலத்திலாழ்ந்தவனாய் விடிந்தவாறே ஐயங்காரை வரவழைத்துச் சேவித்து, தேவரீர்மகிமையை அறியாது அடியேன் இதுவரையிலும் வேலைவாங்கிவந்த பெருங்குற்றத்தை க்ஷமித்து இனியடியேன் உஜ்ஜீவிக்கும்படி அடிமை கொண்டருள வேண்டுமென்றும், இனித்தேவரீர் லௌகிகத்தொழின் முயற்சியைவிட்டு வைதிக காரியங்களிலேயே காலக்ஷேபஞ்செய்வதற்கு அடியேன் செய்யவேண்டிய பணிவிடையை நியமித்தருள வேண்டுமென்றும் பிரார்த்திக்க, ஐயங்கார் திருவரங்கம் பெரியகோயிலில் நிரந்தரவாசஞ் செய்யும்படி ஏற்பாடுசெய்துதரவேண்டுமென்றனர். திருமலைநாயகரும் அவர் விரும்பியபடியே, திருவரங்கம் பெரியகோயிலின் சலவைக்கல் மண்டபப்பிராகாரத்தில் வடமேற்குத்திசையில் ஒருதிருமாளிகை புதுக்கி, தளிகைபிரசாதமும் குறைவறநடந்தேறி வரும்படி நியமித்து ஐயங்காரை யனுப்பித் தானும் அடிக்கடிசென்று உபசரித்துவந்தனன். அப்பால் அங்கு எழுந்தருளியிருந்த ஐயங்கார் நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி, திருவேங்கடமாலை, திருவேங்கடத்தந்தாதி, அழகரந்தாதி, திருவரங்கக்கலம்பகம், திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, சீரங்கநாயகரூசல் என்னும் அஷ்டபிரபந்தங்களையும் பரப்ரம்ஹ விவேகம் முதலிய பல நூல்களையும் அருளிச்செய்து பகவத்பாகவதாசார்ய கைங்கரியபரராய் வாழ்ந்திருந்தனர்.

இவர்தம்மை ஆசிரயித்திருந்த சிஷ்யர்களைநோக்கி "தமக்குமாரகம் பசுவினால்சம்பவிக்கும் எனச்சொல்லி வைத்திருந்தனர். அவ்வாறே ஒருநாள் கோயிலில் ஸ்ரீவைகுண்டநாதன் சந்நிதியில் பெருமாளைச் சேவித்துக்கொண்டிருக்கையில் ஒரு நொண்டிப்பசு வந்து காலிடறித்தம்மேல் விழ, அதுபொறுமல் அடியில்வரும் பாடலைச்சொல்லிக்கொண்டு திருநாட்டுக் கெழுந்தருளினர்.

"துளவதுளவவெனச்சொல்லுஞ்சொற்போச்சே
அனவில்நெடுமூச்சுமாச்சே-முளரிக்
கரங்கால்குளிர்ந்ததே கண்ணும்பஞ்சாச்சே
இரங்காயரங்காவினி."

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

நூற்றெட்டுத்திருப்பதியந்தாதி.

மூலமும் - உரையும்.

தனியன்.

ஏற்றமணவாள ரிசைத்தாரந் தாதிவெண்பா
தோற்றக்கே டில்லாத தொன்மாலைப்-போற்றத்
திருப்பதியா நூற்றெட்டினையுஞ் சேவிப்போர்
கருப்பதியா வண்ணமுண்டாக.

(இதன் பதப்பொருள்) தோற்றம்-பிறப்பும், கேடு - இறப்பும், இல்லாத - இல்லாத, தொல்-பழமையாகிய, மாலை - திருமாலை, போற்ற - துதிக்க, திருப்பதியாம் - திவ்விய தேசங்களாகிய, நூற்றெட்டினையும் - நூற்றெட்டையும், சேவிப்போர் - வணங்குவோர், கரு-தாயின் கர்ப்பத்தில், பதியாவண்ணம் - படியாதவிதம், உண்டாக-உண்டாகும்படி, ஏற்றம் - உயர்வினையுடைய, மணவாளர் - அழகிய மணவாளதாசரென்பவர், அந்தாதி வெண்பா - வெண்பா அந்தாதியை, இசைத்தார் - சொல்லினர். ஏ-று.

திருமால் கொண்ட தசாவதாரங்கள் கன்மவசத்தாலன்றி, துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனார்த்தமாக ஆதலின், அவை பிறப்பும் இறப்பும் ஆகமாட்டா என்றற்கு "தோற்றக்கேடில்லாத தொன்மால்" என்றார். மால் - பெரியோன்.

நான்முகம்.

ஆழ்வாராதிகள் துதி.

பொய்கைபூ தன்பேயார் பொன்மழிசைக் கோன்மாறன்
செய்ய மதுரகவி சேரர்பிரான் - வையகமெண்
பட்டர்பிரான் கோதைதொண்டர் பாதப் பொடிபாணன்
கட்டவிழ்தார் வாட்கலியன் காப்பு.

(இ-ள்.) பொய்கை - பொய்கையாழ்வாரும், பூதன் - பூதத்தாழ்வாரும், பேயார் - பேயாழ்வாரும், பொன்-அழகிய, மழிசைக்கோன் - திருமழிசையாழ்வாரும், மாறன் - நம்மாழ்வாரும், செய்ய மதுரகவி - அழகிய மதுரகவியாழ்வாரும், சேரர்பிரான் - குலசேகராழ்வாரும், வையகம் - உலகத்தாரால், எண் - மதிக்கப்பட்ட, பட்டர்பிரான்-பெரியாழ்வாரும், கோதை - ஆண்டாளும், தொண்டர்பாதப்பொடி - தொண்டரடிப்பொடியாழ்வாரும், பாணன் - திருப்பாணாழ்வாரும், கட்-

அவிழ் - முறுக்கு அவிழ்ந்த, தார்-பூமாலையணிந்த, வாட்கலியன்-திருமங்கையாழ்வாரும், காப்பு-காவலாகும். எ-று,

பொய்கையார், பூதத்தார், பேயார் என்னும் இவர் மூவரும் முதலாழ்வார்களெனப்படுவர். இவர்கள் அயோநிசம்பந்திகள்.

பிறவாத பேறு பெறுதற் கெஞ்ஞான்றும்
மறவா திறைஞ்சென் மனனே-துறவாளன்
வண்குருகூர் வாவி வழுதி வளநாடுடைய
தண்குருகூர் நம்பிதிருத் தாள்.

(இ-ள்) என் மனனே - என்மனமே, துறவாளன் - துறவையுடையவரும், வள்-அழகிய, குருகுஊர் - நாரைகள் உலாவும், வாவி-தடாகங்களையுடைய, வளம்-வளம்பொருந்திய, வழுதிநாடு-பாண்டியநாட்டை, உடைய - தமக்கு இருப்பிடமாகவுடைய, தண்-குளிர்ந்த, குருகூர்-திருக்குருகூரில் திருவவதாரஞ்செய்தருளிய, நம்பி-நம்மாழ்வாரது, திருத்தாள் - திருவடிகளை, பிறவாத-பிறக்காத, பேறு - இலாபத்தை, பெறுதற்கு - அடைதற்கு, எஞ்ஞான்றும் - எக்காலத்தும், மறவாது - மறவாமல், இறைஞ்சு - வணங்குவாயாக. எ-று.

முன்னே பிறந்திறந்து மூதுலகிற் பட்டவெல்லாம்
என்னே மறந்தனையோ வென்னெஞ்சே - சொன்னேன்
இனியெதிரா சன்மங்க ளின்றுமுதற் பூதூர்
முனியெதிரா சன்பேர் மொழி.

(இ-ள்) என் நெஞ்சே-என் மனமே, முன்னே-பூர்வத்தில், பிறந்து - ஜனித்து, இறந்து - மரித்து, மூது உலகில் - பழமையாகிய பிரபஞ்சத்தில், பட்ட எல்லாம் - அனுபவித்தவைகள் யாவையும், என்னே-என்ன, மறந்தனையோ-மறந்துவிட்டாயோ, சொன்னேன்-சொல்லினேன், இனி - இனிமேல், சன்மங்கள் - பிறவிகள், எதிரா-வாரா, (ஆதலால்) இன்றுமுதல் - இன்றுமுதற்கொண்டு, பூதூர் - ஸ்ரீபெரும்பூதூரில் எழுந்தருளிய, முனி எதிராசன் - எதிராஜமுனிவருடைய, பேர்-திருநாமத்தை, மொழி-சொல்லுவாயாக. எ-று.

முனி-இறைவனை மனனஞ்செய்பவன். எதிராஜன் - முனிவர்களில் சிறந்தவன்.

முக்கால மில்லா முகில்வண்ணன் வைகுந்தத்
தெக்காலஞ் செல்வா னிருக்கின்றேன்-தக்காமொண்
கூரத்தாழ் வானடியைக் கூடுதற்கு நாயடியேன்
போரத்தாழ் வானசடம் போட்டு.

(இ-ள்) நாய் அடியேன் - நாய்போன்ற இழிஞனாகிய யான், போர-மிகவும், தாழ்வான இழிவாகிய, சடம் - தேகத்தை, போட்டு-

நீக்கிவிட்டு, தக்கார் - அறிஞரால், எண் - தியானிக்கப்பட்ட, கூரத்தாழ்வான் - கூரத்தாழ்வாரது, அடியை-திருவடிகளை, கூடுதற்கு-சேர்வதற்கு, முக்காலம் - இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் மூன்றுகாலங்களும், இல்லா-தனக்கில்லாத, முகில்வண்ணன் - மேகவண்ணனாகிய திருமாலினது, வைகுந்தத்து - பரமபதத்தில், எக்காலம் - எந்நாளில், செல்வான்-ஏகும்படி, இருக்கின்றேன்-இருக்கிறேன். எ-று.

ஆதியந்த மில்லாதவனாகையால் "முக்காலமில்லா முகில்வண்ணன்" என்றார்.

நான்கூட்டில் வந்தவன்றே நானறியா நன்மையெல்லாம்
தான்கூட்டி வைத்தநலந் தான்கண்டீ - ராங்கூட்டச்
சிட்டருக்கு வாய்த்த திருவரங்க னின்னருளால்
பட்டருக்காட் பட்ட பயன்.

(இ-ள்) ஆம் கூட்டம் - கூட்டமாகிய, சிட்டருக்கு - பாகவதர்களுக்கு, வாய்த்த-கிடைத்த, திருவரங்கன்-திருவரங்கனது, இன் அருளால்-இனிய கிருபையினால், பட்டருக்கு-குணவாளபட்டருக்கு, ஆட்பட்ட-அடிமைப்பட்டதனாலுண்டாகிய, பயன் - பிரயோசனமானது, நான்-அடியேன், கூட்டில் - தேகத்தில், வந்த அன்றே-உதித்த அப்போதே, நான் அறியா - எனக்குத்தெரியாத, நன்மை எல்லாம் - எல்லாநன்மைகளையும், தான் - தானே, கூட்டிவைத்த - கிடைக்கும்படி செய்த, நலம்தான் - உபகாரத்தை, கண்டீர்-(உலகத்தாரே நீங்கள்) பார்த்தீர். எ-று.

திவ்ய தேசங்களின் தொகை.

ஈரிருப தாஞ்சோழ மீரொன்ப தாம்பாண்டி
ஓர்பதின்மூன் றாமலைநா டோரிரண்டாம்-சீர்நடுநா
டாறோடீ ரெட்டுதொண்டை யவ்வடநா டாறிரண்டு
கூறுதிரு நாடொன்றாக் கொள்.

(இ-ள்.) சோழம் ஈர் இருபதாம் - சோழநாட்டுத் திருப்பதிகள் நாற்பதாகும், பாண்டி ஈர் ஒன்பதாம் - பாண்டி நாட்டுத் திருப்பதிகள் பதினெட்டாகும், மலைநாடு ஓர் பதின்மூன்றாம் - மலைநாட்டுத் திருப்பதிகள் பதின்மூன்றாகும், சீர்நடுநாடு ஓர் இரண்டாம் - சிறப்புப்பொருந்திய நடுநாட்டுத் திருப்பதிகள் இரண்டாகும், தொண்டை ஆறோடு ஈர் எட்டு - தொண்டைநாட்டுத் திருப்பதிகள் இருபத்திரண்டாகும், அவ்வடநாடு ஆறிரண்டு-அந்தவடநாட்டுத் திருப்பதிகள் பன்னிரண்டாகும், கூறு - சொல்லாநின்ற, திருநாடு ஒன்று ஆ - திருவைகுந்தம் ஒன்று ஆக, கொள்-(நூற்றெட்டுத் திருப்பதிகளையும்) அறிந்துகொள்வாயாக. எ-று.

நூல்.

சோழநாட்டுத் திருப்பதிகள் - ௪௦.

திருவரங்கம்பெரியகோயில்.

க. சீர்வந்த வுந்தித் திசைமுகனு லல்லாதென்
சோர்வந்த சொல்லிற் சுருங்குமோ - ஆர்வம்
ஒருவரங்கு கோயி லுகந்தவனை யாள்வான்
திருவரங்கங் கோயிற் சிறப்பு.

(இ-ள்.) ஒருவர் - ஒருவர், ஆர்வம் - ஆசையை, அங்கு அங்கு ஓயில் - அவ்வவ்விஷயங்களில் நீக்கினுல், உகந்து - விரும்பி, அவனை - பற்றற்ற அவ்வன்பனை, ஆள்வான் - அடிமைகொள்பவனுகிய திருமால் (சயனித்தருளிய), திருவரங்கம்கோயில் - திருவரங்கம் பெரிய கோயில் என்னும் திவ்வியதேசத்தின், சிறப்பு-பெருமையானது, சீர்-சிறப்புவாய்ந்த, உந்தி வந்த - (திருமாலின்) நாபிக்கமலத்திலுதித்த, திசைமுகனுல் - பிரமதேவனுல், அல்லாது-அல்லாமல், என் - என்னுடைய, சோர்வந்த - குற்றமுள்ள, சொல்லில் - மொழியில், சுருங்குமோ - (சொல்லி) அடங்குமோ. எ-று.

விஷயங்களில் பற்றற்று எம்பெருமானை அடையவேண்டும் என்பதனை "வீடுமுன்முற்றவும் வீடுசெய்தும்முயிர், வீடுடையானிடை வீடுசெய்மினே" "பற்றிலனீசனும் முற்றவுநின்றனன், பற்றிலையாயவன் முற்றிலடங்கே" என்ற ஆழ்வார் ஸ்ரீசூக்தியாலுமறிக.

பெருமாள் பிராட்டிமுதலிய விவரம்.

ஸ்ரீரங்கம்.
ஸ்ரீரங்கநாதன்-நம்பெருமாள்
ஸ்ரீரங்கநாயகியார்.
பிரணவாகிருதி விமானம்.
வேதஶ்ருங்கம்.
காவேரிநதி.
சந்திரபுஷ்கரணி.
புன்னைவிருக்ஷம்.
புஜங்கசயனம்,
தெற்கே திருமுகமண்டலம்.

தருமவர்மாவுக்கும்-ரவிதருமனுக்கும் பிரத்தியக்ஷம்.
பொய்கையாழ்வார் - பூதத்தாழ்வார் - பேயாழ்வார்-திருமழிசையாழ்வார் - நம்மாழ்வார்-குலசேகராழ்வார் - பெரியாழ்வார்-தொண்டரடிப்பொடியாழ்வார்-திருப்பாணாழ்வார் - திருமங்கை யாழ்வார்-ஆண்டாள் இவர்கள் மங்களாசாஸனம்.

திருவுறையூர்.

உ. சிறப்புடைய செல்வத் திருப்பதிகள் போல
மறப்புடைய நாயேன் மனத்துள்-உறப்போந்
தறந்தையா நின்ற வரங்கா திருவாழ்
உறந்தையா யிங்குறைந்த தோது.

(இ-ள்.) சிறப்பு உடைய - சிறந்த, செல்வம் - ஐசுவரியம்பொருந்திய, திருப்பதிகள்போல - திவ்வியக்ஷேத்திரங்கள்போல, மறப்பு உடைய - மறதியையுடைய, நாயேன் - நாய்போன்ற எனது, மனத்துள்-சிந்தையில், உற-பொருந்த, போந்து-வந்து, அறம்-தருமத்தை, தையாநின்ற - பொருந்தவைக்கின்ற, அரங்கா - திருவரங்கனே, திருவாழ் - பெரியபிராட்டியார் வசிக்கின்ற, உறந்தையாய்-திருவுறையூர் என்னுந் திவ்வியதேசத்தையுடையவனே, இங்கு-என்மனத்தில், உறைந்தது-பொருந்திய காரணத்தை, ஓது-சொல்லுவாயாக. எ-று.

மறப்பு-அஞ்ஞானம். அதாவது ஈசுவரன் உடையான் என்றும் ஆத்மாக்கள் உடைமை என்றும் அறியாமை.

நிசுளாபுரம்.
அழகியமணவாளப்பெருமாள்.
வாசலக்ஷ்மி.
உறையூர்வல்லி நாச்சியார்.
கல்யாணவிமானம்.
கல்யாண தீர்த்தம்.
குடமுருட்டிநதி.
வடக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
முப்பத்துமுக்கோடி தேவர்களுக்கும். ரவிதர்மராஜாவுக்கும் பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருத்தஞ்சைநகரம்.

ரு. ஓதக்கே ணெஞ்சே யுனக்குமிது நன்றெனக்கும்
மேதக்க நன்மையினி வேறில்லை-போதப்
பெருந்தஞ்சை மாமணியைப் பேணி வடிவம்
பொருந்தஞ்சை மாமணியைப் போற்று.

(இ-ள்.) நெஞ்சே - மனமே, ஓத-நான்சொல்ல, கேள் - கேட்பாயாக, உனக்கும் இது நன்று - (எனக்கேயன்றி) உனக்கும் இது நல்லதாகும், எனக்கும் - எனக்கும், மேதக்க - மேன்மையாகிய, நன்மை-நலமானது, வேறு இல்லை - இதனினும் பிறிதொன்றில்லை, போதம்-ஞானம் விளங்குகின்ற, பெரு - பெரிய, தஞ்சை - திருத்தஞ்சையென்னுந் திவ்விய தேசத்திலெழுந்தருளிய, மாமணியை - சிறந்த மாணிக்கம்போன்ற சுவாமியை, பேணி-வணங்கி, வடிவம் பொருந்து அஞ்சை - பரத்துவம், விபவம், வியூகம், அந்தரியாமித்துவம், அர்ச்சாவதாரம் எனப்பொருந்திய ஐந்து வடிவங்களையும், மா - பெரிய பிராட்டியாரையும், மணியை - கவுஸ்துவமணியையும், போற்று-துதிசெய்வாயாக. எ-று.

நீலமேகப்பெருமாள்.
செங்கமலவல்லி.
அமுததீர்த்தம்.
சௌந்தரிய விமானம்.
கன்னிகாபுஷ்கரணி.
கிழக்கே திருமுகமண்டலம்.
வீற்றிருந்த திருக்கோலம்.
பராசரமுனிக்குப் பிரத்தியக்ஷம்

பூதத்தாழ்வார் - திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.
தஞ்சையாளிநகர்.
நரசிங்கப்பெருமாள்.
தஞ்சைநாயகி.
சூரியபுஷ்கரணி.
கிழக்கே திருமுகமண்டலம்.
வீற்றிருந்த திருக்கோலம்.
மார்க்கண்ட மாமுனிவர்க்குப் பிரத்தியக்ஷம்.

திருவன்பில்.

ச. போற்றிசெய வோர்குடைக்கீழ் பொன்னாடு மிந்நாடும்
நாற்றிசையு மாண்டாலு நன்கில்லை - தோற்றமிலா
எந்தையன்பி லாதி யிணைத்தா மரையடிக்கே
சிந்தையன்பி லாதார் சிலர்.

(இ-ள்.) அன்பில் - திருவன்பிலென்னுந் திவ்விய தேசத்திலெழுந்தருளிய, தோற்றம் இலா - பிறப்பிலாத, எந்தை - என் தந்தையாகிய, ஆதி - மூலகாரணனது, இணைதாமரை அடிக்கு-உபயசரணாரவிந்தங்களுக்கு, சிந்தை - மனத்தில், அன்பு இலாதார் - பத்தியில்லாதவராகிய, சிலர் - சிலபேர், போற்றிசெய - (யாவரும்) துதிக்க, ஓர் குடைக்கீழ்-ஒரு குடைநிழலில், (அதாவது ஓரே செங்கோலின் கீழ்), பொன் நாடும் - தேவலோகத்தையும், இந்நாடும் - இவ்வுலகத்தையும், நால்திசையும் - நான்குதிக்குகளையும், ஆண்டாலும்-அரசாட்சிசெய்த போதிலும், நன்கு இல்லை - நன்மையில்லை. எ-று.

திருவடிவழகியநம்பி.
அழகியவல்லிநாச்சியார்.
தாரகவிமானம்.
மண்டூகபுஷ்கரணி.
கிழக்கே திருமுகமண்டலம்.
புஜங்கசயனம்.
பிரம்மாவுக்கும் வால்மீகருக்கும் பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருக்கரம்பனூர்.

ரு. சிலமா தவஞ்செய்துந் தீவேள்வி வேட்டும்
பலமாநதியிற் படிந்தும் - உலகில்
பரம்பநூல் கற்றும் பயனில்லை நெஞ்சே
கரம்பனூ ருத்தமன்பேர் கல்.

(இ-ள்.) சில மாதவம் - சில பெருந்தவத்தை, செய்தும்-புரிந்தும், தீவேள்வி வேட்டும் - முத்தீயோடு கூடிய யாகத்தைச்செய்தும், பல - பலவாகிய, மா நதியில் - மிக்க புண்ணிய ஆறுகளில், படிந்தும் - மூழ்கியும், உலகில் - உலகத்தில், பரம்ப-விரிவாக, நூல்-சாஸ்திரங்களை, கற்றும் - வாசித்தும், பயன் - பிரயோசனம், இல்லை - (ஒன்று) மில்லை (ஆதலால்), நெஞ்சே - மனமே, கரம்பனூர் - திருக்கரம்பனூரென்னுந் திவ்வியதேசத்தி லெழுந்தருளிய, உத்தமன்-புருஷோத்தமனது, பேர்- திருநாமங்களை, கல்-கற்றுக்கொள்ளுவாயாக.

புருஷோத்தமர்.
பூர்வாதேவி.
உத்யோகவிமானம்.
கதம்பதீர்த்தம்.
வாழைமரம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
புஜங்கசயனம்.
கதம்பமகாரிஷிக்கும்-திருமங்கை யாழ்வாருக்கும் உபரிசரவசுக்கும்-ஜனக ஜனந்த ஜனத்குமாரர்கட்கும்பிரத்தியக்ஷம், திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருவெள்ளறை.

௬. கல்லிருந்தான் றந்தை கமலத்தோ னக்கமலத்
தில்லிருந்தான் றந்தையரங் கேசனென்றே - தொல்லைமறை
உள்ளறையா நின்றமையா லுள்ளமே கள்ளமின்றி
வெள்ளறையான் றாளே விரும்பு.

(இ-ள்.) கல் இருந்தான் - (கயிலாய) மலையிலிருந்த சிவனது, தந்தை - பிதா, கமலத்தோன் - தாமரை மலரில்வசிக்கும் பிரமனும், அக்கமலத்தில் இருந்தான் - அந்தத்தாமரை மலரிலிருந்த பிரமனது, தந்தை-பிதா, அரங்கேசனென்று-திருவரங்கநாதனென்று, தொல்லை-பழமையாகிய, மறை - வேதங்கள், உள் அறையாநின்றமையால்-தம்மில் சொல்லுதலால், உள்ளமே - மனமே, கள்ளம் இன்றி - கரவடமில்லாமல், வெள்ளறையான் - திருவெள்ளறை யென்னும் திவ்விய தேசத்தையுடையவனது, தாள் - திருவடிகளை, விரும்பு-ஆசை கொள்ளுவாயாக. எ-று.

புண்டரீகாக்ஷர்.
பங்கயச்செல்விநாச்சியார்.
சண்பகவல்லி நாச்சியார்.
விமலாகிருதிவிமானம்.
குசதீர்த்தம்-மணிகர்ணிகதீர்த்தம்
சக்கிரதீர்த்தம்-திவ்வியபுஷ்கரணி
புஷ்கலதீர்த்தம்-பத்மதீர்த்தம்.
கந்தபுஷ்கரணி-க்ஷீரபுஷ்கரணி.
வராஹதீர்த்தம்-சுவேதகிரி.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
பெரியதிருவடிக்கும்-சிபிச்சக்கிரவர்த்திக்கும் - பூதேவிக்கும்-மார்க்கண்டேயருக்கும் பிரத்தியக்ஷம்.
பெரியாழ்வார் - திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருப்புள்ளம்பூதங்குடி.

எ. விரும்பினவை யெய்தும் வினையனைத்துந் தீரும்
அரும்பரம வீடு மடைவீர் - பெரும்பொறிகொள்
கள்ளம்பூ தங்குடிகொள் காயமுடை யீரடிகள்
புள்ளம்பூ தங்குடியிற் போம்.

(இ-ள்.) விரும்பினவை - இச்சித்தவைகள், எய்தும்-வந்து கைகூடும், வினை அனைத்தும் - இரு வினைகளும், தீரும் - நீங்கும், அரு-அரிய, பரமவீடும் - மோக்ஷமும், அடைவீர் - சேருவீர்கள் (ஆதலால்), பெரு - பெரிய, பொறி - ஐம்பொறிகளை, கொள் - கொண்டிருக்கிற,

கள்ளம்பூதம்-வஞ்சனையுடைய ஆத்மா, குடிகொள்-வாசமாயிருக்கிற, காயம் - தேகத்தை, உடையீர் - உடையவர்களே, அடிகள் - நம்பெருமானது, புள்ளம் பூதங்குடியில் - திருப்புள்ளம் பூதங்குடி யென்னும் திவ்வியதேசத்துக்கு, போம் - செல்லுங்கள். எ-று.

வல்வில்லிராமர்.
பொற்றாமரையாள்.
சோபனவிமானம்.
கிருததீர்த்தம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
புஜங்க சயனம்.
பிருகராஜனுக்குப்பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருப்பேர் நகர்.

அ. போமானை யெய்து பொருமானைக் கொம்புபறித்
தாமானை மேய்த்துவந்த வம்மானை - தாமச்
செழுந்திருப்பே ரானைச்சிறுகாலைச் சிந்தித்
தெழுந்திருப்பேற் குண்டோ விடர்.

(இ-ள்.) போம் - தனக்குமுன் சென்ற, மானை - (மாரீசனாகிய) மானை, எய்து - பாணப்பிரயோகஞ்செய்து, பொரு - யுத்தஞ்செய்த, ஆனை - (குவலயாபீடமென்னும்) யானையினது, கொம்பு - தந்தங்களை, பறிந்து - பிடுங்கி, ஆம் - விருத்தியாகின்ற, ஆனை - பசுக்கூட்டத்தை, மேய்த்துவந்த - மேய்த்துவந்த, அம்மானை-சுவாமியை, தாமம்-மாலையணிந்த, செழு - செழிப்பான, திருப்பேரானை - திருப்பேரென்னும் திவ்விய தேசத்தையுடையவனை, சிறுகாலை - உதயகாலத்தில், சிந்தித்து - தியானித்து, எழுந்திருப்பேற்கு - எழுந்திருக்கு மெனக்கு, இடர் - துன்பமானது, உண்டோ - உள்ளதோ (இல்லை) எ-று.

அப்பக்குடத்தான்.
கமலவல்லித்தாயார்.
இந்திரவிமானம்.
இந்திரதீர்த்தம்.
மேற்கே திருமுகமண்டலம்.
புஜங்கசயனம்.
வலது அஸ்தத்தின்கீழே குடம்.
இந்திரகிரி.
உபமனுவுக்கும் பராசருக்கும் பிரத்தியக்ஷம்.
திருமழிசையாழ்வார்நம்மாழ்வார் பெரியாழ்வார் - திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருவாதனூர்.

கூ. இடரான வாக்கை யிருக்க முயலார்
மடவார் மயக்கின் மயங்கார் - கடவுளர்க்கு
நாதனூ ராதரியார் நானெனதென் றோரமலன்
ஆதனூ ரெந்தையடி யார்.

(இ-ள்.) அமலன் - பரிசுத்தனும், ஆதனூர்-திரு ஆதனூரென்னுந் திவ்வியதேசத்திலெழுந்தருளியவனுமாகிய, எந்தை-என் தந்தை

யினுடைய, அடியார் - அன்பர்கள், இடர் ஆன - துன்பத்திற்கு ஏதுவாகிய, ஆக்கை - சரீரமானது, இருக்க - நிலைத்திருக்க, முயலார் - முயற்சி செய்யார், மடவார் - மாதரது, மயக்கில் - மயக்கத்தில், மயங்கார் - மயங்கமாட்டார், கடவுளர்க்கு நாதன் - தேவேந்திரனுடைய, ஊர் - தெய்வலோகத்தை, ஆதரியார் - இச்சியார், நான் எனது என்னார் - யான் எனது என்னும் (அகங்கார மமகாரங்களாகிய சொல்லைச்) சொல்லார்கள். எ-று.

ஆண்டளக்குமையன். ஸ்ரீரங்கநாயகியார். பிரணவ விமானம். சூரியபுஷ்கரணி. கிழக்கே திருமுகமண்டலம்.	புஜங்கசயனம் காமதேனுவுக்கும் திருமங்கையாழ்வாருக்கும் பிரத்தியக்ஷம். திருமங்கையாழ்வார்மங்களாசாஸனம்.

திருவழுந்தூர்.

௧௦. அடியாராய் வாழ்மி னறிவிலாப் பேய்காள்
செடியார் வினையனைத்துந் தீரும் - முடிவில்
செழுந்தூரத் தன்னெனினுஞ் செங்கண்மா லெங்கள்
அழுந்தூரத் தன்னணிய னாம்.

(இ-ள்.) அறிவு இலா - புத்தியில்லாத, பேய்காள் - பேய்க்குச் சமானமானவர்களே, அடியார் ஆய் - தொண்டர்களாய், வாழ்மின் - வாழுங்கள், (அங்ஙனஞ்செய்யில்) செடி ஆர் - குற்றம்பொருந்திய, வினை அனைத்தும் - எல்லாவினைகளும், தீரும் - நீங்கும், முடிவில் - மரணகாலத்தில், செழுதூரத்தன் எனினும் - மிக்கதூரத்தி லிருப்பவனாயிருந்தாலும், செங்கண்மால் - சிவந்த (கமலக்) கண்ணனாகிய திருமாலும், எங்கள் - எங்களது, அழுந்தூர் அத்தன் - திருவழுந்தூரிலெழுந்தருளிய (இறைவனுமாகிய) பெருமான், அணியன் ஆம் - சமீபத்தனவன். எ-று.

ஆமருவியப்பன். செங்கமலவல்லித்தாயார். கருடவிமானம். தரிசனபுஷ்கரணி. கிழக்கே திருமுகமண்டலம். நின்றதிருக்கோலம்.	உபரிசரவசுராஜாவுக்கும் காவேரிக்கும் தருமதேவதைக்கும் பிரத்தியக்ஷம். திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருச்சிறுபுலியூர்.

௧௧. ஆமருவி மேய்த்த வரங்கனோ டிராற்நிற்பார்
தாமருவி வாணனைத்தோள் சாய்த்தநாள் - சேமம்
உறுபுலியூர் வன்றோ வுடையா னுடைந்தான்
சிறுபுலியூ ரெந்தைமேற் சென்று.

(இ-ள்.) மருவி - பொருந்தி, வாணனை - வாணாசுரனுடைய, தோள்சாய்த்தநாள் - (ஆயிரம்) தோள்களையும் அறுத்துத் தள்ளிய அக்காலத்தில், சிறுபுலியூர்-திருச்சிறுபுலியூரென்னும் (திவ்விய தேசத்திலெழுந்தருளிய), எந்தைமேல் - என் தந்தையின்மீது, சென்று-எதிர்த்துப்போய், சேமம் உறு - காவலாகப்பொருந்திய, ஊர் - தவழ்கின்ற, புலி - புலியினுடைய, வல் தோல் உடையான் - வலிய சருமத்தை ஆடையாகவுடைய ருத்திரனும், உடைந்தான்-முதுகிட்டோடினனெனில், ஆ - பசுக்கூட்டங்களை, மருவி - சேர்ந்து, மேய்த்த-மேய்த்துவந்த, அரங்கர் எதிர் - திருவரங்கநாதருக்கு முன்பாக, ஆர் நிற்பார் - (ஏனையதேவர்களுள்) எதிர்த்து நிற்கவல்லவர் யாவர். எ-று.

அருண்மாக்கடல்.
திருமாமகள் நாச்சியார்.
நந்தவர்த்தன விமானம்.
அனந்தசரஸு.
தெற்கே திருமுகமண்டலம்.
புஜங்கசயனம்.
வியாசமாமுனிக்கும்-வியாக்கிரமருக்கும் பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களசாஸனம்.

திருச்சேறை.

௧௨. சென்றுசென்று செல்வஞ் செருக்குவார் வாயிறொறும்
நின்றுநின்று தூங்குமட நெஞ்சமே - இன்றமிழைக்
கூறைக்குஞ் சோற்றுக்குங் கூறாதே பேறாகச்
சேறைக்கு நாயகன்பேர் செப்பு.

(இ-ள்.) சென்று சென்று - பலமுறைபோய், செல்வம் - ஐஸ்வரியத்தினால், செருக்குவார்-இறுமாந்திருப்பவரது, வாயில்தொறும்-வாசல்கள்தோறும், நின்று நின்று - நெடுநேரம் நின்று, தூங்கும்-சோம்பியிருக்கும், மடம் - அறியாமையாகிய, நெஞ்சே-மனமே, இன்-இனிமையாகிய, தமிழை - தமிழ்ப்பாடலை, கூறைக்கும் - வஸ்திரத்தின்பொருட்டும், சோற்றுக்கும் - சோற்றின்பொருட்டும், கூறாதே-பாடாமல், பேறு ஆக - பயன் உண்டாக, சேறைக்கு - திருச்சேறையென்னும் திவ்விய தேசத்துக்கு, நாயகன் - தலைவனது, பேர் - திருநாமத்தை, செப்பு - சொல்லுவாயாக. எ-று.

சாரக்ஷேத்திரம்.
சாரநாதர்.
சாரநாயகி.
சாரவிமானம்.
சாரபுஷ்கரணி.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
காவேரிக்குப் பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருத்தலைச்சங்கநாண்மதியம்.

௧௩. செப்புங்கா லாதவனுந் திங்களும்வா னுந்தாையும்
அப்புங்கா லுங்கனலு மாய்நின்றான் - கைப்பால்
அலைச்சங்க மேந்து மணியரங்கத் தம்மான்
தலைச்சங்க நாண்மதியத் தான்.

(இ-ள்.) கைப்பால் - கையினிடத்தில், அலை - (சத்துருக்களை) வருத்துகின்ற, சங்கம் - பாஞ்சசந்நியத்தை, ஏந்தும் - தாங்கிய, அணி- அழகிய, அரங்கத்து - திருவரங்கத்திலெழுந்தருளிய, அம்மான்-சுவாமியும், தலைச்சங்க நாண்மதியத்தான் - திருத்தலைச்சங்க நாண்மதியமென்னுந் திவ்விய தேசத்தி லெழுந்தருளியிருக்கின்றவனுமாகிய (ஸ்ரீயப்பதி), செப்புங்கால் - சொல்லுமிடத்தில், ஆதவனும் - சூரியனும், திங்களும் - சந்திரனும், வானும் - ஆகாயமும், தரையும்-பூமியும், அப்பும்-ஜலமும், காலும்-காற்றும், கனலும்-தீயும், ஆய்நின்றான் - ஆகிநின்றனன். எ-று.

நாண்மதியப்பெருமாள்.
வெண்சுடர்ப்பெருமாள்.
தலைச்சங்கநாச்சியார்.
செங்கமலவல்லி.
சந்திரவிமானம்.
சந்திரபுஷ்கரணி.
கிழக்கேதிருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
தேவபிருந்தங்களுக்கும் சந்திரனுக்கும் பிரத்தியக்ஷம்.
பூதத்தாழ்வார் - திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருக்குடந்தை.

கச. தானே படைத்துலகைத் தானே யளித்துநீ
தானே யழிக்குந் தளர்ச்சியோ-வானில்
திருமகுடந் தைக்கச் சிறுகுறளாய் நீண்ட
பெருமகுடந் தைக்கிடந் தாய்பேசு.

(இ-ள்.) உலகை-உலகத்தை, நீதானே படைத்து - தேவரீரே சிருஷ்டித்து, நீதானே அளித்து-தேவரீரே ரக்ஷித்து, நீதானே-தேவரீரே, அழிக்கும் - சம்மரிக்கும், தளர்ச்சியோ - இளைப்பினாலோ, வானில் - ஆகாயத்தில், திருமகுடம் - அழகிய கிரீடமானது, தைக்க- பொருந்த, சிறு - சிறிய, குறளாய்-வாமனாவதாரமாகி, நீண்ட - பின் திரிவிக்கிரம அவதாரங்கொண்டருளிய, பெரும - பெருமானே, குடந்தை - திருக்குடந்தையென்னுந் திவ்வியதேசத்தில், கிடந்தாய்-சயனித்திருக்கின்றவனே, பேசு - (அதற்குக்காரணம்) சொல்லுவாயாக. எ-று.

நெடியோனே! நீர் திருக்குடந்தையிற் பள்ளிகொண்டது சிருட்டிதிதிசம்மாரஞ் செய்ததனாலுண்டாகிய இளைப்பு நீங்குவதற்குப் போலும் என்பது கருத்து.

சார்ங்கபாணிப் பெருமாள்.
ஆராவமுதர்.
கோமளவல்லி.
வைதிகவிமானம்.
ஹேமபுஷ்கரணி.
கிழக்கே திருமுகமண்டலம்.
உத்யோகசயனம்.
ஹேமமகாரிஷிக்குப் பிரத்தியக்ஷம். பூதத்தாழ்வார் பேயாழ்வார் திருமழிசையாழ்வார்நம்மாழ்வார் பெரியாழ்வார் திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருக்கண்டியூர்.

கரு. பேசவரிற் றென்னரங்கன் பேரெல்லாம் பேசுகவாய்
கேசவனைக் காண்கவிழி கேட்கசெவி-ஈசனூர்
உண்டியூர் தோறு முழன்றிரவா மற்றவிர்த்தான்
கண்டியூர் கூப்புகவென் கை.

(இ-ள்.) வாய்-என்வாயானது, பேசவரில்-பேசவிரும்பினால், தென்-தெற்கின்கணுள்ள, அரங்கன் - திருவரங்கநாதனது, பேர் எல்லாம் - திருநாமங்களையெல்லாம், பேசுக - பேசக்கடவது, விழி-என் கண்கள், கேசவனை - கேசவனென்னுந் திருநாமத்தையுடையவனை; காண்க-காணக்கடவன, செவி - என் காதுகள், கேட்க-அவன் (புகழையே) கேட்கக்கடவன, ஈசனூர் - ருத்திரனூர், உண்டி - உணவை, ஊர்தோறும் - ஊர்கடோறும், உழன்று - வருந்திச்சென்று, இரவாமல் - யாசியாமல், தவிர்த்தான் - நீக்கியருளினவனுடைய, கண்டியூர்-திருக்கண்டியூரென்னும் திவ்வியதேசத்தை, என்கை-என்கரங்களானவை, கூப்புக - குவித்துவணங்கக்கடவன. எ-று.

கேசவன் - பரிசுத்தமாயும் மநோஹரமாயும் நீலவர்ணமாயுமிரா நின்ற சுருண்ட தலைமயிரையுடையவன்.

அரன்சாபந்தீர்த்தபெருமாள்.
கமலவல்லிநாச்சியார்.
கமலாகிருதிவிமானம்.
*வேதவேத விமானம் என்றும் பெயர்.
கபாலதீர்த்தம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருவிண்ணகரம்.

கசு. கையு முரையுங் கருத்துமுனக் கேயடிமை
செய்யும்படி நீ திருத்தினாய்-ஐயா
திருவிண் ணகராளா சிந்தையிலு மெண்ணேன்
பெருவிண் ணகராளும் பேறு.

(இ-ள்.) கையும் - (அடியேனது) கரங்களும், உரையும்-சொல்லும், கருத்தும் - எண்ணமும், உனக்கே-தேவரீருக்கே, அடிமை செய்யும்படி - தொண்டுபுரியும்விதம், நீ-தேவரீர், திருத்தினாய்-திருத்தமாகத் தந்தருளினீர், (அவ்வாறு தந்தருளிய தேவரீரைத் தியானிப்பதை விட்டு), ஐயா - ஐயனே, திருவிண்ணகர் ஆளா-திருவிண்ணகரமென்னுந் திவ்வியதேசத்தி லெழுந்தருளியவனே, பெரு - பெரிய, விண்ணகர் - தேவலோகத்தை, ஆளும்-அரசுசெய்யும், பேறு - செல்வத்தை, சிந்தையிலும் - மனத்திலும், எண்ணேன்-நினையேன். எ-று.

உப்பிலியப்பன்.
பூமிதேவி நாச்சியார்.
விஷ்ணுவிமானம்.
ஆர்த்திபுஷ்கரணி.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
மார்க்கண்டேயருக்கும் பெரியதிருவடிக்கும் காவேரிக்கும் தருமதேவதைக்கும்பிரத்தியக்ஷம்.
நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருக்கண்ணபுரம்.

கஎ. பேறு தரினும் பிறப்பிறப்பு நோய்மூப்பு
வேறு தரினும் விடேன்கண்டாய் - ஏறுநீர்
வண்ணபுரத் தாயென் மனம்புகுந்தாய் வைகுந்தா
கண்ணபுரத் தாயுன் கழல்.

(இ-ள்.) ஏறுநீர் - சமுத்திரம்போலும், வண்ணம் - நிறத்தையுடைய, புரத்தாய்-திருமேனியையுடையவனே, என்-எனது, மனம்-கருத்தில், புகுந்தாய் - பிரவேசித்தவனே, வைகுந்தா - பரமபதத்தையுடையவனே, கண்ணபுரத்தாய் - திருக்கண்ணபுர மென்னுந் திவ்வியதேசத்தில்வீற்றிருப்பவனே, பேறுதரினும் - செல்வத்தைக்கொடுத்தாலும், பிறப்பு இறப்பு - ஜனனமரணத்தையும், நோய் - வியாதியையும், மூப்பு - விருத்தாப்பியத்தையும், வேறு-வேறாகிய நரகத்தையும், தரினும் - தந்தாலும், உன் கழல் - தேவரீரது திருவடிகளை, விடேன் - விட்டு நீங்கேன். எ-று. கண்டாய் - முன்னிலையசை.

இரண்டா மடியிலுள்ள தரினும் என்ற உம்மை பிறப்புமுதலியவற்றைத் தராது எனப் பொருள்படலால் எதிர்மறை. மாயன் - தன்னைச்சரணமடையாத சகலசேதனர்களையும் மோகிக்கச் செய்யத்தக்கதான திரைச்சீலைபோலு மிராநின்ற மாயையுடையவன்.

சௌரிராஜப்பெருமாள்.
கண்ணபுரநாயகி.
உற்பலாவதகவிமானம்.
நித்யபுஷ்கரணி.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
கண்ணுவமாமுனிக்குப் பிரத்தியக்ஷம்.
நம்மாழ்வார் - குலசேகராழ்வார், பெரியாழ்வார் - திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருவாலி.

கஅ. கழன்றுபோம் வாயுவினைக் கட்டாமநீர்த்தம்
உழன்றுயோ யாடாம லுய்ந்தேன் - அழன்று
பொருவாலி காலன் பரகாலன் போற்றும்
திருவாலி மாயனையே சேர்ந்து.

(இ-ள்.) அழன்று - கோபித்[illegible] பொரு-யுத்தஞ்செய்த, வாலி-வாலிக்கு, காலன் - இ[illegible] [illegible] - திருமங்கை மன்னன், போற்றும் - துதிக்கி[illegible] [illegible]வாலியென்னும் திவ்விய தேசத்திலெழுந்தருளி[illegible] [illegible] - மாயனென்னுந் திருநாம

முடையவனே, சேர்ந்து - அடைந்து, கழன்றுபோம் - உடலைவிட்டு நீங்கிப்போகின்ற, வாயுவினை - பிராணவாயுவினை, கட்டாமல் - பந்திக்காமலும், தீர்த்தம் - புண்ணிய நதிகளில், உழன்றுபோய் - (உடல்) வருந்திச்சென்று, ஆடாமல் - ஸ்நானம் செய்யாமலும், உய்ந்தேன் - உச்சீவித்தேன். எ-று.

வயவாலிமணவாளர்.
அமுதகடவல்லிநாச்சியார்.
அஷ்டாக்ஷரவிமானம்.
இலாக்ஷணிபுஷ்கரணி.
அலாதனிபுஷ்கரணி.
மேற்கே திருமுகமண்டலம்.
வீற்றிருந்த திருக்கோலம்.
அலாதனிகஞ்சமப் பிரஜாபதிக்கும் திருமங்கையாழ்வாருக்கும் பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருநாகை.

கசு. சேர்ந்துனக்குக் குற்றேவல் செய்திலனென் சிந்தையினீ
ஆர்ந்ததற்கோர் கைம்மாறறிகிலேன் - பூந்துவரை
மன்னுகை யாழி வலவா வலம்புரியாய்
தென்னுகை யாயருளிச் செய்.

(இ-ள்) சேர்ந்து-நின்னை அடைந்து, உனக்கு - தேவரீருக்கு, குற்றேவல் - சிறிய தொண்டினை, செய்திலன் - செய்தேனில்லை, என்சிந்தையில் - என் மனத்தில், நீ ஆர்ந்ததற்கு - நீர் எழுந்தருளியதற்கு, ஓர் கைம்மாறு - ஓர் பிரதியுபகாரமும், அறிகிலேன் - செய்ய அறியேன், (ஆயினும்) பூ - அழகிய, துவரை - துவாரகாபுரிக்கு, மன்னு - அரசனே, கை - திருக்கரத்தில், ஆழி - சுதரிசனத்தையுடைய, வலவா - வல்லவனே, வலம்புரியாய் - பாஞ்சசந்நியத்தையுடையவனே, தென் - தெற்கின்கணுள்ள, நாகையாய் - திருநாகையென்னுந் திவ்விய தேசத்தையுடையவனே, அருளிச்செய்-கிருபைசெய்வாயாக. எ-று.

சௌந்தரராஜப்பெருமாள்.
சௌந்தர்யவல்லித்தாயார்.
சௌந்தர்யவிமானம்.
சாரபுஷ்கரணி.
கிழக்கே திருமுகமண்டலம்
நின்ற திருக்கோலம்.
நாகராஜனுக்கும் திருமங்கையாழ்வாருக்கும் பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருநறையூர்.

உ0. செய்ய சடையோன் திசைமுகத்தோன் வானவர்கோன்
ஐயமறுத் தின்ன மறியாரோ - துய்ய
மருநறையூர் வண்டுழாய் மாயோன்செவ் வாயோன்
திருநறையூர் நின்றான் செயல்.

(இ-ள்.) துய்ய - பரிசுத்தமாகிய, மரு - வாசனைபொருந்திய, நறை-தேன், ஊர்-பரவுகின்ற, வள்-வளப்பமாகிய, துழாய் - திருத்

துழாய்மாலையையுடைய, மாயோன் - மாயவனென்னுந் திருநாமத்தையுடையவனும், செவ்வாயோன் - செந்தாமரைபோன்ற வாயையுடையவனும், திருநறையூர் - திருநறையூரென்னுந் திவ்வியதேசத்தில், நின்றான் - நின்ற திருக்கோலங்கொண்டவனுமாகிய திருமாலின், செயல் - செயலை, செய்ய-சிவந்த, சடையோன் - சடையினையுடைய ருத்திரனும், திசைமுகத்தோன்-பிரமனும், வானவர்கோன்-தேவேந்திரனும், ஐயம் அறுத்து-சந்தேகத்தை நீக்கி, இன்னம்-இன்னும், அறியார் - தெளியார்கள். எ-று. ஏ-தேற்றம்.

பெருமாள்நம்பி.
நம்பிக்கைநாச்சியார்.
ஸ்ரீநிவாசவிமானம்.
மணிமுத்தாநதி.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
மேதவமுனி கன்னிகையைப் பலிமிபிடித்துக் கொண்டுபோக அவனைச் சபித்துமேதவமுனிக்கு அருள்செய்தவர்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருநந்திபுர விண்ணகரம்.

௨௧. செயற்கரிய செய்வோமைச் செய்யாம னெஞ்சே
மயக்குவா ரைவர் வலியால்-நயக்கல்வி
சிந்திபுர விண்ணகர மென்பர் திருச் செங்கண்மால்
நந்திபுர விண்ணகர நாடு.

(இ-ள்.) செயற்கு - செய்தற்கு, அரிய - அருமையானவைகளை, செய்வோமை - செய்யுந்தன்மையையுடைய எம்மை, செய்யாமல் - செய்யவொட்டாமல், ஐவர் - பஞ்சேந்திரியங்களாவார், வலியால்-(தமது) பலத்தால், மயக்குவர் - மயக்குவார்கள் (அன்றியும்), நயம்கல்வி - நன்மைதருகிற கல்வியை, சிந்தி-சிந்தனைசெய், விண்ணகரம் - சுவர்க்கலோகத்தை, புரஆள், என்பர் - என்றுகற்பிப்பர், (ஆதலால் அங்ஙனம் பஞ்சேந்திரியங்களின் வயத்தாய்ச் செல்வதைவிட்டு) நெஞ்சே - மனமே, திருச்செங்கண்மால் - அழகியசெந்தாமரைக்கண்களையுடைய திருமாலினது, நந்திபுரவிண்ணகரம் - திருநந்திபுரவிண்ணகரமென்னுந் திவ்வியதேசத்தை, நாடு-தியானிப்பாயாக. எ-று.

செயற்கரிய செய்தலாவது இயமம் நியமம் முதலிய எண்வகையோக வுறுப்புக்களைச் செய்தலாம். இதனை "செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர் - செயற்கரிய செய்கலாதார்" என்னும் திருக்குறளானுமுணர்க. எம்பெருமானைத் தியானஞ்செய்துய்யாமல் கல்வியை விரும்பிக்கற்றும், சுவர்க்கத்தை யாண்டும் பயனில்லை என்பதுகருத்து

விண்ணகரப்பெருமாள்.
ஜெகந்நாதர்.
நாதநாதப்பெருமாள்.
செண்பகவல்லிநாச்சியார்.
மந்தாரவிமானம்.
நந்திதீர்த்தம்.

மேற்கே திருமுகமண்டலம்.
வீற்றிருந்ததிருக்கோலம்.
சந்திரன் சிபிச்சக்கிரவர்த்திக்கும் பிரத்தியக்ஷம்.

திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருவிந்தளூர்.

உஉ. நாடுதும்வா நெஞ்சமே நாராய ணன்பதிகள்
கூடுதும்வா மெய்யடியார் கூட்டங்கள்-சூடுதும்வா
வீதியிந்த ளத்தகிலின் வீசுபுகை வாசமெழும்
ஆதியிந்த ளூரா னடி.

(இ-ள்) நெஞ்சமே - மனமே, நாராயணன்-நாராயணனுடைய, பதிகள் - திருப்பதிகளை, நாடுதும் வா - தரிசிப்போம் வா, மெய்-உண்மையாகிய, அடியார் கூட்டங்கள் - தொண்டரது திருக்கூட்டங்களில், கூடுதும் வா - சேர்வோம் வா, வீதி-வீதிகளில், இந்தளத்து-தூபக்கால்களில், அகிலின் - அகிற்கட்டைகளின், வீசு - வீசுகின்ற, புகை-தூமத்தின், வாசம் - மணமானது, எழும் - எழுகின்ற, ஆதி-முதன்மையாகிய, இந்தளூரான் - திருவிந்தளூரென்னுந் திவ்விய தேசத்தையுடையவனது, அடி - திருவடிகளை, சூடுதும் வா - (தலையில்) தரித்துக்கொள்ளுவோம் வா, எ-று.

- இந்தளம்-ஓர் பண் எனினுமாம்.

சுகந்தவனநாதர்.
மருவினியமைந்தர்.
சந்திரபாப விமோசனநாச்சியார்
புண்டரீகவல்லிநாச்சியார்.
வேதசக்கிரவிமானம்.
இந்துபுஷ்கரணி.

கிழக்கே திருமுகமண்டலம்.
வீரசயனம்.
சந்திரனுக்குப்பிரத்தியக்ஷம்.
குலசேகராழ்வார் - திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருச்சித்திர கூடம்.

உங. அடியா லுலகெல்லா மன்றளந்து கொண்ட
நெடியானைக் கூடுதியே நெஞ்சே - கொடிதாய
சூத்திரகூ டங்கி கொளுந்தாமுன் கோவிந்தன்
சித்திரகூ டங்கருதிச் செல்.

(இ-ள்.) நெஞ்சே - மனமே, அடியால்-திருவடியினால், உலகு எல்லாம் - உலகங்களை எல்லாம், அன்று - வாமனாவதாரங் கொண்டகாலத்து, அளந்துகொண்ட - அளந்தருளிய, நெடியானை - (பின்) திருவிக்கிரமாவதாரங் கொண்டவனை, கூடுதியேல்-கூடக்கருதினால், கொடிதாய - கொடுமையாகிய, சூத்திரம்-வஞ்சனையையுடைய, கூடு-தேகத்தை, அங்கி - நெருப்பு, கொளுந்தாமுன் - கொளுத்துவதற்கு முன், கோவிந்தன் - கோவிந்தனுடைய, சித்திரகூடம் - திருச்சித்திரகூடமென்னும் திவ்விய தேசத்தை, கருதி - நினைத்து, செல் - செல்வாயாக. எ-று.

கோவிந்தன் - வராஹ அவதாரமெடுத்து நஷ்டமான பூமியைத் தேடிப்பின்பு அதை அடைந்தவன்.

கோவிந்தராஜப்பெருமாள்.
புண்டரீகவல்லிநாச்சியார்.
சாத்துவீகவிமானம்.
டண்டரீகசரஸு.
கிழக்கே திருமுகமண்டலம்.
போகசயனம்.
சிவன் முதலிய தில்லைமூவாயிரவர்க்கும் கண்ணுவர்க்கும் பிரத்தியக்ஷம். தேவர்களுக்குக் கொலுவீற்றிருந்த இடம்.
குலசேகராழ்வார் - திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருச்சிராம விண்ணகரம்.

உச. செல்லுந் தொறுமுயிர்பின் செல்லு மிருவினையை
வெல்லு முபாயம் விரும்புவீர் - தொல்லரங்கர்
சீராம விண்ணகரஞ் சேர்மின்பின் மீளாத
வூராம விண்ணகர முண்டு.

(இ-ள்.) செல்லும் தொறும்-(உடலைவிட்டுயிர்) நீங்கிப்போகுந் தோறும், உயிர்பின் - உயிரின்பின், செல்லும் - போகாநின்ற, இருவினையை - (நல்வினை தீவினையென்னும்) இரண்டு வினைகளையும், வெல்லும் - செயிக்கின்ற, உபாயம் - உபாயத்தை, விரும்புவீர் - இச்சிக்கின்றவர்களே, தொல் - பழய, அரங்கர் - திருவரங்க நாதருடைய, சீராமவிண்ணகரம் - திருச்சீராம விண்ணகரமென்னுந் திவ்வியதேசத்தை, சேர்மின் - அடையுங்கள், பின் - மறுபடியும், மீளாத - திரும்பாத, ஊராம் - திருநாடாகிய, அ விண்ணகரம் - அந்தப் பரமபதமானது, உண்டு - கிடைக்கும். எ-று.

தாடாளர்
திருவிக்கிரமமூர்த்தி.
மட்டவிழுங்குழலிநாச்சியார்.
புஷ்கலாவத்தகவிமானம்.
சக்கிரதீர்த்தம்.
சங்குபுஷ்கரணி.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
அஷ்டகோணமகாரிஷிக்குப் பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருக்கூடலூர்.

உரு. உண்டுகேட் டுற்றுமோந் துப்பார்க்கு மைவர்க்கே
தொண்டுபட லாமோவுன் றொண்டனேன்-விண்டிலங்கும்
ஆடலூர் நேமிமுத லேம்படையா யன்புடையாய்
கூடலூ ராயிதனைக் கூறு.

(இ-ள்.) உன் தொண்டனேன் - உனது அடியனாகிய யான், உண்டு - புசித்து, கேட்டு - கேட்டு, உற்று - பரிசித்து, மோந்து - வாசனைபார்த்து, பார்க்கும் - காண்கின்ற, ஐவர்க்கே - பஞ்சேந்திரியங்களுக்கே, தொண்டுபடல் ஆமோ - அடிமைப்படலாகுமோ, விண்டு - ஒளிவிட்டு, இலங்கும் - பிரகாசிக்கின்ற, ஆடல் - வெற்றியுள்ள, ஊர்-

செலுத்துகின்ற, நேமிமுதல் - சக்கரமுதலிய, ஐம்படையாய் - பஞ்சாயுதங்களையுடையவனே, அன்பு உடையாய் - அன்புடையவனே, கூடலூராய் - திருக்கூடலூரென்னுந் திவ்விய தேசத்தை யுடையவனே, இதனைக்கூறு - இதனைச் சொல்லுவாயாக. எ-று.

வையங்காத்தபெருமாள்.
பத்மாசனநாச்சியார்.
சுத்தசத்துவவிமானம்.
சக்கிரதீர்த்தம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
நந்தகமாமுனிக்குப் பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருக்கண்ணங் குடி.

உசு. கூறுபுகழ்த் தன்னடிக்கே கூட்டுவனோ வின்னமென்னை
வேறுபடப் பல்பிறப்பில் வீழ்த்துவனோ-தேறுகிலேன்
எண்ணங் குடியா யிருந்தானின் றான்கிடந்தான்
கண்ணங் குடியான் கருத்து.

(இ-ள்.) எண்ணம் - என்மனத்தில், குடியாயிருந்தான் - வாசமாகவிருந்தவனும், நின்றான் - நின்ற திருக்கோலங் கொண்டிருந்தவனும், கிடந்தான் - சயனித்த திருக்கோலங்கொண்டவனுமாகிய, கண்ணங்குடியான் - திருக்கண்ணங்குடியென்னுந் திவ்விய தேசத்தையுடையவனது, கருத்து-எண்ணமானது, கூறு-சொல்லுகின்ற, புகழ்-கீர்த்தியினையுடைய, தன் அடிக்கே - தனது திருவடிக்கே, கூட்டுவனோ - சேர்ப்பானோ, இன்னம் - இனிமேலும், என்னை - அடியேனை, வேறுபட-பலவகையாக, பல் பிறப்பில் - பல பிறவிகளில், வீழ்த்துவனோ - விழச் செய்வானோ, தேறுகிலேன் - ஒன்று மறியேன். எ-று.

சாமளமேனிப்பெருமாள்.
அரவிந்தவல்லிநாச்சியார்
உத்பலவிமானம்.
ஸ்ரீவணபுஷ்கரணி.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
பிருகுசைத்தியருக்கும் கௌதமமாமுனிக்கும் பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருக்கண்ண மங்கை.

உஎ. கருத்தினால் வாக்கினா லன்மறையுங் காணா
ஒருத்தனைநீ நெஞ்சே யுணரில் - பெருத்தமுகில்
வண்ணமங்கை கண்கால் வனசந் திருவரங்கம்
கண்ணமங்கை யூரென்று காண்.

(இ-ள்.) கருத்தினால் - மனத்தினாலும், வாக்கினாலும் - வாக்கினாலும், நால்மறையும்-நான்கு வேதங்களும், காணா-அறியவொண்ணாத, ஒருத்தனை - ஒப்பற்ற திருமாலை, நெஞ்சே - மனமே, நீ உணரில்-நீ அறியில், வண்ணம் - நிறமானது, பெருத்த - பெரிதாகிய, முகில்-மே

கமென்றும், அம் - அழகிய, கை - கரங்களும், கண் - நேத்திரங்களும், கால் திருவடிகளும், வனசம் - தாமரைகளென்றும், திருவரங்கம் - திருவரங்கமும், கண்ணமங்கை - திருக்கண்ணமங்கையும், ஊர் என்று-திவ்விய தேசங்களென்றும், காண் - அறிவாயாக. எ-று.

பக்தவச்சலப்பெருமாள்.
அபிஷேகவல்லித்தாயார்.
உத்பலவிமானம்.
தரிசனபுஷ்கரணி.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
வருணனுக்கும் உரோமசனுக்கும் பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருக்கவித் தலம்.

உஅ. காணியு மில்லமுங் கைப்பொருளு மீன்றோரும்
பேணிய வாழ்க்கையும் பேருறவும் - சேணில்
புவித்தலத்தி லின்பமும் பொங்கரவ மேறிக்
கவித்தலத்திற் கண்டுயில்வோன் கால்.

(இ-ள்.) காணியும் - பூமியும், இல்லமும் - வீடும், கைப்பொருளும்-கரத்திலுள்ள திரவியமும், ஈன்றோரும்-பெற்றோரும், பேணிய-விரும்பிய, வாழ்க்கையும் - வாழ்வும், பேர் உறவும் - நெருங்கிய சுற்றமும், சேணில் - வானுலகத்திலும், புவித்தலத்தில் - பூலோகத்திலு (முண்டாகிய), இன்பமும் - சுகமும், பொங்கு - சீறுகின்ற, அரவம் ஏறி - ஆதிசேடன்மீதேறி, கவித்தலத்தில் - திருக்கவித்தலமென்னுந் திவ்வியதேசத்தில், கண்டுயில்வோன்-திருக்கண்வளர்ந் தருளுகின்றவனுடைய, கால்-திருவடியேயாம், எ-று.

கஜேந்திரவரதர்.
ரமாமணிவல்லிநாச்சியார்.
பொற்றாமரையாள்நாச்சியார்.
ககஞகிருதிவிமானம்.
கஜேந்திரபுஷ்கரணி.
கபிலதீர்த்தம்.
கிழக்கேதிருமுகமண்டலம்.
புஜங்கசயனம்.
கஜேந்திரனுக்கும் ஆஞ்சநேயருக்கும் பிரத்தியக்ஷம்.
திருமழிசையாழ்வார் மங்களாசாஸனம்.

திருவெள்ளியங் குடி.

உகூ. காலளவு போதாக் கடன்ஞாலத் தோர்கற்ற
நூலளவே யன்றி நுவல்வாரார் - கோலப்
பருவெள்ளி யங்குடியான் பாதகவூண் மாய்த்த
திருவெள்ளி யங்குடியான் சீர்.

(இ-ள்.) கோலம்-அழகிய, பருவெள்ளியங் குடியான்-பெரிய வெள்ளிமலையைக் குடியாகக்கொண்டிருக்கிற சிவனது, பாதகம் ஊண்-(பிரமகத்தியாகிய) பாவத்தினால் ஏற்று உண்ணுதலை, மாய்த்த-நீக்கிய, திருவெள்ளியங்குடியான்-திருவெள்ளியங்குடி யென்னுந் திவ்

விய தேசத்தை யுடையவனது, சீர்-சிறப்பை, கால்-திருவடியினுல், அளவுபோதா - அளவிடுதற்குப் போதாத, கடல் - சமுத்திரஞ்சூழ்ந்த, ஞாலத்தோர்-உலகத்தவர்கள், கற்ற - வாசித்துக்கொண்ட, நூல் அளவே அன்றி - சாத்திரங்களினுல் அறிந்த மட்டேயல்லாமல், நுவல்வார் ஆர் - சொல்ல வல்லவர்கள் யாவருளர். எ-று.

கோல்வல்லிராமன்.
மரகதவல்லிநாச்சியார்.
புஷ்பலாவர்த்தகவிமானம்.
சுக்கிரபுஷ்கரணி.
பிரம்மதீர்த்தம்.
கிழக்கேதிருமுகமண்டலம்.
புஜங்கசயனம்.
சுக்கிரனுக்கும் பிரமனுக்கும் பராசருக்கும் இந்திரனுக்கும் பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருமணி மாடக்கோயில்.

௩0. சீரே தருங்கதியிற் சேருகைக்கு நானுன்னை
நேரே வணங்கினே னெஞ்சேநீ - பாரில்
அணிமாடக் கோயி லரங்கனூர் நாங்கூர்
மணிமாடக் கோயில் வணங்கு.

(இ-ள்.) நெஞ்சே - மனமே, நீ - நீ, சீரே - சிறப்பையே, தரும் - கொடுக்கின்ற, கதியில் - முத்தியில், சேருகைக்கு - அடையும் வண்ணம், நான் - யான், உன்னை - நின்னை, நேரே வணங்கினேன் - சாஷ்டாங்கமாகத் தண்டனிட்டேன், பாரில் - பூமியில், அணி-அழகிய, மாடம் - உப்பரிகைகளையுடைய, கோயில் - திருவரங்கம் பெரியகோயிலி லெழுந்தருளிய, அரங்கனூர்-திருவரங்கநாதருடைய, நாங்கூர் - திருநாங்கூரைச்சார்ந்த, மணிமாடக்கோயில் - திருமணிமாடக்கோயிலென்னுந் திவ்வியதேயத்தை, வணங்கு - நமஸ்கரிப்பாயாக.

நந்தாவிளக்குப்பெருமாள்.
நரநாராயணர்.
புண்டரீகவல்லிநாச்சியார்.
பிரணவவிமானம்.
இந்திரபுஷ்கரணி.
ருத்திரபுஷ்கரணி.
ஏகாதசருத்திரருக்கும் இந்திரனுக்கும் பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருவைகுந்தவிண்ணகரம்.

௩க. வணங்கேன் பிறதெய்வ மாலடியா ரல்லாக்
குணங்கேடர் தங்களுடன் கூடேன்-இணங்கி நின்று
வைகுந்த விண்ணகாம் வாழ்த்துவே னீதன்றே
வைகுந்த விண்ணகர வாழ்வு.

(இ-ள்.) பிறதெய்வம்-வேறுதெய்வங்களை, வணங்கேன்-தொழேன், மால் - திருமாலினுடைய, அடியார் அல்லா - தொண்டராகாத, குணம்கேடர் தங்களுடன் - நற்குணமில்லாதவருடன், கூடேன்-சேரேன், இணங்கி நின்று - திருமாலடியாருடன் கூடியிருந்து,

வைகுந்த விண்ணகரம் - திருவைகுந்தவிண்ணகரமென்னும் திவ்விய தேசத்தை, வாழ்த்துவேன் - துதிப்பேன், ஈது அன்றோ - இஃதல்லவோ, வைகுந்தவிண்ணகரம் - பரமபதமாகிய விண்ணுலகத்தினது, வாழ்வு - வாழ்வாவது. எ-று.

வைகுந்தநாதன்.
தாமரைக்கண்ணுடையபிரான்.
வைகுந்தவல்லி நாச்சியார்.
அனந்தசத்தியவர்த்தகவிமானம்.
* சோபனவிமானமென்றும் பெயர்.
லட்சுமி புஷ்கரணி.
கிழக்கே திருமுகமண்டலம்.
வீற்றிருந்ததிருக்கோலம்.
உதங்கமகாரிஷிக்குப்பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருவரிமேய விண்ணகரம்.

௩௨. வாழு மடியார் மடநெஞ்சே நம்மளவோ
தாழுஞ் சடையோன் சதுமுகத்தோன்-பாழிக்
கரிமேய விண்ணகரக் காவலோன் கண்டாய்
அரிமேய விண்ணகரத் தார்க்கு.

(இ-ள்.) அரிமேய விண்ணகரத்தார்க்கு - திருவரிமேயவிண்ணகரமென்னும் திவ்வியதேசத்தையுடையவருக்கு, மடம் - அறியாமையையுடைய, நெஞ்சே - மனமே, வாழும்-வாழ்கின்ற, அடியார்-பாகவதர்கள், நம் அளவோ - நம்மட்டுந்தானோ? அன்று, தாழும்-நீண்ட, சடையோன் - சடையினையுடைய சிவனும், சதுமுகத்தோன் - பிரமனும், பாழி-பலம்பொருந்திய, கரி - அயிராவதமென்னும் யானையின்மேல், மேய - பொருந்திய, விண்நகரம் காவலோன்-சுவர்க்கலோகத்துக்கு அரசனாகிய இந்திரனுமாம். எ-று.

குடமாடு கூத்தப்பெருமாள்.
அமுதகடவல்லிநாச்சியார்.
உதயஸிருங்கவிமானம்.
கோடிதீர்த்தம்.
அமுததீர்த்தம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
வீற்றிருந்த திருக்கோலம்.
உதங்கமகாரிஷிக்குப் பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருத்தேவனார் தொகை.

௩௩. ஆர்க்கும் வலம்புரியா லண்டமு மெண்டிசையும்
கார்க்கடலும் வெற்புங் கலங்கினவால்-சீர்க்கும்
திருத்தேவ னார்தொகைமால் செவ்வாய்வைத் தூதத்
தருத்தேவனார் தொகையுஞ் சாய்ந்து.

(இ-ள்.) சீர்க்கும் - சிறப்பமைந்த, திருத்தேவனார் தொகை-திருத்தேவனார் தொகையென்னுந் திவ்வியதேசத்திலெழுந்தருளிய, மால் - திருமாலானவர், ஆர்க்கும் - சத்திக்கின்ற, வலம்புரியால்-

டாஞ்சசர்நியத்தினல், செவ்வாய்வைத்து-செந்தாமரைபோன்ற வாயில்வைத்து, ஊத - ஊதியதினல், அண்டமும் - அண்டங்களும், எண்திசையும் - அஷ்டதிக்குகளும், கார்-கரிய, கடலும் - சமுத்திரமும், வெற்பும்-மலையும், தருதேவனர் - கற்பகத்தருவையுடைய தேவர்களுடைய, தொகையும் - கூட்டமும், சாய்ந்து-மூர்ச்சித்து வீழ்ந்து, கலங்கின - கலக்கமுற்றன. எ-று. ஆல்-அசை.

தேவநாயகப்பெருமாள்.
கடல் மகள் நாச்சியார்.
சுபகரவிமானம்.
சோபனபுஷ்கரணி.
தேவசபாபுஷ்கரணி.
மேற்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
வசிஷ்டருக்குப்பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருவண்புருடோத்தமம்.

௩௪. சாய்ந்த திருவரங்கந் தண்வேங் கடங்குடந்தை
ஏய்ந்த திருமா லிருஞ்சோலை - பூந்துவரை
வண்புரு டோத்தமமாம் வானவர்க்கும் வானவனும்
ஒண்புரு டோத்தமன்ற னூர்.

(இ-ள்.) சாய்ந்த-சயனித்த திருக்கோலங்கொண்ட, திருவரங்கம் - திருவரங்கமும், தண் - குளிர்ந்த, வேங்கடம் - திருவேங்கடமும், குடந்தை - திருக்குடந்தையும், ஏய்ந்த - பொருந்திய, திருமாலிருஞ்சோலை-அழகர்மலையும், பூ - அழகிய, துவரை - துவாரகையும், வண்புருடோத்தமம் ஆம்-திருவண்புருடோத்தமமுமாம், வானவர்க்கும்-தேவர்களுக்கும், வானவன் ஆம் - தேவனுகிய, ஒள் - ஒள்ளிய, புருடோத்தமன்றன்-ஸ்ரீ புருஷோத்தமனுடைய, ஊர்-திவ்விய தேசங்கள். எ-று.

புருடோத்தமன் - வியக்தமாயும் அவியக்தமாயும் இராநின்ற பிரகிருதியினல் கட்டுண்ட பக்தசேதனர்களும், இவர்களைவிடச் சிறந்தவர்களான முக்தர்களும், இவ்விருவரிலும் சிறந்தவர்களான அநந்தன் வைநதேயன் முதலிய நித்தியர்களும் ஆகிய இம்மூன்றுவிதமான புருஷர்களைக்காட்டிலும் அதிசயமான லட்சணங்களையுடையவன்.

புருஷோத்தமப்பெருமாள்.
புருஷோத்தமநாயகி.
சஞ்சீவிகிரஹவிமானம்.
திருப்பாற்கடல்தீர்த்தம்.
கிழக்கேதிருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
உபமன்னியவுக்குப்பிரத்தியக்ஷம்
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருச்செம்பொன்செய்கோயில்.

௩௫. ஊர்வேன் மடலை யொழிவேன் மடநாணம்
சேர்வேன் கரிய திருமாலைப் - பாரறிய

அம்பொன் செய் கோயிலரங்கனணி நாங்கூர்ச்
செம்பொன் செய் கோயிலினிற் சென்று.

(இ-ள்.) அம் - அழகிய, பொன்செய் - பொன்னாற்செய்த, கோயில்-கோயிலையுடைய, அரங்கன் - திருவரங்க நாதனது, அணி-அழகிய, நாங்கூர் - நாங்கூரைச்சார்ந்த, செம்பொன் செய்கோயிலினில் - திருச்செம்பொன் செய்கோயிலென்னும் திவ்வியதேசத்தில், சென்று-போய், பார் - பூமியிலுள்ளவர்கள், அறிய - தெரிந்துகொள்ளும்படி, ஊர்வேன்மடலை-மடலூர்வேன், மடம் - அறியாமையையும், நாணம்-வெட்கத்தையும், ஒழிவேன் - விட்டுவிடுவேன், கரிய-நீலநிறமுடைய, திருமாலை - திருமாலை, சேர்வேன் - அடைவேன். எ-று.

எம்பெருமானை அடையும்பொருட்டு திருச்செம்பொன் செய் கோயிலில் சென்று மடலூர்தல் செய்வேன் என்பது கருத்து.

பேரருளாளப்பெருமாள்.
அல்லிமாமலர்நாச்சியார்.
கனகவிமானம்.
நித்தியபுஷ்கரணி.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்ற திருக்கோலம்.
ருத்திரனுக்குப் பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருத்தெற்றியம்பலம்.

நசு. சென்றது காலந் திரைநரைமூப் பானவினி
என்றுகொல் சாவறியோ மென்னெஞ்சே - கன்றால்
உருத்தெற்றி யம்பலத்தை யோர்விளவின் வீழ்த்தான்
திருத்தெற்றி யம்பலத்தைச் சேர்.

(இ-ள்.) என் நெஞ்சே - என்மனமே, சென்றது காலம்-காலம் கழிந்தது, திரை - திரையும், நரை-நரையும், மூப்பு - வயோதிகமும், ஆன - ஆயின, இனி - இனிமேல், சாவு - மரணம், என்றுகொல்-என்றைக்கோ, அறியோம் - அறிந்திலோம், (ஆதலால்) கன்றால்-பசுவின் கன்றால், உருத்து - கோபித்து, எற்றி - மோதி, அம் - அழகிய, பலத்தை - பழத்தை, ஓர் விளவின் - ஓர் விளாமரத்தினின்றும், வீழ்த்தான் - விழச்செய்தவனது, திருத்தெற்றியம்பலத்தை - திருத்தெற்றியம்பல மென்னுந் திவ்வியதேசத்தை, சேர்-சென்று அடைவாயாக.

செங்கண்மால்.
செங்கமலவல்லிநாச்சியார்.
வேதவிமானம்.
சூரியபுஷ்கரணி.
கிழக்கே திருமுகமண்டலம்.
புஜங்கசயனம்.
செங்கமலவல்லி நாச்சியாருக்கும் அனந்தனுக்கும்பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருமணிக்கூடம்.

நஎ. சேராது முன்செய்த தீவினைபின் செய்வதுவும்
வாராதினி நீ மடநெஞ்சே - நேராக்

குருமணிக்கூடத்தானைக் கொம்புபறித் தானைத்
திருமணிக் கூடத்தானைச் செப்பு.

(இ-ள்.) மடம் - அறியாமையையுடைய, நெஞ்சே - மனமே, நீ முன் - நீ பூர்வத்தில், செய்த - புரிந்த, தீவினை - தீயவினையானது, சேராது - அணுகாது, பின் - இனிமேல், செய்வதுவும் - செய்யும் வினையும், இனிவாராது - இனிவந்துசேராது, (ஆதலால்) நேரா-எதிர்த்து, குரு - நன்னிறமுடைய, மணி - ரத்தினகசிதமாகிய, கூடத்து-தொழுவத்திற்கட்டிய, ஆனை - குவலயாபீடமென்னும் யானையின், கொம்பு - மருப்பை, பறித்தானை - ஒடித்தவனை, திருமணிக்கூடத்தானை, திருமணிக்கூடமென்னும் திவ்யதேசத்தையுடையவனை, செப்பு - துதிசெய்வாயாக. எ-று.

மணிக்கூடநாயகர்.
திருமாமகள் நாச்சியார்.
பிரசாதநாபவிமானம்.
சந்திரபுஷ்கரணி.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
பெரிய திருவடிக்கும் சந்திரனுக்கும் பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருக்காவளம்பாடி.

கஅ. செப்பேன் மனிதருக்கென் செஞ்சொற் றமிழ்மாலை
கைப்பேன் பிறதெய்வங் காண்பாரை - எப்போதும்
காவளம்பா டித்திருமால் காற்றா மரைதொழுது
நாவளம்பா டித்திரிவே னான்.

(இ-ள்.) என் - என்னுடைய, செஞ்சொல் - செவ்வியமொழிகளாலாகிய, தமிழ்மாலை - தமிழ்மாலையை, மனிதருக்கு - மானிடர்மேல், செப்பேன் - (நான்) சொல்லேன், பிறதெய்வம்-தேவதாந்தரங்களை, காண்பாரை - பார்க்கின்றவர்களை, கைப்பேன் - வெறுப்பேன், எப்போதும் - எக்காலத்தும், காவளம்பாடி-திருக்காவளம்பாடியென்னும் திவ்வியதேசத்திலெழுந்தருளிய, திருமால் - திருமாலினுடைய, கால்தாமரை-திருவடித்தாமரைகளை, தொழுது - வணங்கி, நா - நாவினால், வளம் -வளம்பெற, பாடித்திரிவேன் - பாடிச்சஞ்சரிப்பேன்.

கோபால கிருஷ்ணர்.
மடவரல் மங்கை நாச்சியார்.
செங்கமல நாச்சியார்.
சுவயம்புவிமானம்.
தடாமலர்ப்பொய்கை.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
சேனைத்தலைவருக்கும்மித்திரதேவருக்கும் ருத்திரனுக்கும் பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருவெள்ளக்குளம்.

கக. நானடிமை செய்யவிடாய் நானுனே னெம்பெருமான்
தானடிமை கொள்ளவிடாய் தானுனன் - ஆனதற்பின்

வெள்ளக் குளத்தே விடாயிருவ ருந்தணிந்தோம்
உள்ளக் குளத்தேனை யொத்து.

(இ-ள்.) நான் - யான், அடிமைசெய்ய-தொண்டுசெய்வதற்கு, விடாய் நான் ஆனேன்-நான் தாகங்கொண்டவனாயினேன், எம்பெருமான் - எமது பெருமானானவர், தான் அடிமைகொள்ள - தான் தொண்டுகொள்ள, விடாய் தான் ஆனான்-தானுந்தாகங்கொண்டார், ஆனதன்பின் - இங்ஙனமிருவரும் விடாய்கொண்டதற்குப்பின், வெள்ளக் குளத்தே-திருவெள்ளக்குளமென்னுந் திவ்வியதேசத்தின் கண், இருவரும் - யாங்களிருவரும், உள்ளம் - மனத்தில், குளம்-வெல்லப்பாகையும்,தேன் - தேனையும், ஒத்து - ஒப்பாய், விடாய் தணிந்தோம்-தாகநீங்கினோம். எ-று.

தொண்டு செய்யவேண்டுமென்னும் அவாவால் யானும் தொண்டு கொள்ள வேண்டுமென்னு மவாவால் இறைவனும் விடாய்கொண்டு திருவெள்ளக்குளத்தில் இருவரும் சந்தித்து, தாசனும் ஆண்டானுமாய் விடாய் தணிந்தோம் என்பது கருத்து.

கண்ணன் நாராயணர்.
பூவார் திருமகள்நாச்சியார்.
தத்துவதோதகவிமானம்.
வெள்ளக்குளத்தீர்த்தம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
இட்சுவாகுவம்சத்தில் சுவேதராஜனுக்குப் பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருப்பார்த்தன்பள்ளி.

௬௦. ஒத்தமரரேத்து மொளிவிசும்பும் பாற்கடலும்
இத்தலத்திற் காண்பரிய வென்னெஞ்சே - சித்துணர்ந்த
தீர்த்தன்பள் ளிக்கிருந்து செப்பவெளி நின்றானைப்
பார்த்தன் பள்ளிக்குட் பணி.

(இ-ள்.) ஒத்து - ஒன்று சேர்ந்து, அமரர்-தேவர்கள், ஏத்தும்-துதிக்கின்ற, ஒளி - பிரகாசிக்கின்ற, விசும்பும் - பரமபதமும், பாற்கடலும்-திருப்பாற்கடலும், இத்தலத்தில்-இப்பூமியின் கண், காண்பு அரிய - காணுதற்கரியன (ஆயினும்), என் - எனது, நெஞ்சே-மனமே, சித்து - உண்மையை, உணர்ந்த - அறிந்த, தீர்த்தன் - பரிசுத்தனாகிய பிரகலாத ஆழ்வான், பள்ளிக்கு இருந்து - பள்ளிக்கூடத்திலிருந்து, செப்ப - (அரிநமோவென்று) சொல்ல, வெளிநின்றானை - பிரசந்நமானவனை, பார்த்தன் பள்ளிக்குள் - திருப்பார்த்தன்பள்ளி யென்னும் திவ்வியதேசத்தில், பணி - வணங்குவாயாக. எ-று.

ஒத்து என்பது ஒத்து எனக்குறுக்கல் விகாரம் பெற்றதெனக்கொண்டு வேதங்களால் எனப்பொருள் கூறினுமமையும்.

தாமரையாள் கேள்வன்.
தாமரை நாயகி.
நாராயணவிமானம்.
சங்குசரசு, கல்பசரசு.
மேற்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
பார்த்தனுக்கும் வருணனுக்கும் ஏகாதச ருத்திரருக்கும் பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

சோழநாடு முற்றிற்று.

பாண்டிநாட்டுத் திருப்பதிகள்-கஅ.

திருமாலிருஞ்சோலைமலை.

சக, பணிந்தேன் றிருமாலைப் பாமாலை தாளில்
அணிந்தே னருட்டஞ்ச மாகத் - துணிந்தேன்
திருமா லிருஞ்சோலை சேர்ந்தே னெனக்கு
வருமா லிருஞ்சோதி வான்.

(இ-ள்.) திருமாலை - பெரியபிராட்டியை மார்பின்கணுடைய திருமாலை, பணிந்தேன் - வணங்கினேன், பாமாலை - பாக்களாகிய மாலையை, தாளில்-திருவடிகளில், அணிந்தேன்-சூடினேன், அருள்-அவனது கிருபையே, தஞ்சம் ஆக - பற்றுக்கோடாக, துணிந்தேன் - நிச்சயித்தேன், திருமாலிருஞ்சோலை - அழகர் மலையென்னும் திவ்வியதேசத்தை, சேர்ந்தேன் - அடைந்தேன், (ஆதலால்) எனக்கு-என்றனுக்கு, இரு-பெரிய, சோதி-சோதிமயமாகிய, வான் - பரமபதமானது, வரும் - சித்திக்கும். எ-று. ஆல்-அசை.

அழகர்.
மாலலங்காரர்.
சுந்தரவல்லிநாச்சியார்.
சோமசுந்தரவிமானம்.
சிலம்பாறு.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
இடபகிரி.
சந்தனவிருக்ஷம்.
மலையத்துவஜ பாண்டியனுக்கும் தரும தேவதைகளுக்கும் பிரத்தியக்ஷம்.
நம்மாழ்வார்- குலசேகராழ்வார்-பெரியாழ்வார்-திருமங்கையாழ்வார். ஆண்டாள் மங்களாசாஸனம்.

திருக்கோட்டியூர்.

சஉ, வான்பார்க்கும் பைங்கூழ்போல் வாளா வுனதருளே
யான்பார்க்க நீபார்த் திரங்கிலுய் - தேன்பார்ப்பின்
ஓசைத் திருக்கோட்டி யூரானே யின்னமுமென்
ஆசைத் திருக்கோட்டி யாள்.

(இ-ள்.) வான் - மழையை, பார்க்கும் - நோக்குகின்ற, பைங்கூழ்போல்-பயிரைப்போல, வாளா-முயற்சியின்றி, உனது அருளே-உன்னுடைய கிருபையையே, யான்பார்க்க - நான் பார்த்திருக்க, நீ-

நீ, பார்த்து - கடாக்ஷித்து, இரங்கினுய்-தயைகூர்ந்தாய், தேன்பார்ப்பின் - இளம்வண்டுகளினுடைய, ஓசை - ஒலிமிகுந்த, திருக்கோட்டியூரானே - திருக்கோட்டியூரென்னுந் திவ்வியதேசத்திலெழுந்தருளியிருப்பவனே, இன்னமும்-இனியாகிலும், என்-என்னுடைய, ஆசை-இச்சையாகிய, திருக்கு - மாறுபாட்டை, ஓட்டி - நீக்கி, ஆள் - அடிமைகொள்ளுவாயாக. எ-று.

சௌம்மியநாராயணர்.
திருமாமகள் நாச்சியார்.
அஷ்டாங்கவிமானம்.
தேவபுஷ்கரணி.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றும் இருந்தும் நடந்தும் கிடந்தும் கூத்தாடியும் உள்ள திருக்கோலம்.
இந்திரனுக்கும் - கதம்பரிஷிக்கும் பிரத்தியக்ஷம்.
பூதத்தாழ்வார் - பேயாழ்வார் - திருமழிசையாழ்வார்-பெரியாழ்வார் - திருமங்கை யாழ்வார் மங்களாசாஸனம்.

திருமெய்யம்.

சரு. ஆளாயுனக்கன்பா யாசையாய் நாணிலியாய்
வாளாமனைவியென்று வாழ்வேனைக் - கேளாய்
திருமெய்ய மாயா சிலைகால் வளைத்து
வருமெய்ய மாயா மதன்.

(இ-ள்.) உனக்கு - உன்றனக்கு, ஆளாய்-அடிமையாய், அன்பு ஆய்-அன்புடையவளாய், ஆசையாய் - ஆர்வமுடையவளாய், நாண் இலியாய் - வெட்கமில்லாதவளாய், வாளா - வீணுக, மனைவியென்று-மனையாளென்று, வாழ்வேனை - வாழ்கின்ற என்னை, திருமெய்யம்-திருமெய்ய மென்னுந் திவ்வியதேசத்தி லெழுந்தருளியிருக்கும், மாயா - மாயனே, கேளாய் - கேட்பாயாக, சிலை - வில்லினது, கால் வளைத்து-குதைகளை வளைத்து, மாயா - கெடுதலில்லாத, மதன்-மன்மதனானவன், எய்ய - அம்பெய்ய, வரும் - வருகின்றான், (ஆகலால் என்னைக் காத்தருள்க.) எ-று.

மன்மதபாணத்தால் வருந்தாமல் என்னைக் காத்தருள் என்பது கருத்து. கவிதன்னை நாயகியாகவும் இறைவனை நாயகனாகவும் வைத்துக் கூறினார். இதனை வடநூலார் நாயகி நாயக பாவம் என்பர்.

சத்தியகிரிநாதர்.
உய்யவந்தாள்.
சத்தியகிரிவிமானம்.
சத்தியகிரி.
சத்தியதீர்த்தம்.
கதம்பபுஷ்கரணி.
பலாவிருக்ஷம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்ற திருக்கோலம்.
சத்தியதேவதைகளுக்குப் பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருப்புல்லாணி.

சச. மதயானைக் கோள்விடுத்து மாமுதலை கொன்ற
கதையா லிதயங்களாயு - முதலாய

புல்லாணி மாலே புறத்தோர் புகழிருப்பு
வல்லாணி யென்செவிக்கு மாறு.

(இ-ள்.) மதம் - மும்மதங்களைப் பொழிகின்ற, யானை - கஜேந்திரனென்னும் யானையினது, கோள் - துன்பத்தை, விடுத்து - நீக்கி, மா - பெரிய, முதலை - முதலையை, கொன்ற - சங்கரித்த, கதையால் - சரித்திரத்தினால், இதயம் - மனமானது, கரையும் - உருகும், முதல் ஆய - முதன்மையாகிய, புல்லாணி - திருப்புல்லாணியென்னுந் திவ்வியதேசத்தி லெழுந்தருளிய, மாலே - திருமாலே, புறத்தோர் - வேறு தேவர்களை, புகழ் - சிறப்பித்துச்சொல்லுஞ்சொல், என்செவிக்கு - என் காதுகளுக்கு, இருப்பு வல்லாணி - வலிய இருப்பாணியும், மாறு - விரோதமுமாகும், எ-று.

கல்லியாணஜெகந்நாயகர்.
தெய்வச்சிலையர்.
தெய்வச்சிலைநாச்சியார்.
கல்லியாணவிமானம்.
ஹேமதீர்த்தம்.
சக்கிரதீர்த்தம்.
அஸ்வத்தவிருக்ஷம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
புல்லாரணியக்ஷேத்திரம்.
தற்பசயனம்.
புல்லாரணிய மகாரிஷிக்கும் அஸ்வத்தநாராயணனுக்கும் பிரத்தியக்ஷம்.
சக்கிரவர்த்தித்திருமகன் சமுத்திரராஜனுக்குப் பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருத்தண்காலூர்.

சரு. மாறுபட வாடையெனும் வன்கால்வந் தென்முலைமேல்
ஊறுபட வூர்ந்த வுளைவெல்லாம் - மாறத்
திருத்தண்கா லூரான் றிருத்தண் டுழாயின்
மருத்தண்கா லூராதோ வாய்ந்து.

(இ-ள்.) மாறுபட - வேற்றுமையுண்டாக, வாடை எனும் - வாடைக்காற்றென்கின்ற, வன் கால் - வலிய காற்றானது, வந்து - வந்து, என் முலைமேல் - என் தனங்களின் மீது, ஊறுபட - தீமை விளைய, ஊர்ந்த - பொருந்திய, உளைவு எல்லாம் - வருத்தம் எல்லாம், மாற - நீங்க, திருத்தண்காலூரான் - திருத்தண்காலூ ரென்னுந் திவ்விய தேசத்தையுடையவனது, திரு - அழகிய, தண் - குளிர்ந்த, துழாயின் - திருத்துழாய்மாலையின், மரு - வாசனையுள்ள, தண் - குளிர்ந்த, கால் - காற்றானது, வாய்ந்து - பொருந்தி, ஊராதோ - தவழாதோ. எ-று.

அப்பன்.
தண்காலப்பன்.
அன்னநாயகி.
அனந்தநாயகி.
நாச்சியார் நால்வர்.
தேவசந்திரவிமானம்.
பாபவிநாசதீர்த்தம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
சல்லிய பாண்டியனுக்கும் ஸ்ரீவல்லபனுக்கும் புலிக்கும் பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருமோகூர்.

சசு. வாயான் மலர்கோதி வாவிதொறு மேயுமோ
மேயாம லப்பால் விரையுமோ-மாயன்
திருமோகூர் வாயின்று சேருமோ நாளை
வருமோகூர் வாயன்னம் வாழ்ந்து.

(இ-ள்.) கூர்-கூரிய, வாய் - வாயையுடைய, அன்னம் - அன்னப்பறவையானது, வாழ்ந்து - வாழ்ந்திருந்து, வாயால் - வாயினால், மலர் - புஷ்பங்களை, கோதி - கோதிக்கொண்டு, வாவிதொறும்-தடாகங்கள்தோறும், மேயுமோ-மேய்ந்துகொண்டருக்குமோ, மேயாமல்-(அவ்வாறு) மேயாமல், அப்பால் - அப்புறம், விரையுமோ - வேகமாகச்செல்லுமோ, மாயன் - திருமாலினுடைய, திருமோகூர்வாய்-திருமோகூரென்னும் திவ்வியதேசத்தில், இன்று-இன்றைத்தினம், சேருமோ-அடையுமோ, நாளை - நாளையதினம், வருமோ - (திரும்பி) வருமோ (அறிகிலேன்) எ-று.

தூதனுப்பிய அன்னத்தின் தன்மை கூறியபடி.

காளமேகப் பெருமாள்.
மோகூர்வல்லிநாச்சியார்.
மேகவல்லிநாச்சியார்.
கேதகிவிமானம்.
க்ஷீராப்திபுஷ்கரணி.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
அஜ ருத்திரேந்திராதி களுக்குப் பிரத்தியக்ஷம்.
நம்மாழ்வார் - திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருக்கூடல். (தென்மதுரை)

சஎ. வாழ்விப்பா னெண்ணமோ வல்வினையி லின்னமென்னை
ஆழ்விப்பா னெண்ணமோ வஃதறியேன்-தாழ்விலாப்
பாடலழ கார்புதுவைப் பட்டர்பிரான் கொண்டாடும்
கூடலழ கநின் குறிப்பு.

(இ-ள்.) தாழ்வு இலா - மேன்மையாகிய, பாடல் - பாசுரங்களின், அழகு - அழகானது, ஆர்-பொருந்திய, புதுவை-புதுவையிலெழுந்தருளிய, பட்டர்பிரான் - பெரியாழ்வார், கொண்டாடும்-புகழ்ந்த, கூடல்-திருக்கூடலென்னுந் திவ்வியதேசத்தி லெழுந்தருளிய, அழகா - அழகனென்னுந் திருநாமத்தையுடையவனே, நின்-உனது, குறிப்பு-திருவுளப்பாங்கு, என்னை - அடியேனை, வாழ்விப்பான்-வாழச்செய்யும்படி, எண்ணமோ - கருத்தோ, வல்-கொடிய, வினையில்-இருவினைகளில், இன்னம் - இன்னும், ஆழ்விப்பான் - அழுந்தும்படி செய்ய, எண்ணமோ-கருத்தோ, அஃது அறியேன்-அதனைத் தெரியகில்லேன். எ-று.

கூடலழகர்.
வகுளவல்லிநாச்சியார்.
வரகுணவல்லி.
மதுரைவல்லி.
அஷ்டாங்கவிமானம்.
ஹேமபுஷ்கரணி.
சக்கிரதீர்த்தம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
வீற்றிருந்ததிருக்கோலம்.
சவுனகாதிகளுக்கும் பிருகுரிஷிக்கும் பெரியாழ்வாருக்கும் பிரத்தியக்ஷம்.
திருமழிசையாழ்வார்-பெரியாழ்வார் - திருமங்கையாழ்வார்-ஆண்டாள் மங்களாசாஸனம்.

ஸ்ரீவில்லிபுத்தூர்.

௪அ. குறித்தொருவர் கொண்டாடுங் கொள்கைத்தோ கோதை
நிறத்தவூர் விண்டுசித்தர் நீடூர்-பிறப்பிலியூர்
தாழ்வில்லி புத்தூரொன் றைவர்க்குத் தானிரந்தான்
வாழ்வில்லி புத்தூர் வளம்.

(இ-ள்.) கோதை - சூடிக்கொடுத்த நாச்சியார், நிறத்த ஊர்-விளங்கிய வூராகும், விண்டுசித்தர் - பெரியாழ்வார், நீடு ஊர் - விளங்கிய ஊராகும், பிறப்பு இலி - ஜனனமில்லாத எம்பெருமானது, ஊர்-ஊராகும், தாழ்வில்-இழிவாக, புத்து ஊர்-புதிய (ஐந்து) ஊராகும், ஈ என்று - கொடுவென்று, ஐவர்க்கு - பஞ்சபாண்டவர்களுக்காக, தான் - தானே, இரந்தான்-யாசித்தவராகிய திருமால், வாழ்-நித்தியவாசஞ்செய்கின்ற, வில்லிபுத்தூர் - ஸ்ரீவில்லிபுத்தூரென்னும் திவ்வியதேசத்தின், வளம்-வளத்தை, குறித்து இத்தன்மைத்தென்று மதித்து, ஒருவர்-ஒருவர், கொண்டாடும் - புகழ்கின்ற, கொள்கைத்தோ-தன்மையையுடையதோ. எ-று.

ஈ-இ எனக் குறுகி நின்றது.

வடபத்திரசயனர்.
ரங்கமன்னனர்.
ஆண்டாள்.
பெரியதிருவடி.
கோதைநாச்சியார்.
ஸம்சனவிமானம்.
திருமுக்குளதீர்த்தம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
வடபத்திரசயனம்.
மண்டூமகாரிஷிக்கும் பெரியாழ்வாருக்கும் பிரத்தியக்ஷம்.
பெரியாழ்வார் - ஆண்டாள் மங்களாசாஸனம்.

திருக்குருகூர்.

௪௯ வளர்ந்தழைக்க வுண்டாலென் வாசமணந் தாலென்
தெளிந்தகலை கற்றாலென் சீசீ - குளிர்ந்தபொழில்
தண்குருகூர் வாவிச் சடகோப னூரொங்கள்
வண்குருகூ ரென்னாத வாய்.

(இ-ள்.) குளிர்ந்த - குளிர்ச்சிபொருந்திய, பொழில் - சோலை சூழ்ந்த, குருகு ஊர் - நாரைகள் சஞ்சரிக்கின்ற, தண் - குளிர்ந்த,

வாவி - தடாகங்களுள்ள, சடகோபன் - சடகோபரவதரித்த, ஊர்-ஊராகிய, எக்கள்-எங்களது, வள் - வளப்பம்பொருந்திய, குருகூர் - திருக்குருகூர், என்னுத - என்றுசொல்லாத, வாய்-வாயானது, சீசீ-சிச்சீ, வளம்தலைழக்க - வண்மைபெருக, உண்டால் - புசித்ததனுல், என் - என்னபயன், வாசம் - பரிமளம், மணத்தால் என் - கமழ்வதனுல் தான் என்னபயன், தெளிந்த - தெளிவாகிய, கலை - சாஸ்திரங்களை, கற்ருல் என்-கற்றதனுல்தான் என்னபயன். எ-று.

ஆழ்வார் திருநகரி.
ஆதிநாதப்பெருமாள்.
பொலிந்துநின்றபிரான்.
ஆதிநாகவல்லி.
கோவிந்தவிமானம்.
தாம்பிரபரணிநதி.
பிரமதீர்த்தம்.

கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
பிரமனுக்கும் நம்மாழ்வாருக்கும் மதுரகவியாழ்வாருக்கும் பிரத்தியக்ஷம்.
நம்மாழ்வார் மங்களாசாஸனம்.

திருத்தொலைவில்லிமங்கலம்.

௪0. வாயு மனைவியர்பூ மங்கையர்க ளெம்பிராற்
காயுதங்க ளாழிமுத லைம்படைகள்-தூய
தொலைவில்லி மங்கலமூர் தோள்புருவமேனி
மலைவில் லிமங்கலந்த வான்.

(இ-ள்.) எம்பிராற்கு - எமது சுவாமிக்கு, வாயும்-பொருந்திய, மனைவியர் - தேவியராவார், பூமங்கையர்கள்-பூதேவியும் இலட்சுமிதேவியுமாம், ஆயுதங்கள் - படைக்கலங்களாவன, ஆழிமுதல்-சக்கரமுதலாகிய, ஐம்படைகள் - பஞ்சாயுதங்களாம், தூய - பரிசுத்தமாகிய, தொலைவில்லிமங்கலம் - திருத்தொலைவில்லி மங்கலமென்னும் திவ்வியதேசமானது, ஊர்-நாடாம், தோள் - புயமும், புருவம்-புருவமும், மேனி - நிறமும், (முறையே) மலை-பர்வதமும், வில்-தனுசும், இமம் கலந்த வான்-குளிர்ச்சிபொருந்திய மேகமும் (ஒக்கும்). எ-று.

தேவப்பிரான்.
அரவிந்தலோசனர்.
கருந்தடங்கண்ணிநாச்சியார்.
குமுதவிமானம்.
தாம்பிரபரணிநதி.
வருணதீர்த்தம்.

கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
இந்திரனுக்கும் வாயுவுக்கும் வருணனுக்கும் பிரத்தியக்ஷம்.
நம்மாழ்வார் மங்களாசாஸனம்.

ஸ்ரீவரமங்கை (வானமாமலை).

௪௧. வானோர் முதலா மரமளவா வெப்பிறப்பும்
ஆனேற் கவதியிட லாகாதோ - தேனேயும்
பூவர மங்கை புவிமங்கை நாயகனே
சீவர மங்கையரசே.

(இ-ள்.) தேன் - மது, எயும் - பொருந்திய, பூ-தாமரைக்கமலத்தில் வசிக்கும், வர மங்கை - பெரியபிராட்டியாருக்கும், புவிமங்கை-பூமிதேவியாருக்கும், நாயகனே - தலைவனே, சீவரமங்கை - ஸ்ரீவரமங்கையென்னுந் திவ்வியதேசத்திலெழுந்தருளிய, அரசே-இறைவனே, வானோர் முதல் ஆ - தேவர்கள் முதலாக, மரம் அளவு ஆ-தாவரம் ஈறுயுள்ள, எ பிறப்பும் - எவ்வகைப்பிறவியும், ஆனேற்கு-பிறந்த எனக்கு, அவதி இடல் ஆகாதோ - (இனியேனும்) முடிவு ஏற்படுத்தக்கூடாதோ. எ-று.

முதலாக அளவாக என்பவற்றின் ஈறுதொக்குவந்தன.

வானமாமலைப்பெருமாள்.
தேவநாயகர்.
தோதாத்திரிப்பெருமாள்.
ஸ்ரீவரமங்கை நாச்சியார்.
நந்தனவர்த்தகவிமானம்.
இந்திரபுஷ்கரணி.
கிழக்கே திருமுகமண்டலம்.
வீற்றிருந்ததிருக்கோலம்.
ஸ்ரீதேவி-பூதேவி - சேனைமுதலியார் - பெரியதிருவடி இவர்களுடன் சாமர கன்னிகைகள் சந்திரர்கள் சூரியர்கள் பக்கத்திருக்க இந்திரனுக்கும் உரோமசரிஷிக்கும் பிருகுரிஷிக்கும் மார்க்கண்டேயருக்கும் பிரத்தியக்ஷம்.
சேற்றுத்தாமரை.
நம்மாழ்வார் மங்களாசாஸனம்.

திருப்பேரை.

௫௨. அரசாகி வையமுழு தாண்டாலு மின்பக்
கரைசார மாட்டார்கள் கண்டீர்-முரைசாரும்
தென்றிருப்பே ரைப்பதியான் சீர்கேட்டு நாவிலவன்
தன்றிருப்பே ரைப்பதியா தார்.

(இ-ள்.) முரைசு ஆரும்-வாத்தியங்கள் சப்திக்கின்ற, தென்-தெற்கின்கணுள்ள, திருப்பேரைப்பதியான் - திருப்பேரையென்னும் திவ்வியதேசத்தையுடைய திருமாலினது, சீர்-சிறப்பை, கேட்டு-சிரவணஞ்செய்து, அவன்தன் - அவனுடைய, திருப்பேரை - திவ்விய திருநாமங்களை, நாவில்-நாவினிடத்தில், பதியாதார் - பதியச்செய்யாதவர்கள், அரசு ஆகி-அரசனாகி, வையம் முழுதும்-பூமிமுழுவதும், ஆண்டாலும் - அரசாட்சிசெய்தாலும், இன்பம் - சுகத்தின், கரை-கரையை, சாரமாட்டார்கள் - சேரமாட்டார்கள். எ-று. கண்டீர்-அசை.

மகரநெடுங்குழைக்காதர்.
நிகரில்முகில்வண்ணர்.
குழைக்காதவல்லிநாச்சியார்.
பத்திரவிமானம்.
சுக்கிரபுஷ்கரணி.
கிழக்கே திருமுகமண்டலம்.
வீற்றிருந்ததிருக்கோலம்.
சுக்கிரனுக்கும் பிரமனுக்கும் ஈசானனோடு உமைக்கும் பிரத்தியக்ஷம்.
நம்மாழ்வார் மங்களாசாஸனம்.

ஸ்ரீவைகுந்தம்.

௫௩. தாருடுத்துத் தூசு தலைக்கணியும் பேதையிவள்
நேருடுத்த சிந்தை நிலையறியேன்-போருடுத்த
பாவைகுந்தம் பண்டொசித்தான் பச்சைத் துழாய்நாடும்
சீவைகுந்தம் பாடுந் தெளிந்து.

(இ-ள்.) தார் - மாலையை, உடுத்து - அரையிலணிந்து, தூசு - வஸ்திரத்தை, தலைக்கு - சிரசில், அணியும்-தரித்துக்கொள்ளும், பேதை-அறிவில்லாதவளாகிய, இவள் - இப்பெண், நேர் உடுத்த-நேராகக்கொண்ட, சிந்தை நிலை-மனக்கருத்தை, அறியேன் - தெளியமாட்டேன், (ஆயினும்) தெளிந்து - தெளிவடைந்து, போர் உடுத்த - யுத்தத்திற்கு நெருங்கிய, பாவை - பெண்ணாகிய தாடகையின், குந்தம்-சூலத்தை, பண்டு - பூர்வத்தில், ஒசித்தான் - ஒடித்தவனுடைய, பச்சை - பச்சையாகிய, துழாய்-திருத்துழாய் மாலையை, நாடும்-விரும்புவள், சீவைகுந்தம் - ஸ்ரீவைகுந்தமென்னும் திவ்யதேசத்தை, பாடும்-பாடுவாள். எ-று.

"ஸ்ரீவைகுந்தம் பாடும் தெளிந்து" என்பதற்கு (தாருடுத்துத் தூசு தலைக்கணிந்து பச்சைத்துழாய் நாடுதலால்) நீர் இவ்வுளவைத் தெரிந்து ஸ்ரீவைகுந்தம் என்னும் திவ்யதேசத்தைப்பாடுங்கள் எனினுமாம்.

கள்ளப்பிரான்.
வைகுந்தநாதன்.
வைகுந்தவல்லிநாச்சியார்.
சந்திரவிமானம்.
தாம்பிரபரணிநதி.
பிருதுதீர்த்தம்.

கிழக்கேதிருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
இந்திரனுக்கும் பிருது சக்கிரவர்த்திக்கும் பிரத்தியக்ஷம்.
நம்மாழ்வார் மங்களாசாஸனம்.

திருப்புளிங்குடி.

௫௪. தெளியும் பசும்பொற் சிறைக்காற்று வீச
விளியுந் துயர்போய் விடுமே-யெளியேற்
கருளப் புளிங்குடிவா ழச்சுதனைக்
கருளப்பு ளிங்குவந்தக் கால்.

(இ-ள்.) எளியேற்கு - ஏழையனாகிய எனக்கு, அருள-கிருபைசெய்ய, புளிங்குடிவாழ்-திருப்புளிங்குடி யென்னும் திவ்யதேசத்திலெழுந்தருளியிருக்கும், அச்சுதனை - அழிவில்லாதவனை, கொண்டு-சுமந்துகொண்டு, கருளப்புள் - கருடப்பக்ஷியானது, இங்கு வந்தக்கால் - இங்கு வந்தால், தெளியும் - தெளிந்த, பசு - பசிய, பொன்-அழகிய, சிறை - அதன் இறகினது, காற்று - காற்றானது, வீச - வீச, விளியும்-இறக்கும், துயர்-துன்பமானது, போய்விடும்-நீங்கும். எ-று.

அச்சுதன்-பிரமாதிகளோடு தானும் ஒருவனாக அவதாரஞ்செய்தகாலத்திலும் தன்னுடைய ஐசுவரியத்தை விடாதிருக்கிறவன். எம்பெருமானை சுமந்துகொண்டு வரும் கருடனது சிறகின் காற்றுப் பட்டால் எனது காமநோய் தீரும் என்பது கருத்து.

காசினிவேந்தன்.
மலர்மகள் நாச்சியார்.
புளிங்குடிவல்லிநாச்சியார்.
வேதசாரவிமானம்.
வருணதீர்த்தம்.
நிருதிதீர்த்தம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
புஜங்கசயனம்.
நிருதிக்கும் வருணனுக்கும் பிரத்தியக்ஷம்.
நம்மாழ்வார் மங்களாசாஸனம்.

திருவரகுணமங்கை.

௫௫. காலமு நோயுங் கருதாத வன்னைமீர்
வேலன் வெறியை விலக்குமின்கண் - மாலாம்
வரகுண மங்கையன்றாள் வண்டுழாய் மேலா
தரகுண மங்கை தனக்கு.

(இ-ள்.) மங்கை தனக்கு - நமது பெண்ணுக்கு, மாலாம்-திருமாலாகிய, வரகுணமங்கையன் - திருவரகுணமங்கை யென்னுந் திவ்வியதேசத்தி லெழுந்தருளியவனது, தாள் - திருவடிகளில் (சாத்திய), வண்துழாய்மேல்-வளமான திருத்துழாய்மீது, ஆதரகுணம்-ஆசையாகிய குணமுண்டு (ஆதலால்), காலமும்-பருவத்தையும், நோயும்-வியாதியையும், கருதாத-நினையாத, அன்னை மீர்-தாய்மார்களே, வேலன் - வெறியாட்டாளனது, வெறியை - ஆவேசத்தை, விலக்குமின்கள் - நீக்குங்கள். எ-று.

ஆதரகுணமங்கை தனக்கு என்பதை ஒரு தொடராகக்கொண்டு ஆசையாகிய குணத்தையுடைய பெண்ணுக்கு எனப்பொருள் உரைப்பினு மமையும். அன்னைமீர் நமது பெண்ணுக்குப் பெருமான் திருத்துழாய்மேல் ஆசை யாதலின் வேலன் வெறியாடலை விலக்குங்கள் என்பது கருத்து.

விஜயாசனர்.
வரகுணவல்லி.
விஜயகோடிவிமானம்.
தேவபுஷ்கரணி.
அக்கினிதீர்த்தம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
வீற்றிருந்ததிருக்கோலம்.
அக்கினிதேவனுக்குப் பிரத்தியக்ஷம்.
நம்மாழ்வார் மங்களாசாஸனம்.

திருக்குளந்தை.

௫௬. தனக்குடலம் வேறான தன்மை யுணரான்
மனக்கவலை தீர்ந்துய்ய மாட்டா - னினைக்கில்
திருக்குளந்தை யாருறைத்த சீர்க்கீதை பாடும்
தருக்குளந்தை யாமலிருந்தால்.

(இ-ள்.) நினைக்கில் - ஆலோசிக்குமிடத்தில், திருக்குளந்தையார் - திருக்குளந்தையென்னுந் திவ்வியதேசத்தையுடையவர், உரைத்த - சொல்லிய, சீர்கீதை - சிறந்தபகத்வகீதையை, பாடும் - பாடுகின்ற, தருக்கு - சந்தோஷமானது, உளம் - ஒருவன் மனத்தில், தையாமலிருந்தால் - பதியாமலிருந்தால், தனக்கு-தனக்கு, உடலம்-தேகமானது, வேறு ஆன தன்மை - வேறாய் சுதந்தரமில்லாத தன்மையை, உணரான் - அறியான், மனம் - நெஞ்சத்திலுள்ள, கவலை-கிலேசமானது, தீர்ந்து - நீங்கி, உய்யமாட்டான் - உச்சீவிக்கமாட்டான். எ-று.

பகவத்கீதையை வாசித்துணர்ந்தவனே ஆன்மக்கியானமுற்று முத்தியடைவன் என்பது கருத்து.

மாயக்கூத்தன்.
குளந்தைவல்லிநாச்சியார்.
ஆனந்தநிலைவிமானம்.
பெருங்குளதீர்த்தம்.

கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
பிரகஸ்பதிக்குப் பிரத்தியக்ஷம்.
நம்மாழ்வார் மங்களாசாஸனம்.

திருக்குறுங்குடி.

௩௭. தாலத் திழிகுலத்துச் சண்டாள மானாலும்
மேலத் தவரதனின் மேன்மைத்தே-கோலக்
குறுங்குடிவாழ் மாயன் குரைகழற்கா ளாகப்
பெறுங்குடியாய் வாழ்வார் பிறப்பு.

(இ-ள்.) கோலம் - அழகிய, குறுங்குடி வாழ் - திருக்குறுங்குடியென்னுந் திவ்யதேசத்தி லெழுந்தருளிய, மாயன்-மாயவனது, குரை - சத்திக்கின்ற, கழற்கு - சிலம்பணிந்த திருவடிகளுக்கு, ஆள் ஆகப்பெறும் - அடிமையாகப்பெறுகின்ற, குடியாய் - வாழ்க்கையினராக, வாழ்வார் - வாழ்கின்றவர்களுடைய, பிறப்பு - ஜனனமானது, தாலத்து - பூமியின்கண், இழிகுலத்து - கீழ்ச்சாதியிற் பிறந்த, சண்டாளம் ஆனாலும் - புலைத்தன்மையினதாயினும், மேல்-மேன்மையாகிய, அ-அந்த, தவரதனின் - தவசிகளைப்பார்க்கிலும், மேன்மைத்து-மேன்மையுடையதாகும். எ-று.

வைஷ்ணவநம்பி, மலைமேல்நம்பி, நின்ற நம்பி, இருந்த நம்பி, கிடந்தநம்பி, திருப்பாற்கடல் நம்பி.
குறுங்குடிவல்லிநாச்சியார்.
பஞ்சகேதவிமானம்.
திருப்பாற்கடல்நதி-பஞ்சதுறை.

கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
பக்கநின்ற சிவனுக்குப் பிரத்தியக்ஷம்.
நம்மாழ்வார்-பெரியாழ்வார்-திருமங்கையாழ்வார் - மங்களாசாஸனம்.

திருக்கோளூர்.

௩௮. பிறப்பற்று மூப்புப் பிணியற்று நாளும்
இறப்பற்று வாழ விருப்பீர்-புறப்பற்றுத்

தள்ளுங்கோ ளூரரவிற் றாமோ தரன்பள்ளி
கொள்ளுங்கோ ளூர்மருவுங் கோள்.

(இ-ள்.) பிறப்பு அற்று - பிறவிநீங்கி, மூப்பு - விருத்தாப்பியமும், பிணி-வியாதியும், அற்று - நீங்கி, நாளும் - எப்போதும், இறப்பு அற்று - மரணமும் நீங்கி, வாழ இருப்பீர் - வாழும்படியிருக்கின்றவர்களே, புறப்பற்று - வெளிப்பற்றுகளை, தள்ளுங்கோள் - நீக்குங்கள், ஊர்-நகருகின்ற, அரவில்-ஆதிசேடன்மீது, தாமோதரன் - திருமால், பள்ளிகொள்ளும் - சயனித்திராநின்ற, கோளூர் - திருக்கோளூரென்னுந் திவ்வியதேசத்தை, மருவுங்கோள் - சேருங்கள். எ-று.

தமோதரன்-அசோதை தன் வயிற்றில் கயிற்றினால் கட்ட அவளிடத்தில் வாத்சல்யத்தால் அக்கட்டை அவிழ்த்துக்கொள்ளக்கூடாமல் அதுவே தனக்குத் திருநாமமாகும்படி இருந்தவன். புறப்பற்று-எனது என்னும் மமகாரம். "ஒரு மொழியொழி தன்னினங்கொளற் குரித்தே" என்பதனால் யான் என்னும் அகப்பற்றும் நீங்கற்பாலது என்பது பெற்றாம்.

திருப்புகுழூர்.
வைத்தமாநிதி.
கோளூர்வல்லிநாச்சியார்.
ஸ்ரீகரவிமானம்.
குபேரதீர்த்தம்.
தாம்பிரபரணிநதி.
கிழக்கே திருமுகமண்டலம்.
புஜங்கசயனம்.
குபேரனுக்கும் மதுரகவி யாழ்வாருக்கும் பிரத்தியக்ஷம்.
நம்மாழ்வார் மங்களாசாஸனம்.

பாண்டிநாடு முற்றிற்று.

மலைநாட்டுத் திருப்பதிகள் - ௧௩.

திருவனந்தபுரம்.

௩௯. கோளார் பொறியைந்துங் குன்றியுடலம் பழுத்து
மாளாமுன் னெஞ்சே வணங்குதியால் - கேளார்
சினந்தபுரஞ் சுட்டான்றிசை முகத்தான் போற்றும்
அனந்தபுரஞ் சேர்ந்தா னடி.

(இ-ள்.) நெஞ்சே - மனமே, கேளார் - பகைவரது, சினந்த-கோபித்த, புரம்சுட்டான் - திரிபுரத்தைத் தகித்த ருத்திரனும், திசைமுகத்தான்-பிரமனும், போற்றும் - துதிக்கும், அனந்தபுரம்-திருவனந்தபுரமென்னுந் திவ்வியதேசத்தை, சேர்ந்தான் - சேர்ந்த இறைவனது, அடி - திருவடிகளை, கோள் ஆர் - தீமைபொருந்திய, பொறி ஐந்தும் - ஐம்பொறிகளும், குன்றி-அழிந்து, உடலம் - தேகமானது, பழுத்து - தளர்ச்சியடைந்து, மாளாமுன் - அழியுமுன்னம், வணங்குதி-நமஸ்கரிப்பாயாக. எ-று. ஆல்-அசை.

அனந்தபத்மநாபர்.
ஸ்ரீஹரிலட்சுமிநாச்சியார்.
கனகசபை.
ஹேமகூடவிமானம்.
மச்சதீர்த்தம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
அனந்தசயனம்.
ருத்திரனுக்கும் சந்திரனுக்கும் இந்திரனுக்கும் பிரத்தியக்ஷம்.
நம்மாழ்வார்-பெரியாழ்வார் மங்களாசாஸனம்.

திருவண்பரிசாரம்.

௩௰. அடியுங் குளிர்ந்தா ளறிவுங் குலைந்தாள்
முடுகின்றாண் மூச்சடங்கு முன்னே - கடிதோடிப்
பெண்பரிசா ரங்குப் பிறப்பித்து மீளுவார்
வண்பரிசா ரங்கிடந்த மாற்கு.

(இ-ள்.) அடியுங் குளிர்ந்தாள் - பாதமுங்குளிர்ந்தாள், அறிவும் குலைந்தாள்-உணர்வும் அழிந்தாள், முடிகின்றாள்-இறக்கின்றாள் மூச்சு அடங்கும் முன்னே - (இத்தன்மையாளுக்கு) சுவாசம் ஒடுங்குவதற்குமுன்னம், கடிது ஓடி-விரைந்துசென்று, வண்பரிசாரம்-திருவண்பரிசாரமென்னுந் திவ்யதேசத்தில், கிடந்த - சயனித்த திருக்கோலங்கொண்ட, மாற்கு-திருமாலுக்கு, பெண்பரிசு - என் பெண்ணினது தன்மையை, அங்கு-அவ்விடத்து, பிறப்பித்து - விளங்கும்படி சொல்லி, மீளுவார் - திரும்பவல்லவர், ஆர்-யாவர். எ-று.

திருவண்பரிசாரத் திருமால்பக்கல் மால்கொண்ட எனது பெண் இறக்குமுன், அவருக்கு அதனை உரைத்துத் திரும்ப வல்லவரியாவர் என்பது கருத்து.

திருக்குறளப்பன்.
திருவாழ்மார்பன்.
கமலவல்லிநாச்சியார்.
இந்திரகலியாணவிமானம்.
லட்சுமிதீர்த்தம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
வீற்றிருந்ததிருக்கோலம்.
விநதைக்கும் காரிக்கும் உடையநங்கைக்கும் பிரத்தியக்ஷம்.
நம்மாழ்வார் மங்களாசாஸனம்.

திருக்காட்கரை.

௩௧. மார்க்கமுந் தாந்தாம் வழிபடுந் தெய்வமும்
ஏற்க வுரைப்பார்சொ லெண்ணுதே-தோற்குரம்பை
நாட்கரையா முன்னமே நன்னெஞ்சே நாரணனுங்
காட்கரையாற் காளாகாய் காண்.

(இ-ள்.) நல் நெஞ்சே - நல்ல மனமே, மார்க்கமும் - அவரவர் சமயத்தையும், தாம் தாம் - அவரவர், வழிபடும் - வணங்கும், தெய்வமும் - கடவுளையும், ஏற்க - (அவரவர் சமயத்திற்கு) பொருத்தமாக, உரைப்பார் - வசனிக்கின்றவர்களுடைய, சொல்-வார்த்தையை, எண்ணுதே - மதியாதே, தோல்குரம்பை - தோல்மூடிய வுடலின், நாள்-வாழ்நாட்கள், கரையாமுன்னமே - கழிவதற்குமுன்னமே, நாரணன்

ஆம்-ஸ்ரீமந்நாராயணனாகிய, காட்கரையாற்கு - திருக்காட்கரை யென்னுந் திவ்வியதேசத்தி லெழுந்தருளியவனுக்கு, ஆள் ஆகாய்-அடிமையாகக்கடவாய். எ-று. காண்-அசை.

அப்பன்.
பெருஞ்செல்வநாயகி.
புஷ்கலவிமானம்.
கபிலதீர்த்தம்.
தெற்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
கபிலமுனிக்குப் பிரத்தியக்ஷம்.
நம்மாழ்வார் மங்களாசாஸனம்.

திருமூழிக்களம்.

௩௨. காண்கின்ற வைம்பூதங் கட்குமிரு சுடர்க்கும்
சேண்கலந்த விந்திரற்குந் தேவர்க்கு மாண்கரிய
பாழிக் களத்தாற்கும் பங்கயத்து நான்முகற்கும்
மூழிக் களத்தான் முதல்.

(இ-ள்.) காண்கின்ற - பார்க்கின்ற, ஐம்பூதங்கட்கும் - பஞ்சபூதங்களுக்கும், இருசுடர்க்கும் - சூரிய சந்திரர்களாகிய இருவருக்கும், சேண் கலந்த-தேவலோகத்திலிருக்கும், இந்திரற்கும் - தேவேந்திரனுக்கும், தேவர்க்கும் - கடவுளர்க்கும், மாண் - மாட்சிமை தங்கிய, கரிய-கறுத்த, பாழி - பெருமை தங்கிய, களத்தாற்கும் - கண்டத்தையுடைய ருத்திரனுக்கும், பங்கயத்து - தாமரையில் வசிக்கும், நான் முகற்கும் - பிரமனுக்கும், மூழிக்களத்தான் - திருமூழிக்களத்தி லெழுந்தருளிய ஸ்ரீ யப்பதியே, முதல்-முதன்மையானவன். எ-று.

மூழிக்களத்தான்.
மதுவேணிநாச்சியார்.
சௌந்தர்யவிமானம்.
பெருங்குளநீர்.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
ஹரிதமஹாமுனிக்குப் பிரத்தியக்ஷம்.
நம்மாழ்வார் - திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருப்புலியூர்.

௩௩. முதல் வண்ணமாமே முலைவண்ண முன்னை
விதிவண்ண நீங்கி விடுமே - சதுரத்
திருப்புலியூர் நின்றான் திருத்தண் டுழாயின்
மருப்புலியூர் தென்றல் வரின்.

(இ-ள்.) சதுரம் - பெருமை பொருந்திய, திருப்புலியூர் - திருப்புலியூரென்னுந் திவ்ய தேயத்தில், நின்றான் - நின்ற திருக்கோலங் கொண்டவனுடைய, திரு - சிறந்த, தண் துழாயின் - குளிர்ந்த திருத் துழாய் மாலையினது, மரு - வாசனையை, புல்லி - பொருந்தி, ஊர் - தவழ்கின்ற, தென்றல் - தென்றற் காற்றானது, வரின் - வந்தால், முலைவண்ணம் - (எனது பெண்ணுக்கு) தனத்தின் நிறம், முதல் வண்ணம் - முன்னிருந்த நிறம், ஆம் - வரும், முன்னை விதி வண்ணம் - பூர்வ விதிவசமும், நீங்கிவிடும் - நீங்கும். எ-று.

திருப்புலி யூரான்பக்கல் மயல்கொண்ட என் பெண்ணுக்கு, அப்பிரனுடைய துழாய்மணம் படிந்த தென்றல் வீசின், அவள் முலையின் நிறம் முன்னிறமாம். அவள் விதிவசமும் ஒழியும் என்பது கருத்து.

குட்டநாடு.
மாயப்பிரான்.
பொற்கொடியாள்.
புருஷோத்தமவிமானம்.
பூஞ்சுனைத்தீர்த்தம்,
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
சப்தரிஷிக்குப்பிரத்தியக்ஷம்.
நம்மாழ்வார்மங்களாசாஸனம்.

திருச்செங்குன்றூர்.

௬௪. வரவேண்டுங் கண்டாய் மதிகலங்கி விக்குள்
பொரவே யுயிர்மாயும் போழ்து - பரமேட்டி
செங்குன்றூர் மாலேசிறைப் பறவைமேற் கனகப்
பைங்குன்றூர் கார்போற் பறந்து.

(இ-ள்.) பரமேட்டி - மிக்கதயாளுவே!, செங்குன்றூர் மாலே-திருக்செங்குன்றூரி லெழுந்தருளிய திருமாலே, மதி - புத்தியானது, கலங்கி - மயங்கி, விக்குள் - விக்குளானது, பொர - போர்செய்ய (வருத்த), உயிர்-ஆவி, மாயும்போழ்து-நீங்கும்போது, சிறை - இறகுகளையுடைய, பறவைமேல் - கருடன்மீது, கனகம் பை குன்று - பசிய பொன் மலையின்மேல், ஊர் - தவழ்கின்ற, கார்போல் - மேகம் போல, பறந்து - விரைந்து, வரவேண்டும் - தரிசனந்தர வரவேண்டும். எ-று. கண்டாய்-அசை.

மையாரப்பன்.
செங்கமலவல்லிநாச்சியார்.
ஜெகச்சோதிவிமானம்.
திருச்சிற்றாறு.
சங்குதீர்த்தம்.
மேற்கேதிருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
பஸ்மாசுரநிமித்தியம் பதுமாசனமாகச் சிவனுக்குப் பிரத்தியக்ஷம்.
நம்மாழ்வார் மங்களாசாஸனம்,

திருநாவாய்.

௬௫. பறந்து திரிதரினும் பாவியேனுள்ளம்
மறந்தும் பிறிதறிய மாட்டா - சிறந்த
திருநாவாய் வாழ்கின்ற தேவனையல்லாலென்
ஒருநாவாய் வாழ்த்தா துகந்து.

(இ-ள்.) பறந்து-விரைவாகச்சென்று, திரிதரினும் - (விஷயங்களில்) திரிந்தாலும், பாவியேன்-தீவினையுடையேனாகிய எனது, உள்ளம்-மனமானது, மறந்தும்-மறந்தாயினும், பிறிது - வேறொன்றையும், அறியமாட்டா-தெரிந்துகொள்ளாது,சிறந்த-மேன்மைதங்கிய, திருநாவாய் வாழ்கின்ற - திருநாவாயென்னுந் திவ்யதேசத்தி லெழுந்தருளியிருக்கின்ற, தேவனை அல்லால்-திருமாலையல்லாமல், என்-எனது,

ஒரு நாவாய் - ஒரு நாவோடுகூடிய வாயானது, உகந்து - விரும்பி, வாழ்த்தாது - துதியாது. எ-று.

நாராயணன்.
மலர்மங்கைநாச்சியார்.
வேதவிமானம்.
செங்கமலசரஸு.
தெற்கே திருமுகமண்டலம்.
வீற்றிருந்ததிருக்கோலம்.
லட்சுமிக்கும் கஜேந்திரனுக்கும் பிரத்தியக்ஷம்.
மாயி பெருமாளைத் தோத்திரம் பண்ணிச் சேவித்த இடம்.
பொய்கையாழ்வார்-நம்மாழ்வார்-திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருவல்லவாழ்.

சுசு. உகந்தார்க் கென்ஞான்று முளனா யுகவா
திகந்தார்க் கென்ஞான்று மிலனாய்த் - திகழ்ந்திட்
டருவல்ல வாழுருவமல்ல வெனநின்றான்
திருவல்ல வாழுறையுந்தே.

(இ-ள்.) திருவல்லவாழ் உறையும் - திருவல்லவாழ் என்னுந் திவ்ய தேசத்திலெழுந்தருளிய, தே-சுவாமியானவர், உகந்தார்க்கு-(தன்னை) விரும்பினவர்களுக்கு, எ ஞான்றும் - எக்காலத்தும், உளன் ஆய்-உள்ளவனாயும், உகவாது-விரும்பாமல், இகந்தார்க்கு-நிராகரித்தவர்களுக்கு, எ ஞான்றும் - எக்காலத்தும், இலன் ஆய் - இல்லாதவனாகியும், திகழ்ந்திட்டு - விளங்கி, அரு அல்ல - அருவமுமல்ல, வாழ் - வாழ்கின்ற, உருவம் அல்ல - உருவமும் அல்ல, என - என்றுசொல்லும் விதம், நின்றான் - நின்றனன். எ-று.

கோலப்பிரான்.
செல்வத்திருக்கொழுந்து நாச்சியார். கோல்விமானம்.
கண்டாகர்ணிக தீர்த்தம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
கண்டாகர்ணனுக்குப் பிரத்தியக்ஷம்.
நம்மாழ்வார் - திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருவண் வண்டூர்.

சுஎ. தேவு முலகு முயிருந் திரிந்துநிற்கும்
யாவும் படைத்த விறைகண்டீர் - பூவில்
திருவண்வண் டூருறையுந் தேவாதி தேவன்
மருவண்வண் டூர்துளவ மால்.

(இ-ள்.) பூவில் - பூமியின் கண், திருவண்வண்டூர் - திருவண்வண்டூ ரென்னுந் திவ்யதேசத்தில், உறையும் - எழுந்தருளியிருக்கும், தேவாதி தேவன் - தேவர்களுக்குத் தேவனும், மரு - வாசனை தங்கிய, வள் - வளப்பம் பொருந்திய, வண்டு ஊர் - வண்டுகளுலவும், துளவம் - துளப மாலையை யணிந்த, மால் - திருமாலே, தேவும்-தேவர்களையும், உலகும் - உலகத்தையும், உயிரும்-ஆன்மாக்களையும்,

திரிந்து நிற்கும்-சஞ்சரித்துநிற்கும், யாவும்-எல்லாவற்றையும், படைத்த - சிருஷ்டித்த, இறை-கடவுளாகும். எ-று. கண்டீர்-அசை.

"வண்டூர் என்பது திவ்யதேசத்தின் பெயராகக்கொண்டு திரு அண் - இலட்சுமிவிலாசம்பொருந்திய, வண்டூர்-திருவண்டூர்" எனப் பொருள் கூறுவாருமுளர்.

பாம்பணையப்பன்.
கமலவல்லி நாச்சியார்.
வேதாலயவிமானம்.
பாபநாசதீர்த்தம்.
மேற்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
மார்க்கண்டேயனுக்குப் பிரதியக்ஷம்.
நம்மாழ்வார் மங்களாசாஸனம்.

திருவாட்டாறு.

சுஅ. மாலைமுடி நீத்து மலர்ப்பொன் னடிநோவப்
பாலைவன நீபுகுந்தாய் பண்டென்று - சாலவுநான்
கேட்டாற் றுயிலேன்காண் கேசவனே பாம்பணைமேல்
வாட்டாற்றுக் கண்டுயில்கொள் வாய்.

(இ-ள்.) கேசவனே - கேசவனென்னுந் திருநாமத்தையுடையவனே, பாம்பு அணைமேல் - சேஷ சயனத்தின் மீது, வாட்டாறு-திருவாட்டாறு என்னுந் திவ்விய தேசத்தில், கண் துயில் கொள்வாய்-திருக்கண்வளர்பவனே, மாலை - பூமாலையையும், முடி - கிரீடத்தையும், நீத்து - நீக்கிவிட்டு, மலர்பொன் அடி - அழகிய தாமரைமலர் போன்ற பாதங்கள், நோவ - வருந்த, பாலை வனம் - பாலைவனத்தில், பண்டு நீ புகுந்தாய் - முன்னம் நீ சென்றனை, என்று-என்றுசொல்ல, சாலவும் - மிகவும், நான் - யான், கேட்டால்-கேள்விப்பட்டால், துயிலேன் - நித்திரை செய்யேன். எ-று. காண் - அசை.

கேசவன் - மதுராபட்டணத்திலும், காசியிலுமிருந்துகொண்டு கிலேசத்தைப் போக்குகிறவனும் பிரமனையும் ருத்திரனையும் தன் தேகத்தில் பிறக்கச்செய்தவனும் ஆனவன் என்பதுபொருள்.

ஆதிகேசவப்பெருமாள்.
மரகதவல்லிநாச்சியார்.
அஷ்டாங்க விமானம்.
கடல்வாய்த்தீர்த்தம்.
ராமதீர்த்தம்.
மேற்கே திருமுகமண்டலம்.
புஜங்கசயனம்.
பரசுராமனுக்கும் சந்திரனுக்கும் பிரத்தியக்ஷம்.
நம்மாழ்வார் மங்களாசாஸனம்.

திருவிற்றுவக்கோடு.

சுகூ. வாய்த்த கருமமினி மற்றில்லை நெஞ்சமே
தோய்த்த தயிர்வெண்ணெய் தொட்டுண்ட - கூத்தன்
திருவிற் றுவக்கோடு சேர்ந்தாற் பிறவி
கருவிற் றுவக்கோடுங் காண்.

(இ-ள்.) நெஞ்சமே - மனமே, வாய்த்த - செய்யக்கிடந்த, கருமம் - தொழில், இனி மற்று இல்லை - இனி வேறொன்றுமில்லை, தோய்த்த தயிர் - தோய்த்த தயிரையும், வெண்ணெய் - நவநீதத்தையும், தொட்டு - கையால் எடுத்து, உண்ட - புசித்த, கூத்தன் - திருவிளையாட்டை யுடையவனது, திருவிற்றுவக்கோடு - திருவிற்றுவக்கோடு என்னுந் திவ்யதேசத்தை, சேர்ந்தால் - அடைந்தால், பிறவி - ஜனனத்தை விளைக்கும், கருவின் - கருவினது, துவக்கு - பந்தமானது, ஓடும் - நீங்கும். எ-று. காண் - அசை.

உய்யவந்தபெருமாள்.
வித்துவககோட்டுவல்லிநாச்சியார்
தத்துவகாஞ்சனவிமானம்.
சக்கிரதீர்த்தம்.
தெற்கே திருமுகமண்டலம்.
புஜங்கசயனம்.
அம்பரிஷிக்குப் பிரத்தியக்ஷம்.
குலசேகராழ்வார் மங்களாசாஸனம்.

திருக்கடித்தானம்.

எ0. காண விரும்புமென் கண் கையுந்தொழ விரும்பும்
பூண விரும்புமென் றன் புன்றலைதான் - வாணன்
திருக்கடித்தா ன்த்தான் றிகிரியான் றண்டான்
திருக்கடித்தா னத்தானைச் சென்று.

(இ-ள்.) வாணன் - வாணாசுரனது, திருக்கு - மாறுபாட்டை, அடித்தான் - ஒழித்தவனும், நத்தான் - சங்கத்தை யுடையவனும், திகிரியான் - சக்கரத்தை யுடையவனும், தண்டான்-தண்டையுடைவனுமாகிய, திருக்கடித்தானத்தானை-திருக்கடித்தான மென்னுந் திவ்யதேசத்தை யுடைய திருமாலை, சென்று-போய், என்கண் - என் நேத்திரங்களானவை, காண - தரிசிக்க, விரும்பும் - ஆசைகொள்ளும், கையும்-என் கரங்களும், தொழ - அஞ்சலி செய்ய, விரும்பும்-இச்சிக்கும், என்றன் - என்னுடைய, புல் தலைதான் - அற்பமாகிய சிரசும், பூண - (அவரது திருவடியைச்) சூடிக்கொள்ள, விரும்பும் - ஆவல்கொள்ளும். எ-று.

அற்புதநாராயணன்.
கற்பகவல்லித்தாயார்.
புண்ணியகோடி விமானம்.
பூமிதீர்த்தம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்ற திருக்கோலம்.
ருக்குமாங்கதராஜனுக்குப் பிரத்தியக்ஷம்.
நம்மாழ்வார் மங்களாசாஸனம்.

திருவாறன்விளை.

எக. சென்று புனன்மூழ்கிச் செய்தவங்கள் செய்தாலும்
வென்று புலனைந்தடக்கி விட்டாலு - மின்றமிழால்
மாறன் விளைத்த மறையோதார்க் கில்லையே
ஆறன் விளைத்திருமா லன்பு.

(இ-ள்.) சென்று - (நதிதீரங்களிற்) போய், புனல் - ஜலத்தில், மூழ்கி - குளித்து, செய்தவங்கள் - செய்தற்குரிய தபசுகளை, செய்தாலும் - புரிந்தாலும், வென்று - (விஷயவங்களில் செல்வொட்டாமல்) ஜயித்து, புலன் ஐந்து - ஐம்புலன்களையும், அடக்கிவிட்டாலும் - முற்றும் அடக்கினுலும், இன் தமிழால் - இனிய தமிழ்ப்பாசுரங்களினுல், மாறன் - நம்மாழ்வார், விளைத்த - பாடியருளிய, மறை - வேதத்தை, ஓதார்க்கு - பாராயணஞ் செய்யாதவர்களுக்கு, ஆறன் விளை - திரு ஆறன்விளை யென்னுந் திவ்ய தேசத்தி லெழுந்தருளியிருக்கும், திருமால் - திருமாலுக்கு, அன்பு - பக்திசெலுத்துதல், இல்லை - இல்லையாகும். எ-று.

திருக்குறளப்பன்.
பதுமாசன நாச்சியார்.
வாமனவிமானம்.
வேதவியாசசரஸு.
வடக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
பிரமாவுக்குப்பிரத்தியக்ஷம்.
நம்மாழ்வார்மங்களாசாஸனம்.

மலைநாடு முற்றிற்று.

நடுநாட்டுத் திருப்பதிகள்-உ.

திருவைந்திரபுரம்.

எஉ. அன்பணிந்த சிந்தையரா யாய்ந்தமலர் தூவி
முன்பணிந்து நீரெமக்கு மூர்த்தியரே-யென்பர்
எமையிந்திர புரத்தார்க் கின்றொண்ட ராஞர்
தமையிந் திரபுரத்தார் தாம்.

(இ-ள்.) எம் - எமது, ஐயிந்திரபுரத்தார்க்கு - திருவையிந்திரபுர மென்னுந் திவ்ய தேசத்தி லெழுந்தருளியவருக்கு, இன் - இனிய, தொண்டர் ஆனார்தமை - அடியாரானவர்களை, இந்திர புரத்தார்தாம் - தேவலோகத்தி லுள்ளவர்கள், அன்பு அணிந்த - பத்தியோடுகூடிய, சிந்தையராய் - உள்ளத்தை யுடையவர்களாய், ஆய்ந்த - ஆராய்ந்தெடுத்த, மலர் - புஷ்பங்களை, தூவி - சொரிந்து, முன் பணிந்து - (அவர்க்கு) முன்னே நமஸ்கரித்து, நீர் ஏ-தேவரீரோ, எமக்கு - எங்களுக்கு, மூர்த்தியர் - கடவுளராவார், என்பர்-என்று துதிப்பார்கள். எ-று.

திருமாலடியாரைத் தேவர்களும் வணங்குவர் என்பது கருத்து.

தெய்வநாயகப்பெருமாள்.
வைகுண்டநாயகி.
சந்திரவிமானம்.
கருடநதி.
சேவைதீர்த்தம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்ற திருக்கோலம்.
சந்திரனுக்கும் கருடனுக்கும் பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்,

திருக்கோவலூர்.

எ௩. தாமரையா னாதியாய்த் தாவரங்க ளீறான
சேம வுயிருஞ் செகமனைத்தும் - பூமடந்தைக்
காங்கோவ லாயுதன்பின் னாக வவதரித்த
பூங்கோவ லாயன் பொருள்.

(இ-ள்.) தாமரையான் ஆதியாய்-பிரமன்முதலாக, தாவரங்கள் ஈறு ஆன - தாவரங்களிறுதியாகிய, சேமம் - காவலோடுகூடிய, உயிரும் - சீவராசிகளும், செக மனைத்தும் - எல்லாவுலகங்களும், பூமடந்தைக்கு - தாமரைக்கமலத்தில் வசிக்கும் மஹாலக்ஷ்மிக்கு, ஆம்கோ-உகந்த தலைவரும், அலாயுதன் பின்னாக-கலப்பையாயுதத்தையுடைய பலராமருக்குப் பின்னாக, அவதரித்த - திருவவதாரஞ்செய்த, பூ-அழகிய, கோவல் - திருக்கோவலூரென்னுந் திவ்வியதேசத்தி லெழுந்தருளியிருக்கும், ஆயன்-(கோபாலராகிய) திருமாலினது, பொருள்-சிருட்டிப்பொருள்களாகும். எ-று.

திருவிக்கிரமன்.
ஆயனார்.
பூங்கோவல்நாச்சியார்.
ஸ்ரீகரவிமானம்.
கிருஷ்ணதீர்த்தம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்ற திருக்கோலம்.
மிருகண்டமுனிக்கும் பலிச்சக்கிரவர்த்திக்கும் பிரத்தியக்ஷம்.
பொய்கையாழ்வார் - பூதத்தாழ்வார்-பேயாழ்வார்-திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

நடுநாடு முற்றிற்று.

தொண்டைநாட்டுத் திருப்பதிகள். உ௨.

திருக்கச்சி (காஞ்சிபுரம்.)

எச. பொருளாசை மண்ணாசை பூங்குழலார் போகத்
திருளாசை சிந்தித்திராதே - யருளாளன்
கச்சித் திருப்பதியா மத்தியூர் கண்ணன்றாள்
இச்சித் திருப்பதியா மென்று.

(இ-ள்.) அருள் ஆளன் - தயாளுவும், கச்சித் திருப்பதியாம் அத்தியூர் - காஞ்சிக்ஷேத்திரமாகிய அத்திகிரியி லெழுந்தருளிய, கண்ணன் - தாமரைக்கண்ணனது, தாள்-திருவடியை, யாம்-நாம், இச்சித்திருப்பது - விரும்பியிருப்பது, என்று - எந்நாளில் என்று கருதி, பொருள் ஆசை - திரவிய இச்சையையும், மண் ஆசை - பூமியின் இச்சையையும், பூ - அழகிய, குழலார் - கூந்தலையுடைய மடவாரது, போகத்து - சம்போகத்தினது, இருள் ஆசை - அந்தகாரமாகிய இச்சையையும், சிந்தித்து-நினைத்து, இராதே-இருக்கவேண்டாம். எ-று.

அத்திகிரி
வரதராஜப்பெருமாள்.
பெருந்தேவித்தாயார்.
புண்ணியகோடிவிமானம்,
திருவனந்த சரஸு.
மேற்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
பிரம்மாவுக்குப்பிரத்தியக்ஷம்.
கிரிகிரிசிங்கப்பெருமாள்.
அரிதேவித்தாயார்.
குகவிமானம்.
பிரகஸ்பதிக்குப் பிரத்தியக்ஷம்,
பூதத்தாழ்வார் - திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருவட்டபுயங்கம்.

எரு. என்றுந் துயருழக்கு மேழைகா ணீங்களிளங்
கன்றுபோற் றுள்ளிக் களித்திரீ - ரன்றுநட
மிட்டபுயங்கத் திருசரண மேசரணென்
றட்டபுயங் கத்தர்க் காளாய்.

(இ-ள்.) என்றும் - எக்காலத்தும், துயர் - துன்பத்தில், உழக்கும் - வருந்துகின்ற, ஏழைகாள் - ஏழைகளே, நீங்கள் - நீங்கள், அன்று - முற்காலத்தில், புயங்கத்து - காளிங்க னென்னுஞ் சர்ப்பத்தின்மீது, நடம் இட்ட - நிருத்தனம் செய்த, இரு சரணமே - உபய பாதங்களே, சரண் என்று-புகலிடமென்று, அட்ட புயங்கத்தர்க்கு-திருவட்டபுயங்கமென்னுந் திவ்விய தேசத்தையுடையவருக்கு, ஆள் ஆய் - அடிமையாகி, இளம்கன்றுபோல் - இளமைபொருந்திய கன்றைப்போல், துள்ளி - குதித்து, களித்திரீர்-சந்தோஷித் திருங்கள்.

ஆதிகேசவப்பெருமாள்.
சக்கிரராயர்.
அலர்மேல்மங்கைநாச்சியார்.
கசஞ்சிருதிவிமானம்.
கஜேந்திரபுஷ்கரணி.
கிழக்கேதிருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
கஜேந்திராழ்வானுக்குப் பிரத்தியக்ஷம்.
பேயாழ்வார் - திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருத்தண்கா.

எசு. ஆட்பட்டே னைம்பொறியா லாசைப்பட்டே னறிவும்
கோட்பட்டு நாணுங் குறைபட்டேன்-சேட்பட்ட
வண்காவை வண்டுவரை வைத்த விளக்கொளிக்குத்
தண்காவைச் சேர்ந்தான் றனக்கு.

(இ-ள்.) சேண்பட்ட - தேவலோகத்திலுள்ள, வண்காவை-வளமான கற்பகவிருக்ஷத்தை, வள் - அழகிய, துவரை - துவாரகாபுரியில், வைத்த-கொண்டுவந்துநட்ட, விளக்கொளிக்கு - விளக்கொளிப்பெருமான் என்னும் திருநாமமுடையவனுக்கு, தண்காவை-திருத்தண்காவென்னுந் திவ்யதேசத்தை, சேர்ந்தான் தனக்கு - சேர்ந்தவனாகிய சுவாமிக்கு, ஆள்பட்டேன் - அடிமைப்பட்டேன், ஐம்பொறியால் - மெய், வாய், கண், மூக்கு, செவி யென்னும் பஞ்சேந்திரியங்

ளாலும், ஆசைப்பட்டேன் - விருப்பங்கொண்டேன், அறிவும்-புத்தியும், கோள்பட்டு-(அவ்வெம்பெருமானுல்) கொள்ளப்பட்டு, நாணும்-வெட்கமும், குறைபட்டேன் - குறைந்தேன். எ-று.

விளக்கொளிமணிமாடம்.
தீபப்பிரகாசர்.
திவ்யப்பிரகாசர்.
மரகதவல்லித்தாயார்.
ஸ்ரீகரவிமானம்.
சரஸ்வதிதீர்த்தம்.
மேற்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
சரஸ்வதிக்குப்பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருவேளுக்கை.

எஎ. தனக்குரிய னுயமைந்த தானவர்கோன் கெட்டான்
உனக்குரிய னுயமைந்தா னுய்ந்தா - னினைக்குங்கால்
வேளுக்கை யாளரியே வேறுதவி யுண்டோவுன்
தாளுக்கா ளாகா தவர்க்கு.

(இ-ள்.) தனக்கு உரியனுய் - (சர்வ சுதந்தரமும்) தனக்கேயுடையவனுய், அமைந்த - பொருந்திய, தானவர்கோன் - அசுரேந்திரனுகிய இரணியன், கெட்டான் - அழிந்தான், உனக்கு - தேவரீருக்கே, உரியன் ஆய - உரித்தானவனுகிய, மைந்தன் - பிரகலாதாழ்வான், உய்ந்தான் - பிழைத்தான், (ஆதலால்) நினைக்குங்கால் - யோசிக்குமளவில், வேளுக்கை-திருவேளுக்கையென்னுந் திவ்யதேசத்திலெழுந்தருளிய, ஆள் அரியே - நரசிம்மமூர்த்தியே, உன் - உனது, தாளுக்கு-திருவடிக்கு, ஆள் ஆகாதவர்க்கு - தொண்டராகாதவர்களுக்கு, வேறு உதவி - வேறு துணை, உண்டோ - உள்ளதோ. எ-று.

முகுந்தப்பெருமாள்.
வேளுக்கைவல்லிநாச்சியார்.
கனகவிமானம்.
கதம்பசரஸு.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
பிருகுமகாரிஷிக்குப் பிரத்தியக்ஷம்.
பேயாழ்வார் - திருமங்கை யாழ்வார் மங்களாசாஸனம்.

திருப்பாடகம்.

எஅ. தவம்புரிந்த சேதனரைச் சந்திரனு தித்தன்
சிவன்பிரம னிந்திரனுச் செய்கை - யுவந்து
திருப்பா டகமருவுஞ் செங்கண்மா றன்மார்
பிருப்பா டகவுரையாலே.

(இ-ள்.) தவம்புரிந்த - தவத்தைச்செய்த, சேதனரை - ஆன்மாக்களை, சந்திரன் ஆ - சந்திரனுகவும், ஆதித்தன் ஆ - சூரியனுகவும், சிவன் ஆ - உருத்திரனுகவும், பிரமன் ஆ-பிரமனுகவும், இந்திரன் ஆ-தேவேந்திரனுகவும், உவந்து - சந்தோஷித்து, செய்கை - செய்குதல், திருப்பாடகம் - திருப்பாடக மென்னுந் திவ்யதேசத்தை, மருவும்-

பொருந்திய, செங்கண்மால்தன் - செங்கமலநேத்திரனாகிய திருமாலினது, மார்பு இருப்பாள் - வக்ஷத்தானத்து நித்தியவாசஞ்செய்யும் பிராட்டியினுடைய, தக - தகுதியாகிய, உரையாலே-சொல்லினாலேயாம். எ-று.

ஈறுகெட்டு வந்த ஆகஎன்னும் செயவெனெச்சத்தைச் சந்திரன் முதலியவற்றோடுங் கூட்டுக.

திருப்பாடகமருவும் திருமால் பிராட்டியாரது உரையினாலேயே தவம்புரிவோரைச் சந்திரன் முதலியோராகச் செய்குவர் என்பது கருத்து.

பாண்டவதூதப்பெருமாள்.
ருக்குமணிதேவி.
சத்தியபாமை.
பத்திரவிமானம்.
மச்சியதீர்த்தம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
வீற்றிருந்ததிருக்கோலம்.
அரிதமஹாமுனிக்குப்பிரத்யக்ஷம்.
பூதத்தாழ்வார்-பேயாழ்வார்-திருமழிசையாழ்வார் -திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருநீரகம்.

எகூ. ஆலத் திலைசேர்ந் தழியுலகை யுட்புகுந்த
காலத்தி லெவ்வகைநீ காட்டினாய் - ஞாலத்துள்
நீரகத்தாய் நின்னடியே னெஞ்சகத்தாய் நீண்மறையின்
வேரகத்தாய் வேதியற்கு மீண்டு.

(இ-ள்.) ஞாலத்துள் - பூமியில், நீரகத்தாய் - திருநீரகமென்னுந் திவ்யதேசத்தை யுடையவனே, நின் அடியேன் - நினது தாசனாகிய எனது, நெஞ்சகத்தாய் - மனத்தி னிடமானவனே, நீள் மறையின் - நெடிய வேதங்களினது, வேர் அகத்தாய் - மூலப்பொருளானவனே, வேதியற்கு - மார்க்கண்டேய முனிவருக்கு, மீண்டு - மறுபடியும், ஆலத்து இலை - வடபத்திரத்தில், சேர்ந்து - பொருந்தி, அழி-அழிந்த, உலகை - உலகத்தை, உள்புகுந்த காலத்தில்-(அம்மார்க்கண்டேயன்) உன் திருவுதரத்தின் உள்ளே பிரவேசித்தகாலத்தில், எவ்வகை - எந்தப்பிரகாரம், நீ காட்டினாய் - நீ தரிசனந்தந்தருளினாய்.

திருநீரகத்தாய் நீ வடபத்திர சாயியா யிருந்தகாலத்து உனக்குட்புகுந்த மார்க்கண்டேயருக்கு அழிந்த வுலகத்தை எங்ஙனம் காட்டினாய் என்பது கருத்து.

ஜெகதீசுவரர்.
நிலமங்கைவல்லிநாச்சியார்.
ஜெகதீச்வரவிமானம்.
அக்கிராயதீர்த்தம்.
கிழக்கேதிருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
அக்கிராயமகாமுனிக்குப் பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருநிலாத்திங்கட்டுண்டம்.

அ0. மீண்டுந் தெளியார்கண் மேதினியோர் நின்னடிப்பூ
பாண்டரங்க மாடி படர்சடைமேற் - றீண்டிச்
கலாத்திங்கட் டுண்டத்தின் மீதிருப்பக் கண்டும்
நிலாத்திங்கட் டுண்டத்தானே.

(இ-ள்.) நிலாத் திங்கட்டுண்டத்தானே - திருநிலாத்திங்கட்டுண்டமென்னுந் திவிய தேசத்தை யுடையவனே, நின் அடி - உன்னுடைய திருவடிகளில் (அருச்சுனனால் அருச்சிக்கப்பட்ட), பூ-மலர், பாண்டரங்கம் ஆடி - பாண்டரங்மென்னுங் கூத்தினை யாடிய ருத்திரனது, படர் - பரந்த, சடைமேல் - சடாபாரத்தின்மீது, தீண்டி-பொருந்தி, கலா - கலைகளையுடைய, திங்கள் துண்டத்தின் மீது-மூன்றும் பிறைச் சந்திரனுக்குமேல், இருப்ப - இருக்க, கண்டும் - பார்த்திருந்தும், மேதினியோர் - பூமியிலுள்ளவர்கள், மீண்டும் - மறுபடியும், தெளியார்கள் - நீயேபரம் என்பதைத் தெரிந்து கொள்ளார்கள்.

நிலாத்திங்கட்டுண்டத்தான்.
நேரொருவரில்லாவல்லித்தாயார்
புருஷசூக்தவிமானம்.
சந்திரபுஷ்கரணி.
மேற்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
சிவனுக்குப்பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருவூரகம்.

அக. நேசத்தா லன்றுலகை நீர்வார்க்க வைத்தளந்த
வாசத்தா ளென்றலைமேல் வைத்திலையே - நாசத்தால்
பாரகத்துளன்றி நான்பாழ்நரகில் வீழ்ந் தென்கொல்
ஊரகத்து ணின்றா யுரை.

(இ-ள்.) நேசத்தால் - அன்பினால், அன்று - வாமனாவதாரங் கொண்டகாலத்து, உலகை - உலகத்தை, நீர்வார்க்க-(மாவலி) தாரை நீர் வார்க்க, வைத்து அளந்த - வைத்து அளவிட்ட, வாசம்-பரிமளம் பொருந்திய, தாள் - பாதப்போதை, என் தலைமேல் - எனது சிரசின் மீது, வைத்திலையேல் - வைக்காமல் விடுவையாகில், நாசத்தால்-நாசத்தினால், பார் அகத்துள் அன்றி-பூமியில் வாழ்தலேயல்லாமல், நான் - யான், பாழ் - பாழாகிய, நரகில் - நரகத்திலும், வீழ்ந்தென் கொல் - விழுந்தால்தான் என்னை, ஊரகத்துள் - திருவூரகமென்னுந் திவ்ய தேசத்தில், நின்றாய் - நின்ற திருக்கோலங்கொண்டவனே, உரை - சொல்லுவாயாக. எ-று.

நீ உன்திருவடியை என்தலைமேல் வைத்திலையாயின் பூமியில் வாழ்தலும் நரகத்தில் வீழ்தலும் ஒன்றேயென்பது கருத்து. வாசத்தாள் என்றதனால் போது வருவிக்கப்பட்டது.

உலகளந்தபெருமாள்.
திருவிக்கிரமர்.
அமுதவல்லிநாச்சியார்.
சாரஸ்ரீகரவிமானம்.
நாகதீர்த்தம்.
மேற்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
ஆதிசேஷனுக்குப்பிரத்தியக்ஷம்.
திருமங்கை யாழ்வார் - திருமழி
சையாழ்வார் மங்களாசாஸனம்.

திருவெஃகா.

அஉ. உரைகலந்த நூலெல்லா மோதி யுணர்ந்தாலும்
பிரைகலந்த பால்போற் பிறிதாம் - தரையில்
திருவெஃகா மாயனுக்கே சீருறவாந் தங்கள்
உருவெஃகா வுள்ளத்தி னோர்க்கு.

(இ-ள்,) தரையில் - பூமியில், திருவெஃகா - திருவெஃகாவென்னுந் திவ்யதேசத்தி லெழுந்தருளிய, மாயனுக்கே - மாயனென்னுந் திருநாமத்தினை யுடையவனுக்கே, சீர் உறவாம் - சிறந்த சம்பந்தமாகிய, தங்கள் - தங்களது, உரு-ஆன்ம சொரூபத்தின் நிலைமையை, வெஃகா - விரும்பாத, உள்ளத்தினோர்க்கு-மனத்தை யுடையவருக்கு, உரைகலந்த-உரையோடு கூடிய, நூல் எல்லாம்-சாத்திரங்களை யெல்லாம், ஓதி-கற்று, உணர்ந்தாலும் - அறிந்தாலும், பிரைகலந்த - பிரை சேர்ந்த, பால்போல்-க்ஷீரத்தைப்போல, பிறிது ஆம்-வேறாகும். எ-று.

ஆன்மசொரூபத்தின் நிலைமையாவது அவனுக்கே அடிமையாயிருத்தல்.

யதோக்த்காரி.
சொன்னவண்ணஞ் செய்த பெருமாள்.
கோமளவல்லிநாச்சியார்.
வேதசாரவிமானம்.
பொய்கைபுஷ்கரணி.
மேற்கே திருமுகமண்டலம்.
புஜங்கசயனம்.
பொய்கையாழ்வாருக்கும் கணிகண்ணருக்கும் பிரத்தியக்ஷம்.
பொய்கையாழ்வார்-பேயாழ்வார் திருமழிசை யாழ்வார்-திருமங்கை யாழ்வார் மங்களாசாஸனம்.

திருக்காரகம்.

அங. ஒராதார் கல்வியுடையேங் குலமுடையேம்
ஆரா தனமுடையேம் யாமென்று - சீராயன்
பூங்கார கங்காணப் போதுவார் தாடலைமேல்
தாங்கா ரகங்காரத் தால்.

(இ-ள்.) (சிலர்) யாம்கல்வியுடையேம்-யாம் கல்வியுடையோம், யாம்குலமுடையேம்-யாம் உயர்ந்த குலமுடையோம், யாம் ஆராதனம் உடையேம்-யாம் திருவாராதனத்தை யுடையோம், என்று - என்று கருதி, சீர் - சிறந்த, ஆயன் - கோபால கிருஷ்ணரது, பூ - அழகிய, காரகம் - திருக்காரகமென்னுந் திவ்ய தேசத்தை, காண - தரிசிக்க, போதுவார் - போகின்ற தாசர்களது, தாள்-பாதங்களை, தலைமேல் -

சிரசின்மேல், அகங்காரத்தால்-மமதையினால், தாங்கார்-தாங்கமாட்டார்கள், ஓராதார் - (இவர்) அறியாதவரோ யாவர். எ-று.

கருணாகரப்பெருமாள்.	நின்றதிருக்கோலம்.
பத்மாமணிநாச்சியார்.	காரகரிஷிக்குப் பிரத்தியக்ஷம்
வாமனவிமானம்.	திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.
அக்கிராயதீர்த்தம்.	
தெற்கே திருமுகமண்டலம்.	

திருக்கார்வானம்.

அச. தாலேலோ வென்றாய்ச்சி தாலாட்டித் தன்முலைப்பா
லாலேயெவ் வாறுபசி யாற்றினண்முன்-மாலேபூங்
கார்வானத் துள்ளாய் கடலோடும் வெற்போடும்
பார்வான முண்டாய் நீபண்டு.

(இ-ள்.) மாலே - திருமாலே, பூ - அழகிய, கார்வானத்து உள்ளாய் - திருக்கார்வானமென்னுந் திவ்யதேசத்தி லிருக்கின்றவனே, கடலோடும் - சமுத்திரத்தோடும், வெற்போடும்-மலைகளோடும், பார்-பூமியையும், வானம் - ஆகாயத்தையும், பண்டு - பூர்வத்தில், நீ உண்டாய் - நீ உண்டருளினாய், (இப்படிப்பட்ட வுனக்கு) ஆய்ச்சி-யசோதையானவள், தாலேலோவென்று-தாலேலோவென்று, தாலாட்டி-தாலாட்டி, தன்முலைப்பாலாலே - தனது முலைப்பாலினால், பசி - பசியை, முன்-பண்டு, எவ்வாறு ஆற்றினள் - எவ்விதந்தணித்தாள், எ-று.

கள்வர்.	நின்றதிருக்கோலம்.
கமலவல்லிநாச்சியார்.	பார்வதிச்குப் பிரத்தியக்ஷம்.
பஷ்கலவிமானம்.	திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.
கௌரிதடாகம்.	
மேற்கே திருமுகமண்டலம்.	

திருக்கள்வனூர்.

அரு. பண்டேயுன் றொண்டாம் பழவுயிரை யென்னதென்று
கொண்டேனைக் கள்வனென்று கூறாதே-மண்டலத்தோர்
புள்வாய்பிளந்த புயலேயுனைக் கச்சிக்
கள்வாவென் றோதுவதென் கண்டு.

(இ-ள்.) மண்டலத்தோர் - பூமியிலுள்ளவர்கள், பண்டே-பூர்வமே, உன் - உனது, தொண்டு ஆம் - அடிமையாகிய, பழ உயிரை-பழைய ஆன்மாவை, என்னதென்று - என்னுடையதென்று, கொண்டேனை - கருதிய என்னை, கள்வன் என்று - திருடனென்று, கூறாது-சொல்லாமல், புள் - கொக்கினுருவங்கொண்டுவந்த பகாசுரனது, வாய் - வாயினை, பிளந்த-பிளவுசெய்த, புயலே - மேகவண்ணனே, உனை-உன்னை, கச்சி கள்வா என்று - காஞ்சிமண்டலத்தின் கண்

ணதாகிய திருக்கள்வனூரென்னுந் திவ்விய தேசத்தையுடையவனே யென்று, ஓதுவது-சொல்லுவது, என் கண்டு - எதனைப்பார்த்து. எ-று.

கச்சிக்கள்வா - காஞ்சியில் உள்ள திருடா என்பது சொல் நயம்.

ஆதிவராகப்பெருமாள்.
அஞ்சிலவல்லிநாச்சியார்.
வாமனவிமானம்.
நித்தியபுஷ்கரணி.
மேற்கே திருமுகமண்டலம்.
நின்ற திருக்கோலம்.
அஸ்வத்தநாராயணனுக்குப் பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருப்பவளவண்ணம்.

அசு. கண்டறிந்துங் கேட்டறிந்துந் தொட்டறிந்துங் காதலால்
உண்டறிந்து மோந்தறிந்து முய்யேனே-பண்டைத்
தவளவண்ணா கார்வண்ணா சாமவண்ணா கச்சிப்
பவளவண்ணா நின்பொற் பதம்.

(இ-ள்.) பண்டை - பழமையாகிய, தவளவண்ணா-வெண்ணிறமுடையவனே, கார்வண்ணா - மேகவண்ணனே, சாமவண்ணா-பச்சைவண்ணனே, கச்சி-காஞ்சிமண்டலத்தின் கண்ணதாகிய, பவளவண்ணா-திருப்பவளவண்ணமென்னுந் திவ்வியதேசத்தையுடையவனே, நின்-உனது, பொன் - அழகிய, பதம் - திருவடிகளை, கண்டு அறிந்தும் - தரிசித்துணர்ந்தும், கேட்டு அறிந்தும் - கேட்டுணர்ந்தும், தொட்டு அறிந்தும்-பரிசித்துணர்ந்தும், காதலால் - ஆசையினால், உண்டு அறிந்தும் - புசித்துணர்ந்தும், மோந்து அறிந்தும்-வாசனைபார்த்துணர்ந்தும், உய்யேன் - பிழைக்கமாட்டேன். ஏ-இதென்னவியப்பு. எ-று.

பவளவண்ணப்பெருமாள்.
பச்சைவண்ணர்.
பவளவல்லிநாச்சியார்.
பிரவாளவிமானம்.
சக்கிரதீர்த்தம்.
மேற்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
அசுவனிதேவதைகளுக்குப் பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருப்பரமேச்சுரவிண்ணகரம்.

அஎ. பதத்தமிழாற் றன்னையே பாடுவித்தென் னைத்தன்
பதத்தடியார்க் கேயாட் படுத்தா-னிதத்த
பரமேச் சுரவிண் ணகரான் பலவான்
வரமேச் சுர லணைந்த மால்.

(இ-ள்.) இதத்த - நன்மையினையுடைய, பரமேச்சுரவிண்ணகரான்-திருப்பரமேச்சுரவிண்ணகரமென்னுந் திவ்வியதேசத்தையுடையவனும், பல ஆன் - பலபசுக்கள், வர - வரும்படியாக, மேச்சு - மேய்த்து, உரல் - உரலில், அணைந்த - கட்டுண்டவனுமாகிய, மால்-திருமா

லானவர், பதம் தமிழால் - இன்பமாகிய தமிழினால், தன்னையே பாடு வித்து - தன்னையே பாடச்செய்து, என்னை - என்னை, தன் பதத்து- தன் பாதங்களுக்கு, அடியார்க்கே - தாசராகியவருக்கே, ஆட்படுத் தான் - தொண்டனாக்கினான், எ-று.

பரமபதநாதர்.
வைகுந்தவல்லிநாச்சியார்.
குமுதவிமானம்.
ஆயிரமதிதீர்த்தம்.
மேற்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
பல்லவராயனுக்குப் பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருப்புட்குழி.

அஅ. மால்வே ழமுமரவு மாயையும்வெற் புங்கடலும்
மேல்வீழ் படையும் விடமும்போய்ப்-பாலன்
நெருப்புட் குழிகுளிர நின்றதுங் கேட்டோதார்
திருப்புட் குழியமலன் சீர்.

(இ-ள்.) மால்-பெரிய, வேழமும் - யானையும், அரவும்-பாம்பும், மாயையும் - மாயாசக்தியும், வெற்பும் - மலையும், கடலும் - சமுத்திரமும், மேல்-மேலே, வீழ்-விழுந்த, படையும் - ஆயுதமும், விடமும் - விஷமும், போய் - நீங்கி, பாலன் - பிரகலாதாழ்வான், நெருப்பு குழியுள்-அக்கினிக்குண்டத்தில், குளிர நின்றதும்-குளிர இருந்ததையும், கேட்டு - கேள்வியுற்று, திருப்புட்குழி - திருப்புட்குழியென்னுந் திவ்வியதேசத்திலெழுந்தருளிய, அமலன் - பரிசுத்தனுடைய, சீர்-சீர்த்தியை, ஓதார் - சொல்லார்கள் (இது என்ன பாபம்). எ-று.

நெருப்புட்குழி என்பதை விகுதி பிரித்து நெருப்புக்குழியுள் எனக்கூட்டுக.

விஜயராகவப்பெருமாள்.
மரகதவல்லிநாச்சியார்.
விஜயகோடிவிமானம்.
ஜடாயுதீர்த்தம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
வீற்றிருந்ததிருக்கோலம்.
ஜடாயுவுக்குப் பிரத்தியக்ஷம்.
திருமங்கை யாழ்வார் மங்களாசாஸனம்.

திருநின்றவூர்.

அகூ. சீரறிந்து தோழிமீர் சென்றுகொ ணர்ந்தெனக்குப்
போரமுலை முகட்டிற் பூட்டுமினோ-நேரவுணர்
பொன்றவூர் புட்கழுத்திற் பொன்னைமா ணிக்கத்தை
நின்றவூர் நித்திலத்தை நீர்.

(இ-ள்.) தோழிமீர் - தோழிமார்களே, நீர்-நீங்கள், நேர்-(யுத்தத்தில்) எதிர்த்த, அவுணர் - இராக்கதர்கள், பொன்ற - அழிய, புள் கழுத்தில் - கருடாழ்வான்கழுத்தில், ஊர் - ஆரோகணித்துலாவும்,

பொன்னை - பொன்னை, மாணிக்கத்தை - மாணிக்கத்தை, நின்றவூர்-திருநின்றவூரென்னும் திவ்யதேசத்தி லெழுந்தருளிய, நித்திலத்தை-முத்தை, சீர் - சிறப்பினை, அறிந்து-தெரிந்து, சென்று - போய், கொணர்ந்து - கொண்டுவந்து, எனக்கு - எனக்கு, போர - மிகவும், முலைமுகட்டில் - தனங்களின் காம்பில், பூட்டுமின் - அணியுங்கள்.

தோழிமார்களே! நீங்கள் திருநின்றவூர் பொன்னையும் மாணிக்கத்தையும் முத்தையும் போன்ற எம்பெருமானை யான் அணையும்படி செய்வீராக என்பது கருத்து.

பக்தவச்சலர்.
பத்தராவிப்பெருமாள்.
எனைப்பெற்றதாயார்.
உத்பலவிமானம்.
வருணபுஷ்கரணி.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்ற திருக்கோலம்.
வருணனுக்குப்பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்ளாசாஸனம்.

திருவெவ்வுளூர்.

கூ0. நீர்மைகெட வைதாரு நின்னோ டெதிர்த்தாரும்
சீர்மைபெற நின்னடிக்கீழ்ச் சேர்கையா - னேர்மையிலா
வெவ்வுளத்த னேன்செய் பிழையைப் பொறுத்தருளி
எவ்வுளத்தனே நீ யிரங்கு.

(இ-ள்.) நீர்மை கெட - தன்மையழிய, வைதாரும் - வசினவர்களும், நின்னோடு - உன்னுடன், எதிர்த்தாரும் - மாறுகொண்டவர்களும், சீர்மைபெற - சிறப்பையடைய, நின் அடிக்கீழ்-உனது சரணங்களின் கீழ், சேர்கையால் - சேர்தலினால், நேர்மையிலா - ஒழுங்கில்லாத, வெவ் உளத்தனேன்-கொடிய சிந்தையையுடைய யான், செய் - புரிகின்ற, பிழையை - குற்றத்தை, பொறுத்து அருளி-க்ஷமித்தருளி, எவ்வுள் அத்தனே-திருவெவ்வுளூரென்னும் திவ்யதேசத்தையுடைய தந்தையே, நீ இரங்கு - நீ கிருபைசெய்வாயாக. எ-று.

நீர்மை கெடவைதார் சிசுபாலன்முதலியோர். எதிர்த்தோர் இராவணன் முதலியோர்.

வீரராகவப்பெருமாள்.
கனகவல்லித்தாயார்.
விஜயகோடிவிமானம்.
ஹிருத்தாபநாசதீர்த்தம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
புஜங்கசயனம்.
வீட்சாரணியம்.
சாலிகோத்திரருக்குப் பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருநீர்மலை.

கூக. இரங்கு முயிரனைத்து மின்னருளாற் காப்பான்
அரங்க னொருவனுமே யாதல் - கரங்களால்
போர்மலைவான் வந்த புகழ்வாணன் காட்டினான்
நீர்மலைவா ழெந்தையெதிர் நின்று.

(இ-ள்.) இரங்கும் - வருந்துகின்ற, உயிர் அனைத்தும் - எல்லா ஆன்மாக்களையும், இன் அருளால்-இனிய கிருபையினால், காப்பான்-காக்கின்றவன், அரங்கன் ஒருவனுமே - திருவரங்கநாதன் ஒருவனே, ஆதல் - ஆகியிருத்தலை, கரங்களால் - கைகளினால், போர்மலைவான் எந்த - போர்செய்யும்படி வந்த, புகழ் - கீர்த்தி வாய்ந்த, வாணன்-வாணாசுரன், நீர் மலை வாழ்-திருநீர்மலையென்னுந் திவ்யதேசத் தெழுந்தருளிய, எந்தை - என்தந்தையின், எதிர் நின்று-எதிரே நின்று, காட்டினான் - தெரிவித்தான். எ-று.

நீலமுகில்வண்ணர்.
அரங்கநாயகர்.
நீர்வண்ணர்.
அணிமாமலர்மங்கைநாச்சியார்.
தோதகிரிவிமானம்.
*ஸ்ரீநிவாசவிமானமென்றும் பெயர்.
மணிகர்ணிகதீர்த்தம்.
தெற்கே திருமுகமண்டலம்.
மாணிக்கசயனம்.
தொண்டைமான் சக்கரவர்த்திக்கும் பிருகுமார்க்கண்டருக்கும் பிரத்தியக்ஷம்.
பூதத்தாழ்வார்- திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருவிடவெந்தை.

௬௨. நின்று திரியும் பிறவியெல்லா நோவித்துக்
கொன்று திரியுங் கொடுவினையா-ரின்று
வெருவிடவெந் தைக்கே விழுமியதொண்டானேன்
திருவிடவெந் தைக்கே செறிந்து.

(இ - ள்.) திருவிடவெந்தைக்கே - திருவிடவெந்தையென்னுந் திவ்யதேசத்தில், செறிந்து - சேர்ந்து, நின்று திரியும் - அசரமும் சரமுமாகிய, பிறவி எல்லாம் - பிறப்புகளையெல்லாம், நோவித்து-நோரும்படி செய்தும், கொன்று - கொன்றும், திரியும் - திரிகின்ற, கொடுவினையார்-கொடிய தொழிலையுடையவராகிய பிரமனும் யமனும், இன்று - இப்போது, வெருவிட - பயப்படும்படியாக, எந்தைக்கே-என் தந்தைக்கே, விழுமிய-சிறந்த, தொண்டு ஆனேன் - அடிமையாயினேன். எ-று.

திருவிடவெந்தையைச் சேர்ந்து பிரமனும் இயமனும் பயப்பட எந்தைக்கே சிறந்த தொண்டனானேன் என்பது கருத்து. கொடுவினையார் என்பதற்குச் சிருஷ்டி கர்த்தாவாகிய பிரமனும் சங்கார கர்த்தாவாகிய ருத்திரனும் எனினுமாம்.

நித்தியகல்வியாணர்.
கோமளவல்லிநாச்சியார்.
கல்வியாணவிமானம்.
கல்வியாண தீர்த்தம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
மார்க்கண்டருக்குப் பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருக்கடன்மல்லை.

கூ௩. செறிந்த பணைபறித்துத் திண்களிற்றைச் சாடி-
முறிந்துவிழப் பாகனையு மோதி-யெறிந்து
தருக்கடன்மல்லைக் குமைத்தான் றஞ்சமென்று நெஞ்சே
திருக்கடன் மல்லைக்குட் டிரி.

(இ-ள்.) செறிந்த - நெருங்கிய, பணைபறித்து - கொம்பைமுறித்து, திண் - வலிய, களிற்றை - குவலயாபீடமென்னும் யானையை, சாடி-மோதி, பாகனையும் - மாவுத்தனையும், முறிந்துவிழ - முதுகுமுறிந்துவிழும்படி, மோதி - அடித்து, எறிந்து - தூக்கிவீசி, தருக்கு-இறுமாப்பையும், அடல்-பலத்தையுமுடைய, மல்லை - கரமுட்டர்கள் என்னும் மல்லர்களை, குமைத்தான் - அழித்தவனாகிய திருமாலே, தஞ்சம் என்று - சரணாகதியென்று, நெஞ்சே - மனமே, திருக்கடன்மல்லைக்குள் - திருக்கடன்மல்லையென்னுந் திவ்யதேசத்தில், திரி-சஞ்சரிப்பாயாக. எ-று.

நித்தியதலைச்சயனத்துறைவார்.
நிலமங்கைநாச்சியார்.
ககனாகிருதிவிமானம்.
கருடநதி.
கிழக்கேதிருமுகமண்டலம்.
புஜங்கசயனம்.
புண்டரீகரிஷிக்குப் பிரத்தியக்ஷம்.
பூதத்தாழ்வார்-திருமழிசையாழ்வார் மங்களாசாஸனம்.

திருவல்லிக்கேணி.

கூச. திரிந்துழலுஞ் சிந்தைதனைச் செவ்வே நிறுத்திப்
புரிந்து புகன்மின் புகன்றால்-மருந்தாங்
கருவல்லிக் கேணியா மாக்கதிக்குக் கண்ணன்
திருவல்லிக் கேணியான் சீர்.

(இ-ள்.) திரிந்து - விஷயங்களில் சஞ்சரித்து, உழலும்-சுழலுகின்ற, சிந்தைதனை - மனத்தை, செவ்வே நிறுத்தி-நேராக நிறுத்தி, கண்ணன் - கிருஷ்ணனாகிய, திருவல்லிக்கேணியான் - திருவல்லிக்கேணி யென்னுந் திவ்யதேசத்தையுடையவனுடைய, சீர்-கீர்த்தியை, புரிந்து - விரும்பி, புகல்மின்-சொல்லுங்கள், புகன்றால் - (அவ்வாறு) சொல்லினால், கரு வல்லிக்கு-கருவாகிய கொடிக்கு, மருந்தாம் - (நசிப்பிக்கும்) ஔஷதமாகும், மா - மகத்தாகிய, கதிக்கு - மோக்ஷத்திற்கு, ஏணியாம்-ஏணியுமாகும். எ-று. கரு வல்லி என்பதற்கு ஜனனமாகிய விலங்கு எனினுமமையும்.

ஸ்ரீபார்த்தசாரதிப்பெருமாள்.
ருக்குமணிப்பிராட்டி.
அரங்கநாதன்.
ஸ்ரீவேதவல்லித்தாயார்.
தெள்ளியசிங்கர்.
சக்கிரவர்த்தித்திருமகன்.
தேவராஜப்பெருமாள்.
சேடவிமானம்.
கைரவிணிபுஷ்கரணி.
கிழக்கேதிருமுகமண்டலம்.

நின்றதிருக்கோலம்.
பிருகுமகாரிஷிக்கும் தொண்டைமான் சக்கிரவர்த்திக்கும் அர்ச்சுனனுக்கும் பிரத்தியக்ஷம்.
பேயாழ்வார் - திருமழிசையாழ்வார்-திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருக்கடிகை.

௬௫. சீரருளா னம்மைத் திருத்திநா முன்னறியாக்
கூரறிவுந் தந்தடிமை கொண்டதற்கே-நேரோ
ஒருகடிகையும் மனமே யுள்ளுகிலாய் முத்தி
தருகடிகை மாயவனைத் தான்.

(இ-ள்.) மனமே-நெஞ்சமே, சீர் - சிறந்த, அருளால்-கிருபையினால், நம்மை - நம்மை, திருத்தி-செவ்வன்செய்து, நாம்-யாம், முன் அறியா - முன்னேதெரியாத, கூர் அறிவும் - நுண்ணிய விவேகமும், தந்து - கொடுத்து, அடிமை கொண்டதற்கு - தொண்டு செய்து கொண்டதற்கு, நேரோ - சரியாக, ஒருகடிகையும் - ஒரு நாழிகையும், முத்திதரு-மோக்ஷத்தைக்கொடுக்கும், கடிகை - திருக்கடிகையென்னுந் திவ்யதேசத்தெழுந்தருளிய, மாயவனை - மாயவனை, உள்ளுகிலாய் - நினைக்கமாட்டாய் (என்னே?) எ-று.

சோழசிங்கபுரம்.
யோகநரசிம்மர்.
அமுதவல்லிநாச்சியார்.
சிங்ககோஷ்டத்திவிமானம்.
அமுததீர்த்தம்.
கிழக்கேதிருமுகமண்டலம்.
வீற்றிருந்ததிருக்கோலம்.
சிறியதிருவடிக்குப்பிரத்தியக்ஷம்
அக்காரக்கனிப்பெருமாள்.
தக்கன்- தக்காகுளம்.
பேயாழ்வார் - திருமங்கையாழ்வார்-நம்மாழ்வார் மங்களாசாஸனம்.

தொண்டைநாடு முற்றிற்று.

வடநாட்டுத் திருப்பதிகள் - ௧௨.

திருவேங்கடம் (திருப்பதி.)

௬௬. தானே சரணமுமாய்த் தானே பலமுமாய்த்
தானே குறைமுடிக்குந் தன்மையான்-றேனேய்
திருவேங்கடந் தொழுதேந் தீயவிபூதிக்குள்
மருவேங்கடந்த னெமிவ் வாழ்வு.

(இ-ள்.) தானே சரணமுமாய் - தானே புகலிடமாகியும், தானே பலமுமாய் - தானே பிரயோசனமுமாகியும், தானேகுறை - தானே மனக்குறையை, முடிக்கும் - பூர்த்தியாக்குகின்ற, தன்மையான் - குணபூர்த்தியையுடையவனது, தேன் எய் - தேன் பொருந்திய, திருவேங்கடம் - திருவேங்கடமென்னுந் திவ்யதேசத்தை, தொழுதேம் - வணங்கினோம், தீய-கொடிய, விபூதிக்குள் - லீலாவிபூதிக்குள், மரு

வேம்-பொருந்தேம், இ வாழ்வு - இந்த வாழ்வை, கடந்தனெம் - கடந்தாம், எ-று.

தானே சரணமும் பலமுமாய்க் குறைகளைமுடிக்குங் குணபூர்த்தியையுடையவனது திருவேங்கடம் தொழுததனால் இப்பிரபஞ்ச வாழ்வைக் கடந்தோம் என்பது கருத்து.

திருவேங்கடத்தான்.
அலர்மேல்மங்கைத்தாயார்.
ஆனந்தநிலைவிமானம்.
சுவாமிபுஷ்கரணி.
கோனேரிதீர்த்தம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
தொண்டைமான் சக்கிரவர்த்திக்கும் ஆறுமுகனுக்கும் பிரத்தியக்ஷம்.
பொய்கையாழ்வார் - பூதத்தாழ்வார் பேயாழ்வார்-திருமழிசையாழ்வார் குலசேகராழ்வார் - பெரியாழ்வார் - திருப்பாணாழ்வார்-நம்மாழ்வார்-திருமங்கையாழ்வார்-ஆண்டாள் மங்களாசாஸனம்.

திருச்சிங்கவேள் குன்றம். (அகோபிலம்)

கஎ. வாழ்குமரன் மேற்கனக வஞ்சகன்மே லோர்முகத்தே
சூழ்கருணையும் முனிவுந் தோன்றியவால்-கேழ்கிளரும்
அங்கவேள் குன்ற வழல்சரபத் தைப்பிளந்த
சிங்கவேள் குன்றத்தி னார்க்கு.

(இ-ள்.) கேழ்-நிறம், கிளரும் - விளங்குகின்ற, அங்கம்-தேகத்தையுடைய, வேள் - மன்மதனனவன், குன்ற - நசிக்க, அழல்-கோபித்த, சரபத்தை - சரபப்பட்சியை, பிளந்த - போழ்ந்த, சிங்கவேள் குன்றத்தினார்க்கு - சிங்கவேள் குன்றமென்னுந் திவ்யதேசத்தையுடையவருக்கு, வாழ்-வாழ்வினையுடைய, குமரன்மேல்-பிரகலாதன் மீது, சூழ் - வளர்ந்த, கருணையும் - கிருபையும், கனக வஞ்சகன்மேல்-கபடனாகிய இரணியன்மீது, முனிவும் - கோபமும், ஓர் முகத்தே-ஒருமுகத்தினிடத்திலே, தோன்றிய-உதித்தன. எ-று. ஆல்-அசை.

திருச்சிங்கவேள் குன்றத்தினார்க்கு ஓர் முகத்திலேதானே கருணையும் கோபமும் முறையே பிரகலாதன்மீதும் இரணியன்மீதுந் தோன்றின என்பது கருத்து.

நரசிங்கப்பெருமாள்.
லட்சுமிநாச்சியார்.
குருகைவிமானம்.
இந்திரதீர்த்தம்.
நரசிங்கதீர்த்தம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
வீற்றிருந்ததிருக்கோலம்.
இரணியனைச் சங்கரித்துப் பிரகலாதனுக்கு அருள்செய்தஸ்வாமி.
நம்மாழ்வார்-திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருவயோத்தி.

கஅ. ஆர்க்குமிது நன்றுதீ தானாலு நெஞ்சேநீ
பார்க்கும் பலகலையும் பன்னாதே - சீர்க்குந்

திருவையோத்திப் புயலைச் சீரிய மெய்ஞ்ஞானத்
துருவையோத்திற் பொருளை யோர்.

(இ ள்.) ஆர்க்கும் - எவருக்கும், இது - யான் சொல்லுவது, நன்று நன்மை தருவதேயாகும், தீது ஆனாலும்-அது தீதென்று சொல்லுவார் உண்டென்றாலும், நெஞ்சே-மனமே, நீ - நீ, பார்க்கும் - பார்க்கின்ற, பலகலையும் - பல சாஸ்திரங்களையும், பன்னாதே - தேராமல், சீர்க்கும்-சிறப்பினையுடைய, திரு அயோத்தி-திருவயோத்தியென்னுந் திவ்வியதேசத் தெழுந்தருளிய, புயலை-மேகவண்ணனை, சீரிய-சிறந்த, மெய்ஞானத்து உருவை-சத்தியஞான சொரூபியை, ஓத்தின்-வேதத்தின், பொருளை-அருத்த மானவனை, ஓர் - அறிவாயாக. எ-று.

நெஞ்சே ! நீ திருவயோத்தியிலெழுந்தருளிய ஞான சொரூபனை அறிவாயாக அவ்வாறு செய்யாமற் பல கலைகளையும் பன்னினால் பயனில்லை என்பது கருத்து.

சக்கிரவர்த்தித்திருமகன்,
ரகுநாயகன்.
சீதாபிராட்டியார்.
புஷ்கலவிமானம்.
பரமபதசத்திபுஷ்கரணி.
சரயுநதி.
வடக்கே திருமுகமண்டலம்.
வீற்றிருந்ததிருக்கோலம்.
ஸ்ரீபரதாழ்வானுக்கும் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பிரத்தியக்ஷம்.
நம்மாழ்வார் - குலசேகராழ்வார்- பெரியாழ்வார்-திருமங்கை யாழ்வார் மங்களாசாஸனம்.

திருநைமிசாரணியம்.

கசு. ஓரறிவு மில்லாத வென்போல்வார்க் குய்யலாம்
பேரறிவுண்டேனும் பிறர்க்கரிது - பாரறிய
நைம்மிசா ரண்ணியத்து நாதரடி யாரோடும்
இம்மிசார் வுண்டாயி னால்.

(இ-ள்.) பார் அறிய - உலகத்தாரறியும்படி, நைமிசாரண்ணியத்து - திருநைமிசாரணியமென்னுந் திவ்ய தேசத்திலெழுந்தருளிய, நாதர் - சுவாமியின், அடியாரோடும் - பாகவதர்களோடும், இம்மிசார்வு - ஓர் இம்மிகாலம் சார்தல், உண்டாயினால் - உள்ளதாயினால், ஓர் அறிவும் இல்லாத - ஓர் அறிவுமில்லாத, என்போல்வார்க்கு - என்னை ஒத்தவர்க்கும், உய்யல் ஆம் - பிழைக்கலாகும், பிறர்க்கு - (அச்சாரில்லாத) பிறர்க்கு, பேர் அறிவு - மிக்க அறிவு, உண்டேனும் - உள்ளதேயாயினும், அரிது - (உச்சீவத்தல்) அருமையாகும்.

திருநைமி சாரணியத்தெழுந்தருளிய சுவாமியின் அடியாரோடு சிறிதுபோது நட்பானோரும் உச்சீவிப்பர் என்பது கருத்து.

தேவராஜன்.
ஸ்ரீஹரிலட்சுமி.
ஸ்ரீஹரிவிமானம்.
திவ்வியகாந்ததீர்த்தம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
தேவரிஷிகளுக்கும் - இந்திராதிகளுக்கும் சுதருமனுக்கும் பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருச்சாளக் கிராமம்.

கoo. உண்டா முறைமை யுணர்ந்தடிமைப் பேர்பூண்டேன்
பண்டாங்குடிகுலத்தாற் பன்மதத்தாற் - கொண்டாட்டால்
ஆளக் கிராமத்தா லல்லற்பேர் பூணுமல்
சாளக் கிராமத்தார் தாட்கு.

(இ-ள்.) பண்டு ஆம் - பூர்வீகமாகிய, குடி - கோத்திரத்தினுலும், குலத்தால் - குலத்தினுலும், பல் - பலவாகிய, மதத்தால் - மதக்கோட்பாடுகளாலும், கொண்டாட்டால் - சந்தோஷத்தினுலும், ஆள்-ஆளாநின்ற, அ கிராமத்தால் - அந்தக் கிராம சுதந்தரத்தினுலும், அல்லல் - துன்பத்தைக்கொடுக்கும் (கெட்ட, பேர் - பெயரை, பூணுமல்-தரியாமல், சாளக்கிராமத்தார் - திருச்சாளக் கிராமமென்னுந் திவ்யதேசத்தெழுந்தருளியவருடைய, தாட்கு-திருவடிகளுக்கு, உண்டாம்-உள்ளதாகிய, முறைமை-நாம் அடிமையென்னுங் கிரமத்தை, உணர்ந்து தெரிந்து, அடிமைபேர்-தாசியனென்னும் பெயரை, பூண்டேன்-வகித்துக்கொண்டேன். எ-று.

ஸ்ரீமூர்த்திப்பெருமாள்.
ஸ்ரீதேவிநாச்சியார்.
ககனவிமானம்.
சக்கிரதீர்த்தம்.
கண்டகிநதி.
வடக்கேதிருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
கண்டகி என்கிற வேசிக்கும் பிரமருத்திராதிகளுக்கும் - பிரத்தியக்ஷம்.
பெரியாழ்வார் - திருமங்கையாழ்வார் - மங்களாசாஸனம்.

திருவதரியாச்சிரமம்.

கoக. தாட்கடிமையென்று தமையுணரார்க் கெட்டெழுத்தும்
கேட்கவெளி யிட்டருளுங் கேசவனை - வேட்கையோடு
போவதரிதானுலும் போய்த்தொழுவோ நெஞ்சமே
மாவதரி யாச்சிர மத்து.

(இ-ள்.) நெஞ்சமே-மனமே, தாட்கு-திருவடிகளுக்கு, தமை-தம்மை, அடிமையென்று - தொழும்பென்று, உணரார்க்கு-அறியாதவர்களுக்கு, எட்டு எழுத்தும் - திரு அஷ்டாட்சரமும், கேட்க-செவிப்புலனும்படி, வெளியிட்டருளும் - வெளியிட்டருளிய, கேசவனை - கேசவனென்னுந் திருநாமத்தையுடையனை, போவது - அரிது ஆனுலும் - செல்லுதல் (மார்க்கம்) அருமையாயிருந்தபோதிலும், மாவதரி

யாச்சிரமத்து - பெருமைபொருந்திய திருவதரியாச்சிரம மென்னுந் திவ்ய தேசத்தில், வேட்கையோடு - ஆசையுடன், போய் - சென்று, தொழுவோம் - வணங்குவோம், எ-று. இத்திவ்யதேசம் காட்டுப்பிர தேசமாகையால் "போவதரிதானுலும்" என்ருர்.

பரமநாராயணன்.
அரவிந்தவல்லி.
தத்துவகாஞ்சனவிமானம்.
தத்துவகுண்டதீர்த்தம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
வீற்றிருந்த திருக்கோலம்.
இலந்தைமரத்தின்கீழ் பத்மாசன ஞகி ஞானமுத்திரைதரித்து ஜெபசீலரான தபசியாய் நர னுக்கு மந்திரோபதேசஞ்செ ய்தவர்.
பெரியாழ்வார்-திருமங்கை யாழ் வார்-மங்களாசாஸனம்.

திருக்கங்கைக்கரைக்கண்டம்.

௬0உ. மத்தாற் கடல்கடைந்து வானோர்க் கமுதளித்த
வத்தா வெனக்குன் னடிப்போதிற் - புத்தமுதைக்
கங்கைக் கரைசேருங் கண்டத்தாய் புண்டரிக
மங்கைக் கரைசே வழங்கு.

(இ-ள்.) கங்கைக்கரைசேரும் கண்டத்தாய் - திருக்கங்கைக் கரைக்கண்டமென்னுந் தேசத்தையுடையவனே, புண்டரிகம் - தா மரையில் வசிக்கும், மங்கைக்கு - இலக்குமிக்கு, அரைசே - நாயகனே, மத்தால் - மந்தரமலையாகிய மத்தினுல், கடல் கடைந்து - திருப்பாற் கடலை மதித்து, வானோர்க்கு - தேவர்களுக்கு, அமுது அளித்த-அமு தைக் கொடுத்தருளிய, அத்தா - இறைவனே, எனக்கு - அடியேனு க்கு, உன் - உன்னுடைய, அடிப்போதின் - பாத மலரிலிருக்கும், புத்து அமுதை - புதிய அமுதத்தை, வழங்கு - கொடுப்பாயாக.

நீலமேகப்பெருமாள்.
புருஷோத்தமர்.
புண்டரீகவல்லிநாச்சியார்.
மங்களவிமானம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்ற திருக்கோலம்.
பாரத்துவாசமஹாரிஷிக்குப் பிர த்தியக்ஷம்.
பெரியாழ்வார் - திருமங்கையாழ் வார் மங்களாசாஸனம்.

திருப்பிருதி.

௬0௩. வழங்கு முயிரனைத்தும் வாரிவாய்ப்பெய்து
விழுங்குங் கவந்தன் விறற்ருேட் - கிழங்கைப்
பொருப்பிருதிக் குங்கிடந்தாற் போற்றுணித்து வீழ்த்தான்
திருப்பிருதிக் கென்னெஞ்சே செல்.

(இ-ள்.) வழங்கும் - இயங்குகின்ற, உயிர் அனைத்தும் - எல்லா வுயிரையும், வாரி - வாரியெடுத்து, வாய் பெய்து - வாய்க்குள் இட்டு, விழுங்கும் - விழுங்கிய, கவந்தன் - கவந்தனது, விறல் - வெற்றிபொ

ருந்திய, தோள் கிழங்கை - தோளின் அடியை, பொருப்பு - மலை, இருதிக்கும் - இரண்டு திக்கிலும், கிடந்தாற்போல் - கிடந்தது போல, துணித்து - துண்டமாக்கி, வீழ்த்தான் - விழச்செய்தவனது, திருப்பிருதிக்கு - திருப்பிருதி யென்னுந் திவ்ய தேசத்துக்கு, என் நெஞ்சே - என் மனமே, செல் - போவாயாக. எ-று.

ஸ்ரீபரமபுருஷர்.
பரிமளவல்லிநாச்சியார்.
கோவர்த்தன விமானம்.
இந்திரதீர்த்தம்.
கோவர்த்தனதீர்த்தம்.
மானசசரஸு.
கிழக்கேதிருமுகமண்டலம்.
புஜங்கசயனம்.
பார்வதிக்குப்பிரத்தியக்ஷம்.
திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம்.

திருவடமதுரை.

கഠச. செல்வ முயிருடம்பு சேர வுரித்தாக்கி
வல்வினையி னீங்கினோ மாந்தர்கா - டொல்லை
வடமதுரை யான்கழலே வாய்த்தஞ்ச மென்று
திடமதுரை செய்தான் றிறத்து.

(இ-ள்.) மாந்தர்காள் - மானிடர்களே, தொல்லை - பழமையாகிய, வடமதுரையான் - வடமதுரை யென்னுந் திவ்ய தேசத்தை யுடையவனது, கழலே - திருவடிகளே, வாய்த்த - பொருந்திய, தஞ்சம் என்று - சரண மென்று, திடமது - உறுதியை, உரை செய்தான் - சொல்லினவனது, திறத்து - விஷயத்தில், செல்வம் - பொருளும், உயிர் - ஆவியும், உடம்பு - உடலும், சேர - ஒருமிக்க, உரித்து ஆக்கி - உரிமையாக்கி, வல்வினையின் - கொடிய இருவினையினின்றும், நீங்கினோம் - நிவர்த்தியாயினோம். எ-று.

யாம் திருவட மதுரையான் கழலே தஞ்சமென்றுரைசெய்தவன்வசத்தில் உடல்பொருளாவி மூன்றையுந் தத்தஞ்செய்து வல்வினையினின்று நீங்கினோம் என்பது கருத்து.

கோவர்த்தனேசன்.
சத்தியபாமை.
கோவர்த்தனவிமானம்.
இந்திரதீர்த்தம்.
கோவர்த்தனதீர்த்தம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
இந்திராதிதேவர்களுக்குப் பிரத்தியக்ஷம்.
நம்மாழ்வார் - பெரியாழ்வார் - திருமங்கையாழ்வார் - ஆண்டாள் மங்களாசாஸனம்.

திருத்துவாரகை.

கഠரு. திறந்திறமாத் தாந்துய்க்குந் தீஞ்சுவையை நாடி
அறந்திறம்பிப் பாதகரோ ளாவர் - நறுந்துளவ [illegible]
மாதுவரை யோனே மனந்துணையாக் கொண்டென்னைக்
காதுவரையோ மெய் கலந்து.

(இ-ள்.) நறுந்துளவம்-வாசனையுள்ள துளசிமாலையையணிந்த, மா - பெருமை பொருந்திய, துவரையோனே - துவாரகாபுரியென்னுந் திவ்யதேசத்தையுடையவனே, திறம் திறம் ஆ - பலவகையாக, தாம் துய்க்கும் - தாம் அனுபவிக்கும், தீம் - மதுரமான, சுவைப - சுவையுள்ள பொருள்களை, நாடி-தேடி, அறம்-தருமத்தினின்றும், திறம்பி - தப்பி, பாதகர் - தீவினை யுடையவராகிய, ஓர் ஐவர் - பஞ்சேந்திரியங்கள், மனம் - எனது நெஞ்சத்தை, துணையாகக்கொண்டு - சகாயமாகக்கொண்டு, என்னை - என்னை, மெய் கலந்து - சரீரத்துட்சேர்ந்து, ஐயோ-அந்தோ, காதுவர்-வருத்துவார்கள். எ-று.

துவரையோனே! பஞ்சேந்திரியங்கள் என் சரீரத்துட் கலந்து மனத்தைத் துணையாகக்கொண்டு என்னை வருத்துவதற்கு ஐயோ யான் என் செய்வேன் என்பது கருத்து.

கல்லியாண நாராயணன்.
கல்லியாண நாச்சியார்.
அஷ்ட மஹிஷிகள்.
ஹேமகூடவிமானம்.
கோமதீர்த்தம்.
மேற்கே திருமுகமண்டலம்.
வீற்றிருந்ததிருக்கோலம்.
துரௌபதிக்குப் பிரத்தியக்ஷம்.
நம்மாழ்வார்-பெரியாழ்வார்-திருமங்கையாழ்வார் - ஆண்டாள் மங்களாசாஸனம்.

திருவாய்ப்பாடி (கோகுலம்.)

௧0௬. கலந் தமரரோடுங் கலைகண்டா ரோடும்
பொலிந்து திருநாட்டிருக்கப் போவீர் - மலிந்தபுகழ்
அண்டராய்ப்பாடி யமல ரடியாரடியார்
தொண்டராய்ப் பாடித் தொழும்.

(இ-ள்.) மலிந்த புகழ் - மிகுந்த கீர்த்தியுள்ள, அண்டர்-இடையர்களது, ஆய்ப்பாடி - திருவாய்ப்பாடி யென்னுந் திவ்யதேசத்தெழுந்தருளியிருக்கும், அமலர் - மலரகிதருடைய, அடியார் அடியார்-தொண்டருக்குத் தொண்டரது, தொண்டராய் - தாசராய், பாடி - பாடி, தொழும் - வணங்குங்கள், (அங்ஙனம் வணங்கினால்) அமரரோடும் - தேவர்களோடும், கலை கண்டாரோடும் - சாஸ்திரங்களைக் கண்டறிந்தவர்களோடும், கலந்து - சேர்ந்து, பொலிந்து - சிறந்து, திருநாடு - திருவைகுந்தத்து, இருக்கப்போவீர் - வீற்றிருக்க ஏகுவீர்கள். எ-று.

நவமோகனகிருஷ்ணர்.
ருக்குமணிப்பிராட்டியார்.
சத்தியபாமைநாச்சியார்.
ஹேமகூடவிமானம்,
யமுனாநதி.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
ஸ்ரீநந்தகோபனுக்குப் பிரத்தியக்ஷம்.
குலசேகராழ்வார் - பெரியாழ்வார்-திருமங்கையாழ்வார் - ஆண்டாள் மங்களாசாஸனம்.

திருப்பாற்கடல்.

கoஎ. தொழும்பாய நானல்ல சூதறிந்து கொண்டேன்
செழும்பா யலைமுத்தஞ் சிந்தி - முழங்கும்
திருப்பாற் கடலான்றாள் சேர்ந்தா ரடிசேர்ந்
திருப்பாற் கடலா மிடர்.

(உ-ள்.) செழு - செழுமையாகிய, பாய் அலை - மோதுகின்ற அலையானது, முத்தம் - முத்துகளை, சிந்தி - சிதறி, முழங்கும் - சத்திக்கும், திருப்பாற்கடலான் - திருப்பாற்கடலென்னுந் திவ்ய தேசத்தெழுந்தருளியிருப்பவனது, தாள்-திருவடிகளை, சேர்ந்தார் - அடைந்தவரது, அடிசேர்ந்து - திருப்பாதங்களைப் பொருந்தி, இருப்பாற்கு - இருப்பவனுக்கு, இடர்-துன்பங்களை, அடல் ஆம் - நசிப்பித்தல் முடியும் (என்கின்ற), நல்லசூது - நல்ல உளவை, தொழும்பாய நான்-(உன்) அடிமையாகிய யான், அறிந்து கொண்டேன் - தெரிந்து கொண்டேன். எ-று.

க்ஷீராப்திநாதன்.
வியூகமூர்த்தி.
கடல்மகள்நாச்சியார்.
அஷ்டாங்கவிமானம்.
அமுததீர்த்தம்.
தெற்கேதிருமுகமண்டலம்.
புஜங்கசயனம்.
பிரமருத்திராதிகளுக்குப் பிரத்தி[யக்ஷம்.

பொய்கையாழ்வார்-பூதத்தாழ்வார்-பேயாழ்வார்-திருமழிசையாழ்வார்-நம்மாழ்வார்-குலசேகராழ்வார்-பெரியாழ்வார்-தொண்டரடிப்பொடியாழ்வார்-திருமங்கையாழ்வார்-ஆண்டாள் மங்களாசாஸனம்.

வடநாடு முற்றிற்று.

திருநாட்டுத்திருப்பதி - க.

திருவைகுந்தம் (பரமபதம்.)

கoஅ. இடருடையேன் சொல்ல வெளிதோ பிரமன்
அடரும்விடை யோற்கு மரிதே - தொடரும்
கருவைகுந் தம்பிறவிக் கட்டறுத்து மீளாத்
திருவைகுந்தம் பெறுவார் சீர்.

(இ-ள்.) தொடரும் - தொடர்ந்து வருகின்ற, கருவைகும் - தாய்க்கருவினிடத்துப் பொருந்தும், தம் பிறவி - தமது ஜனனத்தினது, கட்டு அறுத்து - தளையைச் சேதித்து, மீளா - திரும்பாத, திருவைகுந்தம் - திருவைகுந்தத்தை, பெறுவார்-அடையப்பெறுவாரது, சீர் - சிறப்பை, பிரமன் - பிரமனுக்கும், அடரும் விடையோற்கும்-போர்புரியும் ரிடபத்தையுடைய உருத்திரனுக்கும், அரிது -சொல்ல முடியாதாயின், இடர் உடையேன் - துன்பத்தையுடையவனாகிய யான், சொல்ல - புகல, எளிதோ - இலேசோ.

பரமபதநாதன்.
பரவாசுதேவன்.
ஸ்ரீவைகுண்டநாதன்.
பெரியபிராட்டி.
அனந்தாங்கவிமானம்.
விரஜாநதி.
அயிரம் ரதபுஷ்கரணி.
சோமசவனம்.
கூ-விளவிருக்ஷம்.
தெற்கே திருமுகமண்டலம்
வீற்றிருந்ததிருக்கோலம்.
அனந்தகருடவிஷ்வக்சேனர் முதலிய நித்திய சூரிகளுக்கும் முத்தர்களுக்கும்பிரத்தியக்ஷம்
பொய்கையாழ்வார் - பூதத்தாழ்வார்-பேயாழ்வார்-திருமழிசையாழ்வார்-நம்மாழ்வார்-குலசேகராழ்வார் - பெரியாழ்வார்-தொண்டரடிப்பொடியாழ்வார்-திருப்பாணாழ்வார்-திருமங்கையாழ்வார்-ஆண்டாள்மங்களாசாஸனம்

திருநாடு முற்றிற்று.

மண்ணி லரங்கமுதல் வைகுந்த நாடளவும்
எண்ணு திருப்பதிநூற் றெட்டினையு - நண்ணுவார்
கற்பார் துதிப்பார் கருதுவார் கேட்டிருப்பார்
பொற்பாத மென்றலைமேற் பூ.

பதின்மருரைத்த பதியொருநூற் றெட்டும்
துதிசெய்ய வந்தாதி சொன்ன - னதிக
குணவாள பட்டரிரு கோகனகத் தாள்சேர்
மணவாள தாசன் வகுத்து.

நூற்றெட்டுத்திருப்பதி யந்தாதி யுரை முற்றிற்று.

புராணவ்ஸ்தலங்கள் - கூ.

க. திருநாராயணபுரம்.

திருநாராயணப்பெருமாள்.
செல்வப்பிள்ளைராயர்.
யாதவநாராயணப்பெருமாள்.
எதுகிரிநாச்சியார்.
எதுகிரி - எதிகிரி - யாதவகிரி.
ஆனந்தநிலைவிமானம்.
திருக்கல்யாண தீர்த்தம்.
வைகுந்ததீர்த்தம்.
பராசரதீர்த்தம்.
மயித்திரேரா தீர்த்தம்.
தனுஷ்கோடி தீர்த்தம்.
யாதவதீர்த்தம்.
லோகபாவனதீர்த்தம்.
பாண்டவதீர்த்தம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
கருடனுக்கு வயிரமுடி நிமித்தியமாகப் பிரத்திக்ஷம்.

உ. ஸ்ரீமுஷ்டம்.

ஆதிவராகப்பெருமாள்.
அம்புஜவல்லிநாச்சியார்.
வாமனவிமானம்.
நித்தியபுஷ்கரணிதீர்த்தம்.
மேற்கே திருமுகமண்டலம்
நின்றதிருக்கோலம்.
அஸ்வத்தநாராயணனுக்குப் பிரதியக்ஷம்.

ங. திருபிருந்தாவனம்.

பிருந்தாவனம்.
ராதாவல்லபன்.
ராதாதேவி.
வஸ்திர பஹாரதீர்த்தம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கொலம்.
ராதாதேவிக்குப் பிரத்தியக்ஷம்.

௪. பாபநாசம்.

பாபவிநாசப்பெருமாள்.
பங்கயவல்லிநாச்சியார்.
பாபவிமோசனவிமானம்.
புண்டரீகபுஷ்கரணி.
கிழக்கேதிருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
ஜெயங்கொண்ட சோழனுக்குப் பிரத்தியக்ஷம்.

ருக்குமணிதீர்த்தம்.
கஜேந்திரதீர்த்தம்.
க்ஷீரசாகரதீர்த்தம்.
கோபிரளயதீர்த்தம்.
கோபிநாததீர்த்தம்.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்ற திருக்கோலம்.
கோபிலகோ பிரளயமகாமுனிக்குப் பிரத்தியக்ஷம்.

ரு. இராஜமன்னார்கோயில்

இராஜகோபாலர்.
செங்கமலவல்லிநாச்சியார்.
ஸ்வயம்புவிமானம்.
அரித்திராநதிபுஷ்கரணி.
சங்குதீர்த்தம்.
சக்கிரதீர்த்தம்.
கிருஷ்ணதீர்த்தம்.

௬. ஸ்ரீ பெரும்பூதூர் பூதபுரி.

ஆதிகேசவப்பெருமாள்.
எதிராஜவல்லித்தாயார்.
இராமானுஜபுஷ்கரணி.
கிழக்கே திருமுகமண்டலம்.
நின்றதிருக்கோலம்.
ஆசூர் கேசவாசாரியருக்கும் எதிராஜருக்கும் பிரத்தியக்ஷம்.

புராணஸ்தலங்கள் முற்றிற்று.

ஆழ்வாராசாரியர்கள் திருநக்ஷத்திரமுதலியவைகளின் விவரம்.

பொய்கையாழ்வார்.

அவதரித்தவிடம் - கச்சித்திருவெஃகாவில் பொய்கை புஷ்கரணியில் பொற்றாமரைமலர். அவதரித்தகாலம் துவாபரயுகம் அ,௬௨,௯0௨ ஆன சித்தார்த்ரி௵ ஐப்பசி௴ சுக்கிலபட்சம் அஷ்டமி செவ்வாய்க்கிழமை கூடின திருவோணநக்ஷத்திரம். பாஞ்சஜன்யாம்சம் - அயோநிஜர்-செய்தருளிய பிரபந்தம் - முதற்றிருவந்தாதி-௧00-பாசுரம்.

பூதத்தாழ்வார்.

அவதரித்தவிடம்-திருக்கடன்மல்லையில் குருக்கத்திமலர். அவதரித்தகாலம் - துவாபரயுகம் - அ,௬௨,௯0௨ - ஆன சித்தாத்திரி௵ ஐப்பசி௴ சுக்லபக்ஷம் நவமி புதன்கிழமை கூடின அவிட்டநக்ஷத்திரம். ஸ்ரீகதாம்சம்-அயோநிஜர் - செய்தருளிய பிரபந்தம்-இரண்டாந்திருவந்தாதி-௧00-பாசுரம்.

பேயாழ்வார்.

அவதரித்தவிடம் - திருமயிலையில் மாதவப்பெருமாள் சந்நிதிக்கடுத்த திருக்கிணற்றில் செவ்வல்லிமலர். அவதரித்தகாலம் துவா

பரயுகம் அ,சுஉ,கூ0உ-ஆன சித்தாத்திரிஸ்ரீ ஐப்பசிமீ சுக்லபக்ஷம் தசமி வியாழக்கிழமை கூடின சதயநக்ஷத்திரம். ஸ்ரீநந்தகாம்சம்-அயோநிஜர் - செய்தருளிய பிரபந்தம் மூன்றாந் திருவந்தாதி - க00-பாசுரம்.

திருமழிசையாழ்வார்.

அவதாரஸ்தலம் - திருமழிசை - தந்தைதாயர்-பார்க்கவர் - கனகாவதி - அவதரித்தகாலம் - துவாபரயுகம் - அ,கூஉ,கூ0உ - ஆன சித்தாத்திரிஸ்ரீ தைமீ கிருஷ்ணபக்ஷம் - பிரதமை ஞாயிற்றுக்கிழமை கூடின மகநக்ஷத்திரம்-சக்கராம்சம். செய்தருளிய பிரபந்தம்-திருச்சந்தவிருத்தம் - கஉ0-நான்முகன் திருவந்தாதி கூசு-பாசுரம்.

மதுரகவியாழ்வார்.

அவதாரஸ்தலம் - திருக்கோளூர். அவதரித்தகாலம் துவாபரயுகம் அ,சுங,அஎஅ ஆன ஈச்வரஸ்ரீ சித்திரைமீ சுக்லபக்ஷம் வெள்ளிக்கிழமை கூடின சித்திரை நக்ஷத்திரம் - ஸ்ரீவைநதேயாம்சம். செய்தருளியபிரபந்தம்-கண்ணிநுண்சிறுத்தாம்பு-கக-பாசுரம்.

திருப்புளியாழ்வார்.

அவதரித்தஸ்தலம் - திருக்குருகூர். அவதரித்தகாலம் - துவாபரயுகம் அ,சுங,அஎஅ - ஆன ஈச்வரஸ்ரீ ஆனிமீ மூலநக்ஷத்திரம்-ஆதிசேஷாம்சம்.

நம்மாழ்வார்.

அவதாரஸ்தலம்-திருக்குருகூர். தந்தைதாயர்-காரியார்-உடையநங்கை - அவதரித்தகாலம் - கலியுகம்பிறந்த - சங-ம் நாளான பிரமாதிஸ்ரீ வைகாசிமீ பௌர்ணமி வெள்ளிக்கிழமை கூடின விசாகநக்ஷத்திரம்-பகவதம்சம் - ஸேநேஸாம்ஸம் - கவுஸ்துவாம்சம்-செய்தருளிய பிரபந்தம் - திருவிருத்தம்-க00 - திருவாசிரியம் - எ-பெரிய திருவந்தாதி - அஎ - திருவாய்மொழி - கக0உ-பாசுரம்.

குலசேகராழ்வார்.

அவதாரஸ்தலம் - கொல்லிநகர். தந்தையார்-சந்திரகுலத்தரசனாகிய திடவிரதன்-அவதரித்தகாலம் கலியுகம்-உஅ-ஆன பராபவஸ்ரீ மாசிமீ சுக்லபக்ஷம் துவாதசி வியாழக்கிழமை புனர்பூசநக்ஷத்திரம் கௌஸ்துவாம்சம்-செய்தருளிய பிரபந்தம் பெருமாள் திருமொழி க0ரு-பாசுரம்.

பெரியாழ்வார்.

அவதாரஸ்தலம் ஸ்ரீவில்லிபுத்தூர். தாய்தந்தையர் - பதுமையார் - முகுந்தாசாரியர் - அவதரித்தகாலம் - கலியுகம் - சஎ - ஆன குரோதனஸ்ரீ ஆனிமீ சுக்லபக்ஷம் ஏகாதசி ஞாயிற்றுக்கிழமை

கூடின சுவாதிநக்ஷத்திரம். ஸ்ரீவைனதேயாம்சம். செய்தருளிய பிரபந்தம்-திருப்பல்லாண்டு-யஉ-பாசுரம்-திருமொழி-சசுக-பாசுரம்.

சூடிக்கொடுத்த நாச்சியார்.

அவதரித்தவிடம் - ஸ்ரீவில்லிபுத்தூரில் நந்தவனத்தில் துளசி மலர் - வளர்த்ததந்தையார் - பெரியாழ்வார் - அவதாரகாலம் - கலி-கூஎ-ஆன நளஸூ ஆடிமீ சுக்லபக்ஷம் சதுர்த்தி செவ்வாய்க்கிழமை கூடின பூரநக்ஷத்திரம் - பூப்பிராட்டியாரம்சம் - அயோநிஜர் செய்தருளியபிரபந்தம் - திருப்பாவை - ங௰ - திருமொழி-கசஙு-பாசுரம்

திருமங்கையாழ்வார்.

அவதாரஸ்தலம் - குறையிலூர். தந்தையார் - நீலனென்பவர். அவதரித்தகாலம்-கலியுகம்-கறுஎ-ஆன நளஸூ கார்த்திகைமீ வியாழக்கிழமை கூடின கிருத்திகாநக்ஷத்திரம்-சார்ங்காம்சம். செய்தருளியபிரபந்தம் - பெரியதிருமொழி க0அச - திருக்குறுந்தாண்டகம் உ௰ - திருநெடுந்தாண்டகம் ங௰ - திருவெழுகூற்றிருக்கை-சிறியதிருமடல் - பெரியதிருமடல் - இம்மூன்றில் - உஉஎ - பாசுரம்.

தொண்டரடிப்பொடியாழ்வார்.

அவதாரஸ்தலம் - திருமண்டங்குடி. தந்தையர் ஸ்ரீவைஷ்வ சோழியர். அவதரித்தகாலம்-கலியுகம் - உஅகூ - ஆன பிரபவஸூ மார்கழிமீ கிருஷ்ணபக்ஷம் சதுர்த்தசி செவ்வாய்கிழமை கூடின கேட்டை நக்ஷத்திரம்-ஸ்ரீ வனமாலாம்சம் - செய்தருளியபிரபந்தம் திருமாலை - சரு பாசுரம். திருப்பள்ளியெழுச்சி க0 - பாசுரம்.

திருப்பாணாழ்வார்.

அவதரித்தவிடம் - திருவுறையூரில் செந்நெற்பயிர் - அவதாரகாலம் - கலியுகம் ௩சஉ-ஆன துன்மதிஸூ கார்த்திகைமீ கிருஷ்ணபக்ஷம் துவிதியை புதன்கிழமை கூடின ரோகிணிநக்ஷத்திரம். ஸ்ரீவத்ஸாம்சம். அயோநிஜர் - செய்தருளிய பிரபந்தம் - அமலனாதிப்பிரான் - க0 பாசுரம்.

எம்பெருமானார் (உடையவர்.)

அவதாரஸ்தலம் - ஸ்ரீ பெரும்பூதூர். தந்தைதாயர் - ஆசூர் கேசவப்பெருமாள் - காந்திமதியென்னும் பூப்பிராட்டியார் - அவதரித்தகாலம் - கலியுகம் - சககஅ - ஆன பிங்களஸூ சித்திரைமீ சப்தமி குருவாரம் திருவாதிரைநக்ஷத்திரம். பகவதம்சம் - ஸ்ரீ மகாலட்சுமி யம்சம், சேனைமுதலியம்சம் - பஞ்சாயுதாம்சம் - சேஷாம்ம். இவர் செய்தருளிய பிரபந்தங்கள் சுக - ஆம் பக்கத்திற்காண்க.

மணவாளமாமுனிகள்.

அவதாரஸ்தலம் - திருக்குருகூர். தந்தையார் ௭௪-சிம்மாசனபதிகளில் கோமடத்தாழ்வான் திருவம்சஸ்தரான திருநாவுடையபிரான்தாஸரண்ணர். அவதரித்தகாலம்-கலியுகம் - ௪௪௭௨ - ஆன சாதாரண ௵ ஐப்பசி௴ சுக்லபக்ஷம் சதுர்த்தி வியாழக்கிழமை கூடின மூலநக்ஷத்திரம் - சேஷாம்சம். இவர் செய்தருளிய பிரபந்தங்கள் ௭௧ - ஆம் பக்கத்திற்காண்க.

ஓ ரா ன் வ ழி ஆ சா ரி ய ர் க ள்
திருநக்ஷத்திரங்கள்.

பெரியபெருமாள் - இவர் திருநக்ஷத்திரம் - திருவோணம், பெரியபிராட்டியார் - இவர் திருநக்ஷத்திரம் பங்குனி உத்திரம், சேனைமுதலியார் ஐப்பசிமாசம் பூராடநக்ஷத்திரம், இவர் மனைவிகள்-சூத்திரவதியார்.

நம்மாழ்வார் - வைகாசி விசாகம் - இவர் பகவதம்சமுதலியன.

ஸ்ரீமந்நாதமுனிகள்-ஆனி அனுஷம்-இவர் சஜானனும்சம்-இவர் பிதா ஈச்வரபட்டாழ்வார் - குமாரர் ஈச்வரமுனிகள் - நிவாசம் வீரநாராயணபுரம்-செய்தருளிய பிரபந்தம் - ஸ்ரீ புருஷநிர்ணயம்-நியாயதத்தவம் - ஆசிரயித்தமுதலிகள் - உய்யக்கொண்டார் - குருகைகாவலப்பன் - நம்பிகருணாகரதாசர் - ஏறுதிருவுடையார் - திருக்கண்ணமங்கையாண்டான் - வானமாதேவியாண்டான் - உறப்புட்டூராச்சான்பிள்ளை-சொக்கத்தூராழ்வான்.

உய்யக்கொண்டார் - சித்திரைமாசம் கிர்த்திகை ஜெயச்சேனரம்சம் - ஆசிரயித்தமுதலிகள் மணற்கால் நம்பி-திருவல்லிக்கேணிப்பாண்பெருமாளரையர் - சொட்டைப்பூசிச் செண்டலங்காரதாசர்-ஸ்ரீ புண்டரீகதாசர்-உலகுபெருமாள்நங்கை.

மணற்கால்நம்பி - மாசிமகம்-குமுதாம்சம். ஆசிரயித்தமுதலிகள் ஸ்ரீ ஆளவந்தார் - தெய்வத்துக்கரசுநம்பி - சிறுபுள்ளூருடையார்-வங்கிப்புரத்தாய்ச்சி.

ஸ்ரீ ஆளவந்தார்-ஆடி உத்திராடம் - சிங்காதனும்சம்-செய்தருளிய பிரபந்தம் - ஆத்மசித்தி - ஸம்வித்சித்தி-ஈச்வரசித்தி-மோக்ஷசித்தி-ஆகமப்பிராமாணியம்-கீதார்த்த சங்கிரகம்-ஸ்தோத்திரரத்னம்-மாயாவாதகண்டனம். ஆசிரயித்தவர்கள் - பெரியநம்பி-பெரிய திருமலைநம்பி - சுமுகாம்சம். திருக்கச்சிநம்பி-சங்குகர்ணும்சம். திருமாலையாண்டான் - வாமனும்சம். திருவரங்கப்பெருமாளரையர் - மாறனேர்நம்பி - ஆளவந்தாழ்வான் - வானமாமலை யாண்டான் - தெய்வ

வாரியாண்டான்-ஈசனுண்டான் - திருக்குருகூரப்பன் - திருமோகூரப்பன் - திருமோகூர் நின்றான் - தெய்வப்பெருமாள் வகுளாபரண சோமயாஜி - திருக்குருகூர்தாசர் - திருமாலிருஞ்சோலைதாசர் - ஆட்கொண்டி அம்மங்கி.

பெரியநம்பிகள் மார்கழிகேட்டை குமுதாக்ஷாமசம் - இவர் பரியாயதிருநாமம் - மஹாபூரணர் - பராங்குசதாசர் - ஆசிரயித்த முதலிகள் - எம்பெருமானுர் - மலைகுனிய நின்றார் - சடகோபதாசர் - அணியரங்கத்தமுதனுர் - திருவாய்த்தலமுடையபட்டர்.

எம்பெருமானுர் - சித்திரைமாசம் - திருவாதிரை-சேஷாம்சம்-செய்தருளிய பிரபந்தம் - ஸ்ரீ பாஷ்யம் - கீதாபாஷ்யம் - வேதாந்த தீபம் - வேதாந்தசாரம்-வேதாந்தசங்கிரகம்-சரணுகதிகத்யம்-ஸ்ரீரங்க கத்யம்-ஸ்ரீ வைகுண்டகத்யம்-நித்யம். இவரை ஆசிரயித்தமுதலிகள் கூரத்தாழ்வான், முதலியாண்டான், எம்பார், எச-சிங்காசனுதிபதிகள் எoo-திரிதண்ட சந்நியாசிகள் கஉoo - ஏகாங்கிகள், ருoo-கோத்தியம்மைமார்கள் அளவிறந்த சாத்தின சாத்தாத ஸ்ரீ வைஷ்ணவர்கள்.

கூரத்தாழ்வார். தைமசம் அஸ்தம் - இவர் பிதா கூரத்தாழ்வாரென்கிற ஸோமயாஜி. இவர் ராமாம்சம் சங்காம்சம் ஸர்வநேத்திராம்சம் - இவர் பரியாயதிருநாமம் - திருமறுமார்பன் - ஸ்ரீ வத்ஸசின்னன் - நடையாடுபதஞ்சலி - சஞ்சாரிமகாபாஷ்யன் - எதிந்திரசரணன் - செய்தருளிப பிரபந்தம் - வரதராஜஸ்தவம் - சுந்தரபாகுஸ்தவம் - ஸ்ரீ வைகுண்டஸ்தவம் - ஸ்ரீ யஸ்தம்-அதிமானுஷஸ்தவம்.

முதலியாண்டான் சித்திரைமாசம் புனர்பூசம் - அவதாரஸ்தலம் பச்சைவாரணப்பெருமாள் கோயிலென்கிற புருஷமங்கலம் - இவர் தாயார்-உடையவருக்குத் தமக்கையான பூமிதேவியாண்டாள்-பிதா வாதூலகுலதிலகரான அனந்தநாராயணதீக்ஷிதர். இவர் பரியாய திருநாமம் தாசரதி - வாதுலதேசிகன் - ஸ்ரீ வைஷ்ணவதாசன்-இராமாநுஜபாதுகை - இவர் ராமாம்சம் சக்ராம்சம் பிரதிஷ்டாம்சம்.

திருவரங்கத்தமுதனுர் - பங்குனி அஸ்தம் - அவதாரஸ்தலம் மூங்கிற் குடி-செய்தருளிய பிரபந்தம்-உடையவர் விஷயமாய்ப் பிரபன்ன காயத்திரி என்கின்ற - இராமாநுஜ நூற்றந்தாதி.

அருளாளப்பெருமாளெம்பெருமானுர்-இவர்க்கு பூர்வசிராமத்தில் - சங்கரன் என்னும் யக்யமூர்த்தி என்றுபெயர். செய்தருளிய பிரபந்தம் ஞானசாரம்-பிரமேயசாரம். இவர் சிஷ்யர்கள்-அனந்தாழ்வார் - எச்சான்-கொண்டத்தூர் நம்பி-மருதூர்நம்பி

திருக்குருகைப்பிரான் பிள்ளான் செய்தருளிய பிரபந்தம் திருவாய்மொழிக்கு ஆறாயிரப்படி.

எம்பார் தைமாசம் புனர்பூசநக்ஷத்திரம் நிவாசம் மதுரமங்கலம் இவர்பிதா கமலநயனபட்டர் தாயார் பெரியபிராட்டியார் - இவர் பரியாயதிருநாமம் கோவிந்தர் ஆசிரயித்தமுதலிகள் ஸ்ரீ பராசரபட்டர் - முதல் அனேகர்.

பட்டர் வைகாசி அனுஷம் ஸ்ரீரங்கநாதாம்சம் - செய்தருளிய பிரபந்தம் சகத்திரநாம பாஷ்யம்-அஷ்டஸ்லோகி என்கின்ற மந்திர வியாக்யானம்-தத்வரத்னாகரம் - பிரணவவிவரணம் - ஸ்ரீ குணரத்னகோசம் - ஸ்ரீ ரங்கதாசத்வம் - கிரியாதீபம் - தத்வத்ரயஸ்லோகம்- ஆசிரயித்த முதலிகள் - நஞ்சீயர் முதலானோர்.

நஞ்சீயர் பங்குனி உத்திரம் - இவர் திருநாமம் வேதாந்தவேதியர்-மாதவாசார்யர் - ஷடாசனபதி - செய்தருளிய பிரபந்தம் திருவாய்மொழிக்கு ஒன்பதினாயிரப்படி - திருப்பாவை வியாக்யானம்- கண்ணிநுண் சிறுத்தாம்பு வியாக்யானம் - ஸ்ரீ சூக்திபாஷ்யம் ஆசிரயித்தவர்கள் - நம்பிள்ளைமுதலானோர்.

நம்பிள்ளை கார்த்திகைமாசம் கிர்த்திகை அவதாரஸ்தலம் திருக்காவேரி தீரத்தில் நம்பூர் என்னுங் கிராமம். இவர் திருநாமம் வரதராஜன் - திருக்கலிகன்றிதாசர் - கலிவைரிதாசர் - லோகாசாரியார்- ஸ்ரீ சூக்திசாகரர். செய்தருளிய பிரபந்தம் நம்பிள்ளைரஹஸியம். திருவிருத்தவியாக்யானம். இவரை ஆசிரயித்தவர்கள் வடக்குத் திருவீதிப்பிள்ளை முதலியோர்.

பெரியவாச்சான்பிள்ளை ஆவணிமாசம் ரோகிணி. இவர் திருநாமம் கிருஷ்ணபாதன்-செய்தருளிய பிரபந்தம் திருவாய்மொழிக்கு இருபத்து நாலாயிரப்படி வியாக்யானம்-மற்றும் இருபத்து மூன்று பிரபந்தங்களுக்கு வியாக்யானம் - ரஹஸ்யமுதலான மந்திரவியாக்யானம். இவர் சிஷ்யர் நாப்பில்பிள்ளை. இவர்களன்றியும் நம்பிள்ளை திருவடியிலாசிரயித்தவர் - ஈயுண்ணிமாதவப்பெருமாள்.

வடக்குத்திருவீதிப்பிள்ளை - ஆனிமாசம் சுவாதிநக்ஷத்திரம். செய்தருளிய பிரபந்தம் ஈடு முப்பத்தாறாயிரப்படி-ஆசாரியசம்மதி- ஆசிரயித்தவர்கள் பிள்ளை லோகாசாரியர் - அழகிய மணவாளப்பெருமாள் நயினார், இவர் செய்த பிரபந்தம் ஆசாரிய இருதயம்.

பிள்ளைலோகாசாரியர் ஐப்பசி திருவோணம் - செய்தருளிய பிரபந்தம் முமுக்ஷுப்படி - தத்வத்ரயம்-ஸாரஸங்க்ரஹம் - ஸ்ரீவசன பூஷணம் முதலிய கஅ - ரகசியங்கள். ஆசிரயித்தவர்கள் கூர

குலோத்தமதாசர் - மணப்பாக்கத்து நம்பியார் - கொல்லிக்காவல் தாஸர்-கோடியிலண்ணர்-திருவாய்மொழிப்பிள்ளை. இவரது திருத்தாயார் விளாஞ்சோலைப்பிள்ளை. இவர் செய்தது சப்தகாதை.

திருவாய்மொழிப்பிள்ளை - வைகாசி விசாகம். அவதரித்த ஸ்தலம்-குசதி நகரம். இவர் திருநாமம் திருமலையாழ்வார்-சடகோப தாசர் - ஸ்ரீசைலேசர் - காடுவெட்டியையன் - செய்தருளிய பிரபந்தம் - பெரியாழ்வார் திருமொழிவியாக்யானம். ஸ்ரீவசன பூஷணத்திற்கு ஒருவிதவியாக்யானம் - வ்யாப்தி அநுசந்தானம் - சிஷ்யர்கள் மணவாளமாமுனிகள் - சடகோப ஜீயர்முதல் அனேகர்.

மணவாளமாமுனிகள் ஐப்பசி மூலநக்ஷத்திரம் - சேஷாம்சம் செய்தருளிய பிரபந்தம் - யதிராஜவிம்ஸதி-ரஹஸ்யத்ரயவியாக்யானம்- தத்வத்ரயவியாக்யானம் - ஆசாரிய இருதயவியாக்யானம்-பெரியாழ்வார் திருமொழிவியாக்யானம். நூற்றந்தாதியுரை. ஞானஸாரவியாக்யானம். பிரமேயஸாரவியாக்யானம். எழுபாட்டு வியாக்யானம். கீதாதாத்பரியதீபம் - தத்வத்ரயத்திற்கு ப்ரமாணத்திரட்டு. முப்பத்தாறுயிரப்படிக்கு ப்ரமாணத்திரட்டு. உபதேசரத்னமாலை. திருவாய்மொழி நூற்றந்தாதி-ஆர்த்திப்ரபந்தம். தனிக்கவிக்கள்-விடுதிசுலோகங்கள். ஆசிரயித்த முதலிகள். வானமாமலைராமாநுஜ ஜீயர். திருமலையெம்பெருமானார் ஜீயர். பட்டர்பிரான் ஜீயர். கந்தாடையண்ணன். எறும்பியப்பா. அப்பிள்ளை. அப்பிள்ளார். பிரதிவாதபயங்கரம் அண்ணன், அன்றியும் குழாங்குடியாரனேகர்.

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

திருவேங்கடமாலை.

மூலமும் - உரையும்.

நான்முகம்.

திண்பார்புகழுந்திருவேங்கடமாலை
வெண்பாவானூறும்வளம்புதற்குக் - கண்பாராய்
நாராயணவடியேனாடுந்தமிழ்வேத
பாராயணசடகோபா.

(இ-ள்.) நாராயண - நாராயணனென்னும் திருநாமமுடையவனே, அடியேன்-தாசனாகிய நான், நாடும் - தியானம்பண்ணுகின்ற, தமிழ்வேதம்-தமிழ்வேதமாகிய திருவாய்மொழியை, பாராயண-பாராயணம் செய்பவனே, சடகோபா-சடகோபனென்னுந் திருநாமத்தையுடையவனே, திண் - பலம்பொருந்திய, பார்-பூமியிலுள்வர்கள், புகழும்-புகழ்கின்ற, திருவேங்கடம் - திருவேங்கடத்தி லெழுந்தருளிய, மாலை-திருமாலை, வெண்பாவால் - வெண்பாவினால், நூறும் - நூறுகவியையும், விளம்புதற்கு-சொல்லுதற்கு, கண்பாராய்-கிருபைசெய்வாய். எ-று. பாராயணம்-நியமமாக ஓதுகை.

நம்மாழ்வார் பகவத் அம்சமாகையால் நாராயண என்றும், கீர்வாண்வேதம்போலத் தமிழ்வேதமும் அநாதியாகவே உண்டு என்பர் ஆதலால் தமிழ்வேதபாராயண வென்றும் கூறினர்.

மூலமேயென்றகரிமுன்வந்திடர்தொலைத்து
நீலமேகம்போலநின்றானைப் - பாலாய
வேலைநடுவிற்றுயிலும்வித்தகனைவேங்கடத்து
மாலையன்றிப்பாடாதென்வாய்.

(இ-ள்.) மூலமே - ஆதிமூலமே, என்ற - என்றுமுறையிட்ட, கரிமுன் - கஜேந்திராழ்வான் முன், வந்து - தோன்றி, இடர் - அதனது துன்பத்தை, தொலைத்து - நீக்கி, நீலம் மேகம்போல - நீலநிறமான மேகத்தைப்போல, நின்றானை - நின்றசுவாமியை, பாலாய-பாலாகிய, வேலை - கடலின், நடுவில் - மத்தியில், துயிலும் - திருக்கண்வளரும், வித்தகனை - ஞான சொரூபியை, வேங்கடத்துமாலை-திருவேங்கடத்தில் நின்றதிருக்கோலமா யெழுந்தருளியிருக்கின்ற திருமாலை, அன்றி - அல்லாமல், என்வாய்-என்வாயானது, பாடாது-வேறொருவரைப் பாடாது. எ-று.

அவையடக்கம்.

ஆழ்வார்கள்செந்தமிழையாதரித்தவேங்கடமென்
தாழ்வானபுன்சொல்லுந்தாங்குமா - லேழ்பாரும்
வெல்லுங்கதிர்மணியும்வெம்பரலுஞ்செஞ்சாந்தும்
புல்லும்பொறுத்தமையேபோல்.

(இ-ள்.) ஏழ்பாரும் - ஏழுலகையும், வெல்லும் - விலைமதிக்கும், கதிர் - பிரகாசமுள்ள, மணியும் - இரத்தினங்களையும், வெம்பரலும் - வெவ்வியபருக்கைக் கல்லையும், செஞ்சாந்தும் - செவ்விய சந்தனமரங்களையும், புல்லும் - புல்லையும், பொறுத்தமையே போல்- பொறுக்குந்தன்மையே போல, ஆழ்வார்கள் - ஆழ்வார்களியற்றிய, செந்தமிழை - செவ்விய தமிழை, ஆதரித்த - அங்கீகரித்த, வேங்கடம்-திருவேங்கடமானது, என் - என்னுடைய, தாழ்வான - இழிவான, புல் - புல்லிய, சொல்லும் - சொற்களையும், தாங்கும் - அங்கீகரிக்கும். எ-று.

நூல்.

க. பொன்னுமணியும்பொலிந்தோங்கிப்பார்மகட்கு
மின்னுமணிமுடியாம்வேங்கடமே - மன்னும்
பரமபதநாட்டினன்பையரவின்சூட்டில்
சிரமபதநாட்டினன்சேர்வு.

(இ-ள்.) பொன்னும் - செம்பொன்னும், மணியும் - இரத்தினங்களும், பொலிந்து - விளங்கி, ஓங்கி - உயர்ந்து, பார்மகட்கு-பூமிப்பிராட்டியாருக்கு, மின்னும் - பிரகாசிக்கின்ற, மணிமுடியாம்-இரத்தின கிரீடம்போல்கின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, மன்னும் - நித்தியமான, பரமபதநாட்டினன்-பரமபதமென்னுந் திருநாட்டையுடையவனும், பை-படத்தையுடைய, அரவின் - காளிங்கனென்னும் பாம்பின், சூட்டில் - முடியில், சிரமபதம் - சிரமத்தை நீக்குகின்ற திருவடியை, நாட்டினன் - நிறுத்தி நடனஞ்செய்தவனுமாகிய திருமால், சேர்வு-சேருமிடம். எ-று.

சேர்வு வேங்கடமெனமுடிக்க. இம்முடிபு இனிவரும் பாட்டிற்கெல்லாமொக்கும். விக்கினங்களை நீக்கும் விநாயகனை விக்கின விநாயகன் என்பதுபோல், சிரமங்களை நீக்கும்பதம் சிரமபதம் எனப்பட்டது.

உ. சோதிமதிவந்துதவழ்சோலைமலையோடிரண்டாய்
மேதினியாள்கொங்கைநிகர்வேங்கடமே - போதில்
இருப்பாற்கடலானிபமூர்ந்தார்க்கெட்டாத்
திருப்பாற்கடலான்சிலம்பு.

(இ-ள்.) சோதி-பிரகாசம்பொருந்திய, மதி-சந்திரன், வந்து-தோன்றி, தவழ் - ஊராநின்ற, சோலைமலையோடு - அழகர் மலையுடனே, இரண்டாய்-இரண்டாகி, மேதினியாள்-பூமிதேவியினுடைய, கொங்கை நிகர்-தனங்கள்போல்கின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, போதில் - தாமரைப்பூவில், இருப்பாற்கு-இருப்பவனாகிய பிரமதேவற்கும், அடல் - பலம்பொருந்திய, ஆன் - இடபவாகனத்தையும், இபம் - வெள்ளையானையையும், ஊர்ந்தார்க்கு - ஊர்ந்தவர்களாகிய சிவனுக்கும் தேவேந்திரனுக்கும், எட்டா - எட்டாத, திருப்பாற்கடலான் - திருப்பாற்கடலையுடையவனது, சிலம்பு-மலை. எ-று.

௩. மாலைக்கோலித்திரியும்வையகத்தோர்தம்பிறவி
வேலைக்கோர்வங்கமாம்வேங்கடமே - சோலைத்
தருமாதரைநட்டான்றண்முல்லையாயர்
தருமாதரைநட்டான்சார்பு.

(இ-ள்.) மாலை - மயக்கத்தை, கோலி - பற்றி, திரியும் - சஞ்சரிக்கும், வையகத்தோர் தம் - பூமியிலுள்ளவர்களது, பிறவி-பிறப்பாகிய, வேலைக்கு - சமுத்திரத்துக்கு, ஓர்வங்கமாம் - ஓர்மரக்கலம் போல்கின்ற, வேங்கடமே-திருவேங்கடமலையே, சோலைத்தரு-(இந்திரனது) சோலையிலுள்ள கற்பகத்தருவை, மா-பெரிய, தரை-பூமியினிடத்தில், நட்டான் - நட்டவனும், தண்-குளிர்ந்த, முல்லையாயர்-முல்லைநிலத்திடையர், தரு-பெற்ற, மாதரை-பெண்களை, நட்டான்-சிநேகித்தவனுமாகிய திருமால், சார்பு-சாருமிடம். எ-று.

௪. நாலுதிசைமுகமுநண்ணுதலாலொண்கமலம்
மேலுறலால்வேதாவாம்வேங்கடமே - சாலுறையும்
மண்மயக்கந்தேற்றுவித்தான்மாற்றுதல்போலாரியனால்
உண்மயக்கந்தேற்றுவித்தானூர்.

(இ - ள்.) நாலுதிசைமுகமும் - நான்குதிக்கில் உள்ளாரும், நண்ணுதலால் - வந்துசேவித்தலாலும், ஒள்கமலம் மேல் உறலால்-அழகிய கமலம் (நீர்) மேலேதங்குதலாலும், வேதா ஆம் - பிரமனைப்போல்கின்ற, வேங்கடமே - திருவேங்கடமே, (பிரமனுக்கு இவை பொருந்துவது எவ்வாறெனின :—நாலுதிசைமுகமும் - நான்காகிய திக்குமுகங்களும், நண்ணுதலால் - பொருந்தியிருத்தலாலும், ஒள் கமலமேல் - அழகிய தாமரைமலரின்மேல், உறலால் - வசித்தலாலும், என அறிக) சால் உறையும் - குடத்தில் தங்கும், மண்மயம்-மண்ணோடுகலந்த, கம்-நீரை, தேற்றுவித்தால் - தேற்றாங்கொட்டையால், மாற்றுதல்போல் - தெளியச்செய்தல்போல், ஆரியனால்-ஆசாரியனால், உள்-மனத்தில் உள்ள, மயக்கம் - அஞ்ஞானத்தை, தேற்றுவித்தான் - தேறப்பண்ணினவனது, ஊர்-ஊர். எ-று.

திசை நான்காதலால் நான்குமுகங்களையுடைய பிரமனுக்குத் திசைமுகன் என்றும், சிருஷ்டித்தொழில் செய்பவனாதலால் வேதா என்றும் பெயர் வழங்கும். ஆசாரியன் உபதேசத்தாலன்றி அஞ்ஞானம் நீங்கி முத்தியடைதல் முடியாதாகையால் ஆரியனால் என்றும், அதுவும் இறைவன்செயலாதலால் "தேற்றுவித்தான்" என்றும் கூறினார். தேற்றுவித்து ஆசாரியனுக்கு உவமை.

ரு. பாணிபிறைகொன்றைபணிசூடிமானேந்தி
வேணியரனைப்பொருவும்வேங்கடமே - யாணிநிறப்
பீதாம்பரனார் பிரமர்வாழண்டங்கள்
மீதாம்பரனார்விருப்பு.

(இ-ள்.) பாணி - நீரையும், பிறை-சந்திரனையும், கொன்றை-கொன்றைமரத்தையும், பணி - பாம்பையும், சூடி - தரித்து, மான்-மானையும், ஏந்தி-தாங்கி, வேணி-சடையையுடைய, அரனை-சிவனை, பொருவும் - ஒப்பாகும், வேங்கடமே - திருவேங்கடமலையே, ஆணி நிறம்-ஆணிப்பொன்னின் நிறமுள்ள, பீதாம்பரனார் - பொன்னாடையைத்தரித்தவரும், பிரமர்-பிரமதேவர், வாழ்-வாழ்கின்ற, அண்டங்கள்-அண்டங்களுக்கு, மீதாம் - மேலாகிய, பரனார்-பரமபதமுடையவருமாகிய திருமால், விருப்பு-விரும்புமிடம். எ-று.

சிவன் அணிந்திருக்கும் பாணிமுதலியவை திருமலையிலும் இருத்தலால் அரனைப்பொருவும் வேங்கடம் என்றார்.

சூ. மாலாய்ச்சசிதழுவிவச்சிரமேந்திப்புகர்மா
மேலாய்ப்புரந்தரனும்வேங்கடமே - நாலாய்க்
கிளர்வாகுமந்தரத்தான்கேட்டமரர்வேட்டுத்
தளர்வாகுமந்தரத்தான்சார்பு.

(இ-ள்.) மால் ஆய் - மேகங்களைப்பொருந்தி, சசி - சந்திரனை, தழுவி-கூடி, வச்சிரம்-வச்சிரக்கல்லையும், ஏந்தி-தாங்கி, புகர்-புள்ளிகளையுடைய, மா-யானையை, மேலாய் - தன்மேற்கொண்டு, புரந்தரனும் - தேவேந்திரனை நிகர்க்கின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, நாலாய் - நான்கென்னுந் தொகையைப்பெற்று, கிளர் - பிரகாசிக்கிற, வாகு - புயமாகிய, மந்தரத்தான் - மந்தரமலையையுடையவனும், அமரர்-தேவர்கள், கேட்டு-கேள்விப்பட்டு, வேட்டு-(அடைய) விரும்பி, தளர்வாகும் - (கிட்டாமையால்) தளர்ச்சியடைதற்கேதுவான, அந்தரத்தான் - பரமாகாயத்தையுடையவனுமாகிய திருமால், சார்பு. எ-று.

மாலாய்-ஆசையாய், சசி-இந்திராணியை, தழுவி-கலந்து, வச்சிரமேந்தி - வச்சிராயுதத்தைத்தரித்து, புகர்-புள்ளிகளையுடைய, மா-ஐயிராவதமென்னும் வெள்ளையானையை, மேலாய் - மேற்கொண்டு (ஏறி), புரந்தரன் ஆம் எனச் சிலேடையாகப் பொருள்படல் காண்க.

எ. வள்ளிபுணர்ந்தாறுமுகமன்னிமயின்மேற்கொளலால்
வெள்ளிலைவேல்வேள்போலும்வேங்கடமே - உள்ளினைத்
தங்கமலப்பார்வையான்றன்னடியார்மேல்வைக்கும்
செங்கமலப்பார்வையான்சேர்பு.

(இ-ள்.) வள்ளி - வள்ளிக்கொடிகளை, புணர்ந்து-பொருந்தி, ஆறு-ஆற்றை, முகம் - தன்னிடத்தில், மன்னி - நிலைபெறச்செய்து, மயில் - மயிலை, மேற்கொளலால் - தன்மேற்கொண்டிருத்தலால், வெள் இலை - வெள்ளிய அச்சவடிவாகிய, வேல் - வேலாயுதத்தையுடைய, வேள்போலும் - சுப்பிரமணியனைப்போல்கின்ற, வேங்கடமே-திருவேங்கடமலையே, உள்ளினை-தன்னை நினைத்தவரை, தங்க-இருக்க, மலம்-மும்மலங்கள் நிறைந்த, பார்-பூமியின்கண், வையான்-இருத்ாதவனும், தன்-தனது, அடியார்மேல்-தாசர்களிடத்து, வைக்கும்-வைத்த, செங்கமலப்பார்வையான் - செந்தாமரைப்பூப்போலுந் திருக்கண்பார்வையுடையவனுமாகிய திருமால், சேர்பு-சேருமிடம்.

வள்ளி - வள்ளி நாயகியை, புணர்ந்து - கூடி, ஆறு முகம்-ஆறுமுகங்களை, மன்னி-பொருந்தி, மயின்மேற்கொளலால்-மயிலின் மேலிருத்தலால், வேள்போலுமெனச் சிலேடையாகப் பொருள் படல் காண்க.

அ. புள்ளரவநீரரவம்போர்மாவரவமறு
வெள்ளரவவெற்பாகும்வேங்கடமே - யொள்ளரியாய்
மாகனகம்பத்திஞர்வாய்கண்கையுந்திபதம்
கோகனகம்பத்திஞர்குன்று.

(இ-ள்.) புள் - பறவைகளின், அரவம் - ஒலியும், நீர்-நீரினது, அரவம் - ஒலியும், போர் - யுத்தஞ்செய்கின்ற, மா - யானைகளினது, அரவம் - ஒலியும், அறு - நீங்காத, வெள் - வெள்ளிய, அரவவெற்பாகும் - சேடமலையாகிய; வேங்கடமே-திருவேங்கடமலையே, ஒள்-அழகிய, அரியாய் - நரசிங்கமாய், மா-பெரிய, கனம்-கனத்த, கம்பத்திஞர்-ஸ்தம்பத்தினின்றுந் தோன்றினவரும், வாய் - வாயொன்றும், கண்-கண்களிரண்டும், கை - கரங்களுன்கும், உந்தி-கொப்பூழொன்றும், பதம்-பாதமிரண்டுமாகிய, கோகனகம்-தாமரைப்பூ, பத்திஞர்-பத்தினையுடையவருமாகிய திருமாலின், குன்று - மலை. எ-று.

கூ. துய்யசெம்பொற்கோயிற்சுடரொறிப்பக்கண்முகிழ்த்து
வெய்யவன்றேர்மாவிடறும்வேங்கடமே - யையிருறூ
றுனமுகப்பாம்பணையாரானிறைப்பின்னூதிவரும்
கானமுகப்பாம்பணையார்காப்பு.

(இ-ள்.) துய்ய - பரிசுத்தமான, செம்பொன் - பசும்பொன்னினாற்செய்த, கோயில் - திருக்கோயிலினுடைய, சுடர்-காந்தி, எறிப்ப-

பிரகாசிக்க, கண் - கண்களை, முகிழ்த்து-மூடி, வெய்யவன் - சூரிய னுடைய, தேர் - தேரிற்கட்டிய, மா-குதிரைகள், இடறும்-காலிடறு கின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, ஐயிருநூறான - ஆயிர மான, முகம் - முகத்தையுடைய, பாம்பு - பாம்பாகிய ஆதிசேடனை, அணையார் - சயனமாகவுடையவரும், ஆனிரைப்பின் - பசுக்கூட்டத் தின்பின்னே, ஊதி வரும் - ஊதிக்கொண்டுவரும், கானம் - இரா கத்தையுடைய, உகப்பாம் - விரும்பத்தக்க, பணையார்-வேய்ங்குழலை யுடைய திருமால், காப்பு - காக்குமிடம். எ-று.

௧0. மாண்டுபிறக்குந்துயர்போய்வைகுந்தம்புக்கவரும்
மீண்டுதொழக்காதலிக்கும்வேங்கடமே - பாண்டுமகன்
ஏறிரதப்பாகனேத்துமடியார்நாவில்
ஊறிரதப்பாகனூர்.

(இ-ள்.) மாண்டு - இறந்து, பிறக்கும் - பிறக்கும், துயர்-துன் பம், போய் - நீங்கி, வைகுந்தம் - பரமபதத்தில், புக்கவரும் - புகுந்த வரும், மீண்டு-திரும்பிவந்து, தொழ-வணங்க, காதலிக்கும்-ஆசைப் படும், வேங்கடமே - திருவேங்கடமலையே, பாண்டுமகன் - அருச்சு னன், ஏறு - ஏறுகின்ற, இரதம்பாகனர், இரதத்திற்குச் சாரதியான வரும், ஏத்தும் - துதிசெய்யும், அடியார் - தாசர்களது, நாவில்-நாவி னிடத்தில், ஊறு-சுரக்கின்ற, இரதம் - சுவையான, பாகு அன்னார்- சருக்கரைப்பாகுபோன்ற வருமாகிய திருமாலின், ஊர்-ஊர். எ-று.

௧௧. கோலியொருநான்குகுலமறையுநாற்றிசையும்
வேலியெனநின்றேத்தும்வேங்கடமே - வாலிதனை
நண்பாவையாதரித்தான்ஞானமுதலாழ்வார்கள்
வெண்பாவையாதரித்தான்வெற்பு.

(இ-ள்.) கோலி-வளைந்து, ஒருநான்கு குலமறையும்-சிரேட்ட மாகிய நான்கு வேதமும், நாற்றிசையும்-நாலுதிக்கிலுள்ளாரும், வேலி யென - வேலிபோல, நின்றேத்தும் - நின்று தோத்திரம் பண்ணும், வேங்கடமே - திருவேங்கடமலையே, வாலிதனை - வாலியை, நண்பா- நட்பாக, வையாது-வைக்காது, அரித்தான்-சங்கரித்தவனும், ஞானம் முதலாழ்வார்கள்-ஞானமுடைய முதலாழ்வார்கள் மூவரும் இயற்றிய, வெண்பா - வெண்பாவை, ஆதரித்தான் - அங்கீகரித்தவனுமாகிய திமாலினுடைய, வெற்பு - மலை. எ-று.

முதலாழ்வார் ஆவார்:—பொய்கையார் பூதத்தார் பேயார்.

௧௨. தெள்ளியதோர்வீடருளுஞ்சீர்கேட்டுப்பொன்மலையும்
வெள்ளிமலையும்பணியும்வேங்கடமே - புள்ளின்
கொடிவாகனத்தான்குளிர்ந்திருண்டகாரின்
வடிவாகனத்தான்வரை.

(இ-ள்.) தெள்ளியது - தெளிவுள்ளதாகிய, ஓர்-ஒப்பற்ற, வீடருளும் - பரமபதத்தைக் கொடுக்கும், சீர் - சிறப்பை, கேட்டு - கேள்விப்பட்டு, பொன்மலையும் - மகமேருவும், வெள்ளிமலையும் - கயிலைமலையும், பணியும்-வணங்கும், வேங்கடமே-திருவேங்கடமலையே, புள்ளின் - பறவையாகிய, கொடி - கொடியையும், வாகனத்தான்-வாகனத்தையுமுடையவனும், குளிர்ந்து - குளிர்ச்சியடைந்து, இருண்ட-கறுத்த, காரின்-மேகம்போல, வடிவு-நிறத்தையும், ஆகன்-திருமேனியையுமுடையவனும், நத்தான்-சங்கையுடையவனும், (ஆகிய திருமாலின்) வரை-மலை. எ-று.

கங. எப்பூதலமுமிறைஞ்சித்திசைநோக்கி
மெய்ப்பூசனைபுரியும்வேங்கடமே - கொப்பூழ்
இலகுமுண்டகந்தரத்தானீன்றளிக்குமீரேழ்
உலகுமுண்டகந்தரத்தானூர்.

(இ-ள்.) எப்பூதலமும் - எந்நிலத்துள்ளாரும், திசைநோக்கி-திக்கு நோக்கி, இறைஞ்சி - வணங்கி, மெய்-உண்மையாகிய, பூசனை-பூசையை, புரியும் - செய்யும், வேங்கடமே - திருவேங்கடமலையே, கொப்பூழ்-உந்தியாகிய, இலகும் - பிரகாசிக்கின்ற, முண்டகம் - தாமரைப்பூ, தர - அளிக்க, தானீன்று - தான்பெற்று, அளிக்கும் - இரட்சிக்கும், ஈரேழுலகும் - பதினாலுலோகத்தையும், உண்ட - புசித்த, கந்தரத்தான் - மிடற்றையுடையவனது, ஊர் - ஊர். எ-று.

கச. நோவினையுநோயினையுநோய்செய்வினையினையும்
வீவினையுந்தீர்த்தருளும்வேங்கடமே - மூவினைசெய்
மூவடிவாய்ப்பச்சென்றான்முன்னாளகலிகைக்குச்
சேவடிவாய்ப்பச்சென்றான்சேர்பு.

(இ-ள்.) நோவினையும் - பிறவிப்பிணியையும், நோயினையும்-வியாதியையும், நோய்செய்வினையினையும் - துன்பத்தைச்செய்கின்ற ஊழ்வினையையும், வீவினையும்-மரணத்தையும், தீர்த்தருளும்-நீக்கிக் கிருபைசெய்யும், வேங்கடமே - திருவேங்கடமலையே, மூவினைசெய்-மூன்றுதொழிலையுஞ் செய்யும், மூவடிவாய் - மூன்று உருவமாய், பச்சென்றான்-(அவற்றுள்) பச்சென்ற நிறத்தையுடையவனும், முன்னாள் - முற்காலத்தில், அகலிகைக்கு - (கௌதமருடையதேவியான) அகலிகைக்கு, சேவடி-சிவந்த திருவடி, வாய்ப்ப - கிடைக்க, சென்றவன் - (மிதிலைக்கு) சென்றவனுமாகிய திருமால், சேர்பு-சேருமிடம்.

கரு. பித்துமலடுமைமுடம்பேய்குருடுகூன்செவிடு
மெய்த்துயர்நோய்தீர்த்தருளும்வேங்கடமே - பத்தருக்கு
வந்ததுக்கங்காப்பான்மலருந்தியினுலகம்
தந்ததுக்கங்காப்பான்றலம்.

(இ-ள்.) பித்து-பயித்தியமும், மலடு-பிள்ளைப் பேறின்மையும், ஊமை - வாய்பேசாமையும், முடம்-நடவாமையும், பேய் - பிசாசும், குருடு - கண்தெரியாமையும், கூன் - உடல்வளைவும், செவிடு-காது கேளாமையுமாகிய இவற்றுடன், மெய்த்துயர்நோய்-உடம்பைப்பற்றி வருகிற துன்பஞ்செய்யும் மற்ற நோய்களையும், தீர்த்தருளும் - நீக்கிக் கிருபை பண்ணும், வேங்கடமே - திருவேங்கடமலையே, பத்தருக்கு-தாசருக்கு, வந்த துக்கம்-வந்த துன்பத்தை, காப்பான்-நீக்குபவனும், மலர்-தாமரைப்பூவாகிய, உந்தியின் - கொப்பூழிலே, உலகம் - உலகத்தை, தந்து-பெற்று, அதுக்கு - அதற்கு, அங்காப்பான் - வாய்திறப்பவனுமாகிய திருமாலின், தலம் - இடம். எ-று.

கசு. வாடப்பசித்தவரியுழுவைவாலாட்டி
மேடத்தைப்பார்த்துறுக்கும்வேங்கடமே - கூடத்துக்
கம்பவளமாவென்றான்காசினிக்கும்வெண்ணெய்க்கும்
செம்பவளமாவென்றான்சேர்பு.

(இ-ள்.) வாட - சரீரம்வாட, பசித்த - பசித்த, வரி - வரிகளையுடைய, உழுவை - புலியானது, வாலாட்டி - வாலையாட்டி, மேடத்தை - மேடவிராசியை, பார்த்து - நோக்கி, உறுக்கும் - கோபிக்கும், வேங்கடமே - திருவேங்கடமலையே, கூடத்து - கூடத்திலுள்ள, கம்பத்து-ஸ்தம்பத்திற்கட்டும், வளம் - வளப்பம்பொருந்திய, மா-யானையை, வென்றான் - வென்றவனும், காசினிக்கும் - பூமிக்கும், வெண்ணெய்க்கும்-வெண்ணெய்க்கும், செம்பவளம் - சிவந்தபவளம்போலுந் திருவாயை, ஆவென்றான் - ஆவென்று திறந்தவனுமாகிய திருமால், சேர்பு - சேருமிடம். எ-று.

வாடிப்பசித்த என்றும்-பார்த்திருக்கும் என்றும், பாடம். யானையாவது - குவலயாபீடம்.

கஎ. தாவிவரும்வானரங்கடண்குவட்டிற்கற்கடகம்
மேவிவரக்கண்டோடும்வேங்கடமே - காவிரிசூழ்
பொற்றிருவரங்கத்தான்போதன்சிவனென்னும்
மற்றிருவரங்கத்தான்வாழ்வு.

(இ-ள்.) தாவி - தாவிக்கொண்டு, வரும்-வருகின்ற, வானரங்கள் - குரங்குகள், தண் - குளிர்ந்த, குவட்டில் - சிகரத்தில், கற்கடகம் - கற்கடகவிராசி, மேவிவர - பொருந்திவர, கண்டு - பார்த்து, ஓடும்-பயந்தோடும், வேங்கடமே-திருவேங்கடமலையே, காவிரி சூழ்-காவிரியாறுசூழ்ந்த, பொன்திருவரங்கத்தான் - பொன்மயமான திருவரங்கமென்னுந் திருப்பதியையுடையவனும், போதன் - பிரமனும், சிவன் - ஈசனும், என்னும் - என்றுசொல்லும், இருவர் - இருவரை

யும், அங்கத்தான் - சரீரத்திலுடையவனுமாகிய திருமால், வாழ்வு-வாழுமிடம். எ-று.

மற்று - அசைநிலை.

கஅ. ஒண்சிந்துரத்தைவெறுத்தூடும்பிடிவேழம்
விண்சிங்கங்கண்டணைக்கும்வேங்கடமே - யெண்சிந்தைக்
கோராவிருந்தானொருநாள்விதுரனுக்கு
வாராவிருந்தான்வரை.

(இ-ள்.) ஒள் - அழகிய, சிந்துரத்தை-யானையை, வெறுத்து-கோபித்து, ஊடும் - பிணங்குகின்ற, பிடிவேழம் பெண்யானையானது, விண் - ஆகாயத்திலுள்ள, சிங்கம் - சிங்கவிராசியை, கண்டு-பார்த்து, அணைக்கும்-தழுவிக்கொள்ளும், வேங்கடமே - திருவேங்கடமலையே, எண்-எண்ணப்பட்ட, சிந்தைக்கு-மனத்துக்கு, ஓரா இருந்தான்-அறியப்படாமலிருந்தவனும், ஒருநாள்-ஒருதினம், விதுரனுக்கு-விதுராழ்வானுக்கு, வாராவிருந்தான்-வருதற்கரிய விருந்தானவனுமாகிய (திருமாலின்), வரை-மலை. எ-று.

கசு. மாதுமடக்கன்னிகழைவந்தணுகக்கம்பத்தின்
மீதுநடிப்பாளொக்கும்வேங்கடமே - யூதுகுழல்
பாலன்பாலாக்குவித்தான்பஞ்சவர்க்கா நூற்றுவரைக்
காலன்பாலாக்குவித்தான்காப்பு.

(இ-ள்.) மாது - பெண்ணாகிய, மடம் - மடமைத் தன்மைபொருந்திய, கன்னி-கன்னியாராசியானது, கழை-மூங்கிலில், வந்தணுக-வந்து பொருந்த, கம்பத்தின்மீது-ஸ்தம்பத்தின்மேல், நடிப்பாளொக்கும் - நடிப்பவளாகிய வேழம்ப ஸ்திரீயை நிகர்க்கும், வேங்கடமே-திருவேங்கடமலையே, ஊது-ஊதுகின்ற, குழற்பால் - வேய்ங்குழலினிடத்தில், அன்பால் - அன்பினால், ஆ - பசுக்களை, குவித்தான்-கூட்டினவனும், பஞ்வர்க்கா - பாண்டவருக்காக, நூற்றுவரை-துரியோதனாதிகளை, காலன்பால்-இயமனிடத்து, ஆக்குவித்தான் - போகப் பண்ணினவனுமாகிய திருமால், காப்பு-காக்குமிடம். எ-று.

வேழம்பர்-கழைக்கூத்தர்.

உ0. மன்னுகுடிக்குறவர்வானூர்துலாத்திடையே
மின்னுமணிநிறுக்கும் வேங்கடமே - யென்னுள்
அரவிந்தப்போதகத்தானன்பாலழைத்த
கரவிந்தப்போதகத்தான்காப்பு.

(இ-ள்.) மன்னு-நிலைபெற்ற, குடி-குடியாகிய, குறவர்-குறவர்கள், வான் - ஆகாயத்திலே, ஊர் - தவழ்கின்ற, துலாத்திடையே - துலாராசியினிடத்து, மின்னும் - பிரகாசிக்கின்ற, மணி - இரத்தினங்களை, நிறுக்கும்-நிறுக்கின்ற, வேங்கடமே-திருவேங்கடமலையே, என்-

தாசனாகிய என்னுடைய, உள் - இருதயமாகிய, அரவிந்தப்போது-தாமரைப்பூவை, அகத்தான்-வீடாகவுடையவனும், அன்பால் - அன்பினாலே, அழைத்த - ஆதிமூலமேயென்று முறையிட்ட, கரம் - கையையுடைய, விந்தம் - விந்தபர்வதத்தையொத்த, போதகத்தான்-யானையையுடையவனுமாகிய (திருமால்), காப்பு - காக்குமிடம்.

௨௧. கொல்லைக்குறவர்குளிர்மதிமானைக்ககன
வில்லைக்குனித்தெய்யும்வேங்கடமே - கல்லை
அரிவைவடிவாக்கினனன்னமாய்வேத
விரிவைவடிவாக்கினன்வெற்பு.

(இ-ள்.) கொல்லை - தினைப்புனத்தையுடைய, குறவர்-குறவர்கள், குளிர் - குளிர்ந்த, மதி - சந்திரனிடத்துள்ள, மானை - களங்கமாகிய மானை, ககனவில்லை - இந்திரதனுவை, குனித்து - வளைத்து, எய்யும் - அம்பெய்யும், வேங்கடமே - திருவேங்கடமலையே, கல்லை-கல்லுருவமாயிருந்த (அகலிகையை), அரிவைவடிவு ஆக்கினன் - பெண்ணுருவமாக்கினவனும், அன்னமாய்-அன்னவடிவமாகி, வேதம்-வேதத்தின், விரிவை - விரிவாகிய பொருளை, வடி - தெளியச்சொல்லிய, வாக்கினன்-திருவாக்கையுடையவனுமாகிய திருமாலின், வெற்பு-மலை. எ-று.

பகவான் அன்ன உருவாயிருந்து பிரமனுக்கு வேதோபதேசம் பண்ணினமையால் "அன்னமாய் வேதவிரிவை வடிவாக்கினன்" என்றார்.

௨௨. தேனேறித்தேன்வைக்குந்திண்கழைமேல்விண்மகர
மீனேறிவேள்கொடியாம்வேங்கடமே - வானேறித்
தீமுகனாகத்திருப்பார்சேவடிக்காளானவனைக்
காமுகனாகத்திருப்பார்காப்பு.

(இ-ள்.) தேன் - வண்டுகள், ஏறி - ஏறிச்சென்று, தேன்வைக்கும் - தேனைச்சேர்த்துவைக்கும், திண் - வலிய, கழைமேல் - மூங்கிலின்மேல், விண் - ஆகாயத்திலிருக்கிற, மகரமீனேறி-மகரராசியானதேறி, வேள் - மன்மதனுடைய, கொடியாம் - கொடியைப் போல்கின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, வான் - பரமபதத்தில், ஏறி-ஆரோகணித்து, தீ - விஷத்தையுடைய, முகன் - முகமுள்ள, நாகத்து-பாம்பின்மீது, இருப்பார் - இருப்பவரும், சேவடிக்கு - திருவடிக்கு, ஆளானவனை - அடிமையானவனை, காமுகனாக - காமத்தை விரும்புவோனாக, திருப்பார் - செல்லவிடாதவருமாகிய திருமால், காப்பு-காக்குமிடம். எ-று.

நாகமாவது - திருவனந்தாழ்வான், முகம் - முகனெனப் போலியாயிற்று.

உ௩. ஒண்கொம்பிற்றேனிறாலூர்பிறைக்கோட்டாலுடைந்து
விண்கும்பவாய்நிறைக்கும்வேங்கடமே - வண்கும்பக்
கம்பத்தானைக்கடுத்தார்காரரக்கர்போர்மாளக்
கம்பத்தானைக்கடுத்தார்காப்பு.

(இ-ள்.) ஒள்-அழகிய, கொம்பில் - கொம்பினிடத்துக் கட்டப்பட்ட, தேன் இறால்-தேன்கூடு, ஊர்-தவழ்கின்ற, பிறைக்கோட்டால்-பிறைச்சந்திரனாகிய கொம்பினாலே, உடைந்து - உடைபட்டு, விண்-ஆகாயத்திலுள்ள, கும்பம்-கும்பவிராசியினுடைய, வாய் நிறைக்கும்-வாய்மட்டுந் தேனைநிறைக்கும், வேங்கடமே - திருவேங்கடமலையே, வண்கும்பம் - வளப்பம் பொருந்திய மத்தகத்தையுடைய, கம்பத்து-கட்டுத்தறியிற்கட்டுதற்குரிய, ஆனைக்கு-யானைக்கு, அடுத்தார் - சமீபித்தவரும், கார்-கரியநிறத்தைப் பொருந்திய, அரக்கர்-இராக்கதர்கள், போர்-யுத்தத்தில், மாள - மாளுதற்கு, கம்-சிரசு, பத்தானை-பத்தென்னுந்தொகையை யுடையவனான இராவணனை, கடுத்தார் - கோபித்தவருமாகிய (திருமால்), காப்பு - காக்குமிடம். எ-று.

யானையாவது - கசேந்திராழ்வான். கம்பத்தானை என்றது சாதியடை.

உ௪. கூனலிளவெண்குருகுகோனேரியில்விசும்பூர்
மீனநிழலைக்கொத்தும்வேங்கடமே - கானகத்துப்
பொன்னாருழையெய்தார்பூங்கழலேதஞ்சமென
உன்னாருழையெய்தாரூர்.

(இ-ள்.) கூன் - வளைந்தகழுத்தையும், இளமை - இளமையையும், வெண்குருகு - வெண்ணிறத்தையுமுடைய கொக்கானது, கோனேரியில் - கோனேரி தீர்த்தத்திலே தோன்றுகிற, விசும்பு - ஆகாயத்தில், ஊர் - சஞ்சரிக்கின்ற, மீனம் - மீனவிராசியினது, நிழலை-நிழலை, கொத்தும்-கொத்துகின்ற, வேங்கடமே-திருவேங்கடமலையே, கானகத்து - காட்டினிடத்து, பொன் - பொன்னிறம், ஆர் - பொருந்திய, உழை - மானை, எய்தார் - எய்தவரும், பூங்கழலே - பொலிவுபெற்றதிருவடியே, தஞ்சமென - பற்றுக்கோடென, உன்னாருழை-நினையாதவரிடத்திலே, எய்தார் - செல்லாதவருமாகிய (திருமாலின்), ஊர் - ஊர். எ-று.

பொன்மானானவன் - மாரீசன்.

உரு. மண்மூலந்தாவென்றுமந்திகடுவற்குரைப்ப
விண்மூலங்கேட்டேங்கும்வேங்கடமே-யொண்மூலம்
வேதத்திருக்குழையார்வெய்யோனிரண்டனைய
சீதத்திருக்குழையார்சேர்வு.

(இ-ள்.) மண் - மண்ணிலிருக்கிற, மூலம் - மூலத்தை (கிழங்கை), தாவென்று - கொடென்று, மந்தி - பெண்குரங்கு, கடுவற்கு- ஆண்குரங்குக்கு, உரைப்ப - உரைக்க, விண்-ஆகாயத்திலிருக்கின்ற, மூலம்-மூலநட்சத்திரம், கேட்டு-கேட்டு, ஏங்கும்-பயப்படும், வேங்கடமே - திருவேங்கடமலையே, ஒள்-அழகிய, மூலம்-முதன்மையாகிய, வேதத்து - வேதங்களில், இருக்கு உறையார் - இருக்குவேதமாகிய இடத்தையுடையவரும், வெய்யோன் இரண்டனைய-இரண்டு சூரியர்களுக்குச் சமானமான, சீதம்-குளிர்ந்த, திருகுழையார்-சிறப்புப்பொருந்திய குண்டலங்களையுடையவருமாகிய(திருமால்), சேர்வு- சேருமிடம். எ-று.

வண்மூலமென்றும்-அஞ்சும் என்றும் பாடம். கிழங்கு தாவென்பதற்கு மூலந்தாவென்ன, அதை மூலநட்சத்திரம் கேட்டுத் தன்னை ஆண்குரங்குபிடித்துப் பெண்குரங்கின் கையிலே கொடுக்கப்போகிறதென்று பயப்படுகிறது என்றாராயிற்று.

உசு. நாலவிட்டபொன்னூசனன்னுதலாருந்துதொறும்
மேலவிட்டந்தொட்டிழியும்வேங்கடமே-யாலமிட்ட
பொற்புக்களங்கறுத்தார்போர்சரியவாணன்றோள்
வெற்புக்களங்கறுத்தார்வீடு.

(இ-ள்.) நாலவிட்ட - தொங்கவிட்ட, பொன் - பொன்னாற் செய்த, ஊசல் - ஊஞ்சலை, நன்னுதலார் - நல்ல நெற்றியையுடைய பெண்கள், உந்துதொறும் - தள்ளுந்தோறும், மேல்-ஆகாயத்திலிருக்கின்ற, அவிட்டம் - அவிட்டநட்சத்திரத்தை, தொட்டு - தீண்டி, இழியும் - இறங்கும், வேங்கடமே - திருவேங்கடமலையே, ஆலம் இட்ட-விடத்தைவைத்த, பொற்பு - பொலிவையுடைய, களம்-கண்டம், கறுத்தார் - கறுத்தவரானசிவன், போர் - போரிலே, சரிய- பின்னிட, வாணன் - வாணாசுரனுடைய, தோள் - தோள்களாகிய, வெற்புக்கள் - மலைகளை, அங்கு - அவ்விடத்து, அறுத்தார்-அறுத்தவருடைய, வீடு-இருப்பிடம். எ-று.

அங்கு என்றது - யுத்தகளத்தை.

உஎ. பானிறங்கொடெங்கினிளம்பாளைவிரியச்சுனையின்
மீனினங்கொக்கென்றொளிக்கும்வேங்கடமே-வானிமிர்ந்த
வெள்ளத்துக்கப்பாலான்மெய்ப்பரமயோகியர்கள்
உள்ளத்துக்கப்பாலானூர்.

(இ-ள்.) பால் நிறம் - வெண்மைநிறத்தை, கொள்-கொண்ட, தெங்கின்-தென்னமரத்தினது, இளம்பாளை-சிறுபாளை, விரிய-மலர, சுனையின் - சுனையிலிருக்கிற, மீனினம் - மீன்கூட்டங்கள், கொக்

கென்று-கொக்கென்று கருதி, ஒளிக்கும்-பயந்துமறைகின்ற, வேங்கடமே-திருவேங்கடமலையே, வான்-ஆகாயபரியந்தம், நிமிர்ந்த-எழுந்த, வெள்ளத்து - வெள்ளத்திலே, கப்பு-கிளைகளையுடைய, ஆலான்-ஆலிலைமேற் பள்ளிகொண்டவனும், மெய் - உண்மையுணர்ந்த, பரமம் - மேலான, யோகியர்கள் - யோகியர்களுடைய, உள்ளத்துக்கு-மனத்துக்கு, அப்பாலான் - அப்பாற்பட்டவனுமாகிய (திருமாலின்), ஊர்-ஊர். எ-று.

"மெய்ப்பரம யோகியர்களுள்ளத்துக் கப்பாலானூர்" என்பதை "வேதத்தின் முன்செல்க மெய்யுணர்ந்தோர் விரிஞ்சன் முதலோர் - கோதற்ற ஞானக்கொழுந்தின் முன்செல்க குணங்கடந்த-போதக்கடலெங்கடென் குருகூர்ப்புனிதன் கவியோர் - பாதத்தின் முன்செல்லுமே தொல்லைமூலப் பரஞ்சுடரோ" என்னும் சடகோபரந்தாதிச்செய்யுளில் வேதத்தின்முன்னும், மெய்யுணர்ந்தோர் விரிஞ்சன்முதலோர் கோதற்ற ஞானக்கொழுந்தின்முன்னும் தொல்லை மூலப் பரஞ்சுடர் செல்லும் எனக் கூறியவதனாலுமறிக.

உஅ. கொம்பணியுந்தேமாங்குயில்கருடன்போற்கூவ
வெம்பணிகள்புற்றடையும்வேங்கடமே-வம்பணியும்
விண்ணினைந்துகாப்பார்மிசைவைத்தார்பத்தரைத்தம்
உண்ணினைந்துகாப்பாருவப்பு.

(இ-ள்.) கொம்பு-கொம்பை, அணியும்- அலங்கரிக்கும், தேம்-இனிமைபொருந்திய, மாங்குயில் - மாமரத்திலிருக்கின்ற குயிலானது, கருடன் போல் - கருடனைப்போல, கூவ - கூவ, வெம்பணிகள்-வெவ்வியபாம்புகள், புற்று - புற்றிலே, அடையும்-நுழைகின்ற, வேங்கடமே-திருவேங்கடமலையே, வம்பு-மணம்பொருந்திய, அணியும்-அழகுபெற்ற, விண்ணின் - தேவலோகத்திலுள்ள, ஐந்துகா-பஞ்சதருக்களில் (ஒன்றை), பார்மிசை-பூமியினிடத்து, வைத்தார்-வைத்தவரும், பத்தரை - தாசர்களை, தம் - தம்முடைய, உள் - திருவுளத்தில், நினைந்து-நினைத்து, காப்பார்-காப்பவருமாகிய திருமால், உவப்பு-விரும்புமிடம். எ-று.

கருடன்பேர் கூவ என்றும் பாடம். ஐவகைத்தருவாவன:—அரிசந்தனம், தேவதாரம் - மந்தாரம் - பாரிசாதம் - கற்பகம். இவற்றுளொன்றாகிய பாரிசாதவிருட்சத்தைச் சத்தியபாமைக்காகக் கொண்டுவந்து பூமியினிடத்துவைத்தது கிருஷ்ணவதாரத்தில்.

உகூ. தெங்கிளநீர்வீழச்சிதறுமணியைக்கரிகள்
வெங்கனலென்றஞ்சிப்போம்வேங்கடமே பைங்கழையின்
மாண்டாரைப்பண்டழைத்தார்மாமறையோன்பாற்றேன்றி
மாண்டாரைப்பண்டழைத்தார்வாழ்வு.

(இ - ள்.) தெங்கு - தென்னமரத்தின், இளநீர் - இளநீர்கள், வீழ-விழ, சிதறும் - சிதறுகின்ற, மணியை-இரத்தினத்தை, கரிகள்-யானைகள், வெங்கனலென்று - வெவ்விய நெருப்பென்று, அஞ்சிப்போம்-பயந்தோடுகின்ற, வேங்கடமே-திருவேங்கடமலையே, பைங்கழையின் - பசியவேய்ங்குழலில், மாண்-மாட்சிமைபட்ட, தாரை - ஒழுங்காகிய, பண் - இசையை, தழைத்தார் - தழைக்கவூதினவரும், மாமறையோன்பால் - பெருமைபொருந்திய பிராமணனிடத்தில், தோன்றி - போய், மாண்டாரை - இறந்தமக்களை, பண்டு-முன்னே, அழைத்தார் - அழைத்தவருமாகிய திருமால், வாழ்வு-வாழுமிடம்.

துவாரகையில் உள்ள ஓர் அந்தணன் தனக்குப்பிறந்த ஒன்பது பிள்ளைகளும் இறந்துபோக அழுதுவருந்துகையில், அவனை அருச்சுனன் நோக்கி இனி பிறக்கும் பிள்ளையை இறக்கவொட்டாமற் காப்பேனென்றும, அவ்வாறு காவாவிடின் யான் காண்டீபத்துடன் அக்கினியில் விழுந்து இறப்பேனென்றும் சபதஞ்செய்தனன். பின் பத்தாவது பிள்ளையும் பிறந்தவுடன் இறந்து விட்டது. அப்போது இறந்த அந்தப்பிள்ளையைக்கொண்டுவர அர்ச்சுனன் யமலோகமுதலிய சகலலோகங்களிலுஞ்சென்று தேடியும் காணமையால், அக்கினிப்பிரவேசஞ் செய்யப்போகையில் ஸ்ரீகிருஷ்ணபகவான் அவனைத் தடுத்து, அழைத்துக்கொண்டு ஸ்ரீவைகுண்டஞ்சென்று அங்கிருந்த அப்பிராமணனுடைய பத்துப்பிள்ளைகளையும் அழைத்துவந்து மறையவனுக்குக்கொடுத்து அவன் துக்கத்தை நீக்கி அர்ச்சுனன் உயிரையும் காத்தனன் என்பதைப் பாகவதம் தசமஸ்கந்தத்திற்காண்க.

ரு௦. அங்கயலின்மேகமதிரப்பெரும்பாந்தள்
வெங்கயமென்றங்காக்கும்வேங்கடமே-பங்கயனோ
டம்புவனங்கடந்தாரம்புயத்துமங்கையொடு
வெம்புவனங்கடந்தார்வெற்பு.

(இ-ள்.) அங்கு-அவ்விடத்து, அயலில் - பக்கத்தில், மேகம்-மேகங்கள், அதிர-ஆரவாரிக்க, பெரும்பாந்தள் - பெரியமலைப்பாம்பு, வெங்கயமென்று - வெவ்விய யானையின்பிளிறல் என்று நினைத்து, அங்காக்கும்-(விழுங்க) வாய்திறக்கின்ற, வேங்கடமே-திருவேங்கடமலையே, பங்கயனோடு - பிரமதேவனுடன், அம் - அழகிய, புவனங்கள் - உலகங்களை, தந்தார் - தந்தவரும், அம்புயத்து - தாமரையிலெழுந்தருளிய, மங்கையொடு - சீதாதேவியாருடன், வெம்பு - சுடுகின்ற, வனம் - காட்டை, கடந்தார் - கடந்தவருமாகிய திருமாலின், வெற்பு-மலை. எ-று.

ருக. திங்களிறுமாந்துலவத்தீம்பாற்கவளமென்று
வெங்களிறுகைந்நீட்டும்வேங்கடமே-பொங்கமரில்

ஆர்த்தவலம்புரியாராட்பட்டார்செய்தபிழை
பார்த்தவலம்புரியார்பற்று.

(இ-ள்.) திங்கள் - சந்திரன், இறுமாந்து - இறுமாப்படைந்து, உலவ-சஞ்சரிக்க, (அதனை) தீம்-இனிமையாகிய, பாற்கவளமென்று-பாற்சோற்றுக்கவளமென்றுநினைத்து, வெங்களிறு-வெவ்விய யானை, கை-கையை, நீட்டும் - நீட்டுகின்ற, வேங்கடமே-திருவேங்கடமலையே, பொங்கு - மிகுந்த, அமரில் - பாரதப்போரிலே, ஆர்த்த-முழக்கின, வலம்புரியார் - வலம்புரிச் சங்கத்தையுடையவரும், ஆட்பட்டார் - அடிமைப்பட்டவர், செய்த-பண்ணின, பிழை - குற்றத்தை, பார்த்து-கண்டும், அவலம்புரியார் - அவர்கட்குத் துன்பஞ்செய்யாதவருமாகிய திருமால், பற்று-பற்றுமிடம். எ-று.

கூஉ. அம்புலியின்வாழ்மானதிருங்குரற்பகுவாய்
வெம்புலியைக்கண்டேங்கும்வேங்கடமே-நம்புமெனை
வீங்கூத்தைக்கண்டிருப்பார்விண்ணோர்நரர்பிறந்து
சாங்கூத்தைக்கண்டிருப்பார்சார்பு.

(இ-ள்.) அம்புலியின் - சந்திரனிடத்தில், வாழ்மான் - வாழ்கின்றமான், அதிரும் - ஆரவாரிக்கின்ற, குரல்-குரலையும், பகுவாய்-பிளந்தவாயையுமுடைய, வெம்புலியை - வெவ்வியபுலியை, கண்டு-பார்த்து, ஏங்கும்-பயப்படுகின்ற, வேங்கடமே-திருவேங்கடமலையே, நம்புமெனை - நம்புகின்றவென்னை, வீங்கு-மிகுந்த, ஊத்தைக்கண்-மும்மலத்தில், திருப்பார்-போகச்செய்யாதவரும், விண்ணோர்-தேவரும், நரர்-மனிதரும், பிறந்து - உற்பவித்து, சாங்கூத்தை-இறக்குங்கூத்தை, கண்டு-பார்த்துக்கொண்டு, இருப்பார் - இருப்பவருமாகிய திருமால், சார்பு-சாருமிடம். எ-று.

கூங. கண்ணூல்வெடித்தகழைமுத்தங்கார்தொளைத்து
விண்ணாலியோடுதிரும்வேங்கடமே-யெண்ணார்
கலங்கவருமஞ்சனையார்கான்முளையையூர்ந்தார்
சலங்கவருமஞ்சனையார்சார்பு.

(இ-ள்.) கண்ணுல் - கணுக்களிலே, வெடித்த-வெடித்த, கழைமுத்தம் - மூங்கிலின்முத்துக்கள், கார்-மேகத்தை, தொளைத்து-தொளைசெய்து, விண்-ஆகாயத்தில், ஆலியோடு-மழைத்துளிகளுடனே, உதிரும்-விழுகின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, எண்ணார்-சத்துருக்கள், கலங்க-பயப்பட, வரும்-வருகின்ற, அஞ்சனையார்-அஞ்சனாதேவியாருடைய, கான்முளையை - பிள்ளையாகிய அநுமானை, ஊர்ந்தார் - வாகனமாக நடத்தினவரும், சலம் - நீரை, கவரும்-பருகும், மஞ்சு - மேகத்தை, அனையார் - ஒத்தவருமாகிய திருமால், சார்பு-சாருமிடம். எ-று.

௩௪. செல்லுக்குமேற்செல்லுந்திண்ணியவேய்வாசவனார்
வில்லுக்குவாளியாம்வேங்கடமே-யெல்லுக்குள்
அந்தகாரம்படைத்தாராரழல்வாயம்பினால்
வெந்தகாரம்படைத்தார்வெற்பு.

(இ-ள்.) செல்லுக்கு - மேகத்துக்கு, மேற்செல்லும்-மேலாக வளரும், திண்ணிய - பலமுள்ள, வேய் - மூங்கிலானது, வாசவனார்-தேவேந்திரனுடைய, வில்லுக்கு-தனுவுக்கு, வாளியாம் - அம்புபோல்கின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, எல்லுக்குள்-பகற்காலத்தில், அந்தகாரம்-இருளை, படைத்தார்-உண்டாக்கினவரும், ஆர்-அரிய, அழல் - அக்கினியை, வாய் - வாயிலுள்ள, அம்பினால் - அஸ்திரத்தினாலே, வெந்த-வெந்த, கார்-கறுத்த, அம்பு-கடலை, அடைத்தார்-அடைத்தவருமாகிய திருமாலின், வெற்பு - மலை. எ-று.

பகலிலிருளையுண்டாக்கினது சயத்திரதனைக் கொல்லுவதற்காக வென்றறிக. ஸ்ரீராமர் இலங்கைக்குச் செல்ல, திருவணைகட்டுதற்கு முன் வருணனைநினைக்க அவன் வராமையால் அக்கினியாஸ்திரம் பிரயோகிக்கவெந்தமையால் "அம்பினால் வெந்தகாரம்பு" என்றார்.

௩௫. பொன்கமழுங்கற்பகத்தின்பூங்காவணத்துக்கு
மென்கமுகங்காலாகும்வேங்கடமே-நன்கமரும்
ஊரத்திகிரியாரூதுந்திகிரியார்
வீரத்திகிரியார்வெற்பு.

(இ-ள்.) பொன்-அழகிய, கமழும் - பரிமளிக்கின்ற, கற்பகத்தின் - கற்பகச்சோலையின், பூங்காவணத்துக்கு - பொலிவுபெற்ற பந்தருக்கு, மென்கமுகு - மெல்லிய கமுகமரமானது, அம் காலாகும் - அழகிய காலாகின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, நன்கு அமரும் - நன்மைபொருந்திய, ஊர் அத்திகிரியார் - அத்திகிரியென்னுந் திருப்பதியையுடையவரும், ஊதும் - ஊதுகின்ற, திகிரியார்-வேய்ங்குழலையுடையவரும், வீரம் - வீரம்பொருந்திய, திகிரியார் - சக்கரத்தையுடையவருமாகிய திருமாலின், வெற்பு-மலை.

திகிரி-மூங்கில், வட்டம். இது ஆகுபெயராய் வேய்ங்குழலையும், சக்கரத்தையும் உணர்த்தியது.

௩௬. தண்ணிலைக்கண்மூங்கிற்றலைதொடுத்ததேனிறால்
விண்ணிலைக்கண்ணாடியாம்வேங்கடமே - யுண்ணிலைக்கும்
சோதிவணங்கரியார்தூயசனகாதியரும்
ஓதிவணங்கரியாரூர்.

(இ-ள்.) தண் - குளிர்ந்த, இலை - இலையையும், கண் - கணுக்களையுமுடைய, மூங்கில்தலை-மூங்கிலினுச்சியிலே, தொடுத்த-கட்டிய,

தேனிருல்-தேன்கூடானது, விண் - தேவருலகத்து, நிலைக்கண்ணாடி யாம் - நிலைக்கண்ணாடிபோல்கின்ற, வேங்கடமே - திருவேங்கடமலை யே, உள்-அன்பருள்ளத்தில், நிலைக்கும் - நிலைபெற்றிருக்கும், சோதி-ஒளியுள்ள, வணம்-நிறம், கரியார்-கருமையுள்ளவரும், தூய-பரிசுத்த மான, சனகாதியரும் - சனகர்முதலானவரும், ஓதி - வாழ்த்தி, வண ங்க-தொழுதற்கு, அரியார் - அருமையானவருமாகிய திருமாலின், ஊர் - ஊர். எ-று.

சனகாதியர் :—சனகன், சனந்தனன், சனற்குமாரன், சனத் ஸுஜாதன் என்னும் நால்வர். இவர்கள் பிரமபுத்திரர்கள்.

சனகாதியர் முன் - என்றும் பாடம்.

நஎ. தண்கமுகின்பாளைதடங்கதிரின்செல்வனுக்கு
வெண்கவரிபோலசையும்வேங்கடமே - யொண்கடல்சூழ்
வண்டுவரைநாட்டினன்மத்தாகவாரிதியுள்
பண்டுவரைநாட்டினன்பற்று.

(இ-ள்.) தண்-குளிர்ந்த, கமுகின்பாளை - பாக்குமரத்தின்பாளை யானது, தடம்-நீண்ட, கதிரின்-கிரணங்களையுடைய, செல்வனுக்கு-சூரியனுக்கு, வெண்கவரிபோல் - வெண்சாமரம்போல, அசையும்-அசைகின்ற, வேங்கடமே-திருவேங்கடமலையே, ஒள்-ஒள்ளிய, கடல் சூழ் - கடல்சூழ்ந்த, வள் - வளப்பமுள்ள, துவரைநாட்டினன்-துவா ரகை யென்னுந் திருப்பதியையுடையவனும், வாரிதியுள் - கடலிலே, மத்தாக- மத்தாக, பண்டு - முற்காலத்திலே, வரை-மலையை, நாட்டி னன்-நட்டவனுமாகிய திருமால், பற்று - பற்றுமிடம். எ-று.

மலையாவது - மந்தரகிரி.

நஅ. அங்கதிருங்கான்யாற்றடர்திவலையானனைந்து
வெங்கதிருந்தண்கதிராம்வேங்கடமே - செங்கதிர்வேல்
சேந்தனத்தமைந்தான்றிருத்தாதைவிற்கிளையாள்
பூந்தனத்தமைந்தான்பொருப்பு.

(இ-ள்.) அங்கு-அவ்விடத்து, அதிரும்-ஆரவாரிக்கின்ற, கான் யாறு - கானியாற்றில், அடர் - நெருங்கிய, திவலையால் - துளியினா லே, நனைந்து - நனைந்து, வெங்கதிரும் - சூரியனும், தண்கதிராம்-சந்திரன்போல்கின்ற, வேங்கடமே-திருவேங்கடமலையே, செங்கதிர்-செவ்வியகிரணங்களையுடைய, வேல் - வேலாயுதத்தைத் தரித்த, சேந் தன் - சுப்பிரமணியனுக்கும், அத்தம் ஐந்தான் - ஐந்துகைகளையுடைய விநாயகனுக்கும், திருத்தாதை - திருத்தாதையாகிய சிவனுடைய, விற்கிளையாள் - வில்லுக்கு இளையாதவளாகிய சீதாதேவியாரது, பூந்த னத்து-பொலிவுபெற்ற ஸ்தனத்தினிடத்து, அமைந்தான் - பொருந் தினவனுடைய, பொருப்பு - மலை. எ-று.

சீதாபிராட்டியார் தோழிகளோடு பந்து விளையாடிக்கொண்டிருக்கையில், அப்பந்து அங்கு வைக்கப்பட்டிருந்த சிவனுடைய வில்லின்கீழ்ப்போய்விழ, அப்பந்தை எடுக்கும் நிமித்தம் அவ்வில்லை இடதுகையால் தூக்கிவைத்தனள் என்பர் ஆகையால் "செங்கதிர் வேற்சேந்தனத்தமைந்தான் றிருத்தாதை விற்கிளையாள்" என்றார்.

௩௯. சேணுலவுதிங்களெனுஞ்சித்தசவேள்வெண்குடைக்கு
வேணுவொருகாம்பாகும்வேங்கடமே - கோணுமனத்
தென்னையாளாகத்தானின்னருள்செய்தான்கமல
மின்னையாளாகத்தான்வெற்பு.

(இ - ள்.) சேண் - ஆகாயத்தில், உலவு - சஞ்சரிக்கின்ற, திங்களெனும் - சந்திரனாகிய, சித்தசவேள் - சித்தசனாகிய மன்மதனுடைய, வெண்குடைக்கு - வெள்ளைக்குடைக்கு, வேணு - மூங்கில், ஒரு காம்பாகும்-ஒரு காம்புபோல்கின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, கோணும் - செவ்வைப்படாத, மனத்து-மனத்தையுடைய, என்னை - என்னை, ஆளாக - அடிமையாக, தான்-தான், இன்-இனிய, அருள்செய்தான் - கிருபைபண்ணினவனும், கமலம்-தாமரையிலிருக்கும், மின்னை-மின்போலும் பெரியபிராட்டியாரை, ஆள்-அங்கீகரித்த, ஆகத்தான் - மார்பையுடையவனுமாகிய திருமாலின், வெற்பு-மலை.
சித்தசன்-மனத்தில் சனிப்பவன்.

௪௦. தேவருடையைந்தருவின்செந்தேனிறால்கிழிய
மீவருடைபாய்கின்றவேங்கடமே-மூவடிமண்
போயிரந்தாரத்தர்புனையுமொருபதினா
றாயிரந்தாரத்தரகம்.

(இ-ள்.) தேவருடை - தேவர்களுடைய, ஐந்தருவின் - பஞ்சதருவிற்கட்டிய, செந்தேனிறால் - செவ்விய தேன்கூடு, கிழிய-கிழிய, மீவருடை - திருமலைமேலிருக்கிற வரையாடு, பாய்கின்ற-தாவுகின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, மூவடிமண் - மூன்றடிநிலத்தை, போய்-சென்று, இரந்தார்-யாசித்தவரும், அத்தர்-தந்தையானவரும், புனையும்-அலங்காரம்பெற்ற, ஒருபதினாறாயிரம்-பதினாறாயிரம், தாரத்தர்-மனைவியரையுடையவருமாகிய திருமாலின், அகம்-மலை. எ-று.

௪௧. வன்குறிஞ்சிமாதர்பால்வானோர்மருந்துக்கு
மென்குறிஞ்சித்தேன்மாறும்வேங்கடமே - நன்குறிஞ்சிப்
பேய்த்தாஞ்சுவைத்தார்பிறர்க்கமுதீர்ஈசனுக்கு
வாய்த்தாஞ்சுவைத்தார்வரை.

(இ-ள்.) வன்குறிஞ்சி - வலியகுறிஞ்சிநிலத்து, மாதர்பால்-பெண்களாகிய குறத்தியர்களிடத்திலே, வானோர்-தேவர்கள், மருந்

துக்கு - அமிர்தத்திற்கு, மென்குறிஞ்சி-மெல்லிய குறிஞ்சிமரத்தின், தேன்மாறும் - தேனை பண்டமாற்றல்செய்கின்ற, வேங்கடமே-திருவேங்கடமலையே, நன்கு - நன்றாக, உறிஞ்சி - உறிந்து, பேய் - பேயினுடைய, தனம்-முலையை, சுவைத்தார்-குடித்தவரும், பிறர்க்கு-மற்றதேவர்க்கு, அமுது-அமிர்தத்தை, ஈந்து-கொடுத்து, ஈசனுக்கு-சிவனுக்கு, வாய்த்த-பொருந்தின், நஞ்சு - விடத்தை, வைத்தார்-வைத்தவருமாகிய திருமாலின், வரை - மலை. எ-று.

நெல்லுக்கு உப்புமாறுதல்போல அமுதங்கொடுத்துத் தேன் வாங்குதல் பண்டமாற்றல். பேயானவள் - பூதனை.

சஉ. வாவுகவின்மந்திநுகர்மாங்கனிக்குக்கற்பகத்தின்
மேவுகவிகைநீட்டும்வேங்கடமே - தாவுகடல்
வேவவிலங்கைக்கொண்டார்வீடணனைவைத்தொழிந்தார்
சாவவிலங்கைக்கொண்டார்சார்பு.

(இ-ள்.) வாவு - தாவுகின்ற, கவின் - அழகிய, மந்தி - பெண் குரங்கு, நுகர் - உண்கிற, மாங்கனிக்கு - மாம்பழத்துக்கு, கற்பகத்தில்-கற்பகவிருட்சத்தில், மேவு-பொருந்திய, கவி-(ஆண்)குரங்கு, கைநீட்டும் - கையை நீட்டிக்கேட்கும், வேங்கடமே - திருவேங்கடமலையே, தாவுகடல் - உயர்ந்தெழுங்கடல், வேவ - வேகவும், இலங்கைக்கு-இலங்காபுரிக்கு, ஒள்-ஒள்ளிய, தார்-மாலையினையுடைய, வீடணனை-விபீடணனை, வைத்து - அரசனாகவைத்து, ஒழிந்தார்-மற்ற அரக்கர்கள், சாவ - இறக்கவும், வில் - வில்லை, அம்-அழகிய, கைக்கொண்டார்-கையிற்கொண்ட திருமால், சார்பு-சாருமிடம்.

சங. வெள்ளியகன்மீதோர்விடர்முளைத்தசெங்காந்தள்
வெள்ளியகல்விளக்காம்வேங்கடமே - வெள்ளியெனும்
வேதியனாட்டங்கெடுத்தார்மேதினியைப்பாதலமென்
றோதியனாட்டங்கெடுத்தாரூர்.

(இ-ள்.) வெள்ளியகல்மீது - வெள்ளைக்கல்லின்மேலே, ஓர் விடர் - ஓர் கமரிலே, முளைத்த - உண்டான, செங்காந்தள் - செவ்வியகாந்தட்பூ, வெள்ளி அகல் - வெள்ளி அகலில் (ஏற்றிய), விளக்காம் - விளக்கைப்போல்கின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, வெள்ளியெனும் - சுக்கிரனென, வேதியன்-பிராமணனுடைய, நாட்டம் - கண்ணை, கெடுத்தார் - கெடுத்தவரும், மேதினியை-பூமியை, பாதலமென்று - பாதாளமென்று, ஓதிய - சொல்லப்பட்ட, நாடு-நாடாகிய, அங்கு - அவ்விடத்தினின்று, எடுத்தார்-எடுத்தவருமாகிய திருமாலின், ஊர் - ஊர். எ-று.

மகாபலி குறளுருக்கொண்டுவந்து யாசித்த பிரமசாரிக்கு மூன்றடிமண் நீரோடு தானஞ்செய்ய இருக்கையில், அவன் குருவாகிய

சுக்கிரன் இவ்வுருவம் சகலலோகங்களையும் அளந்துகொள்ளத்தக்க திருமாலினுருவமாகையால் தானஞ்செய்ய இசையற்க என்று தடுத்தும், அவன்சொற்கேளாமல் மாவலி தானஞ்செய்ய நீர் வார்க்கையில் சுக்கிரன் ஓர் சிற்றுருக்கொண்டு அந்நீர் விழவொட்டாமல், கமண்டலத்தில் நீர்வரும் துவாரமுகத்தில் அடைத்துக்கொள்ள குறளாய்வந்த திருமால் தருப்பையால் குத்த, சுக்கிரன் ஒருகண் இழந்தனன் என்பது. இரணியாட்சன் பூமியைப் பாயாகச்சுருட்டிப் பாதலஞ்சென்றபோது திருமால் வராகருபங்கொண்டு அவனைச் சம்மரித்து, அப்பூமியை முன்போல் நிலைநிறுத்தினர் என்பது.

சுச. அல்லிமலர்க்காந்தளின்மேலாடுஞ்சுரும்பினங்கள்
மெல்லியர்கள்கைக்கழங்காம்வேங்கடமே-மல்லினைப்
பண்டறைந்தவன்புடையார்பார்த்தனுக்குத்தத் துவநூல்
விண்டறைந்தவன்புடையார்வெற்பு.

(இ-ள்.) அல்லி - அகவிதழையுடைய, மலர்-மலராகிய, காந்தளின்மேல் - செங்காந்தளிலே, ஆடும் - ஆடுகின்ற, சுரும்பினங்கள் - வண்டின்கூட்டங்கள், மெல்லியர்கள் - பெண்களுடைய, கைக்கழங்கு ஆம் - கையிலுள்ள கழற்காய்போல்கின்ற, வேங்கடமே-திருவேங்கடமலையே, மல்லினை - மல்லர்களை, பண்டு-முற்காலத்திலே, அறைந்த - அடித்த, வல்புடையார் - வலிய அடியையுடையவரும், பார்த்தனுக்கு - அருச்சுனனுக்கு, தத்துவநூல் - பகவத் கீதையை, விண்டு - வெளியிட்டு, அறைந்த-சொன்ன, அன்புடையார்-அன்பையுடையவருமாகிய திருமாலின், வெற்பு - மலை. எ-று.

மல்லராவார் கம்சனால் ஏவப்பட்ட சாணூர முஷ்டிகர்கள்.

சுரு. காந்தளிரவலர்போற்கையேற்பக்கொன்றைகொடை
வேந்தனெனப்பொன்சொரியும்வேங்கடமே-பூந்துளவின்
கான்மடங்காமார்வத்தார்காணவிரும்பினர்மேல்
நான்மடங்காமார்வத்தார்நாடு.

(இ-ள்.) காந்தள் - காந்தள்மலர், இரவலர்போல் - யாசகரைப்போல், கை ஏற்ப - கையேந்த, கொன்றை - கொன்றைமரமானது, கொடைவேந்தனென - கொடுக்குமரசனைப்போல, பொன்சொரியும்-பொன்போலும் பூவைச்சிந்துகின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, பூந்துளவின் - பொலிவுபெற்ற திருத்துழாயின், கான்மடங்கா-வாசனைநீங்காத, மார்வத்தார் - மார்பையுடையவரும், காணவிரும்பினர்மேல் - (தன்னை) சேவிக்கவிரும்பினோரிடத்திலே, நான்மடங்காம் - நான்குமடங்காகிய, ஆர்வத்தார் - அன்பையுடையவருமாகிய திருமாலின், நாடு - நாடு. எ-று.

பொன்போலும் பூவைப்பொன்னென்று உவமையாகுபெயரால் கூறினர். தன்னை அடைய விரும்பும் அடியாரினும் தான் அவரை ஆண்டருள அதிகவிருப்புடையார் என்பதற்கு "காணவிரும்பினர் மேல் நான்மடங்கா மார்வத்தார்" என்றார்.

சசு. நாகத்தின்மேற்குறவர்நன்கெறிந்தமாணிக்கம்
மேகத்தின்மின்புரையும்வேங்கடமே-மாகத்தின்
மாத்தாண்டமண்டலத்தார்வாயுண்டுமிழ்ந்தளந்து
காத்தாண்டமண்டலத்தார்காப்பு.

(இ-ள்.) நாகத்தின்மேல் - யானையின்மேலே, குறவர்-குறவர்கள், நன்கு - நன்றாக, எறிந்த - எறிந்த, மாணிக்கம் - மாணிக்கக்கல், மேகத்தின் - மேகத்தினது, மின்புரையும் - மின்னலை நிகர்க்கின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, மாகத்தின் - ஆகாயத்துள்ள, மாத்தாண்ட மண்டலத்தார் - சூரியமண்டலத்தையுடையவரும், வாயுண்டு - வாயினாலேயுண்டு, உமிழ்ந்து - வெளிப்படுத்தி, அளந்து-திருவடியாலளந்து, காத்து - இரட்சித்து, ஆண்ட - ஆண்ட, மண்-பூமியாகிய, தலத்தார்- தலத்தையுடையவருமாகிய திருமால், காப்பு-காக்குமிடம். எ-று.

இறைவன் பிராட்டியோடு சூரியமண்டலத்தில் வீற்றிருத்தலால் "மாகத்தின் மாத்தாண்ட மண்டலத்தார்" என்றார். உலகங்களையுண்டுமிழ்ந்தது என்றது மகாபிரளயத்தில் உலகங்களைத் தனக்குள் வைத்திருந்து மீண்டும் வெளிப்படுத்தினமையையென்க. அளந்து காத்தது திரிவிக்கிரமாவதாரத்தில். ஆண்டது இராமகிருஷ்ணாவதாரங்களில்.

சஎ. செம்பதுமராகச்சிலைசூழ்பெரும்பாந்தள்
வெம்பரிதியூர்கோளாம்வேங்கடமே-யும்பருல
கோதத்தினப்புறத்தானோராலிலைதுயின்றான்
வேதத்தினப்புறத்தான்வெற்பு.

(இ-ள்.) செம்பதுமராகச்சிலை-சிவந்த பதுமராகக்கல்லை, சூழ்-சுற்றியிருக்கின்ற, பெரும்பாந்தள் - பெரியமலைப்பாம்பு, வெம்பரிதி-சுடுகின்றசூரியனைவளைந்த, ஊர்கோளாம் - பரிவேடம்போல்கின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, உலகு - உலகமானது, உம்பர் ஓதத்தின் அப்பு-உயர்ந்த வெள்ளநீரில் (பிரளயவெள்ளத்தில்), உற-பொருந்த, தான் - தான், ஓராலிலை - ஓராலிலையிலே, துயின்றான்-கண்வளர்ந்தவனும், வேதத்தின் - வேதத்துக்கு, அப்புறத்தான் - அப்பாற்பட்டவனுமாகிய திருமாலின், வெற்பு - மலை. எ-று.

சஅ. கோலமணிப்பாறையிற்பாய்கோடரங்கள்செங்கதிரோன்
மேலநுமன்பாய்ந்தனையவேங்கடமே-நாலுமறை
ஆய்ந்தபரதத்துவந்தானானன்குடமாடல்
வாய்ந்தபரதத்துவந்தான்வாழ்வு.

(இ-ள்.) கோலம் - அழகிய, மணிப்பாறையில் - இரத்தினப் பாறையின்மேல், பாய் - தாவாநின்ற, கோடரங்கள் - குரங்குகள், செங்கதிரோன்மேல் - சூரியன்மேல், அநுமன்பாய்ந்தனைய - அநுமான் பாய்ந்ததைப்போல்கின்ற, வேங்கடமே-திருவேங்கடமலையே, நாலுமறை - நாலுவேதங்களாலும், ஆய்ந்த - ஆராயப்பட்ட, பரதத்துவம் தானானன் - பரத்துவப்பொருள்தானே ஆனவனும், குடமாடல் - குடக்கூத்து என்கிற, வாய்ந்த - அழகமைந்த, பரதத்து-நாட்டியத்தில், உவந்தான் - களித்தவனுமாகிய திருமால், வாழ்வு-வாழுமிடம், எ-று.

சகூ. கொம்பினிருல்வாங்கநிமிர்குஞ்சரக்கையம்புலிமேல்
வெம்பியெழுங்கோளரவாம்வேங்கடமே- தும்பிபல
போர்காதுமீர்ந்தார்புனையரக்கிமூக்கினொடு
வார்காதுமீர்ந்தார்வரை.

(இ-ள்.) கொம்பின்-கொம்பிற்கட்டிய,இருல்-தேன்கூட்டை, வாங்க - வளைக்க, -நிமிர் எடுக்கும், குஞ்சரக்கை - யானையினுடையகை, அம்புலிமேல் - சந்திரன்மேல், வெம்பி - கோபித்து, எழும்-எழுகின்ற, கோளரவாம்-இராகுக்கோள்போல்கின்ற, வேங்கடமே-திருவேங்கடமலையே, தும்பிபல - பலவண்டுகள், போர் - சண்டையை, காதும் - விரும்புகின்ற, ஈர்தார் - குளிர்ந்தமாலையை, புனை-அணிந்த, அரக்கி-சூர்ப்பனகையின், மூக்கினொடு-மூக்குடனே, வார்-நீண்ட, காது - காதையும், ஈர்ந்தார்-அறுத்தவருடைய, வரை-மலை.

இளையபெருமாள் செய்ததைப்பெரிய பெருமாள் செய்ததாகக் கூறியது ஒற்றுமை நயக்கருதி.

ருo. வண்மைதிகழ்வெண்பளிங்குவட்டத்திற்கண்டுயின்மான்
விண்மதியின்மானேய்க்கும்வேங்கடமே-யொண்மதியால்
நூலைத்தாமோதரனார்நோக்கவரியார்துளவ
மாலைத்தாமோதரனார்வாழ்வு.

(இ-ள்.) வண்மைதிகழ்-அழகு விளங்குகின்ற, வெண்பளிங்கு வட்டத்தில் - வட்டமாகிய வெள்ளிய பளிங்குக்கல்லில், கண்துயில்மான் - கண்ணுறங்குகின்றமான், விண் - ஆகாயத்தில், மதியின்-சந்திரனிடத்துள்ள, மான்-மானை, ஏய்க்கும்-நிகர்க்கின்ற, வேங்கடமே-திருவேங்கடமலையே, ஒண்மதியால் - நல்ல புத்தியினாலே, நூல்-ஆகமங்களை, ஓது - சொன்ன, அரனார் - சிவன், நோக்க-காணுதற்கு,

அரியார் - அருமையானவரும், துளவமாலை - திருத்துழாய்மாலை யையணிந்த, தாமோதரனார்-தாமோதரனென்னுந் திருநாமத்தையு டையவருமாகிய திருமால், வாழ்வு - வாழுமிடம். எ-று.

தாம் - அசைநிலை.

சிலேடைகள்.

ருக. காதலித்துச்சார்ந்தவர்க்குங்காமியத்தைச்சார்ந்தவர்க்கும்
வேதனைக்கூற்றைத்தவிர்க்கும்வேங்கடமே-போதகத்தை
மோதிமருப்பொசித்தார்முன்பதினாறாயிரவர்
ஓதிமருப்பொசித்தாரூர்.

(இ-ள்.) காதலித்து - பரமபதத்தைவிரும்பி, சார்ந்தவர்க்கும்- அடைந்தவர்க்கும், வேதனை - பிரமனால்வரும் சன்மத்தையும், கூற்றை - இயமனால்வரும் மரணத்தையும், தவிர்க்கும்-நீக்குகின்ற, வேங்கடமே—, காமியத்தை-இம்மைப்பேற்றை, சார்ந்தவர்க்கும் - விரும்பினவர்க்கும், வேதனைக்கூற்றை - துன்பங்களாகிய கூறுபாட்டை, தவிர்க்கும் - நீக்குகின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, போதகத்தை-யானையை, மோதி - அடித்து, மருப்பு-கொம்பை, ஒசித்தார்-முறித்தவரும், முன் - முற்காலத்திலே, பதினாறாயிரவர் - பதினாறாயிரம் கோபிகாஸ்த்ரீகளின், ஓதி - அளகபாரத்தில், மரு-வாசனையை, பொசித்தார்-அநுபவித்தவருமாகிய திருமாலின், ஊர்-ஊர். எ-று.

ருஉ. கேள்வித்துறவோருங்கேடறவில்வாழ்வோரும்
வேள்விக்கினமாற்றும்வேங்கடமே-மூள்வித்து
முன்பாரதமுடித்தார்மொய்வேந்தர்வந்தவிய
வன்பாரதமுடித்தார்வாழ்வு.

(இ-ள்) கேள்வி - ஞானக்கேள்விகளையுடைய, துறவோரும்- துறவிகளும், வேள் - மன்மதனால்வரும், விக்கினம் - துன்பத்தை, மாற்றும் - நீக்குகின்ற, வேங்கடமே—, கேடு - கெடுதல், அற-நீங்க, இல்வாழ்வோரும் - இல்லற ஒழுக்கத்தில் வாழ்பவரும், வேள்விக்கு- யாகஞ்செய்தற்கு, இனம் - இனமானவற்றை, ஆற்றும்-செய்கின்ற, வேங்கடமே-திருவேங்கடமலையே, மூள்வித்து-மூட்டிவித்து, முன்- முற்காலத்தில், பார்-பார் என்னும் உறுப்பையுடைய, ரதம்-இரதத் தையும், முடி-மகுடத்தையும், தார் - மாலையினையுமுடைய, மொய்- வலிமையுள்ள, வேந்தர்வந்து - அரசர்வந்து, அவிய-மடிய, வன்பார தம் வலியபாரதப்போரை, முடித்தார்-நிறைவேற்றினவராகிய திரு மால், வாழ்வு - வாழுமிடம். எ-று.

௫௩. பொய்யாம்வினையேனைப்போல்வாருமன்பருஞ்செய்
மெய்யாம்வழுத்தேயும்வேங்கடமே-செய்யாள்
தனத்துவசப்பொற்புள்ளார்தானவரைமோதும்
சினத்துவசப்பொற்புள்ளார்சேர்வு.

(இ-ள்.) பொய்யாம் - பொய்யாகிய, வினையேனைப்போல் வாரும் - தொழிலையுடைய என்னைப்போன்றவரும், மெய் - சரீரத்தில், ஆம் - உண்டாகிய, வழு - குற்றம், தேயும் - குறைகின்ற, வேங்கடமே—, அன்பரும் - தாசரும், செய் - செய்கின்ற, மெய்யாம்-உண்மையாகிய, வழுத்து - தோத்திரம், ஏயும் - பொருந்துகின்ற, வேங்கடமே-திருவேங்கடமலையே, செய்யாள்-பெரியபிராட்டியார், தனத்து - தனத்திற்கு, வசம்பொற்பு - வசமான அழகை, உள்ளார்-உடையவரும், தானவரை-அசுரரை, மோதும்-அடிக்கின்ற, சினம்-கோபத்தையுடைய, துவசம் - கொடியான, பொன்புள்ளார்-பொன்னிறமாகிய பறவையையுடையவருமாகிய திருமால், சேர்வு - சேருமிடம். எ-று.

௫௪. கோடலிலாவுள்ளத்துக்கோதில்டியவரும்
வேடருமங்கைவரைவெல்வேங்கடமே-மூடர்
மனமாமனைக்கொன்றார்வன்கஞ்சனென்னும்
சினமாமனைக்கொன்றார்சேர்வு.

(இ-ள்.) கோடல் - கோணல், இலா-இல்லாத, உள்ளத்து-மனத்தையுடைய, கோதில் - குற்றமில்லாத, அடியவரும் - தாசர்களும், அங்கு - அவ்விடத்து, ஐவரை - பஞ்சேந்திரியங்களை, வெல்-வெல்லுகின்ற, வேங்கடமே—, வேடரும்-வேடரும், அம்-அழகிய, கைவரை - யானையை, வெல் - வெல்லுகின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, மூடர் - மூடருடைய, மனமாம் - இருதயமாகிய, மனைக்கு - வீட்டில், ஒன்றார் - பொருந்தாதவரும், வன்கஞ்சனென்னும் - வலியகஞ்சனென்கின்ற, சினம்-கோபத்தையுடைய, மாமனை-அம்மானை, கொன்றார் - கொன்றவருமாகிய திருமால், சேர்வு-சேருமிடம். எ-று.

௫௫. மொய்வதனமங்கையர்கண்முன்கையும்யோகியர்கள்
மெய்வயதுமஞ்சுகமார்வேங்கடமே பெய்வளையார்
பாற்றிருப்பாதஞ்சிவந்தார்பற்றினார்புன்பிறப்பை
மாற்றிருப்பாதஞ்சிவந்தார்வாழ்வு

(இ-ள்.) மொய் - அழகுமிக்க, வதனம் - முகத்தையுடைய, மங்கையர்கள்-பெண்களின், முன்கையும்-முன்கையிலும், அம்-அழகிய, சுகம்-கிளி, ஆர் - பொருந்துகின்ற, வேங்கடமே—, யோகியர்

கள் - யோகஞ்செய்வோருடைய, மெய் - சரீரத்தின், வயதும் - ஆயுளும், அஞ்சு - ஐந்து, உகம் - யுகத்தை, ஆர்-பொருந்துகின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, பெய்வளையார்பால் - வளையணிந்த மாதர்களிடத்திலே, திருப்பாது-மனத்தைத்திருப்பாமல், அஞ்சி வந்தார் - பயந்துவந்து, பற்றினூர் - தஞ்சமாகப்பற்றினவரது, புல்பிறப்பை - புல்லிய பிறப்பை, மாற்று-மாற்றுகின்ற, இரு-இரண்டு, பாதம் - திருவடிகளும், சிவந்தார் - சிவந்தவர், வாழ்வு-வாழுமிடம்.

௫சு. இல்லக்குறத்தியரும்யாக்கைநிலைவேட்டவரும்
மெல்லக்கிழங்கெடுக்கும்வேங்கடமே-நல்ல
புதுப்பூவைவண்ணத்தான்போர்முகத்துச்செவ்வாய்
மதுப்பூவைவண்ணத்தான்வாழ்வு.

(இ - ள்.) இல்லம் - வீட்டிலிருக்கும், குறத்தியரும் - குறப்பெண்களும், மெல்ல - மென்றுதின்ன, கிழங்கு எடுக்கும் - கிழங்கைத் தோண்டியெடுக்கிற, வேங்கடமே—, யாக்கை நிலை-சரீரம் நீடித்து நிற்றலை, வேட்டவரும் - விரும்பினவர்களும், மெல்ல-மெதுவாக, கிழம் - மூப்பை, கெடுக்கும் - அழிக்கின்ற, வேங்கடமே-திருவேங்கடமலையே, நல்ல - நலமுடைய, புது - புதிய, பூவை வண்ணத்தான் - காயாம்பூ நிறத்தையுடையவனும், போர் முகத்து - யுத்தகளத்தில், செவ்வாய் - செவந்தவாயாகிய, மதுப்பூ - தேனையுடைய மலரில், வை - வைத்தருளிய, வள் - வளமுடைய, நத்தான் - சங்கையுடையவனுமாகிய திருமால், வாழ்வு - வாழுமிடம். எ-று.

வாயாகிய பூ என்றது உருவகம்.

௫எ. தேனியலுங்கூந்தலார்செங்கரமுமாதவத்தோர்
மேனியுமையம்பொழியும்வேங்கடமே-ஞானியர்கள்
தாங்குறியெட்டக்கரத்தார்தாளுரன்மேல்வைத்துவெண்ணெய்
தாங்குறியெட்டக்கரத்தார்சார்வு.

(இ-ள்.) தேன் - மணம், இயலும் - பொருந்தும், கூந்தலார்-அளகபாரத்தையுடைய பெண்களது, செங்கரமும் - சிவந்தகையும், ஐயம் பொழியும்-பிச்சையைச்சொரிகின்ற, வேங்கடமே—, மாதவத்தோர்-பெருமைபொருந்திய தவத்தையுடையோர்களது, மேனியும்-சரீரமும், ஐ அம்பு - (மன்மதனுடைய) பஞ்சபாணங்களை, ஒழியும்-பொருந்தாமல் நீங்குகின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, ஞானியர்கள் - அறிவுள்ளவர்கள், குறி குறிக்கப்பட்ட, எட்டுஅக்கரத்தார் - திரு அட்டாக்கரத்தையுடையவரும், தாள் - திருவடியை, உரல்மேல் - உரலின்மேலே, வைத்து - வைத்து, வெண்ணெய்-வெண்ணெயை, தாங்கு - தாங்குகின்ற, உறி-உறியை, எட்டு - எட்

டிப்பிடித்த, அ கரத்தார் - அத்தக் கையை யுடையவருமாகிய திரு மால், சார்வு - சாருமிடம். எ-று.

எட்டெழுத்தாவது - திருமந்திரம்.

ருஅ. காணையிலார்சொற்கேட்டகந்திருவருந்தவரும்
வீணையிராகத்தைவிடும்வேங்கடமே-கோணை
இருங்குண்டையோட்டினேற்பொழித்தான்கூனி
மருங்குண்டையோட்டினன்வாழ்வு.

(இ-ள்.) காண் - பார்க்கும், ஐயிலார்-வேல்போன்ற கண்ணை யுடைய பெண்களின், சொல்கேட்ட - வார்த்தையைக்கேட்ட, கந் திருவரும் - கந்திருவரும், வீணை - யாழினுடைய, இராகத்தை-பண்ணை, விடும் - வாசித்தல் ஒழிகின்ற, வேங்கடமே—, தவரும்-இருடிகளும், வீண் - பயனற்ற, ஐ இராகத்தை - ஐந்து ஆசையை, விடும்-விடுகின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, கோணை - பலத்தை யுடைய, இருகுண்டை-பெரியகாளையை, ஓட்டினன் ஊருகின்ற சிவனது, ஏற்பு-இரக்குந்தொழிலை, ஒழித்தான் - நீக்கினவனும், கூனி மருங்கு - கூனையுடையவளான மந்தரையின் கூனிடத்தில், உண்டை-உண்டையை, ஓட்டினன் - செலுத்தினவனுமாகிய திருமால், வாழ்வு-வாழுமிடம். எ-று.

ருகூ. முந்நூன்மறையவர்நாமூதரம்பைமாரினடு
மெய்ந்நூனலங்கவரும்வேங்கடமே-பொய்ந்நூலால்
அச்சமயக்கத்தினராதரிக்கத்தெய்வங்கள்
வச்சமயக்கத்தினர்வாழ்வு.

(இ-ள்.) முந்நூல்-முப்புரிநூலணிந்த, மறையவர்-பிராமணர்களுடைய, நா - நாவானது, மெய்நூல் நலம் - உண்மையாகிய சாஸ்திரங்களின் நல்லபொருள்களை, கவரும்-கிரகிக்கின்ற, வேங்கடமே—, மூது அரம்பைமாரின் நடு-பழய அரம்பாஸ்திரீகளின இடையானது, மெய்நூல் - மிருதுவாகிய நூல், நலங்க-வருந்த, வரும் - வருகின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, பொய்நூலால் - பொய்யாகிய சாஸ்திரங்களினால், அ சமயம் - அந்தந்த சமயக்கோட்பாடுகளை, கத்தினர் - பிதற்றினவர்கள், ஆதரிக்க-விரும்பிக்கொண்டாட, தெய் வங்கள் வச்ச - தெய்வங்களைவைத்த, மயக்கத்தினர் - மாயை யுடைய திருமால், வாழ்வு-வாழுமிடம். எ-று.

நூல் நலங்கவருதலாவது இடைநூலினும் நுண்ணிதென்றபடி.

சுO. ஓதுமறையோர்புரமுமுள்ளுங்கலையினரு
மேதையகலாவிருக்கும்வேங்கடமே கோதைசுகுழல்
சுற்றுததாரணியார்தூயதிருத்தாளுன்றப்
பற்றுததாரணியார்பற்று.

(இ-ள்.) ஓதும் - அத்தியயனம்பண்ணுகின்ற, மறையோர் - பிராமணருடைய, புரமும் - சரீரமும், கலையின் - மானினுடைய, மேனை - தோல், அகலா இருக்கும் - நீங்காதிருக்கின்ற, வேங்கடமே—, உள்ளும் - அவர்களிருதயமும், கலையின் - சாஸ்திரங்களினது, அரு - அரிய, மேதை - அறிவு, அகலா இருக்கும் - அகன்று இருக்கின்ற, வேஙகடமே - திருவேங்கடமலையே, கோதை - சூடிக்கொடுத்தநாச்சியார், குழல் - அளகபாரத்திலே, சுற்றாத - அணியாத, தார் - மாலையை, அணியார் - அணியாதவரும், தூய - பரிசுத்தமான, திரு - சிறந்த, தாள் - திருவடிகளை, ஊன்ற - ஊன்றியளக்க, பற்றாத - போதாத, தாரணியார் - பூமியையுடையவருமாகிய திருமால், பற்று - சாருமிடம். எ-று.

சுற்றாததாரணியாராவது ஆண்டாள் அணிந்த திருமாலையை விட்டு வேறே திருமாலையைச்சேர்த்துப் பெரியாழ்வார் வடபத்திரசாயிக்குச் சமர்ப்பிக்க அதைப் பெருமாள் இந்தமாலை கோதை மணமில்லையென்று வெறுத்தது.

சுக. நன்முலைபோல்வெண்ணகையார்நாயகர்மேல்வைத்தநெஞ்சும்
மென்முலையுங்கற்புரஞ்சேர்வேங்கடமே-முன்மலைந்து
தோற்றமாரீசனுர்தோற்றிமாயம்புரிய
சீற்றமாரீசனுர்சேர்வு.

(இ-ள்.) நல் - நல்ல, முல்லைபோல் - முல்லை அரும்புபோல்கின்ற, வெள் - வெண்மையாகிய, நகையார் - முறுவலையுடைய பெண்கள், நாயகர்மேல்வைத்த - கணவரிடத்தில்வைத்த, நெஞ்சும் - மனதும் - கற்பு - கற்பினது, உரம்சேர் - பலம்பொருந்திய, வேங்கடமே—, மெல் - மெல்லிய, முலையும் - தனங்களும், கற்புரஞ்சேர் - கர்ப்புரஞ்சேர்ந்த கலவைச்சார்தணியப்பெற்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, முன் - முற்காலத்தில், மலைந்து - எதிர்ந்து, தோற்ற - தோற்றோடின, மாரீசனர் - மாரீசன், தோற்றி - பின்னும் வந்து, மாயம்புரிய - வஞ்சனைபண்ண, சீற்றம் - கோபம், ஆர் - பொருந்தின, ஈசனுர் - சுவாமி, சேர்வு - சேருமிடம். எ-று.

முன்மலைந்துதோற்றது - விசுவாமித்திரர் யாகத்தில்வந்து ஓடிப்போனமை. மாயம்புரிந்தது பொன்மானாகவந்ததாம். பின் என்பது அவாய்நிலையாகக் கொள்க.

சுஉ. கூறுங்கிளிமொழியார்கொங்கையென்றுங்கண்ணென்றும்
வீறுமருப்பிணைசேர்வேங்கடமே-நாறும்
துளவமலர்க்கணியார்தொண்டாய்த்தமக்கன்
புளவமலர்க்கண்ணியாருர்.

(இ-ள்.) கூறும் - சிறப்பித்துச் சொல்லப்பட்ட, கிளிமொழியார் - கிளிபோலும் வார்த்தையையுடைய பெண்களின், கொங்கை -

ஸ்தனங்கள், என்றும் - என்றாலும், வீறும் - உயர்ந்த, மருப்பு இணை- இரண்டு யானைத் தந்தங்களை, சேர்-நிகர்க்கின்ற, வேங்கடமே—, கண் என்றும் - அவர்களுடைய கண்கள் என்றாலும், வீறு - வளர்தல், மரு-பொருந்திய, பிணை-பெண்மானின் கண்களை, சேர்-நிகர்க்கின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, நாளும் - பரிமளிக்கின்ற, துளவ மலர்க்கண்ணியார் - துளவமாலையினையுடையவரும், தொண்டாய்- அடிமையாய், தமக்கு-தம்மிடத்திலே, அன்புஉள-அன்புள்ள, அமலர்க்கு - பரிசுத்தமானதாசருக்கு, அண்ணியார் - சமீபமானவருமாகிய திருமாலின், ஊர்-ஊர். எ-று.

கூரு. மாதரம்பொன்மேனிவடிவுமவர்குறங்கு
மீதரம்பையைப்பழிக்கும்வேங்கடமே-பூதமைந்தின்
பம்பரமாகாயத்தார்பாடினுல்வீடருளு
நம்பரமாகாயத்தார்நாடு.

(இ-ள்.) மாதர்-பெண்களுடைய, அம்-அழகிய, பொன்மேனி வடிவும் - பொலிவுபெற்ற சரீரத்தின் உருவமும், மீது-சுவர்க்கத்திலுள்ள, அரம்பையை-அரம்பாஸ்த்ரீகளை, பழிக்கும்-பழிக்கின்ற, வேங்கடமே—, அவர்குறங்கும் - அவருடைய தொடையும், மீது - உயர்ந்த, அரம்பையை - வாழையை, பழிக்கும் - பழிக்கின்ற, வேங்கடமே-திருவேங்கடமலையே, பூதமைந்தின்-பஞ்சபூதங்களினுலாகிய, பம்பரம் - (சுழல்கின்ற) பம்பரம்போல் மாறிமாறிப் பிறக்கின்ற, மா-மிகுதியாகிய, காயத்தார்-சரீரங்களையுடையவராய மனிதர், பாடினுல்-துதித்தால், வீடுஅருளும்-முத்திகொடுக்கின்ற, நம்-நம்முடைய, பரமாகாயத்தார் - பரமபதத்தையுடையவரது, நாடு-ஊர். எ-று.

பூதம் ஐந்தின் பம்பர் - பஞ்சபூதங்களினும் நிறைத்தவரும், அ- அந்த, மா - பெரியபிராட்டியை, காயத்தார் - திருமேனியிலுடையவரும், என்றுரைப்பினும் பொருந்தும். பூதமைந்தின் பம்பு-பஞ்சபூதங்களினும் நிறைந்த, அ-அந்த, ரமா-பெரியபிராட்டியை, காயத்தார் - திருமேனியிலுடையவர், என்றுரைத்தலுமொன்று.

கூசு. கோள்கரவுகற்றவிழிக்கோதையர்கள்பொற்றாளும்
வேள்கரமுமம்பஞ்சார்வேங்கடமே நீள்கரனா
ரூடணனார்முத்தலையார்துஞ்சவெய்துதுஞ்சாரைக்
கூடணனார்முத்தலையார்குன்று.

(இ ள்.) கோள்-(ஆடவர்மனத்தை) கொள்ளுதலாகிய, கரவு- வஞ்சகத்தை, கற்ற - பயின்ற, விழி - கண்களையுடைய, கோதையர்கள்-மாதர்களது, பொன்தாளும்-பொலிவையுடையகால்களும், அம்- அழகிய, பஞ்சு-செம்பஞ்சுக்குழம்பை, ஆர் - பொருந்துகின்ற, வேங்கடமே—, வேள் - மன்மதனுடைய, கரமும்-கையும், அம்பு அஞ்சு-

பஞ்சபாணங்களை, ஆர்-பொருந்துகின்ற, வேங்கடமே-திருவேங்கட மலையே, நீள்-நெடிய, கரனார் - கரனும், தூடணனார் - தூடணனும், மூத்தலையார்-திரிசிராவும், துஞ்ச இறக்க, எய்து - அம்பெய்து, துஞ்சாரை - உறங்காத இளையபெருமாளை, கூடு-சேர்ந்த, அணனார் ஆனை-அண்ணனாரான பெரியபெருமாளுடைய, முத்து - முத்துகள், அலை-அருவியாற்றின் அலைகளில், ஆர்-விளங்குகின்ற, குன்று-மலை. எ-று.

இளையபெருமாள்-இலக்குமணர். பெரியபெருமாள்-ஸ்ரீராமர். அரணியவாசஞ்செய்யப் புக்கதுமுதல் அயோத்திக்குத் திரும்புமளவும் நித்திரையையொழித்துத் தமையனைக் காத்துநின்றமையால் இலக்குமணரைத் துஞ்சார் என்றார்.

கூடு. கோங்கைக்கோட்டேறிக்குலுக்குமரியுங்கரியும்
வேங்கைக்கோடாதரிக்கும்வேங்கடமே-பூங்கைக்குள்
மெய்த்தவளச்சங்கெடுத்தார்மேகலைவிட்டங்கைதலை
வைத்தவளச்சங்கெடுத்தார்வாழ்வு.

(இ-ள்.) கோங்கை - கோங்குமரத்தை, கோடு - கிளைகளில், ஏறி-ஏறி, குலுக்கும் - அசைக்கின்ற, அரியும்-குரங்கும், வேங்கை கோடு - வேங்கைமரத்தின்கொம்பை, ஆதரிக்கும் - விரும்புகின்ற, வேங்கடமே—, கரியும்-யானைகளும், வேங்கைக்கு-புலிக்குப்பயந்து, ஓடா - ஓடாமல், தரிக்கும்-நிற்கின்ற, வேங்கடமே - திருவேங்கட மலையே, பூ-பொலிவுபெற்ற, கைக்குள் - கையினிடத்து, மெய்-உருவம், தவளம்-வெண்மையான, சங்கு-சங்கத்தை, எடுத்தார்-ஏந்தினவரும், மேகலைவிட்டு - மேகலாபரணத்தைவிட்டு, அம்-அழகிய, கை-கையை, தலை வைத்தவள் - சிரசின்மீது வைத்தவளாகிய துரோபதையின், அச்சம் - பயத்தை, கெடுத்தார் - நீக்கினவருமாகிய திருமால், வாழ்வு-வாழுமிடம். எ-று.

துரியோதனன் இராசசபையில் துரோபதையை நிறுத்தித் துர்ச்சாதனனைக்கொண்டு துகில் உரிந்தபோது, அவள் ஒருகையால் தன் ஆடையைப்பிடித்துக்கொண்டு எம்பெருமானைக் கூவி அழைத்தும் ஆடை நெகிழ்வதைக்கண்டு, அவள் தான் சுதந்தரையாய் ஒரு கையால் ஆடையைப் பற்றியிருத்தலால், இறைவன் பராமுகஞ் செய்கின்றனன் என்றுணர்ந்து, துகிலைப்பற்றிய கையையும் சோர விட்டு கோவிந்தாவென்று துதிக்க, எம்பெருமான் ஆடை வளரச் செய்து மானங்காத்தனன் என்பது முன் நடந்தசெய்தி.

கூகூ. மாவிற்குயிலுமயிலுமொளிசெய்ய
மேவிப்புயறவழும்வேங்கடமே-ஆவிக்குள்
ஆனவருடந்தடுத்தாரானிரைக்காக்குன்றேந்தி
வானவருடந்தடுத்தார்வாழ்வு.

(இ - ள்.) மாவில் - மாமரத்திலுள்ள, குயிலும் - குயில்களும், ஒளிசெய்ய - ஒளித்துக்கொள்ள, மேவி - பொருந்தி, புயல்-மேசம், தவழும் - சஞ்சரிக்கின்ற, வேங்கடமே—, மயிலும் - (அங்குள்ள) மயில்களும், ஒளிசெய்ய - பிரகாசம் உண்டாகுமபடி ஆட, மேவி- பொருந்தி, புயல் - மேகம், தவழும் - சஞ்சரிக்கின்ற, வேங்கடமே- திருவேங்கடமலையே, ஆவிக்குள் - (என்) ஆத்மாவுக்குள், ஆன நன் மையாகிய, அருள் தந்து - கிருபையை வைத்து, அடுசதார்-சேர்ந் தவரும், ஆன் நிரைக்காக - பசுக்கூட்டங்களைக் காக்கும் பொருட்டு, குன்று எந்தி - கோவர்த்தனகிரியைக் குடையாகப்பிடித்து, வானம் வருடம்-(சப்த) மேகங்களும்(பெய்த)கல்மழையை, தடுத்தார் (யாத வர்மேலும் பசுக்களின்மேலும் விழாமல்) தடுத்தவருமாகிய திரு மால், வாழ்வு-வாழுமிடம். எ-று.

கோவர்த்தனமேந்திய செய்தி:—யாசவர்கள் பசுவிர்த்தியின் பொருட்டு இந்திரனுக்குப் பிரீதியாகச்செய்துவந்த இந்திரயாகத் தைத்தடுத்து கோவர்த்தனகிரியைப் பூசியுங்கள் என்று நியமிக்க அவர்கள் அவ்வாறே அம்மலையைப் பூசித்தனர். அதை அறிந்த இந் திரன் கோபித்து யாதவர்களையும், பசுக்களையும் அழிக்கவெண்ணி, சப்தமேகங்களையும் அனுப்பி விடாமழை பெய்யச்செய்தனன். அப் போது பகவான் கோவர்த்தனகிரியைக் குடையாகப்பிடித்து ஏழு நாள் வரையில் சலியாமல் காத்துநிற்பதைக் கண்ட இந்திரன் தன் முயற்சி பயன்படாமையால் நாணமடைந்து, மழையை நிறு த்திக் கிருஷ்ணபகவானைத் துதித்து வணங்கினன் என்பது.

சுஎ. கானோடருவிகனகமுமுத்துந்தள்ளி
மீனோவெனக்கொழிக்கும்வேங்கடமே-வானோர்கண்
மேகனயனங்கொண்டார்வேணியரன்காண்பரியார்
காகனயனங்கொண்டார்காப்பு.

(இ-ள்.) கான் ஓடு - காட்டில் ஓடுகின்ற, அருவி - அருவியா றனது, கனகமும் முத்தும் - பொன்னையும் முத்தையும், மீனோ என-(கண்டோர்) உடுக்களோ என்று சொல்லும்படி, தள்ளி-தள்ளி, கொழிக்கும் - ஒதுக்குகின்ற, வேங்கடமே—, மீநோவு - (சரீரத்தில் உண்டாகும்) அதிகநோவை, எனக்கு - அடியேனுக்கு, ஒழிக்கும்- போக்குகின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, வானோர்கள்- தேவர்களும், மேகன் - மேகவாகனனாகிய இந்திரனும், அயன-பிரம னும், அம்-நீரை (கங்கையை) கொண்டு - தரித்து, ஆ-ஆத்திமாலை யைச்சூடிய, வேணி - சடைமுடியையுடைய, அரன் - சிவனும், கா ண்பு அரியார் - காணுதற்கு அரியவரும், காகன் - காகாசுரனுடைய

நயனம் - கண்ணை, கொண்டார் - பறித்தெடுத்தவருமாகிய திருமால், காப்பு - காக்குமிடம். எ-று.

மீனோவெனக்கொழிக்கும் என்பதற்கு மீன்கள் ஓ என்று அல றும்படிக் கொழிக்கும் என்று பொருள்கூறினுமாம். மீநோவு என க்கு ஒழிக்கும் எனலும் தொடரில் நோவு எனச் சிறப்பு நகரம் உள்ள தாக அமைத்துப் பொருள்கூறுக. ஒலிவடிவில் பொது நகரமும் சிறப்பு நகரமும் அபேசமாயிருத்தல்பற்றி அவ்வாறு புணர்த்தினர். காகாசுரன் நயனங்கொண்ட செய்தி:—ஸ்ரீராமபிரான் அரண்ய வாசஞ்செய்கையில் இந்திரகுமாரன் காகத்தின் உருவங்கொண்டு சீதாபிராட்டியின் ஸ்தனத்தைக் குத்தியபொழுது ஸ்ரீராமபிரான் ஓர் தர்ப்பைப்புல்லைக்கிள்ளி எறிய, அவன் அதை அஞ்சிப் பிரமன் முதலிய எல்லாத்தேவர்களிடத்தும் சரண்புகுந்தும் அவர்களால் காக்கப்பெறாமையால் பிராட்டியையே சரணாகதி யடைந்தனன். அடைதலும் சானகிபிராட்டியார் அவன் குற்றத்தைப் பொறுத்தருள வேண்டுமென்று பெருமாளைப் பிரார்த்திக்க, அவர் கடாட்ச விசே டத்தால், புல்லாகிய அவ்வம்பு அவனுயிரைவாங்காது ஒருகண் ணொளியை மாத்திரம் இழக்கச்செய்தது என்பது.

௬௮. கண்டடைந்தவானவருங்காந்தட்குலமலரும்
விண்டவிர்ந்துநிற்கின்றவேங்கடமே-தொண்டருக்கு
வைகுந்தநாட்டான்மருவுருவமீந்துவைக்கும்
வைகுந்தநாட்டான்வரை.

(இ-ள்.) கண்டு அடைந்த வானவரும் - (திருமலையை) சேவி க்கவந்த தேவர்களும், விண் - சுவர்க்கத்தை, தவிர்ந்துநிற்கின்ற-(செ ல்லுதலை ஒழிந்து) நிற்கின்ற, வேங்கடமே—, காந்தள் குலம் மல ரும் - காந்தளின் கூட்டமாகிய மலர்களும், விண்டு - (தோடுகள்) விரிந்து, அவிர்ந்து நிற்கின்ற - பிரகாசித்துநிற்கின்ற, வேங்கடமே- திருவேங்கடமலையே, தொண்டருக்கு - தாசர்களுக்கு, வை-கூர்மை யாகிய, குந்தம்-குந்தம் என்னும் ஆயுதத்தை, நாட்டான் - நாட்டச் செய்யாதவனும், மருவு - பொருந்திய, உருவம் - தன் உருவத்தை, ஈந்து - தன் அடியார்க்குக்கொடுத்து, வைக்கும் - நிலையாக வைக்கி ன்ற, வைகுந்தநாட்டான் - வைகுந்தமாகிய திருநாட்டையுடையவனு மாகிய திருமாலின், வரை-மலை. எ-று.

தொண்டருக்கு வைகுந்தநாட்டான் என்றதனால் அடியார்க ளுக்கு யமதண்டனை இல்லையென்றபடி. நாட்டுவியான் என்பது விவ் வி குதி தொக்கு நாட்டான் எனவந்தது. மருவுருவமீந்து வைத்தலை விஷ்ணு சாரூபமென்பர். "மருதினிடையே தவழும்" என்றும் பாடம் மருதினிடையே - மருதமரங்களின் நடுவிலே, தவழும்-தவழ்கின்ற,

என்பது பொருள். குபேரபுத்திரர்களான நளகூபர மணிக்கிரீவர்கள் காரதர்சாபத்தால் ஆயர்பாடியில் இரண்டு மருதமரங்களாய் வளர்ந்திருக்க, அவைகளுக்கிடையில் கிருஷ்ணபகவான் தவழ்ந்து செல்லுதலும், அவரது திருவடி ஸ்பரிசத்தால் சாபம் நீங்கிப்பழைய உருவம் பெற்றுப் பகவானைத் துதித்துத் தமதுஉலகம் சென்றனர்.

சுசு. வாழம்புலியினொடுவானூர்தினகரனும்
வேழங்களும்வலஞ்செய்வேங்கடமே-ஊழின்கண்
சற்றாயினுமினியான்சாராவகையருளும்
நற்றாயினுமினியானாடு

(இ-ள்.) வாழ்-(ஆகாயத்தில்)சஞ்சரிக்கின்ற, அம்புலியினொடு-சந்திரனோடு, வான் ஊர் தினகரனும் - ஆகாயத்தில் சஞ்சரிக்கின்ற சூரியனும், வலம்செய் - பிரதக்ஷிணம்செய்கின்ற, வேங்கடமே—, வேழங்களும்-யானைகளும், வலம்செய்-(தமது) வல்லமையை (போனா) செய்கின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, ஊழின்கண்-ஊழ்வினையினிடத்து, சற்றாயினும் - சிறிதாயினும், இனி-இனிமேல், யான் சாராவகை - அடியேன் சேராதவிதம், அருளும் - கிருபை செய்கின்ற, நல்தாயினும் - நல்ல தாயைப்பார்க்கிலும், இனியான்-இனிய திருமாலினது, நாடு-திவ்யதேசம். எ-று.

ஊழ் என்றது நல்வினை தீவினைகளை, அவற்றைச் சாராவகையருள்வன் எனவே பிறவி யொழித்துப் பரமபதமடைவிப்பன் என்பது கருத்து.

எo. தாட்கமலப்பூஞ்சுனைக்குஞ்சாயகங்கள்கொய்துதிரி
வேட்கும்வடிவில்லாவேங்கடமே - வாட்கலிய
னாவியப்பாம்பாட்டினார்நச்சுமடுவைக்கலக்கித்
தாவியப்பாம்பாட்டினார்சார்பு-

(இ-ள்.) தாள் - தாளையுடைய, கமலம் - தாமரைமலர்களையுடைய, பூசுனைக்கும் - அழகிய சுனைக்கும், வடிவு-நீர்வற்றுதல், இல்லா-இல்லாத, வேங்கடமே—, சாயகங்கள்-மலரம்புகளை, கொய்து, பறித்து, திரி-திரிகின்ற, வேட்கும் - மன்மதனுக்கும், வடிவு இல்லா-ரூபம் இல்லாத, வேங்கடமே - திருவேங்கடமலையே, வாள் - வாளாயுதத்தையுடைய, கலியன் - திருமங்கைமன்னனது, நா-நாவினிடத்தில், வியப்பாம் - ஆச்சரியமாகிய, பாட்டினார் - பாசுரத்தைப் பாடச்செய்தவரும், நச்சு மடுவை - விஷம்பொருந்திய மடுவை, கலக்கி-கலங்கச்செய்து, தாவி - குதித்து, அப்பாம்பு - காளிங்கன் என்னும் அந்தப்பாம்பை, ஆட்டினார்-(வாலைச்சுற்றி) ஆட்டினவருமாகிய திருமால், சார்பு - சார்ந்திருக்குமிடம். எ-று.

அப்பாம்பு - அந்தக்காளிங்கன் என்னும் பாம்பின்மேல், ஆட்டினார் - (ஆடிய) ஆட்டத்தையுடையவர் எனினும் பொருந்தும். நச்சு மடுவைக் கலக்கியசெய்தி:—யமுனாநதிக்கரையின் ஓர் மடுவில் காளிங்கன் என்னும் சர்ப்பம் தன் குடும்பத்தோடு வாசஞ்செய்துகொண்டு தன்னைக்கிட்டிய பசுபக்ஷி மிருகாதிகளுக்கெல்லாம் உபத்திரவம்செய்து வந்தது, அதைக் கோபாலர் அறிவிக்க அறிந்த கிருஷ்ண பகவான் அம்மடுவிற்குதித்து அந்தக் காளியனுடைய பணமகுடத்தினின்றுங் கூத்தாடி, அதனை குடும்பத்துடன் அம்மடுவினின்றும் நிக்ரகித்துநஞ்சுள்ள அம்மடுவின் தீர்த்தத்தைப் பரிசுத்தமாக்கியருளினர்

எக. ஆயுந்துறவறத்தையண்டினமுத்தண்டினரும்
வேயுங்கிளைவிட்டவேங்கடமே-தோயுந்
தயிர்க்காத்தாங்கட்டுண்டார்தாரணியிற்றந்த
வுயிர்க்காத்தாங்கட்டுண்டாரூர்.

(இ-ள்.) ஆயும்-(தத்துவநூல்களை) ஆராய்கின்ற, துறவறத்தை அண்டின-துறவறதருமத்தை மேற்கொண்ட, முத்தண்டினரும்-திரிதண்டத்தையுடைய முனிவர்களும், கிளை-உறவினரிடத்தில், விட்ட-பற்றுநீங்கிய, வேங்கடமே—, வேயும்-மூங்கில்களும், கிளைவிட்ட-கிளைகளைவிட்டு ஓங்கிய, வேங்கடமே-திருவேங்கடமலையே, தோயும் தயிர்க்காக - தோய்த்த தயிரைக் களவுசெய்ததற்காக, தாம் - தாம், கட்டுண்டார்-கட்டப்பட்டவரும், தாரணியில்-பூமியில், தந்த-படைத்த, உயிர் - ஆத்மாக்களை, காத்து - இரட்சித்து, ஆங்கு - இரட்சித்ததுபோல, அட்டு-அழித்து, உண்டார்-விழுங்கினவருமாகிய திருமாலின், ஊர் - பதி. எ-று.

திரிதண்டம் சத்துவத்திரயத்தையுடையவர் என்பதற்கு அடையாளம். தத்துவத்திரயமாவன சித்து, அசித்து, ஈசுவரன் என்பன.

நித்தியமாகிய உயிர்களைத்தந்த என்றது அவற்றிற்குக்கரணகளேபரங்களைத் தந்தமையை. உயிர் உண்டார் என்றது பிரளய காலத்தில், அவைகளைத் தமது திருவுதரத்தில் வைத்துக் காத்தமையை. படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழிலையும் நடத்துவோர் ஆகையால், "தந்த உயிர்க்காத்தாங்கட்டுண்டார்" என்றார்.

எஉ, தொண்டொடுமெய்யன்புடையார்தூமனமுஞ்சந்தனமும்
விண்டொடுபொற்பாம்பணைசேர்வேங்கடமே-தண்டொடுவாள்
கோலமருங்கார்முகத்தார்கோடாழியார்குழையின்
கோல்மருங்கார்முகத்தார்குன்று.

(இ - ள்.) தொண்டொடு - கைங்கரியத்தோடு, மெய் அன்பு உடையார் - உண்மையாகிய அன்புடைய தாசர்களது, தூ மனமும்-பரிசுத்தமாகிய மனமும், விண்டொடு - திருமாலுடனே, பொன்

பாம்பு அணை - அழகிய சேஷசயனத்தை, சேர் - சேர்கின்ற (நியாணிக்கின்ற) வேங்கடமே—, சந்தனமும் - சந்தனமரங்களும், விண்தொடு- சுவர்க்கத்தைத் தொடுகின்ற, பொற்பு ஆம்பணை-அழகிய கிளைகளை, சேர்-கொண்டிருக்கின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, தண்டொடு - தண்டாயுதத்துடன், வாள்-வாளையும், கோல்-பாணங்கள், அமரும் - பொருந்திய, கார்முகத்தார்-வில்லையுடையவர், கோடு ஆழியார் - சங்குசக்கரங்களையுடையவர், குழையின் - குண்டலங்களின், கோலம் - அழகு, மருங்கு-(இரு) பக்கங்களிலும், ஆர் - பொருந்திய, முகத்தார் - திருமுகமுடையவர், (அவரது) குன்று-மலை.

எரு. கிட்டுநெறியோகியருங்கிள்ளைகளுந்தங்கூடு
விட்டுமறுகூடடையும்வேங்கடமே - யெட்டுமத
மாவென்றுவந்தான்வரநாளைவாவின்று
போவென்றுவந்தான்பொருப்பு.

(இ-ள்.) கிட்டு-(திருமலையை) அடைந்த, நெறி-துறவறமார்க்கத்தையுடைய, யோகியரும் - யோகமுதிர்ச்சியுடையவர்களும், தம் கூடுவிட்டு - தமது சரீரத்தைவிட்டு, மறுகூடு அடையும் - வேறுசரீரத்தைச்சேருகின்ற, வேங்கடமே—, கிள்ளைகளும்-(அங்கு வசிக்கும்) கிளிகளும், தம்கூடுவிட்டு-தமது கூண்டைவிட்டுநீங்கி, மறுகு ஊடு-வீதிகளில், அடையும் - சேர்கின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, மதம் - மதம் உள்ள, எட்டு மா - அஷ்டகஜங்களை, வென்றுவந்தான்-செயித்துவந்த இராவணன், வர - (முதனாட்போரில் தோற்று எதிரில் வந்துநிற்க), நாளைவா - நாளையதினம்வா, இன்றுபோ-இத்தினம்போ, என்று - என்றுசொல்லி, உவந்தான் - களித்தவனது, பொருப்பு - மலை. எ-று.

இராவணன் முதனாட்போரில் ஸ்ரீராமபிரானுடைய பாணத்தினால், தன் சைநியங்களையும் பல ஆயுதங்களையும் இழந்து புறங்கொடுத்தோட நாணி எப்பெருமானுக்குமுன் தலைகுனிந்து நிற்க, அப்பெருமான் மனமிரங்கிப் போரைநிறுத்தி, இராவணனைநோக்கி, நீ போய் ஜாநகியைக் கொண்டுவந்துவிட்டு, உன் தம்பிக்கு முடிசூட்டி, அவனுக்கு ஏவல்செய்து உயிர்வாழ்ந்திரு, அன்றேல் இன்றுபோய், பொருதற்கு நாளைவா என்றனர். இதனை அடியில் வரும் கம்பநாட்டாழ்வார் செய்யுளாலு மறிக. "அறங்கடந்தவர் செயலிதென் றுலகெலாமார்ப்ப, நிறங்கரிந்து கானிலம் விரல்கிளைத்திட நின்றான், இறங்குகண்ணினன் எல்லழிமுகத்தினன் தலையன், வெறுங்கைநாற்றினன் விழுதுடையாலன்னமெய்யன்" "ஆளையாவுனக் கமைந்தன மாருதமறைந்த, பூளையாயின கண்டனையின்றுபோய்ப் போர்க்கு, நாளைவாவென நல்கினன் நாகிளங்கமுகின், வாளைதாவுறு கோசலை நாடுடைவள்ளல்".

௭௪. மட்டுவளர்சாரலினுமாதவத்தோர்சிந்தையினும்
விட்டுமதிவிளங்கும்வேங்கடமே - கட்டுசடை
நீர்க்கங்கையேற்றானிரப்பொழித்தானீள்குறளாய்ப்
பார்க்கங்கையேற்றான்பதி.

(இ-ள்.) மட்டுவளர் - தேன்பெருகுகின்ற, சாரலினும்-மலைச்சாரல்களிலும், விட்டு - கிரணங்களைப்பரப்பி, மதிவிளங்கும் - சந்திரன் பிரகாசிக்கின்ற, வேங்கடமே—, மாதவத்தோர் - பெரியதவசிகளது, சிந்தையினும் - மனத்திலும், விட்டு மதி - திருமாலை அறியும் அறிவு, விளங்கும்-விளங்குகின்ற, வேங்கடமே-திருவேங்கடமலையே, கட்டுசடை - கட்டிய சடையையுடைய, நீர்கங்கை-கங்காசலத்தை, ஏற்றான் - அணிந்த சிவனது, இரப்பு ஒழித்தான் - யாசித்தலை நீக்கியருளியவனும், நீள் - (மாவலிதந்த நீரோற்று) வளர்ந்த, குறளாய்-வாமனயாய், பார்க்கு-பூமியையாசிப்பதற்கு, அம்கை ஏற்றான்-அழகிய கையை ஏந்தினவனும் ஆகிய திருமாலின், பதி-திவ்வியதேசம்.

விண்டு விஷ்ணு என்பதின் திரிபு. விஷ்ணு - பிறவிகளாகிய அக்னியினால் வெந்தவர்களாய், வருகிறவர்களுக்குத் தன் கருணையாகிய மழையைப்பொழிந்துகொண்டு அவர்களைவிடாமல், அவர்களில் வியாபித்திருக்கின்றவன். மாவலிதந்த தானநீரை ஏற்றவளவில் வளர்ந்தருளியபடியால் "நீள்குறள்" என்றார்.

௭௫. புக்கவருமாதரும்பூமதுவுண்வண்டினமு
மெய்க்கவசம்பூண்டிருக்கும்வேங்கடமே - யொக்கவெனை
அன்பதினாலாண்டாரரிவையொடுகானுறைந்த
வன்பதினாலாண்டார்வரை.

(இ-ள்.) புக்க - துறவுபூண்ட, அருமாதவரும் - அரியபெருந்தவமுடையவரும், மெய் - சத்தியமாகிய, கவசம்-கவசத்தை, பூண்டிருக்கும் - தரித்திருக்கும், வேங்கடமே—, பூமது - மலர்களிலுள்ள தேனை, உண் - உண்கின்ற, வண்டினமும் - வண்டின்கூட்டங்களும், மெய்க்கு - தமது சரீரத்திற்கு, அவசம் மயக்கத்தை, பூண்டிருக்கும்-கொண்டிருக்கும், வேங்கடமே - திருவேங்கடமலையே, ஒக்க-தமது அடியாரை நிகர்க்க, எனை-என்னை, அன்பதினால் - அன்பினால், ஆண்டார் - அடிமைகொண்டவரும், அரிவையொடு - சீதாபிராட்டியாரோடும், கான் உறைந்த - காட்டில் வாசஞ்செய்த, பதினாலு ஆண்டார் - பதினான்கு வருடங்களையுடையவருமாகிய திருமாலின், வரை-மலை எ-று.

வண்டினத்துக்கு அவசமாவது தேனுண்டமையால் என்றறிக. இக்காரணத்தால் வண்டுக்கு வடமொழியில் பிரமரம் எனப்பெயர் வழங்கும்.

எ௬. தக்கமறையோர்நாவுந்தண்சாரலின்புடையும்
மிக்கமனுவளையும்வேங்கடமே - யக்கரவம்
பூண்டார்க்குமாறுடைத்தார்பொங்கோதநீரடைத்து
மீண்டார்க்குமாறுடைத்தார்வெற்பு.

(இ - ள்.) தக்க - தகுந்த, மறையோர் - அந்தணர்களுடைய, நாவும் - நாக்கும், மிக்க-மிகுந்த, மநு-மந்திரம், அளையும்-பொருந்து கின்ற, வேங்கடமே—, தண்சாரலின் - குளிர்ந்த சாரல்களினது, புடையும் - பக்கங்களிலும், மிக்க-மிகுந்த, மனு வளையும்-மனிதர்கள் சூழ்கின்ற, வேங்கடமே-திருவேங்கடமலையே, அக்கு-அக்குமணியும், அரவம்-சர்ப்பமும், பூண்டார்க்கு-அணிந்த சிவனுக்கு, மால்துடைத்தார்-மயக்கத்தை நீக்கினவரும், பொங்கு-மிகுந்த, ஓதம் நீர்-குளிர்ந்த கடல்நீரை, அடைத்து-(திருவணை) கட்டி, மீண்டு-மறுபடியும், ஆர்க்கும் ஆறு - ஆரவாரிக்கும் விதமாக, உடைத்தார் - (அத்திருவணையை) உடைத்தருளினவருமாகிய திருமாலின், வேற்பு-மலை. எ-று.

எஎ. நீடுகொடிமுடியுநீதிநெறிவேதியர்கள்
வீடுமகமருவும்வேங்கடமே - கோடுங்
கருத்துளவமாலையார்காணமனின்ற
மருத்துளவமாலையார்வாழ்வு,

(இ-ள்.) நீடு கொடு முடியும் - உயர்ந்த வளைவாகிய மலைச்சிகரங்களும், மகம் - மகநக்ஷத்திரத்தை, மருவும் - சேருகின்ற, வேங்கடமே—, நீதிநெறி - நீதிமார்க்கங்களில் ஒழுகுகின்ற, வேதியர்-அந்தணர்களது, வீடும்-திருமாளிகைகளும், மகம் மருவும் - யாகத்தைப் பொருந்துகின்ற, வேங்கடமே-திருவேங்கடமலையே, கோடும்-மாறுபடுகிற, கருத்துள்-மனத்தில், அவம் மாலையார் - வீணாகிய மயக்கத்தையுடையவர்கள், காணமல் நின்ற - காணுதவிதமாக நின்ற, மரு துளவமாலையான் - வாசனையாகிய துளவமாலையையணிந்த திருமால், வாழ்வு - வாழுமிடம். எ-று.

அவம் மாலையான் என்பதற்கு வீணாகிய மயக்கத்தையுடையான் எனப் பொருள்கூறினும் பொருந்தும். அந்தர்யாமியாகிய இறைவன் அஞ்ஞானமாகிய மயக்கமுடையவர்க்குத்தோன்றான் என்பது கருத்து.

எஅ. சீதங்கொள்சாரலினுஞ்சீர்மறையோரில்லிடத்தும்
வேதங்களுல்வளரும்வேங்கடமே - போதன்
சிரித்துப்புரந்துடைத்தான்றேவரொடுமண்டம்
விரித்துப்புரந்துடைத்தான்வெற்பு.

(இ - ள்.) சீதம்கொள் - குளிர்ச்சியைப்பெற்ற, சாரலினும்- மலைச்சாரலிலும், வேய்-மூங்கில், தம் கண்ணால்-தம்முடையகணுக்களோடு, வளரும் - வளருகின்ற, வேங்கடமே—, சீர்மறையோர்-சிறப்பாகிய பிராமணர்களுடைய, இல் இடத்தும்-திருமாளிகைகளிலும், நால் வேதங்கள் - நான்குவேதங்களும், வளரும் - விர்த்தியாகின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, போதன் - பிரமனையும், சிரித்துப்புரம்துடைத்தான்-நகைத்துத் திரிபுரங்களை அழித்த சிவனையும், தேவரொடும் - (மற்ற) தேவர்களுடனும், அண்டம் - அண்டங்களையும், விரித்து-சிருஷ்டித்து, புரந்து - இரட்சித்து, உடைத்தான்-சம்மரித்தவனாகிய திருமாலின், வெற்பு-மலை. எ-று.

பிரமருத்திரேந்திராதி தேவர்களையும் சகல அண்டங்களையும் படைத்து, காத்து, அழிப்பவனாகிய திருமாலின்பதி திருமலையென்பது கருத்து. வேய்-கடைக்குறை விகாரம்பெற்று வே எனவந்தது.

எகூ, நன்கோடுபோலுமுலைநாரியருஞ்சண்பகத்தின்
மென்கோடுங்கற்பகஞ்சேர்வேங்கடமே - வன்கோடு
கூரிருவராகனார்கோகநகைபூமியென்னும்
ஓரிருவராகனாரூர்.

(இ - ள்.) நல்கோடு - அழகிய யானைக்கொம்பை, போலும்- நிகர்க்கின்ற, முலை - ஸ்தனங்களையுடைய, நாரியரும் - மாதர்களும், கற்பு-பதிவிரதாதருமத்தை, அகம்-மனத்தில், சேர்-பெற்றிருக்கின்ற, வேங்கடமே—, சண்பகத்தின் - சண்பகமரத்தின், மெல்கோடும்- மென்மையாகிய கிளைகளும், கற்பகம் - கற்பகவிருட்சத்தை, சேர்- தொடுகின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, கூர்-கூரிய, வல் கோடு-வலியகொம்பையுடைய, இரு - பெருமைபொருந்திய, வராகனார் - புருஷவராகமானவரும், கோகநகை - தாமரைமலரில் எழுந்தருளிய பெரிய பிராட்டியார், பூமி - பூப்பிராட்டியார், என்னும்- என்கின்ற, ஓர் இருவர் - ஒப்பற்ற இருவரையும், ஆகனார் - மார்பிலுடையவருமாகிய திருமாலின், ஊர்-பதி. எ-று.

திருமால் புருஷவராகமானது மஹாபிரளயத்தில் அமிழ்ந்து கிடந்த பூமியை யெடுத்து வைத்தற்கும், அதனைப் பாயலாகச்சுருட்டிப்பாதலஞ்சென்ற இரணியாக்ஷனைக்கொன்று அதனை நிலைநிறுத்தற்குமாம்.

அ௦. கோடஞ்சுங்கோதையர்கள்கொங்கையினுங்குஞ்சரத்தும்
வேடன்சரந்துரக்கும்வேங்கடமே - சேடனெனும்
ஓர்பன்னகத்திடந்தானூற்றானிரணியனைக்
கூர்பன்னகத்திடந்தான்குன்று.

(இ-ள்.) கோடு-மலைகள், அஞ்சும் - பயப்படுகின்ற, கோதையர்கள் - மாதர்களின், கொங்கையினும் - ஸ்தனங்களிலும், வேள்-மன்மதன், தன்சரம்-தனது புஷ்பபாணங்களை, துரக்கும்-செலுத்துகின்ற, வேங்கடமே—, குஞ்சரத்தும்-யானைகளின்மீதும், வேடன்-வேடன், சரம் துரக்கும் - அம்பெய்கின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, சேடன் எனும் - ஆதிசேடன் என்கின்ற, ஓர்-ஒப்பற்ற, பன்னகத்திடம் - சர்ப்பத்தில், தான் உற்றான் - தான் சயனத்திருக்கோலமாயெழுந்தருளினவனும், இரணியனை-இரணியகசிபனை, கூர்பல் நகத்து-கூரிய பல நகங்களால், இடந்தான் - பிளந்தவனுமாகிய திருமாலின், குன்று - மலை. எ-று.

கோடு - யானைக்கொம்பு எனினும் ஆம். மலை ரூபத்தாலும், யானைக்கொம்பு கூர்மையாலும் ஸ்தனங்களுக்கு உவமை. பன்னகம் என்பது பத்நகம் என்னும் வடமொழித்திரிபு. பாதத்தால் நடவாதது என்பது பொருள்.

அக. நாரியர்தங்கூந்தலினுநாலுமருவியினும்
வேரினறுஞ்சாந்தொழும்வேங்கடமே-பாரினுளார்
அற்பசுவர்க்கத்தாரறிவரியார்முன்மேய்த்த
நற்பசுவர்க்கத்தார்நாடு.

(இ-ள்.) நாரியர்தம் - மாதர்களுடைய, கூந்தலினும்-கூந்தலிலும், வேரி - வாசனைபொருந்திய, நறு சாந்து - நல்ல மயிர்ச்சாந்து, ஒழுகும் - சிந்துகின்ற, வேங்கடமே—, நாலும்-பாய்கின்ற, அருவியினும்-அருவியாற்றினும்,வேரின்-வேரோடு,நறு-மணமுள்ள,சாந்து-சந்தனமரங்கள், ஒழுகும் - அடித்துக்கொண்டுவருகின்ற, வேங்கடமே-திருவேங்கடமலையே, பாரின் உள்ளார்-பூமியில் உள்ளவர்களும், அற்பசுவர்க்கத்தார் - அற்பமாகிய இன்பமுடைய தெய்வலோகத்தாரும், அறிவு அரியார்-அறிவதற்கு அருமையானவரும், முன்-கிருஷ்ணவதாரத்தில், மேய்த்த-மேய்த்த, நல் பசுவர்க்கத்தார்-நல்ல பசுமந்தையையுடையவருமாகிய திருமாலின், நாடு-திருப்பதி. எ-று.

அற்பம் ஆகுபெயராய் இன்பத்தையுணர்த்தியது.

அஉ. மாதரார்கண்ணுமலைச்சாரலுங்காமர்
வேதமாற்கஞ்செறியும்வேங்கடமே - பாதமாம்
போதைப்படத்துவைத்தார்போர்விளையமாற்றரசர்
வாதைப்படத்துவைத்தார்வாழ்வு.

(இ-ள்.) மாதரார் - மாதர்களுடைய, கண்ணும் - கண்களும், காமர் - மன்மதனுடைய, வேதமார்க்கம் - காமநூல்வழியை, செறியும்-பொருந்துகின்ற, வேங்கடமே—, மலைச்சாரலும்-மலையின் சாரல்

களினும், வேய்-மூங்கில்கள், தம்மால் - தமது கிளைகளால், கம்-ஆகாயத்தை, செறியும் - கிட்டுகின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, பாதமாம் - தமது திருவடியாகிய, போதை - தாமரைமலரை, படத்து - (பாம்பின்) படத்தில், வைத்தார் - ஊன்றி நடித்தவரும், போர்விளைய - யுத்தமுளவாக, மாற்றரசர்-சத்துருக்களாகிய அரசர்கள், வாதைப்பட - துன்பப்பட, துவைத்தார் - அழித்தவரும் ஆகிய திருமால், வாழ்வு - வாழுமிடம், எ-று.

மாற்றரசர் - துரியோதனாதியர். வே - கடைக்குறை.

அரு. எத்திக்குங்காம்புமெயினருமாரத்தினையே
வித்திக்கதிர்விளைக்கும்வேங்கடமே - தித்திக்கும்
காரிமாறன்பாவார்காதலித்தார்தம்பிறவி
வாரிமாறன்பாவார்வாழ்வு.

(இ-ள்.) எ திக்கும் - எல்லாத்திசைகளிலும், காம்பும்-மூங்கில்களும், ஆரத்தினையே-முத்துக்களையே, வித்தி - சிந்தி, கதிர்-கிரணங்களை, விளைக்கும் - பரப்புகின்ற, வேங்கடமே—, எயினரும் - வேடர்களும், ஆர - உண்ண, தினையே - தினைப்பயிரையே, வித்தி - விதைத்து, கதிர் - கதிர்களை, விளைக்கும் - பயிராக்குகின்ற, வேங்கடமே-திருவேங்கடமலையே, தித்திக்கும் - இனிக்கின்ற, காரிமாறன் - நம்மாழ்வாருடைய, பாவார் - பாசுரத்தையுடையவரும், காதலித்தார் தம் - தம்மை விரும்பி வந்தடைந்தவர்களுடைய, பிறவி வாரி-பிறப்பாகிய கடல், மாறு - நீங்குதற்குரிய, அன்பாவார் - அன்புடைய வருமாகிய திருமால், வாழ்வு - வாழுமிடம். எ-று.

காரி - ஆழ்வாருடைய பிதாவின் திருநாமம்.

அச. பாரோடுகான்யாறும்பல்களிறுநந்தவனம்
வேரோடலைத்தீர்க்கும்வேங்கடமே - காரோதம்
சுட்டகருவிற்படையார்தொண்டரைமீண்டேழுவகைப்
பட்டகருவிற்படையார்பற்று.

(இ-ள்.) பார் - பூமியில், ஓடும் - ஓடுகின்ற, கான் யாறும்-காட்டாறும்,நம்-நமது, தவனம்-தாகம், வேர் ஓடலை-நிலைத்திருத்தலை, தீர்க்கும்-நீக்குகின்ற, வேங்கடமே—, பல்களிறும் - பல யானைகளும், நந்தவனம் - நந்தவனங்களை, வேரோடு - வேருடனே, அலைத்து-அசைத்து, ஈர்க்கும்-இழுக்கின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, கார் ஓதம் - கருங்கடலை, சுட்ட - வற்றச்செய்த, கரு - பெருமை பொருந்திய, வில்படையார் - வில்லாகிய ஆயுதத்தையுடையவரும், தொண்டரை - தாசர்களை, மீண்டு - மறுபடியும், ஏழுவகைப்பட்ட-எழுவகையாகிய, கருவில் - கர்ப்பத்தில், படையார் - தோற்றச்செய்யாதவருமாகிய திருமால், பற்று-சேருமிடம். எ-று.

எழுவகைப்பிற வியாவன - தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன. வேர் ஓடலை தீர்க்கும் என்பதற்கு வேர்வை ஓடுதலைஒழிக்கும் என்றும் பொருள் கூறுவர்.

அ௫. நன்காமர்வண்டினமுநால்வாய்மதகரியும்
மென்காமரமுழக்குமவேங்கடமே - புன்காமம்
மேவார்கழலாரெனதுளத்திலென்றலைவை
பூவார்கழலார்பொருப்பு.

(இ-ள்.) நல் - நல்ல, காமர் - அழகிய, வண்டு இனமும் - வண்டின் கூட்டமும், மெல்காமரம் - மிருதுவாகிய காமரம் என்னும் பண்ணை, முழக்கும்-சப்திக்கின்ற, வேங்கடமே—, நால்வாய்-தொங்குகின்ற வாயையுடைய, மதம் கரியும் - மதத்தையுடைய யானையும், மெல்கா - குளிர்ந்த சோலையிலுள்ள, மரம்-மரங்களை, உழக்கும்-அழிக்கின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, புல் காமம் - அற்பசுகம் தருவதாகிய காமத்தில், மேவார்-பொருந்தாதவர்களை (விட்டு), கழலார்-நீங்காதவரும், எனது உளத்தில் - எனது மனத்திலும், என் தலை-எனது தலையிலும், வை-(வைத்த) பூவார்கழலார்-பூவார் கழலையுடையவருமாகிய திருமாலின், பொருப்பு - மலை. எ-று.

பூவார்கழல் என்பது திருவேங்கடமுடையான் திருவடிக்குச் சிறப்புப்பெயர்.

அ௬. பாம்புங்குளிர்சந்தின்பக்கத்திநிற்கின்ற
வேம்புமருத்துவக்கும்வேங்கடமே - காம்புகரம்
மானவரைநன்குடையாராளாய்த்தொழுதேத்தும்
ஆனவரைநன்குடையார்வாழ்வு.

(இ - ள்.) பாம்பும் - பாம்பும், மருத்து - காற்றை, உவக்கும்-உண்ணுகின்ற, வேங்கடமே—, குளிர் சந்தின் குளிர்ந்தசந்தனமரங்களின், பக்கத்தில் நிற்கின்ற-பக்கத்தில் வளர்ந்திருக்கின்ற, வேம்பும்-வேப்பமரங்களும், மரு - வாசனையை, துவக்கும் - பெற்றிருக்கின்ற, வேங்கடமே - திருவேங்கடமலையே, காம்பு - காம்பானது, கரம் ஆன - கையாகிய, வரை நல் குடையார் - கோவர்த்தனகிரியாகிய நல்லகுடையையுடையவரும், ஆளாய் - தொண்டராய், தொழுது ஏத்தும் - வணங்கித்துதிக்கின்ற, மானவரை - மனிதர்களை, நன்கு உடையார் - நன்மை பொருந்தும்படி உடையவருமாகிய திருமால், வாழ்வு - வாழுமிடம். எ-று.

கோவர்த்தனகிரியைக் குடையாக வேந்தியசெய்தி ௬௬ - ஆம் பாட்டுரையிற்காண்க.

அஎ. சாருமருவிதவழ்சாரலுஞ்செஞ்சந்தனத்தின்
வேருமரவமருவேங்கடமே - நேரும்
மதுகைபிடவர்க்கறுத்தார்மாமலரோன்சாபம்
மதுகைபிடவர்க்கறுத்தார்வாழ்வு.

(இ-ள்.) சாரும் - சார்ந்த, அருவி தவழ் - அருவியாறு ஒழுகு கின்ற, சாரலும் - மலைப்பக்கங்களிலும், அரவம் - ஓசை, அரு - நீங் காத, வேங்கடமே—, செம்மை சந்தனத்தின்-செவந்த சந்தன விருட் சங்களின், வேரும் - வேரும், அரவம் அரு - பாம்புகள் நீங்காத, வேங்கடமே - திருவேங்கட மலையே, நேரும் - எதிர்த்த, மது கைட வர் - மது கைடவர் என்னும் அசுரர்களை, கறுத்தார் - கோபித்தவ ரும், மாமலரோன் - மகத்தாகிய தாமரையில் தோன்றிய பிரமன் (இட்ட), சாபம் - சாபத்தை, மதுகை - வலியுடைய, இடவர்க்கு- ரிஷபத்தை வாகனமாகவுடைய சிவனுக்கு, அறுத்தார் - நீக்கினவரு மாகிய திருமால், வாழ்வு - வாழுமிடம். எ-று.

இறைவன் மதுகைடவர்களைக் கொன்றபோது அவர்களுடைய மேதைபடிந்த காரணத்தால் பூமி மேதினி எனப்பெயர் பெற்றது. மா மலர் என்றது திருமாலின் உந்திக்கமலத்தை. "மாமறையோன்" என்றும் பாடம்.

அஅ. மண்மட்டுத்தாழ்சுனையும்வட்டச்சிலாதலமும்
விண்மட்டுத்தாமரைசேர்வேங்கடமே - யெண்மட்டுப்
பாதமுன்னிநைந்தார்பரமபதஞ்சேர்கவென்று
போதமுன்னிநைந்தார்பொருப்பு.

(இ-ள்.) மண் மட்டு - தரையின் அளவு, தாழ் சுனையும்- தாழ்ந்த சுனையிலும், விள்-மலர்ந்த, மட்டு-தேனையுடைய, தாமரை- தாமரை மலர், சேர் - சேர்ந்த, வேங்கடமே—, வட்டம் - வட்ட வடிவாகிய, சிலாதலமும் - கல்லின் இடமும், விண் மட்டு - சுவர்க்கம் வரையில், தாம் - தாவுகின்ற, மரை - மரை என்னும் மிருகம், சேர்- சேர்கின்ற, வேங்கடமே - திருவேங்கட மலையே, எள் மட்டு - எள் ளளவு, பாதம் - திருவடியை, முன்னி - தியானித்து, நைந்தார்- உருகினவர், பரமபதம் சேர்க என்று-பரமபதம் சேரக்கடவர் என்று, போத - மிகவும், முன் - (அவர் எண்ணினதற்கு) முற்பட, நினைந் தார் - நினைத்த திருமாலின், பொருப்பு - மலை. எ-று.

எள் மிகச்சிறுமையை உணர்த்துவதோர் குறிப்புச் சொல். "எண் மட்டுப்பாத முன்னிநைந்தார் பரமபதம் சேர்கவென்று போத முன்னினைந்தார் பொருப்பு" என்றதனால் இறைவனது பரமகாருணி யம் கூறப்பட்டது.

அகூ. போதாவிருசுடரும்போதுதற்குமோதுதற்கும்
வேதாவினுன்முடியாவேங்கடமே - மாதாவின்
வீங்குதனத்துக்கினியான்விம்மியழாதாட்கொண்டான்
தாங்குதனத்துக்கினியான்சார்பு.

(இ-ள்.) போதா - போதலைச் செய்கின்ற, இருசுடரும் - சூரிய சந்திரர்களிருவரும், போதுதற்கும் - போவதற்கும், வே - மூங்கில்கள், தாவினுல் - (ஆகாயம்) அளாவி வளர்ந்திருத்தலினுல், முடியா- கூடாத, வேங்கடமே—, ஓதுதற்கும்-சொல்லுதற்கும், வேதாவினுல்- பிரமனுலும், முடியா - முடியாத, வேங்கடமே-திருவேங்கட மலையே, மாதாவின் - தாயினுடைய, வீங்கு தனத்துக்கு - பருத்தஸ்தனங்களை உண்ணுதற்கு, இனி - இனிமேல், யான் - நான், விம்மி அழாது - விம்மி அழாதபடி, ஆட்கொண்டான் - அடிமை கொண்டவனும், தாங்கு தன் நத்துக்கு - தாங்கிய தன்னுடைய சங்கத்திற்கு, இனியான் - இனிமையானவனுமாகிய திருமால், சார்பு - சாருமிடம்.

நந்து என்பது நத்து என வலித்தல் பெற்றது.

கூ0. பேய்க்குமொருபேய்போன்றுபித்தாய்த்திரிவோர்க்கும்
வேய்க்குமணிமுத்திவரும்வேங்கடமே - வாய்க்கமுதூர்
வண்மைப்பேராயிரந்தான்மன்னினுன்மாவலிபால்
தண்மைப்பேராயிரந்தான்சார்பு.

(இ-ள்.) பேய்க்கும் - பேய்க்கும், ஒரு பேய் போன்று - ஒரு பேயை நிகர்த்து, பித்தாய் - பைத்தியம் கொண்டவர்களாய், திரிவோர்க்கும் - திரிகின்ற அடியார்களுக்கும், அணி முத்தி வரும் - அழகிய மோட்சம் சித்திக்கின்ற, வேங்கடமே—, வேய்க்கும் - மூங்கிலினிடத்தும், மணி - நவமணிகளிலொன்றுகிய, முத்து - முத்துகள், இவரும்-பொருந்தின, வேங்கடமே-திருவேங்கட மலையே, வாய்க்கு- வாயில், அமுது ஊர் - அமிர்தம் சுரக்கின்ற, வண்மை பேர் - வளமாகிய திருநாமங்கள், ஆயிரம் - ஆயிரமும், தான் மன்னினுன்-தான் பொருந்தினவனும், மாவலிபால் - மாவலியினிடத்து, தண்மை பேராய் - தாழ்மையுடையவனுய், இரந்தான் - (பூமியை) யாசித்தவனுமாகிய திருமால், சார்பு - சாருமிடம். எ-று.

பேய்க்கு மொருபேய் போன்று பித்தாய்த் திரிதலாவது பேயின் கண்ணுக்கும் ஒருபேய்போல பைத்தியங்கொண்டு திருவேங்கடத்தின் எல்லையில் திரிதல். பாரதயுத்தத்தில் பத்தாநாட்போரில் அர்ச்சுனனுடைய அம்புபட்டு மரண மூர்ச்சையடைந்திருந்த பீஷ்மர் ஸ்ரீகிருஷ்ணபகவானது வரப்பிரசாதத்தினுலும், தீர்க்க பிரமசரிய விரதத்தின் பிரபாவத்தினுலும் மூர்ச்சை தெளிந்து தன்னைவணங்கி நின்ற

தரும புத்திரருக்கு வேதங்களாலும் அந்தந்த ரிஷிகளாலும் சொல்லப் பட்ட பகவானுடைய நாமங்களைச் சேர்த்து எல்லாத் தருமங்களிலும் இந்த சஹஸ்ர நாமத்தின் வழியால் பகவானைத் தோத்திரம் செய்வதே சிரேஷ்டமான தருமம். என்றும் இது என்னுடைய நிச்சயம் என்றும் கூறின திருநாமங்கள் ஆயிரத்தையும் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் என்பர்.

ககக. வாழ்க்கைமனைநீத்தவரும்வாளரியுமாதங்க
வேட்கைமறந்திகழும்வேங்கடமே - தோட்கைவிழ
மாகவந்தனைக்கழித்தார்வாழிலங்கைப்பாதகரை
லோகவந்தனைக்கழித்தாரூர்.

(இ-ள்.) மனை வாழ்க்கை - இல்லற வாழ்க்கையை, நீத்தவரும் - துறந்தவரும், மாது - மாதர்களின், அங்கம் வேட்கை - சரீரத்தின் ஆசையை, மறந்து - மறந்து, இகழும் - இகழ்கின்ற, வேங்கடமே—, வாள் அரியும் - ஒளியையுடைய சிங்கங்களும், மாதங்கம்-யானையின், வேட்கை - ஆசையால், மறம் - வீரம், திகழும் - விளங்குகின்ற, வேங்கடமே - திருவேங்கட மலையே, தோள் கை - தோள்களோடு கூடிய கைகள், விழ - அற்று விழ, மா - பெரிய, கவந்தனை-கவந்தன் என்னும் ராட்சஸனை, கழித்தார் - கொன்றவரும், இலங்கை வாழ் பாதகரை-இலங்கையில் வாழ்ந்த பாதகச்செய்கையுடைய அரக்கர்களை, லோகம் - உலகத்தாருடைய, வந்தனைக்கு - வழி பாட்டிற்கு, அழித்தார் - கொன்றவருமாகிய திருமாலின், ஊர்-பதி. எ-று.

கவந்தன் ஒரு ராட்சசன். இவன் யோசனை அளவுநீண்ட தோள்களையும் வயிற்றில் அடங்கிய முகத்தையும் உடையவனாய் தண்டகாரணியத்தில் வசித்திருந்தான். இராம லட்சுமணர்கள் சீதாபிராட்டியைத் தேடப் போகும்போது அவர்களைப்பற்றி விழுங்க எத்தனிக்க, அவர்கள் இவனது தோள்களை வெட்டி விழுத்தினார்கள். உடனே இவன் தனு என்னும் ஒரு கந்தர்வன் ஆயினான். இவன் பூர்வத்தில் தவவலிமையால் சிரஞ்சீவித்வத்தையும் விரும்பின வடிவை அடைதற்குரிய சாமர்த்தியத்தையும் பெற்று, கொடுந்தொழில் உடையவனாயிருக்கையில், இவனுக்கு ஸ்தூலகேசன் என்னும் ஒரு முனிவனது சாபத்தால் இப்படிப்பட்ட ராட்சசரூபம் உண்டாயிற்று. அதன்பின் ஒரு காலத்தில் இவன் இந்திரனோடு போர் செய்யப்போக, இந்திரன் தன் வச்சிராயுதத்தினால் புடைத்தலும் இவனது கழுத்தும் தலையும் கால்களும் வயிற்றில் அடங்கிப்போயின. அதனால் கவந்தன் எனப் பெயர் பெற்றான்.

கூஉ. கூட்டுத்தவத்தவருங்கோளரிகளின்றொகையும்
வேட்டுவரம்பொழியும்வேங்கடமே - மோட்டுமதத்
தந்திக்கமலத்தார் தாம்பெறூஉம்வீடளித்தார்
உந்திக்கமலத்தாரூர்.

(இ-ள்.) கூட்டு தவத்தவரும் - கூட்டமாகிய தவமுடையவர்களும், வேட்டு - விரும்பி, வரம் - வரங்களை, பொழியும் - கொடுகின்ற, வேங்கடமே—, கோள் அரிகளின் - வலியுள்ள சிங்கங்களின், தொகையும் - கூட்டமும், வேட்டுவர் - வேடர்களுடைய, அம்பு ஒழியும் - பாணங்களை நீக்குகின்ற, வேங்கடமே - திருவேங்கட மலையே, மோடு மதம் - மிகுந்த மதமுடைய, தந்திக்கு - கஜேந்திரன் என்னும் யானைக்கு, அமலத்தார் தாம் - மலநீக்கமுடையவர், பெறூ உம், பெறுதற்குரிய, வீடு அளித்தார் - மோட்சத்தைக் கொடுத்தவரும், உந்திகமலத்தார் - திருவுந்தித் தாமரையையுடையவருமாகிய திருமாலின், ஊர்-திருப்பதி. எ-று.

மதமற்று மெலிந்திருந்த கஜேந்திரனை "மோட்டுமதத்தந்தி" என்றது சாதியடை. அமலத்தார் - காமம், வெகுளி, மயக்கங்கள் இல்லாதவர்.

கூரு. வஞ்சமடித்திருப்பார்வாக்குங்கலைக்கோடும்
விஞ்சமடித்திருக்கார்வேங்கடமே - கஞ்சப்
பிரமாநந்தத்தான்பிரபஞ்சமாய்த்த
பரமாநந்தத்தான்பதி

(இ-ள்.) வஞ்சம் அடித்து - வஞ்சனைகளை நீக்கி, இருப்பார்-இருக்கின்றவர்களுடைய, வாக்கும்-வாயும், விஞ்ச-மிகுதியும், மடி-மடித்துச்சொல்லுகின்ற, இருக்கு - இருக்கு வேதம், ஆர் - பொருந்திய, வேங்கடமே—, கலை கோடும்-மானினுடைய கொம்பும், விஞ்ச-மிகுதியும், மடி - மடிதலாகிய, திருக்கு - முறுக்கு, ஆர் - பொருந்திய, வேங்கடமே - திருவேங்கட மலையே, கஞ்சம் - தாமரைமலரில் வீற்றிருக்கும், பிரமா - பிரமன், நந்த - கெட, தான் - தான், பிரபஞ்சம் மாய்த்த - (யுகமுடிவில்) உலகங்களை அழித்த, பரமாநந்தத்தான்- பரமாநந்தத்தையுடையவனது, பதி - ஊர். எ-று.

இங்கு பிரபஞ்சம் மாய்த்தல் என்றது மகாப்பிரளயத்தில் இறைவன் உலகத்தைத் தமது திருவுதரத்தில் வைத்து மறைத்தலை. இக்காரணத்தால் இறைவனுக்கு உலகமுண்ட பெருவாயன் எனப்பெயர் வழங்கும்.

கூசா. சேலஞ்சுங்கண்மடவார்தேங்குழலுங்கோங்கினமும்
மேலஞ்சுவர்க்கமார்வேங்கடமே - கோலஞ்சேர்
மாரிலலங்காரத்தார்மற்றும்பல்பூணணிந்த
காரிலலங்காரத்தார்காப்பு.

(இ-ள்.) சேல் - சேற்கெண்டைகள், அஞ்சு - பயப்படுகின்ற, கண் மடவார் - கண்களையுடைய மாதர்களது, ஏம் குழலும்-மண முள்ளகூந்தலும், மேல்-மேன்மையாகிய, அஞ்சுவர்க்கம்-ஐந்து வகையாகிய மயிர் முடியை, ஆர் - பொருந்திய, வேங்கடமே—, கோங்கினமும் - கூட்டமாகிய கோங்கு மரங்களும், மேல்-மேலேயுள்ள, அம் - அழகிய, சுவர்க்கம் - சுவர்க்கலோகத்தை, ஆர் - பொருந்திய வேங்கடமே - திருவேங்கட மலையே, கோலம் சேர்-அழகுபொருந்திய, மாரில் - மார்பில், அலங்கு - அசைகின்ற, ஆரத்தார்-மாலையையுடையவரும், மற்றும் - மேலும், பல் - பலவாகிய, பூண் - ஆபரணங்களை, அணிந்த - தரித்த, காரில் - மேகம் போலும், அலங்காரத்தார் - அழகுடையவருமாகிய திருமால், காப்பு-காக்குமிடம். எ-று.

கூந்தலின் வகை ஐந்தாவன :—முடி, கொண்டை, குழல், பனிச்சை, சுருள் என்பன.

கூ௫. கொய்யுமலர்ச்சோலைக்கொக்கும்பிணியாளர்
மெய்யும்வடுத்தவிரும்வேங்கடமே - நையும்
சனனந்தகனர்தலையிலிதோள்காய்ந்த
சினனந்தகனர்சிலம்பு.

(இ-ள்.) கொய்யும் - பறிக்கின்ற, மலர் - மலர்களையுடைய, சோலை - சோலையிலுள்ள, கொக்கும் - மாமரமும், வடுத்து - பிஞ்சுவிட்டு, அவிரும் - விளங்குகின்ற, வேங்கடமே—, பிணியாளர்-நோயாளர்களுடைய, மெய்யும் - சரீரமும், வடு - குற்றம், தவிரும்-நீங்குகின்ற,வேங்கடமே-திருவேங்கடமே, நையும்-வருந்துதற்கேதுவாகிய, சனனம் - பிறவியை ஒழித்தற்கு, அந்தகனர்-யமனை நிகர்த்தவரும், தலையிலி - கவந்தனுடைய, தோள் - தோள்களை, காய்ந்த - வெட்டி எறிந்த, சினன்-கோபமுள்ள, நாந்தகனர் - வாளையுடையவருமாகிய திருமாவின், சிலம்பு - மலை. எ-று.

சினன் மகரத்துக்கு னகரம் போலி. சனனங்களை அழித்தலால் "அந்தகன்" என்றார்.

கூசு. நேர்க்கவலைநோயினருநீடுசிலைவேடுவரும்
வேர்க்கவலைமூலங்கல்வேங்கடமே - கார்க்கடன்மேல்
தாண்டுங்காலத்திறப்பார்தம்மைவிழுங்கிக்கனிவாய்
மீண்டுங்காலத்திறப்பார்வெற்பு.

(இ-ள்) நேர் கவலை - கவலையுண்டாதற்குக் காரணமாகிய, நோயினரும் பிணியாளர்களும், வேர்க்க-உடம்புவேர்க்கும்படி, அலை-திருப்பாற் கடலில் அறிதுயில்கொண்ட, மூலம் - ஆதிமூலத்தை, கல்-கற்கின்ற, வேங்கடமே—, நீடு சிலை-நீண்ட வில்லையுடைய, வேடு

வரும்-வேடர்களும், வேர் - வேரின்கணுள்ள, கவலை மூலம்-கவலைக் கிழங்கை, கல் -தோண்டுகின்ற, வேங்கடமே - திருவேங்கட மலையே, கார் கடல் கருங்கடலானது, மேல்தாண்டும்-மேலெழுந்து பரவுகின்ற, காலத்து-பிரளயகாலத்தில், இறப்பார் தம்மை-இறக்கின்ற உயிர்களை விழுங்கி-(தமது திருவுதரத்தில்) வைத்து, மீண்டும் கால-மறுபடியும் அவைகளை வெளிப்படுத்த, கனிவாய் - கொவ்வைக் கனிபோன்ற வாயை, திறப்பார் - திறக்கின்றவருடைய, வெற்பு - மலை எ-று.

"கார்கடல்மேல் தாண்டும் காலத்து இறப்பார்" என்றது பிரமன் முதலிய எல்லாச் சீவர்களையும். அலை - சினையாகுபெயர்.

சுஎ. தண்டாமரைச்சுனையிற்சாதகமும்வேடுவரும்
விண்டாரைநாடுகின்றவேங்கடமே - தொண்டாக்கி
எவத்தனக்குடையாரென்னைமுன்னாளெடுத்த
கோவத்தனக்குடையார்குன்று.

(இ-ள்.) தண் - குளிர்ந்த, தாமரை சுனையில் - தாமரைகளையுடைய சுனையில் வாழ்கின்ற, சாதகமும் - சாதகப் பறவையும், விண் தாரை - மேகத்தின் மழைத்தாரையை, நாடுகின்ற - விரும்புகின்ற, வேங்கடமே—, வேடுவரும் - வேடர்களும், விண்டாரை-துறவிகளை, நாடுகின்ற - தேடி யடைகின்ற, வேங்கடமே - திருவேங்கட மலையே, என்னை - அடியேனை, தொண்டு ஆக்கி - அடிமையாக்கி, எவ - அடிமைகொள்ள, தனக்கு உடையார் - தனக்குரிமை பூண்டவரும், முன்னாள் - கிருஷ்ணாவதார காலத்தில், எடுத்த - எடுத்தருளிய, கோவத்தனம் குடையார் - கோவர்த்தன மலையாகிய குடையையுடையவருமாகிய திருமாலின், குன்று - மலை. எ-று.

சுஅ. வாழரியுஞ்சந்தனந்தோய்மாருதமுந்தாக்குதலால்
வேழமருப்புகுதும்வேங்கடமே - நீழலமர்
பஞ்சவடிகாட்டினான்பாரளப்பான்போலெவர்க்கும்
கஞ்சவடிகாட்டினான் காப்பு.

(இ-ள்.) வாழ் அரியும் - வாழ்கின்ற சிங்கமும், தாக்குதலால்-மோதுதலால், வேழம் - யானையின், மருப்பு - தந்தம், உகுதும்-சிந்துகின்ற, வேங்கடமே—, சந்தனம் தோய்-சந்தன மரத்தில் படிகின்ற, மாருதமும்-காற்றும், தாக்குதலால்-வந்துமோதுதலால், வேழம்-மூங்கில், மரு-வாசனையை, புகுதும் - பெற்றிருக்கின்ற, வேங்கடமே-திருவேங்கட மலையே, நீழல் அமர் - மிக்க நிழலினையுடைய, பஞ்சவடி-பஞ்சவடி என்னும், காட்டினான் - காட்டையுடையவரும், பார் அளப்பான் போல் - பூமியை அளப்பவன்போல், எவர்க்கும் - எல்லோருக்கும், கஞ்சம் - தாமரைமலர்போன்ற, அடி-திருவடியை, காட்டினான்-சேவை சாதித்தவருமாகிய திருமால், காப்பு-காக்குமிடம். எ-று.

பஞ்சவடி-ஸ்ரீராமபிரான் ஜானகிபிராட்டியுடன் வாசஞ்செய்த ஓர் அரணியபிரதேசம். இதுகோதாவிரிநதியின் சமீபத்திலுள்ளது. பஞ்சவடி-ஐந்து ஆலமரங்களுள்ளது.

௯௯. எவ்விடமுமாறுதோய்ந்தெல்லோரும்பல்பாம்பும்
வெவ்விடரினீங்கியெழுமவெங்கடமே - தெவ்விடையேழ்
அட்டவனாகத்தணையானாதிமறைநூன்மார்க்கம்
விட்டவனாசுத்தணையான்வெற்பு.

(இ-ள்.) எ இடமும் - எங்கும் ஓடுகின்ற, ஆறு தோய்ந்து-ஆற்றில் முழுகி, எல்லோரும் - யாவரும், வெம்மை இடரின் - வெவ்விய துன்பத்தினின்றும், நீங்கி - நீங்கி, எழும்-எழுகின்ற, வேங்கடமே—, பல் பாம்பும் - பல பாம்புகளும், வெம்மை விடரின் - வெவ்விய பிளப்பினின்றும், நீங்கி எழும் - நீங்கிப் புறப்படுகின்ற, வேங்கடமே - திருவேங்கட மலையே, தெவ் விடை ஏழ் - பகைமையையுடைய ஏழு ரிஷபங்களையும், அட்டவன் - கொன்றவனும், நாகத்தணையான்-சேஷசயனத்தையுடையவனும், ஆதி - முதன்மையாகிய, மறைநூல் மார்க்கம் - வேதநூல் மார்க்கத்தை, விட்டவன்-விட்ட சேதனனுடைய, ஆகத்து - மனத்தில், அணையான் - சேராதவனுமாகிய திருமாலின், வெற்பு - மலை. எ-று.

"ஆறு தோய்ந்தெல்லாரும் வெவ்விடரின் நீங்கி யெழும்" எனவே அங்குள்ள ஆறானது தன்னில் முழுகினாருடைய இருவினைத் துன்பங்களைப்போக்கி முத்தியடைவிக்கும் என்பதாயிற்று. வேத மார்க்கத்திற்குப் புறம்பான கொள்கையுடையவருக்குப் பாஷண்டர் என்றுபெயர்.

௧௦௦. பாடுமதுகரமும்பச்சைத்தழைக்குடிலில்
வேடுமணமருவும்வேங்கடமே - நீடு
மகராலயங்கடந்தார்வாழ்வசுதேவர்க்கு
மகராலயங்கடந்தார்வாழ்வு.

(இ-ள்.) பாடும் - ரீங்காரம் பண்ணுகின்ற, மதுகரமும்-வண்டுகளும், மணம் மருவும்-வாசனையைச் சேர்கின்ற, வேங்கடமே—, பச்சைதழை - பசுமையாகிய தழைகளால் செய்யப்பட்ட, குடிலில்-குடிசைகளில், வேடும் - வேடர்களும், மணம் மருவும் - கலியாணத்தைக் கொண்டிருக்கின்ற, வேங்கடமே - திருவேங்கட மலையே, நீடு-நீண்ட, மகராலயம் - கடலை, கடந்தார் - கடந்தவரும், வாழ் வசுதேவர்க்கு-வாழ்வையுடைய வசுதேவருக்கு, மகரால் - பிள்ளைகளால், ஐயங்கள் - சந்தேகங்களை, தந்தார் - தந்தவருமாகிய திருமால், வாழ்வு - வாழுமிடம். எ-று.

மதுகரம் - தேனைச் சேகரிப்பது. மகராலயம் - மகர மச்சங்களுக்கு இருப்பிடமாய் இருப்பது. வசுதேவருக்கு மகரால் உண்டாகிய. ஐயமாவது:—எம்பெருமானாலே நியமிக்கப்பட்ட யோகநித்திரை கோகுலத்திலிருந்த வசுதேவருடைய மனைவியாகிய ரோகணியின் வயிற்றிலிருந்த வாயுரூபமான ஏழுமாதத்துக் கருப்பத்தை யழித்துவிட்டு, தேவகியின் வயிற்றிலிருந்த சேஷாம்ஸமான கருப்பத்தைக் கொண்டுபோய் ரோகணிவயிற்றில் சேர்த்துவிட்டதேயாம்.

ஆதி திருவேங்கடமென்றுயிரம்பேரானிடமென்
றோதியவெண்பாவொருநூறுங் - கோதில்
குணவாளபட்டரிருகோகனகத்தாள்சேர்
மணவாளதாசன்றன்வாக்கு.

திருவேங்கடமாலைமுற்றிற்று.

ஸ்ரீ

நம்மாழ்வார்துணை.

திருவேங்கடத்தந்தாதி.

மூலமும் உரையும்.

தனியன்.

இக்கரையந்திரத்துட்பட்டதென்னவிருவினையுள்
புக்கரைமாநொடியுந்தரியாதுழல்புன்பிறப்பாம்
எக்கரைநீக்கிப்படித்தாரையந்தவிருவிரசைக்
கக்கரைசேர்க்குமணவாளதாசனருங்கவியே.

(இ-ள்.) இக்கு - கரும்பானது, அரை - (தன்னுள் அகப்பட்ட பொருளை) நசுக்குகின்ற, யந்திரத்துள் பட்டது என்ன - யந்திரத்துள் அகப்பட்டாற்போல, இருவினையுள் - நல்வினை தீவினைகளாகிய இரு வினைகளில், புக்கு - புகுந்து, அரை மா நொடியும் - அரைம்மா என்னும் அளவினதாகிய (சிறிது) பொழுதும், தரியாது-தங்காமல், உழல்-சுழலுகின்ற, புல் பிறப்பு ஆம் - புல்லிய பிறப்பாகிய, எக்கர்-மணல் மேட்டை, நீக்கி - நீக்கி, மணவாளதாசன் - அழகிய மணவாளதாசரது, அரு கவி - அருமையாகிய பாடல்களை, படித்தாரை - கற்றவர்களை, அந்த இரு விரசைக்கு - அந்த பெருமையாகிய விரசாநதிக்கு, அக்கரை - அந்தக்கரையிலுள்ள பரமபதத்தில், சேர்க்கும் - கொண்டு போய்ச் சேரப்பண்ணும். எ-று.

இக்கு ஆன்மாக்களுக்கும் யந்திரம் இருவினைகளுக்கும் உவமை, விரசாநதிக்கு இக்கரையளவும் பிரகிருதி சம்பந்தமான உலகங்களும் அக்கரையில் பரமபதமும் உள்ளனவாதலால் பரமபதத்திற் கொண்டு சேர்க்கும் என்பதற்கு "அக்கரைசேர்க்கும்" என்றார். பரமபதம் செல்வோர் விரசாநதியில் முழுகி, பிரகிருதி சம்பந்தமொழிந்து திவ்ய தேகிகளாய் நித்யசூரிகளால் எதிர்கொண்டழைக்கப்படுவார் என்பது நூற்றுணிபு.

காப்பு.

நல்லவந்தாதிதிருவேங்கடவற்குநான்விளம்பச்
சொல்லவந்தாதின்வழுபொருட்சோர்வறச்சொல்வித்தருள்
பல்லவந்தாதிசைவண்டார்குருகைப்பரசமயம்
வெல்லவந்தாதிமறைதமிழாற்செய்தவித்தகனே.

(இ-ள்.) பல்லவம் - தளிர்களையும், தாது - மகரந்தங்களையுமுடைய (சோலையின்கண்), இசை - இராகத்தைப் பாடாநின்ற, வண்டு - வண்டுகள், ஆர் - நிறைந்த, குருகை - திருக்குருகூரென்னுந் திவ்வியதேசத்தில், பரசமயம்வெல்ல - இதர சமயங்களைவெல்லுதற்கு, வந்து - அவதரித்து, ஆதிமறை-முதன்மையாகிய வேதத்தை, தமிழால்செய்த - தமிழினாற்செய்த, வித்தகனே - ஞானசொரூபியாகிய நம்மாழ்வாரே, நல்ல-நன்மைபொருந்திய, அந்தாதி-அந்தாதியென்னும் பிரபந்தத்தை, திருவேங்கடவற்கு - திருவேங்கடமலையில் நின்ற திருக்கோலமா யெழுந்தருளியிராநின்ற திருமாலுக்கு, நான்விளம்ப-நான்சொல்ல, சொல் அவம் - சொற்குற்றமும், தாதின் வழு - முதனிலைக்குற்றமும், பொருட்சோர்வு - பொருட்குற்றமும், அற-நீங்க, சொல் வித்தருள் - சொல்வித்தருளாய். எ-று.

ஆழ்வார் ஆதிமறை தமிழாற்செய்த வித்தகராகையால் தாம் செய்யும் தமிழ்நூற்கு இவரைக் காப்பாகக் கூறினார்.

நூல்.

க. திருவேங்கடத்துநிலைபெற்றுநின்றனசிற்றனையால்
தருவேங்கடத்துத்தரைமேனடந்தனதாழ்பிறப்பின்
உருவேங்கடத்துக்குளத்தேயிருந்தனவுற்றழைக்க
வருவேங்கடத்தும்பியஞ்சலென்றோடினமால்கழலே.

(இ-ள்.) கடம்-மதத்தையுடைய, தும்பி-யானையாகிய கசேந்திராழ்வான், உற்றழைக்க-துன்பமுற்றழைக்க, வருவேம் - யாம்வருவோம், அஞ்சலென்று - பயப்படாதேயென்று, ஓடின-ஓடிவந்தனவாகிய, மால் - திருமாலினுடைய, கழல் - திருவடிகள், திருவேங்கடத்து - திருவேங்கடமலையினிடத்து, நிலைபெற்றுநின்றன - நிலையாக நிற்கப்பெற்றன, சிற்றனையால்-சிறியதாயாகிய கைகேசியினால், தரு-மரங்கள், வேம் - வேகாநின்ற, கடத்துத் தரைமேல் - பாலைநிலத்தின்மேல், நடந்தன-நடந்தன, தாழ்-தாழ்ந்த, பிறப்பின்-பிறப்பினது, உருவேங்கள் - உருவத்தையுடைய எங்களது, தத்துக்கு-விபத்தை நீக்குதற்கு, உளத்தே-உள்ளத்தே, இருந்தன - இருந்தன.

ஆன்மகோடிகளுக்கு உஜ்ஜீவனகரமாயிருப்பது இறைவனது திருவடியாகையால் நூலின் ஆரம்பத்தில், அத்திருவடிகளின் ஏற்றங் கூறியபடியாம். வேங்கடம்-பாபத்தைச்சேதிப்பது.

உ. மாலைமதிக்குஞ்சியீசனும்போதனும்வாசவனும்
நூலைமதிக்குமுனிவருந்தேவருநோக்கியந்தி
காலைமதிக்குள்வைத்தேத்துந்திருமலைகைம்மலையால்
வேலைமதிக்கும்பெருமானுறைதிருவேங்கடமே.

(இ-ள்.) மாலை-கொன்றைமாலையையும், மதி-மூன்றாம்பிறையையுமணிந்த, குஞ்சி - சடையையுடைய, ஈசனும் - சிவனும், போதனும் - பிரமனும், வாசவனும் - தேவேந்திரனும், நூலை மதிக்கும்- நூல்களை ஆராய்ந்தறியும், முனிவரும் - முனிவர்களும், தேவரும்- தேவர்களும், அந்தி - மாலைப்போதிலும், காலை - காலைப்போதிலும், நோக்கி - தரிசித்து, மதிக்குள் - தமதறிவின்கண், வைத்தேத்தும்- வைத்துத்துதிக்கின்ற, திருமலை - திருமலையானது, கைமலையால்- புயமாகிய மலையினால், வேலை - திருப்பாற்கடலை, மதிக்கும்- கடைந்த, பெருமான் - திருமால், உறை - வசிக்கின்ற, திருவேங்கடமே - திருவேங்கடமலையே. எ-று.

ஈசன்முதலியோர் துதிக்கும் திருமலையெனவே அதில் நின்ற திருக்கோலமாயெழுந்தருளிய இறைவனது ஏற்றம் கூறுமே அமையும். கை மலை-அழகிய மந்தரமலை எனினுமாம்.

௩. வேங்கடமாலையவியாமதிவிளக்கேற்றியங்கம்
ஆங்கடமாலயமாக்கிவைத்தோமவன்சேவடிக்கே
தீங்கடமாலைக்கவிபுனைந்தோமிதிற்சீரியதே
யாங்கடமாலயிராவதமேறியிருக்குமதே.

(இ-ள்.) வேங்கடமாலை - திருவேங்கடத்துத்திருமாலை, அவியா - கெடாத, மதிவிளக்கேற்றி - அறிவாகிய திருவிளக்கையேற்றி, அங்கம் ஆம்-உறுப்புக்களையுடைய, கடம்-(நமது) சரீரத்தை, ஆலயமாக்கிவைத்தோம் - திருக்கோயிலாக்கிவைத்தோம், தீங்கு - (நமது) பிறவித்துன்பம், அட - கெடும்படி, அவன்சேவடிக்கே - அவனது செவ்விய திருவடிகளிலே, மாலைக்கவிபுனைந்தோம் - பாமாலையையுமணிந்தோம், கடம்-மதத்தையுடைய, மால் - பெரிய, அயிராவதம்- அயிராவதமென்னும் வெள்ளையானையின்மேல், ஏறி-ஏறிக்கொண்டு, யாம் - நாம், இருக்குமது - தேவலோகத்திலே தேவராசனுயரசு செலுத்திக்கொண்டிருப்பது, இதில்சீரியதே - இதைப்பார்க்கச்சிறந்ததோ. எ-று.

இறைவன் திருவடிக்குக் கவிமாலைபுனைந்தமையால் தீமை நீங்கிப் பரமபதம் அடைதல் உண்மையெனத்துணிந்து இந்திரபோகத்தையும் விரும்பாது "இதிற் சீரியதே யாம் கடமால யிராவதமேறியிருக்குமதே" என்றார்.

௪. இருக்காரணஞ்சொல்லுமெய்ப்பொருளின்பமுமெய்ப்பொருட்கும்
கருக்காரணமுநற்றாயுநற்றந்தையுங்கஞ்சச்செல்வப்
பெருக்காரணங்கின்றலைவனுமாதிப்பெருந்தெய்வமும்
மருக்காரணவும்பொழில்வடவேங்கடமாயவனே.

(இ-ள்.) இருக்கு ஆரணம்-இருக்குவேதம், சொல்லும்-சொல்லாநின்ற, மெய்ப்பொருள் - உண்மைப்பொருளினது, இன்பமும்-மகிழ்ச்சியும், எப்பொருட்கும் - எவ்வகைப்பொருள்களுக்கும், கருகாரணமும் - உற்பத்தி காரணமும், நல்தாயும் - நல்லதாயும், நல்தந்தையும் - நல்லதந்தையும், கஞ்சம் - செந்தாமரைப்பூவி லெழுந்தருளிய, செல்வம் பெருக்கு - மிகுந்தசெல்வம், ஆர் - நிறைந்த, அணங்கின்தலைவனும் - பெரியபிராட்டியாருடைய மணாளனும், ஆதி-முதன்மையாகிய, பெருந்தெய்வமும் - பெரியதெய்வமும், மரு-வாசனை, கார் - மேகமண்டலத்தை, அணவும் - பொருந்திய, பொழில்-சோலையையுடைய, வடவேங்கடமாயவனே - வடக்கின்கணுள்ள திருவேங்கடமலையில்வாசஞ்செய்யும் மாயவனே. எ-று.

வேங்கடம் தமிழ்நாட்டிற்கு வடக்கெல்லையாதலால் "வடவேங்கடம்" என்னப்பட்டது.

ரு. மாயவன்கண்ணன்மணிவண்ணன்கேசவன்மண்ணும்விண்ணும்
தாயவன்கண்ணன்கமலமொப்பான்சரத்தாலிலங்கைத்
தீயவன்கண்ணன்சிரமறுத்தான்றிருவேங்கடத்துத்
தூயவன்கண்ணன்புடையார்க்குவைகுந்தந்தூரமன்றே.

(இ-ள்.) மாயவன்-மாயவனும், கண்ணன்-கிருஷ்ணனும், மணிவண்ணன் - நீலமணியினிறமுடையவனும், கேசவன் - கேசவனும், மண்ணும்-பூமியினையும், விண்ணும்-வானத்தினையும், தாயவன்-தாவியளந்த திரிவிக்கிரமனும், கண்-கண்கள், நல்-நல்ல, கமலம் ஒப்பான்-செந்தாமரைக்கொப்பானவனும், சரத்தால் - அம்பினால், இலங்கை-இலங்கையில்வாழ்ந்த, தீய-கொடிய, வன்கண்ணன்-கொடியவனாகிய இராவணனுடைய, சிரம் அறுத்தான்-தலைகளையறுத்தோனும்(ஆகிய), திருவேங்கடத்து - திருவேங்கடமலையிலிருக்கின்ற, தூயவன்கண் - பரிசுத்தனிடத்தில், அன்புடையார்க்கு - அன்புடைய பாகவதர்களுக்கு, வைகுந்தம் - பரமபதம், தூரமன்று-தூரமல்ல. எ-று.

சு. தூரவிரும்புண்டரிக்குமிக்காயத்தைச்சூழ்பிணிகாள்
நேரவிரும்புண்டரற்கருள்வானெடுவேங்கடத்தான்
ஈரவிரும்புண்டரீகப்பொற்பாதங்களென்னுயிரைத்
தீரவிரும்புண்டநீராக்குமாறுள்ளஞ்சேர்ந்தனவே.

(இ-ள்.) நேர் - நேராக, அவிரும் - பிரகாசிக்கின்ற, புண்டரற்கு - திருமண் அணிந்தவர்களுக்கு, அருள்வான் - அனுக்கிரகம் பண்ணுவோன், நெடு - நீண்ட, வேங்கடத்தான் - திருவேங்கடத்தான், ஈர - குளிர்ந்த, இரு-பெரிய, புண்டரீகப் பொன்பாதங்கள் - செந்தாமரைக்கொப்பாகிய பொலிவுபெற்ற திருவடிகள், என் உயி

ரை - என்னுடையவுயிரை, தீர - முழுமையும், இரும்புண்ட நீராக்குமாறு - இரும்புண்ட நீர்போலாக்கும்வண்ணம், உள்ளஞ்சேர்ந்தன - என் மனத்தினிடத்திற் சேர்ந்தன (ஆதலால்), புண்தரிக்கும் - மாமிசத்தையுடைய, இக்காயத்தை - இச்சரீரத்தை, சூழ்பிணிகாள் - சூழ்ந்தநோய்களே, தூர இரும்-நீங்கள் தூரப்போயிருங்கள். எ-று.

புண்டரம் - நெற்றிக்குறி, அது இங்கு ஊர்த்தவபுண்டரத்துக்காயிற்று. ஊர்த்தவபுண்டரம்-மேனோக்கியிடும் திருமண். புண்டரீகம்-வெண்டாமரை. அது இங்கு திருவடிக்குவமையாகையால் புண்டரீகாக்ஷன் என்பதிற்போலச் செந்தாமரையை யுணர்த்தியது. பொற்பாதங்களென்னு யிரைத்தீர இரும்புண்ட நீராக்குமாறு என்றமையால் இறைவனது திருவடிநிழலை அடைந்து இனிப் பிறவிக்கு வருதல் இல்லையென்பது வெளிப்படும்.

எ. சேர்ந்துகவிக்கும்முடிகவித்தாய்சிறியேனிதயம்
சார்ந்துகவிக்கும்வரமளித்தாய்கொண்டறண்டலைமேல்
ஊர்ந்துகவிக்கும்வடமலையாய்பஞ்சொழுக்கியபால்
வார்ந்துகவிக்கும்பொழுதிலஞ்சேலென்றுவந்தருளே.

(இ-ள்.) சேர்ந்து-கிட்கிந்தையைச்சேர்ந்து, கவிக்கும்-வாநரவேந்தனாகிய சுக்கிரீவனுக்கு, முடிகவித்தாய்-திருமுடிசூட்டினவனே, சிறியேன் - அறிவிற்சிறியேனாகிய என்னுடைய, இதயஞ்சார்ந்து-மனத்தைச்சார்ந்து, கவிக்கும் வரமளித்தாய்-நின்மேற் கவிசொல்லுகைக்கும் வரங்கொடுத்தாய், கொண்டல்-மேகங்கள், தண்டலைமேல்-சோலையின்கண், ஊர்ந்து - தவழ்ந்து, கவிக்கும் - மூடுகின்ற, வடமலையாய் - வடமலையையுடையவனே, பஞ்சு-பஞ்சினால், ஒழுக்கிய-ஒழுகவிட்ட, பால் - பாலானது, வார்ந்து - கடைவாயினின்றும் வழிந்து, உக-சிந்த, விக்கும்பொழுதில் - விக்கலெடுக்குஞ்சரமதசையிலே, அஞ்சேலென்று-பயப்படாதேயென்று, வந்தருள் - என்முன் வந்து கிருபைசெய்வாய். எ-று.

விக்கும்பொழுது என்றது மரணகாலத்தை. "நாச்செற்று விக்குண்மேல் வாராமுன் நல்வினை - மேற்சென்று செய்யப்படும்" என்றார் பிறரும்.

அ. வந்திக்கவந்தனைகொள்ளென்றுகந்தனுமாதவரும்
சிந்திக்கவந்தனைவேங்கடநாதபல்சீவன்றின்னும்
உந்திக்கவந்தனைச்செற்றுயுனக்குரித்தாயபின்னும்
புந்திக்கவந்தனைச்செய்தைவர்வேட்கைபொருமென்னையே.

(இ - ள்.) வந்திக்க - வணங்க, வந்தனை - அவ்வணக்கத்தை, கொள்ளென்று - அங்கீகரிப்பாயென்று, கந்தனும் - குமரனும், மாத

வரும் - முனிவரும், சிந்திக்க - தியானிக்க, வந்தனை - அவர்கட்குப் பிரத்தியட்சமானுய், வேங்கடநாத - திருவேங்கடநாதனே, பல் சீவன் - பலவுயிர்களை, தின்னும் - தின்கின்ற, உந்தி - வயிற்றினை யுடைய, கவந்தனை - கவந்தனென்னுமரக்கனை, செற்றாய் - கொன்ற வனே, உனக்கு உரித்தாயபின்னும் - உனக்குரியதாசனானபின்னும், ஐவர்-பஞ்சேந்திரியங்களின், வேட்கை-ஆசை, புந்திக்கு-அறிவிற்கு, அவந்தனைச்செய்து - பயனின்மையைச்செய்து, பொரும் - போரா டும், என்னை-இது என்ன வியப்பு. எ-று.

"உனக்குரித்தாயபின்னும் புந்திக்கவந்தனைச்செய்து ஐவர் வேட்கை பொருமென்னையே" என்பதற்கேற்ப நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியிலும் "உண்டு கேட்டுற்று மோந்துப்பார்க்குமைவர்க்கே - தொண்டுபடலாமோ உன்றொண்டனேன்" என்றார். கவந்தனைக்கொன்றது இராமாவதாரத்தில் ஆரணியவாசஞ்செய்கையில்.

கூ. பொருதரங்கத்தும்வடத்துமனந்தபுரத்துமன்பர்
கருதரங்கத்துந்துயில்வேங்கடவகண்பார்த்தருளாய்
நிருதரங்கத்துநிறம்போல்வருமந்திநேரத்தன்றில்
ஒருதரங்கத்தும்பொழுதும்பொறாளென்னொருவல்லியே.

(இ - ள்.) பொரு - மோதுகின்ற, தரங்கத்தும் - அலையை யுடைய திருப்பாற்கடலிலும், வடத்தும் - ஆலிலையிலும், அனந்த புரத்தும் - திருவனந்தபுரமென்னுந் திவ்வியதேசத்திலும், அன்பர்-பாகவதர்கள், கருது - தியானிக்கின்ற, அரங்கத்தும் - திருவரங்கத் திலும், துயில் - யோகநித்திரைசெய்யாநின்ற, வேங்கடவ-திருவேங் கடத்தானே, நிருதர் - இராக்கதருடைய, அங்கத்துநிறம்போல் - சரீ ரத்தினிறத்தைப்போல, வரும் - வருகின்ற, அந்திநேரத்து - அந் திப்பொழுதில், அன்றில் - அன்றிற்பேடானது, ஒருதரங்கத்தும் பொழுதும் - ஒருதரங்கூப்பிடும் பொழுதும், பொறாள் - சகியாள், என் - என்னுடைய, ஒருவல்லி - ஒருபெண்ணானவள், (ஆதலினால்) கண்பார்த்தருளாய்-இவள்பேரிற் கிருபைவைத்திரட்சிப்பாயாக.

அன்றிற் பறவையினோசை பிரிந்தார்க்கு விரகவேதனையை வளர்த்து வருத்துதலால் "அன்றி லொருதரங்கத்தும் பொழுதும் பொறாளென்னொருவல்லியே" என்றார். இது மாலைப்பொழுது கண் டிரங்கல் என்னும் துறை. இது தாய்க்கூற்று.

கo. ஒருமாதவனியொருமாதுசெல்வியுடனுறைய
வருமாதவனின்மகுடம்வில்வீசவடமலைமேல்
கருமாதவன்கண்ணனின்பாற்றிருநெடுங்கண்வளர்கைக்
கருமாதவமென்னசெய்தாய்பணியெனக்கம்புதியே.

(இ-ள்.) ஒருமாது அவனி - ஒருபெண் பூமிப்பிராட்டியார், ஒருமாதுசெல்வி - ஒபெண் பெரியபிராட்டியார் (ஆகிய இருவரும்) உடனுறைய - தன்னோடிருக்க, வரும் - உதயமாகின்ற, ஆதவனின்- சூரியனைப்போல, மகுடம் - கிரீடமானது, வில்வீச - ஒளிவீச, வட மலைமேல் - வடமலையின்கண், கருமாதவன் - கரியதிருமேனியை யுடைய மாதவன், கண்ணன் - கிருஷ்ணன், நின்பால்-உன்னிடத் திலே, திரு-சிறந்த, நெடு-நெடிய, கண்வளர்கைக்கு - நித்திரைசெய் தற்கு, அரு-அரிதான, மா-பெரிய, தவமென்னசெய்தாய் - நீயென்ன் தவஞ்செய்தாய், அம்புதியே - கடலே, எனக்கு பணி - எனக்குச் சொல்லுவாயாக. எ-று.

இது தலைமகள் கடலொடுபுலம்பல்.

கக. அம்பரந்தாமரைபூத்தலர்ந்தன்னவவயவரை
அம்பரந்தாமரையஞ்சனவெற்பரையாடகமாம்
அம்பரந்தாமரைசூழ்ந்தாரைவாழ்த்திலரைம்புலனும்
அம்பரந்தாமரைபோற்றிரிவாரையகனெஞ்சமே.

(இ-ள்.) அம்பரம் - கடலினிடத்து, தாமரைபூத்து - செந்தா மரைபூத்து, அலர்ந்தன்ன - மலர்ந்தாற்போன்ற, அவயவரை-அவய வங்களையுடையவரை, அம் - அழகிய, பரந்தாமரை - பரமபதத்தை யுடையவரை, அஞ்சனவெற்பரை - அஞ்சனத்திரியையுடையவரை, ஆடகமாம் - பொன்னாகிய, அம்பரம் - வஸ்திரத்தை, தாம் - தாம், அரை - இடையில், சூழ்ந்தாரை - சூழக்கட்டினவரை, வாழ்த்திலர்- துதிக்காதவர்களாய், ஐம்புலனும் - ஐம்புலன்களாகிய, அம்பரம்- ஆகாயத்தில், தாம்-தாவுகின்ற, மரைபோல் - மரையென்னு மிருகத் தைப்போல, திரிவாரை-சஞ்சரிக்கிற கீழ்மக்களை, நெஞ்சமே-மனமே, அகல்-நீக்குவாயாக. எ-று.

ஐம்புலனை அம்பரமாக உருவகஞ்செய்து ஆன்மாவை அதிற் றாவும் மரையாகக் கூறினமையால் ஐம்புல ஆசையிற்பட்டுவருந்து வோர் என்பதாயிற்று. இவர்கள் இறைவனை வாழ்த்தாமைக்குக் காரணம் ஐம்புல ஆசையை அடக்கும் வலியின்மையேயாம். இனி "ஐம்புலன் - ஐம்புலன்களாகிய, நாமம் - அச்சம், பரந்து-மிகப்பெ ற்று, ஆ-ஐயோ, மரைபோல் திரிவாரை எனப்பொருள்கூறினும் அமையும்.

கஉ. நெஞ்சுகந்தத்தையுமக்குரைத்தேனிற்றைநீடிரவொன்
றஞ்சுகந்தத்தைவிளைக்குமென்னுசையதாமிதழ்சொல்
கிஞ்சுகந்தத்தையனையீரிங்கென்னைக்கெடாதுவிடும்
விஞ்சுகந்தத்தைவிளைக்குந்துழாயண்ணல்வேங்கடத்தே

(இ - ள்.) இதழ் - இதழும், சொல் - சொல்லும், கிஞ்சுகம்-முருக்கமலரையும், தத்தை - கிளிமொழியையும், அனையீர்-ஒப்பான தோழிமார்களே, நெஞ்சு-என்னெஞ்சமானது, உகந்தத்தை-விரும்பியதை, உமக்குரைத்தேன் - உங்கட்குச்சொன்னேன், இற்றை-இன்றைய, நீடு-நீண்ட, இரவொன்று-இராத்திரியொன்றுமே, அஞ்சு உகம்தத்தைவிளைக்கும்-ஐந்து யுகத்தின் துன்பத்தைவிளைக்கின்றது, அது என் ஆசை ஆம்-அது என் ஆசையின் காரியமாம், விஞ்சு-மிகுந்த, கந்தத்தை-வாசனையை, விளைக்கும்-கொடுக்கின்ற, துழாய்-திருத்துழாய்மாலையையணிந்த, அண்ணல் - திருமாலெழுந்தருளிய, வேங்கடத்தே-திருவேங்கடமலையினிடத்தே, என்னை கொடாதுவிடும்-என்னைக்கெடுக்காமல் கொண்டுபோய் விட்டுவிடுங்கள். எ-று.

“இதழ்சொல் கிஞ்சுகம்தத்தை” பெயர்ச்சொற்களும் பெயர்ப்பயனிலைகளுமாய் நின்ற முறைநிரனிறை. தத்தை பொருளாகு பெயர். இது இரவு நீடத் தலைமகள் வருந்துதல்.

கரு. வேங்கடத்தாரையுமீடேற்றநின்றருள்வித்தகனைத்
தீங்கடத்தாரைப்புனைந்தேத்திலீர்சிறியீர்பிறவி
தாங்கடத்தாரைக்கடத்துமென்றேத்துதிர்தாழ்கயத்துள்
ஆங்கடத்தாரைவிலங்குமன்றேசொல்லிற்றையமற்றே.

(ள்-ள்.) சிறியீர் - அறிவிற்சிறியவர்களே, வேங்கடத்து - திருவேங்கடமலையினிடத்து, ஆரையும் - எல்லாரையும், ஈடேற்ற-இரட்சிப்பதற்காக, நின்றருள்-நின்ற திருக்கோலமாயெழுந்தருளிய, வித்தகனை - ஞானமூர்த்தியை, தீங்கு - உம்முடைய பிறவித்தீங்கை, அட-கெடுக்க, தாரை-திருத்துளவமாலையை, புனைந்து-சாத்தி, ஏத்திலீர்-வாழ்த்துகிறீர்களில்லை, பிறவிதாம்கடத்தாரை - தங்கள் பிறவிகளைத் தாங்கள் நீக்கிக்கொள்ளும் வலியற்றவர்களை நோக்கி, கடத்துமென்று - எங்களையீடேற்றுமென்று, ஏத்துதிர் - துதிக்கின்றீர்கள், தாழ்-ஆழமான, கயத்துள் ஆம் - குளத்திலே முதலையின்வாயிலகப்பட்ட, கடம்தாரை - மதமழையையுடைய, விலங்கும் - யானையும், அன்றே-அல்லவோ, ஐயமற்று - சந்தேகமின்றி, சொல்லிற்று-ஆதிமூலமேயென்று கூப்பிட்டது. எ-று.

தேவதாந்தரங்களை வணங்குவோர்க்குப் பரமபதமில்லையென்பது இதனாற் கூறப்பட்டது.

கச. ஐயாதுவந்தனைநாயேனையஞ்சனவெற்பவென்றும்
கையாதுவந்தனைநின்னையல்லாற்கண்ணுதன்முதலோர்
பொய்யாதுவந்தனையார்முகங்காட்டினும்போற்றியுரை
செய்யாதுவந்தனைபண்ணுதுவாக்குமென்சென்னியுமே.

(இ-ள்) ஐயா - ஐயனே, அஞ்சனவெற்ப - அஞ்சனத் திரியில் நின்ற திருக்கோலமாயெழுந்தருளியவனே, துவந்தனை - பாசபந்தத்தையுடையேனை, நாயேனை - நாய்போல்வேனை, என்றும் - எக்காலத்தும், கையாது - வெறுக்காமல், உவந்தனை-அங்கீகரித்தாய், நின்னை அல்லால்-உன்னையல்லாமல், கண்ணுதல் முதலோர் - சிவன்முதலாகிய தேவர்கள், பொய்யாது - மெய்யாகவே, வந்து - எனக்குப் பிர்த்தியட்சமாகிவந்து, அனையார்முகம் - அவர்களுடையமுகத்தை, காட்டினும் - காட்டினாலும், வாக்கும் - என்வாயும், போற்றியுரை செய்யாது - புகழ்ந்துரையாது, என்சென்னியும் - என்தலையும், வந்தனைபண்ணுது - வணங்காது. எ-று.

தேவதாந்தரங்களை வணங்கலாகாது என்பது இதனாற்கூறப் பட்டது.

கரு. சென்னியிலங்கைகுவிக்குமுயிர்க்குந்திகைக்குநின்னை
உன்னியிலங்கையிற்கண்ணுறங்காளுயர்வீடணனை
மன்னியிலங்கையில்வாழ்கென்றவேங்கடவாணமற்றோர்
கன்னியிலங்கைக்கினின்பேர்கருணைக்கடலல்லவே.

(இ-ள்.) உயர் - அறிவாலுயர்ந்த, வீடணனை - விபீடணனை, மன்னி-நிலைபெற்று, இலங்கையில்-இலங்காபுரியில், வாழ்க என்ற-வாழ்ந்திருவென்று திருமுடிசூட்டின, வேங்கடவாண - திருவேங்கடத்தில் வாழ்பவனே, நின்னையுன்னி-உன்னை நினைத்து, சென்னியில்-சிரசின்மேல், அம்கைகுவிக்கும்-அழகிய கைகூப்புவாள், உயிர்க்கும்-பெருமூச்செறிவாள், திகைக்கும் - மயங்குவாள், இலங்கு-பிரகாசிக்கின்ற, அயில் - வேல்போன்ற, கண்ணுறங்காள் - கண்ணுறக்கங்கொள்ளாள், மற்றோர் கன்னி இலம்-யாங்களிவளைவிட வேறொரு பெண்ணில்லாதவர்களாக இருக்கின்றோம், (ஆதலினால்) கைக்கின்-இவளை அங்கீகரியாமல் வெறுப்பையாயின், நின்பேர் - உன்னுடைய பெயர், கருணைக்கடல் அல்ல - கிருபைக்கடல் அல்ல. எ-று.

வாழ்க என்னும் வியங்கோளின் ஈறுதொகுத்தல். இது நற்றாயிரங்கல்.

கசு. கடமாமலையின்மருப்பொசித்தாய்க்குக்கவிநடத்தத்
தடமாமலைவற்றவாளிதொட்டாய்க்கென்றனிநெஞ்சமே
வடமாமலையுந்திருப்பாற்கடலும்வைகுந்தமும்போல்
இடமாமலைவற்றுநின்றுங்கிடந்துமிருப்பதற்கே.

(இ-ள்.) கடம் - மதத்தையுடைய, மா - பெரிய, மலையின்-மலைபோன்ற குவலயாபீடமென்னும் யானையினது, மருப்பு-கொம்பை, ஒசித்தாய்க்கு - முறித்தவுனக்கு, கவிநடத்த - வானரசைநியங்

களை நடத்த, தடம்-விசாலமாகிய, ஆம்-நீராயுடைய, அலை - கடல், வற்ற - வற்றிப்போக, வாளி - அக்கினியாஸ்திரத்தை, தொட்டாய்க்கு- பிரயோகம்பண்ணினவுனக்கு, வடமாமலையும் - வடக்கின்கண்ணதாகிய திருவேங்கடமலையும், திருப்பாற்கடலும் - க்ஷீராப்தியும், வைகுந்தமும்போல்-திருவைகுந்தமும்போல், அலைவு அற்று- அசைவற்று, நின்றும் - நின்றதிருக்கோலமாக எழுந்தருளியிருப்பதற்கும், கிடந்தும்-சயனத் திருக்கோமலாக எழுந்தருளியிருப்பதற்கும், இருப்பதற்கு - வீற்றிருந்த திருக்கோலமாய் எழுந்தருளியிருப்பதற்கும், என் - என்னுடைய, தனி நெஞ்சம் - ஒப்பற்ற நெஞ்சமே, இடமாம்- இடமாகும். எ-று.

இறைவன் அலைவற்று நின்றும் கிடந்தும் இருப்பதற்கே இடமாம் என்னும் திண்மைநோக்கித் தன்னெஞ்சைத் "தனிநெஞ்சம்" என்றார்.

கஎ. இருப்பதனந்தனிலெண்ணவில்வைகுந்தத்தென்பர்வெள்ளிப்
பருப்பதனந்தண்மலரோனறிகிலர்பாரளந்த
திருப்பதனந்தன்மதலைநிற்குந்திருவேங்கடமென்
பொருப்பதனந்தறவிர்ந்துயிர்காடொழப்போதுமினே.

(இ-ள்.) பார் - பூமியை, அளந்த - அளந்தருளிய, திருப்பதன்- திருவடியையுடையான், நந்தன்மதலை - நந்தகோபன்திருக்குமரன், எண்ணவில் - எண்ணுதற்கரிய, வைகுந்தத்து-பரமபதத்தில், அனந்தனில் - ஆதிசேஷன்மீது, இருப்பது-வீற்றிருப்பது, என்பர்-என்று சொல்லுவர், வெள்ளிப்பருப்பதன் - வெள்ளிமலையையுடைய சிவனும், அம்-அழகிய, தண் - குளிர்ந்த, மலரோன்-செந்தாமரைப்பூவிலிருக்கின்ற பிரமதேவனும், அறிகிலர்-அறியார்கள், நிற்கும்-(அவர்) நின்ற திருக்கோலமாயெழுந்தருளியிருக்கின்ற, திருவேங்கடமென்- திருவேங்கடமென்னும், பொருப்பது - மலையை, உயிர்காள் - உயிர்களே, அனந்தல் தவிர்ந்து - (அஞ்ஞான) நித்திரை நீங்கி, தொழப் போதுமின் - வணங்கவாருங்கள். எ-று.

பொருப்பது என்பதில் அ-சாரியை, து பகுதிப்பொருள்விகுதி.

கஅ. போதாரவிந்தவனையும்புகாவண்டபுற்புதத்தின்
மீதாரவிந்தவினைதீர்க்கவேண்டும்விண்மண்ணுக்கெல்லாம்
ஆதாரவிந்தளந்தேன்பாடும்வேங்கடத்தப்பநின்பொற்
பாதாரவிந்தமல்லாலடியேற்கொருபற்றில்லையே.

(இ-ள்.) விண் - விண்ணுலகத்திற்கும், மண்ணுக்கு-மண்ணுலகத்திற்கும், எல்லாம் - மற்றெல்லாவுலகத்திற்கும், ஆதார - ஆதாரமானவனே, தேன்-வண்டுகள், இந்தளம்-இந்தளமென்னும் பண்ணை,

பாடும் - பாடுகின்ற (பொழில்களாற்சூழப்பட்ட), வேங்கடத்தப்ப-திருவேங்கடமலையிலிருக்கின்ற அப்பனே, போதார்-பிரமர்கள், அவிந்தவரையும் - ஒடுங்கி இறந்த காலத்தும், புகா - பிரவேசித்தற்கரிய, அண்டபுற்புதத்தின்மீது - நீர்க்குமிழிபோன்ற அண்டங்களுக்கு மேலுள்ள பரமபதத்திலே, ஆர - யான் சேர, இந்தவினை தீர்க்கவேண்டும்-இந்த இரு வினைகளையும்கெடுக்கவேண்டும், நின்-உன்னுடைய, பொற்பாதாரவிந்தமல்லால் - அழகிய பாததாமரையேயன்றி, அடியேற்கு-தாசனுனவெனக்கு, ஒருபற்றில்லை - வேறொருபற்றுமில்லை.

அண்டங்கள் அழியும் இயல்பின ஆகையால் புற்புதம் என்றார். அழியா இயல்பினதாகிய பரமபதம் அவற்றிற்கு மேலுள்ளதாதலால், அதனை அண்டப்புற்புதத்தின்மீது என்றார். மீது இடவாகுபெயர். "நிலமிசை நீடுவாழ்வார்" என்றார் பிறரும்.

கசு. பற்றியிராமற்கலைபோய்வெளுத்துடல்பாதியிரா
வற்றியிராப்பகனின்கண்பனிமல்கிமாசடைந்து
நிற்றியிராகமொழிச்சியைப்போனெடுவேங்கடத்துள்
வெற்றியிராமனைவேட்டாய்கொனீயுஞ்சொல்வெண்மதியே.

(இ-ள்.) வெண்மதியே-வெள்ளியசந்திரனே, பற்றியிராமல்-ஓரிடத்திற் றங்கியிராமல், கலைபோய் - கலைகள்போய், உடல்வெளுத்து-சரீரம்வெளுத்து, பாதியிரா - பாதியுமிராமல், வற்றி-தேய்ந்து, இராப்பகல்-இராப்போதிலும் பகற்போதிலும், நின்கண் பனிமல்கி-உன்கண் பனிநீர்துளித்து, மாசு அடைந்து - களங்கமுற்று, இராகமொழிச்சியைப்போல்-இசைக்கொப்பான மொழியையுடைய என் பெண்ணைப்போல், நிற்றி-நின்றனை, நெடுவேங்கடத்துள்-நீண்ட திருவேங்கடமலையினிடத்து, வெற்றி இராமனை - ஜெயராமனை, நீயும் வேட்டாய்கொல்-நீயும் விரும்பினையோ, சொல்-சொல்லுவாயாக.

இறைவனை அடையப்பெறாத விரகவேதனையால் ஓரிடத்தில் தங்கியிராமலும், கலையை இழந்தும், உடல்வெளுத்துப் பாதியாய் இளைத்தும், இரவும் பகலும் கண்கள் பனிமல்கப்பெற்றும் மாசடைந்தும் இருக்கும் தன்மையால் இவளுக்குச்சந்திரன் உவமையாதல் அறிக. கலை-கூறு, ஆடை. பனி - பனி-நீர். விந்தவினை எனப் பிரித்து விந்தமலைபோன்ற வினை எனப் பொருளுரைப்பினுமாம். இது தாய்க்கூற்று.

உ0. மதியாதவன்கதிர்மின்மினிபோலொளிர்வைகுந்தந்தா
மதியாதவன்றரவாழ்ந்திருப்பீர்வடவேங்கடவன்
மதியாதவன்கடத்துட்டயிர்வாய்வைத்தமாயப்பிரான்
மதியாதவனுரங்கீண்டான்கழல்சென்னிவைத்திருமே.

(இ-ள்.) வடவேங்கடவன் - வடதிசையின்கணுள்ள திருவேங்கடமலையையுடையான், வன்கடத்துள் - வலியகுடத்திலிருக்கின்ற, மதியாத - கடையாத, தயிர் - தயிரை, வாய்வைத்த - குடித்த, மாயப்பிரான் - மாயத்தையுடைய பெருமான், மதியாதவன் - தன்னை மதியாதவனாகிய இரணியனுடைய, உரம் - மார்பை, கீண்டான் - பிளந்த நரசிங்கப்பெருமான் (அவனது), கழல் - திருவடிகளை, சென்னிவைத்திரும் - சிரசின்மேல் வைத்துத் துதித்துக்கொண்டிருங்கள், மதி - சந்திரன், ஆதவன் - சூரியன் ஆகிய இவர்களுடைய, கதிர்-கிரணங்கள், மின்மினிபோல்-மின்மினிப்பூச்சிபோல, ஒளிர்-பிரகாசியாநின்ற, வைகுந்தம் - பரமபதத்தை, தாமதியாது-தாமசஞ்செய்யாமல், அவன்தர - அவனுங்கட்குக்கொடுக்க, வாழ்ந்திருப்பீர்-(நீங்கள் பரமபதத்திலெக்காலமு நிலைபெற்று) வாழ்ந்திருப்பீர்கள்.

உரங்கீண்டான் என்றமையால் மதியாதவன் இரணியகசிப்புக்காயிற்று.

உக. இருபதுமந்தரத்தோளுமிலங்கைக்கிறைவன்சென்னி
ஒருபதுமந்தரத்தேயறுத்தோனப்பனுந்திமுன்னாள்
தருபதுமந்தரவந்தனநான்முகன்றான்முதலா
வருபதுமந்தரமொத்தபல்சீவனும்வையமுமே.

(இ-ள்.) இலங்கைக்கிறைவன் - இலங்காபுரிக்கிறைவனாகிய இராவணனுடைய, இருபதுமந்தரத்தோளும் - மந்தரமலைபோன்ற இருபதுதோள்களும், சென்னி ஒருபதும் - பத்துத்தலைகளும், அந்தரத்தே அறுத்தோன் - ஆகாயத்தில் சேதித்தவன், அப்பன் - திருவேங்கடத்தப்பன், உந்திதருபதுமம் - அவனது திரு உந்திபூத்த தாமரையானது, முன்நாள் - ஆதிகாலத்தில், தர - படைக்க, நான்முகன்தான்முதலா - பிரமதேவன் முதலாக, வரு - வருகின்ற, பதுமம்தரம் - பதுமமென்னுந் தொகையளவிற்கொத்த, பல்சீவனும் - பல ஆத்துமகோடிகளும், வையமும் - பூமியும், வந்தன - உற்பத்தியாயின. எ-று.

பதுமம்-கோடாகோடி.

உஉ. வையமடங்கலுமோர்துகள்வாரியொருதிவலை
செய்யமடங்கல்சிறுபொறிமாருதஞ்சிற்றுயிர்ப்பு
துய்யமடங்கலிலாகாயந்தான்விரற்றேறென்றும்வெளி
வெய்யமடங்கல்வடிவானவேங்கடவேதியற்கே.

(இ-ள்.) வெய்ய - வெவ்விய, மடங்கல் வடிவான - நரசிங்கவடிவான, வேங்கடவேதியற்கு - திருவேங்கடவேதியனுக்கு, வையம் - பூமி, அடங்கலும்-முழுவதும், ஓர்துகள்-ஓர்தூசி, வாரி-கடல், ஒருதிவலை - ஒருதுளி, செய்ய-சிவந்த, மடங்கல் - ஊழித்தீயானது,

சிறு-சிறிய, பொறி - தீப்பொறி, மாருதம் - ஊழிக்காற்று, சிற்றுயிர்ப்பு - சிறியமூச்சு, துய்ய - சுத்தமான, மடங்கலில் - அழிதலில்லாத, ஆகாயம்-ஆகாயமோ, விரல்தோன்றும்வெளி-விரல்களுக்கிடையில் தோன்றுகின்ற வெளி. எ-று.

மற்றபூதங்கள் தன்னுள் ஒடுங்கிநிற்கும் பெருமைதோன்ற "துய்யமடங்கலில் ஆகாயம்" என்றார். தான், ஏ இவ்விரண்டு மசைநிலைகள்.

உரு. வேதாவடமலைவெங்காலன்கையில்விடுவித்தென்னை
மாதாவடமலைகொங்கையுண்ணுதருண்மண்ணளந்த
பாதாவடமலைமேற்றுயின்றாய்கடற்பார்மகட்கு
நாதாவடமலையாயலர்மேன்மங்கைநாயகனே.

(இ-ள்.) மண்-பூமியை, அளந்த - அளந்தருளிய, பாதா-திருவடியையுடையவனே, வடம் - ஆலிலையிலும், அலைமேல்-திருப்பாற்கடலிலும், துயின்றாய் - யோகநித்திரைசெய்கின்றவனே, கடல்-கடலாற்சூழப்பட்ட, பார்மகட்கு - பூமிப்பிராட்டியாருக்கு, நாதா-கணவனே, வடமலையாய் - வடமலையையுடையவனே, அலர்மேன்மங்கை - அலர்மேன்மங்கைத்தாயாருக்கு, நாயகனே - மணாளனே, வேதா-பிரமன்கையினின்றும், வடம்அலை-பாசத்தால் கட்டிவருத்துகின்ற, வெங்காலன் கையில் - வெவ்விய நமன் கையினின்றும், விடுவித்து - விடுதலைபண்ணி, என்னை - என்னை, மாதா - தாயினுடைய, வடம்-முத்துவடம், அலை-அலைகின்ற, கொங்கையுண்ணுதருள்-முலைப்பாலையுண்ணுதருள்செய்வாயாக. எ-று.

அலர்மேன்மங்கை திருமலையில் எழுந்தருளிய பிராட்டி திருநாமம். ஜனன மரணத்துன்பங்களை ஒழித்தருள்வாயென்பது கருத்து.

உச. நாயகராத்திரியுஞ்சிலதேவர்க்குநாணிலைகொல்
தூயகராத்திரிமூலமெனுமுனந்துத்திப்பணிப்
பாயகராத்திரிமேனியம்மான்பைம்பொன்வேங்கடவன்
தீயகராத்திரிசக்கரத்தாற்கொன்றசீர்கண்டுமே.

(இ-ள்.) தூயகராத்திரி-பரிசுத்தமாகிய கஜேந்திரன், மூலம்-ஆதிமூலமே, எனு-என்று கூப்பிடுதற்கு, முனம்-முன்னமே, துத்திபடத்தின்கட் பொறியமைந்த, பணிபாயகம் - ஆதிசேடனாகிய பாயலையும், ராத்திரி - இராத்திரியைப்போலுங்கரிய, மேனி - திருமேனியையுமுடைய, அம்மான் - அப்பன், பைம்பொன் - பசும்பொன்னுடையையுடைய, வேங்கடவன் - திருவேங்கடமலையையுடையவன், தீய-கொடிய, கரா-முதலையை, திரி-சுழற்றிவிடுகின்ற, சக்கரத்தால்

கொன்ற-சக்கரத்திஞற்கொன்ற, சீர்கண்டும் - சிறப்பைப்பார்த்திருந்தும், நாயகராத்திரியும் - இறைவனென்று திரிகின்ற, சிலதேவர்க்கு-சிலதேவர்கட்கு, நாணிலைகொல் - வெட்கமில்லையோ. எ-று.

பரம்பொருளுணர்ச்சிகை கூடப்பெற்றமையால் நாயகராத்திரி என்ருர். கராத்திரி-கையையுடையமலை.

உடு. கண்டவனந்தரங்காலெரிநீர்வையங்காத்தவைமீண்
டுண்டவனந்தரங்கத்துறைவானுயரத்தமமர்
விண்டவனந்தரமேலவன்வேங்கடமாலடிமை
கொண்டவனந்தரத்தும்பேர்நினைக்கவுங்கூற்றஞ்சுமே.

(இ-ள்.) வையம் - பூமி, நீர் - நீர், எரி-தீ, கால் - காற்று, அந்தரம்-ஆகாசமென்னும் பஞ்சபூதங்களை, கண்டவன் - படைத்தவன், அவை - அவற்றினை, காத்து - இரட்சித்து, மீண்டுண்டவன் - பிறகுண்டவன், அம்தரங்கத்து-அழகிய திருப்பாற்கடலில், உறைவான்-வாசம்பண்ணுகிறவன், உயர் - உயர்ந்த, அத்தம் - ஞானப்பொருள்களையுடைய கீதையை, அமர்-போர்க்களத்தில், விண்டவன் - அருச்சுனனுக்குச் சொல்லியருளினவன், நம்தரம்மேலவன் - நமது தகுதிக்கு மேலானவன், வேங்கடமால் - திருவேங்கடமலையில் நின்ற திருக்கோலமாயெழுந்தருளிய திருமால், அடிமைகொண்டவன் - என்னைத் தாசனுகக் கொண்டவன் (அவனது) பேர்-திருநாமத்தை, அந்தரத்தும் - சரமதசையிலும், நினைக்கவும்-நினைத்தாலும், கூற்று-கூற்றுவன், அஞ்சும்-பயப்படுவன். எ-று.

"கண்டவனந்தரங் காலெரிநீர்வையங் காத்தவை மீண்டுண்டவன்" என்பதை "சுராறிவருநிலைவிண்முதல் முழுவதும் வரன்முதலாயவைமுழுதுண்ட பரபரன்" என்னும் ஆழ்வார் பாசுரத்தானுமுணர்க. "உயர்தந்தை தமர்விண்டவன்" எனவும் பாடம். உயர்ந்த தந்தையும் உறவினரும் இல்லாதவன் என்பது பொருள்.

உசா. அஞ்சக்கரவடமூலத்தன்போதனறிவரிய
செஞ்சக்கரவடவேங்கடநாதனைத்தேசத்துள்ளீர்
நெஞ்சக்கரவடநீங்கியின்றேதொழுநீண்மறலி
துஞ்சக்கரவடம்வீசுமக்காலந்தொழற்கரிதே.

(இ-ள்.) அஞ்சக்கரம் வடமூலத்தன்-பஞ்சாக்கரத்தையுடைய கல்லாலமரத்தடியி லிருக்கின்ற சிவனும், போதன் - பிரமனும், அறிவு அரிய-அறிதற்கரிய, செம்மைசக்கரம் - சிவந்தநிறமுள்ள சக்கரத்தையுடைய, வடவேங்கட நாதனை - வடவேங்கடத்துக்குத் தலைவனை, தேசத்துள்ளீர் - நாட்டிலுள்ளவர்களே, நெஞ்சம் கரவடம்-மனத்தில் கபடம், இன்றே நீங்கி-இப்போதே நீங்கி, தொழும்-வணங்

குங்கள், (ஏனெனில்) நீள்மறலி - பெரிய உருவமுடைய இயமனுன வன், கரம்-கையிற்கொண்ட, வடம் - பாசத்தால், துஞ்ச-நீங்களிறக் கும்படி, வீசும் - எறிகின்ற, அக்காலம் - அச்சரமதசையில், தொழற் கரிது-வணங்கற்கரிது. எ-று.

சிவன் கல்லாலமரத்தின்கீழ் வீற்றிருந்தது பிரமபுத்திரர்களா கிய சனகாதியருக்குத் தத்துவார்த்தங்களை உபதேசித்தற்கு. "பெண் ணுலாஞ்சடையினனும் பிரமனு முன்னைக்காண்பான் - எண்ணிலா வூழியூழிதவஞ்செய்தார் வெள்கி நிற்ப" எனவும், "அப்போதைக் கிப்போதே சொல்லிவைத்தேன்" எனவும் பெரியோர் பணித்தமை யால் இவரும் "அஞ்சக்கரவடமூலத்தன் போதனறிவரிய - செஞ் சக்கரவட வேங்கடநாதனை" எனவும், "அக்காலம் தொழற்கரிதே" எனவும் கூறினர்.

உஎ. தொழும்பாலமரர்தொழும்வேங்கடவன்சுடர்நயனக்
கொழும்பாலனையொருகூறுடையானந்தகோபனில்லத்
தழும்பாலனுகியகாலத்துப்பேய்ச்சியருத்துநஞ்சைச்
செழும்பாலமுதென்றுவந்தாற்கென்பாடல்சிறக்குமன்றே.

(இ-ள்.) தொழும்பால் - அடிமைத்தன்மையால், அமரர்தொ ழும் - நித்தியசூரிகள் வணங்குகின்ற, வேங்கடவன் - திருவேங் கடமலையையுடையான், சுடர்நயனம் - அக்கினிக்கண்ணை, கொழும் பாலனை - கொழுவிய நெற்றியினுடைய சிவனை, ஒருகூறுடையான்- ஒருபாலுடையவன், நந்தகோபன் இல்லத்து-நந்தகோபன்வீட்டில், அழும்பாலனுகியகாலத்து-அழாநின்ற குழந்தையாகிய காலத்திலே, பேய்ச்சி அருத்தும் - பூதனை உண்பித்த, நஞ்சை-விடத்தை, செழு பாலமுதென்று - செழித்த பாலாகிய அமுதென்று, உவந்தார்க்கு- விரும்பியுண்ட திருமாலுக்கு, என்பாடல் - என்னுடைய கவியும், சிறக்கும்-சிறந்திருக்கும். எ-று.

பாலம்-நெற்றி. பால்அமுது. இருபெயரொட்டுப் பண்புத்தொ கை. கம்சனுல் ஏவப்பட்ட வஞ்சகியாகியபூதனை தந்தபால் நஞ்சோடு கலந்த பாலென்றறிந்தும் தன்தாயின் முலைப்பாலைப்போல உண் டனனுதலால் "பேய்ச்சியருத்து நஞ்சைச் செழும்பாலமுதென்று வந்தான்" என்றார். "ஏறூளுமிறையோனும் திசைமுகனுமிந்திர னும் கூறாளும் தனியுடம்பன்" எனப் பெரியோர் கூறியவாறே இவ ரும் "சுடர்நயனக் கொழும்பாலனை யொருகூறுடையான்" என்றார்.

உஅ. சிறக்கும்பதந்தருவார்திருவேங்கடச்செல்வர்செய்ய
நிறக்கும்பதந்தொழுதுய்யவெண்ணீர்நெறியிற்பிழைத்து
மறக்கும்பதந்தியுஞ்சேலுமசுணமும்வண்டினமும்
பறக்கும்பதங்கமும்போலேவராற்கெடும்பாதகரே.

(இ-ள்.) மறம் - கோபமுள்ள, கும்பம் - மத்தகத்தையுடைய, தந்தியும் - யானையும், சேலும் - கயலும், அசுணமும் - கேகயப்புள்ளும், வண்டினமும் - வண்டுக்கூட்டங்களும், பறக்கும் - பறக்கின்ற, பதங்கமும்-விட்டிற்பறவையும், போல்-போல, நெறியிற்பிழைத்து-நன்னெறியினின்றுந்தவறி, ஐவரால் - பஞ்சேந்திரியங்களால், கெடும்-கெட்டுப்போகாநின்ற, பாதகரே - பாதகர்களே, (நீங்கள்) திருவேங்கடச்செல்வர் - திருவேங்கடச்செல்வரது, செய்ய - செவ்விய, நிறக்கும் - நிறமமைந்த, பதம் - திருவடிகளை, தொழுது - வணங்கி, உய்ய - உயிர்வாழ்தற்கு, எண்ணீர் - எண்ணுங்கள், சிறக்கும் - எல்லாப்பதவிக்கு மேலான, பதம் - பரமபதத்தை, தருவார் - கொடுப்பார். எ-று.

யானை பரிசத்தாலும், மீன்சுவையாலும், அசுணம் ஓசையாலும், வண்டு கந்தத்தாலும், பதங்கம் ஒளியாலும் கெடுதல்போல, பஞ்சேந்திரியங்களால் அழிகிற பாவிகளே நீங்கள் திருவேங்கடமுடையான் திருவடியைத்தொழுது உய்ய நினைப்பீராக என்பது கருத்து.

உகூ. பாதமராவுறைபாதாளத்தூடுபகிரண்டத்துப்
போதமராயிரம்பொன்முடியோங்கப்பொலிந்துநின்றாய்
நீதமரானவர்க்கெவ்வாறுவேங்கடநின்றருளும்
நாதமரா்மரமெய்தாய்முன்கோவனடந்ததுவே.

(இ-ள்.) அரா-பாம்புகள், உறை-வசிக்கின்ற, பாதாளத்தூடு-பாதாளத்தில், பாதம்-திருவடிகளும், பகிர் அண்டத்து - வெளியண்டத்தில், போது - பூக்கள், அமர் - பொருந்திய, பொன் - அழகிய, ஆயிரமுடி - ஆயிரந்திருமுடிகளும், ஓங்க-உயர, பொலிந்து - அழகுற்று, நின்றாய் - நின்ற திரிவிக்கிரமனே, வேங்கடநின்றருளும்-வேங்கடமலையினின்ற திருக்கோலமாயெழுந்தருளியிருக்கிற, நாத-நாதனே, மராமரமெய்தாய் - மராமரமெய்தவனே, நீதமரானவர்க்கு - நீநின்தாசர்களாகிய பொய்கையாழ்வார் முதலிய மூவர்க்கும், முன்-முற்காலத்தில், கோவல் - திருக்கோவலூரென்னும் திவ்விய தேசத்தில், நடந்தது எவ்வாறு - (சேவைசாதிக்கும்படி) நடந்துவந்தது எப்படி. எ-று.

திருக்கோவலூரில் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார் பேயாழ்வார்களாகிய முதலாழ்வார் மூவரும் ஒருவரையொருவர் அறியாதவர்களாய் வந்துசேர்ந்து எம்பெருமானை மங்களாசாஸனஞ்செய்து வணங்கி தனித்தனியே வெவ்வேறிடங்களில் எழுந்தருளியிருந்தார்கள். இவர்களில் முதலில் பொய்கையார் சூரியாஸ்தமயமானபின் ஒரு பாகவதருடைய திருமாளிகையின் இடைகழியில் சயனித்துக்கொ

ண்டிருந்தார். பின்பு பூதத்தாழ்வார் சயனிக்க இடந்தேடிக்கொண்டு போய் பொய்கையாழ்வார் சயனித்துக்கொண்டிருக்கிற திருமாளிகையின் வாசலில் நின்று, அடியேன் படுத்துக்கொள்வதற்கு இங்கு இடமுண்டோவென்றுகேட்க, சயனித்திருந்த பொய்கையார் கதவைத்திறந்து, ஸ்வாமி அடியேன் படுத்திருக்குமிடம் ஒருவர் படுக்கவும் இருவர் இருக்கவும் தக்கதாயிருக்கின்றது. தேவரீர் எழுந்தருளினால் இருக்கலாமென்றுசொல்ல, பூதத்தாழ்வார் உள்ளே சென்று இருவருமாயிருந்தார்கள். அதன்பின் பேயாழ்வாரும் அப்படியே இடம் தேடிக்கொண்டு அங்கேவந்து இங்குபடுக்க இடமுண்டோவென்று கேட்க, உள்ளே இருந்த இருவரும் இந்தத் திண்ணை ஒருவர்படுக்கவும், இருவரிருக்கவும், மூவர் நிற்கவுமே இடமுளது. தேவரீரும் எழுந்தருளலாமென்றனர். அவரும் உட்பிரவேசித்து மூவரும் அத்திண்ணையில் நின்றுகொண்டிருந்தனர். அப்போது பகவான் நிற்பதற்கும் கூடாத நெருக்கமுண்டாகும்படி செய்தருள, ஆழ்வார்கள் மூவரும் இதுவரையில் இல்லாத நெருக்கம் இப்போது உண்டாவதற்கு ஏதுவென்னவென்று ஞானதிருஷ்டியாற் பார்க்கும்போது ஸ்ரீமந்நாராயணன் லக்ஷ்மீசமேதராய்ச் சேவை சாதித்தருளத் தரிசித்து வணங்கிப் பொய்கையாழ்வார் (வையந்தகளியென்று) முதலெடுத்து முதற்றிருவந்தாதியும், பூதத்தாழ்வார் (அன்பேதகளியென்று) முதலெடுத்து இரண்டாம் திருவந்தாதியும், பேயாழ்வார் (திருக்கண்டேன்) என்று முதலெடுத்து மூன்றும் திருவந்தாதியும் செய்தருளினர். நடந்ததுவே எனக் குற்றியலுகரம் கெடாமல்வந்தது.

ந௦. நடைக்கலங்காரமடவார்விழிக்குநகைக்குச்செவ்வாய்க்
கிடைக்கலங்காரமுலைக்கிச்சையானவிவனென்றெண்ணிப்
படைக்கலங்காணத்துரந்தேநமன்றமர்பற்றுமன்றைக்
கடைக்கலங்காணப்பனேயலர்மேன்மங்கையங்கத்தனே.

(இ-ள்.) அலங்காரம் மடவார் - அழகிய பெண்களுடைய, நடைக்கு - நடைக்கும், விழிக்கு - கண்ணுக்கும், நகைக்கு-சிரிப்புக்கும், செவ்வாய்க்கு - சிவந்தவாய்க்கும், இடைக்கு - இடைக்கும், அலங்கு - அசையாநின்ற, ஆரம் - முத்துமாலையணிந்த, முலைக்கு-தனத்துக்கும், இச்சையான இவனென்று-இச்சித்திருக்கிற இவனென்று, எண்ணி-நினைத்து, படைக்கலம்-ஆயுதங்களை, காண-கண்டஞ்ச, துரந்து-செலுத்தி, நமன் - இயமனுடைய, தமர் - பந்துக்களாகிய தூதர்கள், பற்றும்-பிடித்துக்கொண்டுபோகும், அன்றைக்கு - அக்காலத்திற்கு, அப்பனே - ஐயனே, அலர்மேன்மங்கை - அலர்மேன்மங்கையாரை, அங்கத்தனே - மார்பிலுடையவனே, அடைக்கலம் - நான் உன் அடைக்கலம். எ-று.

காமுகர் நடைமுதலிய ஒவ்வொன்றிலும் அழுந்தி வருந்தும் இழிவுதோன்ற தனித்தனி குவ்வுருபு கொடுத்துக் கூறினர்.

ருக. அங்கமலைக்கும்வினையாலலமரவோவுனக்கும்
அங்கமலைக்குமடிமைப்பட்டேனரவானபரி
அங்கமலைக்குடையாயக்கராவுடனன்றமர்செய்
அங்கமலைக்குமுன்னின்றருள்வேங்கடத்தற்புதனே.

(இ-ள்.) அரவானபரியங்க - திருவனந்தாழ்வானாகிய கட்டிலை யுடையவனே, மலைக்குடையாய்-கோவர்த்தனமலையைக் குடையாக வுடையவனே, அக்கராவுடன் - அம்முதலையுடன், அன்று - அக்கா லத்தில், அமர்செய் - போர்செய்த, அங்கமலைக்கு (கஜேந்திரன் என்னும்) யானைக்கு, முன்னின்றருள் - முன்னின்றுகாத்த, வேங்க டத்து - வேங்கடமலையிலிருக்கின்ற, அற்புதனே - ஆச்சரியகரனே, அங்கம் - சரீரத்தை, அலைக்கும் - வருத்தாநின்ற, வினையால் - வினை யினால், அலமரவோ-சுழலவோ, உனக்கும்-தேவரீருக்கும், அம்-அழ கிய, கமலைக்கும் - பெரியபிராட்டியாருக்கும், அடிமைப்பட்டேன் - ஆட்பட்டேன். எ-று.

மலையைக் குடையாகப் பிடித்தருளியது கிருஷ்ணவதாரத்தில் இந்திரனால் பெய்வித்த கல்மழையைத்தடுத்து ஆயர்களையும் பசுக் கூட்டங்களையும் காத்தற்பொருட்டு.

ருஉ. அற்பரதத்துமடவார்கலவியுமாங்கவர்கள்
நற்பரதத்துநடிப்பதும்பாடலுநச்சிநிற்பார்
நிற்பரதத்துக்கதிர்தோயும்வேங்கடநின்றருளும்
சிற்பரதத்துவன்றாளடைந்தேன்முத்திசித்திக்கவே.

(இ-ள்.) அற்பரதத்து - சிற்றின்பத்தையுடைய, மடவார்-பெ ண்களது, கல்வியும் - போகத்தையும், அவர்கள் - அவர்கள், நற்பர தத்து - நல்ல பரதநூன்முறைப்படி, நடிப்பதும் - கிருத்தஞ்செய்வ தையும், பாடலும் - இசைப்பாட்டையும், நச்சிநிற்பார் - விரும்பிநிற் பார், நிற்ப-நிற்க, இரதத்து - இரதத்தின்மேல்வருகின்ற, கதிர்-சூரி யன், தோயும்-படிகின்ற, வேங்கடம்-திருவேங்கடமலையில், நின்றரு ளும் - நின்ற திருக்கோலமாயெழுந்தருளியிராநின்ற, சிற்பரதத்து வன்-சின்மயமாகிய பரதத்துவப்பொருளானவனது, தாள்-திருவடி யை, அடைந்தேன்-சேர்ந்தேன், முத்தி-பரமபதம், சித்திக்க-வாய்ப் பதற்கு. எ-று.

முக்தி என்னும் வடமொழி முத்தியெனத் தற்பவமாய்வந்தது.

ருங. சித்திக்குவித்ததுவோவிதுவோவென்றுதேடிப்பன்னூல்
கத்திக்குவித்தபொய்ப்புத்தகத்தீர்கட்டுணாக்கவம்மின்
அத்திக்குவித்தனையும்முண்டவேங்கடத்தச்சுதனே
முத்திக்குவித்தகனென்றேசுருதிமுறையிடுமே.

(இ-ள்.) சித்திக்கு - மோக்ஷத்திற்கு, வித்து - மூலம், அதுவோ - அப்பொருளோ, இதுவோ - இப்பொருளோ, என்று-என்று கருதி, தேடி-நாடி, பல்நூல் - பலநூல்களை, கத்தி-படித்து, குவித்த-சேர்த்த, பொய் - பொய்யாகிய, புத்தகத்தீர் - புத்தகத்தையுடையவரே, கட்டுரைக்க - யானுறுதியாகச்சொல்ல, வம்மின் - நீங்கள்வாருங்கள், அத்தி-கடல், கு-பூமி, இத்தனையும்-இவ்வளவையும், உண்ட-உண்டருளிய, வேங்கடத்து - திருவேங்கடமலையி லெழுந்தருளிய, அச்சுதனே - அச்சுதனே, முத்திக்கு - பரமபத மளித்தற்குரிய, வித்தகன் என்று-ஞான சொரூபியென்று, சுருதி - வேதம், முறையிடும்-முறையிடுகின்றது. எ-று.

அச்சுதன் - பிரமாதிகளோடு தானும் ஒருவனாக அவதாரஞ் செய்தகாலத்திலும் தன்னுடைய ஐசுவரியத்தை விடாதிருக்கிறவன்.

ருச. முறையிடத்தேசமிலங்கைசெற்றான்முதுவேங்கடத்துள்
இறையிடத்தேசங்குடையானினியென்னையாண்டிலனேல்
தறையிடத்தேயுழலெல்லாப்பிறவிதமக்குமள
வுறையிடத்தேய்ந்திடுமிவ்வந்திவானத்துடுக்குலமே.

(இ-ள்.) தேசம் முறையிட - உலகமுறைப்பாடுசெய்ய, இலங்கைசெற்றான்-இலங்கையிலுள்ள அரக்கரைக்கொன்றவன், முது-பழமையாகிய, வேங்கடத்துள் - திருவேங்கடமலையிலிருக்கின்ற, இறை-கடவுள், இடத்தே - இடதுபக்கத்திலே, சங்குடையான் - பாஞ்சசந்நியமென்னும் சங்கத்தையுடையவன், இனியென்னை - இனிமேல் என்னை, ஆண்டிலனேல் - ஆட்கொள்ளானாயின், தறையிடத்தே-பூமியினிடத்தே, உழல் - சுழல்கின்ற, எல்லாப்பிறவி தமக்கும் - எவ்வகைப்பட்ட பிறவிகட்கும், அளவு - கணக்கு, இ அந்திவானத்து-இந்த அந்திப்பொழுதில் வானத்திற்றோன்றும், உடுக்குலம் - விண்மீனின் கூட்டங்கள், உறை இட-உறை யென்னு மிலக்கக்குறியிட, தேய்ந்திடும் - குறைந்திடும். எ-று.

உறை-கணக்குச்செய்வதற்கு வைக்கும் ஓர் அடையாளம். விண்மீனின் தொகை உறையிடத் தேயும் எனவே இறைவன் என்னை ஆட்கொள்ளாவிட்டால் பலபிறவிகள்பெற்றுவருந்துவேன் என்பது கருத்து.

ருரு. உடுக்குமுடைக்குமுணவுக்குமேயுழல்வீரினிநீர்
எடுக்குமுடைக்குரம்பைக்கென்செய்வீரிழிமும்மதமும்
மிடுக்குமுடைக்குஞ்சரந்தொட்டவேங்கடவெற்பரண்ட
அடுக்குமுடைக்குமவரடிகாண்மினனைவருமே.

(இ-ள்.) உடுக்கும் - தரிக்கின்ற, உடைக்கும் - வஸ்திரத்துக்கும், உணவுக்குமே - ஆகாரத்திற்குமே, உழல்வீர்-திரிகின்றவர்களே

இனி-இனிமேல், நீர்-நீங்கள், எடுக்கும் - எடுக்காநின்ற, முடை-புலால் நாற்றத்தையுடைய, குரம்பைக்கு - சரீரத்தையொழித்தற்கு, என் செய்வீர்-என்ன உபாயம் செய்வீர்கள், இழி - ஒழுகாநின்ற, மும்மதமும்-மும்மதங்களும், மிடுக்கும்-பலமும், உடை-உடைய, குஞ்சரம்-குவலயாபீடமென்னும் யானையை, தொட்ட - கொம்பைப்பறித்த, வேங்கடவெற்பர்-திருவேங்கடமலையிலிருக்கின்றவர், அண்டம் அடுக்கும்-அண்டத்தினுடைய அடுக்குகளையும், உடைக்கும்-உடைக்கின்ற, அவர் - அவருடைய, அடி-திருவடியை, அனைவரும் - நீங்கள் யாவரும், காண்மின் - தரிசித்து உச்சிவியுங்கள். எ-று.

மும்மதம்-கன்னமதம், கபோலமதம்-பீஜமதம்.

௩௬. வருமஞ்சனவனொருவனையேயுன்னிவாழ்த்துந்தொண்டீர்
கருமஞ்சனனங்களைந்துய்யவேண்டிற்கருதிற்றெல்லாந்
தருமஞ்சனவெற்பன்றாட்டாமரையைச்சதுமுகத்தோன்
திருமஞ்சனஞ்செய்புனல்காணுமீசன்சிரம்வைத்ததே.

(இ-ள்.) தொண்டீர் - சிவனடியார்களே, கருதிற்று - நினைத்தது, எல்லாம் - யாவும், தரும் - அளிப்பவனும், அஞ்சனவெற்பன் - அஞ்சனத்திரியையுடைவனுமாகிய சுவாமியினது, தாட்டாமரையை-திருவடித்தாமரைகளை, சதுர்முகத்தோன் - நான்குதிருமுகங்களையுடைய பிரமன், திருமஞ்சனஞ்செய் - விளக்குகின்ற, புனல்-ஜலம், நும் - உம்முடைய, ஈசன்-சிவன், சிரம்-தலையில், வைத்தது - தரித்தது (ஆதலால்), கருமம் - பாவபுண்ணியத்தினால்வரும், சனனம்-பிறவியை, களைந்து - நீக்கி, உய்ய - உஜ்ஜீவிக்க, வேண்டில்-விரும்புவீராகில், வரும் - நீருண்டுவருகின்ற, மஞ்சு-மேகத்துக்கு, அன்னவன்-ஒப்பானவனாகிய, ஒருவனையே-ஒருவனையே, உன்னி - நினைத்து, வாழ்த்தும்-துதியுங்கள். எ-று.

நும்மீசன் சிரம்வைத்தது என்றமையால் தொண்டீர் என்றது சிவனடியாரைக் குறிக்கின்றது.

௩௭. சிரந்தடிவானிவனேவென்றயன்வெய்யதீயசொல்லக்
கரந்தடிவான்றலைகவ்வப்பித்தேறலிற்கண்ணுதலோன்
இரந்தடிவீழத்துயர்தீர்த்தவேங்கடத்தெந்தைகண்டீர்
புரந்தடியேனைத்தன்பொன்னடிக்கீழ்வைக்கும்புண்ணியனே.

(இ-ள்.) சிரம்-தலையை, தடிவான் - கொய்கின்றவன், இவனேவென்று-இவனேவென்று, அயன்-பிரமன் (இட்ட) வெய்ய-கொடிய, தீயசொல்-சாபத்தால், அ கரம்-அந்தக்கையை, தடி-தசையையுடைய, வான்-பெரிய, தலை - சிரசு, கவ்வ, பற்றிக்கொள்ள, பித்தேறலில்-பைத்தியங்கொண்டதனால், கண்ணுதலோன் - நெற்றிக்கண்ணையுடையசிவன், இரந்து-யாசித்து, அடிவீழ - திருவடியில்விழுந்து வணங்க,

துயர்-(அவனது) துன்பத்தை, தீர்த்த-ஒழித்த, வேங்கடத்தெந்தை-திருவேங்கடத்தப்பன், புரந்து - இரட்சித்து, அடியேனை-தாசனாகிய வென்னை, தன் - தன்னுடைய, பொன்-அழகிய, அடிக்கீழ் - பாதத்தில், வைக்கும்-வைக்காநின்ற, புண்ணியன் - புண்ணியன். எ-று.

கண்டீர் முன்னிலையசைச்சொல். அயன் என்பது அஜன் என்னும் வடமொழித்திரிபு பொருள் பிறப்பில்லாதவன், இதுமங்கலம்.

௩அ. புண்ணியங்காமம்பொருள்வீடுபூதலத்தோர்க்களிப்பான்
எண்ணியங்காமன்றிருத்தாதைநிற்குமிடமென்பரால்
நண்ணியங்காமன்பரைக்கலங்காத்திருநாட்டிருத்தி
மண்ணியங்காமற்பிறப்பறுத்தாளும்வடமலையே.

(இ-ள்.) நண்ணி - தம்மைச்சார்ந்து, அங்கு-அவ்விடத்து, ஆம்-வருகின்ற, அன்பரை-பக்தரை, கலங்கா - அஞ்சாமல், திருநாட்டிருத்தி - பரமபதத்திலேயிருக்கச்செய்து, மண் - பூமியில், இயங்காமல்-(பிறந்து) உழலாமல், பிறப்பு-பிறவியை, அறுத்து-நீக்கி, ஆளும்-ஆட்கொள்ளும், வடமலையே - திருவேங்கடமலையே, புண்ணியம்-தருமம், காமம் - இன்பம், பொருள் - திரவியம், வீடு - மோட்சமென்னுமிவற்றை, பூதலத்தோர்க்கு - பூமியிலிருக்கின்றவர்கட்கு, அளிப்பான் - கொடுக்க, எண்ணி-நினைத்து, அம்-அழகிய, காமன்-மன்மதனுடைய, திருதாதை - சிறந்தபிதா, நிற்கும்-நின்ற திருக்கோலமாயெழுந்தருளியிராநின்ற, இடமென்பர்-இடமென்றுசொல்லுவார்கள். எ-று.

ஆல்-அசைநிலை. திருவேங்கடமுடையானை அடைந்தவர் தர்மார்த்த காமமோக்ஷங்களாகிய சதுர்வித புருஷார்த்தங்களையும் பெறுவர் என்பது கருத்து.

௩௯. வடமலையப்பன்னகஞ்சேர்ந்தவனிடைமங்கைகொங்கை
வடமலையப்பன்னரும்போகந்துய்த்தவன்மாயன்கண்ணன்
வடமலையப்பன்னருள்போற்றியைவர்மயக்குகர
வடமலையப்பன்னிருநாமநாவின்மலக்குவனே.

(இ-ள்.) வடம் - ஆலிலையிலும், அலை - திருப்பாற்கடலிலும், அபன்னகம் - அத்திருவனந்தாழ்வான் மீதினும், சேர்ந்தவன் - கண்வளரா நின்றவன், இடைமங்கை - இடைப்பெண்களுடைய, கொங்கை - தனத்தின்மீது, வடம் - முத்துமாலைகள், அலைய-அசைய, பன் அரு - சொல்லுதற்கரிய, போகம் - போகங்களை, துய்த்தவன்-அனுபவித்தவன், மாயன் - மாயன், கண்ணன்-கண்ணன், வடமலையப்பன்-திருவேங்கடமலையிலிருக்கின்ற அப்பன், (அவனது) அருள்-திருவருளை, போற்றி-துதித்து, ஐவர் - பஞ்சேந்திரியங்கள், மயக்கு-மயக்காநின்ற, கரவடம் - வஞ்சமானது, அலைய - நீங்க, பன்னிருநாமம்-துவாதச திருநாமங்களையும், நாவின் - நாவினால், மலக்குவன்-விடாமற் சொல்லுவன். எ-று.

பன்னிருநாமங்கள்:—கேசவன்-அழகான சிகையையுடையவன், கேசியென்னும் அசுரனை வதைத்தவன், பிரமருத்திரர்கள் பிறத்தற் கிடமானவன். நாராயணன் - நீரையிடமாகவுடையவன், நரசமூகங் களுக்குத்தான் இடமாயுள்ளவன், அன்றி நரசமூகத்தைத் தனக்கு இடமாகவுடையான். மாதவன் - இலட்சுமிநாயகன், யது என்பவ னுக்கு மூத்தகுமாரனாகிய மது என்பவனுடைய வமிசத்திற் பிறந்த வன். கோவிந்தன்-பசுபாக்கியத்தையுடையவன், பூமியை மகாபலியி னிடத்துப்பெற்றவன். விஷ்ணு - எங்கும் நிறைந்திருப்பவன். மது சூதனன்-மது என்பவனைக்கொன்றவன். திரிவிக்கிரமன்-மூன்றுலகங் களையும் மூன்றடியால் அளந்தவன். வாமனன் - மகாபலியின் வலி யடக்க வாமன ரூபங்கொண்டவன் (வாமனம் குள்ளம்). சிதரன் - திருமகளை மார்பிலணிந்தவன். இருடிகேசன்-இந்திரியங்களை நியமிப் பவன். பத்மநாபன்-தாமரை மலரைத் திருநாபியிலுடையவன். தா மோதரன் - திருவயிற்றில் துளசிமாலையை யுடையவன், யசோதை யால் தும்பினால் கட்டப்பட்ட திருவயிற்றையுடையவன்.

௪0. மலங்கத்தனத்தையுழன்றீட்டிமங்கையர்மார்பில்வடம்
அலங்கத்தனத்தையணையநிற்பீரப்பன்வேங்கடத்துள்
இலங்கத்தனத்தைமகன்றேரினின்றெதிரேற்றமன்னர்
கலங்கத்தனத்தைக்குறித்தானைமேவக்கருதுமினே.

(இ - ள்.) மலங்க - மனம்கலங்க, தனத்தை - திரவியத்தை, உழன்று - திரிந்து, ஈட்டி - சேகரித்து, மங்கையர்-பெண்களுடைய, மார்பில் - மார்பிலணிந்திராநின்ற, வடம் - முத்தாரங்கள், அலங்க- அசைய, தனத்தை - முலையை, அணைய - சேர, நிற்பீர் - நிற்கின்ற வர்களே, அப்பன் - தந்தையும், வேங்கடத்துள் - திருவேங்கடமலை யினிடத்தில், இலங்கு-பிரகாசியாநின்ற, அத்தன்-சுவாமியும், அத்தை மகன் - தன் அத்தையாகிய குந்திதேவியின் மகனாகிய பார்த்தனது, தேரினின்று - தேரில் சாரதியாய்நின்று, எதிர்-தமக்கெதிரில், ஏற்ற- எதிர்த்துவந்த, மன்னர் - அரசர்கள், கலங்க - நடுங்க, தன் - தன் னுடைய, நத்தை-பாஞ்ச சந்நியமென்னுஞ் சங்கத்தை, குறித்தானை- ஊதினவனுமாகிய இறைவனை, மேவ - அடைய, கருதுமின் - நினை யுங்கள். எ-று.

அத்தைமகன் தேரில் நின்றருளியது தேரை விரைவாய்ச் செ லுத்தற்பொருட்டு; பாரதப்போரில் பகையரசர் மனங்கலங்குதற்குக் காரணம் கண்ணனது பாஞ்சன்னியம் என்னும் சங்கின் ஒலியாதலால் "எதிரேற்றமன்னர் கலங்கத்தன் நத்தைக்குறித்தானை" என்றார்.

௪௧. கருத்தாதரிக்குமடியேனைத்தள்ளக்கருதிக்கொலோ
திருத்தாதரிக்குமைவர்க்கிரையாக்கினைசெண்பகத்தின்

மருத்தாதரிக்குமருவியருவடவேங்கடத்துள்
ஒருத்தாதரிக்கும்படியெங்ஙனேயினியுன்னைவிட்டே.

(இ-ள்.) ஆதரிக்கும் - (தேவரீரை) விரும்பும், கருத்து-கருத்துடைய, அடியேனை - தாசனாகிய வென்னை, தள்ள-விலக்குகிறதற்கு, கருதியோ - எண்ணியோ, திருத்தாது - திருத்திக் கொள்ளாமல், அரிக்கும் - கெடுக்கின்ற, ஐவர்க்கு - பஞ்சேந்திரியங்களுக்கு, இரையாக்கினை - உணவாக்கினாய், செண்பகத்தின் - சண்பகப்பூக்களினுடைய, மரு - வாசனையுள்ள, தாது - பராகப்பொடிகளை, அரிக்கும்-அரித்துக்கொண்டு ஒழுகுகின்ற, அருவி - அருவிநீரானது, அரு-நீங்காத, வடவேங்கடத்துள்-வடவேங்கடமலையிலிருக்கின்ற, ஒருத்தா-ஒப்பற்றவனே, இனி - இனிமேல், உன்னைவிட்டு-உன்னையல்லாமல், தரிக்கும்படி - (ஓரிடத்தில்) தங்கும் விதம், எங்ஙனம்-எப்படி. எ-று.

சஉ. உன்னைக்கரியமிடற்றனயன்முதலும்பரொல்லாம்
பொன்னைக்கரியொத்தபோதுமொவ்வார்புகழ்க்கோசலையாம்
அன்னைக்கரியமுத்தேயப்பனேயுன்னையன்றிப்பின்னை
முன்னைக்கரியழைத்தாய்க்குவமானமொழியில்லையே.

(இ-ள்.) உன்னை - தேவரீரை, கரியமிடற்றன் - கரியகண்டத்தையுடைய சிவன், அயன் - பிரமதேவன், முதல் - முதலிய, உம்பரொல்லாம் - தேவர்களெல்லோரும், பொன்னை - சொர்னத்தை, கரியொத்தபோதும் - கரியான தொத்தகாலத்தினும், ஒவ்வார் - ஒப்பாகார்கள், புகழ் - கீர்த்தியையுடைய, கோசலையாம் - கோசலையாகிய, அன்னைக்கு - தாய்க்கு, அரியமுத்தே - அரிதாகிய முத்தே, அப்பனே - என்னப்பனே, உன்னையன்றி - உன்னையல்லாமல், முன்னை-முற்காலத்திலே, கரி - கசேந்திராழ்வானால், அழைத்தாய்க்கு-அழைக்கப்பட்டவுனக்கு, பின்னை - வேறு, உவமானமொழி - உவமவாசகம், இல்லை - இல்லை. எ-று.

கொல் - அசைநிலை. கோசலைக்குப் புகழாவது சர்வேச்வரன் வந்து தன் திருவயிற்றில் அவதரித்து ராவணாதிகளைக் கொன்று தேவர்முனிவர்களுடைய அச்சத்தைத் தவிர்த்து அவர்களால் புகழப்பெற்றமை. ஙணம் கடைக்குறை.

சரு. இல்லைக்கண்டீரின்பந்துன்பங்கண்டீர்கண்டவேந்திழையார்
சொல்லைக்கண்டீரமுதென்னுந்தொண்டீர்தொல்லசுரனிறம்
கல்லைக்கண்டீரவத்தைத்திருவேங்கடக்காவலனை
மல்லைக்கண்டீர்தரத்தேய்த்தானைவாழ்த்துமின்வாழுகைக்கே.

(இ - ள்.) இன்பம் - இன்பத்தை, இல்லைக்கண்டீர் - நீங்கள் கண்டதில்லை, துன்பம் - துன்பத்தை, கண்டீர் - அனுபவித்தீர்,

கண்ட - கண்ணினுற்கண்ட, ஏந்திழையார் - பெண்களுடைய, சொல்லை-சொற்களை, கண்டு - கற்கண்டு, ஈர் அமுது - குளிர்ந்த அமிர்தம், என்னும் - என்று சொல்லுகின்ற, தொண்டீர் - அடியார்களே, வாழுகைக்கு - உங்களுயிர் வாழுகைக்கு, தொல்-பழைய, அசுரன் - அசுரனாகிய இரணியனுடைய, நிறம் - மார்பை, கல் - தோண்டிய, ஐ - அழகிய, கண்டீரவத்தை - நரசிங்கத்தை, திருவேங்கடக்காவலனை - திருவேங்கட மலையிலிருக்கின்ற சுவாமியை, மல்லை-மல்லர்களை, கண் தீர்தர-கண்கெட, தேய்த்தானை-தேய்த்தவனை, வாழ்த்துமின் - வாழ்த்துங்கள். எ-று.

நிறம் கல்லைக்கண்டீரவத்தை என்றமையால் அசுரனென்றது இரணியகசிபனை உணர்த்திற்று.

சுச. கைத்தனுமோடிசைவெற்பெனக்காணவெவ்வாணனென்னும்
மத்தனுமோடிகல்செய்வனென்றேவந்துவையுறுவேல்
அத்தனுமோடியுமங்கியுமோடவென்னப்பனுக்குப்
பித்தனுமோடினனங்கத்துத்தானென்றும்பெண்ணனென்றே.

(இ-ள்.) கை - கையிலிருக்கின்ற, தனு - வில்லானது, மோடு இசை-உயர்ச்சிபொருந்திய, வெற்பென-மலைபோல, காண-தோற்ற, வெவ்வாணனெனும் - வெவ்விய வாணனென்கிற, மத்தன் - உன்மத்தன், நும்மோடு - உம்முடனே, இகல்செய்வனென்று-போர்செய்வேனென்று, வந்து - வர, (அவனுக்குத்துணையாகவந்த) வை உறு-கூர்மைபொருந்திய, வேல் - வேலாயுதத்தையுடைய, அத்தனும் - முருகனும், மோடியும் - துர்க்கையும், அங்கியும் - அக்கினியும், ஓட - ஓட, என் னப்பனுக்கு - என்னுடைய அப்பனுக்கு, பித்தனும்-பித்தனாகிய சிவனும், அங்கத்து - சரீரத்திலே, தானென்றும்-தானெப்போதும், பெண்ணனென்று-பெண்ணையுடையவனென்று சொல்லிக்கொண்டு, ஓடினன் - ஓடினான். எ-று.

ஓடினன் அங்கத்துத்தான் என்றும் பெண்ணனென்றே என்றது இறைவனுக்கு இரக்கமுண்டாதற்பொருட்டு என்க. வந்து-செவெனெச்சத்திரிபு.

சுரு. பெண்ணுக்குவிக்கச்சிலைமேலொருதுகள்பெய்தபொற்றாள்
அண்ணுக்குவிக்கவெழும்போதெனக்கருள்வாய்பழிப்பு
நண்ணுக்குவிக்கச்சிளமுலைப்பூமகணாயகனே
எண்ணுக்குவிக்கக்குழலூதும்வேங்கடத்தென்கண்ணனே.

(இ-ள்.) பழிப்புநண்ணு - நிந்தையடையாத, குவி - குவிந்த, கச்சு-கச்சணிந்த, இளமுலை-இளமையாகிய தனத்தையுடைய, பூமகள் நாயகனே - பெரியபிராட்டியாருக்குத் தலைவனே, எண் - மதிக்கும், ஆ-பசுக்களை, குவிக்க-கூட்ட, குழல் - வேய்ங்குழலை, ஊதும்-ஊதாநின்ற, வேங்கடத்து - திருவேங்கடமலையிலிருக்கின்ற, என் - என்

னுடைய, கண்ணனே-கண்ணனே, பெண் - பெண்ணாக, ஆக்குவிக்க-செய்விக்க, சிலைமேல் - கல்லின்மேல், ஒருதுகள்-சிறுதுகளை, பெய்த-தந்த, பொற்றாள் - அழகிய திருவடியை, அண்ணுக்கு - உண்ணுக்கு, விக்கல்-விக்குதல், எழும்போது - உண்டாகுஞ்சரமதசையில், எனக்கருள்வாய் - எனக்குக்கிருபைசெய்வாயாக. எ-று.

சசு. கண்ணனையேனெஞ்சுருகேனவைகொண்டென்கண்ணுநெஞ்சும்
புண்ணனையேன்கல்லனையேனென்றாலும்பொற்பூங்கமலத்
தண்ணனையேநல்லசார்வாகவேங்கடஞ்சார்ந்துமணி
வண்ணனையேயடைந்தேற்கில்லையோதொல்லைவைகுந்தமே.

(இ-ள்.) கண் - கண்களை, நனையேன் - நனைக்கின்றேனில்லை, நெஞ்சு - மனம், உருகேன் - உருகுகின்றேனில்லை, அவைகொண்டு-அவற்றால், என் - எனது, கண்ணும்-கண்களும், நெஞ்சும் - மனமும், புண் அனையேன்-புண்ணுக்கொப்பானவனாயினேன், கல் அனையேன்-கல்லுக்கொப்பானவனாயினேன், என்றாலும் - என்றுகூறினபோதிலும், பொன் - பொன்னிறமுள்ள, பூ-பொலிவுபெற்ற, கமலம் - செந்தாமரைப்பூவிலெழுந்தருளிய, தண்-கிருபையுடைய, அனையே - தாயாகிய பெரியபிராட்டியாரையே, நல்லசார்வாக - நற்றுணையாகக்கொண்டு, வேங்கடம் - திருவேங்கடமலையை, சார்ந்து - சேர்ந்து, மணிவண்ணனையே - நீலரத்தின நிறமுடைய திருமாலையே, அடைந்தேற்கு - அடைந்தவெனக்கு, தொல்லை - பழமையாகிய, வைகுந்தம் - பரமபதம், இல்லையோ-இல்லையா. எ-று.

சேதனர் இறைவனை அடைதற்குப் பெரிய பிராட்டியார் இன்றியமையாத புருஷகாரபூதை ஆகையால் "பூங்கமலத்தண்ணனையே நல்லசார்வாக வேங்கடஞ் சார்ந்து மணிவண்ணனையே அடைந்தேற்கு" என்றார்.

சஎ. வைகுந்தமாயவிழிமாதர்வேட்கையைமாற்றியென்னை
வைகுந்தமாயவினைநீக்கியமுத்தர்மாட்டிருத்தி
வைகுந்தமாயவொசித்தாய்வடதிருவேங்கடவா
வைகுந்தமாயவனேமாசிலாதவென்மாமணியே.

(இ-ள்.) குந்தம் - குருந்தமரமானது, மாய-கெட, ஒசித்தாய்-முறித்தவனே, வடதிருவேங்கடவா - வடதிசையிலுள்ள திருவேங்கடமலையையுடையவனே, வைகுந்தமாயவனே - வைகுந்தத்தில் எழுந்தருளிய மாயவனே, மாசிலாத - குற்றமில்லாத, என் - எனது, மா - பெருமையாகிய, மணியே - இரத்தினமே, வை-கூரிய, குந்தம் ஆய - வேலாகிய, விழி - கண்ணையுடைய, மாதர்-மடவாரது, வேட்கையை - ஆசையை, மாற்றி - நீக்கி, என்னை - என்னை, வைகும்-தங்

கிய, தம் - தமது, மாயவினை - தீயவினைகளை, நீக்கிய - மாற்றிய, முத்தர்மாட்டு - முத்தர்களிடத்து, இருத்திவை - நிலைபெறுவிப்பாயாக.

மாதர்வேட்கை நீங்கினால் அல்லது முத்தராதல் அருமை என்பது தோன்ற, "மாதர்வேட்கையை மாற்றி முத்தர் மாட்டிருத்திவை" என்றார்.

சஅ. மணியாழிவண்ணனுகந்தாரைத்தன்வடிவாக்குமென்றே
துணியாழியமறைசொல்லுந்தொண்டீரதுதோன்றக்கண்டோம்
பணியாழின்மென்மொழிமாலாகிப்பள்ளிகொள்ளாமற்சங்கோ
டணியாழிநீங்கிநின்றாள்வேங்கடேசனையாதரித்தே.

(இ-ள்.) மணி - இரத்தினங்களையுடைய, ஆழி - கடலினிறம் போன்ற, வண்ணன் - நிறமுடையவன், உகந்தாரை - விரும்பிவந்தடைந்தவரை, தன் - தனது, வடிவு - உருவத்தைப்போல், ஆக்குமென்றே - செய்வனென்றே, துணி - துணிந்த, ஆழிய-ஆழ்ந்தபொருளுள்ள, மறை - வேதம், சொல்லும் - சொல்லுகின்றன, தொண்டீர்-தொண்டர்களே, அது - அதனை, தோன்ற - தெரிய, கண்டோம்-பார்த்தோம், பணி - வளைந்த, யாழின் - யாழிசைபோலும், மென்மொழி - மெல்லிய மொழியையுடைய என் பெண்ணானவள், வேங்கடேசனை - திருவேங்கடநாதனை, ஆதரித்தே - விரும்பியே, மாலாகி-ஆசைகொண்டு, பள்ளிகொள்ளாமல் - நித்திரைகொள்ளாமல், சங்கோடு - வளையலுடனே, அணி - அழகிய, ஆழி - மோதிரமும், நீங்கி நின்றாள் - ஒழிந்து நின்றாள். எ-று.

தன் வடிவாக்குதலாவது தனது சாரூப்பியத்தை அருள் செய்தல். மாலாகி என்பது முதல் சிலேடையாகப் பொருள் கொள்ள வேண்டியதாகையால் மாலாகி என்பதற்கு இறைவற்குக்கொள்ளும்போது திருமாலாகி என்றும், தலைவிக்குக்கொள்ளும்போது ஆசையாகி என்றும், பள்ளிகொள்ளாமல் என்பதற்கு இறைவற்குக்கொள்ளும்போது நின்ற திருக்கோலமாய் எழுந்தருளியிருத்தல் என்றும், தலைவிக்குக் கொள்ளும்போது கண்ணுறங்காதிருத்தல் என்றும், சங்கோடணியாழி நீங்கி நிற்றலை இறைவற்குக் கொள்ளும்போது தொண்டைமானுக்கு அவற்றை அளித்தமை என்றும், தலைவிக்குக்கொள்ளும்போது வளைமோதிரம் இவற்றை நீங்கிநின்றனள் என்றும் உரைத்துக்கொள்க.

சகூ. ஆதரிக்கப்பட்டவானுதன்மங்கையரங்கைமலர்
மீதரிக்கப்பட்டநின்னடியேவெள்ளருவிச்செம்பொன்
போதரிக்கப்பட்டுஞ்சூழ்வேங்கடவெற்பபோரரக்கர்
தீதரிக்கப்பட்டகானகத்தூடன்றுசென்றதுவே.

(இ-ள்.) வெள் - வெள்ளிய, அருவி - அருவியானது, செம் - சிவந்த, பொன்-கனகத்தையும், போது - மலர்களையும், அரிக்க-அரித்துக்கொண்டு ஓட, பட்டம் - நீர் நிலைகள், சூழ் - சூழ்ந்த, வேங்கட வெற்ப - திருவேங்கடமலையையுடையானே, ஆதரிக்க-அன்புசெய்ய, பட்டம்-பட்டமணிந்த, வாள்-ஒளியுள்ள, நுதல்-நெற்றியையுடைய, மங்கையர் - மடவார்கள், அங்கை - அங்கையாகிய, மலர்மீ - செந்தாமரைமேல், தரிக்கப்பட்ட - தாங்கப்பட்ட, நின்னடியே-உனது திருவடியோ, போர்-யுத்தஞ்செய்கின்ற, அரக்கர்-இராக்கதருடைய, தீது-பொல்லாங்கை, அரிக்க - கெடுக்க, பட்ட - உலர்ந்த, கானகத்தூடு - காட்டினிடத்து, அன்று-அந்நாளில், சென்றது - நடந்தது. எ-று.

பட்டவாணுதல் மங்கையர் என்றது கண்ணபிரானுடைய அஷ்டபட்ட மகிஷிகளை, அவராவார்:—ருக்குமணி, சத்தியபாமை, ஜாம்பவதி, காளிந்தி, மித்திரவிந்தை, சத்தியவதி, பத்திரை, லட்சுமணை. நிழலில்லாத கொடுமையாகிய காடு என்றற்கு "பட்டகானகம்" என்றார்.

௫௦. சென்றவனத்தத்தைமைந்தரைவாழ்வித்துத்தீயமன்னர்
பொன்றவனத்தத்தைச்செய்தபிரான்புகழ்வேங்கடத்துள்
நின்றவனத்தத்தையாயுதன்பாதத்தென்னேசமெல்லாம்
ஒன்றவனத்தத்தைகாளுரையீரறமுண்டுமெக்கே.

(இ-று.) வனத்து - காட்டினிடத்து, சென்ற - போன, அத்தை - தன்னத்தையாகிய குந்திதேவியினுடைய, மைந்தரை - புத்திரரை, வாழ்வித்து - வாழச்செய்து, தீய - கொடிய, மன்னர் - அரசர்கள், பொன்ற - இறக்க, அனத்தத்தை - கேட்டை, செய்த-பண்ணின, பிரான் - உபகாரகனும், புகழ்-யாவரும்புகழ்கின்ற, வேங்கடத்துள்-திருவேங்கடமலையில், நின்றவன் - நின்ற திருக்கோலமாயெழுந்தருளினவனும், அத்தத்து-கையினிடத்தில், ஐயாயுதன்-பஞ்சாயுதத்தையுடையவனுமாகிய இறைவனது, பாதத்து - திருவடிகளில், என்-எனது, நேசம் - அன்பு, எல்லாம் - முழுமையும், ஒன்ற - பொருந்த, வனம் - அழகிய, தத்தைகாள் - கிளிகளே, உரையீர் - சொல்லுங்கள், உமக்கு - உங்கட்கு, அறமுண்டு - புண்ணியமுண்டு, எ-று.

அத்தை மைந்தர் என்றது தருமர் முதலிய ஐவரை தீயமன்னர் என்றது துரியோதனன் முதலிய நூற்றுவரை. சாதுக்களை இரட்சிக்கு நிமித்தம் துஷ்டர்கள் விஷயத்தில் அநர்த்தத்தைச் செய்தாராகையால், அவரைப் பிரான் என்றார்.

௫௧. உண்டமருந்துகைக்கும்மன்னேமீர்மதனேரைந்தம்பும்
கொண்டமருந்துகைக்குங்குறுகாழுனங்கொவ்வைச்செவ்வாய்
அண்டமருந்துகைக்குத்திறந்தானப்பன்போற்பரியும்
எண்டமருந்துகைக்கும்பொடிகாப்பிடுமின்றெனக்கே.

(இ-ள்.) உண்ட-உண்ணப்பட்ட, மருந்து - அமிர்தமும், கைக்கும் - கசக்கும், அன்னைமீர் - தாய்மார்களே, மதன் - மன்மதனானவன், ஐந்து - ஐந்துவகையாகிய, ஓர்-ஒப்பற்ற, அம்புகொண்டு-பாணத்தைக்கொண்டு, அமர் உந்துகைக்கு - போரைச் செய்வதற்கு, குறுகாமுனம் - வருதற்குமுன்னமே, கொவ்வை - கோவைக்கனிபோன்ற, செவ்வாய்-சிவந்தவாயை, அண்டம்-அண்டங்களை, அருந்துகைக்கும்-புசித்தற்கும், திறந்தான்-திறந்தவனுடைய, அப்பன்-சுவாமியினுடைய, பரியும் - குதிரையும், எண் - மதிக்கத்தகுந்த, தமரும் - அடியார்களும், துகைக்கும் - மிதிக்கின்ற, பொடி - புழுதியை, இன்றெனக்கு-இப்போதெனக்கு, காப்பு இடும் - பூசுங்கள். எ-று.

இரண்டாமடியிலுள்ள உம்சாரியை. இது தலைமகள் தோழிகளை நோக்கிக்கூறியது.

ருஉ. எனக்குப்பணியப்பணியொருகாலிருகாலுநல்க
உனக்குப்பணியிங்கிருவோம்பணியிலென்னோர்பணியும்
நினக்குப்பணிவித்துக்கொண்டுன்பணிநீபணித்திலையென்
தனக்குப்பணிவெற்பின்மீதோங்கிநின்றதனிச்சுடரோ.

(இ-ள்.) என்றனக்கு - எனக்கு, பணிவெற்பின்மீது - சேடகிரியின்மேல், ஓங்கி - உயர்ந்து, நின்ற - நின்ற திருக்கோலமாயெழுந்தருளின, தனி - ஒப்பற்ற, சுடரோ - ஒளியே, எனக்கு-எனக்கு, ஒருகால் - ஒருதரம், பணிய பணி - வணங்கவேலை, இருகால் - இரண்டு திருவடிகளையும், நல்க-அளிக்க, உனக்கு-தேவரீருக்கு, பணி-வேலை, இங்கு - இப்போது, இருவோம் - நம்மிருவோருடைய, பணியில்-வேலைகளில், என் - என்னுடைய, ஓர் பணியும் - ஒரு வேலையைமாத்திரம், நினக்கு - தேவரீருக்கு, பணிவித்துக்கொண்டு - செய்வித்துக்கொண்டு, நின்பணி-தேவரீருடைய வேலையை, நீ பணித்திலை-தேவரீர்செய்தீரில்லை. எ-று.

ஆதிசேஷனே திருமலை யுருவாய் வந்திருத்தலால், அதனை "பணிவெற்பு" என்றார். பணி - படமுடையது.

ருங. தனித்தொண்டைமாநிலத்தேபுரிவார்க்கருடாளுடையாய்
தொனித்தொண்டைமாநெடுவாய்பிளந்தாய் துங்கவேங்கடவா
முனித்தொண்டைமான்கையிற்சங்காழிநல்கியென்மூரற்செவ்வாய்
கனித்தொண்டைமான்கையிற்சங்காழிகோடல்கருமமன்றே.

(இ-ள்.) தனி - ஒப்பற்ற, தொண்டை - அடிமைத்தொழிலை, மாநிலத்தே-பெரியபூமியில், புரிவார்க்கு - செய்வார்க்கு, அருள்-கொடுக்கின்ற, தாளுடையாய்-திருவடியையுடையவனே, தொனி-கனைக்கின்ற, தொண்டை - தொண்டையையுடைய, மா - குதிரையின்,

நெடுவாய் - நீண்டவாயை, பிளந்தாய் - பிளந்தவனே, துங்கவேங்கடவா - பரிசுத்தமாகிய திருவேங்கடமலையை யுடையவனே, முன்-முற்காலத்தில், இத்தொண்டைமான்கையில் - இத்தொண்டைமான் சக்கிரவர்த்திகையில், சங்கு - சங்கத்தையும், ஆழி - சக்கரத்தையும், நல்கி-கொடுத்து, என்-என்னுடைய, மூரல் - பற்களுள்ள, செவ்வாய்-சிவந்தவாயாகிய, தொண்டைக்கனி - கோவைப்பழத்தையுடைய, மான் - பெண்ணின், கை - கையிலிருக்கிற, சங்கு-வளையையும், ஆழி-மோதிரத்தையும், கோடல் - கொள்ளுதல், கருமமன்று-காரியமல்ல.

கம்ஸனேவுதலால் கிருஷ்ணபகவானைக் கொலைசெய்யக் குதிரை உருவங் கொண்டுவந்தவன் கேசி என்னு மசுரன். தொண்டைமானுக்குச் சங்காழி நல்கியசெய்தி:—தொண்டைமான் சக்ரவர்த்தி திருவேங்கடமுடையான் விஷயத்தில் பக்திமேலிட்டு பெருமானைச் சதாகாலஞ் சேவித்துத் திருமலையிலேயே வாசஞ் செய்து கொண்டிருப்பதை அறிந்த பகையரசன் அவர் தேசத்தைக் கைக்கொள்ள, தொண்டைமான் அதனைத் திருவேங்கடமுடையான் சந்நிதியில் விண்ணப்பஞ்செய்து வணங்கிநிற்க, பெருமான் தாமணிந்திருந்த சக்கரத்தையும் சங்கையும் கொடுத்துப் பகையரசனை வென்றிடுக வென்றுரைக்க, தொண்டைமான் அவற்றைக்கொண்டு பகைவனை வென்றுதன் அரசைப்பெற்றனன். இதனைத் திருமலைமாஹாத் மியத்தில் பரக்கக்காண்க. இது நற்றாய் இரங்கல்.

ருச. கருமாதவாவிருந்தாவனசெய்தென்கருத்திருளைப்
பொருமாதவாவிருந்தாவனத்தாய்பொற்சவரியென்னும்
ஒருமாதவாவிருந்தாவனக்காவுயர்வேங்கடத்தெம்
பெருமாதவாவிருந்தாவனலேயும்பிறைக்கொழுந்தே.

(இ-ள்.) கருமாதவா - கரியநிறத்தையுடைய மாதவனே, இருந்து-நீ இருந்து, ஆவனசெய்து - ஆகவேண்டியவற்றைச்செய்து, என்-எனது, கருத்து - மனத்ினது, இருளை-இருளாகிய அஞ்ஞானத்தை, பொரும் - போர்செய்து அழிக்கின்ற, ஆதவா - சூரியனே, விருந்தாவனத்தாய்-விருந்தாவனத்தையுடையவனே, பொன்சவரியென்னும்-அழகிய சவரியென்கின்ற, ஒருமாது - ஒருபெண்ணுணவள், அவா-விரும்பிய, விருந்தா-விருந்தினனே, வனம்-அழகிய, கா-சோலைசூழ்ந்த, உயர் - உயர்ந்த, வேங்கடத்து - திருவேங்கடமலையிலிருக்கின்ற, எம்-எம்முடைய, பெருமா - பெருமானே, பிறைக்கொழுந்து - மூன்றும் பிறைக்கொழுந்து, தவா-கெடாத, இரு-பெரிய, தா-தாவுகின்ற, அனல்-அக்கினிக்கு, ஏயும்-ஒப்பாயிருக்கின்றது. எ-று.

விருந்தாவனம்-துளசிவனம். இது கிருஷ்ணவதாரத்தில் இறைவன் மிகு விருப்பத்தோடு சஞ்சரித்தவிடம். சவரிக்கு விருந்தான

செய்தி:—யோகமுதிர்ச்சியுள்ள சவரியென்னும் மூப்புடையாள் ஸ்ரீராம லட்சுமணர்களுடைய வரவுக்கெதிர்பார்த்திருந்து அவர்கள் வந்தவுடன் அவர்களுக்குக்காய் கனி கிழங்குகளைச் சமர்ப்பித்து உபசரித்துச் சுக்கிரீவனிருக்கும் மலைக்குச் செல்லும்வழியைச் சொல்லி, உம்மைக்கண்டு சேவித்தமையால் என்தவம் முற்றுப்பெற்றதென்று யோகத்தின் தன்மையால் உடலை விட்டு மூத்திபெற்றனள். இது தலைமகள் பிறைகண்டு வருந்தல்.

௫௫. பிறைமாலையாலொருபேதைநைந்தாளந்தப்பேதைக்குநின்
நறைமாலைதாவென்றுமானிடம்பாடியநாவலர்காள்
நிறைமாலையற்றுக்கவிமாலையாணினையீர்திருவெள்
ளறைமாலைவேங்கடத்தேயுறைமாலையரங்கனையே.

(இ-ள்.) பிறைமாலையால் - மாலைக்காலத்தில் தோன்றும் மூன்றாம்பிறையினால், ஒருபேதை - ஒருபெண்ணானவள், நைந்தாள் - மெலிந்தாள், அந்தப்பேதைக்கு - அந்தப்பெண்ணுக்கு, நறை - வாசனை பொருந்திய, நின்-உன்னுடைய, மாலை-பூமாலையை, தாவென்று-கொடுவென்று, மானிடம் - மானிடரை, பாடிய-கவிபாடிய, நாவலர்காள்-புலவர்களே, நிறை - நிறைந்த, மாலை - மயக்கத்தை, அற்று - நீங்கி, கவிமாலையால் - பாமாலையினால், திருவெள்ளறை - திருவெள்ளறையென்னுந் திவ்வியதேசத்திலெழுந்தருளிய, மாலை - திருமாலை, வேங்கடத்து-திருவேங்கடமலையில், உறை - வசிக்கின்ற, மாலை-திருமாலை, அரங்கனை - அரங்கநாதனை, நினையீர் - நினைத்துப்பாடுவீராக. எ-று.

"கொள்ளும் பயனில்லைக் குப்பைகிளர்ந்தன்ன செல்வத்தை-வள்ளல் புகழ்ந்து நும்வாய்மை யிழக்கும் புலவீர்காள் - கொள்ளக் குறைவிலன் வேண்டிற்றெல்லாந்தரும் கோதிலென்-வள்ளல் மணிவண்ணன் தன்னைக்கவிசொல்ல வம்மினோ" என ஆழ்வார் கூறியபடி நாவலர்களை நோக்கிக்கூறியது. இதனைப் பரோபதேசம் என்பர் வடநூலார்.

௫௬. அரங்கங்குடந்தைகுருகூர்குறுங்குடியட்டபுய
கரங்கண்ணமங்கைநறையூர்கடன்மல்லைகச்சிகண்ண
புரங்கண்டியூர்தஞ்சைமாலிருஞ்சோலைபுல்லாணிமெய்யம்
தரங்கம்பரமபதம்வேங்கடேசற்குத்தானங்களே.

(இ-ள்.) அரங்கம் - திருவரங்கமும், குடந்தை - திருக்குடந்தையும், குருகூர் - திருக்குருகூரும், குறுங்குடி-திருக்குறுங்குடியும், அட்டபுயகரம்-திரு அட்டபுயகரமும், கண்ணமங்கை - திருக்கண்ணமங்கையும், நறையூர் - திருநறையூரும், கடன்மல்லை - திருக்கடன்மல்லையும், கச்சி - திருக்கச்சியும், கண்ணபுரம் - திருக்கண்ணபுரமும், கண்டியூர்-திருக்கண்டியூரும், தஞ்சை - திருத்தஞ்சையும், மாலிருஞ்

சோலை - திருமாலிருஞ்சோலைமலையும், புல்லாணி - திருப்புல்லாணியும், மெய்யம் - திருமெய்யமும், தரங்கம் - திருப்பாற்கடலும், பரமபதம்-திருவைகுந்தமும், வேங்கடேசற்கு - திருவேங்கடநாதனுக்கு, தானங்கள் - திருப்பதிகளாம். எ-று.

குடந்தை-கும்பகோணம், கடன்மல்லை-மகாபலிபுரம், மாலிருஞ்சோலை - அழகர்மலை.

ருஎ. தானவனாகமருப்பொசித்தானுக்குத்தானுகந்த
தானவனாகமுடியினின்றானுக்குத்தாள்வணங்காத்
தானவனாகமிடந்தானுக்காளென்றுதன்னையெண்ணுத்
தானவனாகநினைந்திருப்பார்கென்றுந்தானவனே.

(இ-ள்.) தானம்-மதத்தையும், வல்-பலத்தையுமுடைய, நாகம்-குவலயாபீடமென்னும் யானையின், மருப்பு-கொம்பை, ஒசித்தானுக்கு-முறித்தவனுக்கு, தான் உகந்ததான-தான்விரும்பியதாகிய, அநாகம்-அந்தப்பாம்பாகிய காளியனது, முடியில்-முடிமிசை, நின்றானுக்கு-நின்று நடனஞ்செய்தவனுக்கு, தாள் (தன்)-திருவடியை, வணங்கா-பணியாத, தானவன் - அசுரனாகிய இரணியனுடைய, ஆகம்-மார்பை, இடந்தானுக்கு - பிளந்தவனுக்கு, ஆளென்று-அடிமையென்று, தன்னையெண்ணு-தன்னையெண்ணுமல், தான் அவனாகநினைந்திருப்பார்க்கு-தானே அவனாக நினைந்திருப்பவனுக்கு, என்றும் - எந்நாளும், தான் அவனே - தான் வீணனவனாகவே இருப்பான். எ-று.

தாம் பிரமமென்று எண்ணியிருக்கும் அத்வைதிகளின் கொள்கை இதனால் மறுத்துக் கூறப்பட்டது.

ருஅ. தானவராகந்தடிவார்வடமலைத்தண்ணந்துழாய்
ஞானவராகர்தருமண்டம்யாவையுநண்ணியவர்
கானவராகவிரறோறுமத்திக்கனியின்வைகும்
வானவராகவிருப்பாரவற்றுண்மசகங்களே.

(இ-ள்.) தானவர் - அசுரருடைய, ஆகம்-சரீரத்தை, தடிவார்-சேதித்தவர், வடமலை - திருவேங்கடமலையிலெழுந்தருளிய, தண்ணந்துழாய்-குளிர்ந்த திருத்துழாய்மாலையையணிந்த, ஞானவராகர்-ஞானசொரூபமான வராக வவதாரமானவர், தரும் - (அவரால்) தரப்பட்ட, அண்டம் - அண்டங்கள், யாவையும் - யாவும், நண்ணி - பொருந்தி, அவர் - அவருடைய, கால்-திருவடிகளில், நவம்-புதிதாகவும், ராகம்-சிவந்ததாகவுமிருக்கிற, விரல்தோறும் - விரல்கடோறும், அத்திக்கனியின் - அத்திப்பழங்கள்போல, வைகும்-தங்கும், வானவராக-தேவர்களாக, இருப்பார் - இருப்பவர்கள், அவற்றுள் - அவ்வத்திப்பழங்களிலிருக்கிற, மசகங்கள்-கொதுகுகள். எ-று.

இதனால் இறைவனது விராட்சொரூபத்தின் பெருமை கூறிய வாறாயிற்று. எழுவகைப் பிறப்பினுள்ளும் சிறந்த வானவரை மக்கங்களாகக் கூறினமையால் மற்றமக்கள் முதலியோர் தன்மையின் இழிவு சொல்லாமேயமையும்.

௫௯. மசகந்தரமென்னலாய்நிலையாவுடல்வாழுயிரை
அசகந்தரவல்லதோவன்னைமீரண்டமுண்டுமிழ்வா
ரிசகந்தரவண்ணர்வேங்கடவாணரிலங்கையர்கோன்
தெசகந்தரமறுத்தார் திருப்பேர்சொல்லுந்தீங்கறவே.

(இ-ள்.) நிலையா - நிலையில்லாத, உடல் - சரீரத்தை, மசகம்-கொசுகிற்கு, தரமெனலாம் - சமானமென்று சொல்லலாம், வாழுயிரை-அச்சரீரத்தில் வாழுமுயிரை, அசம் கம்-ஆட்டுத்தலையானது, தர-தருதற்கு, வல்லதோ - வல்லமையையுடையதோ, அன்னைமீர்-தாய்மார்களே, அண்டம்-அண்டங்களை, உண்டு - புசித்து, உமிழ்-வெளிப்படுத்துகின்ற, வாரிசம் - செந்தாமரைக்கொப்பான வாயையும், கந்தரம்-மேகம்போன்ற, வண்ணர் - நிறத்தையுமுடையவர், வேங்கடவாணர் - திருவேங்கடமலையில்வாழ்பவர், இலங்கையர்கோன் - இலங்காபுரிக்குத்தலைவனாகிய ராவணனுடைய, தெசகந்தரம் - பத்துத் தலைகளையும், அறுத்தார் - சேதித்தவருடைய, திருப்பேர்-திருநாமங்களை, தீங்கற-குற்றமற, சொல்லும் - சொல்லுவீராக. எ-று.

இது வெறிவிலக்கல், தோழிகூற்று.

௬௦. தீங்கடமாலத்திமுன்னின்றுகாலிப்பின்சென்றகொண்டல்
வேங்கடமால்கழலேவிரும்பார்விலைமாதர்மலம்
ஆங்கடமால்செயமாலாயவரெச்சிலாகநச்சித்
தாங்கடமாலழிவாரிருந்தாலுஞ்சவப்பண்டமே.

(இ-ள்.) தீங்கு-தீமையை, அட-கெடுக்க, மால்-பெரிய, அத்தி-கசேந்திராழ்வானுக்கு, முன்னின்று - முன்னேநின்று, காலி - பசுக்கூட்டத்தின், பின்-பின்னே, சென்ற - போன, கொண்டல்-மேகம்போலும் நிறமுடையவனும், வேங்கடம் - திருவேங்கடமலையிலெழுந்தருளிய, மால்-திருமாலுமாகிய அவனது, கழல்-திருவடியை, விரும்பார் - விரும்பாதவர்களாய், விலைமாதர்-வேசியரது, முலையாம்கடம்-முலையாகியகும்பம், மால்செய - மயக்கத்தைச்செய்ய, மாலாய்-ஆசையாய், அவர்-அம்மாதர்களுடைய, எச்சில்-எச்சிற்பட்ட, ஆகம்-சரீரத்தை, நச்சி-விரும்பி, தாங்கள் தம்மால்-தாங்கள் தங்களாலேயே, அழிவார் - நசிப்பார், இருந்தாலும் - கெடாதிருந்தாலும், சவப்பண்டமே-பிரேதமாகிய பொருளேயாம். எ-று.

விலைமாதருடம்பு பலரும் விரும்பி அனுபவித்தற்குரியதாதலால் அதனை "எச்சிலாகம்" என்றார்.

௫௧. பண்டையிருக்குமறியாப்பரமபதத்தடியார்
அண்டையிருக்கும்படிவைக்குமப்பனையண்டத்துக்கும்
தண்டையிருக்குமலர்ந்தசெவ்வாயனைத்தாள்வணங்கா
மண்டையிருக்கும்விடுமோசனனமரணமுமே.

(இ - ள்.) பண்டை - பழைய, இருக்கும்-வேதமும், அறியா-அறியாத, பரமபதத்து - பரமபதத்தில், அடியார் அண்டை-அடியார்கள் பக்கல், இருக்கும்படி - இருக்க, வைக்கும் - வைத்தருள்கின்ற, அப்பனை - உபகாரகனை, அண்டத்துக்கும் - அண்டங்கட்கும், தண்-குளிர்ந்த, தயிருக்கும்-தயிருக்கும், மலர்ந்த-திறந்த, செவ்வாயனை-சிவந்தவாயையுடையவனை, தாள்-திருவடியை, வணங்கா - வணங்காத, மண்டையிருக்கும் - தலையையுடைய உங்களுக்கும், சனனமரணமும் - பிறப்பும் இறப்பும், விடுமோ - நீங்குமோ. எ-று.

வேதங்கள் அநாதி சித்தம் ஆகையால் "பண்டையிருக்கும்" என்றார்.

௫௨. மரணங்கடக்குஞ்சரநீங்கவாழ்வித்துவல்லரக்கர்
முரணங்கடக்குஞ்சரவேங்கடவகண்மூடியந்தக்
கரணங்கடக்குஞ்சரமத்துநீதருகைக்கெனக்குன்
சரணங்கடக்குஞ்சரண்வேறிலைதந்துதாங்கிக்கொள்ளே.

(இ-ள்.) மரணம் - இறப்பை, கடம் - மதத்தையுடைய, குஞ்சரம் - கசேந்திராழ்வான், நீங்க - ஒழிய, வாழ்வித்து - உயிர்வாழச்செய்து, வல்-வலிய, அரக்கர்-இராக்கதருடைய, முரண்-பலத்தை, அங்கு - அவ்விடத்து, அடக்கும் - அடக்குகின்ற, சர - பாணத்தையுடையவனே, வேங்கடவ - திருவேங்கடமலையி லெழுந்தருளியிருக்கின்றவனே, கண்மூடி-கண்களிருண்டு, அந்தக்கரணம்-அந்தக்கரணமாகிய மனம் புத்தி சித்தம் அகங்காரங்கள், கடக்கும் - ஒடுங்குகின்ற, சரமத்து - சரமதசையில், நீ தருகைக்கு - நீ கொடுத்தற்கு, எனக்கு-எனக்கு, உன்-உன்னுடைய, சரணங்கள்-திருவடிகள், தகும்-தகும், சரண் - அடைக்கலந்தருந்திருவடி, வேறிலை - வேறேயில்லையாதலால், தந்து - அத்திருவடியைக்கொடுத்து, தாங்கிக்கொள் - காத்துக்கொள். எ-று.

தகும் என்பது தக்கும் என விரித்தல் பெற்றது. "சரண் வேறிலை தந்து தாங்கிக்கொள்ளே" என்றமையால் இறைவன் நிரோதுகன் என்பது பெறப்பட்டது.

௫௩. தாங்கடலாழிவளைதண்டுவாள்வில்லிற்றுனவனை
ஈங்கடவீசிக்குறித்தடித்துத்துணித்தெய்துவெல்லும்
பூங்கடல்வண்ணனிலைகிடைவந்ததுபோக்கிருப்பு
வேங்கடம்வேலையயோத்திவெங்கானகம்விண்ணுலகே.

(இ-ள்.) தாங்கு - தரித்த, அடல்-பலமுள்ள, ஆழி - சக்கரம், வளை - சங்கம், தண்டு - கதை, வாள் - வாள், வில்லின் - வில் ஆகிய இவற்றால், தானவனை - அசுரனை, ஈங்கு - இவ்வுலகத்திலே, அட - கொல்ல, வீசி-விட்டும், குறித்து - ஊதியும், அடித்து - புடைத்தும், துணித்து - அறுத்தும், எய்து - எய்தும், வெல்லும் - வெல்லுகின்ற, பூ - பொலிவு பெற்ற, கடல்-கடல்போன்ற, வண்ணன் - நிறமுடையவன், நிலை - நின்றதும், கிடை - கிடந்ததும், வந்தது - அவதரித்ததும், போக்கு - நடந்ததும், இருப்பு - இருந்ததும், வேங்கடம்-திருவேங்கடமலையும், வேலை - திருப்பாற்கடலும், அயோத்தி - அயோத்தியாபுரியும், வெங்கானகம் - வெவ்வியகாடும், விண்ணுலகு - பரமபதமுமாம். எ-று.

நிலைவேங்கடம், கிடைவேலை, வந்தது அயோத்தி, போக்கு வெங்கானகம், இருப்பு விண்ணுலகு என வந்த முறை நிரனிறைப் பொருள்கோள்.

௬௪. உலகந்தரவுந்திபூத்திலையேற்சுடரோரிரண்டும்
இலகந்தரமும்புவியுமெங்கேயயனீசனெங்கே
பலகந்தரமுமுணவுமெங்கேபல்லுயிர்களெங்கே
திலகந்தரணிக்கெனநின்றவேங்கடச்சீதரனே.

(இ-ள்.) உலகம் - உலகங்களை, தர - படைக்க, உந்தி - உந்திக் கமலம், பூத்திலையேல்-மலராவிடின், சுடரோரிரண்டும் - இருசுடரும், இலகு - பிரகாசிக்கின்ற, அந்தரமும் - ஆகாயமும், புவியும் - பூமியும், எங்கே - எவ்விடம், அயன் - பிரமனும், ஈசன் - சிவனும், எங்கே- எங்கே (இல்லை என்றபடி), பல கந்தரமும் - பலமேகங்களும், உணவும் - அவற்றாலாயவுணவுகளும், எங்கே - எங்கே, பல்லுயிர்கள் - பல செந்துக்களும், எங்கே - எங்கே, தரணிக்கு - பூமிக்கு, திலகமென- திலகமாக, நின்ற - விளங்குகின்ற, வேங்கடம் - திருவேங்கடமலையிலெழுந்தருளிய, சீதரனே - மாதவனே. எ-று.

காரணகாரிய முறையான் "பலகந்தரமு முணவுமெங்கே" என்றார்.

௬௫. சீவார்கழலையிரண்டையுஞ்செப்பென்றுதீங்குழலின்
நாவார்கழலைப்பயில்செங்கையார்நலம்பேணுமைவர்
ஆவார்கழலையிரண்டாமவத்தையினன்றெனக்குன்
பூவார்கழலையருளப்பனேயண்டபூரணனே.

(இ-ள்.) சீ வார் - சீ ஒழுகுகின்ற, கழலையிரண்டையும் - கழலைக் கட்டியாகிய தனமிரண்டையும், செப்பென்று-செப்புக்கிண்ணங்களென்று புகழ்ந்து, தீம் - இனிய, குழலின் - குழலிசையின தினி

மைபோன்ற, நா ஆர்-நாவினிடத்தார்ந்த சொல்லையுடையவர், கழலை-கழற்சிக்காயை, பயில்-பழகாநின்ற, செங்கையார் - சிவந்தகையையுடையவர் (அப்பெண்களது,) நலம்-நலத்தை, பேணும்-விரும்புகின்ற, ஐவராவார்-பஞ்சேந்திரியங்கள், கழல்-நீங்குகின்ற, ஐயிரண்டாம் அவத்தை அன்று-பத்தாம் அவத்தையாகிய மரணம் நேரிடுகின்ற அந்நாளில், எனக்கு-தாசனானவெனக்கு, உன்-உன்னுடைய, பூவார் கழலை-பூவார்கழலை, அருள்-அருள்செய்வாயாக, அப்பனே - சுவாமி, அண்டபூரணனே - அண்டங்களிலெல்லாம் நிறைந்திருக்கின்றவனே. எ-று.

பத்தவத்தையாவன:—காண்டல், பெறவேண்டுமென்னும் உள்ள நிகழ்ச்சி, இடைவிடாது நினைத்தல், வாடுதல், வருத்த மிகுதியைப் பிறர்க்குச் சொல்லுதல், நாணத்தின் எல்லையைக் கடத்தல், தான்காண் பனவெல்லாம் தான் கண்டதையே போலுதல், பித்தாதல், மோகித்தல், இறந்துபடுதல் என்பன.

௬௬. பூரணனாரணன்பொன்னுலகாளிபுராரிகொடி
வாரணனாரணன்வாழ்த்தும்பிரான்வடவேங்கடத்துக்
காரணனாரணங்காணாவிறைவிகணவன்மண்ணேழ்
பாரணனாரணனென்பார்க்குநீங்கும்பழுதவமே.

(இ-ள்.) பூரணன் - எங்கு நிறைந்திருக்கின்றவன், ஆரணன்-பிரமன், பொன்னுலகாளி - இந்திரன், புராரி - சிவன், கொடிவாரணனார் - கோழிக்கொடியையுடைய சுப்பிரமணியர், அணன் - அவருக்கு அண்ணனாகிய விநாயகன் (இவர்கள்), வாழ்த்தும் - வாழ்த்துகின்ற, பிரான்-சுவாமி, வடவேங்கடத்து வடவேங்கடமலையிலிருக்கின்ற, காரணன் - மூலகாரணன், ஆரணம் - வேதங்கள், காணா-அறியாத, இறைவி - தலைவிக்கு, கணவன் - மணாளன், மண்ணேழ்-எழுலகத்தையும், பாரணன் - உண்டவன், நாரணன் - நாராயணன், என்பார்க்கு - என்றுசொல்லுவோருக்கு, பழுது - பொய்யாகிய, அவம் - குற்றங்கள், நீங்கும் - நீங்கிவிடும். எ-று.

நாராயணன் என்பது நாரணன் எனத்திரிந்துவந்தது. பொருள் ௩௯ - ஆம் பாட்டுரையிற்காண்க.

௬௭. பழுத்தெட்டிபோன்றநடுச்செல்வர்பின்சென்றுபல்செருக்கால்
கொழுத்தெட்டினையளவெண்ணமற்றீர்குவடேறிமந்தி
கழுத்தெட்டியண்டர்பதிநோக்கும்வேங்கடக்காவலனை
எழுத்தெட்டினாலெண்ணியேத்தீர்பரகதியேறுதற்கே.

(இ-ள்.) பழுத்த எட்டி போன்ற-பழுத்த எட்டிமரம்போன்ற, நடுச்செல்வர் - இடையில் செல்வராயினவர்களை, பின் சென்று - பின்பற்றி, பல் செருக்கால் - பலகளிப்பினாலே, கொழுத்து-அகங்கரித்து,

எள்-எள்ளளவேனும், தினை அளவு-தினை அளவேனும், எண்ணம்-நினைப்பு, அற்றீர்-அற்றவர்களே, (நீங்கள்) குவடேறி-சிகரத்திலேறி, மந்தி-வானரங்கள், கழுத்தெட்டி - கழுத்தினலெட்டி, அண்டர்பதி - தேவலோகத்தை, நோக்கும் - பார்க்கின்ற, வேங்கடக்காவலனை - திருவேங்கடமலையிலிருக்கின்ற சுவாமியை, எழுத்தெட்டினல் - திருவட்டாக்கரத்தினல், எண்ணி - தியானித்து, பரகதி-பரமபதத்தில், ஏறுதற்கு - செல்லுதற்கு, ஏத்தீர் - துதியீர். எ-று.

தொன்று தொட்டு வறியராயிருந்து இடையே செல்வம் கிடைக்கப்பெற்றவர் பணத்தின் அருமையைக் கருதிப் பிறர்க்கு உபகரியார் ஆகையால் "பழுத்தெட்டி போன்ற நடுச்செல்வர்" என்ருர்.

௬அ. ஏறுகடாவுவரன்னங்கடாவுவரீரிருகோட்
டூறுகடாமழையோங்கல்கடாவுவரோடருவி
ஆறுகடாதவமுதெனப்பாயவரிகமுகம்
தாறுகடாவும்வடவேங்கடவனைத்தாழ்ந்தவரே.

(இ-ள்.) ஓடு - ஓடுகிற, அருவியாறு - அருவியாகிய ஆறுகள், கடாத - கைத்தலில்லாத, அமுதென - அமிர்துபோல, பாய - பாயாநிற்க, அரி - வானரங்கள், கமுகம் - கமுகமரத்தின், தாறுகள் - குலைகளின்மேல், தாவும் - குதிக்கின்ற, வடவேங்கடவனை - வடவேங்கடமலையிலெழுந்தருளிய பெருமானை, தாழ்ந்தவர் - வணங்கினவர்கள், ஏறு-இடபவாகனத்தை, கடாவுவர் - நடத்துவார்கள், அன்னம்-அன்னவாகனத்தை, கடாவுவர் - நடத்துவார்கள், ஈரிருகோடு - நான்கு கொம்பையுடைய, ஊறு - சுரக்கின்ற, கடாம் மழை-மத மழையையுடைய, ஓங்கல் - யானையை, கடாவுவர் - நடத்துவார்கள். எ-று.

திருவேங்கடமுடையானை வணங்கினவர் பிரமருத்ரேந்திராதி பதங்களை அடைவர் என்பது கருத்து கடாத என்னும் எதிர்மறைப் பெயரொச்சத்தில் பகுதி கடு. கடு - கசப்பு.

௬௯. தாழ்ந்தவருக்கந்தருவொக்குமோபலதாரகையும்
சூழ்ந்தவருக்கன்சுடரொக்குமோதொல்லரக்கரொன்று
வாழ்ந்தவருக்கங்களைந்தான்வடமலைமாலடிக்கீழ்
வீழ்ந்தவருக்கன்பருக்கொப்பரோவண்டர்மெய்த்தவரே.

(இ-ள்.) தாழ்ந்த - இழிந்த, அருக்கம் - எருக்கானது, தரு-கற்பகத்தருவை, ஒக்குமோ - ஒப்பாகுமோ, பலதாரகையும் - பல நட்சத்திரங்களும், சூழ்ந்த - சூழ்ந்துள்ள, அருக்கன் - சூரியனது, சுடர் - கதிரை, ஒக்குமோ - ஒப்பாகுமோ (அதுபோல), தொல்-பழமையாகிய, அரக்கரொன்று - இராக்கதர்களென்று, வாழ்ந்த - வாழ்ந்திருந்த, வருக்கம் - கூட்டங்களை, களைந்தான் - கொன்று நீக்கினவனும், வடமலை மால் - வடமலையிலெழுந்தருளிய திருமாலுமாகிய

இறைவனது, அடிக்கீழ் - திருவடிகளில், வீழ்ந்தவருக்கு - வணங்கின பாகவதருக்கு, அன்பருக்கு - அவர்களுடைய அடியார்கட்கு, அண்டர் - தேவர்களும், மெய் தவர் - மெய்த்தவத்தையுடைய முனிவர்களும், ஒப்பரோ - ஒப்பாவார்களோ. எ-று.

அர்க்கம் என்னும் வடமொழி அருக்கம் எனத் தற்பவமாய் வந்தது.

எ0. மெய்த்தவம்போருகவெஞ்சொலிராமன்வில்வாங்கிவளைத்
துய்த்தவம்போருகநாலுஞ்செய்தோருயர்வேங்கடத்து
வைத்தவம்போருகப்பூவார்கழலைமறைமனுநூல்
பொய்த்தவம்போருகவார்காமம்வேட்டுப்புரளுவரோ.

(இ-ள்.) மெய்-கெடுதலில்லாத, தவம்-தவப்பயன்கள், போர்-யுத்தத்திலே, உக - கெட, வெம்சொல்-வெவ்வியசொற்களையுடைய, இராமன் - பரசிராமனது, வில்வாங்கி - வில்லைவாங்கி, வளைத்து-குனித்து, உய்த்த - செலுத்திய, அம்போர் - அம்பையுடையவரும், உகநாலும் - நாலுயுகங்களையும், செய்தோர்-செய்தவருமாகிய திருமாலின், உயர் - உயர்ந்த, வேங்கடத்து - திருவேங்கடமலையினிடத்து, வைத்த - வைக்கப்பட்ட, அம்போருகப்பூவார் கழலை - தாமரைப்பூப் போன்ற பூவார்கழலை, மறை - வேதங்களையும், மனுநூல் - தருமநூல்களையும், பொய்த்த - பொய்யென்றுரைத்த, வம்போர் - வம்பர்கள், உகவார் - விரும்பாதவராகி, காமம் - விரகத்தை, வேட்டு - விரும்பி, புரளுவர் - (பூமியிலிருந்து) புரண்டு வருந்துவர். எ-று.

"யுகநாலுஞ் செய்தோர்" என்றமையால் காலதத்துவத்தைக் கடந்தவர் என்றாராயிற்று.

எக. புரண்டுதிக்கும்முடற்கேயிதஞ்செய்பொருளாக்கையினால்
இரண்டுதிக்குந்தடுமாறுநெஞ்சேயினியெய்துவம்வா
திரண்டுதிக்கும்மரன்வேளயனூர்முதற்றேவரெல்லாம்
சரண்டுதிக்கும்படிமேனின்றவேங்கடத்தாமத்தையே.

(இ-ள்.) திரண்டு-கூட்டமாக, உதிக்கும்-பெருகுகின்ற, அரன்-சிவன், வேள்-முருகன், அயனூர் - பிரமன், முதல்-முதலிய, தேவரெல்லாம் - தேவர்களெல்லோரும், சரண்-திருவடியை, துதிக்கும்படி-வழுத்தும்படி, வேங்கடமேல் நின்ற - திருவேங்கடமலையினின்றருளிய, தாமத்தை - சுடரை, புரண்டு - இறந்து, உதிக்கும் - பிறக்கின்ற, உடற்கே - சரீரத்திற்கே, இதஞ்செய் - நன்மைசெய்கின்ற, பொருள் - திரவியத்தை, ஆக்கையின் - சம்பாதிக்குநிமித்தம், நாலிரண்டுதிக்கும் - எட்டுத்திசையும், தடுமாறும்-திரிந்துழலும், நெஞ்சே-மனமே, இனி-இப்போது, எய்துவம்வா - அடைவோம் வருவாயாக.

பொருளீட்டல் மனைவிமக்கள் முதலாயினோர்பொருட்டு என்பதை மறுத்து, தன் உடலுக்கே இதஞ்செய்யு நிமித்தம் என்று வற்புறுத்தற்காக, "உடற்கே யிதஞ்செய்பொருள்" என்றும், பொருளீட்டலின் அருமைதோன்ற "நாலிரண்டு திக்கும் தடுமாறு நெஞ்சே" என்றும், திருவேங்கடமுடையானை யடைந்தால் இப்பிறப்பிறப்புகளைப்பற்றிவரும் துன்பம் ஒழியுமென்றற்கு "வேங்கடத்தாமத்தை யினியெய்தும் வா" என்றும் கூறினார். உதிக்கும் என்பவைகளில் மகரமெய் விரித்தல்விகாரம்.

௭௨. தாமத்தளைவெண்ணெயுண்டவந்நாளிடைத்தாயர்பிணி
தாமத்தளையுவந்தார்வேங்கடாதிபர்தாமரைப்பூந்
தாமத்தளைமணியோடணிமார்பினர்தண்ணந்துழாய்த்
தாமத்தளைவதென்றோமடவீரொன்றடமுலையே.

(இ-ள்.) தாம் - தாவுகின்ற, மத்து - மத்தினால், அளை-கடையப்பட்ட, வெண்ணெய் - நவநீதத்தை, உண்ட - புசித்த, அந்நாள்-அந்நாளில், இடை-இடைக்குலத்து, தாயர்-தாயார், பிணி-பந்தித்த, தாமத்தளை - கயிற்றின் தளையை, உவந்தார் - விரும்பினவர், வேங்கடாதிபர் - திருவேங்கடத்தலைவர், தாமரைப்பூ தாமத்தளை - தாமரைப்பூவை இடமாகவுடைய பெரியபிராட்டியாரை, மணியோடு-கவுத்துவமணியுடனே, அணி-அணிந்த, மார்பினர்-திருமார்பையுடையவர், தண் அம் துழாய் தாமத்து-குளிர்ச்சிபொருந்திய திருத்துழாய் மாலையில், மடவீர் - பெண்களே, என்-என்னுடைய, தடம்-பெரிய, முலை - முலைகள், அளைவதென்றோ - பொருந்துவதெக்காலமோ.

இது தலைமகள் தோழிகளை நோக்கிக்கூறியது. தாமம்-இடம்.

௭௩. தடவிகடத்தலைவேழமுன்னின்றனசாடுதைத்துப்
புடவிகடத்தலையேழளந்தனபூந்திருவோ
டடவிகடத்தலைவேட்டனவேங்கடத்தப்பன்புள்ளைக்
கடவிகடத்தலைநெய்யுண்டமாதவன்கான்மலரே.

(இ-ள்.) வேங்கடத்து - திருவேங்கடமலையினின்றருளிய, அப்பன்-சுவாமி, புள்ளைக்கடவி - கருடவாகனத்தை நடத்துகின்றவன், கடத்தலை - குடத்தில், நெய்-நெய்யை, உண்ட-புசித்த, மாதவன் - மாதவன் (இவனது) கான்மலர் - பாததாமரைகள், தடம் - பெரிய, விகடத்தலை - மாறுபட்ட தலையையுடைய, வேழம் - யானையின், முன் - முன்னே, நின்றன - நின்றருளின, சாடு உதைத்து - சகடாசுரனையுதைத்து, தத்து-தாவாநின்ற, அலை - திரைகளையுடைய கடலாற்சூழப்பட்ட, புடவிகள் - பூமிமுதலிய, ஏழ் - பதினாலுலகங்களையும், அளந்தன-அளந்தருளின, பூ-பொலிவுபெற்ற, திருவோடு -

பெரியபிராட்டியாருடனே, அடவி-காட்டை, கடத்தலை-கடப்பதை, வேட்டன - விரும்பின. எ-று.

"பூந்திருவோடு அடவிகடத்தலை வேட்டன" என்றது வினைவயத்தால் அன்றித் தன் இச்சாநுரூபமாய்ச்செய்த அவதார வைபவத்தை விளக்குதற்கு என்க. கடவி - தொழிலடியாகப் பிறந்த பெயர்.

௭௪. கானகமுண்டதிற்போமென்னினீங்கிக்கடும்பிணிகாள்
தேனகமுண்டகத்தாள்வேங்கடேசனைச்சென்றிரக்கும்
போனகமுண்டவெண்ணீற்றனயனொடும்பூமியொடும்
வானகமுண்டபெருமானையின்றென்மனமுண்டதே.

(இ-ள்.) தேன் - தேனை, அகம் - உள்ளேகொண்டிருக்கிற, முண்டகம்தாள் - தாமரைப்பூப்போன்ற பாதத்தையுடைய, வேங்கடேசனை - திருவேங்கடநாதனை, சென்று-போய், இரக்கும் - யாசிக்கின்ற, போனகம்முண்டம்-பலியேற்கும் கபாலத்தையுடைய, வெண்ணீற்றன் - வெண்ணீற்றையணிந்த சிவனையும், அயனொடும் - பிரமனொடும், பூமியொடும்-மண்ணுலகத்தோடும், வானகம்-விண்ணுலகத்தையும், உண்ட - புசித்த, பெருமானை - பெருமானை, இன்று - இப்போது, என்-என்னுடைய, மனம்-மனமானது, உண்டது-புசித்தது, (ஆகையால்), என்னின் நீங்கி - என்னைவிட்டு நீங்கி, கடு - கொடிய, பிணிகாள்-நோய்களே, கானகமுண்டு-காடுண்டு, அதில்-அக்காட்டிலே, போம்-செல்லுங்கள். எ-று.

எம்பெருமான் என்மனத்தை யிடமாகக்கொண்டு எழுந்தருளியிருத்தலால் இனி நீங்கள் என்னைவிட்டு அகல்வதே தகுதி யென்றற்கு "கடும்பிணிகாள் பெருமானையின் றென் மனமுண்டது கானகமுண்டதிற் போம்" என்றார்.

௭௫. மனந்தலைவாக்குறவெண்ணிவணங்கிவழுத்துந்தொண்டர்
இனந்தலைப்பெய்தனனீதன்றியேயிமையோருமெங்கள்
தனந்தலைவாவெனும்வேங்கடவாணதடங்கடலுள்
நனந்தலைநாகணையாயறியேனன்புஞானமுமே.

(இ-ள்.) மனம்-மனம், தலை-சிரம், வாக்கு-வாய், உற-(இவற்றால்) முறையாகப்பொருந்த, எண்ணி-நினைத்து, வணங்கி-பணிந்து, வழுத்தும் - துதிக்கின்ற, தொண்டர் - அடியார்களது, இனம்-கூட்டத்திலே, தலைப்பெய்தனன் - சேர்ந்தனன், ஈதன்றி - இதுவல்லாமல், இமையோரும் - தேவர்களும், எங்கள் - எங்களுடைய, தனம்-தனமே, தலைவா - தலைவனே, எனும் - என்கின்ற, வேங்கடவாண - திருவேங்கடமலையில்வாழ்கின்றவனே, தடம் - பெரிய, கடலுள்-கட

லின்கண், நனந்தலை - நடுவில், நாகணையாய்-சேடசயனத்தையுடைய வனே, அன்பும்-பத்தியும், ஞானமும் - அறிவும், அறியேன்-நானறி யேன். எ-று.

அன்பு ஞானங்களினும் அடியாரோடு கூடியிருத்தல் சிறப் புடைத்தென்பது தோன்ற "தொண்டர் இனந்தலைப் பெயதனன் அறியேன் அன்புஞானமுமே" என்றார்.

எசு. ஞானக்கண்டாகனவொக்கும்பவந்துடைநஞ்சிருக்கும்
தானக்கண்டாகனற்சோதியென்றேத்துவன்றாலமுடன்
வானக்கண்டாகனவண்ணுவென்றோதொலிவந்தடையா
ஈனக்கண்டாகனற்கீந்தான்பரகதியென்னப்பனே.

(இ-ள்.) நஞ்சு-விடம், இருக்கும் - இருக்கின்ற, தானம்-இட மாகிய, கண்டா-கண்டத்தையுடையவனே, கனல்-அக்கினிநிறம்போ லும் நிறமுடைய, சோதி - சுடரே, ஞானக்கண் - ஞானக்கண்ணை, தா-கொடு, கனவு-கனவிற்கு, ஒக்கும் - சமானமான, பவம்-சனனத் தை, துடை-நீக்கு, என்று ஏத்துவன் - என்று துதிக்கின்றவனாகிய, தாலமுடன்-பூமியுடனே, வானக்கண்-வானிடத்தில், தா-தாவுகின்ற, கனம்-மேகம்போலும், வண்ணுவென்று-நிறமுடையவனேயென்று, ஓது-துதிக்கின்ற, ஒலி-சத்தமானது, வந்தடையா-வந்து அடையாத, ஈனம்-இழிவையுடைய, கண்டாகனற்கு-கண்டாகனனென்னு மசுர னுக்கு, என்-என்னுடைய, அப்பன்-சுவாமி, பரகதி-பரமபதத்தை, ஈந்தான்-அருளிச்செய்தான். எ-று.

கண்டாகர்ணன் முத்தியடைந்த செய்தி:—கண்டாகர்ணன் என்னும் இராட்சதன் திருமாலினிடத்தில் பக்தியில்லாதவனாகி, அவ் விறைவனது கீர்த்தியைக்கேட்க மனமில்லாதவனாய்த் தன திரண்டு காதுகளிலும் மணிகளைக் கட்டிக்கொண்டு ஒரு க்ஷணப்பொழுது மோயாமல் அசைத்துக்கொண்டு, சிவன்பால் பக்திசெய்து வருகிற நாளில் ஒருநாள் கைலாயத்திற்குப்போய்ச் சிவபிரானை எனக்கு அழி யா முத்திதரவேண்டுமென்று கேட்க, அந்த உமேசர் மற்றெந்தப் பதவிகளையாவது கொடுக்க என்னால் ஆகும், மோட்சம் வேண்டுமே யானால் திருமாலே தரவல்லனென்று சொல்லுதலும் காதுகளிற் கட்டியிருந்தமணிகளை அறுத்தெறிந்து இறைவனைச் சரணகதி செ ய்து முக்தி பெற்றனனென்பது.

எஎ. என்னப்பனாகத்துப்பொன்னூலன்வேங்கடத்தெந்தைதுயில்
மன்னப்பனாகத்துக்கஞ்சலென்றான்பன்மணிசிதறி
மின்னப்பனாகத்துப்பாய்ந்தான்கதையன்றிவெவ்வினைகள்
துன்னப்பனாகத்துப்போய்நூல்புகாவென்றுளைச்செவிக்கே.

(இ-ள்.) என்-என்னுடைய, அப்பன் - சுவாமி, ஆசத்து-மார்பில், பொன் - பொன்னிறற்செய்த, நூலன் - பூணூலையுடையவன், வேங்கடத்து-திருவேங்கடமலையிலிருக்கின்ற, எந்தை - என்தந்தை, துயில்-நித்திரை, மன் - பொருந்திய, அப்பன் - கடலையுடையவன், நாகத்துக்கு - யானைக்கு, அஞ்சலென்றான்-பயப்படாதே என்றவன், பன்மணி-பலமணிகள், சிதறி-சிந்தி, மின்ன-பிரகாசிக்க, பல்-விஷப் பல்லையுடைய, நாகத்து-பாம்பின்மேல், பாய்ந்தான்-பாய்ந்து நடித்தவன் (அவனது) கதையன்றி - கதையல்லாமல், வெவ்வினைகள்-கொடியதீவினைகள், துன்ன-நெருங்க, பல்நா-பலநாக்குகள், கத்து-சொல்லுகின்ற, பொய்நூல் - பொய்நூல்கள், என்-என்னுடைய, துளை-துவாரமுள்ள, செவிக்கு-செவிகளில், புகா-நுழையா. எ-று.

"நாகத்துப்பாய்ந்தான் கதையன்றிப் பொய்நூல் புகாவென் றுளைச்செவிக்கே" என்றமையால் "மறந்தும் புறந்தொழாமாந்தர்" என்கிறபடி தமக்கு எம்பெருமான் சரித்திரத்தில் உள்ள மிகுந்த விருப்பத்தை வற்புறுத்தினார் ஆயிற்று.

எஅ. செவித்தலைவன்னியிற்சுடுண்டவேயிசைதீப்பதும்யான்
தவித்தலைவன்மயலுந்தமர்காப்புந்தமிழ்க்கலியன்
கவித்தலைவன்றிருவேங்கடத்தான்முன்கழறுமின்பொன்
குவித்தலைவந்துந்துகோனேரிவாழுங்குருகினமே.

(இ-ள்.) பொன்-பொன்னை, குவித்து - குவியாநின்று, அலை-அலைகள், வந்து உந்து - வந்து தவழ்கின்ற, கோனேரி - கோனேரி தீர்த்தத்தில், வாழும்-வாழ்கின்ற, குருகு இனமே-நாரைக்குலங்களே, செவித்தலை-காதுகளினிடத்து, வன்னியில்-நெருப்பினால், சுடுண்ட-சுடப்பட்ட, வேய் - வேய்ங்குழலின், இசை-ஓசை, தீப்பதும்-சுடுவதையும், யான்-நான், தவித்து - தவித்து, அலை-வருந்துகின்ற, வல்-வலிய, மயலும்-மயக்கத்தையும், தமர்-சுற்றத்தார், காப்பும் - காவலையும், தமிழ்க்கலியன்-திருமங்கை மன்னனுடைய, கவி-கவிக்கு, தலைவன்-நாயகனாகிய, திருவேங்கடத்தான்முன் - திருவேங்கடமலையையுடையவனது சந்நிதியில், கழறுமின் - சொல்லுங்கள். எ-று.

இது நாரை விடுதூது. தமர் காப்பாவது உயிர் நீங்குமென்று அஞ்சி உறவினர்காக்குங்காவல்.

எகூ. குருகூரரங்கமறைத்தமிழ்மாலைகுலாவுந்தெய்வ
முருகூரரங்கோடவேங்கடவர்முன்னாளிலங்கை
வருகூரரக்கரந்துணித்தார்சரணங்கள்வல்வினைகட்
கிருகூரரங்கள்கண்டீருயிர்காள்சென்றிரவுமினே.

(இ-ள்.) குருகூரர் - திருக்குருகூரிலவதரித்த நம்மாழ்வாரியற்றிய, அங்கம் - ஆறங்கமுள்ள, மறைத்தமிழ்மாலை - வேதத்தமிழ்மாலை, குலாவும் - விளங்குகின்ற, தெய்வம் - தெய்வத்தன்மையுள்ள, முருகு பரிமளம், ஊர்-வீசுகிற, அரங்கர்-திருவரங்கர், வடவேங்கடவர்-வடக்கின்கணுள்ள திருவேங்கடவர், முன்னாள்-முற்காலத்திலே, இலங்கை - இலங்காபுரியில், வரு - வாராநின்ற, கூரர் - கொடியர்களுடைய, அங்கம் - சரீரங்களை, துணித்தார்-சேதித்தவர், (இவரது) சரணங்கள்-திருவடிகள், உயிர்காள் - உயிர்களே, வல்-வலிய, வினைகட்கு - நல்வினை தீவினையென்னு மிரண்டுவினைகளுக்கும், இரு - இரண்டு, கூர்-கூரிய, அரங்கள்-(அராவும்) அரங்களாகும், சென்று-போய், இரவுமின்-இரந்துகொள்ளுங்கள். எ-று.

தமிழ்மறைக்கு அங்கமாவது திருமங்கைமன்னன் செய்தருளிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்னும் ஆறுமாம். கண்டூர்-முன்னிலையசைச்சொல்.

அ0. இரணியநாட்டனிரணியனீரைந்தலையன்கஞ்சன்
முரணியகோட்டினகத்திற்கரத்தின்முன்றாளிற்றுஞ்சத்
தரணியிற்குத்தியிடந்தெய்துதைத்தவன்சர்ப்பவெற்பன்
அரணியகேழலரிராகவன்கண்ணனுகிவந்தே.

(இ-ள்.) சர்ப்பவெற்பன் - சேடாத்திரியன், கேழல் - வராகமாகியும், அரி-நரசிங்கமாகியும், இராகவன் - இராமனுகியும், கண்ணனுகி - கிருட்டிணனுகியும், வந்து - அவதரித்து, இரணியநாட்டன்-இரணியாட்சனையும், இரணியன் - இரணியகசிபுவையும், ஈரைந்தலையன்-பத்துத்தலைகளையுடைய இராவணனையும், கஞ்சன்-கம்சனையும், முரணிய - மாறுபாடான, கோட்டின் - கொம்பினுலும், நகத்தின்-நகத்தினுலும், சரத்தின்-அம்பினுலும், முன்தாளின் - முழங்காலினுலும், துஞ்ச-இறக்க, தரணியில்-பூமியிலே, குத்தி-குத்தியும், இடந்து-பிளந்தும், எய்து-அம்பெய்தும், உதைத்தவன் - உதைத்தவன், அரணியம்-இரட்சகம். எ-று.

துஞ்ச என்றது மங்கலவழக்கு.

அக. வந்தித்திருக்குமறைபோற்றும்வேங்கடவாணமலர்
உந்தித்திருக்குங்குமமணிமார்பவுள்வஞ்சனையும்
புந்தித்திருக்கும்வெகுளியுங்காமமும்பொய்யும்விட்டுச்
சிந்தித்திருக்குமதெக்காலம்யானுன்றிருவடியே.

(இ-ள்.) வந்தித்து-வணங்கி, இருக்குமறை - இருக்குவேதம் போற்று-துதிக்கின்ற, வேங்கடவாண - திருவேங்கடமலையில் வாழ்பவனே, மலருந்தி - உந்திக்கமலத்தையும், திரு - இலட்சுமியையும்,

குங்குமம் - குங்குமச்சாந்தையுமுடைய, மார்ப-மார்பனே, உள்வஞ்சனையும்-மனோவஞ்சனையும், புந்திதிருக்கும் - புத்தியினது வேறுபாடும், வெகுளியும்-கோபமும், காமமும்-விரகமும், பொய்யும்-பொய்ம்மையும், விட்டு நீக்கி, யான்-நான், உன்-உன்னுடைய, திருவடி-திருவடிகளை, சிந்தித்திருக்குமது - தியானித்திருப்பது, எக்காலம்-எந்தக்காலம். எ-று.

வாழ்நன் என்பது வாணன் எனத்திரிந்து ஈறுகெட்டு விளியாய் நின்றது.

அஉ. திருவடிவைக்கப்புடவிபற்றாதண்டஞ்சென்னிமுட்டும்
கருவடிவைக்கலந்தாற்றாவெண்டிக்குங்கடன்மண்கொள்வான்
பொருவடிவைக்கனலாழிப்பிரான்புனலாழிகட்டப்
பெருவடிவைக்கண்டவப்பனெவ்வாறடிபேர்ப்பதுவே.

(இ-ள்.) திருவடி-திருவடிகளை, வைக்க-வைப்பதற்கு, புடவி-பூமி, பற்றாது - போதாது, அண்டம் - அண்டத்தை, சென்னி-சிரசு, முட்டும் - முட்டும், எட்டுதிக்கும் - எட்டுத்திசையும், கரு வடிவை-கரிய திருவுருவத்தை, கலந்து - சேர்ந்து, ஆற்றா - போதா, கடல்-சமுத்திரத்தையும், மண்-பூமியையும், கொள்வான்-கொள்ள, பொரு-பொருகின்ற, வடி - வடித்த, வை - கூர்மைபொருந்திய, கனல்-அக்கினியைச்சொரிகின்ற, ஆழி-சக்கரத்தையுடைய, பிரான்-சுவாமி, புனல் - நீரையுடைய, ஆழி-கடலை, கட்ட - அணைகட்ட, பெருவடிவை - மிகுந்தவுற்றதலை, கண்ட-செய்த, அப்பன்-சுவாமி (இவன்), எவ்வாறு - எப்படி, அடி-திருவடியை, பேர்ப்பது-எடுத்துவைப்பது.

கொள்வான் - எதிர்காலவினையெச்சம், விகுதி வான்.

அங. பேரானைக்கோட்டினைப்பேர்த்தானைவேங்கடம்பேணுந்துழாய்த்
தாரானைப்போதனைத்தந்தானையெந்தையைச்சாடிறப்பாய்ந்
தூரானைமேய்த்துப்புள்ளூர்ந்தானைப்பஞ்சவர்க்குய்த்துநின்ற
தேரானைநான்மறைதேர்ந்தானைத்தேருநந்தீதறுமே.

(இ-ள்.) பேர் - பெரிய, ஆனை-குவலயாபீடம் என்னும் யானையினது, கோட்டினை-கொம்பை, பேர்த்தானை - முறித்தவனை, வேங்கடம் - திருவேங்கடமலையை, பேணும் - விரும்புகின்ற, துழாய்த்தாரானை - துளவமாலையையுடையவனை, போதனை-பிரமனை, தந்தானை-பெற்றவனை, எந்தையை-எம்பிதாவானவனை, சாடு-சகடாசுரன், இற-முறிய, பாய்ந்து-தாவி, ஊர்-ஊரிலுள்ள, ஆனை-பசுக்களை, மேய்த்து-மேய்த்து, புள்-கருடனை, ஊர்ந்தானை-நடத்தினவனை, பஞ்சவர்க்கு-பாண்டவர்களில் அர்ச்சுனனுக்கு, உய்த்துநின்ற - செலுத்திநின்ற, தேரானை - இரதத்தையுடையவனை, நான்மறை - நாலுவேதங்க

ளால், தேர்ந்தானை - ஆராயப்பட்டவனை, தேரும்:- தேர்ந்துகொள்ளுங்கள், நும்-உமது, தீது-பொல்லாங்கு, அறும்-நீங்கும். எ-று.

தேர்ந்தான் படு விகுதி தொகுத்துவந்த செயப்பாட்டுவினைப் பெயர்.

அச. அறுகூடுகெங்கைதரித்தானயனழைத்தாலுமிச்சை
அறுகூடுமாலடியாரடிக்கேயப்பன்வேங்கடவன்
மறுகூடுமாதரெறிபூணெறிக்குமதிலரங்கன்
மறுகூடுநம்மைமருவாமல்வாழ்விப்பன்மாமனமே.

(இ-ள்.) மாமனமே - பெரியமனமே, அறுகு - அறுகையும், ஊடு-சடைக்குள்ளே, கங்கை - கங்கையையும், தரித்தான்-தரித்தவனாகிய உருத்திரனும், அயன்-பிரமனும், அழைத்தாலும்-கூப்பிட்டாலும், இச்சை-விருப்பம், அறு-நீங்கு, மால்-திருமாலினுடைய, அடிக்கே - திரு அடிகளில், கூடு - சேர், அப்பன் - சுவாமி, வேங்கடவன்-திருவேங்கடமுடையான், மறுகூடு-வீதிகளில், மாதர் - பெண்கள், எறி-எறிகின்ற, பூண்-ஆபரணங்கள், எறிக்கும்-பிரகாசிக்கும், மதில்-பிராகாரத்தையுடைய, அரங்கன் - திருவரங்கத்தையுடையவன், (அவன்) மறுகூடு-மறுசனனம், நம்மைமருவாமல் - நம்மைச்சேராமல், வாழ்விப்பன்-வாழச்செய்வான். எ-று.

அடிக்கு என்பதில் குவ்வுருபு இடப்பொருளது.

அரு. மாமனங்காந்தவல்வாய்ப்புள்ளையேவமடித்துப்பித்தன்
நாமனங்கார்தவன்றோடவெய்தோனறும்பூங்கொடிக்குத்
தாமனங்காந்தன்திருவேங்கடத்தெந்தைதாள்களிலென்
தீமனங்காந்தங்கவருசிபோலென்றுசேர்வதுவே.

(இ-ள்.) மாமன் - மாதுலன், அங்காந்த - திறந்த, வல்-வலிய, வாய்-வாயையுடைய, புள்ளை - பறவையை, ஏவ-அனுப்ப, மடித்து-கொன்று, பித்தன் - சிவனுடைய, நா - நாவில், மன் - பொருந்திய, அம்-சலமானது, காந்த-வறள, அன்று-அக்காலத்தில், ஓட-ஓடும்படி, எய்தோன் - அம்பை எய்தவன், நறு - வாசனைபொருந்திய, பூங்கொடிக்கு-பூங்கொடிபோன்ற இலக்குமிக்கு, தாமன்-அழகன், அம்-அழகிய, காந்தன்-மணாளன், திருவேங்கடத்தெந்தை - திருவேங்கடத்திலிராநின்ற என்றந்தையாகிய சுவாமி (அவனது), தாள்களில்-திருவடிகளில், என்-என்னுடைய, தீ-கொடிய, மனம்-மனமானது, காந்தம்-காந்தக்கல், கவர் - கிரகிக்கின்ற, ஊசிபோல்-ஊசியைப்போல, என்று-எப்பொழுது, சேர்வது - அடைவது. எ-று.

வல்வாய்ப்புள் என்றது கம்சன் ஏவுதலால் கிருஷ்ணபகவானைக் கொல்லவந்த பகாசுரனை.

அசு. சேருமறுக்கமுநோயுமரணமுந்தீவினையின்
வேருமறுக்கவிரும்பிநிற்பீர்வடவேங்கடத்தே
வாருமறுக்கவறியானெவரையும்வாழவருள்
கூருமறுக்கமலையணிமார்பன்கைக்கோதண்டனே.

(இ-ள்.) சேரும்-வந்தடையும், மறுக்கமும்-கலக்கமும், நோயும் - வியாதியும், மரணமும்-இறப்பும், தீவினையின் - பாவத்தினது, வேரும் - மூலமும், அறுக்க - அறுத்தற்கு, விரும்பிநிற்பீர் - விரும்பி நிற்கின்றவர்களே, (நீங்கள்) வடவேங்கடத்தே - வடதிசையிலுள்ள திருவேங்கடமலையினிடத்தே, வாரும் - வாருங்கள், மறு - மறுவையும், கமலை - இலக்குமியையும், அணி-அணிந்த, மார்பன் - மார்பையுடையவன், கை - கையிலே, கோதண்டன் - வில்லையுடையவன், மறுக்க - (அடியார்விரும்பியதை) மறுக்க, அறியான்-அறியாதவன், எவரையும் - யாவரையும், வாழ-வாழும்படி, அருள்கூரும் - மிகுந்த அருள்செய்வன். எ-று.

புருஷகாரபூதையாகிய கமலை யணிமார்பன் ஆகையால் "மறுக்கவறியான் எவரையும் வாழ அருள் கூரும்" என்றார்.

அஎ. கோதண்டத்தானத்தன்வாள்கதைநேமியன்கோலவட
வேதண்டத்தானத்தனின்னிசையான்மண்ணும்விண்ணுமுய்ய
மூதண்டத்தானத்தவதரித்தானெனின்முத்திவினைத்
தீதண்டத்தானத்தனுவெடுத்தானெனிற்றீநரகே.

(இ-ள்.) கோதண்டத்தான் - வில்லையுடையவன், சத்தன்-சங்கையுடையவன், வாள் - வாளாயுதத்தையும், கதை - தண்டாயுதத்தையும், நேமியன்-சக்கராயுதத்தையுமுடையவன், கோலம்-அழகிய, வடவேதண்டத்தான் - வடமலையையுடையவன், அத்தன் - சுவாமி, இன்-இனிய, இசையான் - வேய்ங்குழலின் இசையையுடையவன், மண்ணும்-பூமியும், விண்ணும்-ஆகாயமும், உய்ய-உச்சீவிக்கும்பொருட்டு, மூதண்டத்தானத்து - பழய அண்டத்தினிடத்து, அவதரித்தானெனில்-அவதரித்தவனென்றால், முத்தி-பரமபதம்(சித்திக்கும்), வினை - வினையினுடைய, தீது - தீங்கு, அண்ட - வந்துசேர, தான்-அவன், அ தனு - அந்தத்தேகத்தை, எடுத்தானெனில் - எடுத்தவனென்றால், தீ-கொடிய, நரகு-நரகம் (சித்திக்கும்). எ-று.

இன் இசையான்-இனியபுகழையுடையவன் எனினுமாம்.

அஅ. நரகமடங்கலுஞ்சென்றெய்த்தபாவிக்குநாரியர்மேல்
விரகமடங்கமெய்ஞ்ஞானம்வெளிசெயவீடுபெற
உரகமடங்கநடித்தபொற்றாளின்றென்னுச்சிவைப்பாய்
வரகமடங்கயலானுய்வடமலைமாதவனே.

(இ-ள்.) வரம்-மேம்பாடுள்ள, கமடம் - கூர்மமாகவும், கயல்-மச்சமாகவும், ஆனாய் - அவதரித்தவனே, வடமலை-வடமலையிலிருக்கின்ற, மாதவனே - மாதவனே, நரகம் - நரகங்கள், அடங்கலும்-அனைத்திலும், சென்று-போய், எய்த்த-இளைத்த, பாவிக்கு-பாவியாகிய எனக்கு, நாரியர்மேல்-பெண்களினிடத்தில், விரசம்-காமம், அடங்க-வலிகெடவும், மெய்ஞ்ஞானம் - உண்மையாகிய ஞானம், வெளிசெய - வெளிப்படவும், வீடுபெற - வீடடையவும், உரகம் - பாம்பு, மடங்க - இறக்க, நடித்த - நிருத்தஞ்செய்த, பொற்றாள் - அழகிய திருவடியை, இன்று - இப்பொழுது, என்-எனது, உச்சி - சிரசின்மேல், வைப்பாய்-சூட்டுவாயாக. எ-று.

மெய்ஞ்ஞானம் என்றது ஐயம்திரிபுகள் அற்ற ஞானத்தை.

அகூ. மாதிரங்காதன்மனைவாழ்க்கையென்றெண்ணிவான்பொருட்கு
மாதிரங்காதம்பலவளைவீரின்னுமைந்தனென்றோர்
மாதிரங்காதபடிவணங்கீரரிமாவொடுகைம்
மாதிரங்காதமர்செய்கின்றசேடமலையனையே.

(இ-ள்.) அரிமாவொடு - சிங்கத்தோடு, கைமா - யானையானது, திரங்காது - இளைக்காமல், அமர்செய்கின்ற - போர்செய்கின்ற, சேடமலையனையே - சேடாத்திரியையுடையவனையே, மா - உறுதியான, திரமென்று-நிலையென்று, காதல் - ஆசையுள்ள, மனைவாழ்க்கை-இல்வாழ்க்கையை, எண்ணி - நினைத்து, வான்-மிகுந்த, பொருட்கு-திரவியத்திற்கு, மாதிரம் - திசைகளில், பலகாதம் - அநேககாதவழி, வளைவீர்-சுற்றுகின்றவர்களே, (நீங்கள்) இன்னும்-இன்னமும், மைந்தனென்று-புத்திரனென்று, ஓர்மாது - ஒருபெண்ணாகிய தாயானவள், இரங்காதபடி - அன்புசெய்யாதபடி, வணங்கீர் - வணங்குகின்றீரில்லை. எ-று.

ஓர் மாதிரங்காதபடி என்றது பிறவாமல் என்றபடி.

கூ0. மலையினரக்கருடன்றெழுந்தாரொன்றுமாமறைநூற்
கலையினரக்கருடனிந்திராதியர்காட்டச்செய்யும்
கொலையினரக்கருடனேறும்வேங்கடக்குன்றனொன்றால்
உலையினரக்கருடந்திலனோனுமென்னுள்ளவர்க்கே.

(இ-ள்.) மலையின் - மலைபோல, அரக்கர் - இராக்கதர்கள், உடன்று - கோபமுற்று, எழுந்தாரென்று - எழுந்தார்களென்று, மா - பெரிய, மறைநூல் கலையினர் - வேதத்தையும் பலகலைகளையுமுணர்ந்த முனிவர்களும், அக்கருடன்-அக்குமாலையணிந்த உருத்திரருடன், இந்திராதியர் - இந்திரன்முதலியோர்களும், காட்ட - தெரிவிக்க, செய்யும் - செய்கின்ற, கொலையினர் - கொலைத்தொழிலினர்,

அக்கருடன் - அந்தக்கருடன்மேல், ஏறும் - ஏறுகின்ற, வேங்கடக் குன்றர் - திருவேங்கடமலையையுடையவர், என்றால் - என்றுசொன்னால், அருள்-கிருபை, தந்திலரேனும் - தராவிட்டாலும், அவர்க்கு- அவ்வேங்கடவர்க்கு, என் - என்னுடைய, உள்-உள்ளமானது, உலையின் - உலைக்களத்து இட்ட, அரக்கு - அரக்குப்போல உருகும்.

இந்திராதி தேவர்கள் தமக்கு இடையறாப் பகைஞராகிய அரக்கரைச்சுட்டிக் காட்டுந்தோறும் அவர்களைக்கொன்று அவ்விந்திராதியர்க்குத் தீமையை நீக்குதலால் “மலையினரக்கருடன் இந்திராதியர் காட்டச் செய்யும் கொலையினர்” என்றார். அக்கருடன் என்பதில் அகரம் பலரறிசுட்டு.

கூக. உள்ளமஞ்சாய்வலியாய்வலியார்க்குமுபாயம்வல்லாய்
கள்ளமஞ்சாயுதங்கைவருமாயினுங்கங்குலினில்
வெள்ளமஞ்சார்பொழில் வேங்கடக்குன்றினில்வீழருவிப்
பள்ளமஞ்சாரல்வழிவரில்வாடுமிப்பாவையுமே.

(இ-ள்.) உள்ளமஞ்சாய் - அஞ்சாதவுள்ளமுடையவனே, வலியாய் - வலிமையுடையவனே, வலியார்க்கும் - வலிமையுடையார்க்கும், உபாயம்-தந்திரத்திலே, வல்லாய் - வல்லவனே, கள்ளம்-கள்ளத்தன்மையிலும், அஞ்சாயுதம் - பஞ்சாயுதத்திலும், கைவருமாயினும்-நீ கைதேர்ந்தவனாயிருந்தாலும், கங்குலினில்-இரவிலே, வெள்ளம்-நீரையுடைய, மஞ்சு-மேகங்கள், ஆர்-நிறைந்த, பொழில்-சோலைசூழ்ந்த, வேங்கடக்குன்றினில் - திருவேங்கடமலையில், வீழ் - வீழாநின்ற, அருவி - அருவியையுடைய, பள்ளம் - பள்ளங்களுள்ள, அம்- அழகிய, சாரல்-மலைப்பக்கத்தின், வழி - நெறியாக, வரில்-வந்தால், இப்பாவை - இந்தப்பெண், வாடும்-மெலிவள், எ-று.

இது தோழி தலைமகனை நோக்கி நீ இரவில் வருதல் தகுதியன்று எனக்கூறியது. இது இரவு வரல் விலக்கல் என்னும் துறை. இப்பாவை என்றது தலைமகளை.

கூஉ. பாவையிரங்குமசோதைக்குமுத்துப்பதுமச்செல்விக்
கேவையிரண்டன்னகண்மணிநீலமிருசரணப்
பூவையிரந்தவர்க்கின்பவளம்புல்லசுரர்க்கென்றும்
மாவையிரந்திருவேங்கடத்தோங்குமரகதமே.

(இ-ள்.) திருவேங்கடத்து ஓங்கும் - திருவேங்கடமலையிலுயர்ந்திருக்கின்ற, மரகதம் - மரகதமணிபோலு நிறத்தையுடைய திருமாலானவர், பாவை - பிரதிமைகள், இரங்கும்-இரங்காநின்ற அழகையுடைய, அசோதைக்கு-அசோதைப்பிராட்டியாருக்கு, முத்து- முத்தம் போல்பவர், பதுமச்செல்விக்கு - தாமரைமலரிலெழுந்தரு

ளிய பெரியபிராட்டியாருக்கு, இரண்டு ஏவையன்ன-இரண்டம்பை யொத்த, கண் - கண்களுக்கு, நீலம் - நீலமணிபோலுங் கறுத்த திருமேனியையுடையவர், இரு - இரண்டு, சரணப்பூவை - பாதமாகிய தாமரைப்பூவை, இரந்தவர்க்கு - யாசித்தவர்கட்கு, இன்பவளம்-பேரின்பமாகிய வண்மையையுடையவர், புல்-புல்லிய, அசுரர்க்கு-தானவர்கட்கு, என்றும்-எப்போதும், மா-மிகுந்த, வயிரம்-பகையையுடையவர். எ-று.

திருவேங்கடத்தோங்கும் மரகதமணியானது யசோதைக்கு முத்தாகவும் திருமகளுக்கு நீலரத்தினமாகவும் அடியார்களுக்குப் பவளமாகவும் அசுரர்க்கு வைரமாகவும் தோன்றுகின்றது என்றும், அசோதைக்கு கொஞ்சுதற்குரிய குழந்தையாகவும் திருமகளுக்குக் கண்ணுக்கு இன்றியமையாத கருவிழியாகவும் நீலரத்தினமாகவும் அடியார்க்கு இன்பப்பெருக்காகவும் அசுரர்க்குத் தீராப்பகையாகவும் இருக்கிறதென்றும் இருவகையாகப் பொருள்கொள்க. மரகதமணியொன்றே முத்தும் நீலமும் பவளமும் வைரமும் ஆகிய இவைகளாகத் தோன்றுதல் என்னவியப்பு என்பது கருத்து.

கூ௯. மரகதத்தைக்கடைந்தொப்பித்ததொத்தனவாழ்த்தினர்தம்
நரகதத்தைத்தள்ளிவைகுந்தநல்கினநப்பின்னையாம்
விரகதத்தைக்குவிடையேழ்தழுவினவேங்கடவன்
குரகதத்தைப்பிளந்தான்றோள்களாகியகுன்றங்களே.

(இ - ள்.) வேங்கடவன் - திருவேங்கடமலையை யுடையான், குரகதத்தை - பரியாகவந்த அசுரனை, பிளந்தான்-பிளந்தவன், (அவனுடைய) தோள்களாகிய - புயங்களாகிய, குன்றங்கள்-மலைகள், மரகதத்தை-மரகதமணியை, கடைந்து-கடைந்து, ஒப்பித்தது-அலங்காரஞ்செய்ததை, ஒத்தன-ஒத்திருந்தன, வாழ்த்தினர்தம்-துதித்தவர்களுடைய, நரகம்தத்தை - நரகத்திலுண்டானவிபத்தை, தள்ளி-நீக்கி, வைகுந்தம் - பரமபதத்தை, நல்கின - கொடுத்தருளின, நப்பின்னையாம் - நப்பின்னைப்பிராட்டியாகிய, விரகம்-விரகத்தையுடைய, தத்தைக்கு - கிள்ளைபோலு மொழியாணிமித்தம், ஏழ்விடை-ஏழுவிடையை, தழுவின - சேரத்தழுவின. எ-று.

அயோத்திக்கரசனாகிய நக்நஜித்து மகாராஜனுக்கு மகாசௌந்தரியவதியாகிய சத்தியவதி யென்றொருகன்னிகை யிருந்தனள், அவள் சௌந்தரியத்தை வியந்து பல அரசர்களும் அவளை மணம்புரிய விரும்பியபோது, அவ்வரசன் யசோதையின் தம்பியும் தன் பசுமந்தைகளைக்காத்து வருகின்றவனுமாகிய கும்பாண்டன் என்பவனிடத்துள்ள ஏழு ரிஷபங்களையும் ஜயிக்கின்றவர்களுக்குக் கன்னிகையை மணஞ்செய்து கொடுப்பதாகத் தெரிவிக்க, அசுராம்சங்

ளாகிய அந்த எழுரிஷபங்களையும் எவரும் வெல்லமாட்டாமற் போயினர். அப்போதுகிருஷ்ணபகவான் அயோத்திக்குச் செல்ல, அரசன் விடைகளைக்காட்டி இவைகளைச்செயித்து என்மகளை மணம் புரியவேண்டுமென்று பிரார்த்திக்க, பகவான் எழுருவங்கொண்டு அவைகளின் கொம்பைப்பற்றிக் கீழேதள்ளி மிகவும் எளிதாக ஒரு க்ஷணத்தில் கட்டி யருளி, கன்னிகையை மணஞ்செய்தனர். இவளுக்கு நப்பின்னைப் பிராட்டியென்றும் பெயர் வழங்கும்.

௬௪. குன்றுகளத்தனையுங்கடலூரக்குவித்திலங்கை
சென்றுகளத்தனைவோரையுமாய்த்துத்திருச்சரத்தால்
அன்றுகளத்தனையட்டானையப்பனையாய் மகடோள்
துன்றுகளத்தனையேத்தவல்லார்க்கில்லை துன்பங்களே.

(இ-ள்) குன்றுகள் - மலைகளெவ்வளவோ, அத்தனையும்-அவ்வளவும், கடல்-சமுத்திரத்தை, தூர - அடைக்க, குவித்து-கொண்டுவந்துசேர்த்து, இலங்கை - இலங்காபுரியிலே, சென்று - போய், களத்து - போர்க்களத்து, அனைவோரையும் - எல்லோரையும், மாய்த்து - கொன்று, திருச்சரத்தால் - சிறந்தபாணத்தினால், அன்று-அந்நாளில், களத்தனை - வஞ்சகனாகிய இராவணனை, அட்டானை-கொன்றவனை, அப்பனை - சுவாமியை, ஆய் மகள் - இடைப்பெண்களுடைய, தோள்-தோள்கள், துன்று - நெருங்கிய, களத்தனை-கண்டத்தையுடையவனை, ஏத்த - வழுத்த, வல்லார்க்கு-வல்லவர்களுக்கு, துன்பங்கள் - கிலேசங்கள், இல்லை - இல்லையாம். எ-று.

திரிலோக பயங்கரன் எனச் சிறப்புப்பெயர் பெற்ற இராவணன் சானகிபிராட்டியாரை வஞ்சனை செய்து சிறையெடுத்துப் போனமையால் "களத்தன்" என்றார். கள்ளத்தன் என்பது தொகுத்தல் விகாரம் பெற்று வந்தது. கள்ளம் - வஞ்சனை.

௬௫. துன்பங்களையுஞ்சனனங்களையுந்தொலைவறுபேர்
இன்பங்களையுங்கதிகளையுந்தருமெங்களப்பன்
தன்பங்களையும்படிமூவரைவைத்துத்தாரணியும்
பின்பங்களையுமிழுதுமுண்டானடிப்பேர்பலவே.

(இ ள்.) எங்கள் - எங்களுடைய, அப்பன்-சுவாமி, தன்பங்கு-தன்னிடத்திலே, அளையும்படி - பொருந்தக்கக்கதாக, மூவரை-திரிமூர்த்திகளை, வைத்து - இருக்கச்செய்து, தாரணியும் - பூமியையும், பின்பு - பிறகு, அங்கு-ஆயர்பாடியில், அளையும் - தயிரையும், இழுதும்-வெண்ணெயையும், உண்டான்-உண்டவனுடைய, அடி-முதன்மையாகிய, பல - அநேகம், பெயர் - திருநாமங்கள், துன்பம்-கிலேசத்தை, களையும்-போக்கும், சனனம்-பிறவியை, களையும் - நீக்கும்,

தொலைவறு - முடிவில்லாத, பேரின்பங்களையும் - ஆனந்தங்களையும், கதிகளையும் - பதவிகளையும், தரும் - கொடுக்கும். எ-று.

"பலபலவே யாபரணம் பேரும் பலபலவே" என ஆழ்வார் கூறியபடியே இவரும் "அடிப்பேர் பலவே" என்றார்.

௬௬. பலகுவளைக்குட்சிலகஞ்சம்போலும்படிவவப்பன்
நலகுவளைக்குமுன்னுண்டானின்மாட்டுநணுகிலனோ
உலகுவளைகருங்கடலேநின்கண்முத்துகுத்திரங்கி
இலகுவளைக்குலஞ்சிந்தித்துஞ்சாயின்றிராமுற்றுமே.

(இ-ள்.) உலகு - உலகத்தை, வளைக்கும் - வளைந்திருக்கின்ற, கடலே - கடலே, நின்கண் - உன்கண், முத்து உகுத்து - முத்தங்களைச்சொரிந்து, இரங்கி - ஒலித்து, இலகு - பிரகாசிக்கின்ற, வளைக்குலம் - சங்குக்கூட்டங்களை, சிந்தி - சிதறி, இன்றிரா - இரவிராத்திரி, முற்றும் - முழுதும், துஞ்சாய் - கண்ணுறங்காய், (ஆதலால்) பல - பலவான, குவளைக்குள் - குவளைமலர்களின் பத்தியில், சில கஞ்சம்போலும் - சிலதாமரைகள் மலர்ந்தனபோல்கின்ற, படிவம் - திருமேனியையுடையை, அப்பன் - சுவாமி, நல - நல்ல, கு - பூமியை, அளைக்குமுன் - வெண்ணெயை உண்பதற்கு முன், உண்டான - உண்டவன், நின்மாட்டு - உன்னிடத்திலே, நணுகிலனோ - சேர்ந்திலனோ. எ-று.

பலகுவளை இறைவனது திருமேனிக்கும் சில கஞ்சம் கைகால் முதலிய அவயவங்களுக்கும் உவமை. கண் என்பது கடலுக்கு இடம் என்றும், தலைமகளுக்கு விழி யென்றும், முத்து என்பது கடலுக்கு ரத்னமென்றும் தலைமகளுக்கு கண்ணீர் என்றும், உகுத்தல் என்பது கடலுக்கு எறிந்து என்றும் தலைமகளுக்கு உதிர்த்து என்றும், இரங்கி என்பது கடலுக்கு ஒலித்து என்றும் தலைமகளுக்கு அழுது என்றும், வளை என்பது கடலுக்குச் சங்கு என்றும் தலைமகளுக்கு வளையல் என்றும், துஞ்சாமை கடலுக்கு அமைதிராமை யென்றும் தலைமகளுக்குத் தூங்காமை என்றும் இருவகையாகப் பொருள் கொள்க. இது தலைமகள் கடலை நோக்கி இரங்கிக் கூறினமையால் கடலொடு புலம்பல் என்னும் துறை.

௬௭. முற்றிலைப்பந்தைக்கழங்கைக்கொண்டோடினை முன்னும்பின்னும்
அற்றிலைதீமையவைபொறுத்தோந்தொல்லையாலினிளங்
கற்றிலைமேற்றுயில்வேங்கடவாவின்றுன்காண்மலரால்
சிற்றிலைத்தீர்த்ததற்குப்பெருவீட்டினைச்செய்தருளே.

(இ-ள்) தொல்லை - பழைய, ஆலின் - ஆலமரத்தினது, இளங்கன்று இலைமேல் - இளந்தளிரின்மேல், துயில் - யோகநித்திரை

செய்யாநின்ற, வேங்கடவா - திருவேங்கடத்தானே, முற்றிலை-சிறு சுளகை, பந்தை - பந்தினை, கழங்கை - கழங்கினை, கொண்டு - எடுத்துக்கொண்டு, ஓடினை - ஓடினாய், முன்னும் - முன்பும், பின்னும்-பிறகும், தீமை-பொல்லாங்குகள், அற்றிலை-ஒழிந்தாயில்லை, அவை-அப்பொல்லாங்குகளை, பொறுத்தோம் - நாங்கள் க்ஷமித்தோம், இன்று - இப்போது, உன் - உன்னுடைய, கால்மலரால் - பாத தாமரையினால், சிற்றிலை - சிறுவீட்டை, தீர்த்தற்கு - சிதைத்தற்காக, பெருவீட்டினை - பெரிய வீட்டை, செய்து - கட்டி, அருள்-கொடுப்பாயாக. எ-று.

"சிற்றில்லை எனற்பாலது சிற்றிலை எனத் தொகுத்தல் பெற்றது. எனது முற்றில் முதலிய வற்றைக்கொண்டு, சிற்றிலையும் அழித்தசற்குப் பரிவர்த்தனையாகப் பெருவீடாகிய முத்தியைத் தந்தருள் என்பது கருத்து, பரிவர்த்தனை பொருளை மாற்றிக்கொள்வது. இது ஓர் அலங்காரம்.

கூஅ. அரும்பாதகன்பொய்யன்காமுகன்கள்வனருள்சிறிதும்
அரும்பாதகன்னெஞ்சனாறுச்சினத்தனவாவினின்றும்
திரும்பாதகன்மத்தனேற்குச்சேடச்சிலம்பமர்ந்த
திரும்பாதகஞ்சந்தரிலதுகாணுன்றிருவருளே.

(இ-ள்.) அரும்பாதகன்-கொடியபாதகனும், பொய்யன்-பொய் பேசுவோனும், காமுகன் - தூர்த்தனும், கள்வன்-திருடனும், அருள்-கிருபை, சிறிதும் - சற்றும், அரும்பாத - உண்டாகாத, நெஞ்சன்-மனத்தனும், ஆறு - தணியாத, சினத்தன் - கோபமுடையவனும், அவாவினின்றும்-ஆசைப் பெருக்கத்தினின்றும், திரும்பாத-மீளாத, கன்மத்தனேற்கு - சன்மத்தையுடையவனுமாகிய வெனக்கு, சேடச்சிலம்பு-சேடமலையின்கண், அமர்ந்து-வீற்றருளி, அதிரும்பாதம் கஞ்சம் - சப்திக்கின்ற பாததாமரையை, தரில் - தந்தால், அது - அதி, உன் உன்னுடைய, திருவருள் - மேலாகிய கிருபையாம். எ-று.

பிறவிக்கும் அப்பிறவிகளில் செய்யும் சகல பாவங்களுக்கும் அவாவே காரணமாதலால், அதனை ஈற்றில வைத்து, அவாவினின்றும் திரும்பாத கன்மனத்தன் என்றார். பிறப்பிற்குக் காரணம் அவா என்பதை "அவாவென்பவெல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்றும் - தவாப் பிறப்பீனும் வித்து" என்னும் திருக்குறளாலுணர்க.

கூகூ. திருமந்திரமில்லைசங்காழியில்லைதிருமணில்லை
தருமந்திரமொன்றுஞ்செய்தறியீர்செம்பொற்றானவனை
மருமந்திரங்கப்பிளந்தான்வடமலைவாரஞ்செல்லீர்
கருமந்திரண்டதையெத்தாற்களையக்கருதுதிரோ.

(இ-ள்.) திருமந்திரமில்லை - திருவட்டாச்கரமில்லை, சங்காழி இல்லை - சங்கு சக்கரலாஞ்சினங்களில்லை, திருமணில்லை - திருமண் காப்பு இல்லை, தருமம் - தருமத்தை, திரம் - நிலையென்று, ஒன்றும்-சிறிதும், செய்தறியீர் - செய்தறியீர், செம்பொன்தானவனை - செம் பொன்னிற முடைய இரணிய கசிபை, மருமம் - மார்பு, இரங்க-வருந்த, பிளந்தான் - பிளந்தவனுடைய, வடமலை வாரம் - வடமலை யினது சாரலினும், செல்லீர்-செல்லமாட்டீர், கருமம் திரண்டதை-திரண்ட கருமத்தை, எத்தால் - எதினால், களைய - நீக்க, கருதிர்-நினைக்கின்றீர்கள். எ-று.

திருமந்திர முதலியவற்றுள் ஒன்றையேனும் மனனஞ்செய் தால் உச்சீவிக்கலாம். அதுவும் செய்திலீர் அன்றி அவனது திருமலை யின் அடிவாரத்திலாயினும் சென்றிலீர். இப்படிப்பட்ட நீங்கள் உங்கள் வினைகளை எந்த உபாயத்தைக்கொண்டு நீக்கக் கருதுகின்றீர் என்பது கருத்து.

௧௦௦. கருமலையுமருந்துங்கண்ணுமாவியுங்காப்புமவன்
தருமலையுந்தியபேரின்பவெள்ளமுந்தாய்தந்தையும்
வருமலையுந்திருப்பாலாழியுந்திருவைகுந்தமும்
திருமலையுமுடையானெனக்கீந்ததிருவடியே.

(இ-ள்.) வரும் - வாராநின்ற, மலையும் - திருக்கடன்மல்லையும், திருப்பாலாழியும் - திருப்பாற்கடலும், வைகுந்தமும் - பரமபதமும், திருமலையும் - திருவேங்கடமும், உடையான் - உடையவன், எனக் கீந்த - எனக்கருளிய, திருவடியே - திருவடிகளே, கரு-கருப்பத்தை, மலையும் - கெடுக்கின்ற, மருந்தும் - ஔஷதமும், கண்ணும் - நேத் திரமும், ஆவியும் - உயிரும், காப்பும் - இரட்சிப்பும், அவன்றரும்-அவன் தருகின்ற, அலை - திரைகளை, உந்திய-எறியாநின்ற, பேரின்ப வெள்ளமும் - பேரானந்தப் பெருக்கும், தாய் - அன்னையும், தந்தை தையும் - பிதாவுமாம். எ-று.

"கண்ணனல்லாலில்லை கண்டீர் சரணது நிற்கவந்து
மண்ணின் பாரம் நீக்குதற்கே வடமதுரைப் பிறந்தான்
திண்ணமாநும் முடைமையுண்டேலவனடி சேர்ந்துய்ம்மினோ
எண்ணவேண்டா நும்மதாது மவனன்றி மற்றில்லையே."

என மேலோர் கூறியபடியே இவரும் கூறினார்.

மட்டளைதண்டலைசூழ்வடவேங்கடவாணனுக்குத்
தொட்டளையுண்டபிரானுக்கன்பாம்பட்டர்தூயபொற்றா
ளட்டளையுண்டமணவாளதாசனுகந்துரைத்த
கட்டளைசேர்திருவந்தாதிநூறுகலித்துறையே.

திருவேங்கடத்தந்தாதி முற்றிற்று.

ஸ்ரீ

நம்மாழ்வார் துணை.

திருமாலிருஞ் சோலைமலை

அழகரந்தாதி.

தனியன்.

திருகவிமங்கைமணவாளவள்ளல்செந்தேன்றுளித்து
முருகவிழ்தென்றிருமாலிருஞ்சோலைமலைமுகுந்தற்
கிருகவின்றாள்களிற்சூடுமந்தாதியினீரைம்பதில்
ஒருகவிகற்கினுஞானமும்வீடுமுதவிடுமே.

(இ-ள்.) திரு - செல்வமானது, கவி - நிறைந்த, மங்கை - திருமங்கையென்னும் ஊரில் அவதரித்த, மணவாளவள்ளல் - மணவாளர் என்னும் வள்ளலானவர், செந்தேன் துளித்து-செவந்ததேனைச் சிந்தி, முருகு அவிழ் - வாசனைவீசுகின்ற, தென் - அழகாகிய, திருமாலிருஞ் சோலைமலை-திருமாலிருஞ்சோலைமலையி லெழுந்தருளிய, முகுந்தற்கு-முகுந்தனுக்கு, இருகவின்தாள்களில் - இரண்டாகிய அழகிய திருவடிகளில், சூடும் - சமர்ப்பிக்கிற, அந்தாதியின் - அந்தாதியின்கணுள்ள, ஈரைம்பதில் - நூறு கவிகளுள், ஒரு கவிகற்கினும் - ஒரு கவியைக்கற்றாலும், (அந்தக்கல்வி) ஞானமும் - மெய்ஞ்ஞானத்தையும், வீடும் - மோக்ஷத்தையும், உதவிடும் - கொடுக்கும். எ-று.

திருகவி என்பதற்கு செல்வத்தால் மூடப்பெற்ற என்றுரைத்தலும் கூடும். எல்லாச்செல்வத்தினுஞ் சிறந்த மோக்ஷசாம்ராஜ்யத்தைக் கொடுத்தற்குரிய கவிகளை வரையாது வழங்கினமையால் வள்ளல் என்றார். முகுந்தன் என்றது அழகனை. இந்த அழகரந்தாதியிலுள்ள நூறு செய்யுளுள் ஒரு செய்யுளைக்கற்கினும் அந்தக்கல்வியால் ஞானமும், ஞானத்தால் மோக்ஷமும் உண்டாமென்பது கருத்து.

காப்பு.

அங்கத்தமிழ்மறையாயிரம்பாடியளித்துலகோர்
தங்கட்குவீடருளும்புருடோத்தமன்றண்வகுளத்
தொங்கற்பராங்குசன்றாளிணைமாலிருஞ்சோலைமலைச்
சங்கத்தழகரந்தாதிநடாத்தத்தலைக்கொள்வனே.

(இ - ள்.) மாலிருஞ்சோலைமலை - திருமாலிருஞ்சோலைமலையி லெழுந்தருளின, சங்கத்து - ஸ்ரீ பாஞ்சஜந்யத்தையுடைய, அழகர் - அலங்காரர் விஷயமாகப் பாடப்பட்ட, அந்தாதி - அந்தாதியென்னும் பிரபந்தத்தை, நடாத்த - நடத்தும்பொருட்டு, அங்கம் - ஆறங்

கங்களையுடைய, தமிழ் மறை-தமிழ்வேதத்தை, ஆயிரம்பாடி-ஆயிரம் பாடலாகப்பாடி, அளித்து - கொடுத்து, உலகோர்தங்கட்கு - உலகத்தார்க்கு, வீடு அருளும் - மோக்ஷத்தைத் தருகின்ற, புருடோத்தமன்-புருஷ சிரேஷ்டரும், தண் - குளிர்ச்சியாகிய, வகுளத்தொங்கல்-மகிழமலர் மாலையையணிந்த, பராங்குசன்-பராங்குசன் என்னுந் திருநாமத்தையுடையவருமாகிய நம்மாழ்வாருடைய, தாள் இணை - திருவடியிணையை, தலைக்கொள்வென் - சிரசாவஹிப்பேன். எ-று.

சங்கத்தழகர் என்பதற்கு தமிழ்ச்சங்கத்தைச் சார்ந்திருந்த அழகர் எனினுமாம். தமிழ்மறையென்றது திருவாய்மொழியை, இதற்கு அங்கமாவன திருமங்கைமன்னன்:—செய்தருளின திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறியதிருமடல், பெரியதிருமடல் என்னும் பிரபந்தங்கள் ஆறுமாம். பராங்குசன்-பர சமயங்களாகிய யானைகளை வணக்குதற்கு அங்குசம் போல்பவன்.

நூல்.

க. நீராழிவண்ணனைப்பாலாழிநாதனைநின்மலனைச்
சீராழியங்கைத்திருமகள்கேள்வனைத்தெய்வப்புள்ளூர்
கூராழிமாயனைமாலலங்காரனைக்கொற்றவெய்யோன்
ஓராழித்தேர்மறைத்தானையெஞ்ஞான்றுமுரைநெஞ்சமே.

(இ-ள்.) நெஞ்சமே - மனமே, நீர்-நீர்ச்செறிவையுடைய, ஆழி-கடலினது, வண்ணனை - நிறத்தையுடையவனை, பால் ஆழிநாதனை-திருப்பாற்கடனாதனை, நின் மலனை - நிர்மலனானவனை, சீர் - சிறப்பையுடைய, ஆழி - மோதிரமணிந்த, அம்கை - அழகாகிய கை விரலையுடைய, திருமகள் கேள்வனை - லக்ஷ்மீநாதனை, தெய்வம் - தெய்வத்தன்மையமைந்த, புள் - பெரிய திருவடியை, ஊர் - ஏறிநடத்துகிற, கூர் ஆழி - கூர்மையாகிய திருச்சக்கரத்தையுடைய, மாயனை - ஆச்சரிய குணசேஷ்டிதங்களையுடையவனை, மால் அலங்காரனை - பெருமைபொருந்திய அழகனை, கொற்றம் - வெற்றியையுடைய, வெய்யோன் - சூரியனது, ஓர் ஆழி - ஒற்றைச்சக்கரத்தையுடைய, தேர்-தேரை, மறைத்தானை - (பாரதயுத்தத்தில்) மறைத்தவனை, எஞ்ஞான்றும் - எந்நாளும், உரை - துதிசெய். எ-று.

நின்மலன் - மலரஹிதன் (களங்கமற்றவன்). உருவத்தாற்பறவையாயினும் நித்ய சூரிகளிலொருவராதலால் தெய்வப்புள் என்றார்.

உ. உரைமாற்றமுண்டென்பொறியைந்துமுன்னிடத்தன்றியுண்ணும்
இரைமாற்றவேண்டுமிதுவேயென்விண்ணப்பமென்னப்பனே
உரைமாற்றளவற்றபொன்னுடுத்தாய்வில்லெடுத்திலங்கை
வரைமாற்றலரைச்செற்றாயழகாகருமாணிக்கமே.

(இ-ள்.) என் அப்பனே - என் தந்தையே, உமைமாற்று-உரைத்து நோக்குகின்றமாற்றானது, அளவு அற்ற - அளவுகடந்த, பொன்-பொன்னாடையை, உடுத்தாய்-உடுத்தவனே, வில் - கோதண்டத்தை, எடுத்து - கையிலேந்தி, இலங்கைவரை - இலங்கைமலையிலுள்ள, மாற்றலரை - பகைவரை, செற்றாய் - வென்றவனே, அழகா - அழகனே, கருமாணிக்கமே-கரு மாணிக்கம்போல்பவனே, உரைமாற்றம் உண்டு-(அடியேன்) சொல்லுதற்குரிய சொல் ஒன்றுளது, (அது யாதெனின்) என் பொறி ஐந்தும் - என் ஐம்பொறிகளும், உன் இடத்து அன்றி - உன்னிடத்தேயன்றி, உண்ணும் இரை - உண்ணுகிற (விஷயங்களாகிய) ஆகாரத்தை, மாற்றவேண்டும்-நீக்கவேண்டும், என்விண்ணப்பம் இதுவே - என்விண்ணப்பம் இதுதான். எ-று.

இலங்கைவரை - சுவேலாபர்வதம். மாற்றலர் - ராவணகும்பகர்ணாதிகள். ஐம்பொறி - பஞ்சேந்திரியங்கள், அவை மெய் வாய் கண் மூக்கு செவி என்பன. இவற்றுக்கு விஷயங்கள் முறையே ஊறு சுவை ஒளி நாற்றம் ஓசை என்பன.

௩. மாணிக்கநகம்புரைமேனிமாலுக்குவார்சடையோன்
பாணிக்கனகம்பலியொழித்தானுக்குப்பச்சைத்துழாய்
ஆணிக்கனகமுடியலங்காரனுக்கண்டமெல்லாம்
பேணிக்கனகனுக்குப்பித்தரானவர்பித்தரன்றே.

(இ-ள்.) மாணிக்கநகம்புரை-மாணிக்கமலையை நிகர்த்த, மேனி-திருமேனியையுடைய, மாலுக்கு - திருமாலுக்கு, வார்சடையோன்-நீண்டசடையை யுடையவனாகிய ருத்ரனது, பாணி - கையிற்பற்றிய, கனம் கம் - பளுவாகிய தலையோட்டிலிரக்கின்ற, பலி - பிச்சைத்தொழிலை, ஒழித்தானுக்கு - நீக்கினவனுக்கு, பச்சை துழாய் - பசுமையாகிய திருத்துழாய் மாலையையணிந்த, ஆணி கநகம் - ஆணிப்பொன்னாற்செய்யப்பட்ட, முடி - திருமுடியையுடைய, அலங்காரனுக்கு-அழகனுக்கு, அண்டம் எல்லாம் பேணிக்கு - அண்டங்கள் எல்லாவற்றையும் காப்பவனுக்கு, அநகனுக்கு - தோஷரஹிதனுக்கு, பித்தர் ஆனவர் - பித்தராயினவர், பித்தர் அன்று - பித்தரல்லர். எ-று.

இறைவன் விஷயத்திலுள்ள பித்தானது நற்கதியை யடைவிக்குமாதலால் அந்தப் பித்தேறினவரைப் பித்தரன்று என்றார்.

௪. பித்தரும்பாகின்றநெஞ்சனைவஞ்சனைப்பேருலகோர்
கைத்தரும்பாவியெனுங்கடையேனைக்கடைக்கணியாய்
முத்தரும்பாருந்தொழுமழகாவண்டுமூசுந்துழாய்ப்
புத்தரும்பார்முடியாயடியாரைப்புரப்பவனே.

(இ-ள்.) முத்தரும் - முத்தாத்மாக்களும், பாரும் - உலகத்தி லுள்ளவரும், தொழும் - வணங்குகின்ற, அழகா - அலங்காரனே, வண்டு மூசும் - வண்டுகள் மொய்க்கின்ற, துழாய் - திருத்துழாயின், புது அரும்பு - புதிய அரும்புகள், ஆர் - பொருந்திய, முடியாய் - திருமுடியையுடையவனே, அடியாரை புரப்பவனே-அடியவர்களைரக்ஷிப்பவனே, பித்து அரும்பாநின்ற - பித்துண்டாகின்ற, நெஞ்சனை-மனத்தையுடையவனை, வஞ்சனை - வஞ்சகத்தையுடையவனை, பேர் உலகோர் - பெரியவுலகத்தார், கைத்து - வெறுத்து, அரும்பாவி என்னும் - நீக்குதற்கரிய பாவத்தையுடையவனென்று சொல்லுதற்குரிய, கடையேனை - கடைஞனாகிய என்னை, கடைக்கணியாய் - கடாக்ஷித்தருள்வாய். எ-று.

பித்தரும்பாநின்ற நெஞ்சனும் வஞ்சகனும் அரும்பாவியுமாகிய என்னை நீ கடைக்கணித்தாலன்றி உஜ்ஜீவிக்கமாட்டேன் என்பது கருத்து.

௫. புரந்தரனாமெனப்பூபதியாகிப்புகர்முகமா
துரந்தரசாளிலென்னல்குரவாகிலென்றொல்புவிக்கு
வரந்தரமாலிருஞ்சோலைநின்றார்க்கென்மனத்தினுள்ளே
நிரந்தரமாயலங்காரர்க்கிங்காட்பட்டுநின்றபின்னே.

(இ-ள்.) தொல்புவிக்கு - பழமையாகிய பூமியிலுள்ளவர்க்கு, வரம்தர - வரங்கொடுக்கும்பொருட்டு, மாலிருஞ்சோலை நின்றார்க்கு-திருமாலிருஞ்சோலைமலையில் நின்றவர்க்கு, என்மனத்தின் உள்ளே-என்னெஞ்சுக்குள்ளே, நிரந்தரம் ஆய்-எப்பொழுதும், அலங்காரர்க்கு-அழகருக்கு, இங்கு-இவ்விடத்தில், ஆட்பட்டுநின்றபின் - அடிமைப்பட்டு நின்றபிறகு, புரந்தரன் ஆம் என - இந்திரனென்றுசொல்லும்படி, பூபதி ஆகி - உலகத்துக்கு அரசனாகி, புகர் - புள்ளிகளுள்ள, முகம் - முகத்தையுடைய, மா - யானையை, துரந்து - நடத்தி, அரசு ஆளில் என் - அரசாண்டா லென்னலாபம், நல்குரவு ஆகில் என்-தரித்திரமுண்டானாலென்ன நஷ்டம். எ-று.

அழகருக்காட்பட்டபிறகு எனக்குச் செல்வமும் வறுமையும் சமமென்பது கருத்து.

௬. நின்றபிரானன்கழலுமுன்னேநெஞ்சமேநினையாய்
சென்றபிராயம்வம்பேசென்றதாற்றிருமங்கைகொங்கை
துன்றபிராமனைச்சுந்தரத்தோளனைத்தோளின்மல்லைக்
கொன்றபிரானையடைந்தடியாரொடுங்கூடுகைக்கே.

(இ-ள்.) நெஞ்சமே - மனமே, சென்றபிராயம் - கழிந்தபிராயம், வம்பேசென்றதால்-வீணேகழிந்ததனால், (இனியாயினும்) நின்ற

பிராணன் - சரீரத்தில் நின்ற உயிரானது, கழலுமுன்னே - நீங்கு முன்னே, திருமங்கைகொங்கை-திருமகள் தனங்களை, துன்று-பொருந்துகின்ற, அபிராமனை - அழகனை, சுந்தரம்தோளனை - அழகாகிய தோள்களையுடையவனை, தோளின் - புஜபலத்தால், மல்லைகொன்ற- மல்லர்களைக்கொன்ற, பிரானை-உபகாரகனை, அடைந்து-ஆசிரயித்து, அடியாரொடும் கூடுகைக்கு - அவனடியாரோடு சேர்வதற்கு, நினையாய் - கருதுவாய். எ-று.

அபிராமம் - அழகு. மல்லர்-சாணூரன் முஷ்டிகன் என்பவர். இவர்கள் கம்ஸனால் ஏவப்பட்டுவந்தவர்கள். இவர்களைக்கொன்றது கிருஷ்ணவதாரத்தில். எ-று.

எ. கூடுகைக்குஞ்சரமத்தடியேற்குக்கொடியவஞ்சம்
சாடுகைக்குஞ்சரணந்தரவேண்டுந்தடத்தழுந்தி
வாடுகைக்குஞ்சரங்காத்தீர்விண்வாழ்கைக்கும்வாளரக்கர்
வீடுகைக்குஞ்சரங்கோத்தீர்விடைவெற்பின்வித்தகரே.

(இ-ள்.) தடத்து - மடுவில், அழுந்திவாடு - மூழ்கிவருந்தின, கை-துதிக்கையையுடைய, குஞ்சரம் - யானையை, காத்தீர் - ரக்ஷித்தருளினவரே, விண்வாழ்கைக்கும் - விண்ணுலகத்தார் வாழ்தற்பொருட்டும், வாள் அரக்கர் வீடுகைக்கும் - வாளையுடைய அரக்கர் இரத்தற்பொருட்டும், சரம்கோத்தீர் - அம்பைவில்லில் தொடுத்தவரே, விடைவெற்பின் - இடபகிரியிலெழுந்தருளின, வித்தகரே - ஞானசொரூபரே, கூடு - சரீரத்தை, கைக்கும் - (உயிரானது) வெறுத்து நீங்குகின்ற, சரமத்து - சரமதசையில், அடியேற்கு - அடியேனாகிய எனக்கு, கொடியவஞ்சம் சாடுகைக்கு-கொடுமையாகிய வஞ்சக எண்ணங்களை அடித்துத்தள்ளுதற்கு, உம் - உம்முடைய, சரணம் தரவேண்டும் - திருவடிகளைத் தந்தருளவேண்டும். எ-று.

குஞ்சரம் என்றது கஜேந்திராழ்வானை. விடைவெற்பு என்றது திருமாலிருஞ் சோலைமலையை. சரமம்-அந்தியகாலம்.

அ. வித்தகரும்பர்க்கரசானவனும்விதியுங்கங்கை
மத்தகரும்பரவும்மலங்காரர்மழைகொண்டகார்
ஒத்தகரும்பரஞ்சோதியர்நாமமுரைத்தன்னைமீர்
இத்தகரும்பரதெய்வமுங்கூத்தும்விட்டேத்துமினே.

(இ-ள்.) அன்னைமீர் - தாய்மார்களே, இ தகரும் - இந்த ஆட்டையும், பரதெய்வமும் - இதரதெய்வத்தையும், கூத்தும்-கூத்தாடலையும், விட்டு ஒழித்து, வித்தகர்-ஞானசொரூபரும், உம்பர்க்கு அரசு ஆனவனும் - தேவர்க்கரசனான இந்திரனும், விதியும் - பிரமனும், கங்கை மத்தகரும் - கங்கையைத்தரித்த சிரசையுடைய ருத்ரமூர்த்தி

யும், பரவும்-துதிக்கின்ற, மால் அலங்காரர் - திருமாலாகிய அழகரும், மழைகொண்ட - நீரைக்கொண்ட, கார் ஒத்த - மேகம்போன்ற, கரு- கருமையாகிய, பரம்சோதியர்-பரஞ்சோதியாயிருப்பவருமாகிய இறைவரது, நாமம் உரைத்து - திருநாமங்களைச்சொல்லி, ஏத்துமின் - துதி செய்யுங்கள்.

பரம்சோதி - மேலான ஒளி. கூத்து என்றது வெறியாடலை. இது வெறிவிலக்கல் என்னுந்துறை. அதாவது தலைமகள் மையல் கொண்டு வாடுவதைக்கண்ட தாய்மார் இவள் யாதோ தெய்வாவேசங் கொண்டாளென்று கருதி, அதைப் பரிகரிக்க வேலனைக்கூவி வெறியாடல் ஆடறுத்தல் முதலியவற்றைச் செய்யப்புக, தோழி இவற்றாற் பயனில்லை, அழகரது திருநாமங்களை உச்சரித்தால் இந்நோய் நீங்கும் என வெறியாடலைத்தடுத்தல்.

கூ. **ஏத்துமின்பத்தியினலெட்டெழுத்துமிணையடிக்கே**
சாத்துமின்பத்திரத்தண்ணந்துழாய்மதிதாங்கிக்கஞ்சம்
பூத்துமின்பத்திசெயும்பச்சைமாமுகில்போலழகர்
காத்துமின்பத்திலிருத்தியும்வைப்பர்கருணைசெய்தே.

(இ-ள்.) பத்தியினால் - பக்தியோடு, எட்டு எழுத்தும் - எட்டெழுத்தையும், ஏத்துமின் - உச்சரியுங்கள், இணை அடிக்கு - இரண்டு திருவடிகளிலும், பத்திரம்-இலையாகிய, தண் அம் துழாய் - குளிர்ந்த அழகிய திருத்துழாயை, சாத்துமின்-சமர்ப்பியுங்கள், (இப்படிச்செய்வீர்களாயின்) மதிதாங்கி - பூர்ணசந்திரனைச்சுமந்து, கஞ்சம்பூத்து- தாமரைமலர்களைப்பூத்து, மின்-மின்னல்கள், பத்திசெய்யும்-வரிசையாயிருக்கிற, பச்சைமாமுகில்போல் - பசுமையாகிய பெரியமேகம் போல்கின்ற, அழகர் - அலங்காரர், கருணைசெய்து - கிருபைபண்ணி, காத்தும்-(உங்களை) ரக்ஷித்தும், இன்பத்தில்-பேரின்பத்தில், இருத்தியும் வைப்பர் - இருத்தியும் வைப்பார். எ-று.

எட்டெழுத்து திரு அஷ்டாக்ஷரம். பத்திரம்-சுபத்தைத்தருகிற எனினும் பொருந்தும். மதி முகத்தையும், கஞ்சம் கைகால் முதலிய அவயவங்களையும், மின் திருவாபரணங்களையும், பச்சைமாமுகில் திருமேனியையும் குறித்தன.

௯௦. **செய்தவராகவருந்தியுந்தீர்த்தத்துறைபடிந்தும்**
கைதவராகமங்கற்றுமென்னுங்கடற்பார்மருப்பில்
பெய்தவராகனைமாலலங்காரனைப்பேரிலங்கை
எய்தவராகவவென்றேத்தநீங்குமிருவினையே.

(இ-ள்.) செய்தவர் ஆக - செய்கின்றதவத்தினையுடையவராகி, வருந்தியும்-(உடலுள்ளங்கள்) வருந்தியும், தீர்த்தம் துறைபடிந்தும்- புண்ணியதீர்த்தத்துறைகளில் மூழ்கியும், கைதவர் - வஞ்சகருடைய,

ஆகமம் - ஆகமங்களை, கற்றும்-படித்தும், என் ஆம் - என்னபயனுண்டாகும், (மற்றென்னெனின்) கடல்பார் - கடல்சூழ்ந்த பூமியை, மருப்பில்பெய்த - கொம்பில் ஏந்திய, வராகனை - வராகாவதாரத்தையுடையவனை, மால் அலங்காரனை - பெருமையுள்ள அழகனை, பேர் இலங்கை - பெரிய இலங்கைப்பட்டணத்தை, எய்தவ - அம்பெய்து வென்றவனே, ராகவ-ராகவனே, என்று ஏத்த - என்றுதுதிக்க, இருவினை நீங்கும் - இருவினைகள் ஒழியும். எ-று.

தீர்த்தம் இவ்விடத்தில் நதியைக்குறித்தது. இருவினை - புண்ணியபாவங்கள். இருவினைநீங்கவே இவற்றாலுண்டாகிற பிறவியுமொழியுமென்றதாயிற்று.

௧௧. வினைக்குமருந்தரிக்கும்பிணிமூப்புக்கும்வீகின்றவே
தனைக்குமருந்தன்னதாளழகாசெய்யதாமரையங்
கனைக்குமருந்தமுதேயருளாய்நின்னைக்காதலித்து
நினைக்குமருந்ததிதன்னுயிர்வாழ்க்கைநிலைபெறவே.

(இ-ள்.) வினைக்கு - இருவினைகளை யொழித்தற்கு, மருந்து - மருந்தையும், அரிக்கும் - உடம்பைக்கெடுக்கின்ற, பிணிமூப்புக்கும் - நோய்முதுமைகளுக்கும், வீகின்ற வேதனைக்கும் - இறக்கின்றதுன்பத்துக்கும், மருத்து - யமனையும், அன்ன ஒத்த, தாள் - திருவடியையுடைய, அழகா - அழகனே, செய்யதாமரை - செந்தாமரைமலரிலெழுந்தருளியிருக்கிற, அங்கனைக்கும்-திருமகளுக்கும், அருந்து அமுதே - உண்ணுதற்குரிய அமிர்தமே, நின்னை-உன்னை, காதலித்து-விரும்பி, நினைக்கும் - நினைக்கின்ற, அருந்ததிதன் - அருந்ததிபோல்வாளுடைய, உயிர்வாழ்க்கை - உயிர்வாழ்வானது, நிலைபெற - நிலைபெறும்படி, அருளாய் - கிருபைசெய்யவேண்டும். எ-று,

அங்கனை-பெண். இது தாய்க்கூற்று. மருத்து வலித்தல்.

௧௨. நிலையாமையானவுடலுமுயிருநினைவுந்தம்மில்
கலையாமயானங்கலக்குமுன்னேகங்கைகவைத்தசடைத்
தலையாமையானன்றாமரையான்றொழுந்தாளழகன்
அலையாமையானவன்மாலிருஞ்சோலையடைநெஞ்சமே.

(இ-ள்.) நெஞ்சமே - மனமே, நிலையாமை ஆன - நிலையாமையுள்ள, உடலும் - உடம்பும், உயிரும் - பிராணனும், நினைவும்-எண்ணமும், தம்மில் கலையா - தம்நிலையினின்றுங் கலைந்து, மயானம் கலக்கு முன்னே - மயானத்தையடைவதற்குமுன்பே, கங்கைவைத்த-கங்கையைத்தரித்த, சடைத்தலை ஆம்-சடையோடுகூடிய சிரங்களையுடைய, ஐயானகன் - ஐம்முகனாகிய ருத்ரமூர்த்தியும், தாமரையான் - கமலாசனனாகிய பிரமனும், தொழும் - தொழுகின்ற, தாள் - திருவடியை

யுடைய, அழகன் - அலங்காரனும், அலை - திருப்பாற்கடலில், ஆமை ஆனவன் - கூர்மாவதாரமெடுத்தவனுமாகிய இறைவனது, மாலிருஞ்சோலை-திருமாலிருஞ்சோலைமலையை, அடை-சேர். எ-று.

ஆநநம்-முகம். ஐயாநநன் - ஐந்துமுகங்களையுடையவன்.

கங. **நெஞ்சமுருக்குமுயிருக்குந்தொல்லைநீள்வினையின்**
வஞ்சமுருக்கும்பவமுருக்கும்வண்டுழாயழகர்
கஞ்சமுருக்குமலர்வாய்த்திருநண்பர்கஞ்சனுக்கு
நஞ்சமுருக்கும்வளையாழியன்னவர்நாமங்களே.

(இ-ள்.) வள்துழாய் - வளவிய திருத்துழாய்மாலையையணிந்த, அழகர்-அலங்காரரும், கஞ்சம் - தாமரைமலரில்வீற்றிருக்கிற, முருக்குமலர்வாய் - முருக்கம்பூவைநிகர்த்த வாயையுடைய, திரு - திருமகளுக்கு, நண்பர்-நாயகரும், கஞ்சனுக்கு - கம்ஸனுக்கு, நஞ்சம்-விஷத்தைநிகர்த்தவரும், உரு-வடிவத்தால், கு-பூமியை, வளை-வளைந்த, ஆழி அன்னவர் - கடலையொத்தவருமாகிய இறைவரது, நாமங்கள் - திருநாமங்கள், நெஞ்சம் உருக்கும் - மனத்தையுருகப்பண்ணும், உயிர் உருக்கும் - உயிரையுருகப்பண்ணும், தொல்லை - பழமையாகிய, நீள்வினையின் - நீண்டவினைகளாலாகிய, வஞ்சம் - வஞ்சககுணங்களை, முருக்கும்-அழிக்கும், பவம்-பிறவியை, முருக்கும்-அழிக்கும். எ-று.

இது நாமங்கள் நெஞ்சமுருக்குதல் முதலியவற்றைச் செய்யுமெனத் திருநாமோச்சாரணபலஞ் சொல்லிற்று. நான்காமடியிலுள்ள உருக்குவளை ஆழியன்னவர் என்பதற்கு, வடிவத்தால் குவளைமலரையும் கடலையும் நிகர்த்தவர் என்றுரைத்தலும் பொருந்தும்.

கச. **நாமங்களாவிநழுவுந்தனையுநவின்றவரைத்**
தாமங்களாவிமனத்துள்வைப்பார்தண்டலையினகில்
தூமங்களாவிமணநாறுமாலிருஞ்சோலையன்பர்
சேமங்களாவின்கனியனையார்பதஞ்சேருவரே.

(இ-ள்.) நாமங்கள் - திருநாமங்களை, ஆவிநழுவும்தனையும் நவின்று-பிராணன் உடம்பை நீங்குமளவும்சொல்லி, அவரை - அவரை, தாம்-தாம், அங்கு அளாவி - அவ்விடத்தடைந்து, மனத்துள்வைப்பார்-மனத்தில்வைப்பவர்கள், தண்டலையின் அகில் தூமங்கள்-சோலைகளிலுள்ள அகிற்கட்டைகளின் புகைகளும், ஆவி - தடாகங்களும், மணம்நாறும்-மணம்வீசுகின்ற, மாலிருஞ்சோலை-திருமாலிருஞ்சோலைமலையில், அன்பர் - விருப்பமுடையவரும், சேமம்-இன்பத்தைத்தருகிற, களாவின்கனி அனையார் - களாக்கனியை நிகர்த்தவருமாகிய இறைவரது, பதம் - திருவடியை, சேருவர்-அடைவார்கள். எ-று.

ஆவிமணநாறுதல் தாமரைமுதலிய மலர்களால் எனக்கொள்க. சேமம்-உயிர்க்காவலாயிருப்பவர் எனினுமமையும்.

கரு. சேராதகாதநரகேழ்தலைமுறைசேர்ந்தவர்க்கும்
வாராதகாதம்வசைபிணிபாவமறிகடன்முன்
தூராதகாதங்கடூர்த்தானைமாலிருஞ்சோலையிற்போய்
ஆராதகாதலுடன்பணிவீரென்னழகனையே.

(இ-ள்.) மாலிருஞ்சோலையிற்போய் - திருமாலிருஞ்சோலைமலையிற்சென்று, மறிகடல் - அலைகள் மறிந்துவிழுகின்ற கடலில், முன்-முற்காலத்தில், தூராதகாதங்கள் - தூர்க்கப்படாத காதங்களளவும், தூர்த்தானை-தூர்த்தவனை, என் அழகனை-என் அலங்காரனை, ஆராத காதலுடன்-அமையாத அன்புடனே, பணிவீர்-வணங்குங்கள், (வணங்கினால்) ஏழ்தலைமுறைசேர்ந்தவர்க்கும்-ஏழுதலைமுறையில் உம்மைச் சார்ந்தவர்க்கும், அகாதம் நரகுசேராது - ஆழமாகிய நரகம் உம்மைத் தொடராது, அகாதம்-வஞ்சகமும், வசை - பழிப்பும், பிணி-நோயும், பாவம் - பாவமும், வாராது - உண்டாகாது. எ-று.

தகாதவசையெனப் பாடமோதி தகுதியில்லாதவசையென்றுரைத்தலும் உண்டு நரகுசேராது எனினும் பணிந்தவர் நரகையடையாரென்பதே கருத்து. ஏழ்தலைமுறை சேர்ந்தவர்க்கும் நரகு முதலியவையுளவாகாவெனவே பணிந்தவர்க்குண்டாகும் பயன்சொல்லவேண்டாவாயிற்று.

கசு. அழக்கன்றியகருங்கண்ணிக்குக்கண்ணியளித்திலரேல்
வழக்கன்றிமுன்கொண்டவால்வளைகேளுமறுத்ததுண்டேல்
குழக்கன்றின்பின்குழலூதலங்காரர்க்குக்கோதைநல்லீர்
சழக்கன்றில்வாய்பிளந்தாலுய்யலாமென்றுசாற்றுமினே.

(இ-ள்.) கோதை - பூமாலையையணிந்த, நல்லீர் - மாதர்களே, அழ-அழுதலால், கன்றிய - கன்றின, கருகண்ணிக்கு - கருமையாகிய கண்களையுடையவளாகிய என்பெண்ணுக்கு, கண்ணி அளித்திலரேல்-தமது மாலையைக்கொடாராயின், வழக்கு அன்றி - வழக்கல்லாமல், முன்கொண்ட - முன்னேகவர்ந்துகொண்ட, வால்வளை - வெண்மையாகிய சங்கவளையலை, கேளும் - கேளுங்கள், மறுத்தது உண்டேல்-தடுத்ததுண்டானால், சழக்கு-குற்றத்தையுடைய, அன்றில்வாய்-அன்றிற்பறவையின் வாயை, பிளந்தால்-கிழித்தால், உய்யல் ஆம் என்று-பிழைக்கலாமென்று, குழக்கன்றின்பின்-இளமைபொருந்திய கன்றுகளின்பின்னே, குழல் - வேய்ங்குழலை, ஊது - ஊதின, அலங்காரர்க்கு - அழகருக்கு, சாற்றுமின் - சொல்லுங்கள். எ-று.

அன்றிலுக்குச் சழக்காவது தனிமையாயிருக்கிற மாதரை வருத்துதல். இதுதாய்க்கூற்று.

௬௭. சாற்றுக்கரும்பனைக்கூற்றென்னுமாசைத்தமிழ்மலயக்
காற்றுக்கரும்பனையுங்கண்படாளலங்காரற்கண்டர்
ஏற்றுக்கரும்பனையகொங்கையாள்கொண்டவின்னலுக்கு
மாற்றுக்கரும்பனையல்லாதுவேறுமருந்தில்லையே.

(இ-ள்.) சாறு - ரசத்தையுடைய, கரும்பனை - கரும்புவில்லையுடைய மன்மதனை, கூற்று என்னும் - யமனென்று சொல்லுகிறாள், ஆசை - யாவருக்கும் விருப்பத்தையுண்டாக்குகிற, தமிழ்-தமிழ்க்குப்பிறப்பிடமான, மலயம் - பொதியமலையிலுண்டான, காற்று-தென்றற்காற்றானது, உக்கு அரும்பல் - சிதறிவீசுதலுக்கு, நையும்-வருந்துவாள், கண்படாள் - உறங்காள், அலங்காரற்கு - அழகன் பொருட்டு, அண்டர் ஏற்றுக்கு - தேவர்களுள் ஆண்சிங்கத்தையொத்தவன்பொருட்டு, அரும்பு அனைய-தாயமாயரும்பை நிகர்த்த, கொங்கையாள் - தனங்களையுடையவளாகிய என் பெண், கொண்ட இன்னலுக்கு - கொண்டதுன்பத்துக்கு, மாற்று - பரிஹாரமானது, கருபனை அல்லாது-கரியபனைமடலூர்தலன்றி, வேறுமருந்து இல்லை-வேறு ஔஷதமில்லை. எ-று.

இது செவிலித்தாய்க்கூற்று. மடலே பொருளெனமதித்தல் என்னுந்துறை.

௬௮. மருந்துவந்தார்தொழுமாலிருஞ்சோலைமலையழகர்
அருந்துவர்தாரணியென்றயின்றாரடலாயிரவாய்ப்
பொருந்துவந்தார்டணிப்பாயார்விதுரன்புதுமனையில்
விருந்துவந்தாரடியார்க்கில்லைநோயும்வெறுமையுமே.

(இ-ள்.) மருந்து - அமிர்தத்தை, உவந்தார் - விரும்பியுண்ட தேவர்கள், தொழும் - வணங்குகின்ற, மாலிருஞ்சோலைமலை - திருமாலிருஞ் சோலைமலையிலெழுந்தருளியிருக்கிற, அழகர் - அலங்காரர், தாரணி - பூமியை, அருந்துவம் என்று - உண்போமென்று, அயின்றார்-உண்டவர், அடல்-வலிமையுள்ள, ஆயிரவாய்பொருந்து-ஆயிரம்வாய்களைப் பொருந்திய, வந்து ஆர் - காற்றைப்புசிக்கிற, பணி - பாம்பாகிய, பாயார் - படுக்கையையுடையவர், விதுரன்-விதுரனாழ்வானுடைய, புதுமனையில் - புதியவீட்டில், விருந்துவந்தார்-விருந்தாகவந்தவர், (அவருடைய) அடியார்க்கு - தொண்டருக்கு, நோயும்-பிணியும், வெறுமையும்-தரித்திரமும், இல்லை-இல்லை. எ-று.

பணி யென்றது திருவநந்தாழ்வானை.

௬௯. வெறுத்தவராக்கஞ்சனைச்செற்றுளார்விடைவெற்பர்வெங்கண்
கறுத்தவராக்கஞ்சலென்றுவந்தார்கனகாம்பரத்தைப்
பொறுத்தவராக்கஞ்சமேனிக்காவிபுலர்ந்துருகிச்
சிறுத்தவராக்கஞ்சங்கூப்புமென்பேதைக்கென்செப்புவதே.

(இ-ள்.) வெறுத்தவரை - பகைத்தவரையும், கஞ்சனை - கம்ஸனையும், செற்றுளார் - கொன்றவர், விடைவெற்பர் - இடபகிரியையுடையவர், வெம்கண்-கொடுங்கண்களையுடைய, கறுத்தவரைக்கு - கரியமலைபோன்ற யானைக்கு, அஞ்சல் என்று - பயப்படாதேயென்று, வந்தார் - எதிரோவந்தவர், கநகம் அம்பரத்தை - பீதாம்பரத்தை, பொறுத்த - தரித்த, அரைக்கு - திருவரையைக் குறித்தும், அஞ்சநமேனிக்கு - கரிய திருமேனியைக் குறித்தும், ஆவி புலர்ந்து உருகி - உயிர்வருத்திக்கரைந்து, சிறுத்த வரை - சிறுகினரேகைகளையுடைய, கஞ்சம் - கைத்தாமரைகளை, கூப்பும் - குவிக்கின்ற, என் பேதைக்கு - என்பேதைப்பெண்ணுக்கு, என் செப்புதுவது - யாது சொல்வது. எ-று.

அம்பரம் - ஆடை. பீதம்-பொன். பருவமேழனுள் முதற் கண்ணதாகிய பேதைப்பருவத்திற்றுனே இவளுக்கிப்படிப்பட்ட வியாமோகமுண்டாயின் யாம் சொல்லத்தகுவது யாது என்பது கருத்து.

௨௦. செப்போதனஞ்செழுந்துப்போசெவ்வாயென்றுசேயிழையார்க்
கொப்போதநெஞ்சுருகித்திரிவீர்கனலூதைமண்விண்
அப்போதனமென்றமுதுசெய்தாரலங்காரர்பொற்றாள்
எப்போதனந்தறவிர்ந்தேத்தநீங்களிருக்கின்றதே.

(இ - ள்.) சேயிழையார்க்கு - செம்பொன்னாபரணமணிந்த மாதர்களுக்கு, தனம் - தனங்கள், செப்போ - பொற்செப்புகளோ, செவ்வாய் - செவந்தவாயானது, செழு துப்போ - செழுமையாகிய பவளமோ, என்று - என்று, ஒப்பு ஓத - ஒப்புச்சொல்ல, நெஞ்சு உருகி - மனங்கரைந்து, திரிவீர் - திரிகிறவர்களே, கனல் - நெருப்பும், ஊதை - காற்றும், மண்-மண்ணும், விண்-ஆகாயமும், அப்பு-நீருமே, ஓதனம் என்று - தமக்கு உணவாவதென்று, அமுதுசெய்தார்-அமுது செய்தவர், அலங்காரர்-அழகர், (அவருடைய) பொன்தாள் - பொன்னடிகளை, எப்போது - எக்காலத்தில், அனந்தல்தவிர்ந்து - அஞ்ஞான நித்திரையைநீக்கி, ஏத்த - துதிக்க, நீங்கள் இருக்கின்றது - நீங்களிருப்பது. எ-று.

பொன்தாள் - அழகிய பாதம் எனினுமாம். இது உலகத்தாரை நோக்கிக்கூறியது.

௨௧. இருக்கந்தரத்தனைவோர்களுமோதியிடபகிரி
நெருக்கந்தரத்தனையேத்தநின்றானைநிறத்ததுப்பின்
உருக்கந்தரத்தனைத்துன்பொழித்தானையுலகமுண்ட
திருக்கந்தரத்தனையல்லாதெண்ணேனொருதெய்வத்தையே.

(இ-ள்.) இருக்கு - வேதமும், அந்தரத்து - சுவர்க்கலோகத்திலுள்ள, அனைவோர்களும் - எல்லாத்தேவர்களும், மோதி - ஒருவ

ரோடொருவரிடியுண்டு, இடபகிரி - இடபகிரியில், நெருக்கம் தர- நெருக்கமுண்டாக, தன்னை ஏத்த - தன்னைத்துதிக்கும்படி, நின் றானை - நின்றவனை, நிறத்த - காந்தியையுடைய, துப்பின் - பவளம் போல, உரு - வடிவத்தையுடைய, கந்தர் - முருகருக்கு, அத்தனை- தந்தையாகிய ருத்திரமூர்த்திக்கு, துன்பு ஒழித்தானை - துன்பத்தை நீக்கினவனை, உலகம் உண்ட-உலகங்களையுண்ட, திரு கந்தரத்தனை- அழகிய கண்டத்தையுடையவனை, அல்லாது - அல்லாமல், ஒரு தெய்வத்தை - வேறொரு தெய்வத்தை, எண்ணேன் - நினையேன்.

இருக்கு இருக்குவேதமெனினுமமையும். கந்தரத்தனைத் துன் பொழித்தலாவது கபாலமோக்ஷம்.

உஉ. தெய்வம்பலவவர்நூலும்பலவவைதேர்பொழுதில்
பொய்வம்பலவென்றுதோன்றும்புல்லோர்கட்குப்போதநல்
உய்வம்பலனுமவனேயென்றோதியுணர்வர்நெஞ்சே [லோர்
கொய்வம்பலர்சொரியுஞ்சோலைமாமலைக்கொண்டலையே.

(இ-ள்.) நெஞ்சே-மனமே, தெய்வம் - தெய்வங்கள், பல-பல வாயிருக்கின்றன, அவர் நூலும் - அவர்களைப் பிரதிபாதிக்கிற நூல் களும், பல - பலவாறுயிருக்கின்றன, அவை - அவற்றை, தேர்பொ ழுதில் - ஆராயுங்காலத்தில், பொய் வம்பு அல்ல என்று - இவை பொய்யுடையனவும் பயனற்றனவும் அல்லவென்று, புல்லோர்கட்கு- அற்பருக்கு, தோன்றும் - தோன்றுகிற்கும், போதம் - ஞானத்தை யுடைய, நல்லோர் - நல்லவர்கள், கொய் - கொய்யப்படுகிற, வம்பு- வாசனையுள்ள, அலர் - மலர்களை, சொரியும் - சிந்துகின்ற, சோலை மாமலை - திருமாலிருஞ் சோலைமலையிலெழுந்தருளிய, கொண்டலை- மேகம்போல்பவனாகிய அழகனை, உய்வம் - யாம் உஜ்ஜீவிப்போம், பலனும் அவனே என்று-பயனும் அவனே யென்று, ஓதி-சொல்லி, உணர்வர் - அறிவார்கள். எ-று.

புல்லோர் இதர தெய்வங்களையும் அவரைப்பற்றிய நூல்களையும் உண்மையென்று நம்பிப் பாராட்டுவர். நல்லோர் திருமாலிருஞ் சோலைமலை யழகனை உபாயோ பேயங்களாகப் பாவித்தறிந்து உஜ் ஜீவிப்பர் என்பது கருத்து.

உங. கொண்டலையாநிற்குமைம்புலக்கோண்மகரங்களினீர்ப்
புண்டலையார்பிறவிக்கடன்மூழ்குவருத்தமனைத்
தண்டலையார்திருமாலிருஞ்சோலைத்தனிச்சுடரைப்
புண்டலையால்வணங்காரணங்கார்வினைபோகவென்றே.

(இ-ள்.) கொண்டு - தம்வசமாகக்கொண்டு, அலையாநிற்கும்- வருத்துகின்ற, ஐம்புலம் - ஐம்புலன்களாகிய, கோள் - வலியுள்ள

மகரங்களின் - மகரமீன்களால், ஈர்ப்பு உண்டு - இழுக்கப்பட்டு, அலை ஆர் - அலைகள் நிறைந்த, பிறவிக்கடல்-ஜந்ம சாகரத்தில், மூழ்குவர் - மூழ்குவார்கள், உத்தமனை - சிரேஷ்டனை, தண்டலை ஆர்- சோலைகள் நிறைந்த, திருமாலிருஞ்சோலை - திருமாலிருஞ்சோலை மலையிலெழுந்தருளியிருக்கிற, தனி - ஒப்பற்ற, சுடரை - தேஜோ ரூபனை, புண் தலையால் - மாமிசம்பொருந்திய தலையைக்கொண்டு, அணங்கு ஆர் - துன்பம் நிறைந்த, வினை - வினைகள், போக என்று- நீங்குகவென்று, வணங்கார்-தொழார், (அஞ்ஞானிகளுடைய பாபம் இருந்தபடி என்ன.) எ-று.

ஐம்புலன் - சப்த, ஸ்பரிச, ரூப, ரச கந்தங்கள்.

உச. என்றுதரங்கலந்தேனற்றைநான்றுதொட்டிற்றைவரை
நின்றுதரங்கிக்கின்றேற்கருள்வாய்நெடுங்கான்கடந்து
சென்றுதரங்கக்கடறூர்த்திலங்கையிற்றீயவரைக்
கொன்றுதரங்குவித்தாய்சோலைமாமலைக்கோவலனே.

(இ-ள்.) நெடுகான் - நெடியகாட்டை, கடந்து சென்று-தாண்டிப்போய், தரங்கம் - அலைகளையுடைய, கடல் - சமுத்திரத்தை, தூர்த்து - (மலைகளால்) தூரப்பண்ணி, இலங்கையில் - இலங்கையிலுள்ள, தீயவரை - கொடியவர்களை, கொன்று-கொலைசெய்து, தரம்- கூட்டமாக, குவித்தாய்-குவித்தவனே, சோலைமாமலை-திருமாலிருஞ் சோலைமலையிலுள்ள, கோவலனே - ஆயனே, உதரம்-தாயின்வயிற்றில், என்றுகலந்தேன்-என்றுசேர்ந்தேன், அற்றை நான்று தொட்டு- அன்றையத்தினந் தொடங்கி, இற்றைவரை நின்று - இன்றளவும் நின்று, தரங்கிக்கின்றேற்கு - அலைகின்றவனாகிய எனக்கு, அருள் வாய் - கிருபை செய்வாயாக. எ-று.

நெடுங்கான் என்றது தண்டகாரண்யத்தை. தீயவர் என்றது இராவண கும்பகர்ணாதிகளை.

உரு. கோவலன்பார்ப்புடன்கேகயஞ்சூழ்குளிர்சோலைமலைக்
காவலன்பாற்கடற்கண்டுயின்மாலலங்காரனென்றே
பாவலன்பாற்பணிவாரணிவானவராகிமறை
நாவலன்பார்ப்பதிநாதனண்ணுப்பதநண்ணுவரே.

(இ-ள்.) கோவலன் - ஆயன், பார்ப்பு உடன்-குஞ்சுகளுடன், கேகயம் - மயில்கள், சூழ்-சூழ்கின்ற, குளிர் - குளிர்ந்த, சோலைமலை- திருமாலிருஞ்சோலைமலையி லெழுந்தருளிய, காவலன் - லோகரக்ஷகன், பால்கடல் - திருப்பாற்கடலிலே, கண் துயில் - யோகநித்திரை செய்கின்ற, மால் - பெருமைபொருந்திய, அலங்காரன் - அழகன், என்று-என்றுசொல்லி, பாவல் - பரவுதலையுடைய, அன்பால்-அன்பி

னால், பணிவார் - தொழுகின்றவர்கள், அணி - அழகாகிய, வானவர் ஆகி-முக்தர்களாகி, மறைநாவலன் - பிரமனும், பார்ப்பதிநாதன்-பார்வதிநாயகனாகிய ருத்திரமூர்த்தியும், நண்ணா - அடையவொண்ணாத, பதம் - பரமபதத்தை, நண்ணுவர்-அடைவார்கள். எ-று.

மறைநாவலன் - வேதங்களில் புலமையுள்ளவன்.

உசு. நண்ணினனாசமுடிமேனடித்தென்னைநாசமறப்
பண்ணினனாகமும்பாருமளந்தனபண்டுதம்பி
மண்ணினனாகவனம்போயினவளர்சோலைமலைக்
கண்ணினனாகங்கரியான்சிவந்தகழலிணையே.

(இ-ள்.) வளர்-வளர்கின்ற, சோலைமலைக்கண் - திருமாலிருஞ்சோலைமலையிலெழுந்தருளியிருக்கிற, இனன் - சூரியனைநிகர்த்தவன், ஆகம்கரியான் - கரியதிருமேனியையுடையவன், (அவனது) சிவந்த-சிவந்திருக்கிற, கழல் இணை-இரண்டுதிருவடிகள், நாகமுடிமேல் நடித்து-சர்ப்பத்தின் தலையின்மேல் நடித்து, நண்ணின - நடனஞ்செய்து நின்றன, என்னை-அடியேனை, நாசம் அறப்பண்ணின-அழிவறச்செய்தன, நாகமும்-விண்ணையும், பாரும் - மண்ணையும், அளந்தன-அளந்தருளின, பண்டு - பூர்வகாலத்தில், தம்பி - தம்பியானவன், மண்ணினன் ஆக-பூமியையுடையவனாகும்படி, வனம்போயின - வனத்திற்குச்சென்றன. எ-று.

நாகம் என்றது காளியனை. நாகமும் பாரும் அளந்தது திரிவிக்கிரமாவதாரத்தில். தம்பி என்றது ஸ்ரீ பரதாழ்வானை.

உஎ. கழலப்புகுந்தவளையறியாரென்கருத்தறியார்
அழலப்புகன்றொறுப்பாரன்னைமாரறுகாற்சுரும்பு
சுழலப்புனைந்ததுழாய்மார்பர்மாலிருஞ்சோலையென்னார்
தழலப்புவரென்தனங்களிலேசந்தனங்களென்றே.

(இ - ள்.) அன்னைமார் - தாய்மார்கள், கழலப்புகுந்த - நீங்கத்தொடங்கின், வளை - வளையலின் தன்மையை, அறியார் - உணரார், என்கருத்து - என் அபிப்பிராயத்தை, அறியார் - உணரார், அழல-மனம்கொதிக்க, புகன்று-(செவிசுடுவார்த்தைகளைச்) சொல்லி, ஒறுப்பார் - வருத்துவார், அறுகால் சுரும்பு - ஆறுகால்களையுடையவண்டுகள், சுழல-சுழலும்படி, புனைந்த - அலங்கரிக்கப்பட்ட, துழாய்-திருத்துழாய்மாலையையணிந்த, மார்பர்-திருமார்பையுடையவராகிய அழகரது, மாலிருஞ்சோலை - திருமாலிருஞ்சோலைமலை, என்னார் - என்று உச்சரியார்கள், தழல்-நெருப்பை, சந்தனங்கள் என்று-சந்தனவகைகளென்றுசொல்லி, என்தனங்களிலே - என்தனங்களின்மீது, அப்புவர்-அப்புவார்கள். எ-று.

தாய்மார் என்கருத்தறியாதவராகி, என்வருத்தத்தைத் தணித்தற்கு, சந்தனம் அப்புதல் முதலியவற்றைச்செய்து விரகநோயை மிகுவிக்கின்றார்கள் என்பது கருத்து. இது தலைமகள்கூற்று.

உஅ. தனத்துக்கராவியவேல்விழிக்கேக்கற்றுத்தையலரால்
தினத்துக்கராகித்திரிவார்பலர்சிலர்செங்கமல
வனத்துக்கராசலங்காத்தாற்குச்சோலைமலையினின்ற
கனத்துக்கராவணையாற்கெம்பிராற்குள்ளங்காதலரே.

(இ-ள்.) பலர் - பலபேர், தனத்துக்கு - தனங்களுக்கும், அராவிய-அராவப்பட்ட, வேல் - வேற்படைபோன்ற, விழிக்கு-கண்களுக்கும், ஏக்கற்று-ஏங்கி, தையலரால் - மாதரால், தினம்துக்கராகி-எந்நாளும் துன்பத்தையுடையவர்களாகி, திரிவார் - திரிவார்கள், சிலர்-சிலபேர், செங்கமலம்-செந்தாமரைமலர்கள்மலர்ந்த, வனத்து-நீரினிடத்தில், கர அசலம் - கைம்மலையை, காத்தாற்கு-காத்தருளினவனுக்கு, சோலைமலையில்நின்ற-திருமாலிருஞ்சோலைமலையில் நின்றதிருக்கோலமாயிருக்கிற, கனத்துக்கு - மேகவண்ணனுக்கு, அரா அணையாற்கு-சர்ப்பசயநத்தையுடையவனுக்கு, எம்பிராற்கு - எம்பெருமானுக்கு, உள்ளம்காதலர்-மனவிருப்பமுள்ளவர்களாயிருக்கின்றார்கள். எ-று.

வனம்-நீர். கமலவனம் என்றது தாமரைமடுவை. கராசலம் என்றது கஜேந்திராழ்வானை.

உகூ. காதலைப்பத்தினிமேல்வைத்தநீசக்கருநிருதன்
மாதலைப்பத்தியைமண்ணிலிட்டாய்நின்னைவாழ்த்தித்தொண்டர்
கீதலைப்பத்தியைச்செய்வோர்கள்வாழுமிடபவெற்பா [க்
தீதலைப்பத்தியங்கித்திரிவேற்கருள்செய்தருளே.

(இ-ள்.) காதலை-ஆசையை, பத்தினிமேல்வைத்த-பதிவிரதையின்மீதுவைத்த, நீசம்-இழிவாகிய, கரு நிருதன்-கரிய அரக்கனது, மா-பெரிய, தலைபத்தியை - சிரவரிசையை, மண்ணில் இட்டாய்-பூமியில்வீழ்த்தினவனே, நின்னைவாழ்த்தி - உன்னைத்துதித்து, தொண்டர்க்கு-உன் அடியவர்க்கு, ஈதலை - கொடுத்தலையும், பத்தியை-பக்தியையும், செய்வோர்கள் - செய்பவர்கள், வாழும் - வாழ்கின்ற, இடபவெற்பா - இடபகிரியையுடையவனே, தீது அலைப்ப-தீவினையானது வருத்த, தியங்கி-கலங்கி, திரிவேற்கு-திரிகின்ற எனக்கு, அருள்செய்தருள் - கிருபைசெய்தருள்வாயாக. எ-று.

பத்தினியென்றது - சீதாபிராட்டியை. நிருதன் - இராவணன். தலைகள் பத்தாதலால் தலைப்பத்தியென்றார்.

௩0. அருடருமங்கைவிடாதேத்துமன்பருக்கன்பரொல்வில்
இருடருமங்கையெறியாழியாரிசைக்கின்னரரும்
கெருடருமங்கையரும்வாழிடபகிரியிற்கல்லா
முருடருமங்கையலெய்திலன்றேயவர்முத்தரன்றே.

(இ-ள்.) அருள்-கிருபையையும், தருமம் - புண்ணியத்தையும், கைவிடாது-கைவிடாமல், ஏத்தும் - துதிக்கின்ற, அன்பருக்கு-அடியவருக்கு, அன்பர் - அன்பையுடையவர், எல்லில் - பகற்பொழுதில், இருள்தரும் - இருளையுண்டாக்குதற்குரிய, அம்கை - அழகியகையினின்றும், எறி-வீசின, ஆழியார் - திருவாழியையுடையவர், (அவரது) இசை - இசையில்வல்ல, கின்னரரும் - கின்னரர்களும், கருடரும்-கருடர்களும், மங்கையரும் - (அவர்கள்) மாதர்களும், வாழ்-வாழ்கின்ற, இடபகிரியில்-இடபமலையில், அங்கு அயல்-அவ்விடத்திற்கு அயலில், கல்லா முருடரும் எய்தில் - கல்லாத மூடரும் அடைந்தால், அன்றே-அன்றைக்கே, அவர் - அம்முருடர், முத்தர் அன்றே - முக்தாத்துமாக்களல்லவா. எ-று.

கல்லாதமூடரும் இடபகிரிக்கு சமீபமாகச்சென்றால், அப்பொழுதே அவர் முக்தராவர் என்பது கருத்து.

௯க. முத்தரன்றேநின்கழலொருகாற்கைமுகிழ்க்கப்பெற்றோர்
பித்தரன்றேநினக்கேபித்தராகிற்பிரமன்கங்கை
வைத்தரன்றேய்துயர்தீர்த்தாய்நின்சோலைமலைமருவும்
பத்தரன்றேபரிவாலென்னையாளும்பரமர்களே.

(இ-ள்.) பிரமன் - பிரமதேவனது, கம்-தலையை, கைவைத்து-கையில்வைத்து, அரன் - ருத்ரமூர்த்தி, தேய் - வருந்தின, துயர்-துன்பத்தை, தீர்த்தாய் - ஒழித்தவனே, நின்கழல் - உன் திருவடிகளை, ஒருகால் - ஒருதரம், கைமுகிழ்க்கப் பெற்றோர் - கைகுவிக்கப்பெற்றவர்கள், முத்தர் அன்றே - முத்தர்களல்லவா, நினக்கேபித்தர் ஆகில்-உனக்கேபித்தேறினவர்களாயின், பித்தர் அன்றே - (அவர்கள்) பித்தர்களாகார்கள், நின் - உன்னுடைய, சோலைமலை மருவும்-திருமாலிருஞ்சோலைமலையை யடைந்திருக்கிற, பத்தர் அன்றே - பக்தர்களல்லவோ, பரிவால் - அன்பினால், என்னை ஆளும் - என்னையாளுகின்ற, பரமர்கள் - மேலோர்கள். எ-று.

கைமுகிழ்த்தல் - அஞ்சலிசெய்தல்.

௯உ. பரந்தாமனைத்திருமாலிருஞ்சோலைப்பரமனைக்கால்
கரந்தாமனையன்னகார்நிறத்தானைக்கடல்கடக்கும்
சரந்தாமனைதிரிகான்போயிலங்கைத்தலைவன்பத்துச்
சிரந்தாமனைக்கணத்தெய்தானையெய்தற்குத்தேர்மனமே.

(இ-ள்.) மனமே - நெஞ்சமே, பரந்தாமனை - பரமபதத்தையுடையவனை, திருமாலிருஞ்சோலை - திருமாலிருஞ்சோலைமலையிலெழுந்தருளிய, பரமனை - சிரேஷ்டனை, கால் - திருவடிகளும், கரம்-திருக்கைகளும், தாமரை அன்ன - தாமரையை நிகர்த்த, கார்நிறத்

தாரை - மேகவண்ணனை, கடல் கடக்கும் சரம் - சமுத்திரராஜனைச் செயித்தபாணத்தினல், தாம்-தாவுகின்ற, மரைதிரி-மரைகள் சஞ்சரிக்கிற, கான்போய் - காட்டிற்போய், இலங்கைத்தலைவன் - இலங்கைக்கரசனுகிய ராவணனுடைய, பத்து சிரம்-பத்துத்தலைகளிலும், தாம்-தாம், அரைக்கணத்து - அரைக்ஷணத்தில், எய்தாரை - எய்தவரை, எய்தற்கு - அடைதற்கு, தேர் - ஆராய்வாயாக. எ-று.

பரந்தாமம் - மேலான இடம். தேர்தலாவது இறைவனை யடையுமுபாயம்யாது? பிறவி யெவ்வாவறெழியும் எனப் பலவகையாலும் ஆராய்ந்து தெளிதல். மரை-மான் இனத்தைச்சார்ந்த மிருகம்.

௩௩. தேராயிரவுபகலிரைதேடுவைதீமைநன்மை
பாராயிரங்குவைபாவையரால்பண்டுமாவலிபால்
சோராயிரந்தவனைத்திருமாலிருஞ்சோலைநின்ற
பேராயிரமுடையானைநெஞ்சேயென்றுபேணுவையே.

(இ-ள்.) நெஞ்சே - மனமே, தேராய் - தெளியாயாகி, இரவு பகல் - இரவும்பகலும், இரைதேடுவை - உணவைத்தேடுகிறாய், தீமை நன்மை பாராய்-தீமைகளையும் நன்மைகளையும் நோக்காய், பாவையரால்-மாதரால், இரங்குவை-இரங்குவாய், பண்டு-முற்காலத்தில், மாவலிபால்-மஹாபலியினிடத்தில், சோராய்-கபடமாய், இரந்தவனை-யாசித்தவனை, திருமாலிருஞ்சோலை-திருமாலிருஞ் சோலைமலையில், நின்ற-நின்ற திருக்கோலமாயெழுந்தருளிய, பேர் ஆயிரம் உடையானை-ஆயிரம் திருநாமங்களையுடையவனை, என்று பேணுவை - எக்காலத்தில் நீ நினைப்பாய். எ-று.

இரங்குதல் - இரக்கஞ்செய்தல். பாவையர் - பிரதிமைபோலும் உருவுடையார்.

௩௪. பேணிக்கவித்தவரைக்குடையாய்பெரியோர்பதின்மர்
ஆணிக்கவித்தமிழ்மாலைகொண்டாயழகாகரிய
மாணிக்கவித்தகமாமலையேவண்டுளவுக்கல்லால்
பாணிக்கவித்தடங்காதுவெங்காமப்படர்கனலே.

(இ-ள்.) பேணி - விரும்பி, கவித்த - பிடித்த, வரைக்குடையாய் - மலையாகிய குடையையுடையவனே, பெரியோர் - பெரியோராகிய, பதின்மர் - பதின்மருடைய, ஆணிகவி தமிழ்மாலை - உயர்ந்த தமிழ்க்கவிமாலைகளை, கொண்டாய் - ஏற்றுக்கொண்டவனே, அழகா - அலங்காரனே, வித்தகம் - ஞானத்தையுடைய, மா - பெரிய, கரிய மாணிக்கமலையே - கருமாணிக்கமலை போல்பவனே, வள் - வளமாகிய, துளவுக்கு அல்லால் - உன் திருத்துழாய்க்கன்றி, வெம்காமம் - கொடியகாமமாகிய, படர்கனல் - படர்ந்த நெருப்பானது, பாணிக்கு-நீருக்கு, அவித்து அடங்காது - தணித்தடங்காது. எ-று.

வரைக்குடை என்பதில் வரை-கோவர்த்தநகிரி. பதின்மர்-பொய்கையார், பூதத்தார் முதலிய பதின்மராழ்வார்கள். உன் திருத்துழாய் மாலையைத் தந்தருளுவையாயின் என்மையனேய்தணியுமென்பதாம்.

௩௫. படராகுவால்குவியக்குழலூதியபாலரையம்
அடராகுவாகனன்றாதைக்கிட்டாரலங்காரர்துழாய்க்
கிடராகுவார்பலர்காண்டமியேனையெரிப்பதென்னீ
விடராகுவாய்க்கொண்டுடல்சுட்டுக்கான்றிட்டவெண்டிங்களே.

(இ-ள்.) விடம் - விஷத்தையுடைய, ராகு - ராகு என்னும் பாம்பு, வாய்கொண்டு - வாயிற்பெய்து, உடல் சுட்டு - தன்னுடம்பு சுட, (பொறுக்காமல்) கான்றிட்ட - கக்கிவிட்ட, வெள் திங்களே - வெண்மையாகிய சந்திரனே, படர்-(பல இடங்களில்) படர்ந்த, ஆ-பசுக்களின், குவால்-கூட்டம், குவிய-(ஓரிடத்தில்) சேரும்படி, குழல் ஊதிய - வேய்ங்குழலை ஊதின, பாலர் - சிறுவர், அடர்-(பகைவரை) கொல்லுகின்ற, ஆகுவாகநன்-பெருச்சாளியாகிய வாகநத்தையுடைய விநாயகமூர்த்தியினது, தாதைக்கு - தந்தையாகிய ருத்ரமூர்த்திக்கு, ஐயம் இட்டார் - பிச்சையிட்டவர், அலங்காரர் - அழகர், (அவரது) துழாய்க்கு - திருத்துழாய்மாலைக்கு, இடர் ஆகுவார் பலர் - துன்பமடைவோர் பலருளர், நீ - நீ, தமியேனை - தனியேனாகிய என்னை, எரிப்பது - சுடுவதற்குக் காரணம், என் - யாது. எ-று.

இது விரகவேதனை பொறாத தலைமகள் சந்திரனை நோக்கிக் கூறியது. இது சந்திரோபாலம்பநம் எனப்படும். உபாலம்பநம்-நிந்தித்தல். சந்திரனே எம்பெருமானது திருத்துழாயில் விருப்பமுடைய என்னைவிட்டு, அத்திருத்துழாயில் விருப்பமில்லாதவரை வருத்துவாய் என்பது கருத்து.

௩௬. திங்களப்பாநின்றசெந்தீக்கொழுந்திற்செழுஞ்சங்குபோ
லுங்களப்பாவையுருகுவதோர்கிலரும்பரெல்லாம்
எங்களப்பாவெமைக்காவாயெனவுலகீரடியால்
அங்களப்பான்வளர்ந்தார்சோலைமாமலையாதிபரே.

(இ-ள்.) உம்பர் எல்லாம் - எல்லாத் தேவர்களும், எங்கள் அப்பா - எமது தந்தையே, எமை காவாய் - எம்மைக் காப்பாற்றுவாய், என - என்று பிரார்த்திக்க, உலகு - உலகங்களை, ஈரடியால்-இரண்டு திருவடிகளால், அங்கு - அவ்விடத்து, அளப்பான் - அளக்கும்பொருட்டு, வளர்ந்தார் - வளர்ந்தவரும், சோலைமாமலை ஆதிபர்-திருமாலிருஞ்சோலைமலைக்குத் தலைவருமாகிய அழர், திங்கள் - சந்திரனாகிய, அப்பாநின்ற-பூசாநின்ற, செம் தீ கொழுந்தின்-செந்தீக்கொழுந்தினால், செழு சங்குபோலும்-செழுமையாகிய சங்கை நிகர்க்கின்ற,

களம் - கண்டத்தையுடைய, பாவை - பொற் பிரதிமை போலும் உருவுடையவளாகிய என்பெண், உருகுவது - உருகுவதை, ஓர்கிலர்- அறிந்திலர். எ-று.

இறைவர் சர்வஜ்ஞராயிருந்தும் சந்திரனால் என்பெண் படுந் துன்பத்தை அறியாதிருக்கின்றனர், இது என்ன ஆச்சரியம் என்பது கருத்து. கொழுந்தின் உருகுவது என இயைத்துக்கொள்க.

௯௭. ஆதியராவிற்றுயிலலங்காரரழகரன்பாம்
வேதியராவுதிவீற்றிருப்பாரண்டமீதிருக்கும்
சோதியராவின்பின்போந்தாரையன்றித்தொழேனுடலைக்
காதியராவினும்பொன்மாமகுடங்கவிக்கினுமே.

(இ-ள்.) உடலை - உடம்பை, காதி - அறுத்து, அராவினும்- அராவினாலும், மா - பெருமைபொருந்திய, பொன் மகுடம் - பொன் முடியை, கவிக்கினும் - சூட்டினாலும், ஆதி அராவில் - ஆதிசேடன் மீது, துயில் - கண்வளர்ந்தருளுகிற, அலங்காரர் - அழகரும், அன்பு ஆம் - அன்புசெய்கின்ற, வேதியர் - அந்தணரால் செய்யப்படுகிற, ஆவுதி - ஆஹுதியில், வீற்றிருப்பார் - வீற்றிருப்பவரும், அண்டம் மீது இருக்கும் - பரமாகாயத்தின்மீது எழுந்தருளியிருக்கிற, சோதியர் - சோதிசொரூபரும், ஆவின் பின் - பசுக்களின்பின்னே, போந்தாரை - சென்றவருமாகிய இறைவரை, அன்றி - அல்லாமல், தொழேன் - இதரதெய்வங்களை வணங்கேன். எ-று.

அண்டம் - ஆகாசம். இது பரமாகாயமென்று சொல்லப்படுகிற பரமபதத்தை யுணர்த்திற்று. உடலை அறுத்துத் துன்பஞ்செய்யினும் பொன்முடிசூட்டி இன்பஞ்செய்யினும் அழகரையன்றிப் பிற தெய்வங்களை வணங்கேனென்பது கருத்து.

௯௮. கவித்தானைமன்னற்குநட்பாய்முடிகவித்தானையன்று
புவித்தானைவற்றப்பொழிசரத்தானைப்பொருதிலங்கை
அவித்தானைமாலிருஞ்சோலைநின்றானையழகனைமுன்
தவித்தானைவாவெனவந்தானைப்பற்றினென்றஞ்சமென்றே.

(இ-ள்.) கவி தானை - வானரசேனைகளையுடைய, மன்னற்கு- சுக்கிரீவ மாஹாராஜருக்கு, நட்பு ஆய் - சிநேகராகி, முடிகவித்தானை- அவருக்கு முடி சூட்டினவனை, அன்று - அந்நாளில், புவி - பூமிதேவிக்கு, தானை - ஆடையாகிய கடல், வற்ற - வற்றும்படி, பொழி- சொரிந்த, சரத்தானை - பாணத்தையுடையவனை, பொருது - போர் செய்து, இலங்கை-இலங்கைப் பட்டணத்தை, அவித்தானை-அழித்தவனை, மாலிருஞ்சோலை நின்றானை-திருமாலிருஞ்சோலைமலையில் நின்ற திருக்கோலமாயெழுந்தருளி யிருப்பவனை, அழகனை-அலங்காரனை,

முன் - முற்காலத்தில், ஆனை - கஜேந்திராழ்வான், தவித்து-தபித்து, வா என - வருவாயாக வென்றழைக்க, வந்தானை - அவனுக்கெதிரில் வந்து நின்றவனை, தஞ்சம் என்று-அடைக்கலம் என்று, பற்றினென்-பிடித்தேன். எ-று.

சுக்கிரீவ மகாராஜர் முதலியோர்க்கு அருள் செய்ததுபோலத் தனக்கும் அருள்செய்வானெனக்கருதி, அழகனையே சரணமென்று விடாது பற்றினேனென்றார்.

௩௯. தஞ்சந்தனமென்றுதேடிப்புல்லோர்தையலார்கடைக்கண்
வஞ்சந்தனங்கொள்ளவாளாவிழப்பர்மதியுடையோர்
செஞ்சந்தனப்பொழின்மாலிருஞ்சோலைத்திருநெடுமால்
நெஞ்சந்தனக்குவப்பாகநல்காநிற்பர்நேர்படினே.

(இ-ள்.) புல்லோர் - அற்பர்கள், தனம் - திரவியமானது, தஞ்சம் என்று - ரக்ஷகம் என்று, தேடி - அதனைச்சம்பாதித்து, தையலார் - மாதர்களுடைய, கடைக்கண் வஞ்சம் - கடைக்கண்ணினது வஞ்சகத்தொழிலும், தனம் - அவரது தனங்களும், கொள்ள - அந்தத் திரவியத்தைக் கவர்ந்துகொள்ள, வாளா - வீணாக, இழப்பார்-(அதன்பயனை) இழந்துபோவார்கள், மதி உடையோர்-அறிவுள்ளோர்கள், நேர்படின்-அந்தத்திரவியம் கிடைத்தால், செம் சந்தனம் பொழில் - செஞ்சந்தனச் சோலைசூழ்ந்த, மாலிருஞ்சோலை - திருமாலிஞ்சோலைமலையி லெழுந்தருளிய, திருநெடுமால் - அழகரது, நெஞ்சம் தனக்கு உவப்பு ஆக - திருவுள்ளத்துக்குமகிழ்வுண்டாகும்படி, நல்கா நிற்பர் - அந்தத்திரவியத்தை வழங்கா நிற்பர்கள். எ-று.

திருநெடுமால் நெஞ்சந்தனக்கு உவப்பாக நல்குதலாவது பகவத் பாகவதாசார்ய கைங்கர்யாதி விஷயங்களில் உபயோகித்தல். புல்லர் தேடிய பொருள் மாதர்கள் விஷயத்திலும், நல்லோர் தேடிய பொருள் கைங்கரிய விஷயத்திலும் உபயோகப்படுமென்பது கருத்து.

௪0. நேராயவேதனைநெஞ்சிடந்தாய்நெடுஞ்சோலைமலைக்
காராயவேதனைமுன்படைத்தாய்நின்கழற்குத்தொண்டென்
றாராயவேதனைப்புன்பிறப்போயுமவாவழியிற்
பேராயவேதனையில்லுழைப்போரும்பிழைப்பர்களே.

(இ-ள்) நேர் ஆய - எதிர்ந்துநின்ற, ஏதனை - குற்றத்தை யுடையவனாகிய இரணியனை, நெஞ்சு இடந்தாய் - மார்பைப்பிளந்தவனே, நெடுசோலைமலை - நெடிதாகிய திருமாலிருஞ்சோலைமலையி லெழுந்தருளிய, கார் ஆய - கருநிறத்தையுடைய ஆயனே, வேதனை-பிரமனை, முன் - முன்னே, படைத்தாய் - சிருஷ்டித்தவனே, நின் கழற்கு - உன் திருவடிக்கு, தொண்டு என்று - அடிமை யென்று,

ஆராயவே - ஆராய்ச்சிசெய்யவே, தனை - அளவுள்ள, புன்பிறப்பு- இழிவாகிய பிறவிகள், ஓயும் - ஒழியும், அவா வழியில் - ஆசையின் வழியாலே, பேர் ஆய - பிரபலமான, வேதனை - துன்பத்தைத்தரு கிற, இல் - சம்சார பந்தத்தில், உழைப்போரும் - வருந்துவோரும், பிழைப்பர்கள் - பிழைத்துக்கடைத்தேறுவார்கள். எ-று.

நெஞ்சு இடந்தாய் என்ற குறிப்பினால் ஏதன் என்றது இரணி யனை யுணர்த்திற்று. முன்படைத்தாய் என்பதற்கு - முற்காலத்தில் படைத்தாயென்றும் - இருவகையாகப் பொருளுரைக்கலாம்.

௪௧. பிழைத்தலையானெண்ணிப்பேசுகின்றேனிப்பிணிமற்றொன்றால்
மழைத்தலைவார்குழலீர்தணியாதுவருணனைமுன்
அழைத்தலையங்கடைத்தாரலங்காரரலங்கனல்கீர்
முழைத்தலைநின்றுமலயாநிலம்வந்துமோதுமுன்னே.

(இ-ள்.) தலை - சிரசில், மழை - மேகம்போல, வார் - நீண்ட, குழலீர் - கூந்தலையுடைய மாதர்களே, யான் - நான், பிழைத்தலை எண்ணி - பிழைக்கும்வழியை ஆராய்ந்து, பேசுகின்றேன் - சொல் லுகின்றேன், இப்பிணி - இந்தநோய், மற்றொன்றால் - வேறொரு உபாயத்தால், தணியாது - அடங்காது, (ஆதலால்) முழைத்தலை நின்று - குகையில் நின்றும், மலயம் அநிலம் - தென்றற் காற்றா னது, வந்து மோதுமுன் - வந்து தாக்குதற்குமுன்னமே, வருணனை- கடற்கரசனை, முன் அழைத்து - முற்காலத்திலழைத்து, அலை- கடலை, அங்கு அடைத்தார் - அவ்விடத்தில் திருவணைகட்டித் தடுத் தவராகிய, அலங்காரர் - அழகரது, அலங்கல் - மாலையை, நல்கீர்- கொண்டுவந்து கொடுங்கள். எ-று.

மழைத்தலைவார் குழலீரென்பதற்கு குளிர்ந்து அசையாநின்ற நீண்ட கூந்தலையுடையவர்களே என்றுரைப்பினுமமையும். அங்கு என்றது தென்குமரியை. முழை என்றது பொதிய மலையின் குகை யை. மலயம் - பொதியமலை. அநிலம் - காற்று.

௪௨. மோதாகவந்தனைமூட்டிலங்கேசன்முடிந்துவிண்ணின்
மீதாகவந்தனைவில்லெடுத்தேவிடைவெற்பினின்ற
நாதாகவந்தனைச்செற்றுயுனையன்றிநான்மறந்தும்
தீதாகவந்தனைசெய்யேன்புறஞ்சிலதேவரையே.

(இ-ள்.) மோது - ஒருவரோடொருவர் தாக்குதற்குரிய, ஆக வம்தனை - யுத்தத்தை, மூட்டு-உண்டாக்கின, இலங்கேசன் - இலங் காதிபனாகிய இராவணன், முடிந்து - இறந்து, விண்ணின்மீது ஆக- பரமபதத்தில் சேரும்படி, வில் எடுத்து வந்தனை - கோதண்டத் தைத் தாங்கி வந்தாய், விடை வெற்பில்நின்ற - இடபகிரியில்

எழுந்தருளிய, நாதா - நாயகனே, கவந்தனை செற்றாய் - கவந்தனைக் கொன்றவனே, நான் - யான், உனை அன்றி - உன்னையல்லாமல், புறம் சிலதேவரை - புறம்பாகிய சில தேவர்களை, மறந்தும் - மறந்தாயினும், தீது ஆக - பாபமுண்டாக, வந்தனை செய்யேன்-வணங்க மாட்டேன். எ-று.

பகைவனாகிப்போர் செய்யவந்த இராவணனும் பரமபதத்திற் சேரும்படி கிருபை செய்த பரமகருணாநிதி நீயாதலால் உன்னைவிட்டு இதர தெய்வங்களை மறந்தும் வந்தனைசெய்யே னென்பது கருத்து.

சங. தேவரையாதன்மனிதரையாதல்செழுங்கவிதை
நாவரையாமனவிலுகிற்பீர்நம்மையாளுஞ்செம்பொன்
மேவரையானையிருஞ்சோலைவேங்கடமெய்யமென்னும்
மாவரையானையொருவனையேசொல்லிவாழுமினே.

(இ-ள்.) தேவரையாதல் - பிறதேவர்களையாயினும், மனிதரையாதல் - மானிடரையாயினும், நாவரையாமல்-நாவினால் (துதித்தலை) ஒழியாமல், செழுகவிதை-செழிய பாடல்களை, நவிலுகிற்பீர்-சொல்லித்துதிப்பவர்களே, நம்மை ஆளும் - நம்மை ஆண்டருளுகின்ற, செம்பொன்-செம்பொன்னுடையானது, மேவு-பொருந்தின, அரையானை-திருவரையையுடையவனை, இருஞ்சோலை-திருமாலிருஞ்சோலைமலை, வேங்கடம் - திருவேங்கடம், மெய்யம் - திருமெய்யம், என்னும் - என்றுசொல்லப்படுகிற, மா-பெருமைபொருந்திய, வரையானை-மலைகளையுடையவனை, ஒருவனையே-ஒருவனையே, சொல்லி-துதித்து, வாழுமின் - வாழுங்கள். எ று.

செழுங்கவிதை நாவரையாமல் நவிலுகிற்பீர் என்பதற்கு எழுதாமல் செழுமையாகியபாடல்களை நாவினாலேயே சொல்லித் துதிப்பவர்களே யெனினுமாம். வரைதல் - எழுதுதல்.

சச. வாழுமின்பங்கயச்சுந்தரவல்லிமணாளன்வெற்பைச்
சூழுமின்பந்தித்ததொல்வினைதீர்ந்துய்யத்தொங்கல்சுற்றும்
தாழுமின்பஞ்சணைமேன்மடவார்தடமாமுலைக்கே
வீழுமின்பங்கருதித்துன்பயோனியில்வீழ்பவரே.

(இ-ள்.) தொங்கல் - பூமாலைகள், சுற்றும் - சுற்றிலும், தாழும்-தொங்குகின்ற, இன்-இனிதாகிய, பஞ்சு அணைமேல் - பஞ்சணையின் மீது, மடவார்-மாதர்களுடைய, தடம் - விசாலமாகிய, மா - பெரிய, முலைக்கே - தனங்களுக்கே, வீழும்-விருப்பத்தைச் செய்கின்ற, இன்பம் கருதி - சுகத்தையெண்ணி, துன்பம் யோனியில்-துன்பத்தைத் தருகின்ற யோனியில், வீழ்பவரே - வீழ்கின்றவர்களே, வாழும்-வாழுங்கள், பந்தித்த - நம்மைப்பிணித்த, தொல்வினை தீர்ந்து - பழமையாகிய வினைகள் நீங்கி, உய்ய-நாம்பிழைக்கும்படி, மின்-மின்னு

கின்ற, பங்கயம் - தாமரைமலரி லெழுந்தருளியிருக்கின்ற, சுந்தர வல்லி - திருமகளுக்கு, மணாளன்-நாயகனாகிய அழகனது, வெற்பை-திருமாலிருஞ்சோலைமலையை, சூழுமின் - வலஞ்செய்யுங்கள். எ-று.

சுந்தரம் - அழகு, வல்லி - கொடி, சுந்தரவல்லி - அழகாகிய கொடிபோல்பவள்.

சரு. வீழமராமரமெய்தார்மதிதவழ்வெற்பைநெஞ்சே
தாழமராடச்சமன்குறுகானிச்சரீரமென்னும்
பாழமராமற்பரகதியேற்றுவர்பார்க்கில்விண்ணோர்
வாழமராவதியுர்நரகாமந்தமாநகர்க்கே.

(இ-ள்.) மராமரம் - மராமரங்களை, வீழ-விழும்படி, எய்தார்-எய்தவரது, மதிதவழ் - சந்திரன் ஊர்கின்ற, வெற்பை - திருமாலிருஞ் சோலைமலையை, நெஞ்சே-மனமே, தாழ்-வணங்கு, சமன்-யமனாவன், அமர் ஆட - யுத்தஞ்செய்ய, குறுகான் - கிட்டான், இச்சரீரம் என்னும் - இந்தவுடம் பென்கின்ற, பாழ் அமராமல்-பாழில் பொருந்தாமல், பரகதி - பரமபதத்தில், ஏற்றுவர் - (அந்த அழகர்) ஏறப்பண்ணுவர், பார்க்கில் - பார்க்குமிடத்தில், விண்ணோர்வாழ்-தேவர்கள் வாழ்கின்ற, அமராவதியும் - அமராவதிநகரமும், அநதமா நகர்க்கு - அந்த வைகுந்த நகரத்துக்கு, நரகு ஆம் - நரகத்துக்கு நிகராகும். எ-று.

மனமே - அழகரது திருமாலிருஞ் சோலைமலையை வணங்கு, வணங்கினால் நம்மை யமன் நெருங்கமாட்டான், நாமும் பரகதியை யடையலாமென்பது கருத்து.

சசு. நகரமுநாடும்புரந்தவர்நண்ணலரால்வனமும்
சிகரமுநாடுஞ்சிறுமைகண்டோமஞ்ஞைதேனிசைகள்
பகரமுனாடும்பனிச்சோலைவெற்பினிற்பார்க்குக்கஞ்சன்
தகரமுனாடுகைத்தார்க்கறிந்தீர்கள்சரண்புகுமே.

(இ-ள்.) நகரமும் - பட்டணங்களையும், நாடும் - தேசங்களையும், புரந்தவர்-ஆண்டவர்களாகிய அரசர்களும், நண்ணலரால்-பகைவரால், வனமும் - காட்டையும், சிகரமும் - மலையையும், நாடும்-தேடிச் செல்லுகின்ற, சிறுமை - இழிவை, கண்டோம்-பார்த்தோம், (ஆதலால்) அறிந்தீர்கள் - அறியவேண்டுமவற்றை யறிந்தவர்களே, தேன் - வண்டுகள், இசைகள்பகர - இராகங்களைப்பாட, முன்-அவற்றிற்கெதிரே, மஞ்ஞை - மயில்கள், ஆடும் - ஆடாநின்ற, பனி-குளிர்ச்சியையுடைய, சோலை வெற்பில் - திருமாலிருஞ்சோலைமலையில், நிற்பார்க்கு - நின்ற திருக்கோலமாயெழுந்தருளி யிருப்பவருக்கு, கஞ்சன் தகர - கஞ்சனானவன் அழியும்படி, முன்நாள் - முற்காலத்

தில், துகைத்தார்க்கு - மிதித்தவருக்கு, சரண்புகும் - அடைக்கலம் புகுங்கள். எ-று.

நண்ணலரால் - பகைவர் செய்யும் உபத்திரவத்தால் என்றபடி.

சஎ. சரணியனாகத்தன்னை நினைந்தாரைத்தன்போலவைக்கும்
அரணியனாகத்தணையானரங்கனழகனெங்கோன்
இரணியனாகமிடந்தான்கதையன்றியீனர்தங்கள்
முரணியனாகத்தும்புன்குரலோரிமுதுக்குரலே.

(இ-ள்.) தன்னை - தன்னை, சரணியன் ஆக - ரக்ஷகனாக, நினைந்தாரை - எண்ணினவரை, தன்போல வைக்கும் - தன்னைப் போல வைக்கின்ற, அரணியன் - காவலையுடையவன், நாகத்து அணை யான் - சர்ப்ப சயநத்தையுடையவன், அரங்கன் - திருவரங்கன், அழ கன் - அலங்காரன், எம்கோன் - எம் இறைவன், இரணியன் ஆகம் இடந்தான் - இரணியனது மார்பைப் பிளந்தவன், (அவனது) கதை அன்றி - சரித்திரமானது (பரகதியில் செலுத்தும் பெருமையுடை யதே) யன்றி, ஈனர் - அற்பர்கள், தங்கள் - தம்முடைய, முரண் இயல் - மாறுபாடு பொருந்திய, நா - நாவினால், கத்தும் - கத்துகின்ற, புல் குரல் - அற்பமாகிய ஓசையானது, ஓரி - நரியினது, முதுக்குரல் - பெரிய ஓசையேயாம். எ-று.

தன்போல வைத்தலாவது பரமபதத்தில் தன்னைப்போல் சங்க சக்ராதிகளைத் தாங்கி நிற்கும்படி கிருபைபண்ணுதல். ஈனர் என்றது இதர சமயிகளை. ஓரி - கிழநரி.

சஅ. முதுவிருந்தாவனத்தானிரைமேய்த்தவர்முன்விதுரன்
புதுவிருந்தானவர்மாலலங்காரர்பொலங்கழலாம்
மதுவிருந்தாமரைக்காளாயிரார்க்குமதிநுட்பநூல்
எதுவிருந்தாலுமதனால்விடாவிங்கிருவினையே.

(இ-ள்.) முது - பழமையாகிய, விருந்தாவனத்து - பிருந்தா வனத்தில், ஆன் நிரை - பசுக்கூட்டத்தை, மேய்த்தவர் - மேய்த்தவர், முன் - முற்காலத்தில், விதுரன் - விதுராழ்வானுக்கு, புது - புதிய, விருந்து ஆனவர் - விருந்தாக வந்தவர், மால் அலங்காரர் - பெருமை பொருந்திய அழகர், (அவரது) பொலம் கழல் ஆம் - பொன்போன்ற திருவடியாகிய, மது இருதாமரைக்கு - தேன் ஒழுகுகின்ற பெரிய தாமரைமலருக்கு, ஆள் ஆய் இரார்க்கு - அடிமையாயிராதவருக்கு, மதி நுட்பம் - நுட்பமாகிய அறிவையுண்டாக்குகின்ற, நூல் - நூல் கள், எது இருந்தாலும் - எது இருந்தபோதிலும், அதனால் - அந்த நூலையுடைத்தாயிருப்பதனால், இங்கு - இவ்வுலகத்தில், இருவினை - இருவினைகள், விடா - நீங்கா. எ-று.

விருந்தாவனம் - துளசிக்காடு.

சசு. வினையாட்டியேன்கொண்டவெங்காமநோய்வெறியாட்டினுமிச்
சினையாட்டினுந்தணியாதன்னைமீர்செய்யபூங்கமல
மனையாட்டிநாயகன்மாலிருஞ்சோலைமலைச்சிலம்பாற் [யே.
றெனையாட்டிவாருஞ்சொன்னேனெந்தநோயுமெனக்கில்லை

(இ-ள்.) அன்னைமீர் - தாய்மார்களே, வினையாள் - வினையின ளாகிய, தீயேன் கோண்ட - தீயவளாகிய நான் அடைந்திருக்கிற, வெம் - கொடிய, காமநோய் - காமநோயானது, வெறியாட்டினும் - வெறியாட்டினாலும், இ சினை ஆட்டினும் - இந்தச் சினையாட்டினாலும், தணியாது - அடங்காது, செய்ய - செவந்த, பூ - அழகிய, கமலம் - தாமரையாகிய, மனையாட்டி - வீட்டையாள்பவளாகிய திருமகளுக்கு, நாயகன் - நாயகனது, மாலிருஞ்சோலைமலை - திருமாலிருஞ்சோலை மலையிலுள்ள, சிலம்பு ஆறு - சிலம்பாற்றில், எனை - என்னை, ஆட்டி வாரும் - ஸ்நாநஞ்செய்வித்து வாருங்கள், (அப்படி ஸ்நாநஞ்செய்வித் தால்) எனக்கு - எனக்கு, எந்த நோயும் - எந்த விதமான நோயும், இல்லை - இல்லை, சொன்னேன் - சொல்லிவிட்டேன். எ-று.

வெறியாட்டினும் - வெறியாடலாலும், சினையாட்டினும் - கர்ப்பங்கொண்ட ஆட்டினாலும், என்றபடி. வெறியாட்டினும் இச்சினை யாட்டினுந் தணியாது சிலம்பாறு எனையாட்டிவாரும் எந்தநோயு மெனக்கில்லை என்றதனால், இது வெறிவிலக்கல் என்னுந்துறை. சிலம்பாறு-நூபுரநதி.

ருo. எனக்காவியங்குமுடலிங்குமாகியிருப்பதைச்சந்
தனக்காவியங்குந்தமரவண்டீர்சொல்லுந்தத்துவநூல்
கனக்காவியக்கவிவல்லோர்புகழலங்காரனுக்கு
வனக்காவியங்கண்ணிமாமலராண்மணவாளனுக்கே.

(இ-ள்.) சந்தனக்கா - சந்தனச்சோலைகளில், இயங்கும் - சஞ்சரிக்கிற, தமரம் - ஓசையையுடைய, வண்டீர்-வண்டுகளே, எனக்கு - அடியேனுக்கு, ஆவி - பிராணன், அங்கும் - அவ்விடத்தும், உடல் - உடம்பு, இங்கும் - இவ்விடத்தும், ஆகி இருப்பதை - ஆகியிருக்குஞ் செய்தியை, தத்துவநூல் - தத்துவ நூல்களாலும், கனம் காவியம் - பெரியகாவியங்களாலும், கவி வல்லோர் - கவி வல்லவர்கள், புகழ் - புகழ்கின்ற, அலங்காரனுக்கு - அழகனுக்கு, வனம் - நீரிலுள்ள, காவி - நீலோற்பலமலர் போன்ற, அம் கண்ணி - அழகிய கண்களையுடைய வளும், மா மலராள் - பெருமைபொருந்திய கமலத்திலிருப்பவளு மாகிய திருமகளுடைய, மணவாளனுக்கு - நாயகனுக்கு, சொலும் - சொல்லுங்கள். எ-று.

அங்கும் என்றது அவ்வழகரிடத்தும் என்றபடி. தத்துவநூல் - உண்மை நூல்கள், தத்துவநூல் கனக்காவியம் கவி வல்லோர்

என்பதற்கு - பகவற் கீதை முதலிய தத்துவ நூல்களிலும் பெரிய காவியங்களிலும் கவிபாடுவதிலும் வல்லவர் என்றுரைப்பினுமமையும். வனக்காவி - நிறமுள்ளகாவி என்னினுமாம்.

ருக. மணவாளராவிநிகர்திருமாதுக்கு மாலழகர்
பணவாளராவிற்கண்பள்ளிகொள்வார்திருப்பாதமெண்ணக்
குணவாளராவிரின்றேயுயிர்காளும்மைக்கூற்றுவனூர்
நிணவாளராவியறுக்குமப்போதுநினைப்பரிதே.

(இ - ள்.) உயிர்காள் - ஜீவர்களே, ஆவி நிகர் - பிராணனை யொத்த, திருமாதுக்கு - திருமகளுக்கு, மணவாளர் - நாயகர், மால் அழகர் - மாலலங்காரர், பணம் - படத்தையும், வாள் - ஒளியையு முடைய, அராவின்கண் - ஆதிசேஷன்மீது, பள்ளிகொள்வார்- பள்ளிகொள்பவர், (அவரது) திருப்பாதம் - திருவடிகளை, எண்ண- நினைக்க, இன்றே - இப்பொழுதே, குணவாளர் ஆவிர் - நற்குணத் தையுடையவர்களாவீர்கள், (இல்லாவிடில்) உம்மை - உங்களை, கூற் றுவனூர் - யமனூர், நிணம்வாள்-நிணத்தோடு கூடிய வாளை, அராவி- கூர்செய்துகொண்டு, அறுக்கும் அப்போது - அறுக்கும் அக்காலத் தில், நினைப்பு அரிது - நினைப்பது அருமையாகும். எ-று.

உயிர்களே, மரணகாலத்தில் இறைவனது திருவடியை நினைத் தலருமையாகும் ஆதலால் இப்பொழுதே நினைப்பீர்களானால் நீங்கள் விவேகிகளாகி நற்கதியை யடையலாமென்பது கருத்து.

ருஉ. நினைப்பரியாயெளியாயும்பர்யார்க்குநின்னன்பருக்கும்
வினைப்பரியானவன்வாய்பிளந்தாய்வியன்சோலைமலை
தனைப்பரியாநின்றதாளழகாமுற்சனனத்துள்ளும்
உனைப்பரியாமலன்றேபரிந்தேனிவ்வுடலத்தையே.

(இ - ள்.) உம்பர் யார்க்கும் - தேவரெல்லாருக்கும், நினைப்பு அரியாய் - நினைத்தற்கும் அருமையானவனே, நின் அன்பருக்கு-உன் னடியவர்க்கு, எளியாய் - சுலபனே, வினை - தீவினையையுடைய, பரி ஆனவன்-குதிரையாய் வந்த அசுரனது, வாய் பிளந்தாய்-வாயைக் கிழித்தவனே, வியன் - பெரிய, சோலைமலை - திருமாலிருஞ்சோலை மலையானது, தனை பரியாநின்ற - தன்னைச் சுமவாநின்ற, தாள் - திரு வடியையுடைய, அழகா - அழகனே, முன் சநநத்துள்ளும் - முற் பிறப்பிலும், உனை பரியாமல் அன்றே-உன்னை விரும்பாமலல்லவோ, உடலத்தை பரித்தேன் - இந்தவுடம்பைச் சுமந்தேன். எ-று.

பரியானவன் - கேசியென்னு மசுரன்.

ருங. உடலம்புயங்கத்துரிபோல்விடுமன்றுவனப்புள்ளின்
அடலம்புயமிசைநீவரவேண்டுமையானனற்கும்
மடலம்புயற்கும்வரந்தருஞ்சோலைமலைக்கரசே
கடலம்புயர்வரையாலடைத்தாயென்னைக்காப்பதற்கே.

(இ-ள்.) ஐந்து ஆநநற்கும் - ஐந்து முகங்களையுடைய ருத்ர மூர்த்திக்கும், மடல்-இதழ்களையுடைய, அம்புயற்கும்-தாமரை மலரிலிருப்பவனாகிய பிரமனுக்கும், வரம் தரும் - வரத்தைக்கொடுக்கின்ற, சோலைமலைக்கு அரசே - திருமாலிருஞ்சோலைமலைக்குத் தலைவனே, கடல் அம்பு - சமுத்திரநீரை, உயர் வரையால் - உயர்ந்த மலைகளால், அடைத்தாய் - திருவணை கட்டினவனே, உடலம் - உடம்பானது, புயங்கத்து உரிபோல் - பாம்பின் சட்டைபோல, விடும் அன்று - விடும் அந்நாளில், என்னை காப்பதற்கு-என்னை ரக்ஷிக்கும்பொருட்டு, உவணம் புள்ளின் - கருட பக்ஷியின், அடல் - வலியுள்ள, அம்-அழகாகிய, புயம்மிசை-தோள்களின் மீதேறி, நீ வரவேண்டும்-நீ யெழுந்தருளவேண்டும். எ-று.

மரணகாலத்தில் என்னைக்காப்பதற்கு நீ பெரிய திருவடியின் மீதேறி எழுந்தருளவேண்டுமென்பது கருத்து.

௫௪. காப்பவனந்தமலரோனையுங்கறைக்கண்டனையும்
பூப்பவனந்தரம்போக்கவைப்பான்புனல்பார்விசும்பு
தீப்பவனந்தருந்தெய்வசிகாமணிச்சேவடியை
நாப்பவநந்தப்புகழ்வார்க்கொப்பில்லைநவகண்டத்தே.

(இ-ள்.) அந்த மலரோனையும் - அந்தப்பிரமனையும், காப்பவன் - ரக்ஷிப்பவன், கறைக்கண்டனையும் - விஷகண்டத்தையுடைய ருத்ரனையும், பூப்பவன் - உண்டாக்குவோன், அந்தரம் - இறுதியில், போக்கவைப்பான் - அழிப்பவன், புனல் - நீரையும், பார் - மண்ணையும், விசும்பு - ஆகாசத்தையும், தீ - நெருப்பையும், பவநம் - காற்றையும், தரும் - உண்டாக்குகின்ற, தெய்வ சிகாமணி - தெய்வசிகாமணியாகிய அழகனது, சேவடியை - செவந்த திருவடிகளை, பவம் நந்த - பிறவி அற்றுப்போகும்படி, நா - நாவினால், புகழ்வார்க்கு - புகழ்கின்றவர்களுக்கு, நவகண்டத்து - நவகண்டங்களிலும், ஒப்பு இல்லை - நிகராவார் ஒருவருமில்லை. எ-று.

தெய்வசிகாமணி - தேவர்களுக்குச் சிரோ ரத்நம்போல்பவன். நவகண்டமாவன:—கீழ்விதேகம், மேல்விதேகம், வடவிதேகம், தென்விதேகம், வடவிரோபதம், தென்விரோபதம், வடபரதம், தென்பரதம், மத்திமகண்டம் என்பன.

௫௫. கண்டாகனன்கண்ணனல்லாற்கதியின்மைகண்டடைந்த
துண்டாகநம்பவொட்டாதுங்களூழ்வினையுண்மையறிந்
தண்டாகனவண்ணனேயருளாயென்றழகனுக்கே
தொண்டாகநன்னெஞ்சினுலுழைப்பீர்பிறர்தொண்டர்களே.

(இ-ள்.) பிறர் தொண்டர்களே - பிறதெய்வங்களுக்கு அடிமையாயிருப்பவர்களே, கண்டாகநன் - கண்டாகர்ணன், கண்ணன்

அல்லால் - க்ருஷ்ணனே யல்லாமல், கதி இன்மை - மோக்ஷமில்லாமையை, கண்டு - அறிந்து, அடைந்தது உண்டாக - அவனையே அடைந்த செய்தியுண்டாயிருக்க, உங்கள் ஊழ்வினை - உங்கள் ஊழ்வினையானது, நம்ப ஒட்டாது-நம்பும்படி செய்யாது, உண்மை அறிந்து - யதார்த்தத்தைத் தெரித்துகொண்டு, அண்டா - ஆயனே, கநவண்ணனே-மேகவண்ணனே, அருளாய் என்று - கிருபை செய்வாய் என்று, அழகனுக்கே - அலங்காரனுக்கே, தொண்டு ஆக - அடிமையாம்படி, நல் நெஞ்சினால் - நல்லமனதுடன், உரைப்பீர் - சொல்லுங்கள். எ-று.

கண்டாகநன் - மணியைக்காதிலே தரித்தவன். இவன்செய்தியைத் திருவேங்கடத்தந்தாதி எசு - ஆம் செய்யுள் உரையிற்காண்க. அண்டன்-இடையன், கநம் - மேகம், வண்ணம் - நிறம்.

நிசு. தொண்டுபடார்திருமாலிருஞ்சோலையிற்சோதிக்கன்பு
கொண்டுபடாமலரிட்டிறைஞ்சார்மடக்கோதையரைக்
கண்டுபடாமுலைதோயனுராகங்கருதியிரா
உண்டுபடாநிற்கும்போதுநைவாரெங்ஙனுய்வதுவே.

(இ-ள்) திருமாலிருஞ்சோலையில்-திருமாலிருஞ் சோலைமலையிலெழுந்தருளிய, சோதிக்கு - ஒளியுருவமாகிய அலங்காரனுக்கு, தொண்டுபடார் - அடிமைப்படார்கள், அன்புகொண்டு-அன்பினால், படா - வாடாத, மலர்-புஷ்பங்களை, இட்டு-அர்ச்சித்து, இறைஞ்சார்- வணங்கமாட்டார்கள், மடம் - இளமையாகிய, கோதையரை - மாதரை, கண்டு - பார்த்து, படாம் - உத்தரீய மணிந்த, முலை-தனக்களில், தோய் - அணைகின்ற, அநுராகம்-சுகத்தை, கருதி - எண்ணி, இரா- இரவில், உண்டு - புசித்து, படாநிற்கும்போதும் - கண்ணுறங்குங் காலத்திலும், நைவார் - வருந்துவார்கள், (இவர்கள்) உய்வது-உஜ்ஜீவிப்பது, எங்ஙனம் - எப்படி. எ-று.

கோதையர் - பூமாலையை யணிந்தவர், படா முலை என்று பிரித்து, சாயாத ஸ்தனங்கள் எனினுமாம். உண்டு படாநிற்கும்போதும் என்பதற்கு அநுபவித்து இறக்குங்காலத்திலும் என்றுரைப்பினுமமையும்.

நிஎ. உய்வந்தொழும்புசெய்தென்றிருப்போமையுய்யாமலைவர்
பெய்வந்தொழுவினைக்கேயென்பராற்பெருந்தேன்சிகரம்
தைவந்தொழுகுமலையலங்காரசதுமுகத்துத்
தெய்வந்தொழுந்தெய்வமேயென்கொலோவுன்றிருவுளமே.

(இ - ள்.) தொழும்பு செய்து - தொண்டு செய்து, உய்வம் என்று - உஜ்ஜீவிப்போமென்றெண்ணி, இருப்போமை - இருக்கின்ற

வர்களாகிய எங்களை, ஐவர் - பஞ்சேந்திரியங்கள், உய்யாமல் - உஜ்ஜீவிக்கவொட்டாமல், தொழுவினைக்கே-குட்ரோய்க்கே, பெய்வம்-உங்களை அகப்படுத்துவோம், என்பர்-என்று சொல்லுவர், ஆல்-ஆதலால், பெருதேன்-மிகுந்ததேனானது, சிகரம்-உச்சியை, தைவந்து-தழுவிக்கொண்டு, ஒழுகும் - ஒழுகாநின்ற, மலை - திருமாலிருஞ்சோலைமலையிலெழுந்தருளிய, அலங்கார - அழகனே, சதுமுகத்து தெய்வம் - நான்கு முகங்களையுடைய தேவனாகிய பிரமன், தொழும்-வணங்குகின்ற, தெய்வமே - கடவுளே, உன் திரு உளம் - உன் திருவுள்ளமானது, என் கொலோ-யாதாயிருக்கின்றதோ அறியேன்.

தைவந்து-என்பதற்குத் தைவா பகுதி. தைவரல்-தடவுதல்.

ருஅ. திருவிளையாடுதிண்டோட்செங்கண்மால்பலதேவருடன்
மருவிளையான்றிருமாலிருஞ்சோலைமலையெனவோர்
உருவிளையாமற்பிறப்பார்பலர்புகழோதிச்சிலர்
கருவிளையாநிற்கவித்தாவர்முத்தியிற்காமமற்றே.

(இ-ள்.) திரு விளையாடு - வீரலக்ஷ்மி விளையாடுகின்ற, திண்தோள் - வலிய புயங்களையும், செம்கண் - சிவந்தகண்களையுமுடைய, மால் - திருமால், பலதேவருடன் - பலராமருடனே, மருவு-பொருந்திய, இளையான் - திருத்தம்பியானவன், (அவனது) திருமாலிருஞ்சோலைமலையென - திருமாலிருஞ்சோலைமலையென்று, ஓர் உரு விளையாமல் - ஒரு உரு ஜபிக்காமல், பலர் - பல பேர், பிறப்பார் - பிறப்பார்கள், சிலர்-சிலபேர், புகழ் ஓதி-(அதின்) புகழை யெடுத்துச்சொல்லி, கரு இளையா நிற்க - கர்ப்பம் இளைத்துப்போக, காமம் அற்று-காமம் நீங்கி, முத்தியில் - மோக்ஷலோகத்தில், வித்து ஆவர்-விதைபோலாவர். எ-று.

திண்டோள் என மேல்வருதலால் திரு என்பதற்கு வீரலக்ஷ்மியெனப் பொருள்கொள்க. ஓர் உரு - ஒருதரம். கரு - பிறவிக்குக் காரணமெனினுமாம்.

ருகூ. காமத்தனைப்பொய்யழுக்காறுகோபங்களவுகொலை
ஆமனத்தனையுமுடையேனையாளுங்கொலான்பொருப்பாம்
தாமத்தனைவரும்போற்றநின்றான்பண்டுதாமரையோன்
பூமத்தனைச்செய்தநோய்துடைத்தானடிப்போதுகளே.

(இ-ள்.) ஆன்பொருப்பு ஆம் - இடபகிரியாகிய, தாமத்து-இடத்தில், அனைவரும்போற்ற - எல்லாரும்வணங்கும்படி, நின்றான்-நின்ற திருக்கோலமாயெழுந்தருளினவன், பண்டு - பூர்வகாலத்தில், தாமரையோன் - பிரமன், பூமத்தனை - ஊமத்தைமலரை யணிந்தருத்திரனுக்கு, செய்த - உண்டாக்கின, நோய்-துன்பத்தை, துடைத்தான் - நீக்கினவன், (அவனது) அடிபோதுகள் - திருவடித்தாமரை

கள், காமத்தனை - காமத்தையுடையேனை, பொய் - பொய்யும், அழுக்காறு - பொறாமையும், கோபம் - கோபமும், களவு - சோரமும், கொலை - கொலைத்தொழிலும், ஆம் - ஆகிய, அத்தனையும் - அவ்வளவு துர்க்குணங்களையும், உடையேனை - உடையவனாகிய என்னை, ஆளும் கொல் - ஆண்டருளுமோ. எ-று.

தாமம்-இடம்.

கூ0. போதகத்தானும்வெண்போதகத்தானும்புராந்தகனும்
தீதகத்தானதுதீர்தருங்காலைத்திருவரைசேர்
பீதகத்தாயழகாவருளாயென்பர்பின்னையென்ன
பாதகத்தான்மறந்தோதனிநாயகம்பாவிப்பரோ.

(இ-ள்.) போது அகத்தானும் - தாமரைமலரை இடமாக வுடையவனாகிய பிரமனும், வெண்போதகத்தானும் - வெள்ளையானையையுடையவனாகிய இந்திரனும், புரம் அந்தகனும் - முப்புரங்களையழித்தவனாகிய ருத்திரனும், அகத்து ஆனது-தம்மனத்திலுண்டானதாகிய, தீது - தீமைகள், தீர்தருங்காலை - நீங்குங்காலத்தில், திரு அரைசேர் - திருவரையிற்பொருந்திய, பீதகத்தாய் - பொன்னுடையையுடையவனே, அழகா - அலங்காரனே, அருளாய் - அருள்செய்வாய், என்பர் - என்றுபிரார்த்திப்பார்சள், பின்னை - பிறகு, என்ன பாதகத்தால் மறந்தோ - என்னபாபத்தால் மறந்தோ, தனிநாயகம்-ஒப்பற்ற இறைமைத்தன்மையை, பாவிப்பர் - தமக்கேறிட்டுக்கொள்வார்கள். எ-று.

போதகம் - யானை. வெண்போதகம் என்றது ஐராவதத்தை. பீதகம்-பொன். அந்தகன்-யமன்.

கூக. பாவிக்கமலவிரிஞ்சற்கிறையவர்பத்தர்தங்கள்
ஆவிக்கமலத்துவீற்றிருப்பாரளிப்பாடல்கொண்ட
வாவிக்கமலமணநாறுஞ்சோலைமலையைக்கண்ணால்
சேவிக்கமலமறுமனமேயெழுசெல்லுதற்கே.

(இ-ள்.) மனமே - நெஞ்சமே, பாவிக்கு - பாவியாகிய எனக்கும், அமலம் - பரிசுத்தமாகிய, விரிஞ்சற்கு - பிரமனுக்கும், இறையவர் - தலைவர், பத்தர்தங்கள் - அன்பருடைய, ஆவிகமலத்து - இருதயகமலத்திலே, வீற்றிருப்பார் - வீற்றிருப்பவர், (அவரது) அளிபாடல்கொண்ட - வண்டுகளின் பாடலைக்கொண்டிருக்கிற, வாவி-தடாகங்களிலுள்ள, கமலம் - தாமரைமலர்களின், மணம்நாறும்-வாசனை வீசுகின்ற, சோலைமலையை - திருமாலிருஞ்சோலைமலையை, கண்ணால் சேவிக்க - கண்களால் தரிசிக்கவே, மலம் அறும்-(நமது) பாபங்கள் நீங்கும், (ஆதலால்) செல்லுதற்கு எழு-(அவ்விடத்தில்) போவதற்கு எழுந்திருப்பாயாக. எ-று.

ஆவி-பிராணன். அது இருத்தற்கு இடம் இருதயமாதலால் ஆவிக்கமலமென்பதற்கு இருதயகமலமென்று பொருளுரைக்கப்பட்டது.

௬உ. செல்லுக்குவளைகுழனாட்டமென்றுதெரிவையர்பால்
பல்லுக்குவளைமுதுகாந்தனையும்புன்பாட்டுரைப்பீர்
அல்லுக்குவளையுழும்பாண்டிநாட்டையடைந்துநுங்கள்
சொல்லுக்குவளையுண்டார்க்கலங்காரர்க்குச்சூட்டுமினே.

(இ-ள்.) குழல் நாட்டம் - கூந்தலும் கண்களும், செல்லு குவளை என்று - (முறையே) மேகத்தையும் நீலோற்பலமலரையும் நிகர்க்குமென்று, தெரிவைர்பால் - மாதர்களிடத்து, பல் உக்கு-பற்கள் சிந்தி, வளை முதுகு ஆம் தனையும்-வளைந்தமுதுகினையுடைய ராமளவும், புன்பாட்டு உரைப்பீர் - அற்பமாகிய கவிகளைச் சொல்லிப்புகழ்கின்றவர்களே, அல்லுக்கு - இராக்காலத்திலும், வளை - சங்குகள், உழும்-உழாநின்ற, பாண்டிநாட்டையடைந்து - பாண்டிநாட்டைச் சேர்ந்து, கு-பூமியையும், அளை - தயிரையும், உண்டார்க்கு - அமுது செய்வதர்க்கு, அலங்காரர்க்கு - அழகர்க்கு, உங்கள் சொல்லு-உங்களுடைய சொன்மாலைகளை, சூட்டுமின் - சமர்ப்பியுங்கள். எ-று.

செல்லு - அல்லு - சொல்லு என்பவைகளிலுள்ள உகரங்கள் சாரியைகள். கவிபாடும் புலவர்களே நீங்கள் மாதரைப்பாடிப் புகழ்வதைவிட்டு அழகரைப்பாடிப் புகழுங்கள் என்பது கருத்து. அல்லுக்கு வளையுழும்பாண்டிநாடு என்றதினால் அத்தேயத்தின் சிறப்புக் கூறப்பட்டது.

௬௩. சூட்டோதிமஞ்சென்றுசொல்லாதென்காதலைத்தும்பியிசைப்
பாட்டோதிமங்கையரும்பணியார்பண்டுகன்மழைக்காக்
கோட்டோதிமமெடுத்தார்சோலைமாமலைக்கோவலனார்
மாட்டோதிமஞ்சினங்காளுரைப்பீர்மறுவாசகமே.

(இ-ள்.) என்காதலை - என் ஆசையை, சூடு - உச்சிக்கொண்டையையுடைய, ஓதிமம் - அன்னம், சென்று சொல்லாது-போய்ச் சொல்லாது, தும்பி-வண்டுகளின், இசைப்பாட்டு - இராகங்களோடு கூடிய பாடலமைந்த, ஓதி-கூந்தலையுடைய, மங்கையரும்-மாதரும், பணியார் - சொல்லமாட்டார்கள், (ஆதலால்) மஞ்சு இனங்காள்-மேகக்கூட்டங்களே, பண்டு - முற்காலத்தில், கல் மழைக்கு ஆ-கல்மழையைத்தடுத்தற்காக, கோடு - சிகரத்தையுடைய, ஓதிமம் - மலையை, எடுத்தார் - எடுத்தவரும், சோலைமாமலை - திருமாலிருஞ்சோலைமலையிலெழுந்தருளிய, கோவலனார் மாட்டு - ஆயனருமாகிய அவரிடத்தில், ஓதி-என் ஆசையைச்சொல்லி, மறுவாசகம்-அவர்சொல்லும் மறுமொழியை, உரைப்பீர் - எனக்குச்சொல்லுங்கள். எ-று.

மலை என்றது கோவர்த்தநகிரியை. இது மேகவிடுதூது என்னுந்துறை. அதாவது மேகத்தைத் தூதாகவனுப்புதல்.

௯௪. வாசம்பரந்ததுழாயுமென்பாடலுமாலையொளி
வீசம்பரம்பசும்பொன்னுமென்வேட்கையும்வீற்றிருக்கும்
தேசம்பரமபதமுமென்சிந்தையுந்தீவளியா
காசம்பரவைமண்கண்டுண்டமாலலங்காரனுக்கே.

(இ-ள்.) தீ-நெருப்பையும், வளி-காற்றையும், ஆகாசம்-ஆகாயத்தையும், பரவை-கடல்களையும், மண்-பூமியையும், கண்டு-படைத்து, உண்ட - இறுதிக்காலத்திலுண்டருளின, மாலலங்காரனுக்கு-பெருமைபொருந்திய அழகனுக்கு, வாசம்பரந்த - மணம்பரவிய, துழாயும்-திருத்துழாயும், என்பாடலும்-என்பாட்டும், மாலை-மாலைகளாம், பசும்பொன்னும் - பசுமையாகிய பொன்னும், என்வேட்கையும்-என் ஆசையும், ஒளிவீசு - காந்தியைவீசுகின்ற, அம்பரம்-ஆடையாகும், பரமபதமும்-வைகுந்தமும், என்சிந்தையும் - என்மனமும், வீற்றிருக்கும் - (அவன்) எழுந்தருளியிருக்கின்ற, தேசம்-நாடாகும்.

பரவை என்பது இவ்விடத்து நீரைக்குறித்தது.

௯௫. அலங்காரன்சுந்தரத்தோளானழகனணிமுடியில்
இலங்காரனேறுதிருவுடையானெட்டெழுத்துங்கற்றார்
கலங்காரனங்கன்கணையாலெச்செல்வமுங்காதலியார்
மலங்காரருந்துயர்மேவினுமாகுவர்வானவரே.

(இ - ள்.) அலங்காரன் - அலங்காரனென்னுந் திருநாமத்தையுடையவன், சுந்தரத்தோளான்-அழகிய புஜங்களையுடையவன், அழகன் - அழகையுடையவன், அணிமுடியில் - அழகாகிய முடியில், இலங்கு - விளங்குகின்ற, ஆரன் - மாலையையுடையவன், ஏறுதிரு உடையான்-திருமார்பினிடத்து ஆரோகணித்த பெரியபிராட்டியாரையுடையவன், (அவனது) எட்டு எழுத்தும் - எட்டெழுத்தையும், கற்றார் - கற்றவர்கள், அனங்கன்கணையால் - மன்மதபாணத்தினால், கலங்கார் - மனங்கலங்கார்கள், எச்செல்வமும் - எந்தச்செல்வத்தையும், காதலியார் - விரும்பமாட்டார்கள், அருதுயர்-பொறுத்தற்கரிய துன்பங்கள், மேவினும்-வந்தடைந்தாலும், மலங்கார்-வருந்தமாட்டார்கள்.

அலங்காரனது திருவஷ்டாக்ஷரத்தைக் கற்றவர்கள் மன்மத பாணத்தால் வருந்தாமலும், வேறுசெல்வங்களை விரும்பாமலும், பொறுத்தற்கரிய துன்பங்கள்வரினும் அவைகளுக்கு இளைத்துவருந்தாமலும் இருந்து சரீராந்தத்தில் பரமபதத்தையடைந்து நித்தியசூரிகளோடொத்து வாழ்வர்களென்பது கருத்து.

௩௬. வானவதாரணிசுந்தரத்தோளன்முன்மாவலியைத்
தானவதாரணிதாவென்றமாயன்றராதலத்து
மீனவதாரமுதலானவைவினையின்றியிச்சை
ஆனவதாரறிவாரவரோமுத்தராமவரோ.

(இ-ள்.) வான் - மேலான, நவம்-புதிய, தார் அணி- மாலையை யணிந்த, சுந்தரம் - அழகாகிய, தோளன் - புயங்களையுடையவன், முன் - முற்காலத்தில், மாவலியை - மஹாபலியைநோக்கி, தானவ- அவுணனே, தாரணி - பூமியை, தா என்ற - தாவென்று இரந்த, மாயன் - ஆச்சரியகுண சேஷ்டிதங்களையுடையவன், (அவன்) தராதலத்து-பூதலத்தில், மீன் அவதாரம் முதலானவை-மச்சாவதாரம் முதலானவைகள், வினை இன்றி - கர்மவசத்தாலன்றி, இச்சை ஆன- தனது இச்சையினுல்செய்த, அது - அந்தரஹஸ்யத்தை, யார் அறிவார் - யாவர் அறிகிருரோ, அவரோ - அவரோ, முத்தர் ஆம் - முத்தரானவர். எ-று.

முதலடியில் வானவதார் என்பதை வால் நவம் தார் எனப்பிரித்து பரிசுத்தமாகிய நூதநமாலை என்றுரைப்பினுமமையும்.

௩௭. ஆமவரைப்பணித்தாள்வாரழகரயனுமையாள்
வாமவரைப்பணியான்பணிபாதத்தைவாழ்த்துங்கொங்கை
ஏமவரைப்பணிபூணுள்சந்தேந்திழையாளுரைத்தால்
வேமவரைப்பணியாதேயெனுமெங்கண்மெல்லியலே.

(இ-ள்,) எங்கள் மெல்லியல் - எங்கள் பெண்ணானவள், ஆமவரை-ஆனவர்களை, பணித்து - அடிமைகொண்டு, ஆள்வார்-ஆள்பவர், அழகர் - அலங்காரர், அயன் - பிரமனும், உமையாள் - உமாதேவியை, வாமம் - இடப்பாகத்திலுடைய, அரைப்பணியான் - இடையில் பாம்பைக் கச்சையாகக்கட்டின ருத்ரனும், பணி - வணங்குகின்ற, பாதத்தை - திருவடியை, வாழ்த்தும்-வாழ்த்துவாள், கொங்கை-தனங்களாகிய, ஏமம்வரை - பொன்மலையில், பணிபூணுள்-ஆபரணங்களையணியாள், ஏந்திழையாள் - பாக்கியானவள், சந்து உரைத்தால்-தூதுசொன்னுல், வேம் - மனம்வேகின்றது, அவரை பணியதே-அவரைச்சொல்லாதே, என்னும் - என்றசொல்லுவாள். எ-று.

ஆமவரை என்றது ஆசிரயித்தவரையென்றபடி. ஏமவரை-மேருமலை. "சந்து ஏந்திழையாளுரைத்தால் வேமவரைப்பணியாதே யெனும் என்பதற்குச்" சந்தநத்தைப் பாக்கியிழைத்தால் சுடுவரை யெனக்குக் கொடாதேயென்பள் என்றுரைத்தலுமாம். இது தாய்க்கூற்று.

௩௮. மெல்லியலைப்பரியங்கனையாரும்வெறுத்துவசை
சொல்லியலைப்பரியங்கவொட்டார்சுடர்மாமலையைப்
புல்லியலைப்பரியங்கத்திலேறும்புயல்பதின்மர்
நல்லியலைப்பரியங்கழற்றுமநயந்தபின்னே.

(இ-ள்.) சுடர் மா கமலையை புல்லி - பிரகாசியாநின்ற பெரிய பிராட்டியாரைத் தழுவிக்கொண்டே, அலை - திருப்பாற்கடலில், பரியங்கத்தில் ஏறும்-திருவனந்தாழ்வானாகிய கட்டிலிலேறுகின்ற, புயல்-நீலமேகம்போல்பவரது, பதின்மர் - பதின்மராழ்வார்களுடைய, நல்-விலக்ஷணமாகிய, இயலை-இலக்கண அமைதியுள்ள தமிழ்மாலைகளை, பரி-தாங்கிய, கழல்-திருவடிகளிலணிந்திருக்கிற, தாமம்-மாலையை, நயந்தபின் - விரும்பினபிறகு, மெல்லியவலை - மிருதுவாகிய சுபாவத்தையுடையவளை, பரி - அன்புசெய்கிற, அங்கனையாரும்-மாதர்களும், வெறுத்து - கோவித்து, வசைசொல்லி-நிந்தைசொல்லி, அலைப்பர்-வருந்துவார்கள், இயங்கவொட்டார்-சஞ்சரிக்க விடார்கள்.

அலைப்பரியங்கம் என்பதற்குத் திருப்பாற்கடலாகிய கட்டில் எனினுமாம். இதுதாய்க்கூற்று.

௬௯. பின்னிறப்பும்பிறப்புநரைமூப்பும்பிணியுமனை
முன்னிறப்பும்பிரித்தானிருந்தானவர்மூதிலங்கை
மன்னிறப்புங்கக்கணைதொட்டசோலைமலையழகன்
பொன்னிறப்புண்டரிகத்திருத்தாளன்றிப்போற்றிலமே.

(இ-ள்.) பின் - பிறகு உண்டாகக் கடவதாகிய, இறப்பும்-மரணத்தையும், பிறப்பும் - ஜநநத்தையும், நரை மூப்பும் - நரை முதுமைகளையும், மனைமுன் - குடும்பத்தில், இறப்பும் - சென்று தடுமாறுதலையும், பிரித்தான் - நீக்கினான், (ஆதலால்) இரு - பெரிய, தானவர் - அரக்கர் வாழ்கின்ற, முது இலங்கையன் - பழமையாகிய இலங்கைக் கரசனாகிய ராவணன், இற - முடியும்படி, புங்கம் - உயர்வாகிய, கணை - பாணத்தை, தொட்ட - பிரயோகித்த, சோலைமலை-சோலைமலையிலெழுந்தருளி யிருக்கிற, அழகன் - அலங்காரனது, பொன் நிறம் - பொன்னிறமுள்ள, புண்டரிகம் - தாமரைமலர்போன்ற, திரு தாள் அன்றி - திருவடியையன்றி, போற்றிலம்-வேறொன்றையும் வணங்கோம். _ எ-று.

மனை முன் என்பதில் முன் ஏழாம்வேற்றுமையுருபு. எமது ஜநநமரணாதிகளை நீக்கி எம்மை யாண்டருளின அழகனது திருவடியையன்றி வேறொன்றையும் வணங்கோம் என்பது கருத்து.

௭0. போற்றியிராமவென்னார்சோலைமாமலைபோதவிடார்
மாற்றியிராவைப்பகலாக்கிலார்வண்டுழாய்குழன்மேல்
ஏற்றியிராசதமாகவையாரொன்னிடாரையெல்லாம்
மாற்றியிராதன்னைமாரென்னைவாய்வம்பளக்கின்றதே.

(இ-ள்.) அன்னைமார் - தாய்மார், போற்றி - வணங்கி, இராம என்னார் - ராமா என்று சொல்லார், சோலைமாமலை - திருமாலிருஞ்

சோலைமலைக்கு, போதவிடார்-போகவொட்டார்கள், இராவைமாற்றி-இராக்காலத்தை மாறுபடுத்தி, பகல் ஆக்கிலார்-பகற்காலமாகச் செய்யார், வள்துழாய்-வளவிய திருத்துழாயை, குழல்மேல் ஏற்றி-கூந்தலின்மேல் வைத்து, இராசதமாக வையார் - பெருமையாக வையார், என் இடரை எல்லாம் - என் துன்பத்தையெல்லாம், மாற்றி இரார்-நீக்கியிரார்கள், என்னை வாய் வம்பு அளக்கின்றதே - என்னை வாய் வம்பு அளப்பதே அவர்கள் தொழிலாயிருக்கிறது. எ-று.

வம்பளத்தல்-வீண்வார்த்தை பேசுதல். இது தலைமகள்கூற்று.

௭௧. அளப்பதுமங்கையினீரேற்பதுந்தந்தளிப்பதும்பின்
பிளப்பதுமங்கையில்வெண்கோட்டிற்கொள்வதும்பேருணவாக்
கிளப்பதுமங்கையெனத்தோள்புணர்வதுங்கேட்கில்வையம்
வளப்பதுமங்கயஞ்சேர்சோலைமாமலைமாதவரே.

(இ-ள்.) வளம் - வளமாகிய, பதுமம் - தாமரைகள், கயம்-குளங்களில், சேர்-பொருந்திய, சோலைமாமலை - திருமாலிருஞ்சோலைமலையிலெழுந்தருளிய, மாதவர் - லக்ஷ்மிநாதர், அளப்பதும்-அளப்பதும், அம்கையில் - அழகிய கையில், நீர் ஏற்பதும் - தாரை வார்க்கும் நீரோடு ஏற்றுக்கொள்வதும், தந்து அளிப்பதும் - படைத்துக் காப்பதும், பின் - பிறகு, பிளப்பதும் - பிளவு படுத்துவதும், அங்கு-அவ்விடத்தில், அயில் - கூர்மையாகிய, வெண்கோட்டில் - வெண்மையாகிய கொம்பில், கொள்வதும் - ஏந்துவதும், பேர் உணவு ஆ-பெரிய உணவாக, கிளப்பதும் - சொல்லுவதும், மங்கை என - மனையாளாக, தோள் புணர்வதும் - தோள்களைத் தழுவுவதும், கேட்கில்-எதுவென்று கேட்குமிடத்தில், வையம் - பூமியேயாம். எ-று.

அங்கை யினீரேற்றது மஹாபலியினிடத்தில். வெண்கோட்டிற் கொண்டது வராஹாவதாரத்தில்.

௭௨. மாதவராலும்பராலறியார்மதுரைப்பிறந்த
யாதவராலிலைமேற்றுயின்றாரிருந்தாழ்சுனையில்
போதவராலுகண்மாலிருஞ்சோலையிற்போம்பிறவித்
தீதவராலன்றியெத்தேவராலுந்தெறலரிதே.

(இ-ள்) (உலகத்தாரே) மாதவரால்-பெரிய தவத்தினையுடைய முனிவராலும், உம்பரால் - தேவர்களாலும், அறியார் - அறியப்படாதவர், மதுரை - வடமதுரையில், பிறந்த-அவதரித்த, யாதவர்-ஆயர், ஆலிலைமேல் துயின்றார் - ஆலிலையின்மீது கண்வளர்ந்தருளினவர், (அவரது) இரு - பெரிய, தாழ் - ஆழ்ந்த, சுனையில் - சுனைகளில், போத - மிகவும், வரால் - வரால் மீன்கள், உகள் - துள்ளுகின்ற, மாலிருஞ்சோலையில் - திருமாலிருஞ்சோலைமலையில், போம் - நீங்கள் செல்லுங்கள், பிறவித்தீது - பிறப்பாகிய தீமை, எத்தேவராலும்-எந்தத்தேவர்களாலும், தெறல் - நீக்குதல், அரிது-அருமையாகும்.

யாதவர் யதுவமிசத்திற் பிறந்தவர். பிறவித்தீமை எந்தத்தேவ ராலும் நீக்குதல் அருமை, ஆதலால் அதை நீக்குதற்குரிய அழக னது திருமாலிருஞ்சோலைமலையிற் செல்லுங்கள். சென்றால் அவர் அப்பிறவியை நீக்கிவிடுவர் என்பது கருத்து.

எங. அரியவரந்தந்தயன்முதலோர்க்கருள்செய்தவரைப்
பெரியவரந்தமில்வாழ்வினராக்கித்தம்பேரருளால்
கரியவரந்தணர்கைதொழுமாலலங்காரர்வையத்
துரியவரந்தரங்கத்துயர்தீர்க்கவுலாவுவரே.

(இ-ள்.) கரியவர்-கரிய திருமேனியையுடையரும், அந்தணர்-வேதியர்கள், கைதொழும்-கைகூப்பி வணங்குகின்ற, மாலலங்காரர்-திருமாலிருஞ்சோலைமலை யழகருமாகிய இறைவர், அரிய-அருமையாகிய, வரம் தந்து - வரங்களைக் கொடுத்து, அயன் முதலோர்க்கு-பிரமன் முதலானோர்க்கு, அருள் செய்து - கிருபைசெய்து, அவரை-அவர்களை, பெரியவர் - பெரியவராகவும், அந்தம் இல் - முடிவில்லாத, வாழ்வினர் - வாழ்வையுடையவர்களாகவும், ஆக்கி-செய்து, தம்பேர் அருளால் - தமது பெருங்கருணையால், வையத்து - உலகத்தில், உரியவர் - தமக்குரியவர்களாகிய அடியார்களுடைய, அந்தரங்கம் - இருதயத்திலுள்ள, துயர் - துன்பத்தை, தீர்க்க - நீக்கும்பொருட்டு, உலாவுவர் - உலாவுவார். எ-று.

வாழ்வு ஆயுளையும் செல்வத்தையு முணர்த்தும். உலாவுவர் என்றது விபவம், அர்ச்சை, அந்தரியாமித்துவம் இவைகளையுடையராய் எங்கும் வியாபித்திருப்ப தொன்றபடி.

எச. உலகுதிக்கும்படிசிந்தித்துத்தந்திவ்வுலகிலுறும்
நலகுதிக்கும்படிநின்றபிரானிடநானிலமும்
இலகுதிக்கும்விசும்புந்தொழவோங்கியிறால்வருடை
பலகுதிக்குந்தொறுந்தேன்பாயுஞ்சோலைப்பருப்பதமே.

(இ-ள்.) உலகு - லோகங்கள், உதிக்கும்படி - உண்டாகும்படி, சிந்தித்து-சங்கற்பித்து, தந்து-சிருஷ்டித்து, இ உலகில் உறும்-இவ்வுலகத்திற் பொருந்திய, நல - நன்மைகள், குதிக்கும்படி - உயரும்படி, நின்ற பிரான் - நிலைபெற்ற உபகாரகன், (அவனது) இடம்-இடமாவது, நானிலமும்-பூமியிலுள்ளாரும், இலகு-பிரகாசிக்கின்ற, திக்கும் - திசைகளிலுள்ளாரும், விசும்பும் - விண்ணுலகத்திலுள்ளாரும், தொழ - வணக்கும்படி, ஓங்கி - உயர்ந்து, வருடை பல-அநேக மலையாடுகள், குதிக்குந்தொறும் - குதிக்குந்தோறும், இறால் - தேன் கூட்டினின்றும், தேன் பாயும்-தேன் பெருகிப்பாய்கின்ற, சோலைப் பருப்பதமே - திருமாலிருஞ்சோலைமலையே. எ-று.

நானிலம் நாலு நிலம் எனப்பிரியும். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன. இந்நான்கும் பூமியின் பிரிவாதலால் பூமிக்கு நானிலமெனப் பெயராயிற்று. வருடை பல குதிக்குந்தோறும் இருலினின்றும் தேன் பாய்தல் அவ்வருடைகளின் கொம்புபட்டென்க.

௭௫. பருப்பதந்தாமன்னிநிற்பதுபாற்கடல்பள்ளிகொள்வ
திருப்பதந்தாமம்பண்டிப்போதெலாமிளஞாயிறன்ன
உருப்பதந்தாமதர்க்கீயாமலன்பர்க்குதவழகர்
திருப்பதந்தாமரைபோல்வாருகப்பதென்சிந்தையே.

(இ-ள்.) இளஞாயிறு அன்ன-இளஞ்சூரியனை யொத்த, உரு-திருவுருவத்தையுடைய, பதம் - பரமபதத்தை, தாமதர்க்கு - தாமசகுணத்தையுடையவருக்கு, ஈயாமல் - கொடாமல், அன்பர்க்கு-அடியார்களுக்கு, உதவு - கொடுக்கின்ற, அழகர்-அலங்காரர், திருப்பதம்-திருவடிகள், தாமரைபோல்வார் - தாமரைமலரை நிகர்த்திருக்கப்பெற்றவர், (அவர்) பண்டு - பூர்வகாலத்தில், தாம் மன்னி நிற்பது-தாம் நிலைபெற்று நிற்பது, பருப்பதம்-மலையாகும், பள்ளிகொள்வது-கண்வளர்ந்தருளுவது, பாற்கடல் - திருப்பாற்கடலாகும், இருப்பது-வீற்றிருப்பது, அம் அழகிய, தாமம் - பரமபதமாகும், இப்போது எல்லாம்-இப்பொழுதெல்லாவகையாலும், உகப்பது - விரும்புவது, என் சிந்தையே - என் மனமேயாகும். எ-று.

பருப்பதம் என்றது திருமாலிருஞ்சோலைமலை திருவேங்கடமலை முதலியன. அம் தாமம் எனப்பிரிக்காமல், அந்தாமம் என ஒரு சொல்லாக்கி இதுவே பரமபதத்தை யுணர்த்துதலுமாம். இளஞாயிறன்ன உரு அழகர் பதம் தாமதர்க்கு ஈயாமல் அன்பர்க்கு உதவு அழகர் என இயைத்துக்கொள்க.

௭௬. சிந்திக்கலாரங்கொழிக்குந்திருச்சிலம்பாற்றழகும்
பந்திக்கலாபமயிலாடுஞ்சாரலும்பங்கயனோ
டந்திக்கலாமதியாற்கரியாருறையான்பொருப்பும்
வந்திக்கலாமெனிற்சந்திக்கலாமுயர்வைகுந்தமே.

(இ-ள்.) சிந்தி-சிதறி, கல்லாரம்-கழுநீர்மலர்களை, கொழிக்கும்-ஒதுக்குகின்ற, திரு - அழகாகிய, சிலம்பு ஆறு - நூபுர நதியின், அழகும் - அழகையும், பந்தி - வரிசையாகிய, கலாபம் - தோகையையுடைய, மயில் - மயில்கள், ஆடும் - நடிக்கின்ற, சாரலும் - சாரலையும், பங்கயனொடு - பிரமனொடு, அந்தி - அந்திக்காலத்திற்றோன்றுகின்ற, கலா - கலைகளையுடைய, மதியாற்கு - பிறைச்சந்திரனை யணிந்த ருத்திரமூர்த்திக்கும், அரியார்-அரியவராகிய, அழகர்-அலங்காரர், உறை-நித்திய வாசம்பண்ணுகிற, ஆன் பொருப்பும்-இடபகிரியையும்,

வந்திக்கலாம் எனில்-துதிக்கக்கூடுமோனல், உயர்-உயர்ந்த, வைகுந்தம்-பரமபதத்தை, சந்திக்கல் ஆம் - அடையலாம். எ-று.

ஆன் பொருப்பு என்றது திருமாலிருஞ்சோலைமலையை.

எஎ. வைதாரையுமுன்மலைந்தாரையுமலர்த்தாளில்வைத்தாய்
மொய்தாரையத்தனைத்தீங்கிழைத்தேனையுமூதுலகில்
பெய்தாரைவானிற்புரப்பானிடபப்பெருக்கிரியாய்
கொய்தாரைவேய்ந்ததிருவடிக்கீழ்த்தொண்டுகொண்டருளே.

(இ-ள்.) வைதாரையும் - நிந்தித்தவர்களையும், முன் மலைந்தாரையும் - முற்காலத்திற் போர் செய்தவர்களையும், மலர் - தாமரை மலர்போன்ற, தாளில் - திருவடிகளில், வைத்தாய் - வைத்தவனே, மொய் - நெருங்கிய, தாரை அத்தனை - நக்ஷத்திரங்களினவ்வளவு தொகையுள்ள, தீங்கு-தீமைகளை, இழைத்தேனையும்-செய்த என்னையும், மூது உலகில் - பழமையாகிய உலகத்தில், பெய் - பெய்கின்ற, தாரை - நீர்த்தாரைகளையுடைய, வானின் - மேகம்போல, புரப்பான் - ரக்ஷிக்கும்பொருட்டு, பெரு - பெரிதாகிய, இடபகிரியாய்-ரிஷபமலையில் எழுந்தருளியிருப்பவனே, கொய் - பறிக்கப்படுகிற, தாரை - புஷ்பங்களால் தொடுத்தமாலையை, வேய்ந்த - தரித்த, திருவடிக்கீழ் - திருவடியின்கீழே, தொண்டு கொண்டருள் - அடிமை கொண்டருள்வாயாக. எ-று.

மூதுலகில் பெய்தாரை என்பதற்குப் பழமையாகிய உலகத்தில் படைத்து வைக்கப்பட்டவரை யென்றுரைப்பினுமாம். வைதார் சிசுபாலன் முதலானோர். மலைந்தார்-இராவண கும்பகர்ணாதிகள்.

எஅ. கொண்டமருந்துங்கடைவாய்வழியுகக்கோழைவந்து
கண்டமருந்துயராம்போதுன்பாதங்கருதறியேன்
வண்டமருந்துளவோனேதென்சோலைமலைக்கரசே
அண்டமருந்தும்பிரானேயின்றேயுன்னடைக்கலமே.

(இ-ள்.) கொண்ட மருந்தும் - உட்கொண்ட ஔஷதமும், கடைவாய்வழி - கடைவாயின் வழியாக, உக-சிந்த, கோழைவந்து-கபம் மேலெழுந்து, கண்டம் - கண்டத்தில், அரு - பொறுத்தற்கரிய, துயர் - துன்பம், ஆம்போது - உண்டாகின்ற மரணகாலத்தில், உன்பாதம்-உன் திருவடிகளை, கருத அறியேன் - நினைக்க அறியேன், (ஆதலால்) வண்டு அமரும் - வண்டுகள் பொருந்திய, துளவோனே - திருத்துழாய் மாலையையுடையவனே, தென் சோலைமலைக்கு அரசே - தென்திசையிலுள்ள திருமாலிஞ் சோலைமலைக்கு அரசனே, அண்டம்-உலகங்களை, அருந்தும் - உண்ணுகின்ற, பிரானே-எம்பெருமானே, இன்றே - இன்றைக்கே, உன் அடைக்கலம்-நான் உனக்கு அடைக்கலம். எ-று.

உட்கொண்ட மருந்தும் கடைவாய் வழியாகச் சிந்துதல் முதலியவை யுண்டாகின்ற சரமதசையில், உன் திருவடிகளை நினைத்தல் அருமையாகும் ஆதலால் இன்றே உன்னைச் சரணடைந்தேன் என்பது கருத்து.

௬௯. அடைக்கலந்தானையிரந்தாள்புகலவவள்பொருட்டால்
படைக்கலந்தானைத்தருமன்கெடாமல்வெம்பாரதப்போ
ரிடைக்கலந்தானையலங்காரனைச்சரணென்றடைந்தேன்
முடைக்கலந்தானையுமப்போதயர்ப்பினுமுத்தியுண்டே.

(இ-ள்.) தானை இரந்தாள்-ஆடையை இரந்தவளாகிய திரௌபதி, அடைக்கலம் புகல - சரணமென்றுசொல்ல, அவள் பொருட்டால் - அவள் நிமித்தத்தால், படைக்கலம் - ஆயுதங்களையும், தானை-சேனைகளையுமுடைய, தருமன் - தருமராஜன், கெடாமல் - அழியாமல், வெம் - கொடிய, பாரதப்போர் இடை-பாரதயுத்தத்தில், கலந்தானை - சேர்ந்திருந்தவனை, அலங்காரனை - அழகனை, சரண் என்று அடைந்தேன் - அடைக்கலமென்றடைந்தோன், (ஆதலால்) முடைகலம் தான் - புலால் நாற்றத்தையுடைய இச்சரீர மானது, நையும் அப்போது - நைந்து இறக்கும் அப்பொழுது, அயர்ப்பினும் - மறந்தாலும், முத்தி உண்டு - மோக்ஷமுண்டு. எ-று.

இப்பொழுது அழகனைச் சரணென்றடைந்தேனாதலால் அந்தச் சரமதசையில் அவனை மறப்பினும் எனக்கு முத்தியுண்டென்பதாம்.

௭0. உண்டிறக்கும்புவனங்களைமீளவுமிழ்ந்திலையேல்
பண்டிறக்கும்பதுமத்தோன்புரந்தரன்பைந்தழல்போல்
கண்டிறக்குஞ்சங்கரன்முதலோர்களைக்கண்டவரார்
திண்டிறக்குஞ்சரஞ்சேர்சோலைமாமலைச்சீதரனே.

(இ-ள்.) திண்-வலிமையையும், திறல்-வெற்றியையுமுடைய, குஞ்சரம் - யானைகள், சேர் - சேர்ந்த, சோலைமாமலை - திருமாலிருஞ்சோலைமலையிலெழுந்தருளின, சீதரனே - லக்ஷ்மீநாதனே, உண்டு இறக்கும் - உண்டு கழிந்த, புவனங்களை - உலகங்களை, மீள - மறுபடியும், உமிழ்ந்திலையேல் - உமிழ்ந்திலையாயின், பண்டு-பூர்வகாலத்தில், இறக்கும்-இறந்த, பதுமத்தோன் - பிரமன், புரந்தரன் - இந்திரன், பை தழல் போல்-பசிய நெருப்பைப்போல, கண் திறக்கும்-கண்ணைத் திறக்கின்ற, சங்கரன் - ருத்திரமூர்த்தி, முதலோர்களை-முதலானவர்களை, கண்டவர் ஆர் - பார்த்தவர் யார். எ-று.

பைந்தழல்போல் கண் என்றது நெற்றிக்கண்ணை. அழகனே நீ அமுது செய்த உலகங்களை மீள உமிழ்ந்திலையாயின் பிரம ருத்திரேந்திராதிகள் அழிந்தொழிவர் என்பது கருத்து.

அக. சீரரிதாழ்பொழின்மாலிருஞ்சோலையிற்செல்வர்செங்கண்
போரரிதாள்புனைதாரரிதாகிற்றண்பூந்துளவின்
தாரரிதாவுந்தழையரிதாகிற்றழைதொடுத்த
நாரரிதாகிற்பிழைப்பரிதாமெங்கணன்னுதற்கே.

(இ-ள்.) சீர்-சிறப்புப்பொருந்திய, அரி - சூரியன், தாழ்-தாழ்கின்ற, பொழில்-சோலைகள் சூழ்ந்த, மாலிருஞ்சோலையில்-திருமாலிருஞ்சோலைமலையிலெழுந்தருளிய, செல்வர் - நித்தியை சுவரியத்தையுடையவர், செம்கண் - செவந்தகண்களையுடைய, போர் - போர்த்தொழிலில்வல்ல, அரி - நரசிங்கமானவர், (அவரது) தாள் - திருவடிகளில், புனை - தரித்த, தார் அரிது ஆகில்-மாலைகிடைப்பது அரிதாயிருந்தால், தண் - குளிர்ச்சிபொருந்திய, பூ - அழகாகிய, துளவின்தார் - திருத்துழாய் மாலையிலுள்ள, அரிதாவும் - வண்டுகள் தாவுகின்ற, தழை அரிது ஆகில்-தழையானது கிடைப்பதருமையாயிருந்தால், தழை தொடுத்த-தழையைக்கட்டின, நார் அரிது ஆகில்-நார்கிடைப்பதருமையாயிருந்தால், எங்கள் நல்நுதற்கு - எங்கள் பெண்ணுக்கு, பிழைப்பு - உயிர்வாழ்ந்திருத்தல், அரிது ஆம் - அருமையாகும். எ-று

சீர் அரிதாழ்பொழில் - சிறப்புள்ள கிளிகள் தங்குதற்குரிய சோலை எனினுமாம், நல்நுதல்-அழகாகிய நெற்றியையுடையவள்.

அஉ. நன்னுதலைப்படணிபூண்மார்பில்வைத்துவிண்ணாட்டிருப்பார்
மின்னுதலைப்பணிமேற்றுயில்வார்விடைவெற்பினிற்பார்
மன்னுதலைப்பணியன்பரைவைக்குமலரடிக்கீழ்த்
துன்னுதலைப்பணிசெய்வதெஞ்ஞான்றென்றுயர்தொலைந்தே.

(இ-ள்.) நல் நுதலை - அழகாகிய நெற்றியையுடைய பெரியபிராட்டியை, பணி - கௌஸ்து வாபரணத்தை, பூண் - தரித்த, மார்பில் - திருமார்பில், வைத்து - அமைத்துக்கொண்டு, விண்நாடு-பரமபதத்தில், இருப்பார் - வீற்றிருப்பவர், மின்னு - மின்னுகின்ற, தலை - தலைகளையுடைய, பணிமேல் - ஆதிசேடன்மீது, துயில்வார்-திருக்கண்வளர்பவர், விடைவெற்பில் நிற்பார்-இடபகிரியில் நிற்பவர், (அவருடைய) மன்னுதலை - நிலைபெறுதலை, பணி - தம்மை வணங்குகிற, அன்பரை - அடியார்களை, வைக்கும் - வைக்கின்ற, மலர் அடிக்கீழ் - தாமரை மலர்போலும் திருவடியின் கீழே, என் துயர்தொலைந்து - என் துன்பம் நீங்கி, துன்னு - நெருங்கிய, தலைபணி - தலைமையாகிய கைங்கரியங்களை, செய்வது - பண்ணுவது, எஞ்ஞான்று-என்நாள். - எ-று.

ஆதிசேடன் தலையில் மாணிக்கமுள்ளதாதலால் மின்னுதலை என்றார். மன்னுதலைப்பணியன் பரைவைக்கும் என்பதற்கு அன்பரை நிலைபெறுதலைப்பண்ணிவைக்கும் என்றுரைப்பினுமாம்.

அங. தொலைந்தானையோதுந்தொலையானையன்னைசொல்லான் மகுட
கலைந்தானைஞானக்கலையானையாய்ச்சிகலைத்தொட்டிலோ [ம்
டலைந்தானைப்பாலினலையானைவாணன்கையற்றுவிழ
மலைந்தானைச்சோலைமலையானைவாழ்த்தென்மடநெஞ்சமே.

(இ-ள்.) என்மட நெஞ்சமே - என் அறியாமையையுடைய மனமே, தொலைந்து - வலி குலைந்து, ஆனை ஓதும் - கஜேந்திராழ்வான் அழைத்த, தொல்லையானை - பழையோனை, அன்னை சொல்லால் - சிறியதாயின் வார்த்தையால், மகுடம் கலைந்தானை - முடிசூடுதல் நீங்கினவனை, ஞானக்கலையானை - ஞானநூல்களாற் சொல்லப்பட்டவனை, ஆய்ச்சி - யசோதைப்பிராட்டியின், கலைதொட்டிலோடு-துணித்தொட்டிலோடு, அலைந்தானை-அசைந்தவனை, பாலின் அலையானை - திருப்பாற்கடலையுடையவனை, வாணன் கை - வாணாசுரனுடைய கைகள், அற்று விழ-அறுபட்டுவிழ, மலைந்தானை-போர் செய்தவனை, சோலைமலையானை - திருமாலிருஞ்சோலைமலையையுடையவனை, வாழ்த்து - துதி. எ-று.

ஞானக்கலையானை என்பதற்கு, ஞான நூலாகிய கீதையை வெளிப்படுத்தினவனை எனினுமாம்.

அச. நெஞ்சிலம்பாற்றமுடியாதுவேளெய்துநீளிரவும்
துஞ்சிலம்பாற்றுளியுநஞ்சமாஞ்சொரிகன்மழையை
அஞ்சிலம்பாற்றடுத்தாரலங்காரரடிவிளக்கும்
செஞ்சிலம்பாற்றருகேகிடத்தீருயிர்தேற்றுதற்கே.

(இ-ள்.) நெஞ்சில் - மார்பில் தைக்கிற, அம்பு - பாணத்தை, ஆற்றமுடியாது - பொறுக்கமுடியாது, வேள் எய்தும் - மன்மதன் வருகிற, நீள் இரவும் - நெடிதான இராக்காலத்திலும், துஞ்சிலம்-உறங்கிலோம், பால்துளியும் நஞ்சம் ஆம் - பாலின்துளியும் விஷத்துக்குச் சமானமாகும், (ஆதலால்) சொரி - பொழிகின்ற, கல்மழையை - சிலாவருஷத்தை, அம் சிலம்பால் - அழகிய கோவர்த்தநமலையினால், தடுத்தார் - தடுத்தவர், அலங்காரர்-அழகர், (அவரது) அடி விளக்கும் - திருவடியை விளக்குகின்ற, செம் - செவந்த, சிலம்பு ஆறு அருகே - நூபுர நதியின் சமீபத்தில், உயிர்தேற்றுதற்கு - என்னுயிரைத் தெளிவித்தற்கு, கிடத்தீர் - கிடத்திவையுங்கள். எ-று.

இது தலைமகள் கூற்று.

அரு. தேற்றுவித்தாற்புனறேற்றுநர்போற்றிருவெட்டெழுத்தால்
மாற்றுவித்தானென்மயக்கமெல்லாமண்ணும்விண்ணுமுய்யப்
போற்றுவித்தாரப்புயலலங்காரன்பொன்மேருவைப்போல்
தோற்றுவித்தாரணியுஞ்சுந்தரத்திருத்தோளண்ணலே.

(இ-ள்.) மண்ணும் - மண்ணுலகத்தாரும், விண்ணும்-விண்ணுலகத்தாரும், உய்ய - உஜ்ஜீவித்தற் பொருட்டு, போற்று - வணங்குகிற, வித்தாரம் - பெரிய, புயல் - மேகம்போல்பவர், அலங்காரர்-அழகர், பொன்மேருவைப்போல் - பொன்னுலாகிய மேருமலைபோல, தோற்று - காணப்படுகிற, வீ - மலர்களால் தொடுக்கப்பட்ட, தார்-மாலையை, அணியும் - தரிக்கின்ற, சுந்தரம் திருதோள் அண்ணல்-சுந்தரபாஹு என்று சொல்லப்படுகிற பெரியோன், தேற்ற வித்தால்-தேற்றும் கொட்டையால், புனல் தேற்றுநர்போல்-நீரைத்தெளிவிப்பாரைப்போல், என்மயக்கம் எல்லாம் - என்மயக்கமுழுதும், திருஎட்டு எழுத்தால் - திருவஷ்டாக்ஷரத்தினுல், மாற்றுவித்தான்-நீக்குவித்தான். எ-று.

நான் காமடியில் விதார் என்பது வீதார் என்பதன் குறுக்கம். வீ - மலர்.

அசு. அண்ணலைவான்மதிதோய்சோலைமாமலையச்சுதனைத்
தண்ணலைவானவனைத்தெய்வநாதனைத்தாளடைவான்
எண்ணலைவான்பகையாமைவரோடிசைந்தின்னமுடற்
புண்ணலைவாயெண்ணிணுய்மனமேயுன்புலமைநன்றே.

(இ-ள்.) அண்ணலை - பெரியோனை, வான்-ஆகாயத்திலுள்ள, மதி - சந்திரன், தோய் - படிகிற, சோலைமாமலை - திருமாலிருஞ்சோலைமலையிலெழுந்தருளின, அச்சுதனை - அழிவற்றவனை, தண்-குளிர்ச்சியுள்ள, அலை - திருப்பாற்கடலில் பள்ளிகொண்டருளுகிற, வானவனை - கடவுளை, தெய்வநாதனை - தேவநாயகனை, தாள் அடைவான் - திருவடியில் ஆசிரயிக்க, எண்ணலை-நினைத்தாயில்லை, வான்பகை ஆம் - பெரும்பகையாகிய, ஐவரோடு-பஞ்சேந்திரியங்களுடன், இசைந்து - இணங்கி, இன்னம் - இன்னமும், உடல் புண் - உடம்பாகிய புண்ணினுல், அலைவாய் - வருந்த, எண்ணிணுய் - நினைத்தாய், (ஆதலால்) உன் புலமை நன்று - உன் அறிவு நன்றாயிருந்தது. எ-று

வால் மதி எனப்பிரித்து வெண்மையாகிய சந்திரன் அன்றிப் பரிசுத்தமாகிய சந்திரன் என்றுரைப்பினுமாம். அச்சுதன அடுத்தாரைக் கை நழுவ விடாதவன் என்றலுமொன்று.

அஎ. புலமையிலேநிமிர்ந்தற்பரைப்போற்றிப்பொதுமகளைக்
குலமையிலேகுயிலேகொடியேயென்றுங்கூர்விழியாம்
பலமையிலேயென்றும்பாடாமற்பாடுமின்பாவலர்காள்
நலமையிலேய்முத்தமார்சோலைமாமலைநம்பனையே.

(இ-ள்.) பாவலர்காள்-வித்வான்களே, புலமையிலே நிமிர்ந்து-கல் வியறிவாலுயர்ந்து, அற்பரை போற்றி - அற்பரைத் துதித்து, பொதுமகளை - வேசையை, குலம்-மேன்மையாகிய, மயிலே-மயிலே, குயிலே,- குயிலே, கொடியே - பூங்கொடியே, என்றும் - என்றும்,

கூர் விழி - கூர்மையாகிய கண்கள், பலம் ஆம்-பலமாகிய, அயிலே என்றும் - வேலாயுதமே யென்றும், பாடாமல்-கவிபாடாமல், நல்-அழகாகிய, அமையில் - மூங்கிலில், ஏய் - பொருந்திய, முத்தம்-முத்துக்கள், ஆர் - நிறைந்த, சோலைமாமலை - திருமாலிருஞ் சோலை மலையிலெழுந்தருளிய, நம்பனை - மங்கள குணபூர்ணனை, பாடுமின் - பாடுங்கள். எ-று.

கூர் விழி பல்லம் ஆம் என அந்வயித்து, கூரிய கணகள் அம்புகளை நிகர்க்கும் என்றுரைப்பினும் பொருந்தும். பல்லம்-அம்பு.

அஅ. நம்பிநின்றேனுன்சரணாரவிந்தத்தைநன்னெஞ்சென்னும்
செம்பினின்றேபொறித்தேனுனக்காளென்றுதெய்வக்குழாம்
பம்பிநின்றேசெறிக்கும்பதங்காண்ப்பதறுகின்றேன்
கொம்பினின்றேன்சொரியுஞ்சோலைமாமலைக்கொற்றவனே.

(இ-ள்.) கொம்பின் - பூங்கொம்புகளினின்றும், இன்தேன்-இனியதேனானது, சொரியும் - பொழிகின்ற, சோலைமாமலை - திருமாலிருஞ் சோலைமலையிலெழுந்தருளின, கொற்றவனே-தலைவனே, உன் சரணம் அரவிந்தத்தை - உன் திருவடித்தாமரையை, நம்பி நின்றேன் - நம்பி நிற்கிறேன், நல்நெஞ்சு என்னும் - நல்ல மனம் என்கிற, செம்பின் - செப்பேட்டில், உனக்கு ஆள் என்று, உனக்கடிமையென்று, இன்றே பொறித்தேன் - இன்றே எழுதினேன், தெய்வக்குழாம் - நித்ய சூரிகளுடைய சமூஹங்கள், பம்பி-நெருங்க, நின் - உனது, தேசு எறிக்கும் - ஒளிவீசுகின்ற, பதம்-திருவடிகளை, காண - காண்பதற்கு, பதறுகின்றேன் - விரைகின்றேன்.

தெய்வக்குழாம் பிரம ருத்ரேந்திராதி தேவசமூஹம் எனினும் பொருந்தும். தேசெறிக்கும் பதம் - பரமபதம் என்றலுமொன்று.

அகூ. கொற்றவிராவணன்பொன்முடிவீழக்கொடுங்கண்டுஞ்சல்
உற்றவிராவணன்மாளவெய்தோனொண்பரதனுக்குச்
சொற்றவிராவணன்மாலிருஞ்சோலைதொழுதுவினை
முற்றவிராவணனற்றமிழ்மாலைமொழிந்தனனே.

(இ-ள்.) கொற்றம் - வெற்றியையுடைய, இராவணன் - ராவணனது, பொன்முடி வீழ - பொன் மகுடங்கள் விழவும், கொடு-கொடிய, கண் துஞ்சல் உற்ற - கண்ணுறக்கமிகுந்த, இரா-இரவைப் போன்ற, வண்ணன் - நிறத்தையுடையவனாகிய கும்பகர்ணனானவன், மாள-இறக்கவும், எய்தோன்-அம்பெய்தவன், ஒள்பரதனுக்கு, நற்குணமமைந்த பரதாழ்வானுக்கு, சொல்தவிரா - சொல்வழுவாத, அண்ணன் - திருத்தமையன், (அவனது) மாலிருஞ்சோலை - திருமாலிருஞ் சோலைமலையை, தொழுது-வணங்கி, வினைமுற்ற இரா வண்ணம் - வினைமுழுதும் இராத விதமாக, நல் - விலக்ஷணமான, தமிழ்மாலை - தமிழ்மாலைகளை, மொழிந்தனன் - சொன்னேன். எ-று.

சொல் தவிரா அண்ணல் எனப்பிரித்து சொல்வழுவாத பெரியோன் என்றுரைத்தலுங்கூடும்.

கூ0. மொழித்தத்தைகொஞ்சுமலையலங்காரன்முன் னூற்றுவரை
அழித்தத்தைமைந்தர்க்கரசளித்தோனடிநாட்டொடர்ந்தென்
னூழித்தத்தைச்செய்தன்றிப்போகாவினையையொருநொடியில்
கழித்தத்தையென்சொல்லுகேன்றனக்காட்பட்டகாலத்திலே.

(இ-ள்.) தத்தை - கிளிகள், மொழி - சொற்களை, கொஞ்சும் - கொஞ்சிப்பேசுகின்ற, மலை - திருமாலிருஞ் சோலைமயிலெழுந்தருளிய, அலங்காரன் - அழகன், முன் - முற்காலத்தில், நூற்றுவரை - துரியோதநன் முதலிய நூறுபேரை, அழித்து - நாசஞ்செய்து, அத்தைமைந்தர்க்கு - அத்தை புத்திரர்களாகிய பாண்டவருக்கு, அரசு அளித்தோன் - அரசாட்சியைக் கொடுத்தவன், (அவன்) தனக்கு ஆள்பட்டகாலத்திலே - தனக்கு நான் அடிமைப்பட்ட காலத்திலே, அடிநாள் தொடர்ந்து - ஆதிகாலந்தொடங்கி, என் உழி - என்னிடத்தில், தத்தை செய்து அன்றி - விபத்தைச்செய்தல்லது, போகா-ஒழியாத, வினையை-வினைகளை, ஒரு நொடியில்-ஒரு கைந்நொடிப்பொழுதில், கழித்தத்தை - நீக்கி யருளின செய்தியை, என் சொல்லுகேன் - என்னென்று சொல்லுவேன். எ-று.

அத்தை மைந்தர் - தருமர் முதலிய ஐவர்.

கூக. காலமலைக்கும்புவனங்களைக்கரந்தாயுதிரம்
காலமலைக்குமைத்தாயழகாகமலத்துப்பஞ்சார்
காலமலைக்கும்புவிக்குமன்பாவுயிர்காயம்விடும்
காலமலைக்குங்கடுங்கூற்றைக்காய்ந்தென்னைக்காத்தருளே.

(இ-ள்.) கால் - காற்றானது, அம் - நீரை, அலைக்கும் - அலைக்கின்ற, புவனங்களை - உலகங்களை, கரந்தாய்-திருவயிற்றில் ஒளித்தவனே, உதிரம்கால - ரக்தத்தைக்கக்கும்படி, மல்லை - மல்லர்களை, குமைத்தாய் - நசுக்கினவனே, அழகா - அழகனே, கமலத்து - தாமரைமலரை இடமாகவுடைய, பஞ்சு ஆர் - செம்பஞ்சூட்டப்பெற்ற, கால் - பாதத்தையுடைய, அமலைக்கும் - பெரியபிராட்டியார்க்கும், புவிக்கும் - பூமி பிராட்டிக்கும், அன்பா - நேசனே, உயிர் - பிராணன், காயம் விடும் காலம் - உடம்பை விட்டு நீங்குங்காலத்தில், மலைக்கும் - போர் செய்கிற, கடு கூற்றை-கொடியயமனை, காய்ந்து-கோவித்து, என்னை-அடியேனை, காத்து அருள்-ரக்ஷித்தருள்வாயாக.

புவனங்களைக் கரத்தல் இறுதிக்காலத்தில், மல் - சாணூரன் முஷ்டிகன் என்னும் இரண்டுமெல்லர்கள். இவர்கள் கம்ஸனாலே வப்பட்டவர், இவர்களை அழித்தது கிருஷ்ணவதாரத்தில்.

கூஉ. அருளக்கொடியிடைப்பூமாதுநீயும்வந்தாளினுமாம்
இருளக்கொடியநமன்வருங்காலத்திகழினுமாம்
கருளக்கொடியழகாவலங்காரவன்கஞ்சனெஞ்சத்
துருளக்கொடியவுதைத்தாயென துயிருன்னுயிரே.

(இ-ள்.) கருளக்கொடி - கருடக்கொடியையுடைய, அழகா-அழகனே, அலங்கார - அலங்கரனே, வல்-வலிய, கஞ்சன் - கம்ஸனது, நெஞ்சத்து-மார்பிலுள்ள, உருள் திரண்ட, அக்கு-எலும்பானது, ஒடிய - முறியும்படி, உதைத்தாய் - உதைத்தவனே, எனது உயிர்-என்னுயிரானது, உன் உயிரே - உன்னுயிரேயாம், (ஆதலால்) அருள்-கிருபைசெய்ய, பூமாதும்-மலர் மாதாகிய பெரியபிராட்டியும், நீயும்-நீயுமாக, வந்து-எழுந்தருளி, ஆளினும் ஆம்-ஆண்டாலும் ஆகும், இருள் - இருண்ட, அ கொடியநமன் - அந்தக்கொடுமையையுடைய யமன், வரும்காலத்து - வருகிறகாலத்தில், இகழினும் ஆம் - இகழ்ந்தாலும் ஆகும். எ-று.

என்னுயிர் உன்னுயிராதலால் மரணகாலத்தில் பிராட்டியும் நீயுமா யெழுந்தருளியாண்டருளினாலும் சரி, அன்றி இகழ்ந்தாலும் சரி என்பது கருத்து.

கூரு. உயிர்க்கும்படிக்குமுன்னாயிரம்பேரொன்றோறுத்தன்னைமார்
செயிர்க்கும்படிக்குநின்றேனென்செய்கேன்செழுந்தேவர்களும்
அயிர்க்கும்படிக்குறளாமழகாவலங்காரநெய்க்கும
தயிர்க்கும்படிக்குஞ்செவ்வாய்மலர்ந்தாய்நின்னைத்தாள்பணிந்தே

(இ-ள்.) செழுதேவர்களும் - செழுமையாகிய தேவர்களும், அயிர்க்கும்படி - சந்தேகிக்கும்படி, குறள் ஆம் - உருவம் வாமநமாகிய, அழகா - அழகனே, அலங்கார - அலங்காரனே, நெய்க்கும்-நெய்யின் பொருட்டும், தயிர்க்கும் - தயிரின்பொருட்டும், படிக்கும்-பூமியின்பொருட்டும், செவ்வாய் மலர்ந்தாய்-செவந்த வாயைத்திறந்தவனே, நின்னை - உன்னை, தாள் பணிந்து-திருவடிவணங்கி, உயிர்க்கும் - பெரு மூச்செறிவாள், உன் ஆயிரம்பேர் - உன் ஆயிரந்திருநாமத்தையும், படிக்கும் என்று-படிக்கும் பண்ணுகிறாளென்று, அன்னைமார் - தாய்மார், செயிர்க்கும்படிக்கு-கோபிக்கும்படிக்கு, நின்றேன்-நின்றேன், என்செய்கேன் - யாதுசெய்யக்கடவேன். எ-று.

தேவர்கள் நித்யசூரிகளெனினுமாம். குறள்-குறுமை.

கூச. பணிபதிவாடநின்றாடின நூற்றுவர்பாற்சென்றன
பணிபதினாலுபுவனமூர்தாயின பாப்பதின்மர்
பணிபதியெங்குமுவந்தனபங்கயப்பாவையுடன்
பணிபதிமார்பனலங்காரன்பொற்றிருப்பாதங்களே.

(இ-ள்.) பங்கயப்பாவையுடன் - பெரியபிராட்டியாருடனே, பணி - (கௌஸ்துவம் என்னும்) ஆபரணம், பதி - பதிந்த, மார்பன்-மார்பையுடையவன், அலங்காரன் - அழகன், (அவனது) பொன்-அழகிய, திருப்பாதங்கள் - திருவடிகள், பணிபதி - பாம்புகளுக்கரசனாகிய காளிங்கன், வாட - வாடும்படி, நின்று ஆடின - நின்று நடித்தன, நூற்றுவர்பால் சென்றன - (துரியோதநன் முதலிய)

நூறுபேரிடத்துச்சென்றன, பணி - வணங்குகின்ற, பதினறு புவனமும், பதினன்கு லோகங்களையும், தாயின - தாவியளந்தன, பதின்மர் -பதின்மராழ்வார்களும், பா பணி - பாடல்களைச்சொன்ன, பதி எங்கும்-திருப்பதிகளெங்கும், உவந்தன - விரும்பியெழுந்தருளி யிருந்தன. எ-று.

"பாப்பதின்மர் பணிபதியெங்கும்" என்றது நூற்றெட்டுத்திருப் பதிகளை.

கூரு. பாதகரத்தனைபேருங்கனகனும்பன்னகத்தால்
ஏதகரத்தனையற்கருளாளியையெட்டெழுத்துள்
ஓதகரத்தனைச்சுந்தரத்தோளுடையானைநவ
நீதகரத்தனைச்சேர்ந்தார்க்குத்தேவருநேரல்லரே.

(இ - ள்.) பாதகர் அத்தனைபேரும் - பாவிகளாகிய அத்தனை பேரும், கனகனும் - இரணியனும், பல்நகத்தாலேதகர - பலவாகிய நகங்களினால் அழிய, தயற்கு - அவன்புதல்வனாகிய பிரகலாதாழ் வானுக்கு, அருள் - கிருபைசெய்த, ஆளியை - நரசிங்கத்தை, எட் டெழுத்துள் - அஷ்டாக்ஷரத்துள், ஓது - சொல்லப்படுகிற, அகரத் தனை - அகாரத்தின் பொருளாயிருப்பவனை, சுந்தரத்தோள் உடை யானை - அழகிய தோள்களையுடையவனை, நவநீதகரத்தனை - வெண் ணெயையேந்திய கையையுடையவனை, சேர்ந்தார்க்கு - அடைந்த வர்க்கு, தேவரும் நேர் அல்லர் - தேவரும் சமானர் அல்லர். எ-று.

பன்னகத்தாலே என்பதற்கு பல்லினாலும் நகத்தினாலும் என் றுரைப்பினுமாம். அழகனையடைந்தவர்க்குத் தேவரும் நிகரல்ல ரென்பது கருத்து.

கூசு. அல்லலங்காரையுஞ்சேர்விக்குமைம்புலவாசையென்றும்
பல்லலங்காநைந்துகோலூன்றியும்பற்றறாதுகண்டாய்
மல்லலங்காரிகையார்மருடீர்ந்துவணங்குநெஞ்சே
தொல்லலங்காரனைத்தென்றிருமாலிருஞ்சோலையிலே.

(இ-ள்.) நெஞ்சே - மனமே, அங்கு - அவ்விடத்து, ஆரையும் - எல்லாரையும், அல்லல்சேர்விக்கும் - துன்பத்தையடைவிக்கிற, ஐம் புல ஆசை - ஐம்புல ஆசையானது, என்றும் - எந்நாளும், பல் அலங் கா - பற்கள் அசைந்து, நைந்து - வருந்தி, கோல் ஊன்றியும்-கோலை யூன்றியும், பற்று அறாது - பற்று நீங்காது, மல்லல் - வளம்பொருந் திய, அம் - அழகாகிய, காரிகையார் - மாதருடைய, மருள்தீர்ந்து- மயக்கம்நீங்கி, தொல் அலங்காரனை - பழமையாகிய அழகனை, தென் திருமாலிருஞ் சோலையிலே-தென்றிசையிலுள்ள திருமாலிருஞ்சோலை மலையிலேபோய், வணங்கு - தொழுவாயாக. எ-று.

ஐம்புலவாசையானது முதுமைப்பருவத்தும் நீங்காது ஆதலால் மாதர்மயக்கம் நீங்கித் திருமாலிருஞ்சோலைமலை அழகனை வணங்குவா யாக என்பது கருத்து.

கூஎ. சோலையிலாமையில்சேர்திருமாலிருஞ்சோலைநின்றான்
வேலையிலாமையில்வேடங்கொண்டான்புயமேவப்பெறாச்
சேலையிலாமையிலங்குகண்ணாளவன்றெய்வத்துழாய்
மாலையிலாமையில்மாலையுற்றாளந்திமாலையிலே,

(இ-ள்.) சோலை - சோலைகள், இல் ஆ - தமக்கு வீடாகக்கொண்டு, மயில்சேர் - மயில்கள்சேர்ந்த, திருமாலிருஞ்சோலை - திருமாலிருஞ்சோலைமலையில, நின்றான்-நின்றதிருக்கோலமாயெழுந்தருளினவன், வேலையில்-திருப்பாற்கடலில், ஆமையில் - ஆமையைப்போல, வேடம்கொண்டான் - அவதரித்தவன், (அவனது) புயம்-தோள்களை, மேவப்பெறு - அணையப்பெறாத, சேல் அயில் ஆம் - கெண்டைமீனையும் வேலாயுதத்தையும் நிகர்த்த, மை இலங்கு - அஞ்சனத்தோடுகூடி விளங்குகின்ற, கண்ணாள் - கண்களையுடையாள், அவன் - அவனது, தெய்வம் - தெய்வத்தன்மையமைந்த, துழாய்மாலை - திருத்துழாய் மாலை, இல்லாமையில் - இல்லாமையால், அந்திமாலையில்-அந்தியாகிய மாலைப்பொழுதில், மாலை உற்றாள் - மயக்கத்தையடைந்தாள். எ-று.

வேலையிலாமையில் - வேலையில்லாமையால் எனச்சொன்னயம். துழாய்க்குத் தெய்வத்தன்மையாவது வாடாதிருத்தல் முதலியன.

௬௮. மாலைக்கரும்புசிறுகால்துகைக்கவருந்துமெங்கள்
ஆலைக்கரும்புதன்னாசையெல்லாஞ்சொல்லிலாயிரந்தோட்
டோலைக்கரும்புண்டொடமுடமாமதியூர்குடுமிச்
சோலைக்கரும்புயலேயருளாயுன்றுளவிளையே.

(இ-ள்.) மாலைக்கு - மாலைக்காலத்தில், அரும்பு - உண்டாகிற, சிறுகால் - தென்றற்காற்றானது, துகைக்க-வருத்த, வருந்தும்-வருந்துகின்ற, எங்கள்-எங்களுடைய, ஆலைக்கரும்புதன் - ஆலையிலகப்பட்ட கரும்புபோல்வாளது, ஆசை எல்லாம் சொல்லின் - ஆசைமுழுதும் சொன்னால், ஆயிரம்தோடு - ஆயிரம்பனையினது, ஓலைக்கு - ஓலைக்கு, அருபுண்தொட - அருமையாகிய புண்ணுண்டாக, முடம் ஆம்-பற்றாதாகும், மதி ஊர் - சந்திரன்தவழ்கின்ற, குடுமி-சிகரத்தையுடைய, சோலை - திருமாலிருஞ்சோலைமலையிலெழுந்தருளிய, கருபுயலே-காளமேகம்போல்பவனே, உன் துளவினை - உன் திருத்துழாய்மாலையை, அருளாய் - அருள்செய்வாயாக. எ-று.

ஓலைக்குப்புண்ணாவது எழுத்து. முடம் ஆம்-வளைந்துசுருளாகும்.

௬௯. துளவிலையார்பொன்னடிமுடிசூட்டித்தொண்டாக்கியென்னை
வளவிலையாக்கொண்டநீகைவிடேன்மங்கலகுணங்கள்
அளவிலையாவலங்காரசமயிகளாய்ந்தவண்ணம்
உளவிலையாயுருவாயருவாயவொருமுதலே.

(இ-ள்.) மங்கலகுணங்கள் - மங்களகுணங்களால், அளவு இல்-அளவில்லாத, ஐயா-ஐயனே, அலங்கார - அழகனே, சமயிகள் - சமயத்தார், ஆய்ந்தவண்ணம் - ஆராய்ந்தவண்ணம், உள இல்லை ஆய்-உள்ளனவும் இல்லனவுமாகி, உரு ஆய் அரு ஆய - உருவாகி அருவுமாகிய, ஒரு முதலே - ஒப்பற்ற முதற்பொருளே, துளவு இலை - துளசிதளங்கள், ஆர்-பொருந்திய, பொன் அடி - உன்பொன்னடியை, முடிசூட்டி-என்சிரத்திற்சூட்டி, தொண்டு ஆக்கி-அடிமையாக்கி, என்னை-அடியேனை, வளம் - வளமாகிய, விலையாக்கொண்ட - விக்கிரயமாகக் கொண்ட, நீ கைவிடேல் - நீ கைவிடாதே. எ-று.

மங்கலகுணங்கள் - சௌலப்ய சௌசீல்யாதிகள், சமயிகள்-மாயாவாதி, லோகாயதிகன் முதலானவர்கள்.

௧00. ஒருபாலமரரொருபான்முனிவருடனிருந்தென்
இருபார்வையுங்கொண்டுவப்பதென்றோவிடபக்கிரிக்கும்
பொருபாற்கடற்குமயோத்திக்கும்பொற்றுவராபதிக்கும்
நிருபாவைகுந்தமுநீவீற்றிருக்கின்றநீர்மையுமே.

(இ - ள்.) இடபகிரிக்கும் - இடபமலைக்கும், பொரு - அலைகள் மோதுகின்ற, பால்கடற்கும்-திருப்பாற்கடலுக்கும், அயோத்திக்கும்-திருவயோத்திக்கும், பொன் - அழகாகிய, துவராபதிக்கும் - திருத்துவாரகைக்கும், நிருபா - அரசனே, வைகுந்தமும் - பரமபதத்தையும், நீ வீற்றிருக்கின்ற - அதில் நீ யெழுந்தருளியிருக்கின்ற, நீர்மையும்-அழகையும், ஒருபால் அமரர் உடன் - ஒருபக்கத்தில் நித்யசூரிகளுடனும், ஒருபால் முனிவர் உடன் - ஒருபக்கத்தில் முக்தர்களுடனும், இருந்து-கூடியிருந்து, என் இருபார்வையும் கொண்டு - எனது இரண்டுகண்களையும்கொண்டு சேவித்து, உவப்பது - களிக்கப்பெறுவது, என்றோ - எப்பொழுதோ. எ-று.

அமரர்-இறவாதவர். முனிவர் - மநநசீலர். அழகனே-பரமபதத்தையும் அதில் நீ எழுந்தருளியிருக்குமழகையும் நித்யசூரிகளோடும் முக்தர்களோடும் கூடிக்கொண்டு என் இருகண்களாலுங் கண்டுகளிக்கப்பெறுவது எக்காலமோ என்பது கருத்து

அலங்காரருக்குப்பரமச்சுவாமிக்கழகருக்குக்
கலங்காப்பெருநகரங்காட்டுவார்க்குக்கருத்தன்பினல்
நலங்காதசொற்றொடையந்தாதியைப்பற்பநாபப்பட்டன்
விலங்காதகீர்த்திமணவாளதாசன்விளம்பினனே.

(இ-ள்.) அலங்காரருக்கு-சுந்தரமுடையவருக்கு, பரமம் சுவாமிக்கு-மேலாகிய இறைவருக்கு, அழகருக்கு - அழகருக்கு, கலங்கா-எக்காலத்தும் சலிக்காத, பெருநகரம்-பெரியநகரமாகிய பரமபதத்தை, காட்டுவார்க்கு-காட்டுமவருக்கு, கருத்து அன்பினல் - மனத்திலுள்ள அன்பினல், நலங்காத-கெடாத, சொல்தொடை-சொற்றொடைகளாலாக்கப்பட்ட, அந்தாதியை - அந்தாதி என்னும் இப்பிரபந்தத்தை, பற்ப நாபபட்டன் - பத்மநாபபட்டருடைய, விலங்காத - நீங்காத, கீர்த்தி-புகழையுடைய, மணவாளதாசன் - அழகிய மணவாளதாசன், விளம்பினன் - சொல்லினன். எ-று.

அழகரந்தாதி முற்றிற்று.

ஸ்ரீ

திருவரங்கக் கலம்பகம்.

திருவரங்கம் பெரியகோயிலைப்பற்றிப் பாடியதாகிய ஓர் ப்ரபந்தம் என்பது பொருள். கலம்பகம் - கலப்புள்ளது. அதாவது ஒருபோகும், வெண்பாவும், கலித்துறையும், முதற்கவியுறுப்பாக முதலிற்கூறி, புயவகுப்பு, மதங்கு, அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் என்னும் இப்பதினெட் டுறுப்புக்களும் இயைய, மடக்கு, மருட்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம், கலித்தாழிசை, வஞ்சிவிருத்தம், வஞ்சித்துறை, வெண்டுறை என்னும் இவற்றால், இடையிடையே வெண்பாவும், கலித்துறையும் விரவிவர அந்தாதித்தொடையால் முடிவுறப்பாடும்போது, தேவர்க்குநூறும், அந்தணர்க்குத் தொண்ணூற்றைந்தும், அரசர்க்குத் தொண்ணூறும், அமைச்சருக்கு எழுபதும், வணிகர்க்கு ஐம்பதும், வேளாளர்க்கு முப்பதும் ஆகப் பாடப்படுவதாகிய ஓர் ப்ரபந்தம்.

சிறப்புப்பாயிரம்.

நேரிசை வெண்பா.

ஆழ்வார்முன் பின்னவர்க்கு மாமறைதந்தார் தமிழால்
வாழ்வார் மணவாளர் மாண்பவருட் - டாழ்வாரும்
எம்போலியர்க்கு மிரங்கி யரங்கக்கலம்ப
கம்போத நல்கவைத்தார் காண்.

(இ-ள்.) முன் - முற்காலத்தில், ஆழ்வார் - சடகோபர், பின்னவர்க்கும் ஆம் - பிற்காலத்திலுள்ளார்க்கும் இதத்தைத் தருவதாகிய, மறை-கீர்வாணவேதத்தை, தமிழால் - தமிழ்மொழியால், தந்தார் - திருவாய்மலர்ந்தருளினார், (பின்) பிற்காலத்தில், வாழ்வு ஆர் மணவாளர்-நித்திய வாழ்வில் பூர்ணராகிய அழகிய மணவாளதாசர், மாண்பு அவருள் தாழ்வு ஆரும் - மாட்சிமையையுடைய அவர்களினும் தாழ்வுள்ள, எம்போலியர்க்கும் இரங்கி - எம்மை நிகர்த்தோரிடத்தும் எமதறியாமைக்காகத் திருவுளமிரங்கி, போதம்நல்க - எமக்கு மெய்ஞ்ஞானத்தைக் கொடுக்கும்பொருட்டு, அரங்கக்கலம்பகம் வைத்தார் - திருவரங்கக்கலம்பகம் என்னும் இந்தத் திவ்வியப்பிரபந்தத்தைத் (தமிழால்பாடி) வைத்தனர். எ-று.

காண் - அசை. காரணக்கருதியவழி ஆழ்வார் என்பது பகவத் குணசாகரத்தில் ஆழ்வோர்களாகிய பொய்கை பூதன் பேயார் முதலியோரைக் குறிக்குமாயினும், இவ்விடத்துக் காரணங்கருதாது இடுகுறிமாத்திரையாய்ச் சடகோபரைக் குறித்து நின்றது. சட கோபர் - சடவாயுவை நிராகரித்தவர். பின்னவர் என்றது ஸ்ரீமந்நாத முநிகள், ஸ்ரீ ஆளவந்தார், ஸ்ரீ ராமாநுஜர் தொடக்கமான பூர்வா சாரியர்களை. தமிழால் என்றதனால் மறையென்பது கீர்வாணவேதம் என்றுரைக்கப்பட்டது. திருவிருத்தம், திருவாசிரியம், திருவாய் மொழி, பெரிய திருவந்தாதி என்னும் நான்கையும் இவர் அருளிச் செய்கையாலும், இவற்றுள் அடங்கியிருப்பது சதுர்வேத தாத்பர்ய மேயாகையாலும், தமிழால் மறைதந்தார் என்றார். மறையென்ப தற்கு, பிராமணரல்லாத மற்றைவருணத்தார்க்குரியதன்றென மறுக் கப்பட்டது என்றும், அத்யயநகாலத்தில் பிறர்கேட்கவொண்ணாதெ ன்று ரஹஸ்ய ஸ்த்தாநத்தில் இருந்தோதப்படுவது என்றும் தமிழர் பொருள்கூறுவர். வேதம் என்பதற்கு, சகலதர்மங்களையும் இதைக் கொண்டு அறியப்படும் என்று பொருள்கூறுவர் வடநூலார். ஆழ் வார்காலத்திருந்து தமிழ்வேதத்தைப் பட்டோலைகொண்ட மதுர கவிகள் முதலானோர்க்கேயன்றியெனப் பொருள்படுதலால் பின்ன வர்க்கும் என்றவும்மை இறந்தது தழீஇயது. "செந்திறத்த தமிழோ சை வடசொல்லாகி" என்றும், "தமிழ்வேத பாராயண" என்றும், பலவிடங்களிற் கூறுகையாலும், சேனைமுதலியார் இவர்க்குத் திரு விலச்சினைமுதலிய ஸம்ஸ்காரங்களைச்செய்து தமிழ்வேதத்தை யுப தேசித்ததாகக் கதையுண்டாகையாலும், தமிழ்வேதத்தை இவர்செய் தருளினரென்பது அசங்கதமென்பார்க்கு, அங்ஙனமன்று தமிழ்வே தம் அநாதியேயாயினும், சேனைமுதலியார் உபதேசிக்க இவர் வாயி லாக இவ்வுலகத்தில் வியாபித்தமையால் அசங்கதமன்றென்க. கீர் வாணவேதம் மட்குடத்தையும் தமிழ்வேதம் பொற்குடத்தையும் நிகர்க்குமென்பர் மேலோர். இதனால் தமிழ்வேதம் சர்வாதிகார மென்றவாறாயிற்று. தாழ்வாவது பகவத்குணாநுபவமல்லாத வழியாற் பொழுதுபோக்குகை. ஸ்ரீமந்நாதமுநிகள் முதலானோர் தாழ்வில் லாத ஆசாரியராயினும், ஆழ்வார் மயர்வறமதிநலம் அருளப்பெற்றவ ராதலால் அவர்களினும் ஏற்றமுடையவராய் அவர்களுக்கும் தமிழ் மறைதந்தார் என்றார். "ஆழ்வார்-நம்மாழ்வார், முன்-முற்காலத்தில், பின்னவர்க்கு - தமக்குப் பிற்காலத்தாராகிய ஸ்ரீமந்நாதமுநிகள் முத லானோர்க்கு, (போதம் நல்க)-நல்லறிவைக்கொடுக்க, இரங்கி - திரு வுளமிரங்கி, மா - சிறந்த, மறை - வடமொழிவேதத்தை, தமிழால்- தமிழ்மொழியால், தந்தார் - திருவாய்மலர்ந்தருளினர், (பின்)-பிற்

காலத்தில், மாண்பவருள் - மாட்சிமையுடையவர்களுள், வாழ்வார்-வாழ்பவராகிய, மணவாளர்-அழகியமணவாளதாசர், தாழ்வு ஆரும்-இழிவுபொருந்திய, எம்போலியர்க்கும் - எம்மைப்போன்றவர்களுக்கும், போதம் நல்க - நல்லறிவைக்கொடுக்க, இரங்கி - திருவுளமிரங்கி, அரங்கக்கலம்பகம் - திருவரங்கக்கலம்பகம் என்னும் திவ்ய ப்ரபந்தத்தை, (தமிழால்) - தமிழ்மொழியால், வைத்தார் - பாடிவைத்தார்.'' என இவ்வாறு பொருள் கூறுதலும் உண்டு. "மணவாளர்" என்றதனால், ஆக்கியோன்பெயரும், "மறைதந்தார் தமிழால்" என்றதனால் வழியும் எல்லையும், "அரங்கக்கலம்பகம் என்றதனால் நூற்பெயரும் நுதலியபொருளும், "எம்போலியர்" என்றதனால், கேட்போரும், "போதம்நல்க" என்றதனால் பயனும், "இரங்கி" என்றதனால் காரணமும் பெறப்பட்டன. நுதலியபொருளை விஷயம் என்பர். இது அபியுக்தரால் கூறப்பட்டது. இதனை வைணவர் தனியன் என்பர்.

அறுசீராசிரிய விருத்தம்.

சொன்னோக்கும் பொருணோக்குந் தொடைநோக்குநடை நோக்குந் துறையினோக்கோ, டெந்நோக்குங் காணவிலக்கிய மாவதன்றி யிதிலீடுபட்டோர், நன்னோக்கும் புத்தியும் பத்தியும் பெறுவர் முத்தியுண்டாநானென் சொல்கேன், பன்னோக்கு மணவாளர் பகாரங்கக் கலம்பகத்தைப் பாரீர் பாரீர்.

(இ-ள்.) (இந்தநூலானது) சொல்நோக்கும்-சொல்லழகும் பொருள் நோக்கும் - பொருளழகும், தொடைநோக்கும்-தொடையழகும், நடைநோக்கும் - நடையழகும், துறையின் நோக்கோடு-துறையி னழகும் ஆகிய இவை முதலியவற்றோடு, எ நோக்கும்-எல்லா அழகையும், காண - காணுதற்கு, இலக்கியம் ஆவது அன்றி-இலக்கியமாயிருத்தலேயன்றி, இதில்-இந்நூலில், ஈடுபட்டோர்-மிகப் பயின்றவர், நல்-விலக்ஷணமான, நோக்கும் - ஒழுக்கத்தையும், புத்தியும் - அறிவையும், பத்தியும் - பக்தியையும், பெறுவர்-(இந்நூற்பயிற்சிக்குப் பயனாக) அடைவார்கள், (இதுவேயுமன்றி) முத்தி உண்டாம்-மோக்ஷலாபமும் அவர்களுக்கு உண்டாகும், (ஆதலால்) பல்நோக்கு-பலவகையாகிய அழகமைந்த, மணவாளர் - அழகிய மணவாளதாசர், பகர்-திருவாய்மலர்ந்தருளிய, அரங்கக்கலம்பகத்தை - திருவரங்கக்கலம்பகத்தி னேற்றத்தை, நான் என்சொல்கேன் - யான் என் னென்று எடுத்துரைப்பேன், பாரீர் பாரீர் - ஆராய்ந்து பாருங்கள் ஆராய்ந்து பாருங்கள். எ-று.

"பாரீர் பாரீர்" என்னும் அடுக்கு உவகையில் வந்தது. "பாரீர் பாரீர்" என்பதற்கு, எழுவாயாகிய நீங்கள் என்பது மறைந்து நின்றது. நீங்கள் என்றது உலகத்தாரை நோக்கி. இவ்வாறன்றி, "பாரீர் - உலகத்தாரே, பாரீர்-பாருங்கள்" எனினுமாம். சொல்நோக்கு - மடக்குமுதலிய சொல்லணிகளால் வரும் அழகு. பொருள்நோக்கு - உவமைமுதலிய பொருளணிகளால் வரும் அழகு. தொடைநோக்கு - மோனைத்தொடை, எதுகைத்தொடை, முரண்டொடை, இயைபுத்தொடை முதலியவற்றால் வரும் அழகு. நடைநோக்கு - வைதருப்பம், கௌடம்முதலிய நடைகளால் வரும் அழகு. துறைநோக்கு - காட்சி, ஐயம், தெளிதல் முதலிய துறைகளால் வரும் அழகு. "எந்நோக்கும்" என்றதனால், சுருங்கச்சொல்லல், விளங்கவைத்தல், நவின்றோர்க்கினிமை, நன்மொழிபுணர்த்தல், ஓசையுடைமை, ஆழமுடைத்தாதல் முதலியவையுங் கொள்ளப்படும். "என்சொல்கேன்" என்றது, அளவறுத்துரைத்தற்கறிந்திலேன் என்றபடி.

காப்பு.

ஆழ்வார்கள் பன்னிருவர்.

கட்டளைக்கலித்துறை.

வேதந்தொகுத்துத் தமிழ்ப்பாடல் செய்த விமலன்பொய்கை
பூதன்மயிலையர் கோன்புகழ்ச்சேரன் புத்தூரன் றொண்டர்
பாதந்தருந்துகண் மாமழிசைக்குமன்பாணன் மங்கை
நாதன்மதுரகவி கோதைபாதங்க ணண்ணுதுமே.

(இ-ள்.) வேதம் - வேதார்த்தங்களை, தொகுத்து-சங்கிரகித்து, தமிழ்ப்பாடல் செய்த - தமிழ்ப்பாசுரங்களாக அருளிச்செய்த, விமலன்-நம்மாழ்வாரும், பொய்கை-பொய்கையாழ்வாரும், பூதன்-பூதத்தாழ்வாரும், மயிலையர்கோன் - பேயாழ்வாரும், புகழ்சேரன் - புகழினையுடைய குலசேகராழ்வாரும், புத்தூரன் - பெரியாழ்வாரும், தொண்டர்பாதம் தரும்துகள் - தொண்டரடிப்பொடியாழ்வாரும், மாமழிசைக்குமன் - திருமழிசையாழ்வாரும், பாணன் - திருப்பாணாழ்வாரும், மங்கைநாதன் - திருமங்கையாழ்வாரும், மதுரகவி-மதுரகவியாழ்வாரும், கோதை - ஆண்டாளும் என்னும் ஆழ்வார்கள் பன்னிருவரது, பாதங்கள் - திருவடிகளை, நண்ணுதும் - சேருவோம். எ-று.

விமலன் - குற்றமற்றவன்; அதாவது, சடவாயுவை நிராகரித்த வன். இது சடகோபன் என்னும் திருநாமத்தின்பொருளை உட்கொண்டது. புகழ்-இம்மைப்பயனாய் இவ்வுலகின் கண்அழியாது நிற்கும் கீர்த்தி. புத்தூர் - புதுவை. இது ஸ்ரீவில்லிபுத்தூர் எனவும் படும். மஹீஸாரக்ஷேத்திரம் என்னும் வடமொழி மழிசை யென வந்தது. பாணன் - வீணைக்கையராய்ப் பெரியபெருமாள் திருவடியின்கீழ் நிரந்தரசேவை பண்ணிக்கொண்டு பாட்டுப்பாடிப் புகழ்பவர். மங்கைநாதன் - திருமங்கையென்னுந் திருப்பதிக்குத்தலைவர். மதுரகவி-இனிமையாகிய பாடலைப்பாடுவோர். கோதை-கோதா என்னும் வடமொழித்திரிபு. இது பெரியாழ்வாருக்குப் பூதேவியே புதல்வியாய்ப் பூமியிலவதரித்தகாலத்தில் உண்டாகிய திருநாமம், இவளை ஆண்டாளென்று கூறுதலுமுண்டு. இவ்வாறன்றிக் கோதையென்பது மாலையெனக்கொண்டு, எம்பெருமானுக்கு மாலைபோல நிரதிசயபோக்ய பூதையாயிருப்பவள் என்றும், பாமாலையையும் பூமாலையையும் சூடிக்கொடுத்தவள் என்றும் கூறுதலுமுண்டு. நண்ணுதும் எனப்பன்மையாற் கூறியது தம்மினத்தாரையுமுளப்படுத்தற்கு.

நம்மாழ்வார்.

மறைப்பாற்கடலைத் திருநாவின் மந்தரத்தாற் கடைந்து
துறைப்பாற்படுத்தித் தமிழாயிரத்தின் சுவையமிர்தம்
கறைப்பாம்பணைப் பள்ளியானன்ப ரீட்டங்களித்தருந்த
நிறைப்பான்கழலன்றிச் சன்மவிடாய்க்கு நிழலில்லையே.

(இ-ள்.) மறை - வேதமாகிய, பாற்கடலை - திருப்பாற்கடலை, திருநாவின் - (தனது) சிறந்தநாவாகிய, மந்தரத்தால் - மந்தரபருவதத்தால், கடைந்து - மதித்து, துறைப்பால்படுத்தி - பலதுறைகளின் வகைகளோடு பொருந்தச்செய்து, தமிழ் ஆயிரத்து - ஆயிரந்தமிழ்ப்பாசுரங்களாகிய, இன்சுவை அமிர்தம் - இனியசுவையினையுடைய அமிர்தத்தை, கறைபாம்பு அணைபள்ளியான் - நஞ்சினையுடைய திருவநந்தாழ்வானாகிய சயநத்தில் யோகநித்திரைசெய்தலையுடைய திருமாலினது, அன்பர் - தொண்டர்களது, ஈட்டம்-கூட்டம், களித்து - மனமகிழ்ந்து, அருந்த-உண்ணும்படி, நிறைப்பான்-(உலகமாகிய பாத்திரத்தில்) நிறைத்தருளிய நம்மாழ்வாரது, கழல் அன்றி - திருவடிகளேயல்லாமல், சன்மம் விடாய்க்கு - பிறவித்துன்பமாகிய தாபத்திற்கு, நிழல்-வேறுநிழலாவது, இல்லை-இன்று.

திருநாவென் மந்தரத்தால் எனவும் பாடமுண்டு. பொருள் திருநாவென்கிற மந்தரகிரியால் என்பது. தமிழாயிரத்தின் சுவையமிர்

தம் என்பதற்கு ஆயிரந் தமிழ்ப்பாசுரங்களின் சுவையாகிய அமிர்தம் என்றலுமொன்று. பெரும்பரப்பும் இன்சுவையும் எம்பெருமானுக்கு உறைவிடமுமாயிருத்தலால் மறையைப் பாற்கடலாக்கியுரைத்தார். திரு-அளவற்றமேன்மை, திருநாவீறன் என்னுந் திருநாமத்திற்போலத் திருநாவினேற்றம் விளங்கத் திருநாவென்றிவ்விடத்துங்கூறினர். கறை - புள்ளியுமாம். சன்மவிடாய் என்றது தாபத்திரயத்தை. அவை தன்னாலும் பிறவுயிர்களாலும் தெய்வத்தாலும் உண்டாவன. தேவர்க்குப் பாற்கடலமுதம்போல மானுடர்க்கு இத்திருவாய்மொழியமுதம் அமையுமென்றாராயிற்று. ஆயினும் அவ்வமிர்தம் பிறப்பிறப்புக்களையொழியாதாதலால் அவற்றை யொழிக்கு மியல்புள்ள இவ்வமிர்தம் அதனினுஞ் சிறந்ததென்பது கருத்தாகக்கொள்க.

இராமாநுசர்.

பிடிக்கும் பரசமயக்குலவேழம் பிளிறவெகுண்
டிடிக்குங் குரற்சிங்க வேறனையானெழுபாருமுய்யப்
படிக்கும் புகழெம்மிராமாநுசமுனி பல்குணமும்
வடிக்குங் கருத்தினர்க்கே திருமாமணிமண்டபமே.

(இ-ள்.) பிடிக்கும்-(தத்தஞ்சமயக்கொள்கையே சிறந்ததாக) பற்றிவாதிக்கிற, பரசமயம் குலவேழம் - இதரசமயக் கூட்டங்களாகிய யானைகள், பிளிற - அலறும்படி, வெகுண்டு இடிக்கும்குரல்-கோவித்துக் கர்ஜிக்கிற தொனியையுடைய, சிங்க ஏறு அனையான்-ஆண்சிங்கம்போல்பவர், எழுபாரும் உய்ய - ஏழுலகத்தாரும் உஜ்ஜீவிக்க, படிக்கும் - பாராயணஞ்செய்கின்ற, புகழ்-கீர்த்தியையுடைய, எம் - எமக்கு உத்தேசியராகிய, இராமாநுஜமுனி - ஸ்ரீ பாஷ்யகாரர், (அவரது) பல்குணமும் - பலமங்களகுணங்களையும், வடிக்கும்-(சாரமாக) வடித்தெடுக்கின்ற, கருத்தினர்க்கே - மனமுள்ளவர்களுக்கே, திருமாமணிமண்டபம் - (பரமபதத்திலுள்ள) திருமாமணிமண்டபம் (உரியதாகும்). எ-று.

ஆதிசேஷனது அமிசமாய் இராமருக்குத் தம்பியாயவதரித்த லக்ஷ்மணரது அமிசமாதலால் இவர் இராமாநுசர் எனப்பட்டார். திருமாமணிமண்டபம்-அழகிய பெரிதாகிய ரத்நகசிதமானமணடபம்

பட்டர்.

வானிட்டகீர்த்தி வளர்கூரத்தாழ்வான் மகிழவந்த
தேனிட்டதார்நம் பெருமாள்குமாரர் சிவனையயன்
தானிட்டசாபந் துடைத்தாளரங்கர் சங்காழிபுயம்
நானிட்ட னென்றருள்பட்டர் பொற்றாள்கதி நந்தமக்கே.

(இ-ள்.) வான்இட்ட கீர்த்திவளர் - பெருமையமைந்த புகழ் வளரப்பெற்ற, கூரத்து ஆழ்வான்-ஸ்ரீகூரத்தாழ்வானுனவர், மகிழ-திருவுளங்களிக்கும்படி, வந்த - (அவருக்குத் திருக்குமாரராய்த்) திருவவதரித்தருளிய, தேன்இட்டதார் - தேன்சிந்துகின்ற மலர் மாலையையணிந்த, நம்பெருமாள் குமாரர் - திருவரங்கருக்குத் திருக்குமாரர், சிவனை - சிவனுக்கு, அயன் தான் இட்டசாபம் - பிரமன் கொடுத்த சாபத்தை, துடைத்து ஆள் - நீக்கி ஆண்டருளிய, அரங்கர் - திருவரங்கரது, சங்கு ஆழி - சங்கசக்ரலாஞ்சநங்களை, புயம்-(என்) தோள்களில், நான் இட்டன்என்று-அடியேனும் ஒரு அன்பனெனக்கொண்டு, அருள் - பொறித்தருளிய, பட்டர் - ஸ்ரீபராசரபட்டரது, பொன்தாள்-திருவடிகளே, நம்தமக்கு - நமக்கு, கதி-புகலிடம். எ-று.

வான் இட்டகீர்த்தி - இவ்வுலகின் மாத்திரமேயன்றித் தேவலோகத்திலும் பரவிய புகழ் எனினுமமையும். நம்பெருமாளது திருவருளால் கூரத்தாழ்வான் குமாரராய்த்திருவவதரித்தலால் பட்டருக்கு நம்பெருமாள் குமாரர் என்றுதிருநாமம். சாபம் - சபித்தல். (கோவித்துக்கூறும் வசைமொழி), லாஞ்சநம்-குறி.

நூல்.

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா.

இவை - எட்டடித்தரவுகள். (உ.)

க. சீர்பூத்த செழுங்கமலத் திருத்தவிசில் வீற்றிருக்கும்
நீர்பூத்த திருமகளு நிலமகளு மடிவருடச்
சிறைப்பறவை புறங்காப்பச் சேனையர்கோன் பணிகேட்ப
நறைப்படலைத் துழாய்மார்பி னுயிறுபோன் மணிவிளங்க
அரியதா னவர்க்கடிந்த வைம்படையும் புடைதயங்கக்
கரியமால் வரைமுளரிக் காடீன்று கிடந்தாங்குப்
பாயிரநான் மறைபரவப் பாற்கடலுட் பருமணிச்சூட்
அ. டாயிரவாய்ப் பாம்பணைமே லறிதுயிலி னினிதமர்ந்தோய்.

கூ. மண்ணகந் துயர்நீங்க வானகந் தொழுதேத்தக்
கண்ணகன்சோ ணாட்டுக் காவிரிவாய்ப் புளினத்துப்
பம்புகதிர் விசும்பிரவி பசும்புரவி வழிவிலங்கு
செம்பொன்மதி லேழுடுத்த திருவரங்கப் பெருங்கோயில்
ஆணிப்பொற் றகடுரிஞ்சு மணிக்கதவ நீள்வாயின்
மாணிக்க வெயில் பரப்பும் வயிரமணி விமானத்துள்
மின்னிலங்கு தொடிவலய வியன்வலக்கை கீழ்கொடுத்துத்
கசு. தென்னிலங்கைத்திசைநோக்கித்திருநயனந்துயில்வோய்கேள்.

இவை - ஈரடித்தாழிசைகள். (௬)

கஎ. தேவராய்த் தேவர்க்குந் தெரியாத வொளியுருவாய்
கஅ. மூவராய் மூவர்க்குண் முதல்வனாய் நின்றோய் நீ.

ககூ. போற்றுவார் போற்றுவதுன் புகழ்ப்பொருளேயாதலினா
உ0. வேற்றுவா சகமடியேன் விளம்புமா றறியேனால். [ல்

உக. பணித்தடங்கா திமையவற்கும் பங்கயத்தோன் முத
உஉ. லோர்க்கும், பணித்தடங்காப் புகழடியேன் பணித்தடங் கற்பாலதோ.

உங. யாங்கடவு ளென்றிருக்கு மெவ்வுலகிற் கடவுளர்க்கும்
உச. ஆங்கடவு ணீயென்றா லஃதுனக்கு வியப்பாமோ.

உரு. அனைத்துலகு மனைத்துயிரு மமைத்தளித்துத் துடைப்
உசு. பதுநீ, நினைத்தவினை யாட்டென்றா னின்பெருமைக் களவாமோ.

உஎ. கருதரிய வுயிர்க்குயிராய்க் கரந்தெங்கும் பரந்துறையும்
உஅ. ஒருதனிநா யகமென்றா லுன்புகழ்க்கு வரம்பாமோ.

இவை - ஈரடி அராகங்கள். (ச)

உகூ. உருவென வருவென வுளனென விலனென
ங0. அருமறை யிறுதியு மறிவரு நிலைமையை.

ஙக. இவரிவ ரிறையவ ரெனமன வுறுதியோ
ஙஉ. டவரவர் தொழவரு சமயமு மருளினை.

ஙங. கடுவளி கனல்புனல் ககனமொ டகலிடம்
ஙச. உடுபதி கதிரவ னுருவமு மருளினை.

ஙரு. கடிமல ரடியிணை கருதினர் பெறுகென
ஙசு. அடிநடு முடிவற வருள்பர கதியினை.

இவை பெயர்த்தும் - ஈரடித்தாழிசைகள். (ச)

ஙஎ. ஒருநாலு முகத்தவனோ டுலகின்று மென்பரதுன்
ஙஅ. திருநாபி மலர்ந்ததல்லாற் றிருவுளத்தி லுணராயால்.

ஙகூ. மேருகிரி யுடலவுணன் மிடல்கெடுத்தா யென்பரதுன்
ச0. கூருகிரே யறிந்ததல்லாற் கோவேநீ யறியாயால்.

சக. பன்றியாய்ப் படியெடுத்த பாழியா யென்பரது [தால்.
சஉ. வென்றியா ருனதெயிற்றின் மென்றுகள்போன் றிருந்த

௪௩. அண்டமெலா முண்டையென்பா ரறியாதா ராங்கவைநீ
௪௪. உண்டருளுங் காலத்தி லொருதுற்றுக் காற்றுவால்.

இவை - நாற்சீர் ஓரடி அம்போதரங்கம். (௨)

௪௫. நஞ்சமு மமுதமு நாகும் வீடுமாய்
௪௬. வஞ்சமு ஞானமு மறப்பு மாயினை.
௪௭. இருவினைப் பகுதியு மின்ப துன்பமும்
௪௮. கருணையும் வெகுளியுங் கருத்து மாயினை.

இவை - முச்சீர் ஓரடி அம்போதரங்கம். (௪)

௪௯. அலைகடல் வயிறு கலக்கினை.
௫0. அவுணரை மதுகைய டக்கினை.
௫௧. மலைகட களிறுவ தைத்தனை.
௫௨. மலைதலை கவிழவெ டுத்தனை.

இவை - இருசீர் ஓரடி அம்போதரங்கம். (௮)

௫௩. மண்ணை விண்டனை.
௫௪. வெண்ணெ யுண்டனை.
௫௫. மருதி டந்தனை.
௫௬. எருத டர்ந்தனை.
௫௭. உண்ணி றைந்தனை.
௫௮. எண்ணி றந்தனை.
௫௯. ஒருமை யாயினை.
௬0. பெருமை பேயினை.

எனவாங்கு (தனிச்சொல்.)

பதினன்கடிநிலமண்டில ஆசிரியச்சுரிதகம்.

௬௧. மலர்தலை யுலகத்துப் புலமை சான்ற
பதின்மரும் பணித்த பாடலோ தையொடு
முதுமறை கறங்க முரச மார்ப்ப
வலம்புரி பிளிறும் பொலம்புரி கோயில்
ஆழியஞ் செல்வ வாதியம் பரம
வாழி வாழி மாயோய் வாழி
நெடியோய் வாழி நின்மாட் டொன்றே
அடியேன் வேண்டுவ தஃதுநீ மறுக்கேல்
பூவரு மயன்முதல் யாவரு மறியா
மூவுல களந்தநின் சேவடி வாழ்த்தித்
தொழுதகை நத் தொண்டர்தந் தொண்டருட் சேர்க்கா
தெழுவகைத் தோற்றத் தின்னுப் பிறப்பின்
என்பொழி யாக்கையுட் சேர்ப்பினு மவர்பால்
௭௪. அன்பொழி யாமை யருண்மதி யெனக்கே.

க—அ. (இ-ள்.) சீர்பூத்த-சிறப்புமிகுந்த, செழுகமலம் - செழியதாமரை மலராகிய, திருத்தவிசில் வீற்றிருக்கும்-மேன்மையாகிய ஆசனத்தில் வீற்றிருக்கின்ற, நீர்பூத்த - திருப்பாற்கடல் ஈன்ற, திருமகளும் - ஸ்ரீதேவியும், நிலமகளும் - பூதேவியும், அடிவருட-(தமது திருக்கரங்களால் உனது) திருவடிகளைத் தடவவும், சிறைபறவை-சிறகுகளையுடைய பறவையாகிய பெரியதிருவடி, புறம்காப்ப-பக்கத்திற் காத்திருக்கவும், சேனையர்கோன் - சேனைத்தலைவர், பணிகேட்ப - ஏவல்கேட்டு நிற்கவும், நறை-மணமுள்ள, துழாய்ப்படலை - திருத்துழாய் மாலையையணிந்த, மார்பில் - திருமார்பிலேயுள்ள, மணி-(கௌஸ்துபம் என்னும்) ரத்நம், நாயிறுபோல் விளங்க - சூரியன்போலப் பிரகாசிக்கவும், அரிய-(பிறரால்வெல்லுதல்) அருமையாகிய, தானவர்கடிந்த - அசுரர்களையழித்த, ஐம்படையும்-பஞ்சாயுதங்களும், புடைதயங்க - இருபுறத்தும் நின்றுவிளங்கவும், பாயிரம் - முகவுரையை யுடைய, நால்மறை - நான்குவேதங்களும்-பரவ - துதிக்கவும், பால்கடலுள் - திருப்பாற்கடலில், பருமணி, பருத்தமாணிக்கமுள்ள, சூட்டு - உச்சிகளோடு கூடிய, ஆயிரம்வாய்-ஆயிரந்தலைகளையுடைய, பாம்பு-ஆதிசேஷனாகிய, அணைமேல் - சயநத்தின்மீது, கரியமால்வரை - கருமையும் பெருமையுமுள்ள ஒருமலையானது, முளரிக்காடு ஈன்று - தாமரைமலர்க்காடு தன்மீது மலரப்பெற்று, கிடந்தாங்கு - படுத்திருந்தாற் போல, அறிதுயிலின்-யோகநித்திரையில், இனிது அமர்ந்தோய்-இனிதாக அமைந்திருப்பவனே.

சீர் - ஸ்ரீ என்னும் வடமொழிச்சிதைவு. நீர் என்பது இவ்விடத்துக்கடலுக்காகி அதுசாதிபற்றித் திருப்பாற்கடலுக்காயிற்று. நீர்பூத்த என்பதனை நிலமகளுக்கு விசேடணமாக்கிக் கடலாற்சூழப்பட்ட பூமிப்பிராட்டியார் என உரைப்பினும் அமையும். இவ்வாறன்றி பெரியபிராட்டிக்கு விசேடணமாகும்போது நீர்பூத்த என்பது பெண்மைக்குரிய நற்குணங்கள் நிறைந்த எனவும், பூமிப்பிராட்டிக்கு விசேடணமாகும்போது நீரினின்றுந் தோன்றிய எனவும்கூறினும் பொருந்தும். சேனையர்கோன்-பரமபதத்திலுள்ள நித்தியமுக்தர்களுக்குத்தலைவர். நறை-தேன் எனினும் பொருந்தும். ஐம்படை - சக்கரம், சங்கு, கதை, வில், வாள் என்பன. இவற்றை வடநூலார் முறையே, சுதரிசநம், பாஞ்சஜந்யம், கௌமோதகி, சார்ங்கம், நந்தகம் என்றும் கூறுவர். காடு என்றது மிகுதியை. கரியமால்வரை, இறைவரது திருமேனிக்கும், முளரிக்காடு வாய் கண் கைகால் முதலிய அவயவங்களுக்கும் உவமை. அறிதுயில் - அறிவோடுசெய்யும் நித்திரை.

கூ—கசு. மண் அகம்-மண்ணுலகத்திலுள்ளாரும், வான் அகம்-விண்ணுலகத்திலுள்ளாரும், துயர் நீங்க - (தத்தம்) துன்பம் நீங்கும்படி, தொழுது ஏத்த-வணங்கித்துதியாநிற்க, கண் அகல் சோணாட்டு-இடமகன்ற சோழநாட்டில், காவிரிவாய் - திருக்காவேரியாற்றினடுவில், புளினத்து - மணற்றிண்ணையில், பம்புகதிர் - நெருங்கிய கிரணங்களையுடைய, விசும்பு - ஆகாயத்திற்சஞ்சரிக்கிற, இரவி - சூரியனது, பசும்புரவி-பச்சைக்குதிரை, வழிவிலங்கு-(தான்போம்) வழியைவிட்டு விலகிப்போதற்குக் காரணமாகிய, செம்பொன் - செம்பொன்மயமாயிருக்கிற, மதில் ஏழ் உடுத்த - ஏழு திருமதில்களைச் சூழக்கொண்ட, திருவரங்கப்பெருங்கோயில்-திருவரங்கமாகிய பெரியகோயிலில், ஆணிப்பொன்தகடு உரிஞ்சும் - ஆணிப்பொன்னாற் செய்த தகடுபதித்த, அணிக்கதவம் - அழகாகிய கதவுகள்பொருந்திய, நீள்வாயில்-நீண்ட திருவாயிலையுடைய, மாணிக்கம் வெயில்பரப்பும்-மாணிக்கங்களின் ஒளியைவிரிக்கின்ற, வயிரமணி - வயிரக்கற்களிழைத்த, விமானத்துள்-விமானத்தினுள், மின் இலங்கு-ஒளிவிளங்குகின்ற, தொடிவலயம் - தொடியென்னும் வளையையணிந்த, வியன்-பெரிய, வலக்கை - வலது திருக்கரத்தை, கீழ்கொடுத்து - (திருமுடியின்) கீழ்வைத்துக்கொண்டு, தென் இலங்கைத்திசைநோக்கி - தென்றிசையிலுள்ள இலங்காநகரத்தை நோக்காநின்று, திருநயனம் துயில்வோய் - திருக்கண்வளர்ந்தருள்வோனே, கேள் - (அடியேன் செய்யும் விண்ணப்பத்தைக்) கேட்டருள்வாயாக. எ-று.

மண்ணகம் வானகம் என்றது அவ்விடத்துள்ளாரை. இரவி பசும்புரவிவழி விலங்குசெம்பொன்மதில் என்றமையால் திருமதில் சூரியமண்டலத்தளவு முயர்ந்திருப்பதென்பது பெறப்பட்டது. இந்தப்புரவிக்கு சப்தாசுவம் என்றுபெயர். சிலர் ஏழுகுதிரைகளென்பர். திருவரங்கத்துக்குப் பெரியகோயில் என்றும், அவ்விடத்தெழுந்தருளியிருக்கும் எம்பெருமானுக்குப் பெரியபெருமாள் என்றும் திருநாமம் வழங்கும். ஆணிப்பொன்-மாற்றறியாணிக்குப் பின்னிடாது நின்றுயர்ந்த நன்பொன். விமானம் என்றது இவ்விடத்துப் பிரணவாகார விமானத்தை. தென்னிலங்கைத்திசை நோக்கித் திருநயனம் துயிலுதற்குக்காரணம் ஸ்ரீ விபீஷணாழ்வான்மீதுள்ள பெருங்கருணை. "மன்னுடைய விபீடணர்க்காய் மதிளிலங்கைத் திசைநோக்கி மலர்க்கண்வைத்த - என்னுடைய திருவரங்கர்க்கு" "வன்பெரு வானகமுய்யவமரருய்ய மண்ணுய்ய மண்ணுலகின் மனிசருய்யத்-துன்பமிகு துயரகலவயர்வொன்றில்லாச் சுகம்வளர வகமகிழுந் தொண்டர்வாழ - வன்பொடு தென்றிசைநோக்கிப் பள்ளிகொள்ளு மணியரங்கன்" "குடதிசை முடியைவைத்துக் குணதிசை பாத

நீட்டி-வடதிசை பின்புகாட்டித் தென்றிசையிலங்கைநோக்கி'' இத்யாதிகளும் இக்கருத்தையே யுட்கொண்டெழுந்தன.

கஎ—கஅ. நீ - நீ, தேவராய் - (இந்திரன்முதலிய) தேவர்களுடைய ஸ்வரூபத்தையுடையையாய், தேவர்க்கும்-அந்தத்தேவர்களுக்கும், தெரியாத - அறியக்கூடாத, ஒளி உரு ஆய் - தேஜோரூபியாய், மூவராய் - மும்மூர்த்திகளாய், மூவர்க்குள்-(அந்த) மூவருக்குள்ளே, முதல்வனாய்-தலைவனாய், நின்றாய் - நின்றதன்மையையுடையாய்.

மூவர்-அயன் அரி அரன் என்பவர். "முதலாவார் மூவரே யம்மூவருள்ளும் - முதலாவான் மூரிநீர்வண்ணன்'' என்பதும் இக்கருத்தேபற்றிவந்தது.

கக—உ௦. போற்றுவார்-துதிப்பவர்கள், போற்றுவது-துதிப்பது, உன்-உனது, புகழ்ப்பொருளே - கீர்த்தியாகிய பொருளையே, ஆதலினால் - ஆதலால், அடியேன் - அடியனேன், வேற்றுவாசகம்-(அந்தக்கீர்த்தியையேயன்றி) வேறுவார்த்தையை, விளம்பும் ஆறு-சொல்லும்வகையை, அறியேன் - அறிந்திலேன். எ-று.

எந்தத்தேவர்களைக்குறித்துத் துதிப்பினும் அந்தத் துதிகளெல்லாம் சர்வேசுவரனாகிய திருமாலையேயடைதலால் "போற்றுவார் போற்றுவதுன் புகழ்ப்பொருளே'' என்றார். இறைமைக்குணங்களிலராயினாரை உடையரெனக்கருதி அறிவிலார்கூறும் புகழ்கள் ஒரு பொருளல்லவாதலால் அவை முழுதுமுடைய எம்பெருமான் புகழேபொருள் எனப்பட்டது.

உக—உஉ. பணி-பாம்பைக்(குழையாக அணிந்த),தடங்காது-பெரியகாதுகளையுடைய, இமையவற்கும் - தேவனாகிய சிவபெருமானுக்கும், பங்கயத்தோன் முதலோர்க்கும் - பிரமன்முதலோர்க்கும், பணித்து அடங்கா - சொல்லியடங்காத, புகழ் - உன்பெருங்கீர்த்தி, அடியேன்பணித்து-அடியனேன்சொல்லி, அடங்கற்பாலதோ-அடங்குந்தன்மைத்தோ (அன்று). எ-று.

காதை மற்றைய அவயவங்களுக்கும் உபலக்ஷணமாகக்கொண்டு, கண்டம் மார்பு கை முதலிய அவயவங்களில் ஆபரணமாக அணிந்த என்றுரைப்பினுமமையும். பங்கயத்தோன் - தாமரைமலரிற் பிறந்தவன்.

உங—உச. யாம்-நாமே, கடவுள் என்று இருக்கும்-கடவுளென்றெண்ணி யிறுமாந்திருக்கின்ற, எவ்வுலகில் கடவுளர்க்கும்-எல்லாவுலகங்களிலுமுள்ள தெய்வங்களுக்கும், நீ கடவுள் ஆம் என்றால்-நீயே மேலானகடவுளென்று (யாம்) புகழ்ந்தால், அஃது - அப்புகழ்

ச்சி, உனக்கு வியப்பு ஆமோ - உனக்கொரு பெருமையாகுமோ (ஆகாது). எ-று.

உரு—உசு. அனைத்து உலகும் - எல்லாவுலகங்களையும், அனைத்து உயிரும் - (அவற்றுள்ளடங்கிய சராசரங்களாகிய) எல்லாவுயிர்களையும், அமைத்து-சிருஷ்டித்து, அளித்து-ரக்ஷித்து, துடைப்பது-சம்ஹரிப்பது, நீ நினைத்த விளையாட்டு என்றால்-நீ திருவுளத்திற் சங்கற்பித்தலீலையேயாம் என்று புகழ்ந்தால், (அப்புகழ்ச்சி) நின்பெருமைக்கு - உன்மகிமைக்கு, அளவு ஆமோ - வரையறையாகுமோ, (ஆகாது). எ-று.

ஸ்ருஷ்டி ஸ்திதி லயங்கள் உனது லீலையாயின், நீ கண்ணான்றிச் செய்யுங்காரியம் எத்தன்மைத்தோவென்பது கருத்து. இது "உலகம்யாவையுந் தாமுளவாக்கலும் - நிலைபெறுத்தலு நீக்கலு நீங்கலா-அலகிலாவிளையாட்டுடையார்" என்னும் மஹாகவியின் திருவாக்கானும் விசதம். அமைத்தளித்துத் துடைப்பது என்றானும், அயனாகி அமைப்பதென்றும், அரியாகி அளிப்பதென்றும், அரனாகித் துடைப்பதென்றுங் கொள்க.

உஎ—உஅ. கருது அரிய-நினைத்தற்கும் அருமையாகிய, உயிர்க்கு-எல்லாச்சீவராசிகளுக்கும், உயிர் ஆய்-அந்தராத்மாவாகி, கரந்து-மறைந்து, எங்கும் - எவ்விடத்தும், பரந்து - வியாபித்து, உறையும்-தங்கியிருக்கின்ற, ஒருதனிநாயகம் என்றால்-ஒப்பற்ற ஒரு தனிமைப்பொருள் என்று யாம்புகழ்ந்தால், (அப்புகழ்ச்சி) உன்புகழ்க்குவரம்பு ஆமோ-உன்பெருங்கீர்த்திக்கு ஒருவரையறையாகுமோ ஆகாது.

மனத்தின்றொழிலாகிய கருதுதலின் அருமைகூறினமையானே, வாக்குக் காயங்களின் றொழில்களாகிய சொற்செயல்களின் அருமைசொல்லாமேயமையும். அமையவே, மனமுதலியவற்றா லளவிடப்படாத வுயிர்களென்றதாயிற்று. சரீரத்துக்குள் ஆத்மா அதற்குத் தாரகமாய் நியாமகமாய்ச் சேஷியாய்த் தங்கியிருத்தல்போல, அச்சரீராத்மாக்களுள் பரமாத்மா அவற்றிற்குத் தாரகனாய் நியாமகனாய்ச் சேஷியாய் அந்தர்யாமியாய்த் தங்கியிருத்தலால் "உயிர்க்குயிராய்" என்றார். இவ்விஷயம், "திடவிசும்பெரிவளி நீர்நிலமிவைமிசை - படர்பொருள் முழுவதுமாயவை யவைதொறும் - உடன்மிசையுயிரெனக் கரந்தெங்கும்பரந்துளன்" "பரந்ததண்டமிதென நிலவிசும்பொழிவறக் - கரந்தசிலிடந்தொறு மிடந்திகழ்பொருடொறுங் கரந்தெங்கும் பரந்துளன்" இத்யாதி ஸ்ரீஸூக்திகளால் விசதம்.

உகூ—௩0. உரு என-உருவுடையானென்றும், அரு என-உருவில்லானென்றும், உளன் என-உள்ளவனென்றும், இலன் என-இல்

லாதவனென்றும், (நிச்சயித்து) அருமறை இறுதியும் - (ஆற்றலால் உவமித்தற்கு) அருமையாகிய வேதாந்தங்களும், அறிவு அரு - அறிதலருமையாகிய, நிலைமையை - நிலையையுடையையாயிருக்கின்றனை.

உரு அரு என்பன ரூபம் அரூபம் என்னும் வடமொழிச்சிதைவுகள். உருவம் அருவம் எனவும்வரும். வேதாந்தங்களுக்கு ஆற்றலாவது சதுர்வித புருஷார்த்தங்களையும் உணர்த்தலும் அபௌருஷேயங்களாய் நித்ய நிர்த்தோஷங்களா யிருத்தலுமாம். "இலனது வுடையனிதெென நினைவரியவன் - நிலனிடை விசும்பிடை யுருவினனருவினன்". "உளனெனிலுளனவ னுருவமிவ்வுருவுகள்-உளனலனெனிலவனருவமிவ்வருவுகள் - உளனென விலனென விவைகுணமுடைமையின்-உளனிருதகைமையோ டொழிவிலன்பரந்தே" என்பன ஆழ்வார் ஸ்ரீசூக்திகள்.

௩க—௩உ. இவர் இவர்-இந்த இந்தத்தேவர்கள், இறையவர்-(எமக்குத்) தலைவர்கள், என-என்றுகருதி, மன உறுதியொடு - மனோ நிச்சயத்தோடு, அவர் அவர்-அந்த அந்த மதஸ்தர்கள், தொழ-வணங்கும்படி, அறுசமயமும் - ஆறுமதங்களையும், அருளினை-உண்டாக்கியருளினை. எ-று.

அறுசமயங்களாவன:—வைஷ்ணவம், சைவம், சாக்தம், சௌரம், காணபதம், கௌமாரம் என்பன. இவையேயன்றிக் கபிலம், கணாதம், பதஞ்சலம், அக்ஷபாதம், வியாசம், ஜைமிநம் எனவும், பௌத்தம், ஜைநம், பைரவம், காளாமுகம், லோகாயதம், சூந்ய வாதம் எனவும் கூறுவர்.

௩௩—௩ச. கடு வளி-வேகமுள்ளகாற்றும், கனல்-நெருப்பும், புனல்-நீரும், ககநமொடு - ஆகாயத்தோடு, அகல் இடம்-அகன்றபூமியும், உடுபதி-நக்ஷத்திரங்களுக்கு நாயகனாகிய சந்திரனும், கதிரவன்-சூரியனும் ஆகிய இவர்களுடைய, உருவமும் - ரூபங்களையும், அருளினை-வகுத்தருளினை. எ-று.

உடுபதியென மேல்வந்தமையால் கதிரவன் என்பது சூரியனைக் குறித்தது.

௩ரு—௩சு. கடிமலர்-மணமுள்ள செந்தாமரைமலர்போன்ற, அடி இணை-இரண்டுதிருவடிகளையும், கருதினர் - நினைத்தவர்கள், பெறுக என-பெறக்கடவதென்று, (அவர்களுக்கு) அடி நடு முடிவு அற-உத்பத்தி ஸ்த்திதி லயங்கள் அற்றொழியும்படி, அருள் - கொடுத்தருளுகிற, பரகதியினை-மேலானபதவியை யுடையையாயிருக்கின்றனை.

பரகதி-பரமபதம்.

௩எ—௩அ. ஒருநாலுமுகத்தவனோடு - ஒப்பற்ற நான்குமுகங்களையுடையவனாகிய பிரமனுடன், உலகு - எல்லாவுலகங்களையும், ஈன்றாய் என்பர்-படைத்தாயென்று (எல்லாருஞ்) சொல்லுவர், அது-அதனை ஆராயின், உன் திருநாபிமலர்ந்தது அல்லால் - (அவைகளை) உன்திருவுந்தித்தாமரை படைத்ததேயன்றி, திருவுளத்தில் உணராய்-நீ உன்திருவுளத்தில் சங்கற்பிக்கவுமில்லை. எ-று.

௩கூ—௪0. மேருகிரி - மேருமலைபோன்ற, உடல்-உடம்பினையுடைய, அவுணன் - அசுரனாகிய இரணியனது, மிடல் - வலியை, கெடுத்தாய் என்பர் - அழித்தாயென்று (எல்லாரும்) சொல்லுவர், அது-அந்த விஷயத்தை, உன்கூர் உகிரே அறிந்தது அல்லால்-உனது கூர்மையாகிய நகமே அறிந்ததன்றி, கோவே - இறைவனே, நீ அறியாய் - நீ உணராய், எ-று.

மேருகிரி நிறத்தாலும் வலியாலும் பெருமையாலும் உடலுக்குவமையாயிற்று. கூர் உகிரேயறிந்தது என நரசிங்கத்தைக்குறித்தமையாலும் மேருகிரியுடல் எனப் பொன்மலைபோன்ற வுடம்பைக் குறித்தமையாலும் அவுணன் என்பது இரணியகசிபனையுணர்த்திற்று.

௪க—௪உ. பன்றி ஆய்-சுவேத வராஹமாய், படி எடுத்த-பூமியைத்தாங்கிய, பாழியாய் என்பர்-வலியுடையாய் என்று எல்லாரும் சொல்லுவர், அது - அந்தப்பூமி, வென்றி ஆர் - வெற்றிபொருந்திய, உனது எயிற்றில்-உனது கொம்பில் ஒட்டிய, மெல்துகள்போன்று இருந்தது-நுட்பமாகிய தூளியை நிகர்த்திருந்தது. எ-று.

வென்றி-ஹிரண்யாக்ஷ ஸம்ஹாரம்.

௪௩—௪௪. அறியாதார் - (உன்திறமையை) உணராதவர்கள், அண்டம் எலாம் - எல்லாவுலகங்களையும், உண்டை என்பர்-நீ புசித்தாயென்று அதை ஒரு பெருமையாக எடுத்துச்சொல்லுவர், அவை-அவ்வண்டங்கள், நீ உண்டருளுங்காலத்தில் - நீ புசித்தருளுங்காலத்தில், ஒரு துற்றுக்கு ஆற்ற - ஒரு கவளத்துக்கும் பற்றாதனவாகும்.

துற்று-சோறு. அது இங்கு கவளத்துக்காயிற்று.

௪௫—௪௬. நஞ்சமும்-விஷமும், அமுதமும்-அமிர்தமும், நரகும்-நரகமும், வீடும்-மோக்ஷமும், ஆய்-ஆகி, வஞ்சமும்-வஞ்சகமும், ஞானமும்-அறிவும், மறப்பும்-மறதியும், ஆயினை-ஆனாய். எ-று.

௪எ—௪அ. இருவினைப் பகுதியும்-இருவினைப் பகுப்புக்களும், இன்பதுன்பமும் - (அவற்றாலுண்டாகும்) சுகதுக்கங்களும், கருணையும் - அருளும், வெகுளியும் - கோபமும், கருத்தும் - எண்ணமும், ஆயினை-ஆனாய். எ-று.

இருவினைப்பகுதி - புண்யபாபத்தின் கூறுபாடுகள்.

௪௯. அலைகடல்-அலைகின்ற கடலினது, வயிறு - மத்ய ப்ரதேசத்தை, கலக்கினை - கலங்கச்செய்தாய். எ-று.

கடலைக் கலக்குதலாவது கூர்மாவதாரத்தில் பாற்கடல்கடைந்ததும், ஸ்ரீராமாவதாரத்தில் இலங்கைக்குச்செல்ல வருணனை வழிவிட ப்ரார்த்தித்து அவன் வராமையால், வெங்கணைசெலுத்தியதுமாம்.

௫௰. அவுணரை - அசுரர்களை, மதுகை அடக்கினை-வலியழித்தாய். எ-று.

அவுணர் என்றது ஹிரண்யாக்ஷன், ஹிரண்யகஶிபன் முதலானவர்களை.

௫௧. மலை - போர்புரிந்த, கடகளிறு - மதயானையை, வதைத்தனை - கொன்றாய். எ-று.

மதயானை என்றது குவலயாபீடத்தை. இது கண்ணனைக்கொல்லும்பொருட்டு கம்ஸனால் ஏவப்பட்ட யானை.

௫௨. மலை - (கோவர்த்தந) கிரியை, தலைகவிழ - தலைகீழாம்படி, எடுத்தனை-(குடையாக) எடுத்துத்தாங்கினாய். எ-று.

மலை எடுத்தசெய்தி:—கிருஷ்ணாவதாரத்தில் திருவாய்ப்பாடியில் ஆயர்களெல்லாருங்கூடி மழையின்பொருட்டாக இந்திரனை ஆராதித்தற்குச் சமைத்தசோற்றை அவனுக்கிடாதபடி விலக்கி, கோவர்த்தநகிரிக்கு இடச்சொல்லி, தானே ஒரு தேவரூபமாய் அமுதுசெய்தருள, அவ்விந்திரன் கோபத்தாலே புஷ்கலாவர்த்தகமுதலிய மேகங்களை ஏவி, தான் மேய்த்துக்கொண்டுபோகிற கன்றுகளுக்கும் பசுக்களுக்கும் தனக்கு அபிமதரான ஆயர்க்கும் ஆய்ச்சிமார்க்குந் துன்பந் தரும்படி கல்மழையை ஏழுநாள் விடாதுபெய்வித்த பொழுதென அறிக. "வழுவொன்று மில்லாச் செய்கைவானவர்கோன், வலிப்பட்டு முனிந்து விடுக்கப்பட்ட மழைவந் தேழுநாள்பெய்து மாற்றடைப்ப, மதருநதனனெடுத்து மறித்தமலை" "செப்பாடுடைய திருமாலவன்றன் செந்தாமரைக் கைவிரலைந்தினையும், கப்பாகமடுத்து மணிநெடுந்தோள் காம்பாகக் கொடுத்துக் கவித்தமலை" என்பன பெரியாழ்வார் ஸ்ரீஸூக்தி. "மகரமலையொடு, பொருகடல் கவர்புயலீட்டிய புறன்மழை தடிந்து தோடேழ்த்தமூளரி நடுவுயர், பொகுடெனவரை யெழுநாட்பொழுதொரு சிறுபசுங்கைமீதேற்ற குருசில் வருகவே" என்றார் வேப்பத்தூர்ச்சங்கத்தார்.

௫௩. மண்ணை விண்டனை - (வராஹாவதாரத்தில்) பூமியைக் (கொம்பினால்) குத்தியெடுத்தாய். எ-று.

௫௪. வெண்ணெய் உண்டனை-(கிருஷ்ணாவதாரத்தில் இடையர் வீட்டில்) வெண்ணெயைப் புசித்தாய். எ-று.

௫௫. மருது இடந்தனை - மருதமரங்களை முறித்தாய்.

மருதிடந்தசெய்தி:—கண்ணன் குழந்தையா யிருக்குங்காலத்தில் துன்பத்துக்கேதுவாகிய பல விளையாடல்களைச்செய்யக் கண்டு கோபித்த யசோதை கண்ணனைத் திருவயிற்றிற் கயிற்றினாற்கட்டி ஓர் உரலிலேபிணித்துவிட, கண்ணன் அந்த வுரலை யிழுத்துக்கொண்டு அங்கிருந்த இரட்டைமருத மரத்தினடுவே யெழுந்தருளிய போது, அவ்வுரல் குறுக்காய் நின்று இழுக்கப்பட்டதனால் அந்த மரங்களிரண்டும் முறிந்துவிழுந்தவுடனே, நாரதர் சாபத்தால் மரங்களாய்க்கிடந்த நளகூபரன் மணிக்கிரீவன் என்னும் குபேரன்புதல்வ ரிருவரும் சாபம் நீங்கிச்சென்றனர் என்பது.

௫௬. எருது அடர்ந்தனை-எருதுகளோடு பொருதாய். எ-று.

எருதடர்ந்த செய்தி :—கண்ணன் நப்பின்னைப்பிராட்டியைத் திருமணஞ் செய்துகொள்ளும் பொருட்டு, அவள் தந்தையின் எற்பாட்டின்படி ஒருவருக்கும் அடங்காத அசுராவேசமான எருதுகளேழையும் எழு திருவுருக்கொண்டுசென்று வலியடக்கித் தழுவினனென்பது.

௫௭. உள் நிறைந்தனை - எல்லாப் பொருள்களுள்ளும் வியாபித் திருக்கிறாய். எ-று.

௫௮. எண் இறந்தனை - எல்லாருடைய மனத்தையும் கடந்திருக்கிறாய். எ-று.

௫௯. ஒருமை ஆயினை-ஒப்பற்றவனாயிருக்கிறாய். எ-று.

௬0. பெருமைமேயினை - எல்லா மஹிமைகளையும் பொருந்தியிருக்கிறாய். எ-று.

௬௧—௭௪. மலர்தலை - பரந்த இடத்தையுடைய, உலகத்து-இவ்வுலகத்தில், புலமைசான்ற - ஞானம்நிறைந்த, பதின்மரும்-ஆழ்வார்கள் பதின்மரும், பணித்த - திருவாய் மலர்ந்தருளிய, பாடல்-திருப்பாடல்களாகிய தமிழ் வேதங்களின், ஓதையொடு - முழக்கத்துடன், முதுமறை - பழமையாகிய கீர்வாணவேதங்களும், கறங்க - கோஷிக்கவும், முரசம் ஆர்ப்ப-பேரிகைகள் ஒலிக்கவும், வலம்புரிபிளிறும் - வலம்புரிச்சங்குகள் ஒலிக்கின்ற, பொலம்புரி-பொன்னினாற்செய்த, கோயில்-திருவரங்கம் பெரியகோயிலில் எழுந்தருளியிருக்கிற, ஆழி அம்செல்வ - திருவாழியைத் திருக்கரத் தேந்துதலாலுண்டாகிய அழகையே செல்வமாகவுடையவனே, ஆதி அம்பரம-(எல்லாப் பொருள்களுக்கும்) முதலாதலாகிய அழகையும் மேன்மையையு முடையவனே, வாழி வாழி - நீ வாழ்வாயாக நீ வாழ்வா

யாக, மாயோய் - மாயோனே, வாழி-நீ வாழ்வாயாக, நெடியோய்-நெடியோனே, வாழி - நீ வாழ்வாயாக, நின்மாட்டு - உன்னிடத்தில், அடியேன் - தொண்டனேன், வேண்டுவது - பிரார்த்திப்பது, ஒன்றே - ஒருவரமே, அஃது - அதனை, நீ மறக்கேல் - நீ மறக்காதே; (அது யாதெனின்) பூ வரும் - உன்திருவுந்தித் தாமரையில் உண்டாகிய, அயன் முதல்யாவரும் - பிரமன் முதலிய எல்லாத் தேவர்களும், அறியா - உணரவொண்ணாத, மூவுலகு அளந்த-மூன்றுலகங்களையும் அளந்தருளின, நின்சேவடி - உன் செவந்த திருவடிகளை, வாழ்த்தி-துதித்து, தொழுத கை-அஞ்சலித்த கைகளையுடைய, தொண்டர்தம் - அடியார்களது, தொண்டருள் - அடியார் நடுவில், சேர்க்காது-(என்னையும் ஒருவனாகச்) சேர்க்காமல், எழுவகைத்தோற்றத்து - எழுவகைப்பட்ட தோற்றத்தையுடைய, இன்னாப்பிறப்பின்-துன்பத்துக்கேதுவாகிய பிறவிகளுள், என்பு ஒழியாக்கையுள் - எலும்பு இல்லாத புழுவுடம்பில், சேர்ப்பினும் - அடையச்செய்தாலும், அவர்பால் - அவ்வடியாரிடத்து, அன்பு ஒழியாமை - இடையறாத அன்புடைமையாகிய செல்வத்தை, எனக்கு அருள்-எனக்குக்கிருபை செய்வாயாக (என்பதே). எ-று.

பதின்மர் என்றது முன்காப்புக் கவியிற்கூறிய பன்னிருவருள் மதுரகவிகளும் ஆண்டாளும் நீங்கலாகநின்ற மற்றவர். வேதங்கள் அநாதியாதலால் முதுமறையெனப்பட்டன. வலம்புரி - வலமாகச் சுழித்தசங்கு. மாயோன்-கூடாததையும் கூடுவிக்கும் ஆற்றலுள்ளவன். இதனை வடநூலார் அகடிதகடநாசாமர்த்தியம் என்பர். மாயை என்பது பிரபஞ்சத்துக்குக் காரணமான பிரகிருதியெனவும் அதற்குக் காரணனாதலால் மாயோன் எனவும் கூறினும் பொருந்தும். அன்றி ஆச்சர்யகுண சேஷ்டிதங்களையுடையவன் என்றலுமொன்று. அன்றிக் கருநிறமும் அழகும் உள்ளவனெனினுமிழுக்காது. மூவுலகளந்தது திரிவிக்கிரமாவதாரத்தில். தொழுதகை-தொழுதற்குரிய பெருமையெனினுமமையும். எழுவகைத் தோற்றமாவன-தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன. எழுவகைத்தோற்றத்து என்பதற்கு எழுவகைத் தோற்றத்தினுள்ளும் என்றுரைத்தலுங்கூடும். யாக்கை-சப்ததாதுக்களால் யாக்கப்பட்டது. யாத்தல்-கட்டல். திருவரங்கநாதனே, அடியேன் புழுவாய்ப்பிறக்கும்படி நேரிட்டாலும் உன்னடியார் பக்கல் அன்பு நீங்காதிருக்கும்படி கிருபைசெய்யவேண்டுமென்பது கருத்து. அருண்மதி என்பதில் மதி முன்னிலையசைச்சொல். இவ்வாறன்றி அன்பொழியாமை மதி அருள் எனவைத்து அன்பொழியாதிருக்கும்படி நல்லறிவை யருள்வாயாக எனவுரைப்பினுமமையும்.

நேரிசைவெண்பா.

௨. எனக்கே திருவரங்க னேபிரா னெம்மான்
தனக்கே யடிமை தமியேன் - புனக்கேழ்
மருத்துளவோன் மேலன்றி மற்றொருவர் மேலென்
கருத்துளவோ வாராயுங் கால்.

(இ - ள்.) ஆராயுங்கால் - ஆராயுமிடத்து, எனக்குப்பிரான்- எனக்கு இறைவனானவன், திருவரங்கனே-ஸ்ரீரங்கநாதனே, எம்மான் தனக்கு - எம்பெருமானுக்கு, அடிமை - தொண்டன், தமியேனே- தனியேனே, (ஆதலால்) என்கருத்து-என் எண்ணங்கள், புனம்-நந்தவநத்திலுள்ள, கேழ் - நிறத்தையும், மரு - பரிமளத்தையுமுடைய, துளவோன்மேல் அன்றி - திருத்துழாய்மாலையையணிந்த அவ்விறைவன்மீதுள்ளனவேயன்றி, மற்றொருவர்மேல் உளவோ - இதரமாகிய தேவர்மேல் உள்ளனவோ (அன்று). எ-று.

பிரான்-உபகாரசீலன் என்றலுமொன்று. அதாவது சேதநரது அநர்த்தத்துக்கிரங்கிக் கரணகளேபர ப்ரதாநம்பண்ணிச் சாஸ்திரதீபத்தைக்கொடுத்தும் திருந்தாமைகண்டு தனது நிர்ஹேதுக க்ருபாவிசேஷத்தால் தானும் ராமக்ருஷ்ணாதி விபவாவதாரங்களா யெழுந்தருளி உய்வித்தல் முதலாயின. "உயிரளிப்பான் எந்நின்றயோநியுமாய்ப் பிறந்தாய்" என்றார் திருநாவீறரும். மான்-மஹாந் என்பதன் திரிபு. பெருமையுடையோன் என்பது பொருள். தமியேன்-சஹாயாந்தர கத்யந்தரங்கள் இல்லாதவன். அன்றி இழிவினால் ஒப்பற்றவன். ஆராய்ந்தாலன்றி இறைவனுக்கும் உயிர்களுக்குமுள்ள சேஷிசேஷசம்பந்தங்கள் தோன்றாவாதலால் "ஆராயுங்கால் எனக்கே திருவரங்கனே பிரானெம்மான்றனக்கே யடிமை தமியேன்" என்றும்' இவ்வாறு ஆராய்ந்து "மிக்கவிறை நிலையு மெய்யா முயிர்நிலையும்" உணர்ந்தார் கருத்து இறைமைக்குணங்களிலராகிய பிறதேவர்மீது செல்லாவாதலால் "மற்றொருவர்மேலென் கருத்துளவோ" என்றும் கூறினார். துளவமாலை இறைவனுக்குக் கௌஸ்துபரத்நமுதலியவற்றினுஞ் சிறந்த ஆபரணமாதலால் "புனக்கேழ் மருத்துளவோன்" என விசேடித்துக் கூறினர். "நாற்றத்துழாய்முடி நாரணன்" "சுரும்புலாவு தண்டுழாய்மாய" என்பனவும் இக்கருத்துடையனவே. இறைவன் சேஷியென்றும் யான் சேஷமென்றும் ஆராய்ந்தறிந்தபின் என்மனம் இதரதேவதைகளை நாடுமோஎன்பது கருத்து.

கட்டளைக்கலித்துறை.

௫. காலா யிரமுடி யாயிர மாயிரங் கைபரப்பி
மேலா யிரந்தலை நாகங் கவிப்பவிண் பூத்தகஞ்சம்

போலாயிரங்கண் வளரும்பி ரான்பொன்னரங்கனென்றே
மாலா யிரங்கவல் லார்க்கெய்த லாந்திரு வைகுந்தமே.

(இ-ள்.) கால் ஆயிரம்-ஆயிரந்திருவடிகளையும், முடி ஆயிரம்-ஆயிரந் திருமுடிகளையும், ஆயிரம் கை - ஆயிரந்திருக் கைகளையும், பரப்பி - வியாபிக்கச் செய்து, ஆயிரந் தலைநாகம் மேல்கவிப்ப-ஆயிரந்தலைகளையுடைய திருவநந்தாழ்வானானவன் மேலே கவிந்திருக்க, விண்பூத்தகஞ்சம்போல் - நீலமேகத்தில் மலர்ந்த தாமரை மலர்கள் போலே, ஆயிரம் கண்வளரும்பிரான் - ஆயிரந் திருக் கண்களும் யோகநித்திரை செய்யப்பெற்ற மஹோபகாரகன், பொன்னரங்கன்-திருவரங்கநாதன், என்று-என்று நினைத்து, மால் ஆய்-(அவன் விஷயத்தில்) வியாமோகங்கொண்டு, இரங்கவல்லார்க்கு-மனமுருகவல்லாருக்கு, திருவைகுந்தம் - பரமபதத்தை, எய்தல் ஆம் - அடைதல் கூடும். எ-று.

ஆயிரமென்றது மிகப்பலவென்னும் பொருளது. இவ்வாறு கூறினது இறைவனது அளவில்காட்சி அளவிலாற்றல் முதலியவற்றை வற்புறுத்தற்கு. அன்றித் தருமியின் ஒற்றுமையால் விராட்டுருக்கொண்ட கோலத்தையாயினும் சரபசம்ஹார கோலத்தையாயினும் திருவுளங்கொண்டு கூறினதாகக்கொள்ளினும் பொருந்தும். இரங்குதலருமைதோன்ற இரங்கவல்லார்க்கு என்றார். திருவரங்கனை நினைந்துருகுவார்க்குப் பரமபதம் சித்திக்குமென்பது கருத்து.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

௯. வைகலந்த மூவிலைவே லீசற்கும் வாசவற்கும் வாசப் பூமேல், மெய்கலந்த நால்வேத விரிஞ்சனுக்கு மேலாய்வீற் றிருப்பர் மாதோ, பைகலந்த பாம்பணைமேற் றிருவரங்கப் பெருநகருட் பள்ளி கொள்ளும், கைகலந்த நேமியான் றிரு நாமத் தொருநாமங் கற்றார் தாமே.

(இ-ள்.) திரு அரங்கப்பெருநகருள்-திருவரங்கம் பெரியகோயிலில், பைகலந்த - படம்பொருந்திய, பாம்பு அணைமேல் - சேஷசயனத்தின்மேல், பள்ளிகொள்ளும்-பள்ளிகொண்டருளுகின்ற, கைகலந்தநேமியான்-கையிற்பொருந்திய திருவாழியையுடைய எம்பெருமானது, திருநாமத்து - (ஆயிரந்) திருநாமங்களுள், ஒருநாமம்-ஒரு திருநாமத்தை, கற்றார்-உச்சரித்தவர்கள், வைகலந்த - கூர்மைபொருந்திய, மூ இலை - மூன்று இலைவடிவமான தலைகளுள்ள, வேல்-சூலாயுதத்தையுடைய, ஈசற்கும் - உருத்திரனுக்கும், வாசவற்கும் - இந்திரனுக்கும், வாசப்பூமேல் - மணமுள்ள தாமரைமலரில் வீற்

றிருக்கிற, மெய்கலந்த - உண்மைபொருந்திய, நால்வேதம் - நான்கு வேதங்களையுமுடைய, விரிஞ்சனுக்கும்-பிரமதேவனுக்கும், மேலாய்-மேன்மையுடையவராக, வீற்றிருப்பர்-(பரமபதத்தில்) மகிழ்ந்திருப்பர்கள். எ-று.

மை-அழகு, அல்லது நிறம் எனினும்பொருந்தும். இறைவர் ஆச்ரிதசம்ரக்ஷணத்தில் நிரந்தரசிந்தையுள்ளவராதலால் "கைகலந்த நேமியான்" என்றும், பொய்கலவாமல் எல்லாச்சமயத்தாருக்கும் த்ருடதரப்ரமாணமாயிருத்தலால் "மெய்கலந்த நால்வேதம்" என்றும், கூறினார். இறைவரது ஆயிரந்திருநாமங்களுள் ஒரு திருநாமத்தையுச்சரித்தவர்கள் பரமபதம் பெறுவார்களாயின் ஆயிரந்திருநாமங்களையும் அடைவே உச்சரித்தவர்கள் அடையும்பேறு எம்மாற் சொல்லப்படுந் தன்மையதோ என்பது கருத்து.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

௫. கற்றா ரெனினும் பதினா லுலகுங் கண்டா ரெனினுந்
தண்டா மிகுபற், றற்றா ரெனினுந் திருமா லடியா ரல்லா தவர்
வீ டில்லா தவரே, பொற்றா மரையாள் கணவன் றுயிலும்
பொற்கோ யிலையே புகழ்வார் பணிவார், மற்றா ரெனினும்
பெற்றா ரவரே வானோர் திருமா மணிமண்டபமே.

(இ-ள்.) கற்றார் எனினும்-(கற்றற்குரிய நூல்களையெல்லாம்) கற்றவர்களேயாயினும், பதினாலு உலகும் - பதினான்குலோகங்களையும், கண்டார் எனினும் - கண்டவர்களேயாயினும், தண்டா-நீங்குதலில்லாத, மிகுபற்று - மிகுந்த (இருவகைப்) பற்றுக்களும், அற்றார் எனினும் - நீங்கினவர்களேயாயினும், திருமால் அடியார் அல்லாதவர்-ஸ்ரீயப்பதியின் அடியவர்களல்லாதவர்கள், வீடு இல்லாதவரே-மோக்ஷமில்லாதவர்களேயாவர், பொன்தாமரையாள்கணவன் - அழகாகிய தாமரைமலரில் வீற்றிருக்கின்ற திருமகளது கணவனாகிய அவ்வெம்பெருமான், துயிலும் - திருக்கண்வளர்கின்ற, பொன்கோயிலையே - அழகிய திருவரங்கத்தையே, புகழ்வார்பணிவார் - துதிப்போர்களும் வணங்குவோர்களுமாகிய அவர்கள், மற்றார் எனினும்-மற்றவர்களேயாயினும் [மேற்கூறிய கற்றல் காணுதல் அறுதல் முதலிய குணங்கள் இல்லாதவரேயாயினும்], அவரே - அவர்களே, வானோர் - நித்யசூரிகளுறையுமிடமான, திருமாமணிமண்டபம் - முத்திமண்டபத்தை, பெற்றார்-அடைந்தவராவர். எ-று.

பதினாலுலகுங்கண்டார் என்றது தாமிருந்த இடத்தேயிருந்து பதினான்குலோகங்களில் நிகழுஞ் செய்திகளைத் தமது சர்வஜ்ஞதை

யால் உணர்வாரை. அன்றி யோகப்பயிற்சியால் அணிமா முதலிய சித்திகளைப்பெற்றுத் தாம் நினைத்த இடத்தையடையவல்ல யோகிகளையெனினுமாம். தண்டா என்றது பிறவியறுமளவும் ஆன்மாவை விட்டு நீங்காத என்றபடி. புருஷகார பூதையாகிய பெரியபிராட்டியோடு கூடின சேர்த்தியிலன்றி எம்பெருமான் ஆராதிக்கப்படுதற்குரியனல்லனுதலால் மால் என்னுது திருமாலென்றார். பொன்தாமரையாள்-திருமகளாகிய கமலாஸனை. அன்றிப் பொன்போலுங் கமலாஸனை எனினுமமையும். புகழ்வார்-தாமிருந்த இடத்தேயிருந்து புகழ்வோர். பணிவார் - அர்த்தத்திருப்பதியையடைத்து வணங்குவோர். அன்றி அவ்விடத்துச்சென்று புகழாநின்று வணங்குவோர் எனினுமாம். மற்று அசைநிலையாக்கினுமமையும். கற்றல் முதலியவற்றையுடையராயினும் திருமாலுக்கடிமைப்படாதவர் முத்தியடையார், அவையிலராயினும் திருவரங்கத்தைப் புகழ்தல் பணிதல்களைச்செய்வோர் முத்தியடைவார் என்பதுகருத்து.

எழுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

சா. மண்டலமும் விண்டலமு நின்றவட குன்றமும் வளைந்த மலை யுங்கட லுமூ, தண்டமு மகண்டமு மயின்றவர் துயின்றருள ரும்பதம் விரும்பி வினவில், கொண்டல் குமுறுங்குடகிழிந்துமத குந்தியகில் கொண்டுநுரை மண்டிவரு நீர், தெண்டிரைதொ றுந்தரள முங்கனக முஞ்சிதறு தென்திருவ ரங்க நகரே.

(இ-ள்.) மண்தலமும் - மண்ணுலகத்தையும், விண்தலமும்-விண்ணுலகத்தையும், நின்ற - (மண்ணுலகத்தினிடையே) நின்ற, வடகுன்றமும் - மகாமேருமலையையும், வளைந்தமலையும் - (அதைச்) சூழ்ந்துநின்ற மற்றமலைகளையும், கடலும்-கடல்களையும், மூது அண்டமும்-(இவையெல்லாவற்றையுந் தன்னுள் அடக்கிய) பழைய அண்டங்களையும், அகண்டமும்-(அவற்றிலுள்ள சராசரங்கள்) எல்லாவற்றையும், அயின்றவர் - அமுதுசெய்தருளிய எம்பெருமான், துயின்றருள்-திருக்கண்வளர்ந்தருளுகின்ற; அரும்பதி-அருமையாகிய திவ்ய தேசம் (எதுவென்று அறிய), விரும்பி வினவின் - நீங்கள் இச்சித்துக்கேட்டால் (யான் கூறுகிறேன் அதாவது) கொண்டல்குமுறும்-மேகங்கள் படிந்து முழங்கப்பெற்ற, குடகு-குடகமலையினின்றும், இழிந்து-இறங்கி, மதகு-நீர்மதகுகளை, உந்தி-தள்ளிக்கொண்டு, அகில் கொண்டு - அகிற்கட்டைகளை வாரிக்கொண்டு, நுரைமண்டி - நுரைமிகுந்து, வரும்-வருகின்ற, நீர் - காவேரிநீரானது, தெள்திரைதொறும் - தெளிந்த அலைகள்தோறும், தாளமும் - முத்துக்களையும், கன

கமும் - பொன்னையும், சிதறு - கொழிக்கின்ற, தென்திருவரங்கம் நக ரே-தென்றிசையிலுள்ள திருவரங்கமென்னும் நகரமேயாகும்.

வடதிசையில் மற்றைமலைகளுளவேனும் வடகுன்றம் என்றது தலைமைபற்றி மேருமலையை யுணர்த்திற்று. அருப்பதி - புண்யாத் மாக்களுக்கன்றி மற்றையர்க்குப் பெறுதற்கரிய திருப்பதி. வளர்த்த மலையும் கடலும் - சக்ரவாளகிரியும் அதைச்சூழ்ந்த பெரும்புறக்கட லும் எனினுமாம். குடகாசலம் - ஸஹ்யகிரி. அகில் என்றதை மற் றை மலைபடுபொருள்களுக்கெல்லாம் உபலக்ஷணமாகக்கொள்க. தென் - அழகெனினுமாம். உலகமுண்ட பெருவாயான் திருக்கண் வளர்ந்தருளுந் திருப்பதியாதெனின், தென்றிருவரங்க நகரமேயாம், நீங்கள் அவ்விடத்துச்சென்று அந்தச் சர்வேசுவரனது சயநத் திருக் கோலத்தைச்சேவித்து உஜ்ஜீவியுங்கள் என்பது கருத்து.

ஆசிரியவண்ண விருத்தம்.

புயவகுப்பு.

(முதலடி.)

௪. நருககதிர்வழங்கு தகடுபடுசெம்பொ
னவமணிகுயின்ற தொடியணியணிந்து
ககனவில்விடுநீல வெற்பொத்திருந்தன
நறியபுதுமன்ற றிசைமுழுதுமண்ட
நறவுகுதிகொண்ட துளவணியலங்கன்
மதுகரமொருகோடி சுற்றப்புனைந்தன
நளினமடமங்கை குவலயமடந்தை
சனகனதணங்கு பொதுவர்மகளென்றிவ்
வனிதையர்தனபார மொத்தக்குழைந்தன
நதிபதிசுழன்று கதறிநுரைசிந்த
வரவகடுரிஞ்சி யலறவலமந்து
வடவரையுடறேய நட்டுக்கடைந்தன

(இரண்டாமடி.)

இகலியிருகுன்றி லிருசுடரொழுந்து
பொருவதெனவிப்ப மதிமுகமிலங்கு
மிருகுழையிருபாடலைப்பச்சிறந்தன
இணையறநிமிர்ந்து வலியொடுதிரண்டு
புகழொடுபரந்து புழுகொடுமளைந்து
கலவையினணிசேறு துற்றுக்கமழ்ந்தன

எதிரொருவரின்றி யகிலவுலகுந்த
னடிதொழவிருந்த விரணியன்மடங்க
முரணியவரைமார்ப மெற்றிப்பிளந்தன
எறிகடல்கலங்கி முறையிடவெகுண்ட
நிசிசரரிலங்கை யரசொடுமலங்க
வொருசிலையிருகால்வ ளைத்துச்சிவந்தன
(மூன்றுமடி.)
மிருகளவினின்ற விளவுகனிசிந்தி
மடியவிடுகன்று குணிலெனவெறிந்து
பறவையினகல்வாய் கிழித்துப்பகிர்ந்தன
வெறிபடுகுருந்தை முறிபடவடர்ந்து
குடநடமகிழ்ந்து குரவைகள்பிணைந்து
பொருதொழிலெருதேழு செற்றுத்தணிந்தன
வெடிபடமுழங்கி யெழுமுகிலுமண்ட
ரொடுகிளைதியங்க வெறிதிவலைகண்டு
தடவரைகுடையாவெ டுத்துச்சுமந்தன
விழிவடவைபொங்க வெதிர்பொரநடந்த
களிறுளம்வெருண்டு பிளிறிடமுனிந்த
புகர்முகவிருகோடு பற்றிப்பிடுங்கின
(நான்காமடி.)
அகலிடமுழும்ப ருலமுநடுங்கி
யபயமடியெங்க ளபயமெனவந்து
விழுதொறுமிடையூற கற்றிப்புரந்தன
அருகுறவிளங்கு மெறிதிகிரிசங்கம்
வெயிலொருமருங்கு நிலவொருமருங்கு
மெதிரெதிர்கதிர்வீச விட்டுப்பொலிந்தன
அருமறைதுணிந்தபொருண் முடிவையின்சொ
லமுதொழுகுகின்ற தமிழினில்விளம்பி
யருளியசடகோபர் சொற்பெற்றுயர்ந்தன
அரவணைவிரும்பி யறிதுயிலமர்ந்த
வணிதிருவரங்கர் மணிதிகழ்முகுந்த
ரழகியமணவாளர் கொற்றப்புயங்களே.

(இ-ள்.) அரவு அணைவிரும்பி - சேஷசயநத்தைவிரும்பி, அறிதுயில் அமர்ந்த - (அதனிடத்து) யோகநித்திரைசெய்கின்ற, அணி திருவரங்கர் - அழகிய திருவரங்கநாதரும், மணிநிகழ்முகுந்தர் - நீலரத்நம்போல விளங்குகின்ற முகுந்தன் என்னுந் திருநாமத்தையுடையவருமாகிய, அழகிய மணவாளர் - அழகிய மணவாளரது, கொற்றப்புயங்கள் - வெற்றியையுடைய திருத்தோள்கள், நகுகதிர்வழங்கு - விளங்குகின்ற ஒளியை வீசுகின்ற, தகடுபடு செம்பொன் - தகட்டு வடிவமாகச்செய்யப்பட்ட செம்பொன்னின்மீது, நவமணி குயின்ற - நவரத்நங்களும் இழைத்துள்ள, தொடி அணி - தொடியென்னும் ஆபரணத்தை, அணிந்து - தரித்து, ககனம்வில் இடும் - ஆகாயத்தே தோன்றுகின்ற இந்திரவில் இடப்பட்ட, நீலவெற்பு - கரியமலைகளை, ஒத்திருந்தன - நிகர்த்திருந்தன, நறியபுதுமன்றல் - நல்ல புது மணமானது, திசைமுழுதும் - திக்குகளிலெல்லாம், அண்ட-பரவும்படி, நறவு குதிகொண்ட - தேன்பெருகுதலைத் தன்னிடத்தேகொண்ட, துளவு - திருத்துழாயாலாகிய, அணி அலங்கல் - அழகிய மாலையை, ஒருகோடி மதுகரம் சுற்ற - ஒருகோடி வண்டுகள் சூழ்ந்து மொய்க்கும்படி, புனைந்தன - சூடின, நளினம் மடமங்கை - தாமரையில் வீற்றிருக்கின்ற அழகிய பெரிய பிராட்டியும், குவலயமடந்தை - பூமிப்பிராட்டியும், சனகனது அணங்கு - சீதாபிராட்டியும், பொதுவர்மகள் - நப்பின்னைப்பிராட்டியும், என்ற - என்று சிறப்பித்துச்சொல்லப்பட்ட, இவ்வனிதையர் - இம்மகளிரது, தனபாரம் - பருத்தகொங்கைகள், ஒத்த - (தம்மேல்) அழுந்துதலால், குழைந்தன - நெகிழ்ந்தன, நதிபதி - திருப்பாற்கடலானது, சுழன்று - சுழற்சியடைந்து. கதறி - பேரொலிசெய்து, நுரைசிந்த - நுரைகளைச்சிந்தவும், அரவு - வாசுகியானது, அகடு உரிஞ்சி - உடல்தேய்ந்து, அலற - கதறவும், வடவரை - மந்தரமலை, அலமந்து - வருந்தி, உடல்தேய - உடம்பு தேய்வடையவும், நட்டு - (அம்மலையை மத்தாக) நாட்டி, கடைந்தன - மதித்தன.

இருசுடர் - சந்த்ரசூரியர்கள், இகலி - தம்முள் மாறுபட்டு, இருகுன்றில் - இரண்டுமலைகளில், எழுந்து - தோன்றி, பொருவது என - போர்செய்வதுபோல, விம்பம்மதிமுகம் இலங்கும் - சந்த்ரபிம்பம் போன்ற முகத்தினிடத்தே விளங்குகின்ற, இருகுழை இரண்டுகுண்டலங்களும், இருபாடு அலைப்ப - இரண்டுபக்கங்களிலும் அசையும்படி, சிறந்தன - சிறப்புற்றிருந்தன, இணை அற - (தனக்குத்தானேயன்றி வேறு) ஒப்பில்லாமல், நிமிர்ந்து - உயர்ந்து, வலியொடு - வலிமையுடனே, திரண்டு - திரட்சியாகி, புகழொடு - கீர்த்தியுடனே, பரந்து - பரவி, புழுகொடும் - புழுகுடனே, அளைந்து - கலந்து, கலவையின்

அணிசேறு துற்று - அழகிய கலவைச்சந்தனக்குழம்பு மிகுதியாய்ப் பூசப்பெற்று, கமழ்ந்தன-பரிமளித்தன, எதிர் ஒருவர் இன்றி-(தன்னை) எதிர்வார் ஒருவரும் இல்லாமல், அகில உலகும் - எல்லாவுலகங்களும், தன் அடிதொழ - தனதுபாதங்களையே வணங்கும்படி, இருந்த - இறுமாந்திருந்த, இரணியன் - இரணியாசுரன், மடங்க - அழியும்படி, முரணியவரைமார்பம் - (அவனது) வலியமலைபோலும் மார்பை, ஒற்றிப்பிளந்தன-(நகங்களினால்) ஊன்றி வகிர்ந்தன, எறிகடல்-அலைகளைவீசுகின்ற கடல், கலங்கி - கலக்கமடைந்து, முறையிட-முறையிடவும், நிசிசரர் - இராக்கதர்கள், இலங்கை அரசொடு-இராவணனுடனே, மலங்க-கலங்கவும், வெகுண்டு-கோபித்து, ஒருசிலை-ஒப்பற்றகோதண்டத்தை, இருகால் - இரண்டுதரம், வளைத்து - வளைத்தலால், சிவந்தன-செவந்தன.

மிகுகளவின் - மிக்கவஞ்சனையுடனே, நின்ற - (தன்னைக் கொல்லும்படி) நின்ற, விளவு - விளாமரமானது, கனிசிந்தி - (தன்) பழங்களைச்சிந்தி, மடிய - மடிந்துவிழும்படி, விடுகன்று-(கம்ஸனால்) ஏவப்பட்ட மாயக்கன்றை, குணில் என-குறுந்தடியாகக்கொண்டு, எறிந்து-வீசி, பறவையின்-பகாசுரனது, அகல் வாய்-அகன்றவாயை, கிழித்துப் பகிர்ந்தன - (இருகூறாகும்படி) கிழித்துப்பிளந்தன, வெறிபடு குருந்தை-மணம்பொருந்திய குருந்தமரத்தை, முறிபட-முறியும்படி, அடர்ந்து-அழித்து, குடநடம்மகிழ்ந்து-குடக்கூத்தை விரும்பியாடி, குரவைகள் பிணைந்து - குரவைக்கூத்தாடி, பொருதொழில் - போர்செய்கின்றதொழிலையுடைய, எருது ஏழு-எழெருதுகளையும், செற்று-(தழுவி) அழித்து, தணிந்தன-கோபந்தணிந்தன, எழுமுகிலும்-எழுமேகங்களும், வெடிபட - பேரொலியுண்டாக, முழங்கி - இடித்து, நிரை அண்டரோடு தியங்க - பசுக்கூட்டங்கள் (தம்மைக்காக்கின்ற) இடையர்களோடு திகைக்கும்படி, எறி-வீசிப்பெய்த, திவலை-நீர்த்துளிகளை, கண்டு-நோக்கி, தடவரை-பெரிய (கோவர்த்தந) கிரியை, குடையா-குடையாக, எடுத்து - எடுத்து, சுமந்தன - தாங்கின, விழி-கண்களில், வடவைபொங்க - வடவாமுகாக்நிபோலுந் தீப்பொறிபறக்கும்படி, எதிர்-எதிரில், பொரநடந்த-(தன்னோடு) போர்செய்யவந்த, களிறு-குவலயாபீடம், உளம்வெகுண்டு-மனங்கோபித்து, பிளிறிட-பேரொலிசெய்ய, முனிந்து - கோபித்து, புகர்முகம் இருகோடு-(அதனது) புள்ளியையுடைய முகத்தின்கண்ணேயுள்ள இரண்டு தந்தங்களையும், பற்றிப்பிடுங்கின - பிடித்துப்பறித்தன.

அகல் இடமும் - அகன்ற நிலவுலகத்தவரும், உம்பர் உலகமும்-தேவலோகத்தவரும், நடுங்கி - பயந்து, அடியெங்கள்-அடியவராகிய யாங்கள், அபயம் அபயம்-அடைக்கலம் அடைக்கலம், என - என்று

சொல்லி, வந்து விழுதோறும் - வந்துவிழுந்து வணங்குந்தோறும், இடையூறு அகற்றி - (அவர்களது) துன்பத்தைப்போக்கி, புரந்தன-ரக்ஷித்தன, அருகு உறவிளங்கும் - (இரண்டு) பக்கங்களிலும் மிக்கு விளங்குகின்ற, எறிதிகிரிசங்கம் - (பகைவர்மீது) பிரயோகிக்கப்படுகின்ற சக்ரமும் சங்கமும், வெயில் ஒருமருங்கும் - வெயிலொருபக்கத்திலும், நிலவு ஒருமருங்கும்-நிலா ஒருபக்கத்திலுமாக, எதிர் எதிர்-எதிருக்கெதிரே, கதிர்வீச-ஒளிவீசும்படி, விட்டுப்பொலிந்தன - ஒளிவிட்டு விளங்கின, அருமறை-(அறிதற்கு) அரியவேதங்களில், துணிந்த - நிச்சயித்துச்சொல்லப்பட்ட, பொருள்முடிவை - தத்வார்த்தங்களின் சித்தாந்தத்தை, இன்சொல்-இனியசொற்களையுடைய, அமுது ஒழுகுகின்ற-அமிர்தம்போன்ற இன்சுவைபெருகுகின்ற, தமிழினில்-தமிழ்மொழியில், விளம்பி அருளிய-திருவாய்மலர்ந்தருளிய, சடகோபர்-நம்மாழ்வாரது, சொல் - (திருவாய்மொழியாகிய) சொன்மாலைகளை, பெற்று-அணியப்பெற்று, உயர்ந்தன - சிறந்தன. எ-று.

தொடி-தோள்வளை. பல நிறமுள்ள வானவில் பலநிறமணிகள் பதித்த தொடிக்கும், நீலவெற்பு கரிய பெரிய திருத்தோள்களுக்கும் உவமை. மதுகரம் - தேனைச் சேர்ப்பது. கோடி - மிகப்பலவென்னும் பொருளது. குவலயம்-பூமண்டலம். மடம்-பெண்மைக்குணம் நான்கினொன்று. மங்கை - மாதர்பருவமேழனுள் மூன்றுவது. இது பதின்மூன்று வயதுள்ள பெண்ணின்பருவம். மடந்தை - இளமையுள்ளவள். பொதுவர் - இடையர். குறிஞ்சிநிலத்துக்கும் மருதநிலத்துக்கும் இடையிலுள்ள முல்லைநிலத்திலுள்ளவராதலால் இவர்க்கு இப்பெயருண்டாயிற்று. இடையர் என்பதற்கும் காரணமிதுவே. நிசிசரர்-இரவிற்சஞ்சரிப்பவர். நதிபதி-நதிகளுக்குத்தலைவன் (கடல்). வடதிசையிற் பிறமலைகளுளவேனும் நட்டுக் கடைந்தன என்றதனால் வடவரை மந்தரமலைக்காயிற்று. இரணியன்-பொன்னிறமானவன். குடநடம்-குடமெடுத்தாடுங்கூத்து. இது இடையர் செல்வச்செருக்கால் ஆடுவது. குரவை - கைகோத்தாடல். எழுமுகில்-சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம் என்பன. இவை முறையே மணி, நீர், பொன், பூ, மண், கல், தீ என்பவற்றைப் பொழியும். வடவை-வடவைத்தீ. இது கடல் நடுவில் பெண்குதிரையின் வடிவமாய் இருந்து மழைமுதலியவற்றுற் பெருகும் நீரை வற்றச்செய்வதோர் நெருப்பு. இது படைப்புக்காலத்தேயுள்ளது. அபயம் - பயநிவர்த்தியைச் செய்யும்பொருள்.

நேரிசைவெண்பா.

அ. புயநான் குடையானைப் பொன்னரங்கத் தானை
அயனுந் திருவுந்தி யானை—வியனும்

பாகதிக்குக் காதலாய்ப் பாடினேன் கண்டீர்
நரகதிக்குக் காணும ளுன்.

(இ-ள்.) புயம் நான்கு உடையானை - நான்கு திருக்கைகளை யுடையவனை, பொன் அரங்கத்தானை-அழகிய திருவரங்கத்தில் எழுந்தருளியிருப்பவனை, அயன் ஆம் திருஉந்தியானை - பிரமன்தோன்றிய அழகிய நாபியையுடையவனை, வியன் ஆம் - பெருமைபொருந்திய, பரகதிக்கு - பரமபதத்தை அடைவதற்கு, காதலாய் - விருப்பங்கொண்டு, நரகம் திக்கு காணுமல்-நரகத்தின் திசையையும் காணவொண்ணுதபடி, நான்பாடினேன்-நான் பாடினே. எ-று.

பரகதி-எல்லாப்பதவிகளினும் மேலானபதவி.

கட்டளைக்கலித்துறை.

கூ. நானந்த வைகுந்த நாடெய்தி வாழிலென் ஞாலத்தன்றி
ஈனந்த வாத நிரயத்து வீழிலென் யானடைந்தேன்
கோனந்தன்மைந்தனைநான்முகன்றந்தையைக்கோயிலச்சு
தானந் தனையெனக் காரா வமுதை யரங்கனையே.

(இ-ள்.) கோன் நந்தன் மைந்தனை - (இடையர்) தலைவராகிய நந்தகோபரது திருமகனை, நான்முகன் தந்தையை - பிரமனதுதாதையை, கோயில் - திருவரங்கம் பெரியகோயிலில் எழுந்தருளியிருக்கின்ற, அச்சுத அநந்தனை - அச்சுதன் அநந்தன் என்னுந் திருநாமங்களையுடையவனை, எனக்கு ஆரா அமுதை - எனக்குத் தெவிட்டாத அமிர்தம்போன்றவனை, அரங்கனை-திருவரங்கநாதனை, யான் அடைந்தேன் - நான் ஆசிரயித்தேன், இனி) நான் - யான், அந்தவைகுந்த நாடு-அந்த ஸ்ரீ வைகுண்டலோகத்தை, எய்தி - அடைந்து, வாழில்-வாழ்ந்து பேரின்பமடைந்தால், என்-என்னலாபம், ஞாலத்து அன்றி-இவ்வுலகத்திலேயல்லாமல், ஈனம் தவாத-இழிவு நீங்காத, நிரயத்து-நரகலோகத்தில், வீழில்-விழுந்து பெருந்துன்பமடைந்தால், என்-என்னலோபம். எ-று.

எல்லாநாட்டினு மேலான நாடென்றற்கு அந்த வைகுந்தநாடு எனச் சேய்மைச்சுட்டாற் சுட்டினூர். அன்றிப் பிரசித்தமெனக் குறித்தற்கெனினுமமையும். ஈனந்தவாதநிரயம்-பலவகைத்துன்பம் நீங்காதநரகம். அச்சுதன்-அழிவற்றவன். அன்றித் தன்னைச் சரணடைந்தாரைக் கைநெகிழவிடாதவன். அநந்தன்-அழிவில்லாதவன். அன்றி மங்களகுணங்களுக்கு ஒரு முடிவில்லாதவன். ஆராமை - வெறுக்காமை. திருவரங்கநாதனை நான் சரணடைந்தேன், இனியெனக்கு மோக்ஷநரகங்களால் லாபலோபங்களில்லையென்பது கருத்து.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

க௦. அரவினடித்தானு முரவிலொடித்தானு
மடவிக டந்தானும் புடவியிடந்தானும்
குரவைபி ணைத்தானும் பரவைய ணைத்தானும்
கோசலை பெற்றானும் வீசலை யுற்றானும்
முரனைய றுத்தானுங் கரனையொ றுத்தானும்
முத்திய ளித்தானு மத்திவி ளித்தானும்
பரமப தத்தானுஞ் சரமவி தத்தானும்
பாயல்வ டத்தானுங் கோயி லிடத்தானே.

(இ-ள்.) அரவில் நடித்தானும் - (காளிங்கனென்னும்) நாகத்தின்மேல் நர்த்தநஞ்செய்தவனும், உரம்வில் ஒடித்தானும் - வலிமை பொருந்திய (சிவனது) வில்லை ஒடித்தவனும், அடவிகடந்தானும் - காட்டைக்கடந்தவனும், புடவி இடந்தானும் - பூமியைக்குத்தி எடுத்தவனும், குரவைபிணைத்தானும் - குரவைக் கூத்தாடினவனும், பரவை அணைத்தானும் - கடலில் அணைகட்டினவனும், கோசலைபெற்றானும் - கௌஸல்யையாற்பெறப்பட்டவனும், வீசு அலை உற்றானும் - அலைவீசுகின்ற திருப்பாற்கடலைச்சேர்ந்தவனும், முரனை அறுத்தானும் - முரனென்னும் அசுரனை அழித்தவனும், கரனை ஒறுத்தானும் - கரனென்னும் அரக்கனை அழித்தவனும், முத்தி அளித்தானும் - மோக்ஷமருளுகின்றவனும், அத்திவிளித்தானும் - கஜேந்த்ராழ்வானால் (ஆதிமூலமேயென்று கூவி) அழைக்கப்பட்டவனும், பரமபதத்தானும் - பரமபதத்தில் எழுந்தருளியிருப்பவனும், சரமவிதத்தானும் - அடியார்க்கு சரமோபாயத்தை [பிரபத்தியைத்] தன்னை அடையும் வழியாக நியமித்தவனும், பாயல்வடத்தானும் - தனக்குச் சயநமாக ஆலிலையைக்கொண்டவனும், கோயில் இடத்தானே - திருவரங்கத்தை இடமாகவுடைய எம்பெருமானே. எ-று.

அரவில் நடித்ததும், குரவைபிணைத்ததும், முரனையறுத்ததும் க்ருஷ்ணாவதாரத்திலெனவும், உரவிலொடித்ததும், அடவிகடந்ததும், பரவையணைத்ததும், கோசலைபெற்றதும், கரனையொறுத்ததும் ராமாவதாரத்திலெனவும், புடவியிடந்தது வராஹாவதாரத்திலெனவும், வீசலையுற்றது வ்யூஹத்திலெனவும், அத்திவிளித்தது கஜேந்த்ரமோக்ஷப்ரஸ்தாபத்திலெனவும், பரமபதத்தான் என்றது பரத்வத்திலெனவும், பாயல்வடத்தான் என்றது மஹாப்ரளயகாலத்திலெனவும், கோயிலிடத்தான் என்றது அர்ச்சாவதாரத்திலெனவும், முத்தியளித்தலும் சரமவிதத்தானதலும் எல்லாநிலைமையிலும் எனவும்

உணர்க. கோசலை - கோசலதேசத்தரசன்மகள். நினைவார்க்கு விரை வாக முத்தியளித்தல் திண்ணமாதலால் முத்தியளித்தானென இறந்த காலத்தாற் கூறினர். அரவினடித்தல் முதலிய அதிமாநுஷ லீலை களைச்செய்தவன் திருவரங்கநாதனே யென்பது கருத்து.

கட்டளைக்கலித்துறை.

கக. தானேதனக்கொத்த தாட்டாமரைக்குச் சரண்புகுந்தாள்
ஆனே னினியுன் னருளறி யேனென தாருயிரே [லாம்
தேனேயென் றீவினைக் கோர்மருந் தேபெருந் தேவர்க்கெல்
கோனே யரங்கத் தரவணை மேற்பள்ளி கொண்டவனே.

(இ-ள்.) எனது அரு உயிரே - எனது அரிய உயிருக்கொப்பா னவனே, தேனே-தேனுக்கொப்பானவனே, என் தீவினைக்கு-எனது பாவமாகிய பிணியைப்போக்குதற்கு, ஓர் மருந்தே-ஒப்பற்ற மருந்து போல்பவனே, பெருதேவர்க்கு எல்லாம் - பெரியதேவர்களுக் கெல் லாம், கோனே-தலைவனே, அரங்கத்து அரவணைமேல் பள்ளிகொண் டவனே-திருவரங்கம் பெரியகோயிலில் சர்ப்பசயநத்தின்மீது திருக் கண்வளர்ந்தருள்வோனே, (யான்) தானே தனக்கு ஒத்த - (வேறு உவமையில்லாமையால்) தனக்குத்தானே நிகரான, தாள் தாமரை க்கு - (உனது) திருவடித்தாமரைமலர்களுக்கு, சரண்புகுந்து-அடை க்கலமடைந்து, ஆள் ஆனேன் - அடிமையானேன், இனி-இனிமேல், உன் அருள்-உனது திருவருள் இருந்து நடத்தும்படியை, அறியேன்- (இன்ன தன்மைத்தென்று) அறிகிற்றிலேன். எ-று.

எனது ஆருயிரே என்பதற்கு, ஆத்மாவாகிய எனக்குள்ளிருந்தி யங்கும் பரமாத்மாவே யென்றுரைப்பினுமமையும். உயிர்க்குயிரா யிருத்தலால் ஆருயிரே என்றும், சுவைமிகுதியாகிய பேரின்பத்தைத் தருதலால் தேனே என்றும், தீவினையை நிர்மூலமாக்குதலால் தீவி னைக்கோர்மருந்தே என்றும், தேவதேவனாதலால் பெருந்தேவர்க் கெல்லாம் கோனே என்றும் கூறினர். பெருந்தேவர் - விதிசிவேந் திரர்கள். திருவரங்கநாதனே, யான் உன்திருவடிகளை யாசிரயித் தேன், இனி உன்திருவருள் நடத்துமாறறியேன் என்பது கருத்து.

மேகவிடுதூது - நேரிசைவெண்பா.

கஉ. கொண்டல்காளும்மைக்குறித்தேதொழுகின்றேன்
அண்டர்காணுவரங்கத்தம்மானைக்—கண்டு
மனத்துளவத்தைப்படுமென்மையலெல்லாஞ்சொல்லிப்
புனத்துளவத்தைக்கொணரீர்போய்.

(இ-ள்.) கொண்டல்காள் - (நீர்கொண்ட) மேகங்களே, உம்மைக்குறித்தே தொழுகின்றேன் - உம்மைத்துதித்தே வணங்குகின்றேன், அண்டர்காணு - தேவர்களுங்காணுதற்கரிய, அரங்கத்து-திருவரங்கத்திலுள்ள, அம்மானை-எம்பெருமானை, கண்டு - (நீங்கள்போய்ப்) பார்த்து, மனத்துள் - மனத்தில், அவத்தைப்படும் - துன்பப்படுகின்ற, என் - எனது, மையல் எல்லாம்-காம மயக்கத்தையெல்லாம், சொல்லி - சவிஸ்தாரமாக விண்ணப்பஞ்செய்து, புனம்துளவத்தை-(அவனது) வனத்தில் வளர்ந்த திருத்துழாய்மாலையை, கொணரீர்-(வாங்கிக்) கொண்டுவாருங்கள். எ-று.

அம்மான்-தலைவன். அந்தப்பெரியோன் எனினுமாம். சன்னலியன்ற அளவும் வெளிப்படாமலடக்கினமைதோன்ற "மனத்துளவத்தைப் படுமென்மையல்" என்றாள். மேகங்களே, நீங்கள் திருவரங்கநாதர்பாற்சென்று என்மையல் முழுதும் விண்ணப்பம்பண்ணி, அவரது திருத்துழாய் மாலையை வாங்கிவாருங்கள் என்பது கருத்து.

கலிவிருத்தம்.

கூ. போயவனியிற்சிலபுறச்சமயநாடும்
பேயறிவைவிட்டெழுபிறப்பையுமறுப்பீர்
ஆயனையனந்தனையனந்தசயனத்தெம்
மாயனையரங்கனைவணங்கிமருவீரே.

(இ-ள்.) (உலகத்தாரே) ஆயனை - திருவாய்ப்பாடியில் இடையர்மனையில் வளர்ந்தவனை, அநந்தனை - அநந்தனென்னுந் திருநாமமுடையவனை, அநந்தசயநத்து - திருவநந்தாழ்வானாகிய திருவணையையுடைய, எம்மாயனை - எமதுமாயவனை, அரங்கனை - திருவரங்கநாதனை, வணங்கி மருவீர்-வணங்கி அவனையே அடையுங்கள், (அங்ஙனம் அடைவீராயின்) அவனியில் - உலகத்தில், போய்-சென்று, சிலபுறசமயம் - சிலமதாந்தரங்களை, நாடும் - தேடித்திரிகின்ற, பேய் அறிவை - பேய்த்தன்மையான் [கெட்ட] அறிவை, விட்டு - விடப்பெற்று, எழுபிறப்பையும் - எழுவகைப்பிறவியாகிய பந்தங்களையும், அறுப்பீர் - சேதிப்பீராவீர். எ-று.

அநந்தன் - முடிவற்றவன். புறச்சமயம் - தேவத்துவமில்லாதைத் தேவராக மதித்தபாஹ்ய சமயங்கள். எழுபிறப்பாவன-தேவர் மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன. திருவரங்கநாதனை வணக்குவீராயின் உங்கள்பிறவியொழியும் என்பது கருத்து.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

கச. மருவு தந்தையுங் குருவு மெந்தையு மருள்கெ டுப்பது மருள்கொ டுப்பதும், உருகு நெஞ்சமும் பெருகுதஞ்சமு முரிய ஞானமும் பெரிய வானமும், திருவரங்கனு ரிருவ ரங்கனர் செங்கண் மாயனு ரெங்க ளாயனர், அருண்மு குந்தனர் திருவை குந்தனு ரமலநாதனர் கமல பாதமே.

(இ-ள்.) (எமக்கு) மருவு - பொருந்துகின்ற, தந்தையும் - பிதாவும், குருவும் - ஆசாரியனும், எந்தையும்-எமது பிதாவும், மருள்கெடுப்பதும் - அஜ்ஞானத்தைக்கெடுக்குந் தன்மையுடையதும், அருள்கொடுப்பதும் - கருணையை அளிக்குந்தன்மையுடையதும், உருகு நெஞ்சமும் - (அன்பாற்) கரைந்து உருகுகின்றமனமும், பெருகுதஞ்சமும் - சிறந்த ஆதாரமும், உரியஞானமும் - (பேரின்பமடைதற்கு) உரியதத்வஜ்ஞானமும், பெரியவானமும் - சிறந்தபரமபதமும் (எல்லாம்) திருவரங்கனர் - ஸ்ரீரங்கநாதரும், இருவர் அங்கனர் - ப்ரஹ்மருத்ரர்களைத்தமது அங்கத்திலுடையவரும், செங்கண்மாயனர் - செவந்த திருக்கண்களையுடைய மாயவரும், எங்கள் ஆயனர் - எங்களது ஆயனரும், அருள்முகுந்தனர் - அருளையுடைய முகுந்தனரும், திருவைகுந்தனர் - ஸ்ரீவைகுண்டத்தையுடையவரும், அமலநாதனர் - குற்றம் அற்ற இறைவரும் ஆகிய அவரது, கமலபாதமே - தாமரை மலர்போலுந் திருவடிகளே. எ-று.

மருவுதந்தை கர்மாநுகுணமாகிய பிறவிகடோறும் உடம்பெடுத்தற்குக் காரணமாய்வந்து பொருந்துகின்றபிதா. எந்தை பரமபிதாவாகிய சர்வேசுவரன். கு - இருள். ரு-போக்குவோன். குரு என்பதற்கு அஜ்ஞான விருளைப்போக்குவோன் என்பது திரண்டபொருள். இருவர் அங்கனர் என்றது கேசவன் என்னுந்திருநாமப்பொருளைவிளக்குதற்கு. எமக்குப்பிதா ஆசாரியன் முதலியயாவுமாயிருப்பது திருவரங்கநாதரது திருவடிகளே என்பது கருத்து

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

கரு. பாதியா யழுகியகால் கைய ரேனும்
பழிதொழிலு மிழிகுலமும் படைத்தா ரேனும்
ஆதியா யரவணையா யென்ப ராகி
லவரன்றே யாம்வணங்கு மடிக ளாவார்
சாதியா லொழுக்கத்தால் மிக்கோ ரேனுஞ்
சதுர்மறையால் வேள்வியாற் றக்கோ ரேனும்
போதினன் முகன்பணியப் பள்ளி கொள்வான்
பொன்னரங்கம் போற்றுதார் புலையர் தாமே.

(இ-ள்.) பாதியாய் - பாதியளவினதாய்க்குறைந்து, அழுகிய-அழுகிப்போன, கால்கையரேனும் - கால்களையுங்கைகளையும் உடையவரேயாயினும், பழிதொழிலும்-பழிக்கப்படுகின்ற செய்கைகளையும், இழிகுலமும் - இழிந்தகுலத்தையும், படைத்தாரேனும் - உடையவர்களேயாயினும், ஆதியாய்-(எல்லாப்பொருளுக்கும்) முதன்மையானவனே, அரவணையாய் - சேஷசயநமுடையவனே, என்பர் ஆகில்-என்று (திருவரங்கநாதனை ஒருகால்) துதிப்பாராயின், அவர் அன்றே-அவர்களல்லரோ, யாம்வணங்கும் - யாமெல்லாம் வணங்குதற்குரிய, அடிகள் ஆவார் - கடவுளாவார், சாதியால் - குலத்தாலும், ஒழுக்கத்தால்-(அக்குலத்துக்குரிய) நல்ல ஒழுக்கங்களாலும், மிக்கோரேனும்-உயர்ந்தவரேயாயினும், சதுர்மறையால்-நான்குவேத அத்யயநத்தாலும், வேள்வியால் - யாகங்கள்செய்தலாலும், தக்கோரேனும்-சிறந்தவரேயாயினும், போதில்-தாமரையில்தோன்றிய, நான்முகன்-பிரமன், பணிய - வணங்கும்படி, பள்ளிகொள்வான் - திருக்கண்வளர்ந்தருள்வோனது, பொன் அரங்கம் - திருவரங்கத்தை, போற்றார்-வணங்கித் துதியாதவர்கள், புலையர்தாமே-சண்டாளரேயாவர். எ-று.

பாதியாயழுகிய கால் கையர் என்றது குட்டரோயாளரை. பழிதொழில் என்றது மேலோர் பழித்தற்குரிய துஷ்கர்மங்களை. இழிகுலம் என்றது நான்காம் வருணத்தாரினும் இழிசாதியை. ஆதியில் சதுர்முகன் திருவாராதநமாயிருந்ததனால் "போதில் நான்முகன் பணியப்பள்ளிகொள்வான்" என்றார். இழிகுலம் முதலியவற்றையுடையவரும் திருவரங்கநாதனைத் துதிப்பாராயின் அவர்களே எமக்குத்தெய்வமாவார், உயர்குலமுதலியவற்றை யுடையவரும் அவ்வாறு அவனைத்துதியாராயின் அவர்கள் சண்டாளரேயாவார் என்பது கருத்து

கட்டளைக்கலித்துறை.

கசு. புலையாம் பிறவி பிறந்தென்செய் தோம்பொன்னி பொன்கொழிக்கும், அலையார் திருவரங் கத்தெம்பிரானம தன்னையொடும், தொலையாத கானங் கடந்தவன் நாட்டடந் தோறும் புல்லாய்ச், சிலையாய்க் கிடந்திலமேநெஞ்ச மேகழ நீண்டுகைக்கே.

(இ-ள்.) நெஞ்சமே - மனமே, புலை ஆம் - இழிகுணமுடையதாகிய, பிறவி - இப்பிறப்பில், பிறந்து - தோன்றி, என்செய்தோம்-என்ன சத்கர்மங்கள் செய்தோம், பொன்னி - காவேரிநதி, பொன் கொழிக்கும்-பொன்னை அலைத்துத்தள்ளுகின்ற, அலை-அலைகள், ஆர்-வர்துபுரளுகின்ற, திரு அரங்கத்து - ஸ்ரீரங்கத்திலெழுந்தருளியிருக்

கின்ற, எம்பிரான்-நம்பெருமாள், (ஸ்ரீராமாவதாரத்தில்) நமது அன்னையொடும் - நமது தாயாராகிய ஸீதாபிராட்டியாருடனே, தொலையாத-கடப்பதற்கரிய, கானம் - அரணியத்தை, கடந்த அந்நாள்-நடந்துகடந்த அக்காலத்தில், தடம்தோறும் - அக்காட்டுவழிகளிலெல்லாம், கழல்தீண்டுகைக்கு - (அவரது) திருவடிகள் நம்மேற்படும்படி, புல்லாய் - புல்லாகியும், சிலையாய் - கல்லாகியும், கிடந்திலமே - கிடவாமற்போயினோமே. எ-று.

"செம்பவள வாயான் திருவேங்கடமென்னு மெம்பெருமான் பொன்மலைமேலேதேனுமாவேனே" என்பது பெருமாள் திருமொழி. மனமே! இந்தப்பிறவியால் ஒருபயனுமடைந்திலேம். திருவரங்கத்தெம்பிரான் ராமாவதாரத்தில் அரண்யவாசம்பண்ணினகாலத்தில் அவர்செல்வழியில் ஒருபுல்லாயேனும் கல்லாயேனும் கிடந்தோமில்லை, நாமுய்யும் வகையாது என்பது கருத்து.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

கஎ. தீண்டா வழும்புஞ் செந்நீருஞ் சீயு நரம்புஞ் செறிதசையும், வேண்டா நாற்றமிகுமுடலை வீணேசுமந்து மெலிவேனோ, நீண்டாய் தூண்டா விளக்கொளியாய் நின்று யொன்று யடியாரை, ஆண்டாய் காண்டா வனமெரித்த வரங்கா வடியேற்கிரங்காயே.

(இ-ள்.) தீண்டா-தொடப்படாத [அருவருப்பைத்தருவதாய் அசுத்தமான], வழும்பும்-நிணமும், செந்நீரும் - இரத்தமும், சீயும்-சீழும், நரம்பும் - நாடியும், செறிதசையும் - [இடையிடையே] நிரம்பியசதையும், வேண்டாநாற்றம்-யாவராலும் விரும்பப்படாததுர்க்கந்தமும்,மிகும்-மிகுந்திருக்கின்ற, உடலை-(இக்கடைப்பட்ட) உடம்பை, வீணே - பயனில்லாமல், சுமந்து - தாங்கி, மெலிவேனோ - இளைப்பேனோ, நீண்டாய் - (த்ரிவிக்ரமாவதாரத்தில்) ஓங்கினவனே, தூண்டாவிளக்கு ஒளியாய் - தூண்டுதல்வேண்டாமல்தானே யெரிகின்ற தீபத்தினது ஒளிபோன்றவனே, ஒன்றாய் நின்றாய் - ஒப்பற்றதொரு பரம்பொருளாய் [அத்விதீயமாய்] நின்றவனே, அடியாரை-தொண்டர்களை, ஆண்டாய் - அடிமைகொண்டவனே, காண்டாவனம் எரித்த-காண்டவவனத்தைதத்தகித்த, அரங்கா-திருவரங்கநாதனே, அடியேற்கு-அடியேனுக்கு, இரங்காய்-திருவுள்ளமிரங்கியருளவேண்டும்.

நாற்றம் - சுகந்ததுர்க்கந்தங்கள். துர்க்கந்தத்தையொருவரும் விரும்பாராதலால் வேண்டா நாற்றமென்பதற்குத் துர்க்கந்தமெனப் பொருளுரைக்கப்பட்டது. ஸ்வயம் ப்ரகாசமாகிய ஞானத்தைக் குணமாகவும் ஸ்ரூபமாகவும் உடையனாதலால் தூண்டாவிளக்கொ

ளியாய் என்றார். "நந்தாவிளக்கேயளத்தற்கரியாய்" என்பது திருமங்கைமன்னனது ஸ்ரீ ஸூக்தி. காண்டாவன மெரித்ததுகிருஷ்ணவதாரதில்.

தவம் - கலிநிலைத்துறை.

கஅ. காயிலை தின்றுங் கானிலு றைந்துங் கதிதேடித்
தீயிடை நின்றும் பூவலம் வந்துந் திரிவீர்காள்
தாயிலு மன்பன் பூமக ணண்பன் றடநாகப்
பாயன்மு குந்தன் கோயி லரங்கம் பணிவீரே.

(இ-ள்.) காய் இலைதின்றும் - பலங்களையும் இலைகளையும் புசித்தும், கானில் உறைந்தும் - வநத்தில் வாசஞ்செய்தும், தீ இடைநின்றும் - பஞ்சாக்நிமத்யையிற் பொருந்தியும், பூவலம் வந்தும் பூமிப்ரதக்ஷணஞ்செய்தும், கதிதேடி - நற்கதியடையவிரும்பி, திரிவீர்காள் - தவஞ்செய்து திரிபவர்களே, தாயிலும் அன்பன் - (உயிர்களிடத்து) பெற்றதாயினும் அன்புடையவனும், பூமகள் நண்பன் - திருமகளுக்குக்கணவனும், தடம் நாகம் பாயல்-பெரிய சர்ப்ப சயநத்தையுடையவனுமாகிய, முகுந்தன் - எம்பெருமானது, கோயில் அரங்கம்-திருவரங்கம் பெரியகோயிலை, பணிவீர் - வணங்குங்கள். எ-று.

பூமகள் - இரட்டுறமொழிதலாக நிலமகளுக்குங் கொள்ளலாம். காயிலைதின்னல் முதலியவற்றால் சரீரத்தை வருத்தித்தவஞ்செய்வோரே! நீங்கள் இப்படிச்செய்வதிற்பயனில்லை உயிர்களிடத்துப் பேரருளுடையவனும் புருஷகார பூதைகளான பிராட்டிமாரோடு எழுந்தருளித் திருவநந்தாழ்வானாகிய சயநத்தில் திருக்கண்வளர்ந்தருளுகிற திருவரங்கம் பெரியகோயிலைச்சென்று சேருங்கள், சேர்ந்தால், சரீராதிசகலவிரோதிகளும் நீங்கப்பெற்று, உஜ்ஜீவிக்கலாம் என்பது கருத்து.

இதுவுமது - கட்டளைக்கலித்துறை.

கசூ. வீரரங் காகிய வைவரை மாற்றி விடவரவின்
போரரங் காகந டித்தபொற் றாள்பற்றிப் பொன்னிநன்னீர்ச்
சீரரங் காதின் றொழும்பனென் றேசிந்தை செய்யிலது
கூரரங் காநெஞ்ச மேவஞ்ச மாயக் கொடுவினைக்கே.

(இ-ள்.) நெஞ்சமே-மனமே, அங்கு-அவ்வவ்விடயங்களைக்கொள்வதில், வீரர் ஆகிய-வலிமையுள்ளவரான, ஐவரை-ஐம்பொறிகளை, மாற்றி - (விஷயார்த்தங்களிற் செல்லாதபடி) வலி அடக்கி, போர்-போர்செய்யுந் தன்மையையுடைய, விடம் அரவு-விஷத்தையுடைய (காளிங்கனென்னும்) பாம்பை, இன் அரங்காக-இனிய ஆடரங்காகக்

கொண்டு, நடித்த (அதன்படத்தின்மேலேறிக்) கூத்தாடியருளிய, பொன்தாள் - (நம்பெருமாளது) அழகியதிருவடிகளை, பற்றி-(சரணமாக) அடைந்து, பொன்னிநல்நீர் - காவேரியினது நல்லநீராற் சூழப்பட்ட, சீர் அரங்கா - மேன்மையுள்ள திருவரங்கத்திலெழுந்தருளியிருப்பவனே, நின்தொழும்பன் என்று-(யான்) உனது தொண்டன் என்று, சிந்தைசெய்யில் - சிந்தித்தால், அதுவே-அந்தச்சிந்தனையே, வஞ்சம் மாயம் கொடுவினைக்கு - மிக்கவஞ்சனையையுடைய கொடிய இருவினைகளை அறுப்பதற்கு, கூர் அரம் - கூரியவாளாகும், காண் - (இதனைநீ) அறிவாயாக. எ-று.

விடயமென்றது சுவைமுதலிய ஐம்புலன்களை. "பொறிவாயிலைந் தவித்தான்" என்கிறபடியே இறைவனுக்கெளிதாமன்றி மற்றையர்க்கு வெல்லுதலரிதென்றற்கு ஐம்பொறிகளை வீரர்என்றார். தன்னிடத்துத் தோய்ந்தாரைப் புநிதராக்கி விரஜாநதியில் தோயும்படிச் செய்விக்கும் தன்மையுண்மையால் காவிரியாற்றுநீர் நன்னீர் எனப்பட்டது.

நேரிசை வெண்பா.

உ0. கேசவனை யேசெவிகள் கேட்க திருவரங்கத்
தீசனையே சென்னி யிறைஞ்சிடுக—நேசமுடன்
கண்ணனையே காண்கவிரு கண்ணிணர் கொள்காயாம்பூ
வண்ணனையே வாழ்த்துகவென் வாய்.

(இ-ள்.) என்-எனது, செவிகள்-காதுகள், கேசவனையே கேசவனது ப்ரபாவங்களையே, கேட்க-கேட்பனவாக, சென்னி - முடி, திருவரங்கத்து ஈசனையே - ஸ்ரீரங்கநாதனையே, இறைஞ்சிடுக-வணங்குவதாக, இருகண் - இரண்டுகண்களும், நேசமுடன் - பக்தியுடனே, கண்ணனையே - கண்ணபிரானையே, காண்க - காண்பனவாக, வாய்-நாவானது, இணர்கொள் - கொத்தாகமர்ந்த, காயாம்பூவண்ணனையே-காயாமலர்போலுந் திருநிறமுடையவனையே, வாழ்த்துக - வாழ்த்துவதாக. எ-று.

கேசவன் என்பதற்கு பிரமன் உருத்திரன் என்னும் இருவரையும் தனது அங்கத்திற்கொண்டிருப்பவன் என்றும் அழகியசிகையையுடையவன் என்றும், கேசியென்னும் அசுரனைக்கொன்றவன் என்றும் ப்ரஹ்மவிஷ்ணு ருத்ரர்கள்மூவரும் அன்றி ப்ரஹ்மருத்ரர்கள் இருவரும் தன்னிடத்துத்தோன்றுதலையுடையவன் என்றும் பொருள்கூறுவர் வடநூலார். கண்ணன் க்ருஷ்ணன் என்னும் வடமொழிச்சிதைவு. காயா-ஓர்மரம், இதனைக்காசாமரம் எனவழங்குவர். வர்ணம் வண்ணம் என வந்தது.

இரங்கல்-எழுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

உக. வாயினிரங்கினையாரமெறிந்தனைவால்வளைசிந்தினைதண்
பாயலையுந்தினைமாலையடைந்தனைபாரிலுறங்கிலையால்
கோயிலரங்கனைமாகனகந்திகழ்கோகனகம்பொலியும்
ஆயிழைநண்பனைநீயும்விரும்பினையாகுநெடுங்கடலே.

(இ-ள்.) நெடுகடலே - பெரியசமுத்ரமே, வாயின் இரங்கினை-வாயினால் இரங்குகின்றாய், ஆரம் எறிந்தனை - ஆரத்தை எறிகின்றாய், வால்வளை சிந்தினை - வெள்ளியவளைகளைச் சிந்துகின்றாய், தண்பாயலை உந்தினை - குளிர்ந்தபாயலை உந்தினாய், மாலை அடைந்தனை - மாலைக் கொண்டனை, பாரில்-பூமியில், உறங்கிலை-உறங்குகின்றாயில்லை, ஆல்-ஆகையால், நீயும் - (என்போலவே) நீயும், மா-பெருமைபொருந்திய, கனகம் - பொன்மயமாகி, திகழ்-விளங்குகின்ற, கோகனகம் - செந்தாமரைமலரில், பொலியும் - வீற்றிருக்கின்ற, ஆயிழை-ஆராய்ந்தெடுத்த ஆபரணங்களையணிந்த திருமகளது, நண்பனை - கணவனை, கோயில் அரங்கனை - திருவரங்கம் பெரியகோயிலையுடையவனை, விரும்பினை ஆகும் - விரும்பினையாகவேண்டும்.

இது இரவுறுதுயரங் கடலொடு சேர்த்தல் என்னுந்துறை. அதாவது திருவரங்கனை யெதிர்ப்படமாட்டாது வருந்தாநின்ற தலைமகள், கடற்கரையிற்சென்று நின்று அக்கடலின்கண் தன் குணங்கள் தோன்றக்கண்டு, என்போல நீயும் எம்பெருமானை விரும்பினையாக வேண்டுமெனக் கடலோடுகூறித் துயருறல்.

தலைமகள் வாயினிரங்குதல் - வாயினாலிரங்கிப்புலம்புதல்.
கடல் ,, பேரொலிசெய்தல்.
தலைமகள் ஆரமெறிதல்-முத்துமாலைகளைக் கழற்றிவீசுதல்.
கடல் ,, முத்துக்களை அலைகளால் எடுத்தெறிதல்.
தலைமகள் வால்வளைசிந்துதல்-கையிலணிந்தவெள்ளியசங்குவளையலை [உடல்மெலிவினாற் கழலவிடுதல்.
கடல் ,, வெள்ளியசங்குகளைச் சிதறுதல்.
தலைமகள் தண்பாயலையுந்துதல்-மெத்தென்ற சயநத்தைத்தள்ளுதல்.
கடல் ,, குளிர்ந்துதாவுகின்ற அலைகளைவீசுதல்.
தலைமகள் மாலையடைதல்-வேட்கைமிகுதியால் மயக்கமடைதல்.
கடல் ,, பெருமை கருமை அலையொழுங்கு இவைகளைக்கொண்டிருத்தல்.
தலைமகள் உறங்காமை - துன்பமிகுதியால் இராமுழுதும் கண்படைபெறாமை.
கடல் ,, இடையறாது அலைந்துகொண்டிருத்தல்.

இதுவுமது-கலிநிலை வண்ணத்துறை.

உஉ. கடல்வழி விடநிசி சரர்பொடி படவிரு கண்சிறி
வடகயி லையிலெழு விடைதழு வியதுமறந்தாரோ
அடலர வமளியி லறிதுயி லமரும ரங்கேசர்
இடர்கெட வருகிலர் முருகலர் துளவுமிரங்காரோ.

(இ-ள்.) அடல் அர அமளியில்-வலிமைபொருந்திய சேஷசயநத்தில், அறிதுயில் அமரும்-யோகநித்திரைகொண்டருளுகின்ற, அரங்கேசர்-திருவரங்கநாதர், இடர்கெட - (என்) விரகவேதனைதீரும்படி, வருகிலர் - வந்தணைந்தாரில்லை, (அங்ஙனம் அடையாமையேயன்றி) முருகு அலர் துளவும் - வாசனைவீசுகின்ற திருத்துழாய் மாலையையும், இரங்கார் - இரங்கித்தந்தாருமில்லை, (ஆகையால்) (முன் ஸ்ரீராமாவதாரத்தில் சீதாபிராட்டிக்காக) கடல்-கடலானது, வழிவிட - (அஞ்சி) வழியைவிடவும், நிசிசரர் - (ராவணன் முதலிய) அரக்கர்கள், பொடிபட - பொடியாகவும், இருகண்சிறி - (தன்) இரண்டுகண்களும் (செவக்கும்படி) கோபங்கொண்டு, (ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்தில் நப்பின்னைப்பிராட்டிக்காக) வடகயிலையில் - வடக்கின்கணுள்ள கைலாசகிரிபோன்ற, எழுவிடை - எழுருஷபங்களையும், தழுவியது - தழுவிநெரித்ததை, மறந்தாரோ - மறந்துவிட்டாரோ. எ-று.

கயிலை வெண்மை பெருமை வலிமை யென்பவைகளால் விடைக்குவமையாயிற்று. முருகு அலர்தல் தேன் பெருகுதல் எனினும் பொருந்தும். இருகண் சிறினதும் விடை தழுவினதும் ஆகிய அருந்தொழில்களைச்செய்தது பெண்பொருட்டன்றோ, அங்ஙனமாக, இவர் வருதல் துளவிரங்குதல் என்னும் எளிய காரியங்களை என்பொருட்டுஞ் செய்யாதிரார், செய்யாமைக்குக் காரணம் மறதி துயில்களாகவேண்டும், அன்றியும் இருநாவுள்ளதும் பிறரை வருத்துவதுமாகிய பாம்பொடுபழகுதலால் சொன்னகால வரையறை தவறுதலும் என்னைத் துன்புறுவித்தலுமாகிய இக்குணங்கள் இவர்க்குண்டாயின என்று வருந்துதலைக் குறித்தலால் இது தலைமகனைப்பிரிந்து தனியேவருந்துகின்ற தலைமகள் கூற்று.

நேரிசை வெண்பா.

உ௩. இரங்கத் தனித்தனியே யெய்துகின்ற துன்பத்
தாரங்கத்தை யேதாற் றடுப்பீ—ரரங்கர்க்குக்
கஞ்சத்திருப்பாதங் கார்மேனி யென்றவர்பால்
நெஞ்சங் திருப்பாத நீர்.

(இ-ள்.) அரங்கர் த - திருவரங்கநாதருக்கு, திருபாதம் - திருவடிகள், கஞ்சம்-தாமரைமலர்போலும், மேனி-திருமேனி, கார்-காளமேகம்போலும், என்று - என்று சிந்தித்து, அவர்பால்-அவ்வெம்பெருமான்பக்கல், நெஞ்சம் - மனதை, திருப்பாத - (தீநெறிக்கட் செல்லவொண்ணாது) திருப்பிச்செலுத்தாத, நீர் - நீங்கள், (இந்த ஸம்ஸாரஸாகரத்தில்), இரங்க - தளர்ந்துவருந்தும்படி, தனி தனியே எய்துகின்ற - ஒன்றின்மேலொன்றாய் ஓயாமல் ஓடிவந்தடைகின்ற, துன்பம் தரங்கத்தை-துன்பங்களாகிய அலைகளை, எதால்-வேறு எதனைப் புணையாகக்கொண்டு, தடுப்பீர்-தடைசெய்து [கடந்து] உஜ்ஜீவிப்பீர். எ-று.

அலைகள்போல ஒன்றற்கொன்று தொடர்ச்சியாய் ஒழியாது வருதலால் துன்பங்களைத் தரங்கமென்றார். கஞ்சம் என்பதைக் கம் சம் எனப்பிரித்து நீரிலுண்டாவது எனப்பொருள்கொள்க. இறைவனது சீர்பாதப் பெரும்புணையைத் துணைகொள்ளாவிடிற் பிறவிப் பெருங்கடலை நீங்கள் எவ்வாறு கடந்து முத்திக்கரையை யடைவீர்கள் என்பது கருத்து.

இரங்கல் - தாழிசை.

உச. நீரிருக்கமட மங்கைமீர்கிளிக ளாமிருக்கமது கரமெலாம், நிறைந்திருக்கமட வன்னமுன்னநிரை யாயிருக்கவுரை யாமல் யான்,— ஆரிருக்கிலுமென் னெஞ்சமல்லதொரு வஞ்சமற்ற துணை யில்லையென், றாதரத்தினொடு தூதுவிட்டபிழை யாரிடத்துரைசெய் தாறுவேன்,—சீரிருக்குமறை முடிவுதேடரிய திருவரங்கரை வணங்கியே, திருத்துழாய்தரில் விரும்பியே கொடு திரும்பியேவருத லின்றியே,—வாரிருக்குமுலை மலர் மடந்தையுறை மார்பிலேபெரிய தோளிலே, மயங்கியின்புற முயங்கியென்னையு மறந்துதன்னையு மறந்ததே.

(இ-ள்.) மடம் மங்கைமீர்-மடமைக்குணத்தையுடைய தோழிகளே, முன்னம் - எதிரில், நீர் இருக்க - நீங்களெல்லாரும் இருக்கவும், கிளிகள் இருக்க-கிளிகளெல்லாம் இருக்கவும், மதுகரம் எலாம் நிறைந்திருக்க - வண்டுகளெல்லாம் நிறைந்திருக்கவும், மடம் அன்னம்-இளமையாகிய அன்னங்களெல்லாம், நிரையாய் இருக்க-திரளாக இருக்கவும், உரையாமல்-(இவர்களொருவரையும் நம்பித் தூதாகச்) சொல்லியனுப்பாமல், யான் - (பேதையாகிய) நான், ஆர் இருக்கிலும் - யார் இருந்தாலும், என்நெஞ்சம் அல்லது - என்மனதையன்றி, ஒருவஞ்சம் அற்றதுணை - வஞ்சனையில்லாததொரு (வேறு) துணை, இல்லை என்று - இல்லையென்றுதுணிந்து, ஆதரத்தினொடு-ஆசையோடு, தூது

விட்ட - (அம்மனதைத் திருவரங்கர்பக்கல்) தூதாக அனுப்பியதனு லுண்டான, பிழை - குற்றத்தை, யாரிடத்து உரைசெய்து - யாரிடத் திற்சொல்லி, ஆறுவேன் - (மனவெப்பம்)தணிவேன், (அம்மனம் என் செய்ததென்னில்), சீர் இருக்கும்-சிறப்புப்பொருந்திய, மறைமுடிவு- வேதாந்தங்களும், தேடு அரிய - தேடிக் கண்டறியவொண்ணாத, திரு வரங்கரை-திருவரங்கநாதரை, வணங்கி-(கண்டு) வணங்கி, (என்குறை யைச்சொல்லி), விரும்பி - (அவர்) திருவுள்ளமுவந்து, திருதுழாய் தரில் - திருத்துழாய்மாலையைத் தந்தருளினால், கொடு-(அதனை) வாங் கிக்கொண்டு, திரும்பிவருதல் இன்றியே - திரும்பிவருதலில்லாமலே, வார் இருக்கும் - கச்சுப்பொருந்திய, முலை-ஸ்தநங்களையுடைய, மலர் மடந்தை - பெரியபிராட்டியார், உறை - வீற்றிருக்கின்ற, மார்பிலே- திருமார்பிலும், பெரியதோளிலே - பெரிய திருத்தோள்களிலும், மய ங்கி - (வேட்கைமிகுதியால்) மயக்கங்கொண்டு, இன்பு உற - இன்ப முண்டாக, முயங்கி - தழுவிக்கொண்டு, என்னையும் மறந்து-(சொல்லி யனுப்பின) என்னையும்மறந்து, தன்னையும்மறந்தது-(தூதாகப்போன) தன்னையும் மறந்துவிட்டது. எ-று.

மடம்-அறிந்து மறியாததுபோலிருக்குங்குணம். இவ்வாறன்றி இளமை, அழகு எனினுமாம். விரும்பியேகொடு - மனமகிழ்ந்தேற் றுக்கொண்டு என்றலும் பொருந்தும். பரவசமாயிற்றென்றற்குத் தன் னையுமறந்ததென்றாள். இது மங்கையர் முதலிய எல்லாரினும் விரை ந்துசெல்லவல்லதாகிய மனத்தைத் தூதுவிட்டும் பயன்பெறாத தலைவி யின் கூற்று.

நேரிசை வெண்பா.

உக. மறக்குமோ காவின் மதுவருந்தி யப்பால்
பறக்குமோ சந்நிதிமுன் பாமோ—சிறக்கத்
தருவரங்கள் கேட்குமோ தாழ்க்குமோ நெஞ்சே
திருவரங்கர் பாற்போன தேன்.

(இ-ள்.) நெஞ்சே - மனமே, திருவரங்கர்பால் - ஸ்ரீரங்கநாதர் பக்கல், போன - தூதுசென்ற, தேன் - வண்டு, காவில் - (இடையி லுள்ள) சோலைகளில் (தங்கி), மது அருந்தி - (அங்குள்ள) தேனைப் பருகி, மறக்குமோ-(என்னை) மறந்துவிடுமோ, (அன்றிக்கே) அப்பால் பறக்குமோ - (அச்சோலைகளுக்கு) அப்புறத்தே பறந்துசெல்லுமோ, சந்நிதிமுன்பு ஆமோ-(அங்ஙனஞ்சென்று) கோயிலின்முன்னே சேரு மோ, (சேர்ந்து) சிறக்க - சிறப்புண்டாக, தரு-(அவர்) அருளுகின்ற, வரங்கள் - வரங்களை, கேட்குமோ - கேட்டுவருமோ, (அன்றிக்கே) தாழ்க்குமோ - தாமதித்து அவ்விடத்தே நிற்குமோ. எ-று.

தேன் - வண்டுவிசேடம். இது நறுமணத்திற்செல்வது. இது வண்டுவிடுதூது - அதாவது தலைமகனிடத்து வண்டைத் தூதுவிட்ட தலைமகள் அதுவரத் தாழ்த்தமையால் அதன் நிலைமையைச் சந்தேகித்துத் தன்னெஞ்சொடு கூறியது. மது அருந்துதல் உடனே மறத்தற் கேதுவாதலால் அதனை முற்கூறினார்.

அம்மானை - மடக்குக் கலித்தாழிசை.

௨௬. தேனமருஞ் சோலைத் திருவரங்க ரெப்பொருளும்
ஆனவர்தா மாண்பெண் ணலியலர்கா ணம்மானை
ஆனவர்தா மாண்பெண் ணலியலரோ யாமாகில்
சானகியைக் கொள்வரோ தாரமா யம்மானை
தாரமாய்க் கொண்டதுமோர் சாபத்தா லம்மானை.

(இ-ள்.) தேன் அமரும்சோலை - வண்டுகள் விரும்பி நெருங்குகின்ற சோலைகள்சூழ்ந்த, திருவரங்கர் - திருவரங்கநாதர், எபொருளும் ஆனவர்தாம்-எல்லாப்பொருள்களுமானவரே, (ஆயினும்) ஆண் பெண் அலி அலர்காண்-ஆணும் பெண்ணும் அலியும் அல்லாதவரோ, அம்மானை—, ஆனவர்தாம் - (அங்ஙனம்) எல்லாப்பொருள்களுமான அவர், ஆண் பெண் அலி அலரோ ஆம் ஆகில் - ஆணும் பெண்ணும் அலியுமல்லாதவரோ ஆவாரானால், சானகியை-சீதாபிராட்டியை, தாரமாய் கொள்வரோ - மனைவியாகக்கொள்வாரோ, அம்மானை—, தாரமாய்கொண்டதும்-(அங்ஙனம்) மனைவியாகக்கொண்டதும், ஓர் சாபத்தால் - ஒரு சாபத்தினால், அம்மானை—. எ-று.

தேன் - மதுவெனினும் பொருந்தும். "ஆணல்லன் பெண்ணல்ல னல்லாவலியுமல்லன், காணவுமாகானுளனல்ல னில்லையல்லன், பேணுங்காற்பேணு முருவாகுமல்லனுமாங், கோணைபெரிதுடைத்தெம் பெம்மானைக் கூறுதலே" என்பது ஆழ்வார் ஸ்ரீசூக்தி. சாபம் என்பதற்குப் பிருகுமுனிவர் சாபம் என்றும், சிவனது வில் என்றும் பொருளுரைத்துக்கொள்க.

இரங்கல் - மடக்குத்தாழிசை.

௨௭. மானையெய்தவரின்னமென்மடமானையெய்திலர்நேமியான்
மாலைதந்தவர் பைந்துழாய்மது மாலைதந்தில ரிந்திரன்
சோனைமாரிவி லக்கிவிட்டவர் சொரிகண்மாரிவி லக்கிலார்
சுரர்களுக்கமு தங்கொடுத்தவர் சோதிவாயமு தங்கொடார்
தானையைவர்கொ டிக்களித்தவர் தானைகொண்டத ளிக்கிலார்
சங்கரற்கிர வைத்தடுத்தவர் தையலுக்கிர வைத்தடார்
ஆனைமுன்வரு மன்புளார்முலை யானைமுன்வரு மன்பிலார்
அணியரங்கர் நடாத்துநீதிய நீதியாகவி ருந்ததே.

(இ-ள்.) (முன்ஸீதாபிராட்டியாருக்காக) மானை - (மாயையால் வந்தமாரீசனாகிய) மானை, எய்தவர் - (அம்பினால்) எய்தவர், இன்னம்- இன்னமும், என் மடம்மானை - எனது இளையமான்போன்ற பார்வை யையுடைய மகளை, எய்திலர் - அடைந்தாரில்லை, (முன்பாரதயுத்தத் தில்) நேமியால் - சக்ரத்தால், (சூரியனைமறைத்து) மாலைதந்தவர்-அந் திப்பொழுதைச் செய்தவர், (என்மகளுக்கு) பை துழாய் மதுமாலை- தேனினையுடைய பசிய திருத்துழாய்மாலையை, தந்திலர்-தந்தாரில்லை, (முன் கோவர்த்தநகிரியைக் குடையாகவேந்தி) இந்திரன் சோனைமாரி- இந்த்ரனால் விடாது பெய்விக்கப்பட்ட பெருமழையை, விலக்கிவிட் டவர் - தடுத்தருளினவர், சொரிகண்மாரி-(என்மகள்) கண்களினின் றும் பெய்கின்ற கண்ணீர்மழையை, விலக்கிலார் - தடுத்தாரில்லை, (பாற்கடல்கடைந்து) சுரர்களுக்கு - தேவர்களுக்கு, அமுதம் - அமிர் தத்தை, கொடுத்தவர்-பகிர்ந்தவர், சோதிவாய் அமுதம்-ஒளிபொருந் திய (தம்) திருவாய்மலரிடத்துள்ளதாகிய அதராமிர்தத்தை, (என்மக ளுக்கு) கொடார் - கொடுத்தாரில்லை, ஐவர் கொடிக்கு - (துர்யோத நன்தம்பியாகிய துச்சாதநனால் துகிலுரியப்பட்ட) பாண்டவர்மனைவி யாகிய த்ரௌபதிக்கு, தானை அளித்தவர் - துகிலை (மேன்மேல் மா ளாதுவளரும்படி) அருளினவர், (என்மகளுக்கு) தானைகொண்டது- (தாம்) கொண்டதுகிலை, அளிக்கிலார் - கொடுத்தருளினாரில்லை, சங் கரற்கு - ருத்ரனுக்கு, இரவை - பலியேற்றலை, தடுத்தவர் - போக்கி யருளினவர், தையலுக்கு - (என்) மகளுக்கு, இரவை - (பல்லூழி காலமாய்த்தோன்றி வளர்கின்ற) இராப்பொழுதை, தடார் - (அங்ஙு னம் வளரவொட்டாது) தடுத்தாரில்லை, ஆனைமுன்வரும்-கஜேந்த் ராழ்வானுக்கு எதிரில்வந்து காத்தருளின, மன்புள்ளார் - ராஜப்க்ஷி யாகிய பெரியதிருவடியையுடையவர், முலையானை முன்வரும் - (என் மகளது) ஸ்தநங்களாகிய யானைகளுக்கு முன்னேவந்து தோன்று கின்ற, அன்பு இலார் - அன்பில்லாதவராயிருந்தார், (ஆகையால்) அணி அரங்கர்-அழகியரங்கநாதர், நடாத்தும் நீதி-நடத்துகின்ற நியா யம், அநீதி ஆக - அநியாயமாக, இருந்தது - இராநின்றது. எ-று.

சுரர் என்பதற்கு பெருஞ்செல்வர்கள் என்றும், மிகுதியாக ப்ர காசிக்கிறவர்கள் என்றும், பக்தியினால் கொடுக்கப்பட்ட அவிசுமுத லியவற்றை நன்றாக ஏற்றுக்கொள்வோர்கள் என்றும், சுபத்தையே மொழிவோர்கள் என்றும், திருப்பாற்கடலிற்பிறந்த அம்ருதத்தை யுடையவர்கள் என்றும் பொருள்கூறுவர் வடநூலார். சங்கரன்- (உயிர்களுக்கு) சுகத்தைச்செய்பவன். விரகமேலீட்டால் உடல் மெலி ந்து ஆடைநெகிழ்தலால் தானைகொண்டது என்றார். தையல்-அழகு. இவ்விடத்து அதனையுடையவளை யுணர்த்திற்று. தானைகொண்டது

என்பதற்கு தான் என்னிடத்துக் கவர்ந்துகொண்டதாகிய அழகு எனினுமமையும். இது தலைமகனது பிரிவாற்ருது வருந்துகின்ற தலைமகளது துன்பநோக்கிய நற்ருய் இரங்கிக் கூறியது.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

உஅ. இருளினும் வெளியினு மருளினுந் தெருளினு
மின்பமே யடையினுந் துன்பமே மிடையினும்
ஒருவர்முன் புகழினு மிருவர்பின் பிகழினு
மூனிறந் தழியினும் யான்மறந் தொழிவனே
சுருதிநின் ருேலிடுங் கரதலங் நாலொடுந்
துவளுநூன் மார்பமும் பவளவாய் மூரலும்
திருவரங் கேசர்தஞ் சுருள்கருங் கேசமுஞ்
செய்யநீண் முடியுமத் துய்யசே வடியுமே.

(இ-ள்.) இருளினும் - இருட்பொழுதிலும், வெளியினும்-பகற்பொழுதிலும், மருளினும் - (மாயைவசத்தால்) மயங்குங்காலத்தும், தெருளினும் - (அங்ஙனம் மயங்காது) தெளிந்திருக்குங்காலத்தும், இன்பமே அடையினும்-இன்பந்தானேவந்து பொருந்தினுலும், துன்பமேமிடையினும் - துன்பந்தானே மிக்குவந்தாலும், ஒருவர்முன்புகழினும் - ஒருத்தர்முன்னே வந்து நின்று புகழ்ந்தாலும், இருவர்பின்பு இகழினும்-பலர்பின்னே நின்று இகழ்ந்தாலும், ஊன் இறந்து அழியினும் - உடம்பு அழிந்து ஒழிந்தாலும், யான் - நான், திரு அரங்கேசர் தம்-ஸ்ரீரங்கநாதரது, சுருதிநின்று ஓலிடும் - (நான்கு) வேதங்களும் அழியாதுநின்று புகழ்கின்ற, கரதலம் நாலொடும் - நான்குதிருக்கைகளையும், துவளும்நூல் மார்பமும் - அசைகின்ற முப்புரிநூலையணிந்த திருமார்பையும், பவளம் வாய்மூரலும் - பவளம்போற் செவந்த திருவாய்மலரினது புன்சிரிப்பையும், சுருள் கருகேசமும் - சுருண்டகரிய சிகையையும், செய்யநீள்முடியும் - செவ்விதான [அழகிய] நீண்ட திருமுடியையும், துய்ய சே அடியும்-தூய்மையான செவந்த திருவடிகளையும், மறந்து ஒழிவனே - மறந்துபோவேனே [மறவேன்] எ-று.

வெளி-ஒளியெனினும் பொருந்தும். ஒன்றல்லன பல ஆதலால் பலரை இருவர் என்ருர். ஊன்-தசை. அது இவ்விடத்து உடம்பையுணர்த்திற்று. இதின் பூர்வரூபம் ஊ - னகரச்சாரியைபெற்று ஊன் என நின்றது. வேதம் இறைவன்போல அழியாதுநிற்கு மியல்புடைமையால் சுருதி நின்று என்ருர். சேவடியை இறுதியில்வைத்தார் எந்த அவயவத்தை மறப்பினும் பிறவிப்பெருங்கடற்குப் பெருமரக்கலம் போல்வதாகிய திருவடியை மறவேன் என்றற்கு. திருவடிக்

குத் தூய்மையாவது தன்னையடைந்தவரைப் பிறவிப்பெருங்கடலி லழுந்தாவகைகொண்டு சென்று முத்திக்கரையில் உய்த்திடுகை.

நேரிசைவெண்பா.

உகூ. சேவடியான் மூவடிமண் டென்னரங்கத் தம்மானீ
மாவலிபால் வாங்கியநாண் மண்ணுலகோ-மூவுலகும்
வீசுங்கா லோவலிய வெவ்வினையே னெஞ்சமோ
பேசுங்கா லேதோ பெரிது.

(இ-ள்.) தென் அரங்கத்து அம்மான் - அழகியரங்கநாதனே, நீ-நீ, சே அடியால் - செவந்ததிருவடிகளால், மூ அடிமண்-மூன்றடி நிலத்தை, மாவலிபால் - மஹாபலி சக்ரவர்த்திபக்கல், வாங்கியநாள்-வேண்டியிரந்து உலகனைத்தும் ஈரடியாலொடுக்கியளந்தபொழுது, மண் உலகோ-நிலவுலகமோ, (அந்நிலவுலகத்தைத் தன்னுள் அடக்கியளந்த), மூ உலகும் வீசும்காலோ-மூன்றுலோகத்திலும் பரவிய திருவடியோ, வலிய வெவ்வினையேன் நெஞ்சமோ - (அத்திருவடிகளைத் தன்னுளடக்கிய) வன்மையாகிய கொடியவினைகளையுடைய எனது மனமோ, பேசுங்கால் - சொல்லுமிடத்து, ஏதோ - எதுவோ, பெரிது-பெரியது, (நீயேசொல்வாயாக). எ-று.

மண்ணுலகமுதலியவற்றைத் தன்னுளடக்கிக்கொண்ட எம்பெருமானது திருவடிகளைத் தன்னுளடக்கிய என்மனமே பெரிதென்பது கருத்து.

நாரைவிடுதூது - கட்டளைக்கலித்துறை.

நூ௦. பெருவரங் கேசவ னல்லா தருள்செயும் பேரிலைவே
றொருவரங் கேசற்று மோதாரென் காதலை யோடியெங்கும்
கருவரங் கேசலிக் கத்திரி வோர்க்குக் கருணைசெய்யும்
திருவரங் கேசர்க்கு நீசொல்லல் வேண்டுஞ் செழுங்குருகே.

(இ-ள்.) செழு குருகே-செழுமையான நாரையே, பெருவரம்-பெரியவரங்களை, அருள்செயும்பேர் - கொடுத்தருளுகின்றவர், கேசவன் அல்லாது - கேசவனேயல்லாமல், வேறு இலை-வேறொருவரும் இல்லை, அங்கே-அவ்வெம்பெருமானிடத்தே, ஓடி - விரைவாகநடந்து, என்காதலை - எனது விருப்பத்தை, வேறு ஒருவர்-மற்றொருவர், சற்றும் ஓதார்-சிறிதுஞ் சொல்லார், (ஆகையால்) எங்கும் - எவ்விடத்தும், [எல்லாப்பிறப்புக்களிலும்] கரு அரங்கே - கர்ப்பத்தினிடமே, சலிக்க - துன்பமுண்டாக, திரிவோர்க்கு - (மாறிமாறிப் பிறந்திறந்து) அலைபவர்களுக்கு, கருணைசெயும் - அருள்செய்கின்ற, திருவரங்கேசர்

க்கு-திருவரங்கநாதருக்கு, நீ சொல்லல்வேண்டும்-நீ விரைந்துசென்று (என்காதலைச்) சொல்லுதல் தகுதியர்கும். எ-று.

கரு அரங்கு - கர்ப்பமாகிய சிறுவீடு. கருவரங்குசலித்தற்குக் காரணம் பலகாற்சென்று தங்குதல். "கருவரங்கேசலிக்கத் திரிவோர்க்குக் கருணைசெய்யும் திருவரங்கேசர்" என்றதனால் இறைவனது நிர்ஹேதுகமாகிய பெருங்கருணையினேற்றம் விளங்குகின்றது.

இரங்கல் - தாழிசை.

௩௧. குருகுறங்கு கானலே கருநிறங்கொள் பானலே
கொடியிருண்ட ஞாழலே நெடியகண்ட னீழலே
பொருதரங்க வேலையே நிருதரங்க மாலையே
போதயின்ற கம்புளே யேதையின்றி யம்புகேன்
திருவரங்க ரிணையிலா வொருபுயங்க வணையிலே
திகழ்வலக்கை கீழதாமுகிழ் மலர்க்கண் வளர்வதோர்
கருணைநம்பு வதனமு மருணவிம்ப வதரமுங்
காவிகொண்ட மேனியு மாவிகொண்டு போனவே.

(இ-ள்.) குருகு உறங்குகானலே-நாரைகள் தங்குதற்கிடமான கடற்கரைச்சோலையே, கருநிறம்கொள்பானலே - கரியநிறத்தைக்கொண்ட கருங்குவளையே, கொடி இருண்ட ஞாழலே - (உன்னைக்கொழுகொம்பாகப்பற்றிச் சுற்றியிருக்கின்ற) கொடிகளால் இருண்டிருக்கின்ற குங்குமமரமே, நெடியகண்டல் நீழலே - நீண்ட தாழையின் நிழலே, பொருதரங்கம்வேலையே-மோதுகின்ற அலைகளையுடைய கடலே, நிருதர் அங்கம்மாலையே - அரக்கரது உருவம்போன்ற கருநிறத்தையுடைய அந்திப்பொழுதே, போது அயின்றகம்புளே - மலர்களை (உணவாகக்கொண்டு) உண்கின்ற சம்பங்கோழியே, ஏதை இன்று இயம்புகேன்-இப்பொழுது (யான்) எதனை (எடுத்துச்) சொல்லப்போகிறேன், திரு அரங்கர் - ஸ்ரீரங்கநாதர், இணை இலா - ஒப்பில்லாத, ஒருபுயங்கம் அணையிலே-ஒப்பற்ற சேஷசயநத்திலே, திகழ்வலக்கை-விளங்குகின்ற வலதுதிருக்கையை, கீழதா - (தலையின்) கீழிடத்ததாகக்கொண்டு, முகிழ்மலர் கண்வளர்வது - அரும்பிமலர்ந்த தாமரைபோன்ற திருக்கண்கள் அறிதுயில் செய்யப்பெற்றதாகிய, ஓர்-ஒப்பில்லாத, கருணைநம்புவதனமும் - அருளால் விரும்பப்படுகின்ற திருமுகமண்டலமும், அருண விம்ப அதரமும் - செவந்த கொவ்வைப்பழம்போன்ற திருவதரமும், காவிகொண்ட மேனியும் - கருங்குவளையைப்போன்ற திருமேனியும், ஆவி - (எனது) உயிரை, கொண்டுபோன-கவர்ந்துகொண்டுபோயின. எ-று.

கம்புள் என்றதனால் நீர்வாழ் பறவைகளெல்லாவற்றுக்குங் கொள்ளலாம். திருவுளத்துக்கருணையை வெளியிடுவது முகவ்காஸமாதலால் கருணை நம்புவதநம் என்றார். அருணம் - செவப்பு. விம்பம்- கொவ்வைப்பழம். அதரம்-கீழிதழ். இது நெய்தனிலத்தில் தனியேயிருந்த தலைமகள் அந்நிலத்திலுள்ள பொருள்களைநோக்கி தன்துன்பத்தைச்சொல்லி அழுதலாகக்கூறியது.

பன்னிருசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

௩௨. போனகம்பதினாலு புவனந்திருப்பள்ளி பொறியரவணைப் பாற்கடல், பூமடந்தையுநிலம டந்தையுந் தேவியர்பு ராதனமறைக்குமெட்டா,—வானகம் பேரின்ப முடன்வீற்றி ருக்குமிடம் வாகனம் வயிநதேயன், மலர்வந்த நான்முகன் றிருமைந்தனவன்மைந்தன் மதிசூடி வாசவன்முதற்,—றேனகுந் தொடைமௌலி முப்பத்து முக்கோடி தேவருன தேவல்செய்வோர், திங்களும் பரிதியுஞ் சங்கமுந் திகிரியுந் திரிவனவு நிற்பனவுமாம், வினைமன் னுயிர்முழுதும் விளையாடனீவகுத் திட்டபலமாயையதனு, லெழிலரங் கந்துயிலு மெம்பிரா னின்பெருமையாவரோ வாழ்த்துவாரோ.

(இ-ள்.) எழில் அரங்கம் - திருவரங்கத்தே, துயிலும் - பள்ளிகொள்கின்ற, எம்பிரான் - எமது தலைவனே, (உனக்கு) போனகம்- உணவு, பதினாலுபுவனம்-பதினான்கு உலகங்கள், திருபள்ளி-அழகிய சயநம், பொறி அர அணைபாற்கடல் - புள்ளிகளையுடைய ஆதி சேஷனாகியசயநத்தையுடைய திருப்பாற்கடல், தேவியர்-மனைவியர், பூமடந்தையும் நிலமடந்தையும் - ஸ்ரீதேவியும் பூதேவியும், பேரின்பமுடன்- பெருமகிழ்ச்சியோடு, வீற்றிருக்கும் - எழுந்தருளியிருக்கின்ற, இடம்- இடமானது, புராதனமறைக்கும் - பழைமையாகிய [அநாதியாகிய] வேதங்களுக்கும், எட்டா - அறியவொண்ணாத, வானகம் - பரமபதம், வாகநம் - வாகநமாவது, வயிநதேயன்-கருடன், திருமைந்தன் - அழகியகுமாரன், மலர்வந்த நான்முகன்-உன்திருநாபீகமலத்தில் தோன்றிய பிரமன், அவன்மைந்தன் - அப்பிரமனது மகன் [பேரன்], மதிசூடி- பிறையைமுடியிற் சூடியருத்ரன், உனது ஏவல்செய்வோர் - உனது குற்றேவல்களைச் செய்பவர்கள், வாசவன்முதல் - இந்த்ரன்முதலிய, தேன் நகும்தொடைமௌலி - தேனேடுமலர்கின்ற பூமாலையைச்சூடியமுடியையுடைய, முப்பத்துமுக்கோடி தேவர் - முப்பத்து மூன்று கோடிதேவர்கள், சங்கமும் திகிரியும் - சங்கசக்ரங்கள், திங்களும் பரிதியும்-சந்த்ரசூர்யர்கள், நீ-நீ, விளையாட-விளையாட்டுப்பொருள்களாக,

வகுத்திட்ட - ஏற்படுத்திய, பலமாயை - பலவாகியமாயைப்பொருள்கள், திரிவனவும் - சஞ்சரிப்பனவும், நிற்பனவும் - (சஞ்சரியாமல்) நிலையாய் நிற்பவைகளும், ஆம்-ஆகிய, ஏனைமன் உயிர்முழுதும்-மற்றை நிலைபொருந்திய உயிர்களெல்லாம்,) விளையாடல்-லீலாரஸமநுபவித்தற்குக் காரணம், நீவகுத்திட்ட - நீவகுத்தருளின, பலமாயை - வலிமையுள்ள மாயையாகும், அதனுல்-ஆகையால், நின்பெருமை-உனது பெருமையை, யாவரோ-எவர்தாம், வாழ்த்துவார் - வாழ்த்தவல் லவர், [எவர்க்கும் வாழ்த்தலரிதென்றபடி], எ-று.

வாகநம் - வகிப்பது. (தாங்குவது) வயிநதேயன் - விநதையின் புதல்வன். திரிவன நிற்பன என்பவற்றை இயங்குதிணைப்பொருள் நிலைத்திணைப்பொருள் எனக்கூறுவதுமன்றி, இயங்கியற் பொருள் நிலையியற் பொருள்என் றும் கூறுவர். சரம் அசரம் என்றும், (ஜங்கமஸ்த்தாவரங்கள்) என்றும் கூறுவர் வடநூலார். முப்பத்து முக்கோடி தேவராவார் - சூரியர்பன்னிருவர், உருத்திரர் பதினொருவர், வசுக்கள் எண்மர், மருத்துவர் இருவர் ஆகிய இவரைத்தமக்கு முதல்வராக வுடையதேவர்கள். "எண்மர் பதினொருவரீரறுவரோரிருவர், வண்ணமலரேத்திவைகலும், நண்ணி, ஒருமாலையாற் பரவியோவாதெப் போதும், திருமாலைக்கைதொழுவர் சென்று" என்பதுபொய்கையாழ்வார் ஸ்ரீ சூக்தி.

இரங்கல் - இதுவுமது.

வாழு மவுலித் துழாய்மணமு மகரக் குழைதோய் விழியருளு
மலர்ந்த பவளத் திருநகையு மார்பிலணிந்த மணிச்சுடருந்
தாழு முளரித் திருநாபித் தடத்து ளடங்கு மனைத்துயிருஞ்
சரண கமலத் துமைகேள்வன் சடையிற் புனலுங் காணேனு
லாழமுடைய கருங்கடலி னகடு கிழியச் சுழித்தோடி
யலைக்குங் குடகா விரிநாப்ப ணைவா யரவிற் றுயிலமுதை
யேழுபிறப்பி லடியவரை யெழுதாப் பெரிய பெருமானை
யெழுத வரிய பெருமானென் றெண்ணு தெழுதி யிருந்தேனே.

(இ-ள்.) வாழும்-(திவ்யமங்களஸ்வரூபமாய்) வாழ்கின்ற, மவுலி-திருமுடியிற் சூடிய, துழாய் - திருத்துழாயில், மணமும் - நறுநாற்றத்தையும், மகரம் குழைதோய் - (காதிலணிந்த) மகரகுண்டலங்களை அளாவுகின்ற, விழி - திருக்கண்களில், அருளும் - திருவருளையும், மலர்ந்தபவளம் திருநகையும் - பவளம்போற் செவந்த திருவாய் மலரில் அழகிய புன்சிரிப்பையும், மார்பில் அணிந்தமணிசுடரும்-திருமார்பிற்சாத்திய கௌஸ்துபமணியில் ஒளியையும், தாழும் முளரிதிருநாபிதடத்துள் - ஆழ்ந்த அழகிய நாபீகமலத்தினிடத்தில்,

அடங்கும் - அடங்கியிருக்கின்ற, அனைத்து உயிரும் - எல்லாவுயிர்களையும், சரணம் கமலத்து - திருவடித்தாமரைகளில், உமைகேள்வன் சடையில் புனலும் - பார்வதியின்கணவனாகிய பரமசிவனது (கபர்த்தமென்னுஞ்) சடையில் தங்குகின்ற கங்கைநீரையும், காணேன்-காண்கிறேனில்லை, ஆல்-ஆகையால், ஆழம் உடைய-ஆழ்ந்த, கருகடலின்-கரியகடலினது, அகடு-நடுவிடம், கிழிய-பிளக்கும்படி, சுழித்து - சுழித்துக்கொண்டு, ஓடி - (விசையாய்) ஓடி, அலைக்கும்-அலைக்கின்ற, குடக்கு காவிரி - மேற்றிசையினின்றும் வருகின்ற காவேரிநதியினது, நாப்பண் - நடுவில், ஐவாய் அரவில்-ஐந்தலைநாகத்தில், துயில்-கண்வளர்கின்ற, அமுதை - அமிர்தம்போலினியவனை, அடியவரை - தன்னடியார்களை, ஏழுபிறப்பில் - ஏழுவகைப்பிறவிக்கணக்கில், எழுதா-பதிந்துவையாத, பெரியபெருமானை - பெரியபெருமானை, எழுத அரியபெருமான் என்று - எழுதுதற்கரிய (கட்டழகுடைய) எம்பெருமானென்று, எண்ணாது - நினையாமல், எழுதி இருந்தேன் - (என்பேதைமைத்தன்மையாற் சித்திரத்தில்) எழுதா நின்றேயிருந்தேன் - (இதனால் பயன்யாது) ஏ-று.

மகரகுண்டலம்-காதணி. அதுமுதலையுருவாய்ச் செய்யப்பட்டிருப்பது. காதளவும் பிறழுங்கண் என்றதற்கு குழைதோய்விழி என்றும், இறைவன் தன் அடியார் பிறவியை யொழித்தலால் "ஏழுபிறப்பி லடியவரை யெழுதாப்பெரியபெருமான்" என்றும் கூறினர். எழுத அரியபெருமான் என்றதனால் அழகின்மிகுதி விளங்குகின்றது. எழுதியிருந்தேன் என்றதுபல்காலும் அழித்தழித் தெழுதினேனென்றவாறு. பல்கால் எழுதற்குக்காரணம் அவயவமொருவாறமையினும் குணஞ்செயல்களடங்காமை. இது எம்பெருமானைப்பிரிந்து வருந்துந்தலைமகள் அவனது திருவுருவைச்சித்திரத்தில் எழுதிநோக்கியாயினுந் தன்துயரத்தைச் சிறிது தணிக்கலாமெனக்கருதி யெழுதி உருவம் குணம் செயல்களடங்காமையால் வருந்திக்கூறியது. இது எழுதரிதென்றல் என்னுந்துறையின் பாற்படும்.

இதுவுமது - எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

௩௪. இருங்குங் குமத்தோ ளரங்கேசர் முன்னா ளிலங்கா புரங்காவலன்காலி னால்வீழ், கருங்குன்று போன்மண் முகங்குத்தி வீழக் கண்டா ரெனக்கின்று தண்டா ரளித்தான், மருங்கெங்கும் வம்போது வார்வா யடங்கும் வாடைக்கு நிலமங்கை யாடைக்கு நோகேன், நெருங்குந் தனஞ்சந் தனம் பூசலாகு நீளா திராமையன் மீளா திராதே.

(இ-ள்.) முன்னாள்-முற்காலத்தில்[ஸ்ரீராமவதாரத்தில்], இலங்காபுரம் காவலன் - இலங்கைநகருக்கரசனாகிய ராவணன், காலினால் வீழ்கருகுன்றுபோல் - பெருங்காற்றினால் விழுகின்ற கரியமலைபோல், மண்முகம்குத்திவீழ-மண்ணை முகத்தாற்குத்தி[தலைகவிழ்ந்து] விழும்படி, கண்டார் - செய்தவராகிய, இரு குங்குமம் தோள் - குங்கும மணிந்த பெரியதோள்களையுடைய, அரங்கேசர் - திருவரங்கநாதர், இன்று - இன்றைக்கு, எமக்கு - எனக்கு, தண்தார் - குளிர்ந்த திருத்துழாய்மாலையை, அளித்தால் - அருள்செய்வாராயின், மருங்கு எங்கும்-சுற்றுப்பக்கங்களிலெல்லாம் (இருந்து), வம்பு ஓதுவார் - பழி கூறு மகளிரது, வாய் அடங்கும் - வாய்கள் பேச்சொழியும், வாடைக்கும் - வடகாற்றுக்கும், நிலம் மங்கை ஆடைக்கும் - நிலமகளது ஆடையாகிய கடலுக்கும், நோகேன்-வருந்தேன், நெருங்கும் தனம்-நெருங்கிய ஸ்தநங்களில், சந்தனம் பூசல் ஆகும் - சந்தனம் பூசுதல் கூடும், இரா - இராப்பொழுது, நீளாது - நீட்டியாது, மையல் - காதல் நோயும், மீளாது இராது - நீங்காமலிராது [நீங்கும்]. எ-று.

காலினால் வீழ்கருங்குன்று என்பதற்கு முற்காலத்தில் ஆதிசேஷனுக்கும் வாயுபகவானுக்கும் பகையுண்டானபோது வாயுவினால் முறித்துத்தள்ளப்பட்ட பெரிய மேருசிகரமெனினுமமையும். அன்றிப் பிரளயகாலத்தில் சண்டமாருதத்தால் பிளவுபட்டு வீழ்ந்த கரிய பெரியமலைகள் எனினுமாம். "விலங்கலைக்கால் விண்டுமேன் மேவிட விண்ணுமண்ணு முந்நீர்க்கலங்கலைச்சென்ற வன்றும்" என்பதனாலுமறிக. வாடை - வடக்கினின்றுவருங்காற்று. (வடகாற்று) இது விரகநோயை மிகுவிக்குமென்பது "என்பிழை கோப்பதுபோலப் பனிவாடை யீர்கின்ற" "பனிப்பியல் பாகவுடைய தண்வாடையிக் காலமிவ்வூர். இத்யாதிகளால் விசதம்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

நாடு தேடுகின்றனையைம்பொறிகளுக்கிரைதேடியுங்கிடையாமல்
வாடு கின்றனை வீடுசென் றென்றினி மருவுவை மடநெஞ்சே
ஆடு கின்றிலை யழுகிலை தொழுகிலை யரங்கனைக் கரங்கூப்பிப்
பாடு கின்றிலை நினைகிலை பதின்மர்தம் பாடலின் படியாயே.

(இ-ள்.) மடமை நெஞ்சே - அறியாமையையுடைய மனமே, அரங்கனை-திருவரங்கநாதனை, கரம் கூப்பி - கை கூப்பி, தொழுகிலை - வணங்குகின்றாயில்லை, (அங்ஙனம் வணங்கிப் பேரானந்தத்தால்) ஆடுகின்றிலை - நடனஞ் செய்கின்றாயில்லை, அழுகிலை-(கண்ணீர் விட்டு) அழுகின்றாயில்லை, பதின்மர்தம் பாடலின்படியாய் - ஆழ்வார்கள் பதின்மரது பாசுரத்தின்படியே, பாடுகின்றிலை - பாடித்து

திக்கின்றாயில்லை, நினைகிலை-த்யாநஞ்செய்கிறாயுமில்லை, (இவை செய்யாதிருத்தலேயன்றி) ஐம்பொறிகளுக்கு - பஞ்சேந்த்ரியங்களுக்கும், இரை - (விஷயங்களாகிய) உணவை, தேடுகின்றனை - தேடுகின்றாய், தேடியும் - (அவ்வாறு) தேடியும், கிடையாமல்-(இரை) அகப்படாமையால், வாடுகின்றனை - வருந்துகின்றாய், (ஆகையால் நீ) இனி-இனி, என்று-என்றைக்கு, வீடுசென்று மருவுவை - பரமபதம் போய்ச்சேர்வாய்.

ஐம்பொறிகளுக்கிரை-சப்த ஸ்பரிச ரூப ரஸ கந்தங்கள். இனியென்றது பெறுதற்கரிதாகிய இந்தமநுஷ்ய சரீரத்தை வீணேயொழித்தபிறகு என்றபடி. நெஞ்சே திருவரங்கனை நினைதல் முதலியவற்றைச்செய்யாமல் விஷய ப்ரவணனாய் அலைகின்றனையே, இனியெக்காலத்தில் நீ பரகதியடைகுவை யென்பது கருத்து.

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

௩௬. ஆயினை மனையைச் சேயினைப் பிதாவை யனந்தினைத்தனந்தினை விரும்பும், பேயினை மறந்து நோயினை மூப்பைப் பிறப்பினை யிறப்பினைத் துடைப்பீர், ஆயனை முளரி வாயனை யெங்களமலனைக் கமலனைப் பயந்த, தாயனை நெடிய மாயனை வடபாற்றரங்கனை யரங்கனைத் தொழுமே.

(இ-ள்.) ஆயினை - தாயையும், மனையை - மனைவியையும், சேயினை - மக்களையும், பிதாவை-தந்தையையும், அனத்தினை-சோற்றையும், தனத்தினை - பொருளையும், விரும்பும் - விரும்புகின்ற, பேயினை-அறியாமைக்குணத்தை, மறந்து - விட்டொழிந்து, நோயினை - வியாதியையும், மூப்பை - முதுமையையும், பிறப்பினை - ஜநநத்தையும், இறப்பினை - மரணத்தையும், துடைப்பீர் - ஒழிக்கவிரும்புமவர்களே, ஆயனை-திருவாய்ப்பாடியில் வளர்ந்தவனாகிய கண்ணபிரானை, முளரிவாயனை-தாமரைமலர்போன்ற திருவாயையுடையவனை, அமலனை-குற்றமற்றவனை, கமலனை பயந்த - (தன்திருநாபீகமலத்து) பிரமனைப்பெற்ற, தாயனை-தாயானவனை, நெடிய-நீண்ட, மாயனை-மாயையையுடையவனை, வடம்பால் தரங்கனை - ஆலிலையிலும்பாற்கடலிலும் பள்ளிகொள்பவனை, எங்கள் அரங்கனை-எமக்கு உத்தேசியனான திருவரங்கநாதனை, தொழும் - வணங்குங்கள், எ-று.

யாய் ஆய் எனமருவியது. மனை - வீடு. அதுவீட்டிலிருப்பவளாகிய இல்லாளுக்காயிற்று. வடம் - ஆல். இங்கு அதினிலைக்காயிற்று. தரங்கம் - அலை இங்கு அதனையுடைய கடலுக்காயிற்று. ஜநநமரணங்களையொழித்துய்ய முயல்வோரே, உங்களுக்கு அவ்வெண்ணம் உண்மையாயின் திருவரங்கநாதனை வணங்குங்கள் உங்களெண்ணம் முற்றுப்பெறும் என்பது கருத்து.

மடக்குக் கட்டளை மண்டலக்கலிப்பா.

௬எ. தொழப்பெ றுதந்த வாரணத் தந்தமே
தொட்டி றுத்ததும் வாரணத் தந்தமே
வழுத்து தாண்முன்பு வனங்க டந்ததே
மலர்ந்த வுந்தி புவனங்க டந்ததே
ஒழித்த துங்குழைச் சங்கரன் சாபமே
யொசித்த துங்குழைச் சங்கரன் சாபமே
அழித்த தும்பொரு தானவ ரங்கமே
யரித னூரினி தானவ ரங்கமே.

(இ-ள்.) தொழபெறுது - (எம்பெருமானை வணங்கி அவன் பெருமையை இவ்வளவிற்றெனமுற்றும்) அறியமாட்டாதது, அந்த ஆரணத்து அந்தமே - அந்தவேதாந்தமே, தொட்டு இறுத்ததும் - (அவர் க்ருஷ்ணவதாரத்தில்) கையால் தொட்டுமுறித்ததுவும், வாரணம் தந்தமே-(குவலயாபீடமென்னும்) யானையின்கொம்பே, முன்பு-முற்காலத்தில் [ஸ்ரீராமாவதாரத்தில்], வனம்-ஆரணியத்தை, கடந்தது-கடந்துசென்றது, வழுத்துதாள்-(யாவராலும்) புகழப்படுகின்ற திருவடியே, புவனங்கள் - எல்லாவுலகங்களையும், தந்தது-படைத்தது, மலர்ந்த உந்தி - மலர்ந்த திருநாபிகமலமே, ஒழித்ததும்-போக்கியருளப்பட்டதும், சங்கு குழை அரன்சாபமே - சங்கினாலாகிய குண்டலத்தையுடைய சிவனது சாபமே, ஒசித்ததும் - முறித்ததும், குழைசங்கரன் சாபமே - வளையுந் தன்மையையுடைய சிவனது வில்லே, அழித்ததும் - (அவரால்) அழிக்கப்பட்டதும், பொருதானவர் அங்கமே - போர்செய்கின்ற அசுரரது உடம்பே, அரிதன் ஊர்-அந்தத்திருமாலினது திருப்பதி, இனிதான அரங்கமே-இனிதாகிய திருவரங்கமே. எ-று.

அங்கு குழைச்சு எனப்பிரித்து, அந்த மிதிலையில் வளைத்து என்றுரைத்தலுமாம். குழைசங்கரன் எனப்பிரித்து குண்டலத்தையணிந்த சிவன் எனினுமாம். சாபம் - பிரமகபாலம் கையைப்பற்றி விடாமை. அரி-அன்பரது துன்பத்தை நீக்குவோன்.

நேரிசைஆசிரியப்பா - உயிர்வருக்கமோனை.

௬அ. அரங்க மாளிகைக் கருங்கடல் வண்ணனை
ஆலிமா முகிலை வாலி காலனை
இந்த ளூருறை யெந்தைபெம் மானை
ஈச னான்முகன் வாசவன் றலைவனை

உள்ளுவா ருள்ளத் துள்ளுறை சோதியை
ஊரக நின்றரு ணீரகத் தடிகளை
எவ்வுண் மாயனைத் தெய்வநா யகனை
ஏர்மலி சிகரத்து நீர்மலை யாதியை
ஐவா யரவி லறிதுயி லமலனை
ஒருகான் மொழியினு மொழிகுவை நெஞ்சே
ஓதநீர் ஞாலத் துழலும்
ஔவியப் பிறப்பி லழுந்திவா டுவதே.

(இ-ள்.) நெஞ்சே-மனமே, அரங்கம்மாளிகை - திருவரங்கத்தைத்திருக்கோயிலாகக்கொண் டெழுந்தருளியிருக்கின்ற, கருகடல் வண்ணனை-கரியகடல்போலுந் திருநிறமுடையவனை, ஆலிமாமுகிலை-திருவாலிநகரத்தில் எழுந்தருளியிருக்கிற கரியமேகம்போன்றவனை, வாலிகாலனை-வாலிக்கு யமனாயிருந்தவனை, இந்தளூர் உறை-திருவிந்தளூரி லெழுந்தருளியிருக்கிற, எந்தை பெம்மானை - எந்தந்தையாகிய பெருமானை, ஈசன் நான்முகன் வாசவன் தலைவனை - சிவன் பிரமன் இந்திரன் இவர்களுக்கு இறைவனானவனை, உள்ளுவார் உள்ளத்துள் உறைசோதியை - (அன்பால்) நினைவாரது உள்ளக்கமலத்தின்கண் (அவர் நினைந்த வடிவோடு விரைந்துசென்று) தங்குகின்ற ஒளியுருவமானவனை, ஊரகம் நின்று அருள் நீரகத்து அடிகளை - திருவூரகத்திலுந் திருநீரகத்திலும் எழுந்தருளியிருக்கின்ற சுவாமியை, எவ்வுள் மாயனை - திருவெவ்வுளூரிலெழுந்தருளியிருக்கின்ற மாயவனை, தெய்வநாயகனை - தேவர்தலைவனை, ஏர்மலிசிகரத்து நீர்மலை ஆதியை-அழகுமிக்க சிகரத்தையுடைய திருநீர்மலையி லெழுந்தருளியிருக்கின்ற முதல்வனை, ஐவாய் அரவில் அறிதுயில் அமலனை - ஐந்தலைநாகத்தில் யோகநித்திரைசெய்தருளுகின்ற குற்றமற்றவனை, ஒருகால் மொழியினும் - நீ ஒருதரம் (அவனது திருநாமத்தை) சொல்லித் துதித்தாலும், ஓதம் நீர் ஞாலத்து - குளிர்ச்சியையுடைய கடலாற் சூழப்பட்ட உலகத்தில், உழலும்-அலைந்துவருந்துதற்குரிய, ஔவியம் பிறப்பில்-பொறாமை காரணமாகவுண்டாகின்ற பிறவிக்கடலில், அழுந்தி-முழுகி, வாடுவது - வாட்டமடைவதை, ஒழிகுவை - நீங்குவாய்.

ஆலியும் இந்தளூரும் சோழநாட்டுத்திருப்பதிகள். ஊரகம் முதலியன தொண்டை நாட்டுத் திருப்பதிகள். ஊரகமும் நீரகமும் கச்சியுள் உள்ளன. ஔவியம் என்றதனோடு வெகுளி இன்னாச்சொல் முதலிய தீக்குணங்களையுங் கொள்க.

இரங்கல் - தாழிசை.

௯௧. வாடியோட வனசமன்ன விருகண்வெள்ள மருவிபோன்
மருவியோட மதனன்வாளி யுருவியோட வாடையூ
டாடியோட வன்றிலோசை செவியிலோட வண்டுழா
யாசையோடு மெங்கள்பேதை யாவியோட னீதியோ
மோடியோட வங்கிவெப்பு மங்கியோட வைங்கரன்
முடுகியோட முருகனோட முக்கணீசன் மக்களைத்
தேடியோட வாணனாயி ரம்புயங்கள் குருதிநீர்
சிந்தியோட நேமிதொட்ட திருவரங்க ராசரோ.

(இ - ள்.) மோடி ஓட - துர்க்கை ஓடவும், அங்கி - அக்கினி, வெப்பு மங்கி ஓட-உஷ்ணசக்தி குறைந்து ஓடவும், ஐங்கரன்-ஐந்து கைகளையுடைய விநாயகன், முடுகி ஓட-விரைந்து ஓடவும், முருகன்-அவன் தம்பியாகிய சுப்பிரமணியன், ஓட-ஓடவும், முக்கண் ஈசன்-மூன்றுகண்களையுடைய சிவன், மக்களை - தன்பிள்ளைகளை, தேடி-தேடிக்கொண்டு, ஓட - ஓடவும், வாணன்-வாணாசுரனது, ஆயிரம்புயங்கள்-ஆயிரங்கைகளும், குருதிநீர் சிந்தி ஓட-ரக்தவெள்ளத்திற் சிதறியோடவும், நேமிதொட்ட - சக்ராயுதத்தைத் தீண்டின, திரு அரங்க ராசரோ - ஸ்ரீரங்கநாதரோ, வனசம் அன்ன - தாமரைமலர்போன்ற, இருகண் - இரண்டுகண்களும், வாடி ஓட-வாடிப்போகவும், வெள்ளம்-(அக்கண்களினின்று பெருகுகின்ற) கண்ணீர்ப்பெருக்கு, அருவி போல் - மலையாறுபோல, மருவி ஓட - பொருந்தி ஓடவும், மதனன் வாளி - மந்மதனது (புஷ்ப) பாணங்கள், உருவி ஓட - (உள்ளே) தைத்து ஊடுருவிச்செல்லவும், வாடை - வடகாற்று, ஊடு ஆடி ஓட-இடையே நுழைந்து செல்லவும், அன்றில் ஓசை - அன்றிற்பறவையின் ஒலி, செவியில் ஓட - காதுகளினுட்புகவும், வண்துழாய் ஆசையோடும் - வளம்பொருந்திய திருத்துழாய்மாலையினிடத்துள்ள ஆசையுடனே, எங்கள் பேதை - எங்கள் பெண்ணாகிய இவள், ஆவி ஓடல் - உயிர்நீங்கப்பெறுதல், நீதியோ - (உமக்கு) நியாயமாகுமோ, [ஆகாதென்றபடி]. எ-று.

குருதிநீர் சிந்தி ஓட என்பதற்கு வெட்டுண்ட குருதிநீரைச் சிந்திக்கொண்டு விரைந்துசென்றுவிழ என்றுரைப்பினுமமையும். ஐங்கரன் குறுங்காலும் பெருவயிறுமுடையனாதலால் அவன் முடுகியோட வேண்டியதாயிற்று. அப்படியோடாவிடின் மற்றையர்க்குப் பின்றுவனென்பது கருத்து. நேமியைத் தொடுகை புயங்களற்று விழுதற்குக் காரணமெனின் பிரயோகித்தால் வாணன் என்னபாடுபடான் என்றற்கு நேமிதொட்ட என்றார். இது, "மாயப்பொருபடை வாணனை யாயிரந்தோளும் பொழிகுருதி பாயச்சுழற்றிய வாழிவல்லான்" என்

பதனால் விசதம். வனம்-நீரிலுண்டாவது. நான்குகைகளோடு துதிக்கை யொன்றுமுள்ளனுதலால் விநாயகனை ஐங்கரன் என்றார். முருகன்-இளமை அழகு என்பவைகளையுடையவன்.

கலிச் சந்தவிருத்தம்.

௫௦. சருகருந்தியைம் பொறிவருந்தருந் தவர்களண்டர்குஞ்சரமுகன்குகன், பரிதிசந்திரன் சிவனயன் புரந் தரனிரந்தரம் பரவுமெந்தையூர், குருகை தஞ்சைதென் கணபுரங்குறுங் குடிகுடந்தைவண் டுவரையிந்தளூர், திருவைகுந்தமஞ் சனசிலம்பயிந் திரபுரஞ்செழுந் திருவரங்கமே.

(இ-ள்.) சருகு அருந்தி-உதிர்ந்த இலைகளைப்புசித்து, ஐம்பொறி வருந்து - பஞ்சேந்த்ரியங்களும் வருந்துதற்கேதுவாகிய, அரு தவர்கள்-(பிறரால்) செய்தற்கரிய தவத்தையுடைய முனிவர்களும், அண்டர் - தேவர்களும், குஞ்சரம்முகன் - யானைமுகத்தையுடைய விநாயகனும், குகன் - முருகனும், பரிதி-சூர்யனும், சந்திரன்-சந்த்ரனும், சிவன் - சிவனும், அயன் - பிரமனும், புரந்தரன் - இந்த்ரனும், நிரந்தரம் - இடைவிடாமல் [எக்காலத்தும்] பரவும் - புகழ்ந்து வணங்குகின்ற, எந்தை - எம்பெருமானது, ஊர் - திருப்பதி, குருகை - திருக்குருகூரும், தஞ்சை - திருத்தஞ்சை நகரும், தென்கணபுரம் - அழகிய திருக்கண்ணபுரமும், குறுங்குடி-திருக்குறுங்குடியும், குடந்தை-திருக்குடந்தையும், வண்துவரை - வளம் பொருந்திய திருத்துவாரகையும், இந்தளூர் - திருவிந்தளூரும், திருவைகுந்தம் - ஸ்ரீவைகுண்டமும், அஞ்சனசிலம்பு - திருவேங்கடமலையும், அயிந்திரபுரம் - திருவயிந்த்ரபுரமும், செழு - செழுமையான, திரு அரங்கமே - ஸ்ரீரங்கமுமாம், எ-று.

துவரை - துவாரகா என்னும் வடமொழிச்சிதைவு. திருவைகுந்தம்-பாண்டி நாட்டுத்திருக்குருகையைச் சேர்ந்த நவக்ஷேத்ரங்களுள் ஒன்று. அன்றிப்பரமபதம் எனினுமாம். அஞ்சனசிலம்பு-திருமாலிருஞ்சோலைமலை யென்றலுமொன்று. தவஞ்செய்வோர் பஞ்சேந்திரியங்களையும்அவற்றின் விஷயங்களிற்செல்லாது தடுத்தொறுப்பதனுல் ஐம்பொறிவருந்து என்றும், அவ்வாறு ஐம்பொறியடக்கித் தவஞ்செய்தலின் அருமைதோன்ற அருந்தவர் என்றும் கூறினர்.

மடக்குக் கொச்சகக்கலிப்பா.

௫௧. திருவரங்கந் திருக்கோயில் சேர்ந்துமது திருக்கோயில்
தருவொன்றும் வைகுந்தந் தயங்கொளி சேர் வைகுந்தம்
ஒருமருங்கி னந்துடையா ரொழிந் தொர்சன னந்துடையார்
மருவமறந் திருப்பீரோ வணங்கமறந் திருப்பீரோ.

(இ-ள்.) வணங்க - எம்பெருமானை வணங்குதற்கு, மறந்திருப்பீரோ - மறந்திருப்பவர்களே, (நீங்கள்) திரு அரங்கம் திரு கோயில்- திருவரங்கம் பெரிய கோயிலை, சேர்ந்து - அடைந்து, உமது-உங்களது, திருக்கு - மாறுபாடு, ஓயில் - ஒழிந்தால், ஒருமருங்கில் நந்து உடையார் - ஒரு [இடது] பக்கத்தில் சங்கத்தையுடைய அவ்வரங்கநாதர், என்றும் - எந்நாளும், வைகும் - (தாம்) வீற்றிருக்கின்ற, தம்-தமது, தயங்கு ஒளிசேர் - விளங்குகின்ற ஒளிபொருந்திய, வைகுந்தம்-பரமபதத்தை, தருவர்-(உங்களுக்குக்) கொடுத்தருளுவர், ஒழிந்தோர் - அவரொழிந்த மற்றைத்தேவர்கள், சனனம் துடையார்- உங்கள் பிறப்பைப் போக்கமாட்டார்கள், (ஆகையால்) மருவ - (அவ்வெம்பெருமானையே) சேரும்படி, மறம் - (உங்கள்) மாறுபாட்டை, திருப்பீர் - மாற்றுங்கள். எ-று.

திருக்கு-அஹங்கார மமகாரங்கள். ஒழிந்தோர் என்பது ஒழிந்தொர் எனக்குறுகிநின்றது. திருவரங்கம் பெரியகோயிலை யடைந்து உங்கள் திருக்கறுப்பீராயின், எம்பெருமான் உங்கள் பிறவிப்பிணிப்பையறுப்பானென்பது கருத்து. "திருவரங்கந் திருக்கோயில்சேர்ந்துமது திருக்கோயில்" என்றதனால் அந்தத் திருப்பதியைச் சேர்தலே திருக்கோய்தற்குக் காரணமாமென்பதும், "என்றும்வைகும்" என்றதனால் அழியாமையும், தம்தயங்கொளிசேர் வைகுந்தம் தருவர்" என்றதனால் தாமே தருதற்குரியரென்பதும், தருங்கால் தடுத்தற்குரியார் பிறரில்லையென்பதும், "ஒருமருங்கினந்துடையா ரொழிந்தொர் சனனந்துடையார்" என்றதனால் அவ்வெம்பெருமான் உங்கள் பிறவிப்பிணிப்பை யறுத்தருளுவதன்றி மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்திறந்துழலும் இதர தேவர்கள் உங்கள் பிறவியை நீக்கவல்லரல்லரென்பதும் பெறப்பட்டன. திருவரங்கத்தையடைந்தவரது சனனத்தைப் போக்குவதன்றி அடையாதவரது சனனத்தைப்போக்கார் என்றலும் பொருந்தும்.

சித்து - கட்டளை நிலைக்கலிப்பா.

சஉ. திருப்பொற் பாவைக்குக் கஞ்சம்பொன் னாக்கிய
சித்த ரோஞ்சுத்தக் காயரம லரோன
உருப்பொற் பானதி ருவரங் கேசனு
ரூர கத்துநின் றூர்சென்றி றைஞ்சினோம்
இருப்புப் பாடகங் காட்டினர் யாமவர்க்
கிரும்பை யாடக மாக்கின மீயத்தை
நருக்கி வெள்ளிய தாகவு ருக்குவோ
நமது வித்தைக்க முநேய ருமையே.

(இ-ள்.) திரு - அழகிய, பொன்பாவைக்கு - பொற்ப்ரதிமை செய்தற்கு [அழகிய திருமகளுக்கு] கஞ்சம் பொன் ஆக்கிய - வெண் கலத்தைப் பொன்னாகச்செய்துகொடுத்த [பொற்றாமரைமலரை ஆசநமாகச் செய்துகொடுத்த] சித்தரேம் - சித்தர்கள் (யாங்கள்), சுத்தம் காயாமலர் என - தூயதாகிய காயாம்பூப்போல, உரு பொற்பு ஆன- வடிவழகைப்பெற்ற, திரு அரங்கேசனார் - திருவரங்கநாதர், ஊரகத்து நின்றார் - ஊரினிடத்தில் நின்றார் [திருவூரகமென்னுந் திருப்பதியில் நின்ற திருக்கோலமாயெழுந்தருளியிருந்தார்], சென்று இறைஞ்சினோம் - (அங்குச்) சென்று (அவரை) வணங்கினோம், (அப்பொழுது அவர்) இருப்புப்பாடகம் காட்டினர்-இரும்பினாலாகிய தொருபாடகமென்னுங் காலணியைக்காண்பித்தார் [திருபாடகமென்னுந் திருப்பதியைத் தாம்வீற்றிருக்குமிடமாகத் தெரிவித்தார்],யாம்- நாம், அவர்க்கு - அவ்வெம்பெருமானுக்கு, இரும்பை ஆடகம் ஆக்கினெம்-அந்த இரும்பைப் பொன்னாகச் செய்துதந்தோம் [பெரியகாளிங்கனென்னும் பாம்பின்படத்தை நடிக்குமிடமாகச் செய்தோம்], ஈயத்தை நருக்கி-ஈயத்தைநொறுக்கி, வெள்ளியது ஆக-வெள்ளியாக [வெண்மையையுடையதாக], உருக்குவோம் - உருகச்செய்வோம், (இதுவெல்லாம் அருமையன்று) நமது வித்தைக்கு - எமது வித்தைக்கு, அருமை - பெறுதற்கரிதாயிருப்பது, அமுதே-சோறொன்றுமே, [மூத்தியுலகமொன்றுமே.] எ-று.

சித்தர் - ரசவாதசித்திபெற்றோர். சித்து - ரஸவாதம். வெண்கலத்தைக்குறிப்பதாகிய காம்ஸ்யம் என்னும் வடமொழி சிதைந்து கஞ்சம் என நின்றது. ஊரகம்-கச்சித்திருப்பதிகளுள் ஒன்று. இதனை உலகளந்த பெருமாள்கோயில் என்பர். பாடகம் - இதுவும் கச்சித்திருப்பதிகளுள் ஒன்று, இதனைப் பாண்டவதூதப்பெருமாள் கோயில் என்பர். ஆடகம் என்பதை நடிக்குமிடமாகக் கொள்ளும்போது ஆடு அகம் எனப்பிரித்துக்கொள்க.

இதுவுமது - கட்டளைக்கலித்துறை.

சஅ. அரும்பித் தளையவிழ் நாண்மாலை மார்ப னரங்கனெங்கள்
பெரும்பித் தளையும் பிறப்பறுத் தாண்டபி ரான்சித்தரோம்
தரும்பித் தளையுந் தராவும்பொன் னாக்கித் தருவெமப்பா
திரும்பித் தளையினு நெய்பா லமுதினுஞ் சிந்தனையே.

(இ-ள்.) அரும்பி - (முன்னர்) அரும்பாகி, தளை அவிழ்-(பின்) முறுக்குவிரிந்து மலர்ந்த, நாள்மாலை - அன்றலர்ந்த பூமாலையையணிந்த, மார்பன் - திருமார்பையுடையவனும், எங்கள் - எங்களது, பெருபித்து அளையும் பிறப்பு - பெருமயக்கம்பொருந்திய பிறவியை,

அறுத்து - போக்கி, ஆண்ட - எங்களை அடிமைகொண்ட, பிரான்-மஹோபகாரனுமாகிய ரங்கநாதனை து, சித்தரோம் - சித்தர்கள் (யாங்கள்), தரும் - (யாவராலும்) தரப்பட்ட, பித்தளையும் - பித்தளையையும், தராவும் - தராவையும், பொன் ஆக்கி தருவெம் - பொன்னாகச் செய்து கொடுப்போம், அப்பா - அப்பனே, (அங்ஙனமாகவும்) சிந்தனை - எங்கள் மனம், அளையினும் - வெண்ணெயிலும், நெய்-நெய்யிலும், பால் அமுதினும் - பாற்சோற்றிலும், திரும்பித்து-(இவ்விஷயத்திநின்றும்) திரும்பிற்று. எ-று.

தரா - ஓர்வகைலோஹம். தரும்பித்தளையுந்தராவும் என்பதற்கு எம்பெருமானுக்குப் பித்தையுண்டாக்குமவளாகிய திருமகளையும் நிலமகளையும் என உள்ளுறைகாண்க. இவர்களைப் பொன்னுக்குதலாவது திருமகளைப் பொன் என்னும் பெயருள்ளவளாக்குதலும் நிலமகளை பொன்னைத்தரித்திருப்பவள் அல்லது பொன் தன்னிடத்துள்ளவளாக்குதலுமாம். வசுமதி என்னும் வடமொழிக்குப் பொருளிதுவே. திரும்பித்து - திரும்பிற்று என்பதன் மரூஉ.

நேரிசைவெண்பா.

சச. சிந்திக்கத் தித்திக்குஞ் செவ்வாய் துவர்த்துப்பாம்
புந்திக்கு ளேயின் புளிமேவு—நந்தம்
கருவரங்கங் கைத்தழலுங் காவிரியி னூடே
திருவரங்கத் தேவளருந் தேன்.

(இ-ள்.) காவிரியின் ஊடு - திருக்காவேரியினடுவில், திருவரங்கத்து - திருவரங்கமென்னுந் திருப்பதியில், வளரும் - திருக்கண்வளர்ந்தருளுகின்ற, தேன் - (அன்பருடைய நா மனங்களுக்கு இனிப்பைத்தருகின்ற) தேனானது, சிந்திக்க-மனத்தினால் நினைத்து த்யானஞ் செய்ய, தித்திக்கும் - இனித்திருக்கும், செவ்வாய் துவர் துப்பு ஆம்-மிகச்செவந்த பவளம்போன்ற வாயோடுகூடியிருக்கும், புந்திக்குளே-அறிவினுள்ளே, இன்பு உளி-(நினைக்குந்தோறும்) இன்பந்தர எண்ணி, மேவும் - பொருந்தும், நம்தம் - நமது, கரு அரங்கம்-கர்ப்பமாகிய சிறுவீட்டை, கைத்து அழலும்-கோபித்து ஒழிக்கும். எ-று.

திருவரங்கத்தே வளருந்தேன் என்றது ஸ்ரீரங்கநாதனை. அழலுதல்-கார்த்தல். உலகத்துள்ள பிறதேன்கள் இன்சுவையொன்றையேயுடையன, திருவரங்கத்தே வளருந்தேன் தித்திப்பு, துவர்ப்பு, உப்பு, புளிப்பு, கைப்பு, கார்ப்பு என்னும் அறுசுவையையுமுடையது என வியந்தவாறாயிற்று.

கட்டளைக்கலித்துறை.

சரு. தேனந்து சோலை யரங்கேசர் சேவடி மேல்விசயன்
தானந்த நாளையிற் சாத்திய மாலையுந் தாள்விளக்கும்
வானந் தருங்கங்கை நன்னீருஞ் சென்னியில் வைக்கப்பெற்ற
ஆனந்தந் தானல்ல வோமுக்க ணூன்மன்று ளாடுவதே.

(இ-ள்.) தேன் நந்துசோலை-தேன்மிக்குப் பெருகுகின்ற பூஞ்சோலைகளையுடைய, அரங்கேசர் - ரங்கநாதரது, சே அடிமேல்-செவந்த திருவடிகளின்மேல், விசயன் - அர்ஜுநன், அந்நாளையில்-அந்தப் பதினான்காநாட் பாரதப்போரில், சாத்திய-அர்ச்சித்த, மாலையும்-பூமாலையையும், தாள்விளக்கும்-(உலகமளந்தகாலத்துப் பிரமன் தன் கைக்கமண்டல தீர்த்தத்தால்) ஸ்ரீபாதத்தை விளக்கிச்சேர்த்த, வானம் தரும் கங்கை நல் நீரும் - ஆகாயகங்கையின் புண்ணியதீர்த்தத்தையும், சென்னியில் வைக்கப்பெற்ற - (தன்) முடியில் தரிக்கப்பெற்ற, ஆநந்தம் தான் அல்லவோ - பெருமகிழ்ச்சியாலன்றோ, முக்கணன் - மூன்றுகண்களையுடையவனாகிய பரமசிவன், மன்று உள்-பொற் சபையில், ஆடுவது - நடனஞ்செய்வது. எ-று.

விசயன்-மிகுதியாகிய வெற்றியையுடையவன். மாலையின்செய்தி-பாரதயுத்தத்தில் பதினான்காநாட்போரில், அர்ஜுநன் ஒரு அஸ்திரம் பெறக்கருதிச் சிவனை அர்ச்சிக்க விரும்ப, கண்ணன் அவனினைப்பைத்தணிக்கும்பொருட்டு, மலர்மாலையை நம்காலிலேயிடு, என்றருளிச்செய்ய, அவனும் அவ்வாறேயிட, அன்றிரவில், பரமசிவன் அம்மாலையைச் சிரசிலணிந்து கனவில்வந்து அஸ்திரம் கொடுத்துப்போயினன் என்பது. நீரின் செய்தி - பிரமன் ஸ்ரீபாததீர்த்தம் சேர்த்த நீர் சிலநாள் தேவலோகத்துத் தங்கியிருந்து, பிறகு பகீரதன் கொண்டுவந்தபொழுது உருத்திரமூர்த்தியால் சிரசில் தரிக்கப்பட்டதென்பது. "தீர்த்த னுலகளந்தசேவடிமேற் பூந்தாமஞ், சேர்த்தியவையே சிவன்முடிமேற்றான்கண்டு, பார்த்தன் றெளிந்தொழிந்த பைந்துழா யான் பெருமை, போர்த்துமொருவராற் பேசக்கிடந்ததே" என்றார் பெரியாரும்.

இரங்கல் - எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சசு. ஆடும் படநா கணைமே லணையு மமலன் கமலத் தவனுஞ்
சிவனும், நாடுந் திருமா றுயில்கோ யிலின்வாய் நறைவார் பொழிலூ டுறைவா ளகக், காடுங் குழையைச் சாடுங் குவளைக்
கண்ணுங் குதலைப் பண்ணுங் கரியின், கோடுந் தரளத்தோடும் புருவக் கோதண் டமுமே மூதண் டமுமே.

(இ-ள்.) ஆடும் - எடுத்தாடுகின்ற, படம் - படங்களையுடைய, நாகம் அணைமேல் - சர்ப்பசயநத்தின்மேல், அணையும் - பள்ளிகொண்டருளுகின்ற, அமலன்-குற்றமற்றவன், கமலத்து அவனும்-பிரமனும், சிவனும் - உருத்திரனும், நாடும் - (எந்நாளும்) ஆராய்ந்து வணங்குகின்ற, திருமால் - எம்பெருமான் (அவன்), துயில் - திருக்கண்வளர்கின்ற, கோயிலின்வாய் - திருவரங்கத்தில், நறை வார் பொழில் ஊடு தேனொழுகுகின்ற சோலையினிடத்தில், உறைவார்-தங்குகின்ற மாதரது, அளகம்காடும் - கூந்தற்கற்றையும், குழையைசாடும் - காதணியைக்கிழிக்கின்ற, குவளைக்கண்ணும்-கருங்குவளை மலர்போன்ற கண்களும், குதலைபண்ணும் - இசைப்பாட்டுப்போல் இனிய மழலைச்சொல்லும், கரியின்கோடும் - யானைக்கொம்புபோன்ற ஸ்தநங்களும், தரளம்தோடும் - முத்தினாலாகிய காதணியும், புருவம் கோதண்டமுமே-வில்லைநிகர்த்த [வளைந்த] புருவங்களுமாகிய இவையே, முது அண்டமும் - பழைமையான அண்டகோளமுழுவதும் (காணப்படுகின்றன.) எ-று.

அளகம்-கடைகுழன்றமயிர். மிகுதியுணர்த்துதற்குக் காடு என்றார். குதலை-திருந்தாத மென்சொல். இது உருவு வெளிப்பாடுகண்டுரைத்தல். அதாவது - பொருள்வயிற் பிரிந்த தலைமகன் தலைமகளது அவயவசௌந்தர்யத்தை உருவெளித்தோற்றத்திலே கண்டு இரங்கிக்கூறியது.

கைக்கிளை-எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

௬௭. அண்டமுழு துண்டவருமிழ்ந்தவரிடந்தவரளந்தவர்வளர்
ந்தருளுமா, சண்டபண வைந்தலை யனந்தசய னந்திகழ் தருந்
திருவ ரங்கர் வரைமேல், கண்டதொரு கொம்பதி லிரண்டுமக
ரங்களொரு கஞ்சமிரு வெஞ்சிலை மணங், கொண்டதொரு
கொண்டலிரு கெண்டையொரு தொண்டையிரு கும்பமொரு
செம்ப ணிலமே.

(இ-ள்.) அண்டம் முழுது - எல்லாவண்டங்களையும், உண்டவர் - (ப்ரளயகாலத்தில்) உட்கொண்டவரும், உமிழ்ந்தவர்-(ப்ரளயம் நீங்கியபின் மீண்டும்.) வெளிப்படுத்தினவரும், இடந்தவர் - (வராஹாவதாரத்தில்) கொம்பினால் குத்தியெடுத்தவரும், அளந்தவர்-(த்ரிவிக்ரமாவதாரத்தில்) அளந்தருளினவருமாகிய, மா - பெரிய, சண்டம்-கொடிய, பணம் - படங்களையும், ஐந்தலை-ஐந்துமுடிகளையுமுடைய, அநந்தசயநம் - திருவநந்தாழ்வானாகிய திருப்பள்ளியில், வளர்ந்தருளும் - திருக்கண்வளர்ந்தருளுகின்ற, திகழ்தரும்-விளங்குகின்ற, திரு

அரங்கர் - ஸ்ரீரங்கநாதரது, வரைமேல் - மலையின்மேல், கண்டது- (எம்மால்) காணப்பட்டது, ஒருகொம்பு - ஒருபூங்கொடியே, (ஆயினும்)-அதில்—, இரண்டுமகரங்கள்-இரண்டுமுதலைகளும், ஒருகஞ்சம்- ஒரு தாமரைமலரும், இருவெம்சிலை-இரண்டுவளைந்தவிற்களும், மணம் கொண்டது - வாசனைகொண்டதாகிய, ஒருகொண்டல் - ஒருநீர் கொண்டமேகமும், இருகெண்டை - இரண்டு கெண்டைமீன்களும், ஒருதொண்டை-ஒருகொவ்வைக்கனியும், இருகும்பம்-இரண்டு குடங்களும், ஒரு செம்பணிலம் - அழகிய தொருசங்கமும்(உண்டு), எ-று.

அளந்தவர் அரங்கர் என இயைத்து அளந்தவராகிய அரங்கரென்க. ஒருகொம்பு என்றது ஒல்கியொசியாநின்றதலைவியுருவத்தை. இரண்டுமகரங்கள் - இரண்டுமகரகுண்டலங்கள். ஒருகஞ்சம் - முகம். இருவெஞ்சிலை - இரண்டுபுருவங்கள். மணங்கொண்ட தொருகொண்டல் - பூமணம் பொதிந்த கூந்தல். இருகெண்டை - இரண்டுகண்கள். ஒருதொண்டை - ஒப்பற்ற அதரம். இருகும்பம்-இரண்டு தனங்கள். ஒரு செம்பணிலம்-அழகிய செவ்வியகழுத்து. இது தலைவியைப்பொழிலிடத்துத் தனியேகண்டதலைமகன் அவளது அழகைவியந்துரைத்தது. இதுகாட்சி என்னுந்துறையின்பாற்படும். திருவரங்கர்வரைமேல் என்பதற்குத் திருவரங்கராகிய பச்சைமலையில் எனப்பொருள்கொண்டு, அதில் ஒருபூங்கொம்பு, இரண்டுமகரங்கள், ஒருகஞ்சம், இருவெஞ்சிலை, மணங்கொண்டதொருகொண்டல், இருகெண்டை, ஒருதொண்டை, இருகும்பம், ஒருசெம்பணிலம் என்பவற்றைக்கொண்டு காணப்பட்டதென உள்ளுறை கோடலுமாம்.

இரங்கல் - தாழிசை.

சஅ. செம்பொன் னரங்கத் தரங்கநீர்ச் சீதள சந்திர வாவிசூழ்
கம்புளு டன்பயி னாரைகாள் காதலை யென்சொலி யாறுவேன்
வெம்பனிவந்தது வந்தபின்வேனிலும் வந்ததுவேனில்போய்ப்
பைம்புயல் வந்தது சென்றநம் பாதகர் வந்திலர் காணுமே.

(இ-ள்.) செம்பொன் - செவந்த பொன்மயமான, அரங்கம்- திருவரங்கத்திலுள்ள, தரங்கம் நீர்-அலைகளோடுகூடிய நீரையுடைய, சீதளம் சந்திரவாவி - குளிர்ந்த சந்த்ரபுஷ்கரிணியில், சூழ் - திரண்டுள்ள, கம்புள் உடன்-நீர்ப்பறவைகளுடன், பயில்-பழகுகின்ற, நாரைகாள் - நாரைகளே, காதலை - (என்) காமநோயை, என்சொலி - என்னவென்று சொல்லி, ஆறுவேன் - தணிவேன், வெம்பனி - கொடிய பனிக்காலம், வந்தது - வந்துவிட்டது, வந்தபின் - (அது) வந்துகழிந்தபின், வேனிலும் - வெயிற்காலமும், வந்தது - வந்துவிட்டது, வே

னில்போய் - வெயிற்காலங்கழிந்தபின், பை புயல் - பசியகார்காலம், வந்தது - வந்துவிட்டது, (அங்ஙனம் வந்தபின்பும்) சென்ற-(எம்மை விட்டுப்பிரிந்து) போன, நம் - நமது, பாதகர் - கொடுந்தொழிலர், வந்திலர் - வந்தாரில்லை, எ-று.

சந்திரவாவி - சந்திரன் இதன்கரையினின்று தவஞ்செய்து தன் குறை நீங்கப்பெற்றமையால் இதற்கு இப்பெயர் உண்டாயிற்று. சற்றும் இரக்கமின்றிப் பிரிந்து சென்றதேயன்றித் தாம்வருவேமென்று வரையறை செய்துபோனகாலங்கழிந்தும் வராமைபற்றிப் பாதகர் என்றும், விரஹமிகுதியாற்ற வொண்ணுமையால் "காதலையென்சொல்லி யாறுவேன்" என்றும் கூறினாள். இது நெய்தனிலத்துத் தலைமகள் தன்னைப்பிரிந்துபோன தலைமகனைத் தான்வருவதாக வரையறைசெய்த கார்காலம் வந்தும் வராமையால் ஆற்றாளாகி அந்தநிலத்துள்ள பறவைகளைநோக்கி இரங்கிக்கூறியது.

சம்பிரதம் - பன்னிருசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

௭௬. காணாத புதுமைபல காட்டுவென் கட்செவிக ளெட்டையு மெடுத்தாட்டுவென், கடல்பருகு வன்பெரிய கனகவரை யைச் சிறிய கடுகினி லடைத்துவைப்பன்,—வீணா ரவாரமு தண்டமுற விளைவிப்ப னிரவுபகன் மாறுவென், விண்ணையு மறைப் பனெழு மண்ணையு மெடுப்பனிவை விளையாடும் வித்தையன் றால்,—நீணாகணைப்பள்ளி யிற்றிருவ ரங்கத்து நெடிதுறி துயிலும்பிரான், நெற்றிக்க ணனவனை நான்முகனை வாசவனை நிமிருமிரு சுடரைமுதலாச்,—சேணுடர் யாவரையு மடிமைகொண் டவரவர் சிரத்திற் பொறித்துவிட்ட, திருச்சக் கரப்பொறியி லாதவொரு கடவுளைத் தேடியினி முன்விடுவனே.

(இ-ள்.) காணாத-(இதுவரையிலும்) கண்டிராத, புதுமை பல-பல அற்புதச்செய்கைகளை, காட்டுவென் - காண்பிப்பேன், கட்செவிகள் எட்டையும் - அஷ்டநாகங்களையும், எடுத்து ஆட்டுவென்-படமெடுத்து ஆடச்செய்வேன், கடல் - எழுகடல்களையும், பருகுவன்-குடிப்பேன், பெரிய - பெரிதாகிய, கனகம்வரையை - பொன்மலையை, சிறிய-சிறிதாகிய, கடுகினில் - கடுகினுள்ளே, அடைத்துவைப்பன் - அடங்கும்படி சேர்த்துவைப்பேன், வீண் ஆரவாரம் - வீணனபேரொலியை, முது அண்டம் உற - பழைய அண்டங்களிலெல்லாம் பொருந்தும்படி, விளைப்பேன் - உண்டாக்குவேன், இரவுபகல் மாறுவென் - இரவைப்பகலாகவும் பகலை இரவாகவும் மாறச்செய்வேன், விண்ணையும்-ஆகாசமுழுவதையும், மறைப்பன் - மறைப்பேன், எழுமண்ணையும்-

ஏழு லகங்களையும், எடுப்பன்-எடுப்பேன், இவை-இவைகளெல்லாம், விளை ாடும் வித்தை அன்று - யான்விளையாட்டாகச்செய்யுஞ் சிறந்த தொருஜாலவித்தையல்ல, இனி - இனி, திருவரங்கத்து - திருவரங்கத்தில், நீள் நாகம் அணை பள்ளியில் - நீண்ட ஆதிசேஷனாகிய திருப்பள்ளியின்மேல், நெடிது ஊழி-நெடியபல ஊழிகாலமாய், துயிலும்-திருக்கண்வளர்கின்ற, பிரான்-எம்பெருமான், நெற்றிகண் ஆனவனை-நெற்றியில் நெருப்புக்கண்ணுடையசிவனையும், நான்முகனை - பிரமனையும், வாசவனை-இந்த்ரனையும், நிமிரும் - விளங்குகின்ற, இரு சுடரை - சந்த்ர சூர்யர்களையும், முதல் ஆ - முதலான, சேண்நாடர்யாவரையும் - தேவர்களனைவரையும், அடிமைகொண்டு - (தமக்கு) அடிமையாகக்கொண்டு, அவர் அவர் சிரத்தில் - அவ்வத்தேவர்களது தலைகளில், பொறித்து விட்ட - அடையாளஞ்செய்துவைத்த, திருசக்கரம் பொறி - அழகியசக்ரலாஞ்சநம், இலாத - உடைத்தாகாத, ஒரு கடவுளை - ஒருதெய்வத்தை, தேடி - நாடிக்கொண்டுவந்து, முன்விடுவன் - முன்னேவிடுவேன். எ-று. லாஞ்சநம்-முத்திரை.

சம்பிரதம் - ஜாலவித்தை. திருவரங்கநாதரது சக்ரலாஞ்சநமில்லாத தேவர் ஒருவருமில்லையாதலும், இல்லாதவரைத் தேடிக்கொணர்தல் அருமையாதலும் தோன்ற, "திருச்சக்கரப்பொறியிலாதவொரு கடவுளைத் தேடியினிமுன்விடுவன்"என ஒரு மாயாவி தனது ஜாலவித்தையின் மேன்மையைப் புகழ்ந்துகூறியது.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

௩௦. முன்னமேழ் புரவியா ரிரவிகாய் வெயிலினான்
முத்தரும் பியகலா முழுமதித் திருமுகத்
தன்னமே யின்னமோர் காவதம் போதுமே
லகலுமிப் பாலையப் பாலைக் காவதம்
என்னையா ளுடையவன் றுயிலரா வமளியு
மிலகுபொற் காயிலு மிந்துவின் பொய்கையும்
புன்னைவாய் நீழலும் புரிசையும் மதுகரம்
பூவிரித் துறையுமக் காவிரித் துறையுமே.

(இ-ள்.) முன்னம் - எதிரில், ஏழ்புரவி ஆர் இரவி-ஏழுகுதிரைகள்பூண்ட (தேரினையுடைய) சூர்யன், காய்-எரிக்கின்ற, வெயிலினால்-சூரியகிரணத்தால், முத்து அரும்பிய-முத்துப்போலும் வேர்வைபொடித்த, கலாமுழுமதி-கலைகள் நிறைந்த பூர்ண சந்த்ரன்போன்ற, திருமுகத்து - அழகிய முகத்தையுடைய, அன்னமே - (நடையால்) அன்னம்போன்றவளே, இன்னம் ஓர்காவதம் - இன்னமொரு காத

தூரவழி, போதும் எல்-போவோமாயின், இ பாலை அகலும் - இந்தப் பாலைநிலம் நீங்கும், அப்பால்-அது ஒழிந்தபின்பு, என்னை ஆள் உடையவன் - என்னை அடிமையாகக்கொண்ட எம்பெருமான், துயில்-அறிதுயிலமர்கின்ற, அரா அமளியும்-சர்ப்பசயநமும், இலகுபொன்கோயிலும் - விளங்குகின்ற பொன்மயமான திருக்கோயிலும், இந்துவின் பொய்கையும் - சந்த்ரபுஷ்கரிணியும், புன்னைவாய்நீழலும் - புன்னைமரத்தினது வாய்ப்பான நிழலும், புரிசையும் - மதில்களும், மதுகரம்-வண்டுகள், பூவிரித்து உறையும் - மலர்களைவிரித்து அவற்றிற்படிந்து தேனுண்டுவாழ்கின்ற, அ காவிரிதுறையும் - அந்தக்காவேரியாற்றுத் துறையும், அரைகாவதம் - அரைக்காத தூரத்திலுள்ளன. எ-று.

இது தலைமகளை உடன்கொண்டுசெல்லுந் தலைமகன் பாலைநிலத்தின் வெம்மையாற்றளர்ந்து வருந்துந் தலைமகளது வருத்தத்தை நோக்கி, அவளை யாற்றுதல் காரணமாகத் தன்னகரணிமைகூறியது. இவ்வாறுகூறவே தலைமகள் தளர்வு நீங்கியாற்றுவளென்பது கருத்து. எழ்புரவி என்பதனை ஸப்தாசுவம் என்பர் வடநூலார். இதனை எழென்னுந் தொகைபெற்றதென்பர் சிலர். ஸப்தமென்னும் பெயருள்ள குதிரையொன்றேயென்பர் சிலர். ஸப்தாசுவங்களுள; அவற்றுளொன்றுக்கு ஸப்தம் என்னும் பெயர் என்பர் சிலர். முன்னம் வெயில் என இயைத்து எதிர்வெயில் எனக்கொள்க. நீர்வளமுள்ள மருதநிலத்துக் களித்துவாழும் அன்னத்துக்கு இவ்வெய்யபாலை வருத்தத்தை விளைக்குமென்பது தோன்ற, "இரவிகாய்வெயிலினுன் முத்தரும்பிய கலாமுழுமதித் திருமுகத்தன்னமே" என்றும், இவ்வாறு வருந்துவாளுக்கு அணிமை கூறின் ஆற்றுவளென்பது தோன்ற "அப்பாலரைக் காவதம்" என்றும், அரைக்காவதஞ் சென்றவாறே அங்கு அன்னத்துக்கு உவப்பான சந்த்ரபுஷ்கரிணி காவிரியாறுமுதலியன உண்டென்பது தோன்ற "என்னையாளுடையவன் றுயிலராவமளியு மிலகுபொற்கோயிலு மிந்துவின் பொய்கையும், புன்னைவாய் நீழலும் புரிசையும் மதுகரம், பூவிரித்துறையுமக் காவிரித்துறையுமே" என்றும், கூறினர். "என்னையாளுடையவன்" என்றமையால் எனக்கு மங்களகரையாகிய உன்னையுமாளுவ னென்றவாறாயிற்று. "பூவிற்குத் தாமரையே" "பூவெனப்படுவது பொறிவாழ்பூவே" இத்யாதிகளால் பூ என்பது தாமரைமலரெனப் பொருள்கொண்டு, அன்னமே காவிரித்துறையிற்சென்றால், அங்கு வண்டுகள் விரித்துறையும் தாமரைமலர்களாகிய உனக்குரிய இடத்தில் நீயுறையலாமென்பது உள்ளுறை. துறை - நீர்த்துறை. (அதாவது யாவரும் வழங்குமிடம்) காவிரி-காவேரியென்பதன் மரூஉ. கவேரராஜகுமாரியாதலால் இந்த நதிக்கு இப்பெயர் உண்டாயிற்று. "நானிலம்வாய்க்கொண்டு நன்னீ

ரறமென்று கோதுகொண்டு, வேனிலஞ்செல்வன் சுவைத்துமிழ் பாலை கடந்தபொன்னே, கானிலந்தோய்ந்து விண்ணோர் தொழுங் கண்ணன் வெஃகாவுதம்பூந், தேனலஞ் சோலையப்பால தெப்பாலைக் குஞ் சேமத்ததே" என்பது ஆழ்வார் ஸ்ரீஸூக்தி.

கட்டளைக்கலித்துறை.

ருக. துறைமதி யாமலிக் கான்யாறு நீந்திச் சுரங்கடத்தல்
நிறைமதி யாளர்க் கொழுக்கமன் றானெடு மாலரங்கத்
திறைமதி யாவரு மாரா வமிர்தன்ன விந்தநுதல்
குறைமதி யாள்பொருட் டாற்கங்குல் வாரலெங்கொற்றவனே.

(இ-ள்.) எம்கொற்றவனே-எமது தலைவனே, துறைமதியாமல்-செல்லும்வழியை நன்றாய் ஆராயாமல், இ கான்யாறு நீந்தி-இக்காட்டாற்றை நீந்திக்கடந்து, சுரம் கடத்தல் - கொடியகாடுகளைத் தாண்டிவருதல், நிறைமதி ஆளர்க்கு - நிறைந்த அறிவினை ஆளுந்தன்மையுடையார்க்கு, ஒழுக்கம் அன்று - நல்லொழுக்கமன்று, ஆல் - ஆகையால், அரங்கத்து இறை - ரங்கநாதராகிய, நெடுமால் - நீண்ட திருமால், மதியா - (திருப்பாற்கடலைத் தேவர்களோடுங்) கடையாமலே, வரும் - தோன்றின, ஆரா அமிர்து அன்ன - தெவிட்டாத அமிர்தத்தையொத்த, இந்தநுதல் குறைமதியாள் பொருட்டால் - பிறைச்சந்த்ரன்போன்ற நெற்றியையுடையவளாகிய இவள் நிமித்தமாக, கங்குல் - இரவில், வாரல் - வருதலை (இனி) ஒழிவாயாக. எ-று.

இது இரவுவரல்விலக்கல் என்னுந்துறை. அதாவது சிறைப்புறமாகத் தலைமகள் ஆற்றாமை கூறக்கேட்ட தலைமகன் இரவுக்குறி வந்தொழுகாநிற்க, அந்நிலைமைக்கண் தோழி யெதிர்ப்பட்டு, நீ இவள் பொருட்டுக் கான்யாறு பலவும் நீந்திக்கடந்து இவ்விருளில் அஞ்சாமல் நீருங்கல்லும் ஏற்றிழிவுகளுமுள்ள இக்காட்டுவழி இனி வரற்பாலையல்லையென இரவுவரல் விலக்கிக்கூறுவது.

மறம் - எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ருஉ. கொற்றவன்றன் றிருமுகத்தைக் கொணர்ந்ததூதா
குறையுடலுக் கோமறவர் கொம்பைக்கேட்டாய்
அற்றவர்சேர் திருவரங்கப் பெருமாட்டோழ
னவதரித்த திருக்குலமென் றறியாய்போலும்
மற்றதுதான் றிருமுகமே யானுலந்த
வாய்செவிகண் மூக்கெங்கே மன்னர்மன்னன்
பெற்றவிள வரசானு லாவின் கொம்பைப்
பிறந்தகுலத் துக்கேற்கப் பேசுவாயே.

(இ - ள்.) கொற்றவன்தன் - வெற்றியையுடைய வேந்தனது, திருமுகத்தை - திருமுகத்தினை, கொணர்ந்த - கொண்டுவந்த, தூதா-தூதனே, குறை உடலுக்கோ-(முகமில்லாத) முண்டத்துக்கோ, மறவர் கொம்பை - வேடர்களாகிய எங்களது பூங்கொம்புபோல்வாளாகிய பெண்ணை, கேட்டாய் - (மணஞ்செய்து தரும்படி) கேட்டாய், (எங்கள்குலம்) அற்றவர்சேர் - இருவகைப்பற்றுமற்று முற்றத்துறந்த முனிவர்களெல்லாம் அடைக்கலம்புகுகின்ற, திரு அரங்கம் பெருமாள்-திருவரங்கத்தி லெழுந்தருளியிருக்கின்ற நம்பெருமாளது, தோழன்-நண்பனாகிய குஹப்பெருமாள், அவதரித்த - திருவவதாரஞ்செய்த, திருகுலம் என்று - மேன்மையானகுலமென்று, அறியாய்போலும்-(நீ) அறிந்திலைபோலும், அது - நீகொணர்ந்தது, திருமுகமே ஆனால்-திருமுகமேயாயின், அந்த - அதன் உறுப்பாகிய, வாய் செவி கண் மூக்கு எங்கே - வாயும் செவிகளும் கண்களும் நாசியும் எவ்விடத்துள்ளன, மன்னர் மன்னன்பெற்ற-அரசர்க்கரசனாகிய சக்ரவர்த்திபெற்ற, இளம் அரசு ஆனால் - இளவரசானால், பிறந்தகுலத்துக்கு ஏற்க - அதுதான் பிறந்தகுலத்திற்குப்பொருந்த, ஆலின் கொம்பை-ஆலமரத்தின் கொம்பை, பேசுவாய் - மணம்பேசுவாயாக. எ-று.

ஓலையைத் திருமுகமென்பது குழூஉக்குறி. கொம்பு-பூங்கொம்பு போல்வாளாகியபெண். குகன் தோழனானது ஸ்ரீராமாவதாரத்தில். இதனை, "ஆழநீர்க்கங்கையம்பிகடாவிய, ஏழைவேடனுக் கெம்பியுன் றம்பிநீ, தோழனங்கை கொழுந்தியெனச்சொன்ன, வாழி நண்பினையுன்னியழுங்குவாள்" என்பதனாற்காண்க. திருமுகம் என்பதில் அழகிய முகம் என்றும், கொம்பு என்பதில் மரக்கொம்பு என்றும், அரசு என்பதில் அரசமரம் என்றும், சொன்னயந்தோன்றுமாறறிக. இருவகைப்பற்று - அகப்பற்று புறப்பற்று என்பன. துறத்தலை ஸந்யாஸம் என்பர் வடநூலார்.

இதுவுமது - எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

டுரு. பேசவந்த தூதசெல்ல ரித்தவோலை செல்லுமோ
 பெருவரங்க ளருளரங்கர் பின்னைகேள்வர் தாளிலே
பாசம்வைத்த மறவர்பெண்ணை நேசம்வைத்து முன்னமே
 பட்டமன்னர் பட்டதெங்கள் பதிபுகுந்து பாரடா
வாசலுக்கி டும்படல் கவித்துவந்த கவிகைமா
 மகுடகோடி தினையளக்க வைத்தகாலு நாழியும்
வீசுசாம ரங்குடிற் றொடுத்தகற்றை சுற்றிலும்
 வேலியிட்ட தவர்களிட்ட வில்லும்வாளும் வேலுமே.

(இ-ள்) பேச - (எங்கள்பெண்ணை மணம்) பேசுதற்கு, வந்த தூத-வந்ததூதனே, செல் அரித்த-செல்லினால் அரிக்கப்பட்ட, ஓலை-ஓலையானது, செல்லுமோ - பயன்படுமோ, பெருவரங்கள் - பெரிய வரங்களை, அருள் - (தம் அடியார்க்கு) அருளுகின்ற, அரங்கர்-திருவரங்கநாதரும், பின்னைகேள்வர் - நப்பின்னைப்பிராட்டியின் கணவருமாகிய நம்பெருமாளது, தாளிலே - திருவடிகளிலே, பாசம்வைத்த-அன்புவைத்த, மறவர்பெண்ணை - வேடர்களாகிய எங்கள்பெண்ணை, நேசம்வைத்து - விரும்பி, முன்னமே - முன்னாட்களிலே, பட்டம் மன்னர் - பட்டந்தரித்த அரசர்கள், பட்டது-பட்டபாடுகளை, எங்கள் பதிபுகுந்து - எங்களூரினுள்வந்து, பாரடா - நோக்கேடா, வாசலுக்கு இடும்படல் - (எங்கள்வீட்டு) வாசலில்வைத்து மூடும்படல், கவித்துவந்த-(அவர்கள்) பிடித்துவந்த, கவிகை-குடைகளாம், தினை-தினையரிசிகளை, அளக்க - அளக்கும்படியாக, வைத்த - ஏற்படுத்தின, காலும்-மரக்கால்களும், நாழியும்-படியும்முதலிய அளவுகருவிகளும், மாமகுடம்கோடி-(அவர்கள் தரித்துவந்த) பெரியகிரீடங்களின்கூட்டமாம், குடில்தொடுத்த - (எங்கள்) குடிசைக்குமேல் மூடுகிற, கற்றை-விழற்கற்றைகள், வீசுசாமரம் - (அவர்களுக்கு) வீசிவந்த சாமரங்களாம், சுற்றிலும்-(எங்கள்வீட்டின்) நாற்புறத்திலும், வேலி இட்டது-வேலியாய் நடப்பட்டது, அவர்கள் இட்ட-அவர்கள் (தோல்வியடைந்து) போட்டுப்போன, வில்லும் வாளும் வேலுமே - விற்களும் வாட்களும் வேல்களுமாம். எ-று.

செல்-கறையான். மறவர் எழுத்தறியாதவராதலால் எழுத்தைச் செல்லரித்த சுவடாகக்கருதிச் செல்லரித்த வோலையென்றார். படல்-மூங்கில் முதலியவற்றாற் செய்த தட்டி.

மடக்கு - நேரிசைவெண்பா.

ருச. வேலையுல கிற்பிறக்கும் வேலையொழிந் தோமில்லை
மாலையரங் கேசனைநா மாலையினுங்—காலையினும்
உன்னிநைந்தோ மில்லை யுடலெடுத்த வன்றுமுதல்
என்னினைந் தா நெஞ்சே யிருந்து.

(இ-ள்.) நெஞ்சே - மனமே, நாம்-யாம், வேலை உலகில்-கடல்சூழ்ந்த இவ்வுலகத்தில், பிறக்கும் வேலை - பிறக்குந்தொழிலை, ஒழிந்தோம் இல்லை - நீங்கினேமில்லை, மாலை அரங்கேசனை-ஸ்ரீரங்கநாதனாகிய திருமாலை, மாலையினும் காலையினும்-காலையும் மாலையும், உன்னி-த்யானித்து, நைந்தோம் இல்லை - மனம் நெகிழ்ந்தோமில்லை, உடல் எடுத்த அன்றுமுதல்-இவ்வுடம்பெடுத்த அந்நாள்முதல், இருந்து என்

நீணந்தோம் - இங்கிருந்து என்னபுருஷார்த்தத்தைக் கருதிமுயன் றோம். எ-று.

மனமே, நாம் உலகிற் பிறக்கும் வேலையையும் நீங்கினோமில்லை, நீங்குதற்குக் காரணமாகிய ஸ்ரீரங்கநாதனது த்யானத்தையுஞ் செய் தோமில்லை, வேறென்ன புருஷார்த்தத்தைக்கருதி யிவ்விடத்திருந் தோம் நீ ஆராய்வாயாக என்பது கருத்து.

இதுவுமது - கலிநிலைத்துறை.

ருரு. இரும்புவனம் விரும்புவன மணியரங்கர் பணியரங்க ரிமய நண்ப, வருங்கொடியின் மருங்கொடியின் மனங்குழைக்குங் கனங்குழைக்கு மனங்கன்சாபக், கரும்புருவம் பொரும்புருவ முத்தநகை யொத்தனகை காந்தள் பூந்தேன், மருங்குழலுங் கருங்குழலு முருகுவளை யிருகுவளை மழைக்கண்டாமே.

(இ-ள்.) இருபுவனம் - பெரிய உலகங்கள் முழுவதையும், விரு ம்பு - (உணவாக) விரும்பி அமுதுசெய்த, வனம் அணி - வனமாலை யை அணிந்த, அரங்கர் - ரங்கநாதரும், பணி அரங்கர் - ஆதிசேஷ னைப் பள்ளிகொள்ளுமிடமாக வுடையவருமாகிய நம்பெருமாளது, இமயம் - இமயகிரிபோன்ற மலையினிடத்துள்ள, நண்ப - தோழனே, கனம்குழைக்கு-(யான்கண்ட) கனமாகிய காதணியையுடைய பெண் ணுக்கு, வரும் கொடியின் - வளர்கிற பூங்கொடிபோன்ற, மருங்கு- இடையானது, ஒடியின்-(தான்) ஒல்கினால், மனம் - (ஆடவர்களது) நெஞ்சத்தை, குழைக்கும் - தளரச்செய்யும், புருவம் - புருவங்கள், அநங்கன் - மந்மதனது, சாபம் - வில்லாகிய, கரும்பு - கரும்பினது, உருவம்-வடிவத்தோடு, பொரும்-போர்செய்யும் [ஒத்திருக்குமென்ற படி], நகை-பற்கள், முத்தம் ஒத்தன - முத்துக்களைப்போன்றனவா கும், கை-கைகள், காந்தள்-காந்தள்மலர்போலும், கருகுழல்-கரியகூந் தல், பூதேன் மருங்கு உழலும் - மலர்களில் மொய்க்கின்ற வண்டுகள் பக்கங்களிற் சுழலப்பெறும், மழைகண்-குளிர்ச்சியையுடையகண்கள், முருகுவளை இரு குவளை-வாசனை மிக்குப்பொருந்திய இரண்டு நீலோ த்பலமலரை ஒப்பன. எ-று.

வனம்-துளசி. இரும்புவனம் விரும்புவனமணி அரங்கர் என்பத ற்குப் பெரிய உலகத்தார் விரும்புகின்ற அழகாகிய நீலரத்நம்போன்ற நிறமுள்ள அரங்கர் என்றலும், பணி அரங்கர் என்பதற்குக் காளியன் என்னும் பாம்பை ஆடரங்காகக்கொண்டவர் என்றலும் பொருந்தும். இமயம் - பனிமலை. கனங்குழைக்கும், கருங்குழலும் என்பவற்றும் மைகள் இசைநிறை. மனங்குழைக்குங் கனங்குழைக்கும் என்பதற்கு

ஆடவரது மனத்தையுந் தளரச்செய்யும் மேன்மையையும் இழக்கச் செய்யும் எனினுமாம். இது இயலிடங்கூறல் என்னுந்துறை. அதாவது இயலிடங்கேட்ட பாங்கனுக்குத்தான் அவளை யெய்தினற்போலப் பெரியதோராற்று தலையுடையனாய் நின்று தலைமகன் என்றாற் காணப்பட்ட வடிவுக்கு இயல் இவை, இடம் இது என்று இயலும் இடமுங் கூறுவது. "இலவேயிதழுளவே முல்லையுள்ளியம்பும் மொழியுஞ், சிலவேயவை செழுர்தேனெக்கு மேயருஞ் செந்தமிழாற், பலவேதமு மொழிந்தான் குருகூர்ப்பது மத்திரண்டு, சலவேல்களு முளவேயது காணென்றனியுயிரே" என்றார் மஹாகவியும். இதனைச்செவ்வி செப்பல் என்னுந் துறையின்பாற் படுத்தினுமமையும். இவ்வாறு கொள்ளுங்கால் பாங்கன்கூறுவதாகக் கொள்க.

பதினான்குசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

[இதனுள் கேசாதிபாதவரை ௩௨-அவயவங்களும்

அவற்றின் உவமானங்களோடு காண்க.]

௫௬. மழைபிறை சிலைசேவல் வள்ளையெள் ளிலவின்
மலர்முல்லை மதிவளை கழையாழ்
வாரிசங் கெளிறு தத்தைவாய் கலச
மணிவடம் பத்திர மெறும்பூர்
அழகுநீர்த் தரங்கந் துடிசுழி யரவ
மரம்பைசெண் டிளவரா லாமை
யணிதரா சிணைகந் துகந்துகிர் தரள
மம்புய மரங்கநா டனையார்
குழனுதல் புருவம் விலோசனங் காது
நாசிவாய் நகைமுகங் கண்டங்
குலவுதோண் முன்கை யங்கைமெல் விரல்கள்
கூருகிர் கொங்கைகண் வயிறு
விழைதரு முரோமம் வளையிடை யுந்தி
விரும்புமல் குற்றொடை முழந்தாண்
மிளிர்கணைக் கால்கள் புறவடி பரடு
மென்குதி விரனகந் தாளே.

(இ-ள்.) அரங்கம் நாடு அனையார் - திருவரங்கமாகிய திருநாட்டையொக்கின்ற (நான் கண்ட) மாதரது, குழல் - கூந்தலும், நுதல் - நெற்றியும், புருவம் - புருவங்களும், விலோசனம் - கண்களும், காது - காதுகளும், நாசி - மூக்கும், வாய் - வாயும், நகை-

பற்களும், முகம் - முகமும், கண்டம் - கழுத்தும், குலவு தோள்- விளங்குகின்ற தோள்களும், முன்கை - முன்கைகளும், அங்கை- அகங்கைகளும், மெல்விரல்கள் - மெல்லிய விரல்களும், கூர் உகிர்- கூரிய நகங்களும், கொங்கை-ஸ்தநங்களும், கண்-முலைக்கண்களும், வயிறு - வயிறும், விழைதரும் - விரும்பப்படுகின்ற, உரோமம் - மயி ரொழுங்கும், வளை - வயிற்றின் மடிப்புகளும், இடை - இடுப்பும், உந்தி - நாபியும், விரும்பும்-விரும்பப்படுகின்ற, அல்குல்-அல்குலும், தொடை - தொடைகளும், முழந்தாள் - முழங்கால்களும், மிளிர்- ஒளிசெய்கின்ற, கணைக்கால்கள் - கணைக்கால்களும், புறம் அடி-புறங் கால்களும், பரடு - காற்பரடுகளும், மென்குதி-மெல்லிய குதிக்கால் களும், விரல் - விரல்களும், நகம் - நகங்களும், தாள் - பாதங்களும், (ஆகிய இவ்வவயவங்கள் முறையே) மழை - நீருண்டமேகமும், பிறை - பிறைச்சந்த்ரனும், சிலை - விற்களும், வேல் - வேல்களும், வள்ளை - வள்ளைத்தண்டும், எள் (மலர்) - எள்ளுப்பூக்களும், இலவின் மலர் - இலவம் பூக்களும், முல்லை (மலர்) - முல்லைப் பூக்களும், மதி- (பூர்ண) சந்த்ரனும், வளை - (வலம்புரிச்) சங்கமும், கழை - மூங்கில் களும், யாழ்-வீணையும், வாரிசம்-செந்தாமரை மலர்களும், கெளிறு- கெளிறென்னும் மீன்களும், தத்தைவாய் - கிளியின்வாய்களும், கல சம் - பொற்குடங்களும், மணி-நீலமணியும், வடம் பத்திரம்-ஆலிலை யும், எறும்பு ஊர் அழகு-எறும்பு ஊருகின்ற ஒழுங்கும், நீர் தரங்கம்- நீரின் அலைகளும், துடி - உடுக்கையும், சுழி - நீர்ச்சுழியும், அரவம்- பாம்பின்படமும், அரம்பை - வாழைமரங்களும், ஞெண்டு - நண்டு களும், இளம் வரால்-இளைய சினைவரால் மீன்களும், ஆமை-ஆமை களும், அணிதராசு இணை - அழகிய இரண்டு தராசுத்தட்டுகளும், கந்துகம் - பந்துகளும், துகிர் - பவளத்துண்டுகளும், தரளம் - முத் துக்களும், அம்புயம் - செந்தாமரை மலர்களும், (ஆகிய இவற்றை ஒக்கும்.) எ-று.

இது தலைமகன் தான்கண்ட தலைமகளது அவயவ சௌந்தர் யத்தைத் தன்னுயிர்ப் பாங்கனுக்குக் கூறியது. இச்செய்யுள் முறை நிரணிறைமாதலால், குழல் நீருண்டமேகத்தையும், நெற்றி அஷ்டமீ சந்திரனையும், புருவம் வில்லையும், கண் வேலையும், காது வள்ளைத்தண் டையும், நாசி என்ளின்பூவையும், அதரம் இலவம் பூவையும், பல் முல்லையரும்பையும், முகம் பூர்ணசந்த்ரனையும், கண்டம் வலம்புரிச் சங்கையும், தோள் மூங்கிலையும், முன்னங்கை வீணையையும், அங்கை செந்தாமரை மலரையும், கைவிரல் கெளிற்றுமீனையும், கைநகம் கிளி மூக்கையும், கொங்கை பொற்குடங்களையும், கொங்கைக்கண் நீலரத் நத்தையும், வயிறு ஆலிலையையும், மயிரொழுக்கு எறும்பொழுக்

கையும், வயிற்றுமடிப்பு அலையையும், இடை உடுக்கையையும், உந்தி நீர்ச்சுழியையும், அல்குல் பாம்பின்படத்தையும், தொடைவாழைத் தண்டையும், முழங்கால்நண்டையும், கணைக்கால் சினைவராலையும், புறங்கால் ஆமையையும், காற்பரடு தராசுத்தட்டையும், குதிக்கால் பந்தையும், கால் விரல் பவளத்துண்டையும், கால் நகம் முத்துக்களை யும், பாதங்கள் செந்தாமரை மலர்களையும் நிகர்க்கும் என இயைத் துரைத்துக் கொள்க. இதில் கேசாதிபாதமாகிய முப்பத்திரண்டவ யவங்களும் அவற்றின் உபமாநங்களும் வந்தமைகாண்க. வாரி சம் அம்புயம் என்பன நீரிலுண்டாவது என்னும் பொருளமைந்த வடசொற்கள். அரவம் பாம்பின் படத்தையுணர்த்திற்று. ஞெண்டு-நண்டின் மேற்புறம். அரங்கநாடனையார் - மேலான இன்பத்தைத் தருவதில் அரங்கநாட்டை நிகர்த்தவர். கைமுன் என்பது முன் கை என இலக்கணப்போலியாயிற்று.

கைக்கிளை - மருட்பா.

௫௭. தாளிரண்டும் பாரொன்றுந் தார்வாடும் வேர்வாடும்
வாளிரண்டுங் காதிரண்டில் வந்திமைக்கும்—கோளிரண்டும்
ஐவகைப் பூத மமைத்தரு ளரங்கர்
மைவளர் சோலை மலையில்
தெய்வ மல்லளித் திருவுரு வினளே.

(இ-ள்.) (இந்தமாதினது) தாள் இரண்டும் - இரண்டுகால் களும், பார் ஒன்றும் - பூமியிற் பொருந்தா நின்றன, தார் - பூமாலை, வாடும் - வாடாநின்றது, வேர்வு ஆடும்-வியர்வை அரும்பாநின்றது, வாள் இரண்டும் - வாள்போலும் இரண்டுகண்களும், காது இரண் டில் வந்து இமைக்கும் - இரண்டு காதுகளினளவுஞ்சென்று மீண்டு வந்து மிளிராநின்றன, (ஆதலால்) கோள் இரண்டும்-ராஹு-கேதுக் களென்னுங் க்ரஹங்களையும், ஐவகைபூதம் உம் - நிலம் நீர் தீ காற்று விசும்பு என்னும் பஞ்ச மஹாபூதங்களையும், அமைத்து அருள் - படைத்துக் காக்கின்ற, அரங்கர்-திருவரங்கரது, மைவளர்-மேகங் கள் தங்குகின்ற, சோலைமலையில் - சோலைசூழ்ந்த மலையினிடத்தே யுள்ளவளாகிய, இ திரு உருவினள்-இந்த அழகியவடிவத்தையுடைய வள், தெய்வம் அல்லள் - தெய்வப்பெண் அல்லள் (மாநுடப்பெண் ணே.) எ-று.

வாள் உவமவாகு பெயராய்க் கண்களைக்குறித்தது. இமைத் தல் - மிளிர்தல்; அதாவது வலமிடமாகப் பிறழ்தல். இது. "செழு நீர்த்தடத்துக்கயன் மிளிர்ந்தாலொப்பச் சேயரிக்கண், அழுநீர்துளும் பவலமருகின்றன வாழியரோ, முழுநீர்முகில் வண்ணன் கண்ணன்

விண்ணாட்டவர் மூதுவராற், றெழுநீரிணையடிக்கேயன்பு சூட்டிய சூழ்குழற்கே" என்பதனால் விசதம். பாதங்கள் நிலத்திற்றோய்தல் முதலியவை தேவர்களுக்கில்லை யாதலால் இவையுள்ள இப்பெண் மானுடப்பெண்ணேயெனத் தெளிதலாயிற்று. "மையார் குவளை வயற்றஞ்சை வாணனை வாழ்த்தலர்போல், நையாதெழுமதி நன்னெஞ்சமேயினி நம்மினுந்தன், செய்யார் கருங்குழற் செம்மலர் வாடின நீலனற்கண், கையாலழைப்பன போன்றிமையா நிற்குங் காரிகைக்கே" "மாவேயநங்கன் மலரா சுகமைந்தின்மாநிலந்தான், ஆவேயுமாறுதொடு மாதியந்தந் தொடுங்குழைபூங், காவேய்ந்தொளிருந் திருத்தில்லைக் கோவிந்தன் கார்வரைமேற், பூவேயிடமனனே தெளிவாயிந்தப் பூங்கொடிக்கே" இத்யாதிகளும் இக்கருத்தினவே. திருவுருவினன் - திருமகளது உருவம்போலு முருவமுள்ளவன் என்றலுமொன்று.

இது, பொழில் விளையாட்டு விருப்பால் வந்து தனது ஆயம் நீங்கத்தமியளாய்நின்ற தலைமகளை வேட்டைவிருப்பால் தன்னோடு வந்த இளைஞர் நீங்கத்தமியனாய் வந்த தலைமகன் கண்ணுற்று, இஃதோர்வியப்பென்னென்று, பின்னர் இங்ஙனந் தோன்றாநின்ற இம்மாது திருமகள் முதலாகிய தெய்வமோ அன்றிமக்களுள்ளாள் கொல்லோவென்றையுற்று நின்று இவள் அவயவமியங்கக்கண்டு இவள் தெய்வமல்லளென்று தெளிந்து கூறியது.

ஊசல்-எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

௫அ. உருமாறிப் பலபிறப்பும் பிறந்துஞ் செத்து
மூசலா டுவதடியே னொழியும் வண்ணம்
கருமாயத் தென்னெஞ்சைப் பலகை யாக்கிக்
கருணையெனும் பாசத்தைக் கயிறாப் பூட்டி
மருமாலைத் துளவசைய வாடி ரூசல்
மணிமகரக் குழையசைய வாடி ரூசல்
திருமாது புவிமாதோ டாடி ரூசல்
திருவரங்க ராசரே யாடி ரூசல்.

(இ-ள்.) உருமாறி - உருவம் மாறிமாறி, பலபிறப்பும் - பல வகைப்பட்ட பிறவிகளிலும், பிறந்தும் செத்தும் - பிறந்தும் இறந்தும், ஊசல் ஆடுவது - ஊசல்போல அலைவதனை, அடியேன்-அடியனேன், ஒழியும் வண்ணம் - நீங்கும்படி, கருமாயத்து-மிக்கவஞ்சனையையுடைய, என் நெஞ்சை - எனது மனதை, பலகை ஆக்கி-ஊசற் பலகையாக்கிக்கொண்டு, கருணை எனும் - உன் திருவருளென்கிற,

பாசத்தை - அன்பை, கயிறு ஆ பூட்டி - ஊசற்கயிறாகமாட்டி, மரு மாலை துளவு அசைய-வாசனையையுடைய திருத்துழாய்மாலை அசையும்படி, ஊசல் ஆடிர்-ஊசலாடியருள்வீராக, மணிமகரம்குழை-ரத்நகசிதமாகிய மகரகுண்டலங்கள், அசைய - அசையும்படி, ஊசல் ஆடிர்-ஊசலாடியருள்வீராக, திருமாது புவிமாதோடு - பெரியபிராட்டியாரோடும் பூமிப்பிராட்டியாரோடும், ஊசல் ஆடிர் - ஊசலாடியருள்வீராக, திருவரங்கராசரோ - திருவரங்கத்துக்கதிபரோ, ஊசல் ஆடிர் - ஊசலாடியருள்வீராக. எ-று.

உருமாறியென்றார் ஒருகாற் பிறந்தபிறவி மற்றொருகால் மாறிப் பிறத்தலால். அடியேன் ஊசலாடி யிளைத்தேன் இதனைத் தேவரீர் கடாக்ஷித்துக் களித்திருந்தீர், இனித் தேவரீர் ஊசலாடுவதை அடியேன் கண்டுகளிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தாராயிற்று. தேவரீரது திருவூசலாட்டத்தைக் கண்டவாறே என்பிறவியொழிந்துய்வேனென்பது கருத்து. தம்மைக் கருதுவோரது மனத்தாமரையே எம்பெருமானுக்குத் தங்குமிடமாதலால் "நெஞ்சைப் பலகையாக்கி" என்றும், அவனது திருவருள் அம்மனத்தைத் தன்வயப்படுத்துதலால் "கருணையெனும் பாசத்தைக் கயிறாப்பூட்டி" என்றும் கூறினார். உருமாறி என்றதனால் பிறவி வேறுபாடுகளும், பல பிறப்பும் என்றதனால் பிறத்தற்பன்மையுங்கொள்க. கருமாயத்து என்பதில் கருமை பெருமை. அது இவ்விடத்து மிகுதியைக்குறித்தது. "மாறி மாறிப் பல்பிறப்பும் பிறந்தடியையடைந் துள்ளந்தேறி, ஈறிலின்பத் திருவெள்ளம் யான்மூழ்கினன், பாறிப்பாறியசுரர் தம்பல் குழாங்கணீறெழப் பாய்பறவையொன், றேறிவீற்றிருந்தாயுன்னை யென்னுணீக்கேலெந்தாய்" என்பது ஆழ்வார் ஸ்ரீஸூக்தி.

கலிநிலைத்துறை.

ருகூ. ஊசல்வ டம்போ லூர்சக டம்போ லொழியாமே
நாசவு டம்போ டாவிசு ழன்றே நலிவேனோ
வாசவனும்போ தாசந னுங்கூர் மழுவோனும்
நேசமு டன்சூழ் கோயி லரங்கா நெடியோனே.

(இ-ள்.) வாசவனும் -இந்த்ரனும், போது ஆசநனும்-தாமரைமலரைத் தங்குமிடமாகவுடைய பிரமனும், கூர்மழுவோனும் - கூர்மையாகிய மழுவாயுதத்தையுடைய ருத்ரனும், நேசமுடன்-பக்தியுடனே, சூழ் - சூழ்ந்துவழிபடுகின்ற, கோயில் அரங்கம் - திருவரங்கம் பெரியகோயிலி லெழுந்தருளியிருக்கின்ற, நெடியோனே - நெடியவனே, (அடியேன்) ஊசல் வடம்போல்-ஊசற்கயிறுபோலவும், ஊர் சகடம்போல்-உருளுகின்ற வண்டியினுருளைபோலவும், ஒழியாமே-

ஓய்வில்லாமல், நாசம் உடம்போடு-அழியுந்தன்மையையுடைய உடம்புடனே, ஆவிசுழன்றே - உயிர் அலையப்பெற்றே, நலிவேனோ-வருந்தக்கடவேனோ. எ-று.

ஸ்வர்க்கநரகாதிகளில் உயர்வதும் தாழ்வதுமாயிருத்தலால் "ஊசல்வடம்போல்" என்றும், பிறவிகளில் நிலையின்றிக்கீழ்மேலாயுருண்டோடிக்கொண்டே யிருத்தலால் "ஊர்சகடம்போல்" என்றும் கூறினர். நெடியோன் - த்ரிவிக்ரமன். இங்குப்பெரியபெருமாளுக்காயிற்று. வாசவன் - ரத்நங்களையுடையவன்.

தழை - கட்டளைக்கலித்துறை.

௬0. நேசத் தழைக்கு மதயானை முன்புநின் றோனரங்கம்
பேசத் தழைக்குமென் னன்பனை யாய்பெருங் கற்பகத்தின்
வாசத் தழைக்கு நறுந்தழை காணிது மந்தத்தென்றல்
வீசத் தழைக்குந் தழைபோற் கெடாது விலையில்லையே.

(இ-ள்.) நேசத்து - அன்பினாலே, அழைக்கும் - (ஆதிமூலமேயென்று) அழைத்த, மதம்யானைமுன்பு - மதத்தையுடைய கஜேந்த்ராழ்வான்முன்னே, நின்றோன் - வந்து நின்று காத்தருளின எம்பெருமானது, அரங்கம் - ஸ்ரீரங்கத்தை, பேச - சொல்லுந்தோறும், தழைக்கும் - மகிழ்வாற்செழிக்கின்ற, என்-எனது, அன்பு-அன்பை, அனையாய் - ஒத்திருப்பவளே, இது - இத்தழை, பெரு கற்பகத்தின்-பெரியகற்பகமரத்தினது, வாசம் தழைக்கும் - மணமுள்ள தழையினும், நறுதழை-நறுநாற்றமிக்க தழையே, (இது) மந்தம்தென்றல்-மந்தகதியுள்ள தென்றற்காற்று, வீச-வீசுதலால், தழைக்கும்-தழைக்கின்ற, தழைபோல் - (மற்றமரங்களின்) தழையைப்போல, கெடாது-(பின்பு) வாடிப்போகாது, (அதுவுமன்றி) விலை இல்லை-(இத்தழைக்கு) விலையும் இவ்வளவென்று ஓர் அறுதியில்லை, (ஆதலால் இதனை நீ ஏற்றுக்கொள்வாயாக). எ-று.

இது தழையேற்பித்தல் என்னுந்துறை. அதாவது தலைமகளைக் குறைநயப்பித்துச் சேட்படை கூறத்துணியாநின்ற தோழியிடைத் தலைமகன் தழைகொண்டுசென்று, இத்தழையேற்றுக்கொண்டு என்குறையை முடித்தருள்வீராமென வேண்ட, அதனை யேற்றுக்கொண்ட தோழி, தலைமகளிடஞ்சென்று தழையேலாவிடிற் பழியேறுமாதலிற் றழையேற்பதே காரியமென்றுட்கொண்டு நிற்கின்ற அவள் குறிப்பறிந்து, இத்தழை நமக்குக் கிடைத்தற்கெளியதொன்றன்று; இதனை நீயேற்றுக்கொள்வாயாகவெனத் தோழி தலைமகளைத் தழையேற்பித்தது.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

௬௧. விலையான திலையென்று நீதந்த முத்தம்
வேய்தந்த முத்தாகில் வெற்பாவி யப்பால்
இலையார்பு னற்பள்ளி நாராய ணன்பால்
எந்தா யரங்காவி ரங்காயெ னப்போய்த்
தலையாலி ரக்கும்ப ணிப்பாய் சுமக்கும்
தன்றாதை யவர்தாம ரைத்தாள்வி ளக்கும்
அலையாறு சூடும்பு ராணங்கள் பாடும்
ஆடும்பொ டிப்பூசி யானந்த மாயே.

(இ-ள்.) வெற்பா - பொருப்பனே, விலையானது இலை என்று - (இதற்கு) விலையில்லையென்றுசொல்லி, நீதந்தமுத்தம் - நீகொடுத்த முத்தானது, வேய்தந்தமுத்து ஆகில் - மூங்கில் ஈன்ற முத்தானால், (அது) வியப்ப - அதிசயிக்கும்படி, ஆல் இலை-ஆலிலையின்மீது, ஆர் புனல் - நிறைந்த ப்ரளயவெள்ளத்தில், பள்ளி-பள்ளிகொண்டருளு தலையுடைய, நாராயணன்பால் - ஸ்ரீமந்நாராயணனிடத்தில், போய்-சென்று, எந்தாய் - எமது தந்தையே, அரங்கா - திருவரங்கனே, இரங்காய் - இரங்கியருளாய், என - என்று ப்ரார்த்தித்து, தலையால்-(பிரமனது) தலையாகிய பாத்ரத்தைக்கொண்டு, இரக்கும் - பிச்சை யேற்கும், பணிபாய் சுமக்கும் - அந்நாராயணனது பாம்பாகிய பாயைச் சுமந்துகொண்டிருக்கும், தன்தாதை - தன்பிதாவாகிய ப்ரஹ்மா, அவர் தாமரைதாள்விளக்கும் - அந்நாராயணனது தாமரைமலர் போலுந் திருவடிகளைத் திருமஞ்சநஞ்செய்ததனாலுண்டான ஸ்ரீபாத தீர்த்தமாகிய, அலை ஆறு-அலைகின்ற நதியை [கங்கையை], சூடும்-சிரசில் தரிக்கும், புராணங்கள்பாடும் - புராணங்களைப் பாடாநிற்கும், ஆநந்தமாய்-(இங்ஙனம் இரந்து சுமந்து சூடிப்பாடுதலாலுண்டான) பேரின்பத்தால், பொடிப்பூசி - நீற்றைப்பூசிக்கொண்டு, ஆடும்-கூத்தாடும் (இச்செயல்களில்லாமையால் யாம் இதனை விரும்போம்.)

வேய்தந்த முத்து என்றது சிவபெருமானை. இவர் திருநெல்வேலியில் மூங்கிற்புதரின்கீழ் லிங்காகாரமாய்த்தோன்றினர் என்பதை அத்தலபுராணத்திற் காணலாம். உலகமுண்ட பெருவாயாகிய ஸ்ரீமந்நாராயணன் அவ்வுலகங்களையெல்லாம் தன் திருவயிற்றிலடக்கிக்கொண்டு சிற்றுருவோடு ஓர் சிறிய ஆலிலையின்மீது பள்ளிகொண்டருளுதலால், "வியப்பாலிலையார் புனற்பள்ளி நாராயணன்" என்றும், அவனன்றி விதி சிவேந்த்ராதிகளுக்கு வேறு புகலிடமில்லையாதலால், "நாராயணன்பாற்போய்" என்றும், தன்கையிலுள்ள ப்ரஹ்மகபாலம் கையைவிட்டொழியவேண்டுமென்னுங் கரு

த்துணர்த்த விரும்பினவனுதலால்" "எந்தா யரங்கா விரங்காயென ப் போய்த் தலையாலிரக்கும்" என்றும், உருத்திரன் நாகபூஷணனாத லால் "பணிப்பாய் சுமக்கும்" என்றும், திருமாலையுத்தேசித்து அநேக புராணங்கள் பாடினவனுதலால் "புராணங்கள் பாடும்" என்றும், இவ் வாறுசெய்வதிற் சிறந்ததொன்றில்லையெனத் தெளிந்தவனுதலால் "ஆடும்பொடிப்பூசி,யாநந்தமாய்" என்றும் கூறினர். இது மூங்கில் முத்தைக் கையுறையாய்க்கொண்டு சென்ற தலைமகனைத் தோழி கையாடி, அதன் சிறப்பின்மைகூறி மறுத்தது. இதனைக்கையுறை மறுத்தல் என்பர்.

தவம் - கட்டளைக்கலித்துறை.

சுஉ. ஆனந்தமாயரங் கற்கேயுயிர்க ளடிமையென்னும்
ஞானந்தனலைம் பொறிவாசல்சாத்திநற் றளைப்பற்றி
ஈனந்தரும்பற்று மற்றென்றும்யானென தென்னுமபி
மானந்தவிர்ந்திருப் பார்க்கிதுபோலில்லை மாதவமே.

(இ-ள்.) அரங்கற்கே - திருவரங்கனுக்கே, உயிர்கள் - எல்லா உயிர்களும், அடிமை என்னும் - சேஷபூதர் என்று அறிகின்ற, ஞா னம் தன்னல் - தத்வஜ்ஞானமாகிய கதவினால், ஐம்பொறிவாசல்- (மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும்) ஐந்திந்திரியங்களாகிய வாயில்களை, சாத்தி - அடைத்து [ஐம்புலன்வழியே செல்லவொட் டாமல் அடக்கிவைத்து], நல்தாளை - (அவனது) நல்ல திருவடிகளை, பற்றி - சரணமாக அடைந்து, ஈனம் தரும் - இழிவைத்தருகின்ற, பற்றும் - இருவகைப்பற்றுகளும், அற்று-நீங்கப்பெற்று, யான் எனது என்னும் அபிமானம் - யான் எனது என்னும் செருக்கை, தவிர்ந்து- நீங்கி, என்றும் - எந்நாளும், ஆனந்தமாய் - பேரின்பமுடையவராய், இருப்பார்க்கு - இருப்பவர்களுக்கு, இதுபோல் - இங்ஙனமிருத்தல் போல, மாதவம் - பெரியதவம், இல்லை - வேறொன்றில்லை. எ-று.

ஐம்பொறிவாசல்சாத்தி என்றதனால் ஞானம் கதவாக்கியுரைக் கப்பட்டது. ஐம்புலன்களாவன:—சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற் றம் என்பன. பிறவிப்பிணிக்கு மருந்தாதலால் நற்றாள் என்றார். "கற் றதனாலாய பயனென்கொல் வாலறிவன், நற்றாடொழா அரெனின்" என்றார் பெருநாவலரும். ஈனம் தரும்பற்று - பிறவியையுண்டாக்கு தற்குக் காரணமாகிய ஆசை. ஆசை பிறவியையுண்டாக்கும் என் பது, "அவாவென்ப வெல்லாவுயிர்க்கு மெஞ்ஞான்றுந், தவாப்பிறப் பீனும் வித்து" என்பதனால் விசதம். திருவரங்கநாதன்சேஷி, யாம் சேஷபூதர் என்றுதுணிந்து, அஹங்கார மமகாரங்களை நீக்கியிருப் பார்க்கு வேறொருதவஞ் செய்யவேண்டுவதில்லையென்பது கருத்து.

இதுவுமது - எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சுஈ. மாத வங்களென் றோத வங்களின் மருவு சீவனென் றொருவ நீபெரும், பூத மல்லேயிந் திரிய மல்லேயைம் புலனு மல்லே நற் புந்தி யல்லேகாண், சீத ரன்பரந் தாமன் வாமனன் றிருவ ரங்கனுக் கடிமை நீயுனக், கேது மில்லேயென் றறிய றிந்தபின் னீதின் மாதவ மில்லே யெங்குமே.

(இ-ள்.) மாதவங்கள் என்று - பெரியதவங்களென்று, ஓது-சொல்லப்படுகின்ற, அவங்களில் - பயனற்ற தொழில்களில், மருவு-பொருந்துகின்ற, சீவன் என்ற - ஆத்மா என்கிற, ஒருவ-ஒருத்தனே, நீ-நீ, பெருபூதம் அல்லே - பஞ்சமஹாபூதங்களும் அல்லே, இந்திரியம் அல்லே - பஞ்சேந்த்ரியங்களும் அல்லே, ஐம்புலனும் அல்லே - பஞ்ச விஷயங்களும் அல்லே, நல்புந்தி அல்லே - நல்ல அறிவும் அல்லே, காண் - இதனே நீயாராய்ந்துபார், (பின்னே என்னேயென்ருல்) நீ-நீ, சீதரன் - திருமகளேத் (திருமார்பில்) தரிப்பவனும், பரந்தாமன்-பரம பதத்தையுடையவனும், வாமநன் - (மஹாபலிச்சக்ரவர்த்தியின் செருக்கை அடக்க) வாமநாவதாரஞ்செய்தவனுமாகிய, திருவரங்கனுக்கு-திருவரங்கநாதனுக்கு, அடிமை-அடியவன், உனக்கு ஏதும் இல்லே யென்று அறி - உனக்குச் சிறிதாயினும் ஸ்வதந்த்ரம் இல்லேயென்று அறிந்துகொள், அறிந்தபின்-(அங்ஙனம்) அறிந்தபிறகு, ஈதின்-இது போன்ற, மாதவம்-பெருந்தவம், எங்கும்இல்லே-எவ்விடத்தும் இல்லே.

ஈதின் மேலானபதத்தைக்கொடுக்கு மியல்பில ஆதலால் தவங்களே அவங்கள் என்ருர். பரந்தாமம்-மேலாகிய இடம் (பரம பதம்.) உனக்கேதுமில்லே யென்றறி என்றது நீபரதந்த்ரன் என்றுணரக்கடவையென்றபடி. மாதவங்களே அவங்கள் என்றதனுல், "யாம் திருவரங்கனுக் கடிமையென்றும் பரதந்த்ரரென்றும் அறியின் ஈதினின்மேலாகிய பதத்தைத்தருதலால் இதுவே மேலானதவமென்ற தாயிற்று.

இரங்கல் - கட்டளேக்கலித்துறை.

சுச. எங்காந்த ளங்கைநல் லீரென்செய் கேனிரண் டேந்திழை
தங்காந்த னென்றறிந் தாலுநில் லாதுதனைக்கு நெய்க்கும் [யார்
அங்காந்த செம்பவ ளத்தெம்பிரானரங் கன்புயங்கள்
செங்காந்த மால்வளை யோவிரும் போவென்றன் சிந்தனேயே.

(இ-ள்.) எம்-எமது தோழியராகிய, காந்தள் அம் கை நல்லீர்-காந்தள்மலர்போலும் அழகிய கைகளேயுடைய மகளிரோ, இரண்டு ஏந்து இழையார் தம் காந்தன் என்று-தரித்த ஆபரணங்களேயுடைய

(திருமகள் நிலமகளென்னும்) இரண்டு பிராட்டிமார்களிடத்து ஆசை கொண்ட கணவனென்று, அறிந்தாலும் - அறிந்திருந்தாலும், நில்லாது - என்மனமானது அவரைப் பின்றொடராமல் நிற்காது, (ஆதலால்) என்செய்கேன்-(யான் இதற்கு) என்னசெய்வேன், தனைக்கும் மண்ணை உண்ணுதற்கும், நெய்க்கும் - நெய்யைப்பருகுதற்கும், அங்காந்த - திறந்த, செம்பவளத்து - செவந்த பவளம்போன்ற திருவாயையுடைய, எம்பிரான் - எமது பெருமானாகிய, அரங்கன்-ஸ்ரீரங்கநாதனது, புயங்கள் - திருத்தோள்கள், செங்காந்தம்மால்வரையோ- அழகிய காந்தத்தாலாகிய பெரியமலைகளோ, என்தன் சிந்தனை- எனதுமனம், இரும்போ - (அவற்றிற்சென்று விழுந்தொன்று படுகின்ற) இரும்புதானோ-(அறியேன்). எ-று.

தனைக்கு அங்காந்தது - சர்வசம்ஹாரகாலத்தில் எல்லாவுலகங்களையும் திருவயிற்றில் வைத்துக் காக்கும்பொருட்டு. நெய்க்கு அங்காந்தது கண்ணனவதாரத்தில். பிராட்டிமாரிருவரிருத்தலால் எமக்கிடம்பெறுதென்றறிந்தும் என்மனம் தரித்து நில்லாமல் அவரது திருத்தோள்களிற் சென்றழுந்துதலால், அவரது திருத்தோள்கள் காந்தமலைகளோ, என்மனம் இரும்போ என்பது கருத்து.

களி - தாழிசை.

சுரு. சிந்தையிற்குடி கொண்டிருந்து திருக்கறுத்தடிமைக்கொளும்
திருவரங்கர் பொருப்புயர்ந்த திருப்புயம்புகழ் களியரோம் [ளும்
புந்திமிக்கது வந்துபுக்கது போதமாதர்க ளெழுவர்தம்
பூசையேமக பூசையென்றது புதுமையன்றிது புத்தர்காள்
அந்தரத்திமை யோரருந்து மருந்தும்வெள்ளைய தன்றியே
அரியசாதிகொ ளாதமானிட ரகலிடத்தினி லில்லையே
மந்திரத்தினி லாததேவதை வானகத்தினி லில்லையே
வடிவி லாதவையண்டகோளம் வளைந்தவைப்பதி லில்லையே.

(இ-ள்.) புத்தர்காள்-புத்தர்களே, (நாங்கள்) சிந்தையில்-(அன்பால் நினைவாரது) மனத்தில், குடிகொண்டு இருந்து - (சென்று நீங்காது) தங்கியிருந்து, திருக்கு அறுத்து - (அவர்களது) மாறுபாடுகளைப்போக்கி, அடிமைகொளும் - ஆட்கொள்ளுகின்ற, திரு அரங்கர் - ஸ்ரீரங்கநாதரது, பொருப்பு - மலைபோல, உயர்ந்த - ஓங்கிய, திருபுயம் - திருத்தோள்களை, புகழ்-துதிக்கின்ற, களியர் ஏம்-களிப்பையுடையேம், புந்தி - எங்கள்மனத்தில், மிக்கது - மேலானதொரு பொருள், வந்துபுக்கது - வந்துபிரவேசித்ததாகி, போதம்-அறிவைத் தருகிற, மாதர்கள் எழுவர்தம் - ஸப்தமாதர்களுடைய, பூசையே-

பூசனையே, மகபூசை என்றது - பெருமையாகியபூசனையென்றறிவித்தது, இது புதுமை அன்று-இது நூதநமானதொன்றன்று (யதார்த்தமே, என்னெனின்), அந்தரத்து-விண்ணுலகத்திலுள்ள, இமையோர்-தேவர்கள், அருந்தும்-பருகுகின்ற, மருந்தும்-அமிர்தமும், வெள்ளை-வெள்ளையே, அது அன்றி - அதுவுமல்லாமல், அரிய - அருமையான, சாதி - சாதிகளை, கொளாத - உடைத்தாகாத, மானிடர்-மனிதர்கள், அகல் இடத்தினில்-இடம்பரந்தபூமியில், இல்லையே-இல்லையே, மந்திரத்தில் நில்லாத - மந்த்ரத்தில் கட்டுப்படாத, தேவதை-தெய்வம், வானகத்தினில் - தேவலோகத்திலும், இல்லையே-இல்லையே, வடிவு இலாதவை - உருவமில்லாதபொருள்கள், அண்டகோளம்வளைந்த - அண்டகோளஞ்சூழ்ந்த, வைப்பு அதில் - உலகத்தில், இல்லையே-இல்லையே. எ-று.

கள்ளைக்குடித்தலுக்கும் குடியென்றுபெயராதலால், சிந்தையிற் குடிகொண்டிருந்து என்றும், கட்குடியனைக் களியனென்பராதலால் களியரோம் என்றும், அமிர்தமும் கள்ளும் வெண்ணிறமாதலால் இமையோரருந்துமருந்தும் வெள்ளை என்றும், சாதி, மந்திரம், வடிவு என்பன கள்ளுக்குப் பெயராதலால் "அரியசாதி கொளாத மானிடரகலிடத்தினிலில்லையே, மந்திரத்தினிலாத தேவதை வானகத்தினிலில்லையே, வடிவிலாதவை யண்டகோளம் வளைந்தவைப்பதிலில்லையே" என்றும் களியென்னும் உறுப்புக்கேற்கச் சிலேடைப்பொருள் கொள்ளக்கூறினர். மாதர்களெழுவராவார்.—அபிராமி, மாஹேசுவரி, கௌமாரி, நாராயணி, வராஹி, இந்த்ராணி, காளி என்பவர்.

குறளடிவஞ்சிப்பா

இவை பத்தொன்பதும் வஞ்சி அடிகள்.

சுசு. இல்லறமெனத் துறவறமெனச்
சொல்லறம்பிற துணையன்றெனப்
பவக்கடலுட் டுவக்கறுப்பான்
காவிரியிடைப் பூவிரிபொழிற்
சிலமந்திகள் சினைதாவப்
பலதெங்கின் பழக்குலையுதிர
அடர்கமுகின் மிடறொடிதாத்
தேமாங்கனி சிதறுபுவிழ
முடப்பலவின் குடக்கனியுக
அரம்பைக்கனி வரம்பிற்புக
வயன்மருங்கின் மலர்ப்பொய்கையுள்

துயில்வலம்புரி துண்ணனவுறத்
தாஅட்டாமரைத் தவிசுறைதரு
சூஉட்டோதிமம் பேஎட்டுடனெழ
மயிற்சேவன் மனங்களிப்பக்
குயிற்பேடைக் குலமொளிப்ப
மழைமுகிலென முழவதிர்தரு
திருவரங்கப் பெருநகருள்
அரவணைமிசை யறிதுயிலமர்ந்
தருள்புரி ... ... இதுதனிச்சொல்.
திருநாரணனைச் சேர்ந்தனஞ் } இதுஈரடிநேரிசை
சரணாரவிந்தந் தஞ்சமென்றிரந்தே } ஆசிரியச்சுரிதகம்

(இ-ள்.) இல் அறம் என - இல்லறமென்றும், துறவு அறம் என - துறவறமென்றும், சொல் அறம் - (இருவகையாகச்) சொல்லப்படுகின்ற அறமும், பிற - மற்றைப்பொருளின்பங்களும், துணை அன்று என - எமக்கு உயிர்த்துணையல்லவென்று துணிந்து, பவம் கடலுள் - பிறவிக்கடலில், துவக்கு-சம்பந்தப்பட்டிருத்தலை, அறப்பான்-சேதிக்கும்பொருட்டு, காவிரி இடை-(உபய) காவிரியின் நடுவில், பூவிரிபொழில்-மலர்கள் மலர்கின்ற சோலைகளில், சிலமந்திகள்-சிலகுரங்குகள், சினை - (மரக்) கிளைகளில், தாவ - குதிக்கவும், (அதனால்) பலதெங்கின் - பலதென்னமரங்களின், பழம்குலை - முதிர்ந்த காய்களின் குலைகள், உதிர - உதிரவும், (அவற்றின் வீழ்ச்சியால்) அடர்கமுகின் - நெருங்கின பாக்குமரங்களின், மிடறு - கண்டம், ஒடிதர - ஒடியவும், (அதனால்) தேமாகனி - தேமாம்பழங்கள், சிதறுபுவிழ - சிதறிவிழவும், (அதனால்) முடம்பலவின் - வளைந்த பலாமரத்தினது, குடம்கனி - குடம்போலும் பழங்கள், உக - விழவும், (அதனால்) அரம்பைகனி-வாழைப்பழங்கள், வரம்பில்புக-வயல்வரப்புகளில் விழவும், (அதனால்) வயல்மருங்கின் - கழனிகளினருகிலுள்ள, மலர்பொய்கையுள் - பூக்கள்நிறைந்த தடாகத்தில், துயில்-தூங்குகின்ற, வலம்புரி - வலம்புரிச்சங்கங்கள், துண்ணனவு உற-அச்சமடைந்தலறவும், (அதனால்) தாள் தாமரை தவிசு - நாளத்தையுடைய தாமரைமலராகிய ஆசநத்தில், உறைதரு - தங்கி உறங்குகின்ற, சூட்டு ஓதிமம் - உச்சிக்கொண்டையையுடைய அன்னங்கள், பேட்டுடன் - (தம்) பேடைகளுடன், எழ - எழுந்திருப்பவும், மயில் சேவல் - ஆண்மயில்கள், மனம்களிப்ப-மனமகிழவும், குயில் பேடைகுலம்-பெண்குயில்களின்கூட்டம், ஒளிப்ப - (மனம்வருந்தி)

மறையவும், மழைமுகில் என - கார்காலமேகம்போல, முழவு-வாத்யங்கள், அதிர்தரு - ஒலிக்கின்ற, திரு அரங்கம் பெருநகருள் - திருவரங்கமென்கிற பெரியதிருநகரத்தில், அரவு அணைமிசை-சேஷசயநத்தின்மேல், அறிதுயில் அமர்ந்து அருள்புரி - யோகநித்திரைசெய்தருளுகின்ற, திருநாரணனை - ஸ்ரீமந்நாராயணனை, சரணம் அரவிந்தம் - (அவனது) திருவடித்தாமரைகளே, தஞ்சம் என்று - அடைக்கலமென்றுசொல்லி, இரந்து - ப்ரார்த்தித்து, சேர்ந்தனம்-ஆசிரயித்தோம். எ-று.

பவக்கடலுட் டூவக்கறுப்பான் இல்லறமெனத் துறவறமெனச் சொல்லறம் பிறதுணையன்றென காவிரியிடைத் திருவரங்கப் பெருநகருள் அரவணைமிசை யறிதுயி லமர்ந்தருள் புரிதிருநாரணனைச் சேர்ந்தனம் என்றந்வயித்து முடித்துக்கொள்க. தாவ, உதிர, ஒடிதர, விழ, உக, புக, உற, எழ, களிப்ப என்னும் வினையெச்சங்கள் அதிர்தரு என்பதில் அதிர் என்னும் முதனிலையோடு முடிந்தன. மந்திகள் முதலியன தாவுதல் முதலியவற்றிற்குக் காரணம் மழைமுகிலென முழவதிர்தலென்க. இல்லறம் - க்ருஹஸ்தாச்சிரமம், அது இல்வாழ்க்கைநிலைக்கு நூல்களாற் சொல்லப்படுகிற நெறியினின்று, அதற்குத்துணையாகிய கற்புடைமனைவியோடுஞ் செய்தற்குரிய அறம். துறவறம்-சந்நியாசவாச்சிரமம், அது மேற்கூறிய இல்லறத்தின் வழுவாதொழுகி அறிவுடையராகிப் பிறப்பினையஞ்சி வீடுபேற்றின்பொருட்டுத் துறந்தார்க்குரித்தாய அறம். அது விரதம் ஞானம் என இருவகைப்படும். அவற்றுள் விரதமாவது-வினைமாசு தீர்ந்து அந்தக்கரணங்கள் தூயவாதற்பொருட்டு அவராற் காக்கப்படும் அருளுடைமை முதலாயின. ஞானமாவது அவற்றின் பயனாய் வீடுபயக்கு முணர்வு. அது நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தல் என்னு முறுப்புக்களுள்ளது. இவற்றின் விரிவெல்லாம் பெருநூல்களுட்காண்க. அறம் பொருள் இன்பம் என்பவற்றுள், முன்னர் அறத்தைப்பிரித்து இல்லறம் துறவறமென இருவகையாய்க் கூறியதனால், பிற என்றது மற்றைப்பொருளின்பங்களையெனக்கொள்க. மழைக்காலம் குயிலுக்குப் பிரதிகூலமும் மயிலுக்கு அனுகூலமுமாம். முழவொலியை மழையொலியென மயங்கினமையால் தாவுதல் முதலிய நிகழ்ந்தனவென்க.

மடக்கு - எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சூஎ. இரவியை யிரவின் மதியினை மதியு ளிறையினை யிறையுமெண் ணரிய, காவனைக் காவின் முனிவனை முனிவர் கருத்தனைக் கருத்தனைத் துடைத்தாள், பரமனைப் பரம பதத்தனைப்

பதத்துட் பாரனைப் பாரநத்தூதும், அரவனை யரவி னரங்கனை யரங்கத் தடிகளை யடிகள்சே வியுமே.

(இ-ள்.) இரவியை - சூரியனாயிருப்பவனை, இரவின்மதியினை - ராத்ரியில்விளங்குகின்ற சந்த்ரனாயிருப்பவனை, மதியுள் இறையினை - அறிவில் உறைகின்ற தலைவனை, இறையும் எண் அரியகரவனை-சிறிதும் நினைத்தற்கரிய மாயையுடையவனை, கரவு இல் முநிவனை-கபடமில்லாதமுநிவனாயிருப்பவனை, முநிவர்கருத்தனை-முநிவர்களது உள்ளத்திலுறைபவனை, கருத்தனை துடைத்து ஆள்பரமனை - (தன்னையடைந்தவர்களது) பிறப்பைப்போக்கியருளுகின்ற மேலானவனை, பரமபதத்தனை - பரமபதத்தையுடையவனை, பதத்துள் பாரனை-(த்ரிவிக்ரமாவதாரத்தில்) திருவடியினுள்ளடங்கிய பூமியையுடையவனை, பாரம் நத்து ஊதும் அரவனை-பெரியபாஞ்சஜந்யமென்னும் சங்கத்தை ஊதுகின்ற ஓசையையுடையவனை, அரவின் அரங்கனை - பாம்பை இடமாகவுடையவனை, அரங்கத்து அடிகளை - திருவரங்கத்திலெழுந்தருளியிருக்கின்ற ஸ்வாமியை, அடிகள் சேவியும் - (நீங்கள்) திருவடிதொழுங்கள். எ-று.

முநிவன் - மநநஞ்செய்வோன். இவன் மநநஞ்செய்தலாவது லோகரக்ஷணசிந்தை. "முனியே நான்முகனே" என்பது ஆழ்வார் ஸ்ரீஸூக்தி. கரவின்முனிவனை யென்பதற்கு - கஜேந்த்ராழ்வானைப் பற்றிய முதலையிடத்துக் கோபத்தையுடையவனென்றும், முனிவர் கருத்தனை என்பதற்கு முனிவர்தலைவனை என்றும் கூறலாம். எம்பெருமானது திருவடியினின்றும் பூமியுண்டாயிற்றென்று வேதமோதுகையால் "பதத்துட்பாரனை" யென்றார் என்றலுமொன்று.

இருபனிக்காலம் - கலிநிலைத்துறை.

சுஅ. சேவிக்க வாழ்விக்கு மெங்கோ னரங்கன் றிருக்கோயில்
காவிற் கலந்தாசை தந்தேகி னார்நெஞ்சு கன்னெஞ்சதோ [சூழ்
வாவிப் புறத்தன்ன மேயின்னமேதோ வரக்கண்டிலேன்
பாவிக்க நேகந் தனிக்கால மிந்தப் பனிக்காலமே.

(இ-ள்.) வாவி புறத்து அன்னமே - தடாகங்களினிடத்தே சஞ்சரிக்கின்ற அன்னப்பறவையே, சேவிக்க - (தன்னைக்கண்டு) வணங்க, வாழ்விக்கும் - (அப்படிவணங்கினோரை) இம்மை மறுமை வீடுபேறுகளிற் சிறந்துவாழச்செய்கின்ற, எம்கோன் - எமது தலைவனாகிய, அரங்கன் - ஸ்ரீரங்கநாதனது, திருகோயில் - திருக்கோயிலை, சூழ்-வளைந்த, காவில்-சோலையில், கலந்து-(என்னைக்) கூடியிருந்து, ஆசைதந்து - (எனக்கு) ஆசைகாட்டி, ஏகினார் - (என்னைப்பிரிந்து)

சென்றவரது, நெஞ்சு-மனம், கல்நெஞ்சதோ - கல்லினாலாகிய மனமோ, இன்னம் - இன்னமும் [பனிக்காலம்வந்தபின்னும்], ஏதோ-என்னகாரணத்தாலோ, வரகண்டிலேன்-(மீண்டுவரக்) கண்டேனில்லை, பாவிக்கு - தீவினையேனாகிய எனக்கு, இந்த பனிக்காலம்-இந்தப் பனிக்காலமானது, தனி அநேக காலம் - ஒப்பற்ற நெடுங்காலமாக இருக்கின்றது. எ-று.

அன்னமேயெனவிளித்து, ஆசைதந்தேகினர் நெஞ்சு கன்னெஞ்சதோ, இன்னமேதோ வரக்கண்டிலேன், பாவிக்கு இந்தப் பனிக்காலம் அநேகந் தனிக்காலம் என்றது அன்னம் தூதுக்குரியதொன்றுதலால் தன் பிரிவாற்றாமைக்கிரங்கித் தூதுசெல்லுமென்னுங் கருத்துடைமையைக்குறிக்கின்றது. ஆசையென்னுங் குணத்தை யெனக்குத் தந்தேகினமையால் தம்மிடத்து அக்குணமில்லையாயிற்றென்றுளாயிற்று. பாவி என்னும் படர்க்கைச்சொல் ஈண்டுத் தன்மையில்வந்தது. தனிக்காலம் என்றார் வருத்தத்தையுண்டாக்குவதில் இதற்கு நிகராகியகாலம் வேறொன்றின்மையின். இது தலைமகனது பிரிவாற்றாது நெய்தனிலத்து நிற்குந் தலைமகள் அந்நிலத்திலுள்ள அன்னத்தோடுகூறி இரங்கியது. "இன்னன்னதூதெம்மை யாளற்றப்பட்டிரந்தாளிவளென், றன்னன்ன சொல்லாப்பெடையொடும் போய்வரும் நீலமுண்ட, மின்னன்னமேனிப் பெருமானுலகிற்பெண்தேசெல்ல, வன்னன்ன நீர்மைகொலோ குடிச்சீர்மையிலன்னங்களே" "அன்னஞ்செல்வீரும் வண்டானஞ்செல்வீருந் தொழுதிரந்தேன், முன்னஞ்செல்வீர் கண்மறவேன் மினோகண்ணன்வைகுந்தனே; டென்னெஞ்சினாரைக் கண்டாலென்னைச் சொல்லியவரிடைநீர், இன்னஞ்செல்லீரோவிது வோதகவென்றிசைமின்களே" என்பன ஆழ்வார் ஸ்ரீஸூக்திகள்.

குறம் - அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

௬௬. காலமுணர்ந்த குறத்திநான் கருதினை யொன்றது சொல்லுவேன், பாலக னுச்சியி லெண்ணெய்வார் பழகிய தோர்கலை கொண்டுவா, கோல மலர்க்கையின் மங்கைநின் கொங்கைமு கக்குறி நன்றுகாண், ஞாலமு வந்திட நாளையே நண்ணுவை நம்பெரு மாளையே.

(இ-ள்.) நான்-யான், காலம்-முக்காலச்செய்திகளையும், உணர்ந்த-அறிந்துசொல்லவல்ல, குறத்தி - குறவர்மகள், ஒன்று கருதினை-(நீ உன்மனத்தில்) ஒன்றை நினைத்திருக்கிறாய், அது - அதனை, சொல்லுவேன் - கூறுவேன், பாலகன் - (என்) சிறுகுழந்தையது, உச்சியில்-தலையில், எண்ணெய்வார்-எண்ணெயைவிடு, பழகியது ஓர்கலை-

பழையதொருசீலையை, கொண்டுவா - கொண்டுவந்துகொடு, கோலம் மலர் கையின் - அழகிய தாமரைமலர்போலுங் கைகளையுடைய, மங்கை-பெண்ணே, நின்-உன்னுடைய, கொங்கைமுகம்குறி-முலைக் கண்களின் குறியானது, நன்று - நன்றாயிருக்கிறது, (ஆகையால்) ஞாலம் உவந்திட - உலகமுழுவதும் கண்டு மகிழும்படி, நாளையே-நாளைக்கே, நம்பெருமாளை - ஸ்ரீரங்கநாதனை, நண்ணுவை-சேர்வாய்.

"கோலமலர்க்கையின் மங்கைநின் கொங்கைமுகக்குறி நன்று" என்பதற்கு. மங்கையே, உன் அழகாகிய தாமரைமலர்போலுங் கைக்குறி நன்றாயிருப்பதுபோலவே உன் கொங்கைக்குறியும் முகக்குறியும் நன்றாயிருக்கின்றன என்றும், உன் கைக்குறியினும் உன் கொங்கைக் குறி முகக்குறிகள் நன்றாயிருக்கின்றன என்றும் உரைப்பினுமிழுக்காது. மலர்க்குழன்மங்கை என்றும் பாடம். இதற்கு மலர்மாலையையணிந்த கூந்தலையுடையபெண் என்பது பொருள். ஒத்த தலைமகனுக்கும் தலைமகளுக்கும் கூட்டம் நேர்தலைக்காணின் உலகத்தார் மகிழ்தலியல்பாதலால் "ஞாலமுவந்திட" என்றாள். இது கட்டுவிச்சிகூறல் என்னுந்துறை. அதாவது-தலைமகனைக் கண்ணுற்று விரும்பி மயங்கிநிற்குந் தலைமகள் தன்னிடம் வந்த கட்டுவிச்சியைக் குறிவினவ, அக்கட்டுவிச்சியாகிய குறத்தி குறிநாடித் தெளிந்துகூறுவது.

மேகவிடுதூது - கட்டளைக்கலித்துறை.

எ0. பெருமாலை யார்க்குரைப் பேனுமக் கேவிண்டு பேசினல்லால், கருமாலை யாயெழுங் கார்க்குலங் காதொண்டர் காற்பொடிதன், திருமாலை கொண்ட திருமா லரங்கர்தந் தெய்வத்துழாய், மருமாலை வாங்கிவம் மின்னந்தி மாலை வருமுன்னமே.

(இ-ள்.) கரு மாலையாய் எழும் கார் குலங்காள்-கரிய வரிசையாய் (ஆகாயத்தே) எழுகின்ற மேகசமூஹங்களே, பெருமாலை-(எனது) பெரியமயக்கத்தை, உமக்கே-உங்களுக்கே, விண்டுபேசின் அல்லால் - விவரித்துச்சொன்னாலல்லாமல், யார்க்கு-வேறேயாவர்க்கு, உரைப்பேன்-எடுத்துச்சொல்லுவேன், (நீங்கள்போய்) தொண்டர்கால் பொடிதன் - தொண்டரடிப்பொடியாழ்வாரருளிச்செய்த, திருமாலை - திருமாலையென்னுந் திவ்யப்ரபந்தமாகிய மாலையை, கொண்ட - அணிந்தருளிய, திருமால் அரங்கர்தம் - திருமாலாகிய ரங்கநாதரது, தெய்வம் மரு துழாய் மாலை - தெய்வமணமமைந்த திருத்துழாய்மாலையை, அந்திமாலை வரும்முன்னம் - அந்திப்பொழுதாகிய மாலை வருதற்குமுன்னே, வாங்கி வம்மின் - (நீங்கள்) வாங்கிக்கொண்டுவாருங்கள். எ-று.

மேகங்கள் தூதுக்குரியனவாதலால் கார்க்குலங்காள் எனவிளித்து, மருமாலைவாங்கி வம்மின் என்றார். கருமால் ஐ ஆய் என்பதற்கு கரியதிருமாலின் அழகைக்கொண்டு என்றுரைப்பினுமமையும். கரிய திருமாலின் அழகைக்கொண்டிருக்கிற நீங்கள் சென்றுகேட்டால் தம்தெய்வத்துழாய் மருமாலையைத் தடாது தந்தருளுவர், அங்ஙனந் தரவிசைந்திலராயின், நூதனமாய்த் தொண்டரடிப்பொடியார் சமர்ப்பித்த மாலைகளிரண்டுள ஆதலால் பழமையாகிய துழாய் மாலையைத் தரலாமென வாதாடி வாங்கிவரலாமென்றற்கு, "தொண்டர்கால் பொடி தன்றிருமாலைகொண்ட திருமாலரங்கர் தந்தெய்வத்துழாய், மருமாலைவாங்கி வம்மின்" என்றும், நீங்கள் வாங்கிவருமுன் அந்திமாலைவரின் இறந்துபடுவேன் என்றற்கு "அந்திமாலைவருமுன்னமே வம்மின்" என்றும் கூறினாள். தெய்வமணம் - என்றுங் கெடாதமணம். "சூழ்கின்ற கங்குற் சுருங்காவிருளுங் கருந்திணம்பைப், போழ்கின்ற திங்களம்பிள்ளையும் போழ்கதுழாய்மலர்க்கே, தாழ்கின்ற நெஞ்சத்தொருதமியாட்டியேன் மாமைக்கின்று, வாழ்கின்றவாறிதுவோவந்து தோன்றிற்றுவாலியதே" என்றார் ஆழ்வாரும்.

நேரிசைவெண்பா.

எக. முன்னம் பிறந்த பிறப்போ முடிவில்லை
இன்னம் பிறப்பிக்க வெண்ணாதே—தென்னரங்கம்
மேவிக் கிடந்தானே வீற்றிருக்கு நின்பதத்தென்
ஆவிக் கிடந்தா னருள்.

(இ-ள்.) தென் அரங்கம் மேவிகிடந்தானே - தென்திருவரங்கத்தில் திருவுள்ளமுவந்து திருப்பள்ளிகொண்டவனே, (யான்) முன்னம் பிறந்தபிறப்போ - முன்னேபிறந்த பிறவிகளுக்கோவென்றால், முடிவு இல்லை - இறுதியில்லை, (ஆகையால்) இன்னம் - இன்னமும், பிறப்பிக்க - என்னைப்பிறப்பிக்கும்படி, எண்ணாதே-திருவுள்ளத்திற் கொள்ளாதே, (மற்றென்னெனின்) வீற்றிருக்கும்-ஒப்பில்லாத சிறப்போடிருக்கின்ற, நின்பதத்து - உன்திருவடியின்கீழ், என் ஆவிக்கு-எனது உயிர்க்கு, இடம்-இடத்தை, அருள்-தந்தருள்வாயாக. எ-று.

"நின்பதத்து வீற்றிருக்க" என்றுபாடமோதி, உனது பரமபதத்தில் யான் வீற்றிருக்கும்படி எனப்பொருளுரைத்தலு முண்டு.

இரங்கல் - மடக்கு

பன்னிருசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

எஉ. அரும்புன் னாகத் தடங்காவே
யவாவென் னாகத் தடங்காவே

அம்போ ருகக்கண் பொருந்தேனே
யழுநீ ருகக்கண் பொருந்தேனே
பரம்புங் கடலூர் நாவாயே
பாவிக் கடலூர் நாவாயே
பார்மீ துயர மறியலையே
படுமென் றுயர மறியலையே
கருங்கட் கயலே மாசுறவே
கரைவேற் கயலே மாசுறவே
கண்டற் போதுகு வாலுகமே
கங்குற் போதுகு வாலுகமே
குரும்பை தழைக்குங் கரும்பனையே
குயில்வந் தழைக்குங் கரும்பனையே
குருகீர் நந்த மரங்கரையே
கொணரீர் நந்த மரங்கரையே.

(இ-ள்.) அருதடம் புன்னாகம் காவே - அரியபெரிய புன்னை மரச்சோலையே, அவா - ஆசை, என் ஆகத்து அடங்கா - எனது மனத்தில் அடங்குகிறதில்லை, அம்போருகக்கண்பொருதேனே - தாமரைமலரினிடத்து ஒன்றோடொன்று போர்புரியும் வண்டே, அழு நீர் உக - அழுகின்ற கண்ணீர் ஒழுக, கண்பொருந்தேன்-கண்ணுறங்குகிறேனில்லை, பரம்பும் கடல் ஊர் நாவாயே - பரவிய கடலிலோடுகின்ற மரக்கலமே, பாவிக்கு-பாவியேனுக்கு, ஊர் நா வாய் - (அலர்தூற்றுகின்ற) ஊராரது நாவும் வாயும், அடல் - பகையாகும், பார்மீது உயர மறி அலையே - பூமிமேல் உயர்ந்து மடங்கிவிழுகின்ற அலையே, படும் என்துயரம் அறியலையே - யான்படுகின்ற துன்பத்தைக் கண்டறிகிறாயில்லையே, கருகண்கயலே-கரியகண்களையுடைய கயல்மீனே, மாசுறவே - பெரிய சுறாமீனே, கரைவேற்கு-உருகுகின்ற எனக்கு, மாசு உறவு - குற்றமுள்ள உறவினரும், அயலே - அயலாரேயாவர், கண்டல்போது உகு வாலுகமே - தாழைமலர்கள் சிந்துகின்ற வெண்மணற்குன்றே, கங்குல்போது குவால் உகமே-(ஒரு) இராப்பொழுது கூட்டமாகிய அநேகம் யுகங்களேயாகும், குரும்பை தழைக்கும் கருபனையே-குரும்பைகள் செழிக்கின்ற கரியபனைமரமே, குயில்-குயிலானது, வந்து - முன்னேவந்து, கரும்பனை-கரும்பு வில்லையுடைய மன்மதனை, அழைக்கும் - அழையாநின்றது, குருகீர்-நாரைகளே, நந்து அமர் அம்கரையே-சங்குகள்பொருந்திய அழகிய கரையே, நம்தம் அரங்கனை - நமது ஸ்ரீரங்கநாதனை, கொணரீர்-அழைத்துக்கொண்டு வாருங்கள். எ-று.

அம்போருகம் - நீரிற்றோன்றுவது. உறவினரும் அயலார்போலத் தூற்றுதலால் அயலே மாசுறவே என்றும், விரகிகளுக்கு அற்பகாலமும் கற்பகாலம்போலத் தோன்றிவருத்துதலால் கங்குற்போதுகுவால் உகமே என்றும், மன்மதன் வரவைத் திருச்சின்னம்போல முன்னர் அறிவிப்பதாதலால் குயில்வந்தழைக்குங் கரும்பனையே என்றும் கூறினாள். குரும்பை-இளங்காய். தலைமகன் பிரிவாற்றாது வருந்துகின்ற நெய்தனிலத்துத் தலைமகள் அந்நிலத்திலுள்ள பொருள்களைநோக்கித் தன்துயரங்கூறி இரங்கியது ஆதலால் இத்துறை இரங்கல் எனப்படும்.

நேரிசை ஆசிரியப்பா.

இதனுள் பத்துத்தாமரைகளும் ஒன்பது
அதிசயங்களுங் காண்க.

௭௩. கரைபொரு தொழுகுங் காவிரி யாற்றே
ஆற்றிடைக் கிடப்பதோ ரைந்தலை யரவே
அரவஞ் சுமப்பதோ ரஞ்சன மலையே
அம்மலை பூத்ததோ ரரவிந்த வனமே
அரவிந்த மலர்தொறு மதிசய முளவே
கடல்விளிம் புடுத்த கண்ணகன் ஞாலம்
உடன்முழு தளந்த தொருதா மரையே
வகிரிளம் பிறையான் வார்சடை தேங்கப்
பகிரதி கான்றதோர் பங்கே ருகமே
யாவையும் யாரையும் படைக்க நான்முகக்
கோவை யீன்றதோர் கோக னகமே
திருமகட் கினிய திருமனை யாகிப்
பருமணி யிமைப்பதோர் பதும மலரே
சடைத்தலை தாழ்த்துச் சங்கர னிரப்ப
முடைத்தலை தவிர்த்ததோர் முளரிமா மலரே
ஆங்குமண் டோதரி யணிந்தமங் கலநாண்
வாங்கவில் வாங்கிய வனசமு மொன்றே
விரிந்தபுக ழிலங்கை வேந்தற்குத் தென்றிசை
புரிந்தருண் மலர்ந்ததோர் புண்ட ரீகமே
மண்டிணி ஞாலமும் வானமு முட்பட
அண்டமுண் டுமிழ்ந்ததோ ரம்போ ருகமே
கடைசிவந் தகன்று கருமணி விளங்கி

இடைசில வரிபரந் தினியவாய் நெடியவாய்
இன்பந் தழீஇய விருபெருங் கமலம்
துன்பந் தழீஇய தொண்ட னேனையும்
உவப்புட னொருகா னோக்கிப்
பவக்கடல் கடக்கும் பரிசுபண் ணினவே.

(இ-ள்.) கரைபொருது ஒழுகும் - இருகரைகளையும் மோதியோடுகின்ற, காவிரி ஆறு-காவேரிநதி (ஒன்று உண்டு), ஆறு இடைகிடப்பது - அந்நதியினிடையே பொருந்தியிருப்பதாகிய, ஓர் ஐந்தலை அரவு - ஐந்துதலைகளையுடையதொரு நாகம் (உண்டு), அரவம் சுமப்பது - அந்நாகம் தாங்குவதாகிய, ஓர் அஞ்சநம்மலை - நீலமலையொன்று [நம்பெருமாள்] (உண்டு), அ மலை பூத்தது-அந்த நீலமலையினிடத்தே மலர்ந்ததாகிய, ஓர் அரவிந்தம் வநம் - ஒரு தாமரைமலர்க்காடு [திருமுகமுதலிய திருவவயவங்கள்] (உண்டு), அரவிந்தம்மலர்தொறும்-அத்தாமரைமலர்கள்தோறும், அதிசயம் உள-ஒவ்வொருவியப்பு உண்டு, (அஃதென்னவெனின்) ஒருதாமரை-ஒருதாமரைமலர் [இடது திருவடி], கடல்விளிம்பு உடுத்த - கடலாற் சுற்றிலுஞ் சூழப்பட்ட, கண் அகல் ஞாலம் முழுது-இடமகன்ற பூமிமுழுவதையும், உடன்-ஒருசேர, அளந்தது-அளந்தருளிற்று, ஓர்-பங்கேருகம் ஒரு தாமரை மலர் [வலதுதிருவடி], வகிர் இளம் பிறையான்-துண்டமாகிய இளஞ்சந்த்ரனை முடியிலுடைய சிவனது, வார்சடை - நீண்டசடையில், தேங்க-நிறைந்துதங்கும்படி, பகிரதி-கங்கையை, கான்றது-உமிழ்ந்தது, ஓர் கோகநகம் - ஒருதாமரைமலர் [திருநாபி], யாவையும்-எல்லா அஃறிணைப்பொருள்களையும், யாரையும் - எல்லா உயர்திணைப் பொருள்களையும், படைக்க - படைக்கும்படி, நான்முகக்கோவை-சதுர்முகனாகிய தேவனை, ஈன்றது-உண்டாக்கிற்று, ஓர்பதுமம் மலர்-ஒரு தாமரைப்பூ [திருமார்பு], திருமகட்கு - பெரியபிராட்டிக்கு, இனிய - வசித்தற்கினிதான, திருமனை ஆகி-அழகிய இடமாய், பருமணி இமைப்பது-பருத்த கௌஸ்த்துப ரத்நம் விளங்கப்பெற்றது, ஓர் முளரிமாமலர் - ஒரு அழகிய தாமரைமலர் [வலது திருக்கை] சங்கரன்-சிவன், சடைதலைதாழ்த்து - சடையினையுடைய தலையினால் வணங்கி, இரப்ப - யாசிக்க, முடைதலைதவிர்த்தது - (அவன்கையிலொட்டிய) புலால்நாற்றத்தையுடைய ப்ரஹ்மகபாலத்தை ஒழித்தது, வநசமும் ஒன்று - ஒருதாமரைமலர் [இடது திருக்கை], ஆங்கு-அப்பொழுது, [இலங்கையில்], மண்டோதரி-மண்டோதரியென்பவள், அணிந்த-(கழுத்தில்) தரித்திருந்த, மங்கலம்நாண் - மாங்கல்ய சூத்ரத்தை, வாங்க - இழக்கும்படி, வில்வாங்கியது - கோதண்டத்தைவளைத்தது, ஓர் புண்டரீகம் - ஒரு தாமரைமலர் [திருமுகமண்ட

லம்], விரிந்தபுகழ்-பரவிய கீர்த்தியையுடைய, இலங்கைவேந்தற்கு-இலங்கைக்கரசனுகிய விபீஷணுழ்வானுக்காக, தென்திசைபுரிந்து-தெற்குத்திக்கைநோக்கி, அருள்மலர்ந்தது-எப்போதும் க்ருபையோடு மலர்ந்திருந்தது, ஓர் அம்போருகம் - ஒரு தாமரைமலர் [திருப்பவளம்], மண்திணிஞாலமும் - மண்செறிந்த பூமியும், வானமும்-தேவலோகமும், உள்படட - அடங்கும்படி, அண்டம்-உலகமுழுவதையும், உண்டு - விழுங்கி, (மீண்டும்) உமிழ்ந்தது - (வெளிநாடுகாண) உமிழ்ந்தது, கடைசிவந்து - நுனிசிவந்தனவாகி, அகன்று - விசாலமாய், கருமணிவிளங்கி - கரியகண்மணி விளங்கப்பெற்று, இடைசில அரிபரந்து - இடையிலே சில ரேகைகள் பரவப்பெற்று, இனியவாய் - போக்யமுள்ளனவாகியும், நெடியவாய் - நீண்டனவாகியும், இன்பம் தழீஇய - ஆநந்தம் நிறைந்த, இருபெருகமலம் - இரண்டுபெரிய தாமரைமலர்கள் [திருக்கண்கள்], துன்பம் தழீஇய - துக்கம் நிறைந்த, தொண்டனேனையும்-அடியனுகிய என்னையும், உவப்புடன்-மகிழ்ச்சியுடனே, ஒருகால்நோக்கி-ஒருதரங்கடாக்ஷித்து, பவம் கடல் கடக்கும் பரிசு-(கடத்தற்கரிய) பிறவியாகிய கடலைக் கடக்கும்படி, பண்ணின-செய்தன. எ-று.

பகீரதன் என்னுஞ் சூரியகுலத்தரசனுல் தேவலோகத்தினின்றும், பூமிக்குக் கொண்டுவரப்பட்டதனுல் கங்கைக்குப் பாகீரதி என்னும் பெயருண்டாயிற்று. பங்கம்-சேறு. பங்கேருகம் - சேற்றில் முளைப்பது. கோகநகம்-கோகநதம் என்பதன் சிதைவு. பொருள் சக்ரவாளங்கள் சுகித்திருத்தற்கிடமானது, அன்றிக் கோகம் என்னும் நதியில் தோன்றினது. ஆங்கு என்றது ஸ்ரீராமாவதாரத்தில் என்றபடி. மண்டோதரி-(இராவணன் மனைவி) சிறுவயிறுடையவள். வனசம்-நீரிலுண்டாவது. வனம்-நீர். இதில் பத்துத்தாமரைகளும் ஒன்பது அதிசயங்களும் வந்தன.

கார்காலம் - வண்டு - கலிநிலைத்துறை.

எச. பண்கொண்ட வேயூது செவ்வா யரங்கேசர் பைம்பொன்னிநாட், டெண்கொண்ட பேராசை தந்தார் மறந்தார்கொ லிசைவண்டுகாள், விண்கொண்ட மலைமீது விண்மாரி பொழிகின்ற விசைபோலவென், கண்கொண்ட முலைமீது கண்மாரி பொழிகின்ற கார்காலமே.

(இ-ள்.) இசை வண்டுகாள்-இராகம்பாடுகின்ற வண்டுகளே, பண்கொண்ட - இசைகளைக்கொண்ட, வேய்-வேய்ங்குழலை, ஊது-(க்ருஷ்ணுவதாரத்தில்) ஊதின, செவ்வாய்-சிவந்த வாயினையுடைய, அரங்கேசர்-ஸ்ரீரங்கநாதரது, பை பொன்னி நாடு-பசுமையாகிய கா

விரிசூழ்ந்த நாட்டில், எண்கொண்டபேராசை - என்கருத்து (முழு வதுங்) கொண்ட மிக்க ஆசையை, தர்தார் - தந்துசென்றவர், விண் கொண்ட - ஆகாசத்தை அளாவிய, மலைமீது - மலையின்மேல், விண் மாரிபொழிகின்ற - மேகம் மழையைப்பெய்கின்ற, விசைபோல- வேகம்போல, என்-எனது, கண்கொண்ட - சூசுகத்தைக்கொண்ட, மலைமீது-மலைபோன்ற [முலைகளின்] மேலே, கண்மாரிபொழிகின்ற- கண்கள்நீர் மழையைச் சொரிதற்கேதுவாகிய, கார்காலம் - மழைக் காலத்தை, மறந்தார்கொல் - மறந்தாரோ. எ-று.

சூசுகம் - முலைக்கண். கண்-பெருமை எனினுமாம். மறவாரா யின் கார்காலம் வருமுன்னமே வந்திருப்பார் என்றவாறாயிற்று. இசைவண்டுகாள் என்பதற்குப் புகழையுடைய வண்டுகளே என் றுரைத்து, இதுவரையில் என்போல்வார் பலர்க்குத் தூதுசென் றிதஞ்செய்து புகழ்படைத்ததுபோல இப்பொழுது என்னிலைமை யையும் என்னை விட்டுப்பிரிந்த தலைவருக்குரைத்து எனக்கு இன்பத் தையுண்டாக்கி இன்னும் புகழ்படைப்பீராமென்று வண்டொடுகூறி யிரங்கினளாக வுரைப்பினுமமையும்.

கைக்கிளை - கட்டளைக்கலித்துறை.

எரு. காரக மோநம் வடதிரு வேங்கடக் கார்வரையோ
நீரக மோநெடு வானக மோதுயி னீடுபணிப்
பேரக மோதென் றிருவரங் கப்பெருங் கோயிலென்னும்
ஊரக மோவிடந் தண்காவி னின்ற வொருவருக்கே.

(இ-ள்.) தண்காவில்நின்ற - குளிர்ச்சிபொருந்திய சோலையில் நின்ற, ஒருவருக்கு - [யான்கண்ட] ஒருவருக்கு, இடம்-வசித்தற்கிட மாவது, கார் அகமோ-மேகமண்டலமோ, நம்-நமது, வட திருவேங் கடம்-வடக்கின்கண் உள்ள திருவேங்கடமென்னும், கார்வரையோ- அஞ்சனமலையோ, நீர் அகமோ - நீரினிடமோ, நெடுவான் அகமோ- பெரிய சுவர்க்கலோகமோ, துயில் நீடு பணி பேர் அகமோ-தூக்க மிக்க பாம்புகளின் பெரிய இடமாகிய நாகலோகமோ, தென்திரு வரங்கப் பெருங்கோயில் என்னும் ஊரகமோ - அழகிய திருவரங் கம் பெரியகோயிலென்கிற ஊரினிடமோ. எ-று.

மின்போலுதலால் இடம் காரகமோ என்றும், வரையரமகளிர் போலுதலால் வடதிருவேங்கடக் கார்வரையோ என்றும், நீரரமக ளிர்போலுதலால் நீரகமோ என்றும், வானரமகளிர்போலுதலால் வானகமோ என்றும், நாகலோகப்பெண்போலுதலால் துயில்நீடு பணிப்பேரகமோ என்றும், மாநுடமாதர்போலுதலால் தென்றிரு

வரங்கப் பெருங்கோயிலென்னு மூரகமோ என்றும் கூறினன். தலைமகளைக் கண்ணுற்ற தலைமகன் இங்ஙனம் தோன்றுகின்ற இம்மாது தெய்வமோ அன்றி மக்களுள்ளாளோ நாககன்னிகையோ என்றையுற்றது ஆதலால் இது ஐயம் என்னுந்துறை. "உலாகின்ற கெண்டையொளியம் பெம்மாவியை யூடுருவக், குலாகின்ற வெஞ்சிலைவாண்முகத்தீர் குனிர்சங்கிடறிப், புலாகின்ற வேலைப் புணரியம்பள்ளியம் மானடியார், நிலாகின்ற வைகுந்தமோ வையமோ நும்நிலையிடமே" என்பது ஆழ்வார் ஸ்ரீசூக்தி.

இதனைத் தலைமகள் கூற்றாக்கி, காரகமுதலியவற்றைத் திருப்பதிகளாக்கினும் பொருந்தும். ஒருவர்-தலைமகள், தலைமகன்.

வஞ்சித்துறை.

எசு. ஒருநயம் பேசுவன்-றிருவரங் கேசர்தாள்
மருவுமின் னாசமாங்-கருமவன் பாசமே.

(இ-ள்.) (உலகத்தீரே) ஒருநயம் பேசுவன் - ஒரு நல்வார்த்தைசொல்வேன், (கேளுங்கள் அது எது என்றால்) திரு அரங்கேசர் தாள் மருவுமின் - ஸ்ரீரங்கநாதரது திருவடிகளைச்சேருங்கள் (என்பதே), (அதனாலுண்டாகும் பயனென்னையெனில்) கருமம் வன்பாசம் நாசம் ஆம் - வினைகளாகிய வலியபந்தங்கள் அழிந்துபோய்விடும் (மோக்ஷமுண்டாகும்.) எ-று.

பிரபஞ்சவாசனையிலழுந்தி விஷயப்ராவண்யமிகுந்திருக்கிற உலகத்தீரே, உங்கள் வினைக்கயிறற்று வீடுபெறுகைக்கு ஒரே உபாயம் சொல்லுகிறேன் கேளுங்கள், (யாதெனின்) ஸ்ரீரங்கநாதரது திருவடியை ஆசிரயிப்பதேயாம், வேறாய் வருந்தித் தவஞ்செய்தல் முதலியன அல்ல என்பது கருத்து.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

எஎ. பாசமா மடியர்பா னேசமா மடிகளும்
பைம்பொனா ராடையுஞ் செம்பொன் மாமேனியும்
ஆசையா மலருளாள் வாசமார் பகலமும்
அஞ்சலென் றருள்செயுங் கஞ்சமுங் கருணையின்
தேசுலா வதனமும் மாசிலா முறுவலும்
சீரிதா யெழுதுகத் தூரிநா மமுமெனக்
கீசனார் திருவரங் கேசனார் திகிரியும்
இலகுவெண் சங்குமே யுலகமெங் கெங்குமே.

(இ-ள்.) உலகம் எங்கு எங்கும் - எல்லாவுலகங்களிலும் எல்லாவிடங்களிலும், எனக்கு ஈசனுர்-எனக்குத்தலைவராகிய, திரு அரங்கேசனுர் - ஸ்ரீரங்கநாதரது, பாசம் ஆம் அடியர்பால் - (தன்பக்கல்) அன்புள்ள அடியார்களிடத்தில், நேசம் ஆம் - கருணையுள்ள, அடிகளும் - திருவடிகளும், பை பொன் ஆர் ஆடையும் - பசும் பொன் மயமான பீதாம்பரமும், செம் பொன் மா மேனியும் - செவ்விதாய் அழகிய பெரிய [கரிய] திருமேனியும், ஆசை ஆம் மலர் உளாள் - (மிக்க) காதலையுடைய தாமரைப்பூவிலுறைகின்றவளாகிய திருமகளுக்கு, வாசம் - தங்குமிடமாகிய, மார்பு அகலமும் - அகன்ற திருமார்பும், அஞ்சல் என்று அருள்செயும் - (தன்னை அடைந்தாரை) அஞ்சற்கவென்று சொல்லிக் காக்கின்ற, கஞ்சமும் - தாமரைமலர் போன்ற அபய ஹஸ்தமும், கருணையின் தேசு உலா - அருளினது ஒளிவிளங்குகின்ற, வதநமும் - திருமுகமண்டலமும், மாசு இலா முறுவலும் - களங்கமில்லாத புன்சிரிப்பும், சீரிதாய் எழுது கத்தூரி நாமமும் - சிறப்பினையுடைத்தாம்படி கஸ்தூரியால் எழுதப்பட்ட திருநாமமும் [திலகமும்], திகிரியும் - சக்ரமும், இலகுவெண்சங்குமே - விளங்குகின்ற வெண்மையாகிய சங்கமுமே தோன்றுகின்றன, எ-று.

இது உருவெளித்தோற்றங் கண்ட தலைமகள்கூற்று.

வஞ்சிவிருத்தம்.

எஅ. எங்கணு நிறைந்துறையு மெம்பிரான்
கொங்கணுகி வண்டுமுரல் கோயில்சூழ்
உங்கள்வளை யெங்கள்வளை யொன்றியே
மங்கையுன் கொங்கைகளை மானுமே.

(இ-ள்.) எங்கணும் - எல்லாவிடத்திலும், நிறைந்து உறையும் - வ்யாபித்து வசிக்கின்ற, எம்பிரான்-நம்பெருமானது, வண்டு-வண்டுகள், கொங்கு அணுகி-தேனுக்காகநெருங்கி, முரல்-ஆரவாரிக்கின்ற, கோயில் - திருவரங்கத்தை, சூழ்-சூழ்ந்த, உங்கள்வளை - உங்களது மலையும், எங்கள்வளை-எங்களதுமலையும், ஒன்றி - நெருங்கி, மங்கை-பெண்ணே, உன கொங்கைகளை - உனது ஸ்தநங்களை, மானும்-ஒத்திருக்கும், எ-று.

எம்பிரான் கோயில் என இயையும். அண்மைவிளியாதலால் மங்கை இயல்பாயிற்று. ஒன்றிமானும் என இயைக்க. உன் கொங்கைகள் நெருங்கியிருத்தல்போல நம்மிருவர்வளைகளும் நெருங்கியிருப்பன என்றவாறுயிற்று. பிரியக்கருதிய தலைமகன், அப்பிரிவுக்குத் தலைமகள் உடம்படுதற்பொருட்டு, அவட்குத் தன்னூரணிமை கூறுவது ஆதலால் இது இடமணித்தென்றல் என்னுந்துறை.

இரங்கல் - கலிநிலைத்துறை.

எசு. மானார் கேசன் மேலார் மாலாய் வாழ்கோயில்
தேனார் காவிற் பூவா ராயுந் தேனேபோல்
நானா போகத் தின்பங் கண்டார் நான்வாடப்
போனார் வாரா தேதோ வோதாய் போதாவே.

(இ-ள்.) போதாவே - பெருநாரையே, மான் ஆர் கேசன்-கங்கையாகிய பெண் பொருந்திய சடைமுடியினையுடைய ருத்ரனும், மேலார்-பிறதேவர்களும், மால் ஆய்-பேரன்புகொண்டு, வாழ்-வந்து தங்குகின்ற, கோயில் - திருவரங்கத்தில், தேன் ஆர் காவில் - தேன் நிறைந்த சோலையில், பூ ஆராயும் - மலர்கள்தோறும் உள்ள தேனை ஆராய்ந்து உண்ணுகின்ற, தேனேபோல்-வண்டுகளைப்போல, நானா போகத்து இன்பம் - பலவகைப்பட்ட கலவியின்பங்களை, கண்டார்-அநுபவித்தவராகிய தலைவர், நான்வாட போனார்-நான் வாட்டமடையப் பிரிந்துபோனார், வாராது-மீண்டும் வாராமைக்கு, ஏதோ-(காரணம்) யாதோ, ஓதாய் - நீ சொல்வாய். எ-று.

மான் ஆர் கேசன்மேலார் - கங்காதேவி பொருந்திய சடையையுடையவனாகிய உருத்திரனுக்கும் மேற்பட்டவராகிய திருமால், மால் ஆய்வாழ்கோயில் - விரும்பியுறைகின்ற திருவரங்கம் பெரிய கோயில் என்றுரைப்பினும் பொருந்தும். அன்றி மேலார் என்பதற்கு மேன்மையுள்ளார் என்றும், மேலுலகத்தவர் என்றும் கூறலும், ஆம். இவ்வாறன்றி, போதாவே, போனார்வாராது ஏதோ, ஓதாய் எனவைத்து, போதாவே போனவர் வராமைக்குக் காரணம் யாதோ அறிகிலேன், நீயாகிலும் வரும்வண்ணம் அவருக்குச் சொல்வாய் என்றுரைப்பினுமாம். முன்னதற்கு இரங்கலாகவும் பின்னதற்கு நாரைவிடுதூதாகவும் கொள்ளலாம். நானாபோகத் தின்பங் கண்டவர் என்னொருபோகத் தின்பந் துய்த்தமைந் திருப்பரோ இரார், ஆதலால் என்வாட்டத்தையும் நோக்கிலராகிப்பிரிந்து சென்றனரொன்றதாயிற்று.

மதங்கு - அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அ0. போதவெனக்கெளிதானார்போதவனுக்கரிதானார்
நாதராங்கர்திருத்தாணுடியரங்கினடக்கின்
ஓதுமதங்கிநடித்தாலுள்ளமதங்கியரக்காம்
வேதமறைந்திடவல்லீர்விணயமறைந்துவிடீரோ.

(இ-ள்.) வேதம் அறைந்திடவல்லீர் - வேதமோத வல்லவர்களே, போத எனக்கு எளிது ஆனார் - அடியனாகிய எனக்கு மிகவும்

எளிமையானவரும், போதவனுக்கு அரிது ஆனார்-தாமரையில்தோன்றிய பிரமனுக்கு அருமையானவருமாகிய, நாதர் அரங்கர் - ரங்கநாதரது, திருதாள் - திருவடிகளை, நாடி-(சேவிக்க) விரும்பி, அரங்கில் - அங்குள்ள நாட்டியசபையில், நடக்கின் - சென்றால், [அங்கு] ஓதும் மதங்கி - சிறப்பித்துச்சொல்லப்படுகின்ற மதங்கியானவள், நடித்தால் - நடனஞ்செய்தால், உள்ளமது - மனமானது, அங்கி அரக்கு ஆம் - நெருப்பிலிட்ட அரக்குப்போலக் உருகிப்போம், (ஆகையால்) விரையமறைந்துவிடீர்-(நீங்கள்) விரைவாய் மறைந்துபோங்கள். எ-று.

மதங்கி-ஆடல்பாடல்களில் வல்ல பதினாறுவயதுப்பெண். இவள் மலைச்சாரலிலுள்ள மதங்கர் என்னும் ஓர்வகைச் சண்டாளசாதியிற் றோன்றினவள் என்பர். "வேதமறைந்திடவல்லீர், மதங்கி நடித்தால் உள்ள மதங்கியரக்காம், விரையமறைத்துவிடீரோ" என்றதற்கு மதங்கி நடனத்தைக்கண்டால் உங்கள் மனமுருகும், உருகவே வேதமோதுதல் முதலிய உங்கள் வைதிககருமங்கள் கெடும், ஆதலால் அவள்வந்து நடிக்கு முன்னே நீங்கள் மறைந்துவிடுங்கள் என்பது கருத்து.

பாண்-தாழிசை.

௮௧. விடாதுபூ மடந்தைமார் விரும்பவாயர் மாதர்தோள்
வியந்துமுன் னயந்தவர்க்கு விற்குமெங்கள் கொங்கைதான்
அடாததன்று பாணவின்ன மங்ஙனன்றி யிங்ஙனம்
அரங்கரன்பு கூரவின்ப மாகவல்ல வல்லவே
எடாதிருக்கின் வாய்திறக்கு மெங்களைய னுச்சிதோய்
எண்ணெய்பட்ட மெய்யிலிட்ட முத்துமுத்த ரீயமும்
படாமுகங் திறந்தசைந்து மழலைவாயின் மணமறாப்
பசுநரம்பு புடைபரந்து பால்சுரந்த முலையுமே.

(இ-ள்.) பாண - பாணனே, பூமடந்தைமார்-திருமகளும் நிலமகளும், விடாது - சிறிதும் இடைவிடாமல், விரும்ப - விரும்பிக்கூடியிருக்கவும், (அவர்களைவிட்டு) ஆயர் மாதர்தோள் - இடைப்பெண்களது தோள்களை, முன்-முன்னே (க்ருஷ்ணாவதாரத்தில்), வியந்து-அதிசயித்து, நயந்தவர்க்கு - விரும்பிக்கூடின தலைவர்க்கு, விற்கும் எங்கள் கொங்கை-விற்கின்ற எங்களது ஸ்தநம், அடாதது அன்று-தகாததன்று, இன்னம் - இன்னமும், அங்ஙன் அன்றி - அவ்வாறல்லாமல், இங்ஙனம் - இவ்வாறு, எடாது இருக்கில் - எடுத்துப்பால் கொடாதிருந்தால், வாய் திறக்கும் - வாய் திறந்தழுகின்ற, எங்கள் ஐயன் - எங்கள் குழந்தையினது, உச்சிதோய் - உச்சியிற் பொருந்

திய, எண்ணெய் பட்ட - எண்ணெய் படப்பெற்ற, மெய்யில் - (எங்கள்) உடம்பில், இட்ட - இடப்பட்ட, முத்தும் - முத்துமாலையும், உத்தரீயமும் - மேலாடையும், படாம் முகம் திறந்து அசைந்து-(அக்குழந்தையால்) மேலாடைசிறிது வாங்கப்பட்டு அசைந்து, மழலை வாயின் மணம் அறு-மழலைச்சொல்லையுடைய (அக்குழந்தை) வாயினது வாசனை நீங்கப்பெறுமல், பசுநரம்பு புடை பரந்து - பச்சைநரம்புகள் புறத்தேபரவப்பெற்று, பால் சுரந்த - பாலைச்சுரக்கின்ற, முலையும் - ஸ்தநங்களும், அரங்கர் - திருவரங்கநாதர், அன்பு கூர - அன்பு மிகும்படி, இன்பமாக வல்ல அல்லவே - (அவர்க்கு) இன்பமாகத் தக்கனவேயல்லவோ, எ-று.

பூ - மலர், பூமி. பாணன் - பாடுவோன். இது பாடுநன் என்பதன் மரூஉ. உச்சி-நடுத்தலை. படாம்-படம் என்னும் வடமொழியின் விகாரம். அன்றிப்படத்தாற் செய்த கச்சு என்றலுமொன்று. படாமுகம் - சாயாத ஸ்தநத்தின் உபரிபாகம் எனினுமாம்: இது பாணனை நோக்கித்தலைவி கூறியது. எங்கைகொங்கை எனவும்பாடம்.

இரங்கல்-கட்டளைக்கலித்துறை.

அஉ. முலைகொண்ட பான்மணம் வாய்மாறிற் றில்லையம் மொய்குழலோ, அலைகொண்ட தின்னமென் கையணை யேயலை யாழிவற்றச், சிலைகொண்ட செங்கை யரங்கேசர் தாள்கொண்ட தேசமெல்லாம், விலைகொண்ட வாள்விழி யாள்சென்ற வாறெங்ஙன் வெஞ்சுரமே.

(இ-ள்.) (இச்சிறுபெண்ணுக்கு) இன்னம் - இன்னமும், முலைகொண்டபால் மணம் - தாய் முலையுண்ட பாலினது வாசனை, வாய் மாறிற்று இல்லை - வாயினின்றும் நீங்கிற்றில்லை, அம்மொய்குழலோ - அழகிய நெருங்கிய கூந்தலோ, அலைகொண்டது-அலைந்துகொண்டேயிருக்கின்றது, [மயிர்முடி கூடிற்றில்லை.] என்கையே அணை - என் கையேபடுக்கு மிடமாயிருக்கின்றது, (இங்ஙனமிருக்கவும்) அலை ஆழிவற்ற-அலைகளையுடைய கடல் வற்றிப்போம்படி, சிலைகொண்ட - (ஆக்நேயாஸ்த்ரத்தை விடுத்தற்குக்) கோதண்டத்தை யெடுத்த, செங்கை - செவந்த திருக்கையையுடைய, அரங்கேசர் - ஸ்ரீரங்கநாதரது, தாள் - திருவடியால், கொண்ட - அளந்து கொள்ளப்பட்ட, தேசம் எல்லாம் - உலகமுழுவதையும், விலைகொண்ட - தனக்கு விலையாக மதிக்கப்பெற்ற, வாள் விழியாள் - வாள்போன்ற [கூரிய] கண்களையுடைய இவள், வெம் சுரம் - கொடியபாலை நிலத்தில், சென்ற ஆறு - (தலைவன் பின்னே நடந்து) போனவிதம், எங்ஙன் - எப்படி, எ-று.

"மூலையோ முழுமுற்றும் போந்திலமொய்பூங்குழல் குறிய, கலையோ வரையில்லை நாவோகுழறுங்கடன் மண்ணெல்லாம், விலையோவெனமிளிருங்கண்ணிவள் பரமே பெருமான், மலையோ திருவேங்கடமென்று கற்கின்ற வாசகமே" என்பது ஆழ்வார் ஸ்ரீஸூக்தி. "வாயிற் பல்லு மெழுந்தில மயிரும் முடி கூடிற்றில, சாய் விலாத குறுந்தலைச் சில பிள்ளைகளோ டிணங்கித், தீயிணக்கிணங்காடி வந்திவடன்னன்ன செம்மை சொல்லி, மாயன் மாமணிவண்ணன் மேலிவண் மாலுறுகின்றாளே" என்பது பெரியாழ்வார் ஸ்ரீஸூக்தி. அரங்கேசர் தாளிலடங்காவுலக மில்லை யாதலால். "அரங்கேசர் தாள் கொண்ட தேசமெல்லாம்" என்றார். இது சுரம்போக்குத் துறையினொருவகை. அதாவது களவியலில் தலைமகன்பின் சென்ற தலைவியின் இளமைப்பருவத்தையும் சுரத்தின் வெம்மையையும் நற்றாய் கூறியிரங்கல்.

இரங்கல் - எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

௮௫. வெஞ்சமங் கருதுங் கஞ்சனு மெருதும்
வேழமும் பரியும் வீழமுன் பொருதார்
தஞ்சமென் றவருக் கஞ்சலென் றருளுந்
தாயிலன் புடையார் கோயிலின் புடையார்
மஞ்சுவண் டினமுந் துஞ்சுதண் டலைவாய்
வல்லியொன் றதிலே யெல்லியுந் திகழும்
கஞ்சமுண் டதிலே நஞ்சமுண் டதிலே
கள்ளமுண் டதுவென் னுள்ளமுண் டதுவே.

(இ-ள்.) வெம்சமம் கருதும்-கொடிய போரை விரும்புகின்ற, கஞ்சனும் - (தன்மாமனாகிய) கம்ஸனும், எருதும் - (அவனாற் கொல்லும்படி (ஏவப்பட்ட) எருதினுருவங்கொண்டுவந்த அரிஷ்டாசுரனும், வேழமும் - (குவலயாபீடமென்னும்) பட்டத்துயானையும், பரியும் - குதிரைவடிவாய்வந்த கேசியென்னும் அசுரனும், வீழ - இறந்துவிழும்படி, முன்-முன்னே (க்ருஷ்ணாவதாரத்திற் குழந்தைப் பருவத்தில்), பொருதார்-போர்செய்தவரும், தஞ்சம் என்றவருக்கு- அடைக்கலமென்றுவந்து சரணமடைந்தவர்களுக்கு, அஞ்சல் என்று அருளும் - அஞ்சற்கவென்றுசொல்லி [அபயப்ரதானஞ்செய்து] காக்கின்ற, தாயில் அன்பு உடையார் - (உயிர்களிடத்துத்) தாயினும் அன்பினையுடையவருமாகிய நம்பெருமாளது, கோயிலின்புடை- பெரியகோயிலின்புறத்தில், ஆர்-பொருந்திய, மஞ்சுவண்டு இனமும் துஞ்சுதண்டலைவாய் - மேகக்கூட்டங்களும் வண்டுக்கூட்டங்களுந் தங்குகின்ற சோலையினிடத்தில், வல்லி ஒன்று (உண்டு)-கொம்பொ

ன்று உண்டு, அதிலே - அதனிடத்திலே, எல்லியும் திகழும்கஞ்சம் உண்டு-இராக்காலத்துங் குவியாமல் மலர்ந்துவிளங்குகின்ற தாமரை மலர் உண்டு, அதிலே - அதன்கண், நஞ்சம் உண்டு - விஷம் உண்டு, அதிலே-அதன் கண், கள்ளம் உண்டு - கள்ளத்தனம் உண்டு, அது - அக்கள்ளம், என் உள்ளம்-என்மனத்தை, உண்டது - கவர்ந்துகொண்டது. எ-று.

அரிஷ்டாசுரன்செய்தி:—ஒருகால், ஸ்ரீக்ருஷ்ணபகவானனவர், அரிஷ்டன் என்னும் அசுரன், எருதின் வேடம்பூண்டு பசுக்களையெல்லாம் முட்டி இடைச்சேரியை அச்சுறுத்திக்கொண்டு, தம் திருவயிற்றின்மேல் கண்வைத்துக் கொம்புகளைநீட்டிப் பாயவர, அவனைக் கொம்புகளைப்பற்றி அசையவொட்டாமற்செய்து தம் திருவடியினால் அவன்வயிற்றில் ஒரு இடியிடித்து அவன் கழுத்தைப் பிடித்துக் கசக்கி, அவன் கொம்புகளில் ஒன்றைப்பிடுங்கி, அதைக் கொண்டே அவனை அடித்துக்கொன்று விழுத்தினார் என்பது. கேசியின் செய்தி:—ஒருகால் கேசியென்பவன் குதிரையுருவம்கொண்டு ஆயர்கள் அஞ்சி நடுங்கும்படி கனைத்துத் துரத்திக்கொண்டு தன்மேல் பாயவர, கண்ணன் தம் திருக்கையை நன்றாகப்பெருக்கி நீட்டி அவன் வாயிற்கொடுத்துத் தாக்கிப்பற்களை உதிர்த்து உதட்டைப் பிளந்து அவனுடம்பையும் இருபிளவாகவகிர்ந்து விழுத்தினார் என்பது. இது உற்றதுரைத்தல் என்னுந்துறை. அதாவது, இயற்கைப் புணர்ச்சி புணர்ந்ததலைமகளைப் பாங்கன் எதிர்ப்பட்டு நோக்கி நீ இவ்வாறு மெலிகைக்குக் காரணமென்னெனத் தலைவன் தன் மெலிவுக்குக் காரண மின்னதென்றுரைத்தல். வல்லி யொன்றென்றது தலைமகளை. கஞ்சம் என்றது முகத்தை. நஞ்சம் என்றது கண்களை. கள்ளம் என்றது நோய் நோக்கை. (அதாவது வஞ்சநோக்கத்தை.)

முதுவேனிற்காலம்.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அசு. உண்டமிழ் வாசமுடன் றண்டலை மாருதம்வந்
துலவிய சாளரமுங் குலவிய வாணிலவும்
விண்டலர் பூவணையும் மென்பனி நீர்புழுகும்
வேனிலி லும்முதிரா வேனிலு மாகியவால்
அண்டர்தொ ழும்பெருமா ளம்புய மின்பெருமாள்
அருமறை யின்பெருமா ளழகிய நம்பெருமாள்
புண்டரி கங்கமழுந் தண்டுறை யோதிமமே
புன்னைகள் சிந்தலரோ யின்னமும் வந்திலரோ.

(இ-ள்.) புண்டரிகம் கமழும்-தாமரைமலர் மணக்கின்ற, தண் துறை - குளிர்ந்த துறைகளினிடத்தேயுள்ள, ஓதிமமே-அன்னமே, புன்னைகள்சிந்து அலரோ-புன்னைமரங்கள் சொரிகின்ற பூவே, உண்டு உமிழ்வாசமுடன் - உட்கொண்டு வெளிவீசுகின்ற வாசனையோடு, தண்டலைமாருதம் - சோலையின்கண் உள்ள இளங்காற்று, வந்து உலவிய - வந்து வீசுகின்ற, சாளரமும் - பலகணிகளும், குலவிய வாள் நிலவும்-விளங்குகின்ற நிலாவினொளியும், விண்டு அலர் பூ அணையும்-விரிந்து மலர்கின்ற புஷ்பசயநமும், மெல்பனி நீர்புழுகும்-குளிர்ந்த பனிநீரும் புனுகும், வேனிலிலும் - இருவகை வேனிற்காலத்துள்ளும், முதிராவேனிலும் - இளவேனிற் காலமும், ஆகிய - ஆயின (வந்தன) இன்னமும் - இங்ஙனமாகியபின்னும், அண்டர் தொழும் பெருமாள்-தேவர்வணங்குகின்ற ஸ்வாமியும், அம்புயம் மின்பெருமாள் - தாமரைமலரிலுள்ள மின்னற்கொடிபோன்ற திருமகளுக்குத் தலைவரும், அரு மறை இன் பெருமாள் - அறிதற்கரிய வேதங்களாற் புகழப்படுகின்ற இனிய பெருமையையுடையவருமாகிய, அழகிய நம்பெருமாள்-நமது அழகிய மணவாளப்பெருமாள், வந்து இலரோ - வந்தாரில்லையே. எ-று.

பனிநீர் ஓர்வகைப் பரிமளநீர். முதிராவேனிலும் ஆகிய என்றது இளவேனிலும்போய் முதுவேனிலும் வந்ததென்றபடி. இது கார்ப்பருவங்கண்டுவருந்தல். தலைவிகூற்று.

கூதிர்காலம் - வேற்றொலிவெண்டுறை.

அரு. இன்னிசை வேயினர் மன்னிய கோயிலை யெய்தார்போல்
பொன்னினை வாலவர் போனவி டத்தினிற் போகாதோ
மின்னிய முகிற்றுளி யென்றென் மேலெலாம்
வன்னியின் பொறிகளை வழங்கும் வாடையே.

(இ-ள்.) மின்னிய முகில் துளி என்று - மின்னுகின்ற மேகங்களின் மழை நீர்த்துளியென்று பெயர்வைத்து, என்மேல் எலாம் - என்னுடம்பு முழுவதும், வன்னியின் பொறிகளை - நெருப்புப்பொறிகளை, வழங்கும்-வீசுகின்ற, வாடை-வாடைக்காற்றானது, இன் இசை வேயினர் - இனிய இசையோடுகூடிய வேய்ங்குழலையுடைய நம்பெருமாள், மன்னிய - எழுந்தருளியிருக்கின்ற, கோயிலை - திருவரங்கத்தை, எய்தார் போல் - அடையாதவர்போல, பொன் நினைவால்-பொருள்தேடும் நினைவினால், அவர் - அந்தத்தலைவர், போன-சென்ற, இடத்தினில் - இடத்தில், போகாதோ - போகமாட்டாதோ, எ-று.

கோயிலை அடைந்தவர்மீண்டும் விரைவில் வராதிரார் ஆதலால் எய்தார்போல் என்றும், வாடை அவரிடத்திற் செல்லுமாயின் அவ

ரும் என்னைப்போலப் பிரிவாற்றாது விரைந்து வருவாராதலால் அவர் போனவிடத்தினிற் போகாதோ என்றும், மழைத்துளிகள் பிரிந்திருக்குந் தன்மேல் நெருப்புப் பொறிகள்போல் வந்து தெறித்தலால் முகிற்றுளியென்று வன்னியின் பொறிகளை வழங்கும் என்றும் கூறினாள். பொன்னினைவாற்போதலாவது பொருள் வயிற் பிரிதல். இது கூதிர்ப்பருவங்கண்டு தலைமகள் வருந்திக்கூறியது.

கார்காலம் - அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அசுஎ. வாடையாயிருபனியுமாய்வேனிலாய்வந்ததுகாரென்றே
பேடைமாமயிற்சாயலாயன்பர்மேற்பிழைகருதிடல்செம்பொன்
ஆடைநாயகன்றிருமகணாயகனரங்கநாயகனேறும்
ஓடைமாவிதுமதமிதுபிளிறியவொலியிதுமழையன்றே.

(இ-ள்.) பேடைமாம்யில் சாயலாய்-அழகிய மயிற்பேடுபோன்ற சாயலையுடையவளே, வாடை ஆய்-கூதிர்க்காலங்கழிந்து, இருபனியும் ஆய் - (முன்பனி பின்பனியென்னும்) இரண்டு பனிக்காலமுங்கழிந்து, வேனில் ஆய் - (இளவேனில் முதுவேனில் என்னும்) இரண்டு வேனிற்காலங்களுங்கழிந்து, கார்வந்தது - மழைக்காலமும் வந்தது, என்றே-என்று எண்ணியே, அன்பர்மேல்-அன்பினையுடைய தலைவர்மேல், பிழைகருதிடல் - குற்றம் நினைக்காதே, செம்பொன் ஆடைநாயகன் - பீதாம்பரத்தையுடைய தலைவனும், திருமகள் நாயகன்-பெரியபிராட்டிக்குக் கொழுநனுமாகிய, அரங்கநாயகன் ஏறும்-ஸ்ரீரங்கநாதன் ஏறி நடத்துகின்ற, ஓடைமா - முகபடாத்தையுடைய யானை, இது - இவ்விடத்தில் துளிப்பது, மதம் - (அவ்யானையின்) மதஜலம், இது - இவ்விடத்துக்கேட்பது, பிளிறிய ஒலி-(அவ்யானை) வீரிடுகின்ற ஓசை, (ஆகையால்) மழைஅன்று - (இது) கார்காலம் அன்று. எ-று.

இரு என்பதை வேனிலோடுங் கூட்டுக. மா என்னும் பலபொருளொருசொல் ஓடை என்னுங் குறிப்பால் யானைக்காயிற்று. ஓடையும் யானையும் மின்னலுக்கும் மேகத்துக்கும் உவமை. இது காலமயக்கு என்னுந்துறை. அதாவது மேகத்தை யானையென்றும், மழையை மதமென்றும், மேகமுழக்கத்தை யானைமுழக்கமென்றும் தோழி கூறித் தலைமகளையாற்றுவித்தல்.

தழை கட்டளைக் கலித்துறை.

அஎ. மழைபோன்மரகதம்போலெம்பிரான்வளர்கோயிலின்னீர்
பிழைபோ மிவர்க்கிதை யாருரைப் பாரிவர் பின்வந்தெய்த
தழைபோ யுறைத்த வருத்தம் பொறுமைகொல் சங்கரன்பால்
உழைபோ யொதுங்க முயல்போய் மதிபுக் கொளித்ததுவே.

(இ-ள்.) மழைபோல் - நீலமேகம் போலவும், மரகதம்போல்- நீலமணிபோலவும், எம்பிரான் - நம்பெருமாள், வளர் - திருக்கண் வளர்ந்தருளுகின்ற, கோயில்-திருவரங்கத்தை, அன்னீர் - ஒத்திருப் பவர்களே, பிழைபோம் இவர்க்கு - தவறுசெய்துபோன இத்தலை வருக்கு, இதை - இச்செய்தியை, யார் உரைப்பார்-யாவர் சொல்லுப வர், (எவருமில்லை.) (அச்செய்தி என்னையெனின்) இவர் - இத் தலைவர், பின்வந்து எய்த-பின்தொடர்ந்து வந்தெய்த, தழை - மாந் தழையானது, போய் உறைத்த - சென்றுபட்ட, வருத்தம் - வருத் தத்தை, பொருமைகொல் - பொறுக்க மாட்டாமையினாலோ, சங் கரன்பால் - சிவனிடத்தில், உழை - மானானது, போய் ஒதுங்க - சென்று ஒளிக்க, முயல் - முயலானது, போய்-சென்று, மதிபுக்கு- சந்த்ரனிடத்திற் சேர்ந்து, ஒளித்தது - மறைந்தது, எ-று.

பிழைபோம் என்பதற்குக் குற்றம் நீங்கிய என்றும், தவறு நெறி யிற் செல்லுகின்ற என்றும் பொருள் கூறலாம். சந்திரனிடத்துள்ள களங்கத்தை முயற்கறையெனக் கூறுவதோர் மரபு. இது இறை வனை நகுதல் என்னுந்துறை. அதாவது - தழைகொண்டு சென்ற தலைமகனைத் தலைமகள் அசதியாடித்தோழிக்குக் கூறியது.

கார்காலம் - எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அஅ. ஒளிக்குமிரு சுடர்க்கவளம் விழுங்கும் பேழ்வாயுருமுழக் கத் திந்திரவி லோடை நெற்றித், துளிக்குமழை மதக்கொண் மூக் களிற்றை மின்னற் றோட்டிமா ருதப்பாகர் துரக்குங் கா லம், அளிக்குலமுங் களிக்குமயிற் குலமும்பாடி யாடுபொழிற் றிருவரங்க ரணையாக் காலம், விளிக்குமலைக் கருங்கடலு மொ றுக்குங் காலம் வினையேற்கு விழிகடியின் மேவாக்காலம்.

(இ-ள்.) ஒளிக்கும் - விளங்குகின்ற, இருசுடர்-சூர்ய சந்த்ரர் களாகிய, கவளம் - கவளங்களை, விழுங்கும் - விழுங்குகின்ற, பேழ் வாய் - பிளவுபட்ட வாயையும், உருமு முழக்கத்து - இடியாகிய முழக்கத்தையும், இந்திரவில் ஓடை - இந்த்ரதநுஸ்ஸாகிய முக படாத்தையுடைய, நெற்றி - நெற்றியையும், துளிக்கும் மழைமதம்- பெய்கின்ற மழை நீராகிய மதநீரையுமுடைய, கொண்மூகளிற்றை- மேகமாகிய யானையை, மின்னல் தோட்டி - மின்னலாகிய அங்கு சத்தால், மாருதம் பாகர் - காற்றாகிய பாகர்கள், துரக்கும் காலம்- செலுத்துகின்ற காலம், அளிகுலமும் - வண்டுக்கூட்டமும், களிக் கும் மயில் குலமும் - களிக்கின்ற மயிற்கூட்டங்களும், பாடி ஆடு- முறையே பாடியாடுகின்ற, பொழில் - சோலை சூழ்ந்த, திரு அரங் கர்-திருவரங்கத்துக்குத் தலைவராகிய நம்பெருமான், அணையாகாலம்-

வந்து சேராதகாலம், (அதனால்) விளிக்கும் அலைகருகடலும் - ஆரவாரஞ்செய்கின்ற அலைகளையுடைய கரியகடலும், ஒறுக்கும் காலம்-வருத்துகின்ற காலம், வினையேற்கு - தீவினையையுடைய எனக்கு, விழிகள் - கண்கள், துயில் மேவாகாலம் - கண்ணுறக்கம் பொருந்தாதகாலம். எ-று.

கவளம் - சோற்றுத்திரளை. மேகம் சூரியசந்திரர்களை மறைத்தலால், ஒளிக்கு மிருசுடர்க்கவளம் விழுங்கும் பேழ்வாய் என்றும், காற்றனது மேகத்தைச்செலுத்தலால் மாருதப்பாகர் என்றும் கூறினாள். "முத்துங் களபமுந் தண்பனிநீரு முயங்குமலர்த்தொத்துங் குளிரியுந் தூமலர்ப்பாயலுஞ் சூழ்ந்துபுறம், கத்துங்கடலுங் கதலியு மாலியுங் கங்குலுமிப், பத்தும்பெரும்பகையாய்விட்டவாமொரு பைந்தொடிக்கே" என்கிறபடியே, கடலோசைக்கு வருந்துதலும் கண்படாமையும் கொழுநனைப் பிரிந்தமாதர்க்கியல்பென்க. இது, தலைவி கார்காலங்கண்டிரங்கிக் கூறியது.

இளவேனிற்காலம் - கலிநிலைத்துறை.

அசு. மேவலர்வாழ் தென்னிலங்கை மலங்கவொரு காலிருகால் விற்குனித்தெய், ஏவலர்வாழ் திருவரங்கத் தெமையிருத்திப்போனவர்நாட் டில்லைபோலும், கோவலர்வாய்க் குழலோசைக் காநிரைகள் செவியேற்குங் குறும்புன்மாலைப், பூவலரின் மணம் பரப்பி யிளவேனில் வரவந்த பொதியத்தென்றல்.

(இ-ள்.) இளவேனில்வர - இளவேனிற்காலம் வர, (அப்பொழுது) கோவலர்வாய்குழல் ஓசைக்கு - இடையர்கள் வாயினலூதுகின்ற வேய்ங்குழலினது ஒலிக்கு, ஆநிரைகள் - பசுக்கூட்டங்கள், செவி ஏற்கும் - காதுகொடுக்கின்ற [கேட்கின்ற], குறும்புன்மாலை-சிறிய புல்லிய மாலைப்பொழுதில், பூ அலரின்மணம்பரப்பி - அழகாகிய மலர்களின் வாசனையை வீசிக்கொண்டு, வந்த பொதியம் தென்றல் - பொதியமலையினின்றும் வருகின்ற தென்றற்காற்றனது, மேவலர்வாழ்-பகைவர்கள் [அரக்கர்கள்] வாழ்கின்ற, தென் இலங்கை-தெற்கிலுள்ள இலங்கையர், மலங்க-கலங்கும்படி, ஒருகால்-ஒருதரம், வில் இருகால்-கோதண்டத்திள் இரண்டு கோடிகளையும், குனித்து-வளைத்து, எய் - எய்த, ஏவலர் - அம்பில்வல்ல நம்பெருமாள், வாழ்-வாழ்கின்ற, திரு அரங்கத்து - ஸ்ரீரங்கத்தில், எமை - எம்மை, இருத்தி-(தனியே) இருக்கச்செய்து, போனவர்-(பிரிந்து) சென்ற தலைவரது, நாடு - நாட்டில், இல்லைபோலும்—,. எ-று.

இருக்குமாயின் உடனே மீண்டிருப்பர் என்றபடி. இது இளவேனிற்காலங்கண்ட தலைவியிரங்கிக்கூறியது.

இரங்கல் - கட்டளைக்கலித்துறை.

௯0. தென்றலைக் குங்குமச் சேற்றைப் பொறாள்சிறியாள் பெ
ரிய, துன்றலைக் குந்துடிக் கும்மென்செய் வாடிய ராலழைத்த,
வன்றலைக் குஞ்சரங்காத்தா யிலங்கை மலங்கவளைத், தன்றலைக்
குஞ்சரத் தாயரங் காவண்ட ராதிபனே.

(இ-ள்.) துயரால்-(முதலைபற்றின) வருத்தத்தால், அழைத்த-ஆதிமூலமேயென்று) கூப்பிட்ட, வல் தலைகுஞ்சரம் - வலியதலையை யுடைய கஜேந்த்ராழ்வானை, காத்தாய் - காத்தவனே, இலங்கை-இலங்கையர், மலங்க - கலங்கும்படி, வளைத்து - (வில்லை) வளைத்து, அன்று-அந்நாளில் [ஸ்ரீராமாவதாரத்தில்], அலைக்கும்-வருத்தின, சரத் தாய் - அம்புகளையுடையவனே, அரங்கா - திருவரங்கனே, அண்டர் ஆதிபனே - தேவர்தலைவனே, சிறியாள்-சிறிய என்மகள், தென்றலை-தென்றற்காற்றையும், குங்குமம்சேற்றை - குங்குமப்பூவோடுகலந்த சந்தநக்குழம்பையும், பொறாள் - பொறுக்கமாட்டாள், பெரியதுன்று அலைக்கும்-நீண்டுயர்ந்த நெருங்கிய அலைகளுக்கும், துடிக்கும்-வருந்துவாள், என்செய்வாள் - (வருந்துதலன்றி வேறு) என்ன பரிஹாரஞ் செய்யமாட்டுவாள், எ-று.

இது நற்றாய் அன்றித் தோழியிரங்கிக்கூறியது.

கட்டளைக் கலிப்பா.

௯௧. அண்டர் போற்றுந் திருவரங் கேசனு
ரணிய ரங்கத் திருமுற்ற மெய்தினல்
பண்டு போன வளையாழி வாங்குவேன்
பாலியாது பராமுகம் பண்ணினல்
தண்டும் வாளுஞ் சிலையு மிருக்கவே
சங்கு மாழியுந் தாருமென் பேனவை
தொண்ட ருக்கொற்றி வைத்தோமென் றோதினற்
றுளவ மாலையைத் தொட்டுப் பறிப்பனே.

(இ-ள்.) அண்டர்போற்றும் - விதிசிவேந்த்ராதி தேவர்களும் வணங்கித் துதிக்கின்ற, திரு அரங்கேசனுர்-ஸ்ரீரங்கநாதரது, அணி அரங்கம் திருமுற்றம் - அழகிய திருவரங்கமாகிய திருமுன்றிலை, எய்தினல் - (யான்) அடைந்தால், பண்டுபோன - முன்னே (அவர் கவர்ந்துகொண்டு) போன, வளை ஆழி-சங்குவளையையும் மோதிரத்தையும், வாங்குவேன்-(மீளவும்) பெற்றுக்கொள்வேன், (அவர்) பாலியாது - (அவர் அவற்றைக்) கொடுத்தருளாமல், பராமுகம் பண்ணி

ஞால் - அலக்ஷ்யஞ்செய்தால், (அவ்வளையாழிகளுக்கு ஈடாக) தண்டும் வாளும் சிலையும் இருக்க - (உமது பஞ்சாயுதங்களுக்குள்) கதையும் வாளும் வில்லுமிருக்க, சங்கும் ஆழியும் - சங்கையுஞ் சக்ரத்தையும், தாரும் என்பேன் - கொடுமென்றுசொல்வேன், அவை - அவற்றை, தொண்டருக்கு - அடியார்களுக்கு, ஒற்றிவைத்தோம் - ஈடாக வைத்துவிட்டோம் [திருவிலச்சினையிட்டு வைத்துவிட்டோம்], என்று ஓதினல் - என்றுசொன்னல், துளவம் மாலையை - திருத்துழாய் மாலையை, தொட்டுப்பறிப்பேன்-திருமேனி தீண்டிப்பிடுங்கிக்கொள்வேன். எ-று.

பராமுகம்பண்ணுதல் - முகந்திரும்பிப்பாராமல் அவமதித்திருத்தல்.

கலிநிலைத்துறை.

கூஉ. தொட்டுண்ட தயிர்வெண்ணெய்க் கன்றாய்ச்சி யுரலோடு சூழ்ந்துகட்டக், கட்டுண்டு கழலவிர கறியாம லிருந்தழுத கள்வன்யாரோ, கட்டுண்டா னரங்கனெனக் கட்டுரைப்பா ராறுலுங் கங்கைசூடி, மட்டுண்ட கொன்றையான் மலர்மேலா னறிவரிய வடிவனன்றே.

(இ-ள்.) தொட்டு உண்ட - எடுத்துப்புசித்த, தயிர்வெண்ணெய்க்கு - தயிர்வெண்ணெய்களின் பொருட்டு, அன்று - அந்நாளில் [க்ருஷ்ணாவதாரத்தில்], ஆய்ச்சி-இடைச்சி [யசோதை], உரலோடு சூழ்ந்துகட்ட - உரலோடு பிடித்துச்சுற்றிக் (கடைகயிற்றால்) கட்டிவிட, கட்டுண்டு - கட்டப்பட்டு, கழல - விலகிப்போக, விரகு-உபாயத்தை, அறியாமல்-தெரியாமல், இருந்து அழுத-(அங்கே) அழுதுகொண்டிருந்த, கள்வன் - கள்ளத்தனமுடையவன், யார்-யார், [நம்பெருமாளன்றோ] அரங்கன்-திருவரங்கன், கட்டுண்டான் என-கட்டுப்பட்டானென்று, கட்டுரைப்பார் ஆனாலும் - உறுதிப்பட (இழித்துச்) சொல்லுவாரானாலும், (அவன்) கங்கைசூடி - கங்காநதியைச் சடையில் தரித்து, (அதன்மீது) மட்டு உண்ட கொன்றையான்-வாசனையைக்கொண்ட [தேன் நிறைந்த] கொன்றைப் பூமாலையையுமுடைய ருத்ரனும், மலர்மேலான் - தாமரைப்பூவில் தங்குகின்ற பிரமனும், அறிவு அரிய - அறிதலருமையாகிய, வடிவன் அன்றே - வடிவத்தையுடையவனன்றோ. எ-று.

தொட்டுண்ட என்பது முதல் யாரோ என்னுமளவும் ஒருமாதின் கூற்று. கட்டுண்டான் என்பது முதல் வடிவனன்றே என்னுமளவும் ஒருமாதின்கூற்று. இவ்விருவரும் தம்மில் தோழமையாயிருப்போர். இவருள் ஒருத்தி எம்பெருமானது சௌலப்யத்தை யிழித்துக்கூற, மற்றொருத்தி அவனது மேன்மையை உயர்த்திக்கூறியதாக இப்

பாசுரஞ் செய்யப்பட்டது. "வண்ணக்கருங்குழலாய்ச்சியால் மொத்துண்டு, கண்ணிக்குறுங்கயிற்றாற் கட்டுண்டான் காணேடீ, சுண்ணிக்குறுங்கயிற்றாற் கட்டுண்டானாகிலும், எண்ணற்கரிய னிமையோர்க்குஞ் சாழலே" என்பது திருமங்கைமன்னன் ஸ்ரீஸூக்தி.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

கூ௩. வடியாத பவக்கடலும் வடிந்துமூல மாயைகடந்தப்பாற் போய் வைகுந்தஞ்சேர்ந், தடியார்கள் குழாங்கூடி யுனதடிக்கீழடிமைசெயு மக்கால மெக்காலந்தான், கொடியாடு மணிமாடவயோத்திமூதூர் குடிதுறந்து திருவரங்கங் கோயில்கொண்ட, நெடியோனே யடியேனான் முயற்சியின்றி நின்னருளே பார்த்திருப்ப னீசனேனே.

(இ-ள்.) கொடி ஆடும்-த்வஜங்கள் அசைகின்ற, மணிமாடம்-ரத்நங்களிழைத்த மாளிகைகளையுடைய, அயோத்தி மூது ஊர்-அயோத்தியை என்கிற பழைய நகரத்தில், குடி-தங்குதலை, துறந்து-விட்டு, திரு அரங்கம்-ஸ்ரீரங்கத்தை, கோயில்கொண்ட - இருப்பிடமாகக்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற, நெடியோனே - பெரியோனே, வடியாத பவம்கடலும் - வற்றிப்போகாத பிறவிப்பெருங்கடலும், வடிந்து - வற்றப்பெற்று, மூலம் மாயை கடந்து-மூலப்ரக்ருதியாகிய மாயையைத்தாண்டி, அப்பால்போய் - அதற்கப்புறஞ்சென்று, வைகுந்தஞ்சேர்ந்து - ஸ்ரீவைகுண்டமடைந்து, அடியார்கள் குழாம்கூடி - தொண்டர்களது கூட்டத்தோடுசேர்ந்து, உனது அடிகீழ் - உன்னுடைய திருவடியின்கீழ், அடிமைசெயும் - கைங்கர்யஞ்செய்திருக்கின்ற, அ காலம் - அந்தக்காலம், எ காலம்தான் - எந்தக்காலமோ, அடியேன் - (உனது) அடியவனும், நீசனேன் - கடைப்பட்டவனுமாகிய, நான் - யான், முயற்சி இன்றி - ப்ரயத்நஞ்சிறிதுமில்லாமல், நின் அருளே - உனது திருவருளையே, பார்த்து இருப்பன் - எதிர்பார்த்துக்கொண்டிருப்பேன். எ-று.

சூர்யகுலத்தரசனாகிய இக்ஷ்வாகுசக்ரவர்த்தி பிரமதேவனைநோக்கித் தவஞ்செய்து, அவனால் விமாநத்துடன் ப்ரஸாதிக்கப்பெற்ற எம்பெருமானைக் கொணர்ந்து திருவயோத்யையில் ப்ரதிஷ்டித்து அவனும் அவன் சந்ததியாரும் நெடுங்காலமாகத் திருவாராதநஞ்செய்துவந்தார்கள், அந்த நம்பெருமாள் பிறகு சக்ரவர்த்தித் திருமகனால் ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கு ப்ரஸாதிக்கப்பட்டுத் திருவரங்கத்தையடைந்ததனால், "அயோத்தி மூதூர் குடிதுறந்து திருவரங்கங் கோயில்கொண்ட நெடியோன்" என்றார்.

கட்டளைக்கலித்துறை.

கூச. நீசச் சமணர்க்குஞ் சூனிய வாதற்கு நீதியற்ற
பூசற்பௌத்தர்க்குஞ் சைவர்க்கும் யார்க்கும் புகலுகின்றேன்
நாசப் படாவுயி ரெல்லா முதற்றந்த நாதன்கண்டீர்
ஆசற்ற சீரரங் கத்தாதி மூலத் தரும்பொருளே.

(இ-ள்.) நீசம் சமணர்க்கும் சூனியவாதர்க்கும் - கீழ்மையை யுடைய சமணர்களுக்கும் நாஸ்திகவாதிகளுக்கும், நீதி அற்ற பூசல் பவுத்தர்க்கும் சைவர்க்கும் - ந்யாயமல்லாத வாதஞ்செய்கிற பௌத்தர்களுக்குஞ் சைவர்களுக்கும், யார்க்கும்-மற்றைப் புறச்சமயத்தவர் யாவருக்கும், புகலுகின்றேன்-சொல்லுகின்றேன், நாசம் படா உயிர் எல்லாம் - அழிவில்லாத ஜீவராசிகளையெல்லாம், முதல்தந்த - ஆதியிற்படைத்த, நாதன் - தலைவன், ஆசு அற்ற - குற்றமில்லாத, சீர் அரங்கத்து-ஸ்ரீரங்கத்திலெழுந்தருளியிருக்கின்ற, ஆதிமூலத்து-ஆதிமூலமாகிய, அரும்பொருளே - அறிதற்கரிய பரவஸ்துவே, கண்டீர்-அறியுங்கள். எ-று.

நீசத்வமாவது - வைதிகாசாரத்துக்கு விருத்தமாயிருத்தல். சமணர்-க்ஷமணர். இவர் பௌத்தரை ஒருவாறு ஒத்தலும் ஒவ்வாமையுமுடையவர். சூனியவாதர் - மறுபிறப்பும் இருவினைப்பயனும் கடவுளும் இல்லையென்று வாதஞ்செய்பவர். பௌத்தர் - புத்தனைத் தெய்வமாகக்கொண்டு வழிபடுவோர். ஆதிமூலம் - ஆதிகாரணம்.

நேரிசைவெண்பா.

கூரு. அருட்புண்டரீகத் தடியிணைக்கென் னெஞ்சம்
இரும்புண்ட நீராவ தென்றோ—விரும்பி
அறந்திருந்துங் கோயி லரங்கா வுனைநான்
மறந்திருந்து மேற்பிறவா மல்,

(இ-ள்.) விரும்பி அறம்திருந்தும் கோயில் அரங்கா-திருவுள்ளமுகந்து எல்லாத்தர்மங்களுந் திருத்தமாகச்செய்யப்படுகின்ற திருவரங்கம் பெரியகோயிலில் எழுந்தருளியிருப்பவனே, உனை-உன்னை, நான்-யான், மறந்து இருந்தும் - மறந்திருந்தாலும், மேல்பிறவாமல்-இனிப்பிறவாதபடி, அருபுண்டரீகத்து அடி இணைக்கு - பெறுதற்கரிய தாமரைமலர்போன்ற (உன்னுடைய) உபயதிருவடியின்கண், என்நெஞ்சம் - என்மனம், இரும்பு உண்டநீர் ஆவது-(பழுக்கக்காய்ச்சின) இரும்பு உட்கொண்ட நீர்போல மீண்டுவராமல் ஐக்யமாவது, என்றோ - என்நாளோ. எ-று.

"தீரவிரும்புண்ட நீரதுபோல வென்னுருயிரை, யாரப்பருக வெனக் காராவமுதானாயே" என்பது ஆழ்வார் ஸ்ரீஸூக்தி.

கலிவிருத்தம்.

கூகூ. பிறவியெனுங் கடலழுந்திப் பிணிபசியோ டிந்திரியச்
சுறவநுங்கக் கொடுவினையின் சுழலகப்பட் டுழல்வேனோ
அறமுடையா யென்னப்பா வரங்காவென் னுருயிருக்
குறவுடையா யடியேனை யுயக்கொள்வதொருநாளே.

(இ-ள்.) அறம் உடையாய் - எல்லாத்தர்மங்களையு முடையவனே, என் அப்பா - எனது தந்தையே, அரங்கா - திருவரங்கனே, என் ஆர் உயிருக்கு - எனது அரிய ஆத்மாவுக்கு, உறவு உடையாய் - உறவாந்தன்மையையுடையவனே, பிறவி எனும் கடல் - பிறப்பென்கிற பெரியகடலில், அழுந்தி - மூழ்கி, பிணி பசியோடு - நோய்பசிகளோடுகூடி, இந்திரியம் சுறவம் நுங்க-பஞ்சேந்த்ரியங்களாகிய சுறாமீன்கள் விழுங்கும்படி, கொடுவினையின்சுழல்-கொடிய இருவினைகளாகிய நீர்ச்சுழியில், அகப்பட்டு - சிக்கிக்கொண்டு, உழல்வேன் - சுழலாநின்றேனோனேன், அடியேனை - அடியனேனை, உய்யகொள்வது - உஜ்ஜீவிக்கும்படி ஆட்கொள்வதற் குரியதாகிய, ஒருநாளே - ஒருதினமும் உளதாகுமோ. எ-று.

வினையின்சுழல் என்பதில் இன் அல்வழிச்சாரியை. உழல்வேனோ என்பதில் ஒகாரம் முறையீட்டிரக்கத்தின்கண்வந்தது. இதனை "அறமுடையாய், என்னப்பா, அரங்கா, என்னுயிருக் குறவுடையாய்" என்பவற்றின்முன் தனித்தனிக்கூட்டுக. திருவரங்கனே, பிறவிக்கடலிலழுந்தி வருந்துகின்ற என்னை உய்யும்படி ஆண்டருளும் நாளும் ஒன்றுளதோ என்பதாம்.

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

கூஎ. ஒருபொரு ளல்லே னிருவினை யுடையே
னுனதுதொண் டேனுந்துறை குளித்துன்
பெருகுதண் ணளியின் பாசந்தொட் டிழிந்து
பெரியதோர் முத்தியான் பெற்றேன்
திருவுமா மணியுஞ் சங்கமு மேந்திச்
செய்யதா மரைபல பூத்துக்
கருநிற முடைத்தாய் நதிபொரு தரங்கங்
கலந்ததோர் கருணைவா ரிதியே.

(இ-ள்.) திருவும் - ஸ்ரீமஹா லக்ஷ்மியையும் [நிதிகளையும்], மாமணியும்-அழகிய கௌஸ்துப ரத்நத்தையும் [பெரியரத்நங்களையும்], சங்கமும் - பாஞ்சஜந்யத்தையும் [சங்குகளையும்], ஏந்தி - தரித்து, செய்ய தாமரைபலபூத்து - சிவந்தபலதாமரை மலர்போன்ற திரு

அவயவங்கள் விளங்கப்பெற்று[பலசெந்தாமரை மலர்பூக்கப்பெற்று], சருநிறம் உடைத்தாய்-கறுத்த நிறத்தையுடையதாய், தரங்கம் பொரு நதிகலந்தது-அலைமோதுகின்ற காவேரியாற்றினிடஞ் சேர்ந்ததாகிய, [அலைமோதுகின்ற நதிகள் சேரப்பெற்றதாகிய], ஓர் - ஒப்பற்ற, கருணைவாரிதியே - அருட்கடலே, ஒரு பொருள் அல்லேன் - ஒரு பொருளாக மதிக்கப்படாதவனும் [செல்வஞ்சிறிது மில்லாதவனும்], இருவினையுடையேன் - நல்வினை தீவினையென்னும் இருவினைகளையு முடைவனும் [மிக்க முயற்சியுடையேனும்] ஆகிய, யான் - நான், உனது தொண்டு என்னும்-உன் கைங்கர்ய மென்கிற, துறை-வழியில் [இறங்குமிடத்தில்], குளித்து - ப்ரவேசித்து [மூழ்கி], உன்-உனது, பெருகுதண் அளியின் - மிக்க குளிர்ந்த அருளாகிய, பாசம்-கயிற்றை, தொட்டு-பிடித்துக்கொண்டு, இழிந்து-இறங்கி, பெரியது ஓர் முத்து-பெரியதொருபரமபதத்தை [முத்தை],பேற்றேன்-எ-று.

இருவினை பிறத்தல் இறத்தல் என்னும் இருதொழில் எனினு மாம்.

கட்டளைக்கலித்துறை.

கூஅ. வாரியரங்கம் வருதிருப்பாவைக்கு மண்மகட்கும்
சீரியரங்கண் வளர்திருக்கோலமுந் தென்றிருக்கா
வேரியரங்க விமானமுங் கோயிலுமேவித்தொழார்
பூரியரங்கவர் கண்ணிரண்டாவன புண்ணிரண்டே.

(இ-ள்.) வாரி அரங்கம் - திருப்பாற் கடலினிடத்தினின்றுந் தோன்றிய, திருபாவைக்கும் - திருமகளுக்கும், மண்மகட்கும் - நிலமகளுக்கும், சீரியர் - சிறந்தகணவராகிய நம்பெருமாள், அம்கண் வளர்-அழகாகத்திருக்கண் வளர்ந்தருளுகின்ற, திருகோலமும்-திருக்கோலத்தையும், தென் திருக்காவேரி - அழகிய திருக்காவேரி மத்தியிலுள்ள, அரங்கம் விமானமும் - ஸ்ரீரங்க விமானத்தையும், கோயிலும் - திருவரங்கம் பெரியகோயிலையும், மேவிதொழார் - பொருந்தி வணங்காதவர்கள், பூரியர்-[பிறப்பால்மேன் மக்களாயினும்] கீழ்மக்களேயாவர், அங்கு அவர்கண் இரண்டு ஆவன - அத்தன்மையையுடைய அவர்களது இரண்டு கண்களும், புண் இரண்டே - இரண்டு புண்களேயாகும் [கண்களல்ல], எ-று.

வாரி அரங்கம் வரு என்பதனை மண்மகட்கும் சேர்த்துரைக்கலாம், பொருள் நீராகிய இடத்தில் உண்டாகிய என்பது. மண் நீரினிடத்துண்டாகிய தென்பதனை "வானின்றிழிந்து வரம்பிகந்தமா பூதத்தின் வைப்பு" என்பதனாலும், "இடவிசும்பெரிவளி நீர் நிலம்"

"விண் முதல் முழுவதும்" "கரவிசும்பெரிவளி நீர் நிலம்" இத்யாதிகளாலும் காணலாம். மேவி என்பதற்கு மனம்பொருந்தி எனினுமாம்.

நேரிசைவெண்பா.

௯௯. புண்ணா ருடற்பிறவி போதுமெனக் கும்முனக்கும்
எண்ணா திருந்த தினிப்போதும்—கண்ணா
குழற்காளாய் தென்னரங்கக் கோயிலாய் நின்பொற்
கழற்காளாய் நின்றேனைக் கா.

(இ-ள்.) கண்ணா - க்ருஷ்ணனே, குழல்காளாய்-வேய்ங்குழலையுடைய காளைபோன்றவனே, தென் அரங்கம் கோயிலாய் - தென் திருவரங்கத்தைக் கோயிலாகவுடையவனே, (இதுவரையும்) எனக்கும் - அடியேனுக்கும், புண் ஆர் உடல் பிறவி - மாமிசம் நிறைந்த உடம்பெடுத்துப் பிறக்கும் பிறப்பு, போதும் - அமையும், உனக்கும்- நின்றனக்கும், எண்ணாதிருந்தது - (என்னை) நினையாமலிருந்தது, போதும் - அமையும், இனி - இனியாயினும், நின் பொன் கழற்கு - உனது அழகிய திருவடிகளுக்கு, ஆள் ஆய்நின்றேனை - அடிமையாய் நின்ற என்னை, கா - ரக்ஷித்தருள், எ-று.

உடம்பில் என்புதோல் முதலியவை குறைந்தும் மாமிசமிகுந்தும் இருத்தலால் "புண்ணாருடல்" என்றும், பல்பிறவிகளினும் மாறிமாறிப் பிறந்து வருந்திவிடாய்த்ததனால் "போதுமெனக்கு" என்றும், இனிச் சும்மா விருத்தல் எம்பெருமானுக்கு அழகன்றென்றற்கு, "உனக்கும் எண்ணாதிருந்ததினிப்போதும்" என்றும், பல பிறவித் தொகையைத் தணித்துக்காக்கவல்ல சர்வ சக்தனே என்றற்கு, "கண்ணா" என்றும், இத்திருநாமம் பரத்வத்தைக் குறித்ததாகையால் இது நமக்கு நிலமன்றெனக்கருதி "குழற்காளாய்" என்றும், இவனும் தூரஸ்த்தனாதலால் எம்மைக்காப்பவன் சமீபஸ்த்தனாதல் வேண்டுமெனக் கருதி "தென்னரங்கக் கோயிலாய்" என்றும் கூறினார்.

கலிநிலைத்துறை.

௧00. காவிரிவாய்ப் பாம்பணைமேற் கருமுகில்போற் கண்வளருங் கருணைவள்ளல், பூவிரியுந் துழாயரங்கர் பொன்னடியே தஞ்சமெனப் பொருந்திவாழ்வார், யாவரினு மிழிகுலத்தோ ராயினுமவர்கண்டீ ரிமையநாட்டுத், தேவரினு முனிவரினுஞ் சிவனயனென் றிருவரினுஞ் சீரியோரே.

(இ-ள்.) காவிரிவாய் - உபயகாவேரிமத்தியில், பாம்பு அணைமேல் - சேஷசயநத்தில், கருமுகில்போல்-காளமேகம்போல, கண் வளரும் - திருக்கண் வளர்ந்தருளுகின்ற, கருணை வள்ளல்-திருவருளையுடையவள்ளலாகிய, பூவிரியும் துழாய் அரங்கர் - மலர்விரிகின்ற திருத்துழாய் மாலையையுடைய திருவரங்கநாதரது, பொன் அடியே-

பொன்போலுந் திருவடிகளையே, தஞ்சம் என - அடைக்கலமாகக் கொண்டு, பொருந்தி - (அவற்றைச்) சரணமடைந்து, வாழ்வார்- வாழ்பவர்கள், யாவரினும் - எல்லோரினும், இழிகுலத்தோர் ஆனு லும்-தாழ்ந்தகுலத்தில் தோன்றிய வராயினும், அவர்-அவர், இமையா நாட்டம் தேவரினும் - இமையாத கண்களையுடைய தேவர்களினும், முனிவரினும் - முனிவர்களினும், சிவன் அயன் என்ற இருவரினும் - சிவன் பிரமன் என்றுசொல்லப்பட்ட இருவரினும், சீரியோர் - சிறப் பினையுடையோர். எ-று.

திருவரங்கர் திருவடியை ஆசிரயித்து வாழ்வோர் விதிசிவேந்த் ராதிகளுக்கும் மேலோராவர் என்பதாம்.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரிய வண்ணவிருத்தம்.

மழைமுகி லெனவேப ணாமு கந்திகழ்
வரியர வணையேறி வாழ ரங்கர்தம்
எழில்பெறு மிருதாளி லேக லம்பக
மெனுமொரு தமிழ்மாலை தான ணிந்தனன்
குழலிசை யளிமேவு கூரம் வந்தருள்
குருபர னிருபாத போதடைந் தவன்
அழகிய மணவாள தாச னென்பவ
னடியவ ரடிசூடி வாழு மன்பனே.

(இ-ள்) பணாமுகம் திகழ் - படங்களோடு கூடிய (ஆயிர) முகங்கள் விளங்குகின்ற, வரி அரவு அணை - நீட்சியுள்ள திருவநந் தாழ்வானாகிய சயநத்தில், மழைமுகில் என - கார்காலத்து மேகம் போல, ஏறிவாழ் - ஆரோஹணித்துப் பள்ளிகொண்டருளுகின்ற, அரங்கர் தம் - திருவரங்கநாதரது, எழில் பெறும் - அழகுபெற்ற, இருதாளிலே - உபய திருவடிகளிலே, கலம்பகம் எனும் - கலம்பக மென்கின்ற, ஒரு தமிழ்மாலை - தமிழாலாகிய தொருமாலையை [ப்ர பந்தத்தை], அணிந்தனன் - சூடினன், (யாரென்னின்) குழல் இசை அளிமேவு - வேய்ங்குழலி னிசைபோலும் பாட்டிசையையுடைய வண்டுகள் விரும்பி மொய்க்கின்ற, கூரம் வந்து அருள் - கூரமென் னும் திருப்பதியில் திருவவதரித்த, குருபரன் - சிறந்த ஆசார்யராகிய ஆழ்வானது, இருபாதபோது - உபய திருவடித்தாமரைகளை, அடை ந்தவன் - அடைந்தவனும், அடியவர் அடிசூடிவாழும் - அடியார்களது திருவடிகளை (தலைமேல் வைக்கும் மாலையாகக்கொண்டு) சூடிவாழ் கின்ற, அன்பன் - பக்தனுமாகிய, அழகிய மணவாளதாசன் என்ப வன் - அழகிய மணவாளதாஸனென்கிற திவ்யகவி பிள்ளைப்பெருமா ளையங்கார், எ-று.

இது பதிகம் அதாவது பாயிரம். ஆழ்வார் முதலாயினர் போல இப்பாயிரம் நூலாசிரியர் தாமே கூறியது. இவ்வழக்கு வடநூலாரி லுமுண்டு.

திருவரங்கக்கலம்பகம் முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

திருவரங்கத்தந்தாதி

மூலமும் - உரையும்.

தனியன்.

மணவாளரவிந்தைமார்நோக்கவிம்மைமறுமையின்மா
மணவாளர்தம்பதம்வாய்த்திடுங்கோயிலில்வந்தவந்த
மணவாளர்பொற்றிருப்பாதாம்புயங்கட்குமாலையென
மணவாளர்சூடும்யமகவந்தாதியைவாசிமினே.

(இதன்பொருள்.)

கோயிலில் - திருவரங்கத்தில், வந்த - எழுந்தருளின, அந்தம் மணவாளர் - அழகிய மணவாளருடைய, பொன் - பொன்போன்ற, திரு பாதம் அம்புயங்கட்கு - திருவடித்தாமரைகளின்மேல், மாலை என - மாலையாக, மணவாளர் - அழகிய மணவாளதாசர், சூடும்- சூட்டிய, யமகம் அந்தாதியை - யமக அந்தாதியை, வாசிமின் - படியுங்கள், (படிப்பீராயின் உங்களுக்கு) இம்மையில் - இம்மையில், மணம் - மணமும், வாள் - ஒளியுமுள்ள, அரவிந்தைமார் - தாமரை மலரில் வசிக்கின்ற அஷ்டலக்ஷ்மிகளும், நோக்க - கிருபையோடு பார்க்க, மறுமையில் - மறுமையில், மாமணவாளர்-லக்ஷ்மீநாதனது, பதம் - திருவடிகள், வாய்த்திடும் - எளிதிற்கிடைக்கும், என்றவாறு.

இனிமுதல் இரண்டடிகளில் "இம்மை மணம்வாள் அரவிந்தைமார் நோக்கம் - இம்மையில் மணமுள்ள அழகிய தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமியின் அருட்பார்வையும், மறுமையில் - மறுமையில், மண்ண-அலங்கரித்த, வாளர்தம்-வாளாயுதமுடைய எம்பெருமானது, பதம்-திருவடியும், வாய்த்திடும்-கிடைக்கும், எனினும் பொருந்தும். பெரியபெருமாள் ஆதியில் பிரமதேவனுக்குத் திருவாராதநமாயிருந்து பிறகு திருவயோத்தியில் தசரதசக்ரவர்த்திக்குத் திருவாராதநமாயிருந்து பிறகு இவ்விடத்திற்குக் கொண்டுவரப்பட்டவராதலால் கோயிலில்வந்த அந்தமணவாளர் என்றார். யமகமாவது அடிமுதலெழுத்தோடு இரண்டெழுத்துமுதற் பத்தெழுத்தீறாக ஓரடிபோல நான்கடியும் பாடப்படுவது. திருவடிப்ரபாவத்தைப் பரிமளிக்கச்செய்யின் உங்களுக்குத்திருவடி வாய்க்குமென்றதாயிற்று. மாலை கோட்டுப்பூமுதலியவற்றாற் றெடுக்கப்படுவதுபோல இப்பிரபந்தமும் பெயர்முதலிய நால்வகைச்சொற்களாற் றெடுக்கப்பட்டுள்ளதாதலால் இதனை மாலையென என்றார்.

காப்பு.

க. ஓராழிவெய்யவன்சூழுலகேழுவந்தேத்தரங்கர்
காராழிவண்ணப்பெருமாளந்தாதிக்குக்காப்புரைக்கில்
சீராழியங்கையிற்பொற்பிரம்பேந்தியசேனையர்கோன்
கூராழிசங்கந்திருக்கதைநாந்தகங்கோதண்டமே.

(இ-ள்.) ஓர் ஆழி-ஒற்றைச்சக்கரங்கொத்த தேரினையுடைய, வெய்யவன் - சூரியன், சூழ் - சூழ்ந்துவரும், உலகு ஏழ்-எழுலகங்களும், உவந்து - களித்து, ஏத்து - துதிக்கின்ற, அரங்கர் - திருவரங்கமென்னுந் திவ்யதேசத்தையுடையவர், கார் - கரிய, ஆழி - கடல் போன்ற, வண்ணம் - திருமேனியையுடைய, பெருமாள் - பெருமாள், (அவர் விஷயமான) அந்தாதிக்கு - அந்தாதியென்னும் பிரபந்தத்துக்கு, காப்பு-காப்பாக, உரைக்கில்-சொல்லுங்கால், சீர்-சிறப்புற்ற, ஆழி - மோதிரமணிந்த, அம் - அழகிய, கையில் - கரத்தில், பொன்-பொன்மயமான, பிரம்பு-பிரம்பினை, (கோலினை) ஏந்திய - பிடித்த, சேனையர்கோன் - சேனைமுதலியாரும், கூர்-கூரிய, ஆழி - சக்கரம், சங்கம் - சங்கு, திருக்கதை - சிறந்த தண்டாயுதம், நாந்தகம்-வாள், கோதண்டம் - வில், (ஆகிய இவைகளுமே யாம்). எ-று.

உலகு ஏழ் என்றது அவற்றிலுள்ளவுயிர்களை, உவந்தேத்தற்குரியன அவையே யாதலின். கார் ஆழிவண்ணப்பெருமாள் என்பதற்கு மேகம்போலவும் கடல்போலவும் நிறத்தையுடைய எம்பெருமான் எனினுமாம். பெருமாள் என்பது பெருமையையுடையான் எனப் பொருள்படுவதாகிய பெருமான் என்பதன் மரூஉ. அந்தாதிக்கு என்றவிதப்பால் அவர் விடயமான பிரபந்தங்கள் இன்னும் பலவுளவென்றதாயிற்று. அந்தாதி - முற்பாட்டி னீற்றடியும் பிற்பாட்டின் முதலடியும் எழுத்து முதலியவற்று ளொன்றிவரத் தொடுக்கப்படுவது.

உ. வையம்புகழ்பொய்கைபேய்பூதன்மாறன்மதுரகவி
அய்யன்மழிசைமன்கோழியர்கோனருட்பாண்பெருமாள்
மெய்யன்பர்காற்பொடிவிண்டுசித்தன்வியன்கோதைவெற்றி
நெய்யங்கைவேற்கலியன்றமிழ்வேதநிலைநிற்கவே.

(இ-ள்.) வையம்புகழ் - உலகோர்பரவும், பொய்கை - பொய்கையாழ்வார், பேய் - பேயாழ்வார், பூதன் - பூதத்தாழ்வார், மாறன்-நம்மாழ்வார், மதுரகவியையன் - மதுரகவியாழ்வார், மழிசைமன்-திருமழிசையாழ்வார், கோழியர்கோன் - குலசேகராழ்வார், அருள்-எம்பெருமானது திருவருளுக்கிலக்காகிய, பாண்பெருமாள்-திருப்பாணாழ்வார், மெய் - உண்மைவிளங்கிய, அன்பர் கால்பொடி - தொண்டரடிப்பொடியாழ்வார், விண்டுசித்தன் - பெரியாழ்வார், வியன்-பெருமையுற்ற, கோதை - சூடிக்கொடுத்தநாச்சியார், அங்கை - அழகிய

கரத்திலே, வெற்றி - ஜயம்பொருந்திய, செய்-செய்பூசிய, வேல்-வேலாயுதத்தை யேந்திய, கலியன் - திருமங்கையாழ்வார், தமிழ்வேதம் - (ஆகிய இந்தப் பன்னிருவர்கள் அருளிச்செய்த) திரவிடவேதமாகிய திவ்வியப்பிரபந்தங்கள், நிலைநிற்க-உலகத்தில் நிலைபெற்றிருக்கக்கடவன. எ-று.

பொய்கையாழ்வார் முதலியோர் எம்பெருமானது திருவருளுக்கிலக்கானோரேயாயினும், பெரியபெருமாள் முனிவாஹநர் எனச் சிறப்புப்பெயர்விளங்குமாறு லோகசாரங்க மஹாமுநிவராற் றமது சந்நிதிக்குக் கொணர்ந்தமையும், பாதாதிகேசமாக அமலனாதிப்பிரான் பாடுவித்துக்கொண்டு அவரது திருமேனியைத் தாமுட்கொண்டமையுந்தோன்ற "அருட்பாண்பெருமாள்" என்றார்.

௩. சீதரன்பூமகள்சேனையர்கோன்றென்குருகைப்பிரான்
நாதமுனியுய்யக்கொண்டாரிராமர்நல்லாளவந்தார்
ஏதமில்வண்மைப்பராங்குசதாசனெதித்தலைவர்
பாதமடைந்துய்ந்தவாழ்வானெம்பார்பட்டர்பற்றெமக்கே.

(இ-ள்.) சீதரன் - திருமால், பூமகள் - ஸ்ரீமகாலட்சுமி, சேனையர்கோன் - சேனைமுதலியார், தென் - அழகிய, குருகைப்பிரான்-சடகோபர், நாதமுனி - ஸ்ரீமந்நாதமுநிகள், உய்யக்கொண்டார் - உய்யக்கொண்டார், இராமர் - மணக்கால்நம்பி, நல் - நலமுடைய, ஆளவந்தார் - ஆளவந்தார், ஏதம் இல் - குற்றமில்லாத, வண்மை - ஔதார்யத்தையுடைய, பராங்குசதாசர் - பெரியநம்பி, எதித்தலைவர் - எதிராஜர் என்னுமிவர்களுடைய, பாதம் - திருவடிகளை, அடைந்து-சேர்ந்து, உய்ந்த - உஜ்ஜீவித்த, ஆழ்வான்-கூரத்தாழ்வான், எம்பார்-எம்பார், பட்டர்-பட்டர், (ஆகிய இப்பதின்மூவருடைய) பற்று-திருவடிசம்பந்தம், எமக்கு-எங்களுக்கு (உண்டாகக்கடவது). எ-று.

இப்பதின்மூவரும் இந்நூலாசிரியர்க்கு உத்தேசியரென்றபடி. அன்றி, சீதரன் முதல் எதித்தலைவர் இறுதியானோருடைய பாதமடைந்துய்ந்த ஆழ்வான்முதல் மூவருடைய திருவடிசம்பந்தம் எமக்குண்டாகக் கடவதெனினு மமையும்.

௪. திருமாலையாண்டான்றிருக்கோட்டிநம்பிதிருவரங்கப்
பெருமாளரையர்திருமலைநம்பிபெரியநம்பி
அருமால்கழல்சேரெதிராசர்தாளிற்சிங்காதனராய்
வருமாரியர்களெழுபத்துநால்வரொன்வான்றுணையே.

(இ-ள்.) திருமாலை யாண்டான் - (உடையவர்க்கு திருவாய்மொழி உபதேசித்த) திருமாலையாண்டானும், திருக்கோட்டி நம்பி-(சரமசுலோகமுபதேசித்த) திருக்கோட்டிநம்பியும், திருவரங்கப்

பெருமாளரையர் - (துவயோபதேசஞ்செய்த) திருவரங்கப்பெருமாளரையரும், திருமலைநம்பி-(ஸ்ரீராமாயணஞ்சொன்ன)திருமலைநம்பியும், பெரியநம்பி - (திருமந்த்ரோபதேசஞ்செய்த) பெரியநம்பியும், அரு-அருமையான, மால்-திருமாலின், கழல்-பாதங்களை, சேர்-அடைந்த, எதிராசர் - பாஷ்யகாரரும் ஆகிய இவர்களுடைய, தாளின்-திருவடி சம்பந்தத்தால், சிங்காதனராய்-சிம்மாசநாதிபதிகளாய், வரும்-வரப்பட்ட, ஆரியர்கள்-ஆசாரியர்கள், எழுபத்துநால்வர்-எழுபத்துநான்கு பேரும், என்வான்துணை - எனக்குச் சிறந்த துணையாகக்கடவர்கள்.

இவ்வாறன்றி திருமாலையாண்டான் முதலிய ஐவருடைய ஸ்ரீபாதங்களை யாசிரயித்த உடையவரது திருவடி சம்பந்தம்பெற்று சிம்மாசநாதிபதிகளாய்வந்த எழுபத்துநால்வர் எனினுமாம்.

ரு. மாறன்பராங்கதிதந்தடியேனைமருட்பிறவி
மாறன்பரானகுழாத்துள்வைப்பான்றொல்லைவல்வினைக்கோர்
மாறன்பராமுகஞ்செய்யாமலென்கண்மலர்க்கண்வைத்த
மாறன்பராங்குசன்வாழ்கவென்னெஞ்சினும்வாக்கினுமே.

(இ-ள்.) மால் தன் - திருமாலினுடைய, பராங்கதி-பரமபதத்தை, தந்து - அளித்து, அடியேனை - தொண்டனான என்னை, மருள்-மயக்கமுள்ள, பிறவி - சென்மம், மாறு - நீங்கின, அன்பரான - தாசர்களாகிய, குழாத்துள் - திருக்கூட்டத்துள், வைப்பான் - இருத்துமவனும், வல் - வலிய, தொல்லைவினைக்கு - பூர்வகன்மத்துக்கு, ஓர்-ஒப்பற்ற, மாறன் - விரோதியானவனும், பராமுகம்செய்யாமல்-அசட்டைசெய்யாது, என் கண் - என்மேல், மலர்க்கண் - தாமரைமலர்போன்ற கடைக்கண்பார்வையை, வைத்த-இருத்திய, மாறன்-காரிமாறனுமாகிய, பராங்குசன்-ஸ்ரீசடகோபன், என்-அடியேனது, நெஞ்சினும் - மனத்திலும், வாக்கினும் - மொழியிலும், வாழ்க - எக்காலத்தும் வாழக்கடவன். எ-று.

நெஞ்சினும் வாக்கினும் வாழ்தல் - நினைக்கப்படுதலும் வாழ்த்தப்படுதலுமாம். வாழ்க என்றமையான் எக்காலத்து மென்றுரைக்கப்பட்டது.

நூல்.

க. திருவரங்காவுறைமார்பாதிசைமுகன்சேவிப்பக்கந்
திருவரங்காதரித்தின்னிசைபாடத்திருக்கண்வளர்
திருவரங்காவுன்பழவடியேற்கருள்செய்யவெழுந்
திருவரங்காதலித்தேனுனக்கேதொண்டுசெய்வதற்கே.

(இ-ள்.) திரு - பெரியபிராட்டியார், அரங்கு ஆ - நர்த்தநசபையாக, உறைமார்பா - வசிக்கும் திருமார்பை யுடையவனே, திசை

முகன் - சதுர்முகன், சேவிப்ப - வணங்கவும், கந்திருவர் - யாழ்வல்லோர், அங்கு - அக்கோயிலில், ஆதரித்து - காதலித்து, இன் - இனிய, இசை பாட - இராகத்தைப் பாடுதல்செய்யவும், திருக்கண்வளர் - அழகாகக் கண்படுக்கும், திருவரங்கா - திருவரங்கனே, உன் - நினது, பழ அடியேற்கு - தொன்று தொட்டுவரும் தாசபூதனுகிய எனக்கு, அருள்செய்ய எழுந்திரு - கிருபைபண்ண எழுந்திரு, உனக்கே - நின்றனக்கே, தொண்டுசெய்வதற்கு - அடிமைபுரிவதற்கு, வரம் காதலித்தேன் - வரம் பெற ஆசைப்பட்டேன். எ-று.

"அகலகில்லேனிறையுமென் றலர்மேன்மங்கையுறை மார்பா" என்ற ஸ்ரீ சூக்தியை யுட்கொண்டு, "திருவரங்கா வுறைமார்பா" என்றார். சேவிப்ப, பாட, என்னும் வினையெச்சங்கள் கண்வளர்தல் என்னும் வினைகொண்டுமுடிந்தன. உன்பழவடியேன் என்றார் உயிர்களுக்கெஞ்ஞான்றும் சேஷத்வமே உளதாதல்நோக்கி.

உ. செய்யவளைக்குருவின்னருளாற்றிருத்தாள்வணங்கிச்
செய்யவளைக்குலஞ்சூழரங்கேசன்சிறிதமுது
செய்யவளைக்கும்புவிக்குமங்காந்தசெவ்வாய்முகுந்தன்
செய்யவளைக்குஞ்சிலம்பணிபாதங்கள்சேர்ந்தனமே.

(இ-ள். செய்யவளை - திருமகளை, குரு - ஆசாரியரது, இன் - இனிய, அருளால் - கடாக்ஷத்தினுல், திருத்தாள்வணங்கி - திருவடியைப்பணிந்து, செய்ய - வயல்களிலுள்ள, வளைக்குலம் - சங்கினங்கள், சூழ் அரங்கேசன் - சூழ்ந்த அரங்கத்துக்கு ஈசன், சிறிது அமுது செய்ய - கிஞ்சித்து அருந்த, அளைக்கும்புவிக்கும் - வெண்ணெய்க்கும் பூமிக்கும், அங்காந்த - திறந்த, செவ்வாய் - சிவந்தவாயினையுடைய, முகுந்தன் - முகுந்தனென்னும் திருநாமத்தை யுடையவன், (அவனது) செய்ய - செவ்விதாகிய, வளைக்கும் - வளைக்கப்பட்ட, சிலம்பு - பாதச்சிலம்பை, அணி - தரித்த, பாதங்கள் - திருவடிகளை, சேர்ந்தனம் - அடைந்தோம். எ-று.

பிராட்டி புருஷகாரத்தால் இறைவன்றிருவடி யடைந்தோம் என்பது கருத்து. வெண்ணெய்க்கு அங்காந்தது திருவாய்ப்பாடியில் கண்ணனுய்த் திருவவதரித்த காலத்தில்; புவிக்கு அங்காந்தது சர்வசம்ஹாரகாலத்தில். முகுந்தன் - முத்தியின்பத்தையும் உலகவின்பத்தையும் தருபவன்.

ந. தனமாதரஞ்சொற்குதலைப்புதல்வர்தரணியில்லம்
தனமாதரஞ்செயும்வாழ்வஞ்சியேதஞ்சநீயெனப்போந்
தனமாதரங்கிக்கவெற்பெடுத்தாய்தண்ணநந்தசிங்கா
தனமாதரங்கமுள்ளாயரங்காமுத்திதந்தருளே.

(இ-ள்.) தனம் - கொங்கைகளையுடைய, மாதர் - பெண்கள், அம் - அழகுபொருந்திய, குதலைச்சொல் - மழலைமொழிகளையுடைய, புதல்வர் - பிள்ளைகள், தரணி - பூமி, இல்லம் - வீடு, தனம் - பொன், (இவைமுதலியவற்றில்) ஆதரஞ்செய்யும்-காதல் கொள்ளும், வாழ்வு-(நிலையற்ற அற்ப) வாழ்வுக்கு, அஞ்சி - பயந்து, தஞ்சம் நீயென-நீயேபற்றுக்கோடென்று, போந்தனம் - அடைந்தோம், ஆ-பசுக்கள், தரங்கிக்க-(இந்திரன் பெய்வித்த மழையினால்) வருத்தமுற, வெற்பு-(கோவர்த்தன) கிரியை, எடுத்தாய் - (குடையாகப்) பிடித்தவனே, தண் - சீதளமுள்ள, அநந்த சிங்காதன - ஆதிசேடனைச் சிம்மாதனமாக வுடையவனே, மாதரங்கம் உள்ளாய் - பெரிதாகிய திருப்பாற்கடலி லெழுந்தருளியிருப்பவனே, அரங்கா - திருவரங்கனே, முத்தி தந்து அருள்-மோக்ஷத்தைக்கொடுத்து அருள். எ-று.

பற்றறுகையே முத்திக்குக் காரணமாதலால் "வாழ்வஞ்சி நீ தஞ்சமெனப் போந்தனம் முத்திதந்தருள்" என்றார். இது, "அற்றது பற்றெனினுற்றது வீடு" என்னும் ஸ்ரீ சூக்தியானு முணர்க. "மாதரங்கமுள்ளாய்" என்பதற்கு பெரிய பிராட்டியார் திருவவதரித்த க்ஷீராப்தியையுடையவனே எனப் பொருளுரைத்தலுமொன்று.

ச. தந்தமலைக்குமுன்னின்றபிரானெதிர்தாக்கிவெம்போர்
தந்தமலைக்குமைத்தானரங்கேசன்றண்பூவினிடைத்
தந்தமலைக்குத்தலைவன்பொற்பாதஞ்சரணென்றுய்யார்
தந்தமலைக்கும்வினையானைவார்பலர்தாரணிக்கே.

(இ-ள்.) பலர் - அனேகர், தாரணிக்கு - பூமியில், தந்தமலைக்கு-(தந்தங்களையுடைய மலைபோன்ற) யானைக்கு, முன் நின்றபிரான்-எதிரில் எழுந்தருளிச்சேவைசாதித்த உபகாரகன், எதிர்தாக்கி-எதிர்த்துத்தாக்கி, வெம் - உக்கிரமான, போர்தந்த - யுத்தம்புரிந்த, மல்லை - மல்லர்களை, குமைத்தான் - நொறுக்கினவன், அரங்கேசன் - அரங்கத்துக்கு ஈசன், தண் - குளிர்ச்சிபொருந்திய, பூவின் - தாமரைமலரில் (உள்ள), இடை - மருங்குலாகிய, தந்து - இழையினையுடைய, அமலைக்கு - பரிசுத்தாகாரமுள்ள ஸ்ரீமகலக்ஷ்மிக்கு, தலைவன் - நாயகன், (அவனது) பொன் - பொன்போன்ற, பாதம் - திருவடிகளே, சரணென்று - தஞ்சமென, உய்யார்-பிழையார்கள், (ஆனால்) தம்தம் அலைக்கும் - தங்கள் தங்களை வருத்தப்படுத்தும், வினையால் - பூர்வ கன்மத்தால், நைவார்-மெலிவார்கள் (இது என்ன மூடத்தனமோ).

தாரணிக்கு உருபுமயக்கம். பொன் அழகென்றலுமொன்று. தந்துவையொத்த இடையென்றற்கு இடைத்தந்து என்றார். தந்தமலையென்ற குறிப்புச்சொல் ஈண்டுயானையையுணர்த்திற்று. இரண்டாமடியில் மல்லையென்பது மலை எனத் தொகுத்தல் பெற்றது.

ரு. தாரணிதானவன்பாலிரந்தான் சங்கம்வாய்வைத்தொன்னார்
தாரணிதானவஞ்செய்தானரங்கன்றமர்கள்பொருந்
தாரணிதானவமராவதியுந்தருநிழலும்
தாரணிதானவயிராவதமுந்தருகினுமே.

(இ-ள்.) தாரணி - (மூன்றடி) நிலத்தை, தானவன்பால் - (மாவலிச் சக்கிரவர்த்தி என்னும்) அசுரனிடத்து, இரந்தான் - ஏற்றவன், சங்கு - (பாஞ்சசன்னியமென்னும்) சங்கத்தை, அம் - அழகிய, வாய்வைத்து - வாயினிடத்திருத்தி, ஒன்னார் - சத்துருக்களது, தார் அணி - படைவகுப்பினது ஒழுங்கினை, தான் - தானொருவனே, அவம்செய்தான் - வியர்த்தமாகப் பண்ணினவன், அரங்கன் - திருவரங்கன், (அவனது) தமர்கள் - தாசர்கள், பொருந்தார் - சம்மதியார்கள், அணிது ஆன - அழகியது ஆகிய, அமராவதியும் - சுவர்க்கலோகத்தையும், தருநிழலும் - கற்பகநிழலையும், தார் அணி-மாலையையணிந்த, தானம்-மதமுடைய, அயிராவதமும்-வெள்ளையானையையும், தருகினும் - கொடுத்தாலும். எ-று.

திருவரங்கத் தமுதத்தைப்பெற்றவர்கள் இந்திரன் முதலிய விறையவர் பதங்களை மனத்தானும் பொருந்தார்களென்பது கருத்து.

சு. தருக்காவலாவென்றுபுல்லரைப்பாடித்தனவிலைமா
தருக்காவலாய்மயிலேகுயிலேயென்றுதாமதராய்த்
தருக்காவலாநெறிக்கேதிரிவீர்கவிசாற்றுமின்பத்
தருக்காவலாயுதன்பின்றோன்றரங்கர்பொற்றாளிணைக்கே

(இ-ள்.) தரு - கற்பக விருக்ஷத்துக்கு, காவலா - இறையாகிய இந்திரனே, என்று - எனப்புகழ்ந்து, புல்லரைப்பாடி - அற்பரைப் பாடி, தனம் - கொங்கைகளையுடைய, விலைமாதருக்கு - பொருட்பெண்டிர்க்கு, ஆவலாய் - ஆசையாய், மயிலே - (நடனம்புரிவதில்) தோகையன்னவளே, குயிலே - (இன்னிசைபாட) கோகிலமன்ன குரல்படைத்தவளே, என்று - (எனமோக வாஞ்சையினால் இன்னன) கூறி, தாமதராய் - தாமசகுணமுடையவராய், தருக்கா - செருக்கடைந்து, அலாநெறிக்கே - (நன்மை) அல்லாதமார்க்கத்திலே, திரிவீர்-உழலும் புலவீர், பத்தருக்கு ஆ-பத்தருக்கு ஆக, அலம்-கலப்பையை, ஆயுதன் - ஆயுதமாக உடைய பலபத்திரனுக்கு, பின்தோன்று - பின்வந்து அவதரித்த, அரங்கர் - அரங்கநாயகரது, பொன்-அழகுள்ள, தாளிணைக்கே - உபயதிருவடிக்கே, கவிசாற்றுமின் - நும் கவிகளைச்சொல்லுங்கள். எ-று.

எ. தாளத்தனத்தத்தைச்சொல்லியரால்வருந்தாழ்மலபா
தாளத்தனத்தத்தைத்தப்பநிற்பீர்புடைதங்கியவே
தாளத்தனத்தத்தைத்தீர்த்தானரங்கன்சகடுதைத்த
தாளத்தனத்தத்தையாயுதன்பாதந்தலைக்கொண்மினே.

(இ-ள்.) தாளம்தனம் - கைத்தாளம்போன்ற தனங்களையும், தத்தைச்சொல்லியரால்-கிளிமொழியன்ன வசனங்களையும் உடைய (அன்னிய) மாதரால், வரும் - வராநின்ற, தாழ் - ஆழ்ந்த, மலம்-அசுத்தமாகிய, பாதாளத்து - நரகத்தின், அனத்தத்தை - கேட்டை, தப்பநிற்பீர் - தப்பிக்கவாயேற இருப்பீர்கள், புடை தங்கிய - பக்கத் தேவராநின்ற, வேதாளத்தன் - வேதாளங்களை யுடைய சிவனது, அ தத்தை - (பிச்சை யெடுத்தலாகிய) அந்த விபத்தை, தீர்த்தான்-ஒழித்தவன், அரங்கன் - திருவரங்கன், சகடு உதைத்த - சகடாசுரனைச் சாடிய, தாள் - பாதங்களையுடைய, அத்தன் - அப்பன், அத்தத்து - கரத்திலே, ஐ ஆயுதன் - பஞ்சாயுதங்களை யேந்தினவன், (அவனது) பாதம் - திருவடிகளை, தலைகொள்மின் - சிரசில் அணியுங்கள். எ-று.

அத்தத்து என்பதற்கு விருகாசுரனால் வந்த விபத்தெனினுமாம்.

அ. தலையிலங்காபுரஞ்செற்றானரங்கனென்றாழ்சொற்புன்கு
தலையிலங்காதரஞ்செய்தபிரான்சரணன்றிமற்றோர்
தலையிலங்காநின்றகண்ணிலங்காண்கைக்குத்தாழுகைக்குத்
தலையிலங்காதிலங்கேட்கைக்குவாயிலஞ்சாற்றுகைக்கே.

(இ-ள்.) தலை - முதன்மைபெற்ற, இலங்காபுரம் - இலங்கை வாழ் அரக்கரை, செற்றான் - சங்கரித்தவன், அரங்கன் - அரங்கன், என் - தாசனாகிய எனது, தாழ் - இழிவுள்ள, சொல் - (மொழிகளாலாகிய) கவிகளை, புன் குதலையில் - மழலைச்சொற்கள்போல, அங்கு - யான்பாடுகிற அவ்வவ்விடங்களில், ஆதரம்செய்தபிரான் - ஆசைப்பட்ட உபகாரகன், (அவனது) சரண் அன்றி - திருவடிகள் அல்லது, மற்றோர்தலை - வேறோர் தெய்வத்தின் இடத்தில், காண்கைக்கு-நோக்குதற்கு, இலங்காநின்ற - விளங்காநின்ற, கண் இலம் - நேத்திரங்களை யாம் உடையோம் அல்லோம், கேட்கைக்குக்காது இலம்-(அந்தத் தெய்வத்தின் புன்சரிதையை) கேட்கிறதற்குச் செவியுடையோம் அல்லோம், சாற்றுகைக்கு - துதிசொல்ல, வாய் இலம் - வாயுடையோம் அல்லோம், (இவ்வவயவங்களெல்லாம் அரங்கனுக்கே தொண்டுபட்டிருக்கின்றன). எ-று.

இலங்காபுரம் இடவாகுபெயர். இலங்கையையே செற்றானெனிற்படு மிழுக்கென்னெனின், ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கென்று திருவுளத்தடைத்தமையால் அதனையழித்தல் அசங்கதமென்க. இது "இராக்கதர்வாழிலங்கை பாழாளாக" என்னும் ஸ்ரீஸூக்தியானும் அதன் வ்யாக்யாநத்தானும் விசதம்.

கூ. கைக்குஞ்சரமன்றளித்தாயரங்கமண்காக்கைக்குமாய்க்
கைக்குஞ்சரமசரம்படைத்தாய்கடனீறெழத்து

கைக்குஞ்சரமகரக்குழையாயெனைக்கைக்கொளுடல்
கைக்குஞ்சரமதசையிலஞ்சேலென்றென்கண்முன்வந்தே.

(இ-ள்.) கை - துதிக்கையையுடைய, குஞ்சரம் - (கஜேந்திரனென்னும்) யானையை, அன்று - (ஆதிமூலமே என அழைத்த) அக்காலத்தில், அளித்தாய் - ரக்ஷித்தவனே, அரங்க - திருவரங்கனே, மண் - உலகினை, காக்கைக்கும்-காப்பதற்கும், மாய்க்கைக்கும்-அழிப்பதற்கும், சரம் அசரம் - ஜங்கம ஸ்த்தாவரங்களை, படைத்தாய்-சிருஷ்டித்தவனே, கடல் - சமுத்திரமானது, நீறுஎழ - புழுதிபறக்கும்படி, துகைக்கும் - கலக்கும், சரம் - அஸ்திரத்தையும், மகரக்குழையாய்-மகரகுண்டலத்தையு முடையவனே, உடல் - யாக்கையை, கைக்கும்-(உயிரானது) வெறுத்துச்செல்லும், சரமதசையில் - அந்தியகாலத்தில், அஞ்சேலென்று - பயப்படாதே என்று, என் - அடியேனது, கண்முன் - கண்களின்முன்னர், வந்து - தோன்றி, எனைக்கைக்கொள்-என்னையேற்றுக்கொள்வாய். எ-று.

கo. வந்தனையேற்றனையென்புன்சொற்கொண்டனைவன்மனத்தே
வந்தனையேற்றன்னையாவையுமாயினைவான்றரவு
வந்தனையேற்றனைத்தானொத்ததாளில்வைப்பாய்பலித்து
வந்தனையேற்றனைத்தீர்த்தாயரங்கத்துமாதவனே.

(இ-ள்.) என்-அடியேனது, வந்தனை-ஆராதனையை, ஏற்றனை-அங்கீகரித்தாய், புன்சொல் - ஈனமுள்ள மொழிகளால் தொடுக்கப்பட்ட கவிகளையும், கொண்டனை-ஏற்றுக்கொண்டாய், (அதுவுமன்றி) வன்மனத்தே - வலிய இருதயத்திலும், வந்தனை - எழுந்தருளினாய், ஏற்றம் - உயர்வாகிய, அன்னையாவையும் - தாய் (முதலிய) எல்லாப்பொருளும், ஆயினை - நீயே ஆனாய், வான் தர - (அடியேனுக்கு) பரமபதம் அளிக்க, உவந்தனையேல் - உவப்பெய்தினையாகில், தன்னைத்தான் ஒத்த - தனக்குத்தானே ஒப்பாகிய, தாளில்-திருவடியில், வைப்பாய் - இருத்துவாய், பலித்துவந்தனை - இரத்தற்றொழிலை, ஏற்றனை - இடபவாகனமுடைய சிவனுக்கு, தீர்த்தாய் - ஒழித்தவனே, அரங்கத்து-திருவரங்கத்தில், (அறி துயில்கூரும்) மாதவனே-லக்ஷ்மீநாயகனே. எ-று.

கக. மாதங்கத்தானையரங்கனைவஞ்சனிலங்கையிலே
மாதங்கத்தானையிருதிங்கடாழ்த்துப்பின்வாம்பரிதேர்
மாதங்கத்தானைவலத்தானைமுன்வதைத்தானைத்தன்பால்
மாதங்கத்தானைவைத்தானைவைத்தேனென்மதியகத்தே.

(இ-ள்.) மா - உயர்ந்த, தங்கம் தானை - பொன் ஆடை (அணிந்த) அரங்கனை - திருவரங்கனை, வஞ்சன் - வஞ்சகனான இராவண

னது, இலங்கையிலே - இலங்காபுரியிலே, மா - (திருமகளாகிய) சீதா பிராட்டியார், தங்க - இருக்க, தான் - தான், ஐ இருதிங்கள் - பத்து மாதம், தாழ்த்து - பொறுத்து, பின் - அதன்மேல், வாம்பரி - தாவு கிற குதிரைகளும், தேர் - இரதங்களும், மாதங்கம் - யானைகளும், தானை - பதாதிகளுமாகிய சேனைகளையுடைய, வலத்தானை-திண்ணியனான இராவணனை, முன்வதைத்தானை - முற்காலத்திலழித்தவனை, தன்பால் - தன்னிடத்து, மாது-பார்வதியை, அங்கத்தானை - அங்கத்திலுடைய ருத்திரனை, வைத்தானை - அவயவமாகவுடையவனை, என் மதியகத்து - அடியேனது மனத்தினுள்ளே, வைத்தேன் - யான் இருத்தினேன். எ-று.

க௨. மதிக்கவலைப்புண்டவெண்டயிர்போல்மறுகுறுமென்
மதிக்கவலைப்புண்டணிகின்றிலேன்மண்ணும்வானகமும்
மதிக்கவலைப்புனல்சூழரங்காநின்மனத்தருடா
மதிக்கவலைப்புன்பிறப்பினிமேலும்வருங்கொலென்றே.

(இ - ள்.) அலைபுனல்சூழ் அரங்கா - திரைகளை உடைய (காவிரி) நதிசூழும் அரங்கநகருடையாய், மண்ணும் வானகமும் - மண்ணவரும் விண்ணவரும், மதிக்க - கருதும்படிக்கு, நின் - உனது, மனத்து அருள் - இதயத்திருந்துண்டாகும் கிருபை, தாமதிக்க - தாமதித்தலால், வலை - வலைபோன்ற, புல் - அற்பமாகிய, பிறப்பு - பிறவி, இனிமேலும் - இன்னமும், வருங்கொலென்று - வருமோவென்று, மதிக்க - கடைய, அலைப்புண்ட - துளும்பல் உற்ற, வெண்தயிர் போல - வெண்மையாகிய தயிர்போல, மறுகு உறும் - கலங்குதல் பொருந்திய, என் - அடியேனது, மதி-மனத்தின், கவலைப்புண்-கவலையாகிய இரணம், தணிகின்றிலேன் - ஆறப்பெற்றிலேன். எ-று.

கங. வருந்துவரைப்பட்டமங்கையரெண்மர்மனங்களைக்க
வருந்துவரைப்பட்டவாயரங்கேசனைவஞ்சப்பகை
வருந்துவரைப்பட்டவேழமட்டானைமறந்துலகோர்
வருந்துவரைப்பட்டவீப்போன்மடந்தையர்மால்வலைக்கே.

(இ-ள்.) துவரை - துவாரகாபுரியில், வரும் - அவதரித்த, பட்டமங்கையர் - பட்டத்துத்தேவியர்கள், எண்மர் - எட்டுப்பேர்களுடைய, மனங்களை - இருதயங்களை, கவரும் - கிரகித்த, துவர் - பவளம்போலும், ஐ - அழகு, பட்ட - பொருந்திய, வாய் அரங்கேசனை - திரு அதரமுடைய அரங்கநாதனை, வஞ்சம்பகைவர்-கொடுமையுள்ள பகைஞர்கள், உந்து - செலுத்திய, பட்டம் - பட்டமணிந்த, வரை - மலைபோன்ற, வேழம் - களிற்றை, அட்டானை - வதைசெய்தவனை, மறந்து - (கடைப்பிடியாது) அயர்வுற்று, உலகோர் - மேதினியோர்,

ஐ - சிலேஷ்மத்தில், பட்ட-சிக்கிய, ஈப்போல் - ஈயைப்போல், மடந்தையர் - மடவாரது, மால் - காமமென்னும், வலைக்கு - கண்ணியிலே, (அகப்பட்டு) வருந்துவர் - துன்பமடைவார்கள். எ-று.

ஈண்டு வேழம் என்றது கஞ்சனுலேவப்பட்ட குவலயாபீடத்தை.

கச. மாலைக்கல்லாரமடவார்புண்ணுக்கையில்வாஞ்சைவைத்து
மாலைக்கல்லாரம்புலிக்குநையாநிற்பர்மாய்விப்பதோர்
மாலைக்கல்லாரம்புயத்தாளில்வைக்குமதிலரங்க
மாலைக்கல்லாரஞ்சலியாரென்னேசிலமானிடரோ.

(இ ள்.) சில மானிடர் - சில மனிதர்கள், கல்லாரமாலை-செங்கழுநீர்மாலை (புனையும்,) மடவார் - மாதர்களது, புண் - புண்ணாகிய, ஆக்கையில்-தேகத்தில், வாஞ்சைவைத்து-காதல்வைத்து, மாலைக்கு-அந்திப்போதுக்கும், அல் - கங்குலில், ஆர் - தோன்றுகிற, அம்புலிக்கு - சந்திரனுக்கும், நையாநிற்பர் - வருந்துவர், மாய்விப்பது-(இப்படித்தங்களை) அழியச்செய்வதாகிய, ஓர் மாலை - ஒப்பற்ற காமமயக்கத்தையும், கல்லார் - களையார், அம்புயத்தாளில் - (சரணெய்தியவரை) கமலபாதங்களில், வைக்கும்-இருத்துகிற, மதில்-சப்தப்ராகாரங்களுடுத்த, அரங்கம்மாலை - திருவரங்கமாநகரில் (பள்ளிகொண்ட) திருமாலையும், கல்லார்-துதித்திலர், அஞ்சலியார் - கைக்கூப்பிலர், என்னே-இது என்ன அறிவீனமோ (அறிகிலேம்). எ-று.

"சுந்தரஞானியர்தீரர் சூரரையெல்லா மிமைப்பிற்றுரும்பு செய்யும்" என்பவாகலின் "ஓர்மால்" என்றார்.

கரு. மானிடராகவரலரிதோர்மண்டலத்திநெறி
மானிடராகமிலாதவனுதன்மலரயனும்
மானிடராகமத்தாலன்பராயவரங்கத்துளெம்
மானிடராகமலரடிக்காட்படும்வாழ்வரிதே.

(இ-ள்.) ஓர் மண்டலத்தில் - (இந்த) ஒப்பற்ற பிரபஞ்சத்தின்கண், மானிடர் ஆக - நரராய், வரல் - பிறத்தல், அரிது - அருமை, (அப்படி பிறந்தாலும்) நெறிமான் (ஆதல் அரிது)-நீதியுள்ளவன் (ஆகிறது அருமை), (அதனினும்) இடர் ஆகம்-துன்பம் மிகுந்த விகாரசரீரம், இல்லாதவனுதல் அரிது-இல்லாதவனுதல் அருமை, (அதனினும்) மலர் அயனும் - தாமரையில் வாழ்கிற நான்முகனும், மான் - மானை, இடர்-இடதுகரத்தேந்திய பசுபதியும், ஆகமத்தால் - ஆகமவிதியால், (மனனஞ்செய்து) அன்பர் ஆய-(அவனது) கருணைக்குரியவர் ஆகிய, அரங்கத்துள் எம்மான்-திருவரங்கத்துள் (துயில்கூரும்) எமதுஸ்வாமியினது, இடம் - விசாலமாகிய, ராகம் மலர் - செந்தாமரை மலர்போன்ற, அடிக்கு - திருவடிகளுக்கு, ஆட்படும் - தொண்டுபடும், வாழ்வு-(சுக) வாழ்க்கை, அரிது-உண்டாதல் துர்லபம். எ-று.

கசு. அரிதாமரைக்கணந்தோலுடுத்தாரயனூர்க்கரியான்
அரிதாமரைக்கணம்மான்றிருப்பாதமடைமின்சன்மம்
அரிதாமரைக்கணந்தங்காதுயிரவனூர்வினவில்
அரிதாமரைக்கணமீர்த்தோடும்பொன்னியரங்கமன்றே.

(இ-ள்.) அரி-இந்திரனுக்கும், தாம் அரைக்கண்-தாம் (தமது) மருங்கில், அம் - அழகிய, தோல் - தோலை, உடுத்தார்க்கு - தரித்தவரான ருத்திரமூர்த்திக்கும், அயனூர்க்கு - பிரமனுக்கும், அரியான் - அறிதற்கு அசக்கியன், அரி-செவ்வரிபரந்த, தாமரைக்கண் - கமலநேத்திரங்களையுடைய, அம்மான்-ஸ்வாமி, (அவனது)திருப்பாதம்-திருவடிகளை, அடைமின்-சேருங்கள், (அடைவீராயின்) சென்மம் அரிதாம்-பிறப்பு இல்லாமல்போம், உயிர் அரைக்கணம் - (இனியிந்த) சீவன் அரைக்ஷணமேனும், தங்காது - (வேறொரு உடம்பில்) பொருந்தாது, அவன் ஊர்-அவனுடைய திருப்பதி, வினவில் - (எதுவெனக்) கேட்கில், அரி - சிங்கங்களையும், தா - தாவுகின்ற, மரைக்கணம் - மான் கூட்டங்களையும், ஈர்த்து - இழுத்துக்கொண்டு, ஓடும் - ஓடிவராநின்ற, பொன்னி - காவேரி (சூழ்ந்த), அரங்கம் - திருவரங்கமாம். எ-று.

அன்று-ஏ-அசைகள்.

கஎ. அரங்காதுவார்கணைகண்வள்ளைகோங்கினரும்புமங்கை
அரங்காதுவார்முலையென்றைவர்வீழ்ந்தனராடரவின்
அரங்காதுவாரமிலாமணியேயணியார்மதில்சூழ்
அரங்காதுவாரகையாயடியேனுன்னடைக்கலமே.

(இ-ள்.) மங்கையர்-மாதருடைய, கண் - கண்கள், அரம்-அரத்தினால், காது-அராவப்பட்ட, வார்கணை என்று-நெடிய அம்புகளென்றும், அம்காது - அழகிய செவிகள், வள்ளை என்று - வள்ளைத்தண்டு என்றும், வார்முலை - கச்சிறுக்கிய கொங்கைகள், கோங்கின் அரும்பு என்று-கோங்கரும்பு என்றும் உவமித்துரைத்து, ஐவர் - (பஞ்சேந்திரியங்களாகிய) ஐந்துபேர், வீழ்ந்தனர்-(அவர்கள் காமக்கடலில்) வீழ்ந்தழுந்தினர், ஆடு - ஆடுதல்செய்யும், அரவின்-சர்ப்பமாகிய, அரங்கா-நர்த்தன சபையையுடையவனே, துவாரமில்லா - தொளையில்லாத, மணியே - மாணிக்கமே, அணி - அழகு, ஆர்-நிறைந்த, மதில் - ப்ராகாரங்களால், சூழ் அரங்கா - சூழப்பட்ட அரங்க நகருடையாய், துவாரகையாய்-துவாரகாபுரிக் கிறைவனே, அடியேன்-தாசபூதனுகியநான், உன் அடைக்கலம் - நினது கையடையானேன். எ-று.

அரவின் என்பதில் இன் தவிர்வழிவந்த சாரியை.

கஅ. அடைக்கலந்தாயத்தவர்போலுடனுறையைவரையும்
அடைக்கலந்தாயுலகங்கொண்டதாள்களுக்கண்டமுண்டால்
அடைக்கலந்தாயரங்காவாயர்பாடியிலன்றுநெய்பால்
அடைக்கலந்தாய்வைத்துவாய்நெரித்தூட்டவழுமையனே.

(இ-ள்.) அண்டம் - அண்டங்களை, உண்டு - அருந்தி, ஆல் அடை - ஆலிலையில், கலந்தாய்-சேர்ந்து பள்ளிகொண்டவனே, அரங்கா - திருவரங்கனே, அன்று-முற்காலத்தில், ஆயர்பாடியில் - திருவாய்ப்பாடியில், தாய் - அன்னையாகிய அசோதைப்பிராட்டியார், நெய்-நெய்யினை, பாலடை கலம் - பாலடையாகிய பாத்திரத்தில், வைத்து-வார்த்து, வாய் - உன் திருவாயை, நெரித்து-நெரியச்செய்து, ஊட்ட-உண்ணுவிக்க, அழும் - (ஒன்றும் அறியாச்சிறுகுழந்தைபோல) அழுதலைச்செய்த, ஐயனே-அப்பனே, தாயத்தவர்போல் - தாயாதிகளைப் போல, உடல் உறை - (எமது) மெய்யில் குடியிருக்கும், ஐவரையும் - பஞ்சேந்திரியங்களையும், அடைக்கலம்-நிக்கிரகிக்கமாட்டோம், தாய்-தாவி, உலகம் - புவனங்களை, கொண்ட - அளந்துகொண்ட, தாள்களுக்கு - திருவடிகளுக்கு, அடைக்கலம் - கையடையானோம். எ-று.

அண்டமுண்டாலடைக்கலந்தாய் என்றமையால் சர்வசேஷியென்பதும்; ஆயர் ஐயனே என்றமையால் சௌலப்யனென்பதும்; ஐவரையு மடைக்கலம் என்றமையால் யாங்கள் விஷயப்ரவணர்கள் என்பதும்; உலகம் கொண்டதாள்களுக் கடைக்கலம் என்றமையால் எங்களுக்குப் புகலிடம் உன்திருவடிகளே என்பதும் விசதமாயிற்று.

கசு. ஐயமருந்திவையுண்ணென்றுமாதரட்டூட்டுஞ்செல்வம்
ஐயமருந்தினைப்போதேயவரின்பமாதலினால்
ஐயமருந்தியக்கங்குறுகாமுன்னரங்கர்க்கன்பாய்
ஐயமருந்தியும்வாழ்மின்கண்மேலுமக்கானந்தமே.

(இ-ள்.) ஐய - ஐயா, மருந்து - தேவாமுதத்துக்கு ஒப்பாகிய, இவை - இவ்வுணவுகளை, உண் - அருந்து, என்று - என்று (அன்புடன்) கூறி, மாதர் - பெண்கள் (மனைவியர்,) அட்டு - சமைத்து, ஊட்டும் - அருந்தச்செய்யும், செல்வம் - ஐசுவரியம், ஐயம் - சந்தேகம், அரு தினைப்போதே - சிறிய தினையளவினதாகிய காலத்ததே, அவர் - அந்தப்பெண்களுடைய, இன்பம் - போகரசமும், ஆதலினால்-ஆகையால், ஐ - கோழை, அமர் - போரை, உந்தி - செலுத்தி, அக்கம் - தேகம், குறுகாமுன் - ஒடுங்குதற்கு முன்னமே, அரங்கர்க்கு-திருவரங்கருக்கு, அன்பாய் - நேசர்களாய், ஐயம் அருந்தியும் - பிச்சை எடுத்து உண்டாயினும், வாழ்மின்கள் - ஜீவியுங்கள், (இப்படி செய்வது) மேல் - இனிமேல், உமக்கு - உங்களுக்கு, ஆநந்தம் - நித்யாநந்தைத் தருவதாகும். எ-று.

ஐயப்பகுதிமேலிட்ட ஞான்று அன்புசெய்தல் கூடாமையின் "ஐயமருந்தி யக்கங்குறுகாமுன் னரங்கர்க்கன்பாய்" என்றார்.

உ0. நந்தமரங்கனைமாகடலேழுநடுங்கவெய்த
நந்தமரங்கனைப்பற்றுநெஞ்சேவினைநையுமுன்கை

நந்தமரங்கனையார்மயல்போம்வருநற்கதிவா
நந்தமரங்கனைவர்க்குமெஞ்ஞான்றுநரகில்லையே.

(இ-ள்.) மரம் - (மரா) மரங்கள், நந்த - கெடவும், கனை - சத்திக்கிற, மா - பெரிய, கடல் ஏழும் - சப்தசமுத்திரங்களும், நடுங்க- அதிரவும், எய்த - (அஸ்திரப்) பிரயோகஞ்செய்த, நம்தம் - நமது, அரங்கனை - திருவரங்கனை, நெஞ்சே - மனமே, பற்று - அடை, (அப்படி அடைந்தால்) வினை-(பிறத்தல் இறத்தல் என்னும் இரண்டு) கன்மங்களும், நையும் - நசித்துப்போம், முன்கை - முன்னங்கையில், நந்து-சங்கவளையல்கள், அமர்-பொருந்திய, அங்கனையார்-மாதரிடத்து (விளையும்,) மயல் - (காம) மயக்கமும், போம் - அறும், நற்கதி - நல்ல பதவியாகிய, வானம் - பரமபதம், வரும்-சித்திக்கும், அங்கு - அந்நரகலோகத்திலுள்ள, தமர் - சுற்றத்தார், அனைவர்க்கும்-யாவருக்கும், எஞ்ஞான்றும் - எந்நாளிலும், நரகு இல்லை-நரகம்இல்லையாம். எ-று.

உக. நரகந்தரம்புவியிம்மூன்றிடத்துநனிமருவி
நரகந்தரங்கித்துவெங்காலற்கஞ்சுவர்நாயகவா
நரகந்தரம்புட்பிடரேறரங்கர்நல்லாய்க்குலத்தி
நரகந்தரங்கமுற்றாரடியார்க்குநமனஞ்சுமே.

(இ-ள்) நரகு - பாதாளலோகம், அந்தரம் - சொர்க்கலோகம், புவி - மத்தியலோகம், இம்மூன்றிடத்தும் - (என்னும்) இந்த மூன்று லோகத்தின் கண்ணும், நனி - மிகவும், மருவினர் - பொருந்தின பேர்கள், அகம்-பாபத்தினால், தரங்கித்து - அலைந்து, வெங்காலற்கு- கொடுமையுள்ள யமனுக்கு, அஞ்சுவர் - உளம் நடுங்குவார்கள், நாயகம்- ஸ்ரேஷ்டமான, வானர கந்தரம்-(வானரமாகிய) அநுமானது கழுத்தின்மேலும், புள் - கருடப்பறவையினது, பிடர் - தோண்மேலும், ஏறு - எழுந்தருளுகிற, அரங்கர் - திருவரங்கரும், நல் - நன்மை பொருந்திய, ஆய்க்குலத்தினர் - இடைக்குலத்தவருடைய, அகம் - வீட்டிலும், தரங்கம் - க்ஷீராப்தியிலும், உற்றார் - வாழ்பவர்களது, அடியார்க்கு-தொண்டருக்கு, நமன் - (அந்தக்) காலன், அஞ்சும் - பயப்படுவான். எ-று.

மூன்றுலகத்தாருங் காலனுக்கஞ்சுவர், அந்தக்காலன் அடியார்க்கஞ்சுவன் என்றமையான் அடியாரது பெருமை விளக்கியவாறாயிற்று.

உஉ. அஞ்சக்காத்தலைக்கங்கையனேற்றலுமஞ்சிறைய
அஞ்சக்கரத்தலைக்குண்டிகையான்மண்டையங்கைவிட்டே
அஞ்சக்கரத்தலைச்செய்துபித்தேகவருளரங்கன்
அஞ்சக்கரத்தலைவன்றாளலான்மற்றரணிலையே.

(இ-ள்.) அஞ்சு அக்கரம் - பஞ்சாக்ஷரத்தையுடைய, தலைக் கங்கையன்-கங்கையைச்சிரத்திலுடைய சிவன், எற்றலும்-இரக்குமளவில், அம் - அழகிய, சிறைய - சிறகுகளைக்கொண்ட, அஞ்சம்-அன்னவாகனத்தையும், காத்தலை - கையில், குண்டிகையான் - கமண்டலத்தையுமுடைய பிரமனது, மண்டை - கபாலமானது, அங்கை - (அவனது) உள்ளங்கையினை, விட்டு - நீங்கி, கரத்தலைச் செய்து - மறைந்து, அஞ்ச-நடுங்கவும், பிரது (அவனது) பிராந்தி, ஏக - நீங்கவும், அருள் - கருணைசெய்த, அரங்கன் - திருவரங்கன், அம் - அழகிய, சக்கரத்தலைவன்-ஆழிப்பிரான், (அவனுடைய) தாள் அல்லால் - திருவடியல்லது, மற்று - வேறு, அரண் - இரட்சகம், இல்லை - எமக்கில்லை. எ-று.

உங. இலங்கையிலாதரனைங்கரன்மோடி யெரிசுரத்தோன்
இலங்கையிலாதமலையானவீசனிரிய வெம்போர்
இலங்கையிலாதபடிவாணனைச்செற்றவென்னரங்கன்
இலங்கையிலாதவன்போகக்கண்டானென்னிதயத்தனே.

(இ-ள்.) இலங்கு - விளங்குகின்ற, அயில் - வேலில், ஆதரன்-விருப்பமுடைய ஆறுமுகன், ஐங்கரன் - ஐந்துகரங்களையுடைய விநாயகன், மோடி - துற்கை, எரிசுரத்தோன் - (சுடுகாட்டினையுடைய) வீரபத்திரன், இல்லம் - வீடு, கைலாசமலை ஆன-கையிலாசகிரி ஆகிய, ஈசன் - சிவன், இரிய - (இவர்களனைவரும்) முறிந்தோட, வெம்போரில் - உக்கிரமான அமர்க்களத்தில், அம் - அழகான, கை இல்லாதபடி-கைகளில்லாத வண்ணம், வாணனை-வாணாசுரனை, செற்ற - கொன்ற, என் அரங்கன்-என் திருவரங்கன், இலங்கையில் - இலங்காபுரத்தில், ஆதவன் - சூரியன், போகக்கண்டான்-போகச்செய்தவன், என் இதயத்தன் - அடியேனது இதயகமலத்துற்றனன். எ-று.

திருவரங்கன் செறுமிடத்துச் சிவன்முதலியோர் தடுக்குமாற்றலுடைய ரல்லரெனக் கூறியவாறாயிற்று.

உச. அத்தனைவேதனையீன்றவரங்கனையைம்படைசேர்
அத்தனைவேதனைவாய்வைத்தநாயனையாரணங்கோர்
அத்தனைவேதனைத்தீர்த்தானைச்சேர்க்கிலளாயிரஞ்சால்
அத்தனைவேதனையப்புவள்சாந்தென்றனலைத்தே

(இ-ள்.) அத்தனை - எப்பொருட்கும் இறைவனை, வேதனை-பிரமனை, ஈன்ற - பெற்ற, அரங்கனை - திருவரங்கனை, ஐம்படை - பஞ்சாயுதங்கள், சேர் - கலந்த, அத்தனை - கைகளையுடையவனை, வேதனை - வேய்ங்குழலினை, வாய்வைத்த-திருவாயிலிட்டது (ஊது

தற்கு) வைத்த, மாயனை - ஆச்சரிய குணசேஷ்டிதனை, ஆரணங்கு-பார்வதியை, ஓர் அத்தனை - ஒருபாகத்துடைய சிவனுக்கு, வேதனை-வருத்தத்தை, தீர்த்தானை - ஒழித்தவனை, சேர்க்கிலள் - சாரச்செய்யகில்லாள், அன்னை-என்தாய், (ஆனால்) ஆயிரம்சால் அத்தனை-ஆயிரம்சால் அவ்வளவு, வேது-வெப்பத்தை, சாந்து என்று - சந்தனக்குழம்பென்று, அனல் - அழலை, அரைத்து - அரைத்து, அப்புவள் - என்மேற்பூசுவாள். எ-று.

உரு. அரைக்கலைவேலையுடுத்தமண்பல்பகலாண்டுபற்றல்
அரைக்கலைவேலையுடைவேந்தர்வாழ்வெண்ணலைவரையும்
அரைக்கலைவேலையவர்க்கேபுரிவையென்றுநெஞ்சே
அரைக்கலைவேலையரங்கனுக்காட்படவாதரியே.

(இ-ள்.) அரைக்கு-அரையினிடத்து, அலை-அலைகளையுடைய, வேலை - கடலை, உடுத்த - தரித்த, மண்-நிலமகளை, பல்பகல்-அநந்தநாள்வரைக்கும், ஆண்டு - காத்து, பற்றலரை-பகைவரை, கலை-நிலைகுலைந்தோடச்செய்கின்ற, வேலை உடை - வேலாயுதத்தையுடைய, வேந்தர்-நிருபரது, வாழ்வு - (நிலையற்ற) வாழ்க்கையை, எண்ணல்-(நிசமெனக்) கருதாதே, ஐவரையும் - இந்திரியப் பகைவர் ஐவரையும், அரைக்கலை - அடக்கமாட்டாய், அவர்க்கே - (அவர் செல்வழியிலேயேசென்று) அவர்களுக்கே, வேலைபுரிவை என்றாலும் - பணிவிடை செய்வாயெனினும், நெஞ்சே - மனமே, அரைக்கலைவேலை-அரைக்கணப்போதேனும், அரங்கனுக்கு-திருவரங்கருக்கு, ஆட்பட-அடிமைசெய்ய, ஆதரி - விரும்பு. எ-று.

உசு. ஆதவனந்தரந்தோன்றுமற்கன்மழையார்த்தெழுநாள்
ஆதவனந்தரவெற்பெடுத்தானடியார்பிழைபார்
ஆதவனந்தரங்கத்தானரங்கனடியனென்றுள்
ஆதவனந்தரங்கண்டீர்வினைவந்தடைவதுவே.

(இ-ள்.) ஆ - பசுக்கள், தவனம்தர - தவிக்க, ஆதவன் - சூரியன், அந்தரம் - விண்ணில், தோன்றுமல் - கண்ணுக்குப் புலப்படாமல், கல்மழை-சில வருஷம், ஆர்த்து - ஒலித்து, எழுநாள்-எழுநாள், (பெய்தபோது) வெற்பெடுத்தான் - (கோவர்த்தன) கிரியை (குடையாகவெடுத்து) பிடித்தவன், அடியார்-தொண்டர்களது, பிழை-குற்றங்களை, பாராதவன் - நோக்காதளிப்பவன், அம்தரங்கத்தான் - அழகிய க்ஷிராப்தியையுடையவன், அரங்கன் - திருவரங்கன், (அவனுடைய) அடியனென்று - தாசபூதனென்று, உள்ளாதவன் - கருதாதவனுக்கு, அந்தரம் - முடிவில், வினை - எல்லாத்தீவினைகளும், வந்து அடைவது - வந்து அமையும். எ-று.

கண்டீர் முன்னிலையசையிடைச்சொல். அந்தரங்கத்தான் என்பதற்கு (அகிலசராசரங்களிலும்) அந்திரயாமியாய் இருப்பவனெனினும் பொருந்தும்.

உஎ. அடையப்பன்னகங்கடிவாயமுதுகவங்கிகுளிர்
அடையப்பன்னகமருப்பாயுதமிறவன்றுகுன்றால்
அடையப்பன்னகமிசைதாங்கப்பாலற்கருள்செய்ததால்
அடையப்பன்னகங்கரியானரங்கனெட்டக்கரமே.

(இ-ள்.) அடை-அடைகிடக்கின்ற, அப்பல்-அந்தவிஷப்பல்லையுடைய, நாகம்-சர்ப்பங்கள், கடிவாய்-கடித்தவாயினிடமாக, அமுது-அமிர்தம், உக - சிந்தவும், அங்கி - நெருப்பு, குளிரடைய-குளிர்ச்சியடையவும், பல்-(நான்கு) கோட்டிகளையுடைய, நாகம் - (ஐராவதமென்னும்) வேழத்தின், மருப்பு ஆயுதம் - தந்தங்களாகிய படைக்கலம், இற-ஒடியவும், அன்று - அக்காலத்தில், குன்றால்-மலையினால், அடை - அடைத்த, அப்பு-சமுத்திரஜலம், அந்நாகம்-அந்தமலையை, மிசை-மேலே, தாங்க - ஏந்தவும், பாலற்கு-(மைந்தனாகிய) பிரகலாதாழ்வானுக்கு, ஆல் அடை அப்பன் - வடபத்திரத்துள் (துயில் கூரும்)எந்தை, ஆகம் கரியான்-கரியமேனியன், அரங்கன்-திருவரங்கன், (அவனது) எட்டு அக்கரம் - அஷ்டாக்ஷரம், அருள்செய்தது-கருணைபண்ணிற்று. (ஆகையால் அந்தத்திருமந்திரத்தை ஆசாரியரிடத்துப்பெற்றுக்கொள்ளக் கருதுங்கள்.) எ-று.

அடைகிடக்கும் நாகத்துக்குக் கோவமதிகமாதலால் அதையெடுத்துக் கூறினர். வேழமருப்பாயுதம் என்பதற்கு யானைக்கொம்பும் பிற ஆயுதங்களுமெனவுங் கூறலாம். குன்றாலடையப்பு என்றது திருவணைகட்டிய செய்தியைக் குறிக்கின்றது.

உஅ. அக்கரவம்புனைந்தாரயனாரிடையாயிருநால்
அக்கரவம்புமலராள்கொழுநனரங்கன்செங்கோல்
அக்கரவம்புயன்றான்மூலமென்பதறிவித்திடான்
அக்கரவம்புவிமேல்வேழமேவெளியாக்கியதே.

(இ-ள்.) அக்கு - அஸ்தியையும், அரவம் - சர்ப்பத்தையும், புனைந்தார் - தரித்தசிவனுக்கும், அயனார்-பிரமனுக்கும், இடையாய்-நடுவுற்றவனாகி, இருநால் அக்கர - அஷ்டாக்ஷரத்தையுடைய, வம்பு மலராள் - நீரிலுள்ள தாமரைவந்தவளுக்கு, கொழுநன் - மணாளன், அரங்கன் - திருவரங்கன், செம் - சிவந்த, கோலம் - சுந்தரமுள்ள, கர அம்புயன் - தாமரைக்கையன், தான்மூலம் என்பது - (யாவர்க்கும்) தானே காரணமென்பதை, அறிவித்திடான் - வெளிப்படுத்தான், அக்கரவு - அந்தக்கபடத்தை, அம் - அழகிய, புவிமேல்-குவ

லயத்தின்கண், வேழமே - கஜேந்திரன் என்னும் யானையே, வெளியாக்கியது - பகிரங்கப்படுத்தியது. எ-று. வம்பு-வாசனையுமாம்.

உகூ. ஆக்குவித்தார்குழலாலரங்கேசரன்பால்விதுரன்
ஆக்குவித்தாரவடிசிலுண்டார்கடலாடையகல்
ஆக்குவித்தாரறிவற்றேனைத்தம்மடியார்க்கடிமை
ஆக்குவித்தாரடியேயடியேன்றுய்க்குமாரமுதே.

(இ-ள்.) குழலால் - வேய்ங்குழலினிசையால், ஆ - (சிதறிய) பசுவினங்களை, குவித்தார்-(ஓரிடத்து) திரளாகக்கூட்டினவர், அரங்கேசர் - திருவரங்கநாதர், விதுரன் - ஸ்ரீ விதுராழ்வான், ஆக்கு-சமைத்த, வித்தாரம் - மிகுந்த, அடிசில் - அமுதினை, அன்பால்-பரிவுடன், உண்டார் - அருந்தினவர், கடல் ஆடை - சமுத்திரமாகிய ஆடையை, அகலா - நீங்காத, கு - நிலமகளுக்கு, வித்தார்-காரணர், அறிவு அற்றேனை-புத்தி இல்லாத அடியேனையும், தம் அடியார்க்கு-தமது தொண்டர்களுக்கு, அடிமை ஆக்குவித்தார் - தாசனாகச்செய்தவர், (அவரது) அடியே - திருவடிகளே, அடியேன் - தாசனாகிய நான், துய்க்கும் - புசிக்கும், ஆர் - (கிடைத்தற்கு) அரிய, அமுது-தேவாமிர்தம். எ-று.

ஆக்குவித்தாரம் அடிசில் என்பதற்கு:—ஆக்கு-இலையில் இட்ட, வித்தாரம் அடிசில் - மிகுந்த உணவை எனினுமாம்.

ஙo. ஆராதனஞ்செய்துகண்டனின்கீர்த்தியறைவன்றிரு
ஆராதனஞ்செய்வன்வேதாவென்றாலடியேன்புகழ்கைக்கு
ஆராதனஞ்செய்யபோதாந்திருமகளாகபல்பூண்
ஆராதனஞ்செயன்பாகாவரங்கத்தமர்ந்தவனே.

(இ-ள்.) ஆதனம் - ஆசனம், செய்யபோதாம் - செந்தாமரைமலராக உடைய, திருமகள்-பெரியபிராட்டியை, ஆக-மார்பிலுடையவனே, பல்பூணாரா-பலவகைப்பூஷணங்களை யுடையவனே, தனஞ்செயன் பாகா - அர்ச்சுனனுக்குச் சாரதியே, அரங்கத்து அமர்ந்தவனே - திருவரங்கத்தி லெழுந்தருளியிருப்பவனே, ஆராத - புசிக்கக்கூடாத, நஞ்சு எய்து - விஷம்பொருந்திய, கண்டன்-கண்டத்தையுடைய சங்கரன், நின்கீர்த்தி-உனது கல்யாணகுணங்களை, அறைவன் - சொல்லுவன், வேதா - பிரமன், திரு ஆராதனம் செய்வனென்றால் - அர்ச்சனைபரிவானெனில், அடியேன் - தாசனாகியநான், புகழ்கைக்கு - (உன்னை) பரவ, ஆர் - (இவ்விருவருள்) யார். எ-று.

ஙக. அமரவரம்பையினல்லார்பலரந்திக்காப்பெடுப்ப
அமரவரம்பையில்வேல்வேந்தர்சூழமண்ணாண்டிருந்தோர்
அமரவரம்பையிற்கான்போயிறந்தனராதலில்வீடு
அமரவரம்பையின்மஞ்சாரரங்கருக்காட்படுமே.

(இ-ள்.) அமர அரம்பையில் - தேவரம்பையைக்காட்டிலும், நல்லார் - நல்லவராகிய ஸ்திரீகள், பலர் - அனேகர், அந்திக்காப்பு எடுப்ப-திருவந்திக்காப்பெடுப்பவும், அமர - போரிணையுடைய, அரம்-அரத்தினல், பயில் - அராவப்பட்ட, வேல்-வேலாயுதத்தையுடைய, வேந்தர் - மன்னர், சூழ - புடைடசூழவும், மண் - இந்தப்பூதலத்தை, ஆண்டு - காத்து, இருந்தோர் - (செல்வத்துடன்) வீற்றிருந்த மண்டலேச்சுரரும், அம்மரம் - அந்தவிருக்ஷங்களின், வரம்பை இல்-எல்லை அற்ற, கான் - ஆரணியத்திற்கு, போய் - சென்று, இறந்தனர்-மாய்ந்தார்கள், ஆதலில் - ஆகையால், வீடு அமர-மோக்ஷம் அடைய, அரம்பையில்-வாழையில், மஞ்சு - மேகங்கள், ஆர்-தங்கும், அரங்கருக்கு-திரு அரங்கத்தையுடையவருக்கு, ஆட்படும்-தொண்டுபடுங்கள்.

நஉ. ஆளாகவந்தவடியேற்கருள்பரியானைதிண்டேர்
ஆளாகவந்தனிற்செற்றிலங்கேசனையட்டவல்வில்
ஆளாகவந்தன்புயந்துணித்தாயரங்காமுளரி
ஆளாகவந்தமிலுன்னடியார்க்கன்பனுவதற்கே.

(இ-ள்.) பரி - குதிரைகளையும், யானை - கஜங்களையும், திண்-வலிய, தேர் - ரதங்களையும், ஆள் - பதாதிகளையும், ஆகவம்தனில்-போர்க்களத்திலே, செற்று - ஜெயித்து, இலங்கேசனை - இலங்கைக்கரசனை, அட்ட - சங்கரித்த, வல் - வலிய, வில்லாளா - கோதண்டனே, கவந்தன் - கவந்தனென்னும் அரக்கனது, புயம் - தோள்களை, துணித்தாய் - அறுத்தவனே, அரங்கா - திருவரங்கனே, முளரியாள் ஆக - திருமகளை மார்பிலுடையவனே, அந்தம் இல் - முடிவு அற்ற, உன்-தேவரீருடைய, அடியார்க்கு-தாசர்களுக்கு, அன்பன் ஆவதற்கு-தாசன் ஆகிறதற்காக, ஆளாக-அடிமையென்று, வந்த-நின்சரணெய்திய, அடியேற்கு - அடியேனுக்கு, அருள் - கருணைசெய். எ-று.

நங. ஆவாகனத்தரடியார்மனத்துட்புள்ளானவொப்பில்
ஆவாகனத்தரரங்கர்பொற்றாளுக்கடிமைப்படார்
ஆவாகனத்தவழுக்குடல்பேணியறிவிழந்தவ
ஆவாகனத்தரிருந்தென்னிராமலென்னம்புவிக்கே.

(இ-ள்.) அடியார் - தாசர்களது, மனத்துள்-இதயகமலத்தின்கண், * ஆவாகனத்தர் - (ஆவாகனமாய்) எழுந்தருளப்பட்டவர், புள்ளான-(கருடப்) பறவையாகிய, ஒப்பில்லா - நிகரற்ற, வாகனத்தர்-ஊர்தியை யுடையவர், அரங்கர் - திருவரங்கர், (அவரது) பொன் தாளுக்கு - அழகிய பாதங்களுக்கு, அடிமைப்படார் - ஆட்படமாட்டார்கள், ஆவா - ஐயோ, கனத்த - பாரமுள்ள, அழுக்குடல் - மலக்கும்பையை, பேணி - பாதுகாத்து, அறிவிழந்து - மதிகெட்டு, அவா ஆகு-(சிற்றின்பத்தில்) ஆசைகொள்ளுகிற, அனத்தர் - பயனற்றவர்கள்

அம்புவிக்கு - நீர்சூழ்ந்த உலகத்தில், இருந்து என்-இருந்து என்ன லாபம், இராமல் என் - இல்லாது என்ன (நஷ்டம்). எ-று.

* ஆவாகனத்த ரடியார் மனத்துள்புள்ளான வொப்பிலாவாகனத்தர் என்பதற்கு, ஆ-இடபத்தையும், ஆகு-பெருச்சாளியையும், அனத்தர்-அன்னத்தையும் வாகனமாக வுடைய சிவன் விநாயகன் பிரமன் என்போராகிய, அடியார் - அடியாரது, மனத்துள் - மனத்தின்கண், புள்ளானவாகனத்தர் - பெரியதிருவடியாகிய ஒப்பற்ற வாகனத்தோடெழுந்தருளியிருப்பவர் எனவுரைத்தலுமாம். திருவரங்கருக் காட்படாதவர் இருந்தென்ன போயென்ன வென்பது கருத்து.

௩௪. அம்புவிலங்கைநகர்பாழ்படச்சங்குமாழியும்விட்டு
அம்புவிலங்கைகொண்டாயரங்காவன்றிடங்கர்பற்றும்
அம்புவிலங்கையளித்தாயினியென்னையாசையென்றிய்
அம்புவிலங்கையிட்டேசஞ்சிறையிலடைத்திடலே.

(இ-ள்.) அம் - அழகிய, புவி-பூமியிலுள்ள, லங்கைநகர்-லங்காபுரியிலுள்ளார், பாழ்பட-நாசமுற, சங்கும்-பாஞ்சசன்னியத்தையும், ஆழியும் - சுதரிசனாழ்வானையும், விட்டு-விடுத்து, அம்பு - பாணத்தையும், வில் - கோதண்டத்தையும், அம்கை - அழகியகையில், கொண்டாய் - பிடித்தவனே, அரங்கா - திருவரங்கனே, அன்று - முன்னாளில், அம்பு - ஜலத்திலே, இடங்கர் - முதலையானது, பற்றும் - பிடித்த, விலங்கை - (விலங்குருக்கொண்டிருந்த) கஜேந்திராழ்வானை, அளித்தாய் - ரக்ஷித்தவனே, இனி - இனிமேலும், என்னை - அடியேனை, ஆசையென்று - அவாவென்று, இயம்பு - சொல்லப்படுகிற, விலங்கை - தளையை, இட்டு - (என்காலில்) பூட்டி, சம்-ஜன்மமென்னும், சிறையில் - சிறைச்சாலையில், அடைத்திடல் - அடைக்காதே.

௩௫. இடவமலைக்கும்புயங்கமலைக்குமிலங்குமகல்
இடவமலைக்குமிருங்கமலைக்குமிறைவசங்கம்
இடவமலைக்கும்புனலரங்காவெய்த்தமார்க்கண்டன்கண்ட
இடவமலைக்குமுலகழியாதுள்ளிருந்ததென்னே.

(இ-ள்.) இடவமலைக்கும்-ரிஷபமலைக்கும் (திருமாலிருஞ்சோலைமலைக்கும்), புயங்கமலைக்கும்-சேஷகிரிக்கும், (வடமலைக்கும்) இலங்கும்-விளக்கமுற்ற, அகலிடம் அமலைக்கும் - பூதேவிக்கும், இரு-பெருமைபொருந்திய, கமலைக்கும் - ஸ்ரீதேவிக்கும், இறைவ - தலைவா, சங்கம் இட - பாஞ்சசன்னியத்தை இடதுகரத்தேந்தினவனே, அமலைக்கும்-ஆரவாரஞ்செய்யும், புனல்-(தென்திருக்காவேரி) நதி (பாயும்), அரங்கா - அரங்கநகருடையாய், எய்த்த - (பிரளயகாலத்து உலகெல்லாம் அழிவதைக்கண்ணுற்று) மனதிளைத்த, மார்க்கண்டன் - மார்க்கண்ட

முனிவன், கண்டிட-(நின் உதரத்துட்சென்று) பார்க்க, அம்-(பிரளய வெள்ள) நீர், அலைக்கும் - அழிக்கும், உலகு - புவனங்களெல்லாம், அழியாது - சற்றுஞ்சிதையாது, உள் - (நினது வயிற்றின்) உள்ளே, இருந்தது - தங்கியது, என்னே - என்னமாயமோ. எ-று.

அமலைக்கும் பெயரடியாகப் பிறந்தவினை.

ருசு. இருந்தையிலங்கவெளிறுபடாதென்செய்தாலுநிம்பத்து
இருந்தையிலந்தித்தியாதவைபோற்புல்லர்யாவுங்கற்றாய்ந்து
இருந்தையிலம்பன்னகண்ணார்க்கல்லால்வெண்ணெயில்லிலொளித்து
இருந்தையிலங்கையரங்கர்க்கன்பாகியிருக்கிலரே.

(இ-ள்.) என்செய்தாலும் - என்னவுபாயஞ் செய்யினும், இருந்தை-கரியானது, இலங்க-விளங்கத்தக்கதாக, வெளிறுபடாது-வெண்மைமேவாது, நிம்பத்து - வேம்பினது, இரு - (கைப்பால்) பெரிய, தையிலம்-நெய், தித்தியாது-இன்சுவைமேவாது, அவைபோல்-அவற்றைப்போல, புல்லர் - கயவர், யாவும் - சகலகலைகளையும், கற்று-பயின்று, ஆய்ந்து இருந்து-ஆராய்ந்து இருந்தும், அயில் அம்பு அன்ன-கூரிய வாளிபோன்ற, கண்ணார்க்கு அல்லால் - நயனங்களையுடைய மாதர்களுக்கு அல்லாமல், வெண்ணெய் - நவநீதத்தை, இல்லில் - மனையில், ஒளித்திருந்து - மறைந்திருந்து, அயில் - புசிக்கும், அரங்கர்க்கு-திருவரங்கருக்கு, அன்பாகி-நேசராகி, இருக்கிலர் - இருக்கமாட்டார்கள். எ-று.

அயில் அம்பு அன்ன என்பதற்கு வேலையும் அம்பையும் நிகர்த்த என்றுரைப்பினுமாம்.

ருஎ. இருக்குமந்தத்திலறியாவரங்கன்மண்ணேழுண்டுந்தய்
இருக்குமந்தத்திருவாய்மலர்ந்தானெட்டெழுத்தைக்குறிய்
இருக்குமந்தப்புத்தியீர்த்துநல்வீடெய்தலாகுங்கைபோய்
இருக்குமந்தச்செவிட்டூமன்முந்நீர்கடந்தேறிடிலே.

(இ-ள்.) இருக்கும் - வேதங்களும், அந்தத்தில் - முடிவில், அறியா - அறிதற்கெட்டாத, அரங்கன் - திருவரங்கன், மண்ணேழ்-சப்தலோகங்களையும், உண்டும் - புசித்தும், தயிர்க்கும் - ததிக்கும், அந்தம் - அழகிய, திருவாய்மலர்ந்தான் - திருவாயை அங்காந்தவன், (அவனது) எட்டெழுத்தை - அஷ்டாக்ஷரத்தை, குறியிருக்கும்-சிந்திக்காத உங்களுக்கும், மந்தப்புத்தி-கூர்மையற்ற அறிவினை, ஈர்த்து-அறுத்து, நல் - நல்ல, வீடு - மோக்ஷத்தை, எய்தலாகும் - அடையக்கூடும், கைபோயிருக்கும் - கரங்கள் அற்றுப்போன, அந்தச்செவிட்டு ஊமன்-குருடும் செவிடும் கலந்த ஓர் மூகையானவன், முந்நீர்கடந்து-(சப்தமகா) சமுத்திரங்களையும் தாண்டிப்போய், ஏறிடில் - அக்கரையேறுவானெனில். எ-று.

ஊமன் கடலைக்கடந்து கரை ஏறிடில் திருவஷ்டாக்ஷரத்தைச் சிந்தியாத உங்களுக்கும் வீடெய்தலாகுமென்பது கருத்து.

௩அ. ஏறுங்கரியும்பரியுஞ்செற்றான்பரனென்றுமன்றுள்
ஏறுங்கரிமறையாதலினாலையம்யாதுமக்கீடு
ஏறுங்கரியவரங்கர்க்கன்பாய்வினையென்னுமிடி
ஏறுங்கரியுமினிமேற்பிறவியிடரில்லையே.

(இ-ள்.) ஏறும் - (கஞ்சன் ஏவிய) விடையையும், கரியும்-வேழத்தையும், பரியும்-குதிரையையும், செற்றான்-சங்கரித்தவனே, பரனென்று - பரத்துவப்பொருளென்று, மன்றுள் ஏறும்-அவையேறுங்கள், கரி - சாட்சி, மறையாதலினால் - வேதமாகையினால், உமக்கு யாது ஐயம்-உங்களுக்கு என்ன சங்கை, கரிய - கருநிறத்தையுடைய, அரங்கர்க்கு - திருவரங்கருக்கு, அன்பாய் - நேசராய், ஈடேறும்-கரையேறுங்கள், வினையென்னும் இடி ஏறும் - பூர்வகன்மமாகிய சிறந்த இடியும், கரியும் - கரிந்துபோம், இனிமேல்-இனிமேலே, பிறவி இடர் இல்லை-பிறவித்துன்பம் இல்லையாம். எ-று.

௩௯. இடராகவந்தென்னைப்புன்சிறுதெய்வங்களென்செயுமான்
இடராகவன்பிணிமாநாகமென்செயும்யான்வெருவி
இடராகவன்னிபுனலிடிகோண்மற்றுமென்செயும்வில்
இடராகவன்னரங்கன்றிருத்தாளென்னிதயத்ததே.

(இ-ள்.) வில் இடம் - (சார்ங்கத்) தனுவை இடது கரத்தேந்திய, ராகவன் - ரகுவம்சத்துதித்தவன், அரங்கன் - திருவரங்கன், (அவனது) திருத்தாள் - திருவடி, என் - அடியேனது, இதயத்தது-மனத்தின்கண்ணுற்றது, (ஆதலால் இனி) இடர் ஆக - துன்பம்விளையத்தக்கது ஆக, வந்து - நெருங்கி, என்னை - அடியேனை, புன்சிறு தெய்வங்கள்-ஈனமுள்ள அற்பதேவதைகள், என்செயும்-யாதுசெய்யமாட்டுவன, மானிடர் - நரர்களது, ஆகம் வல்பிணி - யாக்கையில் (குடிகொள்ளும்) வலியநோய்களும், மாநாகம் - மகாசர்ப்பமும், என் செய்யும் - யாதுசெய்யமாட்டுவன, யான் - நான், வெருவி இட-நடுக்கங்கொள்ள, ராகம் - செந்நிறமுள்ள, வன்னி - நெருப்பும், புனல்-நீரும், இடி - அசனியும், கோள் - நவக்கிரகமும், மற்றும் - இன்னும் (பொல்லாங்குசெய்வன) யாவும், என்செயும்-யாதுசெய்யமாட்டுவன.

திருவரங்கன் திருவடி யென்னிதயத்ததாதலால் புன்சிறுதெய்வங்கள் முதலாயின தீங்குசெய்யாவென்பதாம்.

௪௦. அத்திரங்காயமெனவுணரேனெனதாசையுன்கை
அத்திரங்காயத்தியிற்பெரிதானனாயாகிப்பல்வீழ்
அத்திரங்காயந்திரம்போற்பொறியைந்தழியுமக்கால்
அத்திரங்காயரங்காவடியேனுன்னடைக்கலமே.

(இ-ள்.) காயம் - யாக்கை, அத்திரம் என-நிலையற்றது என்று, உணரேன் - ஓர்கிலேன், எனது - அடியேனது, ஆசை - அவாவோ, உன் - உனது, கை - கையால் பிரயோகஞ்செய்த, அத்திரம்-வாளி, காய்-தகித்த, அத்தியின் - கடலினும், பெரிது - மிக்கது, நரை ஆகி-நரைத்து, பல்வீழ - தந்தங்கள் விழ, திரங்கா - திரைந்து, யந்திரம் போல் - (சூத்திரம் அற்ற) மரப்பாவைபோல, பொறி ஐந்தும் - பஞ்சேந்திரியங்களும், அழியும் அக்காலத்து - அழியும் மரணதசையில், இரங்காய் - இரக்கமுற்றளிப்பாய், அரங்கா-திருவரங்கா, அடியேன்-தாசனாகிய நான், உன் அடைக்கலம் - நினது சரண்புக்கேன். எ-று.

ஆல்-அசை. "அப்போதைக்கிப்போதே சொல்லிவைத்தேன்" என்ற ஸ்ரீசூக்தியின்பொருள் இதிலமைந்துளது.

சக. கலக்கூழைக்கைக்குங்கருத்துடையீரரங்கத்துளிலைக்
கலக்கூழைக்கைக்குங்கறியிட்டுந்துய்த்திருங்காதுபடைக்
கலக்கூழைக்கைக்குள்வருவாணனைக்கண்ணுதலும்விட்ட
கலக்கூழைக்கைக்குப்பைகண்டானைவீதியிற்கண்டுவந்தே.

(இ-ள்.) கலக்கு-(மனத்தை) கலக்குகிற, ஊழை - ஊழ்வினையை, கைக்கும் - வெறுக்கும், கருத்துடையீர் - நினைவுடையவர்களே, காது - (பகைவரை) சங்கரிக்கும், படைக்கலம் - ஆயுதங்களையுடைய, கூழை-படைவகுப்பின், கைக்குள் - ஒழுங்கினுள்ளே வருவாணனை-வரப்பட்ட வாணாசுரனை, கண்ணுதலும் - நெற்றிக்கண்ணனாகிய சிவனும், விட்டு - கைவிட்டு, அகல - ஒழிய, கூழைக்கை - (அவனது) குறைபட்ட கைகளின், குப்பை-குவியலை, கண்டானை - விழச்செய்தவனை, வீதியில் - திருவீதியில், கண்டு - (பவனிவர) தரிசித்து, உவந்து - களித்து, இலைக்கலம் - இலையாகிய பாத்திரத்துள், கூழை-அன்னத்தை, கைக்கும் - கசக்கின்ற, கறி - பதார்த்தங்களை, இட்டு-சேர்த்துக்கொண்டு, துய்த்து - உண்டு, இரும்-இருங்கள், அரங்கத்துள்-திருவரங்கம் பெரியகோயிலிலே. எ-று.

சஉ. கண்டகனவின்பொருள்போலயாவும்பொய்காலனென்னும்
கண்டகனாவிகவர்வதுவேமெய்கதிநல்கெனக்
கண்டகனாவிப்பொழுதேசெல்கென்றருள்காரரங்கன்
கண்டகனாவின்புறக்கண்டுவாழ்த்திக்கடிதுய்ம்மினே.

(இ-ள்.) கனவின் - சொப்பனத்தில், கண்ட - பார்த்த, பொருள்போல - வஸ்துக்கள்போல, யாவும் - (சாக்கிரத்தில் காண்பன) அனைத்தும், பொய் - மித்தையே, காலன் என்னும் - யமனென்கிற, கண்டகன்-கொடியவன், ஆவி-உயிரை, கவர்வதுவே-கொள்வதுவே, மெய் - உண்மை (ஆதலால்) கதி-பரமபதத்தை, நல்கு என - (அரங்

கன் திருநாமம் செவியுறுவண்ணம் காதில் கண்டையணிந்துகொண் டே திரிந்த கண்டாகர்ணன் எனக்கு) தாஎன்றுகேட்க, கண்டகனு- கண்டாகனனே, இப்பொழுதே-இந்தக்ஷணமே, செல்கஎன்று-அடை வாயாக என்று சொல்லி, அருள் - அளித்த, கார் - மேகம்போன்ற, அரங்கன் - திருவரங்கனை, கடிது-விரைவில், கண்-நேத்திரங்களுக்கு, தக-பாங்குபெற, கண்டு - தரிசித்தும், நா-நாவுக்கு, இன்புற - இன்ப முண்டாக, வாழ்த்தி - துதிசெய்தும், உய்ம்மின் - உஜ்ஜீவியுங்கள்.

கண்டகம் - முள், அதுபோல உயிர்களை வருத்துவோனாதலால் கண்டகன் என்றார். பகைபாராட்டுவோனிடத்தும் அவனுக்கிருந்த தயாதிசயம் இதனாற் கூடப்பட்டது.

சரு. கடிக்கும்பணிநஞ்சமுதாகுந்தீங்குநன்காகும்பராக்
கடிக்கும்பணியலர்தாழ்வார்கல்லாமையுங்கற்றமையாம்
கடிக்கும்பணியறமெல்லாமரங்கர்பைங்கன்னித்துழாய்க்
கடிக்கும்பணியொளிக்குநல்லபாதங்கருதினர்க்கே.

(இ-ள்.) அரங்கர் - திருவரங்கருடைய, பை - பசிய, கன்னித் துழாய் - இளமையான துளசிமாலை, கடிக்கும் - பரிமளிக்கிற, பணி ஒளிக்கும் - ஆபரணங்கள் பிரகாசிக்கின்ற, நல்ல - நல்ல, பாதம்- திருவடிகளை, கருதினர்க்கு - மனனஞ்செய்தவர்க்கு, கடிக்கும்-கடிக் கின்ற, பணி-பாம்பினது, நஞ்சு - விடமும், அமுதாகும் - தேவாமிர்த மாம், தீங்கு - தீவினையும், நன்காகும் - நல்வினையாம், பராக்கடிக்கும்- அவமதிக்கும், பணியலர் - பகைஞரும், தாழ்வார்-பணிவார்கள், கல் லாமையும் - பயிலாதவிஷயங்களும், கற்றமையாம்-பயின்றனபோல் விளங்கும், பணி - தாம்புரிந்த, அறம் - தருமம், எல்லாம் - யாவும், கடிக்கும் - (தவறுதலின்றி) சித்திக்கும். எ-று.

திருவரங்கன் திருவடிகளின் சர்வசித்திப்ரதாபம் இதனாற் கூறப்பட்டது. கடிக்கும், ஒளிக்கும் என்னும் பெயரெச்சங்கள் இரண்டடுக்கி, பாதம் என்னும் ஒரு பெயர் கொண்டது.

சச. தினகரனார்கலிதீகாற்றொடுக்குஞ்செயலும்விண்மீ
தினகரனார்கொண்டலேழ்செருக்காமையுஞ்சென்றெதிர்மோ
தினகரனாருயிர்செற்றாரரங்கர்திகிரிசங்கேந்
தினகரனார்நம்பெருமாளமைத்ததிருக்கைகண்டே.

(இ-ள்.) தினகரன் - சூரியன், ஆர்கலி - கடல், தீ - தேயு, காற்று - வாயு, (இவைகளெல்லாம்) ஒடுக்கும் - (தத்தம் எல்லை இக வாது) அடங்கியிருக்கும், செயலும் - காரணமும், விண்மீதில் - ஆகாயத்தில், நகரனார் - பொன்னகர்க்கிறைவரது, கொண்டலேழ்- சப்தமேகங்களும், செருக்காமையும் - தருக்காததும், (யாதுகாரணத் தாலெனின்) எதிர்சென்று - நேராகவந்து, மோதின-எற்றின, கரன்-

கரன் என்னும் அரக்கனது, ஆர்-அருமையான, உயிர் - ஆவியை, செற்றூர் - (உடலில் நின்று நீங்க) கோபித்தவரும், அரங்கர் - திருவரங்கரும், திகிரி - சுதரிசனத்தையும், சங்கு - பாஞ்சசன்னியத்தையும், எந்தின - பிடித்த, கரனூர் - அஸ்தத்தையுடையவருமாகிய, நம் பெருமாள் - நம்பெருமாளானவர், அமைத்த - (நில்லென்று) குறித்த, திரு கை - திருக்கரத்தை, கண்டே - பார்த்தேயாம்.

தினகரன் முதலானவைகள் அமைந்துநடப்பன திருவரங்கனது திருக்கைகண்டென அவனது சர்வநியாமகத்வம் இதனாற் கூறப்பட்டது.

சரு. திருக்காவிரிக்கும்யமுனைக்குங்கங்கைக்குந்தெள்ளமுதாம்
திருக்காவிரிக்குங்கடற்கும்பிரான்றென்னரங்கமென்னத்
திருக்காவிரிக்குமொழியார்க்குத்தீமெழுகாவிரன்புய்த்
திருக்காவிரிக்குமதெவ்வாறவனுங்கள்சென்மத்தையே.

(இ-ள்.) திரு-அழகான், கா-நந்தவனங்களை, விரிக்கும்-(அவை வழியாய்த்தவழ்ந்து) பூத்திடச்செய்யும், யமுனைக்கும் கங்கைக்கும்-யமுனா நதி கங்காநதிகளைக்காட்டிலும், தெள் - தெளிவுற்ற, அமுது-அமிர்தம்போன்ற, ஆம் - நீரினையுடைய, திருக்காவிரிக்கும் - தென் திருக் காவேரிக்கும், கடற்கும் - க்ஷீரசாகரத்துக்கும், பிரான்-ஸ்வாமியினது, தென் - அழகுபெற்ற, அரங்கம்-திருவரங்கம், என்ன-என்று (ஓர் தரமேனும்) சொல்ல, அன்பு-காதல், உய்த்து இருக்கா-செலுத்தியிராமல், திருக்கு ஆவிர் - மாறுபடுவீர்கள், இக்கு-கரும்பையொத்த, மொழியார்க்கு - (இனிய) வசனங்களையுடைய மாதரிடத்து, தீ-அக்கினியிற்காட்டிய, மெழுகு ஆவிர்-மெழுகுபோலநைந்துருகுவீர்கள், (ஆகையால்) அவன் - அந்தச் சர்வேசுரன், உங்கள் - நுமது, சென்மத்தை - செனனத்தை, இரிக்குமது - நீக்கும்வண்ணம், எவ்வாறு-எவ்விதம். எ-று.

திருவரங்கத்தை ஸ்மரியாதிருக்கிறீர்களே உங்கள் ஜன்மத்தை அவனெங்ஙனமொழிப்பானென்று உயிர்கட்கிரங்கிக் கூறினர், ஆதலால் இது பரோபதேசம்.

சசு. சென்மந்தரங்கங்கருமஞ்சுழிபிணிசேலினங்கு
சென்மந்தரங்கதிர்பொன்கோள்கண்மாரிதிண்கூற்றசனி
சென்மந்தரங்கவற்றுள்விழுவோர்க்கணைசேர்க்கும்வங்கம்
சென்மந்தரங்கவின்றோளாரரங்கர்திருப்பதமே.

(இ-ள்.) சென்மம் தரங்கம் - சனனமாகிய சமுத்திரத்துள், கருமம்சுழி - இருவினையாகிய சுழலில், பிணி சேல் இனம் - நோயாகிய மச்சக்குலங்களினாலும், குசென் - செவ்வாய், மந்தர் - சனி, அம்

கதிர் - அழகுபொருந்திய சூரிய சந்திரர்கள், பொன்-வியாழம், (முத லாகிய) கோள்கள் - கிரகங்களாகிய, மாரி - மழையினாலும், திண்- வலியுடைய, கூற்று - யமனென்னும், அசனி-இடியினாலும், செல்- வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிற, மந்தர்-புத்தி நுட்பமில்லாதவரை யும், அங்கு - அந்தப்பிறவிக்கடலினுள்ளும், அவற்றுள் - பிற்கூறிய வற்றுள்ளும், விழுவோர் - இனிமேல் வீழ்பவரையும், கரைசேர்க்கும்- கரையேற்றும், வங்கம் - மரக்கலம், செல்-மேகங்கள் தவழும், மந்த ரம் - மந்தரகிரிபோல், கவின் - அழகுள்ள, தோள் ஆர் - புயங்கள் பொருந்திய, அரங்கர்-அரங்கரது, திருப்பதமே-திருவடியே. எ-று.

பிறவிக்கடலைக் கடத்தற்கு அவன் திருவடியே மரக்கலமெனத் திருவடிப்ரபா வாதிசயம் இதனாற் கூறப்பட்டது. "பிறவிப்பெருங் கடனீந்துவர்நீந்தார், இறைவனடி சேராதார்" என்றார் பிறரும். தோ ளின் கருமை மிகுதியை விளக்குதற்குச் செல்மந்தர மென்றார்.

சஎ. பதக்கமலங்கலணிமார்பபொன்னிபடிந்திமையோர்
பதக்கமலங்களறுசீரரங்கபகட்டயிரா
பதக்கமலங்கரித்தூர்வோன்சிவனயன்பார்க்கவந்துன்
பதக்கமலங்களடியேன்றலைக்கென்றுபாலிப்பதே.

(இ-ள்.) பதக்கம் - ஆரங்களையும், அலங்கல் - மாலைகளையும், அணி - தரித்த, மார்ப - மார்பையுடையவனே, பொன்னி - திருக்கா வேரியில், படிந்து - மூழ்கி, இமையோர்-தேவர்கள், பதக்கம்-பாவங் களையும், மலங்கள்-மும்மலங்களையும், அறு-நீக்கும், சீர் அரங்க-சிறப் புற்ற திருவரங்கநகருடையாய், பகடு - பெருமைபொருந்திய, அயிரா பதம் - வெள்ளையானையின், கம் - மத்தகத்தை, அலங்கரித்து - சிங் காரித்து, ஊர்வோன் - நடத்துகின்ற தேவேந்திரனும், சிவன்-மூன்று கண்களையுடைய சிவனும், அயன் - எட்டுக் கண்களையுடைய பிரம னும், பார்க்க - காண, வந்து - மேவி, உன் - நினது, பதம் கமலங் கள் - சரணாரவிந்தங்களை, அடியேன் - அடியேனது, தலைக்கு-சென் னியில், என்று - எந்நாளில், பாலிப்பது - கொடுப்பது. எ-று.

பாதகம் என்பது பதக்கம் எனச் சிதைந்து நின்றது. பகடு-யானை எனினுமாம்.

சஅ. பாலனஞ்செய்யமர்நாடாண்டுபூணுடுபட்டணிந்து
பாலனஞ்செய்யகலத்துண்டுமாதர்பல்போகத்தையும்
பாலனஞ்செய்யவிருப்பதிலையம்பருகிநந்தன்
பாலனஞ்செய்யவள்கோமானரங்கம்பயில்கைநன்றே.

(இ - ள்.) பால் - வெளுத்த, அன்னம் - அன்னப்பறவைகள், செய் - கழனிகளில், அமர் - பொருந்தியிருக்கிற, நாடு - நாட்டை,

ஆண்டு - அரசாட்சிசெய்து, பூணுடு-சகல ஆபரணங்களோடு, பட்டு-பட்டாடைகளையும், அணிந்து-தரித்து, பால் அன்னம்-பாற்சோற்றை, செய்ய கலத்து - செம்பொன்னினுற் செய்யப்பட்ட பாத்திரத்தில்-உண்டு-புசித்து, மாதர் பல்போகத்தையும் - பெண்முதலாகிய அஷ்ட போகங்களையும், பாலனஞ்செய்ய - பரிபாலிக்க, இருப்பதில் - இருக்கிறதிலும், ஐயம் - யாசித்ததை, பருகி - உண்டு, நந்தன் - நந்தகோபனுக்கு, பாலன்-குழந்தை, அம் - அழகிய, செய்யவள் - பெரியபிராட்டிக்கு, கோமான்-நாயகனது, அரங்கம் - திருவரங்கத்தில், பயில்கை-வாசஞ்செய்தல், நன்று-நன்மை. எ-று.

"பாலனஞ்செய்யமர் நாடு" என்றமையால் வண்மைபெறப்பட்டது. மாதர் பல்போகம் என்பதற்கு மாதரது பலவகையான சுகங்களெனினுமமையும்.

சகூ. பையிலத்திமூளை நரம்பூனுதிரம்பரந்தகுரம்
பையிலத்தியுள்விளைபாண்டமென்னுமற்புன்பாவையர்தோல்
பையிலத்திசெய் துநரகெய் துவீருய்யப்பற்றுமினோ
பையிலத்திமேவித்துயில்கூரரங்கர்பொற்பாதத்தையே.

(இ - ள்.) பயில் - (ஒன்றோடொன்று) பொருந்தியிருக்கும், அத்தி - எலும்பும், மூளை-மூளையும், நரம்பு-நரம்பும், ஊன்-தசையும் உதிரம்-இரத்தமும், பரந்த - பரவிய, குரம்பை-தேகத்தை, இலத்தி, மலம், உள்-அகத்தில், விளை-உண்டாகும், பாண்டம் - பாத்திரம், என்னுமல் - என்றுநினையாமல், புல் - இழிவுடைய, பாவையர் - மாதரது, தோல் பையில் - சரீரத்தில், அத்திசெய்து - இச்சைசெய்து, நரகு எய்துவீர் - நரகம் அடைபவரே, உய்ய - நீங்கள் பிழைக்க, பையில்-படத்தையுடைய சர்ப்பத்தின்மேலும், அத்தி-க்ஷீராப்தியிலும், மேவி-சேர்ந்து, துயில்கூர் - அறிதுயில் அமர்ந்த, அரங்கர் - திருவரங்கருடைய, பொன்பாதத்தை - பொலிவுற்ற திருவடிகளை, பற்றுமின்-ஆசிரயியுங்கள். எ-று.

தோல்பையில் அத்திசெய்து என்பதற்கு சரீரங் காரணமாகக் கொலைசெய்து என்றுரைப்பினுமாம்.

ருo. பாதகங்கைக்குமரங்கர்பல்பேய்பண்டிராவணனுற்
பாதகங்கைக்குமென்றெள்ளக்கொய்தார்படிக்கேற்றதிருப்
பாதகங்கைக்குள்விழுமுன்னமேபங்கயன்விளக்கும்
பாதகங்கைக்குளிர்நீர்வீழ்ந்ததீசன்படர்சடைக்கே.

(இ - ள்.) பாதகம் - (அடியார்களுடைய) பாவங்களை, கைக்கும் - வெறுக்கின்ற, அரங்கர் - திருவரங்கர், பல்பேய்-பல பேய்கள், பண்டு - முன்னாளில், இராவணன் - இராவணனது, உற்பாதம் - ஆச்

சரியகரமான, கம்-சிரங்களை, கைக்கும் என்று-கசக்குமென்று, எள்ள-நிந்திக்க, கொய்தார் - துணித்தவர், படிக்கு - உலகுக்காக, ஏற்ற-இரந்த, திருப்பாத - (கொடுத்ததை) திருப்பக்கூடாத, கம் - ஜலம், [அதாவது தாரைநீர்] கைக்குள்-ஹஸ்தத்தில், விழுமுன்னமே-வீழ்வதற்குமுன்னமே, பங்கயன் - பிரமன், விளக்கும்-திருமஞ்சனம்செய்த பாதம்கங்கை - திருவடிக்கண்பிறந்த மந்தாகினியின், குளிர் - தட்பமுள்ள, நீர் - தீர்த்தமானது, ஈசன் - சங்கரனது, படர் - பரவிய, சடைக்கு - சடையில், வீழ்ந்தது - விழுந்தது. எ-று.

வாமனன்கையில் மஹாபலியின் தாரைநீர்விழுவதன்முன், த்ரிவிக்ரமனது திருவடிகளைப் பிரமன் திருமஞ்சனஞ்செய்த தீர்த்தமானது சிவன் சடையில் விழுந்ததென்றார் விரைவின் மிகுதிதோன்ற.

௫க. படநாகத்தந்தரமீதிருப்பானெம்பரனரங்கன்
படநாகத்தந்தம்பறித்தோன்புகழைப்பரவுமின்க
படநாகத்தந்தக்கரணம்பொல்லான்சிசுபாலன்முற்பல்
படநாகத்தந்தவசைக்குந்தந்தான்றொல்பரகதியே.

(இ - ள்.) படம் - (ஆயிரம்) பணமுடிகளையுடைய, நாகத்து-திருவனந்தாழ்வான்மீது, அந்தரமீது - பரமபதத்தில், இருப்பான்-வீற்றிருப்பவன், எம்பரன் - எமது பரத்துவப்பொருளானவன், அரங்கன் - திருவரங்கன், நாகம்-வேழத்தினுடைய, தந்தம் - கோட்டினை, பட - அழிய, பறித்தோன் - பிடுங்கினவன், புகழை - (அவனுடைய) கல்யாணகுணங்களை, பரவுமின் - கொண்டாடுங்கள், கபடன் - வஞ்சகன், ஆகத்து - யாக்கையுள், அந்தக்கரணம் பொல்லான்-பொல்லாத அந்தக்கரணசதுஷ்டயமுள்ளவன் ஆகிய), சிசுபாலன் - சிசுபாலனானவன், முன் - பண்டு, பல்பட - பலவகையாக, நா - நாவினால், கத்து-பிதற்றிய, அந்தவசைக்கும் - அந்த நிந்தைச்சொற்களுக்கும், தொல்-பழமையுற்ற, பரகதி-சிரேஷ்டமான பரமபதத்தை, தந்தான்-கொடுத்தருளினான். எ-று.

சிசுபாலனது வசைக்குப் பயன் பரகதியாயின், நீங்கள் கொண்டாடுகைக்குப் பயன் பரகதியென்று சொல்லவேண்டாவென்பது கருத்து. அந்தக்கரண சதுஷ்டயம் என்றது மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்பவற்றை.

௫உ. பரவையில்லன்னகட்பாஞ்சாலிநின்பரமென்னநிரு
பரவையில்மேகலையீந்தானரங்கன்பணிந்திமையோர்
பரவையிலாழிப்பிரானடிக்கீழுற்பவித்தழியும்
பரவையில்மொக்குளைப்போற்பலகோடிபகிரண்டமே.

(இ ள்.) பரவு - விசாலித்த, அயில் அன்ன - வேல்போன்ற, கண் - விழிகளையுடைய, பாஞ்சாலி - துரௌபதை, நின்பரம் என்ன-

(என்னைக்காப்பது) உன்பாரமென்று முறையிட, நிருபர் - வேந்தர்களது, அவையில்-சபையில், மேகலை-(களையக்களைய வளர்ந்துகொண்டேவந்த) வஸ்திரத்தை, ஈந்தான் - அளித்தவன், அரங்கன் - திருவரங்கன், (அவனை) இமையோர் - நித்தியசூரிகள், பணிந்து-வணங்கி, பரவையில் - ஸ்தௌத்தியஞ்செய்துகொண்டேயிருக்கையில், ஆழி-சக்கரத்துக்கு, பிரான் - ஸ்வாமியினது, அடிக்கீழ் - பாதங்களின்கீழ், பரவையில் - கடலிலுதிக்கும், மொக்குளைப்போல் - நீர்க்குமிழிகளைப் போல, பலகோடி - அநந்தங்கோடி, பகிரண்டம் - பகிரண்டங்கள், உற்பவித்து - தோன்றி, அழியும் - மாய்ந்துபோம். எ-று.

ஆழிப்பிரான் என்பதற்கு க்ஷீராப்திநாதன் எனினு மமையும். பகிரண்டம் - வெளியண்டம்; அதாவது பூகோளககோளங்களுக்குப் புறத்திலுள்ளது.

ருங. அண்டமடங்கலையுந்தந்துகாத்தவையந்தந்தன்பால்
அண்டமடங்கலைச்செய்காரணமம்பொன்முத்தலைவான்
அண்டமடங்கலையீர்த்தோடும்பொன்னியரங்கன்புட்கார்
அண்டமடங்கலைமுந்நீர்மகளுகப்பாகவென்றே.

(இ-ள்.) அம் - அழகிய, பொன் - பொன்னையும், முத்து - முத்தையும், (கொழிக்கும்) அலை - திரைகள், வான் அண்ட-மேகமண்டலத்தை அளாவிட, மடங்கலை-சிங்கங்களை, ஈர்த்தோடும் - இழுத்துக்கொண்டு ஓடிவராநின்ற, பொன்னி - காவிரி (சூழ்ந்த), அரங்கன்-திருவரங்கன், அண்டம் அடங்கலையும்-அகிலாண்டங்களையும், தந்து-சிருஷ்டித்து, காத்து - அளித்து, அவை - (மீண்டும்) அவையாவும், அந்தம்-கடைசியில், தன்பால் - தன்னிடத்து, அண்ட-ஒடுங்க, மடங்கலை - ஊழிக்காலத்தை, செய்-உண்டாக்கும், காரணம் - ஏது (யாதெனில், புள்-பறவையாகிய, காரண்டம் - நீர்க்காக்கை, அடங்கு - தங்குகின்ற, அலை-அலைகளையுடைய, முந்நீர்மகள் - கடலுக்குமகளாகியலட்சுமி, உகப்பாக என்றே - களிப்பெய்தத்தான். எ-று.

திருவரங்கன் முத்தொழிலைச்செய்வது பிராட்டி லீலார்த்தமென்பது கருத்து. வானண்ட மடங்கலையீர்த்தோடும் என்பதற்கு வான்-ஆகாயத்திலுள்ள, நண்டு-கற்கடகராசியையும், அம்மடங்கல் - அந்தச் சிங்கராசியையும், ஈர்த்து-இழுத்துக்கொண்டு, ஓடும்-ஓடுகின்ற, எனினுமாம்.

ருச. ஆகமதிக்குமுகமேன்முகமுடையானயன்வாழ்
ஆகமதிக்குநவநீதக்கள்வவவனிகொள்வார்
ஆகமதிக்குளஞ்சேரரங்காவுன்னையன்றித்தெய்வம்
ஆகமதிக்குளெண்ணேனடியேன்பிறராணையுமே.

(இ-ள்.) ஆகம-ஆகமவிதிகளுக்கிறைவனே, திக்குமுகம்-நான்கு முகங்களுக்கு, மேல்-மேலும், முகமுடையான் - ஒருமுகமுடைய சிவனும், அயன் - பிரமனும், வாழ் - உறையும், ஆக - திருமேனியாய், மதிக்கும்-கடைந்தெடுக்கும், நவநீதம்கள்வ - நவநீதசோரா, அவனி-பூமியை, கொள்-(நுதிக்கோட்டில்) கொண்ட, வாராக-கேழலாயுற்றவனே, மதிக்குளம் - சந்திரபுஷ்கரணி, சேர்-கூடின், அரங்கா - அரங்கநகருடையாய், உன்னை அன்றி - நின்னையல்லாது, அடியேன்-தொண்டன், பிறர் ஆனாயும் - வேறே ஒருவனையும், தெய்வமாக - தேவனென்று, மதிக்குள் - மனத்தில், எண்ணேன் - கருதேன். எ-று.

நவநீதம்-வெண்ணெய். கேழல்-பன்றி. "மறந்தும்புறந்தொழா மாந்தர்" என்னும் ஸ்ரீசூக்தியில் தமது அத்யவசாயமிருந்தபடியை இதனால் வற்புறுத்தினர்.

௩௫. ஆரத்தநந்தருந்தாய்தந்தையாநந்தமாவரிகழ்
ஆரத்தநந்தன்றீமைகண்டாலங்கௌத்துவபூண்
ஆரத்தநந்தசயனுவணியரங்காதிகிரி
ஆரத்தநந்தன்மதலாயென்றீங்குனக்கத்தன்மைத்தே.

(இ-ள்.) ஆர - குடிக்க, தனம்தரும் - முலைகொடுக்கும், தாய்-அன்னையும், தந்தை - தாதையும், அ தம் - அந்தத் தமது, நந்தனன்-புதல்வனது, தீமை - (தம்மை உதைத்தல் ஏசல் இவைமுதலிய) தீக்குணங்களை, கண்டால்-செய்தால், ஆனந்தமாவர்-பூரிப்புக்கொள்வர், இகழார் - (அக்குற்றங்களுக்காகச் சற்றும்) நிந்தித்திடார்கள், அம் - அழகான, கவுத்துவபூணாரத்து - கௌஸ்துவாபரணமுடைய, அனந்தசயனு - சேஷசாயீ, அணி - அழகு பெற்ற, அரங்கா - திருவரங்கா, திகிரி-சக்கரம், ஆர் - பொருந்திய, அத்த - கரத்தோய், நந்தன்மதலாய் - நந்தன்புத்திரனே, என்தீங்கு-எனது பிழையும், உனக்கு - தேவரீருக்கு, அத்தன்மைத்து-அத்தன்மையதேயாம். எ-று.

௩௬. அத்தனுமன்புளவன்னையும்பேருமனந்தமதாம்
அத்தனுமன்புலனுதலினுண்டருளம்புயைவீர்
அத்தனுமன்புயமீதேறரங்கனஞ்சார்ங்கவயிர்
அத்தனுமன்புகல்பேரிருவீர்க்குமடியனென்றே.

(இ-ள்.) அத்தனும் - தந்தையும், அன்புள - ஆசையுடைய, அன்னையும் - தாயும், பேரும்-நாமமும், அநந்தமதாம் - எல்லையற்றதாகிய, அத்தனு - அவ்வவ்வுடல்களில், மன் - பொருந்திய, புல்லன்-கயவன், ஆதலின் - (யான்) ஆகையால், அம்புயை-லட்சுமி, வீரத்து-(புஜபல) பராக்கிரமமுடைய, அனுமன்-சிறியதிருவடியின், புயமீது-தோண்மேல், ஏறு - எழுந்தருளும், அரங்கன் - திருவரங்கன், அம்-

அழகான, சார்ங்கம்-சார்ங்கமென்னும், வயிரம்-வயிரமேறிய, தனு-கோதண்டத்துக்கு, மன் - இறைவன், (என்று) புகல் - சொல்லப்படும், பேரிருவீர்க்கும் - பெருமையுற்ற உம் இருவருக்கும், அடியனென்று - தொண்டனென்று, ஆண்டருள் - (நீ என்னை) காத்தருள்.

பெரிய பிராட்டியும் திருவரங்கனுமாகிய நும் மிருவருக்கும் யான் அடிமையாகையால் அடியேனைக் காத்தருள்க வென்பது கருத்து.

ருஎ. அடியவராகவுமாட்கொள்ளவுமெண்ணியாருயிர்கட்கு
அடியவராகம்படைத்தமையாலகமேபெரிய
அடியவராகவரங்கருக்காட்செயருட்கதையால்
அடியவராகஞ்செய்மாரனுக்காட்செயுமைவரையே.

(இ-ள்.) அடியவர் ஆகவும் - தொழும்பர்களாகவும், ஆட்கொள்ளவும்-(அங்ஙனம் ஆனவரை) அடிமைகொள்ளவும், எண்ணி-நினைத்து, ஆர்-நிறைந்த, உயிர்கட்கு - சேதனங்களுக்கு, அடி - ஆதிகாரணமாயின, அவர் - அவர், ஆகம்படைத்தமையால்-மனித சரீரத்தைக் கொண்டதினாலே, அகமே-நெஞ்சே, பெரிய அடிய-பெருங்கால்களையுடைய, வராகம் - வராகமாயவதரித்த, அரங்கருக்கு - திருவரங்கருக்கு, ஆட்செய - தொண்டுபூண, (பூண்டு) அருள்-(அவரது) கிருபையென்னும், கதையால் - தண்டாயுதத்தினால், அவம் - பயனற்ற, ராகம் - காமத்தழலை, செய்-மூட்டுகிற, மாரனுக்கு - மன்மதனுக்கு, ஆட்செயும்-பணிவிடைபண்ணும், ஐவரை - பஞ்சேந்திரியங்களையும், அடி - மோது. எ-று.

திருவரங்கர் மனிதசரீரத்தைக் கொண்டதினால், நீ யவருக்கடிமைசெய்து உஜ்ஜீவித்தல் எளிதென்பது கருத்து.

ருஅ. வரையாழிவண்ணரரங்கேசரீசன்முன்வாணன்றிண்டோள்
வரையாழியார்புள்ளின்வாகனத்தேவந்தநாடொட்டிற்றை
வரையாழியதுயராய்த்தூசுநாணுமதியுஞ்செங்கை
வரையாழியும்வளையுமிழந்தாளென்மடமகளே.

(இ-ள்.) வரை - மலையையும், ஆழி-கருங்கடலையும் போன்ற, வண்ணர் - திருமேனியையுடையவர், அரங்கேசர் - ரங்கநாதர், ஈசன்முன் - சிவன்முன்னர், வாணன் - வாணுசுரனுடைய, திண்-பலம்பொருந்திய, தோள் - புயங்களை, வரை - நீக்கிய (அறுத்த), ஆழியார்-சக்கரத்தையுடையார், புள்ளின்வாகனத்தே-கருடவாகனத்தேறி, வந்த - பவனிகடாத்திவந்த, நாள்தொட்டு - நாள்தொடங்கி, இற்றைவரை-இதுவரைக்கும், ஆழிய துயராய் - ஆழ்ந்த மனவியாகுலமெய்தி, தூசும்-ஆடையையும், நாணும்-நாணத்தையும், மதியும்-

அறிவையும், செம்கை - செய்யகரத்து, வளை - ரேகைகளையுடைய, ஆழியும் - மோதிரத்தையும், வளையும் - வளையலையும், இழந்தாள் - இழந்தனள், என்மடமகள் - என் இளமையாகிய பெண். எ-று.

எதிரிலிருந்தும் ஒன்றுஞ்செய்ய வல்லனல்ல னென்பது தோன்ற ஈசன்முன் வாணன்றிண்டோள் வரையாழியார் என்றார். இது திருவரங்கரது பவனி சேவித்து நாணம் முதலியவற்றை யிழந்த தன்பெண்ணினது வருத்தங்கண்ட நற்றாய்கூற்று.

௫௯. மகரந்தகாதலைவாழ்வென்னவாரிசுட்டாய்திதிதன்
மகரந்தகாதலைவானினுள்ளோர்க்குமண்ணோர்க்குவட்டா
மகரந்தகாதலைவார்குழையாய்வளர்சீரங்கதா
மகரந்தகாதலைவாக்கிற்சொல்லேன்மடவாரெதிரே.

(இ-ள்.) மகரம் - சுறுக்கள், அலைவாழ்வு - கடல்வாழ்க்கை, தகாதென்ன - இனிக்கூடாதெனத்தக்கதாக, வாரி-சமுத்திரத்தை, சுட்டாய் - தகித்தவனே, திதி தன்மகர் - திதி புத்திரர்களுக்கு, அந்தகா - காலனே, தலை - முதன்மைபெற்ற, வானினுள்ளோர்க்கு-வானவர்க்கும், மண்ணோர்க்கு-மனிதர்க்கும், உவட்டா-தெவிட்டாத, மகரந்த-தேனே, காது - கன்னத்தில், அலை - அசையாநின்ற, வார்-நெடிய, குழையாய் - குண்டலங்களைத்தரித்தவனே, வளர் - கண் வளர்கின்ற, சீரங்கம் - திருவரங்கமென்னும், தாம - திவ்யக்ஷேத்திரத்தை யுடையவனே, கரந்த - (நின்மேல்) மறைவுற்றிருக்கும், காதலை - மோகத்தை, மடவார் எதிரே - பெண்கள் முன்னர், வாக்கில் - வாக்கினால், சொல்லேன் - சொல்லமாட்டேன். எ-று.

திதிமகர் - அசுரர். இது தலைவி கூற்று.

௬0. வாராகவாமனனேயரங்காவட்டநேமிவல
வாராகவாவுன்வடிவுகண்டான்மன்மதனுமட
வாராகவாதரஞ்செய்வனென்றாலுய்யும்வண்ணமெங்கே
வாராகவாசமுலையேனைப்போலுள்ளமாதருக்கே.

(இ-ள்.) வாராக - வராக அவதாரத்தையுடையவனே, வாமனனே - வாமனனே, அரங்கா - திருவரங்கனே, வட்டநேமி - சக்கராகாரமான திருவாழியாழ்வானை, வலவா - வலதுகரத்துடையவனே, ராகவா - ரகு வம்சத்துதித்தவனே, உன்-நினது, வடிவு-திருமேனியை, கண்டால் - பார்த்தால், மன்மதனும் - காமனும், மடவார் ஆக-பெண்களாய்ப்பிறக்க, ஆதரஞ்செய்வன் என்றால்-ஆசைப்படுவானெனில், ஆகம் - மார்பிலே, வார் - கச்சும், வாசம்-மணமும் பொருந்திய, முலையேனைப்போலுள்ள - முலைகளையுடைய என்னைப் போலிருக்கிற, மாதருக்கு - பெண்களுக்கு, உய்யும் - பிழைக்கும், வண்ணம் - விதம், எங்கே - யாங்ஙனம். எ-று.

அழகிற்சிறந்த மன்மதனும் உன்னுருவைக்கண்டு தான் பெண்ணுருக்கொண் டுன்னழகினது நலத்தை யனுபவிக்க வெண்ணுவனாயின், எங்களையொத்த மடமங்கையருக்குப் பிழைக்கும்வழி யென்னென்பதாம். இது தலைவிகூற்று.

௬௧. மாதம்பத்துக்கொங்கையுமல்குற்றேரும்வயிறுமில்லை
மாதம்பத்துக்குறியுங்கண்டிலேம்வந்துதோன்றினைபூ
மாதம்பத்துக்கெதிர்மார்பாவரங்கத்துவாழ்பரந்தா
மாதம்பத்துக்கருத்தில்லார்பிறப்பென்பர்வையகத்தே.

(இ-ள்.) மா-பெரிய, தம்பத்து - தூணில், கொங்கையும்-ஸ்தநங்களும், அல்குல் - சகனப்பிரதேசமாகிய, தேரும் - தேர்த்தட்டும், வயிறும் - குக்ஷியும், இல்லை - இல்லை, பத்துமாதம் - ஈரைந்துதிங்கள் வரைக்கும், குறியும்-(காணப்படுகிற) குறிகளையும், கண்டிலேம்-காண்கிலேம், வந்துதோன்றினை - வந்து அவதரித்தாய், பூமாது - இலக்குமியினது, அம்பத்துக்கு - கண்களுக்கு, எதிர்-பிரத்தியக்ஷமாய்விளங்கும், மார்பா - மார்பையுடையவனே, அரங்கத்து - திருவரங்கத்தில், வாழ் - உறையும், பரந்தாமா - பரந்தாமனே, தம்-தமக்குரிய, பத்துக் கருத்து - பக்தியாகிய நினைவு, இல்லார் - அற்றவர், பிறப்பென்பர்-(நரசிங்கமும்) சென்மமுடையதென்பர், வையகத்தே-பூமியிலே. எ-று.

பத்து-பக்தி; அது "பத்துடையடியவர்" என்ற ஸ்ரீசூக்தியின் வ்யாக்யாநத்தால் விசதம்.

௬௨. வைகுந்தர்தாமரைபோற்பாதர்நாகத்துமாதர்புட
வைகுந்தமேற்கொண்டிருந்தோர்வடிவைந்தின்வாழுமிடம்
வைகுந்தம்பாற்கடன்மாநீரயோத்திவண்பூந்துவரை
வைகுந்தமன்பர்மனஞ்சீரரங்கம்வடமலையே.

(இ-ள்.) வை-கூரிய, குந்தர் - குந்தாயுதத்தையுடையவர், தாமரைபோல் - செந்தாமரைபோல, பாதர் - சரணுடையவர், மாதர்-கோபியரது, புடவை - துகிலை, நாகத்து - புன்னைவிருக்ஷத்திலும், குந்தமேல் - குருந்தமரத்திலும், கொண்டு - கவர்ந்துபோய், இருந்தோர் - ஒளித்திருந்தவர், வடிவைந்தில் - ஐந்துருவோடும், வாழும்-உறையும், இடம் - தலங்கள், வைகுந்தம் - பரமபதமும், பாற்கடல்-க்ஷீராப்தியும், மாநீர் - கங்காநீர், (சூழ்தரும்) அயோத்தி - திருவயோத்திமாநகரமும், வண்பூந்துவரை-வளம்பொருந்திய அழகிய துவாரகாபுரியும், வைகும் - தங்குகின்ற, தம் - தமது, அன்பர் - தொண்டர்களுடைய, மனம்-இதயகமலமும், சீர்-சிறப்புற்ற, அரங்கம்-திருவரங்கமும், வடமலை - திருவேங்கடமுமாம். எ-று.

பரத்வம் முதலியவற்றை வைகுந்தமுதலியவற்றில் முறையே காண்க வென்பதாம்.

௩௭௩. வடமலைதென்மலைகச்சிகுறுங்குடிமானிற்பது
வடமலைவேலையரங்கங்குடந்தைவளருமிடம்
வடமலைகொங்கைத்திருவோடிருப்புவைகுந்தங்கர
வடமலையன்பருள்ளநடையாட்டமறையந்தமே.

(இ-ள்.) மால்-திருமால், நிற்பது - நின்றதிருக்கோலமாயெழுந்தருளியிருப்பது, வடமலை - சேஷாசலம், தென்மலை - திருமாலிருஞ்சோலைமலை, கச்சி-திருக்காஞ்சி, குறுங்குடி - திருக்குறுங்குடி, வளருமிடம் - சயனத்திருக்கோலமாயிருப்பது, வடம் - ஆலிலை, அலை-அலைகளையுடைய, வேலை - பாற்கடல், அரங்கம் - திருவரங்கம், குடந்தை- திருக்குடந்தை, வடம்-தாழ்வடங்கள், அலை-அசைகின்ற, கொங்கை- ஸ்தனங்களையுடைய, திருவோடு - பெரியபிராட்டியாருடன், இருப்பு- வீற்றிருந்த திருக்கோலமாயிருப்பது, வைகுந்தம் - பரமபதம், நடை- சென்றதிருக்கோலமாயிருப்பது, கரவடம் - வஞ்சக முதலியவை, அலைய - கெடும்படி, அன்பர் - பாகவதர்களுடைய, உள்ளம் - மனம், ஆட்டம்-நடிக்கும்கோலமாயிருப்பது, மறை அந்தம்-வேதத்தின்முடிவு

குடந்தை - கும்பகோணம். நான்காமடியில் அலைய என்னும் செயவெனெச்சத்தின் அகரம் தொகுத்தல்.

௩௭௪. அந்தகராசலம்வந்தாலுனையழையாதிருப்பார்
அந்தகராசலங்காபுரியார்க்கரங்காமறையின்
அந்தகராசலக்கூக்குரலோயுமுன்னாழ்தடங்கல
அந்தகராசலத்தேதுஞ்சநேமியறுக்கக்கண்டே.

(இ-ள்.) ராச லங்காபுரியார்க்கு - ராஜரீகம்பொருந்திய இலங்கைவாழரக்கருக்கு, அந்தக - காலனே, அரங்கா - திருவரங்கனே, மறையின் - வேதத்தின், அந்த-அந்தத்தில் நடிப்பவனே, கராசலம்- யானையின், கூக்குரல்-விளிக்கும் ஓசை, ஓயுமுன்-அடங்குமுன்னமே, ஆழ்-ஆழ்ந்த, தடம்-வாவியுள், கலந்த - சேர்ந்த, கரா-முதலையானது, சலத்தே - நீரிலே, துஞ்ச - இறக்க, நேமி - உன்சக்கரம், அறுக்க- சேதித்திட, கண்டு - பார்த்தும், ஆசு-தீங்கு, அலம்-சஞ்சலம், (இவை முதலியவை) வந்தால் - நேர்ந்தகாலத்து, உன்னை - நின்னை, அழையாது - (ஆபத்பாந்தவா என) அழைக்காமல், இருப்பார்-(அந்தத்துன்பங்களிலே) இருப்பவர், அந்தகர்-குருடர். எ-று.

ஞானமாகிய கண்ணில்லாராதலால் அந்தகர் என்றார். கரம் அசலம்-கையையுடையமலை.

௩௭௫. அறுகுதலைப்பெய்பனிபோன்றதாதுருவாய்ப்பிறந்தல்
அறுகுதலைப்பிள்ளையாய்க்காளையாய்க்கிழமாகியையள்
அறுகுதலைச்செய்துவீழ்காயநானென்னுமாரிருளை
அறுகுதலைக்கொள்பணியரங்காநின்கழலைதந்தே.

(இ-ள்.) அறுகுதலை - அறுகம்புல்லின் நுனியில், பெய்-வீழும், பனிபோன்ற - பனிபோலும் சிறிய, தாது - இந்திரியம், உருவாய்-ரூபங்கொண்டு, பிறந்து-சென்மித்து, அலறு-அழுகிற, குதலைப்பிள்ளையாய் - மழலைச்சொற்களையுடைய சிசுவாய், காளையாய் - யௌவனமடைந்து, கிழமாகி - மூப்படைந்து, ஐ - சிலேஷ்மமாகிய, அளறு-சேறு, உகுதலைச்செய்து - சிந்தி, வீழ்-இறக்கின்ற, காயம்-சடலத்தை, நான் என்னும்-நான் என்றுசொல்லும் அகங்காரமாகிய, ஆர்-நிறைந்த, இருளை - அந்தகாரத்தை, அறு - நீக்கு, கு-பூமியை, தலை - முடியில், கொள் - சுமக்கும், பணி - திருவனந்தாழ்வானிடத்து, (துயில்கூரும்) அரங்கா-திருவரங்கனே, நின்கண் - உன்னிடத்தில், ஆசை - அன்பு, தந்து - அளித்து. எ-று.

ஆசை தந்து அறு என வியையும். பால்யம்முதலிய துன்பங்களையடைந்து மரித்தற்குரியதுடம்பு ஆதலால் அதனை நானென்றகங்கரித்துத் திரியும் சரீராத்மபாவந்தீரும்படி உன்னிடத் தன்புண்டாகச் செய்யவேண்டுமென்பதாம். குதலைக்கொள் என்ற விசேடணத்தால் பணி என்பது திருவனந்தாழ்வானை யுணர்த்திநின்றது.

கூகூ. ஆசுகவிக்குநிகரெனக்கில்லையென்றற்பணைப்பூ
ஆசுகவிக்குவில்வேள்வடிவாவறிவாலகத்திய்
ஆசுகவிக்குவலயமன்னுவென்றரற்றியிரந்து
ஆசுகவிக்கும்புலவீர்புகழ்மினரங்கனையே.

(இ-ள்.) ஆசுகவிக்கு - ஆசுகவிபாடுவதில், எனக்கு நிகர் இல்லையென்று - என்னைப்போன்றவரில்லையென, அற்பணை - புல்லர்களை, பூ ஆசுகம் - புஷ்பபாணத்தையும், இக்குவில் - கருப்புவில்லையுமுடைய, வேள்வடிவா - மன்மதசொரூபனே, அறிவால் - கல்வியறிவால், அகத்தியா - குறுமுனியே, சுகம்-சுகத்தையனுபவிக்கும், இ-இந்த, குவலய மன்னு-மண்டலேச்சுரனே, என்று அரற்றி - எனப்பிதற்றி, இரந்து-ஏற்று, ஆசு - குற்றங்களால், கவிக்கும் - மூடப்பட்ட, புலவீர்-புலவர்களே, அரங்கனையே-திருவரங்கனையே, புகழ்மின்-பரவுங்கள். எ-று.

பந்தத்துக்கேதுவான நரஸ்துதிசெய்வதைவிட்டு, வீட்டுக்கு ஹேதுவான ஸ்ரீரங்கநாதனைத் துதிசெய்யுங்கள் என்பதாம். ஆசுகவி-விரைவாகப்பாடுங்கவி.

கூஎ. கனகவிமானமற்றீனர்க்குரைக்கிலென்கால்பெற்றவா
கனகவிமான ற்கருடப்புள்ளூர்தியைக்கான்மலர்கோ
கனகவிமானம்புவிமான்றடவரக்கண்வளரும்
கனகவிமானத்தரங்கனைநாச்சொல்லக்கற்றபின்னே.

(இ-ள்.) கால் - வாயுபகவான், பெற்ற-ஈன்ற, வாகனம்-ஊர்தியாகிய, கவி-சிறியதிருவடியையும், மால் - பெருமைபொருந்திய, நல்-

அழகுள்ள, கருடப்புள் - திருவடியையும், ஊர்தியை-நடத்துமவனை, கால்மலர் - திருவடித்தாமரைகளை, கோகனகம் - தாமரையாகிய, விமலரில் உள்ள, மான் - மான்போன்ற இலக்குமியும், அம்புவிமான்-அழகிய பூதேவியும், தடவர-வருட, கண்வளரும்-துயில்கூரும், கனக விமானத்து - சொன்னவிமானத்தையுடைய, அரங்கனை - திருவரங்கனை, நா - நாவினால், சொல்ல - ஸ்தௌத்தியஞ்செய்ய, கற்றபின்-பயின்றபிறகு, கனம் - பெருமைபொருந்திய, கவி - கவித்துவங்களை, மானம் - கவுரவம், அற்று - ஒழிந்து, ஈனர்க்கு - புல்லர்க்கு, உரைக்கிலென்-சாற்றிலேன். எ-று,

திருவரங்கனை ஸ்துதிசெய்யக் கற்றபின் மானுடம்பாடுந் தொழிலொழிந்தேனென்பதாம்,

௬௮. கற்றினமாயவைகாளையர்வான்கண்டுமீணினைவ
கற்றினமாயமுநீகன்றுகாளையராகிப்பல்ப
கற்றினமாயர்பரிவுறச்சேரிகலந்தமையும்
கற்றினமாயவொண்ணுவரங்காசெங்கமலற்குமே,

(இ-ள்.) கற்றினமாயவை - பசுக்குலங்களும், காளையர்-வாலிபர்களும், வான் - விண்ணுலகை, கண்டு - பார்த்து, மீள் - திரும்பிய, நினைவு - ஞாபகத்தை, அகற்றின - விலக்கிய, மாயமும் - ஆச்சரியமும், நீ-நீயே, கன்று - (அந்தப் பிரமன் கவர்ந்துகொண்டுபோன) கன்றுகளும், காளையர்-சிறுவர்களும், (போல) ஆகி-உருவெடுத்து, பல்பகல் தினம்-வெகுநாள்வரைக்கும், ஆயர் - இடையர், பரிவு உற - (தங்கள் தங்கள் கன்றுகள் பிள்ளைகள் என்று வேற்றுமையின்றி) அன்பு உற்றிருக்கும்படி, சேரி - திருவாய்ப்பாடியுள், கலந்தமையும் - சேர்ந்து இருந்தமாயமும், அரங்கா - திருவரங்கனே, செம் கமலற்கும் - செய்ய தாமரையில் வந்தபிரமனுக்கும், கற்று - பயின்று, இன்னம் ஆயவொண்ணு-இன்னமும் ஆராய்க்கூடாது. எ-று.

திருவரங்கனே, நீ கண்ணனவதாரத்தில் பிரமன் கவர்ந்துசென்ற பசுபாலர்களுக்கு விண்ணுலகிற்சென்று மீண்ட நினைவு சற்றுமில்லாதகற்றியமாயமும் அந்தப் பசுபாலர்களாக நீ யெடுத்த உருவை ஆயர் அறியாது வேற்றுமையில்லா திருக்கச்செய்த மாயமும் இன்னமும் பிரமனும் அறியப்படா என்பதாம்.

௬௯. கமலங்குவளைமடவார்தனங்கண்களென்றுரைத்த
கமலங்குவளைமுதுகாகியுங்கனாவீர்புனற்கா
கமலங்குவளைவிளையாடரங்கன்விண்காற்றுகனல்
கமலங்குவளையுண்டான்றெண்டராயும்மின்காமமற்றே.

(இ-ள்.) மடவார் - மாதர்களுடைய, தனம்-ஸ்தனங்களை, கமலம் - தாமரைமொட்டு, கண்கள் - நாட்டங்களை, குவளை - நீலோற்

பலம், என்று உரைத்து - என (உவமானங்கள் கற்பித்து) சொல்லி, அகம்-மனமானது, மலங்கு - வருந்துகின்ற, வளைமுதுகு ஆகியும்-கூன் வந்தும், கரைவீர் - மனம் உருகுகின்றவர்களே, காமம் அற்று-(அந்த) மோகத்தை ஒழித்துவிட்டு, புனல்காகம் - நீர்க்காகங்களும், மலங்கு-விலாங்குமச்சமும், வளை-சங்குகளும், விளையாடு - விளையாடுதற்குரிய நீர்வளமுள்ள, அரங்கன் - திருவரங்கநகரத்தையுடையவன், விண்-ஆகாயம், காற்று - வாயு, கனல் - நெருப்பு, கமலம் - நீர், கு - பூமி, (ஆகிய பஞ்சபூதங்களோடு) அளை - தயிரையும், உண்டான் - அமுது செய்தவனுக்கு, தொண்டராய் - தாசர்களாகி, உய்ம்மின்-உஜ்ஜீவியுங்கள். எ-று.

கமலம் தாமரைமொட்டு என்றது தனத்துக்கு உபமானமாதனோக்கி. பந்தஹேதுவாகிய மாதராசையையொழித்து மோக்ஷஹேதுவாகிய பகவத்தாசர்களாய் உஜ்ஜீவியுங்கள் என்பதாம்.

எo. காமனத்தால்விழவூதியக்காவைக்கவரரங்கன்
காமனத்தாவென்றுநைவார்க்கமுதன்கன்னெஞ்சர்க்கிரங்
காமனத்தானளக்குங்கடற்பார்கலம்போன்றதுமீ
காமனத்தாமரையோன்கங்கைபாய்மரங்கான்மலரே.

(இ-ள்.) கா-பஞ்சதருக்களுக்கு, மன் - இறையாகிய இந்திரன், நத்தால் - பாஞ்சசன்னிய ஓசையினுல், விழ-மூர்ச்சித்துக் கீழேவிழும்படி, ஊதி-ஊதி, அக்காவை-அத்தருவை, கவர்-கொண்டுவந்த, அரங்கன்-திருவரங்கன், காமன் - மன்மதனுக்கு, அத்தா என்று-அப்பனே என்று சொல்லி, நைவார்க்கு-மெலிகின்றவர்களுக்கு, அமுதன்-(நாவினிடத்து) தேவாமிர்தம்போல ருசிப்பவன், கல்நெஞ்சர்க்கு-கன்மனத்தார்க்கு, இரங்கா - கருணைசெய்யாத, மனத்தான்-சிந்தையுள்ளவன், (அவன்) அளக்கும்-அளந்தருளிய, கடல் - சமுத்திரஞ்சூழ்ந்த, பார்-உலகம், கலம் - கப்பலையும், அத்தாமரையோன் - அந்தப் பிரமன், மீகாமன் - மாலுமியையும், கங்கை - ஆகாசகங்கை, பாய்-பாயையும், கால்மலர்-(அவனுடைய) பாததாமரை, மரம் - பாய்மரத்தையும், போன்றது-ஒத்திருந்தது. எ-று.

பூமியை மரக்கலமாகவும், பிரமனை மாலுமியாகவும், ஆகாயகங்கையை அம்மரக்கலத்தின் பாயாகவும், திருவடியைப் பாய்மரமாகவும் உருவகம் செய்து த்ரிவிக்ரமாவதாரவைபவம் கூறியபடி.

எக. மலருந்திமேல்விழமெய்நெரித்தான்வையமேழுந்துஞ்சா
மலருந்திஞரங்கன்குறளாய்மண்ணளந்தவந்நாள்
மலருந்திவாக்கதிர்வண்குடையாய்முடிமாமணியாய்
மலருந்தியாய்த்திருத்தாள்விரலாழிமணியொத்ததே.

(இ-ள்.) மலர் - மல்லர்கள், உந்தி - தள்ளி, மேல்விழ-தன்மீது விழ, மெய்-(அவர்கள்) உடலை, நெரித்தான் - நசுக்கினவன், வையம்

எழும்-ஏழுலகங்களையும், துஞ்சாமல் - அழியாமல், அருந்தினன்-உண்டவன், அரங்கன் - திருவரங்கன், குறளாய் - வாமனனாய், மண்-உலகினை, அளந்த-அளவுபடுத்திய, அந்நாள் - அந்தக்காலத்தில், மலரும்-பிரகாசிக்கின்ற, திவாக்கதிர் - சூரியன், வண்குடையாய் - (முதலில்) வளப்பம்பொருந்திய குடையாய், முடி-(உடனே) சிரசில்தரித்த, மா-பெரிய, மணியாய் - ரத்தினமாய், மலர் உந்தியாய் - (பிறகு) திருநாபீகமலமாய், திருத்தாள் - (அதன்பின்) திருவடியின், விரல் - விரலில் அணியும், ஆழி-மோதிரத்தில் பதித்த, மணி - மாணிக்கத்தை, ஒத்தது-ஒத்திருந்தது. எ-று.

இதுவும் த்ரிவிக்ரம அவதாரவைபவம் கூறியபடி. முதலடியில் மல்லர் என்பது மலர் எனத் தொகுத்தல் பெற்றது.

எஉ. மணிவாசற்றூங்கவொருகுடைக்கீழ்வையங்காத்துச்சிந்தா
மணிவாசவனெனவாழ்ந்திருப்போர்பின்னைமாதிருக்கும்
மணிவாசமார்பரங்காகேசவாவென்றுவாழ்த்தித்திரு
மணிவாசகங்கொண்டணிவாரடியைவணங்கினரோ.

(இ-ள்.) வாசல்-புறங்கடையில், மணி-ஆராய்ச்சிமணி, தூங்க-தொங்கவும், ஒரு - ஒப்பற்ற, குடைக்கீழ் - பூச்சக்கரக்குடைநீழலில், வையம் - பூமிமுழுதையும், காத்து - அரசாட்சிசெய்து, சிந்தாமணி-(வேண்டிற்றெல்லாந்தரும்) சிந்தாமணியையுடைய, வாசவனென-தேவேந்திரன்போல், வாழ்ந்து - (சகல) வைபவமும் அநுபவித்து, இருப்போர் - வாழ்ந்திருப்பவர், (யாவரெனில்) பின்னைமாது - திருமங்கை, இருக்கும்-தங்கும், மணி - கௌஸ்துவமணியையணிந்த, வாசம்-(திருத்துழாயின்) பரிமளமுள்ள, மார்பு - மார்பையுடைய, அரங்கா-திருவரங்கனே, கேசவா - கேசவனே, என்று வாழ்த்தி-எனத்துதித்து, திருமண்-திருமண்ணை, இ வாசகம்-இந்தத்திருநாமங்களை, கொண்டு-பாராயணஞ்செய்து, அணிவார் - தரிப்பவரது, அடியை - பாதங்களை, வணங்கினரோ - தாழ்ந்தவரோ. எ-று.

திருமண் அணிவார் அடியை வணங்கினவரோ இந்திரன்முதலிய இறையவர் பதங்களை யெய்திவாழ்வோரென்பதாம்.

எங. வணங்கரியானரங்கன்னடியார்தொழவாளரவு
வணங்கரியாடற்பரிதேர்நடத்தெந்தைவானவர்க்கும்
வணங்கரியானன்றிக்காப்பாரில்லாமைவிண்மண்ணறியும்
வணங்கரியானவர்வாணன்கண்டாகனன்மார்க்கண்டனே.

(இ-ள்.) வண்ணம்-மேனி, கரியான் - கருமையானவன், அரங்கன் - திருவரங்கன், அடியார் - தொண்டர்கள், தொழ - சேவிக்க, வாள்-ஒளிபொருந்திய, அரவு - பாம்பு, உவணம்-கருடன், கரி-யானை,

ஆடல் - நடனஞ்செய்கிற, பரி-குதிரை, தேர் - ரதம், (இவைமுதலிய வாகனங்களை) நடத்து-பவனி நடாத்தும், எந்தை - எம்தந்தை, வான வர்க்கும் - தேவர்களுக்கும், வணங்கு அரியான் - வணங்குதற்கு அரு மையானவன், அன்றி - (அவனை) அல்லது, காப்பார் - ரக்ஷிப்பவர், இல்லாமை - இல்லாதிருக்கும் தன்மையை, விண் - தேவரும், மண்- மனிதரும், அறியும்வண்ணம் - உணரும்படிக்கு, கரியானவர் - சாக்ஷி யானவர், வாணன்-வாணாசுரனும், கண்டாகனன் - கண்டாகர்ணனும், மார்க்கண்டன் - மார்க்கண்டனுமாம். எ-று.

விண், மண் இடவாகுபெயர்கள்.

எச. கண்டலங்காரளகஞ்செண்டைமேகங்கவிரிதழ்சொல்
கண்டலங்காரமுலையிளநீரென்றுகன்னியர்சீர்
கண்டலங்காரமருளேன்புனற்கயல்கொக்கென்றஞ்சக்
கண்டலங்காரமலரரங்கேசர்க்குக்காதலனே.

(இ-ள்.) புனல் - நீரிலுள்ள, கயல் - கயல்மீன்கள், கொக்கு என்று - கொக்கென்று நினைத்து, அஞ்ச - பயப்பட, கண்டல்- தாழை, அங்கு - அந்தப்புனலின் பக்கங்களில், ஆர - மிகுதியும், மலர் - மலர்கின்ற, அரங்கேசர்க்கு-திருவரங்கக்ஷேத்ரத்தையுடைய இறைவர்க்கு, காதலன்-நேசனாயினேன், (ஆகையால்) கன்னியர்-மங் கையரது, கண் தலம் - விழிகள், கெண்டை - சேற்கெண்டை, கார்- கறுத்த, அளகம் - கூந்தல், மேகம் - மேகம், இதழ் - அதரம், கவிர்- முருக்கமலர், சொல் - (குதலை) மொழிகள், கண்டு-கற்கண்டு, முலை- கொங்கைகள், இளநீர் - இளநீர்கள், என்று - என்றுசொல்லி, சீர்- (அவர்களுடைய) சிறப்புள்ள, அலங்காரம்-அலங்காரத்தை, கண்டு- பார்த்து, மருளேன் - மதிமயங்கேன். எ-று.

திருவரங்கர்க் கன்பனாயினே னாதலால், மாதர்கள் மயக்கத்தி லாழேனென்பதாம்.

எரு. காதலைவாரிமண்வெண்கோட்டில்வைத்துண்டுகாட்டியரங்
காதலைவாகழற்குள்ளாக்கினாய்கரப்பெங்கெனவே
காதலைவார்குழைவைதேகினையென்கருத்துருக்கும்
காதலைவானரர்தேடவிட்டாயிதுகைதவமே.

(இ-ள்.) அரங்கா - திருவரங்கனே, தலைவா - முதன்மையான வனே, காது - மோதுகின்ற, அலை - அலைகளையுடைய, வாரி - கடல் சூழ்ந்த, மண் - பூமியை, வெண்கோட்டில் - (ஆதிவராகமாய்) வெள் ளிய கொம்பில், வைத்து - இருத்தி, உண்டு - அருந்தி, காட்டி- உமிழ்ந்து, கழற்கு உள் - (திரிவிக்கிரமனாய்) ஓரடிக்குள், ஆக்கினாய்- ஒடுங்கப்பண்ணினாய், காது - காதினிடத்து, அலை - மோதும், வார்-

நெடிய, குழை - குண்டலங்கள்தரித்த, வைதேகியை - சீதாபிராட்டியை, நின்-உனது, கருத்து உருக்கும் - நெஞ்சையுருகச்செய்கிற, காதலை - (உன்னிடத்து) ஆசையுடையவளை, கரப்பு - (கண்டகன்) ஒளித்துவைத்த இடம், எங்கு என - எவ்விடம் என்று, வானரர்- வானரசேனைகளை, தேட - கண்டுபிடிக்க, விட்டாய் - அனுப்பினை, இது கைதவமே - இது மாயமே. எ-று.

திருவரங்கரே பூதேவி மறைக்கப்பட்டபோது அவளிருக்கையறிந்து ஆதிவராகமாய்க் கோட்டிற்றாக்கிக் கொணர்ந்த நீர், சீதாபிராட்டி யிருக்கையறியான் போன்று வானரரைத் தேடவிட்டது மாயச்செய்கையே யென்பதாம். வைதேகி-விதேகராஜபுத்ரி. விதேகம் - ஓர்தேயம்.

௭௬. தவராகவக்கணையொன்றாற்கடற்றெய்வந்தானென்றிருந்
தவராகந்தீர்த்துத்தொழக்கண்டநீதர்ப்பைமேற்கிடந்து
தவராகப்பாவித்தென்னேதொழுதாய்தண்ணரங்கத்துமா
தவராகவாகண்ணனேயெண்ணொணுவவதாரத்தனே.

(இ-ள்.) தண் - குளிர்ந்த, அரங்கத்து - திருவரங்கநகரையுடைய, மாதவ - பின்னைமணாளனே, ராகவா - சக்ரவர்த்தித்திருமகனே, கண்ணனே - கிருஷ்ணனே, எண் ஒணு-கணக்கிடக்கூடாத, அவதாரத்தனே - திரு அவதாரத்தையுடையவனே, தவர் - கோதண்டத்திலே பூட்டிய, ஆகவம் - யுத்தத்திற்குரிய, கணை ஒன்றால் - ஒரு பாணத்தினால், கடல்தெய்வம் - வருணராஜன், தான் என்று இருந்த- தானென்றகங்கரித்திருந்த, அராகம் - ஆசையை, தீர்த்து-ஒழித்து, தொழ - (உன்னை) வணங்க, கண்ட - செய்த, நீ - நீயே, தர்ப்பை மேல் - தர்ப்பசயநத்தின்மேல், கிடந்து - சயனித்து, தவர் ஆக- யோகியர்போல, பாவித்து - பாவனைகாட்டி, என்னே - யாதுகாரணத்தினாலோ, தொழுதாய்-(அவனை முன்பு) பணிந்தாய். எ-று.

வருணனை தொழப்பணித்த நீயே அவனைத் தர்ப்பசயநத்திற் கிடந்து யோகியர்போலத் தொழுதனையே, இது யாதுகாரணத்தினாலோ அறியோம் என்பதாம்.

௭௭. தாராகணமண்ணளந்தவன்பர்சாத்துந்துழாய்த்
தாராகணம்புயம்போலரங்காதலமேழுக்குமா
தாராகணமங்கையாயும்பர்தூவியதண்மலர்வீழ்
தாராகணமுநில்லாகாற்றிற்சூழ்வளர்ந்தானைக்குமே.

(இ-ள்.) அன்பர் - பத்தர்கள், சாத்தும்-சூடும், துழாய்த்தாரா- திருத்துழாய் மாலையையுடையானே, கண்-கண்கள், அம்புயம்போல்- தாமரைபோன்ற, அரங்கா - திருவரங்கனே, தலமேழுக்கும் - சப்த

லோகங்களுக்கும், ஆதாரா - ஆதாரமாயிருப்பவனே, கணமங்கையாய் - திருக்கண்ண மங்கையென்னும் திவ்வியதேசத்தி லெழுந்தருளினவனே, மண் அளந்த அந்நாள்-(நீ) உலகளந்த அக்காலத்தில், தாராகணம்-நட்சத்திரக்கூட்டங்கள், (எப்படி யிருந்ததென்றால்) உம்பர்-தேவர்கள், தூவிய-சொரிந்த, தண்-சீதளமுள்ள, மலர் - மலர்கள், வீழ்தாரா - (பூமியிலும்) விழாது, கணமும் - ஒருக்ஷணமேனும், நில்லா - (ஆகாயத்திலும்) நிலையுற்றிராது, காற்றில் - வாயுவில், சூழ் - சுழலும், வளம் - மாட்சிமையை, ஒக்கும் - நிகர்த்திருந்தது. எ-று.

எஅ. தானந்தியாகந்தவங்கல்விதீர்த்தந்தழலிலவி
தானந்தியாகந்தருமிழிபாயினதண்ணரங்கத்
தானந்தியாகப்பகன்மறைத்தான்பெயர்தந்திடும்வே
தானந்தியாகண்டலனறியாப்பரந்தாமத்தையே.

(இ-ள்.) தானம்-தானம்செய்தலும், தியாகம்-தியாகம் அளித்தலும், தவம் - விரதம்பூணுதலும், கல்வி-கல்விகற்றலும், தீர்த்தம்-தூய நீராடப்போதலும், தழலில் - அக்கினியில், அவி-அவிர்ப்பாகம், நந்து - சொரியப்பட்ட, யாகம் - மகங்களும், இழிபாயின-சிறுபதவிகளை, தரும் - கொடுக்கும், தண் - குளிர்ச்சியாகிய, அரங்கத்தான்-திருவரங்கநகருடையான், அந்தி ஆக - மாலைக்காலமாக, பகல் - சூரியனை, மறைத்தான் - (சக்கரத்தால்) மறைத்தவன், (அவனுடைய) பெயர் - திருநாமம், வேதா - பிரமனும், நந்தி - சிவனும், ஆகண்டலன் - தேவேந்திரனும், அறியா - உணரக்கூடாத, பரந்தாமத்தை-பரமபதத்தை, தந்திடும் - அளிக்கும். எ-று.

தானமுதலியவை அழிகின்ற அற்பமாகிய பதவிகளைக்கொடுக்கும். திருவரங்கனது நாமஸ்மரணம் அழியாப் பெரும்பதவியாகிய பரமபதத்தைக் கொடுக்கும் என்பதாம்.

எகூ. தாமரைமாத்திரைமூப்பற்றவானவர்தண்ணறுஞ்செந்
தாமரைமாத்திரைவந்தாடலைவரைத்தண்ணரங்க
தாமரைமாத்திரைபோல்வளைந்தேற்றுத்தருப்பொருட்டால்
தாமரைமாத்திரைக்கேசஞ்சினேசையிற்சாய்ந்தனரோ.

(இ-ள்.) தா-வருத்தம்மிக்க, மறை - இறப்பும், மா - மிகுந்த, திரை - திரையும், மூப்பு - மூதுமையும், அற்ற - ஒழிந்த, வானவர்-தேவர்கள், தண் - குளிர்ச்சிபொருந்திய, நறு - பரிமளிக்கின்ற, செந்தாமரை - சிவந்த தாமரைமலரிலிருக்கும், மா - இலக்குமிக்கு, திரை-க்ஷீராப்தியில், வந்தாள்-அவதரித்த திருமகளுக்கு, தலைவரை-நாயகரை, தண்-சீதளமான, அரங்கத்தாமரை-திருவரங்கமாகிய இடமுடையவரை, மா - பெருமைபொருந்திய, திரைபோல் - திரைச்

சிலேபோல, வளைந்து - சூழ்ந்துகொண்டு, ஏற்று - எதிர்த்து, தருப் பொருட்டால் - கற்பக விருக்ஷத்துக்காக, தாம் - தாங்கள், அரை மாத்திரைக்கே-அரைக்ஷணத்திலே, சங்கின் ஓசையில்-பாஞ்சசன்னி யத்தின் தொனியினால், சாய்ந்தனர்-மூர்ச்சையடைந்தார்கள். எ-று.

முதலடியில் பொருளமைதிக்கு ஏற்க மரை என்பதிலுள்ள இடையின ரகரத்தை வல்லின றகரமாக மாற்றிக்கொள்ளப்பட்டது. இனி தாம்-தத்துகின்ற, மரை-தவளைக்குள்ள, மாதிரையும் - மிகுந்த திரையும், என்றும் பொருள் கூறுவர்.

அ0. சாகைக்குந்தத்துத்துகிறூக்கிமாதர்தமைநகைத்தாய்
சாகைக்குர்தத்துவங்கட்குமெட்டாய்தண்புனலரங்கே
சாகைக்குந்தத்துப்புடையாழியேந்தறமர்கள்வெய்யோர்
சாகைக்குந்தத்துதவிர்சைக்கும்போலுமுன்சங்கற்பமே.

(இ-ள்.) சாகை - கிளைகளையுடைய, குந்தத்து - குருந்தமரத் திலே, துகில் - வஸ்திரங்களை, தூக்கி-எடுத்துக்கொண்டுபோயிருந்து, மாதர் தமை - கோபிமார்களை, நகைத்தாய் - சிரித்தவனே, சாகைக் கும்-வேதசாகைகளுக்கும், தத்துவங்கட்கும்-தத்துவங்களுக்கும், எட் டாய் - அகோசரமாயிருப்பவனே, தண்-குளிர்ந்த, புனல்-(காவேரி) ஆறு (பாயும்), அரங்கேசா - திருவரங்கநகருடையாய், கை-கையில் உள்ள, குந்தத்து - குந்தாயுதத்தின், புடை-பக்கத்தில், ஆழி - சுத ரிசனாழ்வானை, ஏந்தல்-தரித்திருப்பது, வெய்யோர்-தீயோர், சாகைக் கும் - அழிவதற்கும், தமர்கள் - அடியார்கள், தத்து - விபத்துகளை, தவிர்கைக்கும் - நீங்குதற்கும், போலும்-ஆகும், உன்சங்கற்பம்-நினது திருவுள்ளம். எ-று.

அக. சங்கத்தமரர்குழாத்தொடூழ்வினைதான்விலங்க
சங்கத்தமரன்பராயிருப்பீர்கடறானவர்தே
சங்கத்தமரம்படவெய்தசார்ங்கத்தனுவரங்கன்
சங்கத்தமரன்சரணேசரணென்றுதாழ்ந்திருமே.

(இ-ள்.) கடல் - சப்தசாகரங்களும், தானவர் - அசுரர்களு டைய, தேசம் - ஊர்முழுமையும், கத்த - இரைச்சலிடவும், மரம்- ஏழுமராமரங்களும், பட - அழியவும், எய்த - பாணப்பிரயோகஞ் செய்த, சார்ங்கம் - சார்ங்கமென்னும், தனு - கோதண்டத்தை யுடைய, அரங்கன் - திருவரங்கன், சங்கம் - பாஞ்சசன்னியத்தின், தமரன் - முழக்கத்தையுடையவன், (அவனது) சரணே - திருவடி களே, சரணென்று - தஞ்சமென்று, தாழ்ந்திரும் - பணிந்திரும், சங் கத்து-பலராகிய, அமரர் குழாத்தொடும்-நித்தியசூரிசமூகத்துடனே, ஊழ்வினை - பூர்வகன்மம், விலங்க - அகல, சங்கத்து - (அவர்கள்) கூட்டத்தில், அமர் - பொருந்தும், அன்பராய்-பாகவதராய், இருப் பீர் - இருப்பீர்கள். எ-று.

இனி "கடருனவர் தேசங்கத்த மரம்பட வெய்தசார்ங்கத்தனு" என்பதற்கு கடல் - கடலையொத்த, தானவர் - தானவர்களுடைய, தேசம் - தேசத்துள்ளாரை, கத்து - இரைகின்ற, அமர்-யுத்தத்தில், அம்பு அட - அம்பானது கொல்ல, எய்த - பூட்டி எய்த, சார்ங்கம் - சார்ங்கமாகிய வில்லைத்தாங்கிய எனினுமாம். திருவரங்கனது திரு வடியைத் தஞ்சமென்றிருப்பீர்களாயின் பரமபதத்தில் நித்யசூரிக ளது சமூஹத்தி லிருக்கப்பெறுவீர்க ளென்பதாம்.

அஉ. இருந்தேனுமுடவன்வரைநோக்கியிருப்பதுபோல்
இருந்தேனுகந்துனைவைகுந்தநோக்கியெதிர்பொருங்கேள்
இருந்தேனுகனும்படவதைத்தாய்வெண்ணெயாமத்தொளித்து
இருந்தேனுகரரங்காகாணுநாளினியென்றருளே.

(இ-ள்.) எதிர்பொரும் - எதிர்த்துயுத்தம்செய்யும், கேளிரும்- சுற்றத்தார்களும், தேனுகனும் - தேனுகாசுரனும், பாட - இறக்க, வதைத்தாய் - சங்கரித்தவனே, யாமத்து - நடுச்சாமத்திலே, வெண் ணெய் - நவநீதத்தை, ஒளித்திருத்து - (ஆயர் மனையில்) பதுங்கிக் கொண்டிருந்து, நுகர் - உண்ணும், அரங்கா - திருவரங்கனே, இரு- பெருமையுற்ற, தேன் - தேனனது, உக - சிந்த, முடவன் - முட வனானவன், வரை - பர்வதத்தை, நோக்கி - பார்த்துக்கொண்டே, இருப்பதுபோல் - இருக்குந்தன்மைபோல, உனை உகந்து - நின்னை விரும்பி, வைகுந்தம் நோக்கி-பரமபதத்தைப் பார்த்துக்கொண்டே, இருந்தேன் - (இதுவரைக்கும்) இருந்தனன், காணும் நாள் இனி யென்று - (உன்னை) தரிசிக்குங்காலம் இனியெப்போது, அருள்-திரு வாய்மலர்ந்தருள். எ-று.

முடவன் மலைத்தேனை யெதிர்பார்த்திருப்பதுபோல உனது பரமபதத்தை யெதிர்பார்த்திருந்தேன், உன்னைத் தரிசிப்பது இனி எக்காலமோ அறியேனென்பதாம். நிர்ஹேதுகம்சொல்லிற்றுயிற்று.

அங. அரும்பாகவதரிக்கும்பெயராய்புள்ளரசினுக்கோர்
அரும்பாகவதரந்துப்பனையாயரங்காவெனவுண்
அரும்பாகவதர்பததீர்த்தங்கொள்ளாதடிகள்கொப்புள்
அரும்பாகவதர்தொலைப்பார்கல்லார்கங்கையாடுதற்கே.

(இ-ள்.) அருபாகு - (துதிப்பவர்நாவில்) அருமையாகியமது ரம், அவதரிக்கும் - உண்டாகின்ற, பெயராய்-திருநாமங்களையுடை யவனே, புள் அரசினுக்கு - பட்சிராஜனான கருடனுக்கு, ஓர் - ஒரு, அரு - அருமையான, பாக - பாகனே, அதரம் - இதழ், துப்பு அனை யாய் - பவளத்தையொத்தவனே, அரங்கா - திருவரங்கனே, என உணரும் - என்று (அவனை) தியானிக்கும், பாகவதர் - பாகவதர்க ளுடைய, பததீர்த்தங்கொள்ளாது - ஸ்ரீபாததீர்த்தம் ஏற்காமல், அடி கள்-உள்ளங்கால், கொப்புள் - கொப்புளங்கள், அரும்பு-அரும்பைப்

போல, ஆக-உண்டாக, அதர்தொலைப்பார்-தூரவழிகள் (யாத்திரை செய்து) முடிப்பார், கல்லார் - கயவர், கங்கை ஆடுதற்கு - கங்கா ஸ்நானம் செய்யும்பொருட்டு. எ-று.

உன் தொண்டர்களுடைய ஸ்ரீ பாத தீர்த்தங் கொள்ளாமல் கங்காஸ்நாநம் செய்வதனால் என்னபயன் என்பதாம்.

அச. ஆடுமுன்னீர்முதற்றீர்த்தத்தினாலருமாதவத்தால்
ஆடுமுன்னீர்மறைவேள்வியினாலண்டராயுடன்மாறு
ஆடுமுன்னீரதுமாயையினாலென்றரங்கனைக்கொண்டு
ஆடுமுன்னீர்செய்தபாவமும்போய்முத்தராம்வண்ணமே.

(இ-ள்.) ஆடும் - மூழ்கும், முந்நீர் முதல் - சமுத்திரமுதலாகிய, தீர்த்தத்தினால் - பரிசுத்த்ஜலங்களாலும், அரு - அரிய, மாதவத்தால் - மகாதவங்களாலும், ஆடு-ஆட்டை, முன்-எதிரில், ஈர்-வெட்டும், மறை - வேதவிதியால்செய்யும், வேள்வியினால் - யாகங்களினாலும், அண்டர் ஆய் - நர (ஜன்மம்போய்) தேவர்களாகி, உடல்-யாக்கையானது, மாறும் - வேற்றுமையடையும், அது - அப்படி வேற்றுமையடைவது, மாயையினால் என்று - (விஷ்ணு) மாயையாலென்று, உன்னீர்-நினைக்கமாட்டீர், (அங்ஙனம் வீணேயுழலாது) முன்-முற்சனனங்களில், நீர்-நீங்கள், செய்த-பண்ணின, பாவமும்போய்-தீவினைகளும் நீங்கி, முத்தர்-முத்திக்குரியவர், ஆம்வண்ணம்-ஆகும் படிக்கு, அரங்கனை - திருவரங்கனை, கொண்டாடும்-துதியுங்கோள்.

யாகங்களைச்செய்து தேவசரீரம் பெறுவதிற்காட்டில், திருவரங்கனைக் கொண்டாடி முக்தியடைதல் சிறப்புடைத் தென்பதாம்.

அரு. வண்ணங்கலிவஞ்சிவெண்பாவகவல்வகைதொடுத்தோர்
வண்ணங்கலிகெடவேண்டுமென்றேமக்கண்மாட்டுரையேன்
வண்ணங்கலிகடல்போல்வானரங்கன்வகுளச்செல்வன்
வண்ணங்கலியன்புகழ்தாளெனக்கென்றுமாநிதியே.

(இ-ள்.) வண்ணம்-பலவகையான, கலி-கலிப்பாவும், வஞ்சி-வஞ்சிப்பாவும், வெண்பா - வெண்பாவும், அகவல் - ஆசிரியப்பாவுமாகிய இவைகளை, வகை-வகையாக, தொடுத்து-புனைந்து, ஓர்வண்ணம் - ஒருவிதமாக, கலி - தரித்திரம், கெடவேண்டும் என்று-ஒழியவேண்டுமென்று, மக்கண்மாட்டுரையேன் - மனிதர்விஷயமாகச் சொல்லமாட்டேன், வண்ணம் - திருமேனி, கலி-ஒலிக்கின்ற, கடல் போல்வான்-சமுத்திரம் போன்றவன், அரங்கன்-திருவரங்கநாதன், (அவனது) வகுளம் - மகிழமாலையையுடைய, செல்வன் - நம்மாழ்வாரும், நம் - நமக்குத் தேசியனான, வள்-வளமையுடைய, கலியன்-திருமங்கையாழ்வார் முதலியோரும், புகழ் - துதிசெய்த, தாள்-திரு

வடிகளே, எனக்கு - அடியேனுக்கு, என்றும்-எப்போதும், மாநிதி-பெரியதனமாம். எ-று.

அரங்கன் தாள் எனக் கூட்டுக.

அசு. மானுகவ ருநிருதன் புன்மாயையின்மங்கையென்னும்
மானுகவருமணியைமுன்னீங்கினன் மாயனென்பார்
மானுகவரும்பலர்சோலைசூழுமதிலரங்கா
மானுகவருமமுதேயதுவுநின்மாயமன்றே.

(இ-ள்.) மாயன் - ஆச்சரியபூதனான ஸ்ரீராமபிரான், மான் ஆக-(பொன்) மான்போல, வரும் - வந்த, நிருதன் - (மாரீசனென்னும்) அரக்கனது, புன்மாயையின் - புல்லியமாயையினால், மங்கை என்னும் - பெண் (அரசு) என்று சொல்லப்படும், மா - மகத்தான, அரு-கிடைத்தற்கரிய, நாகமணியை - நாகரத்தினம் (போலும் சீதாபிராட்டியை), முன்-பண்டு, நீங்கினன்-பிரிந்தான், என்பர்-என்பார்கள், மா-மாமரத்தினது, அரும்பு - அரும்பும், நாகம்-புன்னையினது, அரும்பு - அரும்பும், அலர்-மலர்கின்ற, சோலைசூழும் - சோலையால் சூழப்பட்ட, மதில் அரங்கா - மதில்சூழ்ந்த அரங்கமாநகருளானே, நா-(அடியார்களது) நாவினால், மால் - ஆசையுடன், கவரும்-கிரகிக்கப்பட்ட, அமுதே - அமிழ்தன்னவனே, அதுவும் - அப்படி நீமயங்கியதும், நின்மாயம் அன்றே - உனதுமாயையல்லவோ. எ-று.

மானுகவருநிருதன் புன்மாயையின் நீங்கினன் என்றமையால் மாயன் என்பது ஸ்ரீராமபிரானை யுணர்த்தி நின்றது.

அஎ. மாயாதவர்தலைவாவரங்காவடமாமதுரை
மாயாதவரண்டர்வந்தடைந்தான்மழுவாளிபிர
மாயாதவர்செய்வர்முந்நூல்செந்நூல்கொண்டவண்ணமொப்ப
மாயாதவரத்தனைக்குடல்கோத்ததுன்வாணகமே.

(இ-ள்.) மா-பெருமையுற்ற, யாதவர்தலைவா - ஆயர்களுடைய தலைவனே, அரங்கா - திருவரங்கனே, மாவடமதுரைமாயா - பெரிதான வடமதுரையிற்பிறந்த ஆச்சரியகுணங்களுள்ளவனே, தவர்-தவசிகள், அண்டர் - தேவர்கள் (முதலியவர்), வந்து அடைந்தால்-(ஒருவனுக்கு அஞ்சி) அடைக்கலம்புகுந்தால், மழுவாளி - மழுவாயுதத்தையுடைய சிவனும், பிரமா - பிரமனும், (ஆகிய) அவர் - அவ்விருவரும், யாது செய்வர்-(அவனை) என்னசெய்வார்கள், (ஆனால்) முந்நூல்-(நினதுமார்பில் வளங்கிய) முப்புரிநூல், செந்நூல் கொண்ட - செவந்தநூலைக்கொண்ட, வண்ணம் - விதத்தை, ஒப்ப - ஒத்திருக்க, மாயாத - அழியாத, வரத்தனை - வரங்களையுடைய இரணியனது, குடல் - குடலை, உன்-நினது, வாள் - ஒளிபொருந்திய, நகம்-நகமானது, கோத்தது - (பிடுங்கி) அணிந்தது. எ-று.

துன்பம்வந்தகாலத்தில் தேவரும் இருடியரும் சிவனைப்போ யடுக்க அவன் தன்னால் ஒன்றுமாகாமல் பிரமனையடுக்க அவனும் அங்ஙனமே விஷ்ணுவைச் சரண் எய்த அப்பொழுது அவர் இவர் களுக்கு அபய ஹஸ்தங் கொடுப்பது வழக்கம், அதற்கு இரணியன் விஷயமும் ஓர் உதாரணமாகையால் அதையெடுத்துச் சொன்னார்.

௮௮. நகமுண்டகந்தரித்தாற்கருண்மாயற்குஞாலமுந்நீர்
நகமுண்டகமகிழ்ந்தாற்கடியேமென்மினற்கதிவா
நகமுண்டகம்பரனென்றரங்கனைநாடிலயம்
நகமுண்டகமலர்தான்குவியாதுநடுக்குளத்தே.

(இ-ள்.) நகம்-நகத்தினால், உண்ட - கிள்ளுண்ட, கம்-(பிரம னுடைய) சிரத்தை, தரித்தாற்கு - ஏந்தியசிவனுக்கு, அருள்-கருணை செய்யும், மாயர்க்கு - ஆச்சரியபூதனுக்கு, ஞாலம்-புவனங்களையும், முந்நீர்-சமுத்திரங்களையும், நகம் - மலைகளையும், உண்டு - விழுங்கி, அகம் மகிழ்ந்தாற்கு - மனம்களித்தவனுக்கு, அடியேம்-தாசர்களாயி னோம், என்மின் - என்றுசொல்லுங்கள், நற்கதி - சிரேஷ்டமுள்ள பதவியாகிய, வானகம்-திருநாடு, உண்டு-சித்திக்கும், அகம்பரனென் றது - நான்பரன் என்னாமல், அரங்கனை - திருவரங்கனை, நாடில் - நணுகினால், அயன் - பிரமனது, நகு-விளங்குகிற, அம் - அழகாகிய, முண்டகமலர்-தாமரைக்கை, உம்நடுக்குளத்தே - நுங்களது நெற்றி யின்மத்தியிலே, குவியாது - கூம்பாது. எ-று. குளம்-நெற்றி.

முண்டகமலர் என்பது உருவகம். அது நெற்றியில்குவியாது என்பது பிரமன் தன் கையைக்குவித்து உங்கள் நெற்றிமையத்தில் உங்களுக்கு மறுபடியும் பிறக்கவிதிக்கான் என்பதுகருத்து. நக முண்டகந்தரித்தாற்கு என்பதற்கு நகு - (தன்பூஷணமாகிய சர்ப்பங் கள் நெகிழ்வதைக்கண்டு) நகைத்த, அ-அந்த, முண்டம் - முண்ட மாகிய, கம்-தலையை, தரித்தாற்கு - ஏந்திய சிவனுக்கு, எனினுமாம்.

௮௯. குளப்படிநெய்யடிசிற்கொத்ததோகொள்ளப்பற்றியதோ
குளப்படியிற்றிங்கள்சேரரங்காகோலமாயவன்றுன்
குளப்படிகாட்டும்பிறைமறுப்போலொருகோட்டிருந்து
குளப்படியின்னகத்துட்பரல்போன்றகுவலயமே.

(இ-ள்.) குளம் - சந்திரபுஷ்கரணியின், படியில் - படிகளில், திங்கள்சேர் - சந்திரன் தவழ்கின்ற, அரங்கா - திருவரங்க முடை யாய், கோலம் ஆய அன்று - வராக அவதாரங்கொண்ட அந்நாள், உன் - உனது, குளம் - நெற்றியின் உருவத்தை, காட்டும் - காட்டு கின்ற, பிறை-குழவித்திங்களின், மறுபோல் - களங்கம்போல, ஒரு- (உனது) ஒப்பற்ற, கோடு - மருப்பில், இருந்து - தங்கி, குளப்பு- குளம்புகளையுடைய, அடியின் அகத்துள் - உள்ளங்காலில், பரல்

போன்ற-பருக்கைகக்கலிலைநிகர்த்த, குவலயம்-உலகமானது (உண்ட வந்நாளில்), படி - ஒருபடியளவுகொண்ட, குளம் - சர்க்கரையும், நெய் - நெய்யும் (கலந்த), அடிசிற்கு - பொங்கலுக்கு, ஒத்ததோ-நிகர்த்திருந்ததோ, (அல்லது) கொள்ளப்பற்றியதோ - திருவமுது செய்யப் போதுமானதாயிருந்ததோ. எ-று.

குளம்பு - குளப்பு என வலித்தல்பெற்றது.

கo. குவலையஞ்சூழ்கடல்காயாமரகதங்கொண்டனெய்தல்
குவலையங்கண்டன்பர்நைவொன்றுற்கொற்றவாணற்குவா
குவலையநேமிதொட்டாயரங்காகொடும்பல்பிறப்பா
குவலையங்கற்றுனைக்காணிலென்னுங்கொல்குறிப்பவர்க்கே.

(இ-ள்.) கொற்றம் - வெற்றியையுடைய, வாணற்கு - வாணு சரனுக்கு, வாகு - புஜங்கள், அலைய - நெகிழ, நேமிதொட்டாய்-சக்கரப்பிரயோகஞ்செய்தவனே, அரங்கா - திருவரங்கனே, குவலையம் - பூமியை, சூழ் - வளைந்திருக்கும், கடல் - சமுத்திரம், காயா-பூவைமலர், மரகதம் - மரகதமணி, கொண்டல் - காளமேகம், நெய்தல் - கருநெய்தல், குவலயம் - நீலோற்பலம், (ஆகிய இவற்றை) கண்டு-கண்ணுற்று, அன்பர்-நின் அடியார்கள், நைவர் என்றால்-(நின் வடிவத்தை அவை நினைப்பூட்டலால்) சிந்தை உருகுவாரொனில், கொடு-கொடிய, பல்-அநேகமான, பிறப்புஆகு-ஜென்மமாகிய, வலை-கண்ணியினின்றும், அற்று-நீங்கி, அங்கு-அந்தத் திருமாமணிமண்டபத்தில், உனை - தேவரீரை, காணில் - தரிசித்தால், அவர்க்கு-அவர்களுக்கு, குறிப்பு என் ஆம் கொல் - நெஞ்சு என்ன ஆகுமோ. எ-று.

நெய்தல் குவலயம் என்பதற்கு நெய்த னிலத்துள்ள நீலோற்பல மென்றுரைப்பினு மமையும்.

கக. குறியானைச்செங்கணெடியானைவானவர்கோவைச்சங்கக்
குறியானைவித்ததிருவரங்கேசனைக்கூவிநின்று
குறியானைகாத்தவனைப்பாடினேன்கொடிகூப்பிடினும்
குறியானையப்பவர்போற்கொடியேன்சொலுங்கொள்வனென்றே.

(இ-ள்.) குறியானை - வாமனனை, செங்கண் - செந்தாமரை போலும் திருநயனங்களையுடைய, நெடியானை - திரிவிக்கிரமனை, வானவர்கோவை - தேவேந்திரனை, சங்கக்குறியால் - பாஞ்சசன்னியத்தின் முழக்கத்தினால், நைவித்த - வாட்டிய, திரு அரங்கேசனை-திருவரங்கநாதனை, கூவிநின்று - அழைத்துநின்று, குறி-சிந்திக்கும், யானை - கஜேந்திராழ்வானை, காத்தவனை - அளித்தவனை, கொடி-காக்கை, கூப்பிடினும் - கத்தினும், குறியா - (அதையும் நல்ல) சகுனமெனக் குறிக்கொண்டு, நயப்பவர்போல் - விரும்புமவர்

போல, கொடியேன் சொல்லும் - தீயேனது சொற்களையும், கொள்வனென்று - அங்கீகரிப்பானென்று நினைத்து, பாடினேன் - துதித்தேன். எ-று.

வாமநாவதாரமும் த்ரிவிக்ரமாவதாரமும் ஒன்றன்பின் ஒன்றாக அடுத்து நிகழ்ந்தனவாதலின், குறியானைச் செங்கண் ணெடியானை என்றார்.

கூஉ. வனத்திற்சிலம்பிவிடுநூலுட்பட்டுமசகமெய்த்த
வனத்திற்சிலம்பினபோற்பிணிவாய்ப்பட்டென்வாய்புலம்பின்
வனத்திற்சிலம்பின்குரலன்னம்வாழுமரங்கனிப்பு
வனத்திற்சிலம்பினின்றான்கேட்குமோவும்பர்வாழ்த்தைவிட்டே

(இ-ள்.) மசகம்-கொசுகானது, வனத்தில்-அடவியில், சிலம்பி-சிலந்திப்பூச்சியானது, விடும் - இழைத்த, நூலுள்பட்டு-நூலில்சிக்கி, மெய் தவனத்தில் - உடல் தவிப்பினால், சிலம்பினபோல்-அரற்றினபோல, பிணி வாய்ப்பாட்டு - நோயின்கண் அகப்பட்டு, என்வாய்-என்வாயினால், புலம்பின் - அரற்றினால், (இப்புலம்பலை) வனத்தில்-புனலில், சிலம்பின் - நூபுரத்தின், குரல் - ஒலியினையுடைய, அன்னம் - அன்னப்பறவைகள், வாழும்-வாழ்தற்கிடமாகிய, அரங்கன்-திருவரங்கநகரான், இப்புவனத்தில் - இந்தவுலகத்தில், சிலம்பில் நின்றான் - திருமலையில் நிற்பவன், உம்பர் - நித்திய சூரிகளுடைய, வாழ்த்தைவிட்டு - மங்களவாழ்த்தை விடுத்து, கேட்குமோ - கேட்பானோ, எ-று.

நித்திய சூரிகளுடைய மங்களவாழ்த்தைவிட்டு என் அமங்கலமாகிய புலம்பலைக் கேட்பனோ வென்பது கருத்து.

கூௗ. விடத்தேரைமன்னும் வனப்பாழ்க்கிணற்றுள்வெம்பாம்பு பற்றும், விடத்தேரைவாய் வண்டுதேன்வேட்டல்போல் விசித்துக் கொடுபோய், விடத்தேரையில் வெங்கட்கூற்றை யெண்ணுதெண்ணும் வேட்கையெல்லாம், விடத்தேரையூரரங்கன் றிருத்தாளில் விழுநெஞ்சமே.

(இ-ள்.) நெஞ்சமே - மனமே, விடத்தேரை - விடத்தேரை என்னும் பூண்டு, மன்னும் - (படர்ந்து) இருக்கப்பெற்ற, வனம் - கானகத்திலுள்ள, பாழ்க்கிணற்றுள்-பாழடைந்த கிணற்றில், வெம்-கொடிய, பாம்பு-நாகம், பற்றும்-பிடித்திருக்கும், விடம்-நஞ்சேறிய, தேரை-தவளையினுடைய, வாய்வண்டு - வாயில் அகப்பட்ட வண்டானது, தேன்-தேனை, வேட்டல்போல்-விரும்புதல்போல, விசித்துக் கொடுபோய்விட-கட்டி இழுத்துக்கொண்டுபோக, தேர்-எண்ணும், அயில் - வேலையுடைய, வெங்கண்-தாட்சணியமில்லாத, கூற்றை-

யமனே, எண்ணுது - மதியாமல், எண்ணும்-கருதும், வேட்கையெல்லாம் - பாசங்கள் யாவும், விட - ஒழிய, தேனா - இரசத்தை, ஊர்கடத்தும், அரங்கன் - திருவரங்கனது, திருத்தாளில் - திருவடியில், விழு - சேர். எ-று.

கருவியும் கன்னெஞ்சமுடையானென்பார், "அயில் வெங்கண் கூற்று" என்றார்.

கூச. விழுங்கூன்றசைச்சுவர்நீர்மலங்கோழைவெம்பித்தொடுங்க
விழுங்கூனரம்புறியென்பேணிதோற்சட்டைவீழ்ந்துநொந்த
விழுங்கூந்தலாரழப்பாடையிற்போய்ச்சுடும்வெய்யசெந்தீ
விழுங்கூனநோய்க்குடில்வேண்டேனரங்கவிமானத்தனே.

(இ-ள்.) (இச்சரீரம்) விழுங்கு-(நரிமுதலியவை) கவ்வும், ஊன்தசை - ஊனோடும் மாமிசத்தோடும் கூடிய, சுவர் - சுவர், நீர்-நீரும், மலம்-மலமும், கோழை-சிலேஷ்மமும், வெம் - வெவ்விய, பித்தொடும்-பித்தத்துடன் கூடிய, கவிழும் - தலைகீழதாகத்தக்க, கூன்-கூன் என்னும் பாத்திரம், நரம்பு உறி-தாதுக்களாலாய உறி, என்பு ஏணி-அஸ்திகளாலமைத்த ஏணி, தோல்சட்டை-சருமத்தாலாகிய அங்கி, வீழ்ந்து - தரையில்புரண்டு, நொந்து - மனநைந்து, அவிழும் கூந்தலார் - விரித்த அளகபாரத்தையுடைய மனைவியர், அழ - கலுழ, பாடையில் - பாடையிலிடப்பட்டு, போய்-(மயானஞ்) சென்று, சுடும்-தகனஞ்செய்யப்படுகின்ற, வெய்ய - சுவாலைகள் வீசுகின்ற, செம்-சிவந்தநிறமுள்ள, தீ-அக்கினியில், விழும் - சேரும், ஊன்-ஊனமாகிய, நோய்-பிணிகள் (குடிகொள்ளும்),குடில் - சிறுவீடு, (இதனை) வேண்டேன் - விரும்பகில்லேன், அரங்க விமானத்தனே - ரங்க விமானத்தில் கண்படுப்பவனே. எ-று.

இதில் சரீரத்தின் இழிவுகளை யெடுத்துக் கூறினமையால் இது சரீர தூஷணம் "இந்தவுடம்போடிருப்ப தருவருப்பே" என்றார் பிறரும்

கூரு மானத்துவண்டலுழவொழுத்தினவடிவுற்றசீர்
மானத்துவண்டவினையாளராயினுமால்வளர்வி
மானத்துவண்டலமாமரங்கம்வழியாவரினும்
மானத்துவண்டமர்தாரண்டராம்பதம்வாய்க்குமங்கே

(இ-ள்.) மால் - பெருமையாகிய, நத்து - வளையானது, வண்டல் - சேற்றில், உழ - தவழ, ஒழுத்தின் - ஒரு அக்ஷரத்தின், வடிவு உற்ற - உருவம் உண்டாகிய, சீர் - சிறப்பினை, மான - ஒக்க, துவண்ட - நலிந்த, வினையாளர் ஆயினும் - கர்மிகளானாலும், மால்-திருமால், வளர்-கண்வளரும், விமானத்து-(சொன்ன) விமானத்தை

யுடைய, வள் - வளம்பொருந்திய, தலம் ஆம் - திருப்பதியாகிய, அரங்கம் வழியா வரினும் - சீரங்கமார்க்கமாய் வந்தபோதிலும், மாண த்து - பெருமைபொருந்திய, வண்டு அமர் - வண்டுகள் மொய்த்த, தார் அண்டர் - மாலையைப் (புனைந்திருக்கும்) தேவர்கள், ஆம்-வீற்றிருக்கும், பதம்-பதவி, (தெய்வலோகம்) வாய்க்கும்-சித்திக்கும். எ-று.

ஒருவனுக்கு அபுத்தி பூர்வகமாய்த் திருவரங்கவாசம் நேரிடினும் அவனுக்குத் தீவினைகள் நீங்கி, தெய்வலோக இன்பம் சித்திக்குமென்பதாம். "சீர்மான அரங்கம் வழியாவரினும்" என இயைக்க.

கூசு. அங்காக்கைக்கேமங்கைக்கீந்தானரங்கனவனிக்குவாய்
அங்காக்கைக்கேபசித்தானிற்கவேமுத்தியாக்கித்துயர்
அங்காக்கைக்கேசிலர்வேறேதொழுவருந்திரவிய்
அங்காக்கைக்கேதனத்தாடருமோதிருவன்றியிலே.

(இ-ள்.) அம் - அழகிய, கா-கற்பகத்தருவை, மங்கைக்கு-சத்தியபாமைக்கு, கைக்கு ஈந்தான் - கையிற்கொடுத்தவன், அரங்கன்-திருவரங்கன், அவனிக்கு - உலகுக்கு, வாய் - திருப்பவளத்தை, அங்காக்கைக்கு - திறப்பதற்கே, பசித்தான் - பசித்தவன், நிற்க-(அவன்) இருக்க, சிலர் - சிலபேர், முத்தியாக்கி - மோட்சத்தைக்கொடுத்து, துயரம் காக்கைக்கு - விபத்துகள் (வாராது) காப்பதற்கு, வேறே தொழுவர் - வேறுதேவர்களைத் தொழுவார், அருதிரவியம் - கிடைத்தற்கரிய செல்வத்தை, திரு அன்றியில் - திருமகள் அல்லாமல், காக்கைகேதனத்தாள் - காக்கைக்கொடியையுடைய மூதேவி, தருமோ-கொடுப்பாளோ. எ-று.

கா மங்கைக்கு ஈந்தான் என்கையாலே மங்கையென்பதற்கு சத்யபாமையெனப் பொருளுரைக்கப்பட்டது. புக்தி முக்திகளைக்கொடுக்குமிறைவனிருக்கச் சிலர் தேவதாந்தரங்களைப் பஜித்தல் ஐசுவரியாதிகளைக் கொடுக்குந் திருமகளிருக்க மூதேவியைப் பஜித்தல்போலுமென்பதாம். "நாட்டினான் தெய்வமெங்கும் நல்லதோரருள்தன்னாலே, காட்டினான் திருவரங்க முய்பவர்க்குய்யும் வண்ணம், கேட்டிரோனம்பிமீர்காள் கெருடவாகனனு நிற்கச், சேட்டை தன் மடியகத்துச் செல்வம் பார்த்திருக்கின்றீரோ." என்றார் தொண்டரடிப் பொடியாழ்வாரும்.

கூஎ. அன்றேயடையவுனக்கேயடிமையென்றாய்ந்துணர்ந்தார்
அன்றேயடையப்படுவாருனையரங்காவனத்திய்
அன்றேயடையையயில்வோருமீதறியாரறிஞர்
அன்றேயடையைம்புலனுலுநன்கில்லையாங்கவர்க்கே.

(இ-ள்.) அரங்கா - திருவரங்கனே, அன்றே - (உலகில் ஜன்மித்த) போதே, அடைய - அடங்கலும், உனக்கே - உன்றனக்கே, அடிமையென்று - தொண்டென்று, ஆய்ந்து - ஆராய்ந்து, உணர்ந்தார் அன்றே - அறிந்தவர் அல்லவா, உனை - உன்னை, அடையப்படுவார் - சேருமவர், வனத்து - காட்டில், இயன்று - உறைந்து, எய்-(அவ்விடத்தில்) பொருந்திய, அடையை - இலை (முதலியவற்றை), அயில்வோரும் - புசிப்பவரும், ஈதறியார் - இதனை உரை கில்லா

னில், அறிஞர் அன்று - அறிவுடையவர் அல்லர், அடை - காவலி விடப்பட்ட, ஐம்புலனுனும் - பஞ்சேந்திரியங்களாலும், அவர்க்கு- அவர்களுக்கு, நன்கு - பயன், இல்லை - இல்லையாம். எ-று.

ஆங்கு - அசைநிலை. எல்லாச் சேதநாசேதநர்களும் உன்னுடைமையென்னு முண்மையறிவுள்ளவர் உன்னைச்சேர்வார், அஃதில்லாதவர் வனத்திற்போய் இலைமுதலியவற்றைப் புசித்து ஐம்புல நிக்ரஹஞ் செய்யினும் பயனில்லையென்பதாம்.

கூ அ. ஆங்காரமாமின்னைத்தோய்மார்பரங்கனளையிணையுண்டு
ஆங்காரமானிலமுண்டார்க்குத்தொண்டனிவ்வண்டத்தப்பால்
ஆங்காரமான்பகுதிப்புறம்போயமுதாற்றிற்படிந்து
ஆங்காரமானடிகாண்பேனவன்றனருள்சிந்தித்தே.

(இ-ள்.) ஆம்-நீர் (உண்ட), கார்-மேகத்தினது, அம் ஆ-அழகு ஆக, மின்னை - பிராட்டியாரை, தோய் - படிந்திருக்கப்பெற்ற, மார்பு- வக்ஷஸ்தலமுடைய, அரங்கன் - திருவரங்கன், அளையிணை - தயிரை, உண்டாங்கு-புசித்ததுபோல, ஆர-(குறைபட்டவயிறு) நிரம்ப, மால்- பெரிய, நிலம் - புவனத்தையும், உண்டார்க்கு - அமுது செய்தவர்க்கு, தொண்டன் - அடியன் ஆயினேன், (ஆகையால்) இ அண்டத்தப் பால்-இந்த அண்டகோளகைக் கப்புறத்தில், அகங்காரம்-அகங்காரதத் துவத்திற்கும், மான் - மகத்தத்துவத்திற்கும், பகுதி-மூலப்பிரகிருதிக் கும், புறம்போய்-புறம்பாகச்சென்று, அமுது ஆற்றில் படிந்து-விரசா நதியில் தோய்ந்து, ஆங்கு - அவ்விடத்தில், ஆர் - எழுந்தருளிய, அம்மான்-சுவாமியினது, அடி-திருவடிகளை, அவன் தன் அருள்-அவனுடைய கருணையை, சிந்தித்து-தியானஞ் செய்துகொண்டே, காண் பேன்-தரிசிப்பேன்.

திருவரங்கனுக்குத் தொண்டனுயினேனுதலால் அவனைப் பரமபதத்திற்சென்று தரிசிப்பேனென்பதாம்.

கூகூ. சிந்தாகுலமுய்யக்குன்றெடுத்தாய்தென்னரங்கசுற்றும்
சிந்தாகுலகம்படைத்தளித்தாய்நிலஞ்சென்றிரந்த
சிந்தாகுலவுசெல்வந்தந்தைதாய்குருதெய்வமுநீ
சிந்தாகுலமடைந்தேனடியேன்சென்மந்தீர்த்தருளே.

(இ-ள்.) சிந்து-சிதறிய, ஆகுலம் - பசுக்கூட்டம், உய்ய-உயிர் பிழைக்க, குன்று எடுத்தாய் - கோவர்த்தநமலையை யெடுத்தவனே, தென் அரங்க - திருவரங்கமுடையாய், சுற்றும் - சுற்றிலும், சிந்து ஆகு - கடல்சூழ்ந்த, உலகம் - மேதினியை, படைத்து-சிருஷ்டித்து, அளித்தாய் - ரக்ஷித்தவனே, சென்று-(மாவலியினிடத்தில்) போய், நிலம் - (மூன்றடி) மண்ணை, இரந்த - யாசித்த, சிந்தா - வாமநனே, குலவு - விளங்குகின்ற, செல்வம்-சம்பத்தும், தந்தை-பிதாவும், தாய்- மாதாவும், குரு - ஆசாரியரும், தெய்வமும்-குலதேவதையும், நீ-நீயே, சிந்தா - மனம், ஆகுலம் அடைந்தேன் - துன்பமடைந்தேன், (ஆகையினுல்) அடியேன் - தாசபூதனுகிய எனது, சென்மம் - பிறப்பை, தீர்த்து - ஒழித்து, அருள் - கிருபைசெய். எ-று.

தீர்த்தருள் என்பதை ஒரு சொல்லாக்கி உரைக்கினுமாம்.

௧00. தீரத்தரங்கப்பவநோய் துடைத்தென்னைத்தேவரோடும்
தீரத்தரங்கப்பணிகாப்பவைத்தசெயலென்பதோர்
தீரத்தரங்கவபயமென்றார்க்குந் திரைப்பொன்னிசூழ்
தீரத்தரங்கன்சிலம்பார்ந்தசெய்யதிருவடியே.

(இ - ள்.) அத்தர் அங்க - பிரமருத்திராதியர் (வாழும்) திருமேனியாய், அபயம் - அடைக்கலம், என்று - என்பதுபோல, ஆர்க்கும் - ஆரவாரிக்கும், திரை - அலைகளையுடைய, பொன்னி - தென் திருக்காவேரியாறு, சூழ் - சூழ்ந்த, தீரத்து-வரம்பினையுடைய, அரங்கன் - திருவரங்கனது, சிலம்பு ஆர்ந்த - நூபுரம் அணிந்த, செய்ய, செந்தாமரை மலர்போலும், திருவடி-சிறப்புற்றபாதங்கள், தரங்கம்-கடல்போன்ற, பவநோய்-சென்மப்பிணியை, தீர-ஒழிய, துடைத்து-நீக்கி, என்னை - அடியேனை, தேவரோடும் - முத்தர்களோடும் - தீரத்தர் - நித்தியசூரிகளுக்கு, அங்கு-பரமபதத்தில், அப்பணி - அக்கயிங்கரியத்தை, காப்ப-காத்திருந்துசெய்ய, வைத்த-வைத்த, செயலென்பது - செய்கையினை, ஓர்தீர் - (உலகீர்) அறியுங்கள். எ-று.

"ஏறாளுமிறையோனுந் திசைமுகனு மிந்திரனுங் கூறாளுந்தனியுடம்பன்" என்னும் ஸ்ரீ சூக்தியின் பொருளைத் திருவுளம்பற்றி, அத்தர் அங்க என்றார். திருவரங்கனுடைய திருவடிகள் என்னை நித்யசூரிகளோடு கூடியிருக்கச்செய்தன ஆதலால், உலகத்தீரே நீங்களும் அவன்றிருவடிகளை யாசிரயித் துஜ்ஜீவியுங்களென்பதாம்.

பணவாளரவினரங்கேசர்தாளிற்பருதிவளை
நிணவாளஞ்சார்ங்கங்கதைதோளிற்சாத்தினனீணிலமேல்
குணவாளராம்பட்டர்க்கேழேழ்பிறப்புங்குடியடியான்
மணவாளதாசன்யமகவந்தாதிவனைந்தனனே.

(இ - ள்.) பருதி - சக்கரம், வளை - பாஞ்சசன்னியம், நிணம்-(பகைவர்களுடைய) நெய்தோய்ந்த, வாள் - நாந்தகம், அம் - அழகான, சார்ங்கம்-வில், கதை - தண்டம், தோளில் சாத்தினன்-(ஆகிய பஞ்ச) சமுஸ்காரங்களையும் பெற்றவரும், நீள் நிலம் மேல் - நெடும் புவியில், குணவாளர் ஆம்-நற்குணம்படைத்தவர் ஆகிய, பட்டர்க்கு-பட்டருக்கு, ஏழ் ஏழ்பிறப்பும் குடி அடியான் - பதினான்குதலைமுறைகளும் தொண்டுபட்டவரும் ஆகிய, மணவாளதாசன்-திவ்யகவிப் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் என்பவர், பணம் - (ஆயிரம்) சிரங்களையுடைய, வாள் - ஒள்ளிய, அரவின் - திருவனந்தாழ்வான்மீது (கண்படுக்கும்), அரங்கேசர் - திருவரங்கநாதருடைய, தாளில் - திருவடியில், யமக அந்தாதி-யமகவந்தாதி மாலையை, வனைந்தனன்-சூடினான்.

பஞ்சஜநன் என்னு மசுரனிடத்துப் பிறந்தமையால் இவ்வளைக்குப் பாஞ்சஜந்யமென்னும் பெயர்வந்தது.

திருவரங்கத்தந்தாதி முற்றிற்று.

ஸ்ரீ

திருவரங்கத்து மாலை.

தனியன்.

மறைப்பொருளோவச்சிரப்பொருளோமனுவேமுதலாம்
முறைப்பொருளோவிதிகாசபுராணமுதுப்பொருளோ
இறைப்பொருளாநம்பெருமாளுடைத்திருவெட்டெழுத்தின்
உறைப்பொருளோமணவாளர்தம்மாலையினுட்பொருளே.

(இ-ள்.) மணவாளர் தம் - அழகிய மணவாளதாசரது, மாலையின்-கோயில்மாலையின், உள்பொருள்-அந்தரார்த்தமானது, மறைப்பொருளோ - வேதார்த்தந்தானோ, அ சிரப்பொருளோ - அந்த வேதாந்தார்த்தந்தானோ, மனுவே முதல் ஆம் - மநுமுதலாகிய, முறைப்பொருளோ - தர்மசாஸ்திரார்த்தமோ, இதிகாசபுராணம்-இதிகாசபுராணங்களின், முழு பொருளோ - பழய அர்த்தந்தானோ, இறைப்பொருள் ஆம் - தலைமைப்பொருளாகிய, நம்பெருமாள் உடை-திருவரங்கரது, திரு எட்டு எழுத்து - திருவட்டாக்கரத்தின், உள்ளுறை பொருளோ - உள்ளேயடக்கியிருக்கிற அர்த்தந்தானோ. எ-று.

வேதியரல்லாத மற்றைவருணத்தார்க்கு மறைக்கப்படுவதும் ரஹஸ்யமான பொருளையுடையதுமாதலால் வேதம் மறையெனப்பட்டது. அந்த வேதங்கள் நான்கு. அவை இருக்குவேதம், யசுர்வேதம், சாமவேதம், அதர்வணவேதம் எனப்படும். மநு - மநுவினால் செய்யப்பட்ட ஸ்ம்ருதி. ஸ்ம்ருதி-நினைப்பு. வேதத்தின் அர்த்தத்தை நினைத்துச்செய்யப்பட்டதாலால் ஸ்ம்ருதியெனப்பட்டது. இதிகாசம் - ஸ்ரீராமாயணம், ஸ்ரீ மஹாபாரதம் என்பன. புராணம்-மச்சியம் முதலாகிய பதினெட்டுமோம். இவையேயன்றி ஆதித்தியம் முதலாகிய பதினெட்டுப் புராணங்களுமுண்டு. இறைப்பொருளோ என்றும் பாடம். இதற்கு இவையாவினுஞ் சிறந்தபொருளோ என்பது பொருள். பெருமாள் பெருமான் என்பதன் திரிபு. பொருள் பெருமையையுடையோன் என்பது.

காப்பு.

நாளும்பெரியபெருமாளரங்கர்நகைமுகமும்
தோளும்தொடர்ந்தென்னையாளும்விழியுந்துழாய்மணக்கும்
தாளுங்கரமுங்கரத்திற்சங்காழியுந்தண்டும்வில்லும்
வாளுந்துணைவருமேதமியேனைவளைந்துகொண்டே.

(இ-ள்.) பெரியபெருமாள் அரங்கர்-பெரியபெருமாளாகிய திருவரங்கரது, நகைமுகமும்-புன்சிரிப்போடுகூடிய திருமுகமும், தோளும்-திருப்புயங்களும், என்னை தொடர்ந்து ஆளும் விழியும்-என்னை

இடையறாது பற்றியாட்கொள்ளக் கடைக்கணிக்கிற திருக்கண்களும், துழாய்மணக்கும் தாளும் - திருத்துழாய் பரிமளிக்கிற திருவடிகளும், கரமும் - திருக்கைகளும், கரத்தில் சங்கு ஆழியும் - அந்தக் கைகளிற்றரித்த சங்குசக்ரங்களும், தண்டும் - திருக்கதையும், வில்லும்-திருச்சார்ங்கமும், வாளும் - திருநந்தகமும், நாளும்-எந்நாளும், தமியேனை வளைந்துகொண்டு-தனியனான என்னைச் சுற்றிக்கொண்டு, துணைவரும் - உதவியாகவரும். எ-று.

நகை-மலர்ச்சியெனினுமாம். தொடர்ந்து என்பதற்குப் பிறவிதோறுந் தொடர்ந்து என்றலுமாம். அடியார் சாத்தின திருத்துழாய் மணத்தற்கிடமாகிய திருவடியாதலால் "துழாய்மணக்குந்தாள்" என்றார். பெரியகோயில் எனத் திருவரங்கத்திருப்பதிக்கும், பெரிய பெருமாள் எனத் திருவரங்கநாதருக்கும் திருநாமங்கள் வழங்கும். நகைமுக முதலாயின துணையன்றித் தமக்கு வேறு துணையில்லாமையால் தமியேன் என்றார்.

நூல்.

க. திருவாழிசங்குதிருவாழிவாழிசிறந்தகொண்டல்
உருவாழியோகத்திருத்துயில்வாழியுலகளந்த
மருவார்மதுமலர்த்தாள்வாழிவாழிவணங்குமன்பர்
பெருவாழ்வனையபெருமாளரங்கப்பெருஞ்செல்வமே.

(இ-ள்.) திருவாழி - பெரியபிராட்டியார் வாழ்வாராக, திருசங்கு ஆழிவாழி - ஸ்ரீ சங்குசக்ரங்கள் வாழ்வனவாக, சிறந்த கொண்டல் உருவாழி - மேலான நீலமேகம்போன்ற திருமேனிவாழ்வதாக, திருயோகம் துயில்வாழி - அழகாகிய யோகநித்திரைவாழ்வதாக, உலகு அளந்த - உலகத்தையளந்தருளின, மரு ஆர்-மணம்பொருந்திய, மது-தேன்நிறைந்த, மலர் - தாமரைமலர்போன்ற, தாள்-திருவடிகள், வாழி - வாழ்வனவாக, வணங்கும் அன்பர்-பணிகின்ற பத்தரது, பெருவாழ்வு அனைய-பெருவாழ்வை நிகர்த்த, பெருமாள்-நம்பெருமாள் என்கிற, அரங்கம் - திருவரங்கத்திலுள்ள, பெருசெல்வம் - பெரிய செல்வமானது, வாழி-வாழ்வதாக. எ-று.

புருஷகார பூதையாகிய பெரியபிராட்டியார் சேதநருடைய குற்றங்களைப் பொறுப்பித்து ஈசுவரனுக்குக் கிருபையுண்டாகும்படி பண்ணுமுபகாரத்தைக் கருதி முதற்கண் திருவாழி என அவளை வாழ்த்துவாராயினர். மேனி-நிறம், அன்றிவடிவம் எனினுமாம். யோகத்துயில்-லோகரக்ஷணசிந்தையோடுகூடிய அறிதுயில். மலர்களுள் சிறந்ததும் திருவடிக்கு உவமையாதற்குரியதும் தாமரைமலராதலால் அதனை மலர் என்றார்.

உ. படிப்பவளைப்பணிமெல்லணையாகப்பருவரையால்
தடுப்பவரைப்பண்டுமண்டுகன்மாரிதரணியிடந்
தெடுப்பவரைத்தம்மடியாரிடும்பச்சிலைக்குமுத்தி [னே.
கொடுப்பவரைச் செம்பொற்கோயிலுள்ளே கண்டுகொண்டன

(இ-ள்.) பணிமெல் அணை ஆக - திருவநந்தாழ்வான் மெல்லிய படுக்கையாக, படிப்பவரை-அதிற் பள்ளிகொள்பவரை, பண்டு - முற் காலத்தில், மண்டு-மிகுந்த, கல்மாரி-கல்மழையை, பருவரையால்-பெரிய மலையைக்கொண்டு, தடுப்பவரை-தடுத்தருளினவரை, தரணி-பூமியை, இடந்து எடுப்பவரை-தோண்டியெடுத்தவரை, தம் அடியார் இடும் - தமதடியார் சாத்துகின்ற, பச்சிலைக்கு - பசுமையாகிய திருத் துழாய்க்கு, முத்திகொடுப்பவரை-மோக்ஷத்தைத் தந்தருள்வோரை, செம்பொன் - செம்பொனாலியன்ற, கோயில் உள்ளே - திருவரங் கம்பெரியகோயிலிலே, கண்டுகொண்டனன் - தரிசித்துக்கொண் டேன். எ-று.

பணம்-படம், அதனையுடையது ஆதலால் பாம்பு பணியெனப் பட்டது. மண்டுதல்-நெருங்குதல் எனினுமாம். கல்மழை என்றது இந்திரனால் பெய்விக்கப்பட்ட சிலாவர்ஷத்தை. பருவரை என்றது கோவர்த்தநகிரியை. இது கிருஷ்ணாவதாரத்தில் நடந்தசெய்தி. தர ணியிடந்தெடுத்தது இரணியாக்ஷன் பாதலத்தில் பூமியைப்பாயலா கச் சுருட்டிக்கொண்டுபோனபோது வராகவுருக்கொண்டு சென்று அவனைக்கொன்று மீண்டுங் கொண்டுவந்த செய்தியைக் குறித்தது. பெரும்பான்மையும் இலையாகவேயிருத்தல் பற்றித் திருத்துழாயை இலையென்றே கூறலானார். பச்சிலை - பசுமையாகிய இலை எனப் பிரிக்க. முத்தி, மோக்ஷம் என்பன வீடு என்னும் தமிழ்ச்சொல்லின் பொருளமைந்த வடசொற்கள். வீடு-விடுதல். அதாவது உயிர் உடம் புறப்புக்களை, அன்றிக்குடும்பபாரத்தை விடுதல்.

ரு. ஆளானவர்கண்களிகூரரங்கத்தரவணைமேல்
சாளாசலமெனக்கண்டுகொண்டேன்மறைகாணவொண்ணுத்
தாளாயிரஞ்செம்பொன்மாமுடியாயிரந்தாமநெடுந்
தோளாயிரந்திருக்கண்ணுயிரக்கொண்டசோதியையே.

(இ-ள்.) மறைகாண ஒண்ணு-வேதங்களாலும் அறியக்கூடாத, ஆயிரம்தாள் - ஆயிரம் திருவடிகளையும், செம்பொன் - செம்பொன் னாற் செய்யப்பட்ட, மா - அழகாகிய, ஆயிரம்முடி-ஆயிரந்திருமுடி களையும், தாமம்-திருத்துழாய் மாலையையணிந்த, நெடு-பெரிய, ஆயி ரம்தோள் - ஆயிரம் திருப்புயங்களையும், திரு - அழகாகிய, ஆயிரம் கண் - ஆயிரம் திருக்கண்களையும், கொண்ட - தன்னிடத்தே கொ

ண்ட, சோதியை - ஒளியை, ஆள் ஆனவர் - அடியாரானவருடைய, கண் - கண்கள், களிகூர் - (தரிசித்து) களிப்புமிகுதற்குரிய, அரங்கத்து - திருவரங்கத்தில், அர அணைமேல் - சர்ப்பசயநத்தின்மீது, காளம் அசலம் என-நீலமலைபோலக் (கிடக்க), கண்டுகொண்டேன்- தரிசித்துக்கொண்டேன். எ-று.

ஆளானவர் கண்களிகூர் என்பதற்கு அடியாரானவர் கண்டு கண்களிகூர்தற்குரிய என்றுரைப்பினுமமையும். காளம் - கருமை. அது இவ்விடத்து நீலநிறத்தைக் குறித்துநின்றது. தாமம் ஒளியெனினுமாம். சோதி என்றது பெரியபெருமாளை. இவருக்கு ஒளியே உருவமாதலால் சோதி என்றார். அரவணை என்பதை அரவு அணை என்றும் பிரிக்கலாம். மாமுடி-பெரியமுடியெனினுமாம்.

சு. பூங்காவிரிப்புனற்கோயிலுள்ளேமிக்கபோகமெல்லாம்
யாங்காணயோகத்துயில்கொண்டவாறெள்ளுமெண்ணெயும்போல்
நீங்காதுலகத்துயிர்க்குயிராகிநியாமகனாய்
ஓங்காரமாயதனுட்பொருளாய்நின்றவொண்சுடரே.

(இ-ள்.) எள்ளும் எண்ணெயும்போல்-எள்ளும் (அதனிடத்து நிறைந்த) எண்ணெயும்போல, நீங்காது - இடையறாமல், உலகத்து உயிர்க்கு உயிர் ஆகி - உலகத்திலுள்ள ஆத்மாக்களுக்கு அந்தரர்த்மாவாகியும், நியாமகன் ஆய் - அவற்றை நியமிப்பவனாகியும், ஓங்காரம் ஆய்-பிரணவமாகியும், அதன் உள்பொருள் ஆய்நின்ற - அதன் அந்தரார்த்தமாகியும் நிலைபெற்றிருந்த, ஒள்சுடர் - ஒட்பமாகிய ஒளியானது, பூகாவிரிபுனல்-அழகாகிய காவேரியாற்றுநீரால் சூழப்பெற்ற, கோயில் உள்ளே - திருவரங்கம் பெரியகோயிலில், மிக்கபோகம் எல்லாம் - மிகுந்தவைபவங்களையெல்லாம், யாம்காண - நாம்சேவிக்கும்படி, யோகத்துயில்கொண்ட ஆறு - யோகநித்திரைசெய்யும் பிரகாரம் (என்ன ஆச்சரியகரமாயிருக்கின்றது.) எ-று.

பூ - பொலிவு எனினுமாம். எள் ஜீவாத்மாவுக்கும், எண்ணெய் பரமாத்மாவுக்கும் உவமை.

ரு. கறங்காழிநாலெட்டிலக்கமியோசனைகட்செவியின்
பிறங்காகமும்மையிலக்கமியோசனைபேருலகில்
இறங்காழிமேகமெனவேயரங்கத்திலெந்தையதில்
உறங்காகநீளமைந்தைம்பதினாயிரமோசனையே.

(இ-ள்.) கறங்கு - ஒலிக்கின்ற, ஆழி-திருப்பாற்கடலின் பரப்பு, நால் எட்டு இலக்கம் இயோசனை - முப்பத்திரண்டிலக்க யோசனையாகும், கட்செவியின் - திருவநந்தாழ்வானது, பிறங்கு-பிரகாசிக்கிற, ஆகம் - திருமேனியின் நீளம், மும்மை இலக்கம் இயோ

சனை - மூன்றுலக்ஷ யோசனையாகும், பேர் உலகில் - பெரியதாகிய உலகத்தில், இறங்கு-இழிந்த, ஆழிமேகம் என - சக்கரத்தையுடைய காளமேகம்போல, அரங்கத்தில்-திருவரங்கத்தில் (எழுந்தருளியிருக்கிற), எந்தை - எமது தந்தையாகிய எம்பெருமான், அதில் - அத்திருவநந்தாழ்வானது திருமேனியில், உறங்கு - யோகநித்திரைசெய்கிற, ஆகம்-திருமேனியின், நீளம் - நீளமானது, ஐந்து ஐம்பதின் ஆயிரம் ஓசனை - இரண்டரை லக்ஷயோசனை யாகும். எ-று.

கறங்கு ஆழி கடலுக்குப்பொதுவாயினும் இவ்விடத்துத் திருப்பாற்கடலைக் குறித்துநின்றது. நாலெட்டு-நாலும் எட்டும் என உம்மைத்தொகையாக்கி பன்னிரண்டென்றுங் கூறலாம். பாம்புக்குக் கண்ணே செவிப்புலனாகிய வோசையைஅறியும் பொறியாயிருத்தலால் அது கட்செவியெனப்பட்டது. ஆழிமேகமென-கடலும்மேகமும்போல எனினுமாம்.

சு. பாற்கடனாலெட்டிலக்கமியோசனைபாற்கடலுள்
மாற்கவிகோயிலகலமுமீரைந்துவானளவும்
தீற்கமொரோழுதிகழ்பணிமூன்றுசிறந்தகலம்
ஏற்கவின்றொன்றரையுத்தமர்நீளமிரண்டரையே.

(இ-ள்.) பால்கடல் - திருப்பாற்கடல், நாலெட்டு இலக்கம் இயோசனை - நாலெட்டுலக்ஷயோசனையாகும், பால்கடல் உள் - அந்தப்பாற்கடலினுள்ளே, மால்கவிகோயில் - மேகம்படிகின்ற திருக்கோயிலின், அகலமும் - விரிவும், ஈர் ஐந்து - பத்துலக்ஷயோசனையாகும், வான் அளவும் - ஆகாயத்தையளாவுகின்ற, தீற்கம் - அதின் நெடுமை-(உயரம்), ஓர் ஏழு-ஒரு ஏழு லக்ஷயோசனையாகும், திகழ்-பிரகாசிக்கிற, பணி - திருவநந்தாழ்வானது திருமேனியின் நெடுமை, மூன்று-மூன்றுலக்ஷயோசனையாகும், சிறந்த அகலம்-மேலான விரிவு, ஏற்க-நீளத்துக்கிணங்க, ஒன்றரை - ஒன்றரைலக்ஷயோசனையாகும், உத்தமர் நீளம் - புருஷோத்தமனாகிய எம்பெருமானது நெடுமை, இரண்டரை - இரண்டரைலக்ஷயோசனையாகும், எ-று.

மால்கவி என்பதற்குத் திருமாலைவளைந்திருக்கிற என்றுரைப்பினும் பொருந்தும். உத்தமர்-தமசைக்கடந்தவர் எனினுமாம். தமசு-இருள், அதாவது பிரகிருதி.

எ. அடித்தலமந்தவதலம்பொருதிரையாழிவையம்
கடித்தலநேமிக்கிரியுடையாடைகபாலிமுன்னாள்
மிடித்தலமர்ததொழித்தானரங்கன்விழியிருகோள்
முடித்தலமண்டமுகடினியாமென்மொழிவதுவே.

(இ-ள்.) கபாலி - உருத்திரன், முன் நாள் - முன்னாளில், மிடித்து - வறுமையலடைந்து, அலமந்தது - இரந்துழன்ற வருத்தத்தை,

ஒழித்தான்-நீக்கினவனாகிய, அரங்கன் - திருவரங்கனது, அடிதலம்-திருவடிகளுக்கிருப்பிடம், அந்த அதலம் - அந்த அதலலோகமாகும், கடிதலம் - திருவரைக்கிருப்பிடம், பொருதிரை - ஒன்றோடொன்று மோதுகின்ற அலைகளையுடைய, ஆழி-கடல்சூழ்ந்த, வையம்-பூலோகமாகும், உடை ஆடை - அந்தத்திருவரையில் உடுத்தற்குரிய வஸ்திரம், நேமிக்கிரி - (இந்த பூலோகத்தைச் சூழ்ந்திருக்கிற) சக்ரவாளகிரியாகும், விழி - (அவனுக்குத்) திருக்கண்களாயிருப்பன, இருகோள் - சூரியன் சந்திரன் என்னும் இரண்டுகிரகங்களாகும், முடிதலம் - திருமுடிக்கிருப்பிடம், அண்டமுகடு - அண்டமுகடாகும், இனி-இப்படியானபின்பு, யாம் மொழிவது-நாம் சொல்லுதற்குரிய அவர் பெருமை, என்-யாது. எ-று.

அதலம்-கீழேழுலகங்களுள் முதற்கண்ணது. பொரு-கரையை மோதியழிக்கிற எனினுமாம். கபாலி-பிரமகபாலத்தைக் கைக்கொண்டவன். இறைவனுக்குச் சூரியன் வலக்கண்ணும் சந்திரன் இடக்கண்ணுமாதலால் விழியிருகோள் என்றார்.

அ. திண்சுடராழியரங்கேசர்திக்குத்திருச்செவியில்
மண்கழலிற்சத்யலோகஞ்சிரத்தின்மருத்துயிரில்
தண்கதிருள்ளத்தில்வானுந்தியிற்செந்தரணிகண்ணில்
ஒண்கனலிந்திரன்வாழ்முகப்போதிலுதித்தனரே.

(இ-ள்.) திண்சுடர் - வலியும் ஒளியுமுள்ள, ஆழி - திருச்சக்கரத்தையுடைய, அரங்கேசர் - திருவரங்கநாதரது, திருச்செவியில்-அழகிய காதுகளில், திக்கு - திசைகளும், கழலில் - திருவடிகளில், மண்-பூமியும், சிரத்தில் - திருமுடியில், சத்யலோகம் - சத்யலோகமும், உயிரில் - பிராணனில், மருத்து-காற்றும், உள்ளத்தில் - திருவுளத்தில், தண்கதிர் - சந்திரனும், உந்தியில் - திருநாபியில், வான்-ஆகாசமும், கண்ணில்-திருக்கண்களில், செந்தரணி - செம்மையாகிய சூரியனும், வாழ் - வாழ்தற்குரிய, முகப்போதில் - முகமாகிய தாமரைமலரில், ஒள்கனல் - ஒள்ளிய அக்கினியும், இந்திரன் - இந்திரனுமாக, உதித்தனர் - பிறந்தார்கள். எ-று.

சத்யலோகம் - பிரமனுலகம். குளிர்ந்த கிரணங்களையுடையவனாதலால் சந்திரனைத் தண்கதிர் என்றார். முகப்போதில் என்றாராயினும் தாமரைமலர்போன்ற முகத்தில் எனப்பொருள்கொள்க.

கூ. புரமாயிரந்திருக்கண்மலராயிரம்புண்டரிகக்
கரமாயிரங்கழற்கான்மலராயிரங்கண்ணிமுடிச்
சிரமாயிரந்திருநாமமுமாயிரஞ்செய்யகையில்
அரமாயிரங்கொண்டதிண்டிறலாழியரங்கருக்கே.

(இ-ள்.) ஆயிரம் அரம்கொண்ட - ஆயிரம் கூர்மையைத் தன்னிடத்தில்கொண்ட, திண் திறல்-வலியும் போர்த்தொழிலுமமைந்த, ஆழி - திருச்சக்கரத்தை, செய்ய கையில் - செவந்த திருக்கரத்திலே யுடைய, அரங்கருக்கு - திருவரங்கநாதருக்கு, புரம் ஆயிரம் - திருமேனி ஆயிரமாகும், திருமலர்க்கண் ஆயிரம் - தாமரைமலர்போன்ற திருக்கண்கள் ஆயிரமாகும், புண்டரிகம் கரம் ஆயிரம் - தாமரை மலர்போன்ற திருக்கைகள் ஆயிரமாகும், கழல் - வீரக்கழலைத் தரித்த, மலர் கால் ஆயிரம் - தாமரைமலர்போன்ற திருவடிகள் ஆயிரமாகும், கண்ணிமுடி - திருத்துழாய் மாலையை யணிந்த மகுடத்தை யுடைய, சிரம் ஆயிரம் - திருவபிஷேகங்கள் ஆயிரமாகும், திருநாமமும் ஆயிரம் - (இவையேயன்றி) திருப்பெயர்களும் ஆயிரமாகும்.

"புண்டரீகம் ஸிதாம்போஜம்" என வடநூலார் விதந்து கூறியிருப்பினும் இவ்விடத்துப் புண்டரிகம் என்பது தாமரைப்பொதுவை யுணர்த்திற்று. கான் மலர் கழல் என நிறுத்தி, பரிமளத்தையுடைய தாமரை மலர்போன்ற திருவடியென்றுரைப்பினுமமையும். அரம் - முனையெனினுமாம். திண்திறல் - மிக்கவலி யெனினும் பொருந்தும்.

௧௦. முன்னாள்விசும்பும்புவியுந்திசையுமுறைவகுத்த
அந்நான்முகன்றனதாவியெல்லாமலராசனையாம்
மின்னார்மழைமுகினன்னாகமீதில்விழிதுயில்கூர்
என்னாதனுக்கொருமூச்சென்றுவேதமிசைக்கின்றதே.

(இ-ள்.) முன்னாள் - முற்காலத்தில், விசும்பும் - ஆகாசத்தையும், புவியும்-பூமியையும், திசையும் - திக்குகளையும், முறைவகுத்த - முறைமைப்படி சிருஷ்டித்த, அ-அந்த, நான்முகன் தனது - நான்கு முகங்களையுடையவனாகிய பிரமனது, ஆவி எல்லாம்-உயிர்முழுதும், மலர் ஆசனை ஆம் - தாமரை மலரைத்தனக்கு ஆசநமாகவுடைய பெரியபிராட்டியாராகிய, மின் ஆர்-மின்னற்கொடி தன்னிடத்தே பொருந்தப்பெற்ற, மழை முகில் - கார்காலமேகத்தை நிகர்த்தவனாகிய, நல்நாகம்மீதில் - அழகாகிய ஆதிசேடன்மேல், விழிதுயில் கூர்-திருக்கண்வளர்ந்தருள்கிற, எம் நாதனுக்கு - எம்மிறைவனுக்கு, ஒரு மூச்சு என்று-ஒரு சுவாசமாகுமென்று, வேதம் இசைக்கின்றது-வேதம் சொல்லாநின்றது. எ-று.

முன்னாள் என்றது மஹாப்ரளயம் நீங்கின அளவில் பிரமன் திருமாலின் திருவுந்தித்தாமரையில் தோன்றினகாலத்தை. முறை யென்றது திருமாலின் திருவயிற்றுள்ளிருக்கும்போது கண்டமுறைமையை. ஆவியெல்லாம் என்றது வாழ்நாளெல்லாம் என்றபடி. இறைவனுக்கு சிங்காசநம் மரவடி முதலியவாக உபயோகப்பட்டு

சகல விதகைங்கர்யங்களுக்கும் உரியராய் நிற்றலால் திருவநந்தாழ் வானை நன்னுகம் என்றார்.

கக. எண்ணிற்றிகிரிப்பிறப்பிடமானதுமெண்ணுமவர்
நண்ணிச்சிறக்கவிருப்பிடமானதுநாசமில்லா
விண்ணிற்பதிக்குக்கடைத்தலையானதும்விண்ணவர்தம்
கண்ணிற்சிறந்ததுமாநீரரங்கர்தங்கண்ணிலொன்றே.

(இ-ள்.) எண்ணின் - ஆலோசித்துப்பார்க்கின், திகிரி - சூரிய னுக்கு, பிறப்பு இடம் ஆனதும் - ஜந்ம பூமியானதும், எண்ணுமவர்-தன்னை நினைக்கிற அன்பர், நண்ணிசிறக்க - பொருந்திமேன்மைப் பட, இருப்பிடம் ஆனதும்-வாஸஸ்த்தாநமாயிருப்பதும், நாசம் இல் லாவிண்ணின்பதிக்கு - (எக்காலத்தும்) அழிவில்லாத பரமாகாச மாகிய பரமபதத்துக்கு, கடைத்தலை ஆனதும் - தலைவாயிலாயிருப் பதும், விண்ணவர்தம் - தேவர்களுடைய, கண்ணின் சிறந்ததும்-கண்போலச் சிறந்திருப்பதும், மாநீர் - பெரிய நீர்மையையுடைய, அரங்கர் தம் - திருவரங்கரது, கண்ணில் ஒன்றே - திருக்கண்களில் ஒன்றேயாகும். எ-று.

திகிரி - சக்கரம் எனினுமாம். விண்ணின்பதி-விண்ணாகிய பதி, இதில் இன் அல்வழிச்சாரியை. நாசமில்லாவிண் என்றமையால் பரமபதமாயிற்று. மாநீர் அரங்கர் என்பதற்குப் பெரியகாவேரி நீரால் சூழப்பட்ட திருவரங்கத்தில் எழுந்தருளியிருப்பவர் என்றுரைப்பி னும் பொருந்தும். கண்ணிலொன்று என்றது வலக்கண்ணை. சூரி யன் இறைவனது வலத்திருக்கண்ணினின்றுந் தோன்றியதனால் "திகி ரிப்பிறப்பிடமானது" என்றும், கடைக்கணிக்கப்பட்ட அடியார் மேன் மையையடைய வழியாயிருத்தலால் "எண்ணுமவர் நண்ணிச் சிறக்க விருப்பிடமானது" என்றும், வீடடைவோர் செல்லும் வாயிலாயிருத் தலால் "நாசமில்லாவிண்ணிற்ப திக்குக்கடைத்தலையானது" என்றும், தேவர்களுக்குக்கண்போலச் சிறந்திருத்தலால் "விண்ணவர்தங் கண் ணிற் சிறந்தது" என்றும் கூறினார். அரங்கருக்கு மாநீர் பெருங் கருணை. காவேரி நீருக்கு மாநீர் தன்னிடத்தில் மூழ்கினவரது பாவங் களைப்போக்கி அவரை விரஜாநதியில் மூழ்கும்படி செய்யும் பெருமை.

கஉ. புறக்குன்றுபுல்லிதழ்மூந்நீர்பிரசம்பொருவில்செம்பொன்
நிறக்குன்றுகன்னிகையெண்கிரிதாதுநிலமதனுள்
பிறக்குந்துகண்முதுமாசுணநாளம்பிரமன்வண்டு
சிறக்குந்திகிரியரங்கேசருந்திச்செழுமலர்க்கே.

(இ-ள்.) சிறக்கும் - சிறந்து விளங்குகிற, திகிரி - சக்கராயுதத் தையுடைய, அரங்கேசர் - திருவரங்கநாதரது, உந்தி - திருநாபியி லுண்டாகிய, செழுமலர்க்கு - செழுமையாகிய தாமரைமலருக்கு,

புறக்குன்று - பூமிக்கு வெளிப்புறத்திலிருக்கிற சக்ரவாளகிரி, புல் இதழ் - புறவிதழாகும், மூந்நீர் - கடலானது, பிரசம் - தேனாகும், பொருவு இல் - நிகரில்லாத, செம்பொன் - செம்பொன்னாலியன்ற, நிறக்குன்று - ஒளியையுடைய மேருகிரியானது, கன்னிகை-பொகுட்டாகும், எண்கிரி - அஷ்ட குலகிரிகள், தாது - அகவிதழ்களாகும், நிலம் - பூமியானது, அதனுள் பிறக்கும் துகள் - அந்த மலரிலுண்டாகிய பராகமாகும், முதுமாசுணம் - பழமையாகிய ஆதிசேஷன் என்னும் பெரும்பாம்பு, நாளம் - தண்டாகும், பிரமன் - பிரமதேவன், வண்டு - வண்டாவன். எ-று.

ஆற்றுநீர் ஊற்றுநீர் வேற்றுநீர் என்று மூன்று நீருஞ் சேர்தலால் கடல்மூந்நீர் எனப்பட்டது. எண்கிரி கயிலை இமயம் முதலியன.

கங. இருகூலமும்பொருமாநீரரங்கத்திலெந்தையந்தண்
முருகூர்கமலமுனியாய்வகுக்குமுறைமையினால்
புருகூதனுக்குத்திருத்தம்பியாகிப்புரக்குமுமை
ஒருகூறுகொண்டவரனாயழிக்குமுகாந்தத்திலே.

(இ-ள்.) இரு கூலமும்பொரும் - இருபுறக்கரையிலும் மோதுகின்ற, மாநீர்-(காவேரி நதியின்) பெரிய நீராற்சூழப்பட்ட, அரங்கத்தில் - திருவரங்கத்திலெழுந்தருளிய, எந்தை - எமது தந்தையாகிய திருவரங்கர், அம் தண் முருகு ஊர் - அழகும் குளிர்ச்சியும் மணமுமுள்ள, கமலமுனி ஆய்-பிரமதேவனாகி, முறைமையினால்-படைக்கவேண்டிய முறைமையோடு, வகுக்கும் - (உலகங்களையும் அவற்றிலுள்ள உயிர்களையும்) படைத்தருள்வார், புரு கூதனுக்கு திருத்தம்பி ஆகி - இந்திரனுக்குத் திருத்தம்பியாகி (உபேந்திரனாகி), புரக்கும்-காத்தருள்வார், உமை ஒரு கூறுகொண்ட-உமாதேவியை ஒருபாகத்தில் அமைத்துக்கொண்ட, அரன் ஆய் - உருத்திரனாகி, உகம் அந்தத்தில் - யுகமுடிவில், அழிக்கும் - அழித்தருள்வார். எ-று.

முருகு தேன் எனினுமாம். இந்திரன் பிரார்த்தனையின்படியே அவனுக்குத் தம்பியாக அதிதியின் வயிற்றில் திருவவதரித்து அவன் பகைவரையழித்து அவனுக்குக் காவலாக அவனருகி லெழுந்தருளியிருத்தலால் "புருகூதனுக்குத் திருத்தம்பியாகி" என்றார்.

கச. வாரித்தலமுங்குலபூதரங்களும்வானுமுள்ளே
பாரித்துவைத்தவிவ்வண்டங்கள்யாவும்படைக்குமுன்னாள்
வேரிப்பசுந்தண்டுழாயரங்கேசர்விபூதியிலே
மூரிப்புனலிற்குமிழிகள்போலமுளைத்தனவே.

(இ-ள்.) வாரி தலமும் - சமுத்திரஞ்சூழ்ந்த பூமியையும், குலபூதரங்களும் - குலகிரிகளையும், வானும் - ஆகாயத்தையும், உள்ளே - தனக்குள்ளே, பாரித்துவைத்த - பரப்பி வைத்திருக்கிற,

இ அண்டங்கள் யாவும் - இந்த அண்டங்களெல்லாம், முன் நாள்-முற்காலத்தில், படைக்க - பிரமதேவன் சிருஷ்டிக்க, வேரி-பரிமளமுள்ள, பசு - பசுமையாகிய, தண் - குளிர்ச்சிபொருந்திய, துழாய்-திருத்துழாய்மாலையை யணிந்த, அரங்கேசர் - திருவரங்கநாதருடைய, விபூதியிலே - லீலா விபூதியிலே, மூரி புனலில்-பெருமையாகிய நீரில், குமிழிகள்போல - குமிழிகள் உண்டாவதுபோல, முளைத்தன - உண்டாயின. எ-று.

வேரி-தேன் எனினும், பசுமை இளமையெனினும், மூரி-வலியெனினும் அமையும். லீலாவிபூதி - இறைவனது திருவிளையாடல்கள் நிகழ் தற்குரியலோகங்கள். மூரிப்புனல் என்றது பெரும்புறக்கடலை. இது சக்ரவாளகிரியை வளைந்திருப்பது.

௧௫. நெடுங்கடனிற்பதுநாயிறுகாய்வதுநித்தலுங்கால்
ஒடுங்கிநடப்பதுந்தண்கார்பொழிவதுமூழிதனில்
சுடுங்கனல்பற்றிச்சுடாதேயிருப்பதுந்தும்பைபுனைந்
தடுங்கனலாழியரங்கேசர்தந்திருவாணையினே.

(இ - ள்.) நித்தலும் - நாள்தோறும், நெடுகடல் நிற்பதும்-நெடிய கடலானது தன்னிலைகடவாது அடங்கி நிற்பதும், நாயிறு காய்வதும் - சூரியன் காலநியதி தவறுமல் காய்வதும், கால் ஒடுங்கி நடப்பதும் - வாயுவானது உயிர்கள் பொறுக்குமளவாக அடங்கிச் சஞ்சரிப்பதும், தண்கார் பொழிவதும் - குளிர்ந்த மேகமானது (பெய்யவேண்டு மளவாக மழையைச்) சொரிவதும், ஊழிதனில் - யுகமுடிவில், சுடும் கனல் - (எல்லாப் பொருள்களையும்) எரிக்கின்றவடவைத்தீயானது, பற்றி சுடாதே இருப்பதும்-(இடையே)பற்றியெரியாதிருப்பதும், தும்பை புனைந்து-தும்பை மலர் மாலையைத்தரித்து, அடும்-(அசுரர் முதலியோரை) கொல்லுகின்ற, கனல் - நெருப்புமயமான, ஆழி - சக்ராயுதத்தையுடைய, அரங்கேசர்தம்-திருவரங்கநாதரது, திரு ஆணையினே - திருவாணை யாற்றன். எ-று.

பெரும்புறக்கடலுமுட்பட நெடுங்கடலென்றார். தும்பைமாலை பகைவரோடு பொரும்போது வெற்றிக்குறியாகத்தரிப்பது.

௧௬- ஓலப்புனற்பொன்னிநன்னீரரங்கருகந்திரியும்
காலத்தினிற்கொள்ளையண்டமெல்லாமுண்டுகாமர்பசுங்
கோலக்குழவியுருவாயகண்டமுங்கோத்தவெள்ளத்
தாலத்திலையின்புடைக்கேதுயில்வரகமகிழ்ந்தே.

(இ - ள்.) ஓலம் புனல் பொன்னி - ஓசையோடுகூடிய நீர்ப்பெருக்கையுடைய காவிரிநதியாற் சூழப்பட்ட, நல்நீர் - நன்னீர்மையமைந்த, அரங்கர் - திருவரங்கத்தி லெழுந்தருளிய எம்பெருமானவர், உகம் திரியும் காலத்தினில்-யுகம் மாறுபடுங்காலத்தில், கொ

ள்ளை அண்டம் எல்லாம் - மிகுதியாகிய அண்டங்களையெல்லாம், உண்டு - அமுதுசெய்து, காமர் கோலம் - மிகவும் அழகாகிய, பசுகுழவி உரு ஆய் - இளங்குழந்தையின் உருவங்கொண்டு, அகண்டமும் கோத்த வெள்ளத்து-எல்லாப் பொருள்களையும் தன் வசத்தடக்கிக்கொண்ட பிரளய நீரின் பெருக்கத்தில், ஆலத்து இலையின் புடைக்கு - ஆலிலையினிடத்தில், அகம் மகிழ்ந்து துயில்வர் - திருவுளமகிழ்ந்து கண் வளர்ந்தருளுவார். எ-று.

அரங்கத்துக்கு நன்னீர்மையாவது ஒரு மாத்திரைப்போது தன்னிடத்து வதிந்தாரையும் புனிதராக்கி வீடு பேற்றுக் குரியராக்குங் குணம். அன்றி நம்பெருமாளுக்கு விசேஷணமாக்கினும் பொருந்தும்.

கஎ. தாற்றுக்கமுகவனஞ்சூழரங்கர்சயனமுகக்
காற்றுப்புலரும்படிமுதல்வீசுங்கறைக்களத்தன்
நீற்றுச்செவந்தெழுங்காராழித்தீச்சுடுநீள்கழலின்
ஆற்றுப்பெரும்பெருக்கண்டமெல்லாங்கொள்ளுமந்தத்திலே.

(இ-ள்.) தாறு - குலைகளையுடைய, கமுகவனம்சூழ்-கமுகமரச்சோலைசூழ்ந்த, அரங்கர் - திருவரங்கத்தி லெழுந்தருளி யிருப்பவராகிய நம்பெருமாளது, நீள்கழலின் - நீண்ட திருவடியிலுண்டாகிய, ஆறு - கங்காநதியின், பெருபெருக்கு - பெருவெள்ளம், அண்டம் எல்லாம் - அண்டங்கள் எல்லாவற்றையும், கொள்ளும்-கவர்ந்துகொள்ளுகிற, அந்தத்திலே - யுகமுடிவுகாலத்தில், சயநம் - அவரது படுக்கையாகிய திருவநந்தாழ்வானுடைய, முகம் காற்று - முகங்களினின்று முண்டாகிற காற்றானது, முதல் - முன்னே, புலரும்படி - யாவும் உலரும்படி, வீசும் - அடிக்கும், (அதின்பிறகு) கறைகளத்தன் - விஷகண்டத்தை யுடையவராகிய உருத்திர மூர்த்தியானவர், நீற்று - எல்லாவற்றையும் நீறுபடுத்தி, செவந்து எழும் - கோபித்தெழுவர், (அதுவுமன்றி) கார் ஆழி தீ - கருங்கடலினிடையேயுள்ள வடவைத்தீயும், சுடும் - எரித்தழிக்கும். எ-று.

கார் ஆழி செவந்தெழும் தீ கறைக்களத்தன் நீறு சுடும் எனப் பதங்களை நிறுத்தி, கருங்கடலில் செவத்தெழுகின்ற வடவைத்தீயானது எல்லாப்பொருள்களையும் விஷகண்டத்தையுடையவராகிய ருத்ரமூர்த்தியின் வெண்ணீறு போலாகும்படி எரிக்கும் என்றுரைப்பினுமாம்.

கஅ. சின்னூல்பலபலவாயாலிழைத்துச்சிலம்பிபின்னும்
அந்நூலருந்திவிடுவதுபோலவரங்கரண்டம்
பன்னூறுகோடிபடைத்தவையாவும்பழம்படியே
மன்னூழிதன்னில்விழுங்குவர்போதமனமகிழ்ந்தே.

(இ - ள்.) சிலம்பி - சிலந்திப்பூச்சியானது, பல பல சில்நூல்- பற்பலவாகிய மெல்லியநூலை, வாயால் இழைத்து-வாயினால் நூற்று, பின்னும் - மறுபடியும், அநூல்-அந்த நூலை, அருந்தி விடுவதுபோல- உண்டு விடுவதுபோல, அரங்கர் - திருவரங்கர், பல் நூறுகோடி அண்டம் - பலநூற்றுக்கோடி அண்டங்களை, படைத்து - சிருஷ்டித்து, அவையாவும் - அவையெல்லாவற்றையும், மன் ஊழிதன்னில் - பொருந்திய ஊழிக்காலத்தில், போதமனம் மகிழ்ந்து-மிகவும் திருவுளமகிழ்த்து, பழம்படியே-பழையபடியே, விழுங்குவர்-உண்டு விடுவார். எ-று.

மிகப்பலவென்றற்கு "பன்னூறுகோடி" என்றார். பழம்படியே என்றது முன்போல வேயிருக்க என்றபடி.

கசு. பந்திக்கமலத்தடஞ்சூழரங்கர்படைப்பழிப்பு
சிந்தித்திடுவதுமில்லைகண்டீரத்திசைமுகனோ
டுந்திக்கமலம்விரிந்தால்விரியமுகக்கடையில்
முந்திக்குவியினுடனேகுவியுமிம்மூதண்டமே.

(இ-ள்.) பந்தி-வரிசையாகிய, கமலம் தடம் - தாமரைத் தடாகங்கள், சூழ் - சூழ்ந்த, அரங்கர் - திருவரங்கத்தை யுடையவராகிய எம்பெருமான், படைப்பு அழிப்பு - சிருஷ்டி சங்காரங்களை, சிந்தித் திடுவதும் இல்லை-மனத்தினால் நினைத்தலையும் செய்வதில்லை, (மற் றென்னெனின்) உந்தி கமலம் விரிந்தால் - (அவரது) திருவுந்தித் தாமரை விரிந்தால், அ திசை முகனோடு - அந்த நான்முகனோடு, இ முது அண்டம் - இந்தப் பழமையாகிய அண்டங்கள், விரியும்- (தோன்றிப்) பரவும், உகம் கடையில் - யுகாந்தத்தில், முந்தி குவியின் - (அந்தத்தாமரை) முற்பட்டுக் குவிந்தால், உடனே குவியும்- உடனே குவிந்துபோம். எ-று.

கண்டீர் அசை.

உ௦. அடர்ந்தைநடந்தைவனஞ்சூழரங்கத்தரவணைமேல்
கிடந்தனர்துங்கக்கிரிமிசைநின்றனர்கேழலொன்றாய்
இடந்தனர்மீளவிழுங்கினர்கான்றனரீரடியால்
கடந்தனர்கைவழிமண்ணுனதிர்தமண்காரணர்க்கே.

(அ-ள்.) அடந்தை நடந்தை வனம் சூழ்-அடந்தை நடந்தை யென்னும் பெயருள்ள சோலைகள் சூழ்ந்த, அரங்கத்து - திருவரங் கத்தில், அர அணைமேல்-சர்ப்ப சயனத்தின்மீது, கிடந்தனர் - சய னத்திருக்கோலமா யெழுந்தருளினர், துங்கக் கிரிமிசை நின்றனர்- உயர்ந்தமலைகளின்மீது நின்ற திருக்கோலமாயெழுந்தருளினர், கேழல் ஒன்று ஆய் - ஒப்பற்றவராஹ ரூபங்கொண்டு, இடந்தனர்-

(கொம்பினால்) குத்தி யெடுத்தருளினர், மீளவிழுங்கினர் - மறுபடியும் உண்டருளினர், கான்றனர் - (யுகத்தொடக்கத்தில்) வெளிநாடு காண உமிழ்ந்தருளினர், ஈர் அடியால் கடந்தனர் - இரண்டு திருவடியால் நடந்து கடந்தருளினர், (ஆதலால்) காரணர்க்கு - ஜகத்காரணராகிய இறைவருக்கு, இந்தமண் - இந்தப்பூமியானது, கைவழிமண் ஆனது - கைவழித்தமண்ணாயிருந்தது. எ-று.

அடந்தை, நடந்தை என்னும் வனங்கள் தொண்டரடிப்பொடியாழ்வாரால் உண்டாக்கப்பட்டவை என்பர் அரவணைமேல் கிடத்தல், துங்கக்கிரிமிசை நிற்றல், இடத்தல், விழுங்கல், கான்றல், கடத்தல்களை இறைவன் பிரயாசமின்றிச் செய்தலால், அவைகள் அவற்குக் குயவன் தன்கையினின்றும் வழித்தெறியும் மண்போல் அற்பமாயிருக்கின்றன என்பது கருத்து.

உக. பின்னைக்கினியபெருமாளரங்கர்பெறாதுபெற்ற
முன்னைப்பிரமனைவாழ்விக்கவேண்டிமுன்னாள்கவர்ந்த
அன்னத்திருவுருவுள்ளேவளர்ந்ததற்கோரண்டமாம்
என்னச்சிறந்ததுமூதண்டம்யாமெனியம்புவதே.

(இ-ள்.) மூது அண்டம்-பழமையாகிய அண்டமானது, பின்னைக்கு - நப்பின்னைப் பிராட்டிக்கு, இனிய - இனியரான, பெருமாள் அரஙகர் - நம்பெருமாளாகிய திருவரங்கர், பெறாது பெற்ற-பெறவேண்டுமென்னும் எண்ணமில்லாமலே பெற்ற, முன்னை-தேவர் முதலியோர்க்கு முதல்வனாகிய, பிரமனை - பிரமதேவனை, வாழ்விக்க வேண்டி - வாழ்விக்கவிரும்பி, முன்நாள் கவர்ந்த - முற்காலத்தில் தாம்கொண்ட, அன்னம் திரு உரு உள்ளே - அன்னத்திருவுருவத்துக்குள்ளே, வளர்ந்து-விருத்தியாகி, அதற்கு-அந்த அன்னத்துக்கு, ஓர் அண்டம் ஆம் என்ன-ஒரு முட்டையாமென்னும்படி, சிறந்தது-சிறந்திருந்தது, (ஆதலால் அவ்வன்னத் திருவுருவத்தின் பெருமையைக்குறித்து) யாம் என் இயம்புவது - யாம் யாது சொல்லுவது.

முன்னை-யுகத்தொடக்கத்தில் எனினுமாம். இறைவனது திருவுந்தி மலர்தல் மாத்திரத்தாலே பிரமன்தோன்றினனாதலால் "பெறாதுபெற்ற" என்றார்.

உஉ. சூழிக்களிறுய்யவெவ்வாய்முதலைதுணித்தவுக்கிர
பாழித்திகிரிப்படையரங்கேசர்படைப்பவன்றன்
ஊழிப்பொழுதொருசேலாயொருசெலுவுட்கரந்த
ஆழிப்பெரும்புனல்காணாதுதேடுவரவ்விடத்தே.

(இ-ள்.) சூழி-முகபடாமணிந்த, களிறு-யானை, உய்ய-பிழைக்கும்படி, வெம்வாய் முதலை - கொடியவாயையுடைய முதலையை, துணித்த - அறுத்த, உக்ரம் - கொடுமையையும், பாழி - வலியையு

முடைய, திகிரிப்படை - சக்ராயுதத்தையுடைய, அரங்கேசர் - திருவரங்கநாதர், படைப்பவன்தன் ஊழிப்பொழுது - பிரமகற்பத்தின் ஆரம்பத்தில், ஒருசேல் ஆய் - ஒப்பற்ற மீனுருவாக, ஒருசெலு உள் கரந்த - ஒருசெலுவில் அடங்கி மறைந்துபோன, பெரு ஆழிபுனல்- பெரிய கடல்நீரை, காணுது - காணுமல், அவ்விடத்து - அந்த கடல் நீரிருந்த இடத்திலே, தேடுவர் - (தேவர்முதலியோர்) தேடாநிற்பர்.

சூழிக்களிறு என்றது கஜேந்திராழ்வானை. ஒருசெலுவுள் ஆழி பெரும்புனல்கரந்த ஒருசேலாய் அவ்விடத்து காணுதுதேடுவர் எனப் பதங்களை நிறுத்தி, (இறைவர்) ஒருசெலுவில் கடலின் பெருவெள்ளத்தையடக்கின ஒரு மீனுருவாகி அவ்விடத்து வேதங்களைக்காணுமல் தேடுவார் என்றுரைப்பினும் பொருந்தும். செலு - சிறம்பு. இதனைப் பொருக்கு எனவும் கூறுவர். இறைவன் மச்சாவதாரமெடுத்தது வேதங்களை அபகரித்துக் கடலிலொளித்த சோமுகாசுரனைக் கொன்று அவற்றைக் கொணர்தற் கென்க.

௨௩. பாட்டுக்குமுத்தமிழ்வில்லிபுத்தூர்வரும்பாவைகுழல்
சூட்டுக்குநல்லவர்தென்னரங்கேசர்தொடுகடல்வாய்
மோட்டுக்கமடத்திருவுருவாகிமுதுமுதுகில்
கோட்டுச்சயிலமுழுவதென்னுத்துயில்கொண்டனரே.

(இ-ள்.) முத்தமிழ் - முத்தமிழும் வழங்காநின்ற, வில்லிபுத்தூர் - ஸ்ரீவில்லிபுத்தூரில், வரும்-(பெரியாழ்வார் திருமகளாக) அவதரித்த, பாவை - சோதாதேவியினுடைய, பாட்டுக்கும் - பாமாலைக்கும், குழல்சூட்டுக்கும் - கூந்தலிலே சூடிக்கொடுத்த பூமாலைக்கும், நல்லவர் - விருப்பமுள்ளவராகிய, தென் அரங்கேசர் - தென்னரங்கநாதர், தொடு-(தேவாசுரர்களால்) கடையப்பட்ட, கடல்வாய்-திருப்பாற்கடலில், மோடு - பெரிதாகிய, திரு-அழகிய, கமடம் உரு ஆகி- ஆமையுருவாகி, முது முதுகில் - முதிர்ந்த தன்முதுகில், கோடுசயிலம் - சிகரங்களையுடைய மந்தரமலை, உழுவது என்னு - தவழ்வதென்று நினைத்து, துயில்கொண்டனர் - கண்வளர்ந்தருளினர். எ-று.

பாட்டு என்றது திருப்பாவைமுதலியவற்றை. முத்தமிழாவன- இயல் இசை நாடகம் என்பன. பாவை - பிரதிமைபோல்வாள். பாட்டு பதின்மர் ஆழ்வார்கள் பாட்டெனினுமாம். தென் - தெற்கு, அழகு. திருப்பாற் கடல் கடைய நாட்டப்பட்ட பெரியமந்தரமலை முதுகிலிருந்து சுழலாநிற்க, அதனை யொருபொருளாக நினையாது கமடத்திருவுருக்கொண்டு தாங்கி இனிது கண்வளர்ந்தருளினதனுல் “முது முதுகில் கோட்டுச்சயிலமுழுவதென்னுத் துயில்கொண்டனர்” என்றுர்.

௨௪. திரிக்கின்றபொற்குன்றழுந்தாமலாமைத்திருவுருவாய்ப்
பரிக்கின்றதிற்பெரும்பாரமுண்டேபண்டுநான்மறைநூல்
விரிக்கின்றவுந்தியரங்கேசர்தந்திருமேனியின்மேல்
தரிக்கின்றதுமகரக்கடலாடைத்தராதலமே.

(இ-ள்.) பண்டு - முற்காலத்தில், நால்மறைநூல் - சதுர்வேத மாகிய முதனூலை, விரிக்கின்ற - விரித்தருளின, உந்தி-திருநாபியை யுடைய, அரங்கேசர் - திருவரங்கநாதர், தம் திருமேனியின்மேல்- தமது திருமேனியின்மீது, தரிக்கின்றது - தாங்குகிறதாகிய, மகரம் கடல் ஆடை - மகரமீன்களையுடைய கடலாகிய ஆடையையுடுத்த, தராதலம் - பூதலமானது, திரிக்கின்ற - சுழற்றப்படுகிற, பொன் குன்று - அழகாகிய மந்தரமலையானது, அழுந்தாமல் - கடலிலழுந் திப்போகாமல், ஆமை திருவுரு ஆய் - ஆமையினது திருவுருக்கொ ண்டு, பரிக்கின்றதின்-தாங்குவதினும், பெருபாரம் உண்டே-பெரும் பாரத்தையுடையதே. எ-று.

பிரமன் தனது திருவுந்தியிலுண்டானபோது அவனுக்கு நான் மறையருளினதனால் "பண்டு நான்மறைநூல் விரிக்கின்ற வுந்தியரங் கேசர்" என்றார். "பண்டு நான்மறைநூல் விரிக்கின்ற வுந்தியரங் கேசர்" என்பதற்கு பழமையாகிய நால்வேதங்களாலும் ஆறுசாஸ்தி ரங்களாலும் புகழ்விரித்துரைக்கப்படுகிற திருநாபியையுடைய அரங் கேசர் என்றுரைப்பினுமாம். "தந்திருமேனியின்மேல் தரிக்கின்றது மகரக்கடலாடைத் தராதலம்" என்றது ஆதிகூர்மமாய்ப் பூமியைத் தாங்கிநிற்றலைக்குறித்தது. உண்டே என்பதில் ஏகாரம் தேற்றமாக வும் எதிர்மறையாகவும் கொள்ளலாம். மகரம்-முதலையுமாம்.

௨௫. ஓருருவெற்பைத்தரித்ததுதானவரும்பருள்ளாய்
ஈருருநின்றுகடைந்ததுவேலையிதனிடையோர்
பேருருவின்னமுதோடேபிறந்ததுபெண்மைகொண்டோர்
நாருருநின்றதரங்காவிதுவென்னநற்றவமே.

(இ-ள்.) ஓர் உரு - ஓருருவானது, வெற்பைதரித்தது-(மந்தர மலையைத்) தாங்கினது, ஈர் உரு-இரண்டுருவங்கள், தானவர் உம்பர் உள் ஆய் நின்று-அசுரர்தேவர் என்பவரோடே கலந்துநின்று, வேலை கடைந்தது - திருப்பாற்கடலைக்கடைந்தது, இதன் இடை - இந்தக் கடலில், ஓர் பேர் உரு - ஒரு பெரியவுருவமானது, இன் அமுதோ டேபிறந்தது - இனிய அமிர்தகலசத்துடன் தோன்றினது, ஓர் நார் உரு-ஒரு அன்பையுண்டாக்கும் உருவமானது, பெண்மைகொண்டு நின்றது - பெண்தன்மையைத் தன்னிடத்துக்கொண்டு நின்றது, அரங்கா-திருவரங்கனே, இது - இது, என்ன நல்தவம்-என்ன நற் றவப்பயன். எ-று.

ஓருருவெற்பைத்தரித்தது என்றது கூர்மாவதாரத்தை. ஈருரு என்றது தானவரிலோருருவும் தேவரிலோருருவும் ஆகிய இரண்டுருவங்களை. ஓர் பேருருவின்னமுதோடே பிறந்தது என்றது தந்வந்த்ரி ரூபத்தை. பெண்மைகொண்டோர் நாருரு நின்றது என்றது ஜகந்மோஹநாகாரமான நாய்ச்சியார் திருக்கோலத்தை. இவையாவும் நிகழ்த்தது திருப்பாற்கடல் கடையுங்காலத்தில்.

௨௬. ஆருக்கிவரையளவிடலாந்தென்னரங்கரிந்தப்
பாருக்கரந்தைதவிர்ப்பதற்காகப்பழிப்பில்பெருஞ்
சீருற்றசெங்கட்கரும்பன்றியாகித்திருக்குளம்பில்
மேருக்கணகணமாத்தலைநாளில்விநோதிப்பரே.

(இ-ள்.) தென் அரங்கர் - தென்னரங்கேசர், இந்தபாருக்கு- இந்தப் பூமிக்குளதாகிய, அரந்தை - துன்பத்தை, தவிர்ப்பதற்காக- நீக்கும்பொருட்டு, பழிப்பு இல் - குற்றமில்லாத, பெருசீர் உற்ற- பெருஞ்சிறப்புப்பொருந்திய, செம்கண்-சிவந்தகண்களையுடைய, கரு பன்றி ஆகி - பெருமையாகிய வராகவுருவங்கொண்டு, திருகுளம்பில்- அழகிய காற்குளம்பில், மேரு - மேருமலையானது, கணகணம் ஆ- சிறுசிலம்பிற்பெய்த பருக்கைக்கற்போன்று கண கணவென்றொலிக்கும்படி, தலைநாளில் - முற்காலத்தில், விநோதிப்பர் - விளையாடுவர், (ஆதலால்) இவரை-இவரது பெருமையை, அளவிடல்-அளவுசெய்து சொல்லுதல், ஆருக்கு ஆம - யாருக்குக்கூடும். எ-று.

"ஆருக்கிவரை யளவிடலாம்" என்றது ஒருவருக்கும் கூடாது என்றபடி. பாருக்கு அரந்தையாவது மஹாப்ரளயத்தில் அமிழ்ந்திருத்தல். அரந்தை தவிர்த்ததாவது அதைக் கொம்பினாற் குத்தியெடுத்துவந்து மீட்டும் முன்போல விரித்தது. அளவிடல் சமாநமாக்குதல் எனினுமாம். இந்த அவதாரம் சுவேதவராஹமாதலால் கரும்பன்றி என்பதற்குப் பெரும்பன்றி யென்றுரை கூறப்பட்டது.

௨௭. மருமலர்க்கோயின்மடமான்விரும்புமதிலரங்கர்
பெருமையைப்பேசுவதெப்படிநாம்பிறைவாளெயிற்றுக்
கருமுகிற்கோலப்பெரும்பன்றியாயகளேபரத்தின்
ஒருமயிர்க்காலடியூடேகடல்புக்கொளித்தனவே.

(இ-ள்.) பிறை-பிறைபோன்ற, வாள்-ஒளிபொருந்திய, எயிறு- பற்களையும், கருமுகில் - கரியமேகம்போன்ற, கோலம் - அழகையும் உடைய, பெருபன்றி ஆய - பெரியவராஹமாகிய, களேபரத்தின்- திருமேனியிலுள்ள, ஒருமயிர்கால் அடி ஊடே - ஒரு ரோம கூபத்தின் அடியிற்றானே, கடல் புக்கு ஒளித்தன - கடல்களெல்லாம் போய் மறைந்துவிட்டன, (ஆதலால்) மரு - மணம்பொருந்திய, மலர் - தாமரைப்பூவை, கோயில் - ஆலயமாகவுடைய, மடமான்-

இளமான் போலும் நோக்கத்தையுடையவளாகிய பெரியபிராட்டி, விரும்பும் - ஆசைப்படுதற்குரிய, மதில் அரங்கர் - மதில்களையுடைய திருவரங்கரது, பெருமையை - ஏற்றத்தை, நாம் பேசுவது எப்படி- யாம் புகழ்ந்து சொல்லுவது எவ்வாறு. எ-று.

வாள் எயிறு-வாள்போன்ற எயிறு எனினுமாம். வளைவு வெண்மைகளுக்குப் பிறையும் கூர்மைக்கு வாளும் உவமை. மடமான் விரும்பும் அரங்கர் என இயைக்க. ரோமகூபம் - ரோமத்துவாரம்.

உஅ. நிறக்குஞ்செழுஞ்சுடர்க்கோடுமிப்பாருநிசாமுகத்துச்
சிறக்கும்பிறையுங்களங்கமும்போலுமெனிற்சிறுகண்
மறக்குஞ்சரஞ்செற்றமாயோனரங்கன்வராகமதாய்ப்
பிறக்கும்பிறப்பின்பெருமையெவ்வாறினிப்பேசுவதே.

(இ-ள்.) நிறக்கும்-நிறம்பொருந்திய, செழுசுடர்-செழுமையாகிய ஒளியையுடைய, கோடும்-கொம்பும், இ பாரும்-இந்தப்பூமியும், நிசாமுகத்து - மாலைக்காலத்தில், சிறக்கும் - சிறந்து விளங்குகின்ற, பிறையும்-பிறையையும், களங்கமும்-அதிலுள்ள களங்கத்தையும், போலும் எனின் - நிகர்க்குமாயின், இனி - இனி, சிறுகண் - சிறிய கண்களையும், மறம் - கொலைத்தொழிலையு முடைய, குஞ்சரம்-யானையை, செற்ற - கொன்ற, மாயோன் - மாயவனாகிய, அரங்கன் - திருவரங்கன், வராகமது ஆய் - வராஹமாகி, பிறக்கும் பிறப்பின் பெருமை - ஜந்மித்த ஜந்மத்தின் ஏற்றத்தை, எவ்வாறு பேசுவது - நாம் எப்படிப் புகழ்ந்துரைப்பது. எ-று.

நிசா-ராத்திரி. ராத்திரியின் ஆரம்பமாதலால் மாலைக்காலத்தை நிசாமுகம் என்றார். நிசாமுகத்துச் சிறக்கும் பிறை என்றமையால் மூன்றாம் பிறை யென்க. மறம் - கோபம்-வலி, வீரம் எனினுமாம். குஞ்சரம் - கம்ஸனாலேவப்பட்ட குவலயாபீடம் என்னும் யானை. மாயோன் - ஆச்சர்யகுண சேஷ்டி தங்களையுடையவன்.

உகூ. ஆடுமரவிற்றுயிலரங்கேசனருமகற்கா
நீடுந்தறியினுதித்திலனேனிகிலப்பொருள்கள்
ஊடும்புறத்ினுமுண்மையெவ்வாறிவ்வுலகறியும்
ஈடுமெடுப்புமில்லாவொருதெய்வமிவனெனவே.

(இ-ள்.) ஆடும் - படம் விரித்தாடுகின்ற, அரவில் - திருவநந்தாழ்வான்மீது, துயில் - கண்வளர்ந்தருளுகிற, அரங்கேசர்-திருவரங்கர், அரு - அருமையாகிய, மகற்கு ஆ - பாலகனாகிய ப்ரஹ்லாதாழ்வானுக்காக, நீடும் தறியின் - நீண்ட தூணினின்றும், உதித்திலனேல்- நரசிங்கமாகத் திருவவதரியானாயின், இவன் - இவன், ஈடும் எடுப்பும் இல்லா-ஒப்பும் உயர்வும் இல்லாத, ஒரு தெய்வம் என-ஒன்றேயாகிய

கடவுளென்று நிச்சயிக்கும்படி, நிகிலம் பொருள்கள் ஊடும்-எல்லாப் பொருள்களின் உள்ளிலும், புறத்தினும் - வெளியிலும், உண்மை-உளனாகி வியாபித்திருக்குந் தன்மையை, இ உலகு - இந்த வுலகமானது, எவ்வாறு அறியும் - எப்படி அறியும். எ-று.

தாய்வயிற்றிலிருக்கும்பொழுதே தன் சித்தத்தை எம்பெருமான் மேல் வைத்த பரமபாகவதனாதலால் அருமகன் என்றார். இவ்வுலகு என்றது இவ்வுலகத்துயிர்களை, அறிதற்குரியன அவையாதலால்.

௯0. மறந்தமறையுமழுங்கியமந்திரமும்மகமும்
இறந்ததெய்வங்களுமெல்லாமுனெங்குறைந்தெங்கியன்ற
அறந்தருங்கோயிலரங்கனவ்வாளரிக்காளரியாய்ப்
பிறந்தபினன்றேபிறந்துபெருகிப்பிறங்கியதே.

(இ-ள்.) மறந்தமறையும் - மறந்தவேதங்களும், மழுங்கிய மந்திரமும் - மகிமை குன்றின மந்திரங்களும், மகமும் - யாகங்களும், இறந்த தெய்வங்களும் - அழிந்துபோன தெய்வங்களும் ஆகிய, எல்லாம் - எல்லாப்பொருள்களும், முன் - முன்னே, எங்கு உறைந்து- எவ்விடத்தில் வாழ்ந்து, எங்கு இயன்ற - எவ்விடத்தில் தங்கியிருந்தன, அறம் தரும் - தருமமார்க்கத்தை யுண்டாக்குகின்ற, கோயில்- திருவரங்கம் பெரியகோயிலில் எழுந்தருளியிருக்கிற, அரங்கன்-திருவரங்கன், அ வாள் அரிக்கு-அந்த வாளாயுதத்தையுடைய பகைவனாகிய ஹிரண்யகசிபுவைக் கொல்லும்பொருட்டு, ஆள் அரி ஆய் - நரசிங்கமாகி, பிறந்தபின் அன்றே-அவதரித்த பின்பல்லவா, பிறந்து பெருகி - அவைகள் யாவும் தோன்றிப் பெருக்கமடைந்து, பிறங்கியது - விளங்கினது.

இரணியகசிபனால் மறந்த மறைமுதலியவை இறைவன் நரசிங்கமா யவதரித்து அவனைக்கொன்ற பிறகு தோன்றி விளங்கின என்பது கருத்து.

௯௧. அடிகண்டிலரதலத்தவரைம்முகனோடமரர்
சடிகண்டிலர்மலைவானிவர்ந்துங்கமலத்தனார்
முடிகண்டிலரண்டமாமுகடேறியுமுந்துணர்ந்தோர்
படிகண்டிலரரங்கேசர்கொள்சிங்கப்படிதனக்கே.

(இ-ள்.) அரங்கேசர் கொள்-திருவரங்கநாதர் கொண்ட, சிங்கப்படிதனக்கு - நரசிங்க ரூபத்துக்கு, அதலத்தவர்-அதலலோகத்திலுள்ளவர், அடிகண்டிலர் - திருவடியைக் கண்டாரில்லை, ஐமுகனோடு அமரர் - ஐந்து முகங்களையுடையவராகிய ரூத்ர மூர்த்தியோடு மற்றைத் தேவரும், மலை வான் இவர்ந்தும் - கைலாய மலையிலும் சுவர்க்கலோகத்திலும் ஏறியும், கடிகண்டிலர் - திருவரையைக்கண்டாரில்லை, கமலத்து அயனார் - தாமரைமலரில் வாழும் பிரமதேவர், மா - பெரிய, அண்டமுகடு ஏறியும் - அண்டமுகட்டிலேறியும், முடி

கண்டிலர் - திருமுடியைக் கண்டாரில்லை, மூதுணர்ந்தோர் - பழமையாகிய அறிஞரும், படிகண்டிலர் - அளவைக் கண்டாரில்லை. எ-று.

அதலம் - அதோலோக மேழனுளொன்றாயினும் இவ்விடத்தில் அது, அதோலோக சமுதாயத்தை யுணர்த்திற்று.

ருஉ. அறியினரங்கர்முன்னாளரியாகியவப்பொழுது
கொறியினவுணர்தம்வெள்ளங்கள்கோடியுங்கொன்றதிலோ
தறியின்வயிற்றகுவனெஞ்சுஞ்சரபத்துடலும்
நெறியின்வகிர்ந்தபினன்றேதணிந்ததுநீள்சினமே.

(இ-ள்.) அறியின் - ஆராய்ந்துணரின், அரங்கர்-திருவரங்கர் முன் - முன்னாளில், ஆள் அரி ஆகிய அப்பொழுது - நரசிங்கமாகிய அந்தக்காலத்தில், நீள் சினம் - (அவரது) பெருங்கோபமானது, அவுணர்தம் - அவுணரது, வெள்ளங்கள் கோடியும் - கோடி வெள்ளத்தொகைகளையும், கொறியின் - ஆடுகளைக்கொல்வதுபோல, கொன்றதிலோ - கொன்றதினாலேயோ (தணிந்தது, அன்று, மற்றென்னெனின்) தறியின் வயிறின் - தூணின் வயிற்றை வகிர்ந்தாற்போல, தகுவன் நெஞ்சும் - தைத்தியனாகிய இரணியகசிபுவினுடைய மார்பையும், சரபத்து உடலும் - சரபத்தினுடம்பையும், நெறியின் - முறையாக, வகிர்ந்தபின் அன்றே தணிந்தது - வகிர்ந்தபின் பல்லவா தணிந்தது. எ-று.

கொறியின் அவுணர்தம் வெள்ளங்கள் கோடியுங் கொன்றது என்றது எளிதிற்கொன்றதென்பது விளங்குதற்கு. கொறி-ஆடு. வெள்ளம் ஓர் பெருந்தொகை குறித்த சொல். சரபம் என்றது இரணியனுக்குத் துணைவந்த சிவசரபத்தை. சரபம்-சிங்கத்தை வெல்லுதற்குரிய எண்காற்புள், மிருகமென்றலுமொன்று.

ருரு. தாரேற்றவெண்குடைமாவலிவார்க்கவுந்தாமரைமேல்
சீரேற்றதொன்னான்முகத்தோன்விளக்கவுஞ்செம்பொன்முடிக்
காரேற்றமேனியரங்கேசர்கையுங்கழலுமொக்க
நீரேற்றனவண்டிருக்குறளாகிநிமிர்ந்தவன்றே.

(இ-ள்.) செம்பொன் முடி - செம்பொன் மகுடத்தையும், கார் ஏற்றமேனி - நீலமேகத்தின் தன்மையைக்கொண்ட திருமேனியையுமுடைய, அரங்கேசர் - திருவரங்கநாதர், வண் திருக்குறள் ஆகி - வண்மையையுடைய வாமனரூபமாகி, நிமிர்ந்த அன்று-(தான் யாசித்த மூன்றடி நிலத்தைக் கொடுப்பதாக மஹாபலி இசைதலும் உடனே திரிவிக்கிரமனாகி) நிமிர்ந்துயர்ந்த அந்நாளில், கையும்-(அவரது) திருக்கரமும், கழலும் - திருவடியும், (முறையே) தார் ஏற்ற வெண்குடை - மாலையைத்தரித்த வெண்கொற்றக்குடையையுடைய, மாவலிவார்க்கவும் - மஹாபலியானவன் தாரைவார்க்கவும், தாமரை

மேல் - தாமரைமலரின்மீது வதிகின்ற, சீர் ஏற்ற - சிறப்புப்பெற்ற, தொல் - பழமையாகிய, நான் முகத்தோன் விளக்கவும் - நான்கு முகங்களையுடைய பிரமன் கழுவவும், ஒக்கநீர் ஏற்றன - ஒரு மிக்க நீரையேற்றன. எ-று.

குறள் - குறுகியவுருவம். கார் ஏற்ற-கார்போன்ற எனினுமாம்.

௩௪. தேமிக்கபச்சைத்துழாயரங்கேசர்திருக்குறளாய்த்
தாமிப்புவனங்கடந்தவந்நாண்மணற்சாகரஞ்சூழ்
பூமிப்புடையளவிட்டபொற்றாமரைப்பூங்கழற்கு
நேமிச்சிலம்புதிருச்சிலம்பாகிநிலைபெற்றதே.

(இ-ள்.) தேம்மிக்க-வாசனை மிகுந்த, பச்சைத்துழாய்-பச்சை நிறத்தையுடைய திருத்துழாய் மாலையையணிந்த, அரங்கேசர் - திருவரங்கநாதர், திருக்குறள் ஆய்-அழகியவாமனனாகி, இ புவனம்-இந்த லோகங்களை, கடந்த அந்நாள் - அளந்தருளின அந்நாளில், மணல் சாகரம் சூழ் - மணலையுடைய கடலால் சூழப்பட்ட, பூமிபுடை- பூமியாகிய இடத்தை, அளவிட்ட-அளந்தருளின, பொன்தாமரை- பொற்றாமரை மலர்போன்ற, பூகழற்கு - பொலிவாகிய திருவடிக்கு, நேமிச்சிலம்பு-சக்ரவாளகிரியானது, திருசிலம்பு ஆகி நிலைபெற்றது- அழகிய சிலம்பாய் நிலைபெற்றிருந்தது. எ-று.

தேம் - தேன் எனினுமாம் - கடலில் சேறு முதலியவற்றினு மணல் மிக்கிருத்தலால் மணற்சாகரம் என்றார். சகரன் மக்களால் தோண்டப் பட்டமையால் கடல் சாகரம் என வழங்கினும் இவ் விடத்துக் கடலினது சமுதாயத்தை யுணர்த்திற்று.

௩௫. பூமருபொங்கர்புடைசூழரங்கர்பொலன்கழலால்
பாமருமூவுலகுங்கொண்டபோதுபழிப்பில்பெருங்
காமருமோலிச்சிகாமணியாகிக்கவுத்துவமாய்த்
தேமருநாபியந்தாமரையானதுசெஞ்சுடரோ.

(இ-ள்.) பூ மரு பொங்கர் - மலர்கள் பொருந்திய சோலைகள், புடை சூழ் - பக்கங்களில் சூழப்பெற்ற, அரங்கர் - திருவரங்கத்தி லெழுந்தருளியிருக்கும் இறைவர், பொலம் கழலால் - அழகாகிய திருவடியால், பாமரு - பரவுதல் பொருந்திய, மூவுலகும் - மூன்றுல கங்களையும், கொண்டபோது-அளந்தருளின காலத்தில், செம்சுடர்- சூரியன், பழிப்பு இல் - குற்றமற்ற, பெரு - பெரிய, காமர் - அழகா கிய, மோலி - திருமுடியிலணிதற்குரிய, சிகாமணி ஆகி - சூடாமணி யாகி, கவுத்துவம் ஆய் - கௌஸ்துபமணியாகி, தே மரு - மணம் பொருந்திய, அம் - அழகிய, நாபி தாமரை ஆனது - திருவுந்தித்தாம ரையாயிற்று. எ-று.

பூமரு - அழகுபொருந்திய எனினுமாம். பொலம் கழல்-பொற் கழலணிந்த திருவடியென்றலு மொன்று. இறைவன் திரிவிக்கிரமாவதாரங்கொண்டு நிமிரத்தொடங்கினபோது சூரியன் முதலில் திருமுடி மணிபோன்றும், இன்னுஞ் சற்று நிமிரவே திருக் கௌஸ்துபரத்நம் போன்றும், இன்னுஞ் சற்று நிமிரவே திருவுந்தித்தாமரைபோன்றும் இருந்தான் என்பது கருத்து. சூரியன் வட்டவடிவாதலால் சிகாமணி, கவுத்துவம், நாபியந்தாமரை என்பவைகட்கு உவமைகொண்டார்.

௩௬. ஓதப்புனற்பொன்னிநன்னீரரங்கருலகளந்த
பாதத்துநீர்விண்படிபிலமூன்றினும்பால்புரைவெண்
சீதத்தரங்கமந்தாகினியாகிச்செழுங்கங்கையாய்
மேதக்கபோகவதியாகிநாளும்விழுகின்றதே.

(இ-ள்.) ஓதப்புனல் - வெள்ளநீரையுடைய, பொன்னி-காவிரியாற்றாற் சூழ்ப்பட்ட, நல் நீர் அரங்கர் - நல்ல நீர்மையையுடைய திருவரங்கத்திலெழுந்தருளிய இறைவர், உலகு அளந்த - மேலுலகத்தையளந்த, பாதத்து நீர்-திருவடியின் நீரானது, விண் படி பிலம் மூன்றினும் - தேவலோகம் பூலோகம் பாதாள லோகம் என்கிற மூன்றிலும், (முறையே) பால்புரை - பாலை நிகர்த்த, வெள் - வெண்மையாகிய, சீதம் - குளிர்ச்சிபொருந்திய, தரங்கம்-அலைகளையுடைய, மந்தாகினி ஆகி - மந்தாகினியென்னும் பெயருடையதாகியும், செழு கங்கை ஆய் - செழிய கங்கையென்னும் பெயருடையதாகியும், மேதக்க - மேன்மைபொருந்திய, போகவதி ஆகி - போகவதியென்னும் பெயருடைய தாகியும், நாளும் விழுகின்றது-எந்நாளும் விழாநின்றது.

இறைவன் திருவடி விளக்கிய நீர் சுவர்க்கலோகத்தில் பாய்வதற்கு மந்தாகினி யென்றும், மத்தியலோகத்தில் பாய்வதற்குக் கங்கையென்றும், பாதாளலோகத்தில் பாய்வதற்குப் போகவதி யென்றும் பெயர்கள் வழங்கும்.

௩௭. ஓலப்புனலரங்கேசர்பொற்றாள்பட்டுடைந்தவண்ட
மேலக்கடாகத்தொளைவழியாகவிழும்புனல்போய்க்
கோலத்திருவுருக்கொண்டவந்நாள்குரம்பட்டுடைந்த
மூலக்கடாகத்தொளையால்விழுந்ததுமுற்புனற்கே.

(இ-ள்.) (திரிவிக்கிரமாவதார காலத்தில்) ஓலம் புனல்-ஓசையையுடைய காவிரி நதியால் சூழப்பட்ட, அரங்கம் - திருவரங்கத்திலெழுந்தருளிய, ஈசர்-சர்வேசுவரருடைய, பொன் தாள்பட்டு உடைந்த - (மேலேசென்ற) பொன்னடி பட்டுடைந்த, அண்டம்-அண்டத்தினது, மேலக்கடாகம் - மேற்பகுதியின், தொளைவழியாக விழும்-

துவாரத்தின் வழியாய் விழுகின்ற, புனல்-நீரானது, போய்-சென்று, கோலம் திரு உரு கொண்ட ' அந்நாள் - ஸ்ரீவராஹத் திருவுருவங் கொண்ட அக்காலத்தில், குரம்பட்டு உடைந்த - காற்குளம்பு பட்டுடைந்த, மூலக்கடாகத் தொளையால் - கீழ்ப்பகுதியின் தொளைவழியாக, முன் புனற்கு - கடலிலே, விழுந்தது - வீழ்ந்தது. எ-று.

பொற்றாள் - திருவடியெனினுமாம். கோலம் - பன்றி. எல்லா நீர்களுக்கும் முன்னே படைக்கப்பட்டதாதலால் கடல் முற்புனல் எனப்பட்டது. முப்புனல் எனப்பாடமோதி மூந்நீர் எனக் கூறுதலுமுண்டு. மூந்நீர் - மூன்றுநீர். (கடல்).

கூஅ. மறிக்குங்கயற்கண்ணிபங்காளன்வாழ்வெள்ளிமால்வரையைப்
பறிக்குங்கபடன்பணைப்புயமோவவன்பைங்கடகம்
செறிக்கும்புயஞ்செற்றவாயிரந்திண்புயமோவவற்றைத்
தறிக்குந்திறமழுவோவரங்காசயந்தாருடைத்தே.

(இ-ள்.) அரங்கா - திருவரங்கனே, மறிக்கும் - பிறழாநின்ற, கயல் - கெண்டைமீன்போன்ற, கண்ணி - கண்களையுடையவளாகிய உமாதேவியை, பங்காளன் - ஒரு பாகத்தில் வைத்தாள்வோனாகிய உருத்திரன், வாழ் - வசிக்கிற, மால்-பெரிய, வெள்ளிவரையை-வெள்ளி மலையாகிய கைலாயத்தை, பறிக்கும் - வேருடன் பேர்த்த, கபடன்-வஞ்சகனாகிய ராவணனது, பணை-பருமையாகிய, புயமோ-இருபது தோள்களோ, அவன் - அந்தராவணனுடைய, பை கடகம் செறிக்கும் புயம் - பசும் பொற்கங்கணத்தைத் தரித்த தோள்களை, செற்ற - வலியழியக்கட்டின, திண்-உறுதியாகிய, ஆயிரம் புயமோ-ஆயிரம் தோள்களோ, அவற்றை - அந்த ஆயிரம் தோள்களையும், தறிக்கும் - வெட்டின, திறம்மழுவோ-வலிய மழுவாயுதமோ, சயம் தார் உடைத்து - வெற்றிமாலையை யுடையது. எ-று.

வெள்ளி மால்வரையைப்பறிக்குங் கபடன் என்றதனால் ராவணன் என்பதும், அவன் பைங்கடகஞ் செறிக்கும் புயஞ்செற்றவாயிரந் திண்புயம் என்றதனால் கார்த்த வீரியனது வலியபுயம் என்பதும், அவற்றைத் தறிக்குந் திறமழு என்றதனால் அவற்றை வெட்டின பரசுராமனது மழு என்பதும் விளங்குகின்றது. இதனால் ராவணனிலும் கார்த்த வீரியன் வலியனென்றும் அவனிலும் பரசுராமன் வலியனென்றும் கூறப்பட்டது.

கூகூ. மாதண்டமேவுங்கரத்தாரரங்கர்வடமிதிலைக்
கோதண்டவேகம்பிறப்பித்தபோதுகுவட்டுவெள்ளி
வேதண்டமேயமழுவாளிநாணினன்வென்றிகண்டு
மூதண்டமஞ்சுமழுவாளிகோபமுதிர்ந்ததுவே.

(இ-ள்.) மா - பெரிய, தண்டம் - கதாயுதம், மேவும்-பொருந்திய, கரத்தார் - திருக்கையையுடையவராகிய, அரங்கர் - திருவரங்கர், வடமிதிலை - வடதிசையிலுள்ள மிதிலைப்பட்டணத்தில், கோதண்டவேகம் பிறப்பித்தபோது - வில்லின் வலியை (யாவருமறிய) தெரிவித்தகாலத்தில், குவடு - சிகரங்களையுடைய, வெள்ளி வேதண்டம் மேய - வெள்ளிமலையிலே வாழ்கிற, மழுவாளி - மழுவேந்துவோனாகிய பரமசிவன், வென்றிகண்டு - (அந்த) வெற்றியைப் பார்த்து, நாணினன் - வெட்கமடைந்தான், முது அண்டம் அஞ்சும் - பழமையாகிய உலகங்களெல்லாவற்றிலு முள்ளோரெல்லாரும் அஞ்சுதற்குரிய, மழுவாளி - பரசுராமனது, கோபம் - கோவமானது, மூதிர்ந்தது - அதிகரித்தது. எ-று.

மிதிலை - ஜநகராஜனது நகரம். மிதி - ஜநகராஜன். கோதண்டவேகம் பிறப்பித்ததாவது இதனை வளைத்து நாணேற்றினவனுக்கு சீதையை மணமுடித்துத் தருவோமென்று ஜநகராஜன் ஏற்பாடு செய்தபடியே அங்குக் கிடந்த சிவன் வில்லை முறித்தது. வில்லொடித்த ஓசை கேட்டலும் ஓடிவந்தமையால் மழுவாளி கோபமுதிர்ந்தது என்றார். கோதண்டவேகம் - வில்லின் வலியெனினுமாம்.

சo. மாகம்பிலந்திக்கிமையோருலகமழுவுடையோன்
நாகநன்னாடளவாகப்பன்னாகநடுங்கவம்பு
வேகங்கொடுதொடரப்பறந்தோடியுமீண்டுவந்து
காகஞ்சரணென்னநம்பெருமாளுயிர்காத்தனரே.

(இ-ள்.) காகம் - காகாசுரனானவன், அம்பு - (ஸ்ரீராமபிரானுடைய) அம்பானது, வேகம் கொடுதொடர - கோபங்கொண்டு பின்தொடர்தலால், பல் நாகம் நடுங்க - பல நாகங்களும் நடுங்கும்படி, மாகம் - ஆகாயம், பிலம் - பாதாளம், திக்கு - திசைகள், இமையோர் உலகம் - தேவலோகம், மழு உடையோன்நாகம் - மழுவையுடையவனாகிய பரமசிவனது மலையாகிய கைலாயம், நல் நாடு - மற்றைத்தேசம், அளவு ஆக - எல்லையளவாக, பறந்து ஓடியும் - பறந்து விரைந்துசென்றும், (வேறுபுகலிடமில்லாமையால்) மீண்டு வந்து - திரும்பி வந்து, சரண் என்ன - (நீரே) சரணம் என்று பிரார்த்திக்க, நம்பெருமாள் - நம்பெருமாளானவர், உயிர்காத்தனர் - (அவனது) உயிரைக் காத்தருளினர். எ-று.

பன் ஆகம் நடுங்க எனப் பிரித்து, சொல்லப்பட்ட உடம்பு நடுங்க என்றுரைப்பினுமாம். வீடு பேறு முதலியவற்றிற் கேதுவாகிய சத்கர்மங்களைச் செய்தற்குரிய இடமாதலால் நல் நாடு என்றது இந்நிலவுகத்தை.

சக. மாதவரும்பர்பெருமாளரங்கர்வலியுணரா
தாதவன்மைந்தனயிர்த்தவந்நாளிலக்காயநெடும்
பாதவமேழுமுடனேநெடுங்கணைபட்டுருவப்
பூதலமேழுமெழுபாதலங்களும்புண்பட்டவே.

(இ-ள்.) ஆதவன்மைந்தன்-சூரியகுமாரனாகிய சுக்ரீவன், மாதவர் உம்பர் பெருமாள் - பெருந்தவத்தினர்க்கும் தேவர்களுக்கும் தலைவராகிய, அரங்கர்-திருவரங்கரது, வலி உணராது - ஆற்றலையறியாமல், அயிர்த்த அந்நாள் - சந்தேஹித்த அக்காலத்தில், உடனே-தக்ஷணமே, இலக்கு ஆகிய - (ஸ்ரீராமபாணத்துக்கு) லக்ஷ்யமாகிய, நெடுபாதவம் ஏழும் - நீண்ட மராமரங்களேழும், நெடுகணைபட்டு உருவ - நீண்ட அம்புபாய்ந்து உருவிப்போக, பூதலம் ஏழும்-மேலேழுலகங்களும், எழுபாதலங்களும் - கீழேழுலகங்களும், புண்பட்ட-புண்பட்டன. எ-று.

மாதவர் - லக்ஷ்மீநாதர் எனினுமாம். உம்பர் நித்யசூரிகளையுமுணர்த்தும். ஆதவம்-வெயில், அதனையுடையவனாதலால் சூரியனை ஆதவன் என்றார். அயிர்த்தது - வாலியைக்கொல்லவல்ல வலியுளனோ இலனோ என ஐயப்பட்டது. மராமரம்-ஆச்சாமரம்.

சஉ. ஒற்றைச்சரஞ்சுட்டவுட்கடல்போற்புறத்தோலமிட
மற்றைக்கடல்வெந்தவெவ்வண்ணமோமதமாவழைக்க
அற்றைக்குதவுமரங்கர்வெங்கோபத்தையஞ்சியரன்
கற்றைச்சடையினிடையேவெதும்பினள்கங்கையுமே.

(இ-ள்.) அற்றைக்கு - அந்நாளில், மதம் மா அழைக்க - மதயானையானது கூப்பிட, உதவும்-அதைக்காத்தருளின, அரங்கர்-திருவரங்கரது, வெம்கோபத்தை அஞ்சி - கடுங்கோவத்துக்குப் பயந்து, அரன் - பரமசிவனது, கற்றைசடையின் இடையே - திரட்சியாகிய சடையிடையேயுள்ள, கங்கையும் - கங்காதேவியும், வெதும்பினள்-வெப்பமடைந்தாள், (அப்படி வெதும்பினபோது) ஒற்றைசரம்-(ஸ்ரீராமபிரானுடைய) ஒருபாணமானது, சுட்ட - வெதுப்பின, உள்கடல்போல் - உள்ளிடத்துள்ள நீர்க்கடல்போல, புறத்து - புறத்திலுள்ள, மற்றைக்கடல் - மற்றைக்கடல்கள், ஓலம் இட வெந்தது-பேரொலிசெய்ய வெதும்பினது, எவ்வண்ணமோ - எவ்வாறோ. எ-று.

அற்றைக்கு என்றது-அந்தமடுவில் முதலைவாயிலகப்பட்ட அந்நாளில் என்றபடி. சிவனுடையசடைக்குக் கபர்த்தம் என்றுபெயர்.

சங. கொங்குண்டுவண்டமர்தண்டாரரங்கர்வெங்கோபமுடன்
பொங்குஞ்சரஞ்செய்தமாயமென்னோதன்புகழுடைய
மங்கும்படிக்குமறஞ்செயிராவணன்வாகினிகண்
டெங்குங்குரங்கெங்குமிராமனென்றேங்கியிருந்திடவே.

(இ-ள்.) வண்டு - வண்டுகள், கொங்கு உண்டு அமர் - தேனைப் பருகி மொய்த்திருக்கிற, தண்தார்-குளிர்ந்த திருத்துழாய்மாலையைத் தரித்த, அரங்கர் - திருவரங்கரது, வெம்கோபமுடன் - கொடுங்கோவத்துடனே, பொங்கும் - சீறுகின்ற, சரம் - பாணமானது, தன்புகழ் அண்டைய - தன்கீர்த்திமுழுதும், மங்கும்படிக்கு-கெடும்படிக்கு, மறம் செய் - பாவத்தொழிலைச்செய்த, இராவணன் வாகினி - இராவணன் படையானது, கண்டு - பார்த்து, எங்கும் குரங்கு - எவ்விடத்திலும் வாநரம், எங்கும் ராமன் - எவ்விடத்திலும் ராமன், என்று - என்று, ஏங்கி இருந்திடசெய்த - ஏக்கங்கொண்டிருக்கும்படி பண்ணின, மாயம் என்னே-மாயம் யாதோ. எ-று.

அரங்கர்சரம் என இயைக்க. சீதாபிராட்டியைக் கவர்தல் முதலியபாவங்களைச்செய்தலால் "மறஞ்செயிராவணன்" என்றார்.

சச. பேரொத்தவாயிரம்பேர்மடிந்தாற்பிறக்குங்கவந்தம்
நேரொத்தவாடுமதாயிரமாடினெடுஞ்சிலையில்
ஏரொத்தகிண்கிணிசற்றேலிடுமதோர்யாமநின்று
காரொத்தமேனியரங்கர்தம்போரிற்கறங்கியதே.

(இ-ள்.) பேர் ஒத்த-பேரினால்நிகர்த்த, ஆயிரம்பேர்மடிந்தால்-ஆயிரம்பேர் இறந்தால், பிறக்கும் கவந்தம் - உண்டாவதாகிய உடற்குறை, நேர் ஒத்த-நேர் பொருந்த (நின்று), ஆடும்-கூத்தாடும், அது-அந்த உடற்குறை, ஆயிரம் ஆடில் - ஆயிரம் ஆடினால், நெடுசிலையில்-நெடிய கோதண்டத்தில் கட்டப்பட்டிருக்கிற, ஏர் ஒத்த - அழகமைந்த, கிண்கிணி - சதங்கை, சற்று ஒலிடும்-சிறிது ஒலிக்கும், அது-அந்தக்கிண்கிணி, கார் ஒத்தமேனி - நீலமேகம்போன்ற திருமேனியையுடைய, அரங்கர்தம்போரில் - திருவரங்கரதுசண்டையில், ஓர்யாமம் நின்று கறங்கியது - ஒருசாமநேரம் இடையறாது நின்றொலித்தது.

தலையறுபட்ட உடலுக்குகவந்தம் என்றும் உடற்குறை என்றும் பெயர். சதங்கை கிண்கிண் என்றொலித்தலால் கிண்கிணியெனப்பட்டது. பேர் ஒத்த ஆயிரம்பேர்-ஒருபெயர்கொண்ட ஆயிரம்பேர். அரங்கர் என்றது ஸ்ரீராமபிரானையாதலால் நெடுஞ்சிலைகோதண்டத்தைக்குறித்தது. போர்-மூலபலசண்டை.

சரு. சற்பத்துறங்குமரங்காவுன்பாதந்தனையடைந்த
நற்பத்தருக்கொருநாசமுண்டோநலமாமருத்தின்
வெற்பைக்கொணர்ந்தவிறலனுமானுமவ்வீடணனும்
கற்பத்தளவுமழியாதிருக்கவுங்கற்பித்தையே.

(இ-ள்.) சற்பத்து உறங்கும் - நாகணைமீது கண்வளர்ந்தருளுகின்ற, அரங்கா - திருவரங்கனே, நல்ல - நன்மையைத்தருகிற, மா-பெரிய, மருத்தின்வெற்பை-சஞ்சீவிமலையை, கொணர்ந்த-ஏந்திவந்த,

விறல்-வெற்றியையுடைய, அநுமானும்-சிறியதிருவடியும், அ வீடண னும்-அந்தவிபீஷணாழ்வானும், கற்பத்து அளவும்-ஊழிகாலம் வரைக் கும், அழியாது இருக்கவும் - இறவாதிருக்கவும், கற்பித்தை - கற்பித் தாய், (ஆதலால்) உன்பாதம்தன்னை அடைந்த - உன் திருவடியைச் சேர்ந்த, நல்பத்தருக்கு - நல்லபத்தர்களுக்கு, ஒருநாசம் உண்டோ- ஒரு கெடுதியுளதோ. எ-று.

நலம் ஆம் எனப்பிரித்து நன்மையாகிய என்றுரைப்பினுமாம். சஞ்சீவி-இறந்தாரைப்பிழைப்பிக்கு மாற்றலுள்ள ஓர் ஔஷதி.

சசா. ஆவும்பயமுமமுதுமொப்பானவரங்கருக்கு
மேவும்புகழின்னுமேவுங்கொலோவவர்மெய்யருளால்
தாவுந்தரங்கத்தடஞ்சூழயோத்திச்சராசரங்கள்
ஆவுங்கிளையுடன்வைகுந்தலோகத்திலார்ந்திடவே.

(இ-ள்.) தாவும்-அலைகள் தாவுகின்ற, தரங்கம்-கடல்போன்ற, தடம் - தடாகங்கள், சூழ் - சூழ்ந்த, அயோத்தி - திருவயோத்யையி லுள்ள, சராசரங்கள் ஆவும் - சராசரங்களெல்லாம், அவர்மெய் அரு ளால் - அவரது உண்மையாகிய கிருபையினால், கிளையுடன் - தமது சுற்றங்களோடு, வைகுந்தலோகத்தில் ஆர்ந்திட - ஸ்ரீவைகுண்டநக ரத்தில் தங்கினதனால், ஆவும் - பசுவையும், பயமும் - (அதன்) பாலை யும், அமுதும்-(அதன்) இன்சுவையையும், ஒப்பு ஆன-நிகர்த்த, அரங் கருக்கு - திருவரங்கருக்கு, மேவும் புகழ் - உண்டாகுங்கீர்த்தி, இன் னும்-இன்னம்யாவர்க்காயினும், மேவும்கொல்-உண்டாகுமோ. எ-று.

தாவும் தரங்கம் தடம் - தாவுகின்ற அலைகளையுடைய தடாகம் எனினுமாம். சரம்-இயங்கியற்பொருள், அசரம்-நிலையியற்பொருள். இவற்றை வடநூலார் ஸ்த்தாவரஜங்கமங்கள் என்பர்.

சஎ. ஒருதாயிருந்துவருந்தவைதேகியுடன்சுரத்தில்
ஒருதாய்சொலச்சென்றதென்னரங்காவையமுய்யும்வண்ணம்.
ஒருதாயுதரத்திலோரறுதிங்களுறைந்தபின்னை
ஒருதாய்வயிற்றில்வந்துற்றதெம்மாயமுரைத்தருளே.

(இ-ள்.) ஒருதாய் இருந்துவருந்த - ஒருதாயானவள் இருந்து வருந்தும்படி, ஒருதாய்சொல்ல - ஒருதாய்சொல்லுதலால், சுரத்தில்- காட்டில், வைதேகியுடன்சென்ற - சீதாபிராட்டியோடு கூடிநடந்த, தென் அரங்கா - தென்னரங்கனே, வையம் உய்யும்வண்ணம் - உல கத்திலுள்ளார் உஜ்ஜீவிக்கும்படி, ஒருதாய் உதரத்தில்-ஒருதாய்வயிற் றில், ஓர் அறுதிங்கள் உறைந்தபின்னை - ஓராறுமாதம் தங்கினபிறகு, ஒருதாய்வயிற்றில்-வேறொருதாய்வயிற்றில், வந்து உற்றது-வந்தடைந் தது, எ மாயம் - என்னமாயாகாரியம், உரைத்தருள்-சொல்லியருளல் வேண்டும். எ-று.

ஒருதாய் நான்கனுள் முதலடியிலுள்ளது கௌசலையையும், இரண்டாமடியிலுள்ளது கைகேசியையும், மூன்றாமடியிலுள்ளது தேவகியையும், நான்காமடியிலுள்ளது ரோகிணியையும் குறித்தன. வைதேகி - விதேகராஜன்மகள். விதேகம் ஓர்தேசம். விதேகன்-ஜநகன். இவன் வசிஷ்டமுனிவர் சாபத்தால் உடம்பிழந்ததனால் விதேஹன் எனப்பட்டான். சுரம் என்றது தண்டகாரண்யத்தை.

சஅ. கதிபட்டபொன்னியரங்கேசராடுகருந்திரைநீர்
நதிபட்டபாடுநவின்றிடலாகுநலங்கெழுகூர்
நுதிபட்டநெட்டலத்தாலேயிழுத்திட நூற்றுவர்தம்
பதிபட்டகண்கலக்கந்தெரியாதுபகருதற்கே.

(இ - ள்.) கதிபட்ட - வேகம்பொருந்திய, பொன்னி - காவிரியாற்றினால் சூழப்பட்ட, அரங்கம்-திருவரங்கத்துக்கு, ஈசர்-தலைவராகிய நம்பெருமாள், ஆடு-(பலராமாவதாரத்தில்) நீராடுகின்ற, கருதிரை-கருமையாகிய அலைகளையுடைய, நீர் - நீரையுடைய, நதி-யமுநாநதி, பட்டபாடு - அடைந்ததுன்பத்தை, நவின்றிடல் ஆகும்-சொல்லுதல் இசையும், (அவர்) நலம்கெழு - நன்மையமைந்த, கூர்நுதிபட்ட-கூர்மையாகிய நுனியைப்பொருந்திய, நெடு அலத்தாலே இழுத்திட-நெடியகலப்பையினால் பெயர்த்து இழுக்க, நூற்றுவர்தம்பதி - (துரியோதநன்முதலிய) நூற்றுவருடைய ஊராகிய அஸ்திநாபுரம், பட்ட கண்கலக்கம்-அடைந்ததுன்பத்தை, பகருதற்கு-சொல்லுதற்கு, தெரியாது-ஒருவருக்கும் இசையாது. எ-று.

யமுநாநதியும் ஹஸ்திநாபுரமும் பட்டபாட்டை ஸ்ரீபாகவதம் தசமஸ்கந்தத்தில் பரக்கக்காணலாம்.

சகூ. பண்டுவிழுங்கியபாருந்திசையும்பனிக்கடலும்
சண்டநெடுங்கிரித்தானமெல்லாஞ்சண்பகாடவிமேல்
மண்டுபெரும்புனல்சூழரங்கேசர்தம்வாய்மலருள்
கண்டுமருவினள்சீர்நந்தகோபர்தங்காதலியே.

(இ-ள்.) பண்டு - பூர்வகாலத்தில், விழுங்கிய - உட்கொண்ட, பாரும் - பூமியையும், திசையும் - திக்குகளையும், பனிகடலும்-குளிர்ச்சியையுடைய கடல்களையும், சண்டம்நெடு-மிகவும்பெரிய, கிரிதானம்-மலைகளினிடங்களையும், எல்லாம் - (அவற்றுளடங்கிய) எல்லாப்பொருள்களையும், சீர் - சிறப்புப்பொருந்திய, நந்தகோபர்தம் - ஸ்ரீ நந்தகோபரது, காதலி - தேவியாராகிய ஸ்ரீ யசோதைப்பிராட்டி, சண்பகம் அடவிமேல் - சண்பகமரச்சோலையின்மீது, மண்டு - அடர்ந்து பாய்கின்ற, பெருபுனல்சூழ்-பெரியகாவிரிநீரால்-சூழப்பட்ட, அரங்கம்-திருவரங்கத்துக்கு, ஈசர்தம் - தலைவராகிய நம்பெருமாளுடைய, வாய்

மலர் உள்-செவ்வல்லிமலர்போன்ற திருவாயினுள்ளே, கண்டு-(இருக்கப்) பார்த்து, மருவினள் - (தழுவிக்கொண்டு) மகிழ்ந்தாள். எ-று.

நந்தகோபர் என்பதற்கு இடையரையும் பசுக்களையும் காப்பவர் என்பது பொருள். கண்ணனவதாரத்தில் குழந்தைப்பருவத்தில் யசோதைப்பிராட்டி நீராட்டி நாவழிக்கும்போது கண்ணன் திருவாய் மலர்ந்தருள, அத்திருவாயினுள்ளே எல்லாவுலகங்களையும் கண்டு மகிழ்ந்தாள் என்பது ஸ்ரீபாகவதகதையாதலால் இவ்வாறு கூறினர். காதலி-ஆசைநாயகி.

௫௦. உன்னைக்களவிலுரலோடுகட்டிவைத்துன்னுடைய
அன்னைக்கொருத்தியறிவித்தபோதலையாழிமங்கை
தன்னைப்புணர்ந்தருடாரரங்காவவடன்மருங்கில்
பின்னைக்கொடுசென்றபிள்ளைமற்றாரென்றுபேசுகவே.

(இ - ள்.) அலை - அலைகளையுடைய, ஆழி - திருப்பாற்கடலில் தோன்றிய, மங்கைதன்னை-திருமகளை, புணர்ந்தருள் - கூடியருளின, தார்-திருத்துழாய்மாலையையுடைய, அரங்கா - திருவரங்கனே, ஒருத்தி - ஓரிடைச்சி, களவில் - (பால்தயிர் முதலியவற்றை) திருடின காலத்தில், உன்னை - உன்னை, உரலோடு கட்டிவைத்து - உரலோடு சேர்த்துப்பிணித்துவைத்து, உன்னுடைய அன்னைக்கு-உன்தாய்க்கு, அறிவித்தபோது - தெரிவித்தகாலத்தில், அவள் - அந்த இடைச்சி, தன்மருங்கில்-தன் இடையில், கொடு சென்றபிள்ளை-கொண்டுபோன குழந்தை, பின்னை ஆர் என்றுபேசுக-வேறுயாரென்று சொல்வாயாக.

அன்னைக்கு என்றது யசோதைப்பிராட்டிக்கென்றபடி. கண்ணன் வெண்ணெய் திருடினதற்காகத் தன்னைக் கட்டிவைத்து யசோதைக்குச்சொல்லச்சென்ற இடைச்சி மருங்கில் பிள்ளையாயிருந்தனன் என்பதும், அவள் பிள்ளை வீட்டில் கட்டப்பட்டிருந்தான் என்பதும் இதனாற் கூறப்பட்டபொருள்.

௫௧. கடிக்குங்களப்பிறைவாளெயிற்றுவெங்காளியன்மேல்
நடிக்கும்பெரியபெருமாளரங்கர்நறைகமழ்பால்
குடிக்குங்களவுக்குமாறுகொண்டேயொருகோபிபற்றி
அடிக்கும்பொழுதிற்பதினாலுலகுமடிபட்டவே.

(இ-ள்.) காளம் - விஷமுள்ளதும், பிறைவாள் - பிறைபோல் வளைந்து ஒளியுள்ளதுமாகிய, எயிறு - பல்லினால், கடிக்கும் - கடித்து வருத்துந் தொழிலையுடைய, வெம்காளியன்மேல் - கொடியகாளியன் என்னும் பாம்பின்மீது, நடிக்கும் - நாட்டியஞ்செய்த, பெரிய பெருமாள் - பெரியபெருமாளாகிய, அரங்கர் - திருவரங்கர், நறை கமழ்பால் - மணங்கமழாநின்ற பாலை, குடிக்கும்களவுக்கு - குடித்த திருட்டின்பொருட்டு, ஒரு கோபி - ஒரு இடைச்சி, பற்றி - பிடித்

துக்கொண்டு, மாறுகொண்டு அடிக்கும்பொழுதில்-சிறுகோல் கொண்டடிக்கும்போது, பதினால் உலகும் அடிபட்ட-பதினான்குலகங்களும் அடிபட்டன. எ-று.

வாள் எயிறுவாள்போலும் பல் எனினுமாம். காளியன்மேல் நடித்தது கண்ணனவதாரத்தில். உலகமெல்லாம் இறைவன் அந்தர்யாமியாய் நிறைந்திருத்தலால் இவன்மீதுபட்ட அடி எல்லாவுயிர்களின்மேலும் பட்டனவென்பது கருத்து. மாறுகொண்டு-கோவங்கொண்டு எனினுமாம்.

ருஉ. ஆரந்தரும்பொன்னிசூழரங்காவுன்றனாய்ச்சிவெகு
தூரநெடுங்கயிறெல்லாமிசைசொத்துவைத்துமவை
ஈரமருங்கிற்குறைந்திடக்கண்பிசைந்தேங்குமவன்
வேரம்புயமுகங்கண்டளவானவிநோதமென்னே.

(இ-ள்.) ஆரம்தரும் - முத்துக்களை யெறிகிற, பொன்னிசூழ்-காவிரி சூழ்ந்த, அரங்கா - திருவரங்கத்தையுடையவனே, உன்றன் ஆய்ச்சி-உன் தாயாகிய யசோதைப்பிராட்டி, வெகுதூரம் நெடுகயிறு எல்லாம் - வெகுதூரமாக நீண்டகயிறுகளெல்லாவற்றையும், மிசை சொத்துவைத்தும் - மேன்மேல் ஒன்றுடனொன்றை முடிந்தும், அவை - அந்தக்கயிறுகள், ஈரம்மருங்கின்-அழகாகிய இடையினும், குறைந்திட - குறைந்திருக்க, (நோக்கி) கண்பிசைந்து ஏங்கும்-கண்பிசைந்தழுகின்ற, அவன் - அவனுடைய, வேர் - வேர்வையோடு கூடிய, அம்புயம் - தாமரை மலர்போன்ற, முகம்கண்டு-முகத்தைப் பார்த்து, அளவு ஆன-அக்கயிற்றினளவாகமருங்கு சுருங்கின, விநோதம் என் - உன் திருவிளையாடலிருந்தவாறென்னை. எ-று.

யாறுமலையினின்றும் பெருகிவரும்போது அம்மலையிலுள்ள முத்துமுதலிய பொருள்களை வாரிக்கொண்டுவருதலியல் பாதலால் "ஆரந்தரும் பொன்னி" என்றார். மலையில் முத்து-மூங்கில் யானைக்கொம்பு முதலியவற்றிலுண்டான முத்து. ஆரம் சந்தனமரமெனினுமாம். ஆர் அம்தரும் எனப்பிரித்து நிறைந்த நீரைத்தருகிற, அன்றி நிறைந்த அழகைத்தருகிற எனினுமாம்.

ருங. சிந்திக்கநெஞ்சில்லைநாவில்லைநாமங்கள்செப்பநின்னை
வந்திக்கமெய்யில்லைவந்திருபோதுமொய்மாமலர்ப்பூம்
பந்தித்தடம்புடைசூழரங்காதிபாண்டனுன்னைச்
சந்தித்தநாண்முத்திபெற்றதென்னேதயிர்த்தாழியுமே.

(இ-ள்.) மொய்-நெருங்கிய, மாமலர்-பெரியமலர்களையுடைய, பூ - பொலிவுள்ள, பந்தி - வரிசையாகிய, தடம் - தடாகங்கள், புடைசூழ் - பக்கங்களில் சூழப்பெற்ற, அரங்கா - திருவரங்கத்தை

யுடையவனே, சிந்திக்க-(உன்னை) தியானம்பண்ண, நெஞ்சு இல்லை-மனமில்லை, நாமங்கள்செப்ப - (உன்) திருநாமங்களைச்சொல்ல, நா இல்லை - நாவில்லை, இருபோதும் - இரண்டுகாலமும், வந்து-வந்து, நின்னைவந்திக்க-உன்னை வணங்க, மெய் இல்லை - உடம்பில்லை, (அப்படியிருந்தும்) ததிபாண்டன்-ததிபாண்டனானவன், உன்னைசந்தித்த நாள்-உன்னைத்தரிசித்து முத்தியடைந்த காலத்தில், தயிர் தாழியும்-(அவனது) தயிர்மிடாவும், முத்திபெற்றது-முத்தியடைந்தது, என்-இது என்ன ஆச்சரியம். எ-று.

இருபோதும் என்றது காலைமாலைகளை. வந்திக்க வழிபட எனினுமாம். வழிபாடு செய்தற்குக் கை கால் முதலிய அவயவங்களோடு கூடிய உடம்பு ஆவசியகமாதலால் வந்திக்க மெய்யில்லை என்றார். ததி பாண்டன் - தயிர்த்தாழியையுடையவன். ஒருநாள் கண்ணன் யசோதை முலையுண்பியாமைக்காகக் கோபித்து தயிர்த்தாழிகளையுடைத்துஉருட்டிவிட, அதுகண்டு அவள் ஒரு கோல்கொண்டு அடிக்கவர, அவளுக்ககப்படாமலோடித்ததி பாண்டன் வீட்டிலொளிக்க, அவன் கண்ணனது திருவடியைப் பிடித்துக்கொண்டு எனக்கு முத்தி கொடுக்கவேண்டுமென, கண்ணன் என்தாய் என்னை அடிக்க வருகிறாள், என்காலை விடு என்று சொல்ல, அவன் நீ எனக்கும் என்னைச் சார்ந்த இருபத்தெட்டு ம[illegible]யிலுள்ளவர்க்கும் என் தயிர்த்தாழிக்கும் பரமபதங்கொடாயாயின், உன் காலைவிடாமல் உன்னை யசோதையிடத்தில் ஒப்பிப்பேன் என்று சொல்ல, கண்ணன், உடனே அவன் வேண்டுகோளின்படி முத்தியருளிச்செய்தனர் என்பது.

ருச. குன்றாவிளைவுடன்வண்மைபருவங்குணங்களிவை
பொன்றாதிருந்தகண்மாயமென்னோ பொன்னிசூழரங்கா
அன்றாயர்தங்குலமைந்தர்களாயுமலகிலிளங்
கன்றாயுநாடொறுஞ்சென்றுவந்தாடியகாலத்திலே.

(இ-ள்.) பொன்னி சூழ் அரங்கா - காவிரிசூழ்ந்த திருவரங்கத்தையுடையவனே, அன்று-(கிருஷ்ணவதாரஞ்செய்த) அக்காலத்தில், அலகு இல் - அளவற்ற, ஆயர்தம் குலம் - இடையர்குலத்திற் பிறந்த, மைந்தர்கள் ஆயும் - பிள்ளைகளாகியும், இளங்கன்று ஆயும் - இளமையுள்ள பசுங்கன்றுகளாகியும், நாள்தொறும் - தினந்தோறும், சென்று உவந்து ஆடியகாலத்தில்-போய் மகிழ்ந்து விளையாடினகாலத்தில், (அந்தப்பிள்ளைகளும் கன்றுகளும்) குன்றாவிளைவுடன் - குறையாதவளர்ச்சியோடு, வண்மை - வளமையும், பருவம்-வயதும், குணங்கள் இவை-குணங்களுமாகியஇவை, பொன்றாது இருந்த-குறையாமலிருந்த, கண்மாயம் என்னோ-பெரியமாயம் யாதோ.

கண்மாயம் - கண்கட்டுவித்தை எனினுமாம். வண்மை அழகு எனினுமாம். கண்ணபிரானானவர் இடைப்பிள்ளைகளுடன் பசுங்

கன்றுகளைமேய்த்து வருங்காலத்தில் ஒருநாள், பிரமதேவன் இவனது லீலையைக்காண விரும்பி, கன்றுகளையும் சிறுவரையும் தன் மாயையால் வானத்தில் ஒளித்துவைக்க, கண்ணபிரானுனவர் அதனையறிந்து வண்மை வடிவுவளர்ச்சி குணம் தொழில் முதலியவை சிறிதும் வேற்றுமையின்றித் தாமே கன்றுகளும் சிறுவருமாகி அவரவர் மனைகளில்போய் வந்துகொண்டிருந்தார், இவ்வாறு ஒருவருடங் கழிந்தபிறகு பிரமதேவன் நாணியஞ்சி, சிறுவரையும் கன்றுகளையும் கொண்டுவந்து சமர்ப்பித்து வணங்கித்தன் பிழையைப் பொறுத்தருளும்படி பிரார்த்தித்தானென்பது ஸ்ரீ பாகவதகதை.

௫௫. நெடுங்கானிலத்துடன்கோவலர்தாமிகநின்றுநெஞ்சம்
நடுங்காதிமைத்திடுங்கண்களெல்லாமென்றுநண்ணலர்மேல்
விடுங்காலநேமியங்கையரங்காகண்விழிக்குமுன்னே
சுடுங்கானநல்லனறுற்றவம்மாயமென்சொல்லுகவே.

(இ - ள்.) நண்ணலர்மேல் - பகைவர்மீது, விடும் - ஏவுகிற, காலநேமி - (அர்தப்பகைவருக்கு) யமனை நிகர்த்த திருவாழியையுடைய, அம்கை - அழகிய திருக்கரத்தையுடைய, அரங்கா - திருவரங்கா, நெடுகான் நிலத்து - பெரியகாட்டினிடத்தில், கோவலருடன் மிகநின்று - இடையரோடு நெடுநேரம் நீ நின்று, (அவர்களைப் பார்த்து) நெஞ்சம் நடுங்காது - மனம் நடுங்காமல், எல்லாம்-நீங்கள் யாவரும், கண்கள் இமைத்திடும் என்று - கண்களை மூடிக்கொள்ளுங்களென்று சொல்லி, கண்விழிக்கும் முன்னே-(அவர்கள்) கண்களைத் திறத்தற்கு முன்பே, சுடும் - சுடுகின்ற, நல் கானம் அனல் - பெரிய காட்டுத்தீயை, துற்ற-விழுங்கின, அம்மாயம் என்-அந்தமாயம் யாது, சொல்லுக - சொல்லியருளுக, எ-று.

பிருந்தாவனத்தில் முஞ்சாரண்யத்தில் பிரவேசித்தபோது தைவிகமாகவுண்டாகித் தம்மை வளைந்துகொண்ட பெருங்காட்டுத் தீயிலகப்பட்டுக்கொண்ட கோபாலர்கள் முறையிட்டுத் துதிக்கக் கேட்ட கண்ணபிரான் அவர்களைநோக்கி நீங்கள் அஞ்சாமல் கண்ணை மூடிக்கொண்டிருங்கள் என்று நியமித்துத் தமது விராட்டுருவங் கொண்டு அந்த நெருப்பை விழுங்கி, இடையரையும் பசுக்களையும் பாண்டரமென்கிற ஆலமரத்தடியில் தமது மாயாசக்தியால் கொண்டு வந்து சேர்த்துக்காத்தருளினர் என்பது ஸ்ரீ பாகவதகதை.

௫௬. வானுடரிற்சிலர்சென்றுகண்டாரில்லைமற்றதனில்
போனாரின்மீளப்புவியில்வந்தாரில்லைபூவின்மங்கை
ஆனதசெல்வத்திருவரங்காகொச்சையாயமெல்லாம்
மேனாட்பரமபதத்தினிற்போயெங்ஙன்மீண்டதுவே.

(இ-ள்.) பூவின்மங்கை - தாமரை மலரை இடமாகவுடைய திருமகள், ஆனாத - நீங்காமையாலுள்ளதாகிய, செல்வம் - செல்வம் நிரம்பிய, திருவரங்கா - திருவரங்கத்தை யுடையவனே, வான் நாடரில் - விண்ணுலகத்தாருள், சென்றுகண்டார் சிலர் இல்லை - (பரமபதத்தை) போய்க்கண்டவர் சிலர் இல்லை, அதனில்போனரில்-அதில் சென்றவர்களுள், மீள - மீண்டும், புவியில்வந்தார் இல்லை - பூமியில் வந்தவர் இல்லை, (அப்படியிருக்க) கொச்சை - இழிவையுடைய, ஆயர் எல்லாம் - இடையரெல்லாரும், மேல்நாள்-பூர்வகாலத்தில், பரமபதத்தினில் போய் - பரமபதத்திற்சென்று, மீண்டது - மீண்டு வந்தது, எங்ஙன் - எவ்வாறு. எ-று.

பூவின் மங்கை ஆனாத செல்வத் திருவரங்கா என்பதற்கு மலர் மங்கையாகிய நீங்காத செல்வத்தையுடைய எனினுமாம். பூ இல் மங்கை-தாமரை மலராகிய வீட்டையுடைய் திருமகள் என்றலுமொன்று. பரமபதம் - மேலான இடம் (மோக்ஷம்) "யமுனையாற்றில் நீராடுஞ்சமயத்தில் ஒரு அசுரனால் வருணலோகத்தில் கொண்டுபோயொளிக்கப்பட்ட நந்தகோபனை ஸ்ரீ க்ருஷ்ணபகவான் மீட்டுக்கொண்டு வந்தபோது தன்னைப்பூசித்து மேலானகதியை யடைய விரும்பினகோபாலரெல்லார்க்கும் ஞானக்கண்ணைக்கொடுத்து, தனது சோதிமயமான சொரூபத்தையும் பரமபதமுதலிய புண்யலோகங்கள் எல்லாவற்றையும் காட்டியருளினர் என்பது ஸ்ரீ பாகவத கதை.

ருஎ. கூனந்துலாவயற்கோயிலுள்ளேபள்ளிகொள்ளுமெங்கள்
ஆனந்தவாரிதிருக்குழலூதவறத்தடிந்த
கானந்தழைத்தனகால்வரைநெக்கனகார்முகிற்றோய்
வானமயர்த்தனவையமெல்லாமெய்ம்மறந்தனவே.

(இ-ள்.) கூன் நந்து உலா-வளைவாகிய சங்குகள் உலவாநின்ற, வயல் - வயல்கள் சூழ்ந்த, கோயில் உள்ளே - திருவரங்கம் பெரிய கோயிலினுள்ளே, பள்ளிகொள்ளும் - திருக்கண் வளர்ந்தருளுகிற, எங்கள் - எங்களுடைய, ஆனந்தவாரி - இன்பக்கடலாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவான், திருக்குழல் ஊத - அழகாகிய வேய்ங்குழலை யூதுதலும், அறதடிந்த - முழுதும் வெட்டுப்பட்டுலர்ந்த, கானம்தழைத்தன - காடுகள் தழைத்தன, கால்வரை நெக்கன - அடிவாரங்களையுடைய மலைகள் உருகின, கார்முகில் தோய்-கரியமேகங்கள் படிந்த, வானம் - விண்ணுலகம், அயர்த்தன-மதிமறந்தன, வையம் எல்லாம்-பூலோகமுழுதும், மெய்மறந்தன-உடம்பை மறந்துவிட்டன. எ-று.

அறத்தடிந்த - வேரறவெட்டின எனினுமாம். கால்-சாரல் எனினுமாம். குழலோசையின் இனிமையால் கானம் முதலாயின இவ்வாறாயினவென்பது கருத்து.

௫௮. ஊருந்திரைப்பொன்னிநன்னீரரங்கவுருப்பலவாய்க்
காருந்தடித்துங்கலந்ததுபோலிடைக்கன்னியர்கள்
யாருங்களிக்கவிடையிடையேகலந்தின்பநலம்
கூருந்திருநடமாடியமாயமென்கூறுகவே.

(இ - ள்.) ஊரும் - தவழ்கின்ற, திரை - அலைகளையுடைய, பொன்னி-காவிரியாற்றின், நல்நீர்-நல்லநீரால் சூழப்பட்ட, அரங்க-திருவரங்கத்தில் எழுந்தருளியிருப்பவனே, இடை கன்னியர்கள் யாரும் - இடைப்பெண்கள் யாவரும், களிக்க - மனமகிழும்படி, இடையிடையே - (அவர்களுக்கு) இடையிடையில், உருபல ஆய்-உருவங்கள் அநேகங்களைக்கொண்டு, காரும் தடித்தும் - நீலமேகமும் மின்னற்கொடிகளும், கலந்தது போல் - சேர்ந்ததுபோல, கலந்து - சேர்ந்து, இன்பம் நலம் கூரும் - மேலான சுகம் அதிகரிக்கிற, திரு நடம் ஆடிய மாயம் - திருவிளையாடலைச் செய்தமாயம், என்-என்ன, கூறுக - (அதனைச்) சொல்லுக. எ-று.

தன்னிடத்து மூழ்குவோரைப் புனிதராக்குதலால் "பொன்னி நன்னீர்" என்றார். இடையிடையே கலந்து இன்பநலங்கூர்ந்த இத் திருவிளையாடலுக்கு ராஸக்ரீடையென்றுபெயர்கூறுவர் வடநூலார். கண்ணனுக்குக் காரும் இடைக்கன்னியர்க்கு மின்னற்கொடியும் உவமை. உருப்பலவாய் என்றது பல க்ருஷ்ணர்களாகி யென்றபடி.

௫௯. மின்போலிடையிடைமாதரெல்லாமுன்றன்மெய்தழுவி
நன்போகசாகரத்துள்ளேமுழுகவுநாண்மலராள்
தன்போகமேமகிழ்தாரரங்காவண்டர்தாமவரை
அன்போடணைத்துத்துயின்றதெம்மாயமறிந்திலமே.

(இ-ள்.) நாள் மலராள்-புதியதாமரை மலர் மீதெழுந்தருளியிருக்கிற பெரியபிராட்டியின், போகமே-சுகாநுபவத்தையே, மகிழ்-மகிழ்கின்ற, தார் - திருத்துழாய் மாலையைத்தரித்த, அரங்கா - திருவரங்கனே, மின்போல் இடை - மின்கொடிபோன்ற இடையையுடைய, இடைமாதர் எல்லாம் - இடைப்பெண்களெல்லாரும், உன் மெய்தழுவி - உன் திருமேனியைத் தழுவிக்கொண்டு, நல் - சிறந்த, போக சாகரத்துள்ளே முழுகவும் - சுகாநுபவக்கடலிலே அழுந்திக்கிடக்கவும், அவரை - அந்தக்கோபிகைகளை, அண்டர் - (அவர்களுக்குக் கணவர்களாகிய) இடையர்கள், அன்போடு அணைத்து-அன்புடனே தழுவிக்கொண்டு, துயின்றது - நித்திரை செய்தது, எம்மாயம் - என்னமாயமோ, அறிந்திலம் - (அதனை யாம்) அறிந்திலேம். எ-று.

நாள் மலராள் என்பதற்கு நாடோறும் தாமரை மலரில் வாழ்பவள் என்றுரைப்பினுமாம்.

௬0. நீரிற்புகுங்கண்டுதேரினைப்பார்க்குநிறுத்தியபொற்
றேரிற்றொழும்பின்னைநீரினிற்காணுஞ்சிறந்தபச்சைக்
காரிற்றிறமெய்யரங்கனுஞ்சேடனுங்கஞ்சவஞ்சன்
ஊரிற்செலவுடன்போமக்குரூரன்றனுண்மகிழ்ந்தே.

(இ - ள்.) சிறந்த - மேலான, பச்சைகாரின் திறம் - பச்சை மேகத்தின் தன்மையமைந்த, மெய்-திருமேனியையுடைய, அரங்கனும் - கண்ணபிரானும், சேடனும் - பலராமபிரானும், கஞ்சன் வஞ்சன் - கம்ஸனாகிய வஞ்சகனது, ஊரில் செல்ல - ஊருக்கு எழுந்தருளும்போது, உடன்போம் - (அவர்களை யழைத்துக்கொண்டு அவர்களோடு) கூடப்போகிற, அக்குரூரன் - அக்ரூரர், நீரில்புகும்-யமுனையாற்று நீரில் மூழ்கப்புகுவர், கண்டு - (அந்த நீருக்குள்ளே இவ்விருவருருவையும்) பார்த்து, தேரினைபார்க்கும்-(கரையில்வந்து) திருத்தேரைநோக்குவர், நிறுத்திய-கரையில் நிறுத்தப்பட்ட, பொன் தேரில்-பொன்மயமான தேரின்மீதெழுந்தருளியிருக்கக்கண்டு, தன் உள் மகிழ்ந்து தொழும் - தமது மனமகிழ்ந்து வணங்குவர், பின்னை-பின்பு, நீரினில் காணும்-நீருக்குள்ளே (முழுகி அவ்விடத்திலும்) தரிசிப்பார். எ-று.

அக்ரூரர் - கொடுமையில்லாதவர். இவர் ஓர் யாதவபாகவதர். கிருஷ்ணபலராமர்களைக் கொல்லும்பொருட்டு அழைத்துவரும்படி இவரையனுப்பினனாதலால் கஞ்சனை வஞ்சன் என்றார். பலராமர் திருவநந்தாழ்வானது அமிசமாதலால் அவரைச் சேடன் என்றார். அக்ரூரர் வழியில் நீரில்மூழ்கினது மாத்யாந்ஹிகம் என்னும் திருவாராதனத்தின்பொருட்டென்க.

௬௧. நாமமிகும்புகழ்யாதவர்வாழுநகரிலும்பர்
தாமருவுஞ்சவைதத்தமவாயதளையவிழும்
தேமருபொங்கரரங்கேசருக்கிரசேனனுக்கு
மாமுடிவைக்கும்படிபடிமேற்கொடுவாவெனவே.

(இ-ள்.) தளை அவிழும் - (பேரரும்புகள்) கட்டவிழப்பெற்ற, தேம்மரு-தேன்பொருந்திய, பொங்கர் - சோலைசூழ்ந்த, அரங்கேசர்-திருவரங்கத்துக்கிறைவராகிய நம்பெருமாள், உக்கிரசேனனுக்கு-உக்ரஸேநமஹாராஜனுக்கு, மாமுடிவைக்கும்படி-பெரியமுடிசூட்டியருளும்படி, படிமேல் - இந்தப்பூமியின்மீது, கொடுவா என-கொண்டுவாவென்று (வாயுதேவனுக்கு நியமிக்க), நாமம்மிகும் - பேர்மிகுந்த, புகழ்-கீர்த்தியையுடைய, யர்தவர்-யதுவம்சத்தார், வாழும்-வசிக்கிற, நகரில் - வடமதுரையில், உம்பர் மருவும்சவை - தேவர் வீற்றிருக்கும் சபாமண்டபம், தத்தம ஆய - தங்கள் தங்களுடையதாயிற்று. எ-று.

தேம்-வாசனை யெனினுமாம். நாம மிகும் புகழ் என்றது பெருங் கீர்த்தி யென்றபடி. உம்பர் மருவும் சபைக்கு சுதர்மையென்று பெயர். தளையவிழும் உக்கிரசேனன் என்றியைத்து - விலங்கில் நின்றும் விடுவிக்கப்பட்ட உக்கிரசேனன் எனினுமாம். கண்ணன் - கம்சனைக்கொன்ற பிறகு உக்கிரசேன மகாராஜனைத் தளையினின்றும் விடுவித்து, முடி சூட்டினவுடனே, வாயுதேவனை நோக்கி, ஓ! வாயுதேவனே, நீ இந்திரனிடத்திற் சென்று சுதர்மை யென்னும் தேவசபையானது, உக்கிரசேன மகாராஜருக்குத் தகுந்தது. அதில் யதுவமிசத்தார் வீற்றிருத்தல் அழகாகும். ஆதலால் அந்தச்சபையை அனுப்பி விடும்படி, நான் நியமித்ததாகச் சொல்லுவாய்-என்று கட்டளையிட, அந்த வாயுதேவனும் இந்தச் செய்தியை இந்திரனுக்குத் தெரிவிக்க அப்படியே இந்திரனும் அந்தச்சபையை, வாயுதேவன் கையில் கொடுக்க, அவன் அதைக்கொண்டு வந்து கண்ணன் சந்நிதியில் சமர்ப்பிக்க, அதைக் கண்ணன் உக்கிரசேன மகாராசனுக்குப் பிரசாதித்தருள, அதில் யாதவர் எல்லாரும் வீற்றிருந்தார்களென்பது புராண கதை.

௬௨. மறியாவெழுந்திரைமாநீர்மதுரையின்மன்னவரைக்
குறியாதவன்படைவந்தவர்நாட்செழுங்கோகனகப்
பொறியாடரவணைத்தென்னரங்காவொருபூதருமக்
கறியாவகைத்துவராபதிக்கேயெங்ஙனுக்கினையே.

(இ-ள்.) செழு - செழுமையாகிய, கோகனகம் - செந்தாமரை மலரில் வீற்றிருக்கிற, பொறி - திருமகளோடு, ஆடு அரவு அணை - படந்தூக்கி யாடுகின்ற சர்ப்ப சயனத்தையுடைய, தென் அரங்கா - தென்னரங்கனே, மறியா - மடங்கி, எழும் - எழுகின்ற, திரை - அலைகளையுடைய, மாநீர் - மிக்கநீர் சூழ்ந்த, மதுரையில் - வடமதுரையில், மன்னவரை - மாற்றரசரை, குறியாதவன், - ஒருபொருளாக நினைக்காதவனாகிய காலயவனனுடைய, படை - சேனை, வந்த அந்நாள் - வந்த அக்காலத்தில், ஒரு பூசரும் அறியாவகை - ஒருவரும் அறியாதபடி, (மதுரையிலுள்ள சகல ஜனங்களையும்) துவராபதிக்கு - திருத்துவாரகையில், எங்ஙன் ஆக்கினை - எப்படிக் கொண்டுபோய்ச் சேர்த்தாய்.. எ-று.

மது என்பவனால் ஆளப்பட்டதும் கண்ணுக்கு இனிமை பயப்பதும் ஆதலால் மதுரை யெனப்பட்டது. பூதரொன்றது பூத ருடம்பின ரொன்றபடி. காலயவனனென்னும் யவன தேசத்தரசன், யாதவர்மீது படையெடுக்கும் பொருட்டு மிலேச்சர் பலரோடுகூடி, மதுரைக்கு வந்தபோது, கண்ணன் அறிந்து காலயவனனும் ஜராசந்தனுங்கூடி யாதவசேனைகளை அழிப்பரென்று தீர்மானித்து கடற்கர

சனைப் பன்னிரண்டு யோசனைதூரம் விடும்படி கேட்டு அவன்விட்ட பூமியில் துவாரகையை நிர்மித்து மதுரையிலிருந்த பிரஜைகளை அந்தத்துவாரகையிற் கொண்டுபோய்ச் சேர்த்து யதுவம்சமானது பகைவருக்கு அஞ்சாதிருக்கும்படி செய்தருளினனென்பது புராணகதை.

௬௩. நறைத்துளவம்புனைநம்பெருமாள்விறனுஞ்சொல்வதோ
மறைப்பரிபூட்டியமாநிலத்தேரில்லைவாளெயிற்றின்
கறைப்பணிநாணுடைமேருவில்லில்லைக்கடும்பவனச்
சிறைத்தழலம்பில்லைபொன்னாரறுபுரஞ்செற்றதற்கே.

(இ-ள்.) ஒன்னார்-பகைவருடைய, அறுபுரம்-ஆறுபட்டணங்களை, செற்றதற்கு - கண்ணன் அழித்ததற்கு, (பரமசிவன் திரிபுரங்களை யெரித்தபோது அவருக்கு இருந்ததுபோல) மறைப்பரி-வேதங்களாகிய குதிரைகளை, பூட்டிய - கட்டின, மா - பெரிய, நிலம் - பூமியாகிய, தேர் இல்லை - இரதமில்லை, வாள் - ஒளியுள்ள, எயிற்றின்-பற்களையும், கறை - நஞ்சையுமுடைய, பணி - பாம்பாகிய, நாண் உடை - நாணையுடைய, மேருவில் இல்லை - மேருமலையாகிய வில்லில்லை, கடுபவனம்-கடுங்காற்றுப் போன்ற வேகத்தையுடைய, சிறை-இறகுகளைக்கொண்ட, தழல் அம்பு இல்லை - நெருப்பை உமிழ்கின்ற பாணமில்லை, (ஆதலால்) நறை - தேனுள்ள, துளவம்புனை - திருத்துழாய் மாலையைத்தரித்த, நம்பெருமாள் - திருவரங்கநாதரது, விறல்-ஆற்றலானது, நாம் சொல்வதோ - நாம் சொல்லுந்தன்மையதோ.

நறை-மணம் எனினுமாம். தழல் அம்பு - தழல்போன்ற அம்பு-அன்றி, சுடுகின்ற அம்பு என்றலுங்கூடும். ஒன்னார் பொருந்தியிராதவர். பரமசிவனுக்குத் திரிபுரசம்மாரகாலத்தில் மறைப்பரி முதலியவை துணையாயிருந்ததுமன்றி திருமாலும் பாணமாக இருந்து உதவி செய்தாற்போல; கண்ணன் அறுபுரமழித்ததற்கு பரமசிவன் சிறிதும் உதவி செய்திலன் என்றற்கு கடும்பவனச் சிறைத்தழலம் பில்லையென ஈற்றில் கூறினர். பரமசிவன் முப்புரமெரித்தபோது அந்த நெருப்பிலகப்படாமல் பிழைத்துப்போன அறுபதினாயிரமசுரர்கள் ஜம்பூமார்க்கம் என்னும் புண்ணிய க்ஷேத்திரத்தையடைந்து பிரமனைக்குறித்துத்தவஞ்செய்து அவனது வரப்பிரசாதத்தால் அழிவற்ற ஆறுபட்டணங்களைப் பெற்று, அதில் வாழ்ந்து கொண்டிருக்கும்போது வாசுதேவருக்குத் தோழரும் யாஜ்ஞவல்கியருக்குச் சீடருமாகிய பிரமதத்தர் என்னும் முனிவர் அந்த அறுபுரத்தையடைந்து அவ்விடத்துள்ள ஆவர்த்தை யென்னும் நதியின்கரையில் அசுவமேத யாகத்தைச்செய்யும்போது வியாசர்முதலிய ருஷிகூட்டங்களும் வசுதேவர்முதலிய அரசர்திரளும் அவ்விடத்தில் வந்து கூடின. அப்பொழுது அவ்வறுபுரத்தசுரராகிய நிகும்பன் முதலியோரெல்லாரும் அங்கு வந்து, யாக

பாகத்தையும், உமது பெண்களையும் மணி முதலிய திரவியங்களையும் நீர் எமக்குக்கொடுத்தாலன்றி இவ்விடத்தில் யாகஞ்செய்ய வொட்டோம் என்று தடுக்க, பிரமதத்தர் அதற்கு இசைந்திலராதலால் அவர்களெல்லாரும் அசுரராஜாக்கள் பலருடன்வந்து யாகசாலையை வளைந்துகொண்டு கன்னிகைகளைக் கவர்ந்து பலபடியானதுன்பங்களைச்செய்ய, வசுதேவரது பிரார்த்தனையின்படி ஸ்ரீ கிருஷ்ணபகவான் பலராமர்முதலிய யாதவசேனைகளுடனும் வேறு பலராஜசேனைகளுடனும் புறப்பட்டுப்போய் தமது திருவாழியால் அவர்களெல்லாரையுங்கொன்று கன்னிகைகளை மீட்டுவந்து யாகத்தையும் நிறைவேற்றினர் என்பது கதை.

௬௪. அருட்கொண்டலன்னவரங்கர்சங்கோசையினண்டமெல்லாம்
வெருட்கொண்டிடர்படமோகித்துவீழ்ந்தனர்வேகமுடன்
தருக்கொண்டுபோகப்பொறுதேதொடருஞ்சதமகனும்
செருக்கொண்டமுப்பத்துமுக்கோடிதேவருஞ்சேனையுமே.

(இ-ள்.) தரு - பாரிஜாதவிருக்ஷத்தை, கொண்டுபோக - துவாரகைக்குக்கொண்டுபோக, பொறுதே - அதனைமனம் பொறுக்காமல், வேக முடன் தொடரும் - மிகுவிரைவோடு பின்தொடர்ந்த, சதமகனும் - இந்திரனும், செருகொண்ட - போர்த்தொழிலைக்கொண்டு நின்ற, முப்பத்து மூக்கோடிதேவரும் - முப்பத்துமுக்கோடி தேவர்களும், சேனையும் - அவர்களது படைகளும், அருள் - கருணை மழை பொழிகின்ற, கொண்டல் அன்ன - நீலமேகத்தையொத்த, அரங்கர் - திருவரங்கரது, சங்கு ஓசையின் - சங்கத்தின் தொனியால், அண்டம் எல்லாம் - எல்லா உலகங்களும், வெருள்கொண்டு - அச்சமடைந்து, இடர்பட - துன்பமுண்டாக, மோகித்து வீழ்ந்தனர் - மயங்கி விழுந்தார்கள். எ-று.

சதம் - நூறு. மகம் - யாகம். சதமகன் - நூறுயாகஞ்செய்தவன் (இந்திரன்). கண்ணபிரான், நரகாசுரனைக்கொன்று, அவன் முன் கவர்ந்துபோன இந்திரன்தாயாகிய அதிதியினுடைய குண்டலங்களை அவளுக்குக் கொடுக்கும்பொருட்டு சத்தியபாமையோடுகூட பெரிய திருவடியின்மேற்கொண்டு தேவலோகத்திற்குப் போக, அவ்விடத்தில் இந்திராணி, சத்தியபாமைக்கு பல உபசாரங்களைச்செய்தும் தேவர்க்கே தகுதியான பாரிஜாதமலரை சமர்ப்பிக்கவில்லை. ஆதலால் சத்தியபாமை அம்மலரை விரும்பி, கண்ணனைநோக்கி இந்தப்பாரிஜாத விருக்ஷத்தை நமது துவாரகாநகரத்துக்குக்கொண்டுபோகவேண்டுமென, அவ்வாறே கண்ணன் அந்த விருக்ஷத்தைப் பெயர்த்து பெரியதிருவடியின் திருத்தோளின்மேல் வைத்தருளக் கண்ட இந்திராணி தூண்டிவிட, இந்திரன் சகலதேவசமூகங்களு

டன் வந்து யுத்தஞ்செய்ய, தமது சங்கத்தொனியினாலே அவர்களெல்லாரும் மயங்கி மூர்ச்சித்துக் கிடக்கும்படி பண்ணி, அந்த விருக்ஷத்தைத் துவாரகைக்குக்கொண்டு வந்தனனென்பது ஸ்ரீபாகவதகதை. சதமகன் என்பது சதுமுகனெனச் சிலபிரதிகளில் காணப்படுகின்றது. அதற்குக்கதை எங்குளதோ யாமறிந்திலம்.

௬௫. நிணக்கோலநேமித்திருவரங்கேசநினக்கினிய
குணக்கோகனகையுங்கண்டனளோமணிக்குன்றில்வைகும்
கணக்கோதையர்பதினாறாயிரவரைக்கைப்பிடிக்க
மணக்கோலமும்பதினாறாயிரங்கொண்டுவாழ்ந்தவன்றே.

(இ-ள்.) நிணம் - பகைவரது நிணம்படிந்த, கோலம் - அழகாகிய, நேமி - சக்கராயுதத்தையுடைய, திருவரங்கேச - திருவரங்கநாதனே, மணிகுன்றில் வைகும் - ரத்நகிரியில் தங்கியிருந்த, கணம்- கூட்டமாகிய, கோதையர் பதினாறாயிரவரை - பதினாறாயிரம் கன்னிகைகளை, கைபிடிக்க, நீ கைப்பற்றியருள, மணக்கோலமும் பதினாறாயிரம் கொண்டு - பதினாறாயிர மணக்கோலத்தைத் தாங்கி, வாழ்ந்த அன்று - நீ மகிழ்ந்திருந்த அக்காலத்தில், நினக்கு இனிய- உனக்கு இனிதாகிய, குணம் - நற்குணங்களையுடைய, கோகனகையும் - திருமகளும், கண்டனளோ - பார்த்தாளோ. எ-று.

கோகனகம் - செந்தாமரை. கோகனகை - செந்தாமரையில் வாழ்பவள். பதினாறாயிரத் தொருநூறுபேர் என்று வேறு புராணங்களில் கூறப்படுவது முண்டு. கண்ணபிரான் - நரகாசுரனைக்கொன்று, அவன் கொண்டுபோயிருந்த மந்தரகிரியின் சிகரமாகிய ரத்நகிரியில் பலதிக்குகளிலிருந்தும் கொண்டுவந்து சிறைப்படுத்தப்பட்ட பதினாறாயிரங் கன்னிகைகளையும் ஒவ்வொருவருக்கும் தனித்தனி ஒவ்வொருவராயிருக்கும் பொருட்டு அத்தொகைகொண்ட திருவுருவமெடுத்து, அவர்களைக் கைப்பற்றி, அவரவர் மாளிகைகளில் எழுந்தருளி அவர்களை மகிழ்வித்துக் கொண்டிருந்தார் என்பது கதை. கைப்பிடித்தலை பாணிக்கிரகணம என்பர் வடநூலார்.

௬௬. விடந்தோயரவிற்றுயிலரங்கேசவிசும்புமுட்ட
நடந்தோகைதன்னுடனாரதன்காணநகைக்குமுத்து
வடந்தோய்வனமுலையெண்ணிரண்டாயிரமாதர்தங்கள்
இடந்தோறுநின்றெழில்வேறாயிருந்ததங்கெவ்வண்ணமே.

(இ-ள்.) விடம்தோய் - நஞ்சுபொருந்திய, அரவில் - திருவநந்தாழ்வான்மீது, துயில் - கண்வளர்ந்தருளுகிற, அரங்கேச - திருவரங்க நாதனே, அங்கு - அந்த கிருஷ்ணாவதார காலத்தில், நாரதன்- நாரதமுனிவன், விசும்பு முட்ட - ஆகாயத்தைப்பொருந்த, நடந்து-

வந்து, ஓகை தன்னுடன் - மனமகிழ்ச்சியுடன், காண - தரிசிக்கும்படி, நகைக்கும் - விளங்குகின்ற, முத்துவடம் - முத்துமாலைகள், தோய் - பொருந்திய, வனம் முலை - அழகிய ஸ்தனங்களையுடைய, எண் இரண்டாயிரம் - பதினாறாயிரவராகிய, மாதர் தங்கள் - கோபிகாஸ்த்ரீகளுடைய, இடம் தோறும் - இடங்களிலெல்லாம், கோலம் வேறு எழில் ஆய் - வெவ்வேறு அழகிய வுருவங்களாய், நின்று இருந்தது - நிலைபெற்றிருந்தது, எவ்வண்ணம் - எவ்விதம். எ-று.

நாரதபகவான், கண்ணபிரான் நரகாசுரனைச் சம்மரித்து கொண்டுவந்த பதினாறாயிரம் பெண்களையும் ஒரே முகூர்த்தத்தில், மணமுடித்ததைக் கேள்விப்பட்டு, கண்ணபிரான் அவர்கள் எல்லாருடனும் செய்யும் திருவிளையாடல்களைத் தரிசிக்கவேண்டுமென்று, அவர்களுடைய வீடுகள் தோறுஞ்சென்று, அந்தந்த வீடுகளில் கிருஷ்ணபகவான், ஒவ்வொரு திருவுருக்கொண்டு திருவிளையாடல் செய்தருளுவதைச் சேவித்து மிகவும் வியந்து துதித்து மனமகிழ்ந்தார் என்பது பாகவதகதை.

௬எ. பாவிக்கொணாதபெருமாள்விநோதம்பகருமதோ
வாவிக்குணாரதனாரதியாயொருமன்னவன்றன்
ஆவிக்குலக்கொடியாய்நெடுங்காலத்தழிவிலின்பம்
மேவிக்குடும்பத்திடும்பையெல்லாமெய்திவிட்டனனே.

(இ-ள்.) பாவிக்க ஒண்ணாத - நினைக்கக்கூடாத, பெருமாள் - நம்பெருமாளது, விநோதம் - திருவிளையாடல், பகருமதோ - ஒருவரால் சொல்லத்தகுவதோ, (அந்தத்திருவிளையாடலால்) வாவிக்குள் - ஒருதடாகத்தில், நாரதன் - நாரதமுனிவன், நாரதி ஆய் - நாரதியென்னும் பெண்ணாகி, ஒரு மன்னவன் தன் - ஒரு அரசனது, ஆவி - உயிர்போன்ற, குலம் - சிறந்த, கொடி ஆய் - கொடிபோலும் மனைவியாகி, நெடுகாலத்து - அநேக நாளளவும், அழிவு இல் - கெடுதலில்லாத, இன்பம் - சுகத்தை, மேவி - பொருந்தி, குடும்பத்து இடும்பை எல்லாம் - குடும்பத்துன்பங்களை யெல்லாம், எய்திவிட்டனன் - அடைந்து விட்டான். எ-று.

ஸ்ரீ கண்ணபிரான் அஷ்டமகிஷிகளுடன், பதினாறாயிரம் கோபிகாஸ்திரீகளையும் மணஞ்செய்து வாழுந் திருவிளையாடலை நாரதர் கண்டு, தான் நித்திய பிரமசாரியென்று அகங்கரிக்க, பகவான் அம்முனிவருக்கு ஸ்திரீஜன்மம் வருவித்து குடும்பத்தின் சுகதுக்கங்களை அனுபவிக்கச்செய்தனர்.

௬அ. தண்டுளவம்புனைதாரரங்காவைவர்தையலுக்கு
வண்டுகிலொன்றவைக்கண்ணுற்றபோதுதன்மன்னர்முன்னே
கண்டுளிசோரத்தொழுதுநின்பேர்கட்டுரைத்தபின்னை
ஒண்டுகில்கோடிகுவிந்ததெம்மாயமுராந்துரிந்தே.

(இ-ள்.) தண் - குளிர்ந்த, துளவம் - திருத்துழாயினால், புனை- தொடுக்கப்பட்ட, தார் - மாலையையுடைய, அரங்கா - திருவரங் கனே, அவைக்கண் - துரியோதனன் சபையிலே, உற்றபோது- துகி லுரியப்பட்டபோது, தன் மன்னர் முன்னே - தன் கணவராகிய பாண்டவர்க் கெதிரில், கண் துளி சோர - கண்ணீர்த் துளிகள் சிந்த, தொழுது - வணங்கி, நின் பேர் - உன் திருநாமத்தை, கட்டு ரைத்த பின்னை - திடமாய் உச்சரித்த பிறகு, ஐவர் தையலுக்கு- பாண்டவர் மனைவியாகிய திரௌபதிக்கு, வள் - வண்மையாகிய, துகில் ஒன்று - ஆடை யொன்றே, ஒள்-ஒட்பமாகிய, கோடி துகில்- பல ஆடைகளாக, உரிந்து உரிந்து - துச்சாதனனால் உரியப்பட்டு உரியப்பட்டு, குவிந்தது-குவியலானது, எம்மாயம் - என்ன மாயம்.

சுகூ. இசையளவிட்டவரங்கேசரைவர்தம்மேவலிற்போய்
வசையளவிட்டமகிபன்முன்னேவளருந்திரடோள்
திசையளவிட்டனபாரளவிட்டனசேவடிவான்
மிசையளவிட்டனபொன்முடிமேலென்விளம்புவதே.

(இ-ள்.) இசை - கீர்த்தியானது, அளவு இட்ட - எல்லாவுல கங்களினும் வியாபித்த, அரங்கேசர் - திருவரங்க நாதர், ஐவர் தம்- பாண்டவரைவருடைய, ஏவலின் - ஏவலினால், போய் - தூதுசெ ன்று, வசை - வசைச்சொற்களை, அளவு இட்ட - கணக்கிட்டுச் சொ ன்ன, மகிபன் முன்னே - துரியோதனன் முன்பு, வளரும் - விர்த்தி யடைந்த, திரள் தோள் - திரண்ட புயங்கள், திசை - திக்குகளை, அளவு இட்டன - அளந்தன, (பொருந்தின.) சேவடி - சிவந்த திருவடிகள், பார் அளவிட்டன - பூமியைப் பொருந்தின, பொன் முடி - அழகிய திருமுடிகள், மிசை - மேலுள்ள, வான் - விண்ணு லகை, அளவிட்டன - பொருந்தின, மேல் - அதற்கு மேலாக, என் விளம்புவது - நான் யாது சொல்லுவது. எ-று.

இசையளவிட்ட, வசையளவிட்ட என்பவற்றிற்கு முறையே இசைக்கு எல்லையான, வசைக்கு எல்லையான என்றுரைப்பினுமாம். பொன் முடி - பொன்னினாற் செய்த கிரீடம் எனினுமமையும்.

எO. மாயிருஞாயிறுபாரதப்போரின்மறையவன்கண்
பாயிருணீதந்ததென்னகண்மாயம்பவளநெற்றிச்
சேயுயர்மாமதில்சூழரங்கேசதிரண்டுதித்த
ஆயிரங்கோடிதிவாகரன்போலொளிராழிகொண்டே.

(இ-ள்.) பவளம் - பவளத்தாற் செய்யப்பட்ட, நெற்றி - மே லிடத்தையுடைய, சேய் உயர் - மிகவுயர்ந்த, மாமதில் சூழ் - பெ ரியமதிலால் சூழப்பட்ட, அரங்கேச - திருவரங்க நாதனே, பாரதப் போரில் - பாரதயுத்தத்தில், திரண்டு உதித்த - ஒருமித்துத் தோன் றின, ஆயிரம் கோடி திவாகரர் போல் - ஆயிரங்கோடி சூரியர்கள் போல, ஒளிர் - பிரகாசிக்கின்ற, ஆழிகொண்டு - சக்கரத்தைக்

கொண்டு, மாஇரு ஞாயிறு - மிகப்பெரிய சூரியன், மறைய - மறையும்படி, அங்கண் - அவ்விடத்து, பாய் இருள் - பரவிய அந்தகாரத்தை, நீ தந்தது-நீ உண்டாக்கினது, என்ன கண் மாயம்-என்ன கண்கட்டு வித்தை. எ-று.

கோடி - என்பதற்குப் பல எனப்பொருளுரைப்பினுமாம், சேயுயர் என்பதற்கு நெடுந்தூரம் உயர்ந்து தோன்றுகிற என்றலுமொன்று. திவாகரன் - பகலை யுண்டாக்குவோன். அர்ச்சுனன்-பதின்மூன்றாநாட் போரில் தன் மகனாகிய அபிமன்யுவைக்கொன்ற ஜயத்திரதனை நாளை அஸ்தமிக்கு முன்னே கொல்லுவேன் என்று பிரதிக்கினை செய்ய, அதற்கு இடமில்லாதபடி, ஒரு புருஷப்பிரமாண மல்லாமலே நெடியனான அவனை ஒரு புருஷப்பிரமாணமாச பள்ளத்தில் நிறுத்தி, நீங்கள் இத்தனை நாழிகை காத்துக்கொள்ளுங்கள் நாங்களித்தனை நாழிகை காத்துக்கொள்ளுகிறோம் என்று பகல் முப்பது நாழிகையும் அவனுக்கு ஒரு கெடுதியுண்டாகாதபடி, காத்துக்கொண்டுநின்ற அரசர்க்கெதிரில் கண்ணபிரான், பகல் முப்பது நாழிகையும் கழிந்ததாகத் தோற்றும்படி தன் திருவாழியைக்கொண்டு சூரியனை மறைத்தலும் சூரியன் அஸ்தமித்தானென்று அவனைப்பள்ளத்தினின்றும் அவர்கள் மேலெடுத்து நிறுத்தினவளவிலே இருளையுண்டாக்கின சக்ரப்படையை பேர நிறுத்தியருள ஜயத்திரதனுடைய தலை அற்றுச்சாகும்படி அர்ச்சுனன் அம்பெய்தனன் என்பது கதை.

எக. நெட்டரவின்பெருமூச்செழவீசிநெருப்பில்வெந்து
பட்டகடம்புந்தழைத்ததுமீளப்பசுந்துளவின்
மட்டவிழ்தொங்கலரங்கர்பொற்றாள்படவாளிவெந்தீச்
சுட்டகருங்கட்டையும்பெற்றதாருயிர்சொல்வதென்னே.

(இ-ள்.) பசுதுளவின்-பசிய திருத்துழாயினால் சமைக்கப்பட்ட, மட்டு அவிழ் - வாசனையோடு விரிகிற, தொங்கல்-மாலையையணிந்த, அரங்கர் - திருவரங்கரது, பொன்தாள்பட - அழகாகிய திருவடி தன் மீதுபடுதலால், நெடு அரவின் - நீண்டகாளியன் என்னும் பாம்பினது, பெருமூச்சு எழ - நெட்டுயிர்ப்புண்டாக, வீசும் - (அதனால்) எறியப்படுகிற, நெருப்பின் - விஷாக்கினியால், வெந்து பட்ட - எரிந்துலர்ந்த, கடம்பும்-கடப்ப மரமும், மீளதழைத்தது-மீளவும் செழித்தது; வாளி - பாணத்தினாலுண்டாகிய, வெம்தீ - கொடிய நெருப்பினால், சுட்ட - எரிக்கப்பட்ட, கரு கட்டையும்-கரியகட்டையும், அரு உயிர்பெற்றது - (மீளவும்) அரிய உயிரையடைந்தது, (ஆதலால்) சொல்வது என் - (அந்தத்திருவடியின் பெருமையைப்பற்றி யாம்) சொல்லக்கிடந்தது யாது. எ-று.

ஸ்ரீ க்ருஷ்ணபகவானனவர் யமுனையாற்றின் மடுவிலிருந்து கொண்டு அதிலுள்ள நீர் முழுதும் தனது விஷாக்நியால் கொதிக்கச்செய்து அந்த நீரானது ஒருவர்க்கும் உண்ணவொண்ணாதபடி செய்தகாளியன் என்னும் கொடிய பாம்பைச்சிக்ஷிக்கத் திருவுளம் பற்றி, அந்தமடுவின் சமீபத்திலுள்ள ஒரு கடப்பமரத்தின்மேலேறி அந்தமடுவில் குதித்தபோது, அந்தப்பாம்பின் விஷாக்நியால் எரிக்கப் பட்ட அந்த மரம் இவரது திருவடி பட்டவளவிலே தழைத்த தென் பதும், அபிமந்யுவின் மனைவியாகிய உத்தரைவயிற்றுக் கருவானது பிறக்கும்போது கரிக்கட்டையாயிருந்து இவர் திருவடி படுதலும் உயிர் பெற்றதென்பதும் பூர்வசரித்திரம்.

எஉ. தாளாற்சகங்கொண்டதாரரங்காபண்டுசாந்திபன்சொல்
கேளாக்கடல்புக்கசேயினைமீட்டதுங்கேதமுடன்
மாளாப்பதம்புக்கமைந்தரைமீட்டதுமாறலவே
மீளாப்பதம்புக்கபாலனைநீயன்றுமீட்டதற்கே.

(இ-ள்.) தாளால் - திருவடியால், சகம்கொண்ட-உலகங்களை யளந்து கவர்ந்துகொண்ட, தார் - திருத்துழாய் மாலையை யணிந்த, அரங்கா - திருவரங்கனே, நீ - நீ, பண்டு - பூர்வத்தில், சாந்திபன் சொல் - சாந்தீபனது சொல்லை, கேளா - கேட்டு, கடல் புக்க- சமுத்திரத்தில் மூழ்கியிறந்த, சேயினை - (அவனுடைய) புதல்வனை, மீட்டதும் - மீட்டுக்கொடுத்ததும், கேதமுடன் - துன்பத்தோடு, மாளாபதம் புக்க - ஒருவரும் புகக்கூடாத பாதாளலோகத்திற் பிர வேசித்த, மைந்தரை - தேவகிவயிற்றிற் சேர்ந்தவராகிய) அறுவரை யும், மீட்டதும் - மீட்டுக் கொடுத்ததும், அன்று - அந்நாளில், மீளா- (அடைந்தவர்) மீள வொண்ணாத, பதம் - பரமபதத்தை, புக்க - சேர்ந்த, பாலனை-(வைதிகனுடைய) புதல்வனை, மீட்டதற்கு - மீட் டுக் கொடுத்ததற்கு, மாறுஅல்ல - நிகரல்ல. எ-று.

ஸ்ரீ க்ருஷ்ணபகவான் சாந்தீபிநி யென்னும் வேதியனிடத்தில் எல்லா நூல்களையும் கற்றறிந்த பிறகு குருதக்ஷிணை சமர்ப்பிக்க யோ சித்ததையும் இவரது பேராற்றலையும் அறிந்த அந்த ஆசாரியன், பன் னிரண்டு வருடங்களுக்கு முன்னே ப்ரபாஸதீர்த்த கட்டத்தில் கட லின் முழுகி யிறந்த தன் புத்திரனைக் கொண்டுவந்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்ள, ஸ்ரீ க்ருஷ்ணபகவான் அப்படியே யாகட்டுமெ ன்று, அந்தப் புத்திரனைக் கொண்டுபோய்ச் சங்கினது உருவங்கொ ண்டு கடலில் வாழ்ந்திருந்த பஞ்சஜநன் என்னும் அசுரனைக்கொன்று, யமலோகத்துக் கெழுந்தருளி, அவ்விடத்தில் யாதநா சரீரத்தோ டிருந்த அந்தப் புத்திரனைப் பூர்வசரீரத்தோடு கொண்டுவந்து கொடுத் ததும், ஸ்ரீ தேவகீதேவியானவள், கம்ஸனாற் கொல்லப்பட்ட

தன்னுடைய புத்திரர் அறுவரையும் பார்க்க விரும்பினபோது, ஸ்ரீ க்ருஷ்ணபகவான் தாயின் வேண்டுகோளுக் கிணங்கி பாதாள லோகத்திலுள்ள பலிச்சக்கரவர்த்தியின் சபைக்குப்போய் அங்குள்ள தனது யோகமஹிமையால் தனக்குமுன் தேவகி வயிற்றில் சேர்க்கப்பட்டவர்களாகிய அறுவரையும் கொண்டுவந்து கொடுத்தருளின தும், மீளாவுலகமாகிய ஸ்ரீ வைகுந்தம் சென்ற அந்தணனது பத்துப் பிள்ளைகளையும் கொண்டுவந்து கொடுத்ததினும் அருமையல்லவென்பது கருத்து. மீளாப்பதம் புக்கபாலரை மீட்ட செய்தி திருவேங்கடமாலை உகூ-ஆம் பாட்டிற்காண்க.

எரு. பொருங்கேதனப்படைமன்னரைமாய்த்துப்புவிமடந்தை
பெருங்கேதநீக்கிநடந்ததுமீளப்பிறங்குபுள்ளின்
வருங்கேசவன்சக்ரமாயோனரங்கன்வரவிடுத்த
கருங்கேசமொன்றுதன்னிச்சையிலேசெய்தகாரியமே.

(இ-ள்.) பொரும் - போர்செய்கிற, கேதநம்படை - துவசத்தைத் தாங்கிய சேனையையுடைய, மன்னரை - வேந்தர்களை, மாய்த்து - கொன்று, புவிமடந்தை - பூதேவியின், பெருகேதம் - பெருந் துன்பத்தை, நீக்கி - ஒழித்து, மீள நடந்தது - மீளவும் சென்றது, பிறங்கு - பிரகாசிக்கிற, புள்ளின் வரும் - பெரிய திருவடியின் மீது எழுந்தருளுகிற, கேசவன் - கேசவன், சக்ரமாயோன் - திருவாழியையுடைய மாயவன், அரங்கன் - திருவரங்கன், (அவன்) வரவிடுத்த - வரும்படி யனுப்பின, கருகேசம் ஒன்று - கரிய மயிரொன்று, தன் இச்சையிலே செய்த காரியமே - தன் விருப்பத்தாற் செய்த காரியமே யாம். எ-று.

பூமிதேவியானவள் தன் மீதிருக்கிற அசுரராலுண்டாகிய பெரும் பாரத்தைப் பொறுக்கமாட்டாமல் துன்பமடைந்து, பிரமன் முதலிய தேவர்களை முன்னிட்டுத் திருமாலைப் பிரார்த்திக்க, அவ்விறைவர் தமது திருமேனியில் வெண்மை கருமைகளாய்க் காணப்படுகிற ஒளிகளை யெடுத்து என்னுடைய இந்த ஒளிகள் பூமியில் தேவகியின் திருவயிற்றில் அவதரித்து பூபாரத்தை யொழிக்கக்கடவன என்று நியமித்தனுப்ப, அந்த ஒளிகளே ஸ்ரீ ராம க்ருஷ்ணர்களாகத் திருவவதரித்துக் கொடிய அசுரரையும் வேந்தரையும் நாசம்பண்ணிப் பூபாரத்தை யொழித்தன என்பது பூர்வசரித்திரம்.

எச. அராவணையிற்றுயிறென்னரங்காமறையாயும்வண்ணம்
பராசரன்மாமகனுகியநீபண்டுபாரதப்போர்
பொராவிழுதூற்றுவர்சேனையெல்லாம்புனற்கங்கைவெள்ளத்
தராதலமேல்வரக்காட்டியவாதந்தைசந்திக்கவே.

(இ-ள்.) அரா அணையில் - சர்ப்ப சயநத்தில், துயில் - கண் வளர்ந்தருளுகிற, தென் அரங்கா - தென்னரங்கனே, மறை ஆயும் வண்ணம் - வேதங்களை ஆராயும்படி, பராசரன் - பராசர முனிவனுக்கு, மாமகன் ஆகிய நீ - பெருமை பொருந்திய புதல்வனாகிய வியாசமுனிவனாக அவதரித்தருளின நீ, பண்டு - முன்னே, பாரதப் போர்-பாரதயுத்தத்தில், பொரா-சண்டை செய்து, விழும்-மடிந்து விழுந்த, நூற்றுவர் சேனையெல்லாம்-(துரியோதநன் முதலிய) நூற்றுவரது சேனைமுழுதும், தந்தை சந்திக்க - (அவர்களுக்குத்) தந்தையாகிய திருதராஷ்டிரன் சந்தித்து நோக்கும்படி, கங்கை புனல் வெள்ளம் - கங்காநதியின் நீர்ப்பெருக்கையுடைய, தராதலம் மேல் வர - பூமியின்மீது வரும்படி, காட்டிய ஆறு - காட்டின விதம் (என்ன வியப்பு.) எ-று.

பாரதயுத்தத்தில் துரியோதநன் முதலியோர் சேனைகளுடன் மடிந்த பிறகு, புத்ரசோகத்தையுடைய திருதராஷ்டிரன், தன் மனைவியாகிய காந்தாரியோடும், குந்தியோடும், பாண்டவர்களோடும், அந்த யுத்தத்திலிறந்த அரசருடைய மனைவியரோடும் வனத்தை யடைந்து ஆசிரமவாசம் செய்திருந்த காலத்தில், ஒருநாள் ஸ்ரீ வேதவியாசபகவான் வேறுசில மஹர்ஷிகளோடு எழுந்தருள, தருமர் அவருக்கு வந்தன வழிபாடுகள் செய்த பிறகு, திருதராஷ்டிரனும் காந்தாரி முதலியோரும் தமது புத்திரமித்திராதியர் மடிந்ததைக் குறித்துத் துக்கித்து அவர்களை மறுபடியும் ஒருதரம் பார்க்கும்படி காட்டியருள வேண்டுமென்று பராசர பகவானைப் பிரார்த்திக்க, அவர் அப்படியே அன்று சூரியன் அஸ்தமித்த பிறகு, யுத்தத்திலிறந்த அரசரெல்லாரையும் அவரவர் சேனைகளோடும் கங்கையாற்றிலிருந்து எழுந்துவரக் காட்டியருள, அன்றிராமுழுதும் அவரவர்கள் தத்தம் புத்ரமித்ராதியரைக் கண்டு கூடிமகிழ்ந்து, விடியற் காலத்தில் கங்காநதியிலிருந்து வந்தவர்களெல்லாரும் அந்த நதியில் மூழ்கி மறைந்து போனார்கள் என்பது கதை,

எடு. தருமந்தவிர்ந்துபொறைகெட்டுச் சத்தியஞ்சாய்ந்துதயை
தெருமந்துதன்பூசனைமுழுதுஞ்சிதையக்கலியே
பொருமந்தக்காலக்கடையினிலெம்பொன்னரங்கனல்லால்
அருமந்தகற்கியென்றாரேயவைநிலையாக்குவரே.

(இ-ள்.) தருமம் தவிர்ந்து - தருமம் விலகி, பொறை கெட்டு - பொறுமை யழிந்து, சத்தியம் சாய்ந்து - சத்தியங் குறைந்து, தயை தெருமந்து - கிருபையானது நிலைமாறி, தன் பூசனை முழுதும் - தனது திருவாராதந மூழுமையும், சிதைய - அழிந்தொழிய, கலியே பொரும் - பாவமே (தருமமுதலியவற்றைப்) பொருது வெல்லும்

படியான, அந்தக் காலம் - அந்தக் காலத்தின், கடையினில் - முடிவில், எம் - எமது, பொன் அரங்கன் அல்லால் - பொன்னரங்கனே யன்றி, அருமந்த - அருமருந்து போன்ற, கற்கி என்று - கற்கியென்று (அவதரித்து), அவை - அந்தத்தருமமுதலிய வற்றை, நிலை ஆக்குவர் - நிலைக்கச் செய்வோர், ஆரோ - வேறுயாவரோ, (ஒருவருமில்லை.) எ-து.

கலி - கலிகாலசாம்ராஜ்யம் எனினுமாம். அந்த காலம் என்றது அந்தக் கலியுகம் எனினுமமையும். பொன் அரங்கன் - பொன் போலருமையாகிய அரங்கன், அன்றி அழகாகிய திருவரங்க க்ஷேத்ரத்தையுடையவன். கற்கி - குதிரை.

எசு. தெள்ளும்புனற்பொன்னிநன்னீரரங்கர் சிலாகிக்குமா
றெள்ளுங்கரந்துறையெண்ணெயும்போலெண்ணில்கோடியண்டத்
துள்ளும்புறம்புமொழியாதுநின்றுமுகங்கடோறும்
கொள்ளுந்திருவுருவெல்லாமவரறிகோலங்களே.

(இ-ள்.) தெள்ளும் - தெளிவாகிய, புனல் - நீரையுடைய, பொன்னி - காவிரியாறு சூழ்ந்த, நல் நீர் - நல்ல நீர்மை யமைந்த, அரங்கர் - திருவரங்கத்தையுடையவர், சிலாகிக்கும் ஆறு - யாவரும் துதிக்கும்படி, எண் இல் - அளவில்லாத, கோடி அண்டத்து - பல அண்டங்களின், உள்ளும் புறம்பும் - அகத்திலும் புறத்திலும், எள்ளும்-திலத்தையும், கரந்து உறை-(அதற்குள்ளே) மறைந்து நிறைந்திருக்கிற, எண்ணெயும்போல் - தைலத்தையும் நிகர்க்க, ஒழியாது நின்றும் - நீங்காது நிறைந்து நின்றும், உகங்கள் தொறும் - யுகங்கள் தோறும், கொள்ளும் - எடுக்கிற, திருவுரு எல்லாம் - திருவவதாரங்களெல்லாம், அவர் அறி கோலங்களே - அவர் தமது இச்சாநுரூபமாக எடுத்த திருவவதாரங்களே யாகும். எ-று.

மொழியாது எனப் பிரித்து ஒருவராலும் சொல்ல வொண்ணாதபடி என்றுரைப்பினுமமையும். கோடி என்பது இவ்விடத்துப்பல என்னும் பொருளைத்தந்து நின்றது. நின்றும் என்றது நிற்றலேயன்றி என்றபடி.

எஎ. உம்பர்க்கரியபெருமாளரங்கர்தம்முண்மையெல்லாம்
இம்பர்க்குலகில்வெளியிட்டவேசரணில்லையென்றோர்
கும்பக்கடகயங்கூப்பிடச்சென்றதுங்கோளரியாய்த்
தம்பத்துதித்ததுந்தாழிக்குவீட்டினைத்தந்ததுமே.

(இ-ள்.) கும்பம் - மஸ்தகத்தையுடைய, ஓர் கடம் கயம்-ஒப்பற்ற மதயானையாகிய கஜேந்திராழ்வான், சரண் இல்லையென்று கூப்பிட - வேறுபுகலில்லை யென்று அழைக்க, சென்றதும் - (அதற்கெதிரே) போனதும், கோள் அரி ஆய் - வலியுள்ள நரசிங்கமாகி,

தம்பத்து உதித்ததும் - பொற்றூணில் திருவவதரித்ததும், தாழிக்கு - (ததிபாண்டனுடைய தயிர்த்) தாழிக்கு, வீட்டினை தந்ததும் - மோக்ஷத்தைக் கொடுத்ததும் ஆகிய இச்செயல்களே, உம்பர்க்கு அரிய - தேவர்களுக்கும் அரியராகிய, பெருமாள் அரங்கர் தம் - பெரிய பெருமாளுடைய, உண்மை எல்லாம் - மெய்யாகிய ரஹஸ்யங்களெல்லாவற்றையும், இம்பர்க்கு உலகில் - இவ்வுலகிலுள்ளவர்களுக்கு, வெளியிட்ட - வெளிப்படுத்தின. எ-று.

உம்பர்க்கரிய பெருமாளாயினும் கும்பக்கட கயம் கூப்பிடச் சென்றது முதலியவற்றால் தம்மடியார்க்கெளியன் என்பது விளக்குகின்றது. உண்மை - உளதாந்தன்மை. கயங்கூப்பிடச் சென்றது இறைவனது நிரதிசய சௌலப்ய ஜகத்காரணத்வத்தையும், கோளரியாய்த் தம்பத்துதித்தது சர்வாந்தர்யாமித்வத்தையும் சர்வவியாபகத்வத்தையும், தாழிக்கு வீட்டினைத்தந்தது அகடிதகடநா சாமர்த்தியத்தையும் விளக்கி நின்றன. தாழி - மிடா.

எஅ. பொங்கரவென்பதுமெல்லணையூர்திவெம்புள்ளரசு
பங்கயமின்னொடுபார்மகடேவிபடைப்பவன்சேய்
கிங்கரர்விண்ணவர்சாதகனாடிறைகேழலொன்றாய்
அங்கணெடும்புவியெல்லாமிடந்தவரங்கருக்கே.

(இ-ள்.) கேழல் ஒன்று ஆய் - ஒப்பற்றவராஹமாகி, அம் கண் - அழகிய இடத்தையுடைய, நெடுபுவி எல்லாம் - நெடியபூமி முழுதும், இடந்த - கொம்பினால் குத்தி யெடுத்த, அரங்கருக்கு - திருவரங்கருக்கு, பொங்கு அரவு என்பது - விளங்குகின்ற ஆதிசேஷன் என்று சொல்லப்படுவது, மெல் அணை - மென்மையாகிய சயனமாகும், வெம் - க்ரூரமான, புள் அரசு - பக்ஷிராஜனாகிய பெரிய திருவடி, ஊர்தி - வாஹனமாகும், பங்கயம் - தாமரைமலரில் வாழ்கிற, மின்னொடும் - மின் கொடிபோல் வாளாகிய பெரிய பிராட்டியாரோடும், பார் மகள் - பூமி பிராட்டியாரும், தேவி - மனைவியராவர், படைப்பவன் - உலகத்தைப் படைப்பவனாகிய பிரமன், சேய் - புதல்வனாவன், விண்ணவர் - தேவர்கள், கிங்கரர் - கைங்கரியம் செய்வோராவர், சாதகன் - பூதகணங்களையுடையவனாகிய உருத்திரன், ஆடு இறை - கூத்தாடியாவன். எ-று.

பெரிய திருவடியை வெம்புள் என்றார் பகைவர்மீது கொடுங்கோபமுள்ளவராதலால். பகைவர் - இறைவனடியார்க்கு விரோதஞ் செய்வோர். சாதகனாடிறை என்று பாடமாயின், சாது அகம் நாடு எனப்பிரித்து சாதுக்களுக்கிடமாயிருக்கிற பரமபதநாடு என்றுரைக்க. இப்பொருட்கு இறை தங்குமிடம் எனக்கொள்க. சாதகம் - பூதகணம்.

எகூ. சிங்காதனம்பொற்கிரிதிருமஞ்சனந்தெய்வவிண்ணீர்
கொங்கார்தொடையுடுத்தாமஞ்சுடருடைக்கோள்விளக்கம்
பொங்காழிமண்டிருப்போனகமாக்கினர்புண்டரிகை
தங்காதலர்நம்பெருமாளரங்கர்தமக்குமுன்னே.

(இ-ள்.) புண்டரிகை தம்காதலர் - கமலாஸனையாகிய பெரிய பிராட்டியார்க்கு நாயகர், நம்பெருமாள் - நம்பெருமாள், அரங்கர் - திருவரங்கர், (அவர்) முன்னே - பூர்வகாலத்தில், தமக்கு - தமக்கு, பொன் கிரி - பொன்மலையாகிய மேருவை, சிங்காதநம் - சிங்காதநமாகவும், தெய்வம் விண் நீர் - தெய்வலோகத்திலிருக்கிற கங்கையை, திருமஞ்சநம் - திருமஞ்சந தீர்த்தமாகவும், உடு - நக்ஷத்ரவரிசைகளை, தாமம் - மாலையாகவும், சுடர் உடைகோள் - ஒளியையுடைய கிரகங்களாகிய சூரிய சந்திரர்களை, விளக்கம் - விளக்காகவும், பொங்கு ஆழி மண் - கொதிக்கிற கடல் சூழ்ந்த பூமியை, திருபோனகம் - இனிய வுணவாகவும், ஆக்கினர் - செய்து கொண்டார். எ-று.

வேறு கிரகங்களினும் சுடரை மிகுதியாயுடையவாராதலால் சூரிய சந்திரர் சுடருடைக்கோள் எனப்பட்டார். ஆழி மண் திருப்போனகம் என்பதற்கு கடலும் மண்ணும் இனிமையாகிய பருகப்படுமுணவும் விழுங்கப்படு முணவும் என்றுரைப்பினுமமையும்.

அ0. தேமாமலர்க்கயஞ்சூழ்கோயின்மேவுந்திருவரங்கர்
தாமாதரித்ததிருத்தேவிமாரிற்றரங்கவுடைப்
பூமாதுநாளும்புறத்தேசுமந்துபுரக்குமலர்
மாமாதுசெல்வங்கொடுத்தேயுயிர்களைவாழ்விக்குமே.

(இ-ள்.) தேம் - வாசனையுள்ள, மா - அழகாகிய, மலர்கயம் - மலர்களையுடைய தடாகங்கள், சூழ் - சூழ்ந்த, கோயில் மேவும் - திருவரங்கம் பெரிய கோயிலிலெழுந்தருளியிருக்கிற, திருவரங்கர் - திருவரங்கநாதர், ஆதரித்த - அன்பு செய்த, திருதேவிமாரில் - திருத்தேவிமார் இருவருள்ளும், தரங்கம் உடை - கடலாகிய ஆடையைத் தரித்த, பூமாது - பூமிதேவியானவள், நாளும் - எக்காலமும், உயிர்களை - சீவராசிகளை, புறத்தே சுமந்து புரக்கும் - தன்னுடம்பின் மீது தாங்கிரக்ஷிப்பாள், மலர் - தாமரைமலரில் தோன்றிய, மாமாது - திருமகள், செல்வம் கொடுத்து வாழ்விக்கும் - (அவ்வுயிர்களுக்கு வேண்டிய) ஐசுவரியங்களைக் கொடுத்து வாழ்விப்பாள். எ-று.

புறத்தே எனப்பாடமோதி முதுகின் மீதே என்றுரைத்தலுமுண்டு.

அக. நம்பெருமாளெழுத்தெட்டின்பெருமைநவிலுமதோ
சம்பரன்மாயப்புரோகிதர்சூழ்வினைதாரணிவாள்
வெம்படைமாசுணமாமதவேழம்விடந்தழல்கால்
அம்பரமேமுதலானவைபாலனுக்கஞ்சினவே.

(இ-ள்.) சம்பரன் மாயம் - சம்பரன் என்னும் அசுரன் செய்த மாயையும், புரோகிதர் சூழ்வினை - புரோஹிதர்கள் ஆலோசித்துப் பண்ணின கொடிய செயல்களும், தார் அணி - வெற்றிமாலையைத் தரித்த, வாள் வெம்படை - வாள் முதலிய கொடிய ஆயுதங்களும், மாசுணம் - பெரும்பாம்புகளும், மாமதம் வேழம் - பெரிய மதயானைகளும், விடம் - நஞ்சும், தழல் - நெருப்பும், கால் - காற்றும், அம்பரம் - கடலும், முதல் ஆனவை - முதலானவைகள், பாலனுக்கு - ப்ரஹ்லாதன் என்னும் சிறுவனுக்கு, அஞ்சின - பயந்து ஒதுங்கிப் போயின, (ஆதலால்) நம்பெருமாள் - திருவரங்கநாதனது, எழுத்து எட்டின் பெருமை - திரு அஷ்டாக்ஷரத்தின் ஏற்றம், நவிலுமதோ - (எம்போலியரால்) சொல்லப்படுந் தன்மையதோ. எ-று.

புரோஹிதர் - இனிவரும் நன்மை தீமைகளை முன்னுணர்ந்து சொல்வோர். ஹிரண்ய கசிபுவின் சொல்லைக் கேட்டு ப்ரஹ்லாதனைக் கொல்லும் பொருட்டு சம்பராசுரன் செய்த மாயைகள் யாவையும் ஸ்ரீமந்நாராயணனது கட்டளையால் திருவாழியாழ்வான் அவனைக்காக்கும் பொருட்டு அவ்விடத் தெழுந்தருளி யெரித்து நீறு செய்தமையால் சம்பரன் மாயமும், கண்டோர் அஞ்சும்படியாக புரோஹிதர் படைத்தேவின கிருத்தியை வந்து ஒன்றுஞ் செய்யமாட்டாமல் மீண்டு சென்று அந்தப் புரோஹிதரையே யெரிக்கத் தொடங்கினமையால் புரோஹிதர் சூழ்வினையும், அவ்விடத்திருந்த அசுரர் யாவரும் ஒருமித்து வாள் முதலிய பலவகையான ஆயுதங்களை யேவியும் அவற்றால் அவர் ஒரு துன்பமுமடையாமல் விளங்கினமையால் தாரணிவாள் வெம்படையும், தக்ஷகன் முதலிய மஹாநாகங்கள் விஷத்தை யுமிழ்ந்து கொண்டுவந்து அவருடைய திருமேனி முழுதினுங் கடிக்கவும் அந்தக் கடியினால் அவர் திருமேனிமேலுள்ள தோலில் சிறிதும் காயமுண்டாகாமையால் மாசுணமும், திக்குயானைகள் அவரைப் பூமியில் தள்ளிக் கொம்புகளால் குத்த அந்தக் கொம்புகள் முறிந்து பொடியாய்ப் போனமையால் மாமதவேழமும், சமையற்காரர் உணவு வகைகளில் கலந்து தந்த நஞ்சு அநந்தனது திருநாமோச்சாரண மஹிமையால் உண்ணும் பதார்த்த கோடியிலே கலந்து ஜீர்ணித்துப் போனமையால் விடமும், அசுரர்கள் நெருப்பை வளர்த்து அதிலே அவரை மூடிவைத்து சுவாலிக்கப் பண்ணியும் அது அவரைச் சிறிதும் சுடாமல் சீதளமாயிருந்தமையால் தழலும், ஸம்சோஷகன் என்கிற வாயு அதி சீதளமும் அதிக உக்ரமுமுள்ளவனாகிச் சகிக்கக்கூடாத வகையாக ப்ரஹ்லாதருடைய திருமேனிக்குள்ளே பிரவேசிக்க அந்த ஸம்சோஷகனைப் ப்ரஹ்லாதருடைய இருதயத்தி லெழுந்தருளியிருந்த ஸ்ரீமதுசூதநன் விழுங்கி ஒரு க்ஷணி

கத்தில் அழித்ததனால் காலும், தைத்தியர் நாகபாசத்தால் கட்டிக் கடலிலேபோட அவர் மிதந்து கொண்டுவந்து கரையேறினமையால் அம்பரமும் அஞ்சின எனக்கொள்க. முதலானவை யென்றது இவை யேயன்றி மலை முதலிய வற்றை.

அ௨. அத்தாவரங்கத்தமர்ந்தவனேயெழுத்தாறிரண்டின்
வித்தாயநின்னருள்கொண்டல்லவோவிளைவொன்றறியா
உத்தானபாதன்மகன்சலியாதுலகுள்ளளவும்
எத்தாரகைக்குமுனிவர்க்குமேற்சென்றிருக்கின்றதே.

(இ-ள்.) அத்தா - இறைவனே, அரங்கத்து அமர்ந்தவனே- திருவரங்கத்தி லெழுந்தருளி யிருப்பவனே, விளைவு ஒன்று அறியா- மேல்விளையுஞ் செய்தியைச் சிறிது மறியாத, உத்தான பாதன்மகன்- உத்தான பாதன் மகனாகிய துருவன், சலியாது - சலனமடையாமல், உலகு உள்ள அளவும் - லோகமுள்ளவரைக்கும், எ தாரகைக்கும்- எந்த நக்ஷத்ரத்துக்கும், முனிவர்க்கும் - ருஷிகளுக்கும், மேல் - மேலான இடத்தில், சென்று இருக்கின்றது - போய் வீற்றிருப்பது, எழுத்து ஆறு இரண்டின் - பன்னிரண்டெழுத்தினது, வித்து ஆய- விதையாகிய, நின் அருள்கொண்டு அல்லவோ - உன் கருணையைக் கொண்டல்லவோ. எ-று.

எழுத்தாறிரண்டு என்பதை த்வாதசாக்ஷரி யென்பர். குழந்தைப் பருவத்தையுடையவனாதலால் "விளைவொன்றறியா வுத்தான பாதன் மகன்" என்றார். இவனிருக்கும் பதத்தைத்துருவமண்டலம் என்பர். சுவாயம்புவ மநுவின் புத்ரனாகிய உத்தானபாதன் என்பவனுக்கு சுநீதி யென்னும் மனைவியினிடத்துப் பிறந்த துருவனென்பவன் ஒருநாள் சிங்காதநத்தில் வீற்றிருந்த தன் தந்தையின் மடியிலே உட்கார்ந் திருந்த தன்மாற்றாந் தாயாகிய சுருசியின் மகனாகிய உத்தமன் என்பவனைப் பார்த்து, தானும் அப்படி யுட்காரவேண்டுமென்று நெருங்கப் போக, அதைக்கண்ட சுருசி, என் வயிற்றில் பிறக்காமல் வேறொருத்தியின் வயிற்றில் பிறந்த நீ இந்தச் சிங்காதநத்திலே யிருக்கத்தக்கவனல்லை, என் மகனே தக்கவன் என்று இழித்துச்சொல்ல, துருவன் அந்த வார்த்தையைப் பொறுக்காமல் தன் தாய் வீட்டிற்குப்போய் அவளுடைய உத்தரவுபெற்று, அந்தப் பட்டணத்துக் கருகிலுள்ள ஒரு உபவநத்திலிருந்த சப்த ரிஷிகளைக்கண்டு, தண்டம் சமர்ப்பித்து அவர்களால் வாசுதேவவிஷயமான ஸ்ரீத்வாதசாக்ஷரிமந்திரத்தை யுபதேசிக்கப் பெற்று, மதுவனத்துக்குப்போய் ஸ்ரீ மஹாவிஷ்ணுவைத் தன் இருதய கமலத்தில் வைத்து இடையறாமல் தியானித்துக்கொண் டிருக்க, எம்பெருமான் அவனது தியானத்துக்குத் திருவுள்ளமுவந்து பிரத்தியக்ஷமாகிக் கிருபைசெய்து வரங்கொடுக்க, அவனது கிருபை

யால் எல்லா லோகங்களுக்கும் மேற்பட்டதும், சகலமான தாரா க்ரஹநக்ஷத்ரங்களுக்கு ஆதாரமாயிருப்பதும்,எல்லாப் பதங்களுக்கும் உயர்ந்ததுமாகிய பெரும்பதமடைந்து, தன் தாயாகிய சுநீதியும் நக்ஷத்ரரூபமாய்த் தனக்கருகிலே பிரகாசித்துக்கொண்டிருக்க, கற்பமுடிவுவரைக்கும் சுகமாக வாழ்ந்திருக்கின்றனன் என்பது பூர்வசரித்திரம்.

அரு. புடைக்குங்குடமுலைப்பூமகளார்தம்பொருட்டுமுந்நீர்
அடைக்கும்பெரியபெருமாளரங்கரவர்கரத்துப்
படைக்குங்கமலமளிக்குமின்னாழிப்படைபடைக்கும்
துடைக்குங்கதைமுத்திமாற்றாதுநல்குஞ்சுரிசங்கமே.

(இ-ள்.) புடைக்கும் - பருத்த, குடம்முலை - குடம்போலுந் தனங்களையுடைய, பூமகளார் பொருட்டு-(ராவணனால் கவரப்பட்ட) சீதாபிராட்டியை மீட்கும் பொருட்டு, முந்நீர் - கடலை, அடைக்கும் - திருவணைகட்டி யடைத்த, பெரிய பெருமாள் அரங்கர் அவர்- பெரிய பெருமாள் என்கிற திருவரங்கராகிய அவரது, கரத்து-திருக்கையில், படைக்கும் கமலம் - தரித்த தாமரைமலர், அளிக்கும்-ரக்ஷிக்கும், மின் - மின்னுகின்ற, ஆழிபடை - சக்ராயுதம், படைக்கும்-சிருஷ்டிக்கும், கதை - கதாயுதம், துடைக்கும் - சங்கரிக்கும், சுரிசங்கம்-சுழித்த சங்கானது, முத்தி - மோக்ஷத்தை, மாற்றாது - கைம்மாறு விரும்பாமல், நல்கும் - கொடுக்கும். எ-று.

பூமகள் - பூமிக்கு மகள், சீதாபிராட்டி பூமியினின்றுத் திருவவதரித்தமையால் இப்பெயர் பெற்றனள். அன்றி தாமரைமலரில்வாழும் மகள் எனினும் பொருந்தும். யோகிகள் எம்பெருமானைத் தியானிக்கும்போது நான்கு புயங்களிலும் சங்க சக்ர கதா கமலங்களைத் தாங்கியிருப்பதாகப் பாவித்துத் தியானித்தல் முறைமையென்று ஸ்ரீ விஷ்ணுபுராண முதலியவற்றிற் கூறப்படுதலால் இவ்வாறு கூறினர்.

அசு. ஞாலத்திகிரிமுதுநீர்த்திகிரிநடாத்துமிந்தக்
காலத்திகிரிமுதலானயாவுங்கடல்கடைந்த
நீலத்திகிரியனையாரரங்கர்நிறைந்தசெங்கைக்
கோலத்திகிரிதலைநாளினிற்கொண்டகோலங்களே.

(இ-ள்.) ஞாலம் திகிரி-பூமியாகிய சக்கரமும், முதுநீர்த் திகிரி-நீர்ச்சக்கரமும், நடாத்தும் - (இவற்றை) நடத்துகிற, இந்த காலம் திகிரி - இந்தக்கால சக்கரமும், முதல் ஆனயாவும் - முதலாகிய எல்லாம், கடல் கடைந்த - திருப்பாற்கடலைக் கடைந்த, நீலம் திகிரி அனையார் - நீலமலையை நிகர்த்தவராகிய, அரங்கர் - திருவரங்கர், செம்கை - செவந்த திருக்கையில் தரித்த, கோலம் நிறைந்த திகிரி-அழகு நிரம்பின சக்கரம், தலைநாளினில்-முற்காலத்தில், கொண்ட-எடுத்த, கோலங்களே - உருவங்களே யாகும். எ-று.

ஞாலம், நீர், காலம் இவை முறையே வட்டவடிவாயிருத்தலாலும், வட்டமாக உலகைச்சூழ்ந் திருத்தவாலும், மாறி மாறிச் சுழன்று வருதலாலும் திகிரி யெனப்பட்டன. முது நீர் - பழைய நீர் (கடல்). சராசரங்கள் யாவும் தோன்றி யொடுக்குதற்குக் காலதத்துவமே காரணமாதலால் "ஞாலத் திகிரி முதுநீர்த் திகிரி நடாத்து மிந்தக் காலத்திகிரி" என்றார்.

அரு. மோதித்திரைதவழ்நன்னீரரங்கர்முடிமுதலாம்
சாதிக்கதிர்மணிப்பேரணியாகத்தனஞ்சயன்போர்
பேதித்திரவுபகலாகவிண்ணிற்பிறழ்ந்துசெங்கேழ்
சோதித்திகிரித்திருமேனியெங்குஞ்சுடர்விடுமே.

(இ-ள்.) திரைமோதி தவழ் - அலைவீசி வருகிற, நல் நீர்-நல்ல காவிரியாற்று நீர் சூழ்ந்த, அரங்கர் - திருவரங்கத்தையுடையவராகிய இறைவரது, செம் கேழ் சோதி - செந்நிறமாகிய ஒளியையுடைய, திகிரி - சக்கரமானது, முடி முதல் ஆம் - கிரீட முதலாகிய, சாதி-நல்ல சாதியாகிய, கதிர்மணி - ஒளியையுடைய ரத்நங்களாலாகிய, பேர் அணி ஆகி - பெரிய ஆபரணமாகி, தநஞ்சயன் - அர்ஜுநனுடைய, போர்-(பதினெண்நாட்) போரில், இரவு பகல் ஆக - ராத்ரி பகலிலுண்டாம்படி, பேதித்து - வேறுபடுத்தி, விண்ணில் - ஆகாயத்தில், பிறந்து - விளங்கி, திருமேனி எங்கும் - திருமேனி முழுதிலும், சுடர் விடும் - ஒளி விடும். எ-று.

ராஜசூயயாகஞ் செய்யும் பொருட்டுப் பலதேசத்தரசரையும் வென்று பெரும்பொருள் கொண்டு வந்தவனாதலால் அர்ஜுநன் தநஞ்சயன் எனப்பட்டான். சாதிக் கதிர்மணி - உத்தமமாகிய ஆகரங்களிலுண்டாகிய ஒளியுள்ள மணி.

அசு. ஓலாழிசூழ்புவியுச்சியிலேந்துமுகக்கடையில்
காலானநற்குணமூர்த்தியைக்காலுமக்காலமெல்லாம்
மேலாவிளங்கும்புவிமீதிலென்றன்விழுத்துணையாம்
மாலாமரங்கமணவாளர்கண்டுயின்மாசுணமே

(இ-ள்.) என்றன் விழுத்துணை ஆம் - எனது மேலானதுணையாகிய, மால் ஆம் - பெருமையையுடையவராகிய, அரங்க மணவாளர் - திருவரங்கத்தி லெழுந்தருளியிருக்கிற அழகிய மணவாளர், கண் துயில் - கண் வளர்ந்தருளுகிற, மாசுணம் - பெரும்பாம்பு, ஓல் ஆழி சூழ் - ஆரவாரத்தையுடைய கடல் சூழ்ந்த, புவி - பூமியை, உச்சியில் ஏந்தும் - (தனது) சிரசின்மீது சுமக்கும், உகம் கடையில்-யுகமுடிவில், கால் ஆன - (தனது) மூச்சினின்றும் பொருந்திய, நல் குணம் மூர்த்தியை - நற்குணத்தையுடைய காலாக்கி ருத்ரமூர்

த்தியை, காலும் - தோற்றுவிக்கும், அ காலம் எல்லாம்-அந்தக்கால முழுதும், புவிமீதில் - பூமியின்மேல், மேல் ஆ விளங்கும்-மேன்மையாகப் பிரகாசிக்கும். எ-று.

மாசுணம்-பாம்பு, அது இவ்விடத்தில் புவியையுச்சியிலேந்துதல் முதலிய தொழிலால் ஆதிசேஷனை யுணர்த்திற்று. ஆதிசேஷன்-பிரளயகாலத்தில் தனது சுவாசத்தினின்றும் பகவானுடைய அமிசமாகிய காலாக்கி ருத்ரனையுண்டாக்கிப் பாதாளலோகங்களை யெல்லாமெரித்து, பூமியில் வந்து அதையும் எரித்து நீறாக்கி விடுமென்பது கருத்து.

அஎ. சென்றாற்குடையாங்கடற்புணையாந்திருத்தீவிகையாம்
நின்றாலிருதிருப்பாதுகையாநித்திரைக்கணையாம்
குன்றாமணியொளியாசனமாம்பூனைகோசிகையாம்
அன்றாலிலையிற்றுயிலரங்கேசர்க்கரவரசே.

(இ-ள்.) அன்று - அக்காலத்தில், ஆல் இலையில் - ஆலிலையின் மேல், துயில் - கண் வளர்ந்தருளுகிற, அரங்கேசர்க்கு - திருவரங்க நாதருக்கு, அரவரசு - சர்ப்பராஜனாகிய திருவநந்தாழ்வான், சென்றால் - (அவ்விறைவர்) உலாவினால், குடை ஆம் - குடையாயுபயோகப்படுவன், கடல் புணை ஆம் - திருப்பாற்கடலில் (மிதத்தற்குரிய) தெப்பமாயுபயோகப்படுவன், திருதீவிகை ஆம் - மங்கள தீபமாயுபயோகப்படுவன், நின்றால் - எழுந்தருளி நின்றால், இருதிருபாதுகை ஆம் - இரண்டு திருவடி நிலைகளாயுபயோகப்படுவன், நித்திரைக்கு அணை ஆம் - கண் வளருங்காலத்தில் திருவணையாயுபயோகப்படுவன், குன்றா ஒளி - குறையாத ஒளியையுடைய, மணி ஆசனம் ஆம்-ரத்நாசநமாயுபயோகப்படுவன், பூனை கோசிகை ஆம்-தரித்தற்குரிய திருப்பரிவட்டமாயுபயோகப்படுவன். எ-று.

அன்று என்றது பிரளயகாலத்தை.

அஅ. சிரஞ்சேதனன்விழிதேகஞ்சிறைபின்சினைபதங்கந்
தரந்தோள்களுருவடிவம்பெயரொசுர்சாமமுமாம்
பரந்தேதமதடியார்க்குள்ளபாவங்கள்பாற்றியருள்
சுரந்தேயளிக்குமரங்கர்தம்மூர்திச்சுவணனுக்கே.

(இ-ள்.) தமது அடியார்க்கு-தமது தாசருக்கு, பரந்து உள்ள-பரவியிருக்கிற, பாவங்கள் - பாவங்களை, பாற்றி - ஓட்டி, அருள் சுரந்து அளிக்கும் - கருணை பெருகி ரக்ஷிக்கிற, அரங்கர் - திருவரங்கரது, ஊர்தி - வாஹநமாகிய, சுவணனுக்கு - பெரிய திருவடிக்கு, சிரம் - தலை, சேதநன் - உயிர், விழி - கண்கள், தேகம் - உடம்பு, சிறை - சிறகுகள், பின் சினை - பின் புறம், பதம் - பாதங்கள், கந்த

ரம் - கழுத்து, தோள்கள் - புயங்கள், ஊரு - தொடைகள், வடிவம்- உருவம், பெயர் - பெயர் (ஆகியயாவும்,) எசுர் சாமமும் ஆம்-யஜுர் வேதம் சாமவேதம் என்பவற்றின் உருவங்களே யாகும். எ-று.

கம் - தலை, தரம் - தாங்கியிருப்பது (கந்தரம்). சுவணன் என்ப தற்குப் பொன்னிற முள்ளவன், நல்ல நிறமுள்ளவன் என்றிருவகை யாய்ப் பொருளமைக்கலாம். அன்றி ஸுபர்ணன் என்பதன் சிதை வாகக்கொள்ளினுமாம், இப்படி கொண்டபோது அழகிய இறகு களையுடையானெனப் பொருள் கூறுக.

அகூ. ஆளிலமரரரங்கேசர்சேவைக்கணுகுந்தொறும்
கோளில்திரளைவிலக்கும்பிரம்பின்கொனைபடலால்
தோளிலடித்தழும்புண்டச்சுரர்க்கச்சுரர்தொழலால்
தாளின்முடித்தழும்புண்டுநஞ்சேனைத்தலைவருக்கே.

(இ-ள்.) அமரர் - தேவர்கள், ஆளில்-அடிமைகளாக, அரங்கே சர் - திருவரங்கநாதரது, சேவைக்கு - தரிசநத்துக்கு, அணுகும் தொறும் - வரும்போதெல்லாம், கோளின் திரளை - வலிமையுள்ள கூட் டங்களை, விலக்கும் - விலகப்பண்ணுகிற, பிரம்பின் - (சேனைத்தலை வரது கையிற்பற்றிய) பிரம்பினது, கொனைபடாலல் - நுனிபடுத லால், அசுரர்க்கு - அந்தத் தேவர்களுக்கு, தோளில் - புயங்களில், அடிதழும்பு உண்டு - பிரம்படியாலுண்டாகிய வடுவுண்டு, அசுரர் தொழலால் - அந்தத் தேவர் வணங்குதலால், நம்சேனைத் தலைவரு க்கு - நமது சேனை முதலியாருக்கு, தாளில் - திருவடிகளில், முடி தழும்பு உண்டு - (அந்தத் தேவருடைய) கிரீடங்கள் படுதலாலுண் டாகிய வடுவுண்டு. எ-று.

ஆளிலமரர் - ஆட்களையுடைய தேவர் எனினுமாம். கோளின் என்பதற்குச் சேனைத்தலைவருடைய வல்லமையால் என்றுங் கூற லாம். சேனைத்தலைவரை விஷ்வக்ஸேநர் என்றுங் கூறுவர்.

கூ0. ஆதித்திருவெழுத்தைந்துடைத்தாயுமராவணிந்தும்
சோதித்திருக்கண்கண்மூன்றுடன்றோன்றுஞ்சுருதிசொன்ன
நீதிக்கிசையநடவாமனிதரைநேமிகொண்டு
வாதித்தருளும்பெருமாளரங்கர்தம்வாகனமே.

(இ-ள்.) சுருதி சொன்ன நீதிக்கு இசைய - வேதங்கள் சொ ன்ன நீதிமார்க்கத்துக்கிணங்க, நடவா மனிதரை - ஒழுகாத மனி தர்களை, நேமி கொண்டு - சக்கரத்தால், வாதித்தருளும் - வருத்தி யருளுகிற, பெருமாள் அரங்கர் - பெரிய பெருமாளாகிய திருவரங்க ரது, வாகநம் - வாஹநமானது, ஆதி - முதன்மையையுடைய, ஐந்து திரு எழுத்து உடைத்தாயும் - ஸ்ரீபஞ்சாக்ஷரத்தையுடையதா

யும், அரா அணிந்தும் - பாம்புகளை (ஆபரணங்களாகத்) தரித்தும், சோதி - ஒளியுடைப் பொருள்களாகிய, திரு கண்கள் மூன்றுடன்- அழகிய முக்கண்களோடு, தோன்றும் - விளங்கும். எ-று.

வாதித்து என்பது பாதித்து என்பதன் சிதைவு. வாதித்தருளுதல் இவ்விடத்தில் கொன்றருளுதல் என்னும் பொருளது. அரங்கர்தம் வாகநம் சிறிய திருவடி (ஹநுமார்). இவர் ருத்ராமிசமாதலால் இவ்வாறு கூறினர். வாதித்து அருளும் என்பதற்கு துஷ்டரைச் சிக்ஷித்து சாதுக்களை ரக்ஷிக்கிற என்றுரைத்தலுமாம். சோதி- ஒளியுடைப் பொருள்களாகிய சோம சூரியாக்கினிகள்.

கூக. வல்லாமுலைத்திருவின்பெருமான்விட்டவாகனம்போய்த்
தொல்லாழிநீரைக்கடந்ததுதாளின்சுடரிரண்டும்
செல்லாதவூரைத்திரிபுரங்கண்டதுசேனைவெள்ளம்
எல்லாமுயக்கொண்டதுமருந்தார்கிரியேந்திவந்தே.

(இ-ள்.) வல் ஆம் முலை - சூதாடு கருவிபோன்ற தனங்களையுடைய, திருவின் பெருமான் - திருமகள் கேள்வனாகிய திருவரங்கன், விட்ட - அனுப்பின, வாகநம்போய் - வாஹநமானது சென்று, தாளின் - பாதத்தால், தொல் - பழமையாகிய, ஆழி நீரை - கடனீரை, கடந்தது - தாண்டினது, இரண்டு சுடரும் - இருசுடர்களாகிய சூரிய சந்திரர்களும், செல்லாத ஊரை-நுழையாத இலங்கைப் பட்டணத்தை, திரிபுரம் கண்டது - முப்புரமாகச் செய்தது, மருந்து ஆர்கிரி ஏந்திவந்து - ஔஷதியுள்ள மலையைத்தாங்கி வந்து, சேனை வெள்ளம் எல்லாம் - (ஸ்ரீராமபிரானது) சேனாசமுத்திரமுழுதும், உய்யக் கொண்டது - பிழைக்கச் செய்தது. எ-று.

விட்ட என்றது ஸ்ரீராமாவதாரத்தில் ஜாநகியைத் தேடுதற்கனுப்பின என்றபடி. சுடரிரண்டும் செல்லாமைக்குக் காரணம் ராவணனது ஆக்ஞை. திரிபுரம் கண்டது - திரிபுரம்போல நீறாகக்கண்டது, மருந்து - சஞ்சீவி யென்னும் ஔஷதி, இது இருந்த மலைக்குத் துரோணகிரி என்று பெயர். சேனை வெள்ளம் என்பதற்குச் சேனையாகிய எழுபது வெள்ளம் என்றுரைத்தலுமாம். இருசுடர் செல்லாத வூரை ஒருசுடருக் கிரையாக்கிற்று என்பதாம். இருசுடர்- சூரிய சந்திரர்கள். ஒருசுடர் - அக்கினி.

கூஉ. தொல்லைக்கமடத்தலநவகண்டந்தொடுகடனீர்
எல்லைக்கிரிதனக்கப்புறத்தெண்கிரியப்புறத்தில்
மல்லைப்பரிதியின்மண்டலநாகமவ்வான்முகட்டூர்
அல்லைப்புறத்துவைகுந்தம்பொற்கோயிலரிக்கிடமே.

(இ-ள்.) தொல்லை கமடம் - ஆதிகூர்மத்தால் தாங்கப்பட்ட, தலம் - கீழுலகம், நவகண்டம்-(அதின் மீதிலுள்ள) நவகண்டங்கள், தொடு கடல் நீர் - (அவற்றை) வளைந்த சமுத்திர நீர், எல்லை கிரி-

(அவற்றை வளைந்த) சக்கரவாளகிரி, தனக்கு இப்புறத்து - அதற்கு இப்புறத்தில், எண் கிரி - அஷ்ட குல கிரிகள், அப்புறத்தில் - அதற்கு அப்புறத்தில் உள்ள, மல்லை - வட்டமாகிய, பரிதியின் மண்டலம் - சூரிய மண்டலம், நாகம் - (அதற்குமேல்) சுவர்க்கலோகம், அ வான் முகடு ஊர் - (அதற்குமேல்) அந்த மேலுலகத்துச்சியிலுள்ள சத்தியலோகம், அல் - (அதற்குமேல்) இருள், அப்புறத்து - அதற்குமேலுள்ள, வைகுந்தம் - ஸ்ரீ வைகுண்டம், பொன் கோயில் - அழகிய திருவரங்கம், (இவையாவும்) அரிக்கு - எம்பெருமானுக்கு, இடம் - இடங்களாம். எ-று.

தொல்லைக் கமடத்தல முதல் வைகுந்த மிறுதியாயுள்ளவை பொற்கோயிலரிக்கிடம் என அந்வயித்துரைப்பினுமாம். நவகண்டமாவன:—இந்திரம், கசேரு, தாமிரபருணம், கபஸ்திமான், நாகம், சௌமியம், காந்தர்வம், வாருணம், பாரதம் என்பன. கீழ்வி தேகம், மேல்வி தேகம், வடவிதேகம், தென்விதேகம், வடவிரோ பதம், தென்னிரோ பதம், வட பரதம், தென் பரதம், மத்திமம் என்றுங் கூறுவர்.

கூங. எந்தவுலகத்துமேலதுநித்தியவின்பத்தது
பந்தநசிப்பதுநித்தருமுத்தரும்பாரிப்பது
முந்தமறையினின்றல்லாதெத்தேவர்க்குமுன்னவரி
தந்தமிலதரங்கன்மேவுவைகுந்தமானதுவே.

(இ-ள்.) அரங்கன் - திருவரங்கன், மேவு - எழுந்தருளியிருக்கின்ற, வைகுந்தம் ஆனது - ஸ்ரீ வைகுண்ட லோகமானது, எந்த உலகத்தும் மேலது - எல்லாவுலகங்களினு மேற்பட்டது, நித்தியம் இன்பத்தது - அழியாத இன்பத்தையுடையது, பந்தம் நசிப்பது - (அடைந்தாரது) சம்ஸாரத்தை நசித்தற் கேதுவானது, நித்தரும் முத்தரும் பாரிப்பது - நித்தரும் முக்தரும் தங்குதற்கிடமாயிருப்பது, முந்தை மறையின் நின்று அல்லாது - முதன்மையையுடைய வேதங்களைக் கொண்டல்லது, எத்தேவர்க்கும் - எந்தத் தேவர்களுக்கும், முன்ன அரிது - (வேறுவகையால்) நினைத்தற்கு மருமையானது, அந்தம் இலது - முடிவில்லாதது. எ-று.

நித்தியர்-பரமபதத்தில் நிலையாய் வாழ்வோராகிய அநந்த கருட விஷ்வக்ஸேநாதியர். முக்தர் - இவ்வுலகில் நின்றும் பரமபதத்தை யடைந்தவர்.

கூச. காவுஞ்சுரபியுஞ்சிந்தாமணியுங்கடிக்கமலப்
பூவும்பணிலமும்பொங்கிளமாவும்புகர்த்தடக்கை
மாவும்பிறையுமமுதமுமெங்ஙன்மதிலரங்கர்
மேவுந்தரங்கக்கடலில்லையாகிலிவ்விண்ணவர்க்கே.

(இ-ள்.) மதில் அரங்கர் - சப்தப்ராகாரங்கள் சூழ்ந்த திருவரங்கத்தையுடையவராகிய நம்பெருமாள், மேவும் - கண்வளர்ந்தருளுகிற, தரங்கம் - அலைகளையுடைய, கடல் - திருப்பாற்கடலானது, இல்லை ஆயின்-இல்லையாமானால், இ விண்ணவர்க்கு-இந்தத் தேவர்களுக்கு, காவும் - கற்பகச்சோலையும், சுரபி - காமதேநுவும், சிந்தாமணியும் - சிந்தாமணியும், கடிகமலம் பூவும் - மணம்பொருந்திய தாமரைமலரும் (பத்மநிதியும்,) பணிலமும் - சங்கநிதியும், பொங்கு இளமாவும் - விளங்குகின்ற இளங்குதிரையாகிய உச்சைச்சிரவமும், புகர் - புள்ளிகளோடு கூடிய, தடம் கை - பெரிய துதிக்கையையுடைய, மாவும் - யானையாகிய ஐராவதமும், பிறையும் - சந்திரனும், அமுதமும் - அமிர்தமும் ஆகியயாவும், எங்ஙன் - எங்கு நின்றுங் கிடைக்கும். எ-று.

கடி-விளக்கம் எனினுமாம். திருப்பாற் கடலைக் கடைந்த காலத்தில் இவையாவும் தோன்றினமையால் இவ்வாறு கூறினர்.

௬ரு. அருமறையோதியவோரெட்டெழுத்துமயன்படைத்த
இருநிலமீதினில்யாவருங்காணவிலங்குதுத்திக்
குருமணிநாகத்திலெங்கோன்விழிதுயில்கொண்டருளத்
திருமதிலேழும்விமானமுமாகிச்சிறக்கின்றவே.

(இ-ள்.) அருமறை ஓதிய - அறிதற்கருமையாகிய வேதங்களால் சொல்லப்படுகிற, ஓர் - ஒப்பற்ற, எட்டு எழுத்தும் - திரு அஷ்டாக்ஷரமும், அயன் படைத்த - பிரமன் சிருஷ்டி செய்த, இருநிலம் மீதினில் - பெரிய நிலவுலகத்தில், யாவரும் காண - எல்லாரும் சேவித்து உஜ்ஜீவிக்கும்படி, இலங்கு - விளங்குகின்ற, துத்தி-புள்ளிகளையும், குருமணி - பெரிய மாணிக்கங்களையுமுடைய, நாகத்தில்-திருவநந்தாழ்வான்மேல், எம் கோன் - எம்பெருமான், விழி துயில் கொண்டருள - யோகநித்திரை செய்தருள, திருமதில் ஏழும் விமானமும் ஆகி - திருமதில்களேழும் விமானமுமாகி, சிறக்கின்ற - மேன்மையாய் விளங்குகின்றன. எ-று.

குரு - நிறம் எனினுமாம். குருமணி - நாயகமணியாகிய மாணிக்கம் எனினுமாம். திருவஷ்டாக்ஷரத்தில் பிரணவம் விமானமும் மற்ற ஏழெழுத்தும் சப்தப்ராகாரங்களுமாய் விளங்காநின்றன வென்பது கருத்து.

௬௬. தாழாதிபஞ்சொல்லவந்தாரரங்கர்தயங்குசெம்பொற்
கேழாவிமானங்கிளர்செம்பொன்மேருகிரிநிகர்த்த
ஏழாவரணத்திடையிடைத்தீவுகளிவ்வனைத்தும்
சூழாறுமாகடலெவ்வாறுநாமினிச்சொல்லுவதே.

(இ-ள்.) இபம் - கஜேந்திராழ்வான், சொல்ல - (ஆதிமூலமே யென்று) கூப்பிட, தாழாது வந்தார் - தாமதியாமல் எழுந்தருளிக் காத்தவராகிய, அரங்கர் - திருவரங்கரது, தயங்கு - விளங்குகின்ற, செம் பொன் கேழ் ஆ - செம்பொன்மயமாகிய, விமானம் - விமானமானது, கிளர் - பிரகாசிக்கிற, செம்பொன் மேருகிரி - செம்பொன் மயமான மேருமலையையும், ஏழ் ஆவரணத்து இடை - சப்தப்ராகாரங்களின் நடுவிலுள்ள இடங்கள், இடை தீவுகள் - (கடலின்) நடுவிலுள்ள எழுதீவுகளையும், இவ் அனைத்தும் சூழ் ஆறு - இந்த சப்த பிரகாரங்களையும் வளைந்த காவேரிநதி, மாகடல் - பெருங்கடலையும், நிகர்த்த-ஒத்திருந்தன, நாம் இனி எவ்வாறு சொல்லுவது - யாம் இனி எந்த ப்ரகாரம் சொல்வது. எ-று.

கேழாம் விமாநம் என்றும் பாடம்.

கள, ஞாலத்திகிரிபகலிரவாகநடத்துமிந்தக்
காலத்திகிரிநடக்கவற்றேவெங்கனலுமிழ்வாய்
ஆலப்பணியணைமீதேயரங்கத்தமர்ந்துறையும்
நீலக்கடல்கண்விழித்துறங்காவிடினிச்சமுமே.

(இ-ள்.) அரங்கத்து - திருவரங்கத்தில், வெம் கனல் உமிழ்-கொடிய நெருப்புப்போல வுமிழ்கின்ற, வாய்-வாயின் கண், ஆலம்-விஷத்தையுடைய, பணி - பாம்பாகிய, அணை மீதே - படுக்கையின் மேலே, அமர்ந்து உறையும் - விரும்பி வாழ்கின்ற, நீலக்கடல் - நீலக் கடலை நிகர்த்த நம்பெருமாள், நிச்சமும் - நாள் தோறும், கண் விழித்து உறங்காவிடில் - அறிதுயில் செய்யாவிடின், ஞாலம் திகிரி-பூச் சக்கரத்தை, பகல் இரவு ஆக - பகலும் இரவுமாக, நடத்தும் - நடத்துகின்ற, இந்த காலத் திகிரி - இந்தக் கால சக்கரமானது, நடக்க வற்றோ - நடக்க வல்லதோ. எ-று.

வெம் கனல் உமிழ் வாய் ஆலம் பணி என்பதற்கு, கொடிய நெருப்புப்போல வாயினின்றும் உமிழ்கின்ற நஞ்சையுடைய பாம்பு எனினுமாம். இது திருவனந்தாழ்வானை யுணர்த்திற்று.

கஅ. தாமக்கடையுகத்துள்ளேவிழுங்கித்தரித்தபழஞ்
சேமப்புவனஞ்செரிக்குமென்றேசிவன்மாமுடிக்கு
நாமப்புனறந்தபொற்றாளரங்கர்நலஞ்சிறந்த
வாமத்திருக்கரமேலாகவேகண்வளர்வதுவே.

(இ-ள்.) சிவன் - சிவனது, மாமுடிக்கு - பெரிய சடைமுடிக்கு, நாமம் - பரிசுத்தமான, புனல் - கங்காஜலத்தை, தந்த - கொடுத்த, பொன் தாள் - அழகிய திருவடியையுடைய, அரங்கர் - திருவரங்கர், நலம் சிறந்த - அழகு மிகுந்த, வாமம் திருக்கரம் - இடத்தி

ருக்கை, மேல் ஆகவே - மேலாகவே யிருக்க, கண் வளர்வது திருக்கண் வளர்ந்தருள்வது, தாம் - தாம், அ - அந்த, கடையுகத்துள் - யுகமுடிவில், விழுங்கி - உண்டு, தரித்த-தமது திருவயிற்றில் தாங்கியிருக்கிற, பழசேமம் புவனம் - பழமையாகிய தன் காவலில் அமைந்திருக்கிற லோகங்கள், செரிக்கும் என்றே - ஜீர்ணிக்கு மென்று கருதியே. எ-று.

வாமத்திருக்கரம் மேலாகவே என்றதனால் வலத்திருக்கரம் கீழாக என்பது தானே விளங்கும். இடக்கை மேலாக வைத்து நித்திரை செய்தால் உண்டவை ஜீர்ணியாதென்பதும், வலக்கை மேலாக வைத்து நித்திரை செய்தால் ஜீர்ணிக்குமென்பதும் நாற்றுணிபு.

கூகூ. கதிராருநீண்முடிசேர்ந்தகைப்போதெக்கடவுளர்க்கும்
அதிராசனுண்மைகாண்மினென்றேசொல்லுமாயபொன்மா
மதிலாரரங்கர்பொற்றாளார்திருக்கரமற்றிதுவே
சதுரானனன்முதலெல்லாவுயிர்க்குஞ்சரணென்னுமே.

(இ-ள்) பொன் ஆய-பொன்னினாலாகிய, மாமதில் ஆர் - பெரியமதில்கள் பொருந்திய, அரங்கர்-திருவரங்கத்தையுடைய இறைவரது, கதிர் ஆரும் - ஒளி நிறைந்த, நீள் முடி சேர்ந்த-நெடிய முடியைச் சேர்ந்த, கைப்போது - தாமரைமலர் போன்ற வலத்திருக்கரமானது, எ கடவுளர்க்கும் - எல்லாத் தேவர்களுக்கும், அதிராஜன் ஆண்மை - தான் தலைவனாந்தன்மையை, காண்மின் என்று சொல்லும் - பாருங்களென்று அறிவிக்கும், பொன் தாள் ஆர் - அழகிய திருவடியைச் சேர்ந்த, திருக்கரம்-இடத் திருக்கையானது, இதுவே-இந்தத் திருவடியே, சதுர் ஆநநன் முதல் - நான்முகன் முதலாகிய, எல்லா உயிர்க்கும் - எல்லா வுயிர்களுக்கும், சரண் என்னும் - புகலிடம் என்று அறிவிக்கும். எ-று.

ஆநநம் - முகம்.

௪00. மோகத்துயில்புரிமெய்போலக்கண்டமுறையினுக்கிக்
கேகத்திருவுருவென்றறிந்தேனிந்திரையையன்போ
டாகத்துவைத்தருடென்னரங்காவங்குமிங்குமொக்கப்
போகத்துக்கொண்டபணநாகமொன்றுபொறத்தபின்னே.

(இ-ள்.) அன்போடு - அன்புடனே, இந்திரையை - பெரியபிராட்டியை, ஆகத்து - திருமார்பிலே, வைத்தருள் - வைத்தருளுகின்ற, தென் அரங்கா - தென்னரங்கனே, அங்கும் - அந்தத் திருப்பாற்கடலிலும், இங்கும் - இந்தத் திருவரங்கத்திலும், ஒக்க - சமமாக, போகத்து கொண்ட - தன் சரீரத்தின்மேற் கொண்ட, பணம்-படத்தையுடைய, நாகம் ஒன்று - ஒப்பற்ற ஆதிசேஷன், பொறுத்த

பின் - தாங்கின பிறகு, (அப்படி தாங்குதலால்) மோகத்துயில் - பொய்யுறக்கத்தை, மெய் (புரி) துயில்போல - மெய்யாகச் செய்கிற உறக்கத்தைப்போல, கண்ட - பார்த்த, முறையினுக்கு - முறைமைக்கு, இங்கு - இவ்விடத்து, ஏகம் திருஉரு என்று - ஓரே திருவுருவமென்று, அறிந்தேன் - உணர்ந்தேன். எ-று.

மோகத்துயில் என்றது யோக நித்திரையை. பணங்கொண்ட நாகம் என்றியைத் துரைப்பினுமாம்.

௧௦௧. சோதித்திருவுருவாகாயமாகச்சுருதிநன்னூல்
சாதித்துநின்றுதெளிந்துவிட்டேன்மிக்கதானவரைச்
சேதித்தநேமித்திருவரங்காசங்கைதீரவுன்றன்
ஆதித்திருவுருவின்பேரணிநிறமானபின்னே.

(இ-ள்.) மிக்க தானவரை - மிகுதியாகிய அசுரரை, சேதித்த - அறுத்தழித்த, நேமி - சக்கரத்தையுடைய, திருவரங்கா-திருவரங்கனே, உன்றன் - உன்னுடைய, ஆதி - தலைமை பெற்ற, திருஉருவின் - திருவுருவத்தின், பேர் அணி - பெரிதாகிய அழகிய, நிறம் ஆனபின் - நிறமான பின்பு, சுருதி - வேதங்களையும், நல் நூல் - சிறந்த சாஸ்திரங்களையும், சாதித்து நின்று - பழகி நின்று, சோதி திருஉரு - ஒளியுள்ள திருவுருவம், ஆகாயம் ஆக - ஆகாசமாக, சங்கை தீர - சந்தேகம் நீங்க, தெளிந்து விட்டேன் - தெளிந்து கொண்டேன். எ-று.

மிக்கதானவர் என்றது பல அசுரர் என்றபடி. சுருதி நன்னூல் என்பதற்கு வேதமாகிய சிறந்த நூல் எனினுமாம். வேதம் அபௌருஷேயமாயும் நித்ய நிர்த்தோஷமாயு முள்ள முதனூலாதலால் சுருதி நன்னூல் எனப்பட்டது.

௧௦௨. ஓங்காரவட்டத்துமாசுணப்பாயிலுலோகமுண்ட
பூங்கார்விழிக்குப்புலப்பட்டதாலெப்பொழுதுமென்னை
நீங்காதிடர்செய்யுந்தீவினைகாளினிநின்றுநின்று
தேங்காதுநீருமக்கானிடத்தேசென்றுசேர்மின்களே.

(இ-ள்.) எப்பொழுதும் - எக்காலமும், என்னை நீங்காது-என்னைவிட்டொழியாமல் நின்று, இடர் செய்யும் - துன்பத்தைச் செய்கிற, தீவினைகாள் - பாவங்களே, ஓங்காரவட்டத்து-(பிரணவரூபமாகிய) விமானத்தில், மாசுணம்பாயில் - சர்ப்ப சயனத்தில், உலோகம் உண்ட - லோகங்களைத் திருவயிற்றில் வைத்தருளின, பூகார்-அழகாகிய நீலமேகம், விழிக்கு - என் கண்களுக்கு, புலப்பட்டது - காணப்பட்டது, ஆல் - ஆதலால், இனி - இனி, நீரும் - நீங்களும், நின்று நின்று தேங்காது-இங்கே நிறைந்து நில்லாமல், அ கான் இடத்தே-

அந்தக் கானகத்திலே, சென்று சேர் மின்கள் - போய்ச் சேருங் கள். எ-று.

புலப்பட்டதால் என்பதற்குப் புலப்பட்டதனால் என்றுரைப் பினுமாம். பூங்கார் என்றது திருவரங்கநாதனை. தேங்குதல்-நிறை தல்.

க௦ரு. விண்ணிட்டசோலையரங்கத்துமேவியமெய்ப்பொருளைக்
கண்ணிட்டபார்வையிற்கட்டியென்கண்வரக்கண்டுடலாம்
புண்ணிட்டவண்ணக்கிழியுட்பொதிந்துபுறத்துவெள்ளை
மண்ணிட்டிலச்சினையிட்டுவிள்ளாதுள்ளம்வைத்தனனே

(இ-ள்.) விண் இட்டசோலை - ஆகாயத்தையளாவிய சோலை சூழ்ந்த, அரங்கத்துமேவிய - திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கிற, மெய் பொருளை - உண்மைப்பொருளாகிய பரதத்துவத்தை, கண் இட்டபார்வையின் - கண்பார்வையால், கட்டி - பிணித்து, என் கண் வரக்கண்டு - என்னிடத்தில் வரப்பார்த்து, புண் இட்ட - மாமிசம் பொதிந்த, உடல் ஆம் - உடம்பாகிய, வண்ணம் கிழி உள் - அழிகிய சீலையினுள்ளே, பொதிந்து - வைத்து மூடி, புறத்து - வெளியில், வெள்ளைமண் இட்டு - வெண்மையாகிய மண்ணை அப்பி, இலச்சினை யிட்டு - முத்திரைசெய்து, விள்ளாது - நீங்காமல், உள்ளம் - மனத் தின்கண், வைத்தனென் - இருத்தினேன். எ-று.

மெய்ப்பொருள் என்றது அழியாதபொருள் என்றபடி. பொரு ளாதலால் இவ்வாறு முத்திரை முதலியன செய்யவேண்டியதாயிற்று. கிழி - பொன் முடியுஞ்சீலை. வண்ணம் நிறம் எனினுமாம். வெள்ளை மண் இடுதலாவது திருமண் காப்பிடுதல். இலச்சினை யிடுதலா வது புயங்களில் சங்கசக்ரலாஞ்சநங்களைத் தரித்தல். லாஞ்சநம்-குறி.

க௦சு. கைத்துப்பழவினைதித்திக்கவென்றன்கருத்தினுள்ளே
பைத்துத்திமெத்தையின்மீதேதுயிலும்பைங்கேழெறிந்து
மைத்துக்குளிர்ந்துமதுரித்துமெத்தென்றுமாமணத்து
நெய்த்துப்புகர்த்துநிகர்க்கும்பொன்மேனிநெடுங்கடலே.

(இ-ள்.) பை கேழ் எறிந்து - பசுமையாகிய நிறத்தை வீசி, மைத்து - கறுத்து, குளிர்ந்து - குளிர்ச்சியாகி, மதுரித்து-இனித்து, மெத்தென்று - மிருதுவாகி, மாமணத்து - மிகவும் பரிமளித்து, நெய்த்து - பளபளத்து, புகர்த்து - கபில நிறங்கொண்டு, நிகர்க்கும்-(தன் னைத்தானே) நிகர்த்திருக்கிற, பொன்மேனி - பொன்போலுந்திரு மேனியையுடைய, நெடுகடல்-பெருங்கடலானது, பழவினைகைத்து-(என்னுடைய) பழைய வினைகளைநீக்கி, என்றன் கருத்தின் உள்ளே-

என்மனத்தினுள்ளே, தித்திக்க - இனிக்க, பைதுத்தி - படங்களையும் படப் பொறிகளையுமுடைய, மெத்தையின்மீது - (திருவநந்தாழ்வானாகிய) சயநத்தின்மேல், துயிலும்-கண்வளர்ந்தருளும். எ-று.

செய்த்தல் - வழுவழுத்தல் எனினுமாம். நெடுங்கடல் என்றது பெரிய பெருமாளை. மாமணத்து என்பதற்கு பெரியபிராட்டியோடு கூடி என்றுரைத்தலும் பொருந்தும்.

௧௦௫. தெள்ளாவரும்பொன்னிசூழரங்காவொருதேவனையும் [ப்
உள்ளாதெனதுள்ளம்யானென்செய் வேன்விண்ணிலோருவண
புள்ளாகிவேதப்பொருளாகியுன்னைத்தன்பொற்கழுத்தில்
கொள்ளாவருகின்றகோலமுள்ளேகண்டுகொண்டபின்னே.

(இ-ள்) தெள்ளாவரும் - தெளியாது கலங்கலாய்ப்பெருகிவருகிற, பொன்னிசூழ் - காவேரி நதிசூழ்ந்த, அரங்கா - திருவரங்கத்தையுடையவனே, விண்ணில் - ஆகாயத்தில், ஓர் - ஒப்பற்ற, உவணப்புள் - பெரியதிருவடி, வேதப்பொருள் ஆகி - வேதார்த்தமாகி, தன்பொன் கழுத்தில் - தனது அழகிய பிடரின்மேல், உன்னைக்கொள்ளாவருகின்ற உன்னை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு வருகிற, கோலம் - திருக்கோலத்தை, உள்ளே கண்டு கொண்டபின் - என்மனத்தில் சேவித்துக்கொண்ட பிறகு, எனது உள்ளம் - என்மனமானது, ஒருதேவனையும் - வேறொரு தேவனையும், உள்ளாது - மதிக்காது, யான் என் செய்வேன் - (இதற்கு) நான்யாது செய்வேன். எ-று.

தெள்ளா - தெளிந்து என்றலும் பொருந்தும். உவணம். கருடன், புள் - பறவை. ஆகி - அசை. உள்ளல் - நினைத்தலுமாம். பொன் கழுத்து - பொன்னிறமாகிய கழுத்து எனினுமாம். கோலம் - வேஷம், அழகு.

௧௦௬. முன்பாலிலைமகவாகியபோதிந்தமூதண்டங்கள்
உன்பாலொடுங்கியிருந்ததுபோலுமுததிமங்கைக்
கன்பாவரங்கத்தென்னாரமுதேயணுவாயிருந்தும்
என்பாலகண்டமுமாகியநீவந்திருக்கின்றதே.

(இ-ள்.) உததி மங்கைக்கு - திருப்பாற்கடலில் அவதரித்த பெரிய பிராட்டிக்கு, அன்பா - அன்பனே, அரங்கத்து - திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கிற, என் ஆர் அமுதே - எனது அரிய அமிர்தமே, அணு ஆய் இருந்தும் - அணுரூபமாயிருந்தும், என்பால் - என் மனதினிடத்தில், அகண்டமும் ஆகிய - எல்லாப்பொருளுமாகிய, நீ - நீ, வந்து இருக்கின்றது - வந்தெழுந்தருளி ஒடுங்கியிருப்பது, முன் - பூர்வத்தில், ஆல் இலை - ஆலிலையில், மகவு ஆகியபோது - சிறு குழந்தையாய்க்கிடந்த காலத்தில், இந்த மூது அண்டங்கள் - இந்தப்பழைய அண்டங்கள்யாவும், உன்பால் - உன்னிடத்தில், ஒடுங்கி இருந்தது போலும் - அடங்கியிருந்ததை நிகர்க்கும். எ-று.

உததி - நீர் நிறைந்தது (கடல்) உததிமங்கை என்பதற்கு கடல் சூழ்ந்த நிலமங்கை யென்றுரைப்பினும் பொருந்தும். மனம் பரமாணுரூபமாதலால் "அணுவாயிருந்தும் என்பால்" என்றார்.

௬௦௭. வலைப்பால்விடம்பிணைக்கண்ணியர்போகத்தின்மாலுறுமென்
தலைப்பாற்கழலருடாரரங்காபலதாயர்தந்த
முலைப்பாற்கடலுன்றிருக்கழலாணிவெண்முத்தெறியும்
அலைப்பாற்கடலினளவாமெனின்மற்றதுவுமன்றே.

(இ-ள்.) தார் - திருத்துழாய்மாலையைத்தரித்த, அரங்கா-திருவரங்கனே, பலதாயர்தந்த-(யான்பிறந்தபிறவிகள்தோறும்) பலதாய்மார் என்னையுண்பித்த, முலைப்பால்கடல்-முலைப்பாலினாலாகிய கடல், உன்திருகழல் - உன்திருவடிகளின்மேல், வெள் ஆணிமுத்து-வெண்மையாகிய ஆணிமுத்துகளை, எறியும் - வீசுகின்ற, அலை - அலைகளையுடைய, பால்கடலின் அளவு ஆம் எனின் - திருப்பாற்கடலினது அளவுடையதாகுமென்றால், அதுவும் அன்று - அந்தத்திருப்பாற்கடலும் ஒப்பாகாது, (ஆதலால் இனி அவ்வாறு பலபிறவியிற்போய்ப்பிறவாதபடி) வலை - வலையையும், பால்-அமிர்தத்தையும், விடம்-நஞ்சையும், பிணை - பெண்மானையும் நிகர்த்த, கண்ணியர்-கண்களையுடைய மாதரது, போகத்தில்-சுகாநுபவத்தில், மால் உறும்-ஆசைமிகுகின்ற, என் தலைபால் - என்சிரசினிடத்தில், கழல் அருள்-உன்திருவடிகளை வைத்தருளவேண்டும். எ-று.

கண்டாரையகப்படுத்தலால் வலையும், உண்டார்க்கு இனிமையைத்தருதலால் பாலும், துன்பஞ்செய்தலால்விடமும், மருண்ட பார்வையால் பிணையும் கண்ணுக்கு உவமையாயின. இது தொழிலுவமம். சுற்றும் வெளுத்திருத்தலால் பாலும், கடுக்கறுத்திருத்தலால் விடமும் உவமையாயின எனினுமாம். இது வண்ணவுவமம்.

௬௦அ. தொடைமாறனுந்தமிழ்சொன்மாறனுந்தொழத்துத்திவெள்ளைக்
குடைமாசுணத்திற்றுயிலரங்கேசகுலவுவைவேல்
படைமாறுகொண்டமைக்கண்ணியர்பால்வைத்தபாசநெஞ்சை
மடைமாறியுன்றன்றிருவடிக்கேவரவைத்தருளே.

(இ-ள்.) தொடை - (வேப்ப) மாலையைத்தரித்த, மாறனும்-பாண்டியனும், தமிழ்சொல் - தமிழ்வேதஞ்சொல்லியருளின, மாறனும்-ஸ்ரீசடகோபரும், தொழ - வணங்காநிற்க, துத்தி-படப்பொறிகளையுடைய, வெள்ளைக்குடை - வெண்குடைபோன்று கவிந்திருக்கிற, மாசுணத்தில் - திருவநந்தாழ்வான்மீது, துயில்-கண்வளர்ந்தருளுகிற, அரங்கேச - திருவரங்கநாதனே, குலவு-விளங்குகின்ற, வை-கூர்மையுள்ள, வேல்படை - வேலாயுதத்தை, மாறுகொண்ட - பகை

கொண்ட, மை - அஞ்சனமெழுதின, கண்ணியர்பால்வைத்த-கண்களையுடையவராகிய மாதரிடத்தில்வைத்த, பாசம்நெஞ்சை-ஆசையோடு கூடியமனத்தை, மடைமாறி - திருப்பி, உன்றன் திருவடிக்கேவர-உன்திருவடியின்கண்ணேவரும்படி ,வைத்தருள் - (நீ என்மீது கடாக்ஷம்) வைத்தருளவேண்டும். எ-று.

மாறன் என்றமையால் தொடை வேப்பமாலைக்காயிற்று. மாறு கோடல்-வென்றுபகைகோடல், அன்றி நிகர்த்தலுமாம். மடைமாறுதல் - நீரை ஒருமடையினின்றும் அடுத்தமடைக்குப்பாய்ச்சல். அது இவ்விடத்து ஒன்றிற்சென்றழுந்திக் கிடக்கு மனத்தை மற்றொன்றில் வரும்படி திருப்புதலைக்குறித்தது. பாண்டியன் என்றது ஸ்ரீ வல்லபதேவனை.

௧0௯. கரணந்தவிர்ந்துவிழிபோய்ச்சுழன்றுகலங்குமென்றன்
மரணந்தனில்வந்துதவுகண்டாய்கொற்றவாளியொன்றால்
அரணங்கடந்தவன்காணாவரங்கவென்னாருயிர்க்குன்
சரணஞ்சரணமொழிந்தில்லைவேறித்தராதலத்தே.

(இ-ள்.) கொற்றம் வெற்றியையுடைய, வாளி ஒன்றால்-ஒரு பாணத்தினால், அரணம்கடந்தவன் - மும்மதில்களையும் அழித்தவனாகிய பரமசிவனும், காணா - காணவொண்ணாத, அரங்க - திருவரங்கனே, என் - எனது, ஆர் உயிர்க்கு - அரிய உயிருக்கு, உன்சரணம் ஒழிந்து - உன்திருவடியொழிய, வேறுசரணம் - வேறுபுகலிடம், இ- இந்த, தராதலத்து இல்லை - பூமியிலில்லை, [ஆதலால்) கரணம் தவிர்ந்து - அந்தக்கரணங்கள் நிலைகலங்கி, விழிபோய் - கண்பார்வையழிந்து, சுழன்று - சுழலாநின்று, கலங்கும் - மனங்கலங்கும்படியான, என்றன் மரணந்தனில் - என்மரணகாலத்தில், வந்து உதவு - எழுந்தருளியுதவல்வேண்டும். எ-று.

கரணம்-மனம் புத்தி சித்தம் அஹங்காரம் எனபன. இவற்றை அந்தக்கரண சதுஷ்டயம் என்பர். அன்றி மனம் வாக்குக்காயம் என்னும் முக்கரணங்களென்று கோடலுங்கூடும். அரணம்-மதில். இது இரும்பினாலும் வெள்ளியினாலும் பொன்னினாலும் செய்யப்பட்டு மூன்றாயிருக்கும் இவற்றையே முப்புரம் என்பர்.

௧௧0. நீடுந்திகிரிப்படையாயுனைக்கற்றுநின்னையென்றும்
பாடும்படித்தமிழ்ப்பாடறந்தாய்பழநான்மறைநூல்
சேடுந்திருவரங்காவடியேனுயிர்செல்லுமந்நாள்
வீடுந்தரவிருந்தாயெனக்கேதினிவேண்டுவதே.

(இ-ள்.) நீடும் - (ஆசிரிதவிரோதிகள் உள்ளளவும்) நீளுதற்குரிய, திகிரிபடையாய்-சக்ராயுதத்தையுடையவனே, பழநால்மறை

நூல் - பழமையாகிய நான்குவேதங்களும் ஆறுசாஸ்திரங்களும், தேடும் - தேடாநின்ற, திரு அரங்கா - திருவரங்கனே, உன்னைகற்று- உன்திருநாமங்களையும் உன்வைபவங்களையும் கற்று, என்றும்-எந்நாளும், நின்னை-உன்னை, பாடும்படி - பாடும் வண்ணம், தமிழ்ப்பாடல் தந்தாய் - தமிழ்ப்பாடல்களைக் கொடுத்தருளினை, அடியேன் உயிர்- அடியேனது உயிரானது, செல்லும் அந்நாள் - உடம்பைவிட்டு நீங்கிப்போகிற அந்தமரணகாலத்தில், வீடும் - மோக்ஷத்தையும், தர- (அடியேனுக்குத்) தந்தருளும்பொருட்டு, இருந்தாய் - இருக்கிறாய், எனக்கு இனிவேண்டுவது எது-எனக்கு இனி வேண்டுவதுயாது.

தமிழ்ப்பாடல் என்றது தமிழ்ப்பாடல் பாடும் வல்லமையை.

௧௬௧. ஆவைக்கல்லாவையெதிரொன்றுசொல்லியழுக்கடைந்த
நாவைப்பரிசுத்தம்பண்ணியவேகஞ்சநஞ்சன்விட்ட
கோவைச்சகட்டைப்பகட்டைப்பொருதியகோயில்வாழ்
தேவைப்பகர்ந்தசெஞ்சொற்றிருநாமங்கள்சிற்சிலவே.

(இ-ள்.) கஞ்சன் - கம்ஸனாகிய, நஞ்சன் - விஷம்போன்ற துஷ்டன், விட்ட-அனுப்பின, கோவை - எருதையும், சகட்டை-சகடத்தையும், பகட்டை - யானையையும், பொருதிய-பொருதுவென்ற, கோயிலில் வாழ் தேவை - திருவரங்கத்தில் வாழ்கின்ற நம்பெருமாளை, பகர்ந்த - சொன்ன, சில சில - சில சிலவாகிய, செம்சொல் திருநாமங்கள் - செஞ்சொற்களாகிய திருநாமங்கள், ஆவை - மெய்ப்பசுவையும், கல் ஆவை-கல்லாற் செய்யப்பட்ட பொய்ப்பசுவையும், எதிர் என்று சொல்லி - சமானமென்று சொல்லி, அழுக்கு அடைந்த - அசுத்தமடைந்த, நாவை - எனது நாக்கை, பரிசுத்தம் பண்ணிய - பரிசுத்தமடைவித்தன. எ-று.

ஆவைக்கல்லாவை யெதிரொன்று சொல்லலாவது - ஈடுெடுப்பு மில்லாவொரு தெய்வமாகிய ஸ்ரீமந்நாராயணனையும் பிறதெய்வங்களையும் சமானமாக்கிச் சொல்லுதல். கோ என்றது - எருதுருவங்கொண்டுவந்த அரிஷ்டாசுரனை. சகடு என்றது வண்டியில் வந்தாவேசித்திருந்த சகடாசுரனை. பகடு என்றது குவலயாபீடத்தை.

மனிதக்கவிமொழியாமங்கைவாழ்மணவாளவள்ளல்
புனிதக்கவிகொண்டுமாலைசெய்தான்புயல்போன்முழங்கும்
தொனிதக்கசங்கந்திருச்சக்கரஞ்சுடர்வாள்முசலம்
குனிதக்கசார்ங்கந்தரித்தாரரங்கர்பொற்கோயிலுக்கே.

அழகியமணவாளதாசர்திருவடிகளேசரணம்.

திருவரங்கத்துமாலை முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:

பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

அருளிச் செய்த

ஸ்ரீரங்கநாயகர் ஊசற்றிருநாமம்.

தனியன்.

அண்டப்பந்தரிற்பற்றுகால்களாக
அறிவுவிட்டங்கரணஞ்சங்கிலிகளாகக்
கொண்டபிறப்பேபலகைவினையசைப்போர்
கொடுநரகசுவர்க்கப்பூவெளிகடம்மில்
தண்டவிலேற்றம்மிறக்கந்தங்கலாகத்
தடுமாறியிடருழக்குமூசன்மாறத்
தொண்டர்க்காமணவாளர்பேர்கூடித்
தொகுத்திட்டார்திருவரங்கத்தூசருனே.

(இ - ள்.) அண்டம்பந்தரில் - உலகமாகிய பந்தலில், பற்று - ஆசையே, கால்கள் ஆக - கால்களாகவும், அறிவுவிட்டம் (ஆக) - அறிவே உத்திரமாகவும், கரணம் சங்கிலிகள் ஆக - அந்தக்கரணங்களே சங்கிலிகளாகவும், கொண்டபிறப்பே பலகை (ஆக) - எடுத்தபிறவிகளே பலகையாகவும், வினை அசைப்போர் (ஆக) - இருவினைகளே ஆட்டுவோராகவும், கொடுநரகம் சுவர்க்கம் பூவெளிகள் தம்மில் - கொடுமையாகிய நரகலோகம் சுவர்க்கலோகம் பூலோகம் என்கிற வெளிகளில், தண்டல் இல் ஏற்றம் இறக்கம் தங்கல் ஆக - அழிவில்லாத ஏறுதலும் இறங்குதலுமே நிலைபேறாகவும்கொண்டு, தடுமாறி - தடுமாற்றமடைந்து, இடர் உழக்கும் - துன்பமநுபவிக்கின்ற, ஊசல்மாற - ஊசலாட்டம்நீங்க, தொண்டர்க்கு ஆ - அடியார்களுக்காக, மணவாளர் - அழகிய மணவாளதாஸரும், பேரர் - (அவரது) திருப்பேரனாரும், கூடி - சேர்ந்து, திருவரங்கத்து ஊசல் - திருவரங்கத்தூசற்றிருநாமத்தை, தொகுத்திட்டார் - தொகுத்தருளினர். எ-று.

தான் - ஏ - அசைகள்.

தடுமாறியிடருழக்கு மூசன்மாற, மணவாளர் பேரர்கூடி திருவரங்கத்தூசல் தொகுத்திட்டார் என்றமையால், இதைப்படிப்போர் பிறவித்துன்பத்தினின்றும் நீங்கி மோக்ஷலாபத்தையடைவார் என்றவாறுயிற்று.

காப்பு.

புதுவைநகர்ப்பட்டர்பிரான்சரண்கள்போற்றி
பொய்கைபூதன்பேயார்பாதம்போற்றி
சதுமறைச்சொற்சடகோபன்சரணம்போற்றி
தமிழ்ப்பாணன்றொண்டரடிப்பொடித்தாள்போற்றி
முதுபுகழ்சேர்மழிசையர்கோன்பதங்கள்போற்றி
முடிக்குலசேகரன்கலியன்கழல்கள்போற்றி
மதுரகவியெதிராசன்கூரத்தாழ்வான்
வாழ்வானபட்டர்திருவடிகள்போற்றி.

(இ - ள்.) புதுவைநகர் - புதுவைநகரத்தில் அவதரித்தருளிய, பட்டர்பிரான் - பெரியாழ்வாருடைய, சரண்கள்போற்றி - திருவடிகள் (எம்மால்) வணங்கப்படுவன, பொய்கைபூதன் பேயார் - பொய்கையாழ்வாரும் பூதத்தாழ்வாரும் பேயாழ்வாரும் ஆகிய இவர்களுடைய, பாதம்போற்றி - திருவடிகள் (எம்மால்) வணங்கப்படுவன, சதுமறைசொல் - நான்குவேதப்பொருளையும் (தமிழ்மொழியால்) அருளிச்செய்த, சடகோபன் - நம்மாழ்வாருடைய, சரணம்போற்றி-திருவடிகள் (எம்மால்) வணங்கப்படுவன, தமிழ்பாணன் - செந் தமிழ்ப்பாடலில்வல்ல திருப்பாணாழ்வாரும், தொண்டரடிப்பொடி - தொண்டரடிப்பொடியாழ்வாரும் ஆகிய இவர்களுடைய, தாள்போற்றி-திருவடிகள் (எம்மால்) வணங்கப்படுவன, முதுபுகழ்சேர் - மிகுந்த கீர்த்திபொருந்திய, மழிசையர்கோன்-திருமழிசைப்பிரானுடைய, பதங்கள்போற்றி - திருவடிகள் (எம்மால்) வணங்கப்படுவன, முடிகுலசேகரன் - மகுடத்தையணிந்த குலசேகராழ்வாரும், கலியன் - திருமங்கையாழ்வாரும் ஆகிய இவர்களுடைய, கழல்கள்போற்றி-திருவடிகள் (எம்மால்) வணங்கப்படுவன, மதுரகவி - மதுரகவியாழ்வாரும், எதிராசன்-யதித்தலைவராகிய ஸ்ரீபாஷ்யகாரரும், கூரத்தாழ்வான்-திருக்கூரத்தாழ்வாரும், வாழ்வு ஆனபட்டர்-மோக்ஷவாழ்க்கையையுடைய பட்டரும் ஆகிய இவர்களுடைய, திருவடிகள்போற்றி - திருவடிகள் (எம்மால்) வணங்கப்படுவன. எ-று.

நூல்.

க. திருவாழத்திருவாழிசங்கம்வாழத்
திருவனந்தன்கருடன்சேனையர்கோன்வாழ
அருண்மாறன்முதலாமாழ்வார்கள்வாழ
வளவில்குணத்தெதிராசனடியார்வாழ
இருநாலுதிருவெழுத்தினேற்றம்வாழ
வேழுலகுநான்மறையுமினிதுவாழப்
பெருவாழ்வுதந்தருணம்பெருமாளெங்கள்
பெரியபெருமாளரங்கராடிரூசல்.

(இ-ள்.) திருவாழ - பெரிய பிராட்டியார் வாழவும், திரு ஆழி சங்கம் வாழ - திருவாழியும் திருச்சங்கமும் வாழவும், திரு அநந்தன் கருடன் சேனையர்கோன் வாழ - திருவநந்தாழ்வானும் பெரிய திருவடியும் சேனை முதலியாரும் வாழவும், அருள் மாறன் முதல் ஆம் ஆழ்வார்கள் வாழ - (உயிர்களிடத்து) அருளுள்ள நம்மாழ்வார் முதலாகிய ஆழ்வார்கள் வாழவும், அளவு இல் குணத்து எதிராசன் அடியார் வாழ - அளவில்லாத (பெருங்) குணத்தையுடைய ஸ்ரீராமாநுஜரது அடியார்கள் வாழவும், இருநாலு திரு எழுத்தின் ஏற்றம் வாழ - திரு அஷ்டாக்ஷரத்தின் மேன்மை வாழவும், எழு உலகும் நான் மறையும் இனிது வாழ-எழுலகங்களும் நான்கு வேதங்களும் இனிமையாகவாழவும், பெரு வாழ்வு தந்தருள்-பெரியவாழ்வைக் கொடுத்தருளிய, நம்பெருமாள்-ஸ்ரீ நம்பெருமாளே, எங்கள் பெரிய பெருமாள்-எமக்கு உத்தேஸ்யராகிய பெரிய பெருமாளே, அரங்கர்-திருவரங்கநாதரே, ஊசல் ஆடிர் - ஊசலாடியருள்வீராக. எ-று.

தனக்குண்டாகும் தோஷத்தை நோக்காமல் சேதநோஜ்ஜீவநத்தையே நோக்கித் திருமந்திரதாநம் செய்தவராதலால் ஸ்ரீபாஷ்யகாரரை "அளவில் குணத்தெதிராசன்" என்றார். பெருவாழ்வு என்றது இம்மையில் பெருஞ்செல்வத்தையும் மறுமையில் மோக்ஷலாபத்தையும்.

௨. உயரவிட்டகற்பகப்பூம்பந்தர்நீழ
லொண்பவளக்காணிறுவியூடுபோட்ட
வயிரவிட்டத்தாடகச்சங்கிலிகணாற்றி
மரகதத்தாற்பலகைதைத்தவூசன்மீதே
தயிரிலிட்டமத்துழக்கும்வெண்ணெய்க்காடித்
தடமறுகிற்குடமாடித்தழல்வாய்நாக
மயரவிட்டன்றாடியநீராடிரூசல்
அணியரங்கநம்பெருமாளாடிரூசல்.

(இ-ள்.) உயர இட்ட கற்பகம் பூபந்தர் நீழல் - உயரமாகச் சமைத்த அழகிய கற்பகச்சோலையாகிய பந்தலின் நிழலில், ஒள்பவளக் கால்நிறுவி - அழகிய பவளக்கால்களை நிறுத்தி, ஊடுபோட்ட - இடையே வைத்த, வயிரவிட்டத்து - வயிரவிட்டங்களில், ஆடகச் சங்கிலிகள் - பொற்சங்கிலிகளை, நாற்றி-தொங்கவிட்டு, மரகதத்தால் பலகை தைத்த - மரகதமணியினால் பலகையமைத்த, ஊசல்மீது - ஊசலின்மேல் ஏறி, தயிரில் - தயிரின்கண், இட்டமத்து உழக்கும்- வைத்த மத்தினால் கடைந்தெடுக்கப்பட்ட, வெண்ணெய்க்கு ஆடி- வெண்ணெயின் பொருட்டுக் கூத்தாடி, தடம் மறுகில் குடம் ஆடி- பெரிய தெருக்களில் குடக் கூத்தாடி, தழல்வாய் நாகம் — விஷாக்

கிளியைக் கக்குகின்ற வாயினையுடைய பாம்பானது, அயர - சோர்வையடையும்படி, இட்டு-(அதின் சிரத்தில் திருவடியை) வைத்து, அன்று ஆடியநீர் - அந்நாளில் நடனஞ்செய்த நீர், ஊசல் ஆடிர் - ஊசல் ஆடுவீராக, அணி அரங்கம் நம்பெருமாள் - திருவரங்கத்திலெழுந்தருளிய நம்பெருமாளே, ஊசல் ஆடிர்-ஊசலாடுவீராக. எ-று

தழல்வாய் நாகம் என்றது யமுநாநதியின் மடுவிலிருந்த காளிங்கன் என்னும் பாம்பை.

ரு. மீன்பூத்தவிசும்பதுபோற்றரளங்கோத்து
விரித்தநீலப்பட்டுவிதானந்தோன்ற
வான்பூத்தகலைமதிபோற்கவிகையோங்க
மதிக்கதிர்போற்கவரியிருமருங்கும்வீசக்
கான்பூத்ததனிச்செல்வன்சிலையுண்மின்னற்
கருமுகில்போற்கணமணிவாசிகையினூப்பண்
தேன்பூத்ததாமரையாண்மார்பிலாடத்
தென்னரங்கமணவாளராடிரூசல்.

(இ-ள்.) மீன்பூத்த விசும்பதுபோல் - நட்சத்திரங்கள் விளங்கிய ஆகாயத்தைப்போல, தரளம் கோத்து - முத்துக்கள் கோக்கப்பெற்று, விரித்தநீலப்பட்டு விதானம்தோன்ற - பரப்பிய நீலப்பட்டினாற்செய்த மேற்கட்டி விளங்கவும், வான்பூத்த கலைமதிபோல்-ஆகாயத்தில் தோன்றியகலைகள் நிறைந்தசந்திரன்போல, கவிகை ஓங்க-வெண்குடை உயரவும், மதிகதிர்போல்-சந்திரகிரணம்போல, கவரி-சாமரங்கள், இருமருங்கும் வீச - இருபக்கத்தும் வீசவும், கான்பூத்த தனிசெல்வன் சிலையுள் - கற்பகக்காட்டில் விளங்குகின்ற ஒப்பற்ற செல்வத்தையுடையவனாகிய இந்திரனது வில்லினிடையே யுள்ள, மின்னல் கருமுகில்போல் - மின்னற்கொடியோடுகூடிய நீலமேகம் போல, கணமணி வாசிகையின் நாப்பண்-கூட்டமாகிய மணிகளாற் செய்தமாலையின் நடுவில், தேன்பூத்த தாமரையாள் - தேன்பொருந்திய செந்தாமரைமலரை யிடமாக வுடையவளாகிய பெரியபிராட்டி, மார்பில் ஆட - திருமார்பில் அசையாநிற்கவும், தென் அரங்கம் - தென்திருவரங்கத்தில் எழுந்தருளிய, மணவாளர் - அழகிய மணவாளரே, ஊசல் ஆடிர் - ஊசலாடுவீராக. எ-று.

கான்பூத்த தனிச்செல்வன் சிலையென்றது வான வில்லை. இது இவ்விடத்தில் பல நிறங்களுள்ள மணிகளாற் செய்த மாலைக்கு உவமையாயிற்று. மின்னற் கருமுகில் என்றது பெரிய பிராட்டியைத் திருமார்பிலுடைய திருமாலுக்கு உவமை.

௪. பூசுரரும்புரவலரும்வானநாட்டுப்
புத்தேளிர்க்குழுவுமவர்பூவைமாரும்
வாசவனுமலரயனுமழுவலானும்
வணங்குவானவசரம்பார்த்திணங்குகின்றார்
தூசுடையகொடித்தடந்தேர்மானந்தோன்றச்
சுடரிரண்டும்பகல்விளக்காத்தோன்றத்தோன்றும்
தேசுடையதிருவரங்கராடிரூசல்
ஸ்ரீரங்கநாயகியோடாடிரூசல்.

(இ-ள்.) பூசுரரும் - பிராமணரும், புரவலரும் - அரசரும், வான நாட்டு புத்தேளிர்குழுவும் - விண்ணுலகிலுள்ள தேவர் கூட்டமும், அவர் பூவைமாரும் - அவர்களுடைய மனைவியரும், வாசவனும் - இந்திரனும், மலர் அயனும்-தாமரை மலரில் வாழ்கின்ற பிரமனும், மழுவலானும் - சிவனும், வணங்குவான் - தொழுதற்கு, அவசரம்பார்த்து இணங்குகின்றார் - சமயம் பார்த்துக் கூடுகின்றார்கள், தூசு உடைய கொடி தடம் தேர் - கொடியாடைகள் கட்டிய பெரிய தேர்களும், மானம் - விமானங்களும், தோன்ற-தோன்றலால், சுடர் இரண்டும்-இரு சுடர்களும், பகல் விளக்கு ஆக தோன்ற-பகற்கால விளக்குப்போலத் தோன்றும்படி, தோன்றும்-காணப்படுகிற, தேசு உடைய - ஒளியுள்ள, திருவரங்கர் - திருவரங்கத்தை யுடையவரே, ஊசல் ஆடிர்-ஊசல் ஆடுவீராக, ஸ்ரீரங்கநாயகியோடு ஆடிர் ஊசல்-ஸ்ரீரங்கநாயகியோடு கூடி ஊசல் ஆடக்கடவீர். எ-று.

தூசுடைய கொடித்தடந் தேர்மானந் தோன்றச் சுடரிரண்டும் பகல்விளக்காத் தோன்றத்தோன்றும் தேசுடைய என்றதனால் தேர் விமானம் இவைகளின் ஒளிக்குமுன், சூரிய சந்திரர்களுடைய ஒளி மழுங்கிப் பகற்காலத்திலிட்ட விளக்குப்போலப் பயன்படா என்றவாறாயிற்று.

ரு. மலைமகளுமரனுமொருவடந்தொட்டாட்ட
வாசவனுஞ்சசியுமொருவடந்தொட்டாட்டக்
கலைமகளுமயனுமொருவடந்தொட்டாட்டக்
கந்தனும்வள்ளியுங்கலந்தோர்வடந்தொட்டாட்ட
அலைமகரப்பாற்கடலுளவதரித்த
வலர்மகளுநிலமகளுமாயர்காதல்
தலைமகளுமிருமருங்கிலாடவெங்க
டண்ணரங்கமணவாளராடிரூசல்.

(இ-ள்.) மலைமகளும் அரனும் - பார்வதியும் சங்கரனும், ஒரு வடம் தொட்டு ஆட்ட - ஒருவடத்தைத் தொட்டு அசைக்கவும், வாசவனும் சசியும்-இந்திரனும் இந்திராணியும், ஒருவடம் தொட்டு ஆட்ட-

ஒரு வடத்தைத்தொட்டு அசைக்கவும், கலைமகளும் அயனும் - சரசுவதியும் பிரமனும், ஒருவடம் தொட்டு ஆட்ட - ஒருவடத்தைத்தொட்டு அசைக்கவும், கந்தனும் வள்ளியும்கலந்து - முருகரும்வள்ளியும் கூடி, ஓர் வடம் தொட்டு ஆட்ட-ஒருவடத்தைத்தொட்டு அசைக்கவும், அலைமகரம் பால்கடலுள் - அலைகளையும் மகரமீன்களையுமுடைய பாற்கடலில், அவதரித்த - அவதரித்தருளிய, அலர்மகளும் - செந்தாமரைமலரை இடமாகவுடைய சீதேவியும், நிலமகளும் - பூதேவியும், ஆயர் - இடையர்பெற்ற, காதல்-விருப்பத்தையுடைய, தலைமகளும்-நாயகியாகிய நீளாதேவியும், இருமருங்கில் ஆட-இரண்டுபக்கங்களில் அசையாநிற்கவும், எங்கள் - எங்களுக்கு உத்தேசியமான, தண் அரங்கம் - குளிர்ச்சியுள்ள திருவரங்கத்தில் எழுந்தருளிய, மணவாளர்-அழகியமணவாளரே, ஊசல் ஆடிர்-ஊசல் ஆடுவீராக. எ-று.

நீளாதேவியை நப்பின்னைப்பிராட்டி என்பர்.

௬. திருவழுதிவளநாடன்பொருனைச்சேர்ப்பன்
சீபராங்குசமுனிவன்வகுளச்செல்வன்
தருவளருங்குருகையர்கோன்காரிமாறன்
சடகோபன்றமிழ்வேதந்தியர்பாடக்
கருணைபொழிமுகமதியங்குறுவேர்வாடக்
கரியகுழல்கத்தூரிநாமத்தாட
அருகிருக்குந்தேவியர்களதுகொண்டாட
வணியரங்கத்தெம்பெருமானூடிரூசல்.

(இ-ள்.) வளம் - வளம் பொருந்திய, திருவழுதிநாடன் - திருவழுதி நாட்டையுடையவன், பொருனைச் சேர்ப்பன் - பொருனைத்துறையுடையவன், சீபராங்குசமுனிவன் - ஸ்ரீ பராங்குசமுனிவன், வகுளம் செல்வன்-மகிழமலர் மாலையையணிந்த செல்வன், தரு வளரும் குருகையர்கோன் - பலவகை மரச்சோலைகள் ஓங்குகின்ற திருக்குருகூரர்க்குத் தலைவன், காரிமாறன் - காரிமாறன், சடகோபன் - சடகோபன், (அவனாலருளிச் செய்யப்பட்ட) தமிழ் வேதம் - தமிழ் வேதத்தை, ததியர்பாட - பாகவதர்பாடா நிற்கவும், கருணைபொழி-கிருபையைச்சொரிகின்ற, முகம் மதியம் - முகமாகிய சந்திரனிடத்தில், குறு வேர்வு ஆட - குறு வேர்வையுண்டாகவும், கரியகுழல் - கருமையாகிய சிகை, கத்தூரி நாமத்து ஆட - கஸ்தூரி திலகத்துடன் கூடி அசையவும், அருகு இருக்கும் தேவியர்கள் - சமீபத்திலிருக்கும் தேவிமார், அது கொண்டாட-அந்த வைபவத்தைக் கொண்டாடவும், அணி - அழகாகிய, அரங்கத்து - திருவரங்கத் தெழுந்தருளிய, எம்பெருமான் - எம்பெருமானே, ஊசல் ஆடிர்-ஊசல் ஆடுவீராக. எ-று.

காரி என்பது நம்மாழ்வார் தந்தையின் திருநாமம். ததீயர் - பாகவதர். திருவழுதிவளநாடன் என்பது முதல் சடகோபன் என்பதீறுயின ஒருபொருண்மேற் பலபெயராய் வந்தன.

எ. வையமொருபொற்றகட்டுத்தகளியாக
வார்கடலேநெய்யாகவதனுட்டேக்கி
வெய்யகதிர்விளக்காகச்செஞ்சொன்மாலே
மெல்லடிக்கேசூட்டினுன்மேன்மைபாடத்
துய்யமதிமண்டலத்தின்மறுவேயொப்பச்
சோதிவிடுகத்தூரிதுலங்குநாமச்
செய்யதிருமுகத்தரங்கராடிரூசல்
ஸ்ரீரங்கநாயகியோடாடிரூசல்.

(இ-ள்.) வையம் - உலகமே, ஒரு பொன் தகடு தகளி ஆக - ஒப்பற்ற பொன்தகட்டினுற்செய்த அகலாகவும், வார்கடலே நெய் ஆக - நீண்ட கடலே நெய்யாகவும், அதனுள் தேக்கி - அதினுள்ளே நிறைத்து, வெய்ய கதிர் விளக்கு ஆக - சூரியனே விளக்காகவும் (கொண்டு), செஞ்சொல் மாலே - செவ்வியசொல் மாலேயை, மெல் அடிக்கே சூட்டினுன் - மென்மையாகிய திருவடியிலணிந்தவராகிய பொய்கையாழ்வாருடைய, மேன்மைபாட - ஏற்றத்தைத் ததியர் எடுத்துப்பாட, துய்ய மதி மண்டலத்தில் - பரிசுத்தமாகிய சந்திர வட்டத்துள்ள, மறுவே ஒப்ப - களங்கத்தையே நிகர்க்க, சோதிவிடு - ஒளி வீசுகின்ற, துலங்கும் கத்தூரிநாமம் - விளங்குகின்ற கஸ்தூரித் திலகமணிந்த, செய்ய திருமுகத்து - செவ்விய அழகுவாய்ந்த முகத்தையுடைய, அரங்கர் - திருவரங்கரோ, ஊசல் ஆடிர் - ஊசல் ஆடுவீராக, ஸ்ரீரங்கநாயகியோடு ஆடிர் ஊசல் - ஸ்ரீரங்கநாயகியோடு ஊசல் ஆடுவீராக. எ-று.

"வையந்தகளி யாவார்கடலே நெய்யாக
வெய்யகதிரோன்விளக்காகச் - செய்ய
சுடராழியானடிக்கே சூட்டினன் சொன்மாலே
இடராழி நீங்குகவேயென்று."

இதுபொய்கையாழ்வார் அருளியமுதல் திருவந்தாதி முதற்பாட்டு.

அ. அன்பென்னுநன்பொருளோர்தகளியாக
வார்வமேநெய்யாகவதனுட்டேக்கி
இன்புருகுசிந்தையிடுதிரியாஞானத்
திலகுவிளக்கேற்றினுனிசையப்பாடப்
பொன்புனையும்புகழுறையூர்வல்லியாரும்
புதுவைநகராண்டாளும்புடைசேர்ந்தாட

முன்பினும்பின்பழகியநம்பெருமாடொல்லை
மூவுலகுக்கும்பெருமாளாடிரூசல்

(இ-ள்.) அன்பு என்னும் - அன்பென்கிற, நன்பொருள்-நல்ல பொருளே, ஓர் தகளி ஆக - ஒரு அகலாக, ஆர்வமே நெய் ஆக அதனுள் தேக்கி - பத்தியே நெய்யாக அதனுள்ளே நிறைத்து, இன்பு உருகுசிந்தை - இனிதாயுருகுகின்றமனமே, இடுதிரி ஆ - அதிலிட்ட திரியாகவும், (கொண்டு) ஞானத்து இலகுவிளக்கு ஏற்றினன் - பிரகாசிக்கிற ஞானதீபத்தை யேற்றினவராகிய பூதத்தாழ்வாருடைய, இசையைப்பாட - புகழைத்ததியர் எடுத்துப் பாடாநிற்க, பொன் புரையும் - ஸ்ரீதேவியை நிகர்த்த, புகழ் - கீர்த்தியையுடைய, உறையூர்வல்லியாரும் - திருவுறையூர் நாய்ச்சியாரும், புதுவை நகர் ஆண்டாளும் - புதுவைநகரத்தில் அவதரித்த கோதையாரும், புடை சேர்ந்து ஆட - இருபக்கத்திலும் சேர்ந்து ஆடவும், முன்பினும் பின்பு அழகிய-முற்பக்கத்தினும் பிற்பக்கம் அழகுமிகுந்த, நம்பெருமாள்-நம்பெருமாளே, தொல்லை மூவுலகுக்கும் பெருமாள்-பழமையாகிய மூன்றுலகங்களுக்கும் பெருமாளே, ஊசல் ஆடிர் - ஊசல் ஆடுவீராக. எ-று.

"அன்பேதகளியாவார்வமே நெய்யாக
இன்புருகு சிந்தையிடுதிரியா - நன்புருகி
ஞானச்சுடர் விளக்கேற்றினே னாரணர்க்கு
ஞானத்தமிழ் புரிந்தநான்."

இது பூதத்தாழ்வார் அருளிய இரண்டாந்திருவந்தாதி முதற் பாட்டு.

௯. திருக்கண்டேன்பொன்மேனிகண்டேனென்ற
திகழருக்கனணிநிறமுந்திகிரிசங்கும்
இருட்கொண்டகருங்கங்குலிடையேகோவ
லிடைகழியிற்கண்டபிரானேற்றம்பாட
மருக்கொண்டகொன்றையான்மலரின்மேலான்
வானவர்கோன்முதலானோர்மகுடகோடி
நெருக்குண்டதாளரங்கராடிரூசல்
நீளைக்குமணவாளராடிரூசல்.

(இ-ள்.) திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் என்ற - திருக்கண்டேன் பொன்மேனி கண்டேனென்று சொன்னவரும், திகழ் அருக்கன் அணிநிறமும் திகிரி சங்கும் இருள்கொண்டகருங் கங்குல் இடையே கோவல் இடைகழியில் கண்ட - விளங்குகின்ற

சூரியனது அழகாகிய காந்தியையும் திருவாழி திருச்சங்குகளையும்
இருள் மிகுத்த கரிய இரவினிடைப் பொழுதில் திருக்கோவலூர்
வீட்டு நடையில் கண்டவரும் ஆகிய, பிரான் - பேயாழ்வாருடைய,
ஏற்றம்பாட - மேன்மையை எடுத்துப் பாடாநிற்க, மருகொண்ட-
வாசனையைக்கொண்ட, கொன்றையான்-கொன்றை மலர்மாலையை
யணிந்தவனாகிய உருத்திரனும், மலரின் மேலான் - தாமரை மலர்மீ
திருப்பவனாகிய பிரமனும், வானவர்கோன்-தேவர் பிரானாகிய இந்
திரனும், முதலானோர் - முதலானவருடைய, மகுடகோடி-கிரீடவரி
சைகள், நெருக்குண்ட - நெருங்கின, தாள் - திருவடியையுடைய,
அரங்கர்-திருவரங்கரே, ஊசல் ஆடிர்-ஊசலாடுவீராக, நீளைக்கு மண
வாளர்-நீளாதேவிக்கு மணவாளரே, ஊசல் ஆடிர்-ஊசலாடுவீராக.

"திருக்கண்டேன் பொன்மேனிகண்டேன் திகழும்
அருக்கனணி நிறமுங்கண்டேன் - செருக்கிளரும்
பொன்னாழிகண்டேன் புரிசங்கைக் கண்டேன்
என்னாழி வண்ணன் பாலின்று."

இது பேயாழ்வார் அருளிய மூன்றாந்திருவந்தாதி முதற்பாட்டு.

௧௦. நான்முகனைநாரணனேபடைத்தானந்த
நான்முகனுநக்கபிரானைப்படைத்தான்
யான்முகமாயந்தாதியறிவித்தேனென்
றியார்க்கும்வெளியிட்டபிரானியல்பைப்பாடப்
பான்முகமார்வளைநேமிபடைகள்காட்டப்
பாசடைகடிருமேனிப்படிவங்காட்டத்
தேன்முகமாமுளரியவயவங்கள்காட்டச்
செழுந்தடம்போலரங்கேசராடிரூசல்.

(இ-ள்.) நான்முகனை நாரணனே படைத்தான் அந்த நான்
முகனும் நக்கபிரானை படைத்தான் யான் முகமாய் அந்தாதி அறி
வித்தேன் என்று - பிரமனைத் திருமாலே சிருஷ்டித்தான் அந்தப்
பிரமனும் சிவபிரானைச் சிருட்டித்தான் யான் அதனை அந்தாதிவாயி
லாகத் தெரிவித்தேனென்று, யார்க்கும்-யாவருக்கும், வெளியிட்ட-
பிரசித்தப்படுத்தின, பிரான்-திருமழிசைப் பிரானது, இயல்பை-நற்
குணங்களை, பாட - ததீயர் எடுத்துப்பாடாநிற்க, படைகள்-ஆயுதங்
கள், பால் முகம் ஆர்வளை - வெண்ணிறத்தைத் தன்னிடத்துப் பொ
ருந்திய சங்கங்களையும், நேமி - சக்ரவாகப் பறவைகளையும், காட்ட-
காட்டுதலாலும், திருமேனிபடிவம் - திருமேனியின் உருவம், பாசு
அடைகள்-பசிய இலைகளை, காட்ட - காட்டுதலாலும், அவயவங்கள் -
திருக்கண்கள் முதலிய அவயவங்கள், தேன்முகம் ஆம்-தேனைத் தன்
னிடத்துக்கொண்டிருக்கிற, முளரி காட்ட - தாமரைமலரி னுருவத்

லைதக்காட்டுதலாலும், செழுதடம்போல் - செழுமையாகிய தடாகத்தை யொத்திருக்கின்ற, அரங்கேசர்-ஸ்ரீ ரங்கநாதரே, ஊசல் ஆடிர்-ஊசலாடியருள்வீராக. எ-று.

"நான்முகனை நாராயணன் படைத்தானான் முகனும்
தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான் - யான்முகமாய்
அந்தாதி மேலிட்டறிவித் தேனாழ்பொருளைச்
சிந்தாமற் கொண்மினீர்தேர்ந்து.

இது திருமழிசைப்பிரான் அருளிய நான்காந் திருவந்தாதிமுதற் பாட்டு. படைகள் - சங்குசக்ரங்கள்.

௧௧. மருளிரியமறமிரியவனைத்துயிர்க்கு
மயலிரியவினையிரியமறையின்பாடல்
இருளிரியவென்றெடுத்துத்தொண்டர்தங்க
ளிடரிரியவுரைத்தபிரானிட்டம்பாட
அருளிரியவறமிரியவுலகையாண்ட
வாடகத்தோனகம்பரனென்றபிமானித்த
பொருளிரியச்சொல்லிரியமார்வங்கீண்ட
பொன்னிசூழ்திருவரங்கராடிரூசல்.

(இ-ள்.) மருள் இரிய - மருட்சி நீங்கவும், மறம் இரிய-பாபம் நீங்கவும், அனைத்து உயிர்க்கும் - எல்லாஜீவராசிகளுக்கும், மயல் இரிய-மயக்கம் நீங்கவும், வினை இரிய-தீவினைகள் நீங்கவும், தொண்டர் தங்கள் - அடியார்களுடைய, இடர் இரிய - துன்பம் நீங்கவும், மறை இன் பாடல் - வேதமாகிய இனிய பாடலின் அர்த்தத்தை, இருளிரிய என்று எடுத்து - இருளிரிய என்று தொடங்கி, உரைத்த பிரான்-சொல்லியருளிய குலசேகரப் பெருமாளுடைய, இட்டம்-அன்பின் பெருமையை, பாட - தியர் எடுத்துப்பாடாநிற்க, அருள் இரிய - கிருபை நீங்கவும், அறம் இரிய - தருமம் நீங்கவும், உலகை ஆண்ட - பூமியை ஆண்ட, ஆடகத்தோன் - இரணியன், அகம்பரன் என்று அபிமானித்த - நானே பரன் என்று அபிமானித்திருந்த, பொருள் இரிய - அஹங்காரமாகிய பொருள் நீங்கவும், சொல் இரிய-அந்தப் பொருளுக்கிடமாகிய சொல் நீங்கவும், மார்வம் கீண்ட-அவனது மார்பைப்பிளந்த, பொன்னி சூழ் திருவரங்கர் - திருக்காவிரியாறு சூழ்ந்த திருவரங்கம் பெரிய கோயிலில் எழுந்தருளியிருப்பவரே, ஊசல் ஆடிர்-ஊசலாடுவீராக. எ-று.

"இருளிரியச் சுடர்மணிகளிமைக்கு நெற்றியினத்துத்தியணி பணமாயிரங்களார்ந்த - அரவரசப்பெருஞ் சோதியநந்தனென்னு மணிவிளங்கு முயர்வெள்ளையணையை மேவித் - திருவரங்கப் பெருநகருட்டெண்ணீர்ப் பொன்னி திரைக்கையாலடிவருடப் பள்ளி

கொள்ளும் - கருமணியைக் கோமளத்தைக் கண்டுகொண்டேன் கண்ணிணைகளென்று கொலோ களிக்கு நாளே" இது குலசேகரப் பெருமாள் அருளிய முதலாவது இருளிரியச்சுடர் மணியில் முதற் பாட்டு. ஆடகம் - பொன். இதற்குப்பரியாயம் இரணியம் ஆதலால் இரணியனை ஆடகத்தோன் என்றார்.

கஉ. அரனென்றுமயனென்றும் புத்தனென்று
மலற்றுவார்முன்றிருநாரணனேயாதிப்
பரனென்றுமறையுரைத்துக்கிழியறுத்த
பட்டர்பிரான்பாடியபல்லாண்டுபாடக்
கரனென்றமாரீசன்கவந்தனென்ற
கண்டகராருயிர்மடியக்கண்டிலங்கா
புரம்வென்றசிலையரங்கராடிரூசல்
புகழுறையூர்வல்லியோடாடிரூசல்.

(இ-ள்.) அரன் என்றும் - (பரம்பொருள்) சிவனே என்றும், அயன் என்றும் - பிரமனே என்றும், புத்தன் என்றும் - புத்தனே என்றும், அலற்றுவார்முன் - இரைவோர்களாகிய சைவர்முதலிய பிறமதஸ்த்தர்களுக்கு முன், திருநாரணனே - ஸ்ரீமந்நாராயணனே, ஆதிப்பரன் என்று - முதன்மையாகிய பரம் பொருள் என்று, மறை உரைத்து - அவ்விடத்திற்கு வேண்டிய வேதவாக்கியங்களைச் சொல்லி, கிழி அறுத்த-வித்யாசுல்கத்தை அறுத்த, பட்டர்பிரான் பாடிய-பெரியாழ்வார் பாடியருளிய, பல்லாண்டு - திருப்பல்லாண்டை, பாட-ததியர் எடுத்துப்பாடாநிற்க, கரன் என்ற-கரன் என்று சொல்லப்பட்டவனும், மாரீசன் கவந்தன் என்ற-மாரீசன் கவந்தன் என்று சொல்லப்பட்டவர்களும் ஆகிய, கண்டகர் - அசுரர்கள், ஆர் உயிர் மடியகண்டு-அரியவுயிர் நீங்கும்படி பார்த்து, இலங்காபுரம் வென்ற-இலங்கா நகரத்தை யழித்த, சிலை-கோதண்டத்தை யேந்திய, அரங்கர் - ஸ்ரீரங்கநாதரே, ஊசல் ஆடிர் - ஊசலாடுவீராக, புகழ் உறையூர் வல்லியோடு - கீர்த்தியையுடைய உறையூர் நாய்ச்சியாரோடு கூடி, ஊசல் ஆடிர்-ஊசலாடுவீராக. எ று.

கிழி-கிதிப்பொதி, கண்டகம்-முள், அது பிறர்க்கு வருத்தமுண்டாக்குதல்போல அசுரர்களும் பிறர்க்கு வருத்தமுண்டாக்குதலால் அவர்களைக் கண்டகர் என்றார்; அன்றிக் கண்டகம் ஊசிமுனையெனக் கொண்டு அதுபோலப் பிறரை வருத்துவோர் எனினும் அமையும். கண்டகர் - அற்பசத்துருக்களுக்கும் பெயர்.

கங. மருமாலைப்பசுந்துளவத்தொடைகளோடு
வைகறையில்வந்து திருத்துயிலுணர்த்தித்
திருமாலைதிருவடிக்கேசூட்டிநிற்கும்
திருமண்டங்குடிப்பெருமான்சீர்மைபாடப்

பெருமாலேயடைந்துலகமதிமயங்கப்
பேணூதார்படக்கதிரோன்காணூதேக
ஒருமாலேபகலிலழைத்தொளித்தநேமி
யொளியுள்ளாரரங்கேசராடிரூசல்.

(இ-ள்.) மரு - வாசனை பொருந்திய, மாலை - திருமாலையாகிய, பசு - பசுமையுள்ள, துளவத் தொடைகளோடு - துளசிமாலைகளோடு, வைகறையில் வந்து - அருணோதயகாலத்தில் வந்து, திருத்துயில் உணர்த்தி - திருப்பள்ளியுணர்த்தி, திருமாலை - திருமாலை என்னும் பிரபந்தத்தையும், திருவடிக்கே சூட்டி நிற்கும் - திருவடியிலே அணிந்து நிற்கிற, திருமண்டங்குடிப் பெருமான் - திருமண்டங் குடியில் அவதரித் தருளிய தொண்டரடிப்பொடி யாழ்வாருடைய, சீர்மை- சிறப்பை, பாட - ததியர் எடுத்துப் பாடாநிற்க, உலகம் - உலகமானது, பெருமாலை அடைந்து - பெரிய மயக்கத்தை அடைந்து, மதி மயங்க - அறிவுகலங்கவும், பேணூதார்பட - சத்துருக்கள் மடியவும், கதிரோன் காணூது ஏக-சூரியன் தோன்றூது மறையவும், ஒருமாலை- ஒரு மாலைக்காலத்தை, பகலில் அழைத்து - பகற்காலத்தில் வரவழைத்து, ஒளித்த - மறைத்த, நேமி-திருவாழியின், ஒளி உள்ளார்- தேஜஸ்ஸையுடையவராகிய, அரங்கேசர் - ஸ்ரீ ரங்கநாதரே, ஊசல் ஆடிர்-ஊசலாடுவீராக. எ-று.

திருமாலை என்றது திருப்பள்ளி யெழுச்சிக்கும் கொள்க.

கச. காரங்கத்திருவுருவஞ்செய்யபாத
கமலமுதன்முடியளவுங்கண்டுபோற்றச்
சாரங்கமுனியையூர்ந்தமலனூதி
தனையுரைத்தபாண்பெருமாடகைமைபாட
ஆரங்கொள்பாற்கடல்விட்டயனூரேறி
யயோத்திநகரிழிந்துபொன்னியாற்றிற்சேர்ந்த
ஸ்ரீரங்கமணவாளராடிரூசல்
ஸ்ரீரங்கநாயகியோடாடிரூசல்.

(இ-ள்.) கார் அங்கம் திரு உருவம் - நீல மேகம்போன்ற திருமேனியின் திருவுருவத்தை, செய்ய பாத கமலமுதல் - செம்மையாகிய திருவடித் தாமரை முதலாக, முடி அளவும் - திருமுடிவரைக்கும், கண்டுபோற்ற - கண்டு வணங்க, சாரங்க முனியை ஊர்ந்து - லோக ஸாரங்க முனிவரை வாஹநமாகச் செலுத்திவந்து, அமலனாதி தனை உரைத்த - அமலனாதிப்பிரான் என்னும் ப்ரபந்தத்தைச் சொல்லியருளிய, பாண்பெருமாள் தகைமைபாட - திருப்பாணாழ்வாருடைய பெருமையைத் ததியர் எடுத்துப்பாடா நிற்க, ஆரம் கொள்- முத்துகளைக்கொண்டிருக்கிற, பால் கடல்விட்டு - திருப்பாற்கடலை

நீங்கி, அயன் ஊர் ஏறி - பிரமலோகத்தில் ஏறி, அயோத்திநகர் இழிந்து - திருவயோத்யா நகரத்தில் இறங்கி, பொன்னி ஆற்றில் சேர்ந்த - திருக்காவிரியாற்றி னிடையிற்பொருந்திய, சீரங்கம்-திருவரங்கம் பெரியகோயிலில் எழுந்தருளிய, மணவாளர் - அழகிய மணவாளரே, ஊசல் ஆடிர் - ஊசலாடுக, சீரங்க நாயகியோடு ஊசல் ஆடிர் - ஸ்ரீரங்க நாயகியாரோடு ஊசலாடுக. எ-று.

லோகசாரங்க முநிவரை யூர்ந்ததனால் இவரை முநிவாஹந ரென்றுங் கூறுவர். பெரியபெருமாள் ஆதியில் க்ஷீராப்திநாதனாயிருந்து, பிறகு சத்தியலோகத்தில் பிரம தேவனுக்குத் திருவாராதநமாயிருந்து, அதின் பிறகு திருவயோத்யையில் சூரியகுலத்தரசர்களாகிய இக்ஷ்வாகு முதலியோர்க்குத் திருவாராதநமாயிருந்து, அதின் பிறகு ஸ்ரீவிபீஷணாழ்வானால் இந்தத் திருப்பதியில் பிரதிஷ்டிக்கப் பட்டமையால், "ஆரங்கொள்பாற் கடல்விட்டயனூரேறி அயோத்திநகரிழிந்து பொன்னியாற்றிற் சேர்ந்த சீரங்கமணவாளர்" என்றார்.

கரு. விழிபறித்துவெள்ளியைமாவலியைமண்ணும்
விண்ணுலகும்பறித்தகுறள்வேடத்தும்மை
வழிபறித்துமந்திரங்கொண்டன்பர்தங்கள்
வல்வினையைப்பறித்தபிரான்வண்மைபாடச்
சுழிபறித்தகங்கைமுடியடியிற்றோயத்
தொழுதிரக்குமுக்கணனுன்முகனைச்செய்த
பழிபறித்துப்பலியொழித்தாராடிரூசல்
பள்ளிகொண்டதிருவரங்கராடிரூசல்.

(இ-ள்.) வெள்ளியை - சுக்கிரனை, விழிபறித்து-கண்பறித்து, மாவலியை - மஹாபலியினிடத்தினின்றும், மண்ணும் விண்ணுலகும் பறித்த-பூலோகத்தையும் சுவர்க்கலோகத்தையும் கவர்ந்துகொண்ட, குறள்வேடத்து உம்மை - வாமநரூபத்தையுடைய உம்மை, வழி பறித்து - வழி கட்டிப்பறித்து, மந்திரம் கொண்டு-திருமந்த்ர உபதேசம்பெற்று, அன்பர் தங்கள் - பக்தருடைய, வல்வினையை-வலிய வினையை, பறித்த-நீக்கிய, பிரான்-திருமங்கைமன்னனது, வண்மை-ஏற்றத்தை, பாட - ததீயர் எடுத்துப்பாடாநிற்க, சுழிபறித்த கங்கை முடி - சுழிநீங்கிய கங்காநதியையுடைய சிரமானது, அடியில் தோய - திருவடியிற்பொருந்தும்படி, தொழுது - வணங்கி, இரக்கும்-பிரார்த்தித்த, முக்கணன் - திரிநேத்திரங்களையுடைய சிவன், நான்முகனை செய்த-பிரமனுக்குத் தீமை செய்ததனாலுண்டாகிய, பழிபறித்து - நிந்தையை நீக்கி, பலி ஒழித்தார் - பிக்ஷை ஏற்பதை ஒழித்தவரே, ஊசல் ஆடிர்-ஊசலாடுக, பள்ளிகொண்ட திருவரங்கர்-

சயநத்திருக்கோலமா யெழுந்தருளி யிருக்கின்ற ஸ்ரீரங்கநாதரே, ஊசல் ஆடிர்-ஊசலாடுக. எ-று.

வெள்ளியை விழிபறித்தது வாமநரூபமாய் வந்தகாலத்தில். மாவலியை மண்ணும் விண்ணுலகும் பறித்தது த்ரிவிக்ரமனானகாலத்தில். முக்கணன் நான்முகனைச்செய்த பழி சிரம்கொய்தலாலுண்டாகிய பிரமஹத்திதோஷம். மந்திரம்-திருவஷ்டாக்ஷரம்.

திருமங்கையாழ்வார் காட்டில் செல்வோரை வழிகட்டிப்பறித்து, அப்பொருளைக் கொண்டு பாகவதர்களுக்குக் கைங்கரியஞ்செய்துவருகையில் ஸ்ரீமந்நாராயணன் பிராட்டியாரோடு பிராமணத் திருவுருக் கொண்டு அம்மார்க்கமாய் வந்தபோது எம்பெருமானையும் அவ்வாறே வழிகட்டிப்பறித்து, பின் அப்பொருளை எடுக்கப்போகையில் அது எடுபடாமைகண்டு ஆழ்வார் பிராமணவேடங்கொண்டுவந்த இறைவனைநோக்கி நீர் ஏதோ மந்திரஞ் செபித்திருக்கின்றீர், அதனை எனக்கு உபதேசஞ்செய்யாவிட்டால், உம்மை உயிரோடு விடேன் என்று பயமுறுத்துகையில், பிராமணனாகிய எம்பெருமான் ஆழ்வாரை அருகில் அழைத்துத் திருவஷ்டாக்ஷரமந்திரத்தை உபதேசித்துச் சேவைசாதித்தனர். அப்போது ஆழ்வார் அடியற்ற பனைபோல் நிலத்தில் விழுந்து தேவரீர் திருவாபரணங்களைக் கழற்றத்துணிந்தேனேயென்று பலபலசொல்லித் துக்கித்தபோது எம்பெருமானவர் அடியார்கள் பக்தியால் செய்தவையெல்லாம் நமக்கிஷ்டமேயென்று கருணையோடுநோக்கி, இனிச்சேகரிக்கும் பொருளைக்கொண்டு திருவரங்கத்தில் கைங்கரியஞ்செய்து நமது விஷயமாகத் தமிழில் தோத்திரங்களைப் பாடுகவென்று ஆக்யாபிக்க, ஆழ்வாரும் அவ்வாறேசெய்து, திருமந்திரார்த்தங்களைப் பக்தர்களுக்கு உபதேசித்து அவர்கள் வல்வினையைப்போக்கியருளியபடியால், "குறள்வேடத்தும்மை வழிபறித்து மந்திரங்கொண்டன்பர் தங்கள் வல்வினையைப்பறித்தபிரான்" என்றார்.

கசு. போதனார்நெட்டெழுத்துநமனாரிட்ட
குற்றெழுத்தும்புனலெழுத்தாய்ப்போகமாறன்
வேதமாயிரந்தமிழுமெழுதியந்நாண்
மேன்மைபெறுமதுரகவிவியப்பைப்பாட
ஓதமார்மீன்வடிவாயாமையேனத்
திருவாகியரிகுறண்மூவிராமராகிக்
கோதிலாக்கண்ணனாய்க்கற்கியாகுங்
கோயில்வாழரங்கேசராடிரூசல்.

(இ-ள்.) போதனார் நெட்டெழுத்தும்-பிரமன் எழுதின விதி எழுத்தும், நமனார் இட்ட குற்றெழுத்தும் - யமன் எழுதிவிட்ட மரணகால அளவையைக்குறிக்கும் எழுத்தும், புனல் எழுத்து ஆய்

போக - நீரின்மேலெழுதின எழுத்துக்கு நிகராகியழிய, மாறன் - நம்மாழ்வார் அருளிச்செய்த, வேதம்-தமிழ்வேதமென்கிற, ஆயிரம் தமிழும் எழுதி-ஆயிரம் தமிழ்ப்பாடல்களையும் பட்டோலைகொண்டு, அநாள் - அக்காலத்தில், மேன்மைபெறு - மேம்பாட்டையடைந்த, மதுரகவி-மதுரகவிகளுடைய, விருப்பை பாட - ஏற்றத்தைத்ததியர் எடுத்துப் பாடாநிற்க, ஓதம் ஆர் மீன்வடிவு ஆய் - கடலிலுள்ள மீன் உருவாகியும், ஆமை எனத்து உரு ஆகி - கூர்மம் வராகம் என்னும் இவற்றினுருவாகியும், அரிகுறள் மூன்று இராமர் ஆகி-நரசிங்கம் வாமநம பரசுராமர் தசரதராமர் பலராமர் என்னும் இவ்வுருவாகியும், கோது இல்லா கண்ணன் ஆய் - குற்றமற்ற கண்ணனாகியும், கற்கி ஆகும் - குதிரையுருவாகப்போகின்ற, கோயில் வாழ் - திருவரங்கம் பெரியகோயிலில் வாழ்கின்ற, அரங்கேசர்-திருவரங்கநாதரே, ஊசல் ஆடிர் - ஊசலாடுக. எ-று.

பிறப்புமுதல் இறப்பளவும் இன்னின்ன காலத்தில் இன்னின்ன சுகதுக்கங்களை அனுபவிக்கக்கடவன் என்று விரித்தெழுதப்படுதலால், பிரமனெழுத்தை நெட்டெழுத்தென்றும், கண்டவுடனே விரைந்துவரக்கடவாய் எனச் சுருக்கமாய் நியமித்தெழுதப்படுதலால் யமனனுப்பும் ஓலையெழுத்தைக் குற்றெழுத்தென்றும் கூறினர்.

கள. ஆரமுதினின்பமிகுசடகோபன்சொல்
லாயிரமுந்தெரிந்தெடுத்தேயடியார்க்கோதி
நாரதனுமனமுருகவிசைகள்பாடும்
நாதமுனிதிருநாமநலங்கள்பாடப்
பாரதனிற்பாரதப்போர்முடியமூட்டிப்
பகைவேந்தர்குலந்தொலையப்பார்த்தன்றெய்வத்
தேரதனில்வருமரங்கராடிரூசல்
ஸ்ரீரங்கநாயகியோடாடிரூசல்.

(இ-ள்.) ஆர் அமுதின் - அருமையாகிய அமிர்தத்தினும், இன்பம் மிகு - சுவைமிகுந்த, சடகோபன் சொல் ஆயிரமும் - நம்மாழ்வார் சொல்லியருளிய ஆயிரம் பாடல்களையும், தெரிந்து எடுத்து - ஆராய்ந்தெடுத்து, அடியார்க்கு ஓதி - தொண்டருக்குக் கற்பித்து, நாரதனும் மனம் உருக - (இசை பாடலில் வல்லோனான) நாரதனும் மனங் கரையும்படி, இசைகள் பாடும் - பண்களையமைத்துப் பாடுகின்ற, நாதமுனி - ஸ்ரீமந் நாதமுநிகளுடைய, திருநாம நலங்கள் - திருநாமத்தின் ஏற்றங்களை, பாட - ததியர் எடுத்துப்பாடாநிற்க, பாரதனில் - உலகத்தில், பாரதப்போர் - பாரதயுத்தத்தை, முடிய மூட்டி - முழுதும் மூள்வித்து, பகைவேந்தர் குலம் தொலைய - சத்துரு ராஜாக்களுடைய வம்சம் அற்றொழிய, பார்த்தன்-

அருச்சுநனுடைய, தெய்வத்தேரதனில் - தெய்விகமாகிய தேரின்மீது, வரும் - எறிவந்த, அரங்கர்-திருவரங்கரே, ஊசல் ஆடிர்-ஊசலாடுக, சீரங்கநாயகியோடு-ஸ்ரீரங்கநாயகியோடு, ஊசல் ஆடிர்-ஊசலாடுக.

பகைவேந்தர் - துரியோதனன் முதலானோர். பார்த்தன் - பிரதையின் புதல்வன். பிரதை-குந்தி. பூமியைப்போலும் பொறுமையுடையாள்.

கஅ. வம்பமருஞ்சிகைமுந்நூறரித்தஞானி
வாதியரைவெல்லாளவந்தார்க்கன்பாம்
எம்பெருமானார்க்கெட்டுமிரண்டும்பேசி
யிதமுரைத்தபெரியநம்பியிரக்கம்பாடத்
தும்புருநாரதர்நாதகீதம்பாடத்
தொண்டர்குழாமியல்பாடச்சுருதிபாட
நம்பெருமாடிருவரங்கராடிரூசல்
நான்முகனார்தாதையாராடிரூசல்.

(இ-ள்.) வம்பு அமரும் - பரிமள மமைந்த, சிகை முந்நூல் தரித்த-சிகையையும் முப்புரிநூலையும் தரித்த, ஞானி - ஞானியாகிய, வாதியரை-வாதஞ்செய்வதில் வல்லவராகிய ஆக்கியாழ்வானை, வேல்-வாதத்தில் வென்ற, ஆளவந்தார்க்கு அன்பு ஆம்-ஸ்ரீயாளவந்தாரிடத்து அன்புள்ள, எம்பெருமானார்க்கு-ராமாநுஜருக்கு, எட்டும் இரண்டும் பேசி-திரு அஷ்டாக்ஷரத்தையும் துவயத்தையும் உபதேசித்து, இதம் உரைத்த-ஹிதார்த்தங்களை யெல்லாம் போதித்த, பெரியநம்பி-பெரியநம்பிகளுடைய, இரக்கம் - க்ருபாவிசேஷத்தை, பாட-ததீயர் எடுத்துப் பாடவும், தும்புரு நாரதர் நாத கீதம்பாட - தும்புரு நாரதர்கள் நாதகீதங்களைப்பாடவும், தொண்டர்குழாம் இயல்பாட சுருதிபாட-அடியார் கூட்டம் இயலைப்பாடவும் சுருதிகளைப்பாடவும், நம்பெருமாள் - நம்பெருமாளே, திருவரங்கர் - திருவரங்கரே, ஊசல் ஆடிர்-ஊசலாடுக, நான்முகனார் தாதையார் - சதுர்முகனுக்குத் தந்தையாரே, ஊசல் ஆடிர்-ஊசலாடுக. எ-று.

இயல் என்றது தமிழ் வேதபாராயணத்தை.

கசூ. ஐங்கோலுமொருகோலுநீர்க்கோலம்போ
லழியமுனிந்தறுசமயமகற்றியெங்கள்
செங்கோலேயுலகனைத்துஞ்செல்லமுக்கோ
திருக்கையிற்கொளெதிராசன்செயத்தைப்பாடச்
சங்கோலமிடும்பொன்னித்துறையினின்றே
தவழ்ந்தேறிமறுதொறுந்தாளமீனும்
நங்கோயினம்பெருமாளாடிரூசல்
நக்கன்மூதாதையாராடிரூசல்.

(இ-ள்.) ஐங்கோலும் - ஐந்து கோல்களும், ஒருகோலும்-ஒற்றைக்கோலும், நீர்க்கோலம்போல் அழிய முனிந்து - நீரிலிட்டகோலம்போல அழியும்படி கோபித்து, அறுசமயம் அகற்றி - அறுசமயங்களையும் நிக்கிரகித்து, எங்கள் செங்கோலே - எமது செங்கோலே, உலகு அனைத்தும் செல்ல - உலகமுழுதும் செல்லும்படி, முக்கோல் - முக்கோலை, திருகையில் கொள் - திருக்கரத்திற்கொண்ட, எதிராசன் செயத்தை - ரமாநுஜரது வெற்றியை, பாட - ததியார் எடுத்துப் பாடாநிற்க, சங்கு - சங்குகள், ஓலம் இடும் - சப்திக்கிற, பொன்னித்துறையில் நின்று - காவிரித்துறையினின்று, தவழ்ந்து ஏறி - ஊர்ந்தேறி, மறுகுதொறும் - தெருக்கள் தோறும், தரளம் ஈனும் - முத்துக்களைப் பெறுகின்ற, நம்-எமக்கு உத்தேசியமாகிய, கோயில் நம்பெருமாள் - திருவரங்கத்திலெழுந்தருளிய நம்பெருமாளே, ஊசல் ஆடிர்-ஊசலாடுக, நக்கன்மூதாதையார்-உருத்திரனுக்குப் பாட்டனாரோ, ஊசல் ஆடிர் - ஊசலாடுக. எ-று.

ஐங்கோல் - மன்மதனது பஞ்சபாணம், ஒரு கோல் - ஏகதண்டம். இவை நீர்க்கோலம்போலழிய என்றது இவை தம்மீது செல்லாவென்று குறிப்பித்தற்கு. முக்கோல்-திரிதண்டம். நக்நன் என்னும் வடமொழி நக்கன் என வந்தது. திகம்பரன் என்பது பொருள்.

௨௰. அவத்தப்புன்சமயச்சொற்பொய்யைமெய்யென்
றணிமிடறுபுழுத்தான்றன்னவையின்மேவிச்
சிவத்துக்குமேற்பதக்குண்டென்றுதீட்டுந்
திருக்கூரவேதியர்கோன்செவ்விபாடப்
பவத்துக்கம்பிணிநீங்கநரகந்தூரப்
பரமபதங்குடிமலியப்பள்ளிகொள்ளும்
நவத்துப்புச்செங்கனிவாய்க்கரியமேனி
நம்பெருமாளரங்கேசராடிரூசல்.

(இ-ள்.) அவத்தம் - பொய்யாகிய, புன்சமயச்சொல் பொய்யை - அற்பசமய வாக்கியங்களின் பொய்ப்பொருளை, மெய்யென்று-மெய்ப்பொருளென்று நம்பி, அணிமிடறு புழுத்தான் தன் - அழகிய கண்டம் புழுத்தவனாகிய கிருமிகண்டச் சோழனது, அவையில் மேவி - சபையிற்சென்று, சிவத்துக்குமேல் பதக்கு உண்டு என்று தீட்டும் - குறுணிக்குமேல் பதக்கு உளதென்று எழுதின, திருக்கூர வேதியர்கோன் செவ்வி-திருக்கூரத்தாழ்வானது வைபவத்தை, பாட-ததியர் எடுத்துப்பாடா நிற்க, பவதுக்கம்பிணிநீங்க-பிறவித் துன்பமும் பிணிகளும் நீங்கவும், நரகம் தூர - நரகக்குழிகள் தூர்ந்துபோகவும், பரமபதம் குடிமலிய - பரமபதத்திற் குடிகள் அதிகரிக்கவும், பள்ளிகொள்ளும் - சயனித்திருக்கிற, நவம்துப்பு

செம்கனிவாய் - நூதனமாகிய பவளம்போன்ற செவந்த கனிவாயை யும், கரியமேனி - கருமையாகிய திருமேனியையுமுடைய, நம்பெரு மாள்-நம்பெருமாளே, அரங்கேசர்-திருவரங்கேசரே, ஊசல் ஆடிர்- ஊசலாடுக. எ-று.

உக. சந்தாடும்பொழிற்பூதூர்முக்கோற்செல்வன்
றன்மருகனுகியிருதாளுமான
கந்தாடைக்குலதீபன்முதலியாண்டான்
கடன்ஞாலந்திருத்தியருள்கருணைபாடக்
கொந்தாருந்துளவாடச்சிறைவண்டாடக்
குழலாடவிழியாடக்குழைக்காதாட
நந்தாடக்கதையாடத்திகிரியாட
நன்மாடத்திருவரங்கராடிரூசல்.

(இ-ள்.) சந்து ஆடும் பொழில் - சந்தனமரங்கள் பொருந்திய சோலைசூழ்ந்த, பூதூர் - ஸ்ரீ பெரும்பூதூரில் அவதரித்தருளிய, முக் கோல் செல்வன் தன் மருகன் ஆகி - திரிதண்டமேந்திய யதிராஜரது மருமகனுகி, இருதாளும் ஆன-இரண்டு திருவடி நிலையுமான, கந் தாடைக்குலம்தீபன் - கந்தாடைக்குலத்துக்கு விளக்கம் போன்றவ னுகிய, முதலியாண்டான்-முதலியாண்டானது, கடல் ஞாலம் திருத்தி அருள்கருணை-கடல் சூழ்ந்த உலகத்தைத் திருத்தியருளியகிருபாவி சேஷத்தை, பாட - ததீயர் எடுத்துப் பாடாநிற்க, கொந்து ஆரும் துளவு ஆட-பூங்கொத்துக்கள் நிறைந்த துளசிமாலை அசையவும், சிறை வண்டு ஆட-சிறகுகளையுடைய வண்டுகள் அசையவும், குழல் ஆட- சிகை அசையவும், விழி ஆட-திருக்கண்கள் அசையவும், குழைகாது ஆட - குண்டலமணிந்த திருச்செவிகள் அசையவும், நந்து ஆட- பாஞ்சஜந்யம் அசையவும், கதை ஆட - திருக்கதை அசையவும், திகிரி ஆட - திருவாழி அசையவும், நல் மாடம் திருவரங்கர் - விலக்ஷணமானமாளிகைகள் நிறைந்த திருவரங்கத்தில் எழுந்தருளி யிருப்பவரே, ஊசல் ஆடிர்-ஊசல் ஆடுவீராக. எ-று.

உஉ. திருக்கலியனணுக்கர்திருப்பணிசெய்யன்பர்
ஸ்ரீரங்கநான்மறையோருள்ளூர்ச்செல்வர்
தருக்குமிசைப்பிரான்மார்பரளந்தார்பாதந்
தாங்குவோர்திருக்கரகந்தரித்துநிற்போர்
இருக்குமுதல்விண்ணப்பஞ்செய்வோர்வீரர்க்
கிறையவர்கள்சீபுண்டரீகர்மற்றும்
பெருக்கமுள்ளபரிகரங்கடொழுதாட்செய்யப்
பிரமமாந்திருவரங்கராடிரூசல்.

திருக்கலியன் அனுக்கர்
திருப்பணிசெய் அன்பர்
சீரங்கநான்மறையோர்
உள்ளூர்ச்செல்வர்
தருக்கும் இசைப்பிரான்மார்
பார் அளந்தார்பாதம் தாங்குவோர்
திருக்கரகம் தரித்து நிற்போர்
இருக்குமுதல் விண்ணப்பம் செய்வோர்
வீரர்க்கு இறையவர்கள்
சீபுண்டரீகர்

} இவர்களைப் பத்துவகைக் கொத்துளோர் என்பர். கொத்துளோர்-கூட்டமாயுள்ள தாசபூதர்.

மற்றும் - மேலுமுள்ள, பெருக்கம் உள்ள-அதிகரித்த, பரிகரங்கள்-பரிகரங்கள், தொழுது ஆள் செய்ய - வணங்கி அடிமை செய்ய, பிரமம் ஆம் - பிரமவஸ்துவாகிய, திருவரங்கர்-திருவரங்கரோ, ஊசல் ஆடிர்-ஊசல் ஆடுவீராக. எ-று.

௨௫. உடுத்திரளோவானவர்கள்சொரிந்தபூவோ
வுதித்தெழுந்தகலைமதியோவும்பர்மாதர்
எடுத்திடுகர்ப்பூரவாரத்திதானோ
யாந்தெளியோமின்றுநீள் திருக்கண் சாத்திப்
படுத்ததிருப்பாற்கடலுணின்றுபோந்து
பாமாலைபூமாலைபாடிச்சூடிக்
கொடுத்ததிருக்கோதையுடனாடிரூசல்
கோயின்மணவாளரோயாடிரூசல்.

(இ-ள்.) உடுத்திரளோ - நக்ஷத்ரக்கூட்டமோ, வானவர்கள் சொரிந்த பூவோ - தேவர்கள் பொழிந்தமலரோ, உதித்து எழுந்தகலை மதியோ-தோன்றியெழுந்தகலைகளையுடைய சந்திரனோ, உம்பர் மாதர் எடுத்திடு கர்ப்பூர ஆரத்திதானோ - தெய்வப்பெண்கள் எடுத்த கர்ப்பூர ஆலாத்தியோ, யாம் தெளியோம் - யாம்தெளிகிலோம், (இப்படிப்பட்ட வைபவத்துடன்) இன்று நீள் திருக்கண்சாத்தி - இன்று நீண்டதிருக்கண்மூடி, படுத்த திரு பால் கடலுள் நின்று போந்து- சயனித்த திருப்பாற்கடலினின்றும் எழுந்தருளிவந்து, பாமாலை பூமாலை - பாமாலைகளையும் பூமாலைகளையும், பாடி சூடி கொடுத்த- பாடியும் சூடியும் கொடுத்த, திருக்கோதையுடன்-ஸ்ரீ ஆண்டாளோடு, ஊசல் ஆடிர் - ஊசல் ஆடுக, கோயில் மணவாளரோ - கோயில்மணவாளரோ, ஊசல் ஆடிர்-ஊசல் ஆடுக. எ-று.

உடுத்திரளுக்கும் வானவர்கள் சொரிந்த பூவுக்கும் வேற்றுமை தெரிந்திலது, கலைமதிக்கும் கர்ப்பூர ஆரத்திக்கும் வேற்றுமை தெரிந்திலது எனக்கொள்க. பாமாலை பூமாலை பாடிச்சூடிக்கொடுத்த என்றமையால் பாமாலை பாடிக்கொடுத்த என்றும், பூமாலை சூடிக்கொடுத்த என்றும் கொள்க.

௨௪. வென்றிவேற்கருநெடுங்கண்ணசோதைமுன்னம்
வேர்வாடவிளையாடும்வெண்ணெயாட்டும்
குன்றுபோனாற்றடந்தோள்வீசியாடும்
குரவைதனைப்பிணைந்தாடுங்கோளராட்டும்
மன்றினூடுகந்தாடுமரக்காலாட்டும்
வலியரவிற்பாய்ந்தாடும் வடிவிலாட்டும்
அன்றுகாணாவிழந்தவடியோங்காண
அணியரங்கராசரோயாடிரூசல்.

(இ - ள்.) வென்றிவேல் - வெற்றிவேல்போன்ற, கருநெடுங்கண் - கருமையாகிய நீண்டகண்களையுடைய, அசோதைமுன்னம்- யசோதைப்பிராட்டிக்கெதிரில், வேர்வு ஆட - வெயர்வையுண்டாகும்படி, விளையாடும் - விளையாடுகின்ற, வெண்ணெய் ஆட்டும் - வெண்ணெய்க்கூத்தையும், குன்றுபோல் - மலைபோன்ற, தடம் நால்தோள்- பெரிய நான்குதோள்களை, வீசி ஆடும்-வீசியாடுகின்ற, குரவைதனைப் பிணைந்து ஆடும் - குரவைகோத்தாடுகின்ற, கோளர் ஆட்டும் - கோளர்கூத்தையும், மன்றினூடு உகந்து ஆடும்-அம்பலத்தில் களித்தாடுகின்ற, மரக்கால் ஆட்டும் - மரக்காற்கூத்தையும், வலி அரவில்-வலிய பாம்பின்மீது, பாய்ந்து ஆடும் - தாவியாடிய, வடிவில் ஆட்டும் - வடிவிற்கூத்தையும், அன்றுகாணா இழந்த அடியோம் காண - அந்நாளில் காணாமல் இழந்த அடியோங்கள் தரிசிக்கும்படி, அணி அரங்கராசரோ- அழகிய திருவரங்கநகரத்துக்கரசரோ, ஊசல் ஆடிர்-ஊசல் ஆடுக.

இதிற்கூறப்பட்ட குரவைக்கூத்து முதலியவை கிருஷ்ணாவதாரத்தில் ஆடினவை.வலியரவு என்றது காளிங்கனை.

௨௫. ஆரணங்களொருநான்குமன்பர்நெஞ்சும்
அணிசிலம்புமடிவிடாதூசலாட
வாரணங்குமுலைமடவார்கண்ணும்வண்டும்
வண்டௌவும்புயம்விடாதூசலாடக்
காரணங்களாயண்டரண்டமெல்லாம்
கமலநாபியிற்படைத்துக்காத்தழிக்கும்
சீரணங்குமணவாளராடிரூசல்.
சீரங்கநாயகனாராடிரூசல்.

(இ-ள்.) ஆரணங்கள் ஒருநான்கும்-வேதங்களோர் நான்கும், அன்பர்நெஞ்சும் - பத்தர்களுடையமனமும், அணிசிலம்பும் - அழகிய சிலம்புகளும், அடிவிடாது ஊசலாட-திருவடியைப்பற்றி ஊசலாட, வார் அணங்கும் முலைமடவார்கண்ணும்-கச்சு அழகுபெறுதற்கிடமாகிய ஸ்தநங்களையுடைய மாதர்கண்களும், வண்டும் - வண்டுகளும்-

வண்துளவும் - செழிய துளசிமாலையும், புயம்விடாது ஊசல் ஆட-தோள்களைப்பற்றி ஊசலாட, காரணங்கள் ஆய் - மூவகைக்காரணங்களுமாகி, அண்டர் அண்டம் எல்லாம் - உலகத்தார் உலகங்கள் என்னும் எல்லாவற்றையும், கமலநாபியில்படைத்து - திருவுந்தித்தாமரையில் சிருஷ்டித்து, காத்து - ரக்ஷித்து, அழிக்கும் - சம்ஹரிக்கிற, சீர்-சிறப்பும், அணங்கு-தெய்வத்தன்மையுமுள்ள, மணவாளர் - அழகிய மணவாளரே, ஊசலாடிர்-ஊசலாடுக, சீரங்கநாயகனார்-ஸ்ரீரங்கநாயகரே, ஊசலாடிர்-ஊசலாடுக. எ-று.

காரணங்களாய் என்றது முதற்காரணம், துணைக்காரணம், நிமித்தகாரணம் என்பவற்றை. சீர் அணங்கு மணவாளர் என்பதற்கு பெண்களுள் சிறந்த சீதேவிக்கு மணவாளர் என்றலுங்கூடும்.

உசு. அடித்தலத்திற்பரிபுரமுஞ்சிலம்புமாட
அணிமார்பிற்கௌத்துவமுந்திருவுமாடத்
தொடித்தலத்தின்மணிவடமுந்துளவுமாடத்
துணைக்கரத்திற்சக்கரமுஞ்சங்குமாட
முடித்தலத்திற்கருங்குழலுஞ்சுரும்புமாட
முகமதியிற்குறுவேர்வுங்குழையுமாடக்
கடித்தலத்திலரைநாணுங்கலையுமாடக்
காவிரிசூழரங்கேசராடிரூசல்.

(இ-ள்.) அடித்தலத்தில் - திருவடியில், பரிபுரமும் சிலம்பும் ஆட-பாதகிண்கிணியும் சிலம்பும் அசையவும், அணிமார்பில்-அழகிய மார்பில், கௌத்துவமும் திருவும் ஆட-கௌஸ்துபமணியும் திருமகளும் அசையவும், தொடித்தலத்தில் - திருத்தோளில், மணிவடமும் துளவும் ஆட-ரத்நஹாரமும் துளவமாலையும் அசையவும், துணைக்கரத்தில்-இரண்டுதிருக்கைகளிலும், சக்கரமும் சங்கும் ஆட-திருவாழியும் பாஞ்சஜந்யமும் அசையவும், முடித்தலத்தில் - திருமுடியில், கருகுழலும் சுரும்பும் ஆட - கரியசிகையும் வண்டுகளும் அசையவும், முகமதியில் - சந்திரன்போலும் திருமுகத்தில், குறுவேர்வும் குழையும் ஆட-குறுவெயர்வும் குண்டலமும் அசையவும், கடித்தலத்தில் - திருவரையில், அரைநாணும் கலையும் ஆட - அரைநாணும் திருப்பரிவட்டமும் அசையவும், காவிரிசூழ் - காவிரிநதிசூழ்ந்த, அரங்கேசர் - திருவரங்கத்துக்கிறைவரே, ஊசல் ஆடிர்-ஊசலாடுக. எ-று.

உஎ. பரந்தலைக்கும்பாற்கடலுட்பசுஞ்சுற்கொண்டல்
படிந்ததெனக்கிடந்தபடிபடிமேற்காட்டி
வரந்தழைக்கவிரண்டாற்றினடுவேதோன்றி
மண்ணுலகைவாழவைத்தவளத்தைப்பாடப்

புரந்தரற்கும்பெருமாளேயாடிரூசல்
போதனுக்கும்பெருமாளேயாடிரூசல்
அரன்றனக்கும்பெருமாளேயாடிரூசல்
அணியரங்கப்பெருமாளேயாடிரூசல்.

(இ-ள்.) பரந்து அலைக்கும் பால் கடலுள் - பரவி (அலைகளால் மணிமுதலியவற்றை) அலைக்கின்ற திருப்பாற்கடலில், பசு சூல் கொண்டல் படிந்தது என - பசுமையாகிய கருப்பங்கொண்ட மேகம் படிந்ததுபோல, கிடந்தபடி - கிடந்த பிரகாரத்தை, படிமேல் காட்டி - உலகத்திற் காட்டி, வரம்தழைக்க - அன்பர் வரங்கள் செழிக்க, இரண்டு ஆற்றின் நடுவே தோன்றி-உபயகாவேரியினிடையே தோன்றி, மண்ணுலகை வாழவைத்த - மண்ணுலகத்தை வாழ்வித்த, வளத்தைப்பாட - வண்மையைத் தநியர் எடுத்துப் பாடாநிற்க, புரந்தரற்கும் பெருமாளே - இந்திரனுக்கும் பெருமாளே, ஊசல் ஆடிர்- ஊசலாடுக, போதனுக்கும் பெருமாளே - பிரமனுக்கும் பெருமாளே, ஊசல் ஆடிர் - ஊசலாடுக, அரன் தனக்கும் பெருமாளே - உருத்திரனுக்கும் பெருமாளே, ஊசல் ஆடிர் - ஊசலாடுக, அணி அரங்கப் பெருமாளே - அழகிய திருவரங்கப்பெருமாளே, ஊசல் ஆடிர் - ஊசல் ஆடுக. எ-று.

உஅ. உடுமாயக்கதிருதிரச்சண்டவாயு
உலகலைப்பவடவைசுடவுததியேழும்
கெடுமாறுதிரிதருகாலுயிர்களெல்லாம்
கெடாதவயிற்றுள்ளிருத்துஞ்சீர்த்திபாட
நெடுமாயப்பிறவியெல்லாம்பிறந்திறந்து
நிலத்தோடும்விசும்போடுநிரயத்தோடும்
தடுமாறித்திரிவேனையருள்செய்தாண்ட
தண்ணரங்கநாயகனூராடிரூசல்.

(இ-ள்.) உடுமாய - நக்ஷத்திரங்கள் ஒளி மழுங்கவும், கதிர் உதிர - இருகதிர்களும் உதிரவும், சண்டவாயு உலகு அலைப்ப - ப்ரசண்டமாருதம் உலகை அலைக்கவும், வடவை சுட-வடவைத் தீச்சுடவும், உததி ஏழும் - கடல்கள் எழும், கெடும் ஆறு - அழியும் வண்ணம், திரிதருகால் - மாறுபடுங்காலத்தில், உயிர்கள் எல்லாம் கெடாது - ஜீவராசிகள் யாவும் அழியா வண்ணம், வயிற்றுள் இருத்தும் சீர்த்தி - திருவயிற்றுள் வைத்துக் காக்கின்ற பெருங்கீர்த்தியை, பாட - தநியர் எடுத்துப் பாடாநிற்க, நெடுமாயப் பிறவியெல்லாம் பிறந்து இறந்து - பெரிய மாயாகாரியமாகிய பிறவிகளிலெல்லாம் பிறந்து இறந்து, நிலத்தோடும் - மண்ணுலகத்திலும், விசும்போடும்- விண்ணுலகத்திலும், நிரயத்தோடும்-பாதாளலோகத்திலும், தடுமாறி

திரிவேனை - தடுமாறித்திரிகின்ற என்னை, அருள்செய்து ஆண்ட- கிருபைசெய்து ஆண்டருளின, தண் அரங்கநாயகனார் - குளிர்ந்த திருவரங்கத்துக்கு நாயகரோ, ஊசல் ஆடிர்-ஊசலாடுக. எ-று.

உகூ. முருகனுறைகுறிஞ்சித்தேன்முல்லைபாய
முல்லைநிலத்தயிர்பானெய்மருதத்தோட
மருதநிலக்கொழும்பாகுநெய்தற்றேங்க
வருபுனல்காவிரிசூழ்ந்தவளத்தைப்பாடக்
கருமணியேமரகதமேமுத்தேபொன்னே
கண்மணியேயாருயிரேகனியேதேனே
அருள்புரிவாயென்றவர்தம்மகத்துள்வைகும்
அணியரங்கமாளிகையாராடிரூசல்.

(இ-ள்.) முருகன் உறை குறிஞ்சி தேன் முல்லைபாய - முருகக்கடவுள் வசிக்கின்ற குறிஞ்சி நிலத்தேனானது முல்லை நிலத்திற் பாயவும், முல்லைநிலம் தயிர்பால் நெய் மருதத்து ஓட - முல்லைநிலத் தயிரும் பாலும் நெய்யும் மருத நிலத்திலோடவும், மருதநிலக்கொழும்பாகு நெய்தல் தேங்க - மருதநிலத்துக் கொழுமையாகிய வெல்லப்பாகு நெய்தனிலத்தில் நிறையவும், வரு - பெருகிவருகின்ற, புனல் - நீரையுடைய, காவிரி சூழ்ந்த வளத்தை - காவிரிநதிசூழ்ந்த வளப்பத்தை, பாட - தநியர் எடுத்துப் பாடாநிற்க, கருமணியே-நீலரத்நமே, மரகதமே - பச்சையே, முத்தே - முத்தமே, பொன்னே-சுவர்ணமே, கண்மணியே - கண்ணினுள்ளிருக்கும் மணியே, ஆர் உயிரே - அருமையாகிய உயிரே, கனியே - முக்கனியே, தேனே-தேனே, அருள்புரிவாய் என்றவர் தம்-கிருபைசெய்வாயென்று பிரார்த்தித்தவருடைய, அகத்துள் வைகும்-மனத்தில் தங்குகின்ற, அணி-அழகிய, அரங்கம் - திருவரங்கமாகிய, மாளிகையார் - திருமாளிகையையுடையவரே, ஊசல் ஆடிர்-ஊசலாடுக. எ-று.

கூ0. புண்டரிகத்தவன்றவஞ்செய்திறைஞ்சுங்கோயில்
புரிசடையோன்புராணஞ்செய்தேத்துங்கோயில்
பண்டிரவிகுலத்தரசர்பணிந்தகோயில்
பரிந்திலங்கைக்கோன்கொணர்ந்துபதித்தகோயில்
மண்டபமுங்கோபுரமுமதிலுஞ்செம்பொன்
மாளிகையுந்தண்டலையுமலிந்தகோயில்
அண்டர்தொழுந்திருவரங்கம்பெரியகோயில்
அமர்ந்துறையும்பெருமானாராடிரூசல்.

(இ-ள்.) புண்டரிகத்தவன் - பிரமன், தவம்செய்து - தவத்தைச்செய்து, இறைஞ்சும் கோயில் - வணங்குகின்றகோயில், புரிச

டையோன் - சிவன், புராணம்செய்து - புராண ப்ரவசநம்பண்ணி, ஏத்தும் கோயில் - துதிக்கின்றகோயில், பண்டு - முற்காலத்தில், இரவிகுலத்து அரசர் - சூரியவமிசத்தரசர், பணிந்தகோயில் - வணங்கினகோயில், பரிந்து - விரும்பி, இலங்கைக்கோன் - லங்காதிபனாகிய விபீஷணாழ்வான், கொணர்ந்து பதித்தகோயில் - கொண்டுவந்து பிரதிஷ்டை செய்தகோயில், மண்டபமும்-மண்டபங்களும், கோபுரமும் - கோபுரங்களும், மதிலும் - மதில்களும், செம்பொன் மாளிகையும் - செம்பொன்னாற் செய்யப்பட்ட மாளிகைகளும், தண்டலையும் - சோலைகளும், மலிந்தகோயில் - மிகுந்தகோயில், அண்டர்தொழும் - தேவர்கள் வணங்குகின்ற, திருவரங்கம் பெரியகோயில் - திருவரங்கம் பெரியகோவில், (இதில்) அமர்ந்து உறையும்-விரும்பி வாசம்பண்ணுகிற, பெருமானார் - எம்பெருமானாரே, ஊசல் ஆடிர்-ஊசலாடுக. எ-று.

௩௧. அருவரங்கடருபராங்குசனேயாதி
ஆழ்வார்கடம்பிரானாடிரூசல்
இருவரங்கவொளிக்ககலாவிருளகற்றும்
எதிராசன்றம்பிரானாடிரூசல்
தருவரங்கணீள்பொழில்கூரத்துவேதா
சாரியனார்தம்பிரானாடிரூசல்
திருவரங்கத்தணியரங்கத்திருமுற்றத்துத்
தெய்வங்கடம்பிரானாடிரூசல்.

(இ-ள்.) அருவரங்கள் தரு - அரியவரங்களைக் கொடுக்கின்ற, பராங்குசன் ஆதி-சடகோபன் முதலாகிய, ஆழ்வார்கள் தம்பிரான்-ஆழ்வார்களுக்குத் தலைவனே, ஊசல் ஆடிர்-ஊசல் ஆடுக, இருவர் - சூரிய சந்திரர்கள் என்னும் இருவருடைய, அங்கம் ஒளிக்கு அகலா-சரீரகாந்திக்கு நீங்காத, இருள் அகற்றும் - அஞ்ஞான இருளை நீக்குகின்ற, எதிராஜன் தம்பிரான்-யதித்தலைவனுக்குத் தலைவனே, ஊசல் ஆடிர்-ஊசலாடுக, தருவரங்கள் நீள்பொழில்-வ்ருக்ஷசிரேஷ்டங்கள் உயர்ந்திருக்கிற சோலை சூழ்ந்த, கூரத்து-திருக்கூரத்தில் அவதரித்த, வேதாசாரியனார் தம்பிரான் - கூரத்தாழ்வானுக்குத் தலைவனே, ஊசல் ஆடிர்-ஊசலாடுக, திரு அரங்கத்து அணி அரங்கம் திருமுற்றத்து-சிறந்த ஆற்றிடைக்குறையில் அழகிய திருவரங்கமென்னும் திருமுற்றத்தி லெழுந்தருளியிருக்கிற, தெய்வங்கள் தம்பிரான்-தேவர்கோனே, ஊசல் ஆடிர்-ஊசல் ஆடுக. எ-று.

௩௨. உணராதமதலையிளங்குதலைச்சொல்லை
உள்முருகித்தந்தைதாயுவக்குமாபோல்
தணவாமற்கற்பிப்பார்தஞ்சொற்கேட்டுத்
தத்தையுரைத்தத்தையாதரிக்குமாபோல்

பணவாளராமுடிமேற்படியேழ்போற்றும்
பட்டர்திருத்தாட்கடிமைப்பட்டகாதல்
மணவாளதாசன்றன்புன்சொற்கொண்ட
மதிலரங்கமணவாளராடிருசல்.

(இ-ள்.) உணராத - ஒன்றுமறியாத, மதலை - குழந்தையின், இளங்குதலைச் சொல்லை - மென்மையாகிய மழலைச்சொற்களை, தந்தை தாய் - தந்தை தாயர் - உள்ளம் உருகி உவக்கும் ஆறுபோல்-மனங்கரைந்து விரும்பும் விதம்போலவும், தணவாமல் - இடையறாமல், கற்பிப்பார் - கற்பிப்பவர், தம் சொல்கேட்டு - தமது சொற்களைக் கேட்டு, தத்தை உரைத்ததனை - கிளிபேசுவதை, ஆதரிக்கும் ஆறுபோல் - விரும்பும் விதம்போலவும், பணம்வாள் அராமுடிமேல்-படமும் ஒளியுமுள்ள ஆதிசேடனது முடிமேலுள்ள, படி ஏழ்போற்றும் - ஏழுலகங்களும் வணங்குகின்ற, பட்டர் திருத்தாட்கு - பட்டரது திருவடிக்கு, ஆட்பட்டகாதல் - அடிமைப்பட்ட அன்பையுடைய, மணவாளதாசன் தன் - மணவாளதாசனது, புன்சொல் கொண்ட-அற்பமாகிய சொன்மாலையை யேற்றுக்கொண்ட, மதில்-மதில் சூழ்ந்த, அரங்கம்-திருவரங்கத்திலெழுந்தருளிய, மணவாளர்-அழகிய மணவாளரே, ஊசல் ஆடிர்-ஊசலாடுவீராக.

குழந்தையின் குதலைச் சொல்லைத் தந்தை தாயுவக்கு மாறுபோலவும், கிளிமொழியைக் கற்பித்தவர் கேட்டுவக்கு மாறுபோலவும் திருவரங்கர் என் புன் சொன் மாலையையும் அங்கீகரித்தருளுவர் என்பது கருத்து.

போதாருநான்முகனேமுதலாயுள்ள
புத்தேளிர்தொழுநாதன்புவனிக்கெல்லாம்
ஆதாரமாந்தெய்வமானநாதன்
அனைத்துயிர்க்குநாதனணியரங்கநாதன்
சீதாரவிந்தமலர்த்திருவினாதன்
திருவூசற்றிருநாமமொருநாலெட்டும்
வேதாசாரியபட்டர்க்கடிமையான
வெண்மணிப்பிள்ளைப்பெருமாள்விளம்பினனே.

ஸ்ரீரங்கநாயகர் ஊசற்றிருநாமம் முற்றிற்று.

கோனேரியப்பனையங்கார் அருளிச்செய்த சீரங்கநாயகியார் ஊசற்றிருநாமம்.

கா ப் பு.

முருகூருமகிழ்மாலையணியுமார்பன்
முத்தமிழன்கவித்தலைவன்முனிவர்வேந்தன்
திருகூருமனத்திருணீக்குதயபானு
சிபராங்குசயோகிதிருநாவீறன்
அருகூருந்தண்பொருனைவழுதிநாடன்
அஃகமலம்பாடினன்னமேறி
குருகூரன்சடகோபன்காரிமாறன்
கோகனகமலரடியின்குணங்கள்போற்றி.

(இ-ள்.) முருகு ஊரும் - வாசனைபொருந்திய, மகிழ்மாலை-மகிழ மலர் மாலையை, அணியும் - தரித்த, மார்பன் - திருமார்பை யுடையவன், முத்தமிழன் - முத்தமிழ்களிலும் சமர்த்தன், கவித்தலைவன் - கவிகளிற் சிரேஷ்டன், முனிவர் வேந்தன் - முனிவர்க்கரசன், திருகு ஊரும் - மாறுபாடுபொருந்திய - மனத்து இருள்-மனத்தின்கண்ணுள்ள அஞ்ஞானமாகிய அந்தகாரத்தை, நீக்கு-போக்குகின்ற, உதயபானு-உதயகால சூரியன், சிபராங்குசயோகி-ஸ்ரீ பராங்குசயோகி, திருநாவீறன் - திருநாவீறன், அருகு ஊரும்-சமீபத்தில் ஓடா நின்ற, தண் பொருநை-குளிர்ந்த தாமிரபர்ணியை யுடைய, வழுதிநாடன் - பாண்டிநாட்டையுடையவன், அஃகமலம் பாடினன்-சம்சாரமாகிய மலமொழியும்படி இறைவனைக்கவிபாடின வன், அன்னம் ஏறி - அன்னவாகநத்தை யூர்வோன், குருகூரன்-திருக்குருகூரில் அவதரித்தவன், சடகோபன் - சடவாயுவை நிராகரித்தவன், காரிமாறன்-காரிமாறன் என்னும் திருநாமத்தையுடையவன், (அவனது) கோகநகமலர் - தாமரை மலர்போன்ற, அடியின்-திருவடியின், குணங்கள் - குணங்களானவை, போற்றி - எம்மால் வணங்கப்படுவன. எ-று.

நூல்.

க, நீராழிநிறத்தரங்கரடிகள்வாழ
நெடுமகுடப்பணிவாழக்கருடன்வாழப்
பேராழிசெலுத்தியசேனையர்கோன்வாழப்
பேய்பூதன்பொய்கைமுதற்பதின்மர்வாழ
ஓராழிக்கதிர்வாழத்திங்கள்வாழ
உம்மடியார்மிகவாழவுலகம்வாழச்
சீராழிசங்குகதைசிலைவாள்வாழச்
சீரங்கநாயகியாராடிரூசல்.

(இ-ள்.) நீர் ஆழிநிறத்து அரங்கர் - நீர் மிகுந்த கருங்கடல் வண்ணராகிய திருவரங்கரது, அடிக்ள்வாழ-திருவடிகள் வாழவும்,

நெடு மகுடம்பணிவாழ - நீண்டமுடியை யணிந்ததிருவநந்தாழ்வான் வாழவும், கருடன்வாழ - பெரியதிருவடிவாழவும், பேர் ஆழிசெலுத்திய - பெரிய ஆணைச்சக்கரத்தைச் செலுத்திய, சேனையர் கோன் வாழ - சேனைத்தலைவர் வாழவும், பேய் பூதன்பொய்கை முதல் - பேயார் பூதத்தார் பொய்கையார் முதலாகிய, பதின்மர்வாழ - பதின்மரும்வாழவும், ஓர் ஆழிகதிர்வாழ - ஒற்றைச்சக்கரத் தேரையுடையவனாகிய சூரியன்வாழவும், திங்கள்வாழ - சந்திரன்வாழவும், உம் அடியார் மிகவாழ - உமது அடியார்கள் மிகவும் வாழவும், உலகம் வாழ - உலகம் வாழவும், சீர் - சிறப்பமைந்த, ஆழி - திருவாழியும், சங்கு - பாஞ்சஜந்யமும், கதை - தண்டும், சிலை - வில்லும், வாள்கட்கமும், வாழ-வாழவும், சீரங்கநாயகியார் - ஸ்ரீரங்கநாயகியாரே, ஊசல் ஆடிர் - ஊசலாடுவீராக. எ-று.

உ. துங்கமலர்ப்பந்தரின்கீழ்ப்பதுமராகத்
  தூணிறுத்திவயிரவிட்டந்தொகுத்துமீதில்
தங்கநெடுஞ்சங்கிலிவிட்டதின்மாணிக்கத்
  தவிசுபுனைந்தலங்கரித்தவூசன்மீதில்
மங்கலநாண்டிருவாவாராடிரூசல்
  மதிலரங்கர்தமக்கினியாராடிரூசல்
செங்கமலமாளிகையாராடிரூசல்
  சீரங்கநாயகியாராடிரூசல்.

(இ-ள்.) துங்கம் - பரிசுத்தமாகிய, மலர்ப்பந்தரின்கீழ்-பூம்பந்தலின்கீழே, பதுமராகம் தூண் நிறுத்தி - பதுமராகத்தூணை நாட்டி, வயிரவிட்டம் தொகுத்து-வயிரவிட்டத்தைச்சேர்த்து, மீதில்-அதின்மேல், நெடு - நெடிய, தங்கச்சங்கிலி விட்டு - தங்கச்சங்கிலிகள் தொங்கவிட்டு, அதில் - அதனிடத்து, மாணிக்கத் தவிசுபுனைந்து-மாணிக்க ஆசநமமைத்து, அலங்கரித்த ஊசல்மீதில் - அலங்கரித்த ஊசலின்மேல், மங்கலநாண் திரு ஆவார் - மங்கல சூத்திரத்திற்கு அழகிய ஆபரணமாயிருப்பவரே, ஊசல் ஆடிர் - ஊசலாடுவீராக, மதில் அரங்கர் தமக்கு இனியார் - மதில்சூழ்ந்த திருவரங்கத்தையுடையவர்க்கு இனியவரே, ஊசல் ஆடிர் - ஊசலாடுவீராக, செம்கமல மாளிகையார்-செந்தாமரைமலரைத் திருமாளிகையாகவுடையவரே, ஊசலாடிர்-ஊசல் ஆடுவீராக, சீரங்கநாயகியார் - சீரங்கநாயகியாரே, ஊசல் ஆடிர்-ஊசல் ஆடுவீராக. எ-று.

பிராட்டி மங்கலநாண்திரு ஆவார் என்பதனை "மானணிநோக்கினர் தம் மங்கலக்கழுத்துக்கெல்லாம்-தானணியானபோது தனக்கணியாது மாதோ" எனக் கம்பர் கூறுதலும் காண்க.

௩. கடிமலருமதுகரமுங்குழலிலாடக்
கத்தூரியுடன்வேர்வுமுகத்திலாட
நெடுவிழியுமணித்தோடுங்குழையிலாட
நேர்வளையுஞ்சூடகமுங்கரத்திலாட
வடமணியுங்கண்டிகையுந்தனத்திலாட
மாகலையுமேகலையுமருங்கிலாடத்
திடமறையும்பரிபுரமும்பதத்திலாடச்
சீரங்கநாயகியாராடிரூசல்.

(இ-ள்.) கடிமலரும் மதுகரமும் குழலில் ஆட-பரிமளமுள்ள மலர்களும் வண்டுகளும் கூந்தலில் அசையவும், கத்தூரியுடன் வேர்வு முகத்தில் ஆட - கஸ்தூரியோடு வெயர்வை திருமுகத்தில் அசையவும், நெடுவிழியும் மணித்தோடும் குழையில் ஆட-நெடியகண்களும் ரத்ந குண்டலங்களும் காதில் அசையவும், நேர்வளையும் சூடகமும் கரத்தில் ஆட - நேர்மையாகியவளையலும் கங்கணமும் திருக்கையில் அசையவும், வடமணியும் கண்டிகையும் தனத்தில் ஆட - மணிவடமும் பதக்கமும் தனத்தின்மீது அசையவும், மாகலையும் மேகலையும் மருங்கில் ஆட - அழகிய ஆடையும் மேகலையும் இடையில் அசையவும், திடமறையும் பரிபுரமும் பதத்தில் ஆட - உறுதியாகிய வேதமும் சிலம்பும் திருவடியில் அசையவும், சீரங்கநாயகியார்-ஸ்ரீரங்கநாயகியரே, ஊசல் ஆடிர்-ஊசலாடுவீராக. எ - று

மேகலை - மாதரிடையணியுள் எழுகோவைமணி.

௪. கலைமடந்தைவணங்கியொருவடந்தொட்டாட்டக்
கற்புடையவள்ளியொருவடந்தொட்டாட்ட
மலைமடந்தைபரிவிலொருவடந்தொட்டாட்ட
வானவர்கோன்மடந்தையொருவடந்தொட்டாட்ட
அலர்மடந்தைநிலமடந்தையுலகம்வாழ
அருண்மடந்தைபொருண்மடந்தையழகார்நெற்றிச்
சிலைமடந்தைதிருமடந்தையாடிரூசல்
சீரங்கநாயகியாராடிரூசல்.

(இ-ள்.) கலைமடந்தை - சரசுவதி, வணங்கி - தொழுது, ஒருவடம் தொட்டு ஆட்ட-ஒருவடத்தைத் தொட்டு அசைக்கவும், கற்புஉடையவள்ளி - கற்பையுடைய வள்ளிநாயகி, ஒருவடம் தொட்டு ஆட்ட - ஒருவடத்தைத்தொட்டு அசைக்கவும், மலைமடந்தை - பார்வதி, பரிவில்-அன்போடு, ஒருவடம் தொட்டு ஆட்ட-ஒருவடத்தைத் தொட்டு அசைக்கவும், வானவர் கோன் மடந்தை - இந்திரன் மனைவியாகிய இந்திராணி, ஒருவடம் தொட்டு ஆட்ட - ஒரு வடத்தைத் தொட்டு அசைக்கவும், அலர்மடந்தை - பதுமாசனையே, நிலமடந்

தை உலகம்வாழ-நிலமகளாகிய உலகம் வாழும்படி, அருள் மடந்தை-அருள்செய்கின்றவளே, பொருள்மடந்தை - சம்பத்தைத் தருகின்றவளே, அழகு ஆர் - அழகுபொருந்திய, நெற்றிச் சிலைமடைந்தை - நெற்றியாகிய வில்லையுடையவளே, திருமடந்தை - திருமகளே, ஊசல் ஆடிர்-ஊசலாடுவீராக, ஸ்ரீரங்கநாயகியார்-ஸ்ரீரங்கநாயகியாரே, ஊசல் ஆடிர்-ஊசலாடுவீராக. எ-று,

ரு, காரணையதிருவரங்கமணவாளர்க்குக்
கண்களிப்பமனமுருகவறிவுசோர
மூரலெழப்புளகமுறப்புயம்பூரிப்ப
முகமலரமெய்குழையமோகமேற
ஆரமுதேபசுங்கிளியேமுத்தேபொன்னே
அன்னமேயென்னம்மேயழகின்பேறே
சீரியசிற்றிடையணங்கேயாடிரூசல்
ஸ்ரீரங்கநாயகியாராடிரூசல்.

(இ-ள்.) கார் அணைய - மேகத்தையொத்த, திருவரங்க மணவாளர்க்கு - திருவரங்கராகிய நாயகருக்கு, கண்களிப்ப - கண்கள் களிப்படையவும், மனம் உருக - மனங்கரையவும், அறிவுசோர-அறிவுமயங்கவும், மூரல் எழ - நகையுண்டாகவும், புளகம் மிக-புளகம் மிகவும், புயம்பூரிப்ப - தோள்கள் பூரிக்கவும், முகம்மலர - முகமலரவும், மெய்குழைய - சரீரம் உருகவும், மோகம் எற - மோகம் அதிகரிக்கவும், ஆர் அமுதே-அரிய அமிர்தமே, பசுங்கிளியே-பசுமையாகிய கிள்ளையே, முத்தே-முத்தே, பொன்னே-பொன்னே, அன்னமே-அன்னமே, என் அம்மே - என்தாயே, அழகின்பேறே-அழகின் பயனே, சீரிய சிற்றிடை அணங்கே - சிறப்பாகிய சிறிய இடையையுடைய தெய்வப்பெண்ணே, ஊசல் ஆடிர்-ஊசலாடுவீராக, ஸ்ரீரங்கநாயகியார்-ஸ்ரீரங்கநாயகியாரே, ஊசல் ஆடிர்-ஊசலாடுவீராக. எ-று.

சு. வீறுபொய்கைபூதத்தாரிருபால்ஞான
விளக்கேந்தமயிலையர்கோன்வியந்துகாண
மாறன்மறைத்தமிழ்மதுரகவிநின்றேத்த
வாழ்குலசேகரன்பாணன்கலியன்போற்ற
ஆறுசமயத்திருந்தோனருகில்வாழ்த்த
அணிபுதுவைவேதியர்பல்லாண்டுபாடத்
தேறுதொண்டரடிப்பொடிதாரடியிற்சூட்டச்
ஸ்ரீரங்கநாயகியாராடிரூசல்.

(இ-ள்.) வீறு - மேன்மையுள்ள, பொய்கை பூதத்தார்-பொய்கையாரும் பூதத்தாரும், இருபால் - இரண்டுபக்கங்களிலும், ஞான விளக்கு ஏந்த - ஞானதீபத்தையேந்தவும், மயிலையர்கோன்-பேயார்,

வியந்து காண - புகழ்ந்து தரிசிக்கவும், மாறன்மறைத்தமிழ்-நம்மாழ்வார் அருளிச்செய்த தமிழ்வேதத்தை, மதுரகவி நின்று ஏத்த-மதுரகவிகள் நின்று துதிக்கவும், வாழ்குலசேகரன் - வாழ்வையுடைய குலசேகராழ்வாரும், பாணன் - திருப்பாணாழ்வாரும், கலியன் - திருமங்கைமன்னனும், போற்ற - வணங்கவும், ஆறு சமயத்து இருந்தோன் - ஆறுசமயங்களிலும் இருந்தவராகிய திருமழிசைப்பிரான், அருகில்வாழ்த்த - அருகிலிருந்து வாழ்த்தவும், அணி புதுவை வேதியர் - அழகிய பெரியாழ்வார், பல்லாண்டுபாட - திருப்பல்லாண்டு பாடவும், தேறு - தெளிந்த, தொண்டர் அடிப்பொடி - தொண்டரடிப்பொடியார், அடியில் - திருவடியில், தார்சூட்ட-திருமாலையைச் சூட்டவும், ஸ்ரீரங்கநாயகியார்-ஸ்ரீரங்கநாயகியாரே, ஊசல் ஆடிர்-ஊசலாடுவீராக. எ-று.

ஆறு சமயமாவன:—சாங்கியம், உலூக்யம், அட்சபாதம், க்ஷபணம், கபிலம், பாதஞ்சலியம்.

எ. நாதமுனிதவமாகமாறன்பாடல்
நயந்தெழுதவேதனெழுத்தழிந்தவாறும்
போதனெதிராசன்வளையாழிமண்ணோர்
புயத்தெழுதக்கூற்றினெழுத்தழிந்தவாறும்
ஏதமில்கூரத்தாழ்வான்பதக்குண்டென்றே
எழுதிடவாதியர்களெழுத்தழிந்தவாறும்
தீதில்குணத்தடியார்கடிரண்டுவாழ்த்தச்
ஸ்ரீரங்கநாயகியாராடிரூசல்.

(இ - ள்.) நாதமுனி - ஸ்ரீமந்நாதமுநிகள், தவம் ஆக - தவம் முடிதலால், மாறன்பாடல் - திருவாய்மொழியை, நயந்து எழுத - விரும்பியெழுதலும், வேதன் எழுத்து அழிந்த ஆறும் - பிரமனெழுத்து அழிந்தவிதத்தையும், போதன் எதிராசன் - அறிஞனாகிய எதித்தலைவன், வளை ஆழி - சங்கசக்ரலாஞ்சனங்களை, மண்ணோர் புயத்து எழுத - உலகத்தாரது தோள்களில் எழுதுதலும், கூற்றின் எழுத்து - யமனது எழுத்து, அழிந்த ஆறும் - அழிந்த விதத்தையும், ஏதம் இல் - குற்றமற்ற, கூரத்தாழ்வான் - கூரத்தாழ்வான், பதக்கு உண்டு என்று எழுதிட-பதக்குளது என்று எழுதுதலும், வாதியர்கள் எழுத்து - வாதியரது (சிவாத்பரதரம் நாஸ்தி என்னும்) எழுத்து, அழிந்த ஆறும் - அழிந்தவிதத்தையும், தீது இல் குணத்து அடியார்கள் - தீமையில்லாத குணத்தையுடைய அடியார்கள், திரண்டுவாழ்த்த-கூடிவாழ்த்தாநிற்க, ஸ்ரீரங்கநாயகியார்-ஸ்ரீரங்கநாயகியாரே, ஊசல் ஆடிர்-ஊசலாடுவீராக. எ-று.

நாதமுனிகள் தவமிருந்து மாறன் பாடல் நயந்தெழுதியதாவது:—ஜீர்ணமாய்ப்போயிருந்த ஆழ்வார்கள் திருவாய்மலர்ந்தருளிய திவ்ய பிரபந்தங்களை நாதமுனிகள் கண்ணிநுண் சிறுத்தாம்பை கஉ000-உரு செபிக்க நம்மாழ்வார் பிரசன்னமாய் நாலாயிரத்தையும் உபதேசிக்க எழுதி, மீண்டும் உலகில் அநுசந்திக்கப்பட்டு வரும்படி செய்தனர் என்பது. ஓரான்வழியாய்ச் செய்துகொண்டுவந்த சங்க சக்கரலாஞ்சனங்களை உடையவர் தம்மை ஆசிரயித்த பலருக்கும் செய்து குருபரம்பரை இடையறுமல் வளர்ந்தேறும்பொருட்டு எசு-சிம்மாஸநாதிபதிகளையும் ஏற்படுத்திப் பரவச்செய்தலால் "போதனெதிராசன் வளையாழிமண்ணோர் புயத்தெ ... " என்றார். கூரத்தாழ்வான் பதக்குண்டென்றெழுதியது. கிரிமிகண்டசோழன் விடுத்த "சிவாத்பரதரம் நாஸ்தி" (சிவத்துக்குமேலான பொருள் இல்லை) என்பதைக்கண்டபோது.

அ, தருக்குடனேயும்துதிருவுளத்துக்கேற்கத்
 தங்கடங்கள்பணிவிடைகடலைமேற்கொண்டு
வருக்கமுடன்பத்துவகைக்கொத்துளோரும்
 மற்றுமுள்ளபரிகரமும்வந்துசூழ
அருக்கனெனமுடிவிளங்கவழகுவீற
 அண்டர்கள்பூமழைபொழியவடியார்போற்றச்
செருக்கிவிளையாடியுகந்தாடிரூசல்
 ஸ்ரீரங்கநாயகியாராடிரூசல்.

(இ-ள்.) தருக்குடனே-களிப்புடனே, உமது திருவுளத்துக்கு ஏற்க - உமது திருவுளத்துக்கிசைய, தங்கள் தங்கள் பணிவிடைகள் தலைமேற்கொண்டு - தங்கள் தங்கள் டணிவிடைகளைச் சிரசாவஹித்து, வருக்கமுடன் பத்துவகைக்கொத்து உள்ளோரும் - இனத்துடனே பத்துவகைக் கொத்தோரும், மற்றுமுள்ள பரிகரமும் - மற்றுமுள்ள பரிவாரங்களும், வந்துசூழ - வந்துசூழ்ந்து நிற்கவும், முடி அருக்கன் என விளங்க - திருமுடியானது சூரியன்போலப்பிரகாசிக்கவும், அழகுவீற - அழகுமிகவும், அண்டர்கள் பூமழைபொழிய-தேவர்கள் மலர்மாரியைச்சொரியவும், அடியார்போற்ற - அடியார்கள் வணங்கவும், செருக்கிவிளையாடி - மகிழ்ந்துவிளையாடி, உகந்து-விரும்பி, ஊசல் ஆடிர் - ஊசலாடுவீராக, ஸ்ரீரங்கநாயகியார் - ஸ்ரீரங்கநாயகியாரே, ஊசல் ஆடிர்-ஊசலாடுவீராக. எ-று.

பத்து வகைக்கொதது ஸ்ரீரங்கநாயகர் ஊசல் உஉ-ஆம் செய்யுளில்காண்க.

கூ. மின்றுவுகொடிமதில்சூழ்கூரவேந்தன்
 வேதாசாரியனன்னையாடிரூசல்
பின்றுதபரசமயக்குறும்பறுக்கும்
 பெரியநம்பியுளத்துறைவாராடிரூசல்

கந்தாடைக்குலத்தில்வருமழகோன்வாழக்
கருணைவிழிக்கடையருள்வாராடிரூசல்
செந்தாரும்பசுந்தாரும்புடையுலாவச்
ஸ்ரீரங்கநாயகியாராடிரூசல்.

(இ-ள்.) மின்தாவுகொடி - மின்னலைத் தீண்டுகின்ற கொடிகள் கட்டிய, மதில்சூழ் - மதில்சூழ்ந்த, கூரவேந்தன் - திருக்கூரத்துக்கு அதிபன் ஆகிய, வேதாசாரியன் அன்னை - வேதாசாரிய பட்டருக்கு மாதாவே, ஊசல் ஆடிர் - ஊசலாடுவீராக, பின்றாதபரசமயக்குறும்பு அறுக்கும் - வாதில் பின்னிடாத பரசமயத்தீமைகளைச் சேதிக்கிற, பெரியநம்பி உள்ளத்து உறைவார் - பெரியநம்பிகளின் மனத்தில் வாசம்செய்பவரோ, ஊசல் ஆடிர்-ஊசலாடுவீராக, கந்தாடைக்குலத்தில்வரும் அழகோன்வாழ-கந்தாடைக்குலத்தில் அவதரித்த அழகை யுடையவனாகிய முதலியாண்டான்வாழும்படி, கருணைவிழிக்கடை அருள்வார் - க்ருபையோடு கூடிய கடைக்கண்பார்வையை அருள் பவரோ, ஊசல் ஆடிர்-ஊசலாடுவீராக, செந்தாரும் பசுந்தாரும்புடை உலாவ - செம்மையாகிய மாலையும் பசுமையாகிய மாலையும் இருபுறத்தும் அசைய, ஸ்ரீரங்கநாயகியார் - ஸ்ரீரங்கநாயகியாரோ, ஊசல் ஆடிர்-ஊசலாடுவீராக. எ-று.

செந்தார் - செந்தமிழ்மாலையெனினு மமையும்.

கூரம் என்னும் ஊரில் அவதரித்த கூரத்தாழ்வான் திருக்குமாரராகையால் பட்டரை கூரவேந்தன் என்றும், வேதாந்தார்த்த நிர்ணய சாதுர்யமுடையவராகையால் "வேதாசாரியன் என்றும், பெரிய பெருமாள் நியமனத்தின்படி அனுப்பிய ப்ரசாதத்தை கூரத்தாழ்வானும், அவர் பத்னியும் ஸ்வீகரிக்கத் திருவவதரித்தவராகையால் பட்டரைப் பெரியபெருமாளுக்குத் திருக்குமாரரென்றும் கூறுவராகையால் ஸ்ரீரங்கநாயகியாரை "வேதாசாரியனன்னை" என்றார்.

௧௦. ஆரணஞ்சேர்வில்லிபுத்தூருறையூர்வாழ
அவதரித்தநாயகியாராடிரூசல்
பேரணிபூணழகுடையார்தாமேயென்னும்
பெண்டுகடந்நாயகியாராடிரூசல்
நாரணர்பூரணர்பெரியபெருமாளெங்கள்
நம்பெருமாணாயகியாராடிரூசல்
தேரணியுநெடுவீதிபுடைசூழ்கோயிற்
ஸ்ரீரங்கநாயகியாராடிரூசல்.

(இ-ள்.) ஆரணம்சேர் வில்லிபுத்தூர் - வேதமுழக்கம்பொருந்திய ஸ்ரீ வில்லிபுத்தூரும், உறையூர் - உறையூரும், வாழ-வாழும்படி, அவதரித்தநாயகியார் - அவதரித்தருளியநாயகியாரோ, ஊசல் ஆடிர்-

ஊசலாடுவீராக, பேர் அணி பூண் - பெரிய ஆபரணம்பூண்ட, அழகு உடையார் - அழகையுடையவர், தாமே என்னும்-தாமேயென்கின்ற, பெண்டுகள் தம்நாயகியார் - பெண்களுக்கு நாயகியாரோ, ஊசல் ஆடிர் - ஊசலாடுவீராக, நாரணர்-நாரணரும், பூரணர் - பூரணரும், பெரியபெருமாள்-பெரியபெருமாளுமாகிய, எங்கள் நம்பெருமாள் நாயகியார் - எமது நம்பெருமாளுக்கு நாயகியாரோ, ஊசல் ஆடிர்-ஊசலாடுவீராக, தேர்-தேர்களும், அணியும் - அலங்கரிக்கப்பட்ட, நெடு வீதி-நீண்டதெருக்களும், புடைசூழ் - பக்கத்திற்சூழ்ந்த, கோயில்-கோயிலிலெழுந்தருளிய, சீரங்கநாயகியார்-சீரங்கநாயகியாரோ, ஊசல் ஆடிர்-ஊசலாடுவீராக. எ-று.

கக. கோல்மந்தானிலமுலவவதனாலாடுங்
 கோகனகத்திருந்தாடுமென்னம்போல்
மால்ரங்கர்திருமேனிவண்மையாலு
 மழைமுகில்கண்டுகந்தாடுமயிலும்போல
வேலைகடைந்திடவதனிலெழுந்தபோது
 வெண்டிரைமேல்சைந்தாடும்வீறுபோலச்
சீலமுடன்மாணிக்கத்தவிசிலேறிச்
 சீரங்கநாயகியாராடிரூசல்,

(இ-ள்.) கோலம் - அழகாகிய, மந்தாநிலம் உலவ - தென்றற் காற்றுவீச, அதனால் ஆடும் - அதனால் அசைகின்ற, கோகநகத்து இருந்து ஆடும் - தாமரைமலரிலிருந்து அசைகின்ற, அன்னம்போல-அன்னம்போலவும், மால் அரங்கர் - பெருமையுள்ள திருவரங்கரது, திருமேனிவண்மை ஆலும் - திருமேனியின்வளப்பத்துக்குத் தோற்று அசைகின்ற, மழைமுகில்கண்டு - கார்காலமேகங்களைக்கண்டு, உகந்து ஆடும்-களித்தாடுகின்ற, மயிலும்போல-மயில்போலவும், வேலைகடைந்திட-திருப்பாற்கடலைக்கடைய, அதனில் எழுந்தபோது-அதில்தோன்றியகாலத்தில், வெள்திரைமேல் - வெண்மையாகிய அலைகளின்மீது, அசைந்து ஆடும்வீறுபோல - அசைந்தாடிய மேன்மைபோலவும், சீலமுடன்-தயாகுணத்தோடு, மாணிக்கத்தவிசில் ஏறி-மாணிக்கப்பீடத்திலேறி, சீரங்கநாயகியார்-சீரங்கநாயகியாரோ, ஊசல் ஆடிர்-ஊசலாடுவீராக. எ-று.

கஉ. குடமாடிச்சீராடிவெண்ணெய்க்காடிக்
 குரவைதணைப்பிணைத்தாடிக்கோளராவின்
படமாடிவிளையாடுமந்நாளந்தப்
 பரமனுரத்திருந்தாடும்படியேபோல
வடமாடக்குழையாடவிடைதள்ளாட
 வளையாடவிளையாடிமாலையாடத்
திடமாடக்கொடியாடத்திகழுங்கோயிற்
 சீரங்கநாயகியாராடிரூசல்.

(இ-ள்.) குடம் ஆடி - குடக்கூத்தாடி, சீர் ஆடி - சீராடலைச் செய்து, வெண்ணெய்க்கு ஆடி - வெண்ணெயின்பொருட்டுக் கூத்தாடி, குரவைதனைப்பிணைத்து ஆடி - குரவைக்கூத்தாடி, கோள் அராவின்படம் ஆடி - துன்பஞ்செய்கின்ற சர்ப்பத்தின் படத்தின்மீதாடி, விளையாடும் அந்நாள் - விளையாடிய அக்காலத்தில், அந்தப்பரமன் உரத்து இருந்து ஆடும்படியேபோல - அந்தச் சர்வேசுவரனது திருமார்பிலிருந்தாடிய விதம்போல், வடம் ஆட - மணிவடங்கள் அசையவும், குழை ஆட - காதணிகள் அசையவும், இடை தள்ளாட - இடைதுவளவும், வளை ஆட - வளையல்சையவும், விளையாடி - விளையாடலைச்செய்து, மாலை ஆட-பூமாலைகள் அசையும்படி, திடம்மாடக் கொடி ஆட-உறுதியாகிய மாளிகைகளின்மீது கட்டப்பட்ட கொடிகளசைய, திகழும் - விளங்குகின்ற, கோயில் - திருவரங்கத்திலெழுந்தருளிய, ஸ்ரீரங்கநாயகியார் - ஸ்ரீரங்கநாயகியாரே, ஊசல் ஆடிர் - ஊசலாடுவீராக. எ-று.

௧௩. கொந்தாருங்குழல்சையவாடிரூசல்
குலமகரக்குழையசையவாடிரூசல்
நந்தாருங்கரமசையவாடிரூசல்
நல்கிய நூலிடையசையவாடிரூசல்
சந்தாருந்தனமசையவாடிரூசல்
தரளமணிவடமசையவாடிரூசல்
செந்தாளிற்சிலம்பசையவாடிரூசல்
ஸ்ரீரங்கநாயகியாராடிரூசல்.

(இ-ள்.) கொந்து ஆரும் குழல் அசைய - பூங்கொத்துக்கள் நிறைந்த கூந்தல்சைய, ஊசல் ஆடிர்-ஊசலாடுவீராக, குலம் மகரக் குழை அசைய-மேன்மையாகிய மகரகுண்டலங்கள் அசைய, ஊசல் ஆடிர் - ஊசலாடுவீராக, நந்து ஆரும் கரம் அசைய - சங்கவளையல் நிறைந்த திருக்கரங்களசைய, ஊசல் ஆடிர் - ஊசலாடுவீராக, நூல் நல்கிய இடை அசைய- நூல்விரும்பும் இடையசைய, ஊசல் ஆடிர் - ஊசலாடுவீராக, சந்து ஆரும் தனம் அசைய - சந்தனமணிந்த தனமசைய, ஊசல் ஆடிர் - ஊசலாடுவீராக, தரளம் மணிவடம் அசைய- அழகிய முத்துமாலைகளசைய, ஊசல் ஆடிர்-ஊசலாடுவீராக, செம் தாளில் சிலம்பு அசைய - செவந்ததிருவடிகளிற் சிலம்புகளசைய, ஊசல் ஆடிர்-ஊசலாடுவீராக, ஸ்ரீரங்கநாயகியார் - ஸ்ரீரங்கநாயகியாரே, ஊசல் ஆடிர்-ஊசலாடுவீராக. எ-று.

௧௪. கரியகுழல்சையுமெனவரிவண்டார்ப்பக்
கழையணிதோளதிருமெனத்தொடிகளார்ப்ப
மருமலர்க்கையலங்குமெனவளைகளார்ப்ப
வடிவமெல்லாம்வருந்துமெனமறைகளார்ப்ப

இருமுலைகள்குலுங்குமெனவடங்களார்ப்ப
விடையொசிந்தேயிறுமெனமேகலைகளார்ப்பத்
திருவடிகள்சிவக்குமெனச்சிலம்புமார்ப்பச்
ஸ்ரீரங்கநாயகியாராடிரூசல்.

(இ-ள்.) கரியகுழல் அசையும் என - கருமையாகிய கூந்தலசையுமென்று, வரிவண்டு ஆர்ப்ப - இசைப்பாட்டையுடைய வண்டுகள் ஒலிக்கவும், கழை அணிதோள் அதிரும் என - மூங்கில்போலும் அழகிய தோள்கள் அதிருமென்று, தொடிகள் ஆர்ப்ப - கைவளைகள் ஒலிக்கவும், மருமலர்கை அலங்கும் என - மணமுள்ள தாமரைமலர் போலுங் கைகள் அசையுமென்று, வளைகள் ஆர்ப்ப - வளையல்கள் ஒலிக்கவும், வடிவம் எல்லாம் வருந்தும் என - திருமேனிமுழுதும் வருந்துமென்று, மறைகள் ஆர்ப்ப - வேதங்கள் ஒலிக்கவும், இருமுலைகள் குலுங்கும் என - பெருமையாகிய தனங்கள் குலுங்குமென்று, வடங்கள் ஆர்ப்ப - வடங்களொலிக்கவும், இடை ஒசிந்தே இறும் என - இடையொடிந்தேயொழியுமென்று, மேகலைகள் ஆர்ப்ப - மேகலைகளொலிக்கவும், திருவடிகள் சிவக்கும் என-ஸ்ரீபாதங்கள் செவக்குமென்று, சிலம்பும் ஆர்ப்ப - சிலம்புகளும் ஒலிக்கவும், ஸ்ரீரங்கநாயகியார்-ஸ்ரீரங்கநாயகியாரே, ஊசல் ஆடிர்-ஊசலாடுவீராக. எ-று.

௧௫. மேவியபங்கயன்றவஞ்செய்திறைஞ்சுங்கோயில்
வேணியரன்புராணநூல்விளம்புங்கோயில்
தாவுதிரைக்காவேரிபுடைசூழ்கோயில்
சந்திரவாவியின்மருங்குதழைத்தகோயில்
பாவளர்சத்தாவரணமுடையகோயில்
பணியணிசேரோங்காரமானக்கோயில்
தேவர்தொழுந்திருவரங்கம்பெரியகோயில்
ஸ்ரீரங்கநாயகியாராடிரூசல்.

(இ-ள்.) மேவியபங்கயன் - தாமரைமலரில் வீற்றிருக்கிற பிரமன், தவம்செய்து இறைஞ்சும்கோயில்-தவம்செய்து வணங்கும்கோயில், வேணி அரன்-சடாபாரத்தையுடையசிவன், புராணநூல் விளம்பும் கோயில் - புராணநூல்களை உபந்யஸிக்கும் கோயில், தாவுதிரைக் காவேரி-பாய்கின்ற அலைகளையுடைய காவேரிநதியானது, புடைசூழ் கோயில் - பக்கங்களில்சூழ்ந்த கோயில், சந்திரவாவியின்மருங்கு - சந்திரபுஷ்கரணியின்பக்கத்தில், தழைத்தகோயில்-செழித்தகோயில், பாவளர்-பரவியோங்கிய, சத்தாவரணம் உடையகோயில்-ஸப்தப்ராகாரங்களையுடையகோயில், பணிஅணிசேர்-தொழிலழகுபொருந்திய, ஓங்காரம் மானக்கோயில் - ஓங்காரவிமாநத்தையுடையகோயில், தே

வர்தொழும்-தேவர்கள்வணங்குகின்ற, திருவரங்கம் பெரியகோயில்-திருவரங்கம் பெரியகோயில், (இதில் எழுந்தருளியிருக்கிற) ஸ்ரீரங்க நாயகியார்-ஸ்ரீரங்கநாயகியாரே, ஊசல் ஆடிர்-ஊசலாடுவீராக. எ-று.

தாரங்கத்திருவரங்கர்க்கூசல்பாடிச்
சாத்தினன்பேரனென்னுந்தன்மையாலும்
ஆருங்கண்டேதெளியுமவன்சொல்பாட்டின்
அதிசயத்தையறிவனென்னுமாசையாலும்
பாரெங்கும்புகழ்வேதவியாசபட்டர்
பதம்பணிகோனேரியப்பன்புன்சொல்லாகச்
ஸ்ரீரங்கநாயகியார்க்கொருபத்தைந்து
திருவூசற்றிருநாமஞ்செப்பினனே.

(இ-ள்.) தார் அங்கம் - பூமாலையையணிந்த திருமேனியை யுடைய, திருவரங்கர்க்கு - ஸ்ரீரங்கநாயகர்க்கு, ஊசல்பாடிச் சாத்தினன்-ஊசற்றிருநாமம் பாடிச் சமர்ப்பித்தவராகிய பிள்ளைப்பெருமாளையங்காருக்கு, பேரன் என்னும் தன்மையாலும்-பேரனென்று சொல்லப்படுந் தன்மையாலும், ஆரும்கண்டு தெளியும்-யாவருங்கண்டுதெளிதற்குரிய, அவன்சொல்பாட்டின்-அவன்சொல்லியபாடலின், அதிசயத்தை - மேன்மையை, அறிவன் என்னும் ஆசையாலும் - அறிவனென்னும் விருப்பத்தாலும், பார் எங்கும்-உலகமுழுதும், புகழ்-புகழ்தற்குரிய, வேதவியாசபட்டர் - வேதவ்யாஸபட்டரது, பதம்பணி-திருவடியைவணங்குகின்ற, கோனேரியப்பன் - கோனேரியப்பனையங்கார், புன்சொல்லாக - தாழ்ந்தசொற்களுளவாக, ஸ்ரீரங்கநாயகியார்க்கு - ஸ்ரீரங்கநாயகியார்விஷயமாக, ஒருபத்து ஐந்து-பதினைந்து என்னுந் தொகைபெற்ற, திருவூசல் திருநாமம் - திருவூசற்றிருநாமத்தை, செப்பினன் - சொன்னார். எ-று.
